THE

# ARYAMATASIDDHANTA SANGRAHA.

BY

VILLAVARAMBAL
COOPPOOSWAMY AIYAR,
*Retired First Grade Pleader,*
*COIMBATORE.*

AUTHOR OF

*"Sree Bhagavathgeethartha Deepika,"*

*"Panchadasopanishads."*

*and "Vasudevamananam" translations.*

PRINTED AT THE "SRI VIDYA PRESS"

KUMBAKONAM.

1902.

[*All rights Reserved.*]

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh1-0511

॥ श्रीरस्तु ॥

॥ ओं परब्रह्मणे नमः ॥

# ॥ आर्यमतसिद्धान्ताख्य ग्रन्थः ॥

---

अयं

कोयंपुरी प्राड्विवाकसभायां व्यवहर्त्रग्रणीभूतेन
श्रीभगवद्गीतार्थदीपिकायाः कर्त्रा पञ्चदशोपनिषदः
वासुदेवमननंच द्राविडभाषया कृतवता

विल्लवरंबल्

## कुप्पुस्वाम्यार्येण

विरचितः ।

विद्वद्भिः परिशोधितः

---

**कुम्भकोणस्थ
"श्रीविद्या" मुद्राक्षर शालायां मुद्रितः ।
विजयतेतराम् ।**

கல்லியப்தம் ௫௲௪
சுபகிருத்௵ ஆவணி ௴

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑍐 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌆𑌰𑍍𑌯𑌮𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃

𑌅𑌯𑌂
𑌕𑍋𑌯𑌮𑍍𑌪𑍁𑌰𑍀𑌪𑍍𑌰𑌾𑌡𑍍𑌵𑌿𑌵𑌾𑌕𑌸𑌭𑌾𑌯𑌾𑌂
𑌪𑍍𑌰𑌥𑌮𑌶𑍍𑌰𑍇𑌣𑍀𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌨
𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌤𑍍𑌰𑌾
𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌃 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌮𑌨𑌨𑌂 𑌚
𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌯𑌾 𑌕𑍃𑌤𑌵𑌤𑌾
𑌵𑌿𑌲𑍍𑌲𑌵𑌰𑌮𑍍𑌪𑌲𑍍
𑌕𑍁𑌪𑍍𑌪𑍁𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌯𑍍𑌯𑌰𑍇𑌣
𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌃

# ஆரியமதஸித்தாந்தஸங்கிரகம்.

இஃது
கோயமுத்தூர் முதல்வகுப்பு வக்கீலாயிருந்தவரும்,
ஸ்ரீபகவத்கீதார்த்த தீபிகை,
பஞ்சதசோபநிஷத், வாஸுதேவமநநங்
களின் மொழிபெயர்ப்பு
இவைகளுக்கு கர்த்தாவுமான
வில்லவரம்பல்
**குப்புஸ்வாமி அய்யரவர்களால்,**
இயற்றப்பட்டு
கும்பகோணம் "ஸ்ரீவித்யா" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

கலியப்தம் ௫௲௪.
சுபகிருது௵ ஆவணி௴

# விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆரியமதசித்தாந்த சங்கிரஹம். | | |
| ஸம்ஸ்கிருதம் தேவநாகர அக்ஷரத்திலுள்ளதும். | | |
| பைண்டு செய்யாததும் பிரதி 1க்கு ... | 2 | 8 |
| ஷை பைண்டு செய்தது ... ... | 2 | 12 |
| ஸம்ஸ்கிருதம் தேவநாகர அக்ஷரத்தோடு கிரந்தாக்ஷரத்திலும் அச்சிட்டு அக்கிரந்தத்தோடு சேர்ந்திருக்கிறதும் பைண்டில்லாததும் ... | 2 | 12 |
| ஷை பைண்டு செய்தது ... ... | 3 | 0 |
| பாகிங் போஸ்டேஜ் ... ... ... | 0 | 5 |
| ஸ்ரீபகவத்கீதார்த்ததீபிகை புஸ்தகம் 1-க்கு ... | 4 | 0 |
| பாகிங் போஸ்டேஜ் ... ... ... | 0 | 6 |
| பஞ்சதசோபநிஷத் மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும் | | |
| புஸ்தகம் 1-க்கு ... ... ... | 2 | 0 |
| பாகிங் போஸ்டேஜ் ... ... | 0 | 4 |
| வாஸுதேவமநநம் மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும் | 0 | 10 |
| பாகிங் போஸ்டேஜ் ... ... ... | 0 | 2 |

குறிப்பு :—வி. பி. போஸ்டில் அனுப்புவதானால் அதன் கமிஷனும் சேர்க்கப்படும்.

பத்து புஸ்தகங்கள் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ஒரு பிரதி சேர்த்துக்கொடுக்கப்படும்.

—o—

ओं

# अनुमोदनश्लोकादयः ॥

राधामङ्गलं ब्रह्मश्री नारायणशास्त्रिणां कृतिः ।

॥ श्रीः ओं श्रीः ॥

॥ श्री वासुदेवायपरब्रह्मणे नमः ॥

काचनेयं विज्ञप्तिः ।

भो ! आर्यमिश्राः अभिज्ञमणयः साहित्यादि समस्तवाङ्मयकलाव्यापारलीलाकुलाः ! कृतत्रेताद्वापरकल्यभिधानयुगचतुष्केष्विदं कालेयंयुगं अत्युत्कटकिल्बिष प्रकटप्रसृमरमिति भवद्भिर्विदितचरमेव । अपि च । सर्वोपि स्वोदरपूरणस्वबलासङ्गमाधैहिक सुखमेव चिरतरसमुपचिततपःपरीपाकपरमफल्यं मन्वानास्समासतेतराम् ।

तान्प्रति विरचितबहुविधपरिश्रमभर परीवाहतया करुणासनाथा इमे कुप्पुस्वाम्यार्यवर्याः शुद्धाद्वैतविशिष्टाद्वैतद्वैतशैवरूपमतचतुष्टयसाधारण्येन निखिलश्रुतिस्मृतीतिहासपुराणराराज्यमानप्रमाणगणमसृणमार्यमतसिद्धान्तसंग्रहाभिधं कञ्चन ग्रन्थमितरजननैरपेक्ष्यज्ञानसंपादनाय द्राविडभाषायां समातानिषुः ।

तत इममवलोक्यैतद्विधायां प्रवर्तकानां कस्मिंश्चनमतेपि द्वेषविषयिणी मनीषानजातु चिदपिजायेत । सर्वस्मिन्नपि समतामतिमन्त एव बोभूयेरन् । विश्वकरविष्टरश्रवस्त्रिलोचन स्वस्वरूपसन्निवेदकतया संपुटितः निश्रेयसमाप्तुं मुक्तिसुलभसोपानपदवीप्रदर्शको भृशं वरीवृतीति । तस्मात् सर्वमप्येतं महत्तरश्रमभरसङ्कलितं स्वकीयविलोचनाभिमुखीकरणविषये कलितप्रयतनास्सर्वेपि भवन्त्विति मुहुर्मुहुः समभ्यर्थयेत माम् ।

कालेयः कुटिलोयं कालस्तस्मात् सुखायलोकानाम् ।
कुप्पुस्वाम्यार्यकृतोग्रन्थो बाभाति सन्ततं मह्याम् ॥ १ ॥

श्रुतिस्मृत्यादिस्थैर्निखिलविषयैर्द्वैतसमये
विशिष्टाद्वैते च त्रिणयनमते द्वैतविषये ।
समीचीनैर्युक्तं परमतविरोधोत्कटमति
प्रबोधिग्रन्थोयं विलसतितराम्भोः कुवलये ॥ २ ॥

वैधवैष्णवमाहेश स्वरूपस्यानुवादकः ।
बहुश्रमसमासाध्यो द्राविड्याभाषया कृतः ॥ ३ ॥

सर्वैरादरणीयो भूयात् ग्रन्थोयमखिलमतदर्शी ।
इति चाचद्मीमिनितरामामुष्मिक सर्वसारमूलोयम् ॥ ४ ॥
इति सहृदयसमुदायदासः ।

इत्थं समस्तजनताश्वश्रेय सकन्दळसमाकांक्षी ।
रा० नारायणशास्त्री कविगणगणितो बुधेश्वरैर्नव्यः ॥ ५ ॥

——o——

सत्यमङ्गलम् ब्रह्मश्री सुब्बाशास्त्रिणाम् ।

तिरुविशनल्लूर् ब्रह्मश्री वि० रामस्वामिशास्त्रिणां च कृतिः ।

भो ! विश्रुतमतयः आर्याः !

इहहि भवक्लिष्टाबहवोमर्त्याः भवोन्मूलदक्षायमोक्षाय स्पृहयन्ति । स च कर्तव्याकर्तव्य विवेकद्वारा तत्वज्ञानात् । तच्चाधीत चिन्तिताच्छास्त्रजातात् तच्चशास्त्राध्ययनादिकं बहुभिर्वर्षैर्बहुळैश्चश्रमैः सम्भवतीत्यवगतपुर्वमेव भवतां । तस्मादिदानीं श्रीमता कुप्पुस्वाम्यार्यवर्येण विद्वद्वर्यसहायेन विरचितः आवाभ्याञ्चा सकृत्परिशीलितः तत्तन्मतसिद्धान्तादर्शभूतः सुबोध आर्यमतसिद्धान्तसंग्राहाभिधोग्रन्धः स्वस्वमततत्वजिज्ञासुभिस्सर्वैरप्यादरणीय इति सविनयं सप्रणयं चाशास्वहेतराम् ॥

ये वांछन्ति विवेकदं मणिवरं प्राप्तुं महीमण्डले
ते शास्त्राब्धिविलोडना द्दत इह स्मर्तुंचनैवेशते ।
तच्चातिश्रमसाध्यमेव भवतीत्येतन्नके जानते
तद्धीमद्धरसम्भृते मणिवरे प्रीतिं वितन्वीमहि ॥
इति सुधीजनसमुदायविधेयौ ।

——o——

गोविन्दपुरं ब्रह्मश्री सीतारामशास्त्रिणां कृतिः ।

ब्रह्मोद्यानां श्रुतीनां स्मृतिवचनपुराणेतिहासादिकानां
आहृत्याग्र्यियसारं द्राविडफणितिभिः प्रस्फुटीकृत्यभावम् ।
संसारापारसिन्धु भ्रमणबहुतरोन्मज्जदुर्ज्जीवनाय
प्राकाश्यं नीतमेतद्वचनमधुसमा स्वाद्यसंमोमुदीमः ॥ १ ॥
कुप्पुस्वाम्यार्यवर्येण रचितो जगतां हितः ।
जेजीयतेतमामार्यमतसिद्धान्नसंहग्रः ॥ २ ॥

——o——

# PREFACE.

Many of our Aryan brothers of the modern day, possess very little knowledge of their Religion, and have absolutely no idea, of the immense advantages, which a close study of that religion can render us, in the solution of the many vital problems of life. It is owing to this lamentable lack of knowledge on our part, that not even a passing thought do we bestow on the question as to what one should do in order to attain one's salvation. Moreover some of our young men, ignorant of even the fundamental truths of their religion, are easily beguiled by the subtle persuasions of other religionists and unfortunately are lost to our religion.

With a view to remedy the evils arising out of this deplorable want of anything like a proper understanding of our religion, a few gentlemen at Coimbatore, started a society, about ten years ago, the avowed object of which was, to cause among our country-men a wide diffusion, of the sacred and fundamental truths of the Aryan religion, through books specially written and published for that purpose. Subscriptions were then raised, and books, then thought to be necessary for the purpose, were purchased. To carry out the object of the society, one of its members M. R. Ry. T. T. Rangachariar Avergal B. A., B. L., then District Munsif of Coimbatore undertook to write the proposed book; but as he was transferred from this place shortly after it the task was left unperformed. However, I, as one of its members, felt it my duty to try my best in the accomplishment of, what I considered, a very useful object of the society and accordingly I set myself to write out the proposed book. But as the members of the society took no further interest in the matter and as I was rather unwilling to have all my labours of eight

years and more, thrown away, I ventured to publish the book myself in the hope that it may be of some use to the public. Thank God that He has enabled me at last to place the book before the public.

The book is written like an Yithihasam and is thrown in the form of a dialogue between a Sishya and a Guru and the various topics dealt with in the book are given in the contents. Copious quotations from all the four Vedas, the Seventyfive Upanishads, Puranams, Yithihasams and other Vedantic works of learned authors, with their tamil translations, have been given. Authorities in support of the opinions expressed in the book, have been cited at their appropriate places. Considering the difficult and flexible nature of the sanskrit language and my own imperfect knowledge of the same I can only say about the translations and opinions, that I have spared no pains to render them as accurate as possible. I shall sincerely thank those learned readers of this book who would kindly point out to me any defect or error which they may find in the book. Though various topics have been dealt with in the book, I have taken particular care to present in as clear and concise a manner as I could, the four systems of faith known as the Advaita the Dvaita, the Visishtadvaitha and the Saiva schools, together with the authorities by which they are supported. As the quotations are all given in the Devanagari character in the body of the book, I have thought it necessary to append at the end of a few copies of the book, a rendering of them in Granta character, with necessary references, for the advantage of those who may be unacquainted with the other character. I have also given a complete index of the Sanskrit quotations used in this book.

SEPTEMBER 1902,
COIMBATORE. } V. COOPPOOSWAMI AIYAR.

॥ ॐ परब्रह्मणेनमः ॥

# अवतारिका.

# முகவுரை.

இத்தேசத்திலுள்ள ஆரியர்களிலநேகர் தங்கள் மதமிப்படிப் பட்டதென்றும் அதனாலடையும் பிரயோஜநமிப்படிப்பட்டதென்றும் அறியாமலே இருக்கிறார்கள். அதனால் உத்தம கதியையடைய அவர்கள் முயற்சி செய்யவில்லை. மேலும் தன்மத சுவரூபமிப்படிப்பட்டதென்றறியாத சில வாலிபர்கள் அந்நியமதஸ்தர்களுடைய போதனைக்குட்பட்டு அந்நியமதத்திற்பிரவேசிக்கிறார்கள். இவையெல்லாம் மதசுவரூபந்தெரியாத காரணத்தினாலேயே நேரிடுகிறதென்றும் இக்குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு ஆரியமதசித்தாந்தத்தின் உண்மையைப் பரவச்செய்யவேண்டுமென்றும் அதற்காக சகலருமறியும்படி ஒரு கிரந்தம் எழுதியச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்றும் உத்தேசித்து இக்கோயமுத்தூரில் பத்து வருஷங்களுக்கு முந்தி சில பிரபுக்கள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். அதற்காகவேண்டிய கிரந்தங்களை விலைக்கு வாங்கும்பொருட்டு சில மெம்பர்கள் சந்தாவாகச்சில துகைகொடுத்து அதைக்கொண்டு சில கிரந்தங்கள்மட்டும் விலைக்கு வாங்கப்பட்டன.

ஸங்கத்தின் உத்தேசத்தை நிறைவேற்ற ஸபையின் மெம்பர்களிலொருவரும் அக்காலத்தில் இக்கோயமுத்தூரில் டிஸ்ரிக்ட் முன்சீப்பாயிருந்தவருமான தி. தி. இரங்காசாரியரவர்கள் ஒரு கிரந்தமெழுதத்துடங்கினார். சுவற்ப பாகமெழுதுவதற்குள் அவர் இவ்விடத்திலிருந்து மாற்றப்பட்டார். அதனால் கிரந்தம் முடியவில்லை. பிறகு அச்சபையின் மெம்பரிலொருவனாகிய நான் சபையாருத்தேசத்தை நிறைவேற்ற இக்கிரந்தத்தை எழுதத்துடங்கினேன். ஆனால் மேற்படி கிரந்தத்தை முடிவுக்குக்கொண்டுவரவேண்டிய விஷயத்தில் மெம்பர்கள் உதவி செய்ய பின்னடைந்துவிட்டார்கள். ஆகையால், எட்டு வருஷகாலமாய் நான் இக்கிரந்தத்தைத்தயார் செய்யும் விஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாஸையும் செய்தசிலவும் வீணாய்ப்போய்விடுமென்கிற கவலையினால் நானே இக்கிரந்தத்தையச்சிட்டு என் பெயரால் வெளியிடலானேன்.

இக்கிரந்தமானது ஒரு இதிஹாஸம் போலவும் குரு சிஷ்ய ஸம்வாதம் போலவுமெழுதப்பட்டிருக்கிறது. இக்கிரந்தத்திலடங்கிய விஷயங்களின்னவையென இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற விஷயாட்டவணையிற் காணலாம். இக்கிரந்தத்தில் இருக்கு

யஜுஸ் ஸாமம் அதர்வணமென்கிற நான்கு வேதங்களிலிருந்தும் வேதாந்தமாகிய உபநிஷத்துக்களில் எழுபத்தைந்து உபநிஷத்துக்களிலிருந்தும் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களிலிருந்தும் மஹான்களுடைய கிரந்தத்திலிருந்தும் எடுக்கப்பட்ட அநேக வாக்கியங்கள் உதஹரிக்கப்பட்டிருக்கின்றன. ஸம்ஸ்கிருத வாக்கியங்களுக்குக்கூடிய வரையிற் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. இக்கிரந்தத்திலெடுத்து சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயங்களை யாதரிக்கும்படியான சாஸ்திர வாக்கியங்கள் அவ்வவ்விடங்களிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி அபிப்பிராயங்களும் மொழிபெயர்ப்பும் கூடியவரையிற் சரியாய்ச் செய்யப்பட்டிருக்கின்றனவென்று நான் நம்பியிருக்கிறேன். ஆனால் ஸம்ஸ்கிருத பாஷையானது கடினமானதாலும் ஒருபதத்திற்கு அநேகார்த்தங்களுளவாகையாலும் என்னுடைய அபிப்பிராயமும் மொழிபெயர்ப்பும் பிசகுள்ளவையாயிருக்கலாம். ஏனென்றால், நான் நல்ல வித்துவானல்ல ஆகையால், பெரியோர்களாயும் வித்துவான்களாயுமிருக்கிற புத்திமான்கள் இதிலுள்ள தப்பிதங்களுக்காக மன்னிப்பார்களென்று நம்பியிருக்கிறேன். இதிலுள்ள குறைவுகளை யெடுத்துக்காட்டும் நண்பர்களுக்கு நன்றியுடன் வந்தனஞ்செலுத்துவேன்.

இக்கிரந்தத்தில் அநேக விஷயங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் பிரஸித்தமாயிருக்கிற அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் சைவம் இந்நான்கு மதங்களுடைய சித்தாந்தங்களை எனக்குத்தெரிந்த வரையிலும் சுருக்கமாய் வெளியிட்டிருக்கிறதுமல்லாமல் அதற்காதாரமானப்பிரமாணங்களையும் குறித்துக்காட்டியிருக்கிறேன்.

இக்கிரந்தத்திலுதஹரிக்கப்பட்டிருக்கிற ஸம்ஸ்கிருத வாக்கியங்களெல்லாம் தேவநாகர அக்ஷரத்திலிருக்கின்றன. தேவநாகர அக்ஷரந்தெரியாத சிலர் பொருட்டு தேவநாகர அக்ஷரத்திலிருக்கிற ஸம்ஸ்கிருத வாக்கியங்களையெல்லாம் அவைகளிருக்கிற பக்கங்களையும் அடையாளங்களையுங் குறிப்பிட்டுக்கிரந்தாக்ஷரத்தில் தனிமையிலச்சிட்டு இக்கிரந்தத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இக்கிரந்தத்திலுதஹரிக்கப்பட்டிருக்கிற ஸம்ஸ்கிருத வாக்கியங்களுக்கு அகராதியட்டவணையித்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சுபகிருது ௵
ஆவணி ௴ } வி. கு.

THE

# Aryamatasiddhanta Sangraha.

## CONTENTS.


| | | Page. |
|---|---|---|
| 1 | Introduction. ... ... ... | 1 |
| 2 | Praise to the Guru. ... ... ... | 5 |
| 3 | Praise to the Paramathma. ... ... | 6 |
| | CHAPTER I. | |
| 1 | Dialogue between Visvambharabhat and Mayuranadhan ... ... ... | 7 |
| 2 | Characteristics of the Aryans. ... ... | 7 |
| 3 | Nature, character, and conduct of the ancient Aryans ... ... ... | 10 |
| 4 | Do. do. do. of the Modern Aryans. | 12 |
| 5 | The religion, customs &c. of others are not to be abused ... ... ... | 16 |
| 6 | Paramathma—the source of all religions has no form or sign or name and authorities for the same ... ... ... | 18 |
| 7 | Reasons, why different religions and sastras exist | 20 |
| 8 | Summary of the nature of the four sub-divisions of the Aryan religion known as Advaitha, Dvaitha, Visishtadvaitha, and Saiva schools ... | 22 |
| 9 | The spiritual preceptors of those schools and no reason to despise them ... ... | 24 |
| 10 | No conflict between the sastras ; various forms of worship, ordained according to the qualifications of men .. ... ... | 26 |
| 11 | Those that are qualified, their mode of worship and the benefits of such worship ... | 28 |
| 12 | Reasons for the diversity, among the doctrines of the spiritual preceptors ... ... | 30 |
| 13 | Those that reproach religion or its preceptors are destined to perdition ... ... | 32 |

| | | Page. |
|---|---|---|
| 14 | Reasons for the contention that one's own religion is the best ... ... ... | 36 |
| 15 | Aryan religion is not hostile to other religions. | 37 |

CHAPTER II.

| | | |
|---|---|---|
| 1 | How Jayavritha met Susharma ... ... | 38 |
| 2 | Susharma's refusal to go and enjoy worldly pleasures with Jayavritha ... ... | 40 |
| 3 | Jayavritha praises worldly pleasures as the best for men ... ... ... | 41 |
| 4 | Worldly pleasures are shown to be unreal, full of misery and transitory ... ... | 43 |
| 5 | The impurities of the body and the unreality of the happiness enjoyed with that body ... | 46 |
| 6 | Riches are transitory and productive of grief ... | 48 |
| 7 | The pleasures derived from food &c. are little and not lasting ... ... ... | 51 |
| 8 | The highest happiness consists in leaving off all bodily attachments, in eating what is got by chance and in being steadfast in Self perception ... ... ... ... | 54 |
| 9 | Jayavritha's remarks that the body perishes owing to want of proper care, and that it would be imperishable if properly maintained; hearing which Susharma becomes disgusted ... | 55 |
| 10 | Jayavritha then begs forgiveness of Susharma and prays for Jnanopadesa ... ... | 56 |
| 11 | This Prapancha, this Samsara of births and deaths, and this body, are all liable to destruction and full of misery; and unless spiritual knowledge is obtained there is no liberation from Samsara ... ... | 56 |
| 12 | Man may be born as brutes &c. in consequence of his sins ... ... ... | 57 |
| 13 | This Prapancha and this Samsara are apt to vanish like a dream ... ... ... | 59 |
| 14 | Because this human birth is seldom obtained and the body is liable to decay every endeavour to attain salvation, should immediately be made | 68 |

15 Wife, children, and such other relations are not the means to obtain salvation; one's own endeavour is the chief cause ... ... PAGE. 74

16 It is the duty of man to protect his wife, children, and others, but he should have no attachment to them ... ... ... 83


## CHAPTER III.


1 Man is a self agent and not dependent ... 84

2 Isvara governs every thing, but he does not influence each being ... ... ... 97

3 Reasons for the distinctions as Brahmin and Sudra ... ... ... ... 98


## CHAPTER IV


1 The man who controls the mind and remains unattached to any thing, feels no difference whether he lives at home or in a forest ... 114

2 The characteristics of Gurus, the different classes of Gurus and the non attainment of salvation without a Guru ... ... ... 119

3 The method of serving the Guru ... 126

4 Jayavritha becomes Susharma's sishya ... 128


## CHAPTER V.


1 Vedas, Srutis, and Upanishads—what they are; Vedas have no beginning and the Revelation of the Vedas ... ... ... 129

2 The propagation of the Vedas, its division as Jnanakanda and Karma kanda, the subjects dealt with in those kandas; the divisions of the Vadas made by the great Rishi Vedavyasa and the benefits of the Karmakanda ... 132

3 The commentaries on the Upanishads forming the Jnanakanda of the Vedas ... ... 137

4 The Vedangas and the subjects comprised by them 137

5 The characteristics of the Dhanur and other Vedas and of the Brahmasutras and other Vedanthas 138

6 Smritis, Upasmritis, their authors, their distinctions and their contents ... ... 138

| | | Page. |
|---|---|---|
| 7 | The characteristics of the Itihasas; the nature of the Purusharthas taught in the Purvakanda of the Ramayanam which is one of the Itihasas ... | 143 |
| 8 | Nature and importance of Vâsishtaramayana or Jnanavâsishta which is the Utharakanda of Ramayanam ... ... ... | 145 |
| 9 | The Purusharthas taught by Bharatham which is another Itihasa ... ... ... | 146 |
| 10 | Do. do. do. by Gargasamhita the third Itihasa and also the life of Lord Sree Krishna with the origin of the Gopikas ... | 147 |
| 11 | The importance of the Itihasas; and the question whether the Itihasa puranas were given out by Sreemath Vedavyasa or whether they came along with the Vedas, set at rest ... | 148 |
| 12 | Names of the Puranas, and the denial that *Popadeva is* the author of Sree Bagavatha, one of the Puranas ... ... ... | 151 |
| 13 | Summary of the contents of the Puranas ... | 154 |
| 14 | Some portions in some of the Puranas are shown to have been interpolations ... | 155 |
| 15 | Names of the Upapuranas, their authors and summary of their contents ... ... | 173 |
| 16 | Adhyathma Ramayana proved to be an authority. | 173 |
| 17 | Agamasastras, and what do they deal with ... | 174 |
| | CHAPTER VI. | |
| 1 | Image worship is sanctioned by the Vedas. It is one of the worships to be performed by mind word and body ... ... ... | 177 |
| 2 | The Sruties, Smrities, Puranas and Itihasas in support of image worship are not spurious ... | 184 |
| 3 | Image worship, sacrifices, and such other Karmas are condemned by the Sastras having regard to the qualifications of the worshipper ... | 191 |
| | CHAPTER VII. | |
| 1 | Though the cause of the Universe is but the One yet it is known by different names. It really has no form or name ... ... | 204 |

2 Nature, characteristics and greatness of Brahmam 207
3 The *One* cause of the Universe, is spoken of as Siva, Vishnu, Brahma, Atom and so forth by different religionist ... ... 215
4 Many religions have Sruti as their only authority; out of them, how Advaita, Visishtadvaita, Dvaita and Saiva systems spread abroad ... 217

CHAPTER VIII.

1 The Paramarthikadesa (aspect) of Advaita system and its three sub-divisions as (a) Brahmaswarupa (b) Jivesyarajagath swarupa and (c) Prakritiswarupa otherwise known as Brahmasakti ... ... ... 219
2 The Vyavaharikadesa (aspect) of Advaitha system ... ... ... 221
3 Adwaita system which existed before the time of Sreemath Sankaracharıar was propagated by him ... ... ... ... 223
4 Sreemath Sankarachariar was an incarnation of Isvara, the time and the reason of his Avatara. 223
5 The Bhashya &c. of Sankaracharia and a short account of his life ... ... 225
6 The sublimity of the four Mahavakyas which form the basis of the Paramarthikadesa (aspect) of the Advaita system ... ... 228
7 The first part of the Paramarthikadesa (aspect) dealing with the nature of Brahman and declaring that there is nothing other than Brahmam, with authorities establishing the same ... 232

CHAPTER IX.

1 The second part of the Paramarthikadesa (aspect) dealing with the identity of Isvara, Jiva and Jagath with Brahman, and the salvation of Jiva only through the knowledge "I am Brahman," and authorities for the same.

CHAPTER X.

1 The third part of the Paramarthikadesa (aspect) dealing with Prakriti—Brahmasakti which

causes difference in manifestation, such as Jagath and so forth : Manas itself being a manifestation of this Ajnanasakti, giving rise to the recognition of these distinctions as Jagath and so forth, the annihilation of Manas causes liberation, with authorities for the same ... PAGE. 312

2 The characteristics of Manas, Buddhi, Chittam, Ahankara and Vasana (tendency) ... 354

CHAPTER XI.

1 The nature of the Vyavaharikadesa (aspect) with authorities .. ... ... 355

CHAPTER XII.

1 Description of the Visishtadvaita system ... 368

2 Sreemath Ramanujachariar who was also an incarnation of Isvara propogated the Visishtadvaita system which existed before his time; the time of his Avatara; his Bhasyas and other Grandhas and the authorities in support of his system ... ... ... 371

3 Description of the Dvaita system ... 375

4 Sreemath Madvachariar who was also an incarnation of Isvara propogated the Dvaita system, which existed before his time; the time of his Avatara, his Bhashyas and other books ... 378

5 Authorities supporting the Dvaita and Visishtadvaita systems ... ... ... 384

6 The reason why Ramanujachariar and Madvachariar taught their respective systems Visishtadvaita and Dvaita, in antagonism to Advaita. 395

CHAPTER XIII.

1 Description of the Saiva system ... ... 400

2 Very scanty information about the founder of the Saiva system, Sreemath Neelakantachariar; indefiniteness as to the time of his Avatara though it seems to have been before Sankarachariar. The controversy between him and Sankarachariar ... ... 403

3 The authorities in support of the belief of the Saiva system that Siva is the universal God ... PAGE. 405
4 How each of these four sects tries to establish its own faith, and explain away the texts supporting the other faiths ... ... 418

CHAPTER XIV.

1 Brahma, Vishnu, and Rudra, are but different aspects of the Divine One and those that are deluded by the outward manifestations are destined to perdition, with texts in support of the same ... ... ... ... 426
2 The reason why in some portions of the sastras Vishnu is spoken of as the universal God, and in some other portions Siva is spoken of as the universal God ... ... ... 443
3 The Advaitees who adhere to the Paramarthikadesa (aspect) do not hold this difference in manifestation as real ... ... ... 454
4 Advaitees of the Vyavaharikadesa (aspect) hold that Brahma, Vishnu, and Rudra are but aspects of Brahman or Isvara and authorities in support of the same ... ... 457
5 No conflict in the sastras and even the apparent conflict, how to be reconciled ... 467
6 That Isvara, at the very beginning, becoming limitted by the *Gunas*, manifests himself as Brahma, Vishnu and Rudra and they go on with the creation &c. of the world; that, being Jivanmukthas, they become Videhamukthas during the time of *Pralya*; authorities for the same ... 469
7 Reasons why the sastras ascribe those names to the Thirumoorthies, which are the attributes of Brahman ... ... ... 476
8 Reason why Brahma Chaitanya shines most in the Thirumoorthees ... ... ... 479

CHAPTER XV.

1 Jnana cannot be obtained by merely hearing

PAGE

Vedanta from a Guru but it must be got through meditation and reflection and such other endeavours ... ... ... 481
2 The characteristics of the four Purusharthas known as Dharma, Artha, Kama, Moksha ... 484
3 The beliefs of the Advaitees, Vyshnavas, and Saivas, as to what is *Moksha* ... 486
4 Jnana is the only immediate means to attain Moksha and Yoga is the means to attain Jnana 486
5 Jnanaswarupa described with referrence to the conception of it by the said four schools ... 489
6 Jivanmukthi and Videhamukthi described ... 493
7 Whatever form, men think of at the time of death the same form they attain, subsequently ... 497
8 Though Jiva is Brahman itself, it is known as Jiva owing to its *upadi* (limitations); the delusion about Jiva and the so-called pleasure and pain are due to ignorence (Ajnanasakthi) ... 498

CHAPTER XVI.

1 Good actions giving rise to purity of the Chitha are the means of attaining Jnana ... 506
2 Hatta yoga with its Ashtanga sadhanas ... 508
3 Bakthi yoga ... ... ... 510
4 Jnana yoga ... ... ... ... 511
5 The way to Jnana yoga ... ... 513
6 The characteristics of the four classes of Brahmaviths, and the description and benefits of the "Sapta Bhumika"—seven planes of knowledge. 525
7 The definition and the advantage of Sadhanachathushtaya ... ... ... 529
8 The nature of the four kinds of Mukthis ... 530
9 The characteristics of Satyomukthi and Krama mukthi ... ... ... 533
10 The description of Bhutharta and Gunartha vadas and for what purpose Gunartha vadas are made use of in the Puranas ... ... 535

11 Illustrations to show that the universe which appears to be distinct from Brahman, is really no other than Brahman ... ... 542
12 Jayavritha's return home after receiving the blessings of his Guru and how he spent the rest of his life ... ... ... 544
13 Mayuranatha also retires to the Himalayas after receiving the blessings of his Guru Visvambara bhat ... ... ... 546
14 What is taught by this Aryamathasiddhantha sangraham. ... 547

---

ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:

# ஆரியமதசித்தாந்தஸங்கிரஹ விஷய அட்டவணை.

| நெம்பர். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| | கிரந்தவரலாறு ... ... ... | 1 |
| | குருஸ்துதி ... | 5 |
| | பரமாத்துமஸ்துதி. ... | 6 |
| | முதலாவது பிரகரணம். | |
| 1 | விசுவம்பரபட், மயூரநாதன் ஸம்வாதம். ... | 6 |
| 2 | ஆரியர்களின் இலக்ஷணம். ... | 7 |
| | முன்னோர்களான ஆரியர்களுடைய, சுவபாவம் குணம் ஒழுக்கம். | 10 |
| 3 | தற்காலத்திய ஆரியர்களுடைய சுவபாவம் குணம் ஒழுக்கம். ... ... | 12 |
| 4 | அந்நியமதம், அந்நியர்களுடைய ஆசாரம்முதலியவைகளை நிந்திக்கலாகாதென்பது. ... | 16 |
| 5 | ஸகலமதத்திற்கும் கர்த்தாவான பரமாத்துமாவுக்கு உருவமாவது, அடையாளமாவது, பெயராவதில்லையென்பதற்கு ஆதாரமானபிரமாணம். ... ... ... | 18 |
| 6 | மதம் சாஸ்திரமிவைகள் வெவ்வேறாயிருக்கிறதற்குக்காரணம். ... ... | 20 |
| 7 | ஆரியமதத்திற்குட்பட்ட அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம்இம்மதங்களின்சுவரூபசங்கிரகம். ... ... | 22 |
| 8 | அம்மதாசாரியர்கள் இன்னின்னாரென்பதும், அவர்களில் யாரையும் நிந்திக்க நியாயமில்லை என்பதும் ... ... ... | 24 |

9 சாஸ்திரங்கள் ஒன்றுக்கொன்று விரோதமில்லை, அதிகாரிகளையநுஸரித்துப் பல உபாஸநாமார்க்கங்களைச்சொல்லுகின்றன .. பக்கம். 26

10 அதிகாரிகள், அவர்களுபாஸநாக்கிரமம், அந்தந்த உபாஸனைகளுக்குப் பலன்முதலியன ... 28

11 மதாசாரியர்களுக்குள் ஒருவர் சித்தாந்தத்திற்கு மற்றொருவர் சித்தாந்தம் வேறுபட்டதற்குக் காரணம் .. ... ... 30

12 மதத்தையாவது மதாசாரியரையாவது நிந்திக்கிறவன் துர்கதியை யடைவான் ... 32

13 தன்மதமே சிரேஷ்டமானதென்று ஏன் வாதிக்கப்படுகிறதென்பதற்குக் காரணம் ... 36

14 ஆரியமதம், மற்றமதங்களோடு விரோதிக்கிறதில்லை ... ... ... 37


## 2-வது பிரகரணம்.


1 ஜயவிரதன், சுசர்ம்மாவைச் சந்தித்தவிதம் ... 38

2 சுசர்ம்மாவைத் தன்னுடன்வந்து, விஷயசுகங்களை யநுபவிக்கும்படி ஜயவிரதன் சொல்லியதை, சுசர்ம்மா மறுத்தல் ... ... 40

3 விஷயசுகங்களே மனிதனுக்கு உத்தமமான பிரயோஜநமென்று ஜயவிரதன் வர்ணித்தல் ... 41

4 விஷயசுகங்கள் வாஸ்தவமான சுகமல்ல, துக்கசுவரூபமானது, அழியத்தக்கதென்று நிரூபித்தல் ... ... ... 43

5 தேகத்தின் அசுத்தங்களைக் குறிப்பிட்டுச்சொல்லி அத்தேகத்தினாலனுபவிக்கும்சுகம் சுகமல்ல, என நிரூபித்தல் ... ... 46

6 திருவ்வியமநித்தியம், துக்கசுவரூபமானது ... 48

7 உணவு முதலியவைகளினாலடையப்படும் விஷயசுகங்களும் அற்பமானது, அழியத்தக்கது... 51

8 தேகாபிமாநத்தைவிட்டவனாய் விரும்பாமற் கிடைத்ததைப் புஜிக்கிறவனாய் ஆத்துமாநுபவ

த்திலேயே நிலேயாயிருப்பது உத்தமமான பக்கம்.
சுகம் ... ... ... 54
9 தேகம் ஸரியாய்க் காப்பாற்றப்படாததனுலழிந்துபோகிறது, நன்றுய்க்காப்பாற்றப்பட்டால் அழியாது என்ற ஜயவிரதனுடைய வாக்கியத்தைக்கேட்டு சுசர்ம்மா அவனேவெறுத்தல் ... 55
10 ஜயவிரதன் சுசர்ம்மாவை மன்னிப்புக்கேட்டுத் தனக்கு ஞானோபதேசஞ்செய்யப் பிறுர்த்தித்தல் ... ... ... 56
11 இவ்வுலகம் பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரம்,இத்தேகம் இவைகள் அழியத்தக்கதாயுந் துக்கசுவரூபமாயுமிருக்கிறது. ஞானமடைந்தாலன்றி ஸம்ஸார நிவிருத்தியுண்டாகாது ... 56
12 மனிதனுக்குப்பாபத்தினுல் மிருகாதி ஜங்மங்களுண்டாகலாம் .. ... ... 57
13 பிரபஞ்சம், ஸம்ஸாரம் இவைகள் சுவப்நம்போல் நசிக்கத்தக்கது ... ... 59
14 மனிதஜங்மமரிதாகையாலும் தேகம் நசிக்கத்தக்கதாகையாலும் மனிதன் உத்தமகதியையடைய சீக்கிரம் முயலவேண்டும் ... ... 68
15 மனேவி மக்கள் முதலிய பந்துக்கள் உத்தமகதிக்குக்காரணமல்ல, தன்னுடைய முயற்சியேமுக்கியசாதநம் ... ... ... 74
16 மனேவிமக்கள் முதலியவர்களே இரக்ஷிப்பது மனிதனுக்குக்கடமை. ஆனுல், அவர்களிடத்திலபிமாநம் வைக்கக்கூடாது. ... ... 83

## 3-வது பிரகரணம்.

1 மனிதன் சுவதந்திரன், பரதந்தரனல்ல ... 84
2 ஈசுவரன் ஸகலத்திற்கும் நியந்தாவானுலும் ஒவ்வொருபிராணியையும் நியமிக்கிறதில்லே ... 97
3 பிராம்மணனுக்கும் சூத்திரனுக்கும் தாரதம்மியமேற்பட்டதற்குக்காரணம் ... ... 98

## 4-வது பிரகரணம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1 | மனதை நிருத்தி ஸகலத்திலுமபிமானமற்றிருக்கிற புருஷனுக்குக் காட்டிலிருப்பதிலும் வீட்டிலிருப்பதிலும் பேதமில்லை. ... ... | 114 |
| 2 | குருலக்ஷணம், குருதாரதம்மியம், குருவின்றி நற்கதியடைய வகையில்லை என்பது ... | 119 |
| 3 | குரு சிசுரூஷையின் கிரமம் ... ... | 126 |
| 4 | ஜயவிரதன் சுசர்ம்மாவுக்கு சிஷியனானது ... | 128 |


## 5-வது பிரகரணம்.


| | | |
|---|---|---|
| 1 | வேதம், சுருதி, உபநிஷத் இவைகளின்னதென்பது வேதமநாதி, வேதம் வெளிப்பட்டக்கிரமம் இவைகளை நிரூபித்தல் ... ... | 129 |
| 2 | வேதம் உலகத்திற் பரவியகிரமம், வேதத்திற் கருமகாண்டம் ஞானகாண்டமென்ற பிரிவு, ஒவ்வொருகாண்டத்திலுமடங்கியவிஷயங்கள், வேதவ்வியாஸமஹரிஷி வேதத்தைப்பிரித்தக் கிரமம், கருமகாண்டத்தின் பிரயோஜநம் இவைகளை விவரித்தல் ... ... ... | 132 |
| 3 | வேதத்தில் ஞானகாண்டமாகிய உபநிஷத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கிறபாஷ்யங்களின்னவை. | 137 |
| 4 | வேதாங்கங்களின்னவை, அவைகளிலடங்கிய விஷயங்களிப்படிப்பட்டன. ... ... | 137 |
| 5 | தநுர்வேதம் முதலிய வேதங்கள், பிர்ம்மசூத்திரம் முதலிய வேதாந்தங்கள் இவைகளின் இலக்ஷணம் ... ... ... | 138 |
| 6 | ஸ்மிருதிகள், உபஸ்மிருதிகள், அவைகளுக்குக் கர்த்தாக்கள், ஸ்மிருதிகளின் தாரதம்மியம், அவைகளிலடங்கிய விஷயங்கள் ... ... | 138 |
| 7 | இதிஹாஸஇலக்ஷணம், அவைகளிலொன்றாகிய இராமாயணம் பூர்வகண்டத்தினால் வெளிப்படும் புருஷார்த்தங்களுடைய சுவரூபம் ... | 143 |
| 8 | இராமாயணத்தின் உத்தரகண்டமாகிய வாஸிஷ்டராமாயணம் அல்லது ஞானவாஸிஷ்டம் இப்படிப்பட்டதென்பதும் அதன் மஹிமையும்... | 145 |

9 மற்றொரு இதிஹாஸமாகிய பாரதத்தினல்வெளி ப்படும் புருஷார்த்தங்கள் ... ... பக்கம். 146
10 மூன்றுவது இதிஹாஸமாகிய கர்க்கஸம்ஹிதையி ஞல் வெளிப்படும் புருஷார்த்தங்கள், ஸ்ரீ கிரு ஷ்ணபகவானுடைய சரித்திரம், கோபிகைக ளுடைய உற்பத்தி ... ... ... 147
11 இதிஹாஸங்களுடைய மஹிமை, இதிஹாஸபுரா ணங்கள் ஸ்ரீமத் வேதவ்வியாஸரால் வெளியிட ப்பட்டனவா, அல்லது வேதத்துடன் உண்டா யினவா என்ற சங்கைநிவிருத்தி ... ... 148
12 புராணங்களுடையபெயர், அவைகளிலொன்று கிய பாகவதம் போபதேவனுற் செய்யப்பட்ட தல்லவென்று மறுத்தல் ... ... 150
12 புராணங்களிலடங்கிய விஷயங்களின் சங்கிரகம். 154
13 சிலபுராணங்களிற் சிலபாகம் கற்பிக்கப்பட்டிரு க்கிறதென்று நிரூபித்தல் ... ... 155
14 உபபுராணங்களின்னவை, அவைகளுக்குக்கர்த் தாக்களின்னர், அவைகளிலடங்கிய விஷய சங்கிரகம் ... ... ... 173
15 அத்தியாத்துமராமாயணம் பிரமாணக்கிரந்தமெ ன்று நிரூபித்தல். ... ... ... 173
16 ஆகமசாஸ்திரங்களின்னவை, அவைகளிலடங்கிய விஷயங்களிப்படிப்பட்டன என நிரூபித்தல். 174

## 6-வது பிரகரணம்.

1 விக்கிரஹாராதநம் வேதோக்தமானது, மனோ வாக்காயங்களினுற் செய்யவேண்டிய உபாஸ னைகளிலதொன்று ... ... 177
2 விக்கிரஹாரதனைக்காதாரமான சுருதி ஸ்மிருதீ திஹாஸபுராணங்கள் வாஸ்தவமானவைகள். 184
3 விக்கிரஹாராதநத்தையும் மற்ற யக்ஞம்முதலிய கருமங்களையும் அதிகாரிகளை யுத்தேசித்து சாஸ்திரங்கள் நிந்திக்கின்றன ... ... 191

7-வது பிரகரணம்.

| | | பக்சம். |
|---|---|---|
| 1 | ஜகத்காரணவஸ்துவொன்றேயானாலும் பலகாரணப்பெயர்களினாலழைக்கப்படுகிறது. அதற்கு உருவமாவது குறிப்பான பெயராவதில்லை. | 204 |
| 2 | பிர்ம்மசுவரூபம், அதன் இலக்ஷணம், அதன் மஹிமை விரித்தல் ... ... ... | 207 |
| 3 | ஒன்றான ஜகத்காரணவஸ்துவை ஒரு மதத்தார் சிவனென்றும் ஒருமதத்தார் விஷ்ணுவென்றும் ஒருமதத்தார் பிர்ம்மமென்றும் ஒருமதத்தார் பரமாணுக்களென்றும் பலவிதமாய்ச் சொல்லுகிறார்களென்பது ... ... | 215 |
| 4 | சுருதியையே பிரமாணமாயங்கீகரிக்கிற பலமதங்களுண்டு. அவைகளுக்குள் அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் துவைதம் சைவம் இந்நான்கு மதங்கள் உலகத்திற் பரவியக்கிரமம். | 217 |

8-வது பிரகரணம்.

| | | |
|---|---|---|
| 1 | அத்துவைதத்திற் பாரமார்த்திகதசை இப்படிப்பட்டதென்றும், அதில் பிர்ம்மசுவரூபம், ஜீவேசுவர ஜகத்சுவரூபம், பிர்ம்மசக்தியாகிற பிரகிருதிசுவரூபம் இப்படி மூன்றுவிதமாய்ப் பிரித்துக்காட்டல். ... ... | 219 |
| 2 | அத்துவைத சித்தாந்தத்தில் வியவஹாரதசை இப்படிப்பட்டதென்பது ... ... | 221 |
| 3 | அத்துவைதமதம் ஸ்ரீமத் சங்கராசாரியர்காலத்திற்குமுந்தியே இருந்ததை அவர் உலகத்திற் பரவச்செய்தார் ... ... ... | 223 |
| 4 | ஸ்ரீமத் சங்கராசாரியர் ஈசுவராம்சத்தினாலவதாரஞ்செய்தவர், அவர் அவதாரஞ்செய்தகாலம், அவர்அவதாரஞ்செய்ததற்குக்காரணம் ... | 223 |
| 5 | சங்கராசாரியர்செய்த பாஷியம்முதலிய கிரந்தங்களின்னவை, அவர் சரித்திரசுருக்கம் ... | 225 |
| 6 | அத்துவைதமதத்தின் பாரமார்த்திகதசையை யாதரிக்கிற நான்கு மஹாவாக்கியங்களுடைய மஹிமையை நிரூபித்தல் ... ... | 228 |

7 பாரமார்த்திகதசையில் முதலாவது பாகமாகிய பக்கம்.
பிர்ம்மசுவரூபமிப்படிப்பட்டது. பிர்ம்மத்திற்
கந்நியமாயாதொரு வஸ்துவுமில்லை என்றுகூ
றும் பிரமாணங்கள் ... ... 232

9-வது பிரகரணம்.

1 பாரமார்த்திகதசையின் இரண்டாவது பாகத்தி
ற்சொல்லிய ஜீவேசுவரஜகத்து பிர்ம்மத்திற்
கு வேறுயில்லை, ஜீவன்தான் பிர்ம்மமென்கிற
ஞானத்தினுல் மோக்ஷமடைகிறுன்என்ற விஷ
யங்களும் அவைகளையாதரிக்கிற பிரமாணங்
களும். ... ... .. 265

10-வது பிரகரணம்.

1 அத்துவைத பாரமார்த்திகதசையில் மூன்றுவ
து பாகமாகிய பிர்ம்மசக்தியாகிற பிரகிருதி
பலவிதமாய்ப் பரிணமித்து ஜகத்துமுதலிய
பேதமாய்த்தோற்றுகிறது. அக்ஞானசக்தியே
மனதாகப்பரிணமித்து ஜகத்து முதலியபேத
ங்களாய்க் காணுகிறபடியால் மனே நாசமே
மோக்ஷம், இவைகளையாதரிக்கிறப் பிரமாணங்
கள் ... ... ... 312
2 மனது, புத்தி, சித்தம், அஹங்காரம், வாஸனை
இவைகளின் சுவரூபலக்ஷணம் ... 354

11-வது பிரகரணம்.

1 அத்துவைதத்தின் வியாவஹாரிகதசை இப்படிப்
பட்டதென விரித்துச்சொல்லி அதையாதரிக்
கிற பிரமாணங்களையும் குறித்துக்காட்டல்... 355

12-வது பிரகரணம்.

1 விசிஷ்டாத்துவைதமத சித்தாந்தசுவரூப விஸ்
தாரம் ... ... ... 368
2 ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் ஈசுவராம்சத்தினுலவ
தாரஞ்செய்து அவர்காலத்திற்கு முந்தியேயி
ருந்த விசிஷ்டாத்துவைதமத சித்தாந்தத்தை
உலகத்திற்பரவச்செய்தது, அவர் அவதாரகா

லம், அவர்செய்தபாஷியம்முதலிய கிரந்தங்க பக்கம்.
ள், அவர்செய்த சித்தாந்தத்தையாதரிக்கிற
பிரமாணங்கள் இவைகளுடைய நிரூபணம்... 371
3 துவைதமத சித்தாந்தசுவரூப விஸ்தாரம் ... 375
4 ஸ்ரீமத் மத்துவாசாரியர் ஈசுவராம்சத்திலவதா
ரஞ்செய்து அவர்காலத்திற்குமுந்தியேயிருந்
த துவைதமதசித்தாந்தத்தை உலகத்திற் பர
வச்செய்தது, அவர் அவதாரகாலம், அவர்
செய்த பாஷியம்முதலிய கிரந்தங்கள் இவை
களுடைய நிரூபணம் ... ... 378
5 விசிஷ்டாத்துவைதம் துவைதம் இம்மதங்களுக்
காதாரமான பிரமாணங்கள் ... 384
6 விசிஷ்டாத்துவைதமதத்தை இராமாநுஜாசாரிய
ரும், துவைதமதத்தை மத்துவாசாரியரும்
அத்துவைதமதத்திற்கு விரோதமாய்ப் போ
தித்ததற்குக் காரணம் ... ... 395

13-வது பிரகரணம்.

1 சைவமத சித்தாந்த சுவரூப விஸ்தாரம் ... 400
2 ஸ்ரீமத் நீலகண்டாசாரியர் இவ்வுலகத்திலவதா
ரஞ்செய்தகாலங் குறிப்பாய்த்தெரியாவிட்டா
லும் அவரவதாரஞ்செய்தகாலமானது சங்க
ராசாரியர் காலத்திற்குமுந்தியதென்றும் சங்
கராசாரியருக்கும் நீலகண்டாசாரியருக்கும்
மதவிஷயமாயுண்டான வாதம் இன்னவிதமா
ய் முடிவுபெற்றதென்றும் நிரூபித்தல் ... 403
3 சைவ சித்தாந்திகளுடைய கொள்கைப்படி சிவ
ஸர்வோத்தமத்துவத்தை யாதரிக்கிற பிரமா
ணங்கள் ... ... ... 405
4 மேற்கண்ட நான்குமதஸ்தர்களும் தங்கள் தங்
கள்கொள்கையை வற்புறுத்தும் விதம் மற்ற
வர்களுடைய கொள்கையை அபலப்படுத்தும்
விதம். ... ... ... 418

| 14-வது பிரகரணம். | | பக்கம். |
|---|---|---|
| 1 | பிர்ம்ம விஷ்ணு உருத்திரர்கள் பேதமற்ற ஒரே வஸ்து, பேதபுத்தியாய் எண்ணுகிறவர்கள் துர்கதியையடைகிறார்கள் என்ற இவ்விஷயத்தை யாதரிக்கும் பிரமாணவாக்கியங்கள் ... | 426 |
| 2 | சாஸ்திரங்களில் விஷ்ணுவை ஸர்வோத்தமராகச் சிலவிடங்களிலும், சிவனை ஸர்வோத்தமராகச்சிலவிடங்களிலும் ஏன் சொல்லப்படுகிறதென்பதற்குக் காரணம் ... ... | 448 |
| 3 | பாரமார்த்திகதசையை யநுஸரிக்கிற அத்துவைதிகளோ இம்மூர்த்திகள் கற்பனையென்ற, நிச்சயமுள்ளவர்களாகையால் அவர்கள் பேதமாய் நினைக்கவிடமில்லை ... ... | 454 |
| 4 | வியாவஹாரிகதசையைப் பின்பற்றுகிற அத்துவைதிகள் பிரும்ம விஷ்ணு உருத்திரர்களைபிர்ம்மம் அல்லது ஈசுவரருடைய சுவரூபமென்று வற்புறுத்துகிறவிதம், அதற்காதாரமானப் பிரமாணங்கள் ... ... ... | 457 |
| 5 | சாஸ்திரங்களிலொன்றுக்கொன்று விரோதமில்லை, விரோதமாய்த்தோற்றினாலும் அவ்விரோதத்தைப் பரிஹரிக்கும்விதம் ... ... | 467 |
| 6 | வியவஹாரதசையை யநுஸரிக்கிற அத்துவைதிகள் பிரும்ம விஷ்ணு உருத்திரர்கள் இவ்வுலகரக்ஷணையின்பொருட்டு சிருஷ்டிகாலத்திலுண்டாய் ஸ்திதிகாலத்தில் உலகசிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரியங்களையும், அதன் நிமித்தமாயுலகத்திலவதாரங்களையுஞ் செய்கிறார்களென்றும், அவர்கள் ஜீவன் முக்தர்களாகையால், அவர்களைக் கருமங்கள் துடராதென்றும், அவர்கள் மஹாபிரளயத்தில் விதேக முக்தியையடைகிறார்களென்றுஞ் சொல்லுகின்ற கக்ஷியை யாதரிக்கும் பிரமாணங்கள் ... ... | 469 |
| 7 | திருமூர்த்திகளுக்கு, பிர்ம்மத்திற்குச் சொல்லக்கூடிய காரணப்பெயர்களைச் சாஸ்திரங்கள் | |

ஏன் சொல்லவேண்டு மென்பதற்குக் கார பக்ஷம்.
ணம். ... ... ... ... ... 476

8 திருமூர்த்திகளிடத்திற் பிர்ம்ம சைதந்நிய பிர
காசம் விசேஷமாய் விளங்கிற தென்பதும்
அதற்குக் காரணமும். ... ... ... 479

15-வது பிரகரணம்.

1 வேதாந்தார்த்தத்தைக் குருமுகமாய்க் கேட்ட
தனாலேயே ஞானமுண்டாகாது. மநநம் த்தியா
நம் முதலிய முயற்சியும் வேண்டும். ... 481

2 தருமார்த்த காம மோக்ஷங்களாகிய நான்குவித
புருஷார்த்த லக்ஷணம். ... ... ... 484

3 மோக்ஷமிப்படிப்பட்டதென்கிற விஷயத்தில் அ
த்துவைதிகள் வைஷ்ணவர்கள் சைவர்கள்
இவர்களுடைய நிச்சயம். ... ... ... 486

4 மோக்ஷத்திற்கு நேரான ஸாதநம் ஞானமொன்
றே என்றும் ஞானத்திற்கு ஸாதநம் யோகமெ
ன்றும் நிரூபித்தல் ... ... 486

5 மேற்குறித்த நான்கு மதஸ்தர்களுடைய சித்தா
ந்தத்தை யநுஸரித்து ஞாந ஸ்வரூப முரை
த்தல் ... ... ... 489

6 ஜீவன் முக்த விதேக முக்த லக்ஷணம் ... 493

7 மனிதன் தன் மரணகாலத்திலெதை ஸ்மரிக்கிறானோ
அந்த ரூபத்தையே யடைகிறானென்பது. ... 497

8 பிர்ம்மமே உபாதியை முன்னிட்டு ஜீவனாகச்
சொல்லப்படுகிறது. ஜீவனென்கிற பிரமையும்
சுகதுக்கமென்கிற பிரமையும் அக்ஞாந சக்
தியினாலுண்டாயிருக்கிறது. வாஸ்தவத்திலி
ல்லை. .. ... ... 498

16-வது பிரகரணம்.

1 ஸத்கருமங்கள் சித்த சுத்தி மூலமாய் ஞாந சா
தனமாகின்றன. ... ... ... 506

2 எட்டுவிதமான ஸாதநங்களோடு கூடிய ஹட
யோக லக்ஷணம். ... ... 508

3 பக்தியோகமிப்படிப்பட்டது. ... ... 510

பக்கம்.

4 ஞானயோகமிப்படிப்பட்டது. ... ... 511
5 ஞானயோகமடைவதற்குபாயம். ... ... 513
6 பிர்ம்மவித், பிர்ம்மவித்வரன், பிர்ம்மவித்வரியான் பிர்ம்மவித்வரிஷ்டன் இவர்களுடைய இலக்ஷணமும் ஏழு ஞானபூமிகைகளுடைய இலக்ஷணமும் உரைத்தல் ... ... 525
7 ஸாதந சதுஷ்டய லக்ஷணமும் அவைகளின் பிரயோஜநமும். ... ... ... 529
8 ஸாலோக ஸாரூப ஸாமீப ஸாயுஜ்ய முக்திகளின் சுவரூபம். ... ... ... 530
9 ஸத்தியோமுக்தி, கிரமமுக்தி லக்ஷணம். ... 533
10 புராணங்களில், மிகவுமற்பமானதும் தற்செயலாய் நேரிட்டதுமான சில செய்கைகளினால் உத்தமகதியைச் சில பிராணிகள் அடைந்ததாகச் சொல்லியிருக்கிறது, அர்த்தவாதமென்று நிரூபித்தல். ... ... 535
11 பேதமாய்த் தோற்றுகிற இந்த ஜகத்தானது பிர்ம்மத்திற் கந்நியமல்ல வென்பதற்கு உதாரணம். ... ... ... 542
12 ஜயவிரதன் அவனுடைய ஆயுள்காலம் வரையில் அவன் கடந்துகொள்ளவேண்டியக் கிரமத்தைப் போதித்து அவன் ஜீவன் முக்தியையும் பிறகு விதேக முக்தியையு மடையும்படி சுசர்மா அவனுக் கநுக்கிரஹம் செய்துவிடைகொடுத்தது. ... ... ... 544
13 மயூரநாதன் விசுவம்பரபட் என்பவரிடத்திலநுக்கிரஹம் பெற்று யோகத்தை யநுஷ்டிக்க வநஞ்சென்றது. ... ... 546
14 ஆரியமதஸித்தாந்த ஸங்கிரகம் எந்தந்தவிஷயங்களைப் போதிக்கிறதென்பது. ... 547

விஷயாட்டவணை முற்றிற்று.

|| ॐ परब्रह्मणे नमः ||

|| ॐ परमगुरवे नमः ||

# || आर्यमतसिद्धान्तसंग्रहम् ||

## ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

### கிரந்தவரலாறு.

1 இவ்வுலகத்திற் பிறப்பையடைந்திருக்கிற பிராணிகளுக்குள் மனிதன்மட்டுமே மிகவும் மேன்மையுடைய பிராணியாயிருக்கிறானென்பது எல்லோருமறிந்தவிஷயமே. இம்மனிதனுக்கு அநேக ஜன்மங்களில் செய்த புண்ணியகருமங்களின் பலனாக இந்தமனிததேகம் கிடைத்தது. மற்றப்பிராணிகளைவிட மனிதன் எதனால் உயர்வுடையவனாயிருக்கிறானென்றால், சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலமாகிய முக்கால ஸம்பவங்களையறியும்படியான சக்தி அல்லது புத்தி மனிதனுக்கேயன்றி மிருகாதிகளுக்கில்லையென்பதினாற்றான். இப்படிப்பட்ட அரிதான மானிடப்பிறவியை யடைந்திருக்கிற புருஷன் தன்னுடைய தற்கால நிலைமையிலிருந்து மேலான இருப்பை, அதாவது மேலான சுகத்தை விரும்புவது இயற்கையாயிருக்கிறது. இப்படிப்பட்ட மேலான இருப்பு அல்லது சுகமானது இவ்வுலகத்தி லித்தேகத்தினாலநுபவிக்கக்கூடிய தனகனக வஸ்துவாஹன புத்திரமித்திரகளத்திராதிகளே என்று பெரும்பாலோர் எண்ணியிருக்கிறார்களேயன்றி இதைவிட மேலான சுகமிருக்கிறதாகவறியவில்லை. தனகனகவஸ்துவாஹனாதிகளினால் உண்டாகிற சுகமானது துக்கத்தோடுகூடியதாயும் அற்பகாலத்திலழியக்கூடியதாயும் நிலையற்றதாயும் வாஸ்தவமல்லாததாயுமிருக்கிறதாகையால் அவைகளைமட்டும் விரும்புவது விவேகிகளுக்கழகல்ல. ஆனால் வாஸ்தவமாய் விரும்பக்கூடிய சுகமேதுவென்னில், ஸர்வ

சிரேஷ்டமானதும் பிறப்பிறப்பற்றதுமழிவற்றதும் நித்தியானந்தமுமாகிய மோக்ஷசுகமே. அல்லது, மோக்ஷசுகத்திற்குத் தாழ்ந்ததானாலும் இவ்வுலக சுகத்தைவிட அநேகமடங்கு மேலானதும் துக்கசம்பந்தமில்லாததும் நீண்டகாலமநுபவிக்கத்தக்கதுமாகிய சுவர்க்கம் முதலிய உத்தமமான லோகங்களில் தேவசரீரமடைந்து அநுபவிக்கக்கூடிய சுவர்க்காதி லோகங்களையடையவாவது முயற்சிசெய்யவேண்டும். அப்படி முயற்சி செய்வதினால் தேவஜன்மம் கிடைக்காவிட்டாலும் மனிதர்களுக்குள் உத்தமமான மனிதஜன்மமாவது கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இவைகளிலொன்றையாவதடைய முயற்சிசெய்யாமல் இவ்வுலகவிஷயசுகங்களையே மேலானதாயெண்ணி அதிலேயே முயற்சியுள்ள புருஷனுக்கு இத்தேகம்போனவுடன் இதே மனிதஜன்மமாவது மறுபடி கிடைக்குமென்பது நிச்சயமில்லை. மிருகாதி தாழ்ந்தஜன்மங்கள் அடையப்படுமேயானால் அந்தஜன்மங்களிலிருந்து மேலானசுகத்தை விரும்பவும் அதற்காக முயற்சி செய்யவும் முற்றிலும் சக்தியற்றவனாகிறான். ஆகையால் ஒவ்வொருவனும் இத்தேகத்தோடிருக்குங் காலத்திலேயே மேலான சுகமடைய முயற்சிசெய்வது மனிதனுடைய நீங்கிலாக்கடமையாயிருக்கிறது.

2. அப்படி முயற்சிசெய்யவேண்டிய தவசியந்தான். ஆனால் யௌவனத்தில் திரவ்யாதிகளை சம்பாதித்து உலகவிஷயானுபவங்களை யனுபவித்து வார்த்திகத்தில் (கிழத்தனத்தில்) பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களில் முயற்சி செய்யலாம் என்பீர்களானால், அது தப்பான அபிப்பிராயம். ஏனென்றால், வார்த்திகம் வரையில் இத்தேகம் நிலைத்திருக்குமென்பதும் வார்த்திககாலம் முழுதுமித்தேகமிருக்குமென்பதும் நிச்சயமில்லை. இந்த அர்த்தத்தை சாஸ்திரங்களே சொல்லுகின்றன.

युवैव धर्मशीलस्स्यादनित्यं खलु जीवितं ।
को हि जानाति कस्याद्यमृत्युकालो भविष्यति ॥

"ஆயுள் நிச்சயமாகவே நசிக்கத்தக்கது. யாருடைய மரண
"காலமின்னதென்று யார்தானறியப் போகிறார்கள். (ஆகை
"யால்) வாலிபனுங்கூட தருமத்தில் (நல்லொழுக்கத்தில்) முய
"ற்சியுடையவனாயிருக்கவேண்டியது."

"நீரிற்குமிழி யிளமை நிறைசெல்வம் நீரிற்சுருட்டு நெடுந்
"திரைகள்—நீரிலெழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே வழு
"த்தாத தெம்பிரானமன்று" இதன்கருத்தென்னவெனில், இள
மைப்பருவமானது நீர்க்குமிழிக்கொப்பாகும். நிறைந்தசெல்வ
மானது நீரினலைக்கொப்பாகும். தேகமானது நீரினெழுத்துக்
கொப்பாகும். ஆகையால் நம்மவர்களே கடவுளை ஏன்வணங்கா
மலிருக்கிறீர்கள் என்பதே.

"இளையமதுதவமாற்றுது நோற்றேன்றுளைவின்று கண்பாடு
"ஏழை—விளிவின்று வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற்
"காண்பாரும் தாழாமே நோற்பார்தவம்." இதன்கருத்தென்ன
வெனில், இவ்வளவுகாலம் இத்தேகத்தோடிருப்போமென்றறிந்த
முனிவர்களும், தவம்செய்துகொண்டிருக்கிறார்கள். இதையறி
யாத மூடர் தேகத்தை நிலையாய்எண்ணி மூப்பின்காலத்தில்
தவம் செய்வோமென்றெண்ணுவார் என்பதே.

இப்படிதேகமானது இன்றைக்கோ, நாளைக்கோ, இன்னு
மொருநாழிகைக்கோ என்று நிலைசொல்ல விடமில்லாததானதி
னால் ஒவ்வொருமனிதனும் தன்னுடைய யௌவனகாலத்திலே
யே பரலோக சுகத்தையடையும் விஷயத்தில் விடாமுயற்சி செ
ய்யவேண்டியதவசியம்.

3. எவ்விதமான முயற்சிசெய்ய வேண்டியதென்றால், தன்
முன்னோர்கள் அநுஷ்டித்துவந்த அல்லது பின்பற்றிவந்த மத
சாஸ்திரங்களை நன்றாய் ஆராய்ச்சி செய்து அவைகளின் கருத்து
களை யறிந்துகொண்டு அதன்படி யநுஷ்டானம் செய்வதேதான்.
ஒவ்வொருமனிதனும் பரலோக சுகமடையவேண்டுமானால் மதத்
தைப் பின்பற்றாமல் ஸாதித்துக்கொள்ளமுடியாது. ஏனெனில்
மதமானது பரலோகத்திற்குப்போகும் மார்க்கத்தைக் காண்பி
விக்கிறதாயிருக்கிறது. ஒவ்வொருமதமும் அதற்குறித்தான சாஸ்
திரங்களையாதாரமாய்க்கொண்டு வெளிப்பட்டிருக்கிறது. அந்த
சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றறிந்து அதன்படியநுஷ்டானம் செ
ய்யவேண்டும்.

4. ஓ! ஆரியசிகாமணிகளே! நம்முன்னோர்களான ஆரியர்
கள் அநுஷ்டித்து வந்தமதமெதுவோ அந்த ஆரியமதந்தான் நாம்
அநுஷ்டிக்கத்தக்க உத்தமமான மதம். எதனாலெனில், இவ்வா
ரியமதம் வெகு பழமையானது. மற்றமதங்களுக்கு முந்தியது.

பிரும்மரிஷிகளாலும் மஹரிஷிகளாலும் அநுஷ்டிக்கப்பட்டது ஆரியமதசாஸ்திரங்கள் தேவபாஷையும் தாய்ப்பாஷையுமான ஸம்ஸ்கிருதத்திலமைக்கப்பட்டுள்ளது. தபஸ், யோகம் ஞான மிவைகளின் சுவரூபத்தை (இயல்பான நிலையை) விரித்துரைப்பதில் ஆரியமத சாஸ்திரங்களொப்பற்றன. ஸமுத்திரத்தைக் கடந்துபோகக் கப்பற்போல் ஜனனமரணமாகிற ஸம்ஸாரஸமுத்திரத்தைக் கடந்துபோக ஆரியமதசாஸ்திரங்கள் துணையாயிருக்கின்றன. மேலும் இந்த ஆரியமதமானது வேறுமதங்களோடு விரோதிக்கிறதில்லை. இம்மதத்தையும் மதசாஸ்திரங்களையும் அன்னியமதஸ்தர்கள் புகழ்ந்து இம்மதக்கொள்கையைப் பின்பற்றுகிறார்கள்.

இப்படிப்பட்ட மேன்மைபொருந்திய ஆரியமதமானது அம்மதஸ்தர்களான ஆரியர்களால் அலக்ஷியம் செய்யப்பட்டு மதத்திலாவது மதசாஸ்திரங்களிலாவது விசுவாசமில்லாததினால் ஆரியர்களிலநேகருக்கு உத்தமமான பரலோகசுகமாகிற செல்வம் குன்றிப்போயிற்று. இக்குறைவை நிவர்த்திக்க முயற்சிசெய்ய வேண்டியது ஆரியர்களுடைய கடமையாயிருக்கிறது.

5. மதசாஸ்திரங்கள் ஸம்ஸ்கிருதத்திலிருக்கிறதினாலும் ஸம்ஸ்கிருதபாஷையை அநேகர் அறியாததினாலும் அம்மதத்தினுண்மையையறியாமல் அநேகவாரியர்கள், மயங்குகிறார்கள். சிலர் நாஸ்திகர்களாய்விட்டார்கள். சிலர் அன்னியர்களுடைய போதனைக்குட்பட்டு ஆரியமதத்தைவிட்டு பிறர்மதத்தில் நுழைந்தார்கள். இவைகள்மாத்திரமல்ல, ஆரியமதஸ்தர்களுக்குள்ளாகவே சிலபிரிவுமதங்களேற்பட்டு அம்மதங்களில் ஒருமதஸ்தர் மற்றொருவர்மதத்தையும் ஆசாரங்களையும் நிந்திப்பதுடன் வாதம் செய்துகொண்டும் வருகிறதினாலே சாஸ்திரப்பயிற்சியில்லாதவர்களுக்கு ஒருமதத்திலாவது மதசாஸ்திரத்திலாவது நம்பிக்கையில்லாமலிருக்கிறது. இப்படிப்பட்ட குறைவுகளுக்குக் காரணம் மதசாஸ்திரங்களையறியாமையே என்று நிச்சயமாய்ச்சொல்லக்கூடும். ஆகையால் ஆரியமத சாஸ்திரங்களை தேசபாஷையில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தினால் அக்குறைவு நிவர்த்தியாகக்கூடும். ஆனால் ஆரியமத சாஸ்திரங்களையெல்லாம் மொழிபெயர்க்கத் துடங்குவோமானால் அப்படிச்செய்ய ஒரு புருஷாயுஸ் போதுமானதாகாது. ஆனாலும் ஆரியமதசித்

தாந்தத்தைக் கூடியவரையி லறிந்துகொள்ளும்படியானதும் அவைகளில் முக்கியமானதுமான சில சாஸ்திரவாக்கியங்களைக் குறித்துக்காட்டி அந்த வாக்கியங்களுக்கு தேசபாஷையில் மொழிபெயர்த்து வெளிப்படுத்துவதினால் ஆரியமதசுவரூபத்தையும் அதன் உட்பிரிவுமதங்களுடைய சுவரூபங்களையும் சுலபமாயறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கும். அதற்காகவே இக்கிரந்தம் வெளியிடப்படுகிறது.

6. இக்கிரந்தத்தில், முற்காலத்தியவாரியர்களுடைய உத்தம குணங்களும் இக்காலத்தியவாரியர்களுடைய நிலைமையும் ஆரியமதத்தின் மஹிமையும் அம்மதததிற்குள் ஏற்பட்டிருக்கிற பலமதங்களில் பிரசித்தமாயும் வெகுஜனங்களால் பின்பற்றப்பட்டதாயுமிருக்கிற அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம் இந்நான்கு மதங்களுடைய சுவரூபமும் அவைகளுக்காதாரமான சுருதி ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களுடைய மகிமையும் அவைகளுடைய சுவரூபமும், மனிதன் நற்கெதியடைகிறதற்கு சாதனங்களான பலவிஷயங்களும் சொல்லப்படும்.

7. இப்படிப்பட்ட பெரும் முயற்சி கைகூடும்படி அனுக்கிரகம் செய்யும்பொருட்டும் இக்கிரந்தத்தைப் பின்பற்றி அதின்படியனுஷ்டிக்கும் புருஷர்களுக்கு தர்மார்த்தகாமமோக்ஷங்களாகிற நான்குவித புருஷார்த்தங்களை யளிக்கும்பொருட்டும் குருவையும் பரமாத்துமாவையும் பக்திவிசுவாஸத்துடன் வணங்கி ஸ்துதிப்போம்.

## ॥ गुरुस्तुतिः ॥

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णु र्गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात् परं ब्रह्म तस्मै श्री गुरवेनमः ॥

अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्री गुरवेनमः ॥

अखण्डमण्डलाकारं व्याप्तं येन चराचरम् ।
तत्पदं दर्शितं येन तस्मै श्रीगुरवेनमः ॥

नमश्श्रुतिशिरः पद्म षण्डमार्ताण्डमूर्तये ।
बादरायण संज्ञाय मुनये शमवेश्मने ॥

ब्रह्मसूत्रकृते तस्मै वेदव्यासाय वेधसे ।
ज्ञानशक्त्यावताराय नमो भगवतो हरेः ॥

## ॥ परमात्मस्तुतिः ॥

यस्माज्जातं जगत्सर्वं यस्मिन्नेव विलीयते ।
येनेदं धार्यतेचैव तस्मै ज्ञानात्मने नमः ॥

नित्यानन्दं परमसुखदं केवलं ज्ञानमूर्तिं
विश्वातीतं गगनसदृशं तत्वमस्यादि लक्ष्यम् ।
एकं नित्यं विमलमचलं सर्वधी साक्षिभूतं
भावातीतं त्रिगुणरहितं चिन्मयं तन्नमामि ॥

स्वाराजपूर्तसुरकोटिकिरीटराजन्नीरांजनीय निजपाद सरोरुहाय ।
शस्त्रास्त्रवेदपतये वरशङ्करश्री नारायणाय विमलाय नमश्शिवाय ॥

माराहिताय मधुकैटभदारणाय ध्यानादरःप्रतरकण्ठतनुप्रभाय ।
साराय सर्वजगतामपि शंकरश्री नारायणाय विमलाय नमश्शिवाय ॥

शिवस्वरूपी शिवभावितानां हरिस्वरूपी हरिभावितानाम् ।
विधिस्वरूपी विधिभावितानां वरं वरेण्यं शरणं प्रपद्ये ॥

॥ओं तत्सत् ॥

8. இக்கிரந்தத்தின் மூலமாய் எந்தெந்த விஷயங்கள் வெளியிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ அந்த விஷயங்களை தெளிவாய் விளக்கிக்காட்டுகிறதும் குரு சிஷியர்களுக்குள் நடந்த சம்வாதமாயிருக்கிறதுமான ஒரு இதிஹாஸமானது சொல்லப்படுகிறது. இந்த இதிஹாஸம் ஒரு விசுவம்பரபட் என்பவரால் அவருடைய சிஷியனை மயூரநாதனென்பவனுக் குபதேசித்ததாயும் அந்த உபதேசத்தில் பெரும்பாலும் பரமார்த்தயோகியான ஸுசர்ம்மாவினல் ஜயவிரதனென்பவனுக் குபதேசிக்கப்பட்ட இதிஹாஸமடங்கியதாயுமிருக்கிறது. அந்த இதிஹாஸங்களில குறிப்பிட்டுச் சொல்லிய ஒவ்வொரு விஷயங்களுக்கும் ஆதாரமான சுருதி ஸ்மிருதி இதிஹாஸபுராணங்கள் முதலிய சாஸ்தி

ரங்களிலிருந்து அநேக பிரமாணங்களெடுத்துதகரிக்கப்பட்டிருக்கின்றன. சாஸ்திரங்களுடைய ஆதாரமன்றியில் சுவகற்பனையாய் யாதொருவிஷயங்களும் சொல்லப்பட்டிருக்கவில்லை. சாஸ்திரவாக்கியங்களை தேவநாகராக்ஷரத்திலும் அவைகளினர்த்தத்தைத் தமிழிலும் வரையப்பட்டிருக்கின்றன.

கிரந்தவரலாறு முற்றிற்று.

---

॥ परब्रह्मणे नमः ॥

# ॥ आर्यमतसिद्धान्तसंग्रहम् ॥

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## முதல் பிரகரணம்.

முற்காலத்திற் பிரயாகக்ஷேத்திரத்தில் சுரோத்திரியராகிய விசுவம்பரபட் என்பவர் இருந்தார். அவர் நல்லவித்துவான், பொறுமையுள்ளவர். கருணை முதலிய நற்குணமுள்ளவர். அவரிடத்தில் மயூரநாதனென்கிற சிஷ்யனிருந்தான். ஒருக்கால் அந்த விசுவம்பரபட் மயூரநாதனைப்பார்த்து ஓ! குழந்தாய்! நீ உத்தமமான ஆரியகுலத்தில் பிறந்த பிராமமணனாயிருந்தும் நீ ஆரியமதாசாரங்களை நன்றாயறியவில்லை. ஆரியமதத்தின் உண்மையையும் ஆசாரங்களையும் சரியாய் அறிந்து அனுஷ்டிக்காமலிருக்கிற ஆரியர்கள் நற்கதியடையமாட்டார்கள். நீ இந்த விஷயத்தில் அஜாக்கிரதையாயிருக்கக்கூடாதென்றார்.

2. மயூரநாதன்:—ஓ! பகவானே! நான், மதம் மதாசாரம் இவ் விஷயங்களை நன்றாயறிந்தவனல்ல, அந்தவிஷயங்களைத் தங்களிடத்திலிருந்து கேட்டறிந்துகொள்ளவேண்டுமென்று சிலகாலங்களாய் தங்களுடைய ஸாவகாசத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய நற்காலமானது தங்களுக்கே என்னி

ட்த்தில் கிருபையுண்டாகும்படி செய்துவிட்டது. ஆகையால் எனக்கனுமதிகொடுத்தால் நான் தெரிந்துகொள்ள இச்சிக்கிற விஷயங்களைப்பற்றிக் கேட்கிறேன். தாங்கள்கிருபைசெய்து உத்தரமளித்து என்னக்ஞானத்தை நிவிருத்திக்கப் பிரார்த்திக்கிறேன்.

இவ்விதமாய் பிரார்த்திக்கப்பட்ட விசுவம்பரபட்டானவர் தன் சிஷியனும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து பயபக்தியுடன் கைகூப்பி நிற்கிறவனுமாகிய மயூரநாதனை ஆதரவுடன் உட்காரச்சொல்லி, ஓ! குழந்தாய்! நீ, எதெதைக்கேட்க விரும்புகின்றையோ அவைகளைக் கேட்கலாம். எனக்குத் தெரிந்தவரையிலுத்தரம் சொல்லுகிறேன் என்று சொன்ன குருவாக்கியத்தைக் கேட்டு மிகவும் ஸந்தோஷத்துடன் மயூரநாதன் கேட்கிறான்.

3. **மயூரநாதன்:**—ஓ! சுவாமீ! "உத்தமமான ஆரிய வம்சத்தில் பிறந்தவன்" என்றுசொன்னீர்களே இந்தவிஷயத்தில் எனக்கொரு சந்தேகமுண்டாயிருக்கிறது. நானும் என்னைப்போலொத்த மற்றவர்களும் இந்துக்களென்றல்லோ அழைக்கப்படுகிறோம். தாங்கள் என்னை ஆரியனென்று சொன்னீர்களே அதெப்படி? எதனாலாரியனென்று சொல்லப்படுகிறேன்?

4. **விசுவம்பரபட்:**—ஓ! குழந்தாய்! சிலநூற்றாண்டுகளாக இந்துக்களென்று நாமெல்லோரு மழைக்கப்பட்டாலும் அநாதிகாலமாய் நாம் ஆரியர்களே. இக்காலத்தில் ஆரியர்கள் தங்கள் முன்னோர்களைப்போல ஆரியாசாரங்களை சாஸ்திரப்படி அனுஷ்டிக்காமல் அசட்டை செய்கிறதினால் ஆரியர்களென்கிற பெயரானது நாளாவட்டத்தில் குறைந்துவருகிறது. ஆரியர்களுடைய மஹிமையையும் அவர்களுடைய வாஸஸ்தலத்தையும் பற்றி மனு சொல்லுகிறதாவது.

"மநுஸ்மிருதி அத். 2ல் (1) "ஸரஸ்வதீ திருஷத்துவதீ
"என்ற தேவநதிகளுடைய மத்தியப்பிரதேசமெதுவோ அது
"தேவதைகளா லேற்படுத்தப்பட்ட பிரும்மாவர்த்தமென்று சொ
"ல்லப்படுகிறது. பிராம்மணர் முதலிய வருணத்தாருக்கும்
"ஸங்கரஜாதி (கலப்புஜாதி) யாருக்கும் அத்தேசத்தில் பரம்

(१) सरस्वती दृषद्वत्यो र्देवनद्योर्यदन्तरम् ।
तद्देवनिर्मितं देशं ब्रह्मावर्तं प्रचक्षते ॥ १७ ॥

"பராக்கிரமமாய் வந்த ஆசாரமெதுவோ அது ஸதாசாரமென்று
"சொல்லப்படுகிறது. குருக்ஷேத்திரம் மத்ஸயதேசம் பாஞ்சால
"தேசம் சூரஸேந (வடமதுரை) தேசம் இவைகள் பிரும்ம
"ரிஷிகள் வஸிக்குமிடம். இவை பிரும்மாவர்த்ததேசத்திற்
"கடுத்தபடியாயிருக்கின்றன. இத்தேசத்திற்பிறந்த முதற்பிற
"ப்பான் (பிராம்மணன்) இடத்திலிருந்து பூமியிலுள்ள ஸகல
"மனிதர்களும் தம்தம் நடக்கையைக் கற்கவேண்டியது. ஹிம
"வத் பருவதத்திற்கும் விந்தியபருவதத்திற்கும் மத்தியாயும்
"ஸரஸ்வதி நதியானது மறைந்தோடுகிறதென்கிற அர்த்தமுள்
"ளவிநசநதேசத்திற்குக் கிழக்காயும் பிரயாகைக்கு மேற்காயுமி
"ருக்கிற விடமானது மத்தியதேசமென்று சொல்லப்படுகிறது.
"கிழக்கு ஸமுத்திரந்துடங்கி மேற்கு ஸமுத்திரம் வரையிலும்
"முன்சொன்ன ( ஹிமவத், விந்திய ) பருவதங்களின் மத்தியி
"லுமிருக்கிற தேசமானது ஆரியாவர்த்தமென்று ஞாநிகளறிகி
"றார்கள்."

5. இந்த ஸ்மிருதியானது ஆரியாவர்த்த தேசமிருக்குமிடத்தைச் சொல்லியதுமல்லாமல் ஆரியர்களிடத்திலிருந்தே உலகத்திலுள்ள எல்லோரும் ஆசாரம் முதலிய நன்னடக்கைகளைக் கற்றுக்கொண்டதாகவும் சொல்லுகிறது. ஆரியர்களென்கிற ஸம்ஸ்கிருத பதத்திற்கு பூஜ்ஜியர்களென்றர்த்தம். அப்படிப்பட்டவாரியர்கள் வாசம்செய்தவிடத்திற்கே ஆரியாவர்த்தமென்று

---

तस्मिन् देशेय आचारः पारंपर्यक्रमागतः ।
वर्णानां सान्तरालानां स सदाचार उच्यते ॥ १८॥
कुरुक्षेत्रं च मत्स्याश्च पाञ्चालाश्शूरसेनकाः ।
एषब्रह्मर्षिदेशो वै ब्रह्मावर्तादनन्तरः ॥ १९ ॥
एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।
स्वं स्वं चरित्रं शिक्षेरन् पृथिव्यां सर्वमानवाः ॥ २० ॥
हिमवद्विन्ध्ययोर्मध्यं यत्प्राग्विनशनादपि ।
प्रत्यगेव प्रयागाच्च मध्यदेशः प्रकीर्तितः ॥ २१ ॥
आसमुद्रात्तु वै पूर्वादासमुद्रात्तु पश्चिमात् ।
तयोरेवान्तरं गिर्यो रार्यावर्तं विदुर्बुधाः ॥ १२ ॥

பெயராயிற்று. அத்தேசத்தில் வாஸம்செய்துவந்த வாரியர்கள் காலாந்தரத்தில் ஹிமவத்பருவதம் முதல் கன்னியாகுமாரி வரையிலுள்ள இந்துதேசமென்றழைக்கப்படுகிற இத்தேசத்தில் பலவிடங்களிற் குடியேறினார்கள். அப்படிக்குடியேறின வாரியவம்சஸ்தர்கள் இத்தேசம் முழுவதிலும் பரவினார்கள். அப்படிப்பட்ட வாரியர்களுடைய வம்சபரம்பரையில் நாமுண்டானவர்களான தனால் நாமெல்லோரும் ஆரியர்களே.

6. இப்படிப்பட்ட ஆரியவம்சஸ்தர்கள் சிலநூற்றாண்டுகளாய் இந்துக்களென்று அழைக்கப்படுகிறார்கள். ஏனென்றால், இத்தேசத்திற்கு முதலில்வந்த அந்நியதேசத்தரசன் ஸிந்துநதிக்கரையை யடைந்து அவ்விடத்தில் வாஸம்செய்துகொண்டிருந்த ஜனங்களை அந்நதியின்பெயராகிய ஸிந்து, என்கிறவார்த்தையை வழுவாய் இந்துவென்று உச்சரித்தான். அவ்வரசனுக்குப்பிந்தி இத்தேசத்திற்குவந்தவர்களும் இந்துவென்கிற பெயரால் இத்தேசத்தையும் இத்தேசத்து ஜனங்களையுமழைத்தார்கள். அதனால் சில நூற்றாண்டுகளாய் இத்தேசத்திற்கு இந்துதேசமென்றும் இத்தேச ஜனங்களுக்கு இந்துக்களென்றும் பெயர்வழங்குகிறது.

தற்செயலாய் உண்டான இந்தப்பெயருங்கூட ஆரியர்களுக்கு மேன்மையானபெயரே. எப்படியெனில், தன்னுடைய பிரகாசத்தினால் ஸகலப்பிராணிகளுக்கும் ஆநந்தத்தையுண்டுசெய்கிற சந்திரனுக்கு, इन्दु இந்து என்று பெயராகையால் ஆரியர்களும் சந்திரன்போல் ஸகலப்பிராணிகளுக்கும் தங்களுடைய நற்குணங்களினால் ஆனந்தத்தை யுண்டுபண்ணுகிறவர்களென்கிற அர்த்தமாகிறதனாற்றான்.

7. ஆரியர்களென்கிற பெயர் குறிப்புப்பெயரல்ல. காரணப்பெயரேயாம். அக்காரணமெதுவெனில், ஆரியர்களுடைய நல்லொழுக்கம் நற்குணம் முதலியவைகளே. அதனாற்றானவர்கள் மற்றவர்களால் பூஜிக்கத்தக்கவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய உத்தமமான அநேககுணங்களிற் சிலகுணங்களைச் சொல்லுகிறேன் கேள்.

8. நம்முன்னோர்களான வாரியர்கள் மனதினாலாவது வாக்குனாலாவது காயத்தினாலாவது யாதொருப்பிராணிகளுக்குத் துன்பமுண்டாகும்படியான எப்படிப்பட்ட காரியங்களையும் செ

ய்யமாட்டார்கள். புழு பூச்சிமுதல் பிராம்மணன் வரையிலுள்ள ஸகலப்பிராணிகளுக்கும் ஸுகமுண்டாகக் கடவதென்கிற அர்த்தமுள்ள "गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यंलोकास्समस्तास्सुखिनोभवंतु" என்ற இந்தவாக்கியத்தை நாள்தோறும் பலஸமயங்களிலுமுச்சரித்து வருவார்கள். அப்படி யுச்சரிப்பதுமாத்திரமல்ல அவ்விதமாய் பிராணிகளுக்கு சுகமுண்டாக வேண்டுமென்று மனப்பூர்வமாய் கோருவார்கள். மேற்கண்ட இந்தவாக்கியத்தை இக்காலத்திலுங்கூட பிராம்மணர்களிலநேகர் உச்சரிப்பதுண்டு. நம்முன்னோர்களான ஆரியர்கள் உலகத்தாருக்குத் தங்களால் செய்யக்கூடிய நன்மைகளை விரும்பாமலே செய்வார்கள். ஒரு பிராணிக்காவது, அந்தப்பிராணியினால் தனக்குத் துன்பமுண்டானாலுங்கூட துன்பத்தைச்செய்யார்கள். பிறருடைய பொருள்களையபகரிக்கக் கனவிலுமெண்ணார்கள். பிறருடைய ஸுகம் துக்கம் இலாபம் நஷ்டமிவைகளைத் தங்களுடையதுபோல் கருதும் சுவபாவமுள்ளவர்கள். தெய்வபக்தி குருபக்தி அப்படியே மாதாபிதாக்களிடத்திற்பக்தி பெரியோர்களிடத்தில் பக்தி இப்படிப்பட்டவர்களிடத்தில் விசுவாஸம் முதலியவைகளை விருதமாய்க் கொண்டவர்கள். சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் முதலிய சாஸ்திரங்களில் நம்பிக்கை விசுவாஸமுடையவர்களாயும், வேதாத்தியயநம் சாஸ்திரார்த்தவிசாரம் முதலியவைகளை எப்போதுமநுஷ்டிப்பார்கள். சாஸ்திரவிதிப்படி கருமாநுஷ்டானங்களைச் செய்து வருணாசிரமதருமங்களை ஸரியாயநுஷ்டிப்பார்கள். தருமார்த்த காமமோக்ஷங்களாகிற நான்குவித புருஷார்த்தங்களையடையும் விஷயத்தில் எப்போதும் முயற்சியுள்ளவர்களாயிருப்பார்கள். ஆரியர்களில் பெரும்பாலோர் வேதாந்த விசாரம்செய்து ஆத்துமாநாத்தும விவேகிகளாயிருப்பார்கள். அநேகர் தபஸ்ஸைச் செய்வார்கள். அநேகர் யோகசாஸ்திரங்களையப்பியாசம் செய்து யோகத்தில் முயற்சிசெய்துகொண்டிருப்பார்கள். அநேகர் பரமார்த்த யோகிகளாயும் பரமார்த்த ஸந்நியாஸிகளாயுமிருந்துகொண்டு இவ்வுலகத்தையும் தேகத்தையும் மறந்து ஜீவன்முக்தர்களாய் ஸஞ்சரிப்பார்கள். யோக விஷயமானது ஆரியர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்ததென்பது உலகப்பிரஸித்தம். பிறப்பிறப்பற்றதும் நித்தியானந்தமானதுமழிவற்றதுமிணையற்றதுமாகிய மோக்ஷஸுகத்தையடையும் மா

ர்க்கம் அல்லது ஸாதனம் ஆரியர்களுக்குமட்டுமே தெரிந்திருந்த தென்று உறுதியாய்ச்சொல்லலாம். நம்முன்னோர்களான ஆரியர்கள் தற்புகழ்ச்சி பிறர்நிந்தை பொறாமை அசூயை முதலிய துர்க்குணங்களையுடையவர்களல்ல. இக்காலத்தியவர்கள்போல் பிறருடைய மதத்தையாவது மதக்கொள்கையையாவது ஆசாரங்களையாவது நிந்திக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட இன்னுமநேக நற்குணங்களோடு கூடியிருந்தபடியால் அவர்களுக்கு ஆரியர்களென்கிற பெயர் மிகவும்தகுந்ததே.

(இவ்வாரியர்கள் சுவபாவத்தில் ஸத்தியவந்தர்களென்று சிலவருஷங்களுக்குமுன் இங்கிலாந்துதேசத்தில் உபந்நியாஸம் செய்த ஸம்ஸ்கிருதவித்துவானாகிய ஒரு ஐரோப்பிய பண்டிதர் உபந்நியாஸத்தின் ஒருபாகத்தில் சொன்னதாவது. "சிலநூற்றாண்டுகளுக்குமுந்தி இந்தியாவுக்குச்சென்ற அந்நியதேசத்தரசன் அவனுடைய சரித்திரத்தில் "இந்தியாதேசத்து ஜனங்களுடைய உடன்படிக்கைக்கு எழுத்துவேண்டியதில்லை. இந்தியாதேசத்து ஜனங்களுடைய வீட்டுக்கதவுகளுக்குப் பூட்டுவேண்டியதில்லை" என்று எழுதிவைத்திருக்கிறார்" என்று சொன்னார். இதனால் என்ன சொன்னதாகவாயிற்றென்றால், இந்துக்கள் அஸத்தியமான காரியங்களில் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் வாயினாற் சொன்னவார்த்தை சிலாசாஸனம்போல் உறுதியாயிருக்குமென்றும் பிறர்சொத்தை யபகரிக்கும் சுவபாவமிந்துக்களுக்கில்லையாகையாலவர்கள் சொத்தைக் காப்பாற்றும் பொருட்டு வீடுகளுக்குப் பூட்டுப்போட அவசியமில்லையென்றும் சொன்னதாகவாயிற்று.)

9. அப்படிப்பட்ட உத்தமகுணமுள்ள வாரியர்களுடைய வம்சஸ்தர்களாகிய இக்காலத்திய ஆரியர்களுடைய சுவபாவம் குணம் இவைகளைப்பற்றியும் கொஞ்சம் சொல்லுகிறேன் கேள்.

இக்காலத்தில் ஆரியர்களிலநேகர் தம்முன்னோர்களுடைய நற்குணங்களையெல்லாமிழந்து, அநாரியர்களாக வாய்விட்டார்களென்றுசொல்ல மிகவும் வியஸனப்படுகிறேன். நம்முன்னோர்களுடைய சிரேஷ்டமான நல்லொழுக்கமும் நற்குணமும் ஆசாரமும் இக்காலத்திலநேகரிடத்திற் காணப்படவில்லை. ஆனால் அதற்கெதிர்மறையான துர்க்குணங்களும் துர்நடத்தைகளும் துராசாரங்களும் விருத்தியடைந்திருக்கின்றன. இக்காலத்தில்

அநேகர் பிறருக்குத் துன்பமுண்டாவதாயிருந்தாலும் அதை கவனியாமலே பொருள்ஸம்பாதிப்பதே முக்கியப்பிரயோஜனமா யெண்ணுகிறார்கள். துஷ்காரியத்தைச் செய்தாவது பொருள் ஸம்பாதிப்பதே உத்தமப் பிரயோஜனமென்று கருதுகிறார்கள். அநேகர் அற்பவிஷயத்திலுங்கூட அஸத்தியம் செய்கிறார்கள். "सत्यमेवजयतेनानृतं ஸத்தியந்தான்ஜயிக்கிறது அஸத்தியம் ஜயிக்கிற தில்லை" என்கிற இந்தசுருதிவாக்கியம் பகவதாக்ஞையென்று அநேகர் அறியவில்லை. உலகத்தாருக்குத் தங்களால் கூடிய வரையில் நன்மைசெய்வது தங்கள்கடமையென்று மனப்பூர்வ மாய் அநேகருக்கெண்ணமில்லை. தெய்வபக்தி குருபக்தி பெற் றோர் பெரியோர்களிடத்திற்பக்தி வணக்கம் முதலியன அநேக ரிடத்திலில்லை. வேதசாஸ்திரங்களிலநேகருக்கு நம்பிக்கையி ல்லை. மதத்தில் நம்பிக்கை விசுவாஸமுமில்லை. இதுமாத்திர மல்ல, தங்கள் மதசாஸ்திரங்களையும் சாஸ்திரங்களையறிந்த மஹாத்துமாக்களான பெரியோர்களுடைய வாக்கியங்களையும் இகழ்ந்து பேசுகிறார்கள். அநேகர் இத்தேகத்தினால் அநுப விக்கயோக்கியமான உலகவிஷயங்களையடையும்பொருட்டு இதர மான சாஸ்திரங்களைக்கற்று அதனாலே தாங்கள் வித்துவான் களென்று கருவமடைகிறார்கள். அந்தசாஸ்திரமாவது அத னால் ஸம்பாதிக்கப்படும் உலகாநுபவத்திற்கு யோக்கியமான பொருளாவது நற்கெதியை யடையும்படிசெய்யமாட்டாதென் பதை யநேகரறியவில்லை. அநேகர் உலகசுகத்தை விரும்புகி றார்களேயன்றி பரலோகசுகமொன்றிருக்கிறதென்று அறிகிற தேயில்லை. அநேகர் இத்தேகத்தினலநுபவிக்கிற விஷயஸுகங் களையடையும்பொருட்டே தங்களுக்கு அறிவுண்டாயிருக்கிற தாக நினைக்கிறார்கள். அப்படிநினைப்பது தனக்குண்டாயிருக் கும் அறிவுக்குத்தகுந்தப் பிரயோஜனமாகவாகிறதில்லை. இப் படிப்பட்ட அறிவுள்ளவனை மிருகத்திற்கொப்பானவனென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

கருடபுராணம் உத்தரகண்டம் அத். உ. சு. அல்* "ஸக "லஜந்துக்களுக்கும் ஆஹாரம் (உணவு) மைதுனம் (புணர்ச்சி)

* आहारो मैथुनं निद्रा भयं क्रोधस्तथैव च ।
सर्वेषामेव जन्तूनां विवेकोदुर्लभः परः ॥ २३ ॥

"நித்திரை பயம் அப்படியே கோபம் இவைகளிருக்கின்றன.
"விசேஷமான ஆத்துமக்ஞானமானது கிடையாது."

அப்படியே ஒருமஹானும் சொல்லுகிறார் * "ஆஹாரம்
"நித்திரை பயம் மைதுனமாகிய இவைகள் மனிதர்களுக்கும்
"மிருகங்களுக்கும் சமமானதாயிருக்கிறது. மனிதனுக்கோவெ
"ன்றால், அதை (மிருகங்களை) விட ஞானம் விசேஷமாயிருக்கி
"றது. ஞானமில்லாதமனிதன் மிருகத்திற்கொப்பானவன்."

இந்த வாக்கியங்களிலுள்ள விசேஷமென்கிற பதமானது ஆஹார நித்திரை மைதுனம் முதலிய விஷயசுகங்களுக்காக பொருள்ஸம்பாதிக்கும் விஷயமான ஞானத்தைக் குறிக்கிறதில்லை. ஏனென்றால், மனிதன் தன்னுடைய அறிவினாலே அபூர்வமான காரியங்களைச்செய்து பொருள்சம்பாதிக்கிறான். அப்படிச்சம்பாதித்த பொருளினாலிவனடையும் பிரயோஜனம் எல்லாங்கூடி ஆஹாரநித்திரை பயம் மைதுனம் முதலிய காரியங்களுக்கு உபயோகமாகுமேயன்றி பரலோகசுகத்தைக் கொடுக்கிறதாகவாகாது. மனிதன் தன்னுடைய ஆச்சரியமான சக்தியினால் சம்பாதித்த உலகவஸ்துவினாலித்தேகசுகத்தையடையுவதுபோல அவ்வளவுப்பிரயாசையின்றி மிருகங்கள் தன்னுடைய அறிவினால் ஆஹாரநித்திரைமைதுனங்களுக்கு யோக்கியமான ஸாதனங்களை சம்பாதித்துக்கொள்ளுகின்றன. இதில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் பேதமென்னவிருக்கிறது? ஆகையினால் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விசேஷமான பேறாகிய க்ஞானமானது பரலோகசுகத்தைத் தேடிகொள்வதற்கு யோக்கியமானதென்பதே நிச்சயம். மனிதன் தன்னுடைய க்ஞானத்தினால் பரலோகசுகத்தையடைய முயற்சிசெய்யாமல் இத்தேகசுகத்தையே பரமப்பிரயோஜனமாக எண்ணுகிறவனெவனோ அவன் மிருகத்திற்கொப்பானவனென்று மேற்கண்ட வாக்கியங்கள் வற்புறுத்துகின்றன.

பின்னும் சொல்லுகிறேன்கேள். ஆரியர்களிலநேகருக்கு ஜடமின்னது, சேதனமின்னதென்கிற ஆத்துமாநாத்தும விவேகக்ஞானமில்லை. அப்படிப்பட்ட க்ஞானமடைய முயற்சிசெய்வது

---

* आहारनिद्राभयमैथुनानि सामान्यमेतत्पशुभिर्नराणां ।
ज्ञानं हि तेषामधिको विशेषः ज्ञानेनहीनः पशुभिस्समानः ॥

மில்லை. சிலருக்கு, தேகம்வேறே ஆத்துமாவேறே என்கிற க்ஞானமில்லாமலே தேகமே ஆத்துமாவென்று அறிகிறார்கள். இத்தேகம் வந்ததற்கும் அது அழிவதற்கும் காரணமின்னதென்று அநேகர் தெரிந்துகொள்ளுகிறதில்லை. இத்தேகம்மரித்த பிறகு ஜீவன் இன்னகெதியை யடைகிறானென்று அறிந்துகொள்ள அநேகர் விரும்புகிறதில்லை. தருமார்த்த காமமோக்ஷங்களாகிற புருஷார்த்தங்களின் சுவரூபத்தை அநேகர் விசாரிக்கிறதில்லை. சிலர் தம்தம்வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற சாஸ்திரோக்தங்களான ஆசாரங்களையாவது நித்திய நைமித்திக கருமங்களையாவது பிதுர்கருமங்களையாவது அநுஷ்டிக்கிறதுமில்லை. அப்படியநுஷ்டிக்கவேண்டியது தங்கள் கடமையென்பதையறிகிறதுமில்லை. சிலர் உலகநிந்தைக்கு பயந்துசிலகருமங்களையநுஷ்டித்தாலுமவைகளை சாஸ்திரப்படி கிரமமாயநுஷ்டிக்கிறதில்லை. அநேகர் தம்தம்வருணத்தாருக்கு யோக்கியமான ஆஹாராதிகளைவிட்டு அசுத்தமான ஆஹாராதிகளை புஜித்தும் நிந்திக்கத்தக்கதும் புத்தியை மயக்கத்தக்கதுமான போதை வஸ்துக்களை இலஜ்ஜையன்றி உட்கொண்டும்வருகிறார்கள்.

மேலாகக்குறித்துக் காட்டப்பட்ட துர்க்குணங்களைவிட அதிகமான மற்றொருதுர்க்குணம் இக்காலத்திய ஆரியர்களில் பெரும்பாலோரிடத்தில் காணப்படுகிறது. அதனால் தேசக்ஷேமத்திற்கு குறைவும் ஜனங்களுக்குள் ஒற்றுமைகெட்டு ஒருவருக்கொருவர் விரோதமும் ஜனங்களுக்குள் கலகமும் அதனால்பிராணஹாநியுமுண்டாகிறது. அதெதென்றால், மததூஷணை மதாசாரதூஷணை தெய்வதூஷணை மதாசாரியதூஷணை முதலியதூஷணைகள்தான். இப்படி தூஷணைசெய்யும் குணமானது மூடர்களாயுமவிவேகிகளாயுமிருக்கிற மனிதர்களிடத்திலதிகமாய் காணப்படுகிறது. ஸமபுத்தியில்லாதவும் பொறாமை அசூயை முதலிய துர்க்குணமுள்ளவும் மதப்பிடிவாதமுள்ளவுமான சிலவித்துவான்களிடத்திலும் மேற்கண்டவிதமாய் பிறரைநிந்திக்கும் துர்க்குணம் காணப்படுகிறது. இது ஒருபோதும் தகுந்ததல்ல.

10. ஓ! மயூரநாதா! மேலாகக்குறித்துக்காட்டிய துர்க்குணங்களும் இவைகளைப்போலொற்ற பின்னுமநேக துர்க்குணங்களும் இக்காலத்திலநேக ஆரியர்களிடத்திலிருக்கிறதினால் அவைகள் அவர்களுக்குமாத்திரமல்ல இந்த ஆரியதேசத்திற்கு

மாரியஜனங்களுக்கும் கெடுதியை யுண்டாக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இத்தேசத்திய ஜனங்கள் இக்காலத்தில் கொடூரமான வியாதிகளினாலும் க்ஷாமம் முதலியவைகளினாலும் பீடிக்கப்படுவதற்கு ஆரியர்களுடைய அனுசாரம் முதலிய துர்க்குணங்களே காரணமென்பதில் ஐயமில்லை. ஈசுவரபக்தியும் ஈசுவரோபாஸனையும் செய்யாமலும் ஈசுவரனுடைய கட்டளையாகிற வேத சாஸ்திரங்களில் அவமதிப்பும் எந்ததேச ஜனங்களிடத்திலுண்டாயிருக்கிறதோ அந்ததேசம் நாளாவட்டத்திலழிந்துபோகுமென்பது நிச்சயம். ஆனால் இத்தேசத்தில் கொடூரமான வியாதிமுதலிய துன்பங்கள் சிலகாலம் பீடித்து பிறகு நீங்கிவிடுகிறதே என்றால், ஆரியர்களில் சிலர் மஹாத்துமாக்களாயும் உத்தமமான க்ஞாநிகளாயுமிருக்கிறதினால் இவ்வாரியதேசம் முழுதும் கெட்டுப்போகவில்லை.

11. ஓ! குழந்தாய்! இக்காலத்திய ஆரியர்களில் சிலரிடத்தில் காணப்படுகிற துர்க்குணம் துர்நடத்தை துராசாரம் முதலியவைகளை யெடுத்துரைத்ததினால் மனப்பூர்வமாய் அவர்களை தூஷிக்க எண்ணங்கொண்டல்ல. அவர்கள் துர்க்குணங்களை விலக்கி நற்குணங்களைக் கைய்யாடி நம்முன்னோர்களான வாரியர்களைப்போல் இவ்வுலகசம்மந்தமான ஸுகாநுபவங்களை மாத்திரம்கருதி உழைக்காமல் பரலோகஸாதனத்திற்கு வேண்டிய முயற்சியையும் செய்துகொண்டு எல்லோரும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்பதே என்னுடைய உண்மையான அபிப்பிராயம். நம்முன்னோர்களான மஹரிஷிகளும் ஆசாரியர்களும் ஜனங்களுடைய நன்மைக்காக அவர்களிடத்திலுள்ள குறைவுகளை எடுத்துக்காட்டி அக்குறைவுகளை நிவிருத்தித்துக்கொள்ள பலமார்க்கங்களையும் காண்பிவித்து அநேக கிரந்தங்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை இதற்கு திருஷ்டாந்தமாய் எடுத்துக்கொள்ளலாம்.

12. மயூரநாதன்:—ஓ! சுவாமீ! ஜனங்களிடத்தில் காண்கிற பலதுர்க்குணங்களில் மதம் ஆசாரம் முதலியவிஷயமான தூஷணை கொடியதென்று சொன்னீர்கள். இக்கொடியதான காரியத்தை பஹிரங்கமாய் அநேகர் செய்கிறார்கள். அநேகர் பலர்கூடியிருக்கிற விடங்களில் பஹிரங்கமாய் "உன்மதம்கெட்டது. உன்னுசாரம்கெட்டது. உன்தெய்வம்கெட்டது" என்று பலவிதமாய் தூஷி

க்கிறதை நான்கேட்டிருக்கிறேன். இப்படி தூஷிப்பதற்குஎன்ன காரணம் என்பதை விரிவாய்த் தெரிந்துகொள்ள விச்சிக்கிறேன்.

13. விசுவம்பரபட்:— ஓ! மயூரநாதா! மதம் முதலிய இவ்விஷயமான தூஷணைகள் சாஸ்திரப்பயிற்சி யில்லாதவும், ஸமபுத்தியில்லாதவும், உண்மையையறியாதவும், நற்கெதிபடையுமெண்ணமில்லாதவும் மூடர்களிடத்தில் விசேஷமாய் காணப்படும். விவேகமும் ஸமபுத்தியுமுள்ள பண்டிதர்கள் இப்படிப்பட்ட தூஷணைகளை செய்யவுமாட்டார்கள், செய்கிறவிடத்தில் நிற்கவுமாட்டார்கள்.

14. தூஷணைகளின் சுவரூபங்களையும் தூஷிக்க நியாயமான முகாந்தரமில்லையென்பதையும் சொல்லுகிறேன்கேள்.

கிரிஸ்துமதத்தைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள்மதமே உலகத்திலுள்ள எல்லாமதங்களிலும் மேன்மையானது. தங்கள் மதசாஸ்திரமே பரமாத்துமாவினலுண்டு செய்யப்பட்டது. தங்கள் மதசாஸ்திரங்களில் சொல்லிய மார்க்கமே மோக்ஷஸாதனமானது. மற்ற மதங்களாவது மதசாஸ்திரங்களாவது மோக்ஷஸாதனமாகா. ஆகையால் மற்ற மதங்களைவிட்டு தங்கள் மதத்திலேயே எல்லோரும் சேரவேண்டும் அதையே யனுஷ்டிக்கவேண்டும் என்பார்கள். மஹம்மதியர்களும் அப்படியே தங்கள் மதத்தைப்புகழ்ந்து எல்லோரும் தங்கள் மதத்தைப் பின்பற்றவேண்டுமென்பார்கள். அப்படியே பின்னும் சிலமதஸ்தர்களும் பிறர் மதத்தை தூஷித்து தங்கள் மதத்தைக்கொண்டாடுவார்கள். இவைகள் அந்நியமதஸ்தர்களால் செய்யப்படும் நிந்தையென்றறி. அத்துடன் நிற்கவில்லை. ஆரியமதத்திற்குள்ளாகவே பின்னும் பலமதங்களேற்பட்டு அவர்களில் ஒருவரையொருவர் நிந்திக்கிறார்களென்றால், அந்நியர்கள் நிந்திப்பது ஆச்சரியமேயல்ல. ஆரியர்களுடைய உட்பிரிவு மதங்களனேகமுண்டு. அவர்களுக்குள்ளும் ஒருவரை யொருவர் தூஷிக்கிறார்கள். அம்மதங்களுக்குள் முக்கியமான சில மதஸ்தர்களுடைய தூஷணையின் சுவரூபத்தை சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேள். சைவமதஸ்தர்கள் சிவனென்கிற பெயருள்ளவரே பரமாத்துமா. அவரை வணங்காதவர்களுக்கு மோக்ஷமில்லை. மற்ற மதங்கள் பரலோகசாதகமாகவாகிறதில்லை யென்பார்கள். அப்படியே வைஷ்ணவர்கள் விஷ்ணுதான் பரமாத்துமா அவரை வணங்காதவர்களுக்கு மோக்ஷமில்லை.

மற்ற மதங்கள் பரலோக ஸாதகமாகவாகாது என்பார்கள். அத்துவைதிகள் சிவனென்றாலும் விஷ்ணுவென்றாலும் வேறெந்தப்பெயரினாலழைத்தாலும் இரண்டாவதற்ற ஒன்றான பிர்ம்மத்தினுடைய காரணப்பெயர்களேயாம். அந்தப்பிர்ம்மம் ஒன்றுதான் ஸத்தியமாகவுள்ளது. மற்றவைகள் அக்ஞானகற்பிதம். அந்த பிர்ம்மத்தை யறிந்தவன்தான் மோக்ஷமடைவான் என்பார்கள். இன்னுமிப்படியே அநேகமதஸ்தர்கள் தங்களைப்புகழ்ந்து பிறரை நிந்திப்பார்கள்.

15. இப்படி ஒருமதத்தாரை மற்றொரு மதத்தார் நிந்திப்பதற்கு நியாயமான முகாந்தரமுண்டோவென்று பார்ப்போமாகில் இல்லையென்றே சொல்லவேண்டும். உலகத்திலுள்ள ஸகலஜனங்களுக்கும் ஸகலமதஸ்தர்களுக்கும் தெய்வமென்கிற பரமாத்துமா ஒருவராகவே யிருக்கவேண்டுமென்பதில் அற்பமேனும் சந்தேகமில்லை. ஆஸ்திகபுத்தியுள்ள ஒருவனுமிதை மறுக்கமாட்டான். ஒவ்வொருமதத்தாரும் அவரவர் மதரீதியாய் பரமாத்துமாவை ஸ்துதிக்கும்போது "நீரே சகலஉலகத்திற்கும் கருத்தா, சகலஉலகத்தையும் சகலஜனங்களையும் சகலப்பிராணிகளையும் படைத்தவர் நீரே. உலகத்தை இரக்ஷிப்பவரும் நீரே. அழிப்பவரும் நீரே. இப்பூமி ஸமுத்திரத்தில் முழுகிப்போகாமலும் ஸமுத்திரம் கரைகடந்துவராமலும் கார்ப்பவரும் நீரே. வெய்யில் மழைகாற்று முதலியவைகளைப் பிராணிகளுக்குக் கொடுப்பவரும் நீரே.'' இப்படிப்பட்ட வாக்கியங்களை யுச்சரிக்கிறதுமல்லாமல் அந்தவாக்கியங்கள் வேதவாக்கியங்களென்றும் கொண்டாடுகிறார்கள். இதனால் சகலஉலகத்திற்கும் கருத்தாவான பரமாத்துமா ஒருவரேதானென்று ஸகலமதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்களென்பதில் ஸந்தேகமில்லை. ஒவ்வொருதேசத்திற்கு ஒவ்வொரு அரசனிருக்கிறதுபோல் ஒவ்வொருமதத்திற்கும் ஒவ்வொரு தேவனிருக்கிறதாக மூடன்கூட சொல்லமாட்டான். ஆனால் ஒவ்வொருமதத்தார் உலககருத்தாவான பரமாத்துமாவுக்கு அவரவர்பாஷையில் பெயர்களை இட்டழைக்கிறார்கள். ஐரோப்பியர்கள் ஜகத்காரணவஸ்துவை **गाड्**, காட்என்றும், மகம்மதியர்கள் அல்லாவென்றும் ஆரியர்களில் சிலர் பிர்ம்மமென்றும் சிலர் சிவனென்றும் சிலர் விஷ்ணுவென்றும் சிலர் கிருஷ்ணனென்றும் இராமனென்றும் இப்படியே பலர் பலபெயர்களா

லழைக்கிறார்கள். அப்படியழைக்கப்படுகிற வஸ்து ஒன்றான பரமாத்துமாவேயன்றி அப்பெயர்களுள்ள வெவ்வேறு தெய்வங்களென்று சொல்லவிடமில்லை. மேலும் ஸகலத்திற்கும் கருத்தாவான பரமாத்துமாவுக்குக் குறிப்பான பெயராவது சரீரமாவது இல்லையென்றும் அந்த பரமாத்துமா ஆகாசம்போல் எங்கும் நிறைந்து ஸகலபூதங்களுடைய உள்ளும் வெளியுமாய் அகண்டாகாரமாய் வியாபித்திருக்கிறதென்றும் ஸகலசாஸ்திரங்களும் சொல்லுகின்றன. ஆரியர்களுடைய சுருதிகளில் பரமாத்தும சுவரூபத்தை எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால்;

ஈசாவாஸியோபநிஷத். அ-ல் * "அந்த ஆத்துமா எங் "கும் நிறைந்தது. ஒளிபொருந்தியது, சரீரமற்றது, இரணமற் "றது, நரம்பற்றது, பரிசுத்தமானது, பாபமற்றது."

கடவல்லியுபநிஷத். உ. உஉ-ல் † "சரீரமில்லாதது, "அநித்தியமான ஸகலசரீரங்களிலுமிருக்கிறது, மிகப்பெரிது, "எங்கும்வியாபித்தது, இப்படிப்பட்ட ஆத்துமாவையறிந்து"

ஷை. உபநிஷத். ந. கடு-ல் ‡ "எதுசத்தமில்லாததோ, "உணர்வில்லாததோ, உருவமில்லாததோ, அழிவில்லாததோ, "இரஸமில்லாததோ, முக்காலத்திலுமுள்ளதோ, வாஸனையில் "லாததோ, ஆதிமுடிவில்லாததோ, பெரிதிலும்பெரிதோ, எப் "போதுமுள்ளதோ, இப்படிப்பட்ட ஆத்துமாவையறிந்தால்"

யோகசிகோபநிஷத். சு-ல் $ "ஸகலபெயர்களும் பலவித "ரூபங்களும் பிர்ம்மமே."

இப்படிப்போலவே அநேகப்பிரமாணங்கள் பரமாத்தும சுவரூபத்தைச் சொல்லுகின்றன. ஆகையால் சரீரம் ரூபம் முதலிய அடையாளங்களினால் குறிப்பிடக்கூடாத பரமாத்துமாவை அவரவர்களுக்கிஷ்டமான காரணப்பெயர்களினாலழைக்கிறார்கள். அதனால் வஸ்து சுவரூபம் வேறாகமாட்டாது. ஆரியர்களுடைய சாஸ்திரங்கள் பரமாத்துமாவுக்கு அநேகவிதமான காரணப்பெ

(*) सपर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरं शुद्धमपापविद्धम् ।
(†) अशरीरंशरीरेष्वनवस्थेष्ववस्थितं । महान्तं विभुमात्मानं मत्वा ।
(‡) अशब्दमस्पर्श मरूपमव्ययं तथारसं नित्यमगन्धवच्चयत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवंनिचाय्यतं ।
($) ब्रह्मैवसर्वनामानि रूपाणिविविधानि च ।

யர்களைச் சொல்லுகின்றன. இந்த என்னபிப்பிராயத்தை ஆரியர்களுடைய சாஸ்திரங்களே ஆதரிக்கின்றன. ஆரியர்கள் பிரமாணமாய்கொண்டிருக்கிற ஸஹஸ்ரநாமத்திலும் அமரத்திலும் சிவ விஷ்ணுக்களுக்கு ஆயிரத்திற்கதிகமான நாமங்களைக்காணலாம். ஆகையால் சரீரம் ரூபம் முதலியவையில்லாத பரமாத்துமாவை ஒவ்வொருமதத்தார் தங்களுக்கிஷ்டமான பெயரிட்டழைக்கிறார்கள். அப்பெயருள்ள பரமாத்துமா ஒன்றே. ஒருபெயரினலழைக்கிற பரமாத்துமாவை நிந்தித்தாலும் அப்படி நிந்திக்கின்றவன் தன்தெய்வத்தை நிந்திக்கிறவனகவேயாகிறான். ஆகையினல் தெய்வநிந்தனை மஹாபாபமான செய்கையென்றறி.

16. மயூரநாதன்:—ஓ! சுவாமீ! சகலஉலகத்திற்கும் சிருஷ்டி ஸ்திதிஸம்ஹார கருத்தாவாகிய பரமாத்துமா ஒருவரேயானல் அவர் சிருஷ்டிக்குள்ளடங்கிய மனிதர்களுக்குள் வெவ்வேறான மதங்களையும் அந்த ஒவ்வொருமதங்களுக்கும் வெவ்வேறானசாஸ்திரங்களையும் ஆசாரம் முதலிய தருமங்களையும் தனித்தனி சிருஷ்டிக்கவேண்டியதென்ன?

17. விசுவம்பரபட்:—பரமாத்துமா உலகத்தை சிருஷ்டித்த பொழுது இன்னின்னதேசத்தாருக்கு அல்லது இன்னவகையாருக்கு இன்னமதமென்றாவது இன்னசாஸ்திரமென்றாவது இன்ன ஆசாரமென்றாவது ஏற்படுத்தவில்லை. அந்தபரமாத்துமா, ஸ்தாவரஜங்கமங்களான சகலப்பிராணிகளையும் அவரவர்களுடைய பூர்வகருமங்களின் பலன்களைக்கொண்டு சிலரை தேவர்களாகவும் சிலரை அசுரர்களாகவும் சிலரை மனிதர்களாகவும் சிலரை மிருகம்முதலியவைகளாகவும் சிலரைஸ்தாவரங்களாகவும் சிருஷ்டித்ததுமல்லாமல் அந்த பூர்வகருமத்தை யனுசரித்தே அந்தந்த வகையாருக்குள் உத்தம மத்தியம அதம அதமாதமங்களாகிய உயர்வு தாழ்வாய் சிருஷ்டித்தார். அப்படி சிருஷ்டிக்கப்பட்டவர்களில் மனிதர்கள் நன்மை தீமைகளையறிந்து நன்மையான காரியங்களில் பிரவிருத்திக்கவும் தீமைகளை விட்டொழிக்கவும் வேண்டியதின்பொருட்டு வேதசாஸ்திரங்களையும் சிருஷ்டித்தார். அவ்வேதசாஸ்திரங்கள் ஒருவகுப்பாருக்குமட்டும் உரித்தாயிராமல் எல்லோருக்கும் பொதுவாகவே சிருஷ்டிக்கப்பட்டன. எப்படியெனில், பரமாத்துமாவினிடத்திலிருந்து உலகத்தில் முதலிலுண்டான புருஷனுக்கு வேதம்முழுதும் உபதேசிக்கப்பட்டது.

அந்தப்புருஷன்தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட பிரும்மரிஷிகளுக்கும் அவர்களால் அநேகரிஷிகளுக்கும் அந்த ரிஷிகளினால் அவரவர் சிஷியபரம்பரைகளுக்கும் உபதேசிக்கப்பட்டது. வேதம் முழுவதையும் மனப்பாடம்செய்யும் சக்தி ஜனங்களிடத்தில் குறைவுபட்டகாலத்தில் வேதங்களை பல சாகைகளாய் பிரித்து சிற்சில சாகைகளை சிற்சில சிஷ்யர்கள் அத்தியயனம் செய்தார்கள். வேதம் முழுதும் அத்தியயனம் செய்யும்படியான சக்தி ஜனங்களிடத்தில் குறைந்து போனதினாலும் "अनन्तावै वेदा: =வேதங்கள் கணக்கற்றன" என்று வேதமே சொல்லுகிறபடியாலும் ஜனங்கள் பூர்ணமாய் வேதங்களையத்தியயனம் செய்ததாகக் காணவில்லை. சிற்சில பாகங்களைக்கற்றறிந்த சிஷ்யர்கள் பலவிடங்களில் ஸஞ்சரித்து வந்தார்கள். ஸகல ஜனங்களுக்கும் நல்லொழுக்கம் தெய்வபக்தி ஆசாரம் முதலியவைகளைக் கற்பிப்பது ஆரியர்களுடைய கடமையாயிருந்ததினால் சிஷ்யர்கள் தாங்கள் கற்றறிந்த வேதபாகங்களை அன்னியதேசங்களில் பரவச்செய்தார்கள். அப்படியானால் ஆரியாசாரங்களுக்கு மற்ற தேசாசாரங்கள் வேறுபட்டிருக்கவேண்டியதென்னவெனில், அக்காலத்தில் அன்னிய தேசத்து ஜனங்கள் நாகரிகமற்றவர்களாயிருந்ததினாலும் அவர்களுடைய நடையுடைபாவனை புத்தி சக்தி முதலியன வேறுபட்டிருந்ததினாலும் அவர்களுடைய திறமை மனோநிலைமை முதலியவைகளை முன்னிட்டு அவர்களனுஷ்டிக்க யோக்கியமானதாக வேதசாஸ்திரங்களிலிருந்து சில பாகங்களைக் கற்பித்து அவர்களுக்கு நன்னடக்கை தெய்வபக்தி முதலியவைகளை அவரவர்களுடைய ஆசாரத்திற்குத் தக்கபடி சீர்திருத்தினார்கள். அப்படி கற்பிக்கப்பட்டவைகளை அந்தந்த தேசத்தார் நாகரீகத்தில் விருத்தியடைந்தபொழுது தங்களுடைய பாஷையில், தங்களுக்கு போதித்த வேதசாஸ்திரபாகங்களை எழுதிவைத்துக்கொண்டு அதன்படி யனுஷ்டானம் செய்தும் வருகிறார்கள். ஐரோப்பா தேசத்தில் அவர்கள் எழுதிவைத்துக்கொண்ட சாஸ்திரபாகங்களுக்கு அவர்கள் பைபில் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அவ்விதமாகவே மஹம்மதியர்கள் அவர்கள் பாஷையில் எழுதிவைத்துக்கொண்ட சாஸ்திரபாகங்களுக்கு கொரான் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அப்படியே ஆரியர்கள் தேவபாஷையும் ஆதிபாஷையுமான ஸம்ஸ்கிருதத்தில் தாங்கள் மனப்

பாடம் செய்துவந்த வேதபாகங்களை அந்த பாஷையிலேயே எழுதிவைத்துக்கொண்டார்கள். இப்படி எழுதிவைக்கப்பட்டபாகங்கள் தவிர கணக்கற்ற வேதசாகைகளிருக்கின்றன. அவைகள் இக்காலத்திற் காணப்படவில்லை. சிலநூற்றுண்டுகளுக்கு முன் வரையில் அன்னியதேசத்தார் தங்கள் மதத்தைத்தவிர வேறு மதங்களிருக்கிறதாக அறியார்கள். ஆரியமத சுவரூபம் அன்னியதேசத்தாருக்குத் தெரியாது. அன்னியமதசுவரூபம் ஆரியர்களுக்குத்தெரியாது. முதலில் அன்னியதேசத்தாரை ஆரியர்கள் ஸந்தித்தபொழுது அன்னிய தேசத்தார்களுடைய நடையுடை பாவனை ஆசாரம் பாஷை பெயர் முதலியவைகள் வேறுபட்டிருந்ததினுல் அன்னிய தேசத்தார்களைத் தங்களுடன் சேர்க்காமல் விலக்கி விட்டார்கள். அது முதல் அன்னியதேசத்தார்களும் ஆரியர்களிடத்தில் வெறுப்படைந்து இவர்களுடைய நடையுடை பாவனை முதலியன அன்னியர்களுக்குப் புதுமையாய் கண்டபடியால் ஆரியர்களையும் அவர்களுடைய மதாசாரம் முதலியவைகளையும் அன்னியர்கள் நிந்திக்கத் துடங்கினுர்கள். இதனுல் அன்னியர்களுக்கும் ஆரியர்களுக்கும் மதவிஷயமான ஐக்கியமும் உண்டாகாமற்போயிற்று. இதுதான் ஒருவரை யொருவர் தூஷிப்பதற்குக் காரணமென்றறி. ஆகையால் வேதசாஸ்திரங்கள் ஒன்றே அன்றியில் ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு வேதசாஸ்திரங்கள் சிருஷ்டிக்கப்படவில்லை.

18. **மயூரநாதன்:**—ஓ! குருவே! ஆரியமதத்திற்குள்ளாகவே பல பிரிவு மதங்கள் ஏற்பட்டிருக்கிறதாகச் சொன்னீர்கள். அப்படி எத்தனை மதங்கள் பிரிந்திருக்கின்றன. அப்படி பிரிந்ததற்குக் காரணமென்ன? அம்மதங்களுக்காதாரமான சாஸ்திரங்களெவை? இவ்விஷயங்களை அறியவிரும்புகிறேன்.

19. **விசுவம்பரபட்:**—ஆரியமதத்திற்குள் உட்பிரிவு மதங்களனேகமுண்டு. அம்மதங்களெல்லாவற்றிற்கும் பிரமாணம் வேதமே. அம்மதங்களுக்குள் எனக்குத் தெரிந்த மதங்களின் பெயர்களைச் சொல்லுகிறேன்.— அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம், வல்லபீயம், ஸௌரம், சாக்தம், பௌத்தம், ஸாங்கியம், காணபத்தியம், காபால்லியம், ஜைமிநம், மீமாம்ஸம், காணுதம், தார்க்கிகம், பைரவம், இம்மதங்

களும் பின்னும் சில மதங்களும், இந்த ஒவ்வொரு மதங்களுக்குள் பல உட்பிரிவுகளுமுண்டு. அந்த ஒவ்வொருமத சுவரூபத்தையும் அவைகளிலொவ்வொன்றுக்குள்ள பேதங்களேயும் விளக்கிக்காட்டுவதானுல் மிகவளரும். ஆனதால் இத்தேசத்தில் வெகுஜனங்களால் அனுஷ்டிக்கப்படுகிறதும் பிரசித்தியடைந்திருக்கிறதுமான அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம் இன்னுன்கு மதங்களுக்குள்ளும் உண்டாயிருக்கிற மதபேதத்தையும் அப்படி பேதமானதற்குக் காரணத்தையும் சொல்லுகிறேன் கேள்.

20. ஆதிகாலத்தில் ஆரியர்களுக்குள் இவ்விதமான மதபேதங்களும் மதத்தூஷணேகளும் விரோதங்களுமிருந்ததாகக்காணப்படவில்லே. முற்காலத்திய ஆரியர்கள் சிவ விஷ்ணுமுதலிய பெயர்களால் சொல்லப்படுகிற பரமாத்துமா ஒன்றென்கிற நிச்சயமுள்ளவர்களாகையால் எந்தப்பெயருள்ள வஸ்துவை யுபாஸித்தாலுமந்த உபாஸனே ஸகலத்திற்கும் கருத்தாவான பரமாத்துமாவினுடைய உபாஸனேயென்றே நம்பியிருந்தார்கள். கலியுகம் துடங்கினபிறகு கலியின் மாஹாத்துமியத்தினுல் புத்தி சக்தி முதலிய குறைவையடைந்த ஆரியவம்சஸ்தர்கள் சாஸ்திராராச்சி பூர்ணமாய்ச் செய்யாமல் தங்கள் முன்னேர்கள் உபாஸித்துவந்த பெயரையுடைய வஸ்துவே பரமாத்துமா மற்றப்பெயருள்ள வஸ்துஅதைவிட வேறுனது, அது உபாஸனேக்கு யோக்கியமானதல்லவென்ற எண்ணமுண்டாயிற்று. அதனுல் அதில் அபிமானமுமுண்டாயிற்று. அப்படியே விஷ்ணுமுதலிய மூர்த்திகள் விஷயத்திலும் அபிமானமுண்டாயிற்று. மதப்பிரிவுகளுண்டானதற்கு இவைகள்தான் முக்கியமானகாரணங்கள்.

21. மயூரநாதன்:— ஓ! சுவாமீ! இப்பிரிவு மதத்தாருக்கெல்லாம் வேதமே பிரமாணமென்று சொன்னீர்களே அந்தப்பிரமாணங்கள் எப்படி எல்லாப்பிரிவு மதங்களேயும் ஆதரிக்கக்கூடும்? ஒன்றுக்கொன்று விரோதமான அர்த்தத்தை வேதம் சொல்லக்கூடுமோ?

22. விசுவம்பரபட்:—ஓ! குழந்தாய்! வேதம் முதலிய சாஸ்திரங்களில், தங்கள் தங்களபிமானத்தை எந்தெந்த வாக்கியங்கள் ஆதரிக்கின்றனவோ அந்த வாக்கியங்களே மட்டும் பிரமாணமாக அம்மதத்தார் அங்கீகரித்தார்கள். ஆனல் வேதம் ஒன்

றுக்கொன்று விரோதமான அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. புத்திக்குறைவினுல் வேதத்தினிடத்தில் விரோதாபிப்பிராயத்தைக்கற்பிக்கிருர்கள்.

23 மயூரநாதன்:—ஓ! குருவே! மதாசாரியர்களென்று சொன்னீர்களே அவர்கள் யார்? எந்தெந்தமதத்திற்கு யாரார் மதாசாரியர்கள்? அவர்கள் எவ்விதமாய் மதாசாரியர்களானுர்கள்? அந்தமதாசாரியர்களை தூஷிப்பதற்குக்காரணமென்ன? இவைகளைச்சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

24. விசுவம்பரபட்:—ஓ! குழந்தாய்! அத்துவைதமதத்திற்கு ஸ்ரீமத் சங்கராசாரியரும், விசிஷ்டாத்துவைதமதத்திற்கு ஸ்ரீமத்ராமாநுஜாசாரியரும், துவைதமதத்திற்கு ஸ்ரீமத் மத்துவாசாரியரும், சைவமதத்திற்கு ஸ்ரீமத் நீலகண்டாசாரியரும் மதாசாரியர்கள். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு ஆசாரியர்கள் உண்டு. அத்துவைதமதத்தை உலகத்தில் பரவச்செய்ததினுல் சங்கராசாரியர் அத்துவைதமதாசாரியரென்றும், அப்படியே விசிஷ்டாத்துவைதமதத்தை உலகத்தில் பரவச்செய்ததினுல் இராமாநுஜாசாரியர் விசிஷ்டாத்துவைத மதாசாரியரென்றும் இப்படியே மத்துவாசாரியரும் நீலகண்டாசாரியரும் அந்தந்த மதாசாரியர்களென்றும் சொல்லப்படுகிருர்கள். இவர்கள் ஈசுவராம்சமென்பதும் அவர்களுடைய மஹிமைசரித்திரம் இவைகளிப்படிப்பட்டதென்பதும் பிந்தி விஸ்தாரமாகச்சொல்லப்படும்.

இந்த ஆசாரியபுருஷர்கள் ஏன் நிந்திக்கப்படுகிருர்களென்று கேட்டாயல்லவா? அதைப்பற்றிச்சொல்லுகிறேன் கேள்.

அத்துவைதமதத்தை தூஷிக்கிற மற்ற மதஸ்தர்கள், சாஸ்திரங்களுக்கு விபரீதார்த்தங்களைச்செய்து சங்கராசாரியர் அத்துவைதமதத்தை ஏற்படுத்தினுரென்றும், அவர் போதித்த அத்துவைதமதக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் நற்கெதியையடையாமல் போகிறதற்கு அவர் காரணமாயிருந்தாரென்றும் மற்ற மூன்று மதஸ்தர்களும் சங்கராசாரியரை தூஷிக்கிருர்கள். அப்படியே விசிஷ்டாத்துவைத மதத்தை இராமாநுஜாசாரியரும் துவைதமதத்தை மத்துவாசாரியரும் சைவமதத்தை நீலகண்டாசாரியரும் போதித்து ஜனங்களுடைய புத்தியைக்கெடுத்துவிட்டதாக மற்றவர்கள் நிந்திக்கிருர்கள்.

இந்த மதாசாரியர்கள் தாங்களாகவே ஒரு மதத்தையும் கற்பிக்கவில்லை. நெடுங்காலமாய் அவரவர்கள் அபிமானித்துவந்த கொள்கையை அவரவர்கள் நன்றாய் விசுவாசத்துடன் அநுஷ்டிக்கவேண்டுமென்று கருதி ஜனங்களுடைய நன்மைக்காகவே ஆசாரிய புருஷர்கள் போதித்தார்கள். அவர்களிடத்தில் யாதொரு குறைவையும் சொல்லமுடியாது.

25. மதாசாரியர்கள் ஈசுவராம்சமானால் ஒருவர் கொண்ட அபிப்பிராயத்தை அதற்குப்பிந்திய மதாசாரியர் உலகத்தில் பரவச்செய்யவேண்டியதாயிருக்க அதற்கு விரோதமான மற்றொரு மதக்கொள்கையை யனுஷ்டிக்கும்படி எப்படி போதிக்கலாம் என்றாலோ, அதற்குக்காரணம் சொல்லுகிறேன் கேள்.

26. மதாசாரியர்கள் தாங்கள் எவ்வளவு வித்துவான்களாயிருந்தாலும், ஞானிகளாயிருந்தாலும் அவர்கள் முன்பாகவிருக்கிற சிஷ்யர்களுடைய புத்தி, குணம், சக்தி முதலியவைகளை யாராய்ந்து அவர்களுக்கு இன்னவிதமான மார்க்கம் அல்லது ஸாதனத்தை போதிப்போமானால் அவர்கள் தங்கள் கருத்தையும் தாங்கள் போதித்த விஷயங்களையும் நன்றாயறிந்துகொண்டு அதன்படி யநுஷ்டித்து நற்கெதியடைவார்கள் என்பதை நிச்சயித்துக்கொண்டு பிறகு உபதேசிப்பார்களேயன்றியில் தங்களுக்குத்தெரிந்த விஷயங்களையெல்லாம் அந்த சிஷ்யர்களுக்கு போதிக்கமாட்டார்கள். எப்படிப்போலெனில், ஒருவித்துவானிடத்தில் வித்தைகற்றுக்கொள்ளப்போன அனேக பாலர்களில் எவன் முதற்பாடம்படிக்க யோக்கியனென்றும் எவன் இரண்டாவது அல்லது மூன்றாவது பாடம்படிக்க யோக்கியனென்றும் தெரிந்துகொண்டு அவரவர்களுக்குத் தகுந்தபடி வித்துவான் எப்படி போதிப்பாரோ, அப்படிப்போல சிஷ்யர்களுடைய நிலைமையையோஜித்து இவன் இன்னமார்க்கமான சாதனத்தையுபதேசித்தாற்றானறிந்துகொள்ளுவான் என்றறிந்த ஆசாரியபுருஷர்கள் அவனவனுடைய புத்திசக்தி முதலியவைகளுக்குத் தக்கபடி அவரவர்களுக்குத்தகுந்த மதத்தை போதித்தார்கள். ஆனாலப்படி போதித்ததானது, சுருதி முதலியப் பிரமாணங்களுக்கு விரோதமானதல்ல். ஆசாரியபுருஷர்கள் உலகத்தைக்கெடுக்கிறதற்காகத் தப்பபிப்பிராயத்தை ஜனங்களுக்கு போதித்தார்களென்று சொல்லுவோமானால் நம்மைவிடமூடனும் அயோக்கியனும்

உலகத்திலில்லையென்று சொல்லலாம். அவர்கள் தப்பான அபிப்பிராயத்தை போதிக்கிறதற்கு ஆசாரியபுருஷர்களுக்கு ஏதேனும் பிரயோஜன உத்தேசமிருந்ததென்று சொல்லமுடியாது.

27. மயூரநாதன்:—ஓ! பகவானே! பரமாத்துமாவினால் சகல ஜனங்களுடையப் பிரயோஜனத்தின்பொருட்டு வெளியிடப்பட்ட சுருதிமுதலியப்பிரமாணங்கள் ஒன்றுக்கொன்று விரோதமான அபிப்பிராயங்களை எப்படிச்சொல்லக்கூடும்? அதனால் ஜனங்களைத் தப்புவழியில் நடக்கவும் விரோதமான பலமார்க்கங்களைப் பின்பற்றவும் காரணமாகிறது.

28. விசுவம்பரபட்:—சுருதிமுதலியப்பிரமாணங்கள் ஒன்றுக்கொன்று விரோதமான மார்க்கங்கள் அல்லது சாதனங்களைச் சொல்லவில்லை. சாஸ்திரங்கள் அப்படிச்சொல்லியிருக்கிறதாக யாரேனும் நினைப்பார்களாகில் அவர்கள் சாஸ்திரங்களில் பூர்ணக்ஞானமில்லாதவர்களென்றே சொல்லவேண்டும். சாஸ்திரங்கள் எல்லாம் ஜனங்களுக்கு நன்மையை போதிக்கவந்தவைகளேயன்றி ஜனங்களைத் தப்புவழியில் பிரவேசிக்கும்படி போதிப்பதற்காகவல்ல. ஜனங்களுடைய சுவபாவம் குணம் புத்தி சக்தி முதலியவைகள் ஒரேவிதமாய் இல்லாமல் பலவித வேறுபாடடைந்ததாயிருக்கின்றன. அதனால் அதிகாரிகளை முன்னிட்டு சாஸ்திரங்களும் அவனவன்கடைத்தேறப் பலமார்க்கங்களைச் சொல்லுகின்றன. அப்படிக்கன்றி, சாஸ்திரங்கள், யோகத்தினாலேயே அல்லது தபஸ்வினாலேயே ஜனங்கள் நற்கெதியடையவேண்டுமென்று ஒரேசாதனத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்குமானால் இந்தயோகம் அல்லது தபஸ்ஸையநுஷ்டிக்கிற அதிகாரி பதினாயிரத்திலொருவன் கூடக்கிடைப்பதரிது. சிலபுண்ணியபுருஷர்களுக்கு மாத்திரந்தான் தபஸ்ஸு அல்லது யோகஸித்தியுண்டாகும். மற்றவர்களுடைய கெதியோ நிர்கெதிதான். ஆனதனால் ஜனங்களிடத்தில் கருணையுள்ள பகவான் சாஸ்திரங்களில் பலமார்க்கத்தைக் காண்பித்து எவனெவன் எந்தெந்தமார்க்கத்தைப் பின்பற்றத்தகுந்த அதிகாரியோ அவனவன் அதனைப் பின்பற்றட்டுமென்று, கருமம், பக்தி, ஞானம் முதலிய மார்க்கங்களை வெளியிட்டிருக்கிறார். இவ்விஷயத்தை ஒரு திருஷ்டாந்தத்தினால் நிரூபித்துக்காட்டுகிறேன். இக்காலத்தில் இராஜாங்கத்தார், எம், ஏ. அல்லது எம், எல். என்ற

உயர்ந்த பரீக்ஷையில் தேறினவர்களுக்கன்றி இராஜாங்கத்தில் உத்தியோகம் கொடுக்கப்படமாட்டாதென்று விதி ஏற்படுத்தியிருப்பார்களானால் அந்தப்பரீக்ஷைக்குப் போகத்தகுந்தவனும் அப்படிப்போனாலும் அதில் தேறுகிறவனும் மிகவுமரிது. அப்படித்தேறினவனுக்கே உத்தியோகம் கொடுக்கப்படுமென்று விதியிருக்குமானால் அந்த உத்தியோகத்தை யடைகிறவன் இலக்ஷத்திலொருவனாகக்கூட இருக்கமாட்டான். மற்றவர்களுக்கோ அந்த உத்தியோகமாவது வேறு உத்தியோகமாவது கிடைக்க வகையில்லை. அதற்காகவே இராஜாங்கத்தார் உயர்வு தாழ்வான அனேக பரீக்ஷைகளை ஏற்படுத்தி அவைகளிலெதிலாவது தேறுகிறவன் அதற்குத் தகுந்த உத்தியோகத்தை யடையும்படி விதியேற்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்போலபகவானும் சாஸ்திரமூலமாய் உத்தம மத்தியம அதமமான பல உபாஸநாமார்க்கங்களை ஏற்படுத்தி அந்தந்த உபாஸனைக்குத் தகுந்த பலனின்னதென்றும் விதித்திருக்கிறார்.

29. அழிவற்ற சுகமாகிய மோக்ஷத்தையடைவதற்கு எல்லோருமதிகாரிகளாகார்கள். மோக்ஷமானது முடிவானப் பிரயோஜனமென்றும் அதற்குமேலானப் பிரயோஜனமே யில்லையென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. எல்லோரும் மோக்ஷாதிகாரிகளாகமாட்டார்களாகையால் மோக்ஷ சுகத்திற்குத் தாழ்ந்ததாகிய தேவஜன்மமடைந்து கைலாஸம் வைகுண்டம் பிரும்மலோகம் சுவர்க்கலோகம் பிதுருலோகம் சூரியலோகம் சந்திரலோகம் மற்றதேவதைகளுடைய லோகம் அல்லது இப்பூலோகத்தில் உத்தமமான மனிதஜன்மம் முதலிய இப்படிப்பட்ட தாழ்ந்த சுகங்களையாவது ஜனங்களடையட்டுமென்று கருணையினால் சாஸ்திரங்கள் மூலமாய் பகவான் பல மார்க்கங்களைக் கற்பித்திருக்கிறார். இவ்விஷயத்தை நிரூபிக்க சாஸ்திராநுஸாரமாகவே ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்.

30. மோக்ஷமென்பது ஒரு உயர்ந்த ஸ்தானமாகவும் அந்த ஸ்தானத்திற்குப்போய்ச் சேர மேற்சொல்லிய பலலோகங்களை ஒன்றுக்குமேல் ஒன்றான படிகளாகவும் கற்பித்துக்கொண்டு அந்தந்த லோகங்களை யடைவதற்கும் அதற்கு மேற்படியில் ஏறுவதற்கும் அநுகூலமான உபாஸநாமார்க்கங்களிப்படிப்பட்டதென்று கற்பித்துக்கொள்ளுவோம். எப்படியெனில்.—

(1) தெய்வமொன்றிருக்கிறதாகவும் அந்த தெய்வத்தை வணங்கினாலின்னப்பிரயோஜனமுண்டாகுமென்று மறிவில்லாமல் மிருகங்களைப்போல் திரிகிற ஜனங்களைப்பார்க்கிலும் சிரேஷ்ட கநிஷ்டங்களை யறியும் ஞானமில்லாமலிருந்தாலும் சில ஜனங்கள் தெய்வமுண்டென்று நம்பி க்ஷூத்திரதேவதைகளான ஐயனார், படாரி, காளி முதலிய பெயர்களினாலழைக்கப்படுகிற ஸ்திரீ, புருஷரூபங்களான தேவதைகளையுபாஸிக்கிற ஜனங்கள் முதற்படிக்குத்தக்கவர்களாகவும்,

(2) மேற்குறித்த க்ஷூத்திர தேவதைகளுக்கு மேலானவும் நன்மை தீமைகளுக்குப் பலன்கொடுக்கிறவுமான சிவன், விஷ்ணு, மஹேஸ்வரி, ஸரஸ்வதி, முதலிய தேவதாசுவரூபமாய் சாஸ்திரங்களின்படி ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விக்கிரகங்கள் அல்லது இலிங்கம் ஸாளிக்கிராமம் முதலிய சுவரூபங்களாயிருக்கிற விக்கிரகங்களே தெய்வமென்கிற ஞானத்துடன் பூஜிப்பவர்களை இரண்டாவது படிக்குத்தகுந்தவர்களாகவும்,

(3) மேற்கண்ட விக்கிராராதனை செய்வதுடன் அந்த விக்கிரகங்களில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிற ஈசுவரனைத் தானுபாஸிக்கிறேமென்கிற ஞானமுடையவர்களாயும் நித்திய கருமங்களையும் சாந்திராயணம் முதலிய விரதங்களையும் அனுஷ்டித்து வேதாத்தியயனம் செய்து ஸதாசாரமுள்ளவர்களாயிருக்கிற ஜனங்களை மூன்றாவது படிக்குத் தக்கவர்களாகவும்,

(4) மூன்றாவது படியிலுள்ளவர்களைப்போல அனுஷ்டானம் செய்துகொண்டு பலாபேக்ஷையுடன் யக்ஞம் முதலிய விசேஷ கருமங்களைச் செய்துவருகிற ஜனங்களை நான்காவது படிக்குத் தக்கவர்களாகவும்,

(5) முந்தியபடியிலுள்ளவர்களுடைய அனுஷ்டானத்துடன் தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தும், தான தருமங்கள் செய்தும் பிராணிகளிடத்திலன்பு பாராட்டும் ஜனங்களை ஐந்தாவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(6) ஐந்தாவது படியிலுள்ளவர்களுடைய அனுஷ்டானத்துடன் சிவ விஷ்ணு முதலிய மூர்த்திகளுடைய நாமாதிகளை பஜனைசெய்கிற ஜனங்களை ஆறாவது படிக்குத் தக்கவர்களாகவும்,

(7) தாங்கள் செய்கிற ஸகலகருமங்களுடைய பலன்களை ஈசுவரார்ப்பணம் செய்தும் அதனால் சித்தசுத்தியையடைய முயலும் ஜனங்களை ஏழாவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(8) ஆத்துமாநாத்தும விசாரஞ்செய்து சாஸ்திரங்களினாலும் பெரியோர்களினாலும் ஆத்துமசுவரூப விசாரம் செய்துகொண்டிருக்கிற ஜனங்களை எட்டாவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(9) பிராணன் முதலிய வாயுக்களையும் அவைகளின் மூலமாய் மனதையும் அடக்க முயற்சி செய்து யோகத்தில் பிரவேசித்து யோகத்தில் பூர்ணமடையாத ஜனங்கள் ஒன்பதாவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(10) சிவ விஷ்ணுமுதலிய மூர்த்திகள் அல்லது ஆத்தும சுவரூபமிவைகளிலெதாவதொன்றில் பரம விசுவாசத்துடன் அந்த மூர்த்திகளுடைய அனந்த கல்யாணகுணங்களை யெப்போதும் ஸ்மரித்துக்கொண்டும் அந்த சுவரூபங்களிலேயே மனதை நிருத்தி எப்போதும் ஆனந்தமாய் காலங்கழித்துக்கொண்டிருக்கிற உத்தம பக்தர்களான ஜனங்கள் பத்தாவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(11) யமம் நியமம் முதலிய ஸாதனங்களில் ஸித்தியடைந்தும் உலக விஷயங்களில் வைராக்கியமடைந்தும் யோக ஸமாதியை யநுஷ்டித்து வருகிற ஜனங்களை பதினோராவது படிக்குத்தக்கவர்களாகவும்,

(12) பதினோராவது படிக்குத் தக்கவர்களாயிருந்து நிர் விகற்ப ஸமாதியை யடைந்து மநோவியாபாரமற்றுப்போயிருக்கிற ஞான யோகிகளை பனிரெண்டாவது படிக்குத்தக்கவர்களாகவும், வைத்துக்கொள்ளுவோம்.

இந்தப் பனிரெண்டாவது படியிலிருக்கிற ஞானயோக நிஷ்டர்கள் ஜீவன் முக்தர்களென்று சொல்லப்படுகிறார்கள். இவர்களுக்கு இந்த தேகம்போனவுடனே பிறப்பிறப்பற்றதாயும் நித்தியானந்தமாயுமிருக்கிற மோக்ஷமாகிற மேலானபடியானது தடையன்றி கிடைக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

மேற்கண்ட விதமாய் பிரித்துச்சொல்லிய ஒவ்வொரு படிகளிலுமிருக்கிற அதிகாரிகள் விஷயமாய் பின்னும்பல உட்பிரிவுகளாய் பிரித்துச்சொல்லவுங்கூடும். யார் எந்தப்படியில் தாங்

கள் இருக்கத்தகுந்தவர்களோ அவர்கள் அப்படியிலேயே நின்று விடாமலும் கீழ்ப்படிக்குப் போகாமலும் மென்மேல் படிகளை யேறி மேலான படியாகிய மோக்ஷத்தை யடைய முயற்சி செய்யவேண்டும். இதுதான் கிரமமுக்திமார்க்கம். இதைத் தான், "**बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते**="அநேக ஜன்மங்களை யெடுத்து முடிவில் ஞானத்தினால் மோக்ஷமடைகிறான்" என்று பகவான் அர்ஜுனனுக்குபதேசித்தது. படிகளாக இப்படி கற்பிக்கப்பட்ட பல பிரிவுகளும் அந்தந்தப் பிரிவுக்குத்தகுந்த அதிகாரிகளும் அவரவர்களுபாஸனைக்குத் தகுந்த பலன்களும் பேதப்படுவது எப்படியோ அப்படி சுருதி முதலிய சாஸ்திரங்கள் பல பேதமான உபாஸனாமார்க்கங்களைச்சொல்லி முடிவில் நித்தியானந்தமான மோக்ஷமார்க்கத்தை வெளியிடுகின்றன.

31. மயூரநாதன்:— ஓ! குருமூர்த்தியே ! மனிதர்கள் கடைத்தேறும்பொருட்டு சாஸ்திரங்கள் உயர்வு தாழ்வான அனேகமார்க்கங்களை வெளியிடுகிறதாயிருக்க சாஸ்திரங்களைக் கற்றறிந்த வித்துவான்களுங்கூட பிறர் மதத்தையும் மதாசாரம் முதலியவைகளையும் எப்படி தூஷிக்கக்கூடும் ? சாஸ்திரங்களிற் சொல்லிய ஒரு மார்க்கத்தை நாம் பின் பற்றுகிறோம். மற்றொரு மார்க்கத்தை சிலர் பின்பற்றுகிறார்கள். இவ்விருவகையான உபாஸனையும் சாஸ்திரத்தினாலாதரிக்கப்பட்டவைகளே என்று ஸமாதானமாகவிராமல் தூஷிக்கவேண்டியதென்ன ?

32. விசுவம்பரபட்:— ஓ! ஸுகுணமுள்ளவனே ! சாஸ்திரங்களையறிந்த வித்துவான்கள் ஸத்துவரஜஸ்தமோகுணங்களினால் மூன்று வகைப்படுவார்கள். ஸத்துவகுணமுள்ள வித்துவான் ஸமபுத்தியுள்ளவனாகையால் நீ சொன்னபடி ஒரு மதஸ்தர்களிடத்திலும் துவேஷபுத்தியைக்கொள்ளாமலிருப்பான். இரஜோகுணமுள்ள வித்துவான், தான் நம்பியிருக்கிற மதமெதுவோ அதுதான் சரியானமதம், மற்றவர்கள் அனுஷ்டிக்கும் மதங்கள் சாஸ்திரங்களுக்கொற்றதல்லவென்று மதப்பிசாசினாற் பிடிபட்டவனாய் சாஸ்திரங்களுக்குத்தப்பான அர்த்தங்களைச்செய்துகொண்டும் சில சாஸ்திரவாக்கியங்களை இராஜஸதாமஸமென்று விலக்கியும் தன்னபிப்பிராயத்தையே ஸ்தாபிப்பான். தாமஸகுணமுள்ள வித்துவான்கள் பிறரை நிந்திக்கிறதினாலேயே தாங்கள் ஸகலமுமறிந்தவர்களென்று கருவமடைந்து பிறருடைய

நியாயமான வார்த்தைகளைக் கிரஹிக்காமலே தாம் கற்றவித்தையை (தூஷிக்கிறதாகிய) துர்விநியோகம் செய்வார்கள். இப்படி வித்துவான்களே நடப்பார்களானால் அவித்துவான்கள் விஷயத்திற் சொல்லவும் வேண்டுமோ.

33. மயூரநாதன்:—ஓ! பகவானே! மதாசாரியர்கள் ஈசுவராம்சமென்று சொன்னீர்கள். அவர்கள் உபதேசித்த மதங்கள் வெவ்வேறென்றும் சொன்னீர்கள். அப்படி வெவ்வேறாயுபதேசித்தது சிஷ்யர்களுடைய சுவபாவத்தை யநுஸரித்ததானால் "உங்களுக்குமட்டில் இந்த மதசித்தாந்தமுபதேசிக்கப்பட்டது, மற்ற மதசித்தாந்தங்களும் சாஸ்திரங்களினாலாதரிக்கப்பட்டதாகையால் அவைகளை நீங்கள் நிந்திக்கக்கூடாது" என்று ஏன் வற்புறுத்தவில்லை?

34. விசுவம்பரபட்:—ஓ! குழந்தாய்! மதாசாரியர்கள் தங்கள் முன்பாகவிருந்த சிஷியர்களுக்குபதேசிக்கும்பொழுது "நான் இப்போது உங்களுக்கெததுபோதித்தேனோ அவைகளும் சாஸ்திரோக்தமானவைகள்தான், மற்றமதங்களுடைய ஸித்தாந்தங்களும் சாஸ்திரோக்தந்தான், நானுபதேசித்த மதத்தினாலடைகிறப்பிரயோஜனமெதுவோ அது அல்லது அதற்கு மேலானப் பிரயோஜனம் இதரமதங்களிலுமிருக்கிறது" என்று சொன்னாற்போலாகிறது. சிஷ்யனுக்கு இந்த குருவார்த்தையில் பிரியமுண்டாகவும் மாட்டாது. இந்த சித்தாந்தத்தில் மனம் நிலையடையவுமாட்டாது. ஆகையால் "மற்றமதங்களுக்கு ஆதாரமான சாஸ்திரங்கள்கூட என்னுடைய அபிப்பிராயத்தையே ஸ்தாபிக்கின்றன" என்று வற்புறுத்திச்சொல்லுவார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் சிஷ்யர்களுக்கு இவர் வார்த்தையில் நம்பிக்கையுண்டாகாது. நம்ம ஆரியமத சாஸ்திரங்கள் போதிக்கிறது இவ்வகையாகத்தான். அதாவது, ஒரு ஸ்தலமாஹாத்துமியத்தை அல்லது ஒரு தீர்த்தத்தை அல்லது ஒரு ஆலயத்தைக்குறித்து ஒருவனுக்குச்சொல்லும்போது "இதைவிட சிரேஷ்டமான ஸ்தலமே யில்லை. இதைவிட சிரேஷ்டமான தீர்த்தமேயில்லை. இந்த ஆலயத்திலுள்ள பகவானே சுவயம்பு, நற்கெதியை யடைவிக்கும் விஷயத்தில் இந்த பகவானுடைய சக்தி வேறு எந்த ஆலயத்திலுமுள்ள பகவானுக்குமில்லை" என்பது முதலிய புகழ்ச்சியான வாக்கியங்களால் ஸ்துதிப்பது சுவபாவம். அப்படி

யேதான் ஆசாரிய புருஷர்களும் தங்கள் தங்கள் மதத்தை சிரேஷ்டமாகச் சொன்னார்களேயன்றி மற்றமத சித்தாந்தங்கள் பிசகென்பதினாலல்ல.

35. சிலர் தாம், மதசித்தாந்தங்களை யறிந்த வித்துவானென்று கருவமடைந்து பிறரை தூஷிக்கிற சுவபாவம் மிகவும் கெட்டது. துரபிமானம், அசூயை, பொறாமை முதலிய துர்க்குணங்களே இதற்குக் காரணம். தூஷணை செய்பவன் சிரேயஸ்ஸையடையமாட்டான். அவன் பெரியோர்களால் இகழப்படுவான். இந்த அர்த்தத்தைச் சாஸ்திரங்களே சொல்லுகின்றன.

முண்டகோபநிஷத், க, உ, ல் * "அவித்தையாகிற "அக்ஞானத்தினால் சூழப்பட்டிருக்கிறவர்கள் தாங்கள் புத்தி "மான்களென்றும் ஸகலமுமறிந்த பண்டிதர்களென்றும் எண்ண "ங்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மூடர்கள் வியாதிமுத "லிய துன்பமடைந்து பிரமையையடைவார்கள். (எப்படிப் "போலெனில்) குருடர்களுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோ "ற்றான். அவித்தையாகிற அக்ஞானத்தில் அதிகமாயுழலுகிற "வர்கள் தாங்கள் ஸகலத்தையுமறிந்தவர்களென்கிற அபிமான "த்தால் கருவமடைகிறார்கள். ஆசையினாற் காரியங்களைச் செய் "கிற அந்த அக்ஞானிகள் கருவத்தினால் (வாஸ்தவத்தை) அறி "கிறதில்லை. அப்படி யறியாததினால் துக்கத்தை யடைந்தவர் "களாயும், புண்ணியங்கள் நசித்தவர்களாயும் சுவர்க்காதிலோக "த்திலிருந்து கீழே விழுகிறவர்களாயுமிருக்கிறார்கள்."

மனுஸ்மிருதி அத்-சு-சு-சஎ ல், † "ஒருவன் அக்கிரம "மாய்த் தன்னை நிந்தித்தாலும் பொறுக்கவேண்டியது. ஒருவனை "யும் தான் அவமானம் செய்யக்கூடாது. அநித்தியமாயும் "வியாதிக்கிருப்பிடமாயுமிருக்கிற இந்த தேகத்தை நம்பி ஒருவ "னையும் நிந்திக்கலாகாது."

---

(*) अविद्यायामंतरे वर्तमानास्स्वयंधीराः पण्डितं मन्यमानाः ।
जंघन्यमानाः परियन्ति मूढाः अंधेनैव नीयमाना यथांधाः ॥८॥
अविद्यायां बहुधा वर्तमाना वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः ।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात्तेनातुराः क्षीणलोकाश्चचवंते॥९॥

(†) अतिवादां स्तिति क्षेतनावमन्येत कञ्चन।
नचे मंदेहमाश्रित्य वैरं कुर्वीत केनचित् ॥

பிரும்மதருமம் உ-சஎ-ல், * "விவேகியாயும் தைரிய "முள்ளவனுயுமிருக்கிற புருஷன் மிருதுவாயுமின்பந் தரத்தக்க "தாயும் நன்மையையுண்டாக்கத்தக்கதாயுமிருக்கிற வார்த்தைக "ளையே சொல்லவேண்டும். தற்புகழ்ச்சியையும் பிறர் நிந்தை "யையும் விட்டுவிடவேண்டியது."

இந்த வாக்கியங்கள் ஸகலமுந் தங்களுக்குத் தெரிந்ததெ ன்று கருவமடையும் வித்துவான்களையும் பிறரை தூஷிப்பவர்க ளையும், மூடர்களென்றும் நற்கெதியடையமாட்டார்களென்றும் சொல்லுகின்றன.

36. பின்னும் சிலர் தன் முன்னோர்கள் அநுசரித்து வந்த மதத்தையும் மதசாஸ்திரங்களையும் விட்டு பிறர் மதத்திற் பிர வேசிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தன் மத சுவரூபமிப் படிப்பட்டதென்றாவது தான் பிரவேசிக்கிற மதசுவரூபமிப்படிப் பட்டதென்றாவது அறியமாட்டார்கள். அப்படி யிருந்தும் அந் நிய மதஸ்தர்களுடைய தூஷணையான வாக்கியங்களைப் பாடம் செய்துகொண்டு தன் தாய் வியபசாரி யென்று தானே சொல்வது போற் தம்மதம் கெட்டதென்று தூஷிக்கிறார்கள். இவர்கள் மிக வும் அவிவேகிகளே. மதசாஸ்திரங்களை யாராய்ந்து அல்லது குரு முகமாய் சாஸ்திரவிசாரம் செய்து தம்மதத்திலுள்ள குறைவின் னதென்று கண்டு, அப்படிப்பட்ட யாதொரு குறைவுமில்லாத மதத்தின் சாஸ்திரங்களினால் நிச்சயமடைந்திருக்கிறவனெவ னே அவன் அந்த மற்றொரு மதத்திற் பிரவேசிக்கிறேனென் றால் அது, ஒரு விதத்தில் முகாந்தரமுள்ளதென்று யாரேனும் சொல்லக்கூடுமானாலும் ஒருமத சுவரூபமாவது நன்றாயறியாத புருஷன் தன் மதத்தை நிந்தித்துப் பிறமதத்திற் பிறவேசிப்பது அவனுக்கு நன்மையை யுண்டாக்காது. மதமென்பதெல்லாம் ஒவ்வொருவர் அபிப்பிராயத்தை யாதாரமாய்க்கொண்டு பிரவிரு த்தித்தன. ஆகையால், ஒவ்வொரு மதத்திலும் ஏதேனும் குறைவுகள் காணக்கூடும். ஏனென்றால், இந்திரியங்களுக்குப் புலப்படாத பரமாத்துமாவைக்குறித்துச் சொல்லுகிறதினால் ன். ஆகையால் ஸகல மதங்களிலும் ஏதேனும் குறைவுகளி

* सत्यं मृदुप्रियं वाक्यं धीरो हितकरं वदेत् ।
आत्मोत्कर्षं तथा निन्दां परेषां परिवर्जयेत् ॥

ருக்குமென்பதிற் சந்தேகமில்லை. அப்படி யிருக்கிறதினால், தான் பிரவேசிக்கும் மதத்திலும் அப்படிப்பட்ட அனேகக்குறைவுகளிருக்குமென்பது நிச்சயம். இக்காரணத்தினாற்றான் பகவானான கிருஷ்ணசுவாமியானவர் தன்னுடைய தருமம் அல்லது கருமங்களை விட்டுப் பிறர் தருமங்களை யனுஷ்டிக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்.

பகவத்கீதை அத்-௩-சு-௩௫-ல் *“செவ்வையாயனுஷ்
“டிக்கப்பட்ட பிறருடைய தருமத்தைக்காட்டிலும் குணமில்லா
“த தன்னுடைய தருமமானது சிரேஷ்டமாகும். தன்னுடைய
“தருமத்திலிருக்கிறவனுக்கு மரணம் சிரேஷ்டமானது. (தன்
“தருமத்தை யனுஷ்டித்துக்கொண்டேயிருந்து மரணமடைகிற
“வன் உத்தமமான கெதியையடைவானென்பது கருத்து.)
“பிறருடைய தருமமானது, (பிறருடைய தருமத்தை யனுஷ்டி
“த்தாலது) பயத்தை (நரகம்முதலியபயத்தை) யுண்டாக்கும்.”

ஷை அத்-௧௮-சு-௪௭-ல், †“தன்னுடைய தருமமானது
“குணமற்றதென்று காணப்பட்டபோதிலும் கிரமமாயனுஷ்டிக்
“கப்படும் பிறருடைய தருமத்தைக்காட்டிலும் சிரேஷ்டமாகும்.
“(தன் தன் வருணத்திற்கு) சுவபாவமான கருமத்தைச்செய்கிற
“வன் பாபத்தையடையமாட்டான்.”

ஷை அத்-௧௮-சு-௪௫-ல், ‡“அந்தந்த வர்ணத்தாரு
“க்கு விதிக்கப்பட்டிருக்கிற கருமத்திற் சிரத்தையுடைய மனி
“தன் ஞானயோக்கியதையை யடைகிறான். தன்னுடைய கரு
“மானுஷ்டானத்திலேயே இருப்பவன் எவ்விதமாய் க்ஞானயோ
“க்கியதையை யடைவானோ அதைச்சொல்லுகிறேன் கேள்.”

---

* श्रेयान् स्वधर्मोविगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

† श्रेयान् स्वधर्मोविगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥

‡ स्वेस्वे कर्मण्यभिरतस्संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतस्सिद्धिं यथाविन्दति तच्छृणु ॥

பத்துமபுராணம் பூமிகண்டம் அத்·௬௭·௬-௯0-ல், *"ஓ! "இராஜனே! எந்தமனிதன், தன் பிதாமுதலிய முன்னோர் "களாலனுஷ்டிக்கப்பட்டுவந்த ஆசாரத்தை யனுஷ்டிக்காமல் "விடுகிறானோ அந்த மனிதன் மஹாபாபியாகவும் எல்லாதரும "ங்களிலுமிருந்து வெளிப்பட்டவனாகவுமறியத்தக்கவன்"

பாகவதம் ஸ்கந்தம் ௯-அத்··௨அ-௬·௨-ல், †"தன் சக் "திக்கியன்ற வரையிற் தன்னுடைய சுவதருமத்தையனுஷ்டிக்க "வேண்டியது. அந்நியதருமத்திலிருந்து விலகவும் வேண்டி யது"

பிரும்மவைவர்த்த புராணம் (இந்தப் புராணத்தைத் தக்ஷி ணதேசத்தார் பிரும்மகைவர்த்தமென்று சொல்லுவார்கள்.) ஸ்ரீகிருஷ்ணஜன்மகண்டம், அத்-௫௬-௬ ௬அ-ல், ‡ "ஸகல "வகையாருக்கும் சுவதருமமானது சிரேஷ்டமான கீர்த்தியாயி "ருக்கிறது. சுவதருமத்தைவிட்ட மூடபுத்தியுள்ளவர்கள் நரக "த்தில் விழுகிறார்கள்."

இந்த வாக்கியங்களில் ஸ்வதருமம் ஸ்வகருமம், ஸ்வாசாரம் இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறதேயன்றி மதத் தைப்பற்றிச் சொல்லவில்லையே யென்றால், தருமம் கருமம் ஆசா ரம் முதலியன, மதத்திற்குள்ளடங்கினவைகளே என்றறியத்தக் கது. மேற்குறித்த கீதையின் கடைசி வாக்கியத்திற்கு ஸ்ரீமத் சங்கராசாரியார் செய்திருக்கிற பாஷியத்தில் "விஷத்திலுண் டான புழுவுக்கு விஷம் தோஷம் செய்யாததுபோல தம் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த தர்மம் தனக்கு தோஷம் செய்யாது" என்றுசொல்லியிருக்கிறார். ஆகையாற் தன்னுடைய சுவமதத்தையும் மதாசாரங்களையும் நிந்தித்து வேறுமதத்திற் பிரவேசிப்பவன் விவேகமுடையவனல்ல.

---

* पैत्राचारं परित्यज्य योवर्तेत नराधिप ।
महापापी सविज्ञेयस्सर्वधर्म बहिष्कृतः ॥

† स्वधर्माचरणं शक्त्या विधर्माच्च निवर्तनम् ॥

‡ सर्वेषामाश्रमाणां च स्वधर्मश्च यशःपरम् ।
स्वधर्महीना नरके पतन्ति मूढचेतसः ॥

37. மயூரநாதன்:—ஓ! சுவாமி! ஒவ்வொரு மதத்தாரும் தம் மதமே சிரேஷ்டமானதென்றும், மோக்ஷமடைய ஸாதனத்தைத் தம்மத சித்தாந்தமே சரியாய்ச் சொல்லுகிறதென்றும் பிறமதம் அவ்வளவு சிரேஷ்டமானதும் நற்கெதியடைய யோக்கியமானதுமல்லவென்றும் தூஷிக்கிறார்களே, இதற்காதாரமென்ன? இந்தமதத்தார்களுக்குள் எந்த மதத்தாரிலாவது ஒருவன் மோக்ஷத்திற்குப்போய், ஒரூருக்குப்போனவன் திரும்பி வருவதுபோற் திரும்பிவந்து "மோக்ஷசுவரூபமிப்படிப்பட்டது, அந்த மோக்ஷஸ்தானத்திலிருக்கிற பகவான், சிவன் அல்லது விஷ்ணு அல்லது பிரும்மா அல்லது வேறே எவ்விதமான சுவரூபமாயாவதிருக்கிறது" என்று சொன்னதுண்டோ? அப்படிப்பட்டப்பிரத்தியக்ஷஸாக்ஷியமிருக்குமானால் அதை நாம் நம்பவேண்டியதல்லவா?

38. விசுவம்பரபட்:—ஓ! குழந்தாய்! புனர்ஜநநமற்றதெதுவோ அதுதான் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. மோக்ஷத்தையடைந்த ஒருவன் திரும்பிவந்தானென்றால், அவன் மோக்ஷமடைந்தவனல்ல. எவனேனும் மோக்ஷத்திற்குப்போய்த்திரும்பி வந்தேனென்பானாகில் அது "வண்டுக்குஞ்சு ஹிமவத்பருவதத்தை விழுங்கிவிட்டு ஆகாசத்திற் பறந்துபோயிற்று" என்று சொல்வது எவ்வளவு நிஜமோ அவ்வளவு நிஜமும் அசாத்தியமுமென்று நிச்சயித்துக்கொள். ஒரு மதத்தாரும் இப்படிப்பட்ட கற்பனைகளைச் செய்ததாகக் காணவில்லை. ஆனால் என்ன ஆதாரத்தைக் கொண்டு தங்கள் மதம் சிரேஷ்டமென்று சொல்லுகிறார்களென்றால், தாங்கள் நம்பியிருக்கிற வேதம் முதலியப் பிரமாணவாக்கியங்களைக் கொண்டேதான். ஆனால், மற்றமத சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிற சாதனங்கள் ஏன் பிரயோஜனத்தைக்கொடுக்காதென்றாலோ அதற்குச் சரியான உத்தரம் சொல்லாமலே கோபங்கொண்டு தூஷிப்பார்கள். ஆரியமதத்தின் உட்பிரிவு மதத்தாரும் சுருதிமுதலியப் பிரமாணங்களிற் தங்களுக்கனுகூலமான பாகங்களைப் பிரமாணமாகக்கொண்டு விரோதமாயிருக்கிற பாகங்களைத் தாமஸமென்று நீக்கிவிடுவார்கள். அல்லது விரோதங்களாய்க் காணப்படுகிற பாகங்களுக்கு வேறுவிதமான அர்த்தங்களைச்செய்து தங்கள் சித்தாந்தத்தையே யாதரிக்கிறதாய்ச் சொல்லுவார்கள்.

39. மயூரநாதன்:—ஓ! பகவானே! தாங்களிதுவரையிற்சொல்லிவந்த நம்முன்னோர்களான ஆரியர்களுடைய சுவபாவம், இக்காலத்திய ஆரியர்களுடைய சுவபாவம், பலமதங்களுண்டானதற்குக்காரணம், ஒரு மதத்தார் மற்றொருமதத்தாரோடு விரோதிக்கிறதற்கும் ஒருவரை யொருவர் நிந்திக்கிறதற்கும் காரணம் இவைமுதலிய அனேக விஷயங்களைத் தங்களாற் கேட்டு எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. இன்னும் பலவிஷயங்கள் கேட்டறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். மேலாக, ஆரியமதமானது மற்ற மதங்களோடு விரோதிக்கிறதில்லையென்று சொன்னீர்களல்லவா, ஆனால் அனேகர் அப்படி நினைக்கவில்லை. விரோதமில்லையென்பதை நானறிந்து கொள்ளும்படி சொல்லக் கோருகிறேன்.

40. விசுவம்பரபட்:— ஓ! புத்திமானே! ஆரியமதமானது எப்படிப்பட்ட மதத்தையும் தனக்குள்ளாகவே அடக்கிக்கொள்ளும். எந்த மதத்தில் என்னென்ன விசேஷங்களைக்காணலாமோ அவைகளெல்லாமாரியமதத்திற்காணலாம். எப்படியெனில் "நன்மை செய், தீமை மற, பிராணிகளுக்குத்துன்பம் செய்யாதே, ஒருவரையும் துவேஷிக்காதே, ஸத்தியம் தவறாதே, பாபகாரியங்களைச்செய்யாதே, பிறர் பொருளை விரும்பாதே, நன்றி மறவாதே,பெற்றோர் பெரியோர் ஆசாரியன் இவர்களுக்கு வணங்கு, தெய்வபக்தியுள்ளவனாயிரு, புண்ணிய காரியங்களைச்செய்து ஏழைகளை ரக்ஷி என்பது முதலிய நீதி வாக்கியங்கள் ஒவ்வொரு மதசாஸ்திரங்களிலும் கணக்கற்றனவாயிருக்கின்றன. இந்த நீதிகள் ஆரியமதத்திலும் நிறைந்திருக்கின்றன. இவைகள் ஸாமாந்நியதரும்மமென்று சொல்லப்படும். ஒவ்வொரு மதங்களிலும் சில விசேஷ தருமங்களுமுண்டு. ஆரியமதத்தில் யக்ஞம் முதலிய கருமங்கள் தபஸ்ஸு யோகம் முதலிய சில விசேஷ தருமங்களிருக்கின்றனபோல் இதரமதங்களிலும் சிற்சில விசேஷதருமங்களிருக்கின்றன. இதனால் ஆரியமதத்திற்கு விரோதமாய் மற்றமதங்களில்லாததினால் துவேஷத்திற்கு ஹேதுவேயில்லை. நன்றாய்ப்பரிசோதித்தறியாத குறைவினால் ஒரு மதத்தாரை மற்றொரு மதத்தார் நிந்திக்கிறார்களேயன்றி ஸமபுத்தியுடன் நன்றாய்ப் பரிசோதித்தறிந்த விவேகிகளுக்கு தோஷபுத்தியுண்டாகவேமாட்டாது. ஆகையால், ஓ! சுகுணமுள்ளவனே!

இவ்வுலகத்திற் தெய்வமொன்றுண்டென்று நம்பி எவ்விதமான மார்க்கமாயாவது பகவதுபாஸனை செய்கிறவர்கள் யாரோ அவர்களெல்லோரும் ஆரியர்களென்றே நான் நிச்சயித்துக்கொண்டிருக்கிறேன். நாஸ்திகனுகவிருந்து நற்கெதியடைவானென்பது ஒருபோதுமில்லையென்றறி. இனியுனக்கெதைக்கேட்க விருப்பமிருக்கிறதோ அதைக் கேட்கலாம்.

முதலாவதுபிரகரணம்

முற்றிற்று.

---

# ஆரியமத சித்தாந்த ஸங்கிரகம்.

## இரண்டாவது பிரகரணம்.

1. மயூரநாதன்.— ஓ! சுவாமி! நான் நற்கெதியடைவதற்கு மதசுவரூபங்களை நன்றாயறிந்துகொள்ள விச்சிக்கிறேன். மதவிஷயமான க்ஞானம் எனக்கு விசேஷமாயில்லாததினாலந்த க்ஞானம் எனககுண்டாகும்படி யனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறேன்.

2. விசுவம்பரபட்:— ஓ! குழந்தாய்! நீ கேட்ட விஷயங்களை நன்றாய் விளக்கிக்காட்டத் தக்க பழமையான ஒரு இதிஹாஸத்தைச் சொல்லுகிறேன் கேள். அதனால் ஆரியமதவிஷயமான ஸகல சங்கதிகளையுமறியக்கூடும். அதாவது:—

அவந்தி தேசத்தில் ஆங்கிரஸ் என்கிற பெயரையுடைய ஒரு அரசனிருந்தான். அவனுக்கு ஜயவிரதனென்கிற பெயருள்ள பிராம்மணன் பிரதானமந்திரியாயிருந்தான். அந்த ஜயவிரதனுடைய அம்மானுகிய சுசர்ம்மா என்பவர் தன் குடும்பத்தாரைவிட்டு தேசாந்தரம் போனவர் வெகுகாலம் வராமலிருந்து அத்தேசத்திற்குச் சமீபமான பிரும்மபுரீ என்கிற நகரத்தைச்சார்ந்த ஒருவனத்தில் வந்திருக்கிறதாக ஜயவிருதனுடைய தாயார்

அறிந்து ஜயவிரதனை நோக்கி என் மூத்த ஸகோதரனான ஸுசர்ம்மா பிரும்மபுரிக்கடுத்த காட்டில் வஸிக்கிறதாக நான் கேழ்விப்படுவதினாலே என்னிடத்திலும் உன்னிடத்திலும் பக்ஷமுள்ளவரும் மிகவும் நற்குணமுடையவருமான ஸுசர்ம்மாவை நீ அழைத்துவந்து நம்முடன் வாழும்படி செய்யவேண்டுமென்றாள்.

3. ஜயவிரதன் தாயின் கோரிக்கைக்கிணங்கி அரசனிடம் விடைபெற்று பிரும்மபுரிக்குச் சென்று விசாரிக்கையில் அந்நகரத்திற்கடுத்த ஒரு வனத்தில் ஒருவர் வஸித்துவருகிறதாக அறிந்துகொண்டு அவ்வனத்திற்குச் சென்று அவ்விடத்தில் நிஷ்டை செய்துகொண்டிருந்தஅவரைப்பார்த்து ஜயவிரதன் ஸாஷ்டாங்க நமஸ்காரம்செய்து வணக்கத்துடன் சொன்னதாவது:-நான் இத்தேசத்தரசனுக்குப் பிரதான மந்திரி ஜயவிரதனென்று என்னை யழைப்பார்கள். தங்களுடைய விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு இவ்விடம் வந்தேன். தங்களுடைய நாமதேயமும் பிதாவினுடைய நாமதேயமும் தெரிந்து கொள்ள விச்சிக்கிறேன்.

4 ஸுசர்ம்மா:—நான் ஸுசர்ம்மாவென்று என் பிதாவினாலழைக்கப்பட்டேன். அப்படியே மற்றவர்களும் சொல்லுவார்கள். என் பிதாவை விசுவசர்ம்மாவென்று சொல்லுவார்கள்.

5. ஜயவிரதன்:—ஓ! சுவாமி! நான் தங்கள் ஸகோதரீ ஸுமதியென்பவளுடைய மூத்த குமாரன். தாங்கள் எனக்கு அம்மான். தங்களைப்பார்க்க என்தாயாரும் தங்களுடைய குடும்பத்தாரும் மிகவும் ஆவல்கொண்டு தங்களை யழைத்து வரும்படி என்னை அனுப்பினார்கள். தங்களுடைய தாய் தகப்பன் மனைவி ஸகோதரிகள் எல்லோரும் நானும் என் சகோதரர்கள் முதலியவர்களும் தங்களுடைய வரவை ஸந்தோஷத்துடன் எதிர் பார்க்கிறோம். ஆகையால், தாங்கள் என்னுடன் என்கிரகத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

6. ஸுசர்ம்மா.—ஓ! ஜயவிரதா! நான் குடும்பத்தைவிட்டு வெகுகாலமாய்க் காடு முதலிய விடங்களிற் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன். எனக்குக் குடும்பத்தாரிடத்திலாவது மற்ற பந்துக்களிடத்திலாவது சேர்ந்திருக்க இச்சையில்லை.

7. ஜயவிரதன்.— ஓ! மாமா! நீர் குடும்பத்தோடிருந்த காலத்தில் உம்முடைய குடும்பம் மிகுந்த ஹீநஸ்திதியிலிருந்ததனாற்

குடும்பத்தை இரக்ஷிப்பதுமக்குப் பெரும்பாரமாயிருந்தது. அதனால் நீர் குடும்பத்தைவிட்டு ஆண்டிபோல வெளியிற் சஞ்சரித்தீர். இக்காலத்திலோ உம்முடைய குடும்பத்தாரும் என் குடும்பத்தாரும் மகா செல்வமுடையவர்களாய் போகங்களை அநுபவிக்கிறார்கள். தாங்களிப்போதில்லாமலிருக்கிறதுதான் எங்களுக்குண்டான குறைவேயன்றி வேறுவிதத்தில் யாதொரு குறைவுமில்லை. ஆகையால் தாங்கள் என்னுடன் வரவேண்டும்.

8. ஸுசர்ம்மா.— ஓ! ஜயவிரதா! போகபாக்கியங்கள் ஐசுவரியங்கள் இவைகளிலெனக்கு விருப்பமில்லை. நானிப்போதிருக்கிற ஸ்திதியிலேயே யிருக்கத்திருப்தியுள்ளவனாயிருக்கிறேன்.

9. ஜயவிரதன்.— ஓ! மாமா! நீர் குடும்பத்தைவிட்டு ஏகாங்கியாய் வெகுகாலம் காடு முதலிய விடங்களில் ஸஞ்சரித்து வந்ததனால் இப்போதிய நிலைமையுமக்குப் பிரியமாயிருக்கிறது. போதுமான திரவியமில்லாமற் பெரியகுடும்பத்தை வகிப்பதாலுண்டாகும் துன்பத்தைவிட, காட்டில் வஸிப்பது சிரேஷ்டமானதென்று நீர் எண்ணுவதாய்க் காணுகிறது. ஆனாலிப்போது அப்படிப்பட்ட கவலைக்கிடமில்லை. நம்ம குடும்பத்தாரெல்லோரும் மகாசுகத்தையனுபவிக்கிறார்கள். நீர் வருவீரானால் நான் அனுபவிக்கிற சுகம் முழுவதையும் நீர் அனுபவிக்கும்படி செய்கிறேன். இது ஸத்தியமான வார்த்தை யென்று நீர் நம்பவேண்டியது. நீர் வெகுகாலமாய்க் கஷ்டத்தையே அனுபவித்துவருகிறதினால் நீர் குடும்பத்தாருடன் சேர்ந்தனுபவிக்கும் சுகத்தை யறியவில்லை. ஆகையால், நீர் இப்போது என்னுடன் வருவீரானால் எனக்குள்ள போகபோக்கியங்களை யனுபவித்துக்கொண்டு கவலையன்றியிற் சுகமாயிருக்கலாம்.

10. ஸுசர்ம்மா:— ஓ! குழந்தாய்! என்னிடத்திலதிக அன்புடையவனாய் உனக்குள்ள ஸகல சுகத்தையும் எனக்குண்டுபண்ணுவதாகச் சொன்னாய். இப்படிப்பட்ட உன்னுடைய நற்குணத்திற்காக நான் ஸந்தோஷப்படுகிறேன். என்னுடைய பிரிதலைக்குறித்து நீயும் மற்றவர்களும் துயரப்படுகிறீர்களென்பது வாஸ்தவந்தான். உலக ஸம்பந்தமாய் மாத்திரம் பார்ப்போமானால் அது நியாயமாகவே யிருக்கிறது. ஆனால் உலகம் முழுவதும் துக்க ஸ்வரூபமென்றும், குடும்பம் காராகிரஹமென்றும், ஸம்ஸாரம் நரகமென்றும் இவைகளில் அற்பமேனும் ஸுகமில்

லேயென்றும் வெகுகாலத்திற்கு முந்தியே எனக்கு நிச்சயமுண்டாயதனாற் குடும்பத்தை விட்டு வெளிப்பட்டேனேயன்றி தரித்திரத்தினாலும் குடும்பத்தை வகிப்பதினாலுண்டாகும் துன்பத்தினாலும் வெளிப்பட்டவனல்ல.

11. ஜயவிரதன்:— ஓ! மாமா! நான் எவ்வளவு சொல்லியும் அதும்முடைய புத்தியிலிறங்கவில்லை. அதும்முடைய துர்பாக்கியமென்றே நினைக்கிறேன். சுவற்பகாலமாவது நீர் உலக சுகத்தை யென்னுடன் வந்தனுபவிப்பீரானால் அப்போது அந்த சுகமுமக்கு சிரேஷ்டமாயும் பிரியமாயும் தோற்றும். வெகுகாலமாயிந்தக்காட்டில் வஸித்து வருவதினாலிதுமக்கு சுகமாய்த் தோற்றுகிறது. ஆனாலிது வாஸ்தவமாய் சுகமல்ல.

12. ஜயவிரதனுடைய இந்த வாக்கியங்களைக் கேட்ட ஸுசர்ம்மா, இவ்வுலக சுகமே சிரேஷ்டமான சுகமென்றும் இதைவிட உத்தமமான சுகம் வேறொன்றிருக்கிறதாகவுமிவனறியவில்லையென்றும் நிச்சயித்துக்கொண்டு இவனுடைய அக்ஞானத்தைக்குறிப்பிட்டுச் சொல்லவுத்தேசித்துப்புன்சிரிப்புடன் சொல்லுகிறார்.

13. ஸுசர்ம்மா:— ஓ! குழந்தாய்! நீயேதோ சுகமனுபவிக்கிறதாகவும் அந்த சுக சுவரூபமிப்படிப்பட்டதென்று நானறிந்துகொள்ள சக்தியில்லாதவனாயிருக்கிறதாகவும் அபிப்பிராயப்பட்டாயல்லவா? ஆகையால், நீ அனுபவிக்கிறதாகச் சொல்லும் சுகமெப்படிப்பட்டதென்பதையும் அது வாஸ்தவமான சுகமென்பதையும் நீ, எனக்கு நிரூபித்துக்காட்டுவாயானாலந்த சுகத்தையனுபவிக்க நானுமிணங்கி வருகிறேன்.

14. ஜயவிரதன்:— ஓ! மாமா! இப்போதுதான் உமக்கு நற்புத்தியுண்டாகிறதுபோல் நினைக்கிறேன். எப்படிப்பட்ட சுகத்தை நீரும் அனுபவிக்கும்படி நான் சொன்னேனோ, அப்படிப்பட்டதாகிய நானநுபவிக்கும் சுகங்களைச் சொல்லுகிறேன் கேளும்.

நான் இப்பெரிய ராஜ்ஜியத்திற்குப் பிரதான மந்திரியாயிருக்கிறேனென்று சொன்னதினாலேயே நானனுபவிக்கும் சுகமிப்படிப்பட்டதென்று நீரே அறிந்துகொள்ளலாம். ஆனாலுமக்கு அச்சுகாநுபவமிப்படிப் பட்டதென்று தெரியாததினாலவைகளிற் சிலதைமட்டும் சொல்லுகிறேன்.

15. இத்தேசத்திய அரசனுக்கு நான் மந்திரியாயிருந்தாலும் அரசனென்னுடைய அநுமதியன்றியில் யாதொருகாரியத்தையும் செய்கிறதில்லையாகையாலும் என்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் அரசன் நடக்கிறதில்லையாகையாலும் அரசனே நானென்று எல்லோரும் நம்பியிருக்கிறார்கள். இராஜாங்கத்தின் ஸகலவதிகாரங்களையும் நானே செலுத்துகிறேன். இதனால் இராஜபோகம் முதலானசுகமென்னுடையதென்றே அறியவேண்டியது. இது மாத்திரமல்ல. எனக்குச் சொந்தமாகவே கணக்கற்ற திருவ்வியங்களிருக்கின்றன. திருவ்வியத்தினாலடையக்கூடாத ஸுகமொன்றுமில்லை. ஸகல சுகத்திற்கும் திருவ்வியமே இருப்பிடமல்லவா ? திருவ்வியத்தினாலடையக்கூடாதசுகமொன்றிருக்கிறதாக எப்படிப்பட்டவனும் நினைக்கமாட்டான்.

நானும் என் குடும்பத்தாரும் புஜிக்கிற ஆஹாராதிவஸ்துக்கள் விலையுயர்ந்ததாயும் விசேஷ ருசிகரமாயும் மனதிற்கின்பந்தரத்தக்கதாயும் மற்ற ஸாதாரண ஜனங்களுக்குக் கிடைக்கக்கூடாத அபூர்வமான வஸ்துக்களாயுமிருக்கின்றன. இப்படிப்பட்டதாகிய சிரேஷ்டமான போஜநத்தைவிட மேலான சுகமென்னவிருக்கிறது ? நான் படுக்கும்சயனமோ ஹம்ஸதூலிகாதல்பம். இது, புஷ்பங்கள்முதலிய வாஸனைத்திருவ்வியங்களினால் நன்றாயலங்கரிக்கப்பட்டிருக்கும். தாஸர்கள், தாஸிகள், ஸ்துத்தியம் செய்கிறவர்களெப்போதுமென்னிடத்திற்காத்திருந்து எனக்குப்பலவித உபசாரங்களையும் ஸ்தோத்திரங்களையும் செய்துகொண்டிருப்பார்கள். நான் சயநித்துக்கொண்டபொழுது, காற்றுப்போடுவது கால் கை முதலிய அவயவங்களைப் பிடிப்பது குத்துவது முதலிய உபசாரங்களை தாஸதாஸிகள் செய்வார்கள். எனக்கிஷ்டமானகாலத்தில் நானநுபவிக்கும்பொருட்டு அப்ஸரஸ்ஸுகள்போலொற்ற ஸ்திரீரத்தினங்களென்னுடைய சயநத்திற்குவந்தெனக்கு சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பார்கள். நானும் என் குடும்பத்தாரும் பால் நெய் சர்க்கரை கற்கண்டு முதலிய வஸ்துக்கள் சேர்த்துச் செய்யப்பட்ட உயர்ந்த பக்ஷியங்களையும் உயர்ந்த பழவர்க்கங்களையும் திநந்தோரும் புஜித்துவருகிறோம். இதுமாத்திரமல்ல, நானும் என்னைச்சார்ந்த எல்லோரும் விலையுயர்ந்ததும் விசித்திரமானதுமான ஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலியவைகளை யணிந்து

கொண்டும் வாஸனை திருவ்வியங்கள் கூட்டப்பட்ட சந்தனம் புஷ்பங்களாலலங்காரம் செய்யப்படுவோம். சிரேஷ்டமானதும் விலையுயர்ந்ததுமான இரதம் குதிரை யானை முதலிய வாஹநங்களில் ஸவாரிசெய்துகொண்டு வீதிகளிற் செல்லுவோம். என்னைக்கண்ட ஸகல ஜநங்களுமென்னை வணங்குவார்கள். அரசனுங்கூட எனக்கு மரியாதைசெய்வார். பின்னுமிப்படிப்பட்ட அநேகசுகங்களையநுபவிக்கிறேன். தாங்களென்னுடன் வந்தால் அநேகசுகங்களைத் தாங்களுமனுபவிக்கலாம்.

16. ஸுசர்ம்மா:— ஓ! ஜயவிரதா! நீ, எதெதை சுகமென்றெண்ணியிருக்கிறாயோ அவைகளெல்லாம் வாஸ்தவமான சுகமல்ல. நீயநுபவிக்கிறதாகச் சொல்லுகிற சுகங்கள் அற்பமானவைகளாயும் அதிசீக்கிரத்திலழியத்தக்கவைகளாயும் துக்கத்தோடு கலந்தனவாயும் க்ஷணகாலத்தில் மாறத்தக்கவையாயும் பலவகைப்பட்டனவாயுமிருக்கிறதனாலவைகள் சுகமாகமாட்டா. சுகமென்பது, அழிவற்றதாயும் மாறுதலற்றதாயும் துக்கக்கலப்பற்றதாயும் ஒரே வகையானதாயுமிருக்கிறதுதானென்றறி. ஞானேந்திரிய கருமேந்திரியங்கள் மூலமாயிந்த தேகத்தினாலநுபவிக்கிற சுகமானது சுகமல்லவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. விவேகியான எவனும், இத்தேகத்தினாலநுபவிக்கிற விஷய சுகங்களை சுகமென்றெண்ணான். ஏனென்றால், தேகமே சுகமல்ல, துக்கசுவரூபமானது, அழியத்தக்கது, நிலையற்றது, நீர்க்குமிழிபோல் க்ஷணகாலத்தில் மாறத்தக்கது இப்படிப்பட்ட தேகத்தினாலநுபவிக்கும் ஸுகங்களெதெதுண்டோ அவைகளும் துக்கசுவரூபமாயும் நிலையற்றதாயுமிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. இத்தேகத்தின் சுபாவத்தையும் அதின் சுவரூபத்தையும் நீ, அறிந்தாயாகில் தேகத்தினாலநுபவிக்கிறது சுகமல்லவென்று தானாக விளங்கும். தேகமெப்படிப்பட்டதென்பதைக் குறித்து சாஸ்திரங்கள் என்னசொல்லுகின்றன வென்றால்—

17. பிருஹத்திரதனென்னுமரசன் வைராக்கியமடைந்து இராஜ்ஜியத்தைவிட்டுக் காட்டிற்குச்சென்று சிரேஷ்டமான தபஸ்ஸைச் செய்துகொண்டிருக்கையில் அவ்விடத்திற்குவந்த சாகாயந்நியமுநிவரைக்கண்டு வணங்கி ஆத்துமதத்துவத்தைத் தனக்குபதேசிக்கவேண்டுமென்று கேட்டபொழுது சாகாயந்நி

யர், "ஆத்துமதத்துவத்தையறிவது மிகவும் கஷ்டமானது. வேறுகாமங்களை விரும்புவாயானால் வேண்டியவரங்களைக்கேள்" என்று சொன்னமுநிவருடைய வார்த்தையைக்கேட்டு பிருஹத்திரதனென்கிற அரசன் சொல்லுகிறான். அது வருமாறு:—

மைத்திராயண்ணியுபநிஷத்-முதலாவதுப் பிரபாடகத்தில் * "(பிருஹத்திரதனென்கிற அரசன் சாகாயந்நியரைப்பார்த் "துச்சொல்வது) ஓ! பகவானே! எலும்பு, தோல், நரம்பு, கொழு "ப்பு, தசை, சுக்கிலம், சோணிதம், சிலேஷ்மம், கண்ணீர், "மலம் மூத்திரம், வாதபித்தகபமிவைகளுடைய கூட்டமாயிருக் "கிறவும் துர்கந்தமுள்ளவும் ஸாரமற்றவுமான இந்தச் சரீரத் "திற் காமபோகத்தினலென்னப்பிரயோஜநம்? காமக்குரோத "லோப, மோக பயதுக்க, ஈர்ஷை, இஷ்டவஸ்து நஷ்டம், "அநிஷ்டப்பிராப்தி, பசி, தாகம், கிழத்தனம், மரணம், வியாதி, "தேகபீடை முதலியவைகளினலடிபட்டதாயிருக்கிற இச் "சரீரத்திற் காமாநுபோகங்களினலென்னப்பிரயோஜநம்? பின் "னும் ஈ, கொசு முதலியவைகளும் புல் விருக்ஷமிவைகளுமெப் "படியுற்பத்தியாய் நசிக்கின்றனவோ அப்படிப்போலவே, பிர "கிருதி தத்துவங்களுடைய கூட்டமாகிய இந்தச் சரீரமானது "நசித்துப்போகிறதென்று நிச்சயித்திருக்கிறோம். இவைகளை "விட சிரேஷ்டமானவர்களாயும் வில்லாளிகளாயும் சக்கிர "வர்த்திகளாயுமிருந்த ஸுத்தியும்நன், பூரித்தியும்நன், இந்திர "த்தியும்நன், குவலயாசுவன், யௌவநாசுவன், வத்திரியாசுவன், "அசுவபதி, சசபிந்து, ஹரிச்சந்திரன், அம்பரீஷன், நநக்த்தன், "சர்யாதி, யயாதி, அநரண்ணியன், உக்ஷஸேநன் முதலானவர்க

---

* भगवन्नस्थि चर्मस्नायुमज्जा मांसशुक्रशोणितश्लेष्मा श्रुदूषिका विण्मूत्रपित्तकफसंघाते दुर्गन्धे निस्सारेऽस्मिन् शरीरे किं कामोपभोगैः । कामक्रोधलोभमोहभय विषादेर्ष्येष्टवियोगा निष्टसंप्रयोग क्षुत्पिपासा जरामृत्युरोगशोकाद्यैराभिभूतेऽस्मिन् शरीरे किं कामोपभोगैः ॥ ३ ॥ सर्वं चेदं क्षयिष्णुपश्यामोयथेमे, दंशमशकादयस्तृणवनस्पतयोद्भूत प्रध्वंसिनः—अथ किमेतैर्वापरेऽन्ये महाधनुर्धराश्च चक्रवर्तिनः केचित्सुद्युम्नभूरिद्युम्नेन्द्रद्युम्न कुवलयाश्व यौव्वनाश्व वद्ध्र्याश्वाश्वपतिश्शशाबिंदुर्हारिश्चन्द्रो अम्बरीषननक्त

"ளும், பின்னும் இராஜாக்களாயிருந்த மருத்தன், பரதன் முத
"லானவர்களும் பந்துவர்க்கங்கள் பார்த்துக்கொண்டிருக்கையில்
"மஹா ஐசுவர்யத்தைத் தள்ளிவிட்டு இவ்வுலகத்திலிருந்து பர
"லோகத்திற்குச் சென்றார்கள். பின்னுமிவர்களைவிட சிரேஷ்
"டர்களாயிருந்த அந்நியர்களான கந்தர்வர்கள், அஸுரர்கள்,
"யக்ஷராக்ஷஸர்கள், பூதகணங்கள், பிசாசுகள், ஸர்ப்பங்கள்,
"கிரகங்கள் முதலானவர்களும் நசித்துப்போனதைப் பார்த்
"திருக்கிறோம். பின்னுமிவர்களைவிட வேறான மஹாஸமுத்
"திரம் வற்றிப்போகிறது. மலைகள் விழுகின்றன. துருவன்
"ஸ்தாநத்தைவிட்டு நழுவிப்போகிறான். வாயுவாகிற கயிறுகள்
"அறுந்துபோகின்றன. பூமி முழுகிப்போகிறது. தேவதைகள்
"ஸ்தாநம் விட்டோடிப்போகிறார்கள். இந்த லோகங்களெவர்
"களாலே பூர்ணமாயாசிரயிக்கப் பட்டிருக்கிறதோ, (அநுப
"விக்கப்பட்டிருக்கின்றனவோ) அவர்கள் அடிக்கடி இந்த
"லோகத்திற்குத் திரும்பிவருதலைப் பார்க்கிறோம். இப்படிப்
"பட்டதாயிருக்கிற காமபோகங்களினாலென்னப்பிரயோஜநம்?
"பாழும் கிணற்றிலிருக்கிற தவளையைப்போல் நானிந்த ஸம்
"ஸாரத்திலிருக்கிறேன். கரையேற்றிவைக்கிறதற்கு நீர் அர்
"ஹராயிருக்கிறீர். ஓ! பகவானே! எனக்கு நீர்தான்கெதி,
"நீர்தான்கெதி."

இந்த உபநிஷத் வாக்கியங்களைப்போலொற்ற வாக்கியங்களை மைத்திரேயோபநிஷத்-க-ங-லும் காணலாம்.

---

स्सर्याति ययात्यनरण्योक्षसेनादयः मरुत्तभरतप्रभृतयो राजानः मिषतोबंधुवर्गस्य महतीं श्रियन्त्यक्त्वाऽस्माल्लोकादमुं लोकं प्रयाता इति । अथ किमेतैर्वापरेऽन्ये गन्धर्वासुरयक्षराक्षसभूतगणपिशाचोरग ग्रहादीनां निरोधनं पश्यामः । अथ किमेतैर्वा अन्यानां शोषणं महार्णवानां शिखरिणां प्रपतनं ध्रुवस्य प्रचलनं व्रश्चनं वातरज्जूनां निमज्जनं पृथिव्यास्स्थानादपसरणं सुराणामित्येत द्विधेऽस्मिन् संसारे किं कामोपभोगैः । यैरेवाश्रितस्या सकृदिहावर्तनं दृश्यत इत्युद्धर्तुमर्हसि अन्धोदपानस्थोभेक इवाहमस्मिन् संसारे भगवन् त्वं नोगतिरिति त्वं नोगतिरिति ॥ ४ ॥

மைத்திரேயோபநிஷத்-2-2-ல் * "இத்தேகமானது பிறப்
"பிறப்புடையது. தாய் தந்தையினுடைய மலசுவரூபமானது.
"சுகதுக்கத்திற்கிருப்பிடமானது. அசுத்தமானது இதைத்
"தொட்டால் ஸ்நாநம் விதிக்கப்பட்டிருக்கிறது. (வாத பித்த
"சிலேஷ்மம் முதலிய) தாதுக்களாற் கட்டப்பட்டது. மகா
"வியாதியுடையது. பாபத்திற்கிருப்பிடமானது. நிலையற்றது.
"விகாரமான ஆகாரத்தையும் அளவையுமுடையது இதைத்
"தொட்டால் ஸ்நாநம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது துவா
"ரங்களிலுமெக்காலத்திலுஞ்சுவபாவமாய் மலக்கசிவுள்ளது,
"துர்கெந்தமுடையது. துர்மலங்களுடன்கூடியது இதைத்
"தொட்டால் ஸ்நாநம் விதிக்கப்பட்டிருக்கிறது. மாதா ஸூத
"கத்துடன் சம்பந்தப்பட்டது. ஸூதகத்தோடேயே பிறந்தது.
"மரணஸூதகத்தோடுண்டானது. இதைத்தொட்டால் ஸ்நா
"நம் விதிக்கப்பட்டிருக்கிறது.

நாரதபரிவிராஜகோபநிஷத்-அத்-3-ல் † "எலும்பாகிற தூணு
"யும் நரம்பினாற் கட்டப்பட்டதாயும் மாம்ஸம் இரக்தமி
"வைகளாற் பூசப்பட்டதாயும் தோலினால் மூடப்பட்டதாயும்
"துர்கெந்தமுள்ளதாயும் மல மூத்திரங்களால் நிறைந்ததாயும்
"கிழத்தனம் துன்பமிவைகளாற் சூழப்பட்டதாயும் உரோகத்
"திற்கிடமானதாயும் வியாதியுடையதாயும் அழியத்தக்கதாயும்
"அழுக்குள்ளதாயும் ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களுக்கிருப்
"பிடமாயுமிருக்கிற இச்சரீரத்தை(சரீரத்திலபிமானத்தை)விட்டு
"விடவேண்டியது. மாம்ஸம் இரத்தம் சீழ்மலமூத்திரம் நரம்பு

---

* जातं मृतमिदं देहं मातापितृमलात्मकम् । सुखदुःखा लयामेध्य स्पृष्ट्वा स्नानं विधीयते ॥ धातुबद्धं महारोगं पापमंदिर मध्रुवम् । विकाराकार विस्तीर्णं स्पृष्ट्वा स्नानं विधीयते ॥ नवद्वारमलस्रावं सदाकाले स्वभावजम् । दुर्गन्धं दुर्मलोपेतं स्पृष्ट्वा स्नानं विधीयते ॥ मातृसूतक संबद्धं सूतकेसह जायते । मृतसूतकजंदेहं स्पृष्ट्वा स्नानं विधीयते ॥

† अस्थिस्थूणं स्नायुबद्धं मांसशोणितलेपितम् । चर्मावबद्धं दुर्गन्धं पूर्णं मूत्रपुरीषयोः ॥ जराशोक समाविष्टं रोगायतन मातुरम् । रजस्वलमानित्यञ्च

"கொழுப்பு இவைகளுடைய கூட்டமாகிய தேகத்திற் பிரீதி "வைத்திருக்கிற மூடன் நரகத்திலும் பிரீதியுடையவனுயிருப் "பான்."

அத்தியாத்துமோபநிஷத்தில்-* "தேகமானது தாய் தந்தையி "னுடைய மலத்திலிருந்துண்டானது. மாம்ஸ ஸ்வரூபமாயுள் "ளது அதைச் சண்டாளனைப்போல தூரத்தள்ளி பிர்ம்மமாக "வாய் க்ஷேமத்தையடை."

மநுஸ்மிருதி-அத்-ப-ல் † "தூண்போன்ற எலும்பையும் கயி "றுபோன்ற நரம்பையுமுடையதாயும் மாம்ஸம் இரக்தமிவை "களாகிற பூச்சையுடையதாயும் தோலாகிற போர்வையையுடை "யதாயும் மலமூத்திரங்களால் நிறைந்ததாயும் துர்கந்தமுடை "யதாயும் கிழத்தனம் துக்கம் நோய் இவைகளுக்கிருப்பிடமா "யும் பசி, தாகம், குளிர், அனல் இவைகளாற் பயமடைகிறதா "யும் பெரும்பாலும் இரஜோகுணமுடையதாயும் பஞ்சபூதங்க "ளுக்கிருப்பிடமாயும் நிலையற்றதாயுமிருக்கிற இந்தச் சரீரமாகிற "வீட்டை இந்த ஆத்துமா மறுபடி யடையாமலிருக்கும்படிச் "செய்யவேண்டியது."

கர்க்கஸம்ஹிதைவிசுவஜித்கண்டம்-அத்-33-சு-11-ல் ‡"பஞ்ச "பூதங்களினுலுண்டானதாயும் நுரைக்கு ஸமானமானதாயும் "ஸஞ்சிதகருமம், ஸத்துவாதி குணங்கள் முதலியவைகளி

---

भूतावासमिमं त्यजेत् ॥ मांसासृक्पूय विण्मूत्र स्नायुमज्जास्थि संहते । देहे चेत्प्रीतिमान्मूढो भविता नरकेऽपि सः ॥

இந்த வாக்கியங்களை பவிஷ்யபுராணம்-க-கசு-சு-உ-ந-ல் காண்க.

* मातापित्रोर्मलोद्भूतं मलमांसमयं वपुः । त्यक्त्वा चण्डाळवद्दूरं ब्रह्मभूय कृतीभव ॥

† अस्थि स्थूणं स्नायुयुतं मांसशोणितलेपनम् । चर्मावबद्धं दुर्गन्धि पूर्णं मूत्रपुरीषयोः ॥ ७६ ॥ जराशोक समाविष्टं रोगायतन मातुरम् । रजस्वल मनित्यंच भूतावासमिमं त्यजेत् ॥ ७७ ॥

‡ इदं शरीरंभुविपाञ्चभौतिकं फेनोपमं कर्मगुणादि निर्मितम् । गताग-

,‘ஞலுண்டாக்கப்பட்டதாயும் பிறப்பிறப்புள்ளதாயும் காலத்
‘‘திற்குவசப்பட்டதாயுமிருக்கிற இந்த தேகத்தைக் குறித்
‘‘து, குழந்தைகளாற் செய்யப்பட்ட காரியத்தைக்குறித்துப்
“பெரியோர்கள் இவ்வுலகத்திற் துக்கமடையாததுபோல் வித்து
“வான்களெப்போதும் துக்கமடைகிறதில்லை.”

அத்தியாத்தும ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்-அத்-33-சு-14-ல்
* “தேகமானது ஆகாசம் முதலிய பஞ்சபூதஸ்வரூபமானது.
“ஜடமானது. தோல் மாம்ஸம் இரக்தம் எலும்பு இவைகளு
“டன் கூடியது. காலம் கருமம் குணம் இவைகளாலுண்டா
“னது.”

ஓ! ஜயவிரதா! நீ எந்ததேகத்தின் மூலமாய் சுகங்களையநுப விக்கிறதாகச் சொன்னையோ அந்ததேகத்தின் தன்மை இப்படிப் பட்டதென்று இந்த சுருதி முதலியப்பிரமாணங்கள் நன்றாய் விளக்குகின்றனவல்லவா. இதைக்கேட்டறிந்த எந்த விவேகி யாவது இந்ததேகத்திற் பிரீதியும் இதில் நம்பிக்கையும் வைப் பானே? இப்படிப்பட்ட அநித்தியமும் ஆபாஸமுமான இந்த தேகத்தினலநுபவிக்கும் விஷயஸுகங்களும் அநித்தியமும் ஆபாஸமுமுள்ளதென்பதில் ஸந்தேகமென்னவிருக்கிறது. மேலும் தேகத்தின் நிலமை இப்படிப்பட்டதென்பதை நம்முடைய அநுபவத்தினலேயே நிமிஷந்தோருமறிகிறோம். அதாவது, திநந்தோரும் அநேகதேகங்கள் கட்டைபோல் விழுந்துவிடுவதையும், கட்டைபோல் எரிக்கப்படுகிற அல்லது புதைக்கப்படுகிறதையுமறிகிறோம். இதைவிடவேறு பிரமாணம் விசாரிக்க அவசியமில்லை. தேகலக்ஷணத்தைக்குறித்துச் சொன்னேன். மற்றும், நீ சொன்ன திருவ்வியம் முதலிய வஸ்துக்களினல் ஸுகமுண்டாகுமென்று சொன்னையே அவைகளின் சுவரூபத்தையுஞ்சொல்லுகிறேன் கேள்.

18. திருவ்வியம் (பொருள்) ஆனது சுகத்திற்கிருப்பிடமானதென்றும், திருவ்வியமே ஸகலவித ஸுகத்திற்கும் காரணமென்றும் நீ சொன்னது அவிவேகமே. திருவ்வியமானது

---

तं कालवशं कदापि हि बुधानशोचन्ति यथार्भकैः कृतम् ॥

* पञ्चात्मकोजडोदेह स्त्वङ्मांसरुधिरास्थिमान् । कालकर्मगुणोत्पन्नः ॥

சுவயமாகவே சுகத்தைக்கொடுக்க யோக்கியமானதன்று. திருவ்வியத்தை நீ ஆஹாரஞ்செய்துன் பசியைத் தீர்த்துக்கொள்ளக்கூடுமா? அல்லது அதுவே உனக்கு ருசியையுண்டுசெய்யுமா? சந்தணம் புஷ்பம் மற்றுமுள்ளவஸ்திரம் முதலியவைகளாகத் திருவ்வியத்தையுபயோகிக்கக்கூடுமா? ஸ்திரீகளுக்குப்பதிலாய்த் திருவ்வியத்தையாலிங்கநஞ்செய்துகொண்டாற் காமவெறியடங்குமா? ஆகையாலிப்படிப்பட்ட யாதொரு விஷயங்களுக்கும் திருவ்வியமே நேராயுபயோகமாகிறதில்லை. திருவ்வியமோ ஜடவஸ்து. ஜடவஸ்துவில் சுகமிருக்கிறதென்றால், கல்லு முதலிய ஜடவஸ்துக்களும் ஸுகத்தைக்கொடுக்கவேண்டுமாகையால், திருவ்வியமே சுகமல்ல. அனலோ திருவ்வியமானது துக்க சுவரூபமாயும் எப்பொழுதும் துக்கத்தையே யுண்டாக்கத்தக்கதாயுமிருக்கிறது. இந்த அர்த்தத்தை சாஸ்திரங்களே சொல்லுகின்றன.

பவிஷ்யபுராணம் 4-4-ல்- * "அர்த்தம், ஸம்பாதிக்கிறதிலேயும் துக்கந்தான். ஸம்பாதித்ததை இரக்ஷிப்பதிலேயும் "துக்கந்தான். தீர்வைசெலுத்துவதிலேயும் செலவழிப்பதிலே "யும் துக்கந்தான். அர்த்தங்களினாற் சுகமேது? உயிர்வாழு "மிச்சையுள்ளவர்கள் யமனிடத்திற் பயப்படுவதுபோற் திருவ் "வியமுள்ளவனுக்குத்திருடர்களிடத்திலிருந்தும் ஜலத்தினிடத் "திலிருந்தும் அக்நியிடத்திலிருந்தும் சுவஜநங்களிடத்திலிருந் "தும் அரசனிடத்திலிருந்துமெப்போதும் பயமுண்டாகிறது. "ஆகாசத்திலெறியப்பட்ட மாம்ஸத்தை யெப்படிப் பக்ஷிகளும் "பூமியிலெறியப்பட்ட மாம்ஸத்தை யெப்படி நாய்முதலிய ஜந் "துக்களும் ஜலத்திற்போடப்பட்ட மாம்ஸத்தை யெப்படி மீன் "களும் புஜிக்கின்றனவோ அப்படி எல்லாவிடங்களிலும் (ஆகா "சம் பூமி பாதாளங்களிலிருந்தாலும்) திருவ்வியமுடையவன்

---

* अर्थस्योपार्जने दुःखमार्जितस्यापिरक्षणे । आयेदुःखं व्ययेदुःखमर्थेभ्यश्च कुतस्सुखम् ॥ १२१॥ चोरेभ्यस्सलिलादग्ने स्स्वजनात् पार्थिवादपि । भयमर्थवतां नित्यं मृत्योः प्राणभृतामिव ॥ १२२ ॥ खेयातं पक्षिभिर्मांसं भक्ष्यते श्वपदैर्भुवि । जलेच भक्ष्यतेमत्स्यै स्तथासर्वत्र वित्तवान् ॥ १२३ ॥

"புஜிக்கப்படுகிறான். (என்றால், எல்லாப்பிராணிகளாலும் "திருவ்வியமுடையவனுக்குப்பயமுண்டாகிறதென்பது தாத்பரி "யம்) செல்வங்களானவை மோகத்தையுண்டாக்குகின்றன. "(செல்வங்களுக்கு) விபத்து (கெடுதி) உண்டானாற் தாபத்தை "யுண்டாக்குகின்றன. (செல்வத்தை) ஸம்பாதிக்குங்காலத்தி "லோ துக்கமுண்டாகிறது. எப்பொழுதுதான் அர்த்தங்கள் "ஸுகத்தைக்கொடுக்கிறதாகவாகின்றன? பொருளுக்கெஜமா "னன் எப்படிப்பயமுடையவனுய்க் கலக்கமடைவானோ,அடிப்ப "யாதொருபொருளையும் விரும்பாதவன் பயமுடையவனுகக்கல "ங்கான். திருவ்வியத்திற்கெஜமானனுயிருக்கிறதினாற் துக்கி "யாயிருக்கிறான். எல்லாப்பொருள்களிலும் விருப்பமில்லாத "வன் சுகியாயிருக்கிறான்."

பாகவதம் ஸ்கந்தம்-11-அத்-23-ல் * "பொருளை ஸம் "பாதிப்பதிலும் ஸம்பாதித்ததை விருத்திசெய்வதிலும் இரக்ஷி "ப்பதிலும் செலவிடுவதிலும் நாசமடைவதிலும் அநுபவிப்பதி "லும் மனிதர்களுக்கு ஆயாஸ (வருத்த அல்லது துன்ப) மும் "பயமும் மனக்கலக்கமும் பிரமையுமுண்டாகின்றன. திருட்டு, "பரஹிம்ஸை, பொய், டம்பம், ஆசை, கோபம், கருவம், மதித் "திருத்தல், வஞ்சனை, பகை, விசுவாஸமின்மை இவைகளும், "பொறாமை (பரஸ்திரீயையிச்சித்தல்·சூதாட்டம் கள் சாராயம் "குடித்தல்இம்மூன்றுகளாலுண்டாகிற) துக்கங்கள் இப்பதி "னைந்தும் மனிதர்களுக்கு அநர்த்தங்கள். (கெடுதியையுண் "டாக்கத்தக்கவைகள்) இவைகளுக்கு அர்த்தமானது இருப் "பிடமாயிருக்கிறது. (பொருளானது) உடன்பிறந்தவர்கள், "மனைவிகள், தாய் தந்தையர்கள், தன்னிடத்திலன்புள்ளவர்

---

विमोहयन्ति संपत् सुतापयन्ति विपत्तिषु । खेदयन्त्यार्जनाकाले कदाह्यर्थास्सुखावहाः ॥ १२४ ॥ यथार्थपतिरुद्विग्नो यश्चसर्वार्थनिस्पृहः । यतश्चार्थपतिः दुःखी सुखीसर्वार्थ निस्पृहः ॥ १२५ ॥

* अर्थस्य साधनेसिद्ध उत्कर्षेरक्षणेऽव्यये । नाशोपभोग आयास स्त्रासश्चिन्ताभ्रमोनृणाम् ॥ १७ ॥ स्तेयंहिंसानृतन्दम्भः कामः क्रोधस्स्मयोमदः । भेदोवैरमविश्वासस्संस्पर्धाव्यसनानि च ॥ १८ ॥ एते पञ्चदशानर्थाह्यर्थमूला-

"கள் இவர்களுக்கு வேற்றுமையையுண்டாக்குகிறது. ஆகையா
"ல் சிரேயஸ்ஸை (நன்மையை) விரும்புகிறவன் அர்த்தத்தை
"அநர்த்தமாகவெண்ணி தூரத்தள்ளிவிடவேண்டியது."

19. இவ்வாக்கியங்களும் இலிங்கபுராணம் பூர்வபாகம் அத். 86. சு. 24. 25. இந்தவாக்கியங்களும் திருவ்வியமானது அநர்த்தத்தை யுண்டாக்கத்தக்கதென்று தெளிவாய்க் காண்பிவிக்கின்றன. இவ்வளவு அநர்த்தத்தையுண்டுபண்ணத்தக்கத் தன்மையுள்ள திருவ்வியத்தினாலடையப்படுகிற வஸ்துக்களும் அந்தவஸ்துக்களினாலுண்டாவதாகச்சொல்லும் ஸுகமும் அநர்த்தங்களாகவே யிருக்கவேண்டுமென்பது நிச்சயம். ஏனெனில், எந்த வஸ்துவிலிருந்து ஒருவஸ்து உண்டாயிற்றோ அந்தவஸ்து காரணசுவரூபமாகவே யிருக்கவேண்டுமென்பது சாஸ்திரத்தின் விதி. எப்படிப்போலெனில், தங்கத்திலிருந்துண்டான கடகம் தங்கசுவரூபமானது போற்றான். ஆகையால், நாசமடையத்தக்கதுந் துக்கத்தையுந் துன்பத்தையுமுண்டாக்கத்தக்கதுமான அர்த்தத்தினாலுண்டாகிற சுகமுந் துக்கமே என்றறி.

20. துக்கசுவரூபமான வஸ்துவிலிருந்துண்டாகிற வஸ்துக்களும் துக்கமாகவே எப்படியாகின்றனவென்பதைச் சொல்லுகிறேன் கேள். துக்கஸ்வரூபமான திருவ்வியத்தினாலடையப்பட்டதாகிய விலையுயர்ந்த பழவர்க்கங்கள் நெய் சர்க்கரை முதலியவைகளாற் செய்யப்பட்ட உயர்ந்தபணியாரங்கள் அதிருசியாயிருக்கிறதென்றும் சுகத்தையுண்டாக்குகிறதென்றும் நீசொன்னது வாஸ்தவத்தையாராய்ந்தறியாததினாற்றான். அப்படிப்பட்ட வஸ்துக்கள் உன்னுக்கில் ஸம்பந்தித்தபொழுது உருசியும் அதனாற் சுகமுந் தோற்றினாலும் அந்தவஸ்துக்கள் நாக்கைவிட்டு மேலாகவாவது கீழாகவாவது போய்விட்டால் ருசி எங்கே யிருக்கிறது? உருசியற்றுப்போனதுமாத்திரமல்ல, தேகத்திற் சென்று ஜீர்ணத்தைக்கெடுத்து தேகத்தில் வியாதியையுண்டாக்குகின்றன. நீ, வியாதியாயிருக்கையில் உருசிகரமென்று சொல்லுகிற வஸ்துக்களே அருசியாயும் துக்கத்தைக் கொடுக்கின்றவைகளாயுமாகின்றன. உருசியான அந்த வஸ்துக்களையே அள

---

मतानृणाम् । तस्मादनर्थमर्थाख्यं श्रेयोर्थीदूरतस्त्यजेत् ॥ १९॥ भिद्यन्ते भ्रातरोदाराः पितरस्सुहृदस्तथा ॥ २० ॥

வுக்குமிஞ்சி புஜித்தால் அஜீரணம்முதலிய துக்கத்தையுண்டு பண்ணுகின்றன. மேலும் ஒருதடவை புஜித்த வஸ்துக்க ளெப்போதும் பசியையுண்டாக்காமலிருக்கச் சக்தியுடையவைக ளாகிறதில்லை. சிலநேரங்களுக்குள் மறுபடி பசியுண்டாய்விடு கிறது. ஆகையால், ஸகலவிஷயத்திலுந் துக்கத்தைக் கொடுக் கிறதாயும் சிலநிமிஷத்திற்குள் நாசமடையத்தக்கதாயுமிருக்கிற ஆஹாராதிவஸ்துக்கள் துக்கசுவரூபமேயன்றி சுக சுவரூபமாக வாகிறதில்லை.

21. பின்னுஞ்சொல்லுகிறேன்கேள். நீ சுகமென்று நினைக் கிற மற்றவஸ்துக்களும் வாஸ்தவமாய் சுகமல்ல. படுக்கை சுக மென்று நினைப்பதும் அவிவேகமே. படுக்கையிற் படுத்திருக் கையில் எரும்பு, மூட்டை இவைகளாற் கடிக்கப்படுவை யேயானலப்போதுந் துக்கமேதானுண்டாகும். அப்படுக் கையிலிருக்கையிற் தகுந்தகாற்றில்லாமற்போனலதுவுந் துக் கத்தையேயுண்டாக்கும். வியாதியினற் பீடிக்கப்படும்பொ ழுது அப்படுக்கையிற் படுத்திருந்தாலும் அந்தப்படுக்கையா னது வியாதியைநீக்கி சுகத்தையுண்டுபண்ணுமா? அல்லது வியா தியினற்தூக்கமற்றவனுக்குத் தூக்கத்தை யுண்டுபண்ணுமா? இப்படிப்பட்ட பலவித அசுகமுண்டாகும்போது அதை நிவிர்த் திக்க ஹம்ஸதூலிகாதற்பம் சக்தியுள்ளதல்லவாகையாற் படுக் கை சுகமென்றெண்ணுவதுமவிவேகமே. தாஸர்கள் உன்தே கத்தைப் பிடிக்கிறது குத்துகிறது முதலியவைகளினற் தேகத் திலுண்டாயிருக்கிற துன்பநிவர்த்தியேயன்றி ஸுகமாகமாட் டா. ஸ்திரீபோகம் சுகமென்றெண்ணுகிறவன் மூடனென்ப திற் சந்தேகமில்லை. இந்த விஷயசுகமானது மிகவுமற்பமா யுமடுத்தநிமிஷத்திற் துக்கமாக மாறுகிறதாயும் புருஷனை ஜரை க்குக் (கிழத்தனத்திற்கு) கொண்டுபோகிறதாயும் தேகபலத் தைக் குறைக்கிறதாயுமிருக்கிறது. இந்த விஷயபோகத்தைப் பற்றி பகவான் அர்ஜுனனுக்குச் சொன்னதாவது—

பகவத்கீதை-அத்-18-சு-38 ல் * "பிரஸித்தமான எந்த "சுகமானது விஷயேந்திரியங்களின் ஸம்பந்தத்தினற் துவக்

* विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् । परिणामे विषमिव तत्सुखं राजसंस्मृतम् ॥

"கத்தில் அமிர்தத்திற்கொப்பாயும் முடிவில் விஷத்தைப்
"போலுமிருக்கிறதோ அந்த ஸுகமானது இராஜஸமென்று
'சொல்லப்படுகிறது."

சந்தண புஷ்பாதி வாஸநாத்திருவ்வியங்கள் மிகவும் அற்ப சுகத்தைக் கொடுக்கத்தக்கவைகளே. ஏனென்றால், அடுத்த நிமிஷத்திற் தேகசம்பந்தத்தினாற் துர்வாஸனையாய் மாறுகின்றன. வஸ்திராபரணங்களும் சீக்கிரமழியத்தக்கவைகளே. வாஹநாதிகளின் உபயோகத்திலிருக்கிற பிராணிகளுக்கு துன்பம் நேரிட்டாலதுவும் எஜமானனுக்குத் துக்கமே. இப்படியே நீ சொன்ன மற்றவைகளும் துக்கசுவரூபங்களே. இப்படிப்பட்ட விஷயங்களினாலுண்டாகிறவைகளும் இத்தேகத்தினாலநுபவிக்கிறவைகளுமான உலகசுகங்களெவையோ அவைகளை சுகமாகநம்பி அதற்காகவே முயற்சிசெய்கிறவன் வைக்கோற் சுமையைத்தெப்பமாகவெண்ணி ஆற்றைக்கடக்க முயல்கிறவனுடைய கெதி யெப்படிமுடியுமோ அப்படித்தான் இவனுடைய கெதியுமென்றறி.

திருவ்வியமுடையவன், தான் அதிகசுகியென்று கருவமடைகிறான். அவனைத்தான் அதிகதுக்கியென்று சொல்லவேண்டும். ஏனெனில், அவனுக்குப் பலவகையாலுந் துக்கமுண்டாகிறதற்குக் காரணங்களிருக்கின்றன. நீ, இந்த மந்திரித்துவத்தை யடைகிறதற்கு மனோவாக்காயங்களினாலடைந்திருக்கிற துன்பத்திற்குக்கணக்குண்டோ; அதை நீயே யோஜித்துப்பார். மேலும் நீ இப்போதெந்தத்தொழிலைச் செய்துகொண்டிருக்கிறாயோ அந்த இராஜாங்கவிஷயமான கவலையும் உன்குடும்ப விஷயமான கவலையுமுன்னைத்துக்கத் துக்குள்ளாக்கவில்லையா? உனக்கெவ்வளவு துக்கமுண்டாகுமோ அவ்வளவு ஸாமாந்நியமான ஒரு குடித்தனக்காரனுக்குண்டாக ஹேதுவில்லை. உன்னைவிட அந்தக்குடியானவன் ஸுகியென்று சொல்லலாம். ஏனென்றால், உனக்குத் துக்கமுண்டாக எத்தனைவகையான மார்க்கங்களுண்டோ அவ்வளவு அக்குடியானவனுக்கில்லை. அக்குடியானவனைவிட விரக்தியடைந்து பிக்ஷாந்நத்தினால் ஜீவிக்கிற ஸந்நியாசி சிரேஷ்டமான சுகியென்று சொல்லலாம். அந்த ஸந்நியாசியைவிட, பிக்ஷையைக்கூடவிரும்பாமற் தற்செய

லாய்க்கிடைத்ததையாகாரமாய்க்கொண்டு ஸஞ்சரிப்பவனே சிரேஷ்டமான சுகியாய்ச்சொல்லலாம். ஓ! ஜயவிரதா! நீ, எதெதை சுகமென்று சொன்னேயோ அல்லது எண்ணுகிறயோ அவைக ளெல்லாந் துக்கசுவரூபமென்றறி. அக்ஞானத்தினலவைகள் சுகமென்றுனக்குத் தோற்றுகின்றன.

22. ஜயவிரதன்:—ஓ! மாமா! இக்காட்டிலுள்ள தழைகளைப் புஜித்து இந்தப் பர்ணசாலையில் வாஸஞ்செய்வதே சிரேஷ்டமான சுகமெனறு தாங்களெண்ணியிருக்கிறதாக நான் நினைக்கிறேன். ஆனல், தாங்கள் துக்கத்தையநுபவிக்கிறதாகவும் அதனற் தேகம் கிருசமாய்விட்டதாகவுமெண்ணுகிறேன். இப்படித் தாங்களிருக்கிறது சுகமென்றெண்ணுவீர்களானலந்த சுகமெப்படிப்பட்டதென்பதை யெனக்குச்சொல்லும்.

23. ஸுசர்ம்மா:—எவன் ஆத்தும சுவரூபத்தையறிந்து அதிலேயே திருப்தியடைந்திருக்கிருனே அவன்தான் அழிவற்ற நித்தியாநந்தசுகத்தை யநுபவிக்கிறவனென்றறி. அந்த சுகாநுபவமிப்படிப்பட்டதென்று சொல்வதும் அப்படிச்சொன்னதுமறிந்துகொள்வதும் அசாத்தியமானது. ஆனல், அவனவனுடைய சுவாநுபவத்தினலேயே அறிந்துகொள்ளவேண்டியதேயன்றி நிரூபித்துக்காட்டமுடியாது. எப்படிப்போலெனில், சர்க்கரை உருசியுள்ளதென்றுலதைப் புஜியாதவன் "உருசியெப்படியிருக்கும்" என்று கேட்பானகிலவனுக்கு நிரூபித்துக்காட்ட முடியாததுபோற்ருன். சர்க்கரையின் ருசியை யறியவேண்டுமானலதைத் தின்றலன்றியெப்படி ருசியை யறியமாட்டானே அப்படி ஆத்துமசுவரூபசுகத்தைத் தானேயநுபவித்தறியவேண்டுமே யன்றி நிரூபித்துக்காட்ட முடியாது. இவ்வுலகத்திற் துக்கமற்றிருக்கிறதே சுகமல்லவா? எனக்கு ஆகாராதிகளில் விருப்பமில்லாததனல் ஆஹாராதிகளை ஸம்பாதிக்கும் விஷயத்திலவை கிடைக்கவில்லையேயென்கிற துக்கமுண்டாக ஹேதுவில்லை. எனக்கு தேகாபிமானமில்லையாகையால் தேகவிஷயமாயெனக்குத் துக்கமுண்டாகிறதற்குக்காரணமில்லை. எனக்குலகவிஷயங்களிலாவது பந்துஸ்நேஹிதர் முதலியவர்களிடத்திலாவது, அபிமாநமாவதாசையாவதில்லையாகையாலெனக்கு யாதொரு விஷயத்திலுந் துக்கமுண்டாகக் காரணமில்லையென்றறி.

24. ஜயவிரதன்:—ஓ! மாமா! நீர் சிறுவயதிலேயே குடும்பத்தைவிட்டு வெளிப்பட்டு ஸரியான ஆஹாரம்முதலியவைகள் கிடைக்காமற் கிழங்கு, காய், கனிகளைத்தின்று தேகத்தைத் திருணமாக்கிக்கொண்டீர். அதனாலுமக்கு ஆஹாரம்முதலியவைகளினாலடையக்கூடிய சுகமிவ்விதமானதென்று தெரியவில்லை. இந்ததேகமே துக்கசுவரூபமானதென்றும் அழியத்தக்கதென்றும் திருவ்வியம் முதலியவைகளும் அப்படிப்பட்டவைகளே என்றுஞ் சொன்னீர். அதற்காதாரமாய் அநேகப் பிரமாணங்களைக் குறிப்பிட்டுஞ் சொன்னீர். ஆனால், தேகமானது அழியத்தக்கதென்று சொன்னதெல்லாங்கூடி அந்ததேகத்தை ஸரியாய்க் காப்பாற்றாமற்போனால் அழிந்துபோகுமென்பது சாஸ்திரங்களின் கருத்தென்றே நானெண்ணுகிறேன். கல்லு மரம்முதலிய வஸ்துக்களினாற்கட்டப்பட்ட வீடுபோற் தேகமானது எலும்பு, நரம்பு தோல் முதலியவைகளினாற் கட்டப்பட்டிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. பழுதுபார்க்கப்படாத வீடு அதிசீக்கிறத்திலழிவதுபோல் நன்றாய் காப்பாற்றப்படாத இத்தேகமுமழிகிறதென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தேகத்தை ஸரியாய்க்காப்பாற்றாமல் அஜாக்கிரதையாயிருந்ததனால் அநேகர் மரணமடைந்தார்கள்.

25. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! நீ, அக்ஞாநமாகிற ஸமுத்திரத்தில் முழுகியிருக்கிறாய். அதிலிருந்து கரையேறும்படியான வகையின்னதென்று சொன்னாலுமுன்னுடைய தாத்கால நிலைமையில் உன்னுடையபுத்தி யதையறியமாட்டாது. ஆகையால் நான் உன்னுடன்வர விரும்புகிறதில்லை நீ, உன்னிருப்பிடம் போகலாம்.

26. விசுவம்பரபட்:—இப்படிச்சொல்லி அந்த மஹாயோகியான ஸுசர்ம்மா பர்ணசாலைக்குட்சென்றார். ஜயவிரதன் திரும்பிப்போக எத்தனிக்கையில் அவனுடன் அவ்விடம் வந்திருந்த சில பிராம்மணோத்தமர்கள் "ஓ! பிரபுவே! இந்த ஸுசர்ம்மாவாகிய மஹாத்துமா தெய்வாதீநமாயுமக்கிவ்வளவு போதித்தும் உம்முடைய துர்ப்பாக்கியமானது உமக்கு நல்ல புத்தியையுண்டாக்கவில்லை. இப்படிப்பட்ட மஹாத்துமாகிடைத்தும் உமக்குபதேசிக்க அவர் எண்ணமுடையவராயிருந்தும் நீர், அவரிடத்திலிருந்து ஞாநோபதேசம் பெற்றுக்கொள்ளும்படியான

பாக்கியத்தைப்பெறவில்லை," என்று சொன்ன வாக்கியங்களைக் கேட்டு, தானேயோஜித்துத் தன்னுடைய அவிவேகத்தைக் குறித்துத்தானே நிந்தித்துக்கொண்டு மறுபடி ஸுசர்ம்மாவிருக்குமிடத்திற்குச்சென்று அவருக்கு ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து கைகூப்பி நின்றுகொண்டு சொன்னதாவது. "ஓ! சுவாமி! நான் மூடத்தனத்தினுற் தாங்கள் சொன்னவிஷயங்களை ஸரியாய் கிரஹிக்காமலக்ஞாநத்தினுல் வித்துவான்போற் தங்களிடத்திற்பேசினேன். ஆனுல், தங்களையவமதிக்க எண்ணங்கொண்டு பேசினதல்ல. நான் எதைஸரியென்றெண்ணியிருந்தேனே அதைத்தங்கள் முன்பாகச்சொன்னேன். நானுக இப்போது யோஜித்துப்பார்க்கையில் நான் சொன்னவார்த்தைகள் ஸரியானதென்று எனக்குத்தோணவில்லை. ஆகையாற், தாங்கள் என்னிடத்திற் பரமகிருபைவைத்து எனக்கு நற்புத்தியைக் கற்பித்து நான் கடைத்தேரும்படியான மார்க்கத்தைப் போதிக்கவேண்டுமென்று பிரார்த்தித்த ஜயவிரதனிடத்திற், கருணையுண்டான ஸுசர்ம்மா ஜயவிரதனைப்பார்த்துச் சொல்லுகிறுர்.

27. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! என்னிடத்திலிருந்துனக்கு எதெதையறிந்துகொள்ள இஷ்டமிருக்கிறதோ அவைகளைப்பற்றிக் கேட்கலாம். தேகவிஷயமாய் நீ கொண்டிருக்கிற அபிப்பிராயம் முற்றிலும் பிசகானது. மஹாமஹிமைபொருந்திய கந்தர்வர்கள் இராக்ஷதர்கள் உத்தமர்களான அரசர்கள் ஸ்திரமாய்க் காணப்படுகிற மற்றவஸ்துக்களெல்லாம் நசித்துப்போகின்றனவென்று முன்குறித்துக்காட்டிய சுருதி தெளிவாய்ச் சொல்லுகிறது. பருவதங்கள், பூமி ஸமுத்திரம் முதலிய வஸ்துக்களடங்கிய இந்தப்பூமியே நசித்துப்போகிறதென்றுல், அதிலடங்கியப் பிராணிகள் ஸ்திரமாயிருப்பார்களென்று சொல்லக்கூடுமோ? இந்த ஸகலப்பிரபஞ்சமும் ஒருகாலத்திலுண்டாகிறது. சில காலம் ஸத்தியம்போல்விளங்குகிறது. பிறகு பிரளயத்திலழிந்து போகிறதென்று சாஸ்திரங்கள் தெளிவாய்ச் சொல்லுகின்றன. இவ்வுலகமெத்தனை தடவையுண்டாயிற்று, எத்தனை தடவை யழிந்தது, என்றுகணக்கிட பிரும்மாதிகளாலுங்கூட முடியாது. இப்பிரபஞ்சம் ஒருதடவையுண்டாய் அழிவதற்குள்ளாகப் பிராணிகள் எத்தனையோ கோடி கோடிப் பிறப்பிறப்புகளையடைகி

ருர்கள். இதற்குத்தான் ஸம்ஸாரமென்றுபெயர். இந்தஸ்திதி காலத்திலித்தேகத்தினுலேயே யோகம் முதலிய ஸாதநங்களி னுல் ஞாநமடைந்து அதனுற் பரமாத்தும சுவரூபத்தை யறிந்த வனெவனே அவன், மறுபடி பிறப்பற்றதாகிய உத்தமோத்தம மான சுகத்தையடைவான். மற்றவர்களோ பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரத்திலிருந்து விடுபடமாட்டார்கள். அடிக்கடி பிறக்கி றதுமிறக்கிறதும் சுகதுக்கங்களையநுபவிக்கிறதுமாகவே யிருப் பார்கள். இந்தஸ்திதிகாலத்திற், புண்ணியகருமங்களைச்செய்திரு க்கிறவர்கள் தேவாதிப்பிறவியையடைவார்கள். பாபகருமஞ்செ ய்தவர்கள் பசு பக்ஷிமுதலிய ஜன்மங்களையடைவார்கள். மிசிர கருமம் (புண்ணியபாபமிரண்டும்) செய்திருக்கிறவர்கள் மனிதர் களாகப்பிறந்து — सुखस्यानन्तरं दुःखं दुःखस्यानन्तरं सुखं । सुखदुःखं मनुष्याणां चक्रवत्परिवर्तते ॥ =மனிதர்களுக்கு ஸுகத்திற்குப் பிறகு துக் கமும் துக்கத்திற்குப்பிறகு ஸுகமுமாய் ஸுகதுக்கம் சக் கிரம்போற் சுற்றிவருகிறது, என்கிற கெருடபுராணம் பூர்வ பாகம் அத்.-113-சு-61-ல் சொல்லியிருக்கிறபடி மனிதன் இத்தேகத்தினுற் சுகத்தைபுந்துக்கத்தையு மடைகிறுன். இந்த ஜநநத்திற்கும் ஸுகதுக்காநுபவங்களுக்கும் முடிவானது ஞாந மடைந்தவனைத்தவிர மற்றவனுக்குண்டாகிறதில்லை.

28. ஜயவிரதன்:—ஓ! பகவானே! மனிதஜன்மத்தைய டைந்தவன் இந்த தேகம்போனபிறகு மிருகாதிஜன்மங்களை ய டையாமல் மனிதப்பிறவியையாவது அதற்கு மேலான பிறவி யையாவது அடைவானென்று சிலர் சொல்லுகிறுர்கள். தாங் கள் சொன்னது இதற்கு விரோதமாயிருக்கிறதாக நான் நினைக் கிறேன். அதற்குக் காரணமென்ன?

29. ஸுசர்மா:—ஓ! ஜயவிரதா! இந்த விஷயத்தை ரூபிக் கிறதற்கு நேரான ஸாக்ஷியமில்லை. சாஸ்திரங்களைக்கொண்டு தான் நிச்சயிக்கவேண்டும். ஆரியமதசாஸ்திரங்களோ, புண்ணி யம் நசித்தபிறகு சுவர்க்காதி லோகத்திலிருந்து அவனவனு டைய பூர்வகர்மசேஷத்திற்குத்தக்கபடி தேவனுகவோ, மனி தனுகவோ, மிருகாதிகளாகவோ ஜநிக்கிறுனென்று தெளிவாய்ச் சொல்லுகின்றன. இதுதான் நமக்குப் பிரமாணம். இதுவிஷ யத்திற் சாஸ்திரங்களென்ன சொல்லுகின்றனவென்றல் —

சாந்தோக்கியோபநிஷத்-பிரபாடகம்-5 கண்டம்-10 ல்-*
"அந்தச் சந்திரமண்டலத்திற் புண்ணியம் நசிக்கிறவரையில் வா
"ஸம்செய்து பிறகு இப்பிரபஞ்சத்தை நோக்கி மறுபடிதிரும்பி
"வருகிறார்கள். (எப்படியெனில்) போனவழியையநுஸரித்
"தேதான். முதலில் ஆகாசமாகிறான். அதிலிருந்து வாயுவாகிறா
"ன். அதிலிருந்து புகையாகிறான். அதிலிருந்து சிறிய மேகமாகி
"றான். அந்தச் சிறிய மேகத்திலிருந்து பெரிய மேகமாகிறான்.
"இப்படியாகி ஜலவர்ஷமாகிறான். பிறகு இவ்வுலகத்தில் நெல்,
"யவம், கொடி, மரம், எள்ளு, உளுந்து இவை முதலியவைக
"ளிலேதாவதொன்றாகிறான். அதிலிருந்து வெளிப்பட முடி
"யாமலிருக்கிறான். (இப்படியிருக்கையில்) யாரேனும் அந்தத்
"தாந்யததை புஜித்தாலதனால் இரேதஸ்ஸாகவாய் அந்த
"இரேதஸ், ஸ்திரீயினிடத்திற் பிரவேசிக்கிறதினால் மறுபடி பி
"றக்கிறான். அவர்களிற் புண்ணியசாலிகள் யாரோ அவர்கள்
"சீக்கிரமாய்க் குரோதம் முதலிய தோஷமில்லாத பிராம்மணப்
"பிறவியையாவது க்ஷத்திரியப்பிறவியையாவது வைசியப்பிறவி
"யையாவது அடைகிறார்கள். யார் பாபம் செய்தவர்களோ அ
"வர்கள் சீக்கிரத்தில் (அவரவர்கள் பாபத்திற்குத் தக்கபடி) மி
"கவும் பாபமுள்ள, நாய், பன்றி முதலியப் பிறவியையாவது ச
"ண்டாளப் பிறவியையாவதடைகிறார்கள்."

இந்த வாக்கியங்களினாற் சூத்திரப்பிறவியைச் சொல்லாவி
ட்டாலும் முந்திய மூன்று வருணத்தாருடையப்பிறவியைச் சொ

---

* तस्मिन् यावत् संपातमुषित्वाथै तमेवाध्वानं पुनर्निवर्तन्ते । यथैतमाकाश माकाशाद्वायुं वायुर्भूत्वा धूमोभवति । धूमोभूत्वाभ्रं भवति ॥ ५ ॥ अभ्रं भूत्वा मेघोभवति मेघोभूत्वा प्रवर्षति । त इह व्रीहि यवा ओषधि वनस्पतयस्तिलमाषा इति जायन्तेऽतोवै खलु दुर्निष्प्रपतरं योयोह्यन्नमत्ति योरेतास्सिञ्चति तद्भूयएव भवति ॥ ६ ॥ तद्य इहरमणीयचरणा अभ्याशोहयत्तेरमणीयां योनिमापद्येरन् ब्राह्मणयोनिं वा क्षत्रिययोनिं वा वैश्ययोनिं वाऽथय इहक पूयचरणा अभ्याशोहयत्तेकपूयां योनिमापद्येरन् श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डाळयोनिं वा ॥ ७॥

ன்னதனுலேயே நான்காவது வர்ணத்தாராகிய சூத்திரர்களுடைய ப்பிறவியையுஞ்சொன்னதாக அர்த்தஞ்செய்துகொள்ளத்தக்கது.

இந்த உபநிஷத்துவாக்கியங்களினுலும் பரதனென்கிற அரசன் மான் ஜந்மத்தையடைந்து பிறகு மனிதஜந்மமாகிய ஜடபரதனென்கிற பெயருள்ள பிராம்மணுய் ஞானோபதேசத்தைச்செய்துவந்ததாக விஷ்ணுபுராணம்-அம்சம்-2-அத்-13-லும் நஹுஷனென்கிற அரசன் இந்திரப்பதவியையடைந்து பிறகு இவ்வுலகத்தில் அஜகரமென்கிற மலைப்பாம்பாகப் பிறந்து சில காலத்திற்குப் பிறகு சுவர்க்கலோகஞ்சென்றதாய்மஹாபாரதம் ஆரண்ணியபருவம்—அத்-151-லும் சொல்லப்பட்டிருக்கிறதினுலும் பின்னும் பல புராணங்களிலும் மனிதன் மிருகாதிரூபங்களையடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதினுலும் மனிதனுக்கு இத்தேகம்போனவுடன் பாபவிசேஷத்தினுல் மிருகாதிஜந்மங்கள் வரக்கூடுமென்று ஏற்படுகிறது. ஆகையால், மனிதப்பிறவியையடைந்தவன் மிருகாதிப்பிறவிகளை யடைகிறதில்லையென்று சொல்லுவது சாஸ்திரங்களினுலாதரிக்கப்பட்டதல்ல.

30. ஜயவிரதன்:—ஓ! பகவானே! பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரத்தின் ஸ்வரூபத்தை யுள்ளபடி அறிய விரும்புகிறேன்.

31. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரமென்பது இப்பிரபஞ்சமேயாகையாற் பிரபஞ்ச ஸ்வரூபத்தை யறிவதினுல் ஸம்ஸாரஸ்வரூபமும் அந்த ஸம்ஸாரத்தினுடைய விசித்திரமும் அறியப்பட்டதாகவாகும். இதை விளக்குகிற ப்ரமாணங்களையொன்றின்பின்ஞென்ருகச் சொல்லுகிறேன் கேள்.

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை-ஆகமப்பிரகரணம்-17-ல்-* "பிரபஞ்சமிருக்குமாஞலது நிவிருத்தியாகு "மென்பதில் ஸந்தேகமில்லை. பேதபுத்தியாகிற இந்தத் துவை "தமானது (ஜீவன் ஈசுவரன் ஜகத்து என்கிற வேற்றுமையான "து) மாயாமாத்திரமே. இரண்டாவதற்ற ஒன்றே வாஸ்தவமா "யுள்ளது."

---

* प्रपंचो यदि विद्येत निवर्तेत न संशयः ।
मायामात्र मिदं द्वैत मद्वैतं परमार्थतः ॥

மாண்டுக்கியோபநிஷத் கௌடபாதகாரிகை-வைதத்தியப் பிரகரணம்-31-ல்-* "சுவப்நம், மாயை, கந்தர்வநகரம் இவைகள் "காணப்பட்டாலுமெப்படிப் பொய்யோ அப்படிப்போல இப் "பிரபஞ்சமானது (பொய்யென்று)வேதாந்தார்த்தங்களையறிந்த "க்ஞாநிகளாற் பார்க்கப்படுகிறது."

மஹோபநிஷத்-4-ல்-† "ஸ்தாவரஜங்கமங்களாய்க் காணப் "படுகிற இந்த ஸகல ஜகத்தும் ஸுஷுப்தியிற் சுவப்நம் (ந "சிக்கிறது) போற் கற்பத்தின் முடிவில் நாசமடைகிறது."

நாதபிந்தூபநிஷத்தில்-‡ "பொய்யான தோற்றத்திற்குற் "பற்றியேது? உற்பற்றியில்லாதபொழுது இருப்பேது? மண் "பாத்திரத்திற்கு பாதாநகாரணம் மண்ணேயெப்படியோ அப்ப "டி ஜகத்திற்கு அக்ஞாநமே உபாதாநகாரணமென்று வே "தாந்தங்களினலறிகிறுன். அக்ஞாநம் நசித்தாற் பிரபஞ்ச "மெங்கே? (பிரபஞ்சமேயில்லையென்பது கருத்து). பிரமையி "னற் கயிற்றைவிட்டெப்படிப்பாம்பைக்கிரஹிக்கிறுனே அப்படி "மூடபுத்தியுள்ளவன் வாஸ்தவத்தை யறியாமல் ஜகத்தை (ஸத் "தியம்போல்) பார்க்கிறுன். கயிற்றின் துண்டென்கிற க்ஞாந "முண்டானுற் பாம்பென்கிற க்ஞாநம் நசிக்கிறது. ஆதாரமா "ன வஸ்துவினுடைய க்ஞாநமுண்டானுற் பிரபஞ்சமில்லாமற் "போகிறது. அப்பொழுது தேகமும் பிரபஞ்சமானதினுற் பி "ராரப்த்தத்தினிருப்பெங்கே?" (என்றுல், பிராரப்த்தத்தினுலு ண்டான தேகாதிகளும் நசிக்கிறதென்பது தாத்பரியம்).

---

* स्वप्नमाये यथा दृष्टे गन्धर्व नगरं यथा ।
तथा विश्व मिदं दृष्टं वेदान्तेषु विचक्षणैः ॥

† यदिदं दृश्यते सर्वं जगत् स्थावरजङ्गमम् ।
तत् सुषुप्ताविव स्वप्नः कल्पान्ते प्रविनश्यति ॥

‡ अध्यस्तस्य कुतोजन्म जन्माभावे कुतःस्थितिः । उपादानं प्रपञ्चस्य मृद्भाण्डस्येव पश्यति ॥ अज्ञानं चेति वेदान्तैः तस्मिन्नष्टे क्वविश्वता । यथा रज्जुं परित्यज्य सर्पं गृह्णाति वैभ्रमात् ॥ तद्वत्सत्यमविज्ञाय जगत् पश्यति मूढधीः । रज्जुखण्डे परिज्ञाते सर्परूपं न तिष्ठति ॥ अधिष्ठाने तथा ज्ञाते प्रपंचे शून्यतां गते । देहस्यापि प्रपञ्चत्वात् प्रारब्धावस्थितिः कुतः॥

தேஜோபிந்தூபநிஷத்-5-ல்-* "இப்பிரபஞ்சம் இல்ல "வேயில்லை. இதற்குற்பத்தியுமில்லை. சித்தமேப் பிரபஞ்ச "மென்று (ஞாநிகள்) சொல்லுகிறார்கள். எப்போதும் பிரபஞ் "சமில்லை ——— இந்தப் பிரபஞ்சமும் ஜகத்திற் பார்க்கப்படு "கிறதாயும் பார்க்கிறதாயு மெதெதிருக்கிறதோ அந்த ஸகல "மும் முயற்கொம்புக்கொப்பானவை. வாஸ்தவத்திலில்லை."

ஷையுபநிஷத்-6-ல் † "மலடிமகன் சொன்னவார்த்தையி "னாற் பயமடைந்தேனென்றால், ஜகத்திருக்கிறதாகச் சொல்ல "லாம். (மலடிமகன் வார்த்தையென்பதெப்படிப் பொய்யோ "அப்படி ஜகத்தென்பதும் பொய்யே)."

ஆத்மபோதோபநிஷத்தில்-‡ "பிரபஞ்சமானது எனக் "கு நிவிருத்தியானாலும் ஸத்தியம்போலெப்பவும் விளங்குகிற "து. கயிற்றிற் பாம்பு முதலியன (பிரமையினாற் தோற்றுவ "து) போல, பிரபஞ்சத்திற்காதாரபூதமாய் பிர்ம்மஸத்து மாத் "திரமே சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகையால் ஜகத்தில்லை."

நிர்வாணோபநிஷத்தில்-§ "ஜகத்தானது உண்டாக்கப்ப „ட்டதாகையால், நித்தியமல்ல (அழியத்தக்கது). சுவப்நத்தி "ற்கண்ட ஜகத்து, ஆகாசத்திற்றோற்றும் யானை முதலியன இ "வைகளுக் கொப்பானது."

மஹாநாராயணோபநிஷத்-3-ல் $ "அவித்தியாப் பிரபஞ்ச "மான ஸகலமுஞ் சுருங்குகிறதும் விரிகிறதுமான மஹாமாயையி "ன் விளையாட்டேதான். வாஸ்தவத்தில் யாதொன்றுமில்லை."

---

* इदं प्रपञ्चं नास्त्येव नोत्पन्नं नोस्थितं क्वचित् । चित्तं प्रपञ्चमित्याहु र्नास्ति नास्त्येव सर्वदा——इदं प्रपञ्चं यत्किञ्चिद्यद्य जगति विद्यते । दृश्यरूपंच दृग्रूपं सर्वं शशविषाणवत् ॥

† वन्ध्याकुमारवचने भीतिश्चेदस्ति किंचन ॥

‡ निवृत्तोपि प्रपञ्चोमे सत्यवत् भाति सर्वदा । सर्पादौ रज्जुसत्तैव ब्रह्मसत्तैव केवलम् ॥ प्रपञ्चाधाररूपेण वर्ततेऽतो जगन्नहि ॥

§ अनित्यं जगद्यज्जनितं स्वप्नजगद् भृगजादि तुल्यम् ॥

$ संकोचविकासात्मक महामाया विलासएव सर्वोप्य विद्या प्रपञ्चः । परमार्थतो न कश्चिदस्ति ॥

யோகசிகோபநிஷத்-அத்-4 ல்-* "இவ்வுலகமானது அநு "பவிக்கப்பட்டிருந்தாலும் அது வியவஹாரத்திற்கு யோக்கி "யமாயிருந்தாலும், சுவப்நமானது அடுத்தநிமிஷத்தில் நசிக்கி "றதுபோல அஸத்ரூபமானதே. ——— மலடிமைந்தன், "கானல் ஜலம், ஆகாசவிருக்ஷம் இவைகளெப்படியில்லையோ "அப்படிப்போல் ஜகத்தினிருப்புமில்லை."

ஸ்காந்தபுராணம்-காசிகண்டம்-அத்-10-சு-128-ல் † "கயிற்றி "ற் பாம்பும் கிளிஞ்சிலில் வெள்ளியும் கானல் ஜலமுமெப்படிப் "பொய்யோ அப்படிப்போல் யாரையறிந்தாலிப்பிரபஞ்சமெல் "லாம் பொய்யாய்விடுகிறதோ அந்தப் பரமேசுவரனை நமஸ் "காரஞ்செய்கிறேன்."

அத்தியாத்துமராமாயணம்-உயுத்தகாண்டம்-அத்-3-சு-23-ல்-‡ "வேறுபற்றில்லாத க்ஞானமுடைய மனதினால்(உண்மை)எதுவ "ரையிலறியவில்லையோ அதுவரையிற் கிளிஞ்சிலில் வெள்ளி "போல் ஜகத்தை ஸத்தியமாய்ப் பார்க்கிறான்."

32. இப்படிப்போலவே அநேகப் பிரமாணங்கள் பிரபஞ் சம் பொய்யென்றும் அழியத்தக்கதென்றும் சுவப்நத்திற்கா ணுகிறப் பிரபஞ்சத்திற்கொப்பானதென்றும் சொல்லுகின்றன. இப்படிப்போலவே இப்பிரபஞ்சத்திலடங்கியதாகிய ஸம்ஸார மும் நிலையற்றதென்று சாஸ்திரங்களுடைய நிச்சயம். அவைக ளிற் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேள்.

கருப்போபநிஷத்தில்-§ (கருப்பத்திலிருக்கிற சிசு, எட் டுமாதங்கள் சென்றபிறகு)"ஒன்பதாவது மாதத்தில் ஸகலலக்ஷ

---

* अनुभूतोप्ययं लोको व्यवहारक्षमोपि सः । असद्रूपो यथा स्वप्न उत्तरक्षणबाधितः ।———यथा वन्ध्या सुतोनास्ति यथा नास्तिमरौजलं यथा नास्ति नभोवृक्ष स्तथानास्ति जगत्स्थितिः ॥

† रज्जौ सर्पश्शुक्तिकायांच रूप्यं नैरःपूरस्तन्मृगाख्ये मरीचौ । यद्वत्तद्द्विष्वगेष प्रपंचो यस्मिन् ज्ञाते तं प्रपद्येमहेशम् ॥

‡ तावत्सत्यं जगद्भाति शुक्तिका रजतं यथा । यावन्नज्ञायते ज्ञानचेतसा नान्यगामिना ॥

§ अथनवमे मासे सर्वलक्षणसंपूर्णो भवति । पूर्वजातिं स्मरति । कृता-

"ணங்களால் (தேகத்தில் ஸகல அவயவங்களால்) நிறைந்தவனா
"கிறான். முன்ஜன்மத்தை நினைக்கிறான். (அந்த முன்ஜன்மங்க
"ளில்)செய்யப்பட்டதும் செய்யப்படாததுமான கருமமானது ந
"ன்றாய்ப் பிரகாசமாகிறது (அவனுடைய நினைவுக்கு வருகிறது).
"புண்ணியபாப கருமங்களுடைய அறிவுண்டாகிறது. (அப்போ
"து கருப்பத்திலிருந்து நினைக்கிறதாவது) நான் அநேக ஆயிர
"ங்களான பலவித யோநிகளைப்பார்த்தும் அநேகவிதங்களான
"ஆஹாரங்களைப் புஜித்தும், அநேகவிதமான முலைப்பாலைக் குடி
"த்துமிருக்கிறேன். முந்தி யெனக்கு ஸகல பூமியும் ஜநநபூமி
"யாயும் மயானமாயுமிருந்தது. எண்பத்திநான்குலக்ஷம்யோ
"நிபேதங்களிலும் பிறந்திருந்தேன். அடிக்கடி பிறந்தவனாக
"வு மிறந்தவனாகவும் ஸம்ஸாரியாகவுமானேன். பிறக்கிறது இ
"றக்கிறது மறுபடி பிறக்கிறது இறக்கிறது மறுபடி பிறப்பு
"இப்படி கருப்பவாஸத்திற் துக்கம், பிறப்பில் மோஹம் துக்க
"மிரண்டும், பால்லியத்தில் துன்பம் அப்படியே வியஸநம், பிற
"ருக்கு வசப்பட்டிருக்குகை, மூடத்தனம், தனக்கு வேண்டியதை
"ச்செய்துகொள்ளக்கூடாமை, சோம்பல், அப்படியே அநிஷ்ட
"த்தைச் செய்துகொள்ளுதல், யௌவநத்தில் விஷயாசை, தா
"பத்திரயத்தினால் (ஆத்தியாத்துமிக ஆதிபௌதிக ஆதிதைவிக
"மாகியமூன்றினால்)செவ்வையாய்ப் பீடிக்கப்பட்டும் கிழத்தனத்
"தினாற் கவலைப்பட்டும், வியாதி மரணத்தில் மஹத்தான பயம்
"இவைகளுண்டாகின்றன. ஆசை யபிமாநமிவைகளினாலும்
"காமக்குரோதம் முதலிய ஸங்கடங்களினாலும் அதிதீவ்வி
"ரமான துக்கத்தினாலும் அசுவதந்தரமாயிருந்துகொண்டும் து

---

कृतं कर्मविभाति शुभाशुभं कर्मविंदाति । नानायोनि सहस्राणि दृष्ट्वाचैव ततोमया । आहाराविविधा भुक्ताः पीताश्च विविधास्स्तनाः । जन्मभूमिर्हि सर्वाभूः श्मशानमपि मे पुरा । चतुराशीति लक्षेषु योनिभेदेषु चाभवम् । जातश्चास्मि मृतश्चास्मि संसार्यस्मि पुनःपुनः । जन्ममृत्यू पुनर्जन्म पुनर्मृत्युः पुनर्जनिः । गर्भवासे महादुःखं मोहोदुःखंच जन्मसु । बाल्ये दुःखं तथा शोकः पारवश्यंच मूढता । हिताकरणमालस्य महिता चरणं तथा । यौव्वने. विषयासक्ति स्तापत्रय निपीडितः । चिन्तारोगश्च वार्धक्ये मरणेतु

"ன்பத்தை யநுபவித்தேன். இந்தப் பிறவியானது துக்கத்திற்
"கு விதையாயிருக்கிறது. துக்கசுவரூபமாயும் பொறுக்கமுடி-
"யாததாயுமிருக்கிற பிறவித் துன்பத்தையொழிக்கும்படியான
"தருமத்தை நான் செய்யவில்லை. ஞானஸாதநமாகிய யோகத்
"தையுஞ் செய்யவில்லை. अहो=கஷ்டம். துக்கமாகிற ஸமுத்திரத்
"தில் முழுகியிருக்கிறேன். இதற்குப் பரிஹாரமான காரியங்க
"ளை நானறியவில்லை. இந்த அக்ஞாநம் நிந்திக்கத்தக்கது,
"இந்த அக்ஞாநம் நிந்திக்கத்தக்கது. இந்த காமக்குரோதாதி
"ஸங்கடமும் நிந்திக்கத்தக்கது. இந்த ஸம்ஸாரமாகிற விலங்
"கும் நிந்திக்கத்தக்கது. ஆசாரியரிடத்திலிருந்து ஞானமடைந்
"தேனென்கிற என் ஞாநமும் நிந்திக்கத்தக்கது. இந்த யோநி
"த்துவாரத்திலிருந்து வெளிப்பட்டேனேயானால் ஸாங்கியயோ
"கத்தைத் துடங்குகிறேன். இந்த யோநித்துவாரத்திலிருந்து
"வெளிப்பட்டேனேயானலசுபமான பாபத்தை நாசஞ்செய்கி
"றவராயும் முக்திப்பயனைக் கொடுக்கிறவராயுமிருக்கிற பரமே
"சுவரனைப்பாவிக்கிறேன். இந்தயோநித்துவாரத்திலிருந்து
"வெளிப்பட்டேனேயானற் பாபத்தை நாசஞ் செய்கிறவராயும்
"புருஷார்த்தத்தைக் கொடுக்கிறவராயுமிருக்கிற ஜகதீசுவரனையு
"பாவிக்கிறேன். இந்த யோநித்துவாரத்திலிருந்து வெளிப்
"பட்டேனேயானல் ஸகல சக்தியுடையவராயும் சித்சுவரூப
"ராயும் உற்பத்திக்குக்காரணராயுமிருக்கிற பரமேசுவரனையுபா
"விக்கிறேன். இந்த யோநித்துவாரத்திலிருந்து வெளிப்பட்

---

महद्भयम् । आशयाचाभिमानेच कामक्रोधादि सङ्कटे । अत्युत्कटे महद्दुःख
मस्वतन्त्रश्च दुःखितः । दुःखबीजमिदं जन्म दुःखरूपंच दुस्सहम् । निवृत्त
धर्मोनोपात्तो न योगज्ञान साधनम् । अहोदुःखो दधौमग्नो न पश्यामि प्र-
तिक्रियाम् । धिगज्ञानं धिगज्ञानं धिक्कामक्रोध सङ्कटम् । संसारश्शृंखलं
धिग्धिगाचार्याद्ज्ञानमाप्नुयाम् । यदि योन्यां प्रमुंचामि सांख्ययोगं समा-
श्रये । अशुभक्षयकर्तारं फलमुक्तिप्रदायकम् । योन्यां यदि प्रमुंचामि प्रप-
द्ये परमेश्वरम् । अशुभक्षयकर्तारं पुरुषार्थ प्रदायिनम् । यदि योन्यां प्रमुं-
चामि प्रपद्ये जगदीश्वरम् । सर्वशक्तिं चिदानन्दं सर्वकाणकारणम् । यदि-
योन्याः प्रमुच्येयं प्रपद्ये परमेश्वरम् । भर्गं पशुपतिं रुद्रं महादेवं जगद्गुरुं ।

"டேனேயாளுல் भर्गः=பர்க்கன்,பசுபதி, உருத்திரன், மஹேசுவர "ளுகிய ஜகத்குருவைக்குறித்து மஹாதபஸைச் செய்கிறேன். "இந்தக் கருப்பவாஸத்திலிருந்து வெளிப்பட்டேனேயாளுல் அ "மிருதத்தைக் கொடுக்கத்தக்கவராயும் ஆநந்த சுவரூபராயும் "அழுக்கற்றவராயும் எங்கும் நிறைந்தவராயுமிருக்கிற நாராய ணனை ஹிருதயகமலத்தில் பஜிக்கிறேன். மாதாவினுடைய க "ருப்பத்திற் கட்டுண்டுயிருக்கிறேன், இப்பொழுதிந்தக் கட் "டிலிருந்து விடுபட்டேனேயாளுல் பகவாளுகிய வாஸுதேவ "னை வேறுபற்றில்லாத புத்தியிளுல் ஸந்தோஷப்படுத்துகிறே "ன். பிறருடையப் பிரயோஜநத்திற்காக முந்தி சுபாசுப கரும "ங்களைச் செய்தேன். அதனுலிப்போது நானொருவளுகவே "எரிக்கப்படுகிறேன். அந்தப் (கருமம்) பலனிற் பாகத்தைப் "பெற்றவர்களெங்கையோ போய்விட்டார்கள். முந்தி நாஸ் "திக புத்தியிளுலே பயத்தைவிட்டுப் பாபங்களைச் செய்தேன். "இப்பொழுது அந்தப் பலனையநுபவிக்கிறேன். இனி ஆஸ்திக "ளுகவாகிறேன்."

"இவ்விதமாய் அடிக்கடி பலவிதங்களான துன்பங்களைச் "செவ்வையாய் நினைத்துக்கொண்டும் இந்தஸம்ஸார துக்கத்தைச் "செவ்வையாய் நினைத்துக்கொண்டும் துன்பத்தை யடைந்திருக் "கிறவும், கருப்பத்திற்குள்ளிருக்கிறவுமான ஜந்துவானது அவி "த்தை ஆசை கருமம் முதலியவைகளிளுலே மோகத்தையடை "கிறது. அந்த ஜந்துவானது அநேகவிதமான ஸ்திரீயோ நிக "ளையடைந்து யோநித்துவாரத்திற்கு வரும் ஸமயத்தில் மோக்ஷ மடைய விச்சிக்கிறது. அவ்விஷயத்திற் சக்தியற்றதாய் எந்திர

---

योनिबन्धात् प्रमुच्येयं यदि तप्स्ये महत्तपः । गर्भवासात् प्रमुच्येयं यदि विष्णुं भजे हृदि । अमृतप्रदमानन्दं नारायणमनामयं । मातृकुक्षौ निबद्धोस्मि मुच्ये यद्यद्य बन्धनैः । वासुदेवं प्रतोष्यामि भगवन्त मनन्यधीः । पुरा परजनस्यार्थे कृतं कर्म शुभाशुभं । एकाकीतेन दह्यामि गतास्ते फलभागिनः । नास्तिक्येन भयं त्यक्त्वा पापान्यकरवं पुरा । भुञ्जामि तत्फलं ह्यद्य भविष्याम्यास्तिकस्त्वितः । एवं नानाविधानर्थान् परिचिन्त्य मुहुर्मुहुः । शश्वत् सांसारिकं दुःखं स्मृत्वा निर्वेदमाप्यच । अविद्याकामकर्मा-

"த்திஞற் துன்பமடைகிறவனைப்போல் அதிக துன்பத்திஞல் "வியஸநமடைந்து பிரஸூதிவாயுவிஞற் பிழியப்படுகிறது. பிற "ந்தமாத்திரத்தில் விஷ்ணுவினுடைய மாயையிஞற் சூழப்பட்ட "வஞய் அப்போது நினைப்புண்டாகிறதில்லை. பரலோகவிஷய "த்தை அற்பமாவது நினைக்கிறதுமில்லை. பூர்வஜந்மக்ஞாந முண்டாகிறதுமில்லை".

இம்மாதரியான கருப்பதுக்கமானது பிருமபுராணம்-அத்-சகூ, பத்துமபுராணம்-பூமிகண்டம்-அத்-கூகூ, விஷ்ணு புராணம்-அம்சம்-க-அத்-உ, பாகவதம்-ஸ்கந்தம்-ா-அத்-ாக, மார்கண்டேயபுராணம்-அத்-கக-இவைகளிலும் மற்றும், பல புராணங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னும், இத்தேகம், ஸம்ஸாரம் முதலியவைகளின் சுவரூபத்தை விளக்குகிற பிரமாணங்களையுஞ் சொல்லுகிறேன் கேள்.

மஹோபநிஷத்-அத்-ா-ல்-* "(பிராணிகள்) க்ஷணகால "த்தில் ஆபத்தையும் க்ஷணகாலத்தில் ஸம்பத்தையும் க்ஷண "காலத்திற் பிறப்பையும் க்ஷணகாலத்தில் மரணத்தையுமடை "கிறார்கள். (பிரபஞ்சம்) எல்லாமழியத்தக்கதே."

மநுஸ்மிருதி-அத்-கஉ-சு-கஉசு-ல்-† "இந்தப் பரமாத்துமா "வானவர் எல்லாப்பிராணிகளையும் பஞ்ச பூதங்களால் வியாபிக் "கச்செய்து பூர்வஜந்மத்திற் செய்ததாகிய அவனவனுடைய "கருமாநுஸாரமாய்ப் பிறப்பு வளருதல் இருப்பு இவைகளால் "மோக்ஷமடைகிற வரையில் வண்டிச்சக்கரம்போற் சுழலும்படி "செய்கிறார்."

---

र्यैर्मुह्यते जन्तुरान्तरः । सवै जन्तुः स्त्रीयोनि शतं गत्वा योनिद्वारमुपेत्य मुमुक्षुर्यतते । तत्राशक्तो यन्त्रेण पीड्यते । महता दुःखेन क्लिश्यति पिष्यते चप्रसूतिवातेन जातमात्रस्तु वैष्णवेन वायुना संस्पृश्यते , तदानस्मरति नैवकिंञ्चन पारत्रिकं नापरोक्षदृक् भवति ॥

* आपदः क्षणमायान्ति क्षणमायान्ति संपदः । क्षणंजन्माथमरणं सर्वनश्वरमेवतत् ॥

† एषसर्वाणि भूतानि पञ्चभिर्व्याप्यमूर्तिभिः । जन्मवृद्धिक्षयैर्नित्यं संसारयति चक्रवत् ॥

பிரும்மபுராணம்-அத்-கூகூ-ல்,-* "ஓ! ஜநார்த்தனு! தாண்
"டக்கூடாததாயும், மயிர்க்கூச்சமுண்டாக்கத்தக்கதாயும் அழி
"வுள்ளதாயும், மிகவும் துக்கமுள்ளதாயும், வாழைக்குருத்துப்
"போலுபயோகமற்றதாயும் ஆதாரமற்றதாயும் பிடிப்பற்றதா
"யும் நீர்க்குமிழிபோல் நிலையற்றதாயும் ஸகலவிதத் துன்பத்
"தோடு கூடியதாயும் கடக்கத்தகாததாயும் அதி பயங்கரமான
"தாயுமிருக்கிற இந்த ஸம்ஸாரத்தில் நாராயணனுகிய உம்மு
"டைய மாயையினுல் மயங்கினவனுய் வெகுகாலமாய்ச் சுழலு
"கிறேன். விஷயத்திலெப்போதும் பற்றுள்ளவனுய் ஸம்ஸாரத்
"தின் முடிவையடையவில்லை."

பிரும்மவை வர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத் உ௬-கூ-
ஙு௨-ல்-† "ஓ! பிராம்மணுேத்தமா! இந்த ஸகலமான ஜநந
"மரணமாகிற ஸம்ஸாரமானது நீர்க்குமிழிபோலழியத்தக்க
"தே. ஜலத்திற் கிழிக்கப்பட்ட கோடானது எப்படிப் பொய்
"யாய் விடுகிறதோ அப்படித்தான் இம்மூன்றுலகமும் (என்றறி
"யுங்கள்)."

அத்தியாத்துமராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்-அத்-ரு-ல்-
‡ "பொய்யாய்க் கற்பிவிக்கப்பட்டிருக்கிற இந்த ஸம்ஸாரமா
"னது, விஷயங்களையேத் தியாகஞ் செய்துகொண்டிருக்கிறவனு
"க்குத் தானுகவே நீங்கிப்போகிறதில்லை. சுவப்நம் பொய்
"யென்கிற க்ஞாநமானது சுவப்நத்திலேயே நிவிருத்தியாகா
"ததுபோல, அநாதியான அவித்தையினுடைய ஸம்பந்தத்தினு
"லேயும், அதன் காரியமான அகங்காரத்தினுலேயுமுண்டாயி

---

* संसारेऽस्मिन् जगन्नाथ दुस्तरे लोमहर्षणे । अनित्ये दुःखबहुळे कदळीदळसन्निभे ॥१८४॥ निराश्रये निरालंबे जलबुद्बुदचंचले । सर्वोपद्रवसंयुक्ते दुस्तरे चातिभैरवे ॥१८५॥ भ्रमामि सुचिरंकालंमायया मोहितस्तव । नचान्तमधिगच्छामि विषयासक्तमानसः । १८६ ।

† जलबुद्बुदवत्सर्वं संसारमति नश्वरं । जलरेखा यथामिथ्या तथा ब्रह्मन् जगत्रयं ॥

‡ मिथ्यारोपित संसारो नस्वयंविनिवर्तते । विषयान् ध्यायमानस्य स्वप्नोमिथ्यागमो यथा । १९ । अनाद्यविद्यासम्बन्धा त्तत्कार्याहं कृतेस्तथा ।

"ருக்கிறது. இராகம், துவேஷமுதலியவைகளோடு கூடியிருக்
"கிறதாகிய இந்த ஸம்ஸாரமானதுப் பிரயோஜநமற்றதாகவே
"யாகிறது."

33. ஓ! ஜயவிரதா! இதுவரையிலுதகரித்துவந்த வாக்கியங்கள், இப்பிரபஞ்சமுமதன் காரியமான ஸம்ஸாரமு மித்தேகமு மழியத்தக்கதென்றும் இப்பிரபஞ்சத் தோற்றமெல்லாம் சுவப்நம் போலவும் இந்திரஜாலம் போலவும் பொய்யானதென்றுஞ் சொல்லுகின்றன. பிரபஞ்சமும் பிறப்பிறப்பு சுகதுக்காநுபவங்களோடு கூடிய இந்த ஸம்ஸாரமும் ஸத்தியமென்று எதுவரையில் நம்பப்படுகிறதோ அதுவரையில் ஸம்ஸாரம் நிவிருத்தியாகமாட்டாது. ஸம்ஸாரம் நிவிருத்தியாலன்றி உத்தம ஸுகமான மோக்ஷமடையப்படமாட்டாது. இச்சம்ஸாரத்தில் ஸுகமென்பது மிகவும் அற்பமானதாயும், க்ஷணகாலத்திற்குள் துக்கமாய் மாறத்தக்கதாயுமிருக்கிறது. ஸம்ஸார ஸுகத்தின் சுவரூபத்தை யொரு திருஷ்டாந்த மூலமாய் நிரூபிக்கிறேன் கேள்—

ஒரு மனிதன் ஒரு காட்டிற்குள் போய்க்கொண்டிருக்கையிலவனைக்கண்ட ஒரு புலியானது அவனைக்கொன்று தின்றுவிட நினைத்து அவனைப் பிடிக்கப் போகையிலவன் தப்பித்துக்கொண்டு ஓடினான். புலி அவனைப் பின் துடர்ந்தது. அவனோடுகையில் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்தான். அப்படி விழுந்தவன் தண்ணீரில் விழுந்து மரித்துவிடுவோமென்றெண்ணி அக்கிணற்றினருகிலிருந்த கொடி செடிகளைப்பற்றித் தொங்கினான். அதனாற் கைகளில் வலியுண்டாய்க் கிணற்றினடியிலிறங்கப்பார்த்தான். அடியிற் தண்ணீரில்லாமலிருந்தாலும் பெரிதான ஒரு ஸர்ப்பம் படத்துடன் சீறிக்கொண்டு அடியிலிருக்கிறதைக்கண்டான். ஆகையால், கீழே இறங்கப்பயந்தான். மேலாக வேறிப்போகலாமென்றாற், புலி கிணற்றினருகிலவனைக்குறிப்பிட்டுக்கொண்டு நிற்கிறது. இப்படி மேலும் போகக்கூடாமற் கீழுமிறங்கக் கூடாமற் கைகளுந் தபித்துக்கொண்டிருக்கையில் அக்கிணற்றின் மேற்பாகத்திலிருக்கிற ஒரு மரத்தின் கிளையிலிருந்த ஒரு தேன் கூடு கலைந்துபோய் அத்தேன் ஒழுகிக்கொ

---

संसारोऽपार्थकोऽपि स्याद्रागद्वेषादिसंकुलः । २० ।

ண்டு அத்தாரை இக்கிணற்றிலும் விழுந்தது. இந்த நிர்ப்பாக்கியன் அந்தத் தேன் தாரையைக்கண்டு தன் நாக்கை நீட்டிஅந்தத்தாரையையுண்டு அதனுற் திருப்தியையடைந்தான். இப்படிப்பட்ட ஆபத்திலித்தேனினுடைய ருசியினுற் திருப்தியையடைந்த இவனுடைய சுகமெப்படிப்பட்டதோ, ஸம்ஸாரத்திலநுபவிக்கும் சுகமும் அப்படிப்பட்டதென்றே அறி. ஆகையாலிந்த ஸம்ஸாரத்திற் சுகமென்கிற க்ஞாநமக்ஞாநமே. உத்தமமான மோக்ஷ ஸுகத்தையடையும் விஷயத்திற்காகத்தான் ஒவ்வொருவனும் முயற்சிசெய்யவேண்டியது. அல்லது மோக்ஷத்திற்குத்தாழ்ந்ததும் கிரமக்கிரமமாய் மோக்ஷத்தை யடைவதற்கு ஸாதநமுமான பிரும்மலோகம், கைலாஸம், வைகுண்டம், சுவர்க்கலோகம், சூரிய சந்திராதிலோகங்கள் முதலிய தேவலோகங்களிற் தேவாதிஜந்மத்தையடையவாவது, அல்லது, இவ்வுலகத்தில் மனிதர்களுக்குள் ளுத்தம மனித ஜந்மத்தையடையவாவது முயற்சிசெய்யவேண்டியது. அந்த தேவாதிலோகங்களின் சுகமானது மனித சுகத்தைவிட அநேகமடங்கு சிரேஷ்டமானது. இவ்வுலகத்தில் மனிதஜந்மமானது மிகுந்த புண்ணியகருமத்தினுலடையப்படுகிறதாகையால் அவன் மறுபடி இவ்வுலகத்திற் பிறந்தாலும் அந்தப் புண்ணிய கருமங்களின் விசேஷ பலன்களினுல் மோக்ஷஸுகமடையவிருப்பமுண்டாய் அதற்கு முயற்சிசெய்வான். இப்படிப்பட்ட ஒரு முயற்சியுஞ் செய்யாமல், ஆஹாரம் நித்திரைபயம் முதலியவைகளுக்குபயோகமாகவே திருவ்யாதிகளைச் சம்பாதிக்கவும்,விஷய சுகங்களையே யநுபவிக்கவும் முயற்சிசெய்துகொண்டிருக்கிற புருஷன் எத்தனைகோடி ஜந்மங்களெடுத்தாலும் ஸம்ஸாரத்திலிருந்து நிவிருத்தியையடைந்து மோக்ஷசுகத்தையடையமாட்டான். இப்படிப்பட்ட மனிதன் மிருகங்களுக்கொப்பானவனென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஏனென்றுல், மனிதன் தனக்குள்ள விசேஷமான அறிவினுலே ஆஹார நித்திரை பயமைதுநங்களுக்குபயோகமான திருவ்வியாதிகளை ஸம்பாதிக்கிறுன். மிருகங்களும் தனக்குள்ள அறிவினுல் ஆஹாரநித்திராதிகளுக்கு வேண்டிய வஸ்துக்களை ஸம்பாதித்துக்கொள்ளுகின்றன. ஆகையாற் பேதமில்லை. ஒவ்வொரு நிமிஷத்திலும் மனிதன் தன்னை நற்கெதியிற்சேற்பிவித்துக்கொள்ள முயற்சிசெய்துகொண்டே

யிருக்கவேண்டும். இந்த சுவதந்திரம் மனிதனுக்கே யன்றி மிருகாதிகளுக்கில்லை. ஏனென்றால், மிருகாதிகளைவிட மனிதன் விசேஷ அறிவுள்ளவன். மனிதஜந்மமானது அநேககோடி புண்ணியங்களுடைய பலன்களினாலுண்டாயிருக்கிறது. ஆகையாலிந்தத் தேகத்திலிருந்துகொண்டே நற்கெதியையடைய முயற்சிசெய்யவேண்டும். இம்மனித ஜந்மத்தைப் புகழுகிற சாஸ்திரவாக்கியங்களிற் சிலதைக் குறிப்பிட்டுச்சொல்லுகிறேன் கேள்.

வராஹோபநிஷத்-அத்-உ-ல்-* "மனிதஜந்மமரிது. அதி "லும் புருஷப்பிறவியரிது. அதிலும் பிராம்மணகுலத்திற் பிறப் "பதரிது. இப்படிப்பட்டப் பிறவியையடைந்தும் வேதாந்த சிர "வணாதிகளினாலே வருணாசிரமங்களை (தர்மங்களை) அதிக்கிரமி "த்ததாகிய ஸர்வவ்வியாபகமான பிர்ம்மத்தினுடைய சச்சிதா "நந்த சுவரூபத்தை யெவனறியவில்லையோ அந்த அக்ஞாநியா "னவனெப்போது மோக்ஷமடையப்போகிறான்."

பிரும்மபுராணம்-அத்-கககூ-ல்-† "ஓ! பிராம்மணர்களே! "மானிடஜந்மமடைவது மிகவுமரிது. அதிலும் பிராம்மணஜந் "மம் மிகவுமரிது. அதிலும் விவேகியாயிருக்கிறது அரிது. "விவேகத்தினாற் தரும்மபுத்தியுண்டாகிறது. அந்தப் புத்தியி "னாற் புண்ணியமுண்டாகிறது. அதுதானிவனுக்கு மோக்ஷ "ஸாதநமாகிறது."

கருடபுராணம்-உத்தரகண்டம்-அத்-உ-ல். ‡ "(ஸ்தாவரம் "முதலிய ஜடவஸ்துக்களாகிய) பூதங்களுக்குள்ளே பிராணிகள் "(உயிருள்ளஜந்துக்கள்) சிரேஷ்டமானவை. பிராணிகளுக்கு "ள்ளே புத்தியினால் ஜீவிக்கப்பட்ட (மனித மிருக பக்ஷி, புழு

---

* दुर्लभं प्राप्य मानुष्यं तत्रापि नरविग्रहं । ब्राह्मण्यञ्चमहाविष्णोर्वेदान्तश्रवणादिना । अतिवर्णाश्रमं रूपं सच्चिदानन्दलक्षणं । योनजानाति सोऽविद्वान् कदा मुक्तो भविष्यति ॥

† कथञ्चिल्लभते जन्मदेहं मानुष्यकंद्विजाः । मनुष्यत्वेऽपि विप्रत्वं विप्रत्वेचविवेकिनं । ४ । विवेकाद्धर्मबुद्धिस्तु बुद्ध्याश्रेयोऽस्यसाधनं ॥ ५ ॥

‡ भूतानां प्राणिनः श्रेष्ठाः प्राणिनां मतिजीविनः । बुद्धिमत्सुनरः

"பூச்சிமுதலிய)வைகள் சிரேஷ்டமானவை. புத்தியினுல் ஜீவிக்
"கப்படும் பிராணிகளுக்குள்ளே மனிதர்கள் சிரேஷ்டமானவர்
"கள். மனிதர்களுக்குள்ளே பிராம்மணர்கள் சிரேஷ்டர்களெ
"ன்று (வேதத்திற்) சொல்லப்பட்டிருக்கிறூர்கள். பிராம்மணர்
"களுக்குள்ளே (கற்றறிந்த) வித்துவான்கள் சிரேஷ்டர்கள்.
"வித்துவான்களுக்குள்ளே ஸத்கருமங்களுடைய அறிவுள்ளவர்
"கள் சிரேஷ்டர்கள். அவர்களுக்குள்ளே ஸத்கருமங்களைச்செய்
"கிறவர்கள் சிரேஷ்டர்கள். ஸத்கருமங்களைச்செய்கிறவர்களுக்கு
"ள்ளேபிர்ம்மக்ஞாநிகள் சிரேஷ்டர்கள். சுவர்க்கமோக்ஷங்களை
"ஸம்பாதித்துக்கொள்ளத்தக்க மானிடஜந்மத்தையடைந்திருக்
"கிறவனெவனே அவனுற் சுவர்க்கமோக்ஷம் இவைகளிலொன்
"றையடைய முயற்சி செய்யப்படாமற் போகுமானுலவன்
"தன்னுத்துமாவை வஞ்சிக்கிறுனென்பது நிச்சயம்"

ஸ்ரீமத் சங்கராசாரியர் அவர்களாற் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற விவேக சூடாமணியில்- * "ஜந்துக்களுக்குள் "மானிடப்பிறவிமிகவுமரிது. அதிலும் புருஷத்தன்மையரிது. "அதிலும் பிராம்மணஜந்மமரிது. அதிலும் வேதாப்பியாசஞ் "செய்து அதன்படி யநுஷ்டிக்கிறதரிது. அதிலும் சாஸ்திர "வியுத்பத்தியிற் தேர்ந்திருக்கிறதரிது. அதிலும் ஆத்மாவின்ன "து அநாத்துமாவின்னதென்று பகுத்தறிவதரிது. அதிலும் தன் "னுடையசுவாநுபவத்தினுலே தன்னுத்துமாவையறிதலரிது. "அதிலுந்தானே பிர்ம்மமாயிருக்கிறேனென்ற நிலைமை யரிது. "இதுதான் முக்தி (மோக்ஷமடையும்நிலைமை). இவையெல்லாம்

---

श्रेष्ठा नरेषु ब्राह्मणाःस्मृताः । ११ । ब्राह्मणेषुच विद्वांसो विद्वत्सु कृतबुद्धयः । कृतबुद्धिषु कर्तारः कर्तृषु ब्रह्मवादिनः । १२ । मानुष्यं यस्समासाद्य स्वर्गमोक्षप्रसाधकं । द्वयोर्नसाधयेदेकं तेनात्मा वञ्चितोध्रुवं । १३ ।
இந்த கக-கஉ-சுலோகங்களை மநுஸ்மிருதி அத்-க-சு-கூகூ-கூஎ-லுங் காண்க.

* जन्तूनां नरजन्मदुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता तस्माद्वैदिकधर्ममार्गपरता विद्वत्वमस्मात्परं । आत्मानात्मविवेचनं स्वनुभवो ब्रह्मात्मना संस्थितिर्मुक्तिर्नोशतकोटिजन्मसुकृतैः पुण्यैर्विना लभ्यते । २ । इतः कोन्वस्ति मू-

"நூறுகோடி ஜந்மங்களில் நன்றாயநுஷ்டிக்கப்பட்டப் புண்ணிய "கருமங்களாலன்றி கிடைக்கிறதில்லை. எவன் அரிதானமாணி "டதேகத்தையும் அதிலும் புருஷத்தன்மையை யடைந்தும் "தான் புருஷார்த்தங்களை (தரும்மார்த்தகாமமோக்ஷங்களை) "அடையமுயலாமல் மோசம் போகிறானோ இவனைவிட மூடன் 'வேறுயாரிருக்கிறான்? மிகவுமரிதான இந்த மானிடதேகத் "தை யடைந்தும், புருஷனாய்ப் பிறந்தும் வேதாந்தார்த்தங் "களையறிந்து எவன் தன்னைக் கரையேற்றிக்கொள்ளும் விஷ 'யத்திற் பிரயத்திநஞ் செய்யவில்லையோ அந்த மூடனானவன் "தன்னைத்தானே கெடுத்துக்கொண்டவனாகிறான். துஷ்டப் "பிசாசினாற் பிடிக்கப்பட்டவன்போல நாசத்தையடைகிறான்."

பிரும்மதருமம்· உ-௩௬-ல்,-* "சிறந்ததாகிய மானிடப்பிற "வியையடைந்தும் சரியான நிலைமையிலுள்ள பொறிகளைப்பெற் "றிருந்தும் ஆத்மாவுக்கு நன்மையான காரியத்தை யெவனறிய "வில்லையோ அவன் தன்னைக்கொன்றவனாகிறான்."

இப்படி மானிடப்பிறவி மிகவுமுத்தமமானதென்று சாஸ்தி ரங்கள் சொல்லுவதுமல்லாமற் புத்திமான்கள் ஆலோசித்துப் பார்த்தால் இதனுண்மையவர்களுக்கே விளங்கும். ஆகையா லொவ்வொருவனும் விஷயசுகத்தை சுகமாகவெண்ணாமலெப் போதுந்தன்னாத்துமா மேலான சுகத்தையடையும்படிச் செய்து கொள்ளவேண்டியது. இவ்வித முயற்சியைச் செய்யவேண்டிய தவசியமானாலும் யௌவநத்திற் பொருள்களைத்தேடி அதனால் விஷயசுகங்களை யநுபவித்துவிட்டு வயது சென்ற காலத்திற் பரலோக சுகத்திற்காக முயற்சி செய்வோமென்று எண்ணுவார் களானால் அது மிகவுமவிவேகமே. ஏனென்றால், இத்தேகமா னது நிலையுள்ளதல்ல. எந்த நிமிஷத்தில் மரணமுண்டாகுமெ

---

दात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति । दुर्लभं मानुषं देहं प्राप्य तत्रापिपौरुषं । ३ । लब्ध्वा कथञ्चिन्नरजन्मदुर्लभं तत्रापि पुंस्त्वं श्रुतिपारदर्शनं । यःस्वात्ममुक्तौ नयतेत मूढधी स्सह्यात्महास्वं विनिहन्त्य सद्ग्रहात् । ४ ।

* प्राप्यचाप्युत्तमं जन्म लब्ध्वाचेन्द्रियसौष्ठवं । नवेत्यात्महितं यस्तु सभवेदात्मघातकः ।

ன்பதை யெவனுமறியமாட்டான். இந்த அர்த்தத்தை சாஸ்திரங்களே சொல்லுகின்றன.

மஹாபாரதம்-ஆரண்ணியபருவம் (யக்ஷப்பிரசினம்) அத்-௨௯௮-௬-௧௨0-ல், *"பிராணிகள் தினந்தோறும் யமலோகத் "தையடைந்துகொண்டிருக்கிறார்கள். ஜீவித்துக்கொண்டிருக் "கிற மற்றவர்கள் தாங்கள் கல்லைப்போல் ஸ்திரமாயிருப்போ "மென்றெண்ணுகிறார்கள். இதைவிட ஆச்சரியம் வேறென்ன "விருக்கிறது?"

பருத்திருஹரி-௩-௫-ல், † "சூரியனுடைய உதயாஸ்தமனங் "களினால் ஆயுள் நாசமடைகிறது. செய்தகாரியங்களையே பின் "னும் பின்னுஞ் செய்து வருகிறதனாற் காலம் போவது தெரிகி "றதில்லை. பிறப்பு, கிழத்தனம், துன்பம் மரணமிவைகளைப்பா "ர்த்தும் பயமுண்டாகிறதில்லை. மோகத்தைக்கொடுக்கிற அக் "ஞானமாகிற சாராயத்தைக்குடித்து ஜனங்கள் பைத்தியம் பிடி "த்தலைகிறார்கள். நம்முடைய தாய்தந்தையரும் நம்முடன்கூட "விருத்தியடைந்தவர்களுமிறந்துபோனார்கள். நாமும் மரணத் "திற்குத் தினந்தோறும் நெருங்கிவருகிறோம். மணற்தரையான "ஆற்றோரத்திலுள்ள மரங்களுக்கொப்பான அவஸ்தையை "யடைந்திருக்கிறோம். மனிதர்களுடைய ஆயுள்நிலை நூறுவரு "ஷமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிற் பாதிநித்திரை "யிற்செல்லுகின்றது. மற்றபாதியிற்பாதி வாலிபத்திலுங் கிழத் "தனத்திலுஞ் செல்லுகின்றது. மிச்சமுள்ளதோ, வியாதி, "காமவிகாரம், துக்கம் ஊழிய முதலியவைகளினாற்சிலவழிக்கப்

---

* अहन्यहनि भूतानि प्रविशान्ति यमालयं । शेषाःस्थावरमिच्छन्ति किमाश्चर्यमतः परं ॥

† आदित्यस्य गतागतैरहरहस्संक्षीयते जीवितं व्यापारैः पुनरुक्तकार्य गुरुभिः कालोहि नज्ञायते । दृष्ट्वा जन्मजराविपत्तिमरणं त्रासश्च नोत्पद्यते पीत्वा मोहमयीं प्रमादमदिरामुन्मत्तभूतं जगत् ॥ ४३ ॥ वयं येभ्यो जाताश्चिरपरिचिता एव खलुते समं यैस्संवृद्धाः स्मृतिविषयतां तेपिगमिताः । इदानीमेतेस्म प्रतिदिवसमासन्नपतना गतास्तुल्यावस्थां सिकतिलनदीतीरतरुभिः ॥ ४८ ॥ आयुर्वर्षशतं नृणां परिमितं रात्रौ तदर्धङ्गतं तस्यार्धस्य परस्यचार्धमपरं बालत्ववृद्धत्वयोः । शेषं व्याधिवियोगदुःखसहितं सेवादिभिर्नी-

"படுகிறது. ஆகையால், ஜீவித்திருப்பது, ஜலத்திலலைபோற் சஞ்
"சலமாயிருக்கையிற் பிராணிகளுக்கு ஸௌக்கியம் (சுகம்) எப்
"படியுண்டாகும்?"

ஸ்ரீமத் சங்கராசாரியர் செய்திருக்கிற பஜகோவிந்தம் க0-ல், * "பகற் போகிறது, இரவு வருகிறது, சூரியன் அஸ்
"தமநமாகிறது, பிறகு உதயமாகிறது, சிசிரருது போகிறது,
"வஸந்தருது வருகிறது, (இப்படி ஒன்றுபோய் மற்றொன்று
"வருகிறதாய்) காலமானது விளையாடுகிறதினாலே ஆயுள் போ
"கிறது. அப்படியிருந்துங்கூட ஆசையாகிற பிசாசுவிடுகிற
"தில்லை"

ஒரு மஹான் வாக்கியம். † "ஜந்துக்கள் அடுத்த நிமிஷத்
"தில் ஜீவித்திருப்பார்களென்பதற்கு யாதொருப்பிரமாணமுங்
"காணவில்லை."

மேற்கண்ட வாக்கியங்கள், மனிதன் தன்னுடைய மரணகாலமின்னதென்றறிந்துகொள்ள சக்தியற்றவனாயிருக்கிறதனால் வாலிபதசை முதல் மரணம் வரையிற் றன்னை நற்கெதியிற் சேர்ப்பிக்கும்படியான முயற்சியைச் செய்துகொண்டிருக்கவேண்டிய தவசியமென்று போதிக்கின்றன. ஆகையால் மனிதன், தனக்கு நன்மையைத்தானே தேடிக்கொள்ளவேண்டுமேயன்றி ஏமாந்திருக்கலாகாது. இச்சம்ஸாரத்தில் என்புத்திரன், என்மனைவி, என்பந்துக்கள், என்னுடைய தநம், என்னுடைய வீடு என்பது முதலிய அபிமாநங்கொண்டவைகளிலுழலுகிறவன் பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரபந்தத்திலிருந்து ஒருக்காலும் விடுபடமாட்டான். மேலானசுகத்தையடையவுமாட்டான்.

34. ஜயவிரதன்:—ஓ! பகவானே! இவ்வுலகத்தில் மனைவி மக்கள், பந்துக்கள் முதலியவர்களுடன்கூடி வாழ்ந்திருப்பது சுகமென்றும், புத்திரனால் உத்தமலோகமடையப்படுகிறதென்றும் விவேகிகள்கூட எண்ணிக் குடும்பத்தோடு வாழ்கிறார்கள்.

---

यते जीवेवारितरङ्गचञ्चलतरे सौख्यं कुतः प्राणिनाम् ॥ ४९ ॥

* दिनयामिन्यौ सायंप्रातश्शिशिरवसन्तौ पुनरायातः । कालः क्रीडति गच्छत्यायुस्तदपि नमुञ्चत्याशावायुः ॥

† नहि प्रमाणं जन्तूनामुत्तरक्षणजीवने ।

அப்படியிருக்க, புத்திரன்முதலிய பந்துக்களாற் பரலோகப் பிரயோஜநம் இவனுக்குண்டாகிறதில்லையென்றும் இவன் நற்கெதியையடைய இவனே முயற்சிசெய்யவேண்டுமென்றுஞ் சொன்னீர்களே, அதனுற் புத்திரன்முதலிய பந்துக்களாலுண்டாகும் சுகமெப்படிப்பட்டதென்பதை யறிந்துகொள்ள விச்சிக்கிறேன்.

35. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! மனைவிமக்கள் முதலிய பந்துக்களாற்தனக்குப் பரலோகசுகமுண்டாகிறதாக அநேகர் எண்ணுகிறார்களது அக்ஞாநமே. இவ்வுலகவிஷயங்களை சுகமாகவெண்ணி அவைகளையநுபவிக்கிறவர்கள்யாரோ அவர்கள் புத்திரன்முதலிய பந்துக்களாற் சுகமுண்டாகிறதாக எண்ணுகிறார்கள். அப்படிப்பட்டசுகமும் ஆஹாரம் முதலியவைகளால் ஸுகமுண்டாகிறதாக நீயெண்ணினயே அப்படிப்போலொற்றசுகந்தான். புத்தென்கிற நரகத்திலிருந்து விடுவிக்கிறவன் புத்திரனென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இத்தேகம்போனபிறகு இவனநுபவிக்கவேண்டியதாயிருக்கிற பாபபலன்களில் மனப்பூர்வமாயல்லாத ஒருவிதமான பாபபலனுக்காக அநுபவிக்கப்படுகிற புத்தென்கிற நரகத்திலிருந்து, புத்திரனல் விடுவிக்கப்படுகிறனென்று சொல்லியிருந்தபோதிலும் மனப்பூர்வமாய்ச்செய்த ஸகலபாபாநுபவங்களிலிருந்தும் விடுவிக்கப்படமாட்டான். ஆகையாற் புத்திரனைப் பிரயோஜநமுண்டாக்குகிறவனுக சாஸ்திரங்கள்சொல்லியது, அற்பப்பிரயோஜநத்தையுத்தேசித்தென்றே நிச்சயித்துக்கொள்.

36. புருஷனுனவன் காமத்தைஜயிப்பது மிகஅரிது. காமத்தினலநேகர், தேகத்தைக்கெடுத்துக்கொண்டதுமல்லாமல் அநேகவிதபாபங்களையுஞ் செய்கிறார்கள். ஆகையாற் காமத்திற்குப் பரிஹாரமாயும் காமாநுபவத்துடன் நற்கெதிக்குப் பிரயோஜநமாயுமிருக்கும்பொருட்டு ஸ்திரீகளையடைந்து அவர்களுடன்சேர்ந்து இன்னின்ன கருமங்களைச்செய்தாற் தேவாதிலோகங்களையடைந்து சுகமநுபவிக்கலாமென்றும், ஸ்திரீகள் வேதாத்தியயநம், தபஸ், யோகம்முதலிய கருமங்களைத்தாங்களாகவே செய்யும்சக்தியும் தைரியமும் தேகபலமுமில்லாதவர்களானதனுலவர்கள் பதியையடைந்து அவனுடையஸத்கருமங்களுக்குதவி செய்வதனுலிந்தஸ்திரீகளுக்கும் நற்கெதி

புண்டாகிறதென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இவ்விதமாய் மனைவிமக்கள் பந்துக்கள் முதலியவர்களாலடையப்படும் பிரயோஜநம் மிகவுமற்பமானதே. இவன்செய்தபாபங்களுடைய பலன்களையும் புண்ணியங்களுடையபலன்களையுமவனுகவே அநுபவிக்கவேண்டுமேயன்றி மற்றவர்களநுபவிக்கமாட்டார்கள். இவனுக்குண்டான வியாதியானது இவன் மருந்துண்பதனுல் நிவிர்த்தியாகவேண்டுமேயன்றி பந்துக்கள் மருந்துண்பதனுலொருவனுக்கும் வியாதி நிவிர்த்தியாகமாட்டாது. அப்படிப்போற், தன்பந்தத்தை நிவிர்த்தித்துக்கொள்ளத் தானேமுயற்சிசெய்யவேண்டும். பந்துக்களுடையவிஷயத்தைச் சற்று யோஜித்துப்பார்ப்போமானுற், சந்தையிற் கூடுகிறஜநங்கள், அண்ணனென்றும் தம்பியென்றும் மாமனென்றும் மைத்துனனென்றும் முறைமைகொண்டாடிச் சிலநேரத்திற்குப்பிறகுப் பிரிந்துபோவதுபோல பூர்வகருமவசத்தினுலொருவனுக்கு மனைவிமக்கள்முதலிய பந்துக்கள் சேருவதும் பிரிவதுமாயிருக்கிறது. ஒவ்வொருவருந் தன்னுடைய பூர்வகருமத்தினுற் பிறந்து, சுகதுக்காதிகளையநுபவித்து, பிராரப்தம் முடிந்தவுடன் தன்னுடைய கருமாநுஸாரமாய் வேறுஜந்மத்தையடைகிறுன். அவனுக்குதவியாய்ப் பந்துக்கள்யாருங் கூடப்போகிறதில்லை. அவ்விடத்திலவனுக்குதவிசெய்கிறதுமில்லை. இவ்வுலகத்திற் தன் மனைவி, தன்மக்கள், தன்பந்துவென்று அவர்களிடத்திலபிமானங்கொண்டு அவர்களுக்குண்டாகும் சுகதுக்கங்கள் தன்னுடையதுபோற், பிரமையையடைந்து துக்கத்தையனுபவிக்கிறுன். இதுவிஷயமாய்ச் சாஸ்திரங்களென்ன சொல்லுகின்றனவென்றுல்:—

மநுஸ்மிருதி-அத்.௪-ல், * "ஒவ்வொருப் பிராணியும்,
"தானொருவனுகவேபிறக்கிறுன், ஒருவனுகவே இறக்கிறுன்,
"புண்ணியபாப கருமங்களை யொருவனுகவே தானனுபவிக்கி
"றுன். இவனிறந்தபின்பு, விறகு, மண்கட்டி இவைகளைப்
"போல இவனுடைய சரீரத்தைப் பூமியிற்போட்டுவிட்டுப்

---

* एकः प्रजायते जन्तुरेकएव प्रलीयते । एकोनुभुङ्क्ते सुकृतमेकएव च दुष्कृतम् ॥ २४० ॥ मृतंशरीरमुत्सृज्य काष्ठलोष्ट समंक्षितौ । विमुखा बान्धवा यान्ति धर्मस्तमनुगच्छति ॥ २४१ ॥

"பந்துக்களெல்லோருந் திரும்பிப் போய்விடுகிறார்கள். இவனு "டையதருமம் (புண்ணியகருமபலனும், பாபகருமபலனும்) "மாத்திரமவனைத்துடர்ந்துபோகிறது." இந்தவாக்கியங்களைக் கெருடபுராணம்-உத்தரகண்டம்-அத்-௨-௪-௨௨-௨௩, மத்ஸ்ய புராணம் அத்-௨௧௨-௪-௫-௬-லும் காணலாம்.

கருப்போபநிஷத்தில், * "(கருப்பத்திலுள்ள சிசுசொல்வது) "பிறருடையப்(மக்கள் மனைவிமுதலிய பந்துக்களுடைய)பிரயோ "ஜநத்திற்காக முந்தி (முன் ஜன்மங்களில்) சுபாசுபகருமங்களைச் "செய்தேன். அதனுலிப்பொழுது நான் ஒருவனுகவே எரிக்கப் "படுகிறேன். அந்தக்கருமங்களினுற் பிரயோஜநமடைந்தவர் "கள் காணவில்லை. எங்கையோபோய்விட்டார்கள்."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-௨௪-௪-௩௪-ல், † "இந்தஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்திலொருவனுக் "குப் பெண்ஜாதியார்? மக்கள்யார்? (இப்படிப்பட்டஸம்பந்த "மக்ஞாநகற்பிதமென்பது கருத்து.)"

ஷ பஜகோவிந்தம்-எ-ல், ‡ "உனக்கு மனைவியார்? "மக்கள்யார்? இப்படிப்பட்ட ஸம்ஸாரமானது மிகவும் விசித் "திரமாயிருக்கிறது. நீ, யாருக்குப்புத்திரன். எங்கிருந்து "வந்தாய். வாஸ்தவத்தை யோஜித்துப்பார். (அப்படிப்பார்த் "தால்) இந்தஸம்ஸாரம்முதலியன, பிராந்தியென்றே உனக்குத் "தோற்றும்".

ஞாநியான பட்டணத்துப்பிள்ளைசொன்னது:— "அன்னை "யெத்தினை யெத்தினையன்னையோ அப்பனெத்தினை யெத்தினை "யப்பனே. பிள்ளையெத்தினை யெத்தினைபிள்ளையோ பெண்டீ "ரெத்தினை யெத்தினைபெண்டீரோ. முன்னையெத்தினை யெத்தி "னைஜந்மமோ, மூடனடியேனுமறிந்ததில்லை. இன்னுமெத்தி "னை யெத்தினைஜந்மமோ இரவாகச்சியேகம்பனே—கட்டிய

---

* पुरा परजनस्यार्थे कृतं कर्म शुभाशुभं । एकाकी तेन दह्यामि गतास्ते फलभागिनः ॥

† कावा कस्य प्रिया पुत्रो बन्धुः कोवा भवार्णवे ।

‡ का ते कान्ता कस्ते पुत्र स्संसारोयमतीवविचित्रः । कस्य त्वं वा कुत आयातस्तत्वं चिन्तयतदिहभ्रान्तः ॥

"ணைக்கின்ற பெண்டீரும் மக்களும் காலத்தச்சன்வெட்டி முரிக்
"கின்ற மரம்போற் சரீரம்விழுந்துவிட்டாற், கொட்டிமுழக்கிட்
"டழுவார்ஸ்மசாநம் குறுகியப்பாலெட்டியடிவைப்பரோ இரவா
"கச்சியேகம்பனே."

கருடபுராணம்-உத்தரகண்டம்-அத்-உ-ல், * "(மனிதனா
"னவன்) பால்லியத்திற் தகப்பன் தாய்சுவரூபமாயிருக்கி
"ருன். (தகப்பன் தாயிவர்களைத்தவிர வேறுதானடையவே
"ண்டியவஸ்துவொன்றிருக்கிறதாக வறிகிறதில்லை யென்பது
"கருத்து. அப்படியே) யௌவ்வநத்தில் மனைவிசுவரூபியா
"யும் பிறகு புத்திர பௌத்திரசுவரூபியாயுமிருக்கிறுன். இப்
"படிப்பட்ட மூடனெருக்காலத்திலுமாத்துமசுவரூபியாகிறதில்
"லை. (தன்னுத்துமசுவரூபத்தையறிகிறதில்லை யென்பதுகருத்
"து) புருஷனனவன் உலோகம் மரம் இந்தசுவரூபமான விலங்
"கிறைற்கட்டப்பட்டவனுனல் அதிலிருந்துவிடுதலையடைவான்.
"புத்திரன் மனைவி சுவரூபமான விலங்கிறைற்கட்டப்பட்டவன்
"விடுதலையடைகிறதில்லை (பந்தத்திலிருந்துவிடுபட்டு மோக்ஷ
"மடைகிறதில்லை)."

இப்படிப்பட்டப் பந்துக்கள் விஷயத்திலபிமாநங்கொண்டு அவர்களை இரக்ஷிப்பதற்காக பாபகாரியங்களைச்செய்துவந்ததாகிற ஓரிதிஹாஸத்தைச்சொல்லுகிறேன்கேள்.

அத்தியாத்துமராமாயணம், அயோத்தியாசாண்டம், ஸர்க்கம்-சு-ல், † "(வால்மீகி மகருஷி சொல்லுகிறுர்) நான், முந்திக்
"கிராதர்(வேடர்)களுடைய தேசங்களிற் கிராதர்களோடு வளர்ந்
"தேன். நான் பிறப்பில்மாத்திரம் பிராம்மணனுனலுஞ் சூத்திரர்
"களுடைய ஆசாரங்களையே யெப்போதுமநுஷ்டித்துவந்தேன்.
"ஜயிக்கப்படாத மனதையுடைய வெனக்குச் சூத்திரஸ்திரீயினி
"டத்திலநேகப்புத்திரர்களுண்டானுர்கள். பிறகு நான் அப்போ

---

* पितृमातृमयो बाल्ये यौवने दयितामयः । पुत्रपौत्रमयः पश्चात् मूढो नात्ममयः क्वचित् ॥१९॥ लोहदारुमयैः पाशैः पुमान् बद्धो विमुच्यते । पुत्रदारमयैः पाशैः बद्धो नैव प्रमुच्यते ॥२०॥

† अहं पुरा किरातेषु किरातैस्सहवर्द्धितः । जन्ममात्र द्विजत्वं मे शूद्राचाररतस्सदा ॥ ६९ ॥ शूद्रायां बहवःपुत्रा उत्पन्नामेऽजितात्मनः । ततश्चो-

"து திருடர்களுடன் சேர்ந்து திருடனானேன். தினந்தோரும்
"வில்லு அம்புகளையெடுத்துக்கொண்டு ஜீவஜெந்துக்களுக்கு
"யமனைப்போலிருந்தேன். ஒருகாலத்திற் பெருங்கானலிலே
"அக்நியைப்போலவும் சூரியனைப்போலவும் ஒளிபொருந்தியவர்
"களாயும் அதனாற் பிரகாசிக்கிறவர்களாயுமிருக்கிற ஸப்த ரிஷி
"களென்னாற் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கப்பட்டார்கள். அவர்
"களிடத்திலுள்ள பொருள்களையெல்லாம் பறித்துக்கொள்ளும்
"பொருட்டு ஆசையினாலவர்களைப் பின்துடர்ந்து நில்லு நில்
"லென்று சொன்னேன். அந்தமுனிகளென்னைப்பார்த்து ஓ!
"பிராம்மணாதமா! எதற்காக (எங்களைப்பின்துடர்ந்து) வருகிறா
"யென்று கேட்டார்கள். ஓ! முநிசிரேஷ்டர்களே! எனக்குப்
"பசியுள்ளவர்களான மக்கள் மனைவி முதலியவர்கள் வெகு
"பெயர்களிருக்கிறார்கள். அவர்களைக்காப்பாற்றுவதின்பொ
"ருட்டு இம்மலைக் காடுகளிற் திரிந்துக்கொண்டிருக்கிறேன்.
"உங்களிடத்திலிருந்தெதேனும் பறித்துக்கொள்ளுவதற்காக
"(பின்துடர்ந்தேன்) என்றுசொன்னேன். பிறகு கலங்காதமன
"தையுடையவந்த ரிஷிகளென்னைக்குறித்துச் சொன்னதாவது,
"நீயுன் குடும்பத்தாரிடத்திற்குப்போய் "நான் நாடோருஞ்
"செய்கிறதாகிய பாபக்கூட்டமெதெதுண்டோ அதில் நீங்கள்
"பங்கையுடையவர்களா அல்லவா" என்று ஒவ்வொருவரையும்
"தனித்தனியாய்க்கேள். (அப்படிக்கேட்டுவிட்டு) நீ திரும்பிவ
"ருகிறவரையில் நிச்சயமாய் நாங்களிவ்விடத்திலிருக்கிறோம்

---

रैश्वसंगम्य चोरोहमभवं पुरा ॥६६॥ धनुर्बाणधरोनित्यं जीवानामन्तको-
पमः । एकदा मुनयस्सप्त दृष्टा महतिकानने ॥६७॥ साक्षान्मयाप्रकाश-
न्तो ज्वलनार्कसमप्रभाः । तानन्वधावं लोभेन तेषां सर्वपरिच्छदान् ॥६८॥
ग्रहीतुकामस्तत्राहं तिष्ठातिष्ठेति चाब्रुवं । दृष्ट्वा मां मुनयोऽपृच्छन् किमाया-
सि द्विजाधम ॥६९॥ अहं तानब्रुवं किंचिदादातुं मुनिसत्तमाः । पुत्रदारा-
दयस्सन्ति बहवो मे बुभुक्षिताः ॥७०॥ तेषां संरक्षणार्थाय चरामि गिरि-
कानने। ततो मामूचुरव्यग्राः पृच्छ गत्वाकुटुम्बकम् ॥७१॥ योयोमया प्रति-
दिनं क्रियते पापसञ्चयः । यूयं तद्भागिनः किंवा नेतिवेति पृथक् पृथक् ॥
७२॥ वयं स्थास्यामहे तावदागामिष्यासि निश्चयः । तथेत्युक्त्वा गृहं ग-

"(என்று சொன்னார்கள்.) அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி
"யென்வீட்டிற்குச்சென்று ஓ! இராமா! முனிகளாலெது சொல்
"லப்பட்டதோ அதைப்புத்திராதிகளிடத்தில் நன்றாய்க்கேட்
"டேன். அவர்கள் "அந்தப்பாபம்முழுதுமுன்னுடையதே.
"நாங்களோவென்றால், நீ கொண்டுவந்த ஆஹாராதிவஸ்துக்க
"ளைப்புஜிக்கிறதிற் பாகமுடையவர்கள்" என்றார்கள். அதைக்
"கேட்டொழிவடைந்து ஆலோசித்துக் கருணையினால் நிறைந்த
"மனதையுடையவர்களான முனிகளெவ்விடத்திலிருக்கிறார்க
"ளோ அவ்விடத்திற்கு மறுபடிச் சென்றேன். முனிகளுடைய
"தரிசநத்தினாலேயேப் பரிசுத்தமான அந்தக்கரணத்தையுடை
"யவனாய் வில் முதலியவைகளை யெறிந்துவிட்டு ஓ! முனிசிரேஷ்
"டர்களே! நரகமாகிற ஸம்ஸாரசமுத்திரத்தை யடைந்திருக்கிற
"வென்னை இரக்ஷிக்கவேண்டுமென்று தடிபோல் (அவர்கள்
"பாதத்தில்) விழுந்தேன். இவ்விதமாயவர்களுக்கெதிரில் விழு
"ந்துகிடக்கிற வென்னைப்பார்த்து முனிசிரேஷ்டர்கள் சொன்
"னதாவது, "உனக்கு மங்களமுண்டாகட்டு மெழுந்திரு எழு
"ந்திரு. ஸத்துக்களுடைய சேர்க்கையின்பலனிதுதான்." (இப்
"படிச்சொல்லி) அந்த மஹரிஷிகளொருவரோடொருவர்
"ஆலோசித்துப் பிராம்மணாதமனான இவன் துர்நடத்தையுள்ள
"வன். நன்னடக்கையுள்ளவர்களால் விலக்கத்தக்கவனே.
"அப்படியிருந்தாலும் (நம்மை) சரணமாக வடைந்திருக்கிறான்.
"மோக்ஷமார்க்கத்தை யுபதேசிக்கிறதின் மூலமாய் முயற்சியி
"னாலே இரக்ஷிக்கத்தக்கவன்" (என்றுபதேசித்தார்கள்).

---

त्वा मुनिभिर्यदुदीरितं ॥ ७३ ॥ आपृच्छं पुत्रदारादीं स्तैरुक्तोहं रघूत्तम । पापं तवैव तत्सर्वं वयं तु फलभागिनः ॥ ७४ ॥ तच्छ्रुत्वा जातनिर्वेदो विचार्य पुनरागमं । मुनयो यत्रातिष्ठन्ति करुणापूर्णमानसाः ॥ ७५ ॥ मुनीनां दर्शनादेव शुद्धान्तःकरणोभवं । धनुरादीन्परित्यज्य दण्डवत्पतितोस्म्यहं ॥ ७६ ॥ रक्षध्वं मां मुनिश्रेष्ठा गच्छन्तं निरयार्णवं । इत्यग्रे पतितं दृष्ट्वा मामूचुर्मुनिसत्तमाः ॥ ७७ ॥ उत्तिष्ठोत्तिष्ठ भद्रं ते सफलस्सत्समागमः । उपदेक्ष्यामहे तुभ्यं किंचित्तेनैव मोक्ष्यसे। परस्परं समालोक्य दुर्वृत्तोयं द्विजाधमः ॥ ७८ ॥ उपेक्ष्य एव सद्वृत्तै स्तथापि शरणं गतः । रक्षणीयः प्रयत्नेन मोक्षमार्गोपदेशतः ॥ ७९ ॥ இந்தச் சரித்திரம் பவிஷ்யபு-ரு-கo-ல்,சுதி முதல் சுரு-வரை சுலோகங்களிலுமிருக்கிறது.

இந்தவிதிஷாஸத்திறற்பந்துக்களாலுண்டாகும் பிரயோஜநமிப்படிப்பட்டதென்பது நன்ருய் விளக்கப்பட்டதல்லவா. மனுஷிமக்கள்முதலியவர்கள் தங்கள் தங்கள் பிரயோஜநத்தைக்கருதியே மற்றவர்களிடத்தில் ஸ்நேகம் அல்லது பிரியத்தைப் பாராட்டுகிருர்களேயன்றி, யாரிடத்திற் பிரியம் அல்லது ஸ்நேகம் வைக்கிருர்களோ அப்படிப்பட்டவனுடையப் பிரயோஜநத்தின்பொருட்டல்லவென்று சுருதியேசொல்லுகிறது.

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ச-ச-டு-ல், * "ஓ! மைத்"திரேயி! புருஷன் தன்னுடையப் பிரயோஜநத்தின்பொருட்"டுத் தன் பெண்ஜாதிக்குப் பிரியனுகவாகிறதில்லை. பெண்ஜாதி"யின் பிரயோஜநத்தின்பொருட்டுப் புருஷன் பெண்ஜாதிக்குப்"பிரியனுகவாகிருன். ஓ! மைத்திரேயி! பெண்ஜாதியினுடை"யப் பிரயோஜநத்தின்பொருட்டுப் பெண்ஜாதி புருஷனுக்குப்"பிரியமாகவாகிறதில்லை. புருஷனுடையப் பிரயோஜநத்தின்"பொருட்டுப் புருஷனுக்குப்பெண்ஜாதி பிரியமுள்ளவளாகிருள்."ஓ! மைத்திரேயீ! புத்திரர்களின் பிரயோஜநத்தின்பொருட்டுப்"புத்திரர்கள்(பெற்றேர்களுக்கு)பிரியமுள்ளவர்களாகிறதில்லை."தன்னுடையப் (பெற்றேருடைய) பிரயோஜநத்தின்பொருட்டு"புத்திரர்கள் பிரியமுள்ளவர்களாகிருர்கள்."

இந்தவாக்கியங்களின் கருத்தென்னவெனில், ஒவ்வொருவரும் தன்னுடைய நன்மையைக்கருதியே பெண்ஜாதி, புருஷன், புத்திரர்கள் முதலியவர்களிடத்திற் பிரியம்வைக்கிருனேயன்றி பெண்ஜாதி புத்திரர்களுடையப் பிரியத்திற்காகவல்ல. வாஸ்தவத்திற் பெண்ஜாதி புருஷனுக்காவது புருஷன் பெண்ஜாதிக்காவது புத்திரர்கள் பெற்றேர்களுக்காவது பெற்றேர்கள் புத்திரர்களுக்காவதுப் பிரியமுள்ளவஸ்துக்களாகவே யிருப்பார்களானுலந்தப்பிரியத்திற்கொருக்காலு மழிவுண்டாகக்கூடாது. பெண்ஜாதி புருஷர்முதலியவர்களுக்குள் விரோதமுண்டானுல்

---

* न वारेपत्युः कामायपतिः प्रियो भवत्यात्मनस्तु कामायपतिः प्रियो भवति । नवारे जायायै कामायजाया प्रियाभवत्यात्मनस्तु कामाय जाया प्रिया भवति । न वारे पुत्राणां कामायपुत्राः प्रियाभवन्त्यात्मनस्तु कामाय पुत्राः प्रियाभवन्ति ॥

அப்பிரியம் நசித்துவிடுகிறது. ஆகையால், ஒருவன் தனக்குப் பெண்ஜாதி அல்லது புத்திரர்களாலெவ்விதமான நன்மையாவது உண்டாகிறதென்கிற காரணத்தினாற்றான் அவர்களிடத்திலிவனுக்கும் இவனிடத்தில் அவர்களுக்கும் பிரியமுண்டாகிறதென்பது நிச்சயம். இதனாற் றன்னைத்தவிரப் பிரியமுள்ளவஸ்து வேறில்லையென்றேற்படுகிறது. இந்த அர்த்தத்தை வராஹோபநிஷத்-உ-வது அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது "अहमेव सुखं नान्यदन्यच्चेन्नैव तत्सुखम्।=நானே ஸுகம் வேறொன்றில்லை. வேறே (ஸுகம்) ஒன்றுண்டென்றாலதுஸுகமல்ல." இதனால், அகம்பதார்த்தமாகிய தன்னாத்துமாவைத்தவிர வேறு ஸுகமான வஸ்துவில்லையென்று கண்டோக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் மனைவி மக்கள் முதலியவர்களிவனுக்குச் சுகத்தையுண்டுபண்ணுகிறவர்களல்லவென்றேற்படுகிறது.

37. ஜயவிரதன்:—ஓ! பகவானே! புத்திரன் முதலிய பந்துக்களாலிவனுக்குப் பிரயோஜநமில்லாவிட்டாலவர்களையேனிவன் இரக்ஷிக்கவேண்டும்? உலகத்தில் விவேகிகளான அநேகர் மனைவி மக்கள் முதலியவர்களை யேன் இரக்ஷித்துவருகிறார்கள்?

38. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! இவ்வுலகத்தில் மனைவி மக்கள் முதலியப் பந்துக்களையுடைத்தாயிருக்கிற புருஷன் விவேகியானாலுமவிவேகியானாலுமவர்களை இரக்ஷிப்பது அவனுடைய நீங்கிலாக்கடமையாயிருக்கிறது. மக்கள் மனைவிமுதலிய பந்துக்களன்றியிலொருவனும் கிரஹஸ்தாசிரமியாகவாகமாட்டான். கிரஹஸ்தாசிரமத்திலிருக்கிற ஒவ்வொருவனும் தன் குடும்பத்தைச்சேர்ந்தவும் தன்னால் இரக்ஷிக்கப்படவேண்டியவும் பந்துக்களை இரக்ஷிக்கவேண்டியது அவனுடைய கடமையென்று ஈசுவராக்ஞையான சாஸ்திரங்கள் விதிக்கின்றன. ஆனால், அப்பந்துக்களை இரக்ஷிக்கும்பொருட்டு ஸம்பாதிக்கும்பொருள்கள் நியாயமானமார்க்கத்தினால் ஸம்பாதிக்கப்பட்டதாயிருக்கவேண்டுமேயன்றிப்பிறருக்குத் துன்பமுண்டாக்கத்தக்கவும் ஜீவஹிம்ஸையானவும் சாஸ்திரவிரோதமானவுங் காரியங்களைச்செய்து ஸம்பாதிக்கக்கூடாது. அக்கிரமமாய் ஸம்பாதிப்பதனாலுண்டாகிற பாபமிவனையே தொடரும்.

39. மஹாக்ஞாநிகளான மஹரிஷிகளும் மற்றுஞ்சில பெரியோர்களும் மக்கள் மனைவிமுதலியப் பந்துக்களுடன் சேர்ந்திருந்தபோதிலுமந்தப் பந்துக்களிடத்திலிருந்து யாதொருப்பிரியத்தையாவது ஸுகத்தையாவது விரும்பார்கள். மக்கள் மனைவிமுதலியப் பந்துக்களிடத்திலபிமாநங்கொண்டு அவர்களுடைய சுகதுக்கங்களைத் தங்களுடையதுபோற் பாவிக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள், எவ்வளவுப்பந்துகூட்டங்களோடு சேர்ந்திருந்தாலுமவர்களுக்கபிமானமில்லாததனாலே பந்துக்களாற் சுகதுக்கம் முதலியவையுண்டாக ஹேதுவில்லை. அபிமாநந்தான் துக்கத்திற்குக்காரணம். இந்த அர்த்தத்தைப்புராணஞ் சொல்லுகிறது.

கருடபுராணம்-பூர்வகண்டம்-அத்-ககங-சு-ருஅ-ல், *"எவ் "விடத்தில் (எந்தவஸ்துவில்) ஸ்நேகமானதிருக்கிறதோ அவ் "விடத்திற்பயமுமிருக்கிறது. ஸ்நேகமானது துக்கத்திற்கிருப் "பிடமானது. துக்கங்களுக்கு ஸ்நேகமே மூலமாயிருக்கிறத "னலந்தஸ்நேகத்தை விட்டுவிட்டால் மஹாசுகமுண்டாகிறது." (ஸ்நேகமென்பது அபிமானமென்றர்த்தம்).

ஓ! ஜயவிரதா! இவ்வுலகத்தில் ஸுகமென்பது அக்ஞாநத்தினாற் தோற்றுகிறதேயன்றி வாஸ்தவமாயிவ்வுலகத்திற்சுகமேயில்லை. அற்பமானவிஷயஸுகங்களை ஸுகமாகவெண்ணி அந்தவிஷயஸுகத்திற்காகவே முயற்சிசெய்துகொண்டிருக்கிற புருஷனைப்பெரியோர்கள் மிருகத்திற்கொப்பானவனென்று நிந்திப்பார்கள். அவன் பிறக்கிறதுமிறக்கிறதும் சுகதுக்கங்களையநுபவிக்கிறதுமாகவே வண்டிச்சக்கரம்போற் சுற்றிக்கொண்டேயிருப்பான். அவனெக்காலத்திலும், உத்தமசுகமான மோக்ஷத்தையடையமாட்டான். ஆகையால், நீ சுகமென்றெண்ணியிருக்கிறதெதோ அதெல்லாம் துக்கமென்றே அறி.

இனியுனக்கெதைக்கேட்க விருப்பமிருக்கிறதோ அதைக் கேட்கலாம்.

இரண்டாவதுப்பிரகரணம்
முற்றிற்று.

---

* यत्र स्नेहो भयं तत्र स्नेहो दुःखस्य भाजनं । स्नेहमूलानि दुःखानि तस्मिन् त्यक्तेमहत्सुखं ॥

# ஆரியமத சித்தாந்த ஸங்கிரகம்.

## மூன்றாவதுப்பிரகரணம்.

1. ஜயவிரதன்:—ஓ! பகவானே! இதுவரையிற் தாங்கள் சொல்லிவந்தவாக்கியங்களினால் நான், எதெதை சுகமென்று நம்பியிருந்தேனோ அதெல்லாம் மிகவுமற்பமானதுமழியத்தக்கதுந் துக்கமாகமாறத்தக்கதுமானதென்று எனக்கு நிச்சயமுண்டாயிருக்கிறது. உலகவிஷயஸுகம் வாஸ்தவமான சுகமல்லவென்று நிச்சயபுத்தியையடைந்தேன். மேற்கண்ட வாக்கியங்களினாலெனக்கு இரண்டு விஷயங்களில் ஸந்தேகமுண்டாயிருக்கிறது. அவைகளிலொன்றைப்பற்றி முதலிற் கேட்டறிந்துகொண்டு பிறகு மற்றொன்றைக் குறித்துக்கேட்கிறேன்.

அதாவது—இவ்வுலகத்தைச் சிருஷ்டித்துக்கார்த்தழிக்கும் ஈசுவரன், ஸகலப்பிராணிகளுடைய ஹிருதயத்திலிருந்துகொண்டு அந்தந்தப்பிராணிகள் செய்யவேண்டிய ஸகலகாரியங்களையும் அவரவர்களைச் செய்யும்படி நியமநம் (கட்டளை, அல்லது ஏவுதல்) செய்துவருகிறாரென்றும் அவருடைய நியமநமன்றியிற் பிராணிகள் யாதொரு காரியத்தையுஞ்செய்யச் சக்தியுள்ளதல்லவென்றும்,ஜீவனுக்கு சுவதந்திரமில்லையென்றும் பரமாத்துமாவினுடைய நியமநத்தினாலேயே காரியங்களைச்செய்கிறானென்றுமுலகத்தில் அநேகர் சொல்லுகிறார்கள். வித்துவான்களுங்கூடத்துக்கம்நேரிட்டகாலத்தில், ஈசுவரன் தனக்குத் துக்கத்தையுண்டுபண்ணிவிட்டதாகச்சொல்லுகிறார்கள். அநேகர் "இந்தப்பாழும்தெய்வம் "என்னையிப்படி சதித்துவிட்டது, அந்தத்தெய்வத்திற்குக்கண் "ணில்லை" யென்பது முதலியவாக்கியங்களினாற் தெய்வத்தை நிந்திக்கிறார்கள். இப்படித்தெய்வத்தினால் ஸகலகாரியங்களும் நடத்தப்படுவதானால் அவருடையநியமநப்படி நடந்தவனுக்குச் சுகதுக்கங்களெப்படியுண்டாகக்கூடும்? ஒவ்வொருவனும் தன்னைக்கடைத்தேரும்படிச் செய்துகொள்ள அவனவனே முயற்சிசெய்யவேண்டுமென்று முன் சொல்லப்பட்டது. மனிதனுக்குச்சுவதந்திரமில்லாவிட்டால் மனிதன் முயற்சிசெய்துப் பிரயோஜநமென்ன? இவ்விஷயத்தை யெனக்கு நன்றாய் விளக்கக்கோருகிறேன்.

2. ஸுசர்ம்மா:—ஓ! ஸுகுணமுள்ளவனே! ஈசுவரன் ஒவ்வொருப்பிராணியையுந் தன்நியமநம்போல் நடக்கும்படிச்செய்கிறார். பிராணிகளுக்குச் சுவதந்திரமாயொன்றையுஞ்செய்யச் சக்தியில்லையென்றநேகர் எண்ணுகிறார்களென்பது வாஸ்தவமே. அந்த அபிப்பிராயத்தை "तेनविना तृणमपि नचलति=அதன்றி அணுவுமசங்காது." என்கிறதுபோலொற்ற சுருதியைப் பிரமாணமாகவும் சொல்லுகிறார்கள். பின்னும்சிலர் ஈசுவரன் நியமநப்படித்தான் ஸகலப்பிராணிகளுங் காரியங்களைச்செய்கிறார்கள். ஆனால், ஜீவனுக்கு அற்பவிஷயங்களிற் பகவான் சுவதந்திரத்தைக் கொடுத்திருக்கிறாரென்று சொல்லுகிறார்கள். பிராணிகள் ஸத்கரும்ம துஷ்கரும்மங்களைச் செய்வதற்கு, நியாமகன் தெய்வம் அல்லது ஈசுவரனென்று நம்புவது பிசகான அபிப்பிராயத்தினாலென்றறி. ஈசுவரன் ஒவ்வொருப்பிராணியையும், "இன்னவித்தையை அப்பியாஸம் செய், இன்னவியாபாரத்"தைச்செய், இன்னஸ்திரீயைவிவாகம்செய்து இன்னவிதமாய "வளையநுபவித்துக்கொண்டிரு, இன்னின்ன ஆஹாரத்தைச் "செய், இன்னகாலத்திலுறங்கு, இன்னின்ன தாநம் அல்லது "தருமங்களைச்செய், க்ஷேத்திர தீர்த்தயாத்திரைகளைச்செய், "இன்ன விரதத்தைச்செய், தபஸ் யோகமிவைகளையநுஷ்டி, "கொலைசெய், திருடு, பொய்ஸத்தியஞ்செய்" என்பது முதலிய ஒவ்வொருகாரியத்தையும் ஈசுவரன் நியமித்து அதன்படி மனிதன் செய்வதானாலிந்த ஈசுவரனைவிட துக்கியாயொருவனுமிருக்கமாட்டானென்பது நிச்சயம். ஏனெனில், ஒவ்வொருநாளும் ஈசுவரன் இந்தமனிதனை அவன்செய்யவேண்டிய வேலைகளைத் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டியதைத்தவிர வேறுவேலை அந்தஈசுவரனுக்கிருக்கமாட்டாதென்பதே.

3. மேலும் ஈசுவரனுடைய கட்டளைப்படி நடப்பவன் அவன் செய்யுங்காரியத்தினாலுண்டாகும் சுகதுக்கம், பாபம் புண்ணியம், சுவர்க்கம், நரகம் முதலியவைகள், நியமித்தவனையடையுமேயன்றி பராதீநனாய் பகவானுடைய ஏவுதற்படி நடந்தவனை அவையடையமாட்டா. மனிதன் அறிந்து அநுஷ்டிப்பதற்காகவே சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணாதி சாஸ்திரங்களேற்பட்டிருக்கின்றன. மனுஷியனுக்கு சுவதந்திரமில்லாவிட்டாற் சாஸ்திரங்கள் நிஷ்பிரயோஜநமானவைகளே. துஷ்கரு

மங்களைச்செய்தவனுக்குத் தண்டனையையும் ஸத்கருமங்களைச் செய்தவனுக்கு நற்பயனையும் சாஸ்திரங்கள்விதிப்பது வீணானதேயாகும். அற்பவிஷயத்தில்மட்டும் மனிதனுக்கு சுவதந்திரமுண்டென்று சொல்வதும் பிசகானதே. இன்னின்னகாரியங்களிற் பகவான் ஏவுகிறார், இன்னின்னகாரியங்களில் மனிதன் சுவதந்திரன் என்றறிந்துகொள்ள சாஸ்திரங்களில் யாதொரு ஏற்பாடுஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. எதைவிடுகிறது, எதைச் செய்கிறது என்றறியாதவன் காரியங்களை யெப்படிச்செய்யக் கூடும்? இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் அக்ஞானத்தினாலுண்டானதே. மனுஷியன் ஸர்வசுவதந்திரமுள்ளவன். அவன் செய்யுங் காரியங்கள் நல்லதோ கெட்டதோ என்பதை அவன் தன்புத்தியினாற் சாஸ்திரங்களைக்கொண்டு நிச்சயித்து சாஸ்திரங்களையநுஸரித்துச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறான். அப்படியறியாமலும் புத்தியினால் ஆலோசியாமலும் துஷ்கருமங்களைச்செய்வானாகில தனுடையபலனை அவனேதானநுபவிக்கவேண்டும். ஈசுவரனுக்கு யாதொரு ஸம்பந்தமுமில்லை. ஈசுவரன் நியமிக்கிறவனுமல்ல. "साक्षीचेताकेवलोनिर्गुणश्च" என்ற சுருதிவாக்கியப்படி ஈசுவரன் ஸாக்ஷியாய்மட்டும் ஜீவர்களுடைய செய்கையைப்பார்த்துக்கொண்டு நிர்க்குணனாய் யாதொரு விகாரமற்றவனாயிருக்கிறான். தெய்வந் துக்கத்தைக்கொடுத்தது, பாக்கியத்தையுண்டாக்கியது என்பது முதலிய அபிப்பிராயந் தப்பானதே. மனிதனுக்குச் சுகதுக்காதியநுபவங்கள் தன்னுடைய பூர்வகருமத்தின் பலனாகவுண்டாகிறதேயன்றியில் ஈசுவரன் சுகதுக்கபலன்களைப் பிராணிகளுக்குக் கொடுக்கிறாரென்பதில்லை. மனிதன் தன்னுடைய முயற்சியினாலேயே நற்கெதியடையவேண்டுமென்பது சாஸ்திரங்களின் நிச்சயம். இது விஷயமாய்ச் சிலப்பிரமாணங்களைச் சொல்லுகிறேன்கேள்.

மஹாபாரதம் ஆநுசாஸநிகபருவம்-அத்-கூ-ல், * (பிரும்மாவைப்பார்த்து பிரும்மபுத்திரரான வஸிஷ்டமஹரிஷி கேட்டதாவது) "தெய்வம் சிரேஷ்டமா? புருஷப்பிரயத்நம் "சிரேஷ்டமா?. பிரும்மா சொல்லுகிறார். விதையன்றி ஒன்று

* दैवमानुषयोः किंस्वित् कर्मणोः श्रेष्ठमित्युत ॥ ३ ॥ ब्रह्मोवाच—नाबीजं जायते किञ्चित् नबीजेन विना फलं । बीजाद्बीजं प्रभवति बीजादे-

"ம் (மரம் செடி கொடி முதலியன) உண்டாகிறதில்லை. விதை
"யன்றி (தான்னியம் முதலிய) பலனுமில்லை. விதையினாலேயே
"விதையுண்டாகிறது. உழுதுபயிர்செய்கிறவன் பூமியிலெப்ப
"டிப்பட்டவிதையை விதைக்கிறானோ (அந்தவிதை) நல்லதோ
"கெட்டதோ அதற்குத்தக்கபடிப்பலனையடைகிறான். விதை
"யைவிதைக்கப்படாத பூமியானது எப்படிப்பலனைக்கொடாதோ
"அப்படித் தெய்வமானது (ஸஞ்சிதகர்ம்மமானது) புருஷனுடை
"யப்பிரயத்நமன்றி, பலனைக்கொடாது. புருஷனுடையப்
"பிரயத்நம் பூமியினுடையஸ்தாநமாயும், தெய்வம் விதையி
"னுடைய ஸ்தாநமாயும் சொல்லப்படுகிறது. பூமியினுடைய
"வும் விதையினுடையவும் சேர்க்கையினாற் பயிர்கள் விருத்திய
"டைகின்றன. கருமத்தைச்செய்கிறவன் அந்தக்கருமத்திற்குள்
"ள பூர்ணமானபலனைத்தானேயநுபவிக்கிறான். உலகத்திற்
"செய்ததுஞ் செய்யாததுமாகியப்(கருமங்களுடைய)பலன் பிரத்
"தியக்ஷமாய்க்காணப்படுகிறது. (எப்படியெனில்) சுபமானகரு
"மத்தினாலே சௌக்கியத்தையும் பாபகருமத்தினாலே துக்கத்
"தையுமநுபவிக்கிறார்கள். எந்தக்கருமமானது செய்யப்பட்ட
"தோ அதன்பலன் எவ்விடத்திலும் (இவ்வுலகத்தில் அல்ல
"து தேவலோகம்முதலியவைகளில்) உண்டாகிறது. செய்யப்
"படாதது அற்பமாவது அநுபவிக்கப்படுகிறதில்லை. (ஸத்கரு
"மம்) செய்தவன் பாக்கியத்துடன் கூடியநிலைமையை யெவ்விடத்
"திலுமடைகிறான். செய்யாதவனோ, காரம்வைக்கப்பட்ட
"புண்போல எரிக்கப்படுகிறான். தபஸாகிற கருமத்தினாலே

---

व फलं स्मृतं ॥ ५ ॥ यादृशं वपते बीजं क्षेत्रमासाद्य कर्षकः। सुकृते दु- ष्कृते वापि तादृशं लभते फलं ॥ ६ ॥ यथा बीजं विना क्षेत्रमुप्तं भवति निष्फलं। तथा पुरुषकारेण विना दैवं न सिध्यति ॥ ७ ॥ क्षेत्रं पुरुषका- रस्तु दैवं बीजमुदाहृतं। क्षेत्रबीजसमायोगात् ततस्सस्यं समृध्यते ॥ ८ ॥ कर्मणः फलनिर्वृत्तिं स्वयमश्नाति कारकः। प्रत्यक्षं दृश्यते लोके कृतस्याप- कृतस्यच ॥ ९ ॥ शुभेन कर्मणा सौख्यं दुःखं पापेन कर्मणा। कृतं फल- ति सर्वत्र नाकृतं भुज्यते क्वचित् ॥ १० ॥ कृती सर्वत्र लभते प्रतिष्ठां भाग्यसंयुतां। अकृती लभते भ्रष्टः क्षते क्षारावसेचनं ॥ ११ ॥ तपस्यारू-

"நல்லரூபமும் நல்ல லக்ஷணமும் பலவிதங்களான ரத்திநங்க
"ளும் மற்றுமுள்ள ஸகலமும் அடையப்படுகிறது. தபஸ்
"செய்யாதவனுக்குத் தெய்வத்தினுலொன்றுமுண்டாகிறதில்லை.
"அப்படியே சுவர்க்கபோகங்கள், தருமம் முதலியவைகளிற்
'சிரத்தை, நல்லறிவு, இவைகளெல்லாம் (தன்னுல்) செய்யப்
"பட்டப் புருஷப்பிரயத்திநத்தினுலேயே இவ்வுலகத்திலடையப்
"படுகின்றன. தேவதைகள், நாகங்கள், யக்ஷர்கள், சந்திரன்
"சூரியன், வாயு, மற்றுமுள்ளப்பிரகாசத்தோடுகூடிய நக்ஷத்
"திரக் கிரஹாதிகள் இவர்களெல்லாம் மனிதர்களாயிருந்து புரு
"ஷப்பிரயத்திநத்தினுலேயே தேவத்துவத்தையடைந்தார்கள்.
"கருமங்களைச்செய்யாதவர்களாலே பொருளாவது ஸ்நேஹிதர்
"களாவது, செல்வமுள்ள குலமாவது, செல்வமாவது அநுப
"விக்கிறதரிது. பிராம்மணனவன் சௌச (தேகச்சுத்தி,
"மனச்சுத்தி)த்தினுலேயும், க்ஷத்திரியன் வல்லமையினுலேயும்,
"வைசியன் புருஷப்பிரயத்திநத்தினுலேயும், சூத்திரன் ஊழியத்
"தினுலேயும் செல்வத்தையடைகிறுன். பொருள்கள், தாநம்
"செய்யாதவனையடையமாட்டா. புருஷப்பியத்திநமில்லாதவன்,
"தொழிலைச்செய்யாதவன், கருமத்தில் விருப்பமற்றவன், யுத்
"தத்தில் வல்லமையில்லாதவன், அப்படியே தபஸில்லாதவன்
"இவர்களைச் செல்வமடைகிறதில்லை. மூன்றுலகங்களும் தைத்
"தியர்களும் எல்லாதேவதைகளும் யாராற் சிருஷ்டிக்கப்பட்
"டார்களோ அப்படிப்பட்டபகவானன விஷ்ணுவானவர் சமுத்

पसौभाग्यं रत्नानि विविधानिच । प्राप्यते कर्मणा सर्वं न दैवादकृतात्मना ॥ १२ ॥ तथास्वर्गश्च भोगश्च निष्ठायाच मनीषिता । सर्वं पुरुषकारेण कृतेनैवोपलभ्यते ॥ १३ ॥ ज्योतींषि त्रिदशा नागा यक्षाश्चन्द्रार्क मारुताः । सर्वे पुरुषकारेण मनुष्याद्देवतां गताः ॥ १४ ॥ अर्थोवा मित्रवर्गोवा ऐश्वर्यंवा कुलान्वितं । श्रीश्चापि दुर्लभा भोक्तुं तथैवा कृतकर्मभिः ॥१५ ॥ शौचेन लभते विप्रः क्षत्रियो विक्रमेणतु । वैश्यः पुरुषकारेण शूद्रश्शुश्रूषया श्रियं ॥ १६ ॥ नादातारं भजन्त्यर्था नक्लीबं नापि निष्क्रियं । नाकर्मशीलं नाशूरं तथा नैवा तपस्विनं ॥ १७ ॥ येन लोकास्त्रयस्त्रष्टा दैत्या स्सर्वाश्च देवताः । सएष भगवान्विष्णु स्समुद्रे तप्यते तपः ॥ १८ ॥ स्वल्पंकर्मफलं

"திரத்திலே தபஸ் செய்கிறார். தான்செய்ததாகிற கருமத்
"தின்பலன் இல்லாமலிருக்குமாகில் (இந்தஜந்மத்தில்) யா
"தொருபலனையுமடைகிறதில்லை. உலகத்திற் தெய்வத்தை
"(ஈசுவரனை) எதிர்பார்த்து உதாஸீநனாய் (அலக்ஷியமாய் ஒன்
"றுஞ்செய்யாதவனாய்) இருக்கக்கூடாதல்லவா? எவன் மனி
"தன்செய்யவேண்டியதாகியக் கருமத்தைச்செய்யாமற் தெய்வத்
"தையெதிர்பார்க்கிறானோ அவன், நபும்ஸகனைக்கணவனாயடைந்த
"மனைவிபோல் வீணாகசிரமத்தையடைகிறான். சுவர்க்கலோ
"கத்தில், அந்நியனாலே (அஸுரர்முதலியவர்களிலொருவனாலே)
"எப்படிப் பயமுண்டாகிறதோ அப்படி மநுஷியலோகத்தில்
"அந்நியனாற் பயமுண்டாகிறதில்லை. (ஆனால்) சுபாசுபகருமங்
"கள் (பயத்திற்குக்காரணமாகின்றன). செய்யப்படும் புருஷப்
"பிரயத்நமாகிற கருமமானது தெய்வத்தைப் (சஞ்சிதகரும
"த்தை) பின்தொடருகிறது. (புருஷப்பிரயத்நமில்லாமற்போ
"னால்) கருமமானது அற்பமேனும் ஒருவனுக்கும் பலன்
"கொடுக்கிறதாகவாகிறதில்லை. எப்படிப்பட்ட தேவதைகளு
"டைய ஸ்தாநங்களுங்கூட நிலையற்றனவாகக் காணப்படுகின்றன.
"கருமமில்லாமற்போனாற் தெய்வமெப்படியிருக்கும்? (என்றால்,
"சஞ்சிதகருமத்திற்கு இருப்பில்லையென்றுகருத்து). எப்படித்
"தான் பலனைக்கொடுக்கும்? (மனிதன்) தனக்குத்தாந்தான்
"பந்து. தனக்குத்தாந்தான் சத்துரு. தன்னுடைய நன்மை
"தீமைகளான கருமங்களுக்கு ஆத்துமாவே ஸாக்ஷியாயிருக்
"கிறார். தபஸ், நியமம் இவைகளோடு கூடினவர்களாயும்,
"கடினமான விரதமுள்ளவர்களாயுமிருக்கிற முனிகள் தெய்வ

नस्यात्सर्वमेवाफलं भवेत् । लोके दैवं समालक्ष्य उदासीनो भवेन्ननु ॥ १९ ॥ अकृत्वा मानुषं कर्म योदैवमनुवर्तते । वृथा श्राम्यति सम्प्राप्य पतिं क्लीबमिवाङ्गना ॥ २० ॥ न तथा मानुषे लोके भयमस्ति शुभाशुभे। यथा त्रिदशलोकेहि भयमन्येन जायते ॥ २१ ॥ कृतः पुरुषकारस्तु दैवमेवानुवर्तते । न दैवमकृतेकिञ्चि त्कस्यचिद्दातुमर्हति ॥ २२ ॥ यथा स्थानान्यनित्यानि दृश्यन्ते दैवतेष्वपि । कथं कर्मविना दैवं स्थास्यति स्थापयिष्यति ॥ २३ ॥ आत्मैव ह्यात्मनो बन्धु रात्मैव रिपुरात्मनः । आत्मैव ह्यात्मनस्साक्षी कृतस्यापकृतस्यच ॥ २७ ॥ तपो नियमसंयुक्ता मुनयस्संशितव्रताः । किन्तेदैव

"(ஈசுவர)பலத்தினாற் சாபத்தைக்கொடுக்கிறார்களா என்ன ?
"இல்லை. (ஆனால்) தபஸ்முதலிய கருமபலத்தினாற்றான்.
"உலகத்திலெந்தமனிதன் மிகவும் அருமையான எல்லாவற்றையு
"மடைந்து பாபத்தை நிவிருத்திசெய்துக்கொள்ளுகிறானோ அப்
"படிப்பட்டவனையும் லோபம், மோகம் இவைகளோடுகூடிய
"மனிதனையுந் தெய்வமானது காப்பாற்றுகிறதில்லை. அக்கினியா
"னது அற்பமாயிருந்தாலும் காற்றினாலசைக்கப்பட்டாலெப்ப
"படி விருத்தியடைகிறதோ, அப்படிப்போல் ஸஞ்சிதகருமமா
"கிற தெய்வமானது புருஷப்பிரயத்தினத்தோடு சேர்ந்தால்
"நன்றாய் விருத்தியடைகிறது. எண்ணெயில்லாமற்போனாற்
"தீபமானதெப்படிக்குறைவையடைகிறதோ அப்படி மநுஷி
"யப்பிரயத்திநமில்லாமற்போனாற் கருமமானது குறைவை
"யடைந்துவிடுகிறது. இவ்வுலகத்திற் கணக்கற்ற பொருள்
"களையடைந்திருந்தாலும் ஸ்திரீகளையடைந்திருந்தாலும் போக
"ங்களையடைந்திருந்தாலும் (அவைகளை) கருமமில்லாத புரு
"ஷனநுபவிக்கச் சக்தியுள்ளவனாகிறதில்லை. பொருளானது
"இவ்வுலகத்திற் பூமியில் நன்றாய்ப்புதைக்கப்பட்டிருந்தாலுந்
"தேவதைகளினாற்காக்கப்பட்டிருந்தாலுமெப்போதும்(அந்தச்
"சொத்துக்களையடையும்படியான) பூர்வகருமத்தோடு கூடின
"வனாயிருக்கிற மஹாத்துமாவாகிய புருஷன் (அப்பொருள்களை)
"அடைகிறான். தாநம், தருமம் முதலியவைகளினாற் பொருள்
"களைச் சிலவிடும்யோக்கியனான புருஷனைக்கருமங்களினாலுண்
"டாகிறபலன்களடைகின்றன. அதனால் மநுஷியலோகத்தி
"லிருந்து தேவலோகமடையப்படுகிறது. அப்படிப்பட்ட தேவ

---

बलाच्छापमुत्सृजन्ते न कर्मणा ॥ ४१ ॥ पापमुत्सृजते लोके सर्वं प्राप्य सुदुर्लभं । लोभमोहसमापन्नं नदैवं त्रायते नरं ॥ ४२ ॥ यथाग्निः पवनोद्धूतस्सुसूक्ष्मोपि महान् भवेत् । तथा कर्म समायुक्तं दैवं साधुविवर्धते ॥ ४३ ॥ यथा तैलक्षयाद्दीपः प्रह्रासमुपगच्छति । तथा कर्मक्षयाद्दैवं प्रह्रासमुपगच्छति ॥ ४४ ॥ विपुलमपि धनौघं प्राप्य भोगांस्त्रियोवा पुरुषइहनशक्तः कर्महीनोहि मोक्तुं । सुनिहितमपिचार्थं दैवतैरक्ष्यमाणं पुरुषइहमहात्मा प्राप्नुते नित्ययुक्तः ॥ ४५ ॥ व्ययगुणमपि साधुं कर्मणा संश्रयन्ते भवति मनुजलोका द्देवलोकोविशिष्टः । बहुतरसुसमृद्ध्या मानुषाणां गृहाणि पितृवनभवनाभं दृ-

"லோகமடைந்தவனுக்குத் தேவதைகளுடைய மிகவும் விசேஷ "மானதும் குறைவற்றதுமாகிய செல்வத்தினுலே, செல்வங்களி "னல் நிறைந்த மனிதர்களுடையவீடுகள் மயாநவீடுவிளங்கிறது "போற்காணப்படுகிறது. இவ்வுலகத்திற் தெய்வமானது (கரு "மபலனை) வேறுவிதமானபலனையுடையதாகவாவது விரோத "மானபலனைக்கொடுக்கிறதாகவாவது செய்கிறதில்லை. தெய்வ "மானது இந்தவிஷயத்திற்குப் பிரபுவாகவாகிறதில்லை."

மத்ஸியபுராணம்-அத் உஉக ல், * "சுவாயம்புவமநு "கேட்டார். தெய்வம், புருஷப்பிரயத்நமிவைகளிலெதுபெ "ரிது? அதையெனக்குச்சொல்லவேண்டும். ஓ! தேவா! இந்த "விஷயத்திலெனக்கு ஸம்சயமிருக்கிறது இந்த ஸந்தேகம் 'முழுவதையும் நிவர்த்திக்க நீர் சக்தராயிருக்கிறீர்.

"மத்ஸியரூபியானபகவான் சொல்லுகிறுர். முந்தியஜந் "மங்களிலடைந்திருந்த தேகத்தினுலே ஸம்பாதிக்கப்பட்ட "தன்னுடைய கருமமே தெய்வமென்கிற பெயருடையதென் "றறி. ஆகையால், இவ்வுலகத்திற் புருஷப்பிரயத்நமே சிரேஷ் "டமானதென்று ஞாநிகள் சொல்லுகிறுர்கள். மங்களகரமான "ஆசாரத்தோடுகூடினவர்களாயும் மேலானபதவியையடைய "வெப்போதும் பிரயத்நஞ் செய்துகொண்டிருக்கிறவர்களாயு "மிருக்கிறவர்களுடைய கருமமானதெய்வளவுப் பிரதிகூலமா

---

श्यते चामराणाम् ॥ ४६ ॥ नचफलति विकर्मा जीवलोकेन दैवं व्यपनयति विमार्गं नास्ति दैवे प्रभुत्वं ॥ ४७ ॥ தெய்வமென்பது ஈசுவரனல்ல, புருஷப்பிரயத்நத்தினுல் ஸம்பாதிக்கப்பட்டிருக்கிற கருமததிற்குத் தெய்வமென்று பெயர். புருஷப்பிரயத்நத்தினுலேயே பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் முதலியவர்கள் உத்தமபதவியை யடைந்திருக்கிறுா களென்று மிகவும்விரிவாய் வாஸிஷ்டராமாயணம்-உ-ச-முதல்கூ-வரை ஸர்க்கங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

* मनुरुवाच ॥ दैवे पुरुषकारेच किं ज्यायस्तत् ब्रवीहिमे । अत्रमे संशयो देव च्छेत्तुमर्हस्यशेषतः ॥ १ ॥ मत्स्यउवाच ॥ स्वमेव कर्म दैवाख्यं विद्धि देहान्तरार्जितं । तस्मात्पौरुषमेवेह श्रेष्ठमाहुर्मनीषिणः ॥ २ ॥ प्रतिकूलं तथा दैवं पौरुषेण विहन्यते । मङ्गळाचारयुक्तानां नित्यमुत्थानशालिनां

"யிருந்தாலும் புருஷப்பிரயத்திநத்தினல் நிவிருத்தி செய்யப்
"படுகிறது. ஓ! மநுஷியோத்தமா! எவர்களுடைய பூர்வஜந்ம
"கருமமானது ஸாத்துவிகமாயிருக்கிறதோ அப்படிப்பட்டவர்
"களிற் சிலருக்குப் புருஷப்பிரயத்திநமன்றியிலேயே பலங்
"காணப்படுகிறது. இரஜோகுணத்தினுடைய கருமத்தின
"லிவ்வுலகத்திலடையப்படுகிற பலனுமப்படித்தான். தாமஸ
"குணத்தினுடைய துஷ்டமாகிய கருமத்தினலுண்டாகிற பல
"னுமப்படித்தானென்றறி. ஓ! இராஜனே! மனிதர்களால் விரு
"ம்பப்படும் பலனனது புருஷப்பிரயத்திநத்தினலேயே அடை
"யப்படுகிறது. புருஷப்பிரயத்திநமன்றியிலேயே தெய்வமே
"பலன்கொடுக்கிறதாக மனிதர்களெண்ணுகிறர்கள். ஆகை
"யினல், முக்காலத்திலேயுங் கருமத்தோடுகூடிய தெய்வந்
"தான் பலத்தைக்கொடுக்கிறது. ஓ! அரசனே! புருஷப்
"பிரயத்திநமானது பூர்வகருமமாகிற தெய்வத்தன்மையை
"யடைந்து காலத்திற் பலனைக்கொடுக்கிறது. ஓ! புருஷோத்த
"மா! தெய்வம், புருஷப்பிரயத்திநம், காலம் இம்மூன்றுஞ்
"சேர்ந்தால் மனிதனுக்குப்பலனைக்கொடுக்கிறதாகவாகிறது.
"பூமியிலுழுது பயிர்செய்வதற்குப் பலன்களையடைவது, மழை
"யின் சேர்க்கையினற்றனுண்டாகிறது. அப்படிப்பலன்களுண்
"டாவதுங்கூட காலத்திற்றன். அகாலத்திலெவ்வளவுப் பிர
"யாஸப்பட்டாலுமுண்டாகிறதாகக்காணப்படவில்லை. ஆகையி
"னல், மனிதர்களாலெப்போதுந் தருமத்தோடுகூடிய புருஷப்பி

---

॥ ३ ॥ येषां पूर्वकृतं कर्म सात्विकं मनुजोत्तम। पौरुषेणविना तेषां केषां चित् दृश्यते फलं ॥ ४ ॥ कर्मणा प्राप्यते लोके राजसस्य तथा फलं। कृच्छ्रेण कर्मणा विद्धि तामसस्य तथाफलं ॥ ५ ॥ पौरुषेणाप्यते राजन् प्रार्थितव्यं फलं नरैः । दैवमेवविजानन्ति नराः पौरुषवर्जिताः ॥ ६॥ तस्मात्त्रिकालं संयुक्तं दैवंतु सफलं भवेत् । पौरुषं दैवसम्पत्या काले फलति पार्थिव ॥ ७ ॥ दैवंपुरुषकारश्च कालश्च पुरुषोत्तम । त्रयमेतन्मनुष्यस्य पिण्डितं स्यात् फलावहं ॥ ८ ॥ कृषेर्वृष्टिसमायोगात् दृश्यन्ते फलसिद्धयः । तास्तुकाले प्रदृश्यन्ते नैवाकाले कथञ्चन ॥ ९ ॥ तस्मात् सदैवकर्तव्यं स धर्मं पौरुषं नरैः । विपत्तावपि यस्येह परलोके ध्रुवं फलं ॥ १० ॥ नालसाः प्राप्नु-

"ரயத்நஞ்செய்யத்தக்கது. எவனுக்கேனுமிவ்வுலகத்தில் விப
"த்து (கெடுதி) உண்டானாலுங்கூடப்பரலோகத்திற் பலனுண்டா
"வது நிச்சயம். சோம்பேரிகள் அல்லது மந்தபுத்தியுள்ளவர்கள்
"பொருள்களையடைகிறதில்லை. (தெய்வமே பலன்கொடுக்கிற
"தென்று) தெய்வத்தை நம்பியிருக்கிறவர்களும் பொருளையடை
"கிறதில்லை. ஆகையால், ஸகலவிதப்பிரயத்நத்தினாலேயும்
"உத்தமமான தருமத்தையநுஷ்டிக்கவேண்டியது. சோம்பேரி
"களாயும், தெய்வம் பலன்கொடுக்கிறதாக எதிர்பார்க்கிறவர்
"களாயுமிருக்கிற மனிதர்களைவிட்டு, இலக்ஷ்மியானவள், ஓ!
"இராஜசிரேஷ்டனே! மேன்மையையடைய முயற்சிசெய்கின்ற
"புருஷர்களைப் பிரயத்நத்தினாற் தேடியடைகிறாள். ஆகை
"யால், எப்போதும் மேலானபதவியையடைய முயற்சியுடையவ
"னாகவே யிருக்கவேண்டியது."

4. ஷெ இதிஹாஸபுராணங்களுடைய வாக்கியங்களினாற் புருஷப்பிரயத்நத்தினால் ஸம்பாதிக்கப்பட்ட கருமபலனானது தெய்வமென்கிறபெயராற் சொல்லப்படுகிறதேயன்றி ஈசுவரனல்லவென்பது தெளிவாயிருக்கிறது. அமரத்திலும் சப்தஸ்தோமத்திலும் இதேஅர்த்தந்தான் சொல்லப்படுகிறது. அமரத்தில் " दैवं दिष्टं भागधेयं भाग्यं स्त्री नियतिर्विधिः = தெய்வம், திஷ்டம்
"பாகதேயம், பாக்கியம், நியதி, விதி இவ்வாறும் முன்ஜந்மங்
"களிற்செய்த சுபாசுபகருமங்களுக்குப்பெயர்." சப்தஸ்தோமத்தில் " प्राग्जन्मनि कृतं कर्म शुभं वा यदिवाऽशुभं । दैवशब्देन निर्दिष्टमिहजन्मनि तद्बुधैः = முந்திய ஜந்மத்திற்செய்த சுபாசுபகருமமெதுவோ, அது இந்த ஜந்மத்திற் தெய்வமென்கிற சப்தத்தினால் வித்துவான்களாற் சொல்லப்பட்டிருக்கிறது" தெய்வமென்கிற பெயரானது தேவதைக்கும் ஈசுவரனுக்கும் சொல்லக்கூடுமானாலும் பூர்வகருமத்திற்குத்தான் முக்கியமாய்ச் சொல்லக்கூடியதாயிருக்கிறது. அநேகர் தனக்குண்டாகிற சுக துக்கானுபவங்கள் தெய்வமென்கிற ஈசுவரனாலுண்டாயிற்றென்றெண்ணி ஈசுவரனைக்குறித்து நொந்துகொள்ளுகிறார்கள். அது அவிவேக

---

वन्त्यर्था न्नच दैवपरायणाः। तस्मात् सर्वप्रयत्नेन आचरेद्धर्ममुत्तमं॥ ११॥ त्यक्त्वालसान् दैवपरान् मनुष्यान् उत्थानयुक्तान् पुरुषान्हिलक्ष्मीः। अन्विष्ययत्नाद्वृणुयान्नृपेन्द्र तस्मात् सदोत्थानवता हि भाव्यं ॥१२॥

மே. கருமமென்பது மூவ்வகைப்படும். ஆகாமி, பிராரப்தம், ஸஞ்சிதம் என்பவைகளே. ஆகாமியென்பது சரீரத்தையுடையவனுடைய பதிநான்காவது வயதுமுதல், செய்கிற சுபாசுபகருமங்களுக்குப்பெயர். இப்பதிநான்காவது வயதுமுதற் செய்கிற கருமங்களின் பலன்களிலித்தேகத்தினலேயே அநுபவிக்கப்பட்ட கருமபலன்கள்போக மிச்சமுள்ள கருமங்களின்பலன்களித்தேகம்போனவுடன் இதற்குமுந்திய ஜந்மங்களிற் செய்தநுபவிக்கப்படாமற் மிச்சமிருக்கிற கருமபலனெதுவோ அத்துடன்சேருகிறது. அதற்கு ஸஞ்சிதமென்றுபெயர். அந்தஸஞ்சிதகருமபலனிலெந்தகருமத்தின் பலாநுபவத்திற்காக இத்தேகமுண்டாயிற்றோ அக்கருமம் பிராரப்தமென்றுசொல்லப்படுகிறது. மேற்குறித்தஸஞ்சிதகருமமானது, தெய்வமென்கிற பெயரையுடையது. ஞானமுள்ள விவேகியானவன் பூர்வகருமத்தின் பலனையநுபவிக்கவேண்டியவனானாலும் விவேகத்தினற் கருமபலன் தன்னைத்துடராமல் நிவிருத்தித்துக்கொள்ளலாம். இந்த அர்த்தத்தை மேற்கண்ட மத்ஸியபுராணவாக்கியமே சொல்லுகிறது. ஞாநமடையாதவன் கருமபலனையடையாமற் தப்பித்துக்கொள்ளமுடியாது. அநுபவித்தே தீரவேண்டும். கருமத்தினுடைய மஹிமையைப்பற்றி, கருடபுராணத்திற் சொல்வதாவது—

கருடபுராணம்-பூர்வகண்டம்-அத்-கக௬-ல், * "சந்திரனுக்கொப்பானவர்களாயும் இராஜகுமாரர்களாயும் சூரர்களாயும், ஸத்தியந்தவராதவர்களாயும், சூரியனைப்போற் பிரகாசமுள்ள சரீரமுடையவர்களாயுமிருக்கிற அந்த இந்த பீமஸேநன் அர்ஜுநன் முதலிய பாண்டவர்கள் கேசவனாகிய கிருஷ்ணபகவானாலே இரக்ஷிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுங்கூட துஷ்டக்கிரஹங்களாற் பீடிக்கப்பட்டவர்களாயதனாற் தரித்திரத்திற்கு சுவாதீநமானவர்களாய், "பிக்ஷைவாங்குந்தொழிலிற் பிரவேசித்தார்கள். விதிவசத்திலிருந்து (பூர்வகரும்மத்திலிருந்து) யார்தான் தப்பித்துக்கொள்ள ஸமர்த்தனாகிறான். பிராசீநகருமரேகையானது

---

* एते ते चन्द्रतुल्याः क्षितिपतितनया भीमसेनार्जुनाद्याश्शूरास्सत्यप्रतिज्ञादिनकरवपुषः केशवेनोपगूढाः । ते वैदुष्टग्रहस्ताः कृपणवशगता भैक्षचर्यां प्रयाताः कोवा कस्मिन् समर्थोभवति विधिवशात् भ्रामयेत् कर्मरे-

"(தலையெழுத்தானது) பிரமிக்கச்செய்கிறது. எதனாலே, பிரும்
"மாவானவர், பிரும்மாண்டமாகிற பாத்திரத்திற்குள்ளிருந்து
"குயவனைப்போல் (சிருஷ்டிசெய்ய). எப்படி நியமிக்கப்பட்டிருக்
"கிறாரோ, எதனாலே விஷ்ணுவானவர், துக்கத்தைக்கொடுக்கத்
"தக்கதும் துன்பத்தைக்கொடுக்கத்தக்கதுமாகிய தசாவதாரஞ்
"செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறாரோ, எதனாலே உருத்திர
"ரானவர், கபாலத்தைக்கையிலேந்தி பிக்ஷைவாங்கும்படி
"செய்யப்பட்டிருக்கிறாரோ (எதனாலே) சூரியன் தினந்தோறும்
"ஆகாசத்திற் சுற்றும்படிச்செய்யப்பட்டிருக்கிறாரோ, அப்படிப்
"பட்டகருமத்திற்கு நமஸ்காரம்."

5. இவ்விதமாய்ப் புருஷப்பிரயத்திநத்தினால் ஸம்பாதிக்க ப்பட்ட பூர்வகருமத்தினுடையபலன்கள் இந்த ஜந்மத்திலனுப விக்கப்படுகிறதேயன்றி ஈசுவரன் யாதொருபலனையும் இவனுக் குண்டாக்கிறதில்லையென்பது நிச்சயிக்கப்பட்டது. பூர்வகரும மானது புண்ணியபலனுள்ளதாயிருந்தால், அப்புண்ணியத்தின் தாரதம்மியப்படி சுவர்க்காதிலோகசுகங்களையடைந்து அப்புண் ணியம்நசித்தவுடன் "क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति = புண்ணியம்நசித் "தால் மானிடலோகத்தையடைகிறார்கள்." என்றுசுருதிசொல் லுகிறது. இப்படிமநுஷியலோகத்தையடைந்து பாக்கியுள்ள ஸஞ்சிதகருமத்தின் பலனான சுகதுக்கங்களையநுபவிக்கிறார் கள். பூர்வகருமமானது பாபபலனுள்ளதானால் நரகத்தை யாவது மிருகாதி தாழ்ந்த ஜந்மத்தையாவது அடைந்து துக்கத் தையநுபவிக்கிறார்கள். பாபபுண்ணியமிசிர கருமபலனாலிவ்வு கத்திற்கருமபலனுடைய தாரதம்மியத்தின்படி உத்தம மத்தியம அதமமான மநுஷிய ஜந்மத்திலொன்றையடைந்து "सुखस्यानंतरं दुःखं दुःखस्यानंतरं सुखं । सुखं दुःखं मनुष्याणां चक्रवत्परिवर्तते = ஸுகத்திற்குப் "பிறகுதுக்கம், துக்கத்திற்குப்பிறகுஸுகம் (இப்படியாக) "ஸுகதுக்கமானது மனிதர்களுக்குச் சக்கிரம்போற்சுற்றிவரு "கிறது." என்கிற இந்தக்கருடபுராணவாக்கியப்படி மனிதஜந் மத்திற் சுகதுக்கங்களைக் கலந்தேயநுபவிக்கிறார்கள். கரும

---

खा ॥ १४ ॥ ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे विष्णुर्येन दशावतारगहने क्षिप्तो महासङ्कटे । रुद्रो येन कपालपाणिरमरो भिक्षाटनं कारितः सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ॥ १५ ॥

பலங்களெல்லாமநுபவத்திற்குமட்டும் யோக்கியமானதேயன்றி மோக்ஷத்தைக்கொடுக்கமாட்டா. ஆகையால், மனிதன் சுகதுக்கங்களையநுபவிக்கும்விஷயத்தில், ஈசுவரனுடையநியமநம் அற்பமேனுமில்லையென்பது நிச்சயம். சாஸ்திரங்களில், ஈசுவரோபாஸனைக்குப்பலனை ஈசுவரன் அல்லது தெய்வங்கொடுக்கிறதாக எவ்விடத்திற்சொல்லியிருந்தாலுமவைகளுக்கெல்லாம் மனிதன் தன்னுடைய புருஷப்பிரயத்நத்தினல் ஸம்பாதிக்கப்பட்ட கருமமே பலன்கொடுக்கிறதாக அர்த்தஞ் செய்துகொள்ள வேண்டியது.

6. ஜயவிரதன்:—ஓ! சுவாமி! கருமங்களுக்குப் பலனைக் கொடுக்கிறவர் ஈசுவரரல்லவென்றால், நியாமகரென்கிற அர்த்தமுள்ள ஈசுவரனென்கிறபெயரவருக்கெப்படிச்சொல்லக்கூடும்?

7. ஸுசர்ம்மா:— ஈசுவரர் நியாமகரென்பதிலற்பமேனும் சந்தேகமில்லை. ஈசுவரருடைய ஆக்ஞைக்குப்பயந்தே அவருடைய நியமநப்படி பிரும்மாதி தேவதைகளும் திக்பாலகர்களும் சூரியன் சந்திரன்முதலிய கிரகங்களும் அப்படியே தெய்வமென்கிற பூர்வகருமமும் மற்றுமுள்ள ஸகலரும் அவரவர்கள் தொழிலைச்செய்கிறார்கள். இந்த அர்த்தத்தை சுருதியேசொல்லுகிறது.

கடவல்லியுபநிஷத்-௬-௩-ல், * "இந்தப் பரமாத்துமாவினிடத்திலிருந்து பயந்துதான் அக்நியும், சூரியனும் (இவ்வுலகத்தில்) பிரகாசிக்கிறார்கள். இந்திரனும் வாயுவும் ஐந்தாதவனையமனுமவரவர் தொழிலைச்செய்கிறார்கள்."

ஆகையால், ஸகல உலகமும் பரமாத்துமாவினுடைய ஆக்ஞைக்குப்பயந்தே நிலைபெற்றிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. ஆனல், ஒவ்வொன்றையும் பகவானேவுகிறாரென்பது முற்றிலுமஸம்பாவிதம். மனிதன் மோக்ஷமடையும்பொருட்டு ஈசுவரனையுபாசிக்கவேண்டியதேயன்றி உலகசுகத்திற்காகவாவது சுவர்க்காதிலோகசுகத்திற்காகவாவது உபாஸனை செய்வார்களானல் அந்தபகவான் அதற்குப்பலனைக்கொடுக்கிறதில்லை. இந்தசுகங்கள் தன்னுடைய கருமத்தினலேயேயடையவேண்டுமென்பது

* भयादस्याग्निस्तपति भयात्तपतिसूर्यः । भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥ தைத்திரீயோபநிஷத்-உ-அ-ல், இதைப்போலொற்ற வாக்கியங்களைக் காண்க.

நிச்சயம். அதனாற்றான் மோக்ஷ இச்சையுள்ள ஞானியானவனெந்தக் கருமத்தைச்செய்தாலுமந்தக் கருமபலனை ஈசுவரார்பணஞ் செய்துவிடுவானாகில், அந்தக்கருமத்தின் பலனிவனுக்குண்டாகாமலது சித்தசுத்திமூலமாய் ஞானத்திற்குக்காரணமாகிறது. ஆகையால், மோக்ஷ இச்சையுள்ளவன்செய்கிற ஸகலகருமங்களையும் ஈசுவரார்பணஞ் செய்வதனாலே மோக்ஷத்தையடைய யோக்கியனாகிறான். பலாபேக்ஷையுடன் செய்வதனாலே பந்தத்திற்கு யோக்கியனாகிறான் இப்படி இருவகையாலும் தன்னுடையமுயற்சியாகிற புருஷப்பிரயத்நமே அவசியமாயிருக்கிறது. தெய்வம் முதலிய எதுவுமிவனையேவுகிறதில்லை. இவ்விஷயமாய் அர்ஜுநனுக்குப்பகவான் உபதேசித்ததாவது—

பகவத்கீதை-அ-௬-௫-ரு-ல், * "(ஒவ்வொருவனும்) "தன்னாலேயே தன்னை (ஸம்ஸாரத்திலிருந்து) கரையேற்றிக் "கொள்ளவேண்டியது. தன்னை (ஸம்ஸாரதுக்கத்தையடையும் "படி) கெடுத்துக்கொள்ளலாகாது. (ஏனென்றால்) தனக்குத் "தானேபந்து. தனக்குத்தானேசத்துரு," என்று சொல்லியிருக்கிறார்.

மனுஷியனுக்கு சுவதந்திரமில்லாவிட்டால், நீயுன்னைக் கரையேற்றிக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறவாக்கியமுபயோகமற்றதாகும். ஆகையால், ஸகலசாஸ்திரங்களும் மநுஷியனறிந்து அதன்படியவன் அநுஷ்டிக்கவேண்டியதற்காக உண்டாயிருக்கின்றனவேயன்றி தெய்வத்திற்குப் போதிக்கிறதற்காகவல்ல. ஒருவன், தனக்குமிகவும் பிரியமுள்ளவனான ஒரு பந்து மரணமடைந்ததைக்கேட்டு பூமியில்விழுந்து புறண்டழுகிறான். எப்போதும் அத்துக்கத்தையே யநுபவிக்கிறவனாய் துக்கமாகிற ஸமுத்திரத்தில் முழுகியிருக்கிறான். இவனைப்போலொத்த மற்றொருவன் இப்படிப்பட்ட துக்கத்தையேயடைந்திருந்தாலுமதையலக்ஷியஞ்செய்து துக்கமில்லாதவனைப்போலுலகத்தில் ஸஞ்சரிக்கிறான். ஒருவனைத் துக்கத்தில் மங்கவும் மற்றொருவனைத் துக்கத்தையசட்டைசெய்யவுமீசுவரன் ஏவினாரெ

---

* उद्धरेदात्मनात्मानम् नात्मानमवसादयेत् । आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥

ன்று சொல்லப்போகுமோ? அப்படியே ஒருவன் ஸத்கருமங்களைச்செய்துப் பலனை ஈசுவரார்பணஞ்செய்கிறான். மற்றொருவனக் கருமங்களின் பலத்திலாசைகொண்டு தன் பிரயோஜநத்தைக் கருதிச்செய்கிறான். இவ்விருவரையும் ஈசுவரன் ஏவினனென்று சொல்லப்போகுமோ? ஒருவனைத்துக்கத்திலும் ஒருவனைச்சுகத்திலுமேவுகிற ஈசுவரன் பக்ஷபாதமுள்ளவராகையாலவரையீசுவரரென்றுசொல்லக்கூடாது. ஆகையால், ஒவ்வொருவனும் இவ்வுலகப்பிரயோஜநத்திற்கு அல்லது சுவர்க்காதி உலகப்பிரயோஜநத்திற்கு அல்லது மோக்ஷத்திற்கு, தானகவே முயற்சிசெய்ய வேண்டும். ஈசுவரன் பலனைக்கொடுக்கிறதாக எதிர்பார்க்கிறவன் மூடனென்றே பெரியோர்கள் சொல்லுவார்கள்.

8. ஜயவிரதன்:—ஓ! ஞாநமூர்த்தியே! தங்களாலுதகரிக்கப்பட்ட சிலவாக்கியங்கள், பிராம்மணஜந்மம் மிகவுமரிதென்றும் மற்றவர்களைவிடப் பிராம்மணன் சிரேஷ்டனென்றுஞ்சொல்லுகின்றன. நான்காவது வர்ணத்தாராகிய சூத்திரர்களில் நாகரீகமடைந்திருக்கிற சிலர், சொல்வதாவது—"முற்காலத்திற் சூத்தி "ர்கள் மூடர்களாயிருந்ததனலவர்களை மிருகங்கள்போற் பிரா "ம்மணர்கள் தங்களுக்கூழியஞ்செய்யும்படி நியமித்தார்கள். அவ "ர்களும் விவேகமன்றி அதற்குட்பட்டார்கள். இக்காலத்தி "லோசூத்திரர்கள் பிராம்மணர்களைவிட கல்வியிலும் புத்தியிலு "ஞ்சாமர்த்தியத்திலும் மேலானவர்களாயிருக்கிறார்கள். அநே "கர் பிராம்மணர்களுக்குச் சமமானவர்களாயும் சிலர்மேலா "னவர்களாயுமிருக்கிறார்கள். அதனற் பிராம்மணர்களைப்போல "வே சூத்திரர்களும் மதிக்கத்தக்கவர்கள், அப்படியிருந்தும் "வேதம் முதலியவைகளைச் சூத்திரர்கள் படிக்கக்கூடாதென்று "பிராம்மணர்கள் கட்டுப்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். "சூத்திரர்களைவிட அநேகப்பிராம்மணர்கள் படிப்பில்லாதவர்க "ளாயும் அற்பத்தொழிலைச்செய்கிறவர்களாயும் துராசாரமுள்ள "வர்களாயுமிருக்கிறதனலப்படிப்பட்டவர்கள் சூத்திரர்களுக் "கூழியஞ்செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். சூத்திரர்கள் 'பிராம்மணர்களுக்கு வணங்குவதும் அவர்களை மேன்மைப் "படுத்துவது மிக்காலத்திற்குப்பொருந்தாது. தாங்களுமிக் "காலத்தில் வேதமோத அதிகாரிகளே" என்று வாதிக்கிறார்கள். ஆகையால், பிராம்மணர்களெதனற் சிரேஷ்டர்களென்பதை

யும் சூத்திரர்கள் ஏன் வேதத்தையப்பியாஸஞ்செய்யக்கூடாதெ ன்பதையும் நானறிந்துகொள்ளும்படிச் சொல்லப்பிரார்த்திக் கிறேன்.

9. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! முற்காலத்திய சூத்திரர் கள் மூடர்களாயிருந்ததனாலவர்கள் வேதத்தை யுச்சரிக்கக்கூடா தென்றும், அவர்கள் தங்களுக்கூழியஞ்செய்யவேண்டியதென்றும் பிராம்மணர்கள் கட்டுப்பாடுசெய்து அதையே இக்காலத்திலுமநு ஷ்டிக்க முயலுகிறார்களென்றும் சூத்திரர்களெண்ணுவார்களானா லது பிசகு. பிராம்மணஜந்மமாவது சூத்திரஜந்மமாவது மற்ற எந்தஜந்மமாவது அவரவர்களுடைய பூர்வஜந்ம கருமத்தின் விசேஷத்திற்குத் தக்கபடியடையப்படுகிறதேயன்றி ஒரு வர் ணத்தார் மற்றொரு வர்ணத்தாரைக்குறைவுப்படுத்தித் தங்களை மேன்மைப்படுத்திக்கொள்ள எண்ணுகிறார்களென்பது அவி வேகமே. பிராம்மணாதி நான்குவர்ணங்களும் ஈசுவர சிருஷ்டி யிலிருந்தே உண்டானவை. சிருஷ்டியான ஸகல வஸ்துக்களி லும் உயர்வு தாழ்வு உண்டாயிருக்கிறதுபோலப் பிராம்மணாதி வர்ணங்களிலும் உயர்வு தாழ்வு உண்டாயிருக்கின்றன. தா ழ்ந்த வர்ணத்தார் இக்காலத்தில் நாகரீகமடைந்ததனாலேயே அவர்கள் மேலான வர்ணத்தார்களாக மதிக்கப்படமாட்டார் கள். சண்டாளன் போலொத்த நிகிருஷ்ட ஜாதியாரில் சிலர் நல்ல வித்துவான்களாயும் செல்வமுள்ளவர்களாயும் நாகரீக முள்ளவர்களாயுமிருக்கிறார்களவர்களைச் சூத்திரர்கள் தங்களுக் குச் சமானமானவர்களாய் அல்லது மேலானவர்களாய் அங் கிகரிப்பார்களா? மாட்டார்கள். அப்படிப் போலவேதான் சூத்திரர்களைப் பிராம்மணர்களங்கிகரியார்கள். சூத்திரர்கள் பிராம்மணர்களை மேன்மைப் படுத்தாமலும் மதிக்காமலும் போ வார்களானாலதனாற் பிராம்மணர்களுக்கு யாதொரு குறைவு மில்லை. சாஸ்திரங்களுடைய விதியை மீறி, தாங்கள் மேலான வர்களென்றும் பிராம்மணர்கள் தாழ்ந்தவர்களென்றுமெண்ணு வதானாலது அவர்களுக்கு சிரேயஸ்ஸைக்கொடாது.

10. பிராம்மணாதி நான்கு வர்ணத்தாரும் பிரமாணமாய் அங் கிகரிக்கவேண்டிய வேதசாஸ்திரபுராணங்கள், பிராம்மணனை, சிரேஷ்டனென்று சொல்வதுடன் சூத்திரன் பிராம்மணாதி வர்ண த்தாருக்கூழியஞ்செய்து அதனால் நற்கெதியை யடைகிறானெ

ன்று சொல்லுகின்றன. அதற்கு விரோதமாய்ச்சொல்லுவதும் நடப்பதும் வேதத்தை நிராகரித்ததாகவாகும். இதுமாத்திர மல்ல. பிராம்மணன் சிரேஷ்டனென்பதற்கு ஸரியானதும் நியாய மானதுமான காரணங்களுமிருக்கின்றன. சிருஷ்டிகாலத்தில் விராட்புருஷனுடைய அங்கத்திலிருந்து நான்கு வர்ணத்தாரு முண்டானார்கள். அவர்கள் விராட்புருஷனுடைய எந்தெந்த அங்கத்திலிருந்துண்டானார்களோ அந்த அங்க விசேஷத்தினு லுயர்வு தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. எப்படியெனில்—

தைத்திரீய ஆரண்ணியகம்-பிரசிநம்-ரு-அநு-கஉ-ல், * "(அந்த விராட்புருஷனுக்கு) பிராம்மணன் முகமானுன். க்ஷத்திரியன் புஜமாக்கப்பட்டான். வைசியன் அவருக்குத்துடைகள். "பாதங்களிலிருந்து சூத்திரனுண்டானுன்" என்று சொல்லியிருக்கிறது. அவயவங்களுக்குள் ஸர்வசிரேஷ்டமான முகத்திலிருந்துண்டான பிராம்மணன் ஸர்வசிரேஷ்டனென்று சொல்லத் தடையென்னவிருக்கிறது? அடிமைத்தொழிலை விளக்குகிறபாதங்களிலிருந்து சூத்திரனுண்டானுன் என்றதனுற் சூத்திரன் மற்றவர்ணத்தாரைவிடத் தாழ்ந்தவனென்று சொல்லாமலே விளங்குகிறது. அர்ஜுநனுக்குக் கிருஷ்ணபகவான் பிராம்மணுதி வர்ணங்கள் குணகருமங்களை யநுஸரித்து சிருஷ்டிக்கப்பட்டார்களென்றே சொல்லியிருக்கிறுர்.

ஸ்ரீபகவத்கீதை-அத்-ச-சு-கரு-ல், † "(பிர்ம்ம க்ஷத்திரிய "வைசிய சூத்திரர்களாகிற) நான்கு வர்ணங்களுமென்னுற் "சிருஷ்டிக்கப்பட்டது. (எப்படியெனில்) குணம் கருமம் "இவைளுடையவிபாகத்தைக்கொண்டுதான்." இந்த வாக்கியத்தினுலும் அவரவர்களுடைய கருமகுணங்களையநுஸரித்து சிருஷ்டிக்கப்பட்டார்களென்பது நிஸ்ஸந்தேகமானவிஷயம்.

11. ஆனுல், விராட்புருஷனுடைய அவயவங்களிலிருந்து பிராம்மணுதி வர்ணங்களுண்டானதைச் சொல்லவந்த சுருதியல்ல. தேவதைகள் மாநஸ யக்ஞம் செய்தகாலத்தில் யக்ஞத்திற்கு

---

* ब्राह्मणोस्य मुखमासीत् । बाहूराजन्यः कृतः । ऊरूतदस्य यद्वैश्यः । पद्भ्याँशूद्रो अजायत ॥

† चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ॥

அவசியமான உலகவஸ்துக்களுண்டாகாமையால், அந்த விராட் புருஷனை யக்ஞபசுவாகவர்ணித்தார்கள். எப்படியெனில், புத்திக்கிருப்பிடமான முகத்திற்குப் புத்திக்கூர்மையுள்ள பிராம்மணனையும் பலத்திற்கிருப்பிடமாகிய புஜங்களுக்குத் தொள்வலியுடைய க்ஷத்திரியனையும் சஞ்சாரத்துக்கு யோக்கியமான துடைகளுக்கு வியாபாரநிமித்தம் சஞ்சாரஞ்செய்ய வைசியனையும், அடிமையை விளக்கும்படியான பாதங்களுக்கு அடிமைத்தொழிலாளிகளான சூத்திரர்களையும் உபமானமாக வர்ணிக்கப்பட்டதேயன்றி அந்த வர்ணத்தார்கள் அந்தந்த அவயவங்களிலிருந்துண்டானார்களென்பதைச் சொல்லவந்த சுருதியல்லவென்றும் இந்தப் பிராம்மணாதிவர்ணங்கள் விராட்புருஷனிடத்திலிருந்துண்டானார்களென்பதற்கு இந்த சுருதியாதாரமல்லவென்றுஞ் சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஆக்ஷேபனையை யேற்றுக்கொண்டாலுங்கூட சிரேஷ்டமான முகத்திற்குப் புத்திக்கூர்மையுடையப் பிராம்மணனையும் அடிமையை விளக்கத்தக்க பாதங்களுக்கு சூத்திரனையும் தேவதைகள் கற்பித்தார்களென்பதே சிரேஷ்டகநிஷ்டத்தை விளக்கிறது. மேலும் மேற்கண்ட சுருதி வாக்கியங்களுக்கு முந்தியுள்ளவாக்கியங்களால், இருக்கு, யஜுஸ், ஸாமம் முதலிய வேதங்களந்தவிராட்புருஷனிடத்திலிருந்துண்டாயினவென்றும், அதற்குப் பிந்தியவாக்கியங்களால் அந்தப் புருஷனிடத்திலிருந்தே சூரியன், சந்திரன், மிருகங்கள் பக்ஷிகள் விருக்ஷங்கள் முதலியன உண்டாயினவென்றும் சொல்லுகின்றன. இதுமாத்திரமல்ல, பிரஸ்தாப வாக்கியத்தின் கடைசியில் "பாதங்களினின்றும் சூத்திரனுண்டானான்" என்று தெளிவாயிருக்கிறது. இந்த சுருதி வாக்கியங்களுக்கு ஸ்ரீமத் வித்தியாரண்ணியசுவாமி, ஸ்ரீமத் மஹீதராசாரியர் இவர்கள் செய்திருக்கிற பாஷியங்களிற் தகுந்த முகாந்தரங்களோடு இந்தச் சுருதி சிருஷ்டியைக் குறித்துச்சொல்லுகிறதாகவே அர்த்தஞ்செய்திருக்கிறார்கள். இந்தப் பாஷியங்களுடைய அர்த்தத்தையே மநுஸ்மிருதி·அத்-க-அள-ம், சொல்லுகிறது. இப்படிக்கன்றி இந்த வர்ணங்கள் தேவதைகளால் வர்ணிக்கப்பட்டதென்றே சொல்லும் பக்ஷத்தில் அது அசம்பாவிதமாயிருக்கிறது. தேவதைகள் வர்ணனைசெய்தகாலத்திற்கு முந்தியே பிராம்மணாதி வர்ணங்களுண்டாயிருந்திருக்கவேண்டும். அந்த

சுருதியினாலேயே அதற்கு முந்தி உலகவஸ்துக்களொன்றுமுண்டாயிருக்கவில்லையென்று வெளியாகிறது. உண்டாகாத வர்ணாதிகளை யெப்படி வர்ணிக்கக் கூடும்? இன்னான்கு வர்ணத்தாருக்கும் பொதுவானதாயும் அவர்கள் பிரமாணமாயங்கீகரிக்கத்தக்கதாயுமிருக்கிற சுருதி முதலிய சாஸ்திரங்கள் பிராம்மணனை சிரேஷ்டமாகச் சொல்லுகின்றன. யக்ஞாதி கருமங்களில் ருத்துவிக், ஹோதா, பிரும்மா முதலானவர்கள் பிராம்மணர்களாகவே யிருக்கவேண்டியதேயன்றி மற்ற வர்ணத்தார் அதற்கதிகாரிகளல்லவென்று கண்டோக்தமாய் வேதங்கள் சொல்லுகின்றன. மேலும்—

கடோபநிஷத்-வல்லி-க ல், * "அக்நியே பிராம்மண ரூப "மான அதிதியாய் வீட்டிற்குட் பிரவேசிக்கிறார். அப்படிப்பட் "டப் பிராம்மணனுக்கு (பாத்தியம் அர்க்கியம் முதலிய) சாந்தி "யைச் செய்கிறார்கள். ஓ! மிருத்தியுவே! நீ, நசிகேதஸு "க்கு அர்க்கியம் முதலியவைகளினால் உபாசாரஞ் செய்யும். "எந்த அற்ப புத்தியுள்ள புருஷனுடைய வீட்டிற் பிராம்மணனு "னவன் புஜிக்காமல், வஸிக்கிறானோ அப்படிப்பட்டவனுடைய "ஆசை, விருப்பம், நல்லொழுக்கம், பாக்கியமிவைகளையும், யா "கம், தருமம் இவைகளின் பலன்களையும் புத்திர பசு முதலிய "எல்லாவற்றையும் அந்தப்(பிராம்மணனைப் பூஜிக்காத)பாபமா "னது நாசஞ்செய்து விடுகிறது"

தைத்திரீயோபநிஷத்-க-கக-ந-ல், † "எவர்கள் நம்மை "விட சிரேஷ்டர்களோ அந்தப் பிராம்மணர்கள் உன்னால் விசு "வாசத்துடன் ஆஸநாதிகளினாற் பூஜிக்கத்தக்கவர்கள்."

ஷெ ச-ல், ‡ "ஸந்தேக முண்டானவிடத்தில் ஆலோசனை "சொல்லத்தக்கவர்கள் பிராம்மணர்களே"

---

* वैश्वानरः प्रविशत्यतिथिर्ब्राह्मणो गृहान् तस्यैतां शान्तिं कुर्वंति हरवैवस्वतोदकं । ७ । आशाप्रतीक्षे सङ्गतगँ सूनृतांचेष्टापूर्ते पुत्रपशूंश्च सर्वा नेतद्वृङ्क्ते पुरुषस्याल्पमेधसोयस्यानश्नन् वसति ब्राह्मणोगृहे ॥ ८ ॥

† येकेचास्मच्छ्रेयाँसोब्राह्मणाः । तेषांत्वयासनेन प्रश्वसितव्यं ॥

‡ येतत्रब्राह्मणास्सम्मर्शिनः ॥

சாந்தோக்கியோபநிஷத் ௧-அ-௨-ல், * "பூஜ்ஜியர்கள் "முந்திப்பேசட்டும். அப்படிப்பட்டப் பிராம்மணர்களுடைய "வார்த்தையைக் கேட்கிறேன்."

இப்படிப்போலவே சுருதிகளிலநேக விடத்திற் பிராம்மணனை சிரேஷ்டனாகச் சொல்லுகிறது. முற்காலத்திய சக்கிரவர்த்திகள் பிராம்மணர்களைப்போல வேதவேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைக் கற்றவர்களாயும் யக்ஞம் முதலிய சிரேஷ்டமான கருமங்களைச் செய்தவர்களாயுமிருந்துகொண்டு எப்போதும் பிராம்மணர்களைப் பூஜித்து வணங்கி வந்தார்கள். அப்படியே வைசியர்களும் நடந்து வந்தார்கள். அவர்களெல்லாம் மூடர்களென்று சொல்லப்போமோ?

12. முற்காலத்திய சூத்திரர்கள் நல்ல விவேகிகளாயும் அகங்காரம் கருவம் முதலிய துர்க்குணங்களில்லாதவர்களாயும் ஈசுவரபக்தியுள்ளவர்களாயு மிருந்ததனால், தாங்கள் நற்கெதியடைவதற்காகத் தங்கள் வர்ணத்திற்குச் சாஸ்திரங்களாலேற்படுத்தப்பட்டிருக்கிற தருமமெதுவோ அந்தத் தருமத்திலிருந்து பிசகாதவர்களாய், பிராம்மண பக்தியுள்ளவர்களாய் அவர்களுக்கூழியஞ்செய்து வந்தார்கள். அப்படிப்பட்ட சூத்திரர்கள் அந்தப்பிராம்மணனடையக் கூடிய புண்ணியலோகத்தை யடைந்தார்களென்பதில் ஸந்தேகமில்லை. எக்காலத்திலும் வேதத்தைச் சூத்திரர்கள் படித்துவர யோக்கியர்களல்ல. வேதமந்திரங்களையுச்சரிக்க அவர்களதிகாரிகளுமல்ல. ஏனெனில், வேதங்களெல்லாம் மந்திரங்களே. அம்மந்திரங்களை யுச்சரிக்கவேண்டுமானல் அததற்கேற்பட்டிருக்கிற சுவரத்தோடுச்சரிக்கவேண்டும். அப்படிக்கன்றி சுவரந்தப்பி யுச்சரிக்கிறவன் பிராம்மணனானாலும் மற்ற வர்ணத்தானானாலும் கெடுதியை யடைவனேயன்றி நல்லப்பிரயோஜநத்தையடையான். சூத்திரனோ வேதமந்திரங்களை யுச்சரிக்க முற்றிலுஞ் சக்தியற்றவனாயிருக்கிறான். எப்படியெனில், ஸாதாரணமாய் வேதமந்திரங்களில் शुभ्रं=சுப்பிரம். अभ्रं=அப்ரம். मूर्ध्नि=மூர்த்தினி. उग्रः=உக்கிரை: क्षुद्रं=க்ஷூத்திரம். भ्रष्टं=பிரஷ்டம். जृम्भते=சிரும்பதே. द्रष्टुं=திரஷ்

* भगवन्तावग्रेवदतां । ब्राह्मणयोर्वदतोर्वाचंश्रोष्यामीति ॥

டும். ऊर्ध्वं ஊர்த்துவம் என்ற இப்படிப்பட்டவைகளும் இவைகளைவிட கடினமான உச்சரிப்புள்ள வாக்கியங்களும் வருகின்றன. இப்படிப்பட்ட வாக்கியங்களிலெதையாவது சூத்திரன் ஸரியாய் உச்சரிக்கச் சக்தியுடையவனாகமாட்டான். மேலும் வேதமந்திரங்களை யுச்சரிக்கவேண்டுமானாலெந்தெந்த மந்திரம் எந்தெந்த சுவரத்தினாலுச்சரிக்கவேண்டியது விதியோ அந்த சுவரத்தை விட்டு வேறு சுவரத்தினாலாவது சுவரமில்லாமலாவது உச்சரிப்பதனாற் பிராம்மணனுக்கே தீங்குண்டாகும். அப்படியிருக்க சூத்திரன் விஷயத்திற் சொல்லவும் வேண்டுமோ? வேதமந்திரங்களிலின்னின்ன மந்திரங்களை உதாத்த, சுவரத்தினாலும், இன்ன மந்திரங்களை யநுதாத்த சுவரத்தினாலும், இன்ன மந்திரங்களை சுவரித சுவரத்தினாலும், இன்ன மந்திரங்களைப் பிரசய சுவரத்தினாலுமுச்சரிக்க வேண்டுமென்று வேதாங்கங்கள் சொல்லுகின்றன. அந்தந்த மந்திரங்களை அததற்குள்ள சுவரத்தோடுச்சரிக்காவிட்டா லதனாலுண்டாகிற பிரயோஜநங் கெட்டுப்போவதுமாத்திரமல்ல தீங்குமவசியமுண்டாகும். இதற்கு விருத்திராஸுரனுடைய சரித்திரமே திருஷ்டாந்தம். இவைகளையெல்லாமுத்தேசித்தே "नस्त्रीशूद्रोवेदमधीयीत" ஸ்திரீசூத்திரர்கள் வேதத்தை அத்தியயனஞ்செய்யக்கூடாது" என்று சாஸ்திரஞ்சொல்லியது பிராம்மணர்கள் செய்த கட்டுப்பாடல்ல. இக்காலத்திற் சூத்திரர்கள் வேதத்தை யத்தியயனஞ்செய்கிறோமென்றால், அதைத்தடுப்பாரொருவருமில்லை. அதனாற் பிராம்மணர்களுக்கு நஷ்டமுமில்லை. சாஸ்திரவிரோதமானகாரியத்தைச் செய்கிறவன் அதனாலுண்டாகிற பலனையநுபவிக்கிறான்.

13. இக்காலத்தியப் பிராம்மணர்கள் வேதசாஸ்திரங்களைக் கற்காமலும் வேதோக்தமான கருமங்களைச் செய்யாமலுந் தன் வர்ணத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற ஆசாரங்களை யநுஷ்டிக்காமலுமிழிவான தொழில்களைச் சிலர் செய்கிறார்களென்பது வாஸ்தவமே. அதானது, இக்கலிகாலத்தின் மஹிமையினாலும் பிராம்மணர்களைப் பாதுகார்க்கு மரசர்களில்லாததனாலும் வயிற்றுப் பிழைப்புக்காகச் சூத்திரர்களுக்கூழியஞ் செய்தும், ஹீநமான விருத்திகளைச் செய்தும் பிழைத்து வருகிறார்கள். அதனால் அப்படிப்பட்டப் பிராம்மணர்கள் நற்கெதியையடையாமல்

துர்கெதியை யடைவார்களானுலுமவர்கள் பிறப்பினுற் பிராம்மணர்களேயாகையால், சூத்திரர்களைவிட மேலானவர்களே. அதனுற் சூத்திரர்களாற் பூஜிக்கத் தக்கவர்களாகவே யிருக்கிருர்கள். தகப்பனிடத்திலுள்ள தோஷங்களைக்கொண்டு புத்திரன் தகப்பனை யெப்படி யவமதிக்கக்கூடாதோ அப்படிப் பிராம்மணனை சூத்திரனுமவமதிக்கக்கூடாது. அப்படி யவமதிக்கிற சூத்திரன் நற்கெதியை யடையமாட்டான். இது விஷயமாய் சாஸ்திரங்க ளென்னசொல்லுகின்றன வென்பதைக் கேள்.

மநுஸ்மிருதி-அத்-கூல்- * "அக்நியானது, வைதிகமாயிரு "ந்தாலும் (ஔபாஸநம், அக்நிஹோத்திரம் முதலியவைகளி "னுற் காப்பாற்றப்பட்டிருந்தாலும்) லௌகிகமாயிருந்தாலும் "(சமயல் முதலியவைகளுக்கு யோக்கியமாயிருந்தாலும்) எப்ப "டி மேலான தெய்வமாகவே யிருக்கிறதோ அப்படிப் பிராம் "மணனைவன் வித்துவானுயிருந்தாலும் மூடனுயிருந்தாலும் "சிரேஷ்டமான தெய்வமே. பிரகாசமுள்ள அக்நியானது ஸ்ம "சானத்திலிருந்தாலும் நிந்திக்கப்படாமலே யாகங்களிலெப்படி "ஹோமத்தினுல் விருத்திசெய்யப்படுகிறதோ அப்படிப்பிராம்ம "ணர்கள் துராசாரத்திற் பிரவிருத்தித்தவர்களாயிருந்தாலும் "எவ்விதத்திலும் பிராம்மணர்கள் பூஜிக்கத்தக்கவர்களே. "ஏனென்ருல், பிராம்மணர்கள் சிரேஷ்டமான தெய்வமல்ல "வா ?"

இந்த மநுஸ்மிருதி வாக்கியங்களை சாதாதபஸ்மிருதி ஹாரீதஸ்மிருதி தேவலஸ்மிருதி யாக்ஞவல்க்கியஸ்மிருதி இவைகளிலுங் காணலாம்

பவிஷ்யபுராணம் - க - பிரும்மோபவர்ணிஸப்தமீகற்பே - கஅச-ல், † "சூரியபகவான் சொல்வது, ஓ! கருடா! (நீ) எப் "படிச்சொல்லுகிருயோ இது அப்படித்தான் ஸந்தேகமில்லை.

---

* अविद्वांश्चैव विद्वांश्च ब्राह्मणोदैवतं महत् । प्रणीतश्चाप्रणीतश्च यथाग्निर्दैवतं महत् ॥ ३१७॥ श्मशानेष्वपि तेजस्वी पावकोनैव दुष्यति । हूयमानश्चयज्ञेषु भूयएवाभिवर्द्धते ॥ ३१८॥ एवं यद्यप्यनिष्टेषु वर्तन्ते सर्वकर्मसु । सर्वदा ब्राह्मणाः पूज्याः परमं दैवतं हि तत् ॥ ३१९॥

† 'आदित्यउवाच । एवमेतन्नसन्देहो यथा वदसि खेचर । ममाप्येवं

"ஓ! வீரியமுள்ளவனே! பிராம்மணனைப் பரீக்ஷிக்கலாகாது.
"எனக்குமப்படியேதானபிப்பிராயம். (ஏனென்றால்) ஸகலதேவ
"தைகளும் பிராம்மண சுவரூபந்தான். ஸகலலோகமும் பிரா
"ம்மண சுவரூபந்தான். ஆகையாற் பிராம்மணன் பூஜிக்கத்தக்
"கவன். பிராம்மணனுடைய குணங்களைக் குறித்து ஆலோசிக்
"கலாகாது. ஓ! விநதையின் குமாரா! (பிராம்மண) ஜாதிமாத்
"திரத்தை யாலோசிக்கவேண்டியதேயன்றி குணங்களைக்குறித்
"தாலோசிக்கலாகாது."

மஹாபாரதம்-அநுசாஸநிகபருவம்-அத்-அ-ல், சரதற்பத்திற் படுத்திருக்கிற பீஷ்மாசாரியரைப்பார்த்து தருமபுத்திரர், "யார் பூஜிக்கத்தக்கவர்கள், யார் நமஸ்காரஞ் செய்யத்தக்கவர் "கள், நீர், யாரைக்குறித்து நமஸ்காரஞ் செய்கிறீர்." என்று கேட்டதற்கு பூஜிக்கத்தக்கவர்களும் நமஸ்காரஞ் செய்யத்தக்கவர்களும் பிராம்மணர்களே. அவர்களைத்தான் நான் பூஜித்துக் கொண்டும் நமஸ்காரஞ் செய்துகொண்டு மிருக்கிறேன் என்று பதில் விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறார்.

பத்துமபுராணம்-பிர்ம்மகண்டம்-அத் கச-ல், * "ஓ! பிராம்
"மணோத்தமா! ஸகல (பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்
"திர) வர்ணங்களுக்குக் குரு, பிராம்மணனே. பிராம்மணனா
"வன் ஸகல தேவதைகளுடைய சுவரூபமாகவும் பிரபுவாகிய
"ஸாக்ஷாத் நாராயண சுவரூபமாகவு மறியத்தக்கவன். ஓ!
"பிராம்மணா! எவன் பிராம்மணனை ஹரிசுவரூபியென்கிற புத்
"தியினாலே பக்தியோடு வந்தநஞ் செய்கிறானோ அப்படிப்ப
"ட்டவனுக்கு ஓ! துவிஜசிரேஷ்டா! ஸம்பத்து முதலானது
"விருத்தியடைகிறது. எவன் கருவமடைந்தவனாய் பிராம்மண

---

गतं वीर ब्राह्मणं नपरीक्षयेत् ॥ ३८ ॥ सर्वदेवमयं विप्रं सर्वलोकमयं तथा । तस्मात्सम्पूजयेदेनं न गुणान् तस्य चिन्तयेत् ॥ ३९ ॥ केवलं चिन्तयेत् जातिं नगुणान्विनतात्मज ॥ ४० ॥

* ब्राह्मण स्सर्ववर्णानां गुरुरेवाद्विजोत्तम । सर्वामराश्च यो ज्ञेयः साक्षान्नारायणः प्रभुः ॥२॥ कुर्यात्प्रणामं योविप्रं हरिबुध्या तु भूसुर। भक्त्यातस्य द्विजश्रेष्ठ वर्धते संपदादिकं ॥ ३ ॥ ननमेत् ब्राह्मणं दृष्ट्वा हे-

"ஃனப்பார்த்து அவமதிப்பினலே வந்தநஞ் செய்கிறதில்லையோ "அப்படிப்பட்டவனுடைய சிரச்சேதநஞ் செய்வதற்கெப்போ "தும் ஹரியானவர் இச்சிக்கிருர். யார் பாப புத்தியுள்ளவர்க "ளாகத்தாங்கள் அபராதஞ் செய்தவர்களாகும்படி பிராம்மண "ஃனத் துவேஷிக்கிருர்களோ அப்படிப்பட்டவர்கள் ஹரித்து "வேஷிகளென்று அறியத்தக்கவர்கள். அவர்கள் குரூரமான "நரகத்தை யடைகிருர்கள்."

14. பிராம்மணனுனவன் அவித்துவானுயும் வர்ணுசிரமதரு மங்களைவிட்டவனுயும் துராசாரமுள்ளவனுயுமிருந்தாலும் சிரேஷ்டனென்றும் அவனிடத்திலுள்ள துர்க்குணத்தை ஆலோசிக்காமலே பூஜிக்கவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் ஏன் சொல்லுகின்றனவென்றல், வேதோக்தமான அநேக ஸம்ஸ்காரங்களை யடைந்திருக்கிற பிராம்மணனுடையவும் பிராம்மணஸ்திரீயினுடையவும் பீஜம், கருப்பமிவைகளினுலுண்டானது மாத்திரமல்ல, இவனும் கருப்பாதாநம், பும்ஸவநம், ஜர்தகருமம், நாமகரணம், அந்நப்பிராசநம், சௌளம், உபநயநம் முதலியவநேக ஸம்ஸ்காரங்களை வேதோக்தமான மந்திரங்கள் மூலமாயடைந்தும் உபநயநத்தில் ஸர்வசிரேஷ்டமானப் பிர்ம்மோபதேசத்தைப்பெற்று மிருக்கிருனுகையாலவன், ஸம்ஸ்காரங்களாற் சுத்தியடையாத சூத்திரனைவிட சிரேஷ்டனென்பதிற்சந்தேகமில்லை. இந்த அர்த்தத்தை ஸ்மிருதியுஞ் சொல்லுகிறது.

தேவலஸ்மிருதியில், * "ஜநநத்தாற் பிராம்மணனென்று "ம் (கருப்பாதாநம் உபநயநம் முதலிய) ஸம்ஸ்காரத்தினுற் "துவிஜனென்றும் (வேதம்முதலிய) கல்வியினுல் விப்பரனென் "றுஞ் சொல்லப்படுகிறுன். (ஜநநம், ஸம்ஸ்காரம், கல்வி) இம்மூ "ன்றுமுள்ளவன் சுரோத்திரியனென்று சொல்லப்படுகிறுன்."

---

त्याऽपिच गर्वितः । छेदनं तस्यशिरसः कर्तुमिच्छेत्सदा हरिः ॥ ४ ॥ कृतापराधं विप्रंये द्विषन्ति पापबुद्धयः । हरिद्विषो हि ते ज्ञेया निरयं यान्ति दारुणं ॥ ९ ॥

* जन्मना ब्राह्मणोज्ञेयस्संस्कारैर्द्विजउच्यते । विप्रत्वं विद्ययाचापि त्रिभि श्श्रोत्रियउच्यते । இந்த வாக்கியத்தை, பத்தும புராணம் பிரகிருதிகண்டம்-அத்-சந--சு-கநடு-ல் காண்க.

ஆகையாற், பிறப்பினாலும், ஸம்ஸ்காரம் முதலியவைகளி னாலும் சுத்தனாயிருக்கிற பிராம்மணன், இழிவான தொழிலைச் செய்துகொண்டு துராசாரமுள்ளவனாயிருந்தால் அதனாலுண் டாகிற பாப பலனை யவனனுபவிக்கவேண்டியவனானாலுஞ் சூத் திரனாலிகழப்படத்தக்கவனல்ல. சூத்திரர்களுக்கவன் பூஜ்ஜிய னே. அந்தப் பிராம்மணனை நிந்திக்கிற சூத்திரன் சிரேயஸ்ஸை யடையமாட்டான்.

15. பின்னுஞ் சொல்லுகிறேன் கேள். பிரும்ம க்ஷத்தி ரிய வைசிய சூத்திரர்களாகிய நான்கு வர்ணத்தாருக்கும் இன் னின்னாருக்கு இன்னின்னதரும கருமமென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றன. அவ்விதியை மீறி சுவதருமத்தைவிட்டு பரதரு மத்தைப் பின்பற்றுகிறவன் சுவதருமத்தை விட்டதனாலுண்டா ன தோஷத்தையும் பரதருமத்தை யநுஷ்டித்ததனாலுண்டாகிற தோஷத்தையுமடைந்து அதனால் நற்கெதியைப்பெறமாட்டான். இந்த அர்த்தத்தையே சாஸ்திரங்களுஞ் சொல்லுகின்றன.

ஸ்ரீ பகவத்கீதை-அத்-கஅ-ல், * "அந்தந்த வர்ணத்தா "ருக்கு விதித்திருக்கிற கருமத்திற் சிரத்தையுடைய மனிதன் "ஞானயோக்கியதையை யடைகிறான். தன்னுடைய தருமமா "னது குணமற்றதென்று காணப்பட்டாலுங் கிரமமாயநுஷ்டிக் "கப்பட்ட பிறருடைய தருமத்தைக்காட்டிலுஞ் சிரேஷ்டமா "னது. தனக்கியற்பாயிருக்கிற கருமத்தைச் செய்கிறவன் பா "பத்தையடையமாட்டான்."

மஹாபாரதம், ஆரண்ணியபருவம்-அத்-௨௭௧-ல், ‡ "வேட "னாகிய தருமவியாதன் சொல்வது. பிதா பிதாமஹனிடத்தி "லிருந்து வந்ததாகிய இந்த மஹத்தான கருமமானது என் "குலத்திற்கு யோக்கியமானது. (அப்படிப்பட்ட) என்னுடை "ய சுவதருமத்திலேயே இருந்துகொண்டிருக்கிற என் விஷ

---

* स्वेस्वे कर्मण्यभिरत स्संसिद्धिं लभते नरः ॥ ४५ ॥ श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् । स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषं ॥ ४७ ॥

‡ व्याधः । कुलोचितमिदं कर्म पितृपैतामहं महत् । वर्तमानस्य मे

"யத்தில் ஓ! பிராம்மணோத்தமா! கோபிக்கலாகாது. ஆதி "காலத்திற் பிரும்மாவினாலேற்படுத்தப்பட்ட விதியை யநுஸரி "த்து ஓ! பிராம்மணோத்தமா! எனக்கியற்பான கருமத்தை "இரக்ஷித்துக் கொண்டிருக்கிறேன்."

16 மேற்கண்ட தருமவியாதனென்கிற வேடன் மஹாக் ஞாநியாயிருந்தும் மாம்ஸங்களை விற்றுக்கொண்டிருந்தபோது அவனை ஸந்தித்தப்பிராம்மணன் "ஞாநியான உனக்கு இத் "தொழில் யோக்கியமாகுமா? நிந்திக்கத்தக்க தொழிலல் "லவா?" என்றப்பிராம்மணனுடைய வாக்கியத்திற் குத்தர மாக, பரம்பரையாய் வந்ததும் எனக்கு சுவதருமமானது மாகிய இந்த கருமத்தை பிரும்மாவினாலேற்படுத்தப்பட்ட விதியை யநுஸரித்துச் செய்வதென் கடமையென்று சொன் னதனாற் தன்னுடைய சுவதருமமானதெவவளவு நிந்தியமா னதாயிருந்தாலுமதை விடக்கூடாதென்று சிரேஷ்டமானக் ஞாநியாகிய தருமவியாதனே அநுஷ்டித்தானென்றால், மற்ற வர்ணத்தார் விஷயத்திற் சொல்லவும் வேண்டுமோ. எந்த வர்ணத்தானானாலும் புத்திர மித்திர களத்திராதிகளிலபிமாநம ற்றவனாயுலகவிஷயங்களில் விரக்தியையடைந்து தபஸ் அல் லது யோகத்தில் நிலையாயிருக்கிறவனுக்கிந்த வர்ணாசிரமதரு மங்களை யநுஷ்டிக்கவேண்டுமென்பது விதியல்ல. அப்படிப் பட்டவன் தவிர மற்ற கிரஹஸ்தாசிரமத்திலிருக்கிற பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் அவரவர்களுக்கு ஏற்பட்டிரு க்கிற வர்ணாசிரமதருமங்களை யவசியமநுஷ்டிக்கவேண்டும். அநுஷ்டிக்காமல் விட்டு விடுவானானாலவன் துர்கெதியையடை வான்.

17. சூத்திரர்கள் மேலானவர்ணத்தாரை சுசுரூஷைமுத லியவைகளினாற் பூஜித்து வருவார்களானாலவர்களுக்குத்தம கெதி யுண்டாகுமென்று வேதவியாஸமஹரிஷி சொல்லியிருக் கிறார். ஒருக்காலத்திற் சில மஹரிஷிகள் வேதவியாஸரிடத் திலிருந்து ஸந்தேகங் கேட்டறிய, அவரிருக்குமிடஞ் சென் றார்கள். அக்காலத்தில் வேதவியாஸர் கங்காநதியில் ஸ்நாநஞ்

---

धर्मे स्वेमन्युं माकुर्याद्विज । विधात्रा विहितं पूर्वं कर्मस्त्वमनुपालयन् ॥२९॥

செய்துகொண்டிருந்தார். மஹரிஷிகள் வந்திருக்கிற காரணத்தைக் ஞானதிருஷ்டியினலறிந்த வேதவியாஸர் அந்த ரிஷிகளுடைய சந்தேகந் தீரும்படி அடியிற்கண்ட வாக்கியங்களைச் சொல்லிக்கொண்டு மூன்று தடவை ஸ்நானஞ் செய்தார். இவ்விஷயங்களை யுரைக்கிற விஷ்ணுபுராண வாக்கியங்களைக்கேள்.

விஷ்ணுபுராணம்-அம்சம்—௬-அத்-௨-ல், * "(ரிஷிகள் "கங்காநதிக்கரையில் வந்த) பிறகு முனிகள் கேட்கும்படியாய், "" கலிஸாது" (யோக்கியன் அல்லது நல்லவன்) ஸாது வென் "றிப்படிச்சொல்லி அந்த வியாஸரானவர் மறுபடி முழுகி "யெழுந்து "சூத்திரன் ஸாது" என்றும் "புண்ணியவான்" என் "றுஞ் சொன்னர். அந்த மஹாமுனியானவர் மறுபடி முழுகி "யெழுந்து "ஸ்திரீகள் ஸாது, புண்ணியவதிகள், அவர் "களைவிட எவன் புண்ணியசாலியாயிருக்கிறன்" என்றார். "ஸ்நானஞ் செய்த பிறகு தன்னுடைய கருமங்களைக் கிரமமாய் "முடித்துக்கொண்டு வருகிற மஹானை (பராசரமஹருஷி "யாகிய) என் குமாரனைப்பார்த்தெழுந்திருந்து வந்தனஞ் "செய்தார்கள். அம்முனிகளுக்கு ஸத்தியவதீ குமாரராகிய "வியாசர் ஆஸநங்களைக்கொடுத்து நீங்களெதற்காக வந்தீர் "களென்று கேட்டார். (அதற்கந்த முனிகள்) தங்களிடத்தில் "ஸந்தேகம் கேட்கும்பொருட்டு வந்தோம். அதிருக்கட்டும், "தாங்கள் கலிஸாது என்றும் சூத்திரன் ஸாது என்றும் "ஸ்திரீகள் ஸாதுக்களென்றும் அவர்களெல்லோரும் புண்ணிய

---

* व्यासस्साधुः कलिस्साधुरित्येवं शृण्वतां ततः ॥ ६ ॥ तेषां मुनीनां भूयश्च ममज्ज स नदीजले । उत्थाय साधु साध्विति शूद्र धन्यो सि चाब्रवीत् ॥ ७ ॥ सनिमग्नस्समुत्थाय पुनः प्राह महामुनिः । योषितः स्साधु धन्या स्तास्ताभ्यो धन्यतरोऽस्ति कः ॥ ८ ॥ ततस्नात्वा यथान्याय मायान्तं कृतसत्क्रियं । उपतस्थु र्महाभागं मुनयस्ते सुतं मम ॥ ९ ॥ कृतसंवन्दनांश्चाह कृतासनपरिग्रहान् । यदर्थ मागता यूयं इति सत्यवती सुतः ॥ १० ॥ तमूचुस्संशयं प्रष्टुं भवन्तं वयमागताः । अलं ते नास्तु तावन्नः कथ्यता मपरं त्वया ॥ ११ ॥ कलि स्साध्वीति यत्प्रोक्तं शूद्र स्साध्विति योषितः । यदाह भगवान् सा-

"வான்களென்றும் அடிக்கடி சொன்னீர்களே அதன் தாத்பரிய "த்தை முந்தியறிந்து கொள்ள விரும்புகிறோம். அது இரஹஸிய "மல்லாத பக்ஷத்திலதையெங்களுக்குச்சொல்ல விரும்புகிறோம். "பிறகு நாங்களுத்தேசித்துவந்த காரியத்தைக்கேட்கிறோம். "இப்படிச் சொன்னதைக்கேட்ட வியாஸர் புன்சிரிப்புடன் "சொன்னதாவது— ஓ! முனிசிரேஷ்டர்களே! ஸாது ஸாது "வென்று எதனாற் சொன்னேனோ அதைக்கேளுங்கள். கிருத "யுகத்திற் பத்துவருஷங்களினாலெது சித்தியாகுமோ அது "திரேதாயுகத்தில் ஒரு வருஷத்தினாற் சித்தியாகும். அதுவே "த்துவாபரயுகத்தில் ஒருமாதத்தினாற் சித்தியாகும். கலியுகத் "திலோ, இராப்பகலுள்ள ஒருநாளிற்சித்தியாகும். இவ்விதமா "ய்த்தபஸுக்காவது பிரும்மசரிய விரதத்திற்காவது ஜபம் "முதலியவைகளுக்காவது பலனைக் கலியுகத்திலே மனிதன் "மற்றமூன்று யுகங்களிலடைவதைப்பார்க்கிலும் மிகவுமெளிதா "யடைவானாகையாற் கலிஸாது வென்று சொன்னேன். மே "லும் கிருதயுகத்திற் தியாநத்தினாலும், திரேதாயுகத்தில் யக்ஞ "த்தினாலும், துவாபரயுகத்திற் பூஜையினாலுமெந்தப் பிரயோஜ "நமுண்டாகுமோ அந்தப்பிரயோஜநம் கலியுகத்திற் கேசவ "னுடைய நாமபஜனையினாலடையப்படுகிறது. ஓ! தருமமறிந் "தவர்களே! இக்கலியுகத்திலற்பப்பிரயாசையினாலேயே மனி "தன் சிரேஷ்டமான தருமத்தைப் பெறுவானாகையாற் கலியை "நான் கொண்டாடுகிறேன். இனி சூத்திரன் ஸாதுவென்று "சொன்னதற்குக் காரணஞ் சொல்லுகிறேன். பிராம்மணர்கள்

---

धु धन्याश्चेति पुनः पुनः ॥ १२ ॥ तत्सर्वंश्रोतु मिच्छामः नचेद्गुह्यं महामुने । तत्कथ्यतां ततो हृत्स्थं प्रक्ष्यामस्त्वां प्रयोजनं ॥ १३ ॥ इत्युक्तो मुनिभिर्व्यासः प्रहस्येद मथाब्रवीत् । श्रूयतां भोमुनिश्रेष्ठा यदुक्तं साधु साध्विति ॥ १४ ॥ यत्कृते दशभि र्वर्षै स्त्रेतायां हायने नयत् । द्वापरे यच्चमासेन अहोरात्रेण तत्कलौ ॥ १५ ॥ तपसो ब्रह्मचर्यस्य जपादिश्चफलं द्विजाः प्राप्नोति पुरुष स्तेन कलिस्साध्विति भाषितं ॥ १६ ॥ ध्यायन् कृते यजन् यज्ञै स्त्रेतायां द्वापरे र्चयन् । यदाप्नोति तदाप्नोति कलौ संकीर्त्यकेशवम् ॥ १७ ॥ धर्मोत्कर्षमतीवात्र प्राप्नोति पुरुषःकलौ ।

"விரதானுஷ்டானங் தவறுமற் செய்துகொண்டு முதலில் வே
"தங்களை யோதவேண்டும். பிறகு தருமமாய் ஸம்பாதித்த
"பொருள்களைக்கொண்டு விதிப்படி யாகங்கள் செய்யவேண்
"டும். பிராம்மணர்களுக்கு பகவானைப்பற்றிய வார்த்தைக
"ளைத் தவிர வீண்வார்த்தைகளைச் சொல்வதும் பகவானுக்கர்
"பணஞ்செய்யாத ஆகாராதிகளை புஜிப்பதும் டம்பத்திற்காக
"வும் லாபத்திற்காகவும் யாகாதிகளைச் செய்வதும் தீமையை
"யுண்டாக்குமாகையாலவர்களெப்போதும் மனது, வாக்கு,
"காயங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். அல்
"லாமலும் பிராம்மணர்களுக்கெதையும் விதிப்படிச் செய்யா
"மற்போனாற் குற்றமாகும். ஆகாராதிகள் இஷ்டப்படிச்செ
"ய்ய வொண்ணாது. விதிப்படிச் செய்யவேண்டும். இவ்வா
"றவர்களுக்கு ஸகல காரியங்களிலும் சுவதந்திரமில்லாதத
"னாலே அவர்கள் மிகவும் வருத்தத்தினாற் தாங்களடையவேண்
"டிய உலகங்களை ஜயிக்கவேண்டும். சூத்திரனோ, வேதாத்திய
"யநம், அக்நியிற் செய்யவேண்டியதாகிய யக்ஞாதி கருமங்கள்
"இவைகளில்லாமலே பாகயக்ஞாதி காரியமுடையவனாய் முந்
"திய வர்ணத்தாராகிய பிராம்மணாதிகளுக்கூழியஞ் செய்வத
"னாலேயே பிராம்மணர்களடையத்தகுந்த உத்தமலோகங்களை
"யடைவான். ஆதலால் அவனைக் (சூத்திரனை) காட்டிலும்
"புண்ணியவான் யாரிருக்கிறார்கள்? ஓ! முனிசிரேஷ்டர்களே!
"சூத்திரர்களுக்கின்னது புஜிக்கத்தக்கது, இன்னது புஜிக்
"கத்தகாதது, இது குடிக்கத்தக்கது, இது குடிக்கத்

---

अल्पायासेन धर्मज्ञास्तेन तुष्टोस्म्यहं कलेः ॥ १८ ॥ व्रतचर्या परैर्ग्राह्यो वेदः पूर्वं द्विजातिभिः । ततस्स्व धर्मसंप्राप्तैर्यष्टव्यं विधिनाद्ध्वरैः ॥ १९ ॥ वृथा कथा वृथाभोज्यं वृथेज्याच द्विजन्मनाम् । पतनाय तथा भाव्यं तैस्त्व संयमिभिस्सदा ॥ २० ॥ असम्यक्करणे दोषस्तेषां सर्वेषु कर्मसु । भोज्यपेयादिकं चैषां नेच्छाप्राप्तिकरं द्विजाः ॥ २१ ॥ पारतन्त्र्यात् समस्तेषु तेषां कार्येषु वै ततः । जयन्ति ते निजान् लोकान् क्लेशेन महता द्विजाः ॥२२॥ द्विजशुश्रूषयै वैष पाकयज्ञाधिकारवान् । निजान् जयति वै लोकान् शूद्रोध-न्यतरस्ततः ॥ २३ ॥ भक्ष्या भक्ष्येषु नास्यास्ति पेयापेयेषु वै यतः ।

"தகாதது என்ற நியமமில்லாததனுலே சூத்திரன் ஸாது வென்
"று சொன்னேன். (ஸ்திரீகள் ஸாதுவென்றதற்குக் காரணஞ்
"சொல்லுகிறுர்.) புருஷர்கள் தங்களுடைய தருமத்திற்கு
"விரோதமன்றி ஸம்பாதித்த பொருள்களை ஸத்பாத்திரத்திலெப்
"போதுஞ் சிலவிடவேண்டும். சாஸ்திரவிதி தவறுமல் யக்ஞம்
"முதலிய கருமங்களைச் செய்யவேண்டும். ஓ! பிராம்மண
"சிரேஷ்டர்களே! இப்படியாகப் பொருள்களை சம்பாதிப்பதி
"லும் அதைக்காப்பாற்றுவதிலும் மிகவும் வருத்தமிருக்கிறது.
"அப்பொருளை நல்வழியிற் சிலவிடுவதிலோ, மனிதர்களுக்க
"திக வருத்தமிருக்கிறது. ஓ! பிராம்மண சிரேஷ்டர்களே!
"புருஷர்களிப்படிப்பட்ட வருத்தங்களினுலும் பின்னு மநேக
"வருத்தங்களினுலும் பிரும்மலோகம் முதலிய உத்தமலோகங்
"களைக் கிரமமாய் வெல்லுகிறுர்கள். ஸ்திரீயோ வென்றுல்,
"மனது வாக்குக் காயங்களினுலே கணவனுக் கநுகூலியாயி
"ருந்துகொண்டு சுசுரூஷை செய்துவருவாளாகிலந்தப்புருஷ
"னடையு முலகத்தையே இவளுமடைவாள். இவ்விதமாய
"திக வருத்தமின்றியிலேயே, தங்கள் கணவன் வருத்தத்தி
"னுலடையு முலகத்தை இவளுமடைவாளாகையால், மூன்றுவ
"தாக ஸ்திரீகள் ஸாதுவென்று சொன்னேன்."

ஆகையால், ஓ! ஜயவிரதா! சூத்திரர்கள் அவர்களுடைய சுவதருமத்தைச் செய்வதனுலேயே அவர்களுத்தமகெதியடையக் கூடியதாயிருக்கையிற் பாபத்திற்கு ஹேதுவாய் சுவதருமத்தை விட்டு பரதருமமாகிய பிராம்மண தருமத்தை யநுஷ்டிக்க, ஏன் முயலவேண்டுமோ அதையறியக்கூடவில்லை.

மூன்றுவதுப்பிரகரணம்
முற்றிற்று.

---

नियमो मुनिशार्दूला स्तेनासौ साध्वितीरितम् ॥ २४ ॥ स्वधर्मस्या विरोधेन नरैर्लब्धं धनं सदा । प्रतिपादनीयं पात्रेषु यष्टव्यंच यथा विधि ॥ २५ ॥ तस्यार्जने महाक्लेशः पालनेच द्विजोत्तमाः । तथा सद्विनियोगाय विज्ञेयं गहनं नृणाम् ॥ २६ ॥ एभिरन्यै स्तथाक्लेशैः पुरुषा द्विजसत्तमाः । निजान् जयति वै लोकान् प्राजापत्यादिकान् क्रमात् ॥ २७ ॥ योषिच्छुश्रूषणात भर्तुः कर्मणा मनसागिरा । कुर्वती समवाप्नोति तत् सालोक्यं यतोद्विजाः ॥ २८ ॥ नातिक्लेशेन महता तानेव पुरुषो यथा । तृतीयं व्याहृतं तेन मया साध्विति योषितः ॥ २९ ॥

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## நான்காவது பிரகரணம்.

ஜயவிரதன்:— ஓ! மஹாநுபாவா! என்னுடைய நற்காலமானது, தங்களை தரிசிக்கும்படியாயும் தங்களிடத்திலிருந்து அமிருதவர்ஷம்போலொற்ற வாக்காகிற உபதேசத்தைப் பெறும்படியாயும் செய்தது. இதற்கு என்னுடைய மாதாவானவள் காரணமானுள். இவ்வுலகவிஷய சுகங்களையே முக்கிய ஸுகமாகவெண்ணி அவைகளையே நம்பியிருந்த என் புத்தியானது இப்போது மாறிவிட்டது. இனி இவ்வுலகவிஷயஸுகங்களையநுபவிக்க நான் எண்ணங்கொள்ளவில்லை. நான் இனி திரும்பிப் பட்டணம் போகமாட்டேன். இவ்வநத்திலேயே வாஸஞ்செய்துகொண்டு தங்களாலுபதேசம்பெற்று உத்தம சுகமடையும் மார்க்கத்தில் முயற்சி செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

2. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! நீ உலகவிஷயங்களிலிருந்து விரக்தியடைந்தது நிச்சயமானுல் நீ, இந்தக்காட்டில் வாஸஞ் செய்யவேண்டுமென்கிற தவசியமில்லை உண்மையாய் விரக்தியடைந்த புருஷன் குடும்பத்தோடு வீட்டிலிருந்தாலுமவனை இவ்வுலகவிஷயங்கள் அற்பமேனும் பாதிக்கமாட்டாது. அப்படிப்பட்டவன் வீட்டில் வஸிப்பதிலும் காட்டில் வஸிப்பதிலும் அற்பமேனும் பேதமில்லை. "நீ, ஏன் வீட்டைவிட்டுக் காட் "டிற்கு வந்தாய்" என்றென்னைக்கேட்பாயோ அதற்குக் காரணஞ் சொல்லுகிறேன் கேள். நான் வீட்டிலிருந்தகாலத்திலெனக்கு உலகாநுபவ விஷயத்திலும் மக்கள் மனைவிமுதலிய பந்துக்கள் விஷயத்திலு மபிமாநமற்று விரக்தியுண்டாயிருந்தாலுங்கூட அந்த விரக்தி, நிலையையடையாமல் அடிக்கடி மாறிக்கொண்டேயிருந்தது. அவ்விரக்தி யுறுதிப்படும்பொருட்டு நான் வீட்டைவிட்டுக் காட்டிற்குவந்தேன். எந்தப் புருஷன் அபிமாநங்களை விட்டு விரக்தியை யடைந்து அதே நிலையிலு

றுதியாயிருக்கிருனே அவன் எவ்வளவு பந்துக்களோடுசேர்ந் திருந்தாலும் எவ்வளவு விஷயங்களை யநுபவித்துவந்தாலும வன் அவைகளினுல் யாதொருவிதமான தோஷத்தையுமடைய மாட்டான். அப்படிப்பட்டவனுக்கு விடேதான் காடு, காடே தான் வீடு.

3. ஜநகனென்கிற அரசனும் பிரஹ்லாதனென்கிற ராக்ஷ ஸேசுவரனும் ஞானிகளாயிருந்தும் இராஜ்ஜிய பரிபாலநஞ் செய்துகொண்டு வீட்டிலிருந்து குடும்பரக்ஷணை செய்து கொண்டும் வந்தார்கள் அவர்கள் ஞாநத்தினுல் முடிவில் மோக்ஷமடைந்தார்களென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மேலும், அபிமாநத்தைவிட்டு மனதை யொரேநிலையில் நிறுத் திக்கொண்டு கலங்காமலிருக்கிற ஞாநிக்கு வீடு காடென்கிற பேதமில்லையென்று சொல்லுகிற சாஸ்திரவாக்கியங்களு மிருக் கின்றன.

வாஸிஷ்டராமாயணம்-ரு-ருகூ-ல், * "எதனுலடங்கிப் "போனதாயிருக்கிற ஜகத்தினிருப்பானது, அந்தக்கரணத்திற் "ருேற்றுகிறதில்லையோ எதனுற் துக்கம் பயம் ஈஷணை இவை "களை மனதறிகிறதில்லையோ அசைவற்ற அந்த அவஸ்தையா "னது ஸமாதியென்று சொல்லப்பட்டிருக்கிறது. காணப்படு "கிற ஸகலவஸ்துக்களுடைய பாவனையை (எண்ணம் அல்லது "நினைவு) மனதினுலே நன்ருய்த் தள்ளிவிட்டு எப்படி நீ இப் "போதிருக்கிருயோ, மலையிலிருந்தாலும் வீட்டிலிருந்தாலு "மப்படியே இரு. "நான்" என்கிற அகம்பாவமாகிற தோஷ "மடங்கிப்போனவர்களாயும் நன்ருயடக்கப்பட்ட மனதை "யுடையவர்களாயுமிருக்கிற கிரஹஸ்தர்களுக்குக் கிரஹமே "ஜநவாஸமில்லாத வநபூமியாகவிருக்கிறது. மனதினுடைய "வியாபாரமற்றிருக்கிறவனுக்குக் காடும் வீடும் ஸமமானவை "களே."

---

१ प्रशान्त जगदास्थोन्त वीतशोकभयैषणः । स्वस्थो भवति येनात्मा ससमाधिरितिस्मृतः ॥ २० ॥ चेतसा संपरित्यज्य सर्वभावात्मभावनां । यथातिष्ठसि तिष्ठत्वं तथाशैले गृहेऽथवा ॥ २१ ॥ गृहमेव गृहस्थानां सुसमाहित चेतसां । शान्ताहं कृतिदोषाणां विजनावन भूमयः। २२ ॥ अरण्यसदने तुल्ये समाहित मनो दृशां ॥ २३ ॥

கர்க்கஸம்ஹிதை·விசுவஜித்கண்டம்-அத்-௩௩-சு-௧அ-ல், *"எவன் வைராக்கியமடைந்து ஞாநநிஷ்டையிலிருக்கிருனே, "எவன் வேறு பற்றில்லாமற் கிருஷ்ணபகவானிடத்திற் பக்தி "செய்கிருனே அவன் தபோவநத்திலிருந்தாலுமதவனுக்குவீ "டே. வீட்டிலிருந்தாலுமது அவனுக்கு வநமேதான். அவ "னை அந்த ஸத்துவரஜஸ்தமோகுணங்களெப்போதுந் துடரு "கிறதில்லை."

கருடபுராணம்-க-௧௧௩-கூ-ல், † "ஆசையுள்ளவர்களுக்கு "வநத்திற்போயிருந்தாலுந் தோஷங்களேயுண்டாகின்றன. வீட் "டிலேயேயிருந்தாலும் ஐம்பொரிகளையடக்குவதுதான் தபஸா "கிறது. யோக்கியமான கருமத்திலெவன் பிரவிருத்தித்திருக் "கிருனே, ஆசையற்றிருக்கிற அவனுக்கு வீடுதான் தபோ "வநம்."

பின்னுஞ்சொல்லுகிறேன் கேள். எவன் மனதையடக்கி ஆசை அபிமானங்களைவிட்டு ஆத்துமசுவரூபத்திற் திருப் தியுள்ளவனுயிருக்கிருனே அவனைப் பாபங்களாவது கரும பலன்களாவது அற்பமேனுமொட்டமாட்டாது. அவன் எவ் வளவு விஷயங்களை யநுபவித்தாலுமந்த விஷயங்களவனை யொ ட்டுகிறதில்லை. இந்த அர்த்தத்தைச் சொல்லுகிற சாஸ்திரவாக் கியங்களைச் சொல்லுகிறேன் கேள்.

கடவல்லியுபநிஷத்-கூ-௧௪-ல், ‡ "மனிதர்களுடைய மன "திலுள்ள ஸகலவிதமான ஆசைகளுமெப்போதொழிகின்றன "வோ அதற்குப்பிறகு அவன் மோக்ஷமடைகிருன்."

---

* यो ज्ञाननिष्ठोऽतिविराग माश्रितः श्रीकृष्णभक्त स्त्वनपेक्षकोऽपि यः । तपोवनंवापि गृहंगृहं वनं स्पृशन्ति तन्ते त्रिगुणानसर्वतः ॥

† वनेऽपि दोषाः प्रभवंतिरागिणां गृहेऽपि पञ्चेन्द्रियनिग्रहस्तपः । अकुत्सिते कर्मणि यः प्रवर्तते निवृत्तरागस्य गृहं तपो वनं ॥

‡ यदा सर्वे प्रमुच्यन्ते कामाये ऽस्य हृदि श्रिताः । अथ मर्त्योऽमृतो भवति ॥ இந்தவாக்கியத்தை சாட்டியாயன்னியுபநிஷத்தி லும் காண்க.

மஹோபநிஷத்-அத்-ச-ல், * "பந்தமோக்ஷங்களுக்கு இர
"ண்டு மார்க்கங்களிருக்கின்றன. அதாவது "என்னுடையது"
"என்பதும் "என்னுடையதல்ல" என்பதுந்தான். என்னுடைய
"தென்பதினுற் பிராணிகள் பந்தத்தையடைகிறுர்கள். என்னு
"டையதல்லவென்பதினுற் பந்தத்திலிருந்து விடுபடுகிறுர்கள்"
(என்றல், மோக்ஷமடைகிறுர்கள்.)

வராஹோபநிஷத்-அத்-உல், † "கரகத்தைத் தலையில்வை
"த்துக்கொண்டிருக்கிற ஸ்திரீயானவள் ஸங்கீதம், தாளம், லய
"ம் வாத்தியமிவைளுக்கிணங்க நடநஞ் செய்துகொண்டிருந்தா
"லுமந்த ஸ்திரீ, தன் தலையிலிருக்கிற கரகம் நழுவாமலிருக்கும்
"பொருட்டு எவ்வளவு கவநம் வைத்திருப்பாளோ அப்படி யோ
"கியானவன் கூட்டங்கூட்டமாயிருக்கிற விஷயங்களைப்பார்த்து
"க்கொண்டும் அவைகளையே அநுபவித்துக்கொண்டுமிருந்தாலு
"மந்த யோகியானவன் பிர்ம்மத்தைப் பார்த்துக்கொண்டிருக்கி
"ற புத்தியை நழுவவிடுகிறதில்லை."

பகவத்கீதை-அத்-உ-ஙு அ-ல், ‡ "சுகதுக்கங்களையும் இ
"லாபநஷ்டங்களையும் ஸமமாயெண்ணி யுத்தத்திற்கு வித்தனுக
"க்கடவாய். இப்படிப்பட்ட நிச்சயமுள்ளவனுகவானுற் பாபத்
"தையடையமாட்டாய்."

ஷை அத்-ங-சு-ங0 ல், § "ஓ! அர்ஜுனு! நீ, ஸகலகரு
"மங்களையு மென்னிடத்திலொப்பிவித்து (ஈசுவரார்பணஞ்
"செய்து) "நான் பரமாத்துமாவினுடைய ஏவற்காரனுக ஸகல
"கருமங்களையுஞ் செய்து (அதன் பலனை) பரமாத்துமாவுக்
"கர்பணஞ் செய்யவேண்டியவன்" என்ற எண்ணத்துடன்

---

* द्वेपदे बन्धमोक्षाय निर्ममेतिममेतिच ।। ममेति बध्यतेजंतु निर्ममेति विमुच्यते ।।

† पुंखानुपुंख विषये क्षणतत्परोपि ब्रह्मावलोकनधियं नजहाति योगी । सङ्गीतताळलयवाद्यवशं गतापि मौळिस्थकुंभपरिरक्षणधी र्नटीव ।।

‡ सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ । ततो युद्धाय युज्यंस्व नैवं पाप मवाप्स्यसि ।।

§ मयि सर्वाणि कर्माणि सन्यस्या ध्यात्मचेतसा । निराशी

பலனிலாசையைவிட்டும், மமதையைவிட்டும் வியஸநத்தைவிட்டவனுயுமிருந்துகொண்டு யுத்தத்தைச்செய். ——— அப்படிப்பட்டவர்கள் கருமங்களினுற் கட்டுப்படுகிறதில்லை."

ஷை- அத்-ச-ல்; * "எவனுடைய ஸகல கருமங்களும் "ஆசையும் ஸங்கற்பமுமில்லாமலிருக்கின்றனவோ, ஞாநமாகிற "அக்நியினுலெறிக்கப்பட்ட கருமத்தையுடைய அவனை ஞாநிகள் "விவேகியாகச் சொல்லுகிருர்கள். கருமத்திலபிமாநமும் பலனி "லாசையும்விட்டு எப்போதுமாத்துமாநந்தத்திற் திருப்தியடை "ந்தவனுயொருவரையுமாசிரயிக்காமலிருக்கிறவன் கருமத்திற் "பிரவிருத்தித்திருந்தபோதிலுமவன் ஒரு கருமத்தையுஞ்செய்ய "வேயில்லை" (என்றுற் கருமபலனை ஈசுவரார்பணஞ்செய்துவிட்டபடியாற் பலனிவனுக்குண்டாகிறதில்லையென்பது கருத்து.)

இலிங்கபுராணம்-க-அகூ-ககஅ-ல், † "ஞாநிக்கு ஸகலபா "பங்களும் நசித்துப்போகின்றன வென்பதில் ஸந்தேகமில்லை. "அவனுக்குப் பலவிதமான பாபங்களிருந்தாலுமவன்விஷயங் "களிலேயே விளையாடிக்கொண்டிருந்தாலும் அப்பாபங்களவ "னைத் துடருகிறதில்லை."

வராஹபுராணம்-அத்-ங-சு-கஎ-ல், ‡ "புருஷனுனவன் "நன்மை தீமையாகிற கருமமெவ்வளவு அற்பமாவது செய்கி "றுனே அவையெல்லாம் நாராயணனுக்கர்பணஞ் செய்வானு "கில் அவன் கருமஞ் செய்தவனுனுலுங் கருமபலன் அவனை "ஒட்டுகிறதில்லை."

---

निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः । ——— मुच्यन्ते तेपि कर्मभिः ॥३१॥

* यस्यसर्वे समारम्भाः कामसङ्कल्पवर्जिताः । ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥ १९ ॥ त्यक्त्वाकर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः । कर्मण्यपि प्रवृत्तोपि नैव किञ्चित्करोतिसः ॥ २० ॥

இதில் சகூ-வது-சுலோகத்தை கர்சகஸம்ஹிதைமாதரியகண்டம் க-சுஅ லும் உ0-வது-சு-தை-கூர்மபுராணம்-இரண்டாவது பாகம் அத்-சக லும் காண்க.

† ज्ञानिन स्सर्वपापानि जीर्यंते नात्र संशयः । क्रीडन्नपि न लिप्येत पापै र्नानाविधैरपि ॥

‡ यत्किञ्चित्कुरुतेकर्म पुरुषः साद्ध्वसाधुवा । सर्वं नारायणे न्यस्य कुर्वन्नपि नलिप्यते ॥

ஓ! ஜயவிரதா! இவ்விதமாய்க் கருமங்களைச் செய்து கொண்டு கருமபலனில் விருப்பமற்றவனாய் ஈசுவரார்பணஞ் செய்கிறவனும், ஞானத்தினாற் சுபாசுபகருமங்களின் பலன்களை நசிக்கச்செய்திருக்கிறவனும், தானெவ்விடத்தில் வாஸஞ் செய்துகொண்டு எவ்விதகருமத்தைச் செய்தாலுமதன்பலனை யநுபவிக்காமற் தன்னாத்துமாவிலேயே திருப்தியுள்ளவனாயிருப்பானாகில் அவன் இந்ததேகம் போகிறவரையில் ஜீவன் முக்தனாகவிருந்து தேகம்போனவுடன் மோக்ஷமடைகிறான். ஆகையால், உனக்கு ஆசை அபிமானமிவைகளில்லாமலிருக்குமானால் நீ வீட்டிலேயே இருக்கலாம். அவ்விடத்திலிருந்துகொண்டே மோக்ஷமடையக்கூடும்.

4. ஜயவிரதன்:—ஓ! பகவானே! ஆசை, அபிமானம் முதலியவைகளெனக்கினியுண்டாகாதென்று நம்புகிறேன். காட்டிலிருப்பதற்கும் வீட்டிலிருப்பதற்கும் பேதமில்லையென்று மெண்ணுகிறேன். ஆனாலெனக்கு ஆத்துமதத்துவவிஷயக்ஞானமுண்டாகவில்லை. அப்படிப்பட்ட ஞானத்தினால் மனதுசலிக்காமலொரே நிலையிலிருக்கும்படி யெனக்கநுக்கிரகஞ்செய்து ஆத்துமதத்துவத்தை அதற்கடுத்த ஸாதநங்களுடனுபதேசிக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

5. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! நல்லமார்க்கத்திலுனக்குப் புத்தி திரும்பியிருக்கிறதாக வெண்ணுகிறேன். நீ உண்மையான ஞானமடைவாய். ஆகையால், நீ சீக்கிரமாய் உத்தமமான ஒருகுருவைத்தேடியடைந்து அவருக்குப்பிரீதியுண்டாகும்படி சுசுரூஷைசெய்து அவருடைய அநுக்கிரகத்திற்குப்பாத்திரனாவாயாகில் அவராலுபதேசிக்கப்படும் ஸாதநங்களினால் நீ, ஞானமடைந்து மோக்ஷமடைவாய்.

6. ஜயவிரதன்:—ஓ! சுவாமீ! குருவென்றால் யார்? அவர் எவ்விதமாயிருப்பார்? அவருக்கெவ்விதமான சுசுரூஷை செய்யவேண்டியது? இவைகளை நானறிந்துகொள்ளும்படி சொல்லவேண்டும்.

7. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! இவ்வுலகத்திற் தனக்கு நன்மை தீமைகளை யறியும்படியான அறிவையுண்டாக்குகிறவர்களெல்லாங் குருவென்றே சொல்லப்படுகிறார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் மூன்றுபெயர்கள். முதற் குரு தாயார்.

இரண்டாவது குரு தகப்பனர். மூன்ருவது குரு ஞானோபதேசஞ் செய்யுமாசாரியர். எதனுற் தாயார் குருவென்ருல், இவன் தாயினுடைய கருப்பத்திற்கு வந்ததுமுதல் இவனுடைய யௌவநதசைவரையிற் தாயாரானவள் இவனை இரக்ஷிக்கும் விஷயத்திலடைந்திருக்கிற துன்பத்திற்கும் துக்கத்திற்குமளவு சொல்லமுடியாது. இவன், பால்யத்திலுலகவிஷயமான ஸகலஞாநமுந் தாயினுற்போதிக்கப்படுகிருன். தாயானவள் தத்துவக் ஞாநியாயிருந்தாலிவனுக்கு ஆத்துமதத்துவோபதேசமுஞ் செய்கிருள். இவனுடைய நன்மையை யெப்போதுங் கருதுகிறவள் தாயைவிட வேறே ஒருவருமில்லை. ஆகையாற் தாய் முதன்மையான குருவாய்ச் சொல்லப்படுகிருள். தகப்பனே, தன்னுடைய பீஜத்தினுலிவனை யுண்டாக்கினன். இவனை பால்யம்முதல் அதிகப்பிரீதியுடன் இரக்ஷிக்கிற விஷயத்திற் தான் கஷ்டப்பட்டு ஸம்பாதித்த பொருளைத் திருணமாயெண்ணிச் சிலவழிக்கிருன். அதுமாத்திரமல்ல, வேதோக்தமான அநேக ஸம்ஸ்காரங்களினுலும் உபநயநத்திற் பிர்ம்மோபதேசத்தினுலுமிவனைப்பரிசுத்தனுகச்செய்கிருன். அத்துடன் இவனுக்கு வித்தியாப்பியாஸம் முதலியவைகளைச் செய்வித்தும், தகப்பன் ஞாநியானுல் ஞானோபதேசஞ் செய்தும் இவனிடத்திற்பக்ஷமும் பாராட்டுகிருன். ஆகையாற் தகப்பன் இரண்டாவதுகுருவாய்ச் சொல்லப்படுகிருன். ஆசாரியனென்கிற மூன்ருவதுகுருவோ, பிறப்பிறப்பு சுகதுக்கம்முதலிய ஸம்ஸாரத்தை இவன் மறுபடியடையாமல் நித்தியாநந்தமாகிய மோக்ஷஸுகத்தையடையும்படியான ஞாநத்தைப்போதிக்கிருர். அதனுலாசாரியர் ஸர்வசிரேஷ்டமான குருவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இந்தவாசாரியருடைய இலக்ஷணமெப்படியிருக்கவேண்டியதென்ருல், வேதவேதாந்தங்களை நன்ருய்க் கற்றறிந்தவராயும், சமம், தமம், திதிக்ஷை, ஜீவகாருண்ணியம் முதலிய நற்குணமுள்ளவராயும், பிர்ம்மநிஷ்டராயும், தன்னையடைந்த சிஷியனுடைய புத்தி சக்தி முதலிய குண்ணங்களையாராய்ந்தறிந்து அதற்குத்தக்கபடி சிஷியனுக்கு போதிக்குந் திறமையுடையவராயுமிருக்கவேண்டும். இப்படிப்பட்ட சிரேஷ்டமான குருவையடைந்த சிஷியன் அவருக்கு வந்தநவழிப்பாடுகள்செய்து அவரை ஸந்தோஷப்படுத்தி அவருக்குத் தன்னிடத்திற்கிருபையுண்டாகும்படி ஊழியம்முத

லியவைகளைச்செய்து ஸமயம்பார்த்து "ஓ! குருநாதனே! அக் "ஞாநமாகிற ஸம்ஸாரஸமுத்திரத்தில் முழுகியிருக்கிற நான் நற் "கெதியடையும்படி யநுக்கிரகஞ்செய்து அதற்கு ஸாதநமான "தத்துவ ஞாநத்தையுபதேசித்தென்னை இரக்ஷிக்கவேண்டுமெ "ன்று பிரார்த்திக்கிறேன்." என்பது முதலிய வாக்கியங்களி னுற் குருவைப்பிரார்த்தித்தாலவர் கிருபைசெய்து தத்துவக் ஞாநத்தையுபதேசஞ்செய்வார். இப்படிப்பட்ட குருவை ஸா க்ஷாத் பரமேசுவரனுகபாவித்து அவருடைய ஆக்ஞைப்படி யநு ஷ்டித்துவந்தால், அபபடிப்பட்டவன் உத்தமசுகமடைவானென் பதிற் சந்தேகமில்லை.

8. குருபதேசமன்றி ஞாநமடையப்படமாட்டாது. குரு வன்றி கற்கப்படும் வித்தையானது சிரேஷ்டமானபலனைக்கொ டாது. எப்படிப்போலெனில், தக்ஷிணையின்றி செய்த யக்ஞமும், சிரத்தையின்றி செய்தசிராத்தம்முதலிய கருமங்களும், பாத்திர மன்றி (தாநம் வாங்கத்தகாதவனுகது) செய்ததாநமுமெப்படி வீணனதோ அப்படிக் குருபதேசமில்லாத ஞாநமும் வீணு தாகவேயாகும். இதைப்போதிக்கிறதற்காகவே வேதசாஸ்திரங் களெல்லாங் குருசிஷியோபதேசமாகவே வெளிப்பட்டிருக்கின் றன. சாஸ்திரங்கள், மேற்கண்ட மூன்றுவித குருக்களின் விசே ஷத்தைப்பற்றி யென்ன சொல்லுகின்றனவென்றால்:—

தைத்திரீயோபநிஷத்-க-கக-உ-ல், *"மாதாவைத் தெய்வ "மாகபாவனைசெய், பிதாவைத் தெய்வமாக பாவனைசெய், ஆசாரி "யனைத்தெய்வமாக பாவனைசெய்".

மஹாநாராயணோபநிஷத்-அத்-ரு-ல், † "பிறவிக்குருடனு "க்கு வஸ்துக்களுடைய சுவரூபக்ஞாநமெப்படி விளங்காதோ "அப்படிக் குருபதேசமின்றி நூறுகோடி கற்பங்களாலும் தத் "துவக்ஞாநமுண்டாகமாட்டாது".

---

* मातृदेवोभव । पितृदेवोभव । आचार्यदेवोभव ।

† यथा जात्यन्धस्य स्वरूपज्ञानं न विद्यते तथा गुरूपदेशेन विना कल्पकोटिशतैरपि तत्वज्ञानं नजायते ।

அத்துவயதாரகோபநிஷத்தில், * "குருவே பரப்பிரம்மம்.
"குருவே அடையத்தகுந்த சிரேஷ்டமான கெதி. குருவென்கிற
" பதத்தில் (गु) கு, என்கிற எழுத்தானது அந்தகாரம் (இருட்
"டாகிற அக்ஞாநம்) என்கிற அர்த்தமுள்ளது. (रु) ரு, என்கிற
"எழுத்தானது அதை (அக்ஞாநத்தை) விலக்கிறதென்கிற அர்
"த்தமுள்ளது. அக்ஞாநமாகிற இருட்டைப் போக்கிறதனுற்
"குருவென்று சொல்லப்படுகிறுர்."

பைங்களோபநிஷத்-அத்-உ-ல், † "அப்போது எவனே
"ஒருவன் ஸத்குருவை ஆசிரயித்து அநேக காலம் சுசுரூஷை
"செய்வதனுலே பந்தத்திலிருந்து மோக்ஷத்தையடைகிறுன்".

மகோபநிஷத்-அத்-ச-ல், ‡ "குருவாக்கியத்தினுலுண்டா
"கிற அதிபரிசுத்தமான சுவாநுபவத்தினுலுந் தன்னுடைய அப்
"பியாஸத்தினுலுந் தன்னுடைய ஆத்துமாவையெப்போதும் பா
"ர்க்கிறுன்."

யோகசிகோபநிஷத்-டு ல், § "குருவே பிரும்மா, குருவே
"விஷ்ணு, குருவே எப்போதும் நாசமற்ற தேவன். இம்மூன்
"றுலகங்களிலுங் குருவைக்காட்டிலுஞ் சிரேஷ்டனுயொருவனு
"மில்லை. திவ்வியக்ஞாநத்தையுபதேசிக்கிறவராயும் பரமேசுவ
"ரராயுமிருக்கிற குருவை அதிபக்தியுடன் பூஜிக்கவேண்டியது.
"அப்படிப்பூஜிக்கிறவனுக்கு ஞாநமாகிற பலனுண்டாகிறது. குரு
"வெப்படியோவப்படித்தானீசுவரனும். ஈசுவரனெப்படியோவ
"ப்படித்தான்குருவும். ஆகையால், மஹாபக்தியுடன் குருவைப்
"பூஜிக்கவேண்டியது. குருவுக்குமீசுவரனுக்கும் பேதமில்லை."

---

* गुरुरेव परं ब्रह्म गुरुरेव परागतिः । गुशब्दस्त्वन्धकारस्स्या द्रुशब्दस्तन्निरोधकः । अन्धकार निरोधित्वात् गुरुरित्यभिधीयते ।

† तदा सद्गुरुमाश्रित्य चिरकालसेवया बन्धान्मोक्षं कश्चित्प्रयाति ।

‡ गुरुवाक्यसमुद्भूत स्वानुभूत्यातिशुद्धया । यस्याभ्यासेन तेनात्मा सततञ्चावलोक्यते ।

§ गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवस्सदाच्युतः । न गुरोरधिकः कश्चित् त्रिषुलोकेषु विद्यते । दिव्यज्ञानोपदेष्टारं देशिकं परमेश्वरम् । पूजयेत् परया भक्त्या तस्यज्ञान फलं लभेत् । यथा गुरुस्तथैवेशो यथैवेश स्तथागुरुः । पुजनीयो महाभक्त्या न भेदो विद्यतेऽनयोः ॥

வராஹோபநிஷத்-அத்-உ-ல், * "ஸத்குருவின் கிருபையின்
"றி விஷயங்களைத் (விஷயப்பற்றுதலை) தள்ளிவிடுவதுமரிது. தத்
"துவதரிசநமும் (உண்மையானவஸ்துவையறிதலும்) அரிது. ஸ
"ஹஜாவஸ்தை (தன்சுவசுவரூபமாயிருத்தல்) யுமரிது."

சாட்டியாயநீயோபநிஷத்தில், † "குருவே சிரேஷ்டமான த
"ருமம். குருவே சிரேஷ்டமானபதவி.——எவனுக்கு தேவதை
"யினிடத்திலதிகமான பக்தியிருக்கிறதோவப்படிப்பட்ட தெய்
"பக்திபோலவே குருவினிடத்திலும் பக்திசெய்யவேண்டியது.
"இப்படிப் பக்திசெய்கிறசிஷியன் பிர்ம்மத்தை யறிந்தவனாய் பிர்
"ம்மமாகவாகிறான் என்பது வேதத்தினுடையகட்டளை."

மநுஸ்மிருதி-அத்-உ-ல், ‡ "ஆசாரியர், பிரும்மசுவரூபமாயு
"ள்ளவர். தகப்பன் பிரும்மாவினுடைய சுவரூபமாயிருக்கிறார்.
"தாயானவள் பூதேவியினுடைய சுவரூபமாயிருக்கிறாள். கூட
"ப்பிறந்த ஸஹோதரன் தன்னுடைய ஆத்துமசுவரூபமாயிருக்
"கிறான். ஆசாரியன், பிதா, மாதா, ஜியேஷ்டப்பிராதா இவ
"ர்கள் தனக்குக் கஷ்டம்வந்திருந்தாலுங்கூட (தன்னால்) அவ
"மதிக்கத்தக்கவர்களல்ல. (அதிலும்) பிராம்மணனாலே ஒருக்
"காலும் அவமாநஞ் செய்யத்தகாது. மாதாபிதாக்கள் இவ
"னுடைய உற்பத்திவிஷயத்திலெவ்வளவு துன்பத்தைப் பொறு
"த்துக்கொண்டிருந்தார்களோ அதற்குப்பிரத்தியுபகாரமானது
"நாறுஜந்மங்களெடுத்துச்செய்தாலுமவர்களுடைய கடனைத்தீர்
"க்கச்சக்தியுள்ளவனுகான். தாய்தந்தைகளுக்குப் பிரதிதிநமும்
"பிரியமுண்டாகும்படி நடக்கவேண்டியது. ஆசாரியனுக்கோ

---

* दुर्लभो विषयत्यागो दुर्लभं तत्वदर्शनम् । दुर्लभा सहजावस्था सद्गुरोः करुणां विना ॥

† गुरुरेव परोधर्मो गुरुरेव परागतिः । —यस्य देवेपराभक्ति र्यथा देवे तथागुरौ । स ब्रह्मवित् परं प्रेयादिति वेदानुशासनम् ॥

‡ आचार्यो ब्रह्मणोमूर्तिः पितामूर्तिः प्रजापतेः । माता पृथिव्यामूर्तिस्तु भ्रातास्वो मूर्तिरात्मनः ॥२२५॥ आचार्यश्च पिताचैव माता भ्राताच पूर्वजः । नार्तेनाप्यत्रमन्तव्या ब्राह्मणेन विशेषतः ॥२२६॥ यं माता पितरौ क्लेशं सहेते संभवे नृणाम् । न तस्य निष्कृतिश्शक्या कर्तुं वर्षशतैरपि ॥२२७॥ तयोर्नित्यं प्रियं कुर्यादाचार्यस्य च सर्वदा । तेष्वेव त्रिषु तुष्टेषु तपस्सर्वं

"எப்போதும் பிரியமுண்டாகும்படி நடந்துகொள்ளவேண்
"டியது. அம்மூவரும் ஸந்தோஷமடைந்தால் இவன்செய்கிற
"தபஸினுடைய ஸகலப்பிரயோஜநத்தையுமடைகிறான். இம்மூ
"வர்களுடைய சுசுரூஷையானது உயர்ந்ததபஸாகச் சொல்லப்
"படுகிறது. அவர்களநுமதியன்றி வேறுதருமத்தைச்செய்ய
"லாகாது. அம்மூவருமே மூன்றுலகம். அவர்களே மூன்றாசிர
"மங்கள். அவர்களே மூன்றுவேதங்கள் அவர்களே மூன்றக்
"நிகளாகவுஞ் சொல்லப்படுகிறார்கள். பிதா, கார்ஹபத்தியாக்நி
"யாகவும், மாதா தக்ஷிணாக்நியாகவும், குரு ஆஹவநீயாக்நியாக
"வும் சொல்லப்படுகிறார்கள். மூன்று அக்நிசுவரூபமான இவர்
"கள் மேலானவர்கள். இம்மூவர்களிடத்திலும், பிரமாதம்(செ
"ய்யவேண்டியதைச்செய்யாதது, செய்யக்கூடாததைச் செய்வ
"து) ஆகியகாரியத்தைச்செய்யாதவன் மூன்றுலோகங்களையும் ஜ
"யித்தவனாய் தேவன்போல் ஒளிபொருந்திய சரீரமுடையவனாய்
"சுவர்க்கலோகத்தில் ஸந்தோஷத்தையடைகிறான். மாதுரு பக்
"தியினாலிவ்வுலகசுகத்தையும், பிதுருபக்தியினாற் சுவர்க்கசுகத்
"தையும், குருபக்தியினாற் பிரும்மலோகசுகத்தையுமடைகிறான்.
"எவனாலே இம்மூவர்களுமாதரிக்கப்பட்டிருக்கிறார்களோ அவ
"னுக்கு ஸகல தருமங்களுடைய பலன்களுமுண்டாகின்றன.
"எவனாலே இம்மூவர்களுமாதரிக்கப்படவில்லையோ அப்படிப்ப
"ட்டவனுடைய தருமங்கள் பலனற்றனவாக வாகின்றன."

இந்தஸ்மிருதியின் - உஉரு-முதல் உ௩ச - வரையிலுள்ள சுலோகங்களைப்போலொற்ற சுலோகங்களை பவிஷியபுராணம்

---

समाप्यते ॥२२८॥ तेषां त्रयाणां शुश्रूषा परमं तप उच्यते । नतैरभ्यननुज्ञातो धर्ममन्यं समाचरेत् ॥२२९॥ तएवहि त्रयोलोका स्तएवत्रय आश्रमाः । त एवहि त्रयोवेदास्त एवोक्तास्त्रयोऽग्नयः ॥२३०॥ पिता वै गार्हपत्योऽग्नि र्मातानिर्दक्षिणस्स्मृतः । गुरुराहवनीयस्तु साग्नित्रेतागरीयसी ॥ २३१॥ त्रिष्वप्रमाद्यन्नेतेषु त्रीन् लोकान् विजयेद्गृही । दीप्यमानस्स्ववपुषा देववद्दिविमोदते ॥२३२॥ इमं लोकं मातृभक्त्या पितृभक्त्यातु मध्यमम् । गुरुशुश्रूषयात्वेवं ब्रह्मलोकं समश्नुते ॥२३३॥ सर्वेतस्यादृता धर्मायस्यैतेत्रय आदृताः । अनादृतास्तु यस्यैते सर्वास्तस्या फलाः क्रियाः ॥ २३४ ॥

க-ச-ல், கக-பு முதல்-உ0அ, வரை சுலோகங்களிலும் மத்ஸ்ய புராணம். அத்-உகக-உ0-முதல்-உஎ-வரையிலுள்ள சுலோகங்களிலுங் காணலாம். ஆனால், இந்த சுலோகங்களிற் சிலபதங்கள் வேறுபட்டிருந்தாலு மர்த்தத்திற்பேதமில்லை.

மஹாபாரதம்-ஆரண்ணியபருவம்-அத்-களஎ-ல், * "ஓ! "பிராம்மணோத்தமா! மோக்ஷத்திலிச்சையுள்ள புருஷனுக்கு "மாதா, பிதா, அக்நி, ஆத்துமா, குருஇவ்வைந்துபெயர்களுமே "குருக்களாயிருக்கிறார்கள். இந்த ஐந்துகுருக்களிடத்திலுமெ "வன் செவ்வையாய் சுசுரூஷைசெய்கிறானோ அவனெப்போதும் "(ஔபாஸநம் அக்நிஹோத்திரம் யக்ஞம் முதலியவைகளால்) "அக்நியைச் செவ்வையாயுபாசித்தவனாகிறான். கிரஹஸ்தாசிரமி "யான புருஷனுக்கு சுசுரூஷையாகிற இந்ததருமஞ் சாசுவதமான பலனாகவாகிறது."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-கக-சு-கஅ-ல், † "வியாதிக் குஸமானமானசத்துருவுமில்லை குருவைவிட பூ "ஜிக்கத்தக்க சிரேஷ்டனொவருனுமில்லை. தாய்க்குஸமானமான "பந்துவுமில்லை தகப்பனுக்குஸமானமான நண்பனுமில்லை."

ஷெ-ஷெ-அத்-உகூ-சு-கஉ-ல், ‡ "குருவே பிரும்மா. குருவே விஷ்ணு. குருவே தேவனானமஹேசுவரன்."

ஸ்காந்தபுராணம்-ஸூதஸம்ஹிதை-முக்திகண்டம்-அத்-ரு-சு-உ-ல், § "ஸம்ஸாரமாகிற ஜநநமரணதுக்கத்திலிருந்து விடுவிக்கிறவர் குருவேதான். குரு, யாரென்றால், வேதாந்தவிசாரத்தினலடைந்த ஆத்துமக்ஞாநமுடையவர்யாரோ அவரேகுருவென்று சொல்லியிருக்கிறது."

---

* पञ्चैव गुरवोब्रह्मन् पुरुषस्य बुभूषतः । पिता माताग्निरात्माच गुरुश्च द्विजसत्तम । एतेषु यस्तुवर्तेत सम्यगेव द्विजोत्तम । भवेयुरग्नयस्तेन परिचीर्णास्तु नित्यशः । गार्हस्थ्ये वर्तमानस्य धर्मएषस्सनातनः ॥ ३० ॥

† नच व्याधिसमश्शत्रु र्नेचपूज्यो गुरोः परः । नास्तिमातृ समोबंधु र्नेचमित्रं पितुःपरम् ॥

‡ गुरुर्ब्रह्मा गुरुर्विष्णु र्गुरुर्देवो महेश्वरः॥

§ आचार्यएव संसार मोचकप्रदउच्यते । आचार्योनाम वेदान्तविचारेणात्तवेदनः ॥

9. ஓ! ஜயவிரதா! குருவின் இலக்ஷணத்தையும் குருவின் மஹிமையையும் அக்குருவை சிஷியனெவ்விதமாய் மதிக்கவேண்டுமென்பதையும், குருபதேசமன்றி தத்துவக்ஞானமடையப்படாதென்பதையும் மேற்கண்ட வாக்கியங்களுரைக்கின்றன. அப்படிப்பட்டகுருவுக்கு சிஷியன் எவ்விதமான சுசுரூஷைசெய்ய வேண்டுமோ அதை மநு சொல்லுகிறார்.

மநுஸ்மிருதி-அத்-உ-ல், * "குருவினுடைய படுக்கையிற் "(சிஷியன்) படுக்கவுங்கூடாது. அவருடைய ஆஸநத்திலுட் "காரவுங்கூடாது. தான் (சிஷியன்) படுக்கையிற் படுத்திருக்கும் "போதாவது தான் ஆஸநத்திலுட்கார்ந்திருக்கும்போதாவது "குருவந்தாலெழுந்து வந்தநஞ்செய்யவேண்டியது. தேகம், வா "க்கு, புத்தி, இந்திரியம், மனது இவைகளையடக்கிக்கொண்டு "கைகளைக் கூப்பிக்கொண்டு குருவின் முகத்தைப்பார்த்துக்கொ "ண்டே நிற்கவேண்டியது. எப்போது முத்தரீயத்திற்குவெ "ளியிற் கைவைத்துக்கொண்டிருக்கிற வலதுகைய்யையுடைய "வனுயும் (போர்த்துக்கொள்ளாதவனுயும்) குரு உட்காரும்படி "உத்தரவுகொடுத்தாலவருக்கெதிரிற் தன் கால்முதலிய அவய "வங்களைத் துணியினுற் மறைத்துக்கொண்டுட்காருகிறவனுயு "மிருக்கவேண்டியது. குருவின் முன்பாகவிருக்கும்போது உயர் "ந்த அந்நாதியாகாரங்களை புஜிக்கவுங்கூடாது. உயர்ந்த வஸ்தி "ரங்களை யணிந்திருக்கவுங்கூடாது. உயர்ந்தவேஷத்தோடிருக் "கவுங்கூடாது. வெடியிற்காலத்திற் குருவெழுந்திருக்கிறதற்கு "முன்னமே சிஷியனெழுந்திருக்கவேண்டும். இரவிற் குருபடு "த்து நித்திரைசெய்தபிறகு சிஷியன் படுக்கவேண்டும். குரு "வின் கட்டளையை சிஷியன் படுத்துக்கொண்டும் உட்கார்ந்து

---

* शय्यासने ध्याचरिते श्रेयसानसमाविशेत् । शय्यासनस्थश्चैवैनं प्रत्युत्थायाभिवादयेत् ॥ ११९ ॥ शरीरं चैव वाचंच बुद्धींद्रिय मनांसिच । नियम्य प्राञ्जलिस्तिष्ठे द्वीक्षमाणोगुरोर्मुखम् ॥ १९२ ॥ नित्यमुद्धृतपाणिस्स्यात् साध्वाचार स्सुसम्यतः । आस्यता मिति चोक्तस्सन्नासीताभिमुखंगुरोः ॥ १९३ ॥ हीनान्नवस्त्रवेषस्स्यात् सर्वदा गुरुसन्निधौ । उत्तिष्ठेत्प्रथमं चास्य चरमं चैव संविशेत् ॥ १९४ ॥ प्रतिश्रवणसंभाषे शयानो नसमाचरेत् । नासीनो नच भुञ्जानो नतिष्ठन्नपराङ्मुखः॥१९५॥

"கொண்டும் புஜித்துக்கொண்டும் நடந்துகொண்டும் பராங்முக
"மாயிருந்துகொண்டுங் கேட்கக்கூடாது. மறுமொழி சொல்ல
"வுங்கூடாது. குரு உட்கார்ந்து சொல்லும்போது தான் நின்
"றுகொண்டும் அவர் நிற்கும்போது அவருக்கு ஸமீபத்தில் நின்
"றுகொண்டும், அவர் தனக்கெதிராகவந்து சொல்லும்போது,
"தான் எதிர்கொண்டுபோயும் அவர் நடக்கும்போதுதான் பின்
"தொடர்ந்து ஓடிக்கொண்டும், அவர் பராங்முகமாயிருக்கும்
"போது அவருக்கெதிரில்வந்தும், அவர் தூரத்திலிருக்கும்
"போது கிட்டிவந்தும் அவர் படுத்திருக்கும்போதும் ஸமீபத்தி
"லிருக்கும்போதும் தன்தேகத்தை வணக்கிக்கொண்டு குருவின்
"கட்டளையைக் கேட்கவும் மறுமொழியுரைக்கவும் வேண்டியது.
"குருவுக்கெதிரில் இவனுடைய ஆஸநமும் படுக்கையும் அவ
"ருடைய ஆஸநத்திற்கும் படுக்கைக்கும் தாழ்ந்ததாயிருக்க
"வேண்டியது. குருபார்வைக்கெதிரிற் தனக்கிஷ்டமான ஆஸ
"நத்திலுட்காரலாகாது."

இவ்விதமாயும், பின்னும் ஸமயத்திற்குத்தக்கபடி அவசிய மானதாயுமிருக்கிற சுசுரூஷையினுற் குருவைத் திருப்திசெய்து வரும் சிஷியனெவனே அவன்தான் அக்குருவினிடத்திலிருந்து உத்தமமான தத்துவக்ஞானத்தையடைவான். ஆகையால், ஓ! ஸுகுணமுள்ளவனே! நீ, ஒரு சிரேஷ்டமான குருவையடைந்து சுசுரூஷை முதலியவைகளினுல் அவரை ஸந்தோஷிப்பிவித்து அவரிடத்திலிருந்து ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்.

10 ஜயவிரதன்;—ஓ! கருணாநிதியே! என்னைத் தாங்களுபேக்ஷிக்கலாகாது. தங்களை நான் சரணமடைந்திருக்கிறேன். தங்களையே கதியாய் நம்பியிருக்கிறேன். உத்தமோத்தமமான குணங்களும் பொருமையும் கிருபாகுணமும் பொருந்திய தங்களைவிட்டு வேறொருவரை குருவாகவடையமாட்டேன். தாங்களே என்னை இரக்ஷிக்கவேண்டும்.

---

आसीनस्य स्थितःकुर्या दभिगच्छंस्तुतिष्ठतः । प्रत्युद्गम्यत्वाव्रजतः पश्चाद्धावं स्तुधावतः ॥ १९६ ॥ पराङ्मुखस्याभिमुखो दूरस्थस्यैत्यचान्तिकम् । प्रणम्य तु शयानस्य निदेशेचैव तिष्ठतः ॥ १९७ ॥ नीचं शय्यासनं चास्य सर्वदा गुरुसन्निधौ । गुरोस्तु चक्षुर्विषये नयथेष्टासनो भवेत् ॥१९८॥

11. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! நான் உனக்கு நெருங்கிய பந்துவாயிருக்கிறேன். நானே இக்காட்டிற் தழைமுதலியவைகளை யாஹாரஞ் செய்துகொண்டு இப்பர்ணசாலையில் வாஸஞ் செய்கிறேன். உனக்கு இவ்விடத்தில் வாஸஞ் செய்வதனுற் பல துன்பங்களுண்டாகும். உன் பிதா வேதவேதாந்தங்களை நன்ருயறிந்தவர். அவரிடத்திலாவது அல்லது வேறுயாரிடத்திலாவது சென்று அதிககஷ்டத்தையநுபவியாமற் கூடியவரையிற் சுகமாயிருந்துகொண்டு கிரமக்கிரமமாய் ஞாநோபதேசத்தைப் பெறலாம்.

12. ஜயவிரதன்:—ஓ! சுவாமி! என்தகப்பனுர் மிகவும் வயதுசென்றவராகையால் அவரெனக்குபதேசிக்கும்படியான சக்தராயிருக்கவில்லை. வேறொருகுருவை நான் சுவப்நத்திலுமிச்சிக்கிறதில்லை. இக்காட்டில் வஸிப்பதிலாவது ஆஹாராதிகள் செய்வதிலாவதெனக்கற்பமேனுந் துன்பமுண்டாகுமென்று நான் பயப்படவில்லை. அப்படித் துன்பமுண்டாவதாயிருந்தாலு மதைப்பாராட்டாமற் சிலகாலமாவது தங்கள் ஸமீபத்திலிருந்து கொண்டு என்னுற் கூடியவரையிற் தங்களுக்கு சுசுருஷை செய்துவருகிறேன். எனக்குத் தாங்களநுக்கிரகஞ் செய்து ஆத்துமக்ஞாநமுண்டாகும் விதத்தையுபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

13. விசுவம்பரபட்:—ஜயவிரதனிவ்விதமாய் பிரார்த்தித்துக்கண்களில் ஜலந் தளும்ப ஸுசர்ம்மாவின் பாதங்களில் ஸாஷ்டாங்கமாய் வந்தநஞ் செய்து மன்ருடுகிற ஜயவிரதனை கிருபையுடன்பார்த்து அவன் மனோநிலையையாராய்ந்தரிந்துகொண்டு உனக்கெதெது தெரிந்துகொள்ள விருப்பமிருக்கிறதோ அவைகளை யென்னிடத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். அவசியமான விஷயங்களெவையோ அவைகளை நானுமுனக்குக் சொல்லுகிறேன் என்று ஸுசர்ம்மா சொன்னுர்.

நான்காவது பிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## ஐந்தாவதுப் பிரகரணம்.

ஜயவிரதன்:—ஓ! பரமகுரோ! தாங்களிதுவரை யுதகரித்துவந்த விஷயங்களையாதரிக்கிற பிரமாணங்களாக வேதம், சுருதி, உபநிஷத், மஹாபாரதம், ஸ்மிருதி, புராணம் இவைகளிலிருந்து அநேக வாக்கியங்களை வெளியிட்டீர்கள். அந்த வேதம் முதலியவைகளின் சுவரூபம், மஹிமை, அவைகளின் தாரதம்மியம் முதலியவைகளை நானறியவில்லை. ஆகையாலவைகளின் சுவரூபத்தைக் கிரமமாய்ச் சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

2. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! நீ, கேட்டபடி வேதம் முதலியவைகளின் சுவரூபத்தையும் அவைகளின் மஹிமையையும் கிரமமாய்ச் சொல்லுகிறேன் ஜாக்கிரதையாய்க் கேள்.

வேதமென்றாலும் சுருதியென்றாலும் உபநிஷத்தென்றாலும் ஒன்றேதான். வேதமென்கிற ஸம்ஸ்கிருதபதத்திற்கு ஞானமென்பது முக்கியமான அர்த்தம். அதாவது:—தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமிவைகளின் சுவரூபத்தை நமக்குத் தெரிவிக்கிறதென்பதனாலது, ஞானமென்று சொல்லப்படுகிறது, சுருதியென்பதும் வேதமே. வேதமானது முதலிலுண்டான புருஷன் காதினாற்கேட்டு உலகத்திற் பரவச்செய்தார். அவர் காதினாற்கேட்டறிந்த காரணத்தாற் சுருதியென்று பெயர் வந்தது. உபநிஷத்தென்றாற், பிரும்மவித்தையை விரித்துரைக்கும் வேதத்தின் சிரோபாகமாகிய வேதாந்தமென்றர்த்தம். இந்த வேதமானது அநாதியென்று சொல்லப்படுகிறது. அது ஒருவராலுண்டாக்கப்பட்டதல்ல. அது பரமாத்துமாவினிடத்திலிருந்து சிருஷ்டிதோறும் வெளிப்படுகிறது. பிரளயகாலத்திலடங்கியிருக்கிறது. சிருஷ்டியின் துவக்கத்திலுண்டான விராட்புருஷனுடைய அங்கத்திலிருந்து வெளிப்பட்டது. எப்படியெனிற், புருஷனிடத்திலிருந்து சுவாஸம் வெளிப்படுவதுபோல் விராட்புருஷனுடைய சுவாஸங்களாக வெளிப்பட்டது. அந்த விராட்புருஷன் ஹிரண்ணியகர்ப்பனென்றும் ஈசுவரனென்றும்

விஷ்ணுவென்றும் ஆதிபுருஷனென்றும் பலபெயர்களாற் சொல்லப்படுகிறார். வேதமூலகத்திற் வெளிப்பட்டக் கிரமத்தைச் சொல்லுகிற வேதவாக்கியங்களிற் சிலதைக்குறித்துக்காட்டுகிறேன்.

தைத்திரீயாரண்ணியகம்-ங-கஉ-ல், * "அதனிடத்திலிரு "ந்து (பிரும்மத்தினிடத்திருந்து) ஆதிபுருஷனான விராட்டுண்டா "னன்——அந்த யக்ஞபுருஷனிடத்திலிருந்து, இருக்குவேதம், "ஸாமவேதம், சந்தஸ்ஸுகள், யஜுர்வேதம் இவைகளுண்டா "யின."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-சு-ச-கo-ல், † "ஓ! மை "த்திரேயீ! ஈரவிரகுஸம்பந்தமுள்ள அக்நியினிடத்திலிருந்து "புகைவெளிப்படுவதுபோல், இருக்குவேதம், யஜுர்வேதம், "ஸாமவேதம், அதர்வணவேதம், இதிஹாஸம், புராணம், வித்தை, "உபநிஷத்துக்கள், சுலோகங்கள், சூத்திரங்கள், அநுவியாக் "கியாநங்கள், வியாக்கியாநங்கள் இவைகளெல்லாமப்பெரிதான "பூதத்தினுடைய சுவாஸங்களே."

மஹோபநிஷத்-அத்-க-ல், ‡ இருக்கு, யஜுஸ், ஸாமம், "அதர்வாங்கிரஸென்கிற பிரஸித்தமான இந்த ஸகலவேதங்க "ளும் (அந்த ஆதிபுருஷனுடைய) அங்கத்தையாசிரயித்திருக்கின் றன."

யோகசிகோபநிஷத்-அத்-ங-ல், $ "வேதசாஸ்திரபுராண "ங்களுக்குக் கர்த்தா பரமாத்துமாவேயாகிறார்."

---

* तस्माद्विराडजायत । विराजोअधिपुरुषः——ऋचस्सामानिजज्ञिरे । छन्दाँसिजज्ञिरेतस्मात् । यजुस्तस्मादजायत ॥ இந்த வாக்கியத்தை இருக்குவேதம் புருஷசூக்தாஷ்டகம்--அத்-ஏ-வாக்கியம்- கஅ-லும்காண்க.

† सयथार्द्रैधाग्नेरभ्याहितात् पृथक्धूमाविनिश्चरंत्येवंवाअरेऽस्यमहतो भूतस्य निश्वसितमेतद्यदृग्वेदोयजुर्वेदस्सामवेदोऽथर्वांगिरस इतिहासः पुराणं विद्या उपनिषदः श्लोकास्सूत्राण्यनुव्याख्यानानि व्याख्यानान्यस्यैवैतानि सर्वाणि निश्वसितानि ॥

‡ ऋग्यजुस्सामाथर्वांगिरस स्सर्वाणि छन्दांसितान्यंगे समाश्रितानि ॥

$ वेदशास्त्रपुराणानां स्वयं कर्ता भविष्यति ॥

முக்திகோபநிஷத்-அத்-க-ல், * "விஷ்ணுவாகிய என்னு "டைய சுவாஸமாகிற வேதங்கள் விஸ்தாரமாயுண்டாயின."

வேதமநாதியென்றும் அதற்குப் பரமாத்துமா வைத்தவிர வேறு கர்த்தாவில்லையென்றும் மேற்படி சுருதிகளாலேற்படுகிறது. அந்நியமதத்தாரிற் சிலர் வேதமானது மஹரிஷிகளாற் கற்பிக்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள். எதனாலெனில், வேதத்திலேயே ஒரு ரிஷியினால் மற்றொரு ரிஷிக்குச் சொல்லப்பட்டதாகக்கண்டிருக்கிறது. சிருஷ்டிக்குப் பிந்தியுண்டானவர்களாகிய வஸிஷ்டர், விசுவாமித்திரர், யாக்ஞவல்கியர் முதலியரிஷிகளுடையவும் இந்திரன், யமன் முதலிய திக்பாலகர்களுடையவும் பெயர்களும், அசுரராக்ஷஸர்களுடைய பெயர்களும் வேதத்திற் காணப்படுகின்றன. இவை முதலியவைகளினால் வேதங்கள் சிருஷ்டியான வெகுகாலத்திற்குப்பிறகு ரிஷிகளாற் கற்பிக்கப் பட்டிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த அபிப்பிராயம் முற்றிலும் பிசகானதென்பதிற் சந்தேகமில்லை.

3. ஒரு ரிஷியினாற் கற்பிக்கப்பட்ட வேதத்தை ஸகலமான ரிஷிகளும் மஹாத்துமாக்களான அநேக ஞாநிகளும் தேவதைகளும் பிரமாணமாக நம்பி அநுஷ்டித்துவருவார்களென்பது முற்றிலுமஸம்பாவிதம். வேதத்திற்சொல்லிய விதிகளிலொன்றையாவது பூர்வபக்ஷஞ் செய்ய ஒருவருக்குமதிகாரமில்லையென்று மேற்கண்டயெல்லோரும் நம்புகிறதுமாத்திரமல்ல. அநேக மஹரிஷிகள் செய்திருக்கிற ஸ்மிருதிகளில் வேதத்திலொருவாக்கியத்தையாவது பூர்வபக்ஷஞ்செய்ய ஒருவருக்குமதிகாரமில்லையென்று கண்டோக்தமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் உலகத்தைச் சிருஷ்டித்து அதைப் பரிபாலநஞ்செய்ய ஒரு பரமாத்துமாவிருக்கவேண்டுமென்பதை ஆஸ்திகனான ஒருவனும் மறுக்கமாட்டான். அப்படிப்பட்ட பரமாத்துமா இவ்வுலகத்தையாளும்பொருட்டு, அரசன் தன் தேசத்தின் ஜநங்கள் தன் கட்டளையையறிந்து நடந்துகொள்ள ஒரு சட்டம் செய்வதுபோல் வேதசாஸ்திரங்களாகிய சட்டத்தையுண்டுசெய்திருக்கவேண்டுமென்பது நிஸ்ஸந்தேகமானவிஷயம். வேதத்தைக்கற்பது குருமுகமாகவேயன்றி தானாகவே அத்தியயநஞ்செய்ய

---

* 'निश्वासभूता मे विष्णो र्वेदाजातास्सु विस्तरा: ॥

ஒருவனும் சக்தியுடையவனுகமாட்டானுகையால், குருசிஷ்யபரம்பரையாகவே வேதாப்பியாஸஞ் செய்யவேண்டியதென்பதை விளக்கும்பொருட்டே வேதம் குருசிஷியோபதேசமாக வெளிப்பட்டதேயன்றி அவைகளிற் குறிப்பிட்டிருக்கிற ரிஷிகளே கற்பித்தார்களென்றெண்ணுவது அவிவேகமே. சிருஷ்டிக்குப்பிறகுண்டான ரிஷிகளுடையவும் தேவதைகள் முதலானவர்களுடையவும் பெயர்கள்வேதத்திற்சொல்லப்படுகிறதேயென்ருல், அவர்கள், சிருஷ்டிக்குப்பிறகுண்டானவர்களென்று' என்னகாரணத்தாற் சொல்லக்கூடும்? வேதமானது சென்றகால நிகழ்கால வருங்காலத்திய விஷயங்களைத் தானுகவே வெளியிடுகிறது. அதாவது—நடந்ததையும் நடக்கிறதையும் நடக்கப்போகிறதையுஞ் சொல்லுஞ் சக்தி வேதத்திற்கே இயற்பானது. பராசரர் முதலிய மஹரிஷிகள், இக்கலியுகத்திலுண்டாகப்போகிற ஸம்பவங்களைப் புராணங்களிற் சொல்லியிருக்கிருர்கள். அப்படிச் சொன்னது இதற்கு அநேகாயிரம் வருஷங்களுக்குமுந்தியதென்கிற விஷயத்திற் சந்தேகமில்லை. அவர்கள் சொல்லியிருக்கிறபடி இக்கலியுகத்திலநேக ஸம்பவங்கள் பிரத்தியக்ஷமாய்க்காணுகின்றன. ஸாமாந்நியமான ரிஷிகளே வருங்காலத்தியஸம்பவங்களைச் சொல்லக்கூடுமானுல், ஸகலத்திற்கும் கர்த்தாவான பரமாத்துமா வருங்காலத்திலுண்டாகப்போகிற ரிஷிகள், தேவதைகள் முதலியவர்களுடைய பெயர்களை வேதத்திற் குறிப்பிட்டிருக்கிறது ஆச்சரியமல்ல, மேலும், வேதத்திற் குறிப்பிட்ட மஹரிஷிகளுந் தேவதைகளும் மற்றுமுள்ளவர்களுமதிகாரிகள். அதாவது, சிருஷ்டியான இவ்வுலகத்தைநடத்த ஏற்பட்டவர்கள். இப்படியேப் பிரதிசிருஷ்டியிலும் தேவர்களும் ரிஷிகளுமுண்டாய், இப்பெயர்களையடைந்து அவரவர்களுடையஅதிகாரத்தை நடத்திக்கொண்டிருக்கிருர்கள். சிருஷ்டிக்குப் பிறகுண்டானவர்களும் வேதத்திற் சொல்லியிருக்கிற பெயர்களையே வைத்தழைக்கவும்படுகிருர்கள். இக்காலத்தில் இராமகிருஷ்ணுதி அவதாரமூர்த்திகளுடைய பெயர்களைத் தங்கள் மக்களுக்கிட்டழைப்பதுபோற்ருன். வேதமநாதியென்பதற்கும் பிரமாணமென்பதற்கும் வேதமேப் பிரமாணமாக எப்படிக்கொள்ளலாமென்று சிலர் சொல்லுகிருர்கள். இதுவுமவிவேகமே. ஒப்பற்றவஸ்துவுக்கு அந்தவஸ்துவேப்பிரமாணமின்றி அதை நிரூபிக்க

வேறு பிரமாணங் கிடைக்குமோ? ஸமுத்திரமிருக்கிறதென்கி றதற்கு ஸமுத்திரமேப் பிரமாணம். பூமியிருக்கிறதென்கிறதற் கு பூமியேப் பிரமாணமெப்படியோ அப்படி வேதமநாதியென் பதற்கு வேதமேப் பிரமாணம். இத்துடன் மநுமுதலிய மஹா த்துமாக்களுடைய ஆப்தவாக்கியங்களும் பிரமாணமாயிருக்கின் றன.

4. இனி வேதம் உலகத்திற் பரவிய கிரமத்தையுமத ற்குள்ள காரணங்களையும் வேதத்திலடங்கிய முக்கியமான விஷ யங்களையும் சுருக்கிச் சொல்லுகிறேன் கேள்.

விராட்புருஷனிடத்திலிருந்து வெளிப்பட்ட வேதமானது, விராட்புருஷனிடத்திலிருந்து முதலிலுண்டான பிரும்மாவினுற் சப்தரூபமாய்க் கேட்கப்பட்டது. இருக்கு, யஜுஸ், ஸாமம், அ தர்வணமென்கிற பெயருடையவேதம், பெயர்களினுல் வெவ்வே ருகக்காணப்பட்டாலு மவைகளெல்லாம் வேதவியாஸமஹரிஷி யினுற் பிரிக்கப்படுகிறவரையி லொன்ருகவேயிருந்தது. வே தத்தின் முந்தியபாகம் கருமகாண்டமென்றும் பிந்தியபாகம் ஞாநகாண்டமென்றுஞ் சொல்லப்படுகிறது. முந்தியபாகமான கருமகாண்டத்தில் யக்ஞயாகாதி கருமங்களையும் நித்தியநை மித்திகாதி கருமங்களையு மவைகளையநுஷ்டிக்க வேண்டிய கிரமங்களையும் செய்யத்தக்க அதிகாரியையும் செய்விக்கத்தக்க வர்களின் யோக்கியதையையு மாராதிக்கவேண்டிய தேவதைகளை யும் அந்ததேவதைகளின் தாரதம்மியத்தையும் அதற்குவேண்டிய மந்திரங்களையும் அந்தந்தக் கருமங்களின் பலன்களையும், பின் னுமக்கருமங்களுக்குச் சம்பந்தமான பலவிஷயங்களையுஞ் சொல் லியிருக்கிறது. அதனுலிது கருமகாண்டமென்று சொல்லப் படுகிறது.

5. பிந்தியபாகமான ஞாநகாண்டமானது பரமாத்துமசு வரூபத்தையும் பரமாத்துமாவையடைவதற்குச் சாதநமான ஞாந யோகம், தபஸ், நிஷ்காமகருமயோகம், ஸகுணநிர்குணப் பிர்ம்மோபாஸனவிதிகள், ஆத்துமலக்ஷணம், பிரகிருதிசுவபா வம், கருமஸந்நியாஸம், பக்தி, வைராக்கியம் இவைகளின் சுவ ரூபம், பிரபஞ்சசுவரூபம், ஸம்ஸாரசுவரூபம் முதலியவைகளை யும் அவைகளுக்கங்கங்களான பல ஸாதநங்களையுஞ் சொல்லியி ருக்கிறது. இந்த ஞாநகாண்டந்தான் உபநிஷத்தென்கிற பெ

யரையுடையது. இதுவேதான் வேதாந்தமென்றுஞ் சொல்லப் படுகிறது. கருமகாண்டத்திலிருந்தும் ஞானகாண்டத்திலிருந் தும் உபாஸனைக்கநுகூலமான சிலபாகங்ளைப் பிரித்தெடுத்து அவைகளுபாஸநாகாண்டமென்று மூன்றாகப்பிரித்துச் சொல்வா ருமுண்டு. இப்படி வேதமொன்றாயிருந்ததனாலும், "अनन्तावै वेदा: = வேதங்கள் கணக்கற்றன" என்று யஜுர்வேதம் தைத்தி ரீயப் பிராம்மணம் காடகம் பிரச்நம்-க. அநுவாகம்-கக-ல், சொல் லப்பட்டிருக்கிறதனாலும் வேதம்முழுவதையும் அத்தியயநஞ்செ ய்ய ஒரு புருஷாயுட்காலம்போதாமையாயிருக்கிறதென்று அறிந் த பகவானான விஷ்ணுவானவர் ஒவ்வொருத்துவாபரயுகத்திலும் தன் அம்சத்தினால் வேதவியாஸமகரிஷியாயவதாரஞ் செய்து, ஒன்றாயிருந்த அந்நான்குபெயருள்ள அந்த வேதத்தை அந்தந் தப் பெயர்களினாலேயேநான்காய்ப் பிரித்து, இருக்குவேதத்திற் குச்சேர்ந்ததென்று பிரிக்கப்பட்ட சாகைகளைபைலரென்பவருக் கும், யஜுர்வேதத்தைச் சேர்ந்த சாகைகளை வைசம்பாயநருக் கும், ஸாமவேதத்தைச் சேர்ந்த சாகைகளை ஜைமுனிக்கும் இந் தமூன்று வேதங்களிலிருந்துந் தெரிந்தெடுத்து அதர்வணவேத மென்கிற பெயரினாற் சேர்க்கப்பட்ட சாகைகளை ஸுமந்துவெ ன்பவருக்குமுபதேசித்தார். அப்படி யுபதேசமடைந்த சிஷியர் களான ரிஷிசிரேஷ்டர்கள் தாங்கள் கற்றறிந்தவேதபாகத்தைச் சில சில பிரிவுகளாக்கித் தங்கள் சிஷியர்களிலொவ்வொருவருக் கும் ஒவ்வொருபாகத்தையுபதேசித்தார்கள். அப்படிப் பிரிக்கப் பட்டதனால் ஒவ்வொரு வேதமும் அநேகபாகங்களாய்ப் பிரிந்த ன. அப்படிப் பிரிந்தவைகளுக்கு வேதசாகைகளென்று பெயர். இப்படிப்பட்ட சாகைகளநேகமுண்டு. அந்த ஒவ்வொருசாகை யின் கடைசிபாகமுபநிஷத்தென்று சொல்லப்படுகிறது. உபநி ஷத்துக்களுங் கணக்கற்றவைகளே. இந்த சாகாவிவரங்களை முக்திகோபநிஷத்து முதலாவதத்தியாயத்திலும், ஒன்றாயிருந் த வேதத்தை வேதவியாஸர் நான்காய்ப் பிரித்து சிஷியர்களுக் குபதேசஞ்செய்தது முதலிய விவரங்கள் விஷ்ணுபுராணம் மூன் றாவதம்சம்-௪-ஞ-அத்தியாயங்களிலும், வாயுபுராணம்-௬௦-வது அத்தியாயத்திலும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

6. இக்காலத்தில் எழுதப்பட்டு உலகத்திற் பரவியிருக்கி றவைகள்தான் வேதமென்றும் உபநிஷத்தென்றும் சிலர் நினைக்

கிறார்கள். அப்படியல்ல. வேதபாகங்களிலநேகம் இக்காலத்திற் கிடைக்கவில்லை. எழுதப்பட்டிருக்கவுமில்லை. சிலபாகம் அந்நியதேசத்தாரிடத்திலிருக்கின்றன. அவைகள் ஸம்ஸ்கிருத பாஷையிலில்லாமல் வெவ்வேறு பாஷைகளிற் மாறிப்போய் விட்டபடியாலவைகளின் சுவரூபத்தை நாம் நன்றாயறியக்கூடவில்லை.

7. வேதத்தின் முந்தியபாகமான கருமகாண்டத்திற் சொல்லுகிற யக்ஞம் முதலிய கருமங்களுக்கு சுவர்க்கலோகம் முதலிய புண்ணியலோகங்களுடைய சுகாநுபவத்தைப் பலனாகச் சொல்லுகின்றன, அப்பலனை விரும்பி அக்கருமத்தைச் செய்கிறவர்கள் அந்தந்ததேவலோகங்களையடைந்து புண்ணியம் நசித்தவுடன் இப்பூமியிற் ஜநித்து மறுபடி சுகதுக்கங்களையநுபவிக்கிறார்கள். இப்படியே உபநிஷத்து முதலியப் பிரமாணங்களுஞ் சொல்லுகின்றன.

சாந்தோக்கியோபநிஷத்-அ-க-கூ-ல், * "எப்படி யிவ்வுலகத்திற் கருமத்தினாலே (தொழிலினாலே) ஸம்பாதிக்கிற உலகவஸ்து நசித்துப்போகிறதோ இப்படியே புண்ணியகருமத்தினாற் சம்பாதிக்கப்பட்ட பரலோகவஸ்துவும் நசித்துப்போகிறது."

முண்டகோபநிஷத்-க-உ-ல், † "பதினெட்டுப்பெயர்களால் "(இருத்துவிக்குகள்-கசு. யஜமானன்-க. அவன் பத்நீ-க. ஆக-கஅ-பெயர்களால்) செய்யவேண்டியதாகச் சொல்லப்பட்டிருக்கிற தாழ்ந்ததான யக்ஞகருமமானது யாரிடத்திலிருக்கிறதோ "(என்றால், கருமபலத்திலாசையுடன் செய்கிறார்களோ) இப்படிப்பட்ட யக்ஞஞ் செய்கிறவர்கள், உறுதியற்ற தோணியையுடையவர்கள், (என்றால், உறுதியற்ற தோணியாலெப்படி ஸமுத்திரத்தைக் கடக்கமுடியாதோ அப்படி யுறுதியற்ற யக்ஞபலத்தினால் ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத் தாண்டமுடியா

---

* तद्यथेहकर्मचितोलोकः क्षीयते । एवमेवामुत्रपुण्यचितो लोकः क्षीयते ।

† प्लवाह्येते अदृढायज्ञरूपा अष्टादशोक्तमवरं येषुकर्म । एतच्छ्रेयो-येऽभिनन्दन्ति मूढा जरामृत्युं ते पुनरेवापियन्ति ॥ ७ ॥ इष्टापूर्तं मन्य-

"தென்பதுகருத்து). இப்படிப்பட்ட கருமபலத்தையே நற்பய
"னுகவெந்தமூடர்கள் கொண்டாடுகிருர்களோ அவர்கள் கிழத்த
"னம் மரணமிவைகளையே மறுபடியடைகிருர்கள். மூடர்கள்
"யாகஞ் செய்தல், பூர்த்தஞ் செய்தல் (தடாகம் முதலியனவுண்
"டுசெய்தல்) இவைகளைச் சிறந்ததாக நினைத்தவர்களாய் வேறு
"புருஷார்த்தத்தைத் தெரிந்துகொள்ளுகிறதில்லையோ அப்படிப்
"பட்டவர்கள் புண்ணியத்தினு லடையப்பட்டதாகிய சுவர்க்க
"லோகத்திற் புண்ணியகருமபலனையநுபவித்து பிறகு இவ்வுல
"கத்தில் மானிடப்பிறவியையாவது அல்லது இதைவிட இழி
"வானதும் நரகத்திற்குச் சமானமானதுமாகிய மிருகாதிப்பிற
"வியையாவது கருமசேஷத்திற்குத் தக்கபடி அடைகிருர்கள்."

ஸ்ரீபகவத்கீதை-அத்-கூ-ல், * "மூன்று வேதங்களையறிந்த
"வர்கள் யக்ஞங்களினுலென்னைப்பூஜித்து ஸோமபாநத்தைச்
"செய்து பாபமற்றவர்களாய் சுவர்க்கலோகத்தை விரும்புகிருர்
"கள். அவர்கள் புண்ணியபலனுகிய தேவேந்திரலோகத்தைய
"டைந்து சுவர்க்கத்திலுத்தமமான தேவதைகளுக்குள்ள போ
"கங்களையநுபவிக்கிருர்கள். அப்படி சுவர்க்கத்தையடைந்தவர்
"கள் விசாலமான அந்த சுவர்க்கலோகத்தையநுபவித்துப் புண்
"ணியம் நசித்தவுடன் மநுஷியலோகத்தையடைகிருர்கள். இப்
"படி வேதோக்தமான கருமத்தையநுஸரித்த, போகஇச்சை
"யுள்ளவர்கள் பிறப்பிறப்பையடைகிருர்கள்."

இவ்விதமாய்க் கருமகாண்டத்திற்சொல்லிய யக்ஞம் முத
லிய கருமங்களினுலடையப்படுவது சிரேஷ்டமான பலனென்
று நம்புகிறவர்கள் மூடர்களென்றும் அப்பலன் சிலகாலத்திற்
குள் நசித்துப்போகுமென்றுஞ் சாஸ்திரங்கள்சொல்லுகின்றன.

---

मानावरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः । नाकस्य पृष्ठेते सुकृतेऽनुभूत्वे मंलोकं हीनतरं चाविशन्ति ॥ १० ॥

* त्रैविद्या मां सोमपाः पूतपापायज्ञैरिष्ट्वास्वर्गतिं प्रार्थयन्ते । ते पुण्यमासाद्य सुरेन्द्रलोक मश्नन्ति दिव्यान् दिवि देवभोगान् ॥ २० ॥ ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणेपुण्ये मर्त्यलोकंविशंति । एवं त्रयीधर्ममनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ॥ २१ ॥

ஆகையாலக் கருமங்களை பலாபேக்ஷையன்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்வானாகிலது மோக்ஷஸாதநமான சித்தசுத்தியையும் அதனால் ஞாநத்தையுமுண்டாக்கும்.

இந்த கருமகாண்டத்திற் சிலசில பாகத்திற்கு மஹீதராசாரியர், வித்தியாரண்ணிய சுவாமிகளாகிய இவர்கள் பாஷியஞ் செய்திருக்கிறார்கள்.

8. அப்படியே ஞாநகாண்டமாகிற வேதாந்தபாகங்களுக்கு ஸ்ரீமத் சங்கராசாரியர் அத்துவைத சித்தாந்தத்திற்கிணங்கவும், ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் விசிஷ்டாத்துவைதமதசித்தாந்தத்திற்கிணங்கவும், ஸ்ரீமத் மத்துவாசாரியர் துவைதமதசித்தாந்தத்திற்கிணங்கவும் பாஷியஞ் செய்திருக்கிறார்கள். பாஷியமென்றால், வேதம் முதலியவைகளிலுள்ள பதங்களினர்த்தத்தை இலகுவான இதரபதங்களினாற் தெரிவிக்கிறதெதுவோ அதுதான்.

9. இந்த வேதத்திற்கு சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜியோதிஷம், கற்பமென ஆறு அங்கங்கள் (உருப்புகள்) உண்டு. அவைகளில்:—

அகாரம் முதலிய அக்ஷரங்களில் இன்ன அக்ஷரம் தேகத்தின் இன்னஸ்தாநத்திலிருந்து ஒலியாய் வெளிப்படுகிறதென்பதையும், அவைகளின் இலக்ஷணம் முதலியவைகளையும் விரித்துரைக்கிறதெதுவோ அதுதான் சிக்ஷையென்று சொல்லப்படுகிறது.

பகுதி, விகுதி முதலியவைகளை விரித்துரைப்பதின் மூலமாய், சுத்தமான வார்த்தைகளையுபயோகிக்கிறதற்கெது அநுகூலமாயிருக்கிறதோ அது வியாகரணமென்று சொல்லப்படுகிறது.

அக்ஷரங்களிற் குறில், நெடில் இவைகளுடைய சேர்க்கை, அவைகளின் வாக்கியலக்ஷணம், அக்ஷரம், பதமல்லது வாக்கியம் இவைகளை இத்தினைமாத்திரையளவு உச்சரிக்கவேண்டுமென்கிற விதி. அப்படியுச்சரிக்காததனாலுண்டாகுந் தோஷம் முதலியவைகளைச் சொல்லுகிறதெதுவோ அது, சந்தஸென்று சொல்லப்படுகிறது.

கடினமான வேதவாக்கியங்களினர்த்தத்தை சுலபமானப் பிரதிபதங்களால் நிரூபித்துக்காட்டுகிறதெதுவோ அது, நிருக்தமென்று சொல்லப்படுகிறது.

ஸத்கருமங்களைச் செய்யவேண்டியகாலங்களைத் தெரிவிக்கிறதெதுவோ அது, ஜ்யோதிஷமென்று சொல்லப்படுகிறது.

சுருதியினாலும், ஸ்மிருதியினாலும் விதிக்கப்பட்டதாயுள்ள கருமங்களைச் செய்யவேண்டியக் கிரமத்தைச் சொல்லுகிறதெதுவோ அது கற்பமென்று சொல்லப்படுகிறது.

இவைகளைத்தவிர தநுர்வேதம், ஆயுள்வேதம் காந்தர்வவேதமென மூன்றுண்டு. அவைகளிற் தநுர்வேதமானது வில்லாளிகளுக்குப் பாணம் முதலியவைகளை இன்னவிதமாய்ப்பிரயோகிக்கவேண்டியதென்பதையும், அதற்கடுத்த மந்திரம் முதலியவைகளையும் போதிக்கிறசாஸ்திரமாயிருக்கிறது. ஆயுள்வேதமென்பது, வைத்தியசாஸ்திரமாயிருக்கிறது. காந்தர்வவேதமென்பது, சங்கீதசாஸ்திரமாயிருக்கிறது.

10 இவைகளையன்றி தர்க்கம், மீமாம்ஸை என இரண்டு சாஸ்திரங்களுண்டு. அவைகளிற் தர்க்கமென்பது, ஒரு வஸ்துவின் சுவரூபநிச்சயவிஷயத்திலுண்டாகுமநுமானம் உபமானமுதலியப் பிரமாணசாஸ்திரம். மீமாம்ஸையென்பது பூர்வமீமாம்ஸை உத்தரமீமாம்ஸை என இருவகைப்படும். பூர்வமீமாம்ஸை என்பது, வேதத்தினுடைய கருமகாண்டத்தின்வாக்கியார்த்தத்திலுள்ள ஸந்தேகத்தை நிவிருத்திக்கும்பொருட்டு ஜைமிநியென்பவரால் வெளியிடப்பட்ட சாஸ்திரம். உத்தரமீமாம்ஸையென்பது, வேதாந்தவாக்கியார்த்தங்களின் ஸந்தேகத்தை நிவிருத்திக்கும்பொருட்டு வேதவியாஸமகரிஷியினால் வெளியிடப்பட்ட சாரீரகமீமாம்ஸாவென்று சொல்லப்படுகிற பிர்ம்மசூத்திரமே. இப்பிர்ம்மசூத்திரத்திற்கு மேற்கண்ட மதாசாரியர்கள் அவரவர்கள் சித்தாந்தத்தையநுஸரித்தும் ஸ்ரீமத் ஸ்ரீகண்டாசாரியர் சைவமதசித்தாந்தத்தையநுஸரித்தும்பாஷியஞ்செய்திருக்கிறார்கள். மேற்கண்ட சாஸ்திரங்களெல்லாம் ஆதிபுருஷனாகிய விராட்டினிடத்திலிருந்தே உண்டானவைகளென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பூர்வமீமாம்ஸை ஜைமிநியாலும் உத்தரமீமாம்ஸையாகிற பிர்ம்மசூத்திரம் வேதவியாஸராலுஞ் செய்யப்பட்டதென்று பிரஸித்தமாய்ச் சொல்லப்படுகிறதேயென்றால், இவ்வுலகத்திலவர்களால் வெளியிடப்பட்டதாகையாலும் அவர்களீசுவராம்சமாகையாலும் அவர்கள் செய்ததாகச் சொல்லுகிறார்களென்று ஸமாதானஞ் சொல்லப்படுகிறது.

11. இதற்கடுத்தப் பிரமாணம் ஸ்மிருதிகளே. சுவாயம்புவமநுமுதலிய மஹாத்துமாக்கள் வேதார்த்தங்களை மனதினால் ஸ்மரித்துச் (நினைத்து) சொன்னதாகையாலவைகளுக்கு ஸ்மிருதிகளென்று பெயர் வந்தன. அந்த ஸ்மிருதிகளிற் பிராம்மணாதி நான்குவர்ணங்களுடைய ஆசிரமதருமங்களும் பிராயச்சித்தாதிகளும் இராஜநீதிகளும் வியவஹாரங்களைத் தீர்க்கவேண்டிய விதமும் மற்றுமுலகத்தாரநுஸரிக்கவேண்டிய பலவிததருமங்களுஞ்சொல்லப்படுகின்றன. இப்படிப்பட்ட ஸ்மிருதிகள்-கஅ. உபஸ்மிருதிகள்-கஅ-முந்திய பதினெட்டுஸ்மிருதிகளுக்குக் கர்த்தாக்கள்-கஅ-பெயர்கள். அவர்கள் யாரெனில், சொல்லப்படுகிறது.

பவிஷியபுராணம்-க-க-ல், * "மநு, விஷ்ணு, யமன், அங் "கிரஸ், வஸிஷ்டர், தக்ஷர், ஸம்வர்த்தர், சாதாதபர், பராசரர், "ஆபஸ்தம்பர், உசநஸ், காத்தியாயநர், பிருஹஸ்பதி, கௌதமர், "சங்கர், லிகிதர், ஹாரீதர், அத்திரி, இப்பதினெட்டுப்பெயர்கள் "தருமசாஸ்திரப் பிரவர்த்தகர்கள்."

யாக்ஞவல்கிய ஸ்மிருதியில், மேற்கண்ட பதினெட்டுப்பெயர்களையுமன்றி, வியாஸர், யாக்ஞவல்கியர், இவ்விருவர்களையுஞ்சேர்த்து ஸ்மிருதிகருத்தாக்கள்-20-பெயர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிரத்திநத்தில், மேற்கண்ட பதினெட்டுப்பெயர்களில் வஸிஷ்டர், காத்தியாயநர் இவர்களைவிட்டு யோகீசுவரர், பிரசேதஸ் இவர்களைச்சேர்த்து-கஅ-பெயர்களாய்க் கணக்கிடப்பட்டிருக்கிறது.

உபஸ்மிருதி கருத்தாக்கள் பதினெட்டுப்பெயர்களுடைய பெயர்கள் ஆங்கிரஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறதாவது.

ஆங்கிரஸ்மிருதியில், † "ஜாபாலி, நாசிகேதர், ஸ்கந்தர், "லோகாக்ஷி, காசியபர், வியாஸர், ஸநத்குமாரர், சந்தநு, ஜநகர், "வியாக்கிரர், காத்தியாயநர், ஜாதுகர்ணி, கபிஞ்சலர், போதாய

---

* श्रूयतां धर्मशास्त्राणि मनुर्विष्णुर्यमोऽङ्गिराः ॥ ४३ ॥ वसिष्ठ दक्षसंवर्त शातातपपराशराः । आपस्तंबोऽथउशनाः कात्यायनबृहस्पती॥ ४४॥ गौतमश्शंखलिखितौहारीतोत्रिरथा पिवा॥एतानि धर्मशास्त्राणि ॥४५॥

† जाबालि र्नाचिकेतश्च स्कंदो लोकाक्षिकाश्यपौ ।व्यास स्सनत्कुमारश्च शन्तनु र्जनकस्तथा । व्याघ्रः कात्यायनश्चैव जातुकर्णीकपिंजलः॥

"நர், காணுதர், விசுவாமித்திரர், பைடீநஸி, கோபிலர் ஆகிய "இவர்கள் உபஸ்மிருதிகளை இயற்றினவர்கள்." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களையன்றி பின்னும்பல ரிஷிகள் செய்த ஸ்மிருதிகளநேகமுண்டு.

12. இந்த ஸ்மிருதிகளுக்குள் மநுஸ்மிருதி தலைமையானதாகச் சொல்லப்படுகிறது. எவ்விடத்திலெனில்:—

யஜுர்வேதம்-காண்டம்-உ-பிரசிநம்-உ-அநுவாகம்-க0-ல், * "மநு சொன்னதெதுவோ அதெல்லாம் வியாதிக்கு ஔஷதம் "போலிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறதுமல்லாமல்:—

பார்ஹஸ்பத்திய ஸ்மிருதியில், † "வேதார்த்தங்களைத் திர "ட்டியுரைத்ததனுல் மநுஸ்மிருதிதான் முக்கியமானது. மநு "வின் ஸ்மிருதிக்கு விரோதமாயெந்தஸ்மிருதியிருக்கிறதோ அது "பிரமாணமாகமாட்டாது." என்று ஸ்மிருதியுஞ் சொல்லுகிறது.

இப்படி மநுஸ்மிருதி முக்கியமானதென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் மற்ற ஸ்மிருதிகள் மநுஸ்மிருதிக்கடுத்தப் பிரமாணங்களாகக் கிரஹிக்கத்தக்கது. ஆனுல், மற்ற ஸ்மிருதிகள் மநுஸ்மிருதிக்குவிரோதமில்லாதபோது அவைகளும் ஸமானமானப் பிரமாணங்களே. எந்த ஸ்மிருதியாவது வேதத்திற்கு விரோதமாயிருந்தாலவைகள் பிரமாணமாகமாட்டாதென்று ஸ்மிருதிகளே சொல்லுகின்றன.

ஜாபாலஸ்மிருதியில், ‡ "சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோ "தமிருக்குமிடங்களிற் சுருதியே கௌரவமானப் பிரமாணமா "கும். அவற்றுள் விரோதமில்லாதபக்ஷத்திற் சுருதியைப்போல "வே ஸ்மிருதியுமெப்போதுமநுஷ்டிக்கத்தக்கதே."

---

बोधायनश्च काणादो विश्वामित्र स्तथैवच । पैठीनसि र्गोबिलश्चेत्युपस्मृतिविधायकाः ॥

* यद्वैकिञ्च मनुरवदत् तत् भेषजं ॥

† वेदार्थोपनिबन्धृत्वात् प्राधान्यं हिमनोः स्मृतं । मन्वर्थविपरीतातु यास्मृति स्सानशस्यते ॥

‡ श्रुतिस्मृतिविरोधे तु श्रुतिरेव गरीयसी । अविरोधे सदा कार्यं स्मार्तं वैदिकवत्सदा ॥

ஆபஸ்தம்பஸ்மிருதியில், * "வேதத்திற்காணுத விஷயங்க
"ளை ஸ்மிருதியின்னின்றும் கிரஹித்துக்கொள்ளலாம். இரண்டி
"லுமில்லாத விஷயங்களைப் புராணங்களின்னின்றும் கிரஹித்து
"க்கொள்ளலாம். சுருதி ஸ்மிருதி புராணங்களுக்குள் ஒன்றுக்
"கொன்று விரோதம் தோற்றும்போது பிந்தியதைக்காட்டிலும்
"முந்தியதையே பலமானதாகக்கொள்ளவேண்டியதென்று நியா
"யமறிந்தவர்கள் சொல்லுகிருர்கள்."

மீமாம்ஸா சாஸ்திரத்தில், †"ஸ்மிருதியானது சுருதிக்கு வி
"ரோதமாகும்போது அந்த ஸ்மிருதிக்கு வேதத்திலாதாரமிருக்
"குமென்கிற அநுமாநம் போய்விடுகிறது. சுருதிக்கு விரோத
"மான ஸ்மிருதிவாக்கியத்தையபேக்ஷிக்கவுங்கூடாது. பிரமாண
"மாகக்கொள்ளவுங்கூடாது. ஆதரிக்கவுங்கூடாது."

ஸ்காந்தம் ஸூதஸம்ஹிதை சிவமாஹாத்துமியகண்டம்-அத்
க-ல், ‡ "ஓ! முநிசிரேஷ்டர்களே! வேதங்கள் சுவயமாகவே
"முந்தியப் பிரமாணங்களாகவிருக்கின்றன. அதற்குப் பிறகு
"ஸ்மிருதிகள், புராணங்கள், பாரதம், மற்றுமநேக சாஸ்திரங்கள்
"இவையெல்லாம் வேதத்திற்கு விரோதமாயில்லாவிட்டாற் பிர
"மாணங்களாகின்றன. வேறுவிதமாயிருந்தாற் பிரமாணமாக
"மாட்டா."

ஸ்மிருதிகளுடைய தருமங்களையநுஷ்டிக்கிறவர்களுக்குண்
டாகிற பிரயோஜநத்தைக் குறித்து மநு சொல்லுகிறதாவது —

---

* यददृष्टं हि वेदेषु तद्द्रष्टव्यं स्मृतौ किल । उभाभ्यां यददृष्टंतु-
तत्पुराणेषु पठ्यते । श्रुतिस्मृतिपुराणेषु विरुद्धेषु परस्परम् । पूर्वं पूर्वं
बलीयस्स्या दिति न्यायविदो विदुः ॥

† विरोधे त्वनपेक्ष्य स्यात् । असतिह्यनुमानं । श्रुतिविरोधे स्मृ-
तिवाक्य मनपेक्ष्य मप्रमाण मनादरणीयं च ॥

‡ वेदाः प्रमाणं प्रथमं स्वतएव ततः परं । स्मृतय श्च पुराणानि
भारतं मुनिपुङ्गवाः ॥ ३६ ॥ अन्यान्यपि मुनिश्रेष्ठा श्शास्त्राणि सुबहूनिच ।
सर्वं वेदाविरोधेच प्रमाणं नान्यवर्त्मनां ॥ ३७ ॥

மநுஸ்மிருதி-அத்-உ-ல், * "சுருதிஸ்மிருதிகளில் விதித்தி "ருக்குந் தருமங்களையநுஷ்டிக்கிற மனிதன், இம்மையிற் கீர்த் "தியையும் மறுமையிலொப்பற்ற சுகத்தையுமடைவான். சுருதி "யென்பது வேதமென்றறியத்தக்கது. தருமசாஸ்திரமென்பது "ஸ்மிருதியே. ஸகலதருமங்களுமவைற்றின்னின்றே வெளியா "னபடியால், ஒழுங்கற்ற வாதங்களினாலவற்றையாக்ஷேபிக்கக் "கூடாது. எந்தத்துவிஜனாவது அப்பிரமாணங்களான சாஸ் "திரங்களைப் பின்பற்றி மேற்சொல்லிய விரண்டு(சுருதிஸ்மிருதி) "மூலங்களை யவமதிப்பானாகிலவனைப் பெரியோர்கள் நாஸ்திக "னென்றும் வேதநிந்தகனென்றும் விலக்கிவிடவேண்டியது."

13 வேதவேதாங்கம், மீமாம்ஸாசாஸ்திரம் முதலியவைகளையும் ஸ்மிருதிகளையும் குறித்துச்சொன்னேன். இனி இதிஹாஸபுராணம் முதலியவைகளுடைய சுவரூபங்களைச் சொல்லுகிறேன் கேள்.

இதிஹாஸத்திற்கு இலக்ஷணமெதுவெனில், சப்தஸ்தோமத்தில், † "தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமிவைகளுடைய "உபதேசத்தோடுகூடினதாயும் முந்தி நடந்த சரித்திரத்தோடு "கூடினதாயுமிருக்கிறதெதுவோ அது, இதிஹாஸமென்று சொல் "லப்படுகிறது."

இப்படிப்பட்ட இலக்ஷணங்களோடுகூடிய இதிஹாஸமெவையெனில், வால்மீகிமஹரிஷியினால் வெளிப்படுத்தப்பட்ட இராமாயணம், வேதவியாஸமகரிஷியினால் வெளிப்படுத்தப்பட்ட மஹாபாரதம், கர்க்காசாரியரால் வெளிப்படுத்தப்பட்ட கர்க்கஸம்ஹிதை, இவைகளே இதிஹாஸங்களென்றுப் பிரஸித்த

---

* श्रुतिस्मृत्युदितंधर्म मनुतिष्टन् हिमानवः । इहकीर्ति मवाप्नोति प्रेत्यचा नुत्तमं सुखं ॥ ९ ॥ श्रुतिस्तु वेदो विज्ञेयो धर्मशास्त्रं तु वैस्मृतिः। तेसर्वार्थे ष्वमीमांस्ये ताभ्यां धर्मो हिनिर्बभौ ॥ १० ॥ योवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयान्द्विजः । स साधुभि र्बहिष्कार्यो नास्तिको वेदनिंदकः ॥११॥ இந்த வாக்கியங்களை பவிஷ்யபுராணம் பிரும்மபருவம் அத்-எ-சு-ருடு-ருசு-ருஎ-ல் காண்க.

† धर्मार्थकाममोक्षाणा मुपदेशसमन्वितम् । पूर्ववृत्त कथायुक्तमितिहासं प्रचक्षते ॥

மாயிருக்கின்றன. அவைகளிலொன்றாகிய இராமாயணமானது, பூர்வகண்டம் உத்தரகண்டமென இருவகைப்படும். இவ்விரண்டு கண்டங்களும் ஸ்ரீவால்மீகிமஹாரிஷியினாற்செய்யப்பட்டன. பூர்வகண்டமானது விஷ்ணுவினுடைய அம்சத்தினாலவதாரஞ் செய்திருந்த ஸ்ரீஇராமருடைய சரித்திரம். உத்தரகண்டமானது பிரும்மபுத்திரரான ஸ்ரீவஸிஷ்டமஹாரிஷியினாற் ஸ்ரீஇராமருக்கு ஆத்துமதத்துவோபதேசமாகிற வேதாந்தஸாரத்தைத்திரட்டிச் சொன்னதை வால்மீகிமஹாரிஷி ஸ்ரீபரத்துவாஜமஹாரிஷிக்குபதேசித்தது. பூர்வகண்டத்திற் தருமார்த்தகாமமோக்ஷங்களாகிற நான்குவித புருஷார்த்தங்களில் முந்தியமூன்று புருஷார்த்தங்கள் நன்றாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

14. அப்புருஷார்த்தங்களிற் தருமமென்கிற பதத்திற்கு அநேகவித அர்த்தங்களுளவாயினும் முக்கியமாய் மனிதன் தனக்கியற்பானதும் நியாயமானதும் சாஸ்திரவிரோதமில்லாததுமான காரியங்களை யநுஷ்டிக்கிறதுதான் முக்கியமான அர்த்தம். அர்த்தமென்பது—பொருள் அல்லது பிரயோஜநம் என்கிற அர்த்தமுள்ளது. காமமென்பது—விருப்பம் அல்லது ஆசையென்றர்த்தமுள்ளது. இவைகளிலொவ்வொன்றினுடைய சுவரூபத்தையும் விளக்கிக்காட்டியிருக்கிறார். எப்படியெனில், புத்திரன் பிதாவினுடைய கட்டளை நியாயமானாலுமந்நியாயமானாலுமதை யோஜியாமல் அதனாற் துக்கம் முதலியனவுண்டாவதாயிருந்தாலும் அக்கட்டளையை நிறைவேற்றுவது புத்திரனுடைய கடமையென்கிற தருமமானது பிதுர்வாக்கிய பரிபாலநார்த்தம் இராமர் காட்டிற்குச்சென்றதினாலும், ஸஹோதரர்கள் ஒருவருக்கொருவரிருக்கவேண்டிய அன்பு இப்படிப்பட்டதென்பதையும், ஜியேஷ்ட ஸஹோதரனிடத்தில் மற்றஸஹோதரர்கள் நடந்துகொள்ளவேண்டியக்கிரமத்தையும், பரதர், இலக்ஷ்மணர், சத்துருக்நர் இவர்களுக்கும் இராமருக்கும் நடந்த சரித்திரத்தினால் ஸஹோதரதருமமும், ஸ்திரீகள் புருஷனைவிட்டுத் தனிமையிலிருக்கலாகாது, புருஷனுக்கெப்படிப்பட்ட துன்பம் நேரிட்டாலுமதை மனைவியுங் கூடவிருந்தநுபவித்துக்கொண்டு புருஷனுக்கு சுசுரூஷைசெய்யவேண்டியது ஸ்திரீகளுடைய கடமையென்கிற தருமம், ஸீதையைக்காட்டிற்கழைத்துப்போனதினாலும், இரிஷிகள், தபசுவிகள் முதலியவர்களுக்குத் துன்பமுண்டாகாமல்

இரக்ஷிக்கவேண்டியது க்ஷத்திரியதருமமென்பதை, விராதன்முதலிய இராக்ஷஸர்களை வதஞ்செய்து இரிஷிகளுக்குப்பிரியமுண்டாக்கியதனால் க்ஷத்திரியதருமம் விளங்கியது. சக்கிரவர்த்தியாயிருந்தாலுங்கூட மஹரிஷிகள் முதலிய பெரியோர்களை வணங்குவது தருமமென்பதை ரிஷிகளை வணங்கி யுபசரித்ததனாலும், ஸத்துக்களுக்குத்துன்பஞ் செய்துந் தருமங்களுக்குக் கெடுதிசெய்தும் வருகிறவன் எவ்வளவு பலமுள்ளவனானாலும் ஸைந்நியமுள்ளவனானாலுமவன் புத்திரமித்திராதிகளுடன் நசித்துப்போவானென்கிற நீதியானது இராவணாதிகளுடைய வதத்தினாலும் வெளியிடப்பட்டது இவைமாத்திரமல்ல. பின்னுமனேகவித தருமங்களுமூலகத்திற்கு வெளியிடப்பட்டிருக்கின்றன

15. அர்த்தசுவரூபமானது, எதனால் வெளியிடப்பட்டதெனில், தருமத்தைவிட அர்த்தமானது அற்பமானதென்று விளக்கும்பொருட்டு இராஜ்ஜிய ஐச்சுவரியத்தையிழந்து இராமர் காட்டுக்குச்சென்றதனாலும் தனக்கு அற்பமேனும் யாராவதுபகாரஞ் செய்திருந்தாலதற்குப் பிரதிப்பிரயோஜநந் தன்னாற்கூடியவரையிற்செய்யவேண்டியது கடமையென்பதை ஜடாயுவிஷயத்திற்காண்பித்து, ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரஞ்செய்து அவன் நற்கெதியடையும்படி யநுக்கிரகஞ் செய்ததனாலும், தான் வியஸநமுற்று ஸீதையைத்தேடி அலையுங்காலத்திற் றன்னையாதரித்து ஸீதையின் ஆபரணத்தைக் கொடுத்து அவள் ஜீவித்திருக்கிறாளென்று தனக்கு தைரியத்தை யுண்டாக்கின சுக்கிரீவனுக்குப் பிரதிப்பிரயோஜநமாக இராஜ்ஜியாதிபத்தியத்தைக் கொடுத்ததனாலும், துக்கத்தினால் மனவருத்தமடைந்து தன்னைச்சரணமாயடைந்த விபீஷணனுக்கு சிரஞ்சீவிப் பட்டத்தையும் இராஜ்ஜியத்தையுமளித்ததனாலும் அர்த்தசுவரூபம் வெளியிடப்பட்டது.

16 காமமானது, நியாயவிரோதமானதாயும் அக்கிரமமாயுமிருக்கக்கூடாது. அப்படியிருக்குமானால், அதனாற் றனக்கே நாசமுண்டாகுமென்கிற விஷயத்தை கைகேயி இடத்திலுள்ள காமத்தினாற் றசரதர் ஜியேஷ்டபுத்திரனைக் காட்டிற்கநுப்பியதனாலும், ஸீதையின்வார்த்தையைக்கேட்டு இராமன் மான் பின் தொடர்ந்ததனால் ஸீதையைப்பறிகொடுத்துத் துன்பமடைந்ததனாலும், ஸஹோதரன் பாரியயை அக்கிரமமாய் கிரஹித்ததனால்

வாலி, மரணமடைந்ததனுலும், ஸீதையை அக்கிரமமாய் அபகரித்து இராவணனழிந்துபோனதனுலுங் காமசுவரூபம் வெளியிடப்பட்டது.

17. ஆனலிப்பூர்வகண்டத்தில் மோக்ஷசுவரூபம் சொல்லப் படவில்லையோவென்றுல், மோக்ஷஸாதநமான சில சரித்திரங்கள் சொல்லியிருந்தாலும் மோக்ஷத்திற்குமுக்கியஸாதநமான யோகம் ஞாநம், பிர்ம்மசுவரூபலக்ஷணம், மோக்ஷசுவரூபமிவைகளை நன்றுய் விளக்கவில்லை. ஏனென்றுல், அவ்விஷயங்கள் உத்திரகண்டத்திற், பூர்ணமாய் விளக்கிக்காட்டியிருக்கிறதனுற்றுன். இப்பூர்வகண்டமானது குசலவர்களென்கிற வாலிபர்களுக்குபதேசிக்கப்பட்டதனுலாத்துமதத்துவம் பூர்ணமாய் விளக்கப்படவில்லை. இக்கண்டம் ஆறுபாகமாய்ப்பிரிக்கப்பட்டு—உச000—ம்கிரந்தங்களடங்கியிருக்கின்றன. ஆருவதுகாண்டத்தில், பூர்வகாண்டம் உத்தரகாண்டமென இரண்டுபிரிவுண்டு.

18. இராமாயணத்தினுத்திரகண்டமானது ஸ்ரீவஸிஷ்டமஹரிஷியினுல் இராமருக்கு, மோக்ஷத்திற்குமுக்கிய சாதநமான ஆத்துமதத்துவமாகிற பிர்ம்மசுவரூபமானது நன்றுயுபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபதேசத்தையே பரத்துவாஜமஹரிஷிக்கு ஸ்ரீவால்மீகி மஹரிஷியினுலுபதேசிக்கப்பட்டது. இதற்கு வாஸிஷ்டராமாயணமென்று பெயர். இதுவும் ஆறுகாண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டு கடைசிகாண்டத்திற் பூர்வ, உத்தர என்கிற இரண்டுபிரிவாயிருக்கிறது. இதில் ௩௨000—ம் கிரந்தங்களடங்கியிருக்கின்றன. ஆத்துமதத்துவஞ்ஞாநம் பூர்ணமாயிதில் விளக்கப்பட்டிருக்கிறபடியால் இதற்கு ஞாநவாஸிஷ்டராமாயணமென்றும், யோகத்தை விரித்துரைத்திருக்கிறபடியால் யோகவாஸிஷ்டராமாயணமென்றும் பெயர்களுண்டாயிருக்கின்றன. இக்கிரந்தத்தை உபபுராணங்களிலொன்றுக ஒருவர் கணக்கிட்டிருக்கிருர். அது பிசகு. அதற்கு யாதொரு ஆதாரமுமில்லை.

19. மற்றெருரு இதிஹாஸமாகிய பாரதத்திலோவென்றுல், அந்த விஷ்ணுவானவர் திரேதாயுகத்தில் ஸ்ரீஇராமனுக அவதாரஞ் செய்து அவருடைய சரித்திரத்தினுல் வெளியிட்ட தருமார்த்தகாமமோக்ஷங்களின் சுவரூபமானது அநேகாயிரவருஷங்கள் சென்றுபோனதனுலுலகத்தில் மலிநமாய்விட்டது. அவைகளை மறுபடியும் உலகத்திற் பரவச்செய்யும்பொருட்டுத் துவாபரயு

கத்தின் கடைசியிற் கிருஷ்ணனுக அவதாரஞ்செய்து அக்காலத்திற் தேவாம்சத்தினுலவதாரஞ்செய்திருந்தவர்களும் சந்திரவம்சத்தரசனுன பாண்டுமஹாராஜாவின் குமாரர்களுமாகிய தருமபுத்திரர்முதலியவர்கள் மூலமாய்த் தருமார்த்தகாமமோக்ஷசுவரூபங்களை வெளியிட்டிருக்கிறுர். எப்படியெனில்:—

20. திருதராஷ்டரனுகிய பெரியதகப்பனுருடைய கட்டளையினுற் தருமபுத்திராதிகள் காட்டிற்குச் சென்றதனுல் பிதுருபுத்திரதருமமும், பஞ்சபாண்டவர்கள் ஒருவருக்கொருவர் அன்புபாராட்டியும், ஜியேஷ்டஸஹோதரனுடைய கட்டளைக்குக்கீழ்படிந்து மற்றவர்கள் நடந்தும் காட்டியதனுல் ஸஹோதரதருமமும், திரௌபதையின் நடத்தையினுல் ஸ்திரீதருமமும், பின்னும் தருமபுத்திராதிகள் தங்களுடைய அநுஷ்டாநத்தினுற் வர்ணுசிரம தருமங்களும் வெளியிட்டிருக்கிறுர்கள். முக்கியதருமமான ஸத்தியத்தை, பாண்டவர்களைப்போற் கடைபிடியாய்க்கொண்டவர்களில்லை. ஸத்தியத்தைக் காப்பதனுலெவ்வளவு கஷ்டத்தையநுபவித்தாலும் முடிவில் நல்லபிரயோஜநத்தையடைகிறுனென்பதற்குப் பாண்டவர்கள் நேரான சாக்ஷியமாயிருந்தார்கள். அப்படிப்பட்ட பொருமையினுலேயே நல்லகீர்த்தியையும் பெருமையையும் இராஜ்ஜிய இலக்ஷ்மியையுமடைந்தார்கள். இப்பிரயோஜநங்களே அர்த்தத்தின் சுவரூபத்தை விளக்குகின்றன. ஆசையினுற் பிறர்பொருளையபகரிப்பது கெடுதியையும் நாசத்தையுமுண்டாக்குமென்பது, துரியோதநனுடைய சரித்திரத்தினுல் நன்ருய் விளங்குகிறது. அக்கிரமமான காமத்தின் சுவரூபத்தை வெளிப்படுத்துகிறது. ஸ்ரீகிருஷ்ணபகவானுல் அர்ஜுநனுக்குபதேசஞ் செய்யப்பட்டதிலும் பாண்டவர்களுக்கு பீஷ்மாசாரியராலுபதேசிக்கப்பட்ட மோக்ஷதருமத்திலும் நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷசுவரூபம் விளக்கப்பட்டது. இந்த மஹாபாரதத்திற் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் இந்த புருஷார்த்தங்களின் விஷயமாய்க்கணக்கற்ற இதிஹாஸங்களடங்கியிருக்கின்றன. அதனுல்இந்த பாரதத்திற்கு ஐந்தாவது வேதமென்று பெயருண்டாயிருக்கிறது. இது பதினெட்டு பருவங்களாய்ப் பிரிக்கப்பட்டு இலக்ஷம் (க00000) கிரந்தங்களடங்கியிருக்கின்றன.

21. மூன்றாவது இதிஹாஸமாகிய கர்க்கஸம்ஹிதையில்—ஸ்ரீ கிருஷ்ணபகவான் உலகத்திலவதாரஞ் செய்ததற்குக் காரணமும், கிருஷ்ணபகவானுடைய அத்புதமான சரித்திரங்களுஞ் சொல்லியிருக்கிறதுமல்லாமல், தருமம், அர்த்தம், காமம், மோக்ஷ சுவரூபங்கள் பலவிடங்களிற்சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் மற்றொரு விசேஷமென்னவெனில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அநேகஸ்திரீகளையும், அநேககோபிகாஸ்திரீகளையும் சுவீகரித்ததற்குக்காரணம் நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், மஹாவிஷ்ணுவானவர் இராமாவதாரஞ் செய்திருந்தகாலத்திலவர், வநத்திற்சென்றபொழுது அவ்விடத்திலநேக ரிஷிகள் இராமரை பகவானென்றறிந்து தாங்களதுவரையிற் பார்த்திராத அத்புதமான இராமருடைய ரூபத்தைக்கண்டு அவரங்கங்களை ஸ்பரிசிக்கும்பொருட்டு அவரையாலிங்கநஞ்செய்துகொள்ள விரும்பினார்கள். அப்போது ஸ்ரீஇராமர், மஹாரிஷிகளைப்பார்த்து நீங்கள் தபஸ்விகளாயிருந்துமாலிங்கநத்திற் பிரியமுள்ளவர்களாயிருக்கிறதனால், நான் கிருஷ்ணாவதாரஞ்செய்யுங்காலத்தில் நீங்களெல்லோரும் கோபஸ்திரீகளாய்ப்பிறந்து என்னையாலிங்கநஞ்செய்துகொள்ளலாமென்று கட்டளையிட்டபடியாலந்த ரிஷிகள் ஒருவகைஸ்திரீகளாய்ப் பிறந்தார்கள். பின்னும் இராவணனுடைய அந்தப்புரத்திலநேகங்கோடி ஸ்திரீகள் இராவணனாற் பலவந்தமாயடைக்கப்பட்டிருந்தார்கள். ஸ்ரீஇராமர் இராவணனை வதஞ்செய்தபிறகு அந்தப்புரத்திலடைக்கப்பட்டிருந்த ஸ்திரீகளெல்லோரும் விடுவிக்கப்பட்டு இராமருடைய ஸமீபத்திற்குக் கொண்டுவரப்பட்டபொழுது அந்த ஸ்திரீகள் ஸாக்ஷாத் பரமாத்துமாவாகிய நீர், எங்களை இந்தப் பந்தத்திலிருந்து விடுவித்தபடியால் நாங்களெல்லோரும் தங்களுக்குப் பத்நிகளாக வாகவிச்சிக்கிறோமென்று பிரார்த்தித்தார்கள். ஸ்ரீ இராமர், நான் ஏகபத்நீவிரதமுடையவனாகையாலிக்காலத்திலுங்களை பத்நிகளாகவடையக்கூடாதென்று சொல்லியுமந்தஸ்திரீகள் வருந்திக்கேட்டுக்கொண்டதின்பேரில் ஸ்ரீ இராமர் நான் கிருஷ்ணாவதாரஞ்செய்யுங்காலத்தில் நீங்களெல்லோரும் கோபஸ்திரீகளாக அவதரித்தென்னை பதியாகவடையலாமென்று வரங்கொடுத்தார். அந்த ஸ்திரீகளெல்லோரும் ஒருவகை கோபஸ்திரீகளாகப் பிறந்தார்கள். பின்னுமந்த இராமாவதாரகாலத்தி

லேயே அயோத்தியாநகரத்திலும் மிதுலாபுரியிலுமிருந்த அநேக ஸ்திரீகள் இராமனையே புருஷனாகவடையவேண்டுமென்று கருதி கந்நிகைகளாகவே தபஸ்செய்துகொண்டும் இராமனைப் பிரார்த்தித்துக்கொண்டுமிருந்தார்கள். அவர்களுக்கும் கிருஷ்ணாவதாரகாலத்திற் கோபிகைகளாகப்பிறந்து தன்னையடையலாமென்று அநுக்கிரகஞ்செய்தார். அவர்கள் ஒருவகை கோபிகாஸ்திரீகளாகப் பிறந்தார்கள்.

இவ்விதமாய் கோபிகாஸ்திரீகளுடைய ஜநநத்தையும் பகவான் பக்தர்களுடைய இஷ்டபூர்த்தியைச்செய்கிறவராய் ஸகலப் பிராணிகளுடைய ஹிருதயத்திலிருக்கிறவரானதினாலவருக்கு விதிநிஷேதமாவது, சுத்தாசுத்தமாவது, பாபபுண்ணியமாவது கிடையாதென்று பலமுகாந்திரங்களுடன் காண்பிவிக்கப்பட்டிருக்கிறது. இக்கிரந்தமானது எட்டுகெண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டு கஅ000 கிரந்தங்களடங்கியதாயிருக்கிறது.

இந்த இதிஹாஸங்களுடைய மஹிமையைப்பற்றி சாந்தோக்கியோபநிஷத்-எ-க-ச-ல் * "இருக்குவேதம், யஜுர்வேதம், "ஸாமவேதம், நான்காவதாகிய அதர்வணவேதம், ஐந்தாவதாகி "ய இதிஹாஸம், புராணம் இவையெல்லாம் வேதமேயென்பது "பிரசித்தம்" (இதிஹாஸாதிகளும் வேதத்திற்கு ஸமானமான "வையென்பதுகருத்து).—

ஸ்காந்தம் சூதஸம்ஹிதை முக்திகண்டம்-அத்-கூ-ல், † "வேதவேதாங்கங்களையும், ஸ்மிருதிகளையும், புராணங்களையும், "பாரதத்தையும் துவேஷிக்கிற (பகைக்கிற)தும் அவைகளையத் "தியயநஞ்செய்பவவர்களிடத்திற் துவேஷஞ்செய்வதும் ஓ! கே "சவா! கெடுதியையுண்டாக்கத்தக்கதாயிருக்கிறது."

22. இதற்கடுத்தது புராணங்களே. இப்புராணங்களும் மேற்குறித்த இதிஹாஸங்களும் விராட்புருஷனிடத்திலிருந்து

---

* नामवा ऋग्वेदो यजुर्वेदस्सामवेद अथर्वणश्चतुर्थमितिहासपुराणः पञ्चमो वेदानां वेदः ॥

† वेदाङ्गानांच विद्वेषः स्मृतीनाञ्च तथैवच । पुराणानाञ्च विद्वेषो भारतस्यतथैवच ॥ ७ ॥ तेषामध्ये तृविद्वेष स्सैषांबाधश्च केशव ॥८॥

வேதங்களோடுண்டாயினவென்று மேலாகக்குறித்திருக்கிற பிருஹதாரண்ணியகோபநிஷத்-௪-௪-கo-ல், சொல்லப்பட்டிருக்கிறதனாலே அவைகளும் வேதத்துடனே உண்டாயினவென்று விசிஷ்டாத்துவைதசித்தாந்தியான ஸ்ரீஇரங்கராமாநுஜாசாரியர் அவர் பாஷியத்திற் சொல்லியிருக்கிறார். ஆனால், இதிஹாஸபுராணங்கள் மஹரிஷிகளாற் செய்யப்பட்டனவாயிருக்க வேதத்துடன் விராட்புருஷனிடத்திலிருந்துண்டானதாக எப்படிசொல்லலாமென்கிற ஆக்ஷேபணையை அவரே செய்துகொண்டு அதற்கு ஸமாதாநமாக அந்த ரிஷிகள் பிர்ம்மத்தினுடைய அம்சமானதனாலவர்கள் செய்ததாகச் சொல்லியிருக்கிறதென்றார்.

ஸ்ரீமத் சங்கராசாரியரோ, வேதத்துடனுண்டானதாகச் சொல்லியிருக்கிற இதிஹாஸம், புராணம் முதலியன வேதவியாஸர் முதலிய மஹரிஷிகளாற் செய்யப்பட்ட பாரதம் முதலிய இதிஹாஸங்களும் புராணங்களுமல்லவென்றும்,மேற்படி சுருதியிற் சொல்லுகிற இதிஹாஸமென்பது, வேதத்தினொருபாகமாகிய ஊர்வசீ, புரூரவஸ் இவர்களுடைய ஸம்வாதத்தை இதிஹாஸமென்கிற பெயரினாற் சொல்லியதென்றும், புராணமென்று சொன்னது, வேதத்தினொருபாகமாகிய "असद्वा इदमग्र आसीत्"என்பது முதலியவாக்கியங்களை புராணமென்கிற பெயரினாற் சொல்லியதென்றும், பாஷியஞ்செய்திருக்கிறார். மற்றப் பிரமாணங்களும், இதிஹாஸபுராணங்களுக்கு வால்மீகர், வேதவியாஸர் முதலியமஹரிஷிகளைக் கருத்தாக்களாகச் சொல்லுகின்றன. அந்தந்த இதிஹாஸபுராணங்களும் அதற்குக் கருத்தாக்களான ரிஷிகளுடைய பெயர்களைச் சொல்லுகின்றன. வேதவியாஸமஹரிஷியானவர் புராணங்களைச் செய்து சிஷியர்களுக்குபதேசித்ததாய் விஷ்ணுபுராணம் அம்சம்-ங அத்-௬-ல், சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ஸ்ரீதராசாரியர் வியாக்கியானத்தோடிருக்கிற விஷ்ணுபுராணத்திற் இப்படிச்சொல்லியிருந்தாலும் விசிஷ்டாத்துவைதிகளுடைய வியாக்கியானத்தோடிருக்கிற விஷ்ணுபுராணத்தில்—கிருதயுகத்திற் பிரும்மாவினாற் நூறுகோடிகிரந்தங்களாய்ச் செய்யப்பட்டிருந்ததுமொன்றாகவேயிருந்ததுமான புராணத்தைத் திரேதாயுகத்திற் சில ரிஷிகள் நூற்றிப்பதினெட்டு ஸம்ஹிதைகளோடுகூடிய பதினெட்டுப்பிரிவுகளுள்ள கோடிகிரந்தங்களாய்ச் செய்தார்களென்றுமவைகளை வேதவியா

ஸர் துவாபரயுகத்தில் இலக்ஷங்கிரந்தங்களுள்ள பதினெட்டுப் புராணங்களாய்ச் செய்தாரென்று சொல்லியிருக்கிறது.

மத்ஸ்யபுராணம்-அத்-ருடு-ல், * "மத்ஸ்யரூபியான பக "வான் சொல்வது:—ஓ! பாபமற்றவனே! (தருமார்த்தகாமமா "கிற) மூன்றுக்கு ஸாதநமாயும், புண்ணியத்தைத்தரத்தக்கதா "யும் மூன்றுகோடிகிரந்தவிஸ்தாரமுள்ளதாயும் முந்தியகற்பத் "திலிருந்த புராணமானதப்போதொன்றாகவேயிருந்தது. ஒவ் "வொருத் துவாபரயுகத்திலேயும் நான் வியாஸரூபியாய் அவதா "ரஞ்செய்து நான்கு லக்ஷங்கிரந்தங்களாக இவ்வுலகதிற்குக் "கொண்டுவருகிறேன். அப்படியே இவ்வுலகத்திற் பதினெட் "டாகச் செய்து விளக்கப்படுகிறது. இப்போதுங்கூட இந்த தே "வலோகத்தில் நூறுகோடிகிரந்தவிஸ்தாரமாயிருக்கிறது. அந் "த அர்த்தமே இப்பதினெட்டுப் புராணங்களினால் நான்கு ல "க்ஷங்கிரந்தமாய்ச் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது."

இந்த மத்ஸ்யபுராண வாக்கியத்தினாலாவது விசிஷ்டாத்து வைதமதவியாக்கியாநமடங்கிய விஷ்ணுபுராண வாக்கியத்தி லாவது இதிஹாஸபுராணங்கள் விராட்புருஷனிடத்திலிருந்து வேதத்துடனுண்டானவைகளாகக் காணப்படவில்லை. ஆனால் முந்திய கற்பத்திலிருந்த புராணத்திலிருந்து ஸம்க்ஷேபமாய் வே தவியாஸர் செய்ததாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

23. புராணங்கள் வேதவியாஸமஹரிஷியினாற் செய்யப் பட்டவைகள் பதினெட்டு. வேதவியாஸ மஹரிஷியினாற்கேட் டறிந்த மற்றமஹரிஷிகள்செய்த உபபுராணங்கள் பதினெட்டு. இப்புராணங்களுடைய கணக்கையும் பெயரையும் அநேக புரா ணங்கள் சொல்லுகின்றன. ஆனாலவைகளின் கிரமவரிசை யிலொன்றுக்கொன்று வித்தியாசப்படுகிறது. ஆனாலும் கூர்ம புராணத்திலுள்ளபடி புராணங்களுடைய வரிசையைச்சொல்லு கிறேன்.

---

* मत्स्यउवाच । पुराणमेक मेवासीत् तदा कल्पांतरेऽनघ । त्रिवर्ग साधनं पुण्यं शतकोटि प्रविस्तरं ॥ ४ ॥ व्यासरूपमहं कृत्वा संहरामि युगेयुगे । चतुर्लक्षप्रमाणेन द्वापरेद्वापरे सदा ॥ ९॥ तथाष्टादशधा कृत्वा-भूर्लोकेऽस्मिन् प्रकाश्यते । अद्यापि देवलोकेऽस्मिन् शतकोटिप्रविस्तरम् । १० । तदर्थोऽत्रचतुर्लक्षं संक्षेपेण निवेशितं ॥ ११ ॥

கூர்மபுராணம்-முதல்பாகம்-அத்-க-ல், * "பிரும்மபுரா "ணம் முதலாவது. பிறகு பாத்துமம், வைஷ்ணவம், சைவம், "பாகவதம், பவிஷியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேய "ம், பிரும்மவைவர்த்தம், இலிங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாம "நம், கூர்மம், மாத்ஸ்யம், காருடம், பிரும்மாண்டமென்று பெ "யருள்ள பதினெட்டாவதாகிய வாயவீயம்."

இந்த வாக்கியங்களிற் கடைசிவாக்கியத்தினுற் வாயுபுராணமென்பது, பிரும்மாண்டமென்கிற பெயருடைய பதினெட்டாவதென்று காண்கிறது. ஆனுல், விஷ்ணுபுராணம், பாகவதம், பவிஷியம், மாத்ஸ்யம், இலிங்கம், இப்புராணங்களிற் பதினெட்டாவது பிரும்மாண்டபுராணமென்று சொல்லியிருக்கிறது. வாயுபுராணமென்கிற பெயராவது, அதுவே பிரும்மாண்டமென்கிற பெயராவது காணவில்லை. அப்படியிருந்தாலும் பிரும்மாண்டபுராணம் வாயுவினுற் சொல்லப்பட்டதாகையாலும் வாயுபுராணமும் வாயுவினுற் சொல்லப்பட்டதாகவே யிருக்கிறதாகையாலும் பெயர்கள் வேருனுலும் அவ்விரண்டு பெயர்களாலும் சொல்லப்படுகிற புராணம் ஒன்றேஎன்று இக்கூர்மபுராணவாக்கியஞ்சொல்லுகிறதென்று கிரஹிக்கத்தக்கது.

24. மேற்கண்ட புராணங்களிலொன்ருகிய பாகவதமானது வேதவியாஸமஹரிஷியினுற் செய்யப்பட்டதல்ல. வேதவியாஸராற் செய்யப்பட்டது, தேவீ பாகவதமே. ஷ பாகவதமானது போபதேவரென்பவராற் செய்யப்பட்டது. அதனுலிந்த பாகவதம் மற்றபுராணங்களுக்கு ஸமாநமாக அங்கீகரிக்கக்கூடாதென்று சிலர் சொல்லுகிருர்கள். இந்த அபிப்பிராயம் ஸரியானதல்ல. இந்த பாகவதத்தைச்செய்தது வேதவியாஸரேயன்றி போபதேவரல்லவென்று பவிஷியபுராணம் தெளிவாய்ச் சொல்லுகிறது.

---

* ब्राह्मंपुराणं प्रथमं पाद्मं वैष्णवमेवच । शैवं भागवतं चैव भविष्यं नारदीयकम् । मार्कंडेय मथाग्नेयं ब्रह्मवैवर्तमेवच । लैंगंतथाचवाराहं स्कान्दं वामनमेवच । कौर्ममात्स्यं गारुडञ्च वायवीय मनन्तरं । अष्टादशं समुद्दिष्टं ब्रह्मांडमितिसंज्ञितं ॥

பவிஷியபுராணம்·௩-௨·அத்·௩௨-ல், * "தோதாத்திரியென்
"கிறவிடத்தில் வேத வேதாந்தங்களை நன்ருய் அறிந்தவராயும்,
"கிருஷ்ணபக்தியுடையவராயும், போபதேவனென்று பிரஸித்தி
"யடைந்தவராயும் ஒரு பிராம்மணரிருந்தார். கோபாலர்கள்
"கோபிகைகள் வாஸஞ்செய்யப்பட்டதும் மனதிற்கின்பந்தரத்
"தக்கதுமான பிருந்தாவநத்திற்குச்சென்று தேவதேவனுகிய
"ஜநார்த்தநனை மனதினுலே பூஜித்துக்கொண்டிருந்தார். ஒரு
"வருஷத்தின்முடிவிற் ஸாக்ஷாத் ஹரியானவர் ஸர்வோத்தமமா
"ன ஞாநத்தைக்கொடுத்தார். (ஞாநமுண்டாகும்படி அநுக்
"கிரஹித்தார் என்பது கருத்து) அந்த ஞாநத்தினுற், புத்திமா
"னுகிய விஷ்ணுராதனென்கிற பரீக்ஷித்துராஜனுக்கு சுகர்னுல்
"எது வர்ணித்துச்சொல்லப்பட்டதோ அந்த பாகவதகதையா
"னது (போபதேவனுகிய) அவனுக்கு ஹிருதயத்திற் பிரகாசித்
"தது. மோக்ஷசுவரூபமாயும் சாசுவதமாயுமிருக்கிற அந்த பாக
"வதகதையை வர்ணித்துக்கொண்டிருந்தார். அக்கதையின்
"வர்ணனை முடிவில் ஜநார்த்தநனும் பகவானுமிருக்கிற விஷ்ணு
"வானவர் அவரெதிரிற்தோன்றி ஓ! புத்திமானே! வரனைக்கே
"ளென்று இனிமையானவார்த்தையினுற் சொன்னுர். போப
"தேவன் சொல்லுகிறுன். ஓ! பகவானுகிய விஷ்ணுவே! ஓ!
"உலோகாநுக்கிரஹகருத்தாவே! உமக்கு நமஸ்காரம். தேவ
"தைகள், மனிதர்கள், மிருகங்கள் முதலியவர்களடங்கிய இந்த
"ப்பிரபஞ்சமானது உம்மால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. எவர்

---

* तोतादर्यां द्विजः कश्चित्बोपदेवइति श्रुतः । बभूव कृष्णभक्तश्च वेदवेदाङ्गपारगः । १ । गत्वाबृन्दावनं रम्यं गोपगोपीनिषेवितम् । मनसा पूजयामास देवदेवं जनार्दनम् ॥ २ ॥ वर्षान्तेच हरिस्साक्षा द्ददौ ज्ञानमनुत्तमम् । तेनज्ञानेन संप्राप्ता हृदि भागवती कथा ॥ ३ ॥ शुकेन वर्णिताया वै विष्णुरातायधीमते । तां कथां वर्णयामास मोक्षमूर्तं सनातनीम् ॥ ४ ॥ कथान्ते भगवान् विष्णुः प्रादुरासी ज्जनार्दनः । उवाच स्निग्धया वाचा वरं ब्रूहि महामते ॥ ५ ॥ बोपदेवउवाच । नमस्ते भगवन् विष्णो लोकानुग्रहकारक । त्वयाततमिदं विश्वं देवतीर्यङ्नरादिकम् ॥ ६ ॥ त्वन्नाम्नानरकार्ताश्च तेकृतार्थाः कलौयुगे । त्वय दत्तंभा-

"கள் நரகத்தில் துன்பப்படுகிறார்களோ அவர்கள் உம்முடைய "நாமபஜனையினாலே இக்கலியுகத்தில் உத்தமமானப் பிரயோஜ "நத்தைச் செய்துகொண்டவர்களாகிறார்கள். உம்மாலெனக்கு "வரங்கொடுக்கப்படுமேயானால் உம்மால் ஸ்ரீமத் வியாஸருக்குக் "கொடுக்கப்பட்டு அவரால் செய்யப்பட்டதாகிய பாகவதமெது "வோ அதனுடையமாஹாத்துமியத்தை எனக்குச்சொல்லவேண் "டும். ஸ்ரீ பகவான் சொல்வது—என்னுடைய ஆக்ஞையினாலே "ஸாக்ஷாத் சுகர் உன்னுடைய ஹிருதயத்திலிருக்கிறார். அதனா "லிதான பாகவதமும், பாகவதமாஹாத்துமியமும் உன்னாலடை "யப்பட்டது. நீ, நர்மதாநதியின் கரையையடைந்து விக்கிரமா "தித்தியனென்னுமரசனுடைய பிதாவாகிய கந்தர்வஸேனன் "பொருட்டு இந்த சுபமான கதையைச்சொல்லு." (இப்படிச் சொல்லி பகவான் மறைந்துவிட்டார்.)

இந்த வாக்கியங்களினாற் பாகவதத்தின் மாஹாத்தியமும் பாகவதகதையும் போபதேவனறிந்துகொள்ளும்படி பகவானனுக்கிரகித்தாரென்பதுவெளியாகிறதேயன்றி பாகவதத்தைபோபதேவர்செய்தாரென்று ஊஹமுண்டாகும்படியாய்க்கூடவிருக்கவில்லை. இது மாத்திரமல்ல, போபதேவன் பகவானிடத்திற் வரங்கேட்டதில் "உம்மால் ஸ்ரீமத் வியாஸருக்குக் கொடுக்கப்பட்டு அவரால் செய்யப்பட்டதாகிய பாகவதம்" என்று கேட்டிருக்கிறார். ஆகையாலிந்த பாகவதம் செய்தவர் போபதேவரென்று சொல்வது மிகவுமவிவேகமே. மேலுமிப்பாகவதத்திற்குத்தான் ஸ்ரீமத் ஸ்ரீதராசாரியர் வியாக்கியாநஞ் செய்திருக்கிறார். தேவிபாகவதத்திற்கல்ல. ஸ்ரீதராசாரியர் பகவதாக்ஞையினால் வியாக்கியாநஞ் செய்தாரென்று ஷை பவிஷியபுராணமே சொல்லுகிறது.

---

गवतं श्रीमद्व्यासेन निर्मितम् ॥ ७ ॥ माहात्म्यं तस्य मे ब्रूहि यदिदत्तो वरस्त्वया ॥ ८ ॥ श्रीभगवानुवाच । ममाज्ञया शुकस्साक्षात्वदीयहृदये स्थितः ॥ १८ ॥ तेन प्राप्तं भागवतं माहात्म्यं चास्य दुर्लभं । त्वंवै गंधर्वसेनाय पित्रे विक्रम भूपतेः ॥ १९ ॥ नर्मदाकूल मासाद्य श्रावयत्वं कथां शुभाम् ॥ २० ॥

பவிஷியபுராணம்-ந-ச-அத்-ககூ-ல், * "அதுமுதல் (ஸ்ரீ "இராமாலநுக்கிரகம் பெற்றதுமுதல்) ஸ்ரீதரரென்கிற பிராம் "மணனவர் விஷ்ணுபக்தரானர். சுபகரமான சாந்திபுரிக்குச் "சென்று ஏழுவயதுள்ள யக்ஞாம்சரிடத்திலிருந்து பிரும்மக் "ஞாநத்தையடைந்து யக்ஞாம்சருக்கு சிஷியரானர். அந்த "மஹாத்துமாவாகிய ஸ்ரீதராசாரியராலே பாகவதத்திற்கு டீகா "(வியாக்கியாநம்) செய்யப்பட்டது."

இதனல் மேற்குறித்த பதினெட்டுபுராணங்களுக்குள் ஒன்ருகிய பாகவதத்திற்கே ஸ்ரீதராசாரியர் வியாக்கியாநஞ்செய்திருக்கிருரென்பது லோகப்பிரஸித்தம். ஆகையால், போபதேவர் யாதொரு பாகவதத்தையும் செய்தவரல்ல.

25. இப்புராணங்களிலடங்கியிருக்கவேண்டிய விஷயங்களின்னவையென்பது ஒவ்வொருபுராணங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிலொன்ருகிய:—

பவிஷியபுராணம் க-உ-ச-ல், † "சிருஷ்டிக்கிரமம், பிரளயக்கிரமம், முந்தியிருந்த உத்தமபுருஷர்களுடைய வம்சாவளி, "மநுவந்தரங்கள், முந்தியிருந்த வம்சத்தாருடைய சரித்திரம் "இவ்வைந்து மடங்கியது புராணத்தின் இலக்ஷணம்."

இந்த ஐந்து லக்ஷணங்களோடுகூட தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமாகிய நான்குவித புருஷார்த்தங்களை யடைவதற்கு ஸாதனமாயிருக்கும் பொருட்டு ஈசுவரமஹிமை, ஈசுவரபக்தர்களுடைய மஹிமை, அவர்கள் சரித்திரம், நல்லொழுக்கம், வர்ணசிரமதருமம், தபஸ், யோகம், மற்றுமுள்ள உபாஸநாக்கிரமங்கள், ஆத்துமலக்ஷணம், பிர்ம்மதத்துவம், பிரகிருதிலக்ஷணம், திருமூர்த்திகளுடைய சுவரூபம் இவை முதலிய பலவிஷயங்களை உபதேசரூபமாயும் கதாரூபமாயுஞ்சொல்லுகின்றன.

---

* तदा प्रभृति वैविप्रः श्रीधरो वैष्णवोऽभवत् ॥२१॥ सप्ताब्दे चैव यज्ञांशे गत्वाशान्तिपुरीं शुभाम् । ब्रह्मज्ञानमुपागम्य यज्ञांशाच्छिष्यतांगतः ॥२२॥ टीकाभागवतस्यैव कृता तेन महात्मना ॥२३॥

† सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणिच ॥४॥ वंशानुचरितं चैव पुराणं पञ्चलक्षणं ॥

26. [இப்புராணங்களுக்குள் சிலபுராணங்களிற் மதமென்கிற பிசாசினுற் பிடிபட்டிருக்கிறவும் தூஷணையினுலேயே ஜீவித்துவருகிறவுமான சில ஸம்ஸ்கிருத வித்துவான்கள் தங்கள் கொள்கையை யாதரிக்கத்தக்கதாயும் பிறர் கொள்கையை நிந்திக்கிறதாயுமிருக்கிற சில சுலோகங்களைச் சேர்த்திருக்கிறார்களென்று ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது. இப்படிச்செய்கிறதானது தான்கற்றவித்தையை துர்விநியோகப்படுத்துவதாகவும் பாபத்திற்கு ஹேதுவாகவுமாகிறது. இப்படிச் சேர்க்கப்பட்ட விஷயங்களை சிலபுராணங்களிற் காணலாம். அவைகளிற் சில குறிப்பிடுகிறேன்.

ஸ்காந்தபுராணம் சங்கரஸம்ஹிதை-அத்-உ-ல், * "ஓ! பி"ராம்மணசிரேஷ்டர்களே! பதினெண்புராணங்களுக்குள், சிவ"புராணம், பவிஷியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்"கம், வாராஹம், ஸ்காந்தம், மாத்ஸ்யம், கூர்மம், வாமநம் "பிரும்மாண்டம் இப்பத்துஞ் சைவபுராணங்கள். அவைகள் "மூன்று லக்ஷங்கிரந்தக்கணக்குள்ளவைகள். அந்த கிரந்த"ங்களெல்லாம் சிவனுடைய மஹிமையை பிரகாசிப்பிக்கின்"றன. இந்தக்கிரந்தங்கள் அசாதாரணமான மூர்த்திகளினுலே"யும் சிவனையேதான் சொல்லுகின்றன. அவைகளிற் சிவன்தா"ன் பிரகாசிக்கிறார். அப்படிப்போலவே விஷ்ணுபுராணம், பா"கவதம், நாரதீயம், காருடம் இந்தப்புராணங்கள் விஷ்ணுவைப்"பற்றியது. அவைகளை விஷ்ணுஸம்பந்தமாகவறிகிறார்கள். பி"ரும்மபுராணம், பத்துமபுராணமிவ்விரண்டும் பிரும்மாவைப்"பற்றிச் சொல்லுகின்றன. அக்நியைப்பற்றி ஆக்நேயபுராண"மொன்றுதான் சொல்லுகிறது. சூரியனைப்பற்றி பிரும்மகைவ

---

* तत्रशैवानिशैवञ्च भविष्यच्च द्विजोत्तमाः । मार्कंडेयं तथालैंगं वाराहं स्कान्दमेवच ॥ ३० ॥ मात्स्यमन्यत्तथाकौर्मं वामनञ्च मुनीश्वराः । ब्रह्माण्डं च दशेमानि त्रीणिलक्षोणि संख्यया ॥ ३१ ॥ ग्रन्थानां महिमास्सर्वे शिवस्यैव प्रकाश्यते । असाधा रणयामूर्त्या नाम्ना साधारणेन च ॥ ३२ ॥ वदन्ति शिवमेतानि शिवस्तेषु प्रकाश्यते । विष्णोर्हि वैष्णवं तद्वत्तथाभागवतं तथा ॥ ३३ ॥ नारदीय पुराणञ्च गारुडं वैष्णवं विदुः । ब्राह्मं पाद्मं ब्रह्मणोह्वे अग्नेराग्नेयमे ककं ॥ ३४ ॥ सवितु ब्रह्मकैवर्तमेवमष्टादशस्मृतं ।

"ர்த்தபுராணம் சொல்லுகிறது, இவ்விதமாய், பதினெட்டுப்பு
"ராணங்கள் சொல்லப்பட்டன. விஷ்ணுஸம்பந்தமானபுராணம்
"நான்கும் ஈசனுக்கும் விஷ்ணுவுக்கும் ஸமத்துவத்தைச் சொல்
"லுகின்றன. அவைகளிற் பிரும்மாதிகளைவிட ஜகத்பதியான
"விஷ்ணு சிரேஷ்டரென்று சொல்லப்படுகிறது. பிரும்மபுரா
"ணத்திற் பிரும்மா, விஷ்ணு, மஹேசுவரர்களை ஸமமாய்ச்சொல்
"லப்பட்டிருக்கிறது. மற்றவர்களைவிட சிரேஷ்டமானவராயும்
"தேவனுயுமிருக்கிற பிரும்மாவை ஜகத்பதியாயும், சூரியனை பி
"ரும்மவிஷ்ணு சிவசுவரூபமாகவுஞ் சொல்லுகின்றன—சைவ
"புராணங்களாகிய பத்தும் ஸாத்விகபுராணங்களென்று வித்து
"வான்கள் சொல்லுகிறார்கள். எதனாலவைகளிற் பிராம்மணர்
"களுடைய தருமங்களுஞ் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, எத
"னால் பரிசுத்தமான ஸத்துவமானது, ஸுகம், ஞானம் இவைக
"ளுக்கிருப்பிடமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ (மூலத்தில்
"समाधिष्टं என்றிருக்கிற பதம் பிசகாகையால், समादिष्टं என்கிற ப
"தத்தினர்த்தம் இவ்விடத்திலுபயோகிக்கப்பட்டிருக்கிறது.) அ
"தனால், பிராம்மணோத்தமர்களாற் சிரத்தைவைக்கத்தக்கது.
"யோகிகளுக்கு யோகவித்தையையுபதேசிக்கிறவராயும், சுத்த
"ஸ்படிகம்போலிருக்கிறவராயும், பிராம்மணர்களுக்கதிபதியாயு
"ம் சிவனனவர் சொல்லப்பட்டிருக்கிறார். எப்போதும் நித்திரை
"யில்லாதவராயிருந்துகொண்டு, பிராம்மணர்களுக்குப் புராணங்
"களையும் சுபகரமான கதைகளையுஞ் சொல்லுகிறவராயுமிருக்கி
"றார். இந்த சைவபுராணங்கள் பத்தும், பரஹிம்ஸை, தோஷம்
"இவைகளற்றனவாயிருக்கின்றன. ஓ! முநீசுவரர்களே! விஷ்

---

चत्वारिवैष्णवानीश विष्णोस्साम्यपराणि वै ॥ ३९ ॥ ब्रह्मादिभ्योऽधिकं विष्णुं प्रवदन्ति जगत्पतिं । ब्रह्मविष्णुमहेशानां साम्यं ब्राह्मपुराणके ॥३६॥ अन्येषामधिकं देवं ब्रह्माणं जगतांपतिं । प्रवदन्ति दिनाधीशं ब्रह्मविष्णुशिवात्मकं ॥ ३७ ॥ दशशैवपुराणानि सात्विकानि विदुर्बुधाः ॥ ४९ ॥ श्रद्धेयानि द्विजवरैस्तेषां धर्मास्तु तत्रयत् । सत्वं शुक्लं समाधिष्टं सुखज्ञानास्पदन्तु यत् ॥ ४६ ॥ विद्योपदेष्टा योगिभ्य श्शुद्धस्फटिकसन्निभः । न निद्रातिशिवः क्वापि ब्राह्मणाधिपतिश्श्रुतः ॥ ४७ ॥ ब्रुवत्येव पुराणानि ब्राह्मणानां कथाश्शुभाः । दशशैवपुराणानि हिंसादोषपराङ्मखं ॥ ४८ ॥ वैष्णवानि च

"னுஸம்பந்தமான நான்கு புராணங்களும் தாமஸங்களாயிருக்
"கின்றன. அவைகளில் க்ஷத்திரியதருமங்கள் சொல்லப்படுகி
"ன்றன. அந்தப் புராணங்களிற் சொல்லப்படுகிற தேவதை,
"ஹரிதான். அவரை அலக்ஷியஞ்செய்யத்தக்க கறுப்பான த
"மோகுணமுடையவராகவும், கபடமான அல்லது மோசமான
"காரியஞ்செய்வதில் ஸாமர்த்தியமுடையவராகவும், நித்திரை,
"சோம்பல், மதித்திருத்தலிவைகளே குணமாயுடையவராகவுஞ்
"சொல்லுகிறார்கள். கறுப்பான விஷ்ணுவானவர் சேஷன்பே
"ரில் சயனித்துக்கொண்டு பக்தர்களை மோகமடையும்படி செய்
"கிறார். அந்த வைஷ்ணவபுராணங்களில் க்ஷத்திரியதருமங்கள்
"சொல்லப்படுவதாக பிராம்மணர்கள் சொல்லுகிறார்கள். இர
"ஜோகுணமுள்ள பிரும்மபுராணம் வைசியர்களாலநுஷ்டிக்கத்
"தக்கதாயும், துக்கத்தைக்கொடுக்கத்தக்கதாயும், சிவந்தவர்
"ணமுள்ளதாயும், சஞ்சலசுவபாவமுடையதாயும், எல்லாவற்
"றையும் ஸமானமாய்ச் சொல்லுகிறதாயுமிருக்கிறது. அது இ
"ராஜஸமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது."

**27.** சங்கரஸம்ஹிதையிலிருந்தெடுத்துக்கூறிய மேற்கண்ட வாக்கியங்களிலநேகம் கற்பனையென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. எதிலிருந்து இந்த வாக்கியங்களெடுக்கப்பட்டனவோ அந்த சங்கரஸம்ஹிதையென்கிற கிரந்தமானது கிரந்தாக்ஷரத்திற் பத்துவருஷத்திற்குமுன் அச்சிடப்பட்ட புஸ்தகமாயிருக்கிறது. அப்படியச்சிடப்பட்ட காலத்திலோ அல்லது அதற்குமுந்திய காலத்திலோ கற்பிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று ஊஹிக்கக் கூடியதாயிருக்கிறது. இதனுண்மையை யறியும்பொருட்டு பழய ஏட்டுப்பிரதிகளைத்தேடியுங் கிடைக்கவில்லை. அப்படியிருந்தாலுமிந்த வாக்கியங்களிலுள்ள வழுவுகளைக்கொண்டே கற்பனை யென்று நிச்சயிக்கலாம். எப்படியெனில் மேற்படி வாக்கியங்கள் ஸ்ரீவேதவியாஸமஹரிஷியினுடைய வாக்கியங்க

---

चत्वारि तामसानि मुनीश्वराः । क्षत्रियाणां श्रुताधर्मास्तेषु तद्देवता हरिः ॥ ४९ ॥ तमः कृष्णमुदासीनं कूटकृत्यविशारदम् । निद्रालस्य प्रमादाद्यास्तत् गुणाः परिकीर्तिताः ॥५०॥ कृष्णोविष्णुः स्मृतश्शेषशायी भक्तविमोहकः । तेषु च क्षत्रियाणां च धर्मा विप्रैरुदाहृताः ॥ ५१ ॥ ब्राह्मे तु राजसे वैश्य सेव्ये सर्वत्र संमते । दुःखास्पदं रक्तवर्णं चञ्चलं च रजोमतम् ॥ ५२ ॥

ளாகக் காணப்படவில்லை. ஏனெனில், அதிலுள்ள பதங்களை நன்ருய் அன்வயம் செய்யக்கூடாமலிருக்கிறதுமல்லாமல் கர்திருகர்மக்கிரியைகள் ஒற்றிருக்கவுமில்லை. இதுமாத்திரமல்ல, வாராஹம், மாத்ஸ்யம், கூர்மம், வாமநம் இந்தப்புராணங்கள் சைவபுராணங்களென்று அப்புராணங்களின் சுவரூபத்தையறிந்த ஒருவருஞ் சொல்லமாட்டார்கள். அப்புராணங்களுக்கு தேவதை விஷ்ணுவாகவேயிருக்கிருர். பதினெட்டுப் புராணங்களிலுஞ்சில சிலபாகங்களிற் சிவனையுத்தம தேவதையாகவும் சிலபாகங்களில் விஷ்ணுவையுத்தமதேவதையாகவும், சிலபாகங்களில் அவ்விருவரும் அபேதவஸ்துக்களென்றுஞ் சொல்வதுபோற்ருன் இப்புராணங்களுஞ்சொல்லுகின்றன. மேலும் மேற்குறித்த சங்கரஸம்ஹிதை வாக்கியத்திற் சைவபுராணங்கள் பத்தும் மூன்றுலக்ஷங்கிரந்தங்களுள்ளனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொருபுராணங்களுடையக் கிரந்தக்கணக்கிவ்வளவென்று சொல்லுகிற பாகவதம் ஸ்கந்தம்-கஉ-அத் கங-ல், இருக்கிறவாக்கியங்களைக்கொண்டு மேற்படி பத்து புராணங்களுடைய கிரந்தங்களைக் கணக்கிட்டுப்பார்த்தால்—உககூகூ00— கிரந்தங்கள்தான் ஏற்படுகின்றன. மூன்றுலக்ஷங் கிரந்தங்களென்று சொல்வதற்காதாரமில்லை. சைவங்களான பத்துபுராணங்கள் ஸாத்துவிகங்களென்றும், விஷ்ணுஸம்மந்தமானபுராணங்கள் தாமஸங்களென்றுஞ்சொல்வது மற்ற புராணங்களுக்கு விரோதமாயிருக்கிறது. இப்பத்து புராணங்களுக்குளொன்ருகிய மத்ஸ்யபுராணத்தில்—

மத்ஸ்யபுராணம்-அத்-நுங-ல், * "(சிருஷ்டிமுதலிய) ஐந்து "இலக்ஷணங்களோடு கூடியிருக்கிற புராணத்திற் பிரும்மா, விஷ் "ணு, உருத்திரன், சூரியன் இவர்களுடைய மாஹாத்துமியமும் "பிரபஞ்சத்தினுடைய உற்பத்தி நாசமுஞ் சொல்லப்படுகிறது. "தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமிவைகளுடைய சுவரூப "மும் அதிலேயே சொல்லப்படுகிறது. எல்லாப்புராணங்களிலே "யுமதற்கு (தருமார்த்த காமமோக்ஷங்களுக்கு) விரோதமான "பலனெதுண்டோ அதுவும் சொல்லப்படுகிறது. ஸாத்துவிக "மான புராணங்களிலே ஹரியாகிறவிஷ்ணுவினுடையமாஹாத்து

---

* ब्रह्मविष्ण्वर्क रुद्राणां माहात्म्यं भुवनस्य च । ससंहारप्रदानं च पुराणे पञ्चवर्णके ॥ ६५ ॥ धर्मश्चार्थश्च कामश्च मोक्षश्चैवात्रकीर्त्यते । सर्वेष्वपि पुराणेषु तद्विरुद्धं च यत्फलम् ॥ ६६ ॥ सात्विकेषु पुराणेषु माहात्म्य-

"மியமதிகமாய்ச் சொல்லப்படுகிறது. இராஜஸபுராணங்களிலேபி
"ரும்மாவினுடையமாஹாத்துமியமதிகமாய்ச்சொல்லப்படுகிறது.
"அப்படியே தாமஸபுராணங்களிலே அக்நியினுடையவும் சிவ
"னுடையவும் மாஹாத்துமியம் அதிகமாய்ச் சொல்லப்படுகிறது.
"(முக்குணக்கலப்புள்ள) ஸங்கீர்ண புராணங்களிலே ஸரஸ்வதி
"யினுடையவும் பிதுர்க்களுடையவும் மாஹாத்துமியஞ்சொல்லப்
"படுகிறதென்று வித்துவான்களறிகிறார்கள். இப்படிப் பதி
"னெண் புராணங்களை ஸத்தியவதி புத்திரரான வேதவியாஸர்செ
"ய்து அதற்கு பாரதமுழுவதையுஞ் சிறப்பாகச்செய்தார்."

இந்த வாக்கியங்கள் மேற்கண்ட சங்கரஸம்ஹிதையிலுள்ள வாக்கியங்களுக்கு விரோதமாயிருக்கின்றன. மேலும், பிரும்ம விஷ்ணு ருத்திரர்களுடைய மாஹாத்துமியமுந் தருமார்த்த காம மோக்ஷசுவரூபங்களும் இப்படிப்பட்டனவென்று எல்லாப் புராணங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறதாகவே அர்த்தமாகிறது.

பத்துமபுராணம் உத்தரகண்டம்-அத்-உகூ-ல்,*"மத்ஸ்யம்,
"கூர்மம், இலிங்கம், அப்படியே சைவம், ஸ்காந்தம், ஆக்நேய
"மிவ்வாறும் தாமஸமென்று தெரிந்துகொள்ளவேண்டியது.
"வைஷ்ணவம், நாரதீயம், சுபகரமான பாகவதம், காருடம், அப்
"படியே பாத்துமம், வராஹம், இவைகள் ஓ! சுபதரிசனே! சுப
"த்தைக்கொடுக்கத்தக்க ஸாத்துவிக புராணங்களென்று அறியத்
"தக்கது. பிரும்மாண்டம், பிரும்மவைவர்த்தம், மார்க்கண்டே
"யம், அப்படியே பவிஷியம், வாமநம், பிராம்மம் இந்தப்புராணங்
"கள் தாமஸங்களென்றறியவேண்டியது. ஸாத்துவிக புராணங்

---

मधिकं हरेः । राजसेषु च माहात्म्यमधिकं ब्रह्मणो विदुः ॥६७॥ तद्वदग्नेश्च माहात्म्यं तामसेषु शिवस्य च । सङ्कीर्णेषु सरस्वत्याः पितॄणाञ्च निगद्यते ॥६८॥ अष्टादशपुराणानि कृत्वा सत्यवती सुतः । भारताख्यानमखिलं चक्रे तदुपबृंहितम् ॥६९॥

* मत्स्यं कौर्मं तथा लैङ्गं शैवं स्कान्दं तथैवच ॥८१॥ आग्नेयञ्च षडेतानि तामसानि निबोधमे । वैष्णवं नारदीयञ्च तथा भागवतं शुभम् ॥८२॥ गारुडञ्च तथा पाद्मं वाराहं शुभदर्शने । सात्विकानि पुराणानि विज्ञेयानि शुभानि वै ॥८३॥ ब्रह्माण्डं ब्रह्मवैवर्तं मार्कण्डेयं तथैवच । भवि-

"கள் மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கவைகளென்றும் இராஜஸ "புராணங்கள் சுபகரங்களாயிருக்கிறதுமல்லாமல் சுவர்க்கத்தை "க்கொடுக்கத்தக்கவைகளாயும், ஓ! தேவீ! அப்படியே தாமஸ "புராணங்கள் நரகத்திற்குஹேதுக்களாயுமிருக்கின்றனவென்று "சொல்லப்பட்டிருக்கின்றன."

இந்த பத்துமபுராணவாக்கியமும் கற்பனேயென்பதில் ஸந்தேகமில்லே. ஏனெனில், ஜநங்கள் நரகத்தையடைவதற்காகவே ஸாக்ஷாத் விஷ்ணுவம்சத்தினுலவதாரஞ்செய்த ஸ்ரீமத் வேதவியாஸமஹரிஷி ஆறு புராணங்களே யுண்டுசெய்தாரென்று சொல்வதைவிட அவிவேகம் வேறில்லே என்பதே. மேற்கண்ட மத்ஸ்யபுராண வாக்கியங்களின்படி திருமூர்த்திகளின் மஹிமை எல்லாப்புராணங்களிலுஞ் சொல்லப்படுகிறதென்றும் திருமூர்த்திகளுலக சிருஷ்டியின்பொருட்டு ஸ்வீகரித்திருக்கிற ஸத்துவரஜஸ்தமோ குணங்களேயநுஸரித்து அந்தந்த மூர்த்திகளேக்குறித்துச் சொல்லுகிறபாகங்களே அந்தந்தப்பெயர்களாற் சொன்னதாகக் கிரஹிக்கத்தக்கதென்பது தாத்பரியம். இந்த பத்துமபுராணவாக்கியங்களேப் பொய்யாக்கும்பொருட்டு சங்கரஸம்ஹிதையில் மேற்குறித்திருக்கிற வாக்கியங்கள் கற்பிக்கப்பட்டனவென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது.

மேற்குறித்த சங்கரஸம்ஹிதை வாக்கியங்களிற் பிரும்மபுராணம், பத்துமபுராணமிவைகள் பிரும்மாவினுடைய மஹிமையைச் சொல்லுகிறதாகவும் அக்நிபுராணம் அக்நியைப்பற்றிச்சொல்வதாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. பத்துமபுராணம் விஷ்ணுவைப்பற்றிய புராணமென்று குழந்தைகள்கூடவறிவார்கள். சிவன் விஷ்ணுவை ஸகலத்திற்கும் காரணவஸ்துவென்று பார்வதிக்குபதேசிக்கிறஅநேகவத்தியாயங்கள் மேற்படிபுராணத்திலடங்கியிருக்கின்றன. அக்நிபுராணமானது வஸிஷ்டருக்கு அக்நிபகவானுலுபதேசிக்கப்பட்ட மத்ஸ்யாவதாரம் முதலிய விஷ்ணுசரித்திரமும், மந்திரங்களுடைய சுவரூபம் அவைகளேப்பிரயோகிக்கும் விஷயமிவை முதலியவைகளேயன்றி அக்நி மாஹாத்துமியம் அற்பமேனுஞ் சொல்லப்பட்டிருக்கவில்லே. பிரும்மவை

---

ष्यं वामनं ब्राह्मं तामसानि निबोधमे ॥८४॥ सात्विका मोक्षदाः प्रोक्ता (राजसा स्स्वर्गदाश्शुभाः । तथैव तामसादेवि निरयप्राप्तिहेतवः) ॥८९॥

வர்த்தபுராணத்திற் சூரியனை பிரும்ம விஷ்ணு சிவசுவரூபமாகச் சொல்லுகிறதென்று சொல்லியிருக்கிறதும் பொய்யென்பதிற் சந்தேகமில்லை. இப்புராணத்திற் சூரியனை உத்தமதேவதையாக வாவது பிரும்ம விஷ்ணு சிவசுவரூபமாகவாவது சொல்லப்பட்டிருக்கவில்லை. இந்தக்கற்பனை செய்தவர் பிரும்மவைவர்த்தபுராணத்தின் விஷயமின்னதென்று அவர் கேட்டுக்கூடவிருக்கமாட்டாரென்று தோணுகிறது. மேற்படி புராணத்துவக்கத்திற் சூதர் சொல்லுகிறதாவது—

பிரும்மவைவர்த்தபுராணம் பிர்ம்மகண்டம்-அத்-க-ல், * "பு "ராணங்களுக்குள்ளே பிர்ம்மவைவர்த்தமானது உத்தமமான "தாயும் ஸாரபூதமாயுமிருக்கிறது. இதானது, புராணங்கள், உப "புராணங்கள், வேதங்களிவைகளுடைய(இவைகளிலுண்டாகும்) "ஸந்தேகத்தைப்போக்கடிக்கிறதாயும்ஹரிபக்தியையுண்டாக்குகி "றதாயும் ஸகலதத்துவக்ஞானத்தை விருத்திசெய்கிறதாயும் விரு "ம்பினவர்களுடைய விருப்பத்தையும் மோக்ஷச்சையுள்ளவர் "களுக்கு மோக்ஷத்தையுங் கொடுக்கத்தக்கதாயும், விஷ்ணுபக்த "ர்களுக்கு பக்தியைக்கொடுக்கிறதாயுமுள்ள கற்பகவிருக்ஷசுவ "ரூபமாயிருக்கிறது."

இந்த வாக்கியங்களினாலிந்த புராணமானது விஷ்ணுவைப்பற்றியதேயன்றி சூரியனைப்பற்றிய புராணமல்லவென்று தெளிவாகிறது.

மேற்படி சங்கரஸம்ஹிதை வாக்கியங்களில் விஷ்ணுவை நிந்திப்பதற்காகவே சிலவாக்கியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேற்குறித்துக்காட்டியிருக்கிற தூஷணவாக்கியங்கள் மாத்திரமல்ல. இந்த சங்கரஸம்ஹிதையிற் பலவிடங்களில் விஷ்ணு தூஷணையடங்கியிருக்கின்றன. இப்படிப்பட்ட தூஷணவாக்கியங்களெல்லாம் கற்பனையென்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், ஸ்காந்தபுராணத்தில் ஆறுஸம்ஹிதைகளிற் புதிதாயச்சிடப்பட்டதாகிய இந்த சங்கரஸம்ஹிதையைத்தவிர மற்றெந்த ஸம்ஹிதை

* सारभूतं पुराणेषु ब्रह्मवैवर्तमुत्तमम् ॥ ४२ ॥ पुराणोपपुराणानां वेदानां भ्रमभञ्जनम् । हरिभक्तिप्रदंसर्व तत्वज्ञान विवर्द्धनम् ॥ ४३ ॥ कामिनां कामदञ्चेदं मुमुक्षूणाञ्च मोक्षदम् । भक्तिप्रदं वैष्णवानां कल्पवृक्षस्वरूपकम् ॥ ४४ ॥

யிலாவது சைவசம்பந்தமான சிவபுராணம்முதலிய வேறெதிலாவது இப்படிப்பட்ட விஷ்ணுதூஷணை காணப்படவில்லை. இப்படி விஷ்ணுதூஷணை செய்கிறதனாலப்படிச் செய்கிறவனடையப் போகிற பிரயோஜநமின்னதென்பதைப் பரமேசுவரனே சொல்லுகிறார்.—

சிவபுராணம் ஞாநஸம்ஹிதை-அத்-ரு-ல், * "(சிவனவர் "விஷ்ணுவைப்பார்த்துச் சொல்வது) ஓ! புருஷோத்தமா! நீ "ரென்னாற் தியாநிக்கத்தக்கவராகவே யிருக்கிறீர். நானுமும் "மாற் தியாநிக்கத்தக்கவனாகவே யிருக்கிறேன். (உலகத்தில்) "வஸ்துவின் தன்மை அநேகமாயிருக்கிறதனாலே பார்க்கிறவனு "க்குங்கூட அப்படியே அநேகமாய்க் காணப்படுகிறது. விசா "ரித்தறிவதனால், நம்மிருவர்களுக்குள் பேதம் (வேற்றுமை) "அணுமாத்திரமுமில்லை. எந்தமனிதன் என்பக்தனாகவிருந்தும் "உம்மைநிந்திக்கிறானோ அப்படிப்பட்டவனுடைய ஸகலபுண் "ணியங்களையும் மிச்சமின்றி சாம்பலாக்கியும் அந்ததோஷத்தி "னாலவனை நரகத்திற்தள்ளியும் விடுகிறேன்."

28. மேற்படி சங்கரஸம்ஹிதையிற்போல பின்னுஞ்சில புராணங்களிற் கற்பித்திருக்கிறவைகளை எடுத்துக்காட்டுகிறேன்.

மேற்படி ஸ்கந்தபுராணம் சூதஸம்ஹிதை சிவமாஹாத்துமியகண்டம்-அத்-க-ல், † "காம்மியகம் முதலிய ஆகமபேதத்திற் "கு தேவனான பரமேசுவரர் கர்த்தாவாயிருக்கிறதுபோல, பதி "னெண்புராணங்களுக்கும் ஸத்தியவதீ புத்திரரான வேதவி "யாஸர் கர்த்தாவாகவிருக்கிறார், ககஉ. (சூலபாணியான ஸா "க்ஷாத் சிவனே ஆதிகர்த்தாவாகவிருக்கிறாரென்று சுருதிசொ "ல்லுகிறது. ஓ! பிராம்மணர்களே! பத்துப்புராணங்களினால் "பரமேசுவரர் வர்ணிக்கப்படுகிறார். நான்கு புராணங்களினால்

---

* ममध्येयं भवांश्चैव तवध्तेयमहं पुनः । आवयोरन्तरं नैव ह्यणुमात्रं विचारतः ॥ १७ ॥ वस्तुत्वेचाप्यनेकत्वं चरतोपि तथैवच । मद्भक्तो योन्नरो भूत्वा तवनिन्दांकरिष्यति ॥ १८ ॥ तस्याहं सकलं पुण्यं भस्मीकृत्या विशेषतः । नरकेपातयिष्यामि तद्दोषात्पुरुषोत्तम ॥ १९ ॥

† अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुतः । कामिकादि प्रभेदस्य यथादेवो महेश्वरः ॥ ११½ ॥ (आदिकर्ता शिवस्साक्षाच्छूलपाणिरिति श्रुतिः ।

"விஷ்ணு வர்ணிக்கப்படுகிறார். இரண்டு புராணங்களினால் ஜக
"த்பதியான பிரும்மா வர்ணிக்கப்படுகிறார். ஒரு புராணத்தினால்
"அக்நி வர்ணிக்கப்படுகிறார். அப்படியே ஒருபுராணத்தினாற்சூ
"ரியபகவான் வர்ணிக்கப்படுகிறார்.) ஸத்தியவதீ குமாரரிடத்
"திலிருந்து பதினெண் புராணங்களையுங் கேட்டு மற்ற உபபுரா
"ணங்களை முனிகள் சொன்னார்கள். ௧௨௨."

இந்த ஸம்ஹிதையிலும் மேலாகக்குறித்துக்காட்டிய சங்கர ஸம்ஹிதையிற் கற்பிக்கப்பட்ட பாகத்திலிருந்தோ அல்லது புதிதாகக்கற்பித்தோ கைய்யெழுத்துப்பிரதியச்சுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமென்று காணப்படுகிறது. இந்த சூத ஸம்ஹிதைவாக்கியங்களிற் கற்பனையடங்கியிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. மேற்படி வாக்கியங்களுள்ள சூதஸம்ஹிதை யானது தெலுங்கக்ஷரத்திற் பெங்களூரிலச்சிடப்பட்டது. இந்தத்தமிழ்மொழிபெயர்ப்பிலும் அதன் மூலமாகிய ஸம்ஸ்கிருத வாக்கியத்திலும் ( ) இந்தவடையாளமிட்டிருக்கிற விடத்திற் குட்பட்ட வாக்கியங்கள் வாஸ்தவமல்லவென்பதைக் குறிப்பிடுவதற்காகவே அச்சிடும்போதே மேற்காட்டியபடி அடையாளமிட்டிருக்கிறார். அதனாலச்சிட்டவரே ஸந்தேகித்திருக்கிறரென்று காணுகிறது. அந்தஸந்தேகத்திற்கு ஸரியான முகாந்திரமிருக்கிறது. ௧௧௭—சுலோகத்திற்கும், ௧௨௨—சுலோகத்திற்கும் நடுவில் நியாயமாயிருக்கவேண்டியது ஒரு சுலோகமேயன்றி இப்போதிருக்கிறதுபோல மூன்றுசுலோகங்களல்ல. மூன்று சுலோகங்களைச்சேர்த்து ஒரு சுலோகமாய்க்கணக்கிட்டிருக்கிறதும் அந்தவாக்கியங்கள் முன்பின் வாக்கியார்த்தங்களோடாவது வாக்கியத்தோடாவது பொருந்தாமலிருக்கிறதும், இந்த சூத ஸம்ஹிதைக்கு வியாக்கியாநஞ்செய்திருக்கிற ஸ்ரீமத் வித்தியாரண்ணியசுவாமிகளுடைய வியாக்கியாநத்தில் மேற்படியடையாளத்திற்குட்பட்டிருக்கிற ஒருபதத்திற்காவது வியாக்கியாநஞ்

---

कथ्यते दशभिर्विप्राः पुराणैः परमेश्वरः । चतुर्भिः कथ्यते विष्णु र्द्वाभ्यां ब्रह्माजगत्पतिः । एकेनाग्निस्तथैकेन भगवांश्चण्डभास्करः ) अष्टादशपुराणानि श्रुत्वासत्यवती सुतात् । अन्यान्युपपुराणानि मुनिभिः कीर्तितानि तु ॥ १२½ ॥

செய்யப்படாமலிருக்கிறதும், மேற்படி அடையாளத்திற்குட்பட்டிருக்கிற வாக்கியங்கள் கற்பனையென்பதைப் பலமாயாதறிக்கிறது.

29. பத்துமபுராணத்திலுமிப்படிப்பட்ட கற்பனைகளிருக்கின்றனவென்பது முன்னமையே சொல்லப்பட்டது. அப்புராணத்திலேயே பின்னுஞ்சிலபாகத்திற் கற்பனைகளடங்கியிருக்கின்றனவென்பதைக்காணலாம்.

பத்துமபுராணம்-உத்தரகண்டம்-அத்-உசுஅ-ல், * "உருத்"திரர் சொல்வது. ஓ! தேவி! தாமஸசாஸ்திரங்களைக் கிரம"மாய்ச் சொல்லுகிறேன் கேள். அவைகளை (அந்தசாஸ்திரங்க"ளை) நினைத்தமாத்திரத்தில் ஞாநிகளுக்குங்கூட பாபம் ஸம்ப"விக்கும். பாசுபதம்முதலிய சைவசாஸ்திரமானது முந்தி யென்"று சொல்லப்பட்டது. பிறகு என்னுடைய சக்தியோடுகூடிய "பிராம்மணர்களாற் சொல்லப்பட்டவைகளெவையோ அவைக"ளையுங்கேள். காணுதரென்கிற ரிஷியினுல் வைசேஷிகமென்"கிற பெரிதானசாஸ்திரஞ் சொல்லப்பட்டது. கபில ரிஷியி"ஞல் ஸாங்கியசாஸ்திரஞ்சொல்லப்பட்டது. பிரஹஸ்பதியினுல் "மிகவும் நிந்திக்கத்தக்க சார்வாகசாஸ்திரஞ் சொல்லப்பட்டது. "பௌத்தரூபந்தரித்த விஷ்ணுவினுலசுரர்களை நாசஞ்செய்யு"ம்பொருட்டு பௌத்தசாஸ்திரம் வெளியிடப்பட்டது. (நிர்வா"ணம், நீலவஸ்திரம் முதலியவைகளையுடையதாகிய பௌத்த"சாஸ்திரமஸத்தென்று சொல்லப்படுகிறது. மாயாவாதமான "சாஸ்திரமஸத்தென்றும் மறைபட்ட பௌத்தமென்றுஞ் சொ"ல்லப்படுகிறது. ஓ! தேவீ! கலியுகத்திற் பிராம்மணரூபமெ

---

* रुद्रउवाच । श्रृणुदेवि प्रवक्ष्यामि तामसानि यथाक्रमम् । तेषां स्मरणमात्रेण पातित्यं ज्ञानिनामपि ॥ ६६ ॥ प्रथमं हि मयाचोक्तं शैवं पाशुपतादिकम् । मच्छक्त्यावेशितैर्विप्रैः प्रोक्तानि च ततश्श्रृणु ॥ ६७ ॥ काणादेन तु संप्रोक्तं शास्त्रं वैशेषिकं महत् । गौतमेन यथान्यायं सांख्यन्तु कपिलेन वै ॥ ६८ ॥ धिषणेन यथा प्रोक्तं चार्वाकमतिगर्हितम् । दैत्यानां नाशनार्थाय विष्णुना बुद्धरूपिणा ॥ ६९ ॥ ( बौद्धशास्त्रमसत्प्रोक्तं नग्ननीलपटादिकम् । मायावादमसच्छास्त्रं प्रच्छन्नं बौद्धमुच्यते ॥ ७० ॥ मयैव कथितं देवि कलौब्राह्मणरूपिणा । ) अपास्तं श्रुतिवाक्यानां दर्शयन् लोक-

"டுத்த என்னாலேயே சொல்லப்பட்டது.) சுருதிவாக்கியங்களுக்
"கு விரோதமான அர்த்தத்தைவெளியிட்டுக்கொண்டு உலகத்
"தில் நிந்திக்கத்தக்கதாகிய, கருமத்தை விட்டுவிடுதலைப்பற்றிச்
"சொல்லப்படுகிறது. (பரப்பிர்ம்மத்திற்கும் ஜீவனுக்கும் ஐக்
"கியமானதென்னுற் சொல்லப்படுகிறது. அதானது, ஸகலதரு
"மங்களுக்குப் புறம்பானதாயும், அதருமமாயுஞ் சொல்லப்படு
"கிறது.) இந்தப்பிர்ம்மத்தினுடையசுவரூபமானது நிற்குணமெ
"ன்றென்னுற் சொல்லப்படுகிறது."

இவ்வாக்கியங்களில் () இந்தவடையாளத்திற்குட்பட்ட வாக்கியங்கள் பௌத்தமதத்தையும் அத்துவைதமதத்தையும் அத்துவைதமதாசாரியரையும் நிந்திக்கிறதற்காகவே கற்பிக்கப்பட்டனவென்று சொல்லத்தடையில்லை. அடையாளத்திற்குட்பட்ட வாக்கியங்களாவது அவைகளினர்த்தமாவது முன்பின் வாக்கியங்களோடு பொருத்தமாயிருக்கவில்லை. இப்பத்துமபுராணம் எட்டு வருஷங்களுக்குமுன் பம்பாயில் அச்சிடப்பட்டிருக்கிறது. அப்படியச்சிட்ட புஸ்தகத்திலேயே மேலாகவடையாளமிட்டிருக்கிறமாதரியாகவே மேற்படி வாக்கியங்களுக்கு அடையாளமிடப்பட்டிருக்கிறது. அப்புஸ்தகத்தை யச்சிட்டிருக்கிற கனவான் 22-பழைய கையெழுத்துப் புஸ்தகங்களை வைத்துக்கொண்டு அவைகளை ஒவ்வொன்றையும் பரிசோதித்து அவைகளினுள்ள வித்தியாஸங்களை அந்தந்தப் பக்கங்களினடியிற் குறிப்பிட்டிருக்கிறூர். மேற்கண்ட முதலாவதடையாளத்திற்குள்ளடங்கிய வாக்கியங்கள், 22 புஸ்தகங்களுக்குள் மூன்று புஸ்தகங்களில் மட்டுமிருக்கிறதாயும், மற்றோரடையாளத்திற்குள்ளடங்கிய வாக்கியங்கள் மேற்படி மூன்று பிரதிகளிலும் மற்றொருப் பிரதியிலுமிருக்கிறதாகவுங் குறிப்பிட்டிருக்கிறூர். இதனுற் சில கையெழுத்துப் பிரதிகளிற் தூஷணை வாக்கியங்களை யெழுதிசேர்த்திருந்தார்களென்று நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது.

30. இப்படியே பவிஷ்யபுராணத்திலுங் கற்பிக்கப்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிறது. இக்கற்பனையானது மற்ற புரா

---

गर्हितम् ॥ ७१ ॥ कर्मस्वरूप त्याज्यत्व मत्र वै प्रतिपाद्यते । ( सर्व कर्मपरिभ्रष्टं वै धर्म्यत्वं तदुच्यते ॥ ७२ ॥ परेशजीवयोरैक्यं मया तु प्रतिपाद्यते । ) ब्रह्मणोस्य स्वयं रूपं निर्गुणं वक्ष्यते मया ॥ ७३ ॥

ணங்களிலுள்ளதைவிட மிகவுமர்புதமாயும் பார்த்த மாத்திரத்தில் யாருங் கற்பனையானதென்று நிந்திக்கத்தக்கதாயுமிருக்கிறது.

பவிஷ்யபுராணம்-௩-௧௪-ல், * "பதஞ்சலி மதத்தைப் பின்
"பற்றியிருக்கிற இராமசர்ம்மா என்பவர், ஒருகாலத்திற் தீர்த்த
"ங்கள் தோறுஞ்சென்று சிவனுக்குப்பிரியமான காசிபட்டணம்
"வந்தார். நூறு சிஷியர்களோடு கூடினவராய் சங்கராசாரி
"யரிடஞ் சென்று, கிருஷ்ணபக்தராயும் ஹரியினிடத்திற் பிரீதி
"யுள்ளவராயுமிருக்கின்ற அந்த இராமசர்ம்மா, பரிசுத்தமான
"சாஸ்திரார்த்தத்தைக் குறித்துவாதஞ் செய்தார். சங்கராசாரி
"யரால் ஜயிக்கப்பட்டவராய் சங்கராசாரியருடைய வாக்காகிற
"பாணங்களாலடிபட்டு அதனாற் பயந்தவராய் இராக்காலத்திற்
"தன்வீட்டிற்குத் திரும்பிவந்தார். ஸகல சாஸ்திரங்களிலும் வல்
"லவரான இராமாநுஜர் (இராமசர்ம்மாவினுடைய கநிஷ்டர்)
"அதைக் (தன் தமயன் ஜயிக்கப்பட்டதை)கேட்டு ஸஹோதரர்,
"சிஷ்யர்கள் இவர்களோடு காசிபட்டணத்திற்கு வந்தார். அந்த
"மஹாத்துமாக்களுக்கு (சங்கரஇராமநுஜர்களுக்கு) வேதாந்த
"சாஸ்திரத்தில் வாதமுண்டாயிற்று. சங்கரர் சிவபக்ஷமுடைய
"வராகவும் இராமநுஜர் கிருஷ்ணபக்ஷமுடையவராகவும் ஒரு
"மாதகாலம் வாதஞ்செய்து அந்த இராமாநுஜராலே வேதாந்த
"த்திலே ஹரியானவர் காண்பிக்கப்பட்டார். (என்றால், ஸகல
"வேதாந்தமும் ஹரியையேசொல்லுகிறதென்று நிரூபித்தார்.)
"அவர் ஸச்சிதாநந்த சுவரூபியான வாசுதேவரென்று பிரஸி

---

* एकदारामशर्मा वै पतञ्जलि मतेस्थितः । तीर्थात्तीर्थान्तरं प्राप्तः पुरीं काशीं शिवप्रियाम् ॥९२॥ शङ्कराचार्यमागम्य शतशिष्यसमन्वितः । शास्त्रार्थं कृतवान् रम्यं कृष्णपक्षो हरिप्रियः ॥९३॥ शङ्कराचार्यविजितो लज्जितो निशिभीरुकः । स्वगेहं पुनरायात श्शङ्करैर्वाक्शरैर्हतः ॥९४॥ रामानुजस्तु तच्छ्रुत्वा सर्वशास्त्र विशारदः । भ्रातृशिष्यैश्च सहितः पुरीं काशीं समाययौ ॥९५॥ वादो वेदान्तशास्त्रेच तयोश्चासीन्महात्मनोः । शङ्करश्शिवपक्षश्च कृष्णपक्षस्स वै द्विजः ॥९६॥ मासमात्रेण वेदान्ते दर्शितस्तेन वै हरिः । वासुदेवस्स वै नाम सच्चिदानन्दविग्रहः ॥९७॥ वासुदेव-

"த்தராயிருக்கிறார். ஜீவர்களில் அம்சத்தினாற் பிரகாசிக்கிறவர்
"யாரோ அவர்தான் வசுதேவரென்றறியத்தக்கவர். அந்த
"வசுதேவரேதான் பிரும்மா. அவருக்கு சிரேஷ்டர் யாரெ
"ன்று சொல்லப்படுகிறாரோ அந்தவாசுதேவன் ஸாக்ஷாத்ஹரி
"யே. சிவனால் பூஜிக்கத்தக்கவராயு மெப்போதுமுள்ளவராயு
"மிருக்கிறார். சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர் வாதித்த
"விஷயத்தில் இலஜ்ஜையையடைந்தவராய் பாஷியசாஸ்திரத்தை
"எடுத்துக்கொண்டு ஒருபக்ஷம் (பதினைந்துநாள்) சிவசூத்திரங்
"களினாலே சிவனைவர்ணித்தார். அந்தபாஷ்யத்திலேயே இரா
"மாநுஜரால் ஹரி நன்றாய்க்காண்பிக்கப்பட்டார். ஓ! வையா
"கரணா! கோவிந்தனென்கிற பெயரினாற் பிரஸித்தியை யடைந்
"திருக்கிற தேவதையாயும் எவரிடத்திலிருந்து சிரேஷ்டமான
"பூமியை யடைகிறார்களோ அப்படிப்பட்ட ஹரியானவர் கோ
"விந்தனென்கிற பெயரால் சொல்லப்படுகிறார். கிரீசனோ (கை
"லாஸாதிபதியோ) கோவிந்தனல்ல. அவர் பருவதங்களுக்கீசு
"வரனல்லவா? உருத்திரரானவர் விருஷபாரூடரென்று சொல்ல
"ப்பட்டிருக்கிறாரேயின்றி கோபாலனல்ல. சம்புவானவர் பசு
"பதியென்றறியத்தக்கது. கோபதியென்று பிரஸித்தமாயிரு
"க்கிறவரல்ல. சங்கராசாரியர் இலஜ்ஜையையடைந்து மீமாம்ஸா
"சாஸ்திரத்தை யெடுத்துக்கொண்டார். அவர்களுக்குள், பத்து
"நாள் சாஸ்திரவிவாதமானது அதிகமாயுண்டாயிற்று. இராமா
"நுஜபிரியரான யாதொரு யக்ஞபுருஷருண்டோ அவர் சங்கர

---

स्स वैज्ञेयो वसुष्वंशे नदीन्यती। वसुदेवस्स वै ब्रह्मा तस्य सारोहि यस्स्मृतः ॥९८॥ वासुदेवो हरिस्साक्षा च्छिवपूज्य स्सनातनः। शङ्करोलज्जितस्तत्र भाष्यशास्त्रे समागतः ॥९९॥ पक्षमात्रं शिवैस्सूत्रै र्वर्णयामास वै शिवम्। रामानुजेन तत्रैव भाष्ये संदर्शितोहरिः ॥१००॥ गोविन्दोनामविख्यातो वैय्याकरणदेवता। गांपरां विन्दतेयस्मिन् गोविन्दोनाम वैहरिः ॥१०१॥ गिरीशस्तु न गोविन्दो गिरिणामीश्वरोहि सः। गोपालस्तु न वै रुद्रो गवारूढः प्रकीर्तितः ॥१०२॥ ज्ञेयः पशुपतिश्शंभु र्गोपतिर्नैव विश्रुतः। लज्जितश्शङ्कराचार्यो मीमांसा शास्त्रमागतः ॥१०३॥ तयोर्दशदिनं शास्त्रे विवादस्सु महानभूत्। यस्तुवैयज्ञ पुरुषो रामानुजमतप्रियः ॥

"ராலேயே நிராகரிக்கப்பட்டவராய் மிருகம்போற் றோல்வியைய
"டையப்பட்டார். ஆசாரத்தினுலுண்டாகிற தருமமானது யக்
"ஞதேவராலுண்டாக்கப்பட்டது. தக்ஷப்பிரஜாபதியினுடைய
"யக்ஞத்திலப்போது ஆசாரத்திலிருந்து நழுவினவராகவானுர்.
"இவ்விதமாய்ச்சொல்லக்கேட்ட இராமாநுஜர் சாந்தமான புத்தி
"யுடையவராய் வார்த்தைசொன்னுர். (அதாவது) உலக இரக்ஷ
"ணக்குக்காரணமான கருமத்தின் பொருட்டு யக்ஞமானது
"ண்டாயிற்று. கருமமானது பிர்ம்மத்திலிருந்துண்டாயிற்று. பிர்
"ம்மமான தக்ஷரத்திலிருந்துண்டாயிற்றென்றறி. இந்தச் சிவனு
"னவர் அக்ஷரனுயிருக்கிறுர். ஸாக்ஷாத் சப்தப்பிர்ம்மத்தில் நிலே
"யாயிருக்கிறவர், புராணபுருஷராகிய ஞாநசுவரூபியானவர். பூமி
"யிலக்ஷரத்தைச்செய்தவராக வறியத்தக்கது. இப்படிப்பட்ட
"எப்போதுமுள்ள பரமாத்துமாவானவர் அக்ஷரத்தைக்காட்
"டிலுஞ்சிரேஷ்டர். அக்ஷரத்தினலே திருப்தியுடையவனுகிற
"தில்லே. யக்ஞகருமத்திற் திருப்தியுடையவனுகவாகிறுன்.
"(அவர்) வேதத்திலேயுமுலகத்திலேயும் யக்ஞபுருஷனென்கிற
"பெயரினுற் பிரஸித்தராயிருக்கிறுர். அப்போதுப் பிரபௌத்
"திரனுடைய விருத்தியைப் பார்த்து சிவனுனவர் பொறுமையி
"னுற் பரபரப்புடையவராய் மிருகமாகவானுர். இந்த உருத்திர
"ரானவர் திவ்விய பாணங்களினுலடிக்கப்பட்டார். ஸமர்த்தனு
"கிய யக்ஞபுருஷன் சிவனே குருரூபமாகவறிந்தார், (அந்த குரு
"வானவர்) ஓடிப்போனவராய்க்கொண்டுஅதனுற்பெரிதான அத
"ருமமானது செய்யப்பட்டது. (இப்படிச்சொன்ன இராமாநு

१०४ ॥ विच्छिन्न श्शाङ्करेणैव मृगभूतः पराजितः । आचार प्रभवो धर्मो यज्ञदेवेन निर्मितः ॥ १०५ ॥ भ्रष्टाचार स्तदाजातो यज्ञे दक्षप्रजापतेः । इति रामानुजश्श्रुत्वा वचनं प्राहनम्रधीः ॥ १०६ ॥ कर्मणे जनितोयज्ञो विश्वपालन हेतवे । कर्मब्रह्मोद्भवं विद्धिब्रह्माक्षर समुद्भवम् ॥ १०७ ॥ अ-क्षरोऽयं शिवस्साक्षाच्छब्दब्रह्मणि संस्थितः । पुराणपुरुषो यज्ञो ज्ञेयोऽक्षर करोभुवि ॥ १०८ ॥ अक्षरात् सतु वै श्रेष्ठः परमात्मा सनातनः । अक्षरेण न वैतृप्ता तृप्तोभूद्यज्ञकर्मणि ॥ १०९ ॥ नाम्नास यज्ञपुरुषो वेदे लोकेहि विश्रुतः । प्रपौत्रस्य तदावृद्धिं दृष्ट्वा स्पर्धातुरश्शिवः ॥ ११० ॥ मृगभूतश्च रुद्रोऽसौ दिव्यबाणैर तर्पयत् । समर्थो यज्ञपुरुषो ज्ञात्वा गुरुमयं शिवम् ॥

“ஜர் வாக்கியத்தைக்கேட்டு) சங்கராசாரியர் இலஜ்ஜையடை
“ந்து நியாயசாஸ்திரத்தை எடுத்துக்கொண்டார். உண்டாகிற
“தென்பதினாற் பவனென்றும், ஸந்தோஷமுள்ளவராகையால்
“மிருடனென்றுமறியத்தக்கது. எந்ததேவனானவன் உலகங்
“களைத்தாங்கிக் கொண்டிருக்கிறாரோ கர்த்தாவாகிய அவர்
“தான் பர்க்கனென்றுசொல்லப்படுகிறார். பாபங்களை நசிக்கச்செ
“ய்கிறதனாலே ஹரனென்று சொல்லப்படுகிறார். அந்த உருத்
“திரரானவர் பாபங்களைப் போக்கடிக்கிறவர். சிவனானவர் ஸக
“லத்திற்குந் தானே கர்த்தா. அவர், தானே ஸகலத்தையுந்தரி
“க்கிறவர். ஸகலத்தையுந் தானே அழிக்கிறவர். சிவனிடத்தி
“லிருந்து விஷ்ணுவானவர் பூமியிலுண்டாகிறார். விஷ்ணுவினி
“டத்திலிருந்து பிரும்மாவானவர்தாமரைபுஷ்பத்திலுண்டானார்.
“இப்படிச்சொன்ன வார்த்தையைக்கேட்டு அப்போது இராமா
“நுஜர் சொல்லுகிறார். இந்த சம்புவானவர் எவருடைய மஹிமை
“யை முக்கியமாயுடையவரோ அதனாலிந்த பகவானாகிற சம்பு
“புண்ணியவானாயிருக்கிறார். சிவனானவர் செய்கிறவராயுஞ் செ
“ய்விக்கிறவராயுமிருக்கிறாரென்று எனக்குத்தெரியவில்லை. ஸத்
“தியம் ஸத்தியம். சம்புவானவர் சிரேஷ்டமான இராமநாமத்தை
“யும் ஹரியையும் எப்போதும்வன் ஜபித்துக்கொண்டிருக்கிறார்?
“முடிவற்ற ஸகல சிருஷ்டிகள் யாருடைய தேஜஸினாலுண்டாயி
“னவோ அதனாலவன் முடிவற்றவன். சேஷனாயிருக்கிறதனாலே
“சேஷன் அப்படிப்பட்டவனை யோகிகள் இரமிக்கிறார்கள். அப்
“படிப்பட்டவர் என்னுடையப் பிரபுவுக்கு இருப்பிடமாயும் ஸச்

---

१११॥ पलायनपरोभूतोऽधर्मस्तेन महान् कृतम् । लज्जितश्शङ्कराचार्यो न्यायशास्त्रे समागतः ॥ ११२ ॥ भवतीति भवोज्ञेयो मृडतीति स वैमृडः । लोकान् भरतियोदेवस्स कर्ता भर्ग एवहि ॥ ११३ ॥ हरतीति हरोज्ञेयस्स रुद्रः पापरावणः । स्वयं कर्ता स्वयं भर्ता स्वयं हर्ता शिवस्स्वयम् ॥ ११४॥ शिवाद्विष्णुर्महीं जातो विष्णोःब्रह्माच पद्मभूः । इति श्रुत्वातु वचनं प्राह रामानुजस्तदा ॥ ११५ ॥ धन्योऽयं भगवान् शंभुर्यस्यायं महिमापरः । सत्यं सत्यं ममाज्ञेयं कर्ताकारयिता शिवः ॥११६ ॥ रामनाम परं नित्यं कथं शंभुर्जपेद्धरिम् । अनन्तास्त्रष्टयस्सर्वा उद्भूतायस्य तेजसा ॥ ११७॥ अनन्तः शेषतः शेषोरमन्ते योगिनोहितम् । सच्चैवमत्प्रभोर्धाम सच्चिदानन्द

"சிதாநந்தசுவரூபியாயுமிருக்கிறார். இப்படிச் சொல்லக்கேட்ட
"சங்கரர் அப்போது இலஜ்ஜையடைந்தவராகவானார். யோகசா
"ஸ்திரத்திலே பரமான தேவன் கிருஷ்ணனென்று அந்த இரா
"மாநுஜராலே காண்பிக்கப்பட்டது. கிருஷ்ணபகவானானவர்
"காலசுவரூபீ, யோகங்களுக்கீசன், யோகப்பிரியன், ஸாங்கிய
"சாஸ்திரத்திலேயும் கபிலர்தான் சொல்லப்படுகிறாரென்று அவ
"ராலவருக்குக்காண்பிக்கப்பட்டது. எந்தவீரியத்தையார்பாநஞ்
"செய்கிறாரோ, யார் கபியோ அந்தக் கபியைச் சலிக்கச் செய்
"கிறாரோ, அவர் கபிலரென்றறியத்தக்கது. அந்தக் கபி,
"உருத்திரரென்று சொல்லப்படுகிறார். கபிலரானவர் பகவா
"னான விஷ்ணு ஸர்வக்ஞர். ஸகலசுவரூபியாயிருக்கிறவர். அப்
"போது சங்கராசாரியரானவர் இலஜ்ஜையை யடைந்து தலை
"யைக்குனிந்துகொண்டார். பரிசுத்தமான வஸ்திரத்தைத் தரித்
"துக்கொண்டவராய் நிர்மலமான கோவிந்த நாமத்தை ஹிருத
"யத்தில் ஜபித்து சுத்தமான மனதையுடையவராய் இராமாநுஜ
"ருக்கு சிஷ்யரானார். இவ்விதமாய் உருத்திரமாஹாத்துமியமா
"னது உனக்கு பிரஸங்கத்தினால் வர்ணிக்கப்பட்டது. எவனி
"தைக்கேட்கிறானோ அவன் பொருளுடையவனும் புத்திரனு
"டையவனும் வாசாலகனுமாகிறான்."

இந்த பவிஷியபுராணமானது, கலியுகத்திலுண்டாகப்போ
கிற ஸ்ரீமத் சங்கராசாரியர், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியர், ஸ்ரீமத்
மத்துவாசாரியர் பின்னும் ஆநந்தகிரியாசாரியர், ஸ்ரீதராசாரியர்,
பட்டோஜி தீக்ஷிதர், வராஹமிஹிராசாரியர் முதலிய மஹான்க

---

विग्रहः ॥ ११८ ॥ इति श्रुत्वा तदावाक्यं लज्जितश्शङ्करोऽभवत् । योगशास्त्रे परोदेवः कृष्णस्तेनैव दर्शितः ॥ ११९ ॥ कालात्मा भगवान् कृष्णो योगेशो योगतत्परः । सांख्यशास्त्रेच कपिलस्तस्मै तेनैव दर्शितः ॥१२०॥ कं वीर्यं पीयते योवै स कपिस्तं चलातियः । कपिलः सतुविज्ञेयः कपी रुद्रः प्रकीर्तितः ॥ १२१ ॥ कपिलो भगवान् विष्णु स्सर्वज्ञ स्सर्वरूपवान् । तदातु शङ्कराचार्यो लज्जितो नम्रकं धरः ॥ १२२ ॥ शुक्लांबरधरो भूत्वा गोविन्दोनाम निर्मलम् । जजापहृदिशुद्धात्मा शिष्यो रामानुजस्य वै ॥ १२३ ॥ इति ते रुद्रमाहात्म्यं प्रसङ्गेनापि वर्णितम् । धनवान् पुत्रवान् वाग्मीभवेद्य श्शृणुयादिदम् ॥ १२४ ॥

ளுடையவும், விக்கிரமாதித்தியன், சாலியவாகநன் முதலிய அரசர்களுடையவும் உற்பற்றியைச்சொல்லுகிறது. சங்கராசாரியர், மத்துவாசாரியர் இவர்களுடைய உற்பற்றியைச்சொன்னவிடத்தில் அவர்கள் யாருடனுவது வாதஞ்செய்ததாகச் சொல்லப்படவில்லை. அப்படியிருக்க இராமாநுஜாசாரியருடைய உற்பற்றியைச்சொன்னவிடத்தில் மாத்திரம் அவர் சங்கராசாரியருடன் வாதஞ்செய்ததை எடுத்துச்சொல்ல அவசியமிருக்கவில்லை.

பின்னுஞ் சிவபூஜைசெய்கிற கோவிற் குருக்களும் விஷ்ணுபூஜைசெய்கிற கோவில் நம்பியானும் என் சுவாமி பெரிது, உன் சுவாமி சிறிது என்றுவாதஞ்செய்து கொண்டாற்போல சங்கராசாரியர் சிவபக்ஷமாயும் இராமாநுஜாசாரியர் விஷ்ணுபக்ஷமாயும் வாதஞ்செய்ததாகவுமந்த வாதத்திற் சங்கராசாரியர் அபஜயமடைந்து இராமாநுஜருக்கு சிஷ்யரானதாகவும் ஒருபொய்யான கதை, கற்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படி சிருஷ்டித்தவனுக்கு சங்கராசாரியருடைய சித்தாந்தமின்னதென்று கனவிற் கூடத் தெரியாதென்று தெளிவாயிருக்கிறது. சங்கராசாரியர் சிவபக்ஷத்தைச் சேர்ந்தவருமல்ல, விஷ்ணுபக்ஷத்தைச்சேர்ந்தவருமல்ல. சிவவிஷ்ணுக்களை அபேதமாயும் பிர்ம்மசுவரூபமாயும் அறிந்தவர். அவர் ஒருபக்ஷத்தையாதரித்து மற்றொருபக்ஷத்தைத் துவேஷித்தாரென்று விவேகிகள் யாருஞ் சொல்லமாட்டார்கள். இராமாநுஜாசாரியர் சங்கராசாரியருடைய காலத்திற்கு ௬00-வருஷங்களுக்குப்பிந்தியுண்டானவர். அவரெப்படி சங்கராசாரியரோடு வாதஞ்செய்திருக்கக்கூடும்? இராமாநுஜர் காலத்தில் மற்றொரு சங்கராசாரியர் உண்டாயிருந்தாரென்றிந்த சிருஷ்டணைக்காரன் சொல்லுவான்போலும். அப்படிச்சொன்னுலுங்கூட அதற்காதாரமிவன் சொல்வதேதான். வேறுபிரமாணமில்லை.

மேற்குறித்த சுலோகங்களடங்கிய பதினன்காவதத்தியாயத்தின் முடிவில், ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் சொல்லியிருக்கிறதுபோல, இவ்வத்தியாயத்திலும் உருத்திருருடைய மாஹாத்துமியமும் இராமாநுஜருடைய அவதாரமுஞ்சொல்லியிருக்கிறதாகக் கண்டிருக்கிறது. மேற்குறித்துக்காட்டிய-௬௨-முதல்-௧௨௩-வரையிலுள்ள சுலோகங்களிந்த வத்தியாயத்திற் சேர்ந்ததாகவேயிருக்குமானுல், உருத்திரமாஹாத்துமியத்தைச் சொல்லுவதாகச் சொன்னதற்குப்பதிலாய் உருத்திரதூஷணையையல்லது விஷ்ணுமாஹாத்துமியத்தை இந்த அத்தியாயத்திற்

சொல்லியிருக்கிறதாக முடித்திருக்கவேண்டும். சிருஷ்டனைக்காரன் அந்த பாகத்தைத்திருத்தமறந்துவிட்டதாகக் காண்கிறது. மேலுமிந்த சுலோகங்கள் நல்ல ஸம்ஸ்கிருத வித்துவானுற் கற்பிக்கப்பட்டதாகக் காணவில்லை. அற்பக்ஞானமுள்ளவனுலெழுதிச் சேர்க்கப்பட்டதாக அந்த வாக்கியங்களைக்கொண்டே நிச்சயிக்கக்கூடியதாயிருக்கிறது.

31. இப்படிப்புராணங்களிலே கற்பனைசெய்கிற மூடர்கள் தாங்கள் மஹாபாபத்தைச் செய்தவர்களாகவாகிறதுமல்லாமல், ஒரு புராணத்திற் சிவனைத் தூஷித்தும் மற்றொரு புராணத்திற் விஷ்ணுவைத் தூஷித்தும் மற்றொரு புராணத்திற் சிவவிஷ்ணுக்கள் அபேதமான ஒரே மூர்த்தியென்றுமவிவேகத்தினுலேவேதவியாஸர் சொல்லியிருக்கிறரென்று மூடர்கள் அவர்பெயரிற் பழியைச்சுமற்றுகிறதற்குக் காரணமாயுமாகிருர்கள். இவைகள் வேதவியாஸர் வாக்கியங்களென்று நம்பி ஒருவரையொருவர் தூஷித்துக்கொண்டும் கலகஞ்செய்துகொண்டும் ஜநங்கள்கெடுதியையடைகிருர்கள்.]

32. மேற்சொல்லிய பதினெட்டு மஹாபுராணங்களைத்தவிர உபபுராணங்கள் பதினெட்டென்று முன்னமையே சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அவைகளைப் பற்றிச் சொல்லுகிறேன் கேள்.

கூர்மபுராணம்-அத்-க-ல், * "ஓ! துவிஜர்களே! பதினெ "ட்டு (மஹா) புராணங்களைக்கேட்டு முனிகளால் ஸம்க்ஷேபமா "ய் மற்ற உபபுராணங்கள் செய்யப்பட்டன. (அவையாவன) "ஸநத்குமாரராற் சொல்லப்பட்டது (ஸநத்குமாரீயம்). முதலா "வது. இதற்குப்பிறகுநாரஸிம்மம். (சுப்பிரம்மண்ணியரென்கிற) "ஸ்கந்தரால் சொல்லப்பட்டது ஸ்காந்தம் மூன்ருவது. நந்தி "கேசுவரரால் சொல்லப்பட்ட சிவதருமம் நான்காவது. இதற் "குப்பிறகு ஆச்சரியகரமானதும் தூர்வாஸஸினுற் சொல்லப்

* अन्यान्युपपुराणानि मुनिभिः कथितानि तु । अष्टादशपुराणानि श्रुत्वा संक्षेपतो द्विजाः ॥ आद्यं सनत्कुमारोक्तं नारसिंह मतःपरम् । तृतीयं स्कान्दमुद्दिष्टं कुमारेण तु भाषितम् ॥ चतुर्थं शिवधर्माख्यं साक्षान्नन्दीश भाषितम् । दूर्वाससोक्तमाश्चर्यं नारदीय मतःपरम् ॥ कापिलं वामनञ्चैव

"பட்டதும் (தூர்வாஸஸம் ஐந்தாவது). இதற்குப்பிறகு நாரதீய
"ம், காபிலம், வாமநம்,அப்படியே உசநஸினுற் சொல்லப்பட்ட
"து (ஔசநஸம்). பிரும்மாண்டம், வாருணம், காளிகா, மாஹே
"சுவரம், ஸாம்பம், ஸகலார்த்தங்களையும் வெளியிடுகிற ஸௌரம்
"பராசரரால் சொல்லப்பட்டது (பாராசரீயம்), மாரீசம், அப்படி
"யே பார்க்கவம், (இது பதினெட்டாவது)."

இந்த உபபுராணங்களிற் சேர்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிற ஸ்காந்தம், நாரதீயம், வாமநம், பிரும்மாண்டம் இந்நான்கு பெயர்களும் மஹாபுராணத்திலும் வந்திருக்கின்றன. அப்படியிருந்தாலும் உபபுராணங்களுக்குக் கருத்தாக்கள் வேதவியாஸரைவிட அந்நியர்களாகையால் இவைகள் மஹாபுராணத்திற் சேர்ந்தனவல்ல. ஆனலப்பெயரைவைத்து அழைக்கப்படுகின்றன. சில கிரந்தகருத்தாக்கள் இந்த உபபுராணங்களுக்குள் சிலதை விட்டு அவைகளுக்குப் பதிலாய் வேறுபெயருள்ள சில புராணங்களைச் சேர்த்துப்பதினெட்டாகக்கணக்கிட்டிருக்கிறார்கள். எப்படியெனில், மேற்குறித்த புராணங்களுக்குள் மூன்றாவதாகிய ஸ்காந்தம், எட்டாவதாகிய வாமநம், பதினெட்டாவதாகிய பார்க்கவம், இவைகளைச்சேர்க்காமல் வாயுபுராணம், பத்துமபுராணம், தேவபுராணமென்று மூன்றையுபபுராணங்களாகச்சேர்த்துச்சொல்லுகிறார்கள். மற்றுஞ் சிலர் மாநவம், நந்திகேசுவரம், வாஸிஷ்டமென மூன்றுபுராணங்களைச்சேர்த்துப் பதினெட்டாகக்கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனல், பதினைந்துஉபபுராணங்களின் விஷயத்திற் பேதப்படுகிறதில்லை.

இந்த உபபுராணங்களிலும் மஹாபுராணங்களைப்போலவே தருமார்த்தகாமமோக்ஷங்களாகிற புருஷார்த்தங்களின் சுவரூபத்தைச் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறது.

33. அத்தியாத்துமராமாயணமென்று மற்றொருபுராணமுண்டு. இது வால்மீகிமஹரிஷியினலாவது வேதவியாஸமஹரிஷியினலாவது சொல்லப்பட்டதல்ல. இது பிரும்மாண்டபுராணத்திலடங்கியதென்று சிலர் சொல்லுகிறார்கள். (அச்சிட்டிருக்கிற புஸ்தகங்களிலுமப்படியே கண்டிருக்கிறது). இது பிரும்மாண்டபுராணத்திற் சேர்ந்ததல்ல. பிரும்மாண்டபுராணமா

---

तथैवोशनसेरितम् । ब्रह्माण्डं वारुणञ्चैव कालिकाह्वयमेवच ॥ माहेश्वरं तथा सांबं सौरं सर्वार्थसञ्चयम् । पराशरोक्तं मारीचं तथैव भार्गवाह्वयम् ॥

னது வாயுவினுற் சொல்லப்பட்டது. அத்தியாத்துமராமாயண மோ விசுவாமித்திரமஹரிஷியினுற் சொல்லப்பட்டதாகவிருக்கிற து. ஆனல், இந்த அத்தியாத்துமராமாயணத்திற்குக் கருத்தா வின்னுரென்று பவிஷியபுராணஞ் சொல்லுகிறபடியால், இது பிரும்மாண்டபுராணத்திற் சேர்ந்ததல்லவென்பது நிச்சயம்.

பவிஷியபுராணம்-ஙு-அத்-கககூ-ல், * "தேவனுன சங்கரரா "னவர் இராமாநந்தருக்கெதிரிலிருந்துகொண்டிவ்விதமாய் வரங் "கொடுத்து மறைந்தார். (பிறகு இராமாநந்தர்) கிருஷ்ணசைதந் "நியசுவரூபியாயிருக்கிறவரையடைந்து பனிரண்டுவருஷகாலம் "பயோவிரதத்தையநுஷ்டித்து அவருக்கு சிஷியனுய் கிருஷ்ண "சைதந்நியத்தைப் பூஜித்துக்கொண்டு அவரிடத்திலேயேயிருந் "தார். அந்த கிருஷ்ணசைதந்நியருடைய ஆக்ஞையினுலேயும் "மங்களகரமான அத்தியாத்துமராமாயணமானது அவரால் "(இராமாநந்தரால்) செய்யப்பட்டது."

இந்தவாக்கியங்களினுற் பரமேசுவரருடைய வரம், கிருஷ்ணசைதந்நியருடைய ஆக்ஞை இவைகளினுல் அத்தியாத்துமராமாயணத்தை இராமாநந்தர் செய்ததாகக் காண்கிறது. இது கற்பனையென்று சொல்லக்கூடியதல்ல. ஏனெனில், புராணோக்தமானதினுற்றுன். இந்த இராமாயணத்தில் விஷ்ணு அவதாரமாகிய ஸ்ரீஇராமருடைய சரித்திரமும் அநேக ஆத்துமதத்துவவிஷயங்களும் பார்வதிக்குப் பரமேசுவரராலுபதேசிக்கப்பட்டனவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், வேதம் முதலிய மற்றப் பிரமாணங்களுக்கு விரோதமில்லாதபொழுது இதுவும் பிரமாணமாகக்கொள்ளத்தக்கதே.

34. இவைகளுக்கடுத்தது ஆகமசாஸ்திரங்களே. ஆகமசாஸ்திரங்கள் பலவுண்டு. மஹேசுவரராற் செய்யப்பட்டகாம்மியகம்முதலிய-உஅ-பாகங்களாயிருக்கிற ஆகமங்களை சிவாகமம் அல்லது சைவாகமமென்று சொல்லப்படுகிறது. விஷ்ணுவினுற் செய்யப்பட்ட ஆகமமானது பாஞ்சராத்திரமென்று சொல்லப்படுகிறது. பிரும்மா முதலியவர்களாற்செய்யப்பட்ட பல ஆகமங்களுமுண்டு. இந்த ஆகமங்களைக்குறித்து ஸ்காந்தபுராணத்திற் சொல்லுகிறதாவது:—

---

* इत्युक्त्वान्तर्दधे देवो रामानन्दस्य चाभवत् । कृष्णचैतन्य मागम्य द्वादशाब्द पयोव्रतम् ॥ ३५ ॥ शिष्योभूत्वा स्थितस्तत्र कृष्णचैतन्य पूजकः । कृतं तदाज्ञया तेनाध्यात्मरामायणं शुभम् ॥ ३६ ॥

ஸ்காந்தம் சூதஸம்ஹிதை பிரும்மகீதை அத்-ச-ல், *
"நிக்கிரஹாநுக்கிரஹ சக்தியுள்ள ஓ! ரிஷி சிரேஷ்டர்களே!
"பிரத்தியக்ஷம் முதலியப் பிரமாணங்களுடையவும், வேதாந்தங்
"களுடையவும், ஸ்மிருதிகளுடையவும், புராணங்களுடையவும்,
"பாரதத்தினுடையவும், வேதத்தையநுஸரித்ததான வித்தைக
"களுடையவும், மற்றவைகளுடையவும், ஸகலமான சைவாகமங்
"களுடையவும், விஷ்ணுவினாற் செய்யப்பட்ட ஆகமங்களுடைய
"வும், சூக்ஷ்மநிரூபணவிஷயத்தில் (பிரும்மாவாகிய) என்னாற்
"செய்யப்பட்ட ஆகமத்தினுடையவும், ஸகலவிஷயமான புத்தா
"கமங்களுடையவும், அர்ஹாகமத் (அக்நிஸம்பந்தமான) தினு
"டையவும், யக்ஷகந்தர்வசித்தர்களாற் செய்யப்பட்ட ஆகமத்தி
"னுடையவும், ஞானமானது எந்த மனிதனுக்கிருக்கிறதோ அவ
"னுக்குத்தான் பரமாத்துவைதக்ஞானம் சித்திக்கும்."

இவ்விதமாய் ஆகமசாஸ்திரங்கள் பலவுள. இவ்வாகமசாஸ்திரங்களிற் பெரும்பாலும் விக்கிரஹாராதனைக்கு யோக்கியமான விஷயங்களே சொல்லுகின்றன. விக்கிரஹங்களைப் பிரதிஷ்டைசெய்வதற்கு யோக்கியமான ஆலயங்களை நிர்மாணஞ்செய்வது, அவ்வாலயங்களிற் பிரதிஷ்டை செய்யவேண்டிய சிவ, விஷ்ணு முதலிய மூர்த்திகளாகிற விக்கிரஹங்களுடைய இலக்ஷணம், அந்த விக்கிரஹங்களை அவ்வவ்வாலயங்களிற் பிரதிஷ்டை செய்யவேண்டியக்கிரமம், ஆலயங்களிற் பூஜை நைவேத்தியம் அலங்காரம் முதலிய ஆராதநா விஷயம், பூஜை செய்கிறவர்களுடைய ஆசாரம் ஒழுக்கம் முதலிய நியமங்கள், இவைகளையடுத்த பின்னும் பலவிஷயங்களைச் சொல்லுகின்றன. உலகத்தில் ஜநங்களுக்கு ஈசுவரபக்தியுண்டாவதற்கு ஆலயங்கள் முதற்காரணமாயிருக்கின்றனவாகையால், அவைகளைச் சிறப்பிக்க ஆகமசாஸ்திரங்களுண்டாயின.

---

* प्रत्यक्षादि प्रमाणानां वेदान्तानाम पीश्वराः । स्मृतीनाञ्च पुराणानां भारतस्य तथैवच । वेदानुसारि विद्यानाम न्यासामास्तिकोत्तमाः ॥६८॥ शैवागमानां सर्वेषां विष्णुप्रोक्तागमस्य च । अस्मदुक्तागमस्यापि सुरास्सूक्ष्म निरूपणे ॥ ६९ ॥ बुद्धागमानां सर्वेषां तथैवार्हागमस्यच । यक्षगन्धर्वसिद्धादि निर्मितस्यागमस्यच ॥ ७० ॥ परमाद्वैत विज्ञानं कस्य मर्त्यस्य सिद्ध्यति ॥ ७१ ॥

35. சிலர் இவ்வாகமங்களை வேதமென்றே சொல்லுகிறார்கள். அதாவது, வேதத்தின் ஒரு பாகமாக நினைக்கிறார்கள். அதுஸரியல்ல. எல்லா சாஸ்திரங்களாலும் ஆகமங்கள் வேதத்திற் கந்நியமானதாகவே சொல்லப்படுகின்றன. மேற்குறித்த பிரும்மகீதை வாக்கியத்திலேயே வேதசாஸ்திரபுராணங்களுக்கு வேறானதாக ஆகமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்திக்குறித்துக்காட்டப்பட்டிருக்கிற ஸ்காந்தம், சூதஸம்ஹிதை முதலாவதத்தியாயம்-கஉ-வது சுலோகத்தில் ஆகமபேதங்கள் சம்புவினாற்செய்யப்பட்டதாகச்சொல்லியிருக்கிறது. இலிங்கபுராணம், பூர்வபாகம்-அத்-அ௫-ல், பஞ்சாக்ஷரமாஹாத்துமியத்தை பகவான் சொல்லும்போது ௬௫-வது சுலோகத்தில், वेदे शिवागमे वापि வேதத்திலேயும் சிவாகமத்திலேயுமென்று வேதத்தையுஞ் சிவாகமத்தையும் வெவ்வேறாகச் சொல்லியிருக்கிறார். இவைகளினாலே வேதமும் சிவாகமமும் ஒன்றல்லவென்றேறற்படுகிறது. மேலும் ஆகமமென்கிற ஸம்ஸ்கிருதபதத்திற்கு வேதமென்றர்த்தமல்ல. தந்திரமென்றர்த்தம்.

36. இவைகளுக்கடுத்ததாகச்சொல்லக்கூடியது முற்காலத்திய வித்வத்சிரோமணிகளாலும், ஞானிகளாலும் சுருதிஸ்மிருதி இதிஹாஸபுராணங்களுக்கு விரோதமன்றி அவைகளுடைய ஸாரங்களைக்கிரஹித்து சுலோகரூபங்களாயும் வசநரூபங்களாயுஞ்செய்யப்பட்டிருக்கிற க்கிரந்தங்கள். அத்துவைதசித்தாந்தத்தைப்பின்பற்றியவர்கள் அந்தசித்தாந்தத்தை யாதரிக்கிறதாகவுமப்படியே விசிஷ்டாத்துவைதம் சைவம் துவைதம் முதலியசித்தாந்தத்தைப் பின்பற்றுகிறவர்கள் அந்தந்த சித்தாந்தத்தையாதரிக்கிறதாகவும் சுருதி யுக்தி அநுபவங்களுக் கொத்ததாகவும் அந்தந்த சித்தாந்தங்களின் ஞானத்தை யுண்டாக்கத்தக்கதாகவுமிருக்கின்றன. அவைகளை ஆப்தவாக்கியங்களாக (வாஸ்தவத்தை போதிக்கிற நண்பர்களுடைய வாக்கியங்களாக) அங்கீகரிக்கத்தக்கது.

ஓ! ஜயவிரதா! வேதம் முதலியப் பிரமாணங்களுடைய சுவரூபத்தை யுனக்குச்சொன்னேன். பின்னுமெதைக் கேட்கவிரும்புகிறயோ அதைக் கேட்கலாம்.

ஐந்தாவது பிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## ஆறாவது பிரகரணம்.

ஜயவிரதன்:—ஓ! பகவானே! ஆகமசாஸ்திரங்கள், விக்கிரஹாராதனை விஷயமாய்ச் சொல்லுகின்றன வென்று சொன்னீர்கள். விக்கிரஹாராதநமானது, மூடர்களுக்குக் கூடயோக்கியமானதல்ல, ஸர்வ வியாபியாயும் ஞாநமே சுவரூபமாயுடையவராயும் ஸர்வக்ஞராயுமிருக்கிற பரமாத்துமாவைக் கல்லாகவும் கட்டையாகவும் பின்னும் பலவஸ்துக்களாகவும் கற்பனை செய்து உபாஸிக்கிறதனால் மஹத்தான பாபமுண்டாகும். விக்கிரஹாராதனைசெய்வதனால், புத்திகெட்டுப் போகுமேயன்றி நன் மார்க்கத்திற் பிரவேசிக்கமாட்டாதென்பது முதலிய விஷயமாய்ச் சிலகாலத்திற்கு முந்தி இராஜஸபையில் ஒருவருபந்நியாஸஞ் செய்தார். அந்த உபந்நியாஸத்தைக் கேட்டது முதல், அரசனுக்கும் எனக்கும் மற்றவர்களுக்கும் விக்கிரஹாராதநாவிஷயத்தில் அருவருப்புண்டாயிருக்கிறது. ஆகையால், விக்கிரஹாராதனையிற் பிரயோஜநமுண்டா? அதனாலேதேனும் தோஷங்களுண்டாகுமா?

2. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! உபந்நியாஸஞ் செய்தவர் தன்னுடைய அபிப்பிராயத்தையாதரிக்கிற பிரமாணங்களேதேனுங் குறிப்பிட்டாரா? அல்லது யுக்தியினால் நிந்தித்தாரா?

3. ஜயவிரதன்—ஓ! சுவாமீ! உபந்நியாஸஞ் செய்தகாலத்தில் அவர் சாஸ்திர வாக்கியங்களென்று ஸம்ஸ்கிருதத்திலிருந்து அநேகவாக்கியங்களை எடுத்துரைத்தார். ஆனாலந்தவாக்கியங்களாவது அவைகளின்னகிரந்தத்திலிருந்தெடுக்கப்பட்டவைகளென்றாவது எனக்கு ஞாபகமிருக்கவில்லை. ஆனாலவர் சொன்னவிஷயங்களைமட்டும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். அவைகளை சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். அவை யாவன:—

4. விக்கிரஹாராதநஞ்செய்வதனுல் நற்கெதியடையமார்க்கமில்லை. நற்கெதியுண்டாகாமற் போவது மாத்திரமல்ல. அநேகவழியாய்ப் பாபமுண்டாக ஹேதுவாயிருக்கிறது.

ஸகலத்திற்கும் பிரமாணமாயிருக்கிற வேதத்திலாவது முந்திய பத்துபநிஷத்துக்களிலாவது விக்கிரஹாராதனை விஷயமாய்ச்சொல்லப்படாமையினுல் விக்கிரஹாராதனை வேதோக்தமானதல்ல. ஆனுற் கற்பிக்கப்பட்டிருக்கிற பிந்திய தொண்ணூற்றெட்டுபநிஷத்துக்களுக்குள் சில உபநிஷத்துக்களிலும் இதிஹாஸபுராணங்களிலும் ஆகமங்களிலும் விக்கிரஹாராதனையைப்பற்றிச்சொல்லப்பட்டிருந்தாலும் அவைகள் கற்பனையாகையாற் பிரமாணமாக வங்கீகரிக்கத்தக்கவையல்ல. பிந்திய தொண்ணூற்றெட்டுபநிஷத்துக்கள் கற்பனையாகையால், முந்திய பத்துபநிஷத்துக்களுக்குப்போல் இவைகளுக்கு பாஷியகாரர்கள் பாஷியஞ் செய்யவில்லை. இதிஹாஸபுராணங்களிலோ விக்கிரஹாராதனைக்காதாரமான அநேகசுலோகங்களை யெழுதிச்சேர்த்திருக்கிறுர்கள். ஆகையாலவைகளை நம்பக்கூடாது. விக்கிரஹாராதனையை சிலவுபநிஷத்துக்களும் இதிஹாஸபுராணங்களுமே தூஷித்திருக்கையிலவைகளிலேயே விக்கிரஹாராதனையைச் சொல்லுமானுல் அது கற்பனையென்பதிற் சந்தேகமில்லை. மேலும் வேதத்திற்கு விரோதமாயுள்ளப் பிரமாணங்கள் அங்கீகரிக்கத்தக்கவையல்லவென்று சாஸ்திரங்களே சொல்லுகின்றன.

வியாசபராசராதி மஹாரிஷிகளெந்த ஆலயங்களிலாவது சென்றுபாஸனைசெய்ததாக யாதொரு ஆதாரமுமில்லை. என்பவைகளே.

5. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! விக்கிரஹாராதனையினுற் பிரயோஜநமில்லையென்றுமப்படிச்செய்தாற்பாபமுண்டாகுமென்றும் ஒருக்காலத்திலும் நீ நம்பாதே. அப்படிச்சொல்லுகிறவனுடையவார்த்தை சாஸ்திரங்களையொற்றதல்ல. உலகத்திலொவ்வொருமனிதனும் பரமாத்துமாவை நேராயறிந்துபாஸனைசெய்ய சக்தியுடையவனல்ல. ஈசுவரோபாஸனையன்றி நற்கெதியடைய வேறுமார்க்கமில்லை. பரமாத்துமாவாகிற ஈசுவரசுவரூபமோ கண்முதலிய இந்திரியங்களுக்குப் புலப்படுவதல்ல. அந்த ஈசுவரசுவரூபத்தை ஞானயோகத்தாற் சிலமஹாத்துமாக்களறிகிறுர்கள். பின்னுஞ்சிலர் ஈசுவரசுவரூபத்தையறிவதற்காக குருஉபதேசித்த

விதமாய் மனதினுற் தியாநஞ்செய்கிருர்கள். வேதாந்தஞாந முள்ள பின்னுஞ்சிலர் ஈசுவர இலக்ஷணத்தை சாஸ்திரங்கள் சொல்லுகிறவிதமாய்த்தெரிந்து பக்திசெய்கிருர்கள். இவ்விதமாயுபாஸிக்கிற ஜநங்கள் இலக்ஷத்திலொருவராகத் தானிருப்பார்கள். மற்ற ஸகலஜநங்களும் "ஈசுவரரொருவரிருக்கிருர், அவரையுபாஸித்து நற்கெதியடையவேண்டும்" என்றறியஹேதுவேயில்லை. ஒருக்காலறிந்தாலுமீசுவரோபாஸநைசெய்யுங் கிரமமிப்படிப்பட்டதென்றறியவும் ஹேதுவில்லை. அப்படிப்பட்ட ஜநங்களையுத்தேசித்தே ஆலயங்களும் விக்கிரஹங்களும் விக்கிரஹாராதநையுஞ்செய்ய, சாஸ்திரங்கள் விதிக்கின்றன, விக்கிரஹாராதநை ஏற்படாமலிருக்குமானுல், கோடிக்கணக்கான அநேகஜநங்கள் ஈசுவரனெருவனுண்டென்றுங் கூடவறியவகையில்லை அப்படியில்லாதபோது ஜநங்கள் நாஸ்திகர்களாகவேயிருப்பார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஆலயங்களேற்படுத்தி அவ்விடத்திலுள்ள ஜநங்கள் அவ்வாலயங்களிலிருக்கிற விக்கிரஹமே தெய்வமென்று நம்பிசிலகாலமுபாஸிப்பார்களானுல், அவர்களுக்கறிவுவிருத்தியாகும்பொழுது இவ்விக்கிரஹத்தில் எந்தபகவான் ஆவாஹநஞ்செய்யப்பட்டிருக்கிருரோ அந்தபகவான் தங்களுக்கு நற்கதியை யடைவிப்பாரென்று நம்பி உபாஸித்துவருவார்கள். அவ்விதமாகவே உபாஸித்துவருகிறவர்கள் கிரமக்கிரமமாய் மேலான அறிவையடைந்து நற்கதியையடைய இந்த விக்கிரஹாராதநை ஸாதநமாகவிருக்கிறது.

6. ஈசுவரனுக்குக்குறிப்பான யாதொருரூபமுமில்லை. ஆனுல் ஸகலவஸ்துக்களிலும் ஈசுவரன் உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கிருர். ஈசுவரனில்லாதவஸ்துக்களற்பமேனு மிப்பிரபஞ்சத்திலில்லை. ஆகையால், எவ்விடத்திலும் எந்தவஸ்துவிலும் அந்தப்பரமாத்துமாவே இருக்கிருரென்று சாஸ்திரங்கள் சொல்லுகிறபடியால் மஹாபரிசுத்தமான கல்லிலும் கட்டைமுதலியவைகளிலும் பரமாத்துமாவிருக்கிறதாக வுபாஸிப்பது நற்கதிக்கு ஸாதநமேயன்றி தோஷமுண்டாகமாட்டாது.

7. மனிதர்களீசுவரோபாஸநை செய்ய மூன்றுவித ஸாதநமுண்டு. அவையாவன—மனது, வாக்கு, காயமாகிய சாதநங்களே. இந்தஸாதநங்களையன்றி உபாஸநையென்பதே யில்லை.

மனதினுற் செய்யுமுபாஸநை எப்படிப்பட்டதெனில்—குருவினுலுபதேசிக்கப்பட்ட பரமாத்துமசுவரூபமெதுவோ அப்படி

ப்பட்ட மஹாதேவன், நாராயணன், சுப்பிரம்மண்ணியன், வாசுதேவன், இராமன், கிருஷ்ணன் முதலிய ரூபங்களிலொன்றை மனதினூற் தியாநிக்கிறதுதான். இந்தத்தியாநத்தினூல் மனது ஒரேநிலையையடைந்து பிறகு ஞாநமுண்டாய் அந்த ஞாநத்தினூல் மோக்ஷமடைகிறுன். மனதினூற்செய்யுமுபாஸனை ஸகலவித உபாஸனைகளினுஞ்சிரேஷ்டமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

வாக்குனூற் செய்யப்படும் ஈசுவரோபாஸனை எப்படிப்பட்டதெனில், வேதாத்தியயநம், வேதாந்தவிசாரம், மந்திரஜபம், ஈசுவரஸ்தோத்திரம், ஈசுவரநாமோச்சாரணம், ஈசுவரகுணங்களைக்குறித்து ஒருவரோடொருவர் செய்யும் ஸம்பாஷணைமுதலியன. வாக்குனூற்செய்யப்படுமிப்படிப்பட்ட உபாஸனையானது மனதினூற்செய்யப்படுமுபாஸனையைக்காட்டிலும் பலமடங்கு தாழ்ந்ததானூலும் காயத்தினூற் செய்யப்படுமுபாஸனையைக்காட்டிலும் பலமடங்கு சிரேஷ்டமானது. மனது,வாக்கு இவைகளினூற் செய்யுமுபாஸநா விஷயத்தைக்குறித்து உபநிஷத்திற் சொல்லுகிறதாவது:—

தரிசிகோபநிஷத்-அத்-உ-ல், * "ஜபமானது, மாநஸம் வாசகமென இரண்டுவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. வாசகமானது, உபாம்சு, உச்சை என இரண்டுவிதம். அப்படியே "மாநஸஜபமானது, மநநம், தியாநமென இரண்டுவித பேதமுடையதாயிருக்கிறது. உச்சையென்கிற ஜபத்தைவிட உபாம்சுவென்கிறஜபமானது ஆயிரம்மடங்கு அதிககுணமுள்ளது. உபாம்சுவைக்காட்டிலுஞ் சிரேஷ்டமான மநநமென்கிற ஜபமானது "ஆயிரமடங்கதிககுணமுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறது. "இப்படிப்பட்ட வெல்லாஜபங்களுக்கும் அததற்குச்சொல்லப்பட்டிருக்கிற பலனுண்டாகத்தக்கதாயிருக்கிறது. நீசர்களுடைய காதிற்கேட்கும்படி யுச்சரிக்கப்படும் மந்திரமானது நீசனுடைய காதிற்படுமேயானூற் பலனற்றதாகவாகிறது."

---

* जपस्तु द्विविधः प्रोक्तो वाचकोमानसस्तथा । वाचकोपांशु रुच्चैश्च द्विविधः परिकीर्तितः । मानसो मननध्यानभेदात् द्वैविध्यमाश्रितः । उच्चैर्जपादुपांशुश्च सहस्रगुणउच्यते ॥ उच्चैर्जपश्च सर्वेषां यथोक्तफलदो भवेत् । नीचैः श्रोत्रेण चेन्मन्त्र श्श्रुतश्चे न्निष्फलं भवेत् ॥

இந்த உபாம்சுஜபவிஷயம் மநுஸ்மிருதி-உ-அ௫-லும் காணலாம். உபாம்சுவென்றால், உதடு, நாக்கு இவைகள்சேர்ந்து மிருதுவாயசையும்படியானதாய் பிறருக்குக் கேட்காமல் மெதுவாயுச்சரிக்கிறதுதான். உச்சையென்றால், கெட்டியாய் பிறருக்குக்கேட்கும்படி யுச்சரிக்கிறதுதான்.

8. காயத்தினாற் செய்யப்படுமுபாஸனை யெப்படிப்பட்டதெனில், கிருச்சிர, சாந்திராயணம்முதலியவிரதங்களாகிற தபஸ், யாகம் முதலியவைகள், அக்நிஹோத்திரம், ஔபாஸநம் முதலிய கருமங்கள், கங்கை முதலியதீர்த்தஸ்நாநம், அவிமுக்தம்முதலிய க்ஷேத்திரங்களுக்குச்சென்று அவ்விடங்களிலுள்ள சிவ விஷ்ணுமுதலிய ஈசுவரவிக்கிரஹங்களை தரிசிக்கிறது, விக்கிரஹங்களுக் கபிஷேகம், சந்தனபுஷ்பம், வஸ்திரம் முதலியவைகளினாலலங்காரஞ்செய்வது, தூபதீப நைவேத்தியம்முதலியவைகளினாலுபசாரஞ்செய்வது, பின்னும் ஆலயம் முதலியதேவதாஸ்தாநங்களை பரிசுத்தஞ்செய்வது, பொருளை தாநஞ்செய்வது முதலியவைகளே. தேகத்தினாற்செய்யப்படுமிந்த வுபாஸனையானது, மனதினாற்செய்யப்படுமுபாஸனை, வாக்குனாற்செய்யப்படுமுபாஸனை இவைகளைவிட தாழ்ந்ததானாலும், ஆஹாரம், நித்திரை, மைதுநம் முதலிய விஷயசுகங்களையே பரமப்பிரயோஜநமாகவெண்ணி மேலானசுகத்திற்குக்காரணமான ஈசுவரோபாஸனையைச் செய்யும்விஷயத்திற் புத்தியைச்செலுத்தாமற் பசுக்கள்போற் திரிந்துகொண்டிருக்கிற மூடர்களைப்பார்க்கிலும் தேகத்தினால் விக்கிரஹாராதனை முதலியவை மூலமாயுபாஸனைசெய்கிறவர்களை அநேகமடங்கு சிரேஷ்டர்களாகவறி. ஆகையால், விக்கிரஹாராதனையானது நற்கதியடைவிக்கிறதற்கு முந்திய ஸாதநமென்பதிற் சந்தேகமில்லை.

9. விக்கிரஹாராதனைக்கு வேதத்திற்பிரமாணமில்லையென்று சொல்லுகிறவன் வேதத்தை அத்தியயநஞ்செய்யவாவது, அதன் அர்த்தவிசாரஞ்செய்யவாவது அல்லது உத்தமவைதிகர்களிடத்தில் விசாரித்தறியவாவது இல்லையென்று நிச்சயமாய்ச்சொல்லலாம். விக்கிரஹங்களை ஆவாஹநஞ்செய்யும் விஷயமாய் வேதத்திற் கணக்கற்ற மந்திரங்களேற்பட்டிருக்கின்றன. அவைகளையன்றி குறிப்பான வாக்கியங்களும் விக்கிரஹாராதநத்தையாத

ரிக்கின்றனவாகவிருக்கின்றன. அவைகளிற் சிலதை இவ்விடத்திற் குறிப்பிடுகிறேன்.

தைத்திரீயஸம்ஹிதை காண்டம்-ரு-பிரசிநம்-எ-அநுவாகம்-உ-பஞ்சாதி-க-ல், * "ஸம்வத்ஸர (கால) சுவரூபியான பரமாத்துமாவாகிய உம்முடையரூபமெதுவோ அப்படிப்பட்டபிரதிமையைச் (விக்கிரஹத்தை) செய்து இருட்டாகிற அக்ஞாநதசையிலுபாஸிக்கிறார்கள். அப்படியுபாஸிக்கிறவன் வல்லமையுள்ள புத்திரனையும் பூர்ணமான ஆயுளையுமடைகிறான். பிரஜைகளுக்கெஜமானத்துவத்தையுமடைகிறான்."

தைத்திரீயம்-காண்வஸம்ஹிதைகாண்டம்-௬-பிரசிநம்-ருு-கண்டம்-ச-ல், † "பிரஸந்நமான முகம், கண்களிவைகளோடுகூடிய விஷ்ணுவினுடைய நேத்தியானரூபமுள்ளப் பிரதிமையெதுவோ அதைப்பூஜிக்கவேண்டியது. வணங்கவேண்டியது. ஆராதிக்கவேண்டியது. தியானிக்கவேண்டியது."

ஷ ஸம்ஹிதை-ரு-சு--எ-ல், ‡ "ஓ! அக்நியே! ஓ! அக்நிசுவரூபமான ஹிரண்ணியகர்ப்பா! ஸகலசுவரூபியே! ஸகலத்திலும் வாஸஞ்செய்கிறவரே! இந்த மூர்த்திகளுடைய உலோகசுவரூபமான எல்லா அங்கங்களிலிருந்தும் வெளிப்படும் வெளிப்படும். எங்களை மூன்றுவித தாபத்திலிருந்தும் விடுவியும் விடுவியும். எங்களுடைய அங்கம், அவயவம், நரம்பு இவைகளிற் குளுமையையுண்டாகச்செய்யும் உண்டாகச்செய்யும்."

யஜுர்வேதம்-மைத்திராயண்ணியஸம்ஹிதைகாண்டம்-ருு-பிரசிநம்-க-ல், § "பாஷாணம் (கல்), உலோகம், இரத்திநம், மண் இவைகளாற் செய்யப்பட்ட விக்கிரஹங்களிற் செய்கிற

---

* संवत्सरस्य प्रतिमां यांत्वा रात्र्युपासते । प्रजांसुवीरां कृत्वा विश्वमायु र्व्यश्नवत् । प्राजापत्यां ॥

† सुरूपां प्रतिमां विष्णोः प्रसन्नवदने क्षणाम् । तामर्चये त्तां प्रणये त्तां यजेत्तां विचिन्तयेत् ॥

‡ अग्ने हिरण्यगर्भदेहपावक सर्वसुख सर्वनिवास । आसां मूर्तीनाँगसर्वांगेभ्य स्सर्वधातुभ्य स्सकाशा न्निर्गच्छ निर्गच्छ । तापं दाहं शमय शमय । शीतलता मङ्गावयवधातुषु कुरु कुरु ॥

§ पाषाणलोहमणिमृण्मयविग्रहेषु पूजापुनर्भोगकरी मुमुक्षोः ॥

"பூஜையானது, பந்தத்திலிருந்து விடுபட விச்சையுள்ளவனுக்கு
"சுகத்தைக்கொடுக்கிறதாகவாகிறது."

ஸாமவேதம் ஷட்விம்சப்பிராம்மணம்பிரபாடகம்-ரு-கண்டம்-கஂ0-ல், * "தேவாலயங்கள் நடுங்குகின்றன. பிரதிமாரூப
"மான தைவங்கள் சிரிக்கின்றன. அழுகின்றன. பாடுகின்றன.
"கூத்தாடுகின்றன. வாய்களைத்திறக்கின்றன. வேர்வையைவிடு
"கின்றன. கண்களைத்திறக்கின்றன, மூடுகின்றன, பிரதிமைகள்
"நடக்கின்றன, நதிகளிற் தலையில்லாதமுண்டங்கள் காணப்படு
"கின்றன. (நதியில் ஜலமிருந்தாலும்) இல்லாததாய்க்காணப்படு
"கிறது"

விக்கிரஹங்களுடைய செய்கை இவ்விதமாய்க் காணப்படுவது உலகத்திற்குக் கேடுண்டாகப்போகிறதென்பதற்கு முன்னறிவிப்பாகவிருக்கிறது.

இருக்ஸம்ஹிதை-அஷ்டகம்-எ-வர்க்கம்-கரு-ல், † "கரையற்
"றதாகிய ஸமுத்திரத்தில் மனிதர்களாற் செய்யப்பட்டதல்லாத
"எந்தக்கட்டை மிதக்கிறதோ அதை சீக்கிரம் கொண்டுவா."

இந்தக்கட்டைதான் ஜகந்நாதக்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு தாரோ ஜகந்நாதமென்று பெயருண்டாயிருக்கிறது.

அதர்வணவேதம்-காண்டம்-க-கற்பம்-உ-துவநி-ரு-ல், ‡
"ஓ! பகவானே! வாரும், இந்தக்கற்பிரதிமையிலிரும், உமக்கு
"சரீரமானது கல்விக்கிரஹமா யிருக்கட்டும்."

கடஸம்ஹிதை-காண்டம்-க-அத்-ரு-அநுவா-சு-ல், § "இந்
"தப் பூமியில் எவ்வளவு கற்கள் செவ்வையாய்ப்பிரதிஷ்டைசெ
"ய்யப்பட்டிருக்கின்றனவோ, தேவனுடைய மாயையினாற் பூமி

---

* देवतायतनानि कंपन्ते दैवताः प्रतिमाहसन्ति रुदन्ति गायन्ति नृत्यन्ति स्फुटन्ति स्विद्यन्त्युन्मीलन्ति निर्मीलन्ति प्रतिमाः प्रयान्ति नद्यः कबन्धमादृश्यन्ते विजलेन च परिदृश्यते ॥

† अदोयद्दारुःप्लवते सिन्धोरपारे अपौरुषं तदारभस्व ॥

‡ एह्यश्मानमातिष्ठ । अश्माभवतु ते तनूः ॥

§ यावन्तोऽश्मानोऽस्यां पृथिव्यां । प्रतिष्ठासु प्रतिष्ठिताः । यावन्तः पाँसवो भूमे स्संरूया तावदेवमायया ॥ 39 ...

"யினுடைய தூளிகள் எவ்வளவு கணக்கிடப்பட்டிருக்கின்றன
"வோ (அவ்வளவும் பரமாத்துமசுவரூபமே.)"

தைத்திரீயஸம்ஹிதை-ரு-உ-ரு-ல், * "புருஷப்பிரமாணமு
"ள்ளதாக (விக்கிரஹத்தை) நிர்மாணஞ்செய்யவேண்டியது."

இப்படிப்பட்ட அநேகவாக்கியங்கள் வேதத்திற் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் விக்கிரஹாராதனையை யாதரிக்கிறவாக்கியங்களல்லவோ? ஆகையால், விக்கிரஹாராதநம் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதென்று தெளிவாயிருக்கிறபடியால் ஸந்தேகிக்க யாதொருகாரணமுமில்லை.

10. உபநிஷத்துக்களைப்பற்றியோவென்றால், உபநிஷத்துக்களெல்லாம் பிரும்மதத்துவத்தைவெளியிடவந்த வேதாந்தங்களாகையால் ஒவ்வொருஉபநிஷத்தும் விக்கிரஹாராதனையைக்குறித்துச் சொல்லியிருக்கவேண்டுமென்று எண்ணக்கூடாது. சிலஉபநிஷத்துக்களில் மட்டும் விக்கிரஹாராதநாவிஷயம் சார்பாய் வந்திருக்கிறது. ஆனால், உபந்நியாஸஞ் செய்தவர் முந்திய பத்துபநிஷத்துக்களைமட்டும் பிரமாணமாகக்கொண்டு மற்றவைகள் கற்பிக்கப்பட்டனவென்று சொன்னதற்கு என்ன ஆதாரமோ தெரியவில்லை. பத்துபநிஷத்துக்கள்தானுள்ளது, வேறு உபநிஷத்துக்களென்பதில்லையென்று சொல்வதற்கு என்ன ஞாயமோ தெரியவில்லை. அவைகள் வேதத்திற்காவது முந்திய பத்துபநிஷத்துக்களுக்காவது விரோதமாயிருக்கின்றன வென்று சொல்வதற்கிடமில்லை. சிலமூடர்கள் தானெடுத்த கக்ஷிக்கு விரோதமாயிருக்கிற வாக்கியங்கள் சாஸ்திரங்களிற் காணப்படும்பொழுது அவைகள் கற்பனையென்று சொல்வது இயற்கையாயிருக்கிறது.

11. வேதம் அநேகசாகைகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிஷத்துண்டென்றும் முன்னமையே சொல்லப்பட்டதல்லவா. இருக்குவேதத்தில்-உக-சாகைகள், யஜுர்வேதத்தில்-க0கூ-சாகைகள், ஸாமவேதத்தில்-க000-சாகைகள், அதர்வணவேதத்தில்-ரு0-சாகைகளிருக்கின்றன. அப்படியேஅவ்வளவுசாகைகளின் கடசிபாகத்திலுபநிஷத்துக்களிருக்கவேண்டுமென்பது நிஸ்ஸந்தேகமா

* पुरुषमात्रेण विमिमीते ॥

ணவிஷயம். இக்காலத்திலவ்வளவு சாகைகளும் உபநிஷத்துக்களும் வெளிப்படையாயிருக்கவில்லை. ஆனுல், சிலசாகைகள், உபநிஷத்துக்கள்மட்டும் காணப்படுகின்றன.

12. முந்திய பத்துபநிஷத்துக்களுக்குப்போல பிந்திய தொண்ணூற்றெட்டுபநிஷத்துக்களுக்கும் மதாசாரியர்கள் பாஷியஞ்செய்யாததனல் பிந்திய உபநிஷத்துக்கள் கற்பனையென்று சொல்வதுமவிவேகமே. இவ்வுலகத்தில் உபநிஷத்துக்களுக்கு முதலில் பாஷியஞ்செய்தவர் ஸ்ரீமத் நீலகண்டாசாரியரென்று ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது. ஆனுல், அவர் எத்திணை உபநிஷத்துக்களுக்கல்லது எந்தெந்த உபநிஷத்துக்களுக்கு பாஷிஞ்செய்தாரென்று தெரிந்துகொள்ள யாதொரு ஆதாரமுங்காணவில்லை. அவருக்குப்பிந்தி அவதாரஞ்செய்த ஸ்ரீமத்சங்கராசாரியர் ஈசாவாஸ்யோபநிஷத்துமுதல் பிருஹதாரண்ணியகோபநிஷத்துவரையிலுள்ள பத்துபநிஷத்துக்களுக்கும், சுவேதாசுவதரம், இராமதாபிநீ, நரஸிம்மதாபிநீ, இந்தஉபநிஷத்துக்களுக்கும் பாஷியஞ்செய்திருக்கிருரென்பதுப் பிரஸித்தமாய் வெளிப்பட்டிருக்கிறது. அவருடையவுபநிஷத்து பாஷியங்களிலே, பாஷியஞ்செய்யப்படாதஉபநிஷத்துவாக்கியங்களிலிருந்துஅநேக வாக்கியங்களை எடுத்துதகரித்திருக்கிருர். அவர் செய்திருக்கிற ஆத்துமபோதம், விவேகசூடாமணி முதலியக் கிரந்தங்களிலுமற்றஉபநிஷத்துவாக்கியங்கள்எடுத்துதகரிக்கப்பட்டிருக்கின்றன. பிந்தியதொண்ணூற்றெட்டுபநிஷத்துக்கள் பாஷியமன்றியிலேயே வித்துவான்களர்த்தஞ்செய்யக் கூடியவைகளாயிருக்கின்றனவாகையால், பாஷியஞ்செய்யஅவசியமில்லையென்று விட்டிருக்கலாம். மேலும் அவ்வளவுபநிஷத்துக்களுக்கும் பாஷியஞ்செய்யும்படியான அவ்வளவுகாலம் அவருக்கிருந்திருக்கவுமில்லை. அவர் சரித்திரத்தினல் அவரிவ்வுலகத்தில்-ஙஉ-வருஷகாலமிருந்ததாகத்தெரியவருகிறது. அவருடைய பால்லியகாலத்தை நீக்கிப்பார்த்தால்-கஅ-வருஷகாலந்தான் பாஷியம் முதலியன செய்யக் கூடியதாயிருந்தது. இந்தச்சுவற்பகாலத்திற்குள்ளாகவே மேற்கண்டஉபநிஷத்துக்கள், பிரும்மசூத்திரம், ஸ்ரீபகவத்கீதை, விஷ்ணுஸஹஸ்ரநாமமிவைகளுக்கு பாஷியமும் பின்னும்பலகிரந்தங்களும் செய்திருக்கிறதுமல்லாமல் ஹிமவத்பருவதம்முதல் கந்நியாகுமாரிவரையில் ஸஞ்சரித்து அநேகதுர்மதங்களை வாத

த்தினாற் கண்டித்துமிருக்கிறார். அவரெல்லா வுபநிஷத்துக்களுக்கும் பாஷியஞ் செய்யத்துடங்கினால் அவராயுட்காலத்திற்குள் முடிந்திராது. இப்படிப்பட்ட காரணங்களைக்கொண்டு அவர் மற்ற உபநிஷத்துக்களுக்கு பாஷியஞ் செய்யவில்லையென்று சொல்லவேண்டுமேயன்றி அவர் பாஷியஞ்செய்யாத காரணத்தைக்கொண்டு கற்பனையென்றுசொல்வதற்குந்நியாயமில்லை.

இவருக்குப் பிறகுண்டான மதாசாரியராகிய ஸ்ரீமத்ராமாநுஜாசாரியர் உபநிஷத்துக்களிலொன்றுக்காவது பாஷியஞ்செய்யவில்லை. ஆனாலவருடையகாலத்திற்கு அநேக நூறுவருஷங்களுக்குப்பிறகு இரங்கராமாநுஜீயரென்பவர் சங்கரபாஷியத்திற்கெதிரிடையாய் விசிஷ்டாத்துவைதமதசித்தாந்தத்தை யநுஸரித்து முந்திய பத்துபநிஷத்துக்களுக்குமட்டும் வியாக்கியாநஞ்செய்திருக்கிறார். இராமாநுஜாசாரியருக்குப் பிந்தியுண்டான மதாசாரியராகிய ஸ்ரீமத் மத்துவாசாரியர் முந்திய பத்துபநிஷத்துக்களுக்குமட்டும் துவைதசித்தாந்தத்தையநுஸரித்து பாஷியஞ்செய்தார். ஆனால், இந்தபாஷியமானது மிகவும் சுருக்கமானது. எப்படியெனில்,ஒரு உபநிஷத்தில் ஒரு அத்தியாயமல்லது கண்டத்திற்கு மொத்தார்த்தமாய் சில வாக்கியங்களைச் சொல்லி அதற்காதாரமாய் புராணங்களிலிருந்து அநேக வாக்கியங்களைக்குறிப்பிடுகிறார். பதங்களின்பேரில் அர்த்தஞ்செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அவர் பாஷியஞ்செய்வதில் அதிகப் பிரயாசையெடுத்துக்கொண்டதாகக் காணவில்லை. முந்திய பத்துபநிஷத்துக்கள் விஷயத்திலேயே இப்படியிருக்க மற்ற உபநிஷத்துக்களுக்கு அவர் பாஷியஞ் செய்யவில்லையென்று சொல்வது வீணான ஆக்ஷேபனைதான்.

13. உபநிஷத்துக்களில் இன்னவுபநிஷத்து இன்னசாகைக்குச் சேர்ந்ததென்றுப் பிரசித்தமாயிருக்கிறது. அவைகளையொவ்வொன்றையுங் குறித்துக்காட்டுவதானால் மிக வளருமாகையால், சில உபநிஷத்துக்களைப்பற்றிமட்டும் சொல்லுகிறேன்.

பதினொன்றாவதாகிய பிரும்மோபநிஷத்து, கிருஷ்ணயஜுர்வேதத்தின் பிரும்மசாகையின் கடைசியிலுள்ளது. பனிரெண்டாவதாகிய கைவல்லியோபநிஷத்து யஜுர்வேதத்திலுள்ள கைவல்லியசாகையின் கடைசியிலுள்ளது. பதிமூன்றாவதாகிய ஜாபாலோபநிஷத்து ஐந்துண்டு. அவிமுக்தஜாபாலோபநிஷத்

பிருஹஜ்ஜாபாலோபநிஷத், பஸ்மஜாபாலோபநிஷத், உருத்திராக்ஷஜாபாலோபநிஷத், ஜாபாலோபநிஷத்தென்பவைகளே. அவிமுக்தஜாபாலம் சுக்லயஜுர்வேதத்திலும், உருத்திராக்ஷஜாபாலம் ஜாபாலமிவைகள் ஸாமவேதத்திலும், பிருஹஜ்ஜாபாலம் பஸ்மஜாபாலமிவைகள் அதர்வணவேதத்திலுமுள்ள சாகைகளின் கடைசிபாகம். பதினேழாவதாகிய கருப்போபநிஷத்து கிருஷ்ணயஜுர்வேதத்தின் எண்பத்தாறு சாகைகளிலொருசாகையின் கடைசிபாகம். பதினாறுவதாகிய ஆருணிகோபநிஷத்தானது ஸாமவேதத்தைச்சேர்ந்த ஆருணிசாகையின் கடைசிபாகம். இப்படியே ஒவ்வொருபநிஷத்து மொவ்வொருசாகைக்குச் சேர்ந்ததாகவேயிருக்கிறது. பிந்தியதொண்ணூற்றெட்டுபநிஷத்துக்களிற் பலஉபநிஷத்துக்களுக்கு ஸ்ரீமத் வித்தியாரண்ணியசுவாமிகளும் ஸ்ரீமத் சங்கராநந்தசுவாமிகளும் ஸ்ரீமத் நாராயணபட்டோஜீ என்பவரும் வியாக்கியாநஞ்செய்திருக்கிறார்கள். இந்நூற்றெட்டுபநிஷத்துக்களிலிருந்து அநேகவாக்கியங்கள் புராணங்களிற் சுலோகரூபமாயெடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் ஸ்காந்தம் சூதஸம்ஹிதைப் பிரும்மகீதையிலநேக வாக்கியங்கள் காணப்படுகின்றன. மேலும் கைவல்லியோபநிஷத்தைக்குறித்துக் குறிப்பாய்ச்சொல்லப்பட்டுமிருக்கிறது:—

மேற்படி பிரும்மகீதை-அத்-அ-சு டுடு-ல், * "பராபரகிருபையோடு கூடினதாயும் பிரசித்தமாயுமிருக்கிற கைவல்லியோபநிஷத்தெதுவோ அது, தேவதைகளாலேயும் ஹரிப்பிரும்மாமுதலியவர்களாலேயுமாதரிக்கப்பட்டிருக்கிறது. ஸகல அதிகாரிகளுக்கும் யோக்கியமானது. ஓ! தேவர்களே! இந்தவுபநிஷத்தை சுபத்தைக்கொடுக்கத்தக்கதாகிய பிர்ம்மதரிசநத்தின்பொருட்டு நானுங்களுக்குச்சொன்னேன். அதை நீங்கள் மிகவும் பக்தியோடு தெரிந்துகொள்ளுங்களென்று ஸந்தோஷத்துடனுறக்கச்சொன்னார்.

14. முந்திய பத்துபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டிருக்கிற தத்துவங்கள் மறு பொருளாயிருக்கின்றன. அப்படி மறு

---

* कैवल्योपनिषत् परापरकृपायुक्ता यदुच्चै र्मुदा प्रोवाच प्रथितासुरैरपि हरिब्रह्मादिभिश्चादृतम् । हे देवा अहमुक्तवानतिशुभब्रह्मा परोक्षाय तत् सर्वेषा मधिकारिणां मतमिदं वित्तातिभक्त्या सह ॥

பொருளாயிருக்கிற தத்துவார்த்தங்களை மற்றவுபநிஷத்துக்கள் விரித்துரைக்கின்றன. எவ்விதமாயெனில்:—

கடவல்லியுபநிஷத்-உ-கஉ-ல், * "அத்தியாத்துமயோகத் "தையடைவதனுற் தீரனானவன் தேவனையறிந்து சுகதுக்கங்க "ளிலிருந்து விடுபடுகிறான்.

ஷை உபநிஷத்து-கூ-கக-ல், † "மேற்சொல்லியபடி நிலை "பெற்றதான இந்திரியங்களை யடக்குதல் யோகமென்றெண்ணு "கிறார்கள். அப்போது ஜாக்கிரதையுள்ளவனாகிறான். யோக "மேயல்லவா இஷ்டப்பிராப்திக்கும் அநிஷ்டநிவிருத்திக்கும் "காரணமாயிருக்கிறது."

இவ்வுலகத்தில் இந்திரியங்களையடக்குவது யோகமென்றும் யோகத்தினாலடையப்படும் பலன் இன்னதென்றுஞ்சொல்லப்பட்டனவேயன்றி இந்திரியங்களையடக்குவதற்கு ஸாதநங்களைவையென்பதைச் சொல்லவில்லை. யோகத்திற்கு முக்கியமான இடம், பொருள் முதலியன இப்படிப்பட்டனவென்று சொல்லவுமில்லை. மற்ற ஒன்பது உபநிஷத்துக்களிலாவது அவைகள் சொல்லப்படவுமில்லை, ஆனதனால் இந்தயோகத்திற்கு வேண்டிய ஸகலவிதஸாதநங்களும் மற்றவுபநிஷத்துக்களிற்சில விரித்துரைக்கின்றன. இதைப்போலவே மற்ற தத்துவங்கள் விஷயத்திலும் பிந்தியவுபநிஷத்துக்கள் தெளிவாய்ச் சொல்லுகின்றன.

15. இப்போது வெளியாயிருக்கிற நூற்றெட்டுபநிஷத்துக்களைத்தவிர பின்னுமநேக உபநிஷத்துக்களிருக்கின்றனவென்றும் பிந்திய தொண்ணூற்றெட்டுபநிஷத்துக்கள் கற்பிக்கப்பட்டனவல்லவென்றும் அறியத்தக்கது.

16. [ஸ்ரீமத் மத்துவாசாரியர் அவருடைய கீதாபாஷியத்தில் இந்நூற்றெட்டுபநிஷத்துக்களிற் சேராத, காடாராயணோபநிஷத், மாடாராயணோபநிஷத்தென இரண்டுபநிஷத்துக்களைக்குறிப்பிட்டிருக்கிறார். வெகுகாலத்திற்குமுந்தி இத்தேசத்திற்கு

---

* अध्यात्मयोगाधिगमेन देवं मत्वाधीरो हर्षशोकौ जहाति ॥

† तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रियधारणाम् । अप्रमत्त स्तदा भवति योगोहि प्रभवाप्ययौ ॥

வந்த அந்நியதேசத்தார்கூட மேற்படி நூற்றெட்டுபநிஷத்துக்களிற் சேர்ந்த அநேகவுபநிஷத்துக்களையுங் குறிப்பிட்டிருக்கிரூர்கள்.

ரிவரெண்டு. ஜே. பி. ரோட்டலர்-௧௮௩௪-ம் வருஷத்திற் செய்த ஒரு நிகண்டுவில்,உபநிஷத்தென்கிற வார்த்தையினடியில் நூற்றெட்டுபநிஷத்துக்களைச்சேர்ந்த நாற்பது உபநிஷத்துக்களுடைய பெயர்களையும் பின்னும் பதினேழு உபநிஷத்துக்களுடையபெயர்களையுங் கண்டெழுதியிருக்கிரூர். அவைகளை அடியிற்காணலாம். நூற்றெட்டுபநிஷத்துக்களைச் சேர்ந்ததாகிய நாற்பதுபநிஷத்துக்களாவன.

௩. கடவல்லியுபநிஷத்து.
௫. முண்டகோபநிஷத்து.
௬. மாண்டூக்கியோபநிஷத்து.
௭. தைத்திரீயோபநிஷத்து.
௯. சாந்தோக்கியோபநிஷத்து.
௧௦. பிருஹதாரண்ணியகோபநிஷத்து.
௧௧. பிரும்மோபநிஷத்து.
௧௨. கைவல்லியோபநிஷத்து.
௧௩. ஜாபாலோபநிஷத்து.
௧௪. சுவேதாசுவதரோபநிஷத்து.
௧௬. ஆருணிகோபநிஷத்து.
௧௭. கருப்போபநிஷத்து.
௧௮. நாராயணோபநிஷத்து.
௨௦. அமிருதபிந்துபநிஷத்து.
௨௨. அதர்வசிரோபநிஷத்து.
௨௪. மைத்திராயண்ணியுபநிஷத்.
௨௬. பிருஹஜ்ஜாபாலோபநிஷத்.
௨௭. நரஸிம்மதாபிந்நியுபநிஷத்.
௨௮. காலாக்நிருத்திரோபநிஷத்.
௨௯. மைத்திரேயோபநிஷத்து.
௩௦. ஸுபாலோபநிஷத்து.
௩௨. மந்திரிகோபநிஷத்து.
௩௭. தேஜோபிந்துபநிஷத்து.
௩௮. நாதபிந்துபநிஷத்து.
௪௦. பிரும்மவித்தியோபநிஷத்து.
௫௨. மஹாநாராயணோபநிஷத்து.
௫௫. இராமதாபிந்நியுபநிஷத்து.
௫௭. முத்கலோபநிஷத்து.
௬௧. மஹோபநிஷத்து.
௬௨. சாரீரகோபநிஷத்து.
௭௧. ஸூரியோபநிஷத்து.
௭௮. பரப்பிர்ம்மோபநிஷத்து.
௮௩. கடோபநிஷத்து.
௮௫. உருத்திரஹிருதயோபநிஷத்து.
௯௩. பஞ்சபிர்ம்மோபநிஷத்து.
௯௭. யாக்ஞவல்கியோபநிஷத்து.
௯௮. வராஹோபநிஷத்து.
௯௯. சாட்டியந்நியுபநிஷத்து.
௧௦௨. காருடோபநிஷத்து.
௧௦௭. ஹயக்கிரீவோபநிஷத்து.

மேற்படி நூற்றெட்டுபநிஷத்துக்களின் பெயர்களல்லாத பதினேழுபநிஷத்துக்களாவன:—

௧. இலிங்கோபநிஷத்து.
௨. சித்குணலயோபநிஷத்து.
௩. மான்றீபோபநிஷத்து.
௪. சுவபாலோபநிஷத்து.
௫. காத்தியாயநீயோபநிஷத்து.
௬. அங்கிஷேஷாபநிஷத்து.

எ. பரமாங்கீஷோபநிஷத்து. கஉ. சௌநகீயோபநிஷத்து.
அ. வர்ஜ்ஜியாயநீயோபநிஷத்து. கங. சிவஸங்கற்போபநிஷத்து.
கூ. போதாயநீயோபநிஷத்து. கச. சிரவணோபநிஷத்து.
க0. ஆசுவலாயநீயோபநிஷத்து. கரு. கிம்புருஷோபநிஷத்து.
கக. வாச்சிராயணீயோபநிஷத்து. கசா. முண்டிரோபநிஷத்து.
கஎ. பௌண்டீரோபநிஷத்து.

இவ்விதமாய் ஐம்பத்தேழுபநிஷத்துக்களிவராற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளில் முந்தியபத்துபநிஷத்துக்களிலுங்கூட நான்குபநிஷத்துக்களின் பெயர் காணப்படவில்லை. எப்படியிருந்தாலும் நூற்றெட்டுபநிஷத்துக்களைவிடப் பின்னும் சிலஉபநிஷத்துக்களிருக்கின்றனவென்று காட்டுகிறது. இவர் -எ0-வருஷங்களுக்கு முந்தி கற்பித்தாரென்று சொல்லமுடியாது. அக்காலத்திலிவரித்தேசத்தின் வித்துவான்களை விசாரித்தறிந்துகொண்டிருக்கவேண்டும்.

17. நாற்பது வருஷங்களுக்குமுன் வஜ்ஜிரஸூசியுபநிஷத்து, இராமதாபிநீயுபநிஷத்து, அசுவகோஷீயுபநிஷத்து இவைகளை ஜர்மன்பாஷையில் மொழிபெயர்த்த, ஏ. வேபரென்கிற ஸம்ஸ்கிருதவித்துவான் இருநூற்றுமுப்பத்தைந்துபநிஷத்துக்களிருக்கின்றனவென்று கணக்கிட்டிருக்கிறார். இவர் மொழிபெயர்த்த அசுவகோஷீயுபநிஷத்து நூற்றெட்டுபநிஷத்துக்களிலொன்றல்ல. முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் மைத்திராயண்ணியுபநிஷத்தை, ஈ. பி. கௌவல், என்கிற ஸம்ஸ்கிருத வித்துவான் இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கிறார். இப்படியே பின்னும் பல உபநிஷத்துக்கள் அராபியபாஷையிலும், இங்கிலீஷ்பாஷையிலும், இலாடின்பாஷையிலும், பிரஞ்சுபாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படியந்நியர்கள் கூட வாஸ்தவமென்று நம்பியிருக்கிறவுபநிஷத்துக்களை நம்மவர்களே கற்பனையென்று சொல்வது கலியுகத்தின்மஹிமையே. முந்திய பத்துபநிஷத்துக்களைத் தவிர மற்றவுபநிஷத்துக்களிலிப்போது வெளியாயிருக்கிற உபநிஷத்துக்களிலுள்ள கிரந்தங்களைக்கணக்கிட்டுப்பார்ப்போமானால் இலக்ஷங்கிரந்தங்களுக்கதிகமாகவேயிருக்கும். ஒவ்வொருபநிஷத்திலும் விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன. ஆகையாலொருவனால் கற்பிக்கப்பட்டதென்பது அஸாத்தியம். பலபெயர்கள் கற்பித்தார்களென்று சொல்வோமானால், ஒருவன் கற்பித்ததை மற்றவனங்கீகரிக்க

மாட்டான். ஆகையால், பிந்தியதொண்ணூற்றெட்டுபநிஷத்துக்கள் கற்பனையென்றுசொல்வதவிவேகமே. இத்தேசத்திற் சிலர் தங்கள் கொள்கைக்குவிரோதமாயெந்தக் கிரந்தமாவது காணப்படுமானாலது கற்பனையென்று சொல்வதியற்பாயிருக்கிறது.]

18. இதிஹாஸபுராணங்களில் விக்கிரஹாராதனைவிஷயமாயிருக்கிற வாக்கியங்கள் கற்பனையென்று விலக்கிவிடுவோமானாலவைகளிலெவ்வளவுக் கிரந்தங்களடங்கியிருக்கின்றனவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவோ அவ்வளவுக்கிரந்தங்களில் நாலிலொருபங்குகூட மிச்சமிருக்கமாட்டாது. ஆகையால், இதிஹாஸபுராணங்கள் கற்பனையென்றுசொல்வதும் யோக்கியமானதல்ல.

19. விக்கிரஹாராதனையானது சில உபநிஷத்துக்களிலும் இதிஹாஸபுராணங்களிலும் தூஷிக்கப்பட்டிருக்கிறதென்பது வாஸ்தவமே. சாஸ்திரங்களிலுத்தம மத்தியம அதம உபாஸநாமார்க்கங்களைச்சொல்லி, உத்தமமார்க்கத்தையே ஜநங்கள் பின்பற்றும்பொருட்டு மத்தியம அதமமார்க்கங்களை தூஷிப்பது சுவபாவமே. ஏனெனில், ஒவ்வொருவனும் மத்தியம அதமமார்க்கங்களையே உத்தமமான உபாஸநாமார்க்கமென்று நம்பி அதிலேயே நின்றுவிடாமலுத்தமமார்க்கத்தில் முயலவேண்டுமென்பதற்காகத்தான். விக்கிரஹாராதனையை நிந்திக்கிற சாஸ்திர வாக்கியங்களையே முதலிற் பார்ப்போம்.

தரிசிநோபநிஷத்து-அத்-ச-ல், * "(பிருமாண்டத்திலுள்ள "க்ஷேத்திரம், தீர்த்தம் முதலியவைகள் பிண்டாண்டமென்கிற "இத்தேகத்திலேயே யிருக்கின்றனவென்பதைச் சொல்லுகிற "து). சிரஸ்ஸினுடைய ஸ்தாநத்தில் ஸ்ரீபருவதம். நேத்திரஸ்தா "நத்திற் கேதாரம். ஓ! மஹாபுத்திமானே! புருவங்களுக்கும் "மூக்குக்கும் நடுவாகியஸ்தாநம் வாராணஸீ (காசி). குசஸ்தாந "த்தில் குருக்ஷேத்திரம். ஹிருதயமாகிற தடாகம் பிரயாகை. "ஹிருதயத்தினுடையமத்தியில் (சிதாகாசமாகிய) சிதம்பரம். "மூலாதாரத்திற் கமலாலயம். இப்படியிருக்கின்றன. தனக்கு

---

* श्रीपर्वतं शिरस्थाने केदारं तु ललाटके । वाराणसी महाप्राज्ञ भ्रुवोर्घ्राणस्य मध्यमे । कुरुक्षेत्रंकुचस्थाने प्रयागं हृत्सरोरुहे । चिदंबरन्तु हृन्मध्ये आधारे कमलालयम् । आत्मतीर्थं समुत्सृज्य बहिस्तीर्थानि यो व्र-

"ள்ளிருக்கிற (தேகத்திற்குள் பரிசுத்தமானதாயிருக்கிற) தீர்த்
"தத்தைவிட்டு வெளியிலிருக்கிற (காசீ, பிரயாகை, குருக்ஷேத்
"திரம் முதலியஸ்தலங்களாகிற) தீர்த்தங்களைக்குறித்தெவன்
"போகிறானோ அவன் கையிலிருக்கிற மஹாரத்நத்தை எறிந்து
"விட்டுப்பளிங்குக்கல்லைத்தேடுகிறவனுக்கொப்பாவான். எல்லா
"காரியங்களிலும் மனதினுடைய தோற்றத்தினாலுண்டான தீர்
"த்தந்தான் சிரேஷ்டமென்பது சாஸ்திரத்தினுடைய நிச்சயம்.
"ஜலங்களால் நிறைந்த தீர்த்தங்கள் கட்டைமுதலியவைகளாற்
"செய்யப்பட்டிருக்கிற தேவதைகளிவைகளை, தன்னுடைய திரு
"ப்தியின்பொருட்டு, மனைவி புத்திரி இவர்களை ஆலிங்கநஞ்செய்
"துகொள்வதுபோல்,யோகிகள் தன்னாத்துமப்பிரயோஜநத்தின்
"பொருட்டு (தீர்த்தம்முதலியவைகளை) சரணமடைகிறதில்லை.
"ஓ! மஹாமுனியே! வெளிதீர்த்தத்தைக்காட்டிலும் தேகத்தி
"ற்குள்ளிருக்கிற (மேற்குறித்த) தீர்த்தமானது ஸர்வசிரேஷ்ட
"மாகவிருக்கிறது. தனக்குள்ளிருக்கிற தீர்த்தமானது மஹாதீர்
"த்தமாயிருக்கையில் மற்றதீர்த்தம் பிரயோஜநமற்றது. உள்ளே
"யிருக்கிற அசுத்தமான சித்தமானது (வெளி) தீர்த்தஸ்நாநத்
"தாற் சுத்தமாகிறதில்லை. (எப்படிப்போலெனில்,) அநேகந்தட
"வை ஜலத்தினாற்சுத்தஞ்செய்யப்பட்டாலும் கள்ளுக்குடமான
"து சுத்தமாகாததுபோற்றான். விஷுபுண்ணியகாலத்திலேயு
"ம் தக்ஷிணாயந உத்தராயண புண்ணியகாலங்களிலேயும் கிரஹ
"ணகாலத்திலேயும் மற்றகாலங்களிலேயும் எப்போதும் காசீ
"முதலிய விடங்களிலுள்ள தீர்த்தத்தில்ஸ்நாநஞ்செய்து மனித
"ன் சுத்தியையடைகிறான். ஞாநயோகத்திலேயே நிலையாயிருக்

---

जेत् । करस्थं समहारत्नं त्यक्त्वाकाचं विमार्गते । भावतीर्थं परं तीर्थं प्रमाणं सर्वकर्मसु । अन्यथाऽऽलिंग्यते कान्ता अन्यथाऽऽलिंग्यते सुता । तीर्थानि तोयपूर्णानि देवान् काष्ठादिनिर्मितान् । योगिनो नप्रपद्यन्ते स्वात्मप्रत्ययकारणात् । बहि स्तीर्थात्परंतीर्थं मन्तस्तीर्थं महामुने । आत्मतीर्थं महातीर्थं मन्यतीर्थं निरर्थकम् । चित्तमन्तर्गतं दुष्टं तीर्थस्नानै र्नशुध्यति । शतशोपि जलैर्धौतं सुराभाण्ड मिवाशुचि । विषुवायनकाले तु ग्रहणे चान्तरेसदा । वाराणस्यादिकेस्थाने स्नात्वा शुद्धो भवेन्नरः । ज्ञानयोगपरा-

"கிறவர்களுடைய பாதங்களைக் கழுவினஜலமானது, ஓ! முனி "சிரேஷ்டா! அக்ஞாநிகளுக்கு மனச்சுத்தியின்பொருட்டு தீர்த் "தமாகிறது. தேகத்திற்குள்ளேயே சிவனானவர் நிலையாயிருக் "கையில் (கங்கை முதலிய) தீர்த்தஸ்நாநம், ஸத்பாத்திரத்திற் "செய்யுந்தாநம் (மந்திர) ஜபம், யக்ஞம், கட்டை, கல்முதலிய "விக்கிரஹங்கள் இவைகளிலே மூடபுத்தியுள்ளவர்கள் எப்போ "தும் சிவனைப்பார்க்கிறார்கள் (தேடுகிறார்கள்). தனக்குள்ளே "யேயிருக்கிற சிவனாகிய என்னைவிட்டுவிட்டு வெளியிலிருக்கிற "தாக எவனுபாஸிக்கிறானோ அவன் தன்கைய்யிலிருக்கிற சோற் "றை எறிந்துவிட்டுப் புறங்கையை நக்குகிறவனுக்கொப்பாவா "ன். யோகிகள் தேகத்திற்குள்ளேயே சிவனைப்பார்க்கிறார்கள், "பிரதிமைகளிலல்ல. அக்ஞாநிகளுடைய பாவனை (எண்ணம் "அல்லது நினைப்பு, அல்லது த்தியாநம்) யின்பொருட்டுப் பிரதி "மைகள் கற்பிக்கப்பட்டன. ஸர்வசிரேஷ்டமானதும், ஒப்பற் "றதும், ஸத்தியமானதும் இரண்டாவதற்றதும், பிரக்ஞாநக "நமானதும், ஆநந்தமயமானதுமாகிய பிர்ம்மத்தைத் தன்னு "டைய ஆத்துமாவாக எவன் பார்க்கிறானோ அவன்தான் பார் "வையையுடையவனாயிருக்கிறான்."

இவ்வுபநிஷத்துவாக்கியங்கள், மனதையடக்கி ஓரேநிலையி லிருக்கிற யோகிக்கு தீர்த்தஸ்நாநம், விக்கிரஹாராதநம் முதலி யன, பிரயோஜநமற்றதென்றும், தன் தேகத்திற்குள்ளாகவே பரமாத்துமாவை ப்பார்க்கிறது உத்தமப்பிரயோஜநமானதென் றுஞ் சொல்லுகின்றனவேயன்றி யோகம், தியாநம் முதலியவை களிற் சக்தியில்லாத மற்றவர்கள் இவைகளை விட்டுவிடவேண்டு மென்பதல்ல. ஆகையால், அதிகாரியைக்குறித்து விக்கிரஹாரா

---

णान्तु पादप्रक्षाळितं जलं । भावशुध्यर्थ मज्ञानां तत्तीर्थं मुनिपुङ्गव । तीर्थे दाने जपे यज्ञे काष्ठे पाषाणके सदा । शिवं पश्यति मूढात्मा शिवे देहे प्रतिष्ठिते । अन्तस्थं मां परित्यज्य बहिष्ठं यस्तु सेवते । हस्तस्थं पिण्ड मुत्सृज्य लिहेत् कूर्परमात्मनः । शिव मात्मनि पश्यन्ति प्रतिमासु न योगिनः । अज्ञानां भावनार्थाय प्रतिमाः परिकल्पिताः । अपूर्व मपरं ब्रह्म स्वात्मानं सत्यमद्वयं । प्रज्ञानघन मानन्दं यः पश्यति स पश्यति ॥

தனை தூஷிக்கப்பட்டதென்றறி. இப்படியே பின்னுஞ்சில தூஷணவாக்கியங்களையும் எடுத்துக்காட்டுகிறேன், கேள்.

பாகவதம்-ஸ்கந்தம் ௩-அத் ௨௯-ல், * "(விஷ்ணுசொல்வ "து) நான் ஸகலபூதங்களிலேயும் அந்தந்தபூதங்களுடைய ஆத் "துமாவாக எப்போதுமிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை "யறியாதமனிதர்கள் விக்கிரஹத்தில் வீணான காரியஞ்செய்கிறா "ர்கள். எவன் ஸகலபூதங்களிலேயும் ஆத்துமாவாகவும், ஈசு "வரனாகவும், எப்போதுமிருக்கிற என்னைவிட்டு மூடத்தனத்தி "னால் விக்கிரஹத்திலே பூஜையைவிரும்புகிறானோ அப்படிப்பட் "டவன் சாம்பலில் ஹோமஞ்செய்தவனுக்கொப்பாவான். ஓ! "பாபமற்றவளே! விசேஷவஸ்துக்களைக்கொண்டு பூஜிக்கப்பட் "ட நான் ஸந்தோஷப்படுகிறதில்லை. விக்கிரஹத்திற் பூஜைசெய் "கிறவன் என்னை, பூதக்கூட்டங்களென்றெண்ணி அவமானஞ் "செய்தவனாகிறான்."

ஷை ஸ்கந்தம்-௧௧-அத்-௨-௯-௭௭-ல், † "எவன் ஹரியினுடை "ய பூஜையை சிரத்தையோடு விக்கிரஹத்திற் செய்ய இச்சிக்கிறா "னோ அவன் அந்தஹரியினுடைய பக்தர்களிற் சேர்ந்தவனுமல் "ல. பக்தரல்லாத மற்றவர்களிற் சேர்ந்தவனுமல்ல. பிராகிரு "தன் (கடையோனான பக்தன்) என்று சொல்லப்படுகிறான்."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-௭௫-ல், ‡ "ஓ! பிராம் "மணர்களே! இலிங்கமானது, இரண்டுவிதமென்று சொல்லு "கிறார்கள். ஓ! பிராம்மணர்களான முனிசிரேஷ்டர்களே! ஸ்

---

* अहं सर्वेषु भूतेषु भूतात्मावस्थित स्सदा । तमवज्ञाय मां मर्त्यः कुरुते र्चाविडंबनम् ॥ २२ ॥ यो मां सर्वेषु भूतेषु सन्त मात्मान मीश्वरम् । हित्वा र्चां भजते मौढ्यात् भस्मन्येव जुहोति सः ॥ २३ ॥ अह मुच्चावचै र्द्रव्यैः क्रिययोत्पन्नयानघे । नैवतुष्येऽर्चितोऽर्चायां भूतग्रामावमानिनः ॥ २९ ॥

† अर्चायामेवतु हरेः पूजां यः श्रद्धये हते । नतद्भक्तेषु चान्येषु स भक्तः प्राकृतस्स्मृतः ॥

‡ लिङ्गं तु द्विविधं प्राहु र्बाह्यमाभ्यन्तरंद्विजाः । बाह्यं स्थूलं मुनि-

"தூலம், சூக்ஷமமென்பவைகளே. ஸ்தூலமானது பாஹியம், "சூக்ஷமமானது ஆந்தரமென்று சொல்லுகிருர்கள். யக்ஞம் "முதலிய கருமங்களில் விருப்பமுடையவர்களும் ஸ்தூலலிங்கத் "திற் பூஜைசெய்யவிருப்பமுடையவர்களும் ஸ்தூலபுத்தியுள்ள "வர்கள். மூடர்களுடைய பாவனையின்பொருட்டு ஸ்தூலவிக்கிர "ஹமேயன்றி விவேகிகளுக்கல்ல. இந்திரியவியாபாரங்களை யட "க்காதவர்களுக்கு மண், கட்டை முதலிய ஸ்தூலவிக்கிரஹங் "கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன."

ஸ்தூலமென்பது கண்களாற் காணக்கூடிய வெளியிலுள்ள விக்கிரஹாதிகள். ஆந்தரமென்பது, மனதினுற் கற்பிக்கப்படும் ரூபங்கள்.

ஸ்காந்தபுராணம்-ஞானயோககண்டம்-நாடீசக்கிராத்தியா யத்தில், * "(கங்கைமுதலிய) தீர்த்தங்களிலேயும், தானத்திலே "யும், (கிருச்சிரசாந்திராயணவ்விரதமாகிற) தபஸிலேயும், "யக்ஞத்திலேயும், கட்டையிலேயும், கல்லிலேயும் மூடர்கள் "சிவனைத்தேடுகிருர்கள். தன் தேகத்திலேயே சிவன், நிலையா "யிருக்கிருர். ஓ! முனியே! ஞானக்கண்ணில்லாமையாலும் மா "யாபலத்தினுலும், எங்கும் நிறைந்திருக்கிற சாந்தரான சங் "கரரைக்காணுகிறதில்லை. தனக்குள்ளேயே நிலையாயிருக்கிற "சிவனைவிட்டு, சிவன் வெளியிலிருக்கிறதாகப் (எண்ணி) பூஜிக் "கிறவன் கையிலிருக்கிற சோற்றை எறிந்துவிட்டு புறங்கை "யை நக்குகிறவனுக்கொப்பாவான். யோகிகள், சிவனைத்தனக் "குள்ளேயே பார்க்கிருர்கள், பிரதிமைகளிலல்ல. அக்ஞாநிக

---

श्रेष्ठाः सूक्ष्ममाभ्यन्तरंद्विजाः ॥ १९ ॥ कर्मयज्ञरताः स्थूला स्स्थूललिङ्गार्चने रताः । असतां भावनार्थाय नान्यथास्थूलविग्रहः ॥ २० ॥ यथास्थूलमयुक्तानां मृत् काष्ठाद्यैः प्रकल्पितम् ॥ २२ ॥

* तीर्थे दाने तपो यज्ञे काष्ठे पाषाणके सदा । शिवं पश्यति मूढात्मा शिवो देहे प्रतिष्ठितः । सर्वत्रावस्थितं शान्तं नपश्यति च शङ्करं। ज्ञानचक्षु र्विहीनत्वा दहो मायाबलं मुने । आत्मसंस्थं शिवं त्यक्त्वा बहिस्थं यजते शिवं । हस्तस्थं पिण्डमुत्सृज्य लिहेत्कूर्पर मात्मनः । शिवमात्मनि पश्यन्ति प्रतिमासु न योगिनः । अज्ञानांभावनार्थाय प्रतिमाः परिक-

"ளுடைய பாவனைக்காகப் பிரதிமைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்
"றன. காணக்கூடாததாயும் அதைவிட சிரேஷ்டமானவஸ்து
"வொன்றில்லாததாயும், ஸத்தியமாயும், இரண்டாவதற்றதாயும்,
"ஞானத்தையே சுவரூபமாகவுடையதாயும், ஆநந்தசுவரூபமாயு
"மிருக்கிற பிர்ம்மத்தை எவன் தன்னுடைய ஆத்துமாவாகவறி
"கிறானோ அவன்தான் வாஸ்தவத்தையறிகிறவன்."

மஹாநிர்வாணத்தில், * "இவ்விதமாய் (புத்தி சக்திமுத
"லிய) குணங்களையநுஸரித்து அற்பபுத்தியுள்ள பக்தர்களுடை
"ய பிரயோஜநத்திற்காகப்பலவித (சிவ விஷ்ணுமுதலிய) ரூப
"ங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன."

சாதாதபஸ்மிருதியில், † "ஸாதாரணமான மனிதர்களுக்கு
"(கங்கைமுதலிய) புண்ணியதீர்த்தங்களில் தைவம் (தைவமாக
"பாவிக்கிறார்களென்பதுகருத்து). சற்றுத்தெரிந்தவித்துவான்
"களுக்கு சுவர்க்கத்திலிருக்கிற (இந்திராதி) தேவதைகள் தை
"வம். மூடர்களுக்குக் கட்டையிலுங் கல்லிலும் தைவம். மன
"தையடக்கிய யோகிக்குத் தன்னுடைய ஆத்துமாவே தைவம்."

மஹாபாரதத்தைச்சேர்ந்த உத்தரகீதையில், ‡ "துவிஜர்க
"ளுக்கு(பிரும்மக்ஷத்திரியவைசியர்களுக்கு) அக்நியிற் தைவம்.
"முனிகளுக்கு ஹிருதயத்திற் தைவம். ஞானமில்லாதவர்களு
"க்குப் பிரதிமைகளிற் தைவம். ஸமதரிசநமுள்ளவர்களுக்கு
"(ஸகலமும் பிர்ம்மசுவரூபமாய்ப் பார்க்கிறவர்களுக்கு) எங்கும்
"தைவம்."

---

ल्पिताः । अपूर्वं नापरं ब्रह्म स्वात्मानं सत्यमद्वयम् । प्रज्ञानघनमानन्दं यः पश्यति सपश्यति ॥

* एवं गुणानुसारेण रूपाणि विविधानिच । कल्पितानि हितार्थाय भक्तानामल्पमेधसाम् ॥

† अप्सु देवो मनुष्याणां दिवि देवो मनीषिणाम् । काष्ठलोष्टेषु मूढानां युक्तस्यात्मनि देवता ॥

‡ अग्नि र्देवो द्विजातीनां मुनीनां हृदि दैवतम् । प्रतिमास्वप्रबुद्धानां सर्वत्रसमदर्शिनाम् ॥

இராமபூர்வதாபிநீயுபநிஷத்-அத்-க-ல், * "அநந்தனுயும் "நித்தியாநந்தனுயும், சிதாத்துமாவாயுமிருக்கிற பிர்ம்மத்தினி "டத்தில் யோகிகள் ரமிக்கிறுர்கள் (ஆநந்தமடைகிறுர்கள்). "என்கிறதனுலே இவர் இராமனென்கிற பெயரினுற்சொல்லப்ப "டுகிற பரப்பிர்ம்மமாயிருக்கிறுர். சித்சுவரூபமாயும், அத்துவ "யமாயும், பிரிவற்றதாயும் சரீமற்றதாயுமிருக்கிற பிர்ம்மத்திற்கு "உபாஸகர்களுடையப்பிரயோஜநத்தின்பொருட்டு ரூபம்கற்பிக்க "ப்பட்டிருக்கிறது. உருவத்தோடுகூடியதாயிருக்கிற (சிவவிஷ்ணு "முதலிய) தேவதைகளுக்குப் புருஷகற்பனையும், (இலக்ஷ்மீ, பார் "வதீமுதலிய) தேவிகளுக்கு ஸ்திரீகற்பனையும், அவர்களுக்கு முக் "கண் நான்குகை என்றஅங்ககற்பனையும், சக்கரம், சூலம் முதலி "ய அஸ்திரகற்பனைகளும், உ-௲-அ-க0-கஉ-க௬-கஅ-கைகள் கற் "பனையுஞ்சொல்லப்பட்டிருக்கின்றன. சங்கம் முதலியவைகளை "தரித்திருக்கிறதாகவும், அநேகவர்ணங்களுள்ளதாகவும், பல "விதவாஹநங்களையுடையதாகவும், சக்திபரிவாரங்களையுடைய "தாகவுங் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பிர்ம்மத்தி "னிடத்தில் ஐந்துவிதமாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிறசரீரத்திற்கு "ஸேனைமுதலானவைகளுங் கற்பிக்கப்படுகின்றன."

20. இவ்விதமாய் சுருதி ஸ்மிருதி இதிஹாஸபுராணங்கள் விக்கிரஹாராதனை அக்ஞாநிகளின்பொருட்டு கற்பிக்கப்பட்டன வென்று நிந்திக்கின்றனவாகிலும் மேற்படிவாக்கியங்களை முன் பின் வாக்கியங்களோடு ஆராய்ந்துபார்த்தால் ஈசுவரனை மனதி னுற் தியானிக்கவாவது யோகஞ்செய்தடையப்படும் ஞாநத்தினு லீசுவரசுவரூபத்தையறியவாவது, யக்ஞம் முதலிய நிஷ்காமகரு

---

* रमन्ते योगिनोऽनन्ते नित्यानन्दे चिदात्मनि । इति रामपदेनासौ परं ब्रह्माभिधीयते । चिन्मयस्याद्वितीयस्य निष्कळस्याशरीरिणः । उपासकानां कार्यार्थं ब्रह्मणो रूपकल्पना । रूपस्थानां देवतानां पुंस्त्र्यंगास्त्रादिकल्पना । द्विचत्वारिषडष्टानां दश द्वादश षोडश । अष्टादशामीकथिता हस्ता श्शङ्खादिभि र्युताः । सहस्रान्ता स्तथा तासां वर्णवाहनकल्पना । शक्तिसेना कल्पना च ब्रह्मण्येवं हि पञ्चधा । कल्पितस्य शरीरस्य तस्य सेनादि कल्पना ॥

மயோகத்திலல்லது பக்தியோகத்தில் முயலவாவது சக்தியில்லாதவர்கள், யாரோ அவர்களுக்கு விக்கிரஹாராதனை, தீர்த்தயாத்திரை முதலியவைகளேயே அநுஷ்டிக்கவேண்டியதுநீங்கிலாக்கடமையென்று சொன்னதாகவாகிறது. ஏனென்றால், இவைகளினாலடையப்படும் பிரயோஜநம் மிகவும் அற்பமானது. மநஸ்ஸம்பந்தமானத்தியாநம் முதலிய உபாஸனைகளைச்செய்தாலன்றி மோக்ஷமாகிறஉத்தமப்பிரயோஜநமுண்டாகாது. ஆனால், விக்கிரஹாராதநம், தீர்த்தஸ்நாநம், தீர்த்தசிராத்தம், புராணசிரவணம், தாநம்முதலியவைகளை அதமாதிகாரிகள் அவசியமநுஷ்டிக்கவேண்டியது. அப்படியநுஷ்டித்துவந்தால் உத்தம மத்தியமாதிகாரிகளாகவாவார்கள். இந்த விக்கிரஹாராதனை, தீர்த்தஸ்நாநம் முதலியவைகளாலுண்டாகும் பிரயோஜநமே சிரேஷ்டமானப்பிரயோஜநமாகவெண்ணி அதிலேயே முயற்சியுள்ளவர்களாயிராமல் மேலானப் பிரயோஜநத்தையடைய முயற்சிசெய்யவேண்டுமென்கிற கருத்துடன் சாஸ்திரங்கள் விக்கிரஹாராதனை முதலியவைகளை நிந்திக்கின்றனவேயன்றி அதனாற் பிரயோஜநமில்லையென்பதனாலாவது, பாபமுண்டாகுமென்பதனாலாவதல்ல.

21. இந்த விக்கிரஹாராதநாதிகாரிகளைவிட மேலானவர்களும் மத்தியமாதிகாரிகளுமான கருமயோகிகள் தேகத்தைவறளச்செய்வதாகிய தபஸ்செய்கிறவர்கள், ஹடயோகிகள், வேதாத்தியயநம் முதலிய சாஸ்திரங்களை அப்பியாஸஞ்செய்து அதனுண்மையையறியாத வித்துவான்கள் முதலியவர்களையுங்கூட மூடர்களென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஏனென்றால், ஞாநயோகிக்கு இவர்கள் ஸமமானவர்களல்ல. மிகவும் தாழ்ந்தபடியிலுள்ளவர்கள். ஞாநயோகிதான் உத்தமாதிகாரி. அவன் அந்தக்ஞாநத்தினாற் பிறப்பற்றதும் நித்தியாநந்தமுமான மோக்ஷமடையத்தகுந்தவனாயிருக்கிறான். அவனையபேக்ஷித்து மத்தியமாதிகாரிகள் தூஷிக்கப்படுகிறார்கள். எவ்விடத்திலென்றாற் சொல்லுகிறேன் கேள்.

கடவல்லியுபநிஷத்து-௨-௨௩-ல், * "வேதார்த்தத்தையறி "வதனாலேயாவது உறுதியான தாரணாபுத்தியினாலேயாவது (சா "ஸ்திரார்த்தங்களை) வெகுவாய்க் கேட்டிருக்கிறதனாலேயாவது "இந்த ஆத்துமா அடையத்தகுந்தவனல்ல."

---

* नायमात्माप्रवचने न लभ्यो न मेधया न बहुना श्रुतेन ॥ இந்த வாக்கியத்தை முண்டகோபநிஷத்து ௩.௨.௩. லும் காண்க.

முண்டகோபநிஷத்து க-உ-ல், * "யக்ஞசுவரூபமான இ
"ந்தக் கருமங்கள் நாசமடையத்தக்க பலன்களையுடையவைகளா
"யும் நிலையற்றவைகளாயுமிருக்கின்றன. பதினெட்டுப்பெயர்க
"ளை (யஜமானன் ருத்துவிக்கு முதலியவர்களை) ஆசிரயித்ததாக
"சாஸ்திரத்திற் சொல்லப்பட்டதாயும் அற்பபலனுள்ளதாயு
"மிருக்கிற கருமத்தை யார் செய்கிறார்களோ அப்படிப்பட்டமூ
"டர்கள் அந்தக்கருமத்தையே (கருமபலனையே) அதிகப்பிர
"யோஜநமாகவெண்ணிஸந்தோஷப்படுகிறார்கள். அப்படிப்பட்ட
"வர்கள் ஜரையையும் மரணத்தையுமடைந்து சிலகாலம் சுவர்க்
"கத்தையநுபவித்து மறுபடி இம்மனிதலோகத்திற் தாழ்ந்தபிற
"வியை யடைகிறார்கள். மூடர்கள் யாகம்முதலிய வேதோக்த
"கருமங்களினாலும், பூர்த்தம், (கிணறு குளம் வெட்டிவைத்த
"ல், சத்திரம் சாவடி கட்டிவைத்தல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல்
"முதலியதருமங்கள்) இவைகளினாலும் விசேஷப்பிரயோஜநமி
"ருக்கிறதேயன்றி மற்ற ஆத்துமக்ஞாநம் முதலியன சிரேஷ்
"டமானப்பிரயோஜநமென் றெண்ணுகிறதில்லை. அப்படிப்பட்ட
"வர்கள் புண்ணியத்தினாலடையத்தகுந்த சுவர்க்கலோகத்திற்
"புண்ணியபலனையநுபவித்து மறுபடி இந்தமனிதலோகத்திற்
"தாழ்ந்தஜந்மத்தையடைகிறார்கள்."

ஸுபாலோபநிஷத்து-அத்-கூ-ல், † "அநேகவேதார்த்தத்
"தைச் சொல்வதனாலேயாவது, வேதார்த்தத்தைக் கேட்பதனா
"லேயாவது, தாரணாசக்தியுள்ள புத்தியினாலேயாவது, பெரி
"யோர்களிடத்திலிருந்து வுபதேசம்பெற்றதனாலேயாவது, நு
"ண்ணறிவினாலேயாவது, வேதாத்தியயநத்தினாலேயாவது, யக்
"ஞங்களினாலேயாவது, உக்கிரமான தபஸினாலேயாவது, ஸா
"ங்கியயோகத்தினாலேயாவது, கருமயோகத்தினாலேயாவது, ஸ
"ந்நியாஸம் முதலிய ஆசிரமதருமத்தினாலேயாவது, மற்றவைக

---

* प्लवाह्येते अदृढा यज्ञरूपा अष्टादशोक्तमवरं येषु कर्म । एतच्छ्रेयोयेऽभिनन्दन्ति मूढा जरामृत्युं ते पुनरेवा पियन्ति ॥ ७ ॥ इष्टापूर्तं मन्यमानावरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः । नाकस्यपृष्ठे ते सुकृतेऽनुभूत्वेमंलोकं हीनतरं चा विशन्ति ॥ १० ॥

† नैन मात्मा प्रवचनशतेनापि लभ्यते न बहुना श्रुतेन । नबुद्धिज्ञेननश्रुतेन नमेधया नवेदै र्नयज्ञै र्नतपोभिरुग्रै र्नसांख्यै र्नयोगै र्नाश्रमै र्न्या-

"னிலேயாவது, இந்த ஆத்துமா அடையப்படுகிறதில்லை.
"ஞானேந்திரியங்களையடக்கினவனும், மனதையடக்கினவனும், ஸகலத்திலும் ஒழிவடைந்தவனும், பொருமையுள்ளவனும், மனதைஒரேநிலையில் நிருத்தினவனுமிருந்துகொண்டு தன்னிடத்திலேயே தன்னைப்பார்க்கிறான். இப்படிப்பட்டவன் ஸகலத்திற்கும் ஆத்துமாவாகிறான்."

பைங்களோபநிஷத்து-அத்-ச-ல், * "மனிதனானவன் ஒரேகாலால் நின்றுகொண்டு ஆயிரம் வருஷகாலங்கள் தபஸ்செய்தாலும் அது, ஞானயோகத்தினுடைய பதினாறிலொருபங்குக்கு ஸமானமாகாது. இது, ஞானமென்றும், இது ஞேயமென்றும் (அறியத்தகுந்தவஸ்துவென்றும்) எதுண்டோ அதெல்லாம் சாஸ்திரத்தினாலறிய இச்சிக்கிறவன் ஆயிரவருஷகாலம் வயதுள்ளவனாய் சாஸ்திரங்களைக்கற்றாலும் அதன் முடிவையடையமாட்டான். நாசமற்றதாயும் சூக்ஷ்மமாயுமிருக்கிறதெதுவோ அதை (ஆத்துமசுவரூபத்தை) அறியவேண்டியது. உயிர்வாழ்வு நிலையற்றது. சாஸ்திரக்கூட்டங்களைத்தள்ளிவிட்டு வாஸ்தவமாயுள்ளதெதுவோ அதுவுபாஸிக்கத்தக்கது. எதுவரையில் ஆத்துமதத்துவமறியப்படவில்லையோ அதுவரையிலநேக கருமங்களையும், மனச்சுத்தி தேகசுத்தி இவைகளையும், அப்படியே ஜபம் யக்ஞமிவைகளையும், தீர்த்தயாத்திரைக்குச் செல்வதையுமநுஷ்டிக்கவேண்டியது."

மஹோபநிஷத்து-அத்-ச-ல், ‡ "பொருள்களாவது நண்பர்களாவது புத்திரன்முதலிய பந்துக்களாவது தேகத்தை

---

न्यैरात्मानमुपलभन्ते । —शान्तो दान्तोपरतस्तितिक्षुस्समाहितो भूत्वा त्मन्येवात्मानं पश्यति सर्वस्यात्माभवति ॥

* तपेद्वर्षसहस्राणि एकपादस्थितोनरः । एतस्य ध्यानयोगस्य कलां नार्हति षोडशीम् । इदं ज्ञानमिदं ज्ञेयं तत्सर्वं ज्ञातुमिच्छति । अपि वर्षसहस्रायुश्शास्त्रान्तं नाधिगच्छति । विज्ञेयोऽक्षरतन्मात्रो जीवितं चापि चंचलम् । विहाय शास्त्रजालानि यत्सत्यं तदुपास्यताम् । अनन्तकर्म शौचञ्च जपो यज्ञ स्तथैवच । तीर्थयात्राभिगमनं यावत्तत्वं नविन्दति ॥

‡ नधनान्युपकुर्वन्ति न मित्राणि न बान्धवाः । न कायक्लेशवैधुर्यं

"வறளச்செய்கிற விரதாதிகளாவது, (கங்கை முதலிய) தீர்த்தங்
"கள், ஆலயங்கள், இவைகளை யாசிரயிக்கிறதாவது, மோக்ஷத்
"திற்குபகாரமாகமாட்டா. அந்தப்பரமாத்துமபதமானது, கேவ
"லம் மனதை ஜயிக்கிறதனுலேமாத்திரமே அடையப்படுகி
"றது."

கர்க்கஸம்ஹிதை-விசுவஜித்கண்டம்-அத்-கச-ல், * "வஸ்
"துவானது எதுவரையிற்காணப்படுகிறதில்லையோ அதுவரை
"யிற் தீபத்தின் பிரயோஜநமுண்டு. அப்படிப்போல தன்சொந்
"தமான மஹாநந்தத்தையடைந்தவனுக்கு ஞாநமாகிற அக்நி
"யினுல் என்னப்பிரயோஜநம்? பிர்ம்மதத்துவமானது எதுவ
"ரையிலறியப்படவில்லையோ அதுவரையில் ஜகத்திருக்கிறது.
"பிர்ம்மமாகிற ஆத்துமாவடையப்பட்டதானுல் இந்த ஜகத்தினு
"லென்னப்பிரயோஜநம்?"

22. இந்த சுருதி முதலியவாக்கியங்கள் ஞாநயோகத்தி னுற் பரமாத்துமாவையறிகிறது தவிர மற்ற யோகம், தபஸ், யக்ஞாதிக்கிரியைகள், தாநம், தருமம் முதலியவைகள், தாழ்ந்த தாக நிந்திக்கப்பட்டிருக்கின்றன. இப்படி நிந்தித்ததானது அவைகளை விட்டுவிடவேண்டுமென்பதற்காகவல்ல. ஆனுல், உத்தமமானப் பிரயோஜநத்தையடைய முயலவேண்டுமென்பது முக்கியமானகருத்து. மேலான வுபாஸநைக்கு யோக்கியனல்லாதவன் அந்தவுபாஸநையையடைவதற்காக விக்கிரஹாராதனைமுதலிய தாழ்ந்த வுபாஸநைகளைச்செய்தேதீரவேண்டும். எவனெவன் எந்தெந்த வுபாஸநைக் கதிகாரியாயிருக்கிறுனே அவனவன் அந்தந்த வுபாஸநையினுலேயே மேலான வுபாஸநாமார்க்கத்தை யடையவேண்டியவனுயிருக்கிறுன். விக்கிரஹாராதநம், தீர்த்தஸ்நாநம், கருமங்களிவைகளிலேயே பற்றுள்ளவனும் மேலான உபாஸநையில் முயல சக்தியற்றவனுமிருக்கிறவனை இந்தவுபாந்நியாஸி சொன்னதுபோல், "விக்கிரஹாராதனையை விட்டுவிடு, தீர்

न तीर्थायतनाश्रयः । केवलं तन्मनोमात्र जयेनासाद्यतेपदम् ॥

* दृश्यते नवसुर्यावत्तावदुल्काप्रयोजनम् । प्राप्ते वशे महानन्देऽथोल्कायाः किंप्रयोजनम् ॥ ११ ॥ तावदास्ते जगत्साधो यावत्तत्वं नवेद्यते । परस्मिन्ब्रह्मणिप्राप्ते जगतः किंप्रयोजनम् ॥ १२ ॥

த்தஸ்நாநம் கருமமிவைகளைவிட்டுவிடு, அவைகளினாற் தோஷமுண்டாகும்" என்றுவுபதேசிக்கப்படுவானானால், அவன் இப்போது செய்துகொண்டிருந்த விக்கிரஹாராதநம் முதலியவைகளை விட்டுவிடுவான். ஆனால், மேலானவுபாஸனையைச்செய்ய அசக்தனாயுமிருக்கிறான். இவன் இரண்டுங்கெட்டவனாவான். எப்படியெனில், விக்கிரஹாராதனையினாலடையப்படும் தெய்வபக்தி விசுவாஸமிவைகளடையவகையில்லை. மேலானவுபாஸனையைச்செய்ய சக்தியுமில்லை. ஆகையால், இப்படிப்பட்ட வுபதேசஞ்செய்வது அவனைக்கெடுத்ததாகவேயாகும். இந்த அர்த்தத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீ பகவத்கீதை-அத்-௩ ல், * "ஓ! அர்ஜுநா! ஆத்து "மதத்துவஞாநமில்லாதவர்கள் கருமத்தைப் பலனிலாசையுள் "ளவர்களாயெப்படிச்செய்கிறார்களோ அப்படி ஆத்துமதத்து "வஞாநியானவன் பலனிலாசையில்லாதவனாய் ஜநங்களுடையப் "பிரயோஜநத்தின்பொருட்டு கருமத்தைச்செய்யவேண்டியது.(ஏ "னென்றால்) ஆத்துமஞாநியானவன், கருமத்தின்பலனில் ஆ "சையுள்ளவர்களாயிருக்கிற அக்ஞாநிகளுக்கு புத்தி பேதத்தை "யுண்டாக்கக்கூடாது. (அவர்கள் புத்திபேதத்தையடையாம "லிருக்கும்பொருட்டு) அந்த ஆத்துமஞாநியானவன் விதிப்படி "தான் கருமத்தைச்செய்யவும்வேண்டியது. ஸகலகருமங்களை "யுஞ்செய்விக்கவும் வேண்டியது."

ஓ! ஜயவிரதா! விக்கிரஹாரதனையைப்பற்றிய தூஷணைகளைக்கேட்டு நீயும் மற்றவர்களும் அந்த விக்கிரஹாராதனையில் விசுவாஸமற்றவர்களாயானதாகச் சொன்னாயல்லவா, இப்படி எல்லோரும் விசுவாஸமற்றவர்களாவார்களானால், அவர்களுக்கு பந்நியாஸி கெடுதியைச் செய்தவனாவான். எவன், எதற்கதிகாரியோ அதிலேயே அவன் முயலும்படி தூண்டவேண்டியது உத்தமபுருஷர்களுடைய கடமை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுந

---

* सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत । कुर्याद्विद्वान् तथा सक्त श्चिकीर्षुर्लोकसङ्ग्रहम् ॥ २५ ॥ न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् । जोषयेत्सर्वकर्माणि विद्वान् युक्तस्समाचरन् ॥ २६ ॥ இந்தவாக்கியங்களை கர்க்கஸம்ஹிதை மாதுரியகண்டம் அத். ௧. சு. ௨௭ லும் காண்க.

ஊைப்பார்த்து "कर्मण्येवाधिकारस्ते = நீ, கருமாதிகாரியாகவேயிருக்கிருய்" என்று உபதேசித்திருக்கிருர். அர்ஜுநன்விஷயத்திலேயே பகவானிப்படிச் சொல்லியிருக்க மற்றவர்கள் விஷயத்திற் சொல்லவேண்டியதென்னவிருக்கிறது.

24. வியாஸபராசராதிமஹரிஷிகள் ஆலயங்களிற்சென்று விக்கிரஹோபாஸனைசெய்யவில்லையென்றுஎதனுலறியப்பட்டது. விக்கிரஹாராதனை விஷயமான பலபுராணங்களை வேதவியாஸரும், விஷ்ணுபுராணத்தைப் பராசரரும் வெளியிட்டிருக்க அவர்கள் விக்கிரஹாராதநஞ்செய்யவில்லையென்று எப்படிச்சொல்லலாம்? விக்கிரஹாராதனைசெய்வதனுற் பாபமுண்டாகுமானுல், அதை அவர்கள் புராணங்களில் ஏன் சிலாகித்துச் சொல்லுகிருர்கள்? அதனுலேயே அவர்கள் விக்கிரஹாராதனையை ஸம்மதித்தவர்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அவர்களைப்போலொத்த மஹரிஷிகள் ஞாநிகளாகையால், அவர்களுக்கு விக்கிரஹாராதனை செய்வதனுலாவது செய்யாததனுலாவதுப் பிரயோஜநாப்பிரயோஜநமிரண்டுமில்லை. ஓ! ஜயவிரதா! விக்கிரஹாராதனை விஷயத்திற்பின்னுமுனக்கேதேனும் ஸந்தேகமிருந்தால் அதைப் பற்றிக் கேட்கலாம்.

25. ஜயவிரதன்—ஓ! ஞாநாநந்தசுவரூபியே! தாங்கள் ஸகல பற்றுகளையும் விட்டு ஏகாங்கியாய் இக்காட்டிற் சஞ்சரித்துக்கொண்டு ஆத்துமஞாநத்திலேயே திருப்தியடைந்திருக்கிறதங்களையபேக்ஷித்து விக்கிரஹாராதநம் மிகவும் தாழ்ந்தவுபாஸனையாயிருந்தும் உலோகோபகாரமாயதைசிலாகித்துச் சொல்லியது, தங்களுடைய மஹிமையைப் பிரகாசிப்பிக்கிறது. இவ்விஷயத்திலெனக்குண்டாயிருந்த ஸகல ஸந்தேகமும் நிவிருத்தியாய்விட்டது. வேறுவிஷயங்களைப்பற்றிக்கேட்க அநுமதிகொடுக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

ஆருவது பிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## ஏழாவது பிரகரணம்.

ஜயவிரதன்:—ஓ! மஹாத்துமாவே! இதுவரையிற் தாங்கள் சொல்லிவந்தப் பிரமாணங்களிற் பரமாத்துமா, ஈசுவரன், பிர்ம்மம், ஆத்துமா, பிரும்மா, விஷ்ணு, சிவன் என்பதுமுதலிய பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்களில், இந்தஸகல ஜகத்திற்கும் கருத்தாவாயும் பிரபுவாயுமிருக்கிறவர் யார்? இவர்களினுயர்வு தாழ்வுண்டா? இவைகளையறிய விரும்புகிறேன்.

2. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! இவ்வுலகத்திற்குமிதைப்போலொற்ற அநேக வுலகங்களுக்கும் கருத்தா ஒருவரேதான். அவருக்குக் குறிப்பான பெயராவது உருவமாவது இல்லை. ஆனால், ஜகத்காரணமான அந்தவஸ்துவை அநேக காரணப்பெயர்களினுற் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அப்படிக்காரணங்களாலுண்டாயிருக்கிற பெயர்களிற் சிலவற்றைக்கூர்மபுராணம் சொல்லுகின்றது:—

கூர்மபுராணம்-அத்-ச-ல், * "பரிசுத்தமான நிர்க்குண "ராஞலும் ஒருவராகவே இருக்கிற அந்தமஹாதேவன் சிருஷ் "டி,ஸ்திதி,லயகுணங்களையாசிரயித்ததனுல், அவர் மூன்றுவிதமா "யிருக்கிறார். எங்கும் வியாபித்திருக்கிறதனுலே பிரும்மாவென்றும், எல்லாவற்றுக்கும் மேலாயிருக்கிறதனுலே பரமேசு "வரனென்றும், ஸகலத்தையும் தன் வசமாயுடையவரானதனு "லும் தானொருவருக்கும் வசப்படாதவரானதனுலும் ஈசுவர "னென்றும், எங்குமிருக்கிறவரானதனுல் ரிஷியென்றும், ஸக

---

* एकोपि सन्महादेव स्त्रियासौ समवस्थितः । सर्गरक्षालयगुणै र्निर्गुणोपि निरञ्जनः । ब्रहत्वाच्च स्मृतोब्रह्मा परत्वात्परमेश्वरः । वशित्वा दप्यवश्यत्वा दीश्वरः परिभाषितः । ऋषि स्सर्वत्रगत्वेन हरि स्सर्वहरो यतः ।

"லபாபங்களையும் நாசஞ்செய்கிறவரானதனால் ஹரியென்றும்,
"உண்டாகாதவரானதனாலும் எல்லாவற்றிற்கும் முந்தியவரான
"தனாலும் சுவயம்புவென்றும், ஸகலப்பிராணிகளுக்குமிருப்பி
"டமாயிருக்கிறதனாலே நாராயணனென்றும், ஸம்ஸாரத்தைநா
"சஞ்செய்கிறதனாலே ஹரனென்றும், எங்கும்வியாபித்திருக்கிற
"தனாலே விஷ்ணுவென்றும், ஸகலத்தையுமறிகிறதனாலே பக
"வானென்றும், ஸகலத்தையும் பிரகாசிப்பிக்கிறதனாலே ஓங்கார
"சுவரூபியென்றும், ஸகலத்தையுமறிகிறஞானசுவரூபியாயிருக்
"கிறதனாலே ஸர்வக்ஞனென்றும், ஸகலரூபியாயிருக்கிறதனா
"லே சர்வனென்றும், நிர்மலராயிருக்கிறதனாலே சிவனென்று
"ம், எங்கும்நிறைந்திருக்கிறதனாலே விபுவென்றும்,ஸகலதுக்கங்
"களையும் நிவிருத்திக்கிறதனாலே தாரகனென்றுஞ் சொல்லப்படு
"கிறார். இந்தவிஷயத்தில் வெகுவாய்ச்சொல்லுவதிற் பிரயோஜந
"மென்ன ? ஸகலஜகத்தும் பிர்ம்மசுவரூபத்தினாலேவியாபிக்கப்
"பட்டதாயிருக்கிறது. அந்தப்பரமேசுவரன்,வெவ்வேறாயும் பல
"வாயுமிருக்கிற அநேகரூபங்களாய் விளையாடுகிறார்."

நிராலம்போபநிஷத்தில், * "பரமாத்துமா யார்? தேகாதிக
"ளைக்காட்டிலும் அதிசிரேஷ்டமாயிருக்கிறதனாலே பிர்ம்மமே
"பரமாத்துமா. அதுவே பிரும்மா விஷ்ணு உருத்திரன்."

ஆத்துமபோதோபநிஷத்தில், † "ஸகலபூதங்களுக்குள்
"ளே இருக்கிறவனையும், காரணபுருஷனையும்(தனக்கு) காரணமற்
"றவனையும், ஒன்றாயும், பிர்ம்மமாயும், ஓங்காரசுவரூபியாயுமிரு
"க்கிறவன், நாராயணன்."

---

अनुत्पादाच्च पूर्वत्वात् स्वयंभू रिति सस्मृतः । नराणामयनं यस्मा त्तेन नारायणस्स्मृतः । हर स्संसारहरणा द्विभुत्वा द्विष्णुरुच्यते । भगवान् सर्वविज्ञाना दवनादो मितिस्मृतः । सर्वज्ञ स्सर्वविज्ञानात्सर्वस्सर्वमयो यतः । शिव स्स्या न्निर्मलोयस्मा द्विभु स्सर्वगतोयतः । तारणात्सर्वदुःखानां तारकः परिगीय्यते । बहुनात्र किमुक्तेन सर्वं ब्रह्ममयं जगत् । अनेकभेदभिन्नस्तु क्रीडते परमेश्वरः ॥

* परमात्मेतिच । देहादेः परतरत्वात् ब्रह्मैव परमात्मा । सब्रह्मा सविष्णु स्सरुद्रः ॥

† सर्वभूतस्थमेकं नारायणं कारणपुरुष मकारणं परं ब्रह्मोम् ॥

ஸ்கந்தோபநிஷத்தில், * "சித்ஜடங்களைப்(ஸாக்ஷியாய்) பார்"க்கிறவனெவனோ அந்த அச்சுதன் ஞாநத்தையே சுவரூபமாயு"டையவன். அவனே மஹாதேவன். அவனே மஹாஹரி. அவ"னே ஜியோதிஸ்ஸுக்கெல்லாம் ஜியோதிஸ்ஸுவரூபன். அவனே "பரமேசுவரன். அவனே பரப்பிர்ம்மம்."

சிவபுராணம் ஞாநஸம்ஹிதை—அத்-எசு-சு-க0-ல், † "அது"வே (பரமாத்துமாவே) முந்தியதென்றும், பிர்ம்மமென்றும், "சிவனென்கிற பெயரையுடையதென்றுஞ் சொல்லப்படுகிறது. "ஆகாசமானதெப்படி ஸகலவிடத்திலும் வியாபித்திருக்கிறதோ "அப்படி இந்தப் பிர்ம்மமானது எங்கும் வியாபித்திருக்கிறதெ"ன்று எண்ணப்பட்டிருக்கிறது."

ஷை ஸம்ஹிதை-அத்-எஎ-சு-ந-ல், ‡ "எந்த நிர்க்குணமா"ன பரமாத்துமாவினிடத்திலிருந்து இந்த ஸகலப்பிரபஞ்சமு"முண்டாயிற்றோ அதையே சிவனென்கிற பெயருடையதாக "வேதவேதாந்திகளறிகிறார்கள்."

விஷ்ணுபுராணம்-அம்சம்-கூ-அத்-எ-சு-கூ0-ல், § "சரா"சரங்களடங்கிய ஜகத்தாகிற பிரபஞ்சமானது பரப்பிர்ம்மசுவ"ரூபமாகிற விஷ்ணுவினுடைய சக்தியோடு கூடியிருக்கிறது."

வராஹபுராணம்-அத்-எஉ-சு-கஉ-ல், $ "நாராயணன், சிவ"ன், விஷ்ணு, சங்கரன், புருஷோத்தமனென்கிற பெயர்களி"லெந்தப்பெயரினாலும் சாசுவதமான பரப்பிர்ம்மந்தான் சொல்"லப்படுகிறது."

---

* चिज्जडानां तु यो द्रष्टा सोच्युतो ज्ञानविग्रहः । सएवहि महादेव स्सएवाहि महाहरिः । सएवज्योतिषां ज्योति स्सएवपरमेश्वरः । सएव हि परंब्रह्म ॥

† तदेवं प्रथमं प्रोक्तं ब्रह्मैव शिवसंज्ञितम् । आकाशं व्यापकं यद्वदिदं ब्रह्म तथास्मृतम् ॥

‡ यत स्सर्वं समुत्पन्नं निर्गुणात् परमात्मनः । तदेव शिवसंज्ञं हि वेदवेदान्तिनो विदुः ॥

§ एतत्सर्वमिदं विश्वं जगदेतच्चराचरम् । परब्रह्म स्वरूपस्य विष्णो श्शक्तिसमन्वितम् ॥

$ नारायणः शिवो विष्णु श्शङ्करः पुरुषोत्तमः । एतेषु नामभि र्ब्रह्म परं प्रोक्तं सनातनम् ॥

3. மேலும், ஸகலத்திலும், உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கிறதனால் அந்த ஜகத்காரணவஸ்துவானது பிர்ம்மமென்று சொல்லப்படுகிறது. பிர்ம்மமென்கிற பெயரானது வேதத்திற்கும், பிரகிருதிக்கும்,யாகத்திற்கும், பின்னுஞ்சில வஸ்துக்களுக்குங்கூட சொல்லப்படுகிறதாகையால், அவைகளுக்கந்நியமானதென்றறிவதற்காக பரப்பிர்ம்மம், அதாவது—சிரேஷ்டமானப் பிர்ம்மமென்று சொல்லப்படுகிறது. ஸகலத்திற்குமாதாரமாய் அல்லது இருப்பிடமாயிருக்கிறதனால் ஆத்துமாவென்று சொல்லப்படுகிறது. ஆத்துமாவென்கிற பெயரானது ஜீவனுக்கும், தேகத்திற்கும், மனதிற்கும், இந்திரியத்திற்குஞ் சொல்லப்படுமாகையால், அவைகளுக்கந்நியமென்று குறிப்பிடுவதற்காக பரமாத்துமாவென்று சொல்லப்படுகிறது. இவ்விதமாகவே அநேககோடி காரணப்பெயர்கள் அந்த ஜகத்காரணவஸ்துவினிடத்திற் சொல்லப்படுகிறது. பிரும்மா, விஷ்ணு, சிவனென்கிற பெயர்களும் அந்தப் பிர்ம்மத்தினுடைய பெயர்களேதானென்று மேலாகக்குறித்துக்காட்டியப் பிரமாணங்கள் சொல்லுகின்றன. ஆகையால், இதற்குமுந்தி நான் சொல்லிவந்த பெயர்களெல்லாம் ஜகத்காரணமான ஒரேவஸ்துவைத்தான் சொல்லுகின்றனவென்று நீ அறி. ஸகலஜகத்திற்கும் ஒரே பரமாத்துமாவைத்தவிற இரண்டாவதாக யாதொரு வஸ்துவுமில்லையாகையால் எந்தப்பெயரினாற்சொன்னாலும் அந்த ஒரேவஸ்துவைச் சொன்னதாகவேயாகும்.

4. ஜயவிரதன்:—ஓ! குருசுவாமிகளே! அந்த ஜகத்காரணமான பிர்ம்மத்தினுடைய சுவரூபம், இலக்ஷணம், மஹிமை இவைகளையெனக்குச் சொல்லவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

5. ஸுசர்ம்மா:—ஓ! குழந்தாய்! அந்தப் பிர்ம்மசுவரூபத்தை யுள்ளபடிசொல்ல ஒருவருஞ்சக்தியுள்ளவர்களல்ல. சுருதியுமப்படியேசொல்லுகிறது.

யோகதத்துவோபநிஷத்தில், * "வாக்குக்கு (வேதத்திற்"கு) எட்டாதபதத்தைச் (வஸ்துவை) சொல்வதற்கு தேவதை"களாலுங்கூட முடியாது. ஆகையால், சுவப்பிரகாச சுவரூபமா

---

* अनिर्वाच्यपदं वक्तुं नशक्यन्तै स्सुरैरपि । तस्मात्प्रकाशरूपंतत् किं शास्त्रेण प्रकाश्यते ॥

"கியப் பிர்ம்மமானது, சாஸ்திரத்திளுலெப்படிப் பிரகாசிக்கப் "படும்?"

தைத்திரீயோபநிஷத்-உ-கூ-ல், * "வாக்குகள் (வேதங்க "ள்)எந்தபிர்ம்மத்தினுடைய ஆநந்தசுவரூபத்தை யறியமாட்டா "மல் மனதோடு திரும்பிவிடுகின்றனவோ அந்தபிர்ம்மத்தைய "றிந்த வித்துவான் ஒன்றிலிருந்தும் பயப்படுகிறதில்லே."

பிர்ம்மசுவரூபத்தைச் சொல்லுஞ்சக்தியானது சுருதிக ளுக்காவது பிரும்மாதிதேவதைகளுக்காவது இல்லையென்ருல், அற்பனுகிய நான் எப்படிச்சொல்ல சக்தியுடையவனுவேன். ஆனல் பிர்ம்மலக்ஷணத்தை சுருதி முதலியப்பிரமாணங்கள் சொல்லுகின்றன. அவைகளிற் சிலதை யுனக்குச்சொல்லுகிறேன்.

ஈசாவாஸியோபநிஷத்-க-ல், † "இந்த ஸகலப்பிரபஞ்சத் "திலும் எதெது காணப்படுகிறதோ, அப்படிப்பட்ட ஜகத்தெல் "லாம் ஈசனுகிற அந்த பிர்ம்மத்திளுற் சூழப்பட்டிருக்கிறது."

ஷெ உபநிஷத்-அ-ல், ‡ "அந்த ஈசுவரனுனவர் எங்கும் "நிறைந்தவர். ஒளிபொருந்தியவர். சரீரமற்றவர். இரணம், (அ "சைவு) அற்றவர். நரம்பற்றவர். பரிசுத்தமானவர். பாபஸம்ப "ந்தமற்றவர். எல்லாமறிந்தவர். மனதையாள்பவர். ஸகலத்திற் "கும் மேலானவர். தானுகவேயிருக்கிறவர்."

கடவல்லியுபநிஷத்-உ-௨0-ல், § "ஆத்துமா அணுவுக்க "ணுவாயும் பெரிதிலும் பெரிதாயுமிருக்கிறது. இந்தப்பிராணி "களுடைய ஹிருதயகுஹையிலிருக்கிறது."

ஷெ உபநிஷத்-உ-௨௨ ல், $ "சரீரமில்லாததும் அநித்தியங் "களான ஸகலசரீரங்களிலும் (ஆகாசம்போல்) இருக்கிறதும்

---

* यतोवाचोनिवर्तते । अप्राप्यमनसासह । आनन्दंब्रह्मणोविद्वान् । नबिभेतिकुतश्चनेति ॥

† ईशावास्यमिदꣳसर्वंयत्किञ्चजगत्यांजगत् ॥

‡ सपर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरंशुद्धमपापविद्धम् । कविर्मनीषीपरिभूः स्वयंभूः ॥

§ अणोरणीयान्महतोमहीयानात्मास्यजन्तोर्निहितोगुहायाम् ॥

$ अशरीरं शरीरेष्वनवस्थे ष्ववस्थितम् । महान्तं विभुमात्मानं मत्वाधीरो नशोचति ॥

"மஹாபெரிதும், எங்கும் வியாபித்திருக்கிறதுமான ஆத்துமா "வையறிந்து ஞானியானவன் துக்கத்தையடைகிறதில்லை."

௸-கடவல்லியுபநிஷத்-௩-௧௫-ல், * "எது சத்தமில்லாத "தோ, உணர்வில்லாததோ, உருவமில்லாததோ, அழிவற்றதோ, "இரஸமில்லாததோ, முக்காலத்திலுமுள்ளதோ, வாஸனையற் "றதோ, ஆதியற்றதோ, முடிவற்றதோ, பெரிதிலும்பெரிதோ, "சாசுவதமாயுள்ளதோ, அதுதான் பிர்ம்மம்."

கடவல்லியுபநிஷத்-௫-௯-ல், † "உலகத்திற் பிரவேசித்தி "ருக்கிற ஒன்றான அக்நியானது (கட்டைமுதலியவைகளில்) ப "லரூபமாய்க்காணப்படுகிறது. அப்படிப்போல ஸகலபூதங்க "ளிலுமிருக்கிற ஒரே ஆத்துமாவானது பலரூபமாய், ஒவ்வொரு "பூதத்திலும் உள்ளும் வெளியுங்காணப்படுகிறது."

மேற்படி- உபநிஷத்-௫-௧௨-ல், ‡ "எவன் ஒருவனாகவே "யிருந்துகொண்டு ஸகலஜகத்தையும் தன்னதீநமாய்வைத்துக் "கொண்டிருக்கிறானோ, எவன் ஸகலப்பிராணிகளுக்குமாத்து "மாவாகவிருக்கிறானோ, எவன் ஒரேரூபமாயிருந்துகொண்டு அ "நேக உபாதிபேதங்களினாற் பலரூபமாய்க்காணப்படுகிறானோ "அவனைத் தனக்குள்ளிருக்கிறதாக எந்த தீரர்கள் பார்க்கிறார்க "ளோ அவர்களுக்கு அழிவற்ற சுகமுண்டாகிறது. மற்றவர்க "ளுக்கில்லை."

மேற்படி-உபநிஷத்-௫-௧௫-ல், § "அந்த பிர்ம்மத்தினிட "த்திற் சூரியனாவது,சந்திரனாவது, நக்ஷத்திரங்களாவது, மின் "னலாவது, பிரகாசிக்கமாட்டா. இந்த அக்நி எப்படிப் பிரகா

---

* अशब्दमस्पर्श मरूपमव्ययं तथारसं नित्यमगन्धवच्चयत् । अनाद्यनन्तं महतः परं ध्रुवम् ॥

† अग्निर्यथैको भुवनं प्रविष्टो रूपंरूपंप्रतिरूपो बभूव । एकस्तथासर्वभूतान्तरात्मा रूपंरूपं प्रतिरूपो बहिश्च ॥

‡ एको वशी सर्व भूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति । तमात्मस्थं येनुपश्यन्ति धीराः तेषां सुखं शाश्वतं नेतरेषाम्। இந்த வாக்கியத்தை சுவேதாசுவதரோபநிஷத்து-௬.௧௨, லுங்காண்க.

§ न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमाविद्युतो भान्ति कुतोयमाग्निः।

"சிக்கும்? தானகவேப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அந்த "பிர்ம்மத்தையநுஸரித்து இந்த சூரியன் முதலியவெல்லாம் பிர "காசிக்கிறது. அந்த பிர்ம்மத்தினுடைய பிரகாசத்தினற்றன் "இந்த ஸகலப் பிரபஞ்சமும் பிரகாசிக்கிறது."

கடவல்லி உபநிஷத்-௬-௯-ல், * "இந்த பிர்ம்மத்திற்கு ரூ "பங்காணுகிறதில்லை. இதையொருவனுங்கண்ணுற் பார்க்கிற "தில்லை. நிச்சயசுவரூபமான யதார்த்தக்ஞானத்தினலறிகிரு் "கள். அப்படியறிந்தவர்கள் மோக்ஷத்தையடைகிருர்கள்."

முண்டகோபநிஷத்-க-க-௬-ல், † "எந்த பிர்ம்மமானது "ஞானேந்திரியங்களினலறியக் கூடியதல்லவோ, கருமேந்திரி "யங்களாற் கிரஹிக்கப்படாததோ, வம்சமற்றதோ, வெளுப்புக் "கறுப்பு முதலிய வர்ணமற்றதோ, கண்காதில்லாததோ, கை "யில்லாததோ, எப்போதுமுள்ளதோ, ஸகலவஸ்துவாயுமிருக் "கிறதோ, எங்கும்வியாபித்திருக்கிறதோ, சூக்ஷ்மத்திலும் சூ "க்ஷ்மமாயிருக்கிறதோ, அழிவற்றதோ, பூதங்களுக்கெல்லாம் "ஆதிகாரணமானதோ அந்த பிர்ம்மத்தை ஞானிகள் எங்கும் "பார்க்கிருர்கள்."

ஷை-உபநிஷத்-க-க-எ-ல், ‡ "சிலந்திப்பூச்சியானது, எப் "படி (தன்னிடத்திலிருந்தேநூற்களை)உண்டாக்குகிறதோ அதை "மறுபடியும் கிரஹித்துக்கொள்ளுகிறதோ அப்படிப்போலவும், "பூமியிலிருந்து எப்படிப் பலமரஞ்செடி கொடிகளுண்டாகின்ற "னவோ, உயிருடனிருக்கிற புருஷனிடத்திலிருந்து தலை, உடல்

---

तमेवभान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥ இந்த வாக்கியத்தை முண்டகம், உ, ௪, ௧0, சுவேதாசுவதரம்-௬-௧௪-இவைகளிலும் காண்க,

* नसन्दृशे तिष्ठति रूपमस्य नचक्षुषा पश्यति कश्चनैनम् । हृदा मनीषा मनसाभिक्लृप्तोय एतद्विदुरमृतास्ते भवन्ति ॥ இந்தவாக்கியத்தை-தைத்திரீயம் நாராயணீயம் - ௬ - ௩ - லும், சுவேதாசுவதரம்-௪-உ0லும் காண்க.

† यत्तदद्रेश्यमग्राह्य मगोत्र मवर्ण मचक्षु श्श्रोत्रं तदपाणिपादं नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः ॥

‡ यथोर्णनाभि स्सृजते गृण्हतेच यथा पृथिव्या मोषधयः संभवन्ति ।

"களிலெப்படி மயிர்களுண்டாகின்றனவோ அப்படிப்போலவும்
"இந்த ஸகலப்பிரபஞ்சமும் நாசமற்றதாகிய பிர்ம்மத்திலிரு
"ந்துண்டாகின்றன."

ஂ௨ முண்டகோபநிஷத்-௩-க-எ-ல், * "அந்த பிர்ம்மமான
"து, பெரிது. சுவயம்பிரகாசமுள்ளது. நினைப்புக்கெட்டாத சு
"வரூபமுடையது. சூக்ஷ்மத்திற்கெல்லாம் சூக்ஷ்மமானது. இப்
"படி விளங்கிக்கொண்டிருக்கிற அந்த பிர்ம்மமானது, தூரத்திற்
"கெல்லாந்தூரமாயும், ஸமீபத்திற்கெல்லாம் ஸமீபமாயுமிருக்
"கிறது. பார்க்கையிற் தன்னிடத்திலேயே ஹிருதயகுஹையில்
"விளங்குகிறது."

தைத்திரீயோபநிஷத்-௩-க-ல், † "இந்த ஸகலபூதங்களும்
"எதனிடத்திலிருந்துண்டாகின்றனவோ, உண்டானவைகள் எ
"தனலுயிர்வாழ்கின்றனவோ, எதிற்போயடைகின்றனவோ அ
"தையடையவிரும்புங்கள். அதுதான் பிர்ம்மம்."

தைத்திரீயோபநிஷத்-நாராயணீயம்-சு-கஉ-ல், ‡ "எவனைக்
"காட்டிலும் வேறானதாயும், வேறல்லாததாயுமற்பமேனுமில்லை
"யோ, எவனைக்காட்டிலுஞ்சிறிதாவது பெரிதாவது அற்பமே
"னுமில்லையோ, விருக்ஷம்போற் சலிக்காமல் சுவப்பிரகாசத்
"திலேயே ஒருவனாகவிருக்கிறானோ அப்படிப்பட்ட புருஷனா
"லே ஸகலப்பிரபஞ்சமும் நிறைந்திருக்கிறது."

பிரும்மோபநிஷத்தில், § "ஒருவராயும், பிரகாசசுவரூபி
"யாயும், ஸகலபூதங்களினும் மறைந்திருக்கிறவராயும், ஸகலத்

---

तथासतः पुरुषात्केशलोमानि तथाक्षरा त्संभवतीहविश्वम् ॥

* बृहच्च तद्दिव्य मनन्तरूपं सूक्ष्माच्च तत्सूक्ष्मतरं विभाति । दूरात् सुदूरे तदिहान्ति केच पश्यत्स्विहैव निहितं गुहायाम् ॥

† यतोवा इमानि भूतानि जायन्ते । येनजातानि जीवन्ति । यत्प्रयन्त्यभिसंविशन्ति । तद्विजिज्ञासस्व । तत् ब्रह्मेति ॥

‡ यस्मात् परं नापरमस्ति किञ्चित् । यस्मान्नाणीय्यो नज्यायोस्ति कश्चित् । वृक्षइव स्तब्धोदिवि तिष्ठत्येकस्ते नेदं पूर्णं पुरुषेण सर्वम् ॥ இந்த வாக்கியத்தை சுவேதாசுவதரம்-௩-கூ-லும் காண்க.

§ एको देव स्सर्वभूतेषु गूढ स्सर्वव्यापी सर्वभूतान्तरात्मा । कर्माध्य-

"திலும் வியாபித்திருக்கிறவராயும், ஸகலபூதங்களுக்கும் அந்த "ராத்துமாவாயும், தொழிலுக்கிறைவனுயும், ஸகலபூதங்களுக் "கிருப்பிடமாயும், ஸகலத்தையும் ஸாக்ஷிபோற்பார்க்கிறவராயு "ம், சைதந்நியசுவரூபராயும், குணமற்றவராயுமிருக்கிறவர் யா "ரோ அவர்தான் எங்கும் நிறைந்திருக்கிறார்."

சுவேதாசுவதரோபநிஷத்-ந-கக-ல், * "அந்த பிர்ம்ம "மானது கையின்றி கிரஹிக்கிறது. காலின்றி நடக்கிறது. க "ண்ணின்றி பார்க்கிறது. காதின்றிக்கேட்கிறது. அது ஸக "லத்தையுமறிகிறது. அதையறிகிறதரிது. அதற்கு வேறு "இலக்ஷணஞ்சொல்லக்கூடாமையால் ஆதிபுருஷனென்று சொ "ன்னார்கள்."

நரஸிம்மோத்தரதாபிந்யுபநிஷத்-அ-கூ-ல், † "அந்த ஜி "யோதிசுவரூபமானது(பிர்ம்மமானது) ஸகலப்பிரகாசத்திற்கும் "முந்தியதாய் நன்றாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அது "இரண்டாவதற்றது. சிந்திக்கக்கூடாதது. அடையாளமில்லாத "து. சுவப்பிரகாசமாயுள்ளது. ஆநந்தகநமானது. ஆகாசம்போ "ற் காணப்படாதது."

ஷ-உபநிஷத்-அ-அ-ல், ‡ "இந்த ஆத்துமா, ஸத்கநன். "சித்கநன். ஆநந்தகநன். ஏகரஸன். இவனொருவனே."

ஸர்வஸாரோபநிஷத்தில், § "பிர்ம்மமெப்படிப்பட்டது? "எவ்வித உபாதியுமற்றது (உபாதியென்றால், தனக்கியற்பான "ரூபமன்றி வேறொரு ரூபம்போற்காணுகிறது. அதாவது, சுத் "தஸ்படிகமானது அதையடுத்துள்ள செம்பருத்திப்பூநிறமாய்

---

क्ष स्सर्वभूताधिवास स्साक्षीचेता केवलो निर्गुणश्च । இந்த வாக்கியத்தை சுவேதாசுவதரம்-சு-கக-லும் காண்க-

* अपाणि पादो जवनो गृहीता पश्यत्यचक्षु स्सशृणोत्यकर्णः । सवेत्ति वेद्यं न च तस्यास्ति वेत्तातमाहु रग्र्यं पुरुषं महान्तम् ॥

† तज्योति रस्य पुरत स्सुविभात मद्वैत मचिन्त्य मलिङ्गं स्वप्रकाश मानन्दघनं शून्यम् ॥

‡ सत्घनोयं चित्घन आनन्दघन एवैकरसोह्ययमात्मैकलएव ॥

§ किं ब्रह्म । सर्वोपाधिविमुक्तं निर्विशेष चिन्मात्रं सदद्वैतमानन्दममायं ब्रह्म ॥

"காண்பதுபோல). யாதொருவிசேஷமுமில்லாத சின்மாத்திர "மானது. ஸத்தானது. இரண்டாவதற்றது. ஆநந்தமானது. மா "யையற்றது. இப்படிப்பட்டதெதுவோ அதுதான் பிர்ம்மம்."

நிராலம்போபநிஷத்தில், * "பிர்ம்மம்யாது? மஹதகங் "காரபூமிஜல அக்நி வாயுவாகாசங்களாகிற பூதங்களடங்கிய "பெரிதானரூபமாகிய அண்டகோசத்தினற் கருமஞாநார்த்த "ரூபங்களாய் விளங்குகிறதாயும், இரண்டாவதற்றதாயும், ஸக "லசக்தியுடையதாயும், ஆதிமுடிவற்றதாயும், சுத்தம், சிவம், "சாந்தம், நிற்குணம் இப்படிப்பட்ட சப்தங்களாற் சொல்ல "த்தக்கதாயும் வாக்குக்கெட்டாததாயுமிருக்கிற சைதந்நியமே "பரப்பிர்ம்மம்."

ஆத்துமபோதோபநிஷத்தில், † "ஆத்துமாவென்கிற பெ "யரையுடைய பிர்ம்மமானது மங்களசுவரூபமாயும் எப்போதுமி "ரண்டாவதற்ற ஒன்றாயும், அகண்டசுவரூப மாத்திரத்தினலே "யே விளங்கிக்கொண்டிருக்கிறது."

மஹாநாராயணோபநிஷத்-அத்-க-ல், ‡ " பிர்ம்மமானது, "ஆதி, நடு, முடிவற்றது. இந்த ஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மந் "தான். மாயைக்கும் குணங்களுக்குமப்புறப்பட்டதுதான் பி "ர்ம்மம். எல்லையற்றதும் அளவற்றதும் அகண்டபரிபூர்ணமா "னதும் பிர்ம்மந்தான். இரண்டாவதற்றதாயும் பரமாநந்தசுத் "த புத்த முக்த ஸத்தியசுவரூபமாயும், எங்கும் வியாபித்ததாயும், "பிரிவற்றதாயுமிருக்கிறதுதான் பிர்ம்மம்."

---

* किं ब्रह्मेति होवाच । महदहंकारपृथिव्यप्तेजोवाय्वाकाशात्मकत्वेन बृहद्रूपेणाण्डकोशेन कर्मज्ञानार्थरूपतया भासमान मद्वय मखिलोपाधिविनिर्मुक्तं तत्सकलशक्त्युपबृंहित मनाद्यन्तं शुद्धं शिवं शान्तं निर्गुणमित्यादिवाच्य मनिर्वाच्यं चैतन्यं परं ब्रह्म ॥

† आत्मसंज्ञ श्शिवश्शुद्ध एकएवा द्वयस्सदा । ब्रह्मरूपतया ब्रह्मकेवलं प्रतिभासते ॥

‡ आदिमध्यान्त शून्यं ब्रह्म । सर्वं खल्विदं ब्रह्म । मायातीतं गुणातीतं ब्रह्म । अनन्त मप्रमेयाखण्डं परिपूर्णं ब्रह्म । अद्वितीयपरमानन्दशुद्धबुद्धमुक्तसत्यस्वरूपव्यापकाभिन्नापारिच्छिन्नं ब्रह्म ॥

அந்நபூர்ணோபநிஷத்-அத்.ச-ல், * "இந்தப் பிர்ம்மமான "து, ஸகலபூதங்களுக்குமாத்துமாவாயிருக்கிறது. ஞானத்தி "லறியத்தகுந்தது. ஸத்தியம், ஞானம், ஸுகம், இரண்டாவ "தற்ற ஒன்றுயிருத்தலிவைகளை இயற்கையாயுடையது."

பத்துமபுராணம்-பாதாளகண்டம்-அத்-சகூ-ல், † (ஓ! பரமா "த்துமாவே!) "ஒருவராகவேயிருக்கிற நீர், ஸாக்ஷாத் புருஷனெ "ன்றும் பிரகிருதிக்கு வேறுபட்டவரென்றுஞ் சொல்லப்படுகி "றீர். நீர், உம்முடைய சுவற்பாம்சத்தினுலிவ்வுலகத்தை சிருஷ் "டிக்கிறீர். இரக்ஷிக்கிறீர். அழிக்கிறீர். உருவமற்றவராகிய நீர் "இந்தஸகலஜகத்திற்கும் முக்கியகாரணராயுமிருக்கிறீர். நீர் ஒ "ருவராகவேயிருந்தாலும் பிரகிருதியோடுகூடி மூன்றுவித (பிரு "ம்மா, விஷ்ணு, சிவ) ரூபத்தைக் கிரஹிக்கிறீர்."

சிவபுராணம்-ஞானஸம்ஹிதை-அத்-எகூ-ல், ‡ "நிர்குணமா "யும், உபாதியற்றதாயும், நிர்மலமாயும், அழிவற்றதாயும், அப்ப "டியே சிவப்பு, மஞ்சள், வெளுப்பு, நீலம் (ஸத்துவரஜஸ்தமஸ் "மிசிரமிக்குணங்கள்) அற்றதாயும், வேதங்கள், எதற்கு இலக்ஷ "ணஞ் சொல்லமாட்டாமல் மனதுடன் திரும்பிவிடுகின்றனவோ "அப்படிப்பட்டதே முந்தியதென்றும், சிவமென்கிற பெயரையு "டையதென்றுஞ் சொல்லப்படுகிறது. ஆகாசமானது எப்படி "ஸகலவிடத்திலும் வியாபித்திருக்கிறதோ, அப்படி இந்தப் பி "ர்ம்மமானது எங்கும் வியாபித்திருக்கிறதென்று சொல்லப்படு "கிறது."

---

* प्रतिष्ठासर्वभूतानां प्रज्ञानघनलक्षणः । तद्विद्याविषयं ब्रह्म सत्यज्ञानसुखाद्वयम् ॥

† एकस्त्वं पुरुषस्साक्षात् प्रकृतेः पर ईर्यसे । य स्स्वांशकलयाविश्वं सृजत्यवति हन्तिच ॥ ६ ॥ अरूपस्त्वा मशेषस्य जगतः कारणं परम् । एकएव त्रिधारूपं गृण्हासि कुहकान्वितः ॥ ७ ॥

‡ निर्गुणो निरुपाधिश्च निरञ्जनोऽव्ययस्तथा । नरक्तो नचपीतश्च नश्वेतो नीलएवच ॥ ८ ॥ यतोवाचो निवर्तंते अप्राप्य मनसा सह । तदेवं प्रथमं प्रोक्तं ब्रह्मैवशिवसंज्ञितम् ॥ ९ ॥ आकाशं व्यापकं यद्वदिदं ब्रह्म तथास्मृतम् ॥ १० ॥

காளிகாபுராணம்-அத்-கஉ-சு-எ-ல், * "ஸகலத்திற்கும் ஆத் "துமாவாயும், நித்தியமாயும், இந்திரியங்களற்றதாயும், பிரக்ஞா "நத்தினல் விசேஷமற்றதாயும், இரண்டாவதற்றதாயுமிருக்கிற "பரப்பிர்ம்மம் ஒன்றேயிருந்தது."

6. ஓ! ஜயவிரதா! நீகேட்டபடி பிர்ம்மசுவரூபத்தையும் அதன் இலக்ஷணத்தையும், மஹிமையையும் இந்தப்பிரமாணங்கள் தெளிவாய்ச்சொல்லுகின்றன. இரண்டாவதற்ற ஒன்றான அந்த பிர்ம்மமே ஸர்வசிரேஷ்டமானது. அதற்கு ஸமானமாகவாவது மேலாகவாவது யாதொருவஸ்துவுமில்லை. இனி எதைக் கேட்கவிரும்புகிறயோ அதைக்கேட்கலாம்.

7. ஜயவிரதன்:—ஓ! சுவாமீ! ஜகத்காரணமான பிர்ம்மத்திற்கு குணமாவது, சரீரமாவது, உருவமாவதில்லையென்று மேற்கண்டவாக்கியங்கள் சொல்லுகின்றன. பிரும்மாவென்பவர் ஸத்தியலோகத்திலிருக்கிறதாகவும், விஷ்ணுவென்பவர் வைகுண்டத்திலிருக்கிறதாகவும், சிவனென்பவர் கைலாஸத்திலிருக்கிறதாகவும், அவரவர்களுக்குச் சரீரம் ரூபம் முதலியவைகளிருக்கின்றனவென்றும், அவர்களிற் பிரும்மா உலகத்தைச் சிருஷ்டிக்கிறவராகவும், விஷ்ணு உலகத்தை இரக்ஷிக்கிறவராகவும், சிவன் உலகத்தையழிக்கிறவராகவும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த மூர்த்திகளிற் சிவனென்பவரே ஜகத்காரணமான பரமாத்துமாவென்றுஞ் சொல்லுகிறார்கள். பின்னுஞ்சிலர் விஷ்ணுவே ஜகத்காரணமான பரமாத்துமாவென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவிஷயத்திலெனக்கு எது ஸரியென்பது தெரியவில்லை. ஆகையால், தாங்கள் கிருபைசெய்து சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

8. ஸுசர்ம்மா:—இவ்வுலகத்திற் பலமதங்களேற்பட்டிருக்கின்றன. ஒருமதஸ்தர், பிர்ம்மம் நிர்குணமானது. ரூபமாவது, அவயவமாவது, வர்ணம்முதலியவையாவது அதற்கில்லை. ஆகாசம்போல் எங்கும் நிறைந்திருக்கிறது. அந்தப்பிர்ம்மத்தினுடைய சித்சக்தியாகிய சுத்தஸத்துவமாயையை உபாதியாகக்கொண்டு பிரும்ம விஷ்ணு உருத்திரர்களென்கிற மூர்த்திகளாகச்சொல்லுகிறார்கள். எப்படியெனில், அந்தப் பிர்ம்மசக்தியானது ஸத்

* एकमासीत् परंब्रह्म सूक्ष्मं नित्यमतीन्द्रियम् । अव्यक्तज्ञानरूपेण द्वैतहीना विशेषणम् ॥

துவரஜஸ்தமோகுணங்களாய் மாறுதலையடைந்தது. ஸத்துவ குணத்தில் ஸத்துவசுவரூபம் விஷ்ணுவென்றும், ஸத்துவகுண த்தில் இரஜோகுணசுவரூபம் பிரும்மாவென்றும், ஸத்துவகுண த்திற் தமோகுணசுவரூபம் சிவனென்றும், அவர்கள் ஸர்வக்ஞர் களாகையாலந்தந்தகுணங்களை, தொழிலைச்செய்யும்பொருட்டுத ங்கள் சுவாதீநமாய்வைத்துக்கொண்டு ஸிருஷ்டிஸ்திதிஸம்ஹார ம் முதலிய காரியங்களைச்செய்துவருகிறார்களென்றுஞ் சொல்லு வார்கள். மற்றொரு மதத்தார், அந்த ஜகத்காரணவஸ்துவாகிய பரமாத்துமா நிர்குணமாயும் ரூபம் முதலியன் வில்லாதவராயும் ஆகாசம்போல் எங்கும் நிறைந்திருந்தாலும் உபாஸகர்களுக்கு அநுக்கிரஹஞ்செய்வதற்கும் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரியங் களைச்செய்வதற்குமாக நாராயணனென்கிற கரசரணாதி அவயவ ங்களோடுகூடிய ஒருதேகத்தை சுவீகரித்துக்கொண்டு வைகுண் டமென்கிற ஸ்தலத்தில் இலக்ஷ்மியோடு வாஸஞ்செய்வதாகவும், அந்தரூபமானது உலகத்தில் மனிதர்களுக்குப்போல இழிவான ஸத்துவரஜஸ்தமோகுண சுவரூபமானதேகமல்லவென்றும் அத் தேகமானது அப்பிராகிருத திவ்வியமங்களசுவரூபமென்றுஞ் சொல்லுவார்கள். மற்றொருமதத்தார், ஜகத்காரணவஸ்துவான து வைகுண்டத்திலிருக்கிற அந்த நாராயணனே என்றும் அவரு டையதேகம் அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரஹமென்றும் கரசரணாதியவயவங்களோடுகூடிய அந்தசுவரூபமே இடைவி டாமலெங்கும் எல்லாவஸ்துக்களிலும் நிறைந்திருக்கிறதாகவுஞ் சொல்லுவதுமல்லாமல் அந்தப்பரமாத்துமா எப்போதும் ரூபத் தோடு கூடினவரேயன்றி ரூபமல்லாதவரல்லவென்றுஞ் சொல் லுவார்கள். பின்னுஞ்சில மதத்தார், சிவன், பரமேசுவரன், சங்கரன் முதலிய பெயர்களினாற் சொல்லப்படுகிறவரும், கைலா ஸத்தில் முக்கண் முதலிய அவயவங்களோடுகூடிய சரீரமுடைய வரே பரமாத்துமாவென்றும், பின்னுஞ்சிலர் அந்தச்சிவனே ரூ பம் குணம் முதலியவையற்றவராய் எங்கும் நிறைந்திருக்கிறவ ரென்றுஞ்சொல்லுவார்கள். பின்னும் சிலர் ஜகத்காரணமாக ஈசுவரனொருவனில்லை யென்றும் அணுக்களுடைய சேர்க்கை யே ஜகத்காரணமென்றுஞ்சொல்லுவார்கள். இப்படியே ஜக த்காரணவஸ்துவின்னதென்கிற விஷயத்திற் பலமதத்தார் பல விதமாய்ச் சொல்லுவார்கள்.

9. ஜயவிரதன்:—ஓ! பகவானே! இவ்வுலகத்திற் பலமதங்களேற்பட்டிருக்கிறதாகச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட மதங்களெவை? அம்மதங்களுக்காதாரமானப் பிரமாணங்களெவை? எந்தக்காரணத்தினால் யாரால் அம்மதங்கள் ஏற்படுத்தப்பட்டன என்ற விஷயங்களை அறியவிரும்புகிறேன். ஏனென்றால், நான் எந்த மதத்தைப் பின்பற்றவேண்டியதென்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டுத்தான்.

10. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! இவ்வாரியதேசத்திலும் மற்றதேசங்களிலும் அநேக மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரமானப்பிரமாணம் வேதமே. அந்நியதேசத்தார் வேதத்திற்கு அந்தந்ததேசபாஷையையநுஸரித்து வெவ்வேறு பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வாரியதேசத்திற் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸபுராணங்கள், ஆகமங்கள் முதலிய சாஸ்திரங்களைப் பிரமாணமாக அங்கீகரிக்கிறவர்களுக்குள்ளாகவே அநேக உட்பிரிவுமதங்கள் உண்டாயிருக்கின்றன. அந்த ஒவ்வொருமதத்தினுடைய சித்தாந்தத்தையும் அவைகளுண்டானதற்குள்ளகாரணம் முதலியவைகளையும் சொல்வதானால் மிக வளரும். அம்மதங்களில் ஆரியர்கள் அநுஷ்டிக்கக்கூடாததும் சாஸ்திரங்களுக்கு விரோதமானதுமான சிலமதங்களுமிருக்கின்றன. ஆரியமதங்களுக்குள் முக்கியமானவைகளும் வெகுஜநங்களாலநுஷ்டிக்கப்படுகிறவைகளும் மதாசாரியர்களால் ஆதரிக்கப்பட்டவைகளுமான அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவமென்ற இந்நான்குமதங்களைக்குறித்துமட்டுஞ் சொல்லுகிறேன், கேள்.

11. வேதத்திலாவது மற்றசாஸ்திரங்களிலாவது இன்னான்குமதசுவரூபமிப்படிப்பட்டதென்றாவது, அம்மதத்திற்குக் கர்த்தாவின்னாரென்றாவது, அம்மதமேற்பட்டதற்குக்காரணமின்னதென்றாவது சொல்லப்பட்டிருக்கவில்லை. இக்கலியுகத்திற்கு சுவற்பகாலத்திற்கு முந்தியகாலம் முதல் ஜநங்களுக்கு மதாபிமானமுண்டாயிற்று. ஏனெனில், சாஸ்திரங்களை நன்றாயும் பூர்ணமாயும் கற்காமலும், காமக்குரோதம், பொறாமை, அசூயை முதலியதுர்க்குணங்கள் ஜநங்களிடத்தில்விருத்தியாய்க்கொண்டும் வந்ததனால் சிவனென்கிற பெயராலுபாஸித்துவந்த ஜநங்களுடைய வம்சஸ்தர்கள், சிவன்தான் ஜகத்காரணமான பரமாத்துமாவென்றபிமாநங்கொண்டு விஷ்ணுமுதலியவர்கள் ஸாமாந்திய

மான தேவதைகளென்றபிப்பிராயப்பட்டார்கள். அப்படியே விஷ்ணுவையுபாஸித்துவந்தவர்களுடைய வம்சஸ்தர்கள், விஷ்ணுவே ஜகத்காரணமான பரமாத்துமாவென்றபிமாநங்கொண்டு சிவன் முதலியமற்றவர்கள் ஸாமாந்நியமானதேவதைகளென்றபிப்பிராயப்பட்டார்கள். இப்படிப்போலவே பின்னுஞ்சில தேவதைகளிடத்திற் பின்னுஞ்சிலர் அபிமாநங்கொண்டார்கள். இந்த அபிமாநமே மதங்களேற்பட்டதற்குக்காரணம்.

12. இம்மதங்களுக்கு சுருதிமுதலியவைகளையே பிரமாணமாய் ஒவ்வொருமதத்தாரும் அங்கீகரிக்கிறார்கள்.

பிரம்மமொன்றே ஸத்தியமாயுள்ளது, மற்ற ஸகலப்பிரபஞ்சமும் அக்ஞாநகற்பிதமென்றும், பிரும்மத்திற்கு குணமாவது, ரூபமாவதில்லையென்றுஞ்சொல்லுகிற சுருதிமுதலியவைகளிலுள்ள வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு அநுஷ்டிப்பவர்கள் அத்துவைதிகளென்று சொல்லப்படுகிறார்கள். ஜகத்காரணமான பரமாத்துமா சிவனென்றுசொல்லியிருக்கிற சுருதிமுதலியவைகளிலுள்ள வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு அதன்படியநுஷ்டிக்கிறவர்கள் சைவர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஜகத்காரணமான பரமாத்துமா விஷ்ணுவென்று சொல்லியிருக்கிற சுருதிமுதலியவைகளிலுள்ள வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு அநுஷ்டிக்கிறவர்களிற் சிலபேதமுண்டாய் அவர்களிலொருவகையார் விசிஷ்டாத்துவைதிகளென்றும், மற்றொருவகையார் துவைதிகளென்றுஞ் சொல்லப்படுகிறார்கள். இந்நான்கு மதங்களுக்கும் நான்கு மதாசாரியர்களுண்டானார்கள். சைவமதத்திற்கு ஸ்ரீமத் நீலகண்டாசாரியரும், அத்துவைதமதத்திற்கு ஸ்ரீமத் சங்கராசாரியரும், விசிஷ்டாத்துவைதமதத்திற்கு ஸ்ரீமத் இராமாநுஜாசாரியரும்,துவைதமதத்திற்கு ஸ்ரீமத் மத்துவாசாரியருமே. இந்த மதாசாரியர்கள், அந்தந்த வகையார் பின்பற்றிய மதசித்தாந்தத்தை இவ்வுலகத்திற் பரவச்செய்தார்கள்.

13. ஜயவிரதன்:—இந்நான்கு மதங்களுடைய சித்தாந்தமிப்படிப்பட்டதென்றும், அம்மதாசாரியர்களுடைய உற்பத்தி, அவர்களுடைய சரித்திரம், அவரவர்கள் ஆதாரமாய்க்கொண்டபிரமாணவாக்கியங்கள் முதலியவைகளை ஒவ்வொன்றாய்ப்பிரித்துச் சொல்லக்கோருகிறேன்.

ஏழாவது பிரகரணம்
முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## எட்டாவது பிரகரணம்.

### அத்துவைதசித்தாந்தம்.

ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! மேலாகக்குறிப்பிட்ட நான்கு மதங்களுக்குளொன்ருகிய அத்துவைதசித்தாந்தத்தை அதற்காதாரமான பிரமாணங்களுடனும் அம்மதம் எவ்விதமாய்ப் பரவியதென்பதற்குள்ள முகாந்தரங்களுடனும் முந்திச்சொல்லுகிறேன்.

2. அத்துவைதமத சித்தாந்தமானது இருவகையாகப்பிரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று ஸத்தியோமுக்திக்கு ஹேதுவானபாரமார்த்திகதசை, அல்லது சுத்தாத்துவைதமென்றும் மற்ருென்று கிரமமுக்திக்குஹேதுவான வியாவஹாரிகதசை, அல்லது அக்ஞாநதசையென்றுஞ் சொல்லப்படுகிறது.

### பாரமார்த்திகதசையாவது.

*a.* ஸகல உலகத்திற்கும் கர்த்தாவான பிர்ம்மம் ஒன்றே. இரண்டாவதாக யாதொன்றுமில்லை. அதுநிர்க்குணமானது. உருவமற்றது. சரீரமில்லாதது. விகாரமற்றது. ஒன்றிலுமொட்டாதது. அசைவற்றது. எப்போதுமுள்ளது. பரிசுத்தமானது. ஞாநமேசுவரூபமாயுடையது. வாக்குக்கெட்டாதது. ஸகலத்தையும் பிரகாசிப்பிக்கிற ஸ்வப்பிரகாசமானது. அகண்டாகாரமாய் எங்கும்வியாபித்திருக்கிறது. அதனிடத்தில் யாதொருசெய்கையுமில்லை.

*b.* ஜீவன், ஈசுவரன், பலவிதமாய்த்தோற்றுகிற இந்தஜகத்து இவைகளெல்லாம் இரண்டாவதற்ற ஒன்ருன அந்த பிர்ம்மத்தினிடத்திற் கற்பிக்கப்படுகின்றன. ஜீவன், ஈசுவரன், ஜகத்து என்கிற இந்தபேதமானது அக்ஞாநத்தினுலுண்டாயிருக்கிறது. ஜீவனுனவன், தான் ஜீவனல்ல பிர்ம்மமேயென்கிற

நிச்சயஞானத்தினுலும்தோற்றுகிற ஸகலவேற்றுமையும் மித்தை (பொய்)என்கிற நிச்சய ஞானத்தினுலும் இந்தப்பிராரப்ததேகமுள்ளவரையில் ஜீவன்முக்தனுகவிருந்து இந்ததேகம்போனவுடன் மோக்ஷமடைகிறுன். தான் பிர்ம்மமென்றறியாதவனுக்கு ஜீவத்தன்மை நீங்குகிறதுமில்லை மோக்ஷமுமில்லை.

c. பிரகிருதியென்பது பிர்ம்மத்தின் சக்தியே. அந்தசக்தி, பிர்ம்மத்தை விட்டுப்பிரிந்து வேருயிருக்கிறதல்ல. எப்படிப்போலெனில், அக்நியிலுஷ்ணமும், சூரியனிற் பிரகாசமும், புஷ்பத்தில் வாஸனையும்போலவிருக்கிறது. சக்தி ஒன்றுனுலும் அதன் காரியபேதத்தினுற் பலவாகச்சொல்லப்படுகிறது. எப்படியெனில், சித்சக்தி, சேதநசக்தி, கிரியாசக்தி, அக்ஞாநசக்தி, ஜடசக்தி, காடிந்நியசக்தி முதலியனவே. அச்சக்தியானது, அவ்வியக்தம், மூலப்பிரகிருதி, மாயை, அவித்தை, அக்ஞாநம் முதலிய பலபெயர்களாலுஞ் சொல்லப்படுகிறது. அச்சக்தி, சித்துமல்ல, அசித்துமல்ல, சிதசித்துமல்ல. ஏனெனில், ஞாநத்தினுல் நசித்துப்போகிறபடியாற் சித்தென்று சொல்லக்கூடாது. உலகத்திற் சித்சக்தியாய்ப் பிரவேசித்து அநேகவித விசித்திரமான காரியங்களைக் காண்பிவிக்கிறபடியால் அசித்துமல்ல. பிரகாசமும் இருட்டும் சேர்ந்திராததுபோல ஒன்றுயிராததாகையாற் சிதசித்துமல்ல. ஆனதனுல் அது अनिर्वाच्या = இன்னவிதமானதென்று வாக்கினுற் சொல்லக்கூடியதல்லவென்று சுருதி சொல்லுகிறது.இந்த சக்தியே ஸகலஜகத்திற்கும் காரணமாயும்வேற்றுமைக்குக் காரணமாயுமிருக்கிறது. அக்ஞாநமென்கிற பெயரையுடைய சக்தியானது கருமம், ஸங்கற்பம், வாஸனை இந்தசுவரூபமான மனதாகவாய் ஆத்துமாவில் அநேகவித பேதங்களைத்தோற்றுவிக்கிறது. இந்த மனசுவரூபமான சக்தியினுலேசூழப்பட்ட பிர்ம்மமானது,மனதின் தருமங்களாகிய காமம்,குரோதம்,சுகம், துக்கம் முதலியவைகள் தன்னுடையதுபோற்பிரமையடைவதனுல், ஜீவத்தன்மையையடைந்ததாகவாகிறது. அதனுல், ஆத்துமாவானவன், தான், சுகிதுக்கி என்பது முதலியபிரமையையடைகிறுன். ஆத்துமா யாதொரு விகாரமற்றதாயும், செய்கையற்றதாயும் ஞாநசுவரூபமாயுமிருக்கையில் அதற்கு எப்படிப் பிரமையுண்டாகக்கூடுமென்றுல், அந்தப்பிரமையை ஆத்துமசக்தியேயுண்டுசெய்கிறதானுலும். ஆத்துமா வாஸ்தவத்தில்

யாதொரு விகாரத்தையுமடைகிறதில்லை. எப்படிப்போலெனில், அக்நியிலிருந்து அக்நிக்கந்நியமல்லாத பொறிகளுண்டாகின்றன. அக்நி விகாரப்பட்டு பொறிகளாகவாகவில்லை. ஆனாலப்பொறிகள் தானாகவுண்டாகவுமில்லை. அப்படியிருந்தும் யாதொருவிகாரமும் செய்கையும் அற்றதாகிய அதிஷ்டாநமான அந்த அக்நியிலிருந்து அதற்கு வேறல்லாத பொறிகளையுண்டாக்கினதற்கு ஒரு சக்தி யிருக்கவேண்டுமென்பது நிச்சயம். அப்படியே, தூங்கிக்கொண் டிருக்கிற புருஷனிடத்திலிருந்து சுவப்நமுண்டாகிறது. அந்த சுவப்நத்திற் தனக்கந்நியமாக அநேகவஸ்துக்களைக் காணுகி றான். தூங்குகிறபுருஷன் விகாரமடையவுமில்லை யாதொன் றுஞ்செய்யவுமில்லை. அப்படியிருந்தும் தனக்கந்நியமாய் அ நேகவஸ்துக்களுண்டானதற்கு ஒருசக்தி யிருக்கவேண்டுமெ ன்பது நிச்சயம். இப்படியே கிளிஞ்சிலில் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, கட்டையிற் புருஷன் கானலில் ஜலம் இவைகள் அதிஷ் டாநவஸ்து விகாரப்படாமலே தோற்றுவிக்கிறதற்கு ஒரு சக்தி யிருக்கவேண்டுமென்பது நிச்சயம். இப்படிப்போலவே ஆத்து மாவினிடத்தில் விகாரமாவது செய்கையாவது இல்லாமலே ஜீவேசுவராதிப்பிரபஞ்சபேதங்களை ஆத்துமசக்தி, சுவப்நம் போல் ஆத்துமாவிடத்திற் தோற்றுவிக்கிறது. இந்த அக்ஞாந சக்தியினாலுண்டானதாகிய மனதை நாசஞ்செய்வதுதான் மோ க்ஷமென்று சொல்லப்படுகிறது.

இவைகள்தான் பாரமார்த்திகதசையின்முக்கியாம்சங்கள்.

### வியவஹாரதசையாவது.

பாரமார்த்திகதசையிற் பிர்ம்மவிஷயமாயும் பிரகிருதிவிஷ யமாயுஞ் சொல்லப்பட்டிருக்கிறதுபோலவே இந்த தசையிலும் பிர்ம்மலக்ஷணமும் பிரகிருதிலக்ஷணமுஞ் சொல்லப்படுகிறது. ஆனால், பேதமெவையெனில், பிர்ம்மத்திலிருந்து, நீரிலிருந்து கு மிழிஉண்டாவதுபோல் மூலப்பிரகிருதி வெளிப்பட்டது. அதில் பிரதிபலித்ததெதுவோ அது, (அந்தப்பிரதிபிம்பம்) சாக்ஷிசைத ந்நியமென்றும் மாயாசபளிதப்பிர்ம்மமென்றுஞ்சொல்லப்படுகிற து. அந்தப்பிரகிருதிவிகாரமடைந்து ஸத்துவாதிக்கியமுள்ள அவ் வியக்தமென்கிற பெயருள்ள ஆவரண சக்தியாயிற்று. அதிற் பிர திபலித்ததெதுவோ அந்தப்பிரதிபிம்பமீசுவரசைதந்நியமென்று

சொல்லப்படுகிறது. இந்த ஈசுவரன் "तदीक्षतबहुस्यां प्रजा ये येति = வெகுவாக நானுகிறேன், என்றுப் பிரகிருதியைப்பார்த்தார்." என்ற இந்த சுருதியினால் அந்த ஈசுவரன் மாயையினாற் பிரபஞ்சத்தைச்சிருஷ்டித்துத் தான் அதிற்பிரவேசிக்கக் கருதினாரென்பது சொல்லப்படுகிறது. அப்படியே அந்த ஈசுவரன் தனக்குச் சுவாதீநமான அந்தமாயையைக்கொண்டு மஹத்தத்துவம், அகங்காரதத்துவம், ஸத்துவரஜஸ்தமோகுணங்கள், ஆகாசம் முதலிய பூததன்மாத்திரைகள் முதலியவைகளைச் சிருஷ்டித்தார். அந்த பஞ்சபூதங்களை பஞ்சீகரணஞ்செய்து ஸ்தூலபூதங்களை சிருஷ்டித்தார். அப்பூதங்களில் அந்த ஈசுவரன், தானே அநுப்பிரவேசித்தார். அந்த ஈசுவரனிடத்திலிருந்து ஹிரண்ணியகர்பன் அல்லது அண்டவிராட் என்று சொல்லப்படுகிற விஷ்ணுவும், பிரும்மாவும்,உருத்திரனும், தேவதைகளும், மற்ற மிருகம்முதலிய ஜங்கமங்களும், ஸ்தாவரங்களுமுண்டாயின. பிராணிகளுடைய அந்தக்கரணமானது கண்ணாடிபோற் பிரகாசமுள்ளதாகையாலும் ஒவ்வொரு பிராணிகளுடைய ஹிருதயத்திலேயும் ஈசுவரன் வாஸஞ்செய்கிறாராகையாலும் அந்த அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்த ஈசுவரசைதந்நியத்தினுடையப் பிரதிபிம்பம் ஜீவனென்று சொல்லப்படுகிறது. அவ்வியக்தப் பிரதிபிம்பனான ஈசுவரனும் அந்தக்கரணப் பிரதிபிம்பனான ஜீவனும் பிர்ம்மசைதந்நியத்தைக்காட்டிலும் வேறானவர்களல்ல. ஜீவனானவன், தானும் தான் எதனுடையப்பிரதிபிம்பமோ அந்த ஈசுவரனும் உபாதிகளால் வேறானவர்கள்போல் தோற்றினாலும் வாஸ்தவத்திற் பிர்ம்மமே என்றுண்டாகிற நிச்சயஞாநத்தினால் மோக்ஷமடைகிறான். பிரும்மா விஷ்ணு உருத்திரர்கள் அந்த ஈசுவரனுடைய சிரேஷ்டமானப் பிரதிபிம்பங்களாகையால், அவர்கள் மூலமாய் உலகசிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரியங்களைச் செய்கிறார். அப்படியிருந்தாலும் ஸகலத்திற்கும் நியந்தா அந்த ஈசுவரனேதான். அந்த ஈசுவரனேதான் ஜீவர்களுடைய புண்ணிய பாப கருமங்களுக்குத்தக்கபடி கருமசுவரூபமாயிருந்து பலனைக்கொடுக்கிறார். ஜீவர்கள், பிரும்மா, விஷ்ணு உருத்திரர்களாகிய மூர்த்திகளை யுபாஸிப்பார்களானால், அந்தந்த மூர்த்திகளுடைய அநுக்கிரஹத்தினால் அவரவர்களுடைய ஸாலோக ஸாமீப ஸாரூப முக்திகளை யடைவிப்பிக்கிறார்கள். அந்த ஸாரூபமுக்தியையடைந்தவர்கள்

அந்த மூர்த்திகளுடன் மஹாப்பிரளயத்திற் பிர்ம்மத்துடன் கலந்துபோகிறதாகிய ஸாயுஜ்ஜிய முக்தியை யடைகிறார்கள்.

இந்த வியவஹார தசையின்சுவரூபமானது பைங்களோபநிஷத்திற்சொல்லியக் கிரமத்தைய நுஸரித்துச் சொல்லப்பட்டது. சாஸ்திரங்களில் இன்னும் பலவிடத்தில் இந்தக் கிரமமுக்திமார்க்கம் வேறுவிதமாய்ச்சொல்லப்பட்டிருந்தாலும்முக்கியமானவிஷயத்தில் விசேஷபேதமில்லை.

இவைகள்தான் வியவஹாரதசையின் முக்கியமான விஷயங்கள். பாரமார்த்திகதசையையபேக்ஷித்து இதை அக்ஞானதசையென்று சொல்வதுமுண்டு.

3. இந்த அத்துவைதமதசித்தாந்தத்தை ஸ்ரீமத் சங்கராசாரியர் கற்பித்தாரென்றும் இந்தசித்தாந்தம் பிசகானதென்றும் அந்நியமதத்தாரெண்ணுகிறார்கள். அதனால், சங்கராசாரியரை மற்றமதத்தார்களிலநேகர் அவிவேகத்தினால் நிந்தித்தும் வருகிறார்கள். ஆனாலவர்கள் வாஸ்தவத்தையறியாதவர்களென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. அத்துவைதசித்தாந்தமானது, சங்கராசாரியர்காலத்திற்கு முந்தியகாலத்திலேயே இருந்ததென்று பிரும்மாநந்தீயம் கௌடபாதகாரிகை முதலிய அத்துவைதக் கிரந்தங்களினால் நன்றாய் வெளியாகிறது. ஆகையால், அத்துவைதசித்தாந்தத்தை யுண்டாக்கினவர் சங்கராசாரியரல்ல. ஆனால், சங்கராசாரியர் அத்துவைதசித்தாந்தம் சுருதிமுதலிய சாஸ்திரங்களாலும், முந்தியிருந்த பிரும்மாநந்தீயம் முதலிய கிரந்தங்களாலும் பலமாயாதரிக்கப்பட்டிருக்கிறதனாலே அந்த சித்தாந்தத்தை யுலகத்திற் பரவச்செய்தார். அவருக்குப் பிந்தியிருந்த மஹாத்துமாக்களாகிய சுரேசுவராசாரியர், வித்தியாரண்ணியசுவாமிகள், கரபாத்திரசுவாமிகள் முதலியஞானிகள் அத்துவைதசித்தாந்தத்தையே பலகிரந்தங்கள் மூலமாய்ப் பிரகாசப்படுத்தியிருக்கிறார்கள். அநேக மஹாத்துமாக்கள் இக்காலங்களிலுங்கூட அத்துவைதசித்தாந்தத்தைப் புகழ்ந்துமநுஷ்டித்தும் வருகிறார்கள்.

4. இந்த சங்கராசாரியர் ஈசுவரனுடைய அம்சத்தினால் இவ்வுலகத்தில் அவதாரஞ் செய்தார். ஏனெனில், உலகத்தில் அதருமத்திற்குவிருத்தியும் தருமத்திற்குக் கெடுதியுமுண்டாகிற

காலத்திற் பகவான், தானவதாரஞ்செய்து தருமத்தை நிலைநிறுத்துவதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறாராகையினாற்றான்:—

ஸ்ரீ பகவத்கீதை-அத்-ச-ல், * "ஓ! அர்ஜுனா! எந்தெந்தக் "காலங்களிற் தருமத்திற்குக் குறைவும் அதருமத்திற்கு அபிவி "ருத்தியுமுண்டாகிறதோ அப்போது நானவதாரஞ்செய்கிறேன். "(ஏனெனில்) ஸாதுக்களுடைய இரக்ஷணைக்காகவும் துஷ்டர்க "ளுடைய நாசத்திற்காகவும் தருமத்தை நிலைநிறுத்துவதற்காக "வும் அந்தந்தயுகத்தில் அவதாரஞ்செய்கிறேன்." என்று கிருஷ்ணபகவான் சொன்னதுமாத்திரமல்ல, இப்படியே பரமேசுவரனுஞ் சொல்லியிருக்கிறார். இதைப்போலொத்த வாக்கியங்களை பிரும்மபுராணம்-அத்-எக-சு-உகூ-லும் பத்மபுராணம் பாதாள கண்டம்-அத்-உஉ-சு-ரு உ-லும், மார்க்கண்டேயபுராணம்-அத்-ச சு-ருரு-லும் காணலாம்.

5. இக்கலியுகம் பிறந்து—ரு000—ம் வருஷங்களுக்குப்பிறகு இவ்வாரியதேசத்தில் வேதசாஸ்திரங்களுக்கு விரோதமான அநேகமதங்களேற்பட்டு அந்த மதங்களுடைய செல்வாக்கினாலித்தேசத்தில் சாஸ்திரவிரோதமான துராசாரங்களும் துர்நடத்தைகளுமுண்டாயின. அப்படிப்பட்ட மதங்கள் அநேகமிருந்தன. எவையெனில், பௌத்தமதம், சார்வாகமதம், காபால்லியமதம், பைரவமதம், காணுதமதம் முதலியவைகளே. இப்படி மதங்களேற்படவே சாஸ்திரவிரோதமான ஆசாரங்கள் பரவியன. அந்த துராசாரங்களையும் துர்மதங்களையும் நிவர்த்திக்கும்பொருட்டுப் பரமேசுவரரம்சத்தினால் சங்கராசாரியராக அவதாரஞ்செய்தார். இந்த சங்கராசாரியருடைய அவதாரத்தைப் புராணங்கள் சொல்லுகின்றன.

பவிஷியபுராணம்-ரு-ச-க0-ல் † "சிவனானவர் தன்னுடைய "ய தேகத்திலிருந்து அம்சத்தையுண்டுசெய்து பிராம்மணன் வீ "ட்டைக்குறித்து பிரவிருத்தித்தார் (அனுப்பினார்). கோரமான "கலியுகத்தில் அந்த சிவனானவர் பைரவதத்தரென்கிற பிராம்ம

---

* यदायदा हि धर्मस्य ग्लानि र्भवतिभारत । अभ्युत्थान मधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥ ७॥ परित्राणाय साधूनां विनाशायचदुष्कृताम् । धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८ ॥

† स्वांशं देहात्समुत्पाद्य द्विजगेह मचोदयत् ॥ ८३ ॥ विप्रभैर-

"ணருடைய வீட்டில் அவருக்குப் புத்திரராகவானுன். அவன் (அ
"ந்தப்புத்திரன்)சங்கரன்என்கிறபெயராற்பிரஸித்தியடைந்தான்.
"அவன் வாலிபனுகவிருந்தாலும் நற்குணங்களோடு கூடினவனு
"கவும், தத்துவக்ஞானமுள்ளவனுகவும், பிரும்மசாரியாகவுமிருந்
"தான். சங்கரபாஷியத்தைச்செய்தான். சிவதத்துவத்தையும்
"விளக்கினுன்."

ஸ்காந்தம்-சிவரஹஸ்யகண்டம் அம்சம்-கூ-ல், * "ஓ! அம்
"பிகே! பாபகருமங்களிலேயே பற்றுள்ளவர்களாயும், தரும
"மான கருமங்களைவிட்டவர்களாயும், வர்ணுசிரமதருமங்களை
"விட்டவர்களாயும், தருமத்தை நழுவவிட்டவர்களாயும், கலி
"யாகிற பாபஸமுத்திரத்தில் முழுகியிருக்கிறவர்களாயுமிருக்கிற
"ஜநங்களைப்பார்த்து தயவினுல் (பரமேசுவரன்) "ஓ! மஹேசுவ
ரியாகியதேவேசி! என்னுடைய அம்சத்தினுலுண்டானவனுயும்
"தபோதநனுயுமிருக்கிற பிராம்மணனை கேரளதேசத்திலுண்டு
"செய்யப்போகிறேன்."

இவ்விதமாய் பகவான் சொல்லி அவ்விதமாகவே சங்கரா சாரியராயவதாரஞ்செய்தார். ஆகையால், அவர் உலகத்திற்குக் கெடுதியுண்டாகும்படியான ஒருசித்தாந்தத்தைக் கற்பித்தாரென்று சொல்லுவதானுல், இதைவிட அவிவேகமென்னவிருக்கிறது. ?

6. சங்கராசாரியர் பிர்ம்மசூத்திரத்திற்கு பாஷியஞ்செய்யத்துவக்கும்போது, ஸ்ரீ காசிவிசுவநாதரானவர் சண்டாளரூபமாய் அவரிடம்வந்து அத்துவைதமார்க்கத்தையவருக்குப் பிரகாசிப்பித்தாரென்று மாதவீயமென்னும் ஸம்க்ஷேபசங்கரவிஜயம்-அத்-சூ-ல்-உஎ-முதல்-ஙஎ- வரையிலுள்ள சுலோகங்களிற் காணப்படுகிறது. அதற்குப்பிறகு பிர்ம்மசூத்திரத்திற்கு அ

---

वद्त्तस्य गेहे गत्वासवैशिवः । तत्पुत्रोऽभूत्कलौ घोरे शङ्करो नाम विश्रुतः ॥ ८४ ॥ सबालश्च गुणी वेत्ता ब्रह्मचारी बभूवह । कृत्वा शङ्करभाष्यं च शैवमार्गमदर्शयत् ॥ ८५ ॥

* पापकर्मैकनिरतान् विरतान्धर्मकर्मसु । वर्णाश्रमपरिभ्रष्टान् धर्मप्रस्रवणाज्जनान् । कल्यब्धौ मज्जमानांस्तान् दृष्ट्वाऽनुक्रोशतोम्बिके । मदंशजातं देवेशि कलावपि तपोधनम् । केरळेषु यथा विप्रं जनयामि महेश्वरि ॥

த்துவைதசித்தாந்தத்தை யநுஸரித்து பாஷியஞ்செய்தார். அந்த பாஷியத்தை சிஷியர்களுக்குபதேசஞ்செய்துகொண்டு கங்காதீரத்திலிருந்த சங்கராசாரியரிடத்தில் வேதவியாஸமஹரிஷியானவர் பிராம்மணரூபியாய்வந்து பிர்ம்மசூத்திரவிஷயமாய்ச் சிலவாதஞ்செய்து, பிறகு பிராம்மணரூபியான வேதவியாஸர் சொன்ன விஷயங்கள் மேற்படி மாதவீயத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன.

மாதவீயம்-அத்-எ-ல், * "சூத்திரங்களையநுஸரித்து இ "லகுவானபதங்களாற் போதிக்கப்பட்ட அர்த்தங்களோடும், "தன்னுடையபதங்களினாலே அந்நியமதங்கள் நிராகரிக்கப்பட் "டும், உயுக்திகளினாலே ஸ்தாபிக்கப்பட்ட சித்தாந்தமான சூத்தி "ரார்த்த சுவரூபமாயுமிருக்கிற பாஷியத்தைப்பார்த்துக் கொண் "டாடி ஸந்தோஷமடைந்தவராய்ச் சொன்னதாவது:—

ஓ! குழந்தாய் சங்கரா! நீ, உன்னுடைய குருவான கோ "விந்த பகவத்பாதாசாரியராலேவப்பட்டவனாய் சூத்திரபாஷி "யஞ் செய்தாயல்லவா? அதனால் நீ (சொன்னபடி) ஸாஹஸகா "ரியஞ் செய்தவனல்ல. அந்த பாஷியத்தில், "இதில் நல்லது "கெட்டதென்பது விசாரிக்கத்தக்கது," என்றுசொல்லியிருக்கி "றாயே அதுதான் ஸாஹஸமென்று நினைக்கிறேன். (அதாவது, "ஸரியானதாத்பரியத்தைச் சொல்லியிருந்தும் கருவமன்றி இன் "னும் விசாரிக்கத்தக்கதென்று சொல்லியிருக்கிறதுதான் ஸாஹ "ஸமென்பது கருத்து). நீ ஸாதாரணமான மனிதனல்ல. ஸகலத் "தையுமறிந்த மஹாநுபாவனான ஒருபுருஷனாயிருக்கிறாய். சூரிய "ன் தன்னுடையப் பிரகாசத்தினால் இருளைப்போக்குவதுபோல் "நீ, ஞானமாகிறபிரகாசத்தினால் விஷயங்களாகிற இருளைப்போக் "கினவனாயும், பிர்ம்மசாரியாகவிருந்தே ஸந்நியாஸம்பெற்றுக் "கொண்டவனாயுமிருக்கிறாய்."

---

* सूत्रानुकारि मृदुवाक्यनिबोधितार्थं स्वीयैः पदै स्सह निराकृतपूर्वपक्षम् । सिद्धान्तयुक्ति विनिवेशिततत्स्वरूपं दृष्ट्वाभिनंद्यपरितोषवशादवोचत् ॥ ४० ॥ नसाहसं तात भवानकार्षीद्यत् सूत्रभाष्यं गुरुणा विनीतः । विचार्यतां सूत्रदुरुक्त मत्रेत्येतन्महत् साहस मित्यवैमि ॥४१ ॥ नप्राकृतस्त्वं सकलार्थदर्शी महानुभावः पुरुषोसि कश्चित् । यो ब्रह्मचर्य्याद् द्विषयान्निवार्य पर्यव्रजः सूर्य इवान्धकारान् ॥

7. இந்த ஸம்வாதத்தினால் சங்கராசாரியர் செய்த சூத்திர பாஷியமானது அந்தசூத்திரகருத்தாவான வேதவியாஸராலேயே சிலாகிக்கப்பட்டதென்று காணவருகிறது. சூத்திரபாஷியஞ்செய்தபிறகு உபநிஷத்து முதலியவைகளுக்கு பாஷியஞ்செய்திருக்கிறார். அத்துவைதஸித்தாந்தத்தைப் பிரகாசிப்பிக்க பின்னுஞ்சில கிரந்தங்களையுஞ் செய்திருக்கிறார். மஹாவித்துவானான மண்டநமிசிரரையும் ஸரஸ்வதியையும் வாதத்தினால் ஜயித்திருக்கிறார். பரகாயப்பிரவேசஞ் செய்திருக்கிறார். இப்படிப்பட்ட மஹான் இக்கலியுகம்பிறந்து—௩000—ம் வருஷத்திற்குப்பிறகு இவ்வுலகத்திலவதாரஞ்செய்து ஐந்துவயதிலேயே ஸந்நியாஸம்பெற்றுக்கொண்டு கோவிந்தபகவத்பாதாசாரியரை குருவாகவடைந்து ஸகலசாஸ்திரங்களையுங்கற்று பாஷியம்முதலிய கிரந்தங்களைச்செய்து துர்மதங்களைக்கண்டித்து அத்துவைதமதத்தைப் பரவச்செய்தார். அவர்-௩௨—வருஷகாலம் இவ்வுலகத்திலிருந்து பிறகு கைலாஸத்திற்குச் சென்றார்.

8. [ ஸ்ரீமத் சங்கராசாரியருடைய அவதாரகாலமின்னதென்பதில் ஒவ்வொரு சங்கரவிஜயமும் வித்தியாஸப்படுகின்றன. ஆனால், பலசங்கரவிஜயங்களையும் இங்கிலீஷ்காரர்களில் புரொபஸர், மாக்ஸ்மில்லர், பர்னல் முதலிய வித்துவான்கள் சொல்லியிருக்கிற அபிப்பிராயங்களையும் சங்கராசாரியர்காலத்திலிருந்த இராஜாக்களுடைய காலங்களையுமாராய்ந்து, தியாஸபிக்ஸபையார் அநுமதியின்பேரில், என்-பாஷியாசாரியரென்கிற வித்துவானால் இங்கிலீஷிலச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கிரந்தத்தினாற் சங்கராசாரியர், இவ்வுலகத்திலவதாரஞ் செய்திருந்த காலமானது கலியுகம்—௩௫00—அல்லது—௩௬00—வருஷங்களுக்குள்ளாக விருக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது, ஸரியானகாலமென்றே சொல்லவேண்டும். ஆனால், குறிப்பானவருஷமின்னதென்று ஒருகிரந்தத்தினாலும் வெளியாகவில்லை. கும்பகோணத்திலிருக்கிற ஸ்ரீமத் சங்கராசாரியர் மடத்தைச்சேர்ந்ததாகக்கண்டிருக்கிற மடாம்நாயமென்று பெயரிடப்பட்டுத் தமிழிலச்சிடப்பட்டிருக்கிற ஒருசிறியபுஸ்தகத்திற் சங்கராசாரியர் அவதாரஞ்செய்தகாலம் கலியுகம்—௨௬௩௫—வருஷமென்று கண்டிருக்கிறது. எந்த ஆதாரத்தின்பெயரில் அக்காலம் கணக்கிடப்பட்டதென்று அறியக்கூடவில்லை. அக்கிரந்

தத்தில் சங்கராசாரியருக்குப்பிந்தியிருந்த மடாதிபதிகளுடைய வம்சபரம்பரை சொல்லப்பட்டிருந்தாலும், அந்தஒவ்வொருவருடையகாலம் ஸரியாய்ச் சொல்லப்படவில்லை. அந்தக்காலங்களைக்கொண்டு கணக்கிடவகையுமில்லை. ஆனதனால், இந்த மடாம்நாயத்திற்குறித்தகாலம் ஸரியானதென்று நிச்சயிக்கக்கூடாமையாயிருக்கிறது].

9. ஓ! ஜயவிரதா! இந்த அத்துவைத ஸித்தாந்தமானது மிகவும் ஸூக்ஷ்மபுத்தியுள்ளவனாலேயும் அசூயை பொறாமை முதலிய துர்க்குணங்களில்லாதவனாலேயும் அறிந்துகொள்ளத்தகுந்ததேயன்றி அற்பபுத்தியும் பொறாமைமுதலிய துர்க்குணமுள்ள புருஷனுக்கு ஒருக்காலும் மனதிற்பதியமாட்டாது. அதனாற்றான் இம்மதத்தைப் பலர் தூஷிக்கிறார்கள். ஆகையால், இந்த அத்துவைதமதம் சுருதிமுதலியப்பிரமாணங்களினாலாதரிக்கப்பட்டிருக்கிறதென்பதை அறியும்பொருட்டுப் பிரமாணங்களைக்குறித்துனக்குச்சொல்லுகிறேன், கவனமாய்க்கேள்:—

## பாரமார்த்திகதசையை ஆதரிக்கிற பிரமாணங்கள்.

10. இருக்குவேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் இந்நான்கு வேதங்களிலும் அவ்வவ்வேதத்திற்கு சிரஸாக நான்கு மஹாவாக்கியங்களிருக்கின்றன. அவைகள் இந்த பாரமார்த்திகதசையை ஆதரிக்கிற சிரேஷ்டமானப் பிரமாணங்களாகவிருக்கின்றன. அவையாவன:—

இருக்குவேதத்தைச்சேர்ந்த ஐதரேயோபநிஷத்-அத்-ரு-ல், * "ஆத்துமாவென்று யாரை நாமுபாஸிக்கிறோம்? அந்த ஆத்"துமா எப்படிப்பட்டவன்? எதனால் ரூபத்தைப்பார்க்கிறானோ, "எதனாற் சப்தத்தைக்கேட்கிறானோ, எதனால் வாஸனையை கிர"ஹிக்கிறானோ, எதனால் வாக்குனாற்பேசுகிறானோ, எதனால் உ"ருசி உருசியல்லவென்றறிகிறானோ, (அவன்தான் ஆத்துமாவெ"ன்றெண்ணினார்கள்). இந்த ஹிருதயம், இந்தமனது, இந்த "சேதநத்துவம் (சலிக்குஞ்சக்தி), ஈசுவரத்துவம், பகுத்த

* कोयमात्मेति वय मुपास्महे । कतर स्स आत्मा । येनवा रूपं पश्यति येनवा शब्दं श्रृणोति । येनवा गन्धानाजिघ्रति । येनवा वाचं व्याकरोति । येनवा स्वादुचास्वादुच विजानाति ॥ १ ॥ यदेतद्धृदयं मनश्चैत-

"றிவு, நல்லறிவு, சாஸ்திரஞானம், ஸகலத்தையுமறிகிறஞானம்,
"தைரியம், மநநம், மநவுறுதி, மநோவேதையினறிவு, நினை
"ப்பு, ரூபாதிகளை விகற்பமாய்ப்பார்த்தல், நிச்சயம், பிராண
"விருத்தி, ஆசை, சுவாதீநம், என்ற இவையெல்லாம் பிரக்ஞா
"நத்தினுடைய பெயரேயாகிறது. அவனே பிரும்மா, அவனே
"இந்திரன், அவனே பிரஜாபதி, இந்த தேவதைகளெல்லாமவ
"னே. பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம் என்ற பஞ்சமஹாபூ
"தங்களும், அற்பமானஜந்துக்கள், விதைகள், மற்றஸ்தாவரஜ
"ங்கமங்கள், அண்டஜங்கள் (முட்டையிலிருந்துண்டாகிற பக்ஷி
"முதலியன), ஜராயுஜங்கள் (கருப்பையிலிருந்துண்டாகிற மனி
"த மிருகாதிகள்), ஸ்வேதஜங்கள் (வேர்வையிலிருந்துண்டாகிற
"பேன், மோட்டுப்பூச்சி முதலியன), உத்பிஜங்கள் (பூமியிலிருந்
"துண்டாகிற மரம் செடிமுதலியன), குதிரை, பசு, யானை, மனி
"தர்கள், இன்னும் ஜங்கமங்களாகியப் பிராணிகளெதெதுண்
"டோ அவைகளும், பக்ஷிகள், மற்றஸ்தாவரங்கள் ஸகலமும்
"அந்தப்பிரக்ஞாநேத்திரமே. பிரக்ஞாநத்திலேயே நிலைத்திருக்
"கிறது. உலகங்கள் பிரக்ஞாநேத்திரமாகவேயிருக்கிறது. பிரக்
"ஞாநத்தையே ஆதாரமாயுடையது. பிரக்ஞாநந்தான் பிர்ம்ம
"ம்."

இவ்வுபநிஷத்துவாக்கியங்கள், ஈசுவரன், ஜீவன், ஜகத்து பிரும்ம விஷ்ணு உருத்திரர்கள், பஞ்சமஹாபூதங்கள், பின்னும் ஜகத்திலெதெதுகாணப்படுகிறதோ அவையெல்லாம் பிர்ம்மமென்று சொல்லுகிறதுமல்லாமல் அந்த பிர்ம்மலக்ஷணம், "பிரக்ஞாநம்" என்று கடைசியில் முடிக்கப்பட்டிருக்கிறது. பிர்ம்

---

त् । संज्ञान मज्ञानं विज्ञानं प्रज्ञानं मेधादृष्टिर्धृतिर्मतिर्मनीषाजूतिः स्मृतिस्सङ्कल्पः क्रतुरसुः कामोवश इति । सर्वाण्येवैतानि प्रज्ञानस्यनामधेयानि भवन्ति ॥ २ ॥ स एष ब्रह्म एष इंद्र एष प्रजापतिरेते सर्वे देवा इमानि च पञ्चमहाभूतानि पृथिवीवायुराकाश आपोज्योतींषीत्येतानीमानि चक्षुद्रमिश्राणीव बीजानीतराणि चेतराणिचाण्डजानिच जारुजानिच स्वेदजनानि चोद्भिज्जानिचाश्वागावः पुरुषाहस्तिनो यत्किंचेदं प्राणिजङ्गमञ्चपतत्रिचयच्चस्थावरं सर्वं तत्प्रज्ञानेत्रं प्रज्ञानेप्रतिष्ठितं प्रज्ञानेत्रो लोकः प्रज्ञाप्रतिष्ठा प्रज्ञानं ब्रह्म ॥ ३ ॥

மத்தைத்தவிர இரண்டாவது வஸ்துவே இல்லையென்று இந்த வாக்கியங்கள் கண்டோக்தமாய்ச் சொல்லுகின்றன. இருக்கு வேதத்திற்கு சிரஸாகிற "प्रज्ञानं ब्रह्म = மேலான அறிவே பிர்ம்ம "ம்," என்கிற இந்தவாக்கியம் மஹாவாக்கியங்களுக்குள் ஒன்று. இது பிர்ம்மஇலக்ஷணத்தைச் சொல்லுகிறது.

யஜுர்வேதத்தைச்சேர்ந்த பிருஹதாரண்ணியகோபநிஷத் -ரு-ச-கO-ல், "अहं ब्रह्मास्मि = நான் பிர்ம்மமாயிருக்கிறேன்." என்ற வாக்கியமானது, மற்றொரு மஹாவாக்கியமாயிருக்கிறது. இதானது, குருவினுலுபதேசம்பெற்றசிஷ்யனானவன், உபதேசம்பெற்றவிஷயங்களைத் தானாகவே நன்றாய் ஆலோசித்து அதனாலடைந்த அநுபவத்தினால், "நானே பிர்ம்மம்" என்று ஞானமடைந்தானென்பதை போதிக்கிறது.

ஸாமவேதத்தைச்சேர்ந்த சாந்தோக்கியோபநிஷத்து-சு-அ-ஆ "तत्वमसि = அது நீயாயிருக்கிறாய்." இப்படி குருவானவர் சிஷ்யனுக்கு நீ, பிர்ம்மமாயிருக்கிறாயென்றுபதேசித்த மஹாவாக்கியமிது.

அதர்வணவேதத்தைச்சேர்ந்த மாண்டூக்கியோபநிஷத்து-க-உ-ல், "अयमात्मा ब्रह्म = இந்த ஆத்துமா, பிர்ம்மம்" என்று குருவானவர் சிஷ்யனுக்கு இந்ததேகத்திலிருக்கிற உன்னுடைய ஆத்துமா பிர்ம்மமென்று குறித்துக்காட்டியதாகிய நான்காவது மஹாவாக்கியமிது.

இந்நான்கு மஹாவாக்கியங்களிலொவ்வொன்றும் அந்தந்த வேதத்திற்குத் தலைமையான வாக்கியங்களென்றும் அந்தவாக்கியார்த்தங்களையறிந்து அறிந்தபடி யுபாஸிப்பவன் ஸாயுஜ்ஜிய முக்தியையடைகிறானென்றும் இந்தமஹாவாக்கியங்களை சுருதிகள் புகழுகின்றன.

சுகரஹஸியோபநிஷத்தில், * "மஹாவாக்கியங்கள் நான் "கு. அவையாவன. ஓம், பிரக்ஞானம்பிர்ம்ம, நான்பிர்ம்மமாயி "ருக்கிறேன். அது (பிர்ம்மம்) நீயாயிருக்கிறாய். இந்த ஆத்துமா பிர்ம்மம். தத்துவமஸியென்கிற இந்த அபேதவாக்கியத்தை,

---

* अथ महावाक्यानि चत्वारि । यथा ओम् प्रज्ञानं ब्रह्म । ओम् अहं ब्रह्मास्मि । ओम् तत्वमसि । ओम् अयमात्मा ब्रह्म । तत्वमसीत्यभेदवाचकमिदं ये जपन्ति ते शिवसायुज्यमुक्तिभाजो भवन्ति ॥

"யார் ஜபிக்கிறார்களோ அவர்கள் சிவஸாயுஜ்ஜியமுக்தியையடைகி "றார்கள்."

பைங்களோபநிஷத்-ரு-ல், * "அது (பிர்ம்மம்), நீயாயிரு "க்கிறாய். நீ அதுவாயிருக்கிறாய். நீ பிர்ம்மமாயிருக்கிறாய். நா "ன் பிர்ம்மமாயிருக்கிறேன், என்று அநுஸந்தாநஞ்செய்யவே "ண்டியது."

ஹயக்கிரீவோபநிஷத்தில், † "பிரக்ஞாநம் பிர்ம்ம. நான் "பிர்ம்மமாயிருக்கிறேன். அந்த பிர்ம்மம் நீயாயிருக்கிறாய். இந் "த ஆத்துமாவானவன் அந்தர்யாமியாயும் அழிவற்றவனாயுமிருக் "கிறான். நான் பிர்ம்மமாயிருக்கிறேன், என்று மஹாவாக்கியங் "களினால் வெளிப்பட்டிருக்கிற அர்த்தத்தை, இந்த (உபநிஷத் "திலுள்ள) அந்த மந்திரங்கள் வெளிப்படுத்துகின்றன."

பஹ்வ்ருசோபநிஷத்தில், ‡ "பிரக்ஞாநம் பிர்ம்மமென் "றாவது, நான் பிர்ம்மமாயிருக்கிறேனென்றாவது, அது நீயாயி "ருக்கிறாயென்றாவது, இந்த ஆத்துமா பிர்ம்மமென்றாவது, பி "ர்ம்மமே நானாயிருக்கிறேனென்றாவது, எவனுண்டோ அவன் "நானாகவிருக்கிறேனென்றாவது, அவன் நானாகவிருக்கிறேனெ "ன்றாவது, யாதொரு இவனுண்டோ அவன் நானாகவிருக்கி "றேனென்றாவது பாவனைசெய்யப்படுகிறதெதுவோ அதுதான் "ஷோடசீஸ்ரீவித்தை."

ஸ்காந்தபுராணம் - ஸநத்குமாரஸம்ஹிதை-மலையாசலகண்ட மென்கிற சிவதத்துவசுதாநிதி-அத்-கூ-ல், § "சிரேஷ்டமானதா "யும் சாக்ஷாத் சிவசுவரூபமானதாயுமிருக்கிற மஹாவாக்கிய "ப்பிரகரணமானது முமுக்ஷுக்களுக்குச் சொல்லத்தக்கது. "மற்றவர்களுக்கொருபோதுஞ் சொல்லக்கூடாது. மஹாவாக்

* तत्त्वमसि । त्वं तदसि । त्वं ब्रह्मासि । अहं ब्रह्मास्मीत्यनुसन्धानं कुर्यात् ॥

† प्रज्ञानं ब्रह्म । अहं ब्रह्मास्मि । तत्त्वमसि । अयमात्मान्तर्याम्यमृतः । अहं ब्रह्मास्मीति महावाक्यैः प्रतिपादितमर्थंतएतेमंत्राः प्रतिपादयन्ति ॥

‡ प्रज्ञानं ब्रह्मेतिवा अहं ब्रह्मास्मीतिवाभाष्यते तत्त्वमसीत्येवं संभाष्यते सोह मस्मीतिवाभाष्यते सैषा षोडशीश्रीविद्या ॥

§ महावाक्यप्रकरणं साक्षाच्छिवमयं परं । मुमुक्षूणाञ्च वक्तव्यं नान्येषाञ्च कथञ्चन ॥ २ ॥ महावाक्यप्रदोयस्तु सगुरुः परमश्शिवः । तत्वोपदे-

"கியத்தை யுபதேசிக்கிற குருயாரோ அவரே பரமசிவன். தத்
"துவோபதேசஞ்செய்கிறவரைவிட மேலான குருவில்லை. அவ
"ரேதான் சங்கரர். "பிரக்ஞானம்பிர்ம்ம" என்பது முதலிய நான்
"கு வாக்கியங்கள் மஹாவாக்கியங்களாம். இந்நான்கு மஹா
"வாக்கியங்களும் இருக்கு, யஜுஸ், ஸாமமாகிய வேதங்களிலு
"ள்ளது."

11. பாரமார்த்திகதசையின் சுவரூபத்தை மூன்றுபாகமாய்ப் பிரித்துச்சொன்னேனல்லவா, அதில் முந்தியபாகமான "பிர்ம்மமொன்றே இரண்டாவதில்லை, அக்ஞானத்தினால் ஜகத்தானது பிர்ம்மத்தினிடத்திற் கற்பிக்கப்படுகிறது ஸகலஜகத்தும் பிர்ம்மசுவரூபந்தான்" என்ற விஷயத்தையாதரிக்கிற இதர பிரமாணங்களை முதலிற்சொல்லுகிறேன்.

கடவல்லியுபநிஷத்-௪-௰-ல், * "எது இவ்விடத்திலோ
"(இப்பிரபஞ்சத்தில் காரியகாரணோபாதியோடு விளங்கிறதோ)
"அந்தப்பிர்ம்மம் தனக்குள்ளேயேவிளங்கிறது. எது தனக்
"குள்ளேயோ அது இந்தப்பிரபஞ்சத்தில் விளங்கிறது. இவ்வு
"லகத்திற் பலவாக (ஜீவன், ஈசுவரன், ஜகத்து என்கிற பேத
"மாக) பார்ப்பவன் மரணத்திலிருந்து மரணத்தையடைகிறான்."
( பிறக்கிறதுமிறக்கிறதுமாகவே இருக்கிறானென்பதுகருத்து ).

முண்டகோபநிஷத்-௨-௧-௧0-ல், † "இந்தப்பிரபஞ்சமும்,
"கருமமும், தபசும், சிரேஷ்டமான மோக்ஷமும் பிர்ம்மமெ
"ன்கிற புருஷனே."

ஷை-உபநிஷத்-௨-௨-௧௧-ல், ‡ "நாசமற்ற இந்த பிர்ம்ம
"மே முன்னும் பின்னும் பக்கங்களிலும் கீழும் மேலும் நிறை
"ந்திருக்கிறது. இந்த ஸகலப்பிரபஞ்சமும் சிரேஷ்டமாகிய அ
"ந்தப்பிர்ம்மமே."

---

ष्टु रधिको नगुरुः सहि शङ्करः ॥ ३ ॥ प्रज्ञानं ब्रह्मेत्यादि महावाक्य चतुष्टयम् । महावाक्यचतुर्वाक्यं ऋग्यजुस्सामसंभवम् ॥ ४ ॥

* यदेवेह तदमुत्रय दमुत्र तदन्विह । मृत्यो स्समृत्यु माप्नोतियइह- नानेवपश्यति ॥

† पुरुषएवेदंविश्वं कर्मतपोब्रह्म परामृतम् ॥

‡ ब्रह्मैवेद ममृतम् पुरस्तात् ब्रह्मपश्चात् ब्रह्मदक्षिणत श्चोत्तरेणाधश्चो- र्ध्वञ्च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥

மாண்டூக்கியோபநிஷத்- கௌடபாதகாரிகை- ஆகமப்பிரகரணம்-கஎ-ல், * "பிரபஞ்சமிருக்குமானலது நிவிருத்தியாகு "மென்பதில் ஸந்தேகமில்லை. பேதபுத்தியாகிற இந்தத்துவைதம் (வேற்றுமை) ஆனது மாயாமாத்திரமே. இரண்டாவதற்றதாகிய (பிர்ம்மம்) ஒன்றே வாஸ்தவமாயுள்ளது."

ஷை- காரிகை-வைதத்தியப் பிரகரணத்தில், † "கயிறானது "இருட்டிற் கயிறுதானென்று நிச்சயிக்கப்படாமலிருக்கையிற் "பாம்பு முதலியவைகளாக எப்படி கற்பிக்கப்படுகிறதோ அப் "படி ஆத்துமா, பலவாகக் கற்பிக்கப்படுகிறது. கயிறானது; "கயிறுதானென்று எப்போது நிச்சயிக்கப்படுகிறதோ அப்போ "து (பாம்பு முதலிய) விகற்பம் நிவிருத்தியாகிறது. அதுபோல் "ஆத்துமா இரண்டாவதற்ற ஒன்றே என்று நிச்சயிக்கப்படுகி "றது."

ஷை- பிரகரணம்-லச-ல், ‡ "இந்தப் பிரபஞ்சமானது ஆ "த்துமசுவரூபத்தினுற் பலவாகவிருக்கவில்லை. ஒருபோதுந் "தானகவே (பலவாக) விளங்கவுமில்லை. அற்பமேனும் பிர்ம் "மத்தைவிட வேறானதுமல்ல, வேறல்லாததுமல்லவென்று "ஞானிகளறிகிறார்கள்."

ஷை- காரிகை- அத்துவைதப்பிரகரணம்-ங-ல், § "ஆகாச "மானது, கடாகாசம், மஹாகாசங்களாகச் சொல்லப்படுகிறது "போல ஆத்துமா, ஜீவர்களாகச் சொல்லப்படுகிறது. (மண் "ணிலிருந்து) குடம் முதலியவை உண்டாகிறதுபோல (ஆத்து

---

* प्रपञ्चोय दिवि द्येतनिवर्तेत न संशयः । मायामात्रमिदं द्वैत मद्वैतं परमार्थतः ॥

† अनिश्चिता यथा रज्जु रन्धकारे विकल्पिता । सर्पधारादिभिर्भावै स्तद्वदात्माविकल्पितः ॥ १७ ॥ निश्चितायां यथारज्वां विकल्पो विनिवर्तते । रज्जुरेवेतिचाद्वैतं तद्वदात्मविनिश्चयः ॥ १८ ॥

‡ नात्मभावेन नानेदं नस्वेनापि कथञ्चन । नपृथङ्नापृथक्किञ्चिदिति तत्वविदो विदुः ॥

§ आत्माह्याकाशवज्जीवै र्घटाकाशै रिवोदितः । घटादिवच्च सङ्घातै र्जातावेतन्निदर्शनम् ॥

"மாவே) பிருதிவீ முதலிய கூட்டங்களாயுண்டாகிறது. இது "உற்பத்திவிஷயத்திற் திருஷ்டாந்தம்."

ஷை-கௌடபாதகாரிகை-அத்துவைதபிரகரணம்-கரு-ல்,* "மண், உலோகம் முதலியவைகளாலுண்டாகிற வஸ்துக்களும் "அக்நியிலிருந்துண்டாகிறபொரிகளும் அவைகளை (மண், உலோ 'கம், அக்நிகளை,) விடவேறாகக் காணப்பட்டாலும் அவைக "ளுக்கு அந்த மண்முதலியவைகளைக்காட்டிலும் வேறான (சுவ "ரூபமாகிற) ஸாதநம் காணப்படவில்லை."

ஐதரேயோபநிஷத்-க-க-ல், † "காணப்படுகிற இந்த ஸ "கலஜகத்தானது, முதலில் ஒரே ஆத்துமாவாகமாத்திரமிருந்த "து. வேறுயாதொன்றும் அற்பமேனுமில்லை."

சாந்தோக்கியோபநிஷத்-ரு-கச-க-ல், ‡ "இந்த ஸகலப்பி "ரபஞ்சமும் பிர்ம்மமே."

ஷை-சு-க-ச-ல், § "ஓ! சௌம்மியா! ஒரே மண்கட்டியை "யறிந்ததனுல் அதிலிருந்துண்டான (குடம்முதலிய) ஸகலமும் "மண்ணென்றே அறியப்படுகிறது. விகாரமும் பெயரும் வெ "றும் வாய்ப்பேச்சுத்தான். மண்தான் ஸத்தியமானது."

மண்விஷயத்தில் இவ்விடத்திற் சொல்லியிருக்கிறதுபோல வே உலோகம், இரும்பு, இவைகள் விஷயத்திலுஞ்சொல்லி அவைகளிலிருந்துண்டான வஸ்துக்களெல்லாம் அந்தந்தவஸ்துக்களின் சுவரூபமேயென்று மேற்படிவாக்கியத்திற்கடுத்தவாக்கியங்கள் சொல்லுகின்றன. இந்ததிருஷ்டாந்தத்தினுல், பிர்ம்மத்திலிருந்துண்டான ஸகலஜகத்தும் பிர்ம்மமேயென்று உபதேசித்ததாகிறது.

சாந்தோக்கியோபநிஷத்-சு-உ-க-ல், $ "ஓ! சௌம்மியா! "முதலில் இந்தப்பிரபஞ்சமானது ஸத்தானதும் ஒன்றானதுமா

---

* मृल्लोहविस्फुलिङ्गाद्यै स्सृष्टिर्या चोदितान्यथा । उपाया स्सोवताराय नास्ति भेदः कथञ्चन ॥

† आत्मावा इदमेकएवाग्रआसीत् नान्यत्किञ्चनमिषत् ॥

‡ सर्वं खल्विदं ब्रह्म ॥

§ यथा सोम्यै केन मृत्पिण्डेन सर्वं मृण्मयं विज्ञातं स्याद्वाचारंभणं विकारो नामधेयं मृत्तिकेत्येवसत्यम् ॥

$ सदेवसोम्येदमग्रआसीदेकमेवा द्वितीयम् ॥

"ன பிர்ம்மமாகவேயிருந்தது. இரண்டாவதில்லை."

ஷை-உபநிஷத்-சு-கo-க-ல், * "ஓ! சௌம்மியா! கங்கைமுத "லிய இந்தநதிகள் ஸமுத்திரத்திலிருந்துண்டாய் கிழக்கிலும் "மேற்கிலும் ஓடுகின்றன. மறுபடி ஸமுத்திரத்திலேயே போ "ய்ச்சேர்ந்து "நான் கங்கை, நான் யமுனை" என்றறிகிறதில்லை. "ஸமுத்திரத்தோடு ஸமுத்திரமாய்விடுகின்றன. இதெப்படி "யோ அப்படி ஓ! சுவேதகேதோ! இந்த ஸகலப்பிரஜைகளும "பிர்ம்மத்திலிருந்துண்டானோமென்றறிகிறதில்லை."

ஷை-உபநிஷத்-எ-உச-க-ல், † "எதில் வேறொன்றைப் "பார்க்கிறதில்லையோ, வேறொன்றைக்கேட்கிறதில்லையோ, வே "றொன்றையறிகிறதில்லையோ அது, மஹத்து(ஸகலத்திற்கும்பெ "ரிதாகிய பிர்ம்மம்). எதில் வேறொன்றைப்பார்க்கிறானோ, வே "றொன்றைக்கேட்கிறானோ, வேறொன்றையறிகிறானோ அது அ "ற்பம். மஹத்தானது அமிருதம் (அழிவற்றது). எது அற்ப "மோ அது நசிக்கத்தக்கது. ஓ! பகவானே! அது, எதில் நி "லைத்திருக்கிறது? தன்னுடைய மஹிமையிலேயே, அல்லது "மஹிமையிலுமில்லை (பிர்ம்மத்திற்கு ஆசிரயமானவஸ்துவில்லை "யென்பது கருத்து)."

ஷை-உபநிஷத்-எ-உரு-க-ல், ‡ "அதுவே (பிர்ம்மமே) கீ "ழும், மேலும், பின்னும், முன்னும், தெற்கிலும், வடக்கிலும் "அதுவேதான் ஸகலஜகத்தும்."

---

* इमा स्सोम्यनद्यः पुरस्तात् प्राच्य स्स्यन्दन्ते पश्चात् प्रतीच्यस्ता स्ससुद्रात् समुद्रमेवापियन्ति समुद्रएवभवन्ति । तायथा तत्र नविदुरियमह- मस्मीयमहमस्मीति ॥१॥ एवमेव खलु सोम्येमा स्सर्वाः प्रजा स्सत आगम्य नविदु स्सत आगच्छा मह इति ॥

† यत्र नान्यत् पश्यति नान्यच्छृणोति नान्यद्विजानाति सभूमा । अथ यत्रान्यत् पश्यत्यन्यच्छृणोत्यन्यद्विजानाति तदल्पम् । योवैभूमा तद- मृतम् । अथ यदल्पं तन्मर्त्यम् । सभगवः कस्मिन् प्रतिष्ठितइति । स्वेम- हिम्नि यदिवा नमहिम्नीति ॥

‡ सएवाधस्तात् सउपरिष्टात् सपश्चात् सपुरस्तात् सदक्षिणतः सउत्तर- तस्सएवेदं सर्वं ॥

பிருஹதாரண்ணியகோபநிஷத்-௩-௪-௧௧-ல், * "முதலில்
"பிர்ம்மம் ஒன்றேதானிருந்தது. அது யாதொரு செய்கையு
"மன்றி ஒன்றாகவேயிருந்தது (என்றால், இரண்டாவது வஸ்து
"வில்லையென்பது கருத்து)."

ஷை-உபநிஷத்-௪-௪-௫-ல், † "ஓ! மைத்திரேயீ! வேதா
"ந்தார்த்தத்தைக் கேட்டறிவதனாலே ஆத்துமவிசாரமுண்டா
"கிறது. அந்தவிசாரமாகிற வாதத்தினாலே நிச்சயஞானமுண்
"டாகிறது, அந்த ஞாநத்தினாலே ஆத்துமாவினுடைய தரிசந
"முண்டாகிறது. ஆத்துமதரிசநத்தினாலே இந்த ஸகலஜகத்து
"மறியப்பட்டதாகவாகிறது."

இதிற்சொல்லியிருக்கிறதுபோலவே (முண்டகோபநிஷத்-௧-௧-௩-ல்) சிஷியனாற் கேழ்க்கப்பட்ட கேள்வியாகிய "**कस्मिन्नु**
"**भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवति** = ஓ! பகவானே! எது அறியப்
"பட்டால் இந்தஸகலமும் (பிரபஞ்சம் முழுதும்) அறியப்பட்ட
"தாகவாகும்." என்ற கேள்விக்கு, பிர்ம்மவித்தையினாலறியப்படும் பிர்ம்மசுவரூபத்தையறிந்தால் ஸகலமுமறியப்பட்டதாகவாகுமென்கிற உத்தரஞ்சொல்லப்பட்டிருக்கிறது. தங்கத்தையறிந்தால் அதிலிருந்துண்டான ஆபரணங்கள் தங்கமேயென்றறியப்படுவதுபோல, பிர்ம்மத்தையறிந்தால் அதிலிருந்துண்டான ஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மமென்றே அறியப்படுமென்பது கருத்து.

பிருஹதாரண்ணியகோபநிஷத்-௪-௪-௧௨-ல், ‡ ஜலத்திற்
"போடப்பட்ட உப்புக்கட்டியானது, ஜலத்துடன் கலந்துபோகி
"றது. (பிறகு) அதைக்கட்டியாயெடுக்கச் சக்தியற்றவனாகிறா
"ன். அந்தஜலத்தில் எந்தவிடத்திலெடுத்தாசமநஞ்செய்தாலு
"ம் அந்தஜலம் உப்பாகவேயிருக்கிறது. இப்படிப்போல் ஓ!
"மைத்திரேயீ! இந்த ஸகலபூதங்களும் அவைகளுடைய உபா
"தி நீங்கினபிறகு மிகப்பெரிதானதும், எல்லையற்றதும், முடி

---

* ब्रह्मवा इदमग्रआसीदेकमेव तदेकं सन्नव्यभवत् ॥

† आत्मनोवा अरे दर्शनेन श्रवणेनमत्या विज्ञानेनेदं सर्वं विदितम् ॥

‡ सयथा सैन्धवखिल्ये उदके प्रास्त उदकमेवानुविलीयेतनहास्योत्ग्रहणायेवस्याद्यतो यतस्त्वाददीत लवणमेवैवं वाअरइदं महद्भूतमनन्तमपा-

"வற்றதும், ஞாநக்கட்டியாயுமிருக்கிற அந்த ஆத்துமாவிலே "யே நசித்துப்போகிறது. பிறகு, நாமரூபம் முதலிய குறிப்ப "ற்றதாகவாகிறது."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-௪-௫-கச-ல், * '"எவ்விட "த்தில் (எந்த அவித்தியாவஸ்தையில்) துவைதம்போல் (ஜீவே "சுவர ஜகத்தாகிற வேற்றுமைபோல்) இருக்கிறதோ, அதில் "ஒருவன் மற்றொன்றைப்பார்க்கிறான். ஒருவன் மற்றொன் "றை முகருகிறான். ஒருவன் மற்றொன்றைக்கேட்கிறான். ஒரு "வன் மற்றொன்றைக்குறித்துப்பேசுகிறான். ஒருவன் மற்றொன் "றை நினைக்கிறான். ஒருவன் மற்றொன்றை அறிகிறான் அப்ப "டிப்பட்டவனுக்கு எந்த ஞாநதசையில் ஸகலமும் ஆத்துமா "வாகவாய்விட்டதோ அதில் (அந்த தசையில்) எதனாலெதை "முகருகிறது? எதனாலெதைப்பார்க்கிறது? எதனாலெதைக் "கேட்கிறது? எதனாலெதைக் குறித்துப்பேசுகிறது? எதனா "லெதை நினைக்கிறது? எதனாலெதையறிகிறது? எதனாலிந்த "ஸகலத்தையுமறிகிறானோ அந்த ஞாநசுவரூபியான ஆத்துமா "வை, இவ்விதமாய் அறிகிறவனை, ஓ! மைத்திரேயீ! எதனாலறி "கிறது."

என்றால், அக்ஞாநதசையிற் பார்க்கிறது கேட்கிறதுமுத லிய இந்திரியங்களுடைய வியாபாரங்கள் காணப்படுகின்றனவே யன்றி ஸகலமும் ஆத்துமாவாகவே பார்க்கிறதாகிய ஞாநதசை யில் ஆத்துமாவைத்தவிர இரண்டாவதுவஸ்துவே இல்லையாகை யால், கேட்கிறது, பார்க்கிறது முதலிய இந்திரியவியாபாரங்கள் ஆத்துமாவினிடத்திலில்லையென்பது கருத்து.

---

रं विज्ञानघनएव । एतेभ्यो भूतेभ्य स्समुत्थाय तान्येवानुविनश्यति । नप्रेत्य संज्ञास्तीति ॥

* यत्रहि द्वैतमिव भवति। तदितर इतरं पश्यति तदितर इतरं जिघ्रति । तदितर इतरं श्रृणोति । तदितर इतर मभिवदति। तदितर इतरं मनुते तदितर इतरं विजानाति । यत्रवाअस्यसर्वं मात्मैवाभूत् तत्केन कंजिघ्रेत् तत् केन कं पश्येत्तत् केन कं श्रृणुयात्तत् केन कमभिवदेत् तत् केन कमन्वीत तत् केन कं विजानीयाद्येनेदं सर्वं विजानाति तं केन विजानीया द्विज्ञातार मरे केन विजानीयादिति ॥

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ச-௫-க-ல், * "இந்தச் சரீ "ரத்திற் தேஜோமயனும் அமிருதமயனுமான புருஷனெவனோ "அவன்தானிந்த ஆத்துமா. அவன்தான் மரணமற்றவன். இவ "ன்தான் பிர்ம்மம். இந்த ஸகலப்பிரபஞ்சமுமிவன்தான்."

கட-உபநிஷத்-௫-ச-கக-ல், † "இந்த பிர்ம்மமானது மன "தினலேயே யறியத்தகுந்தது. இவ்வுலகத்திற் பலவென்ப "தற்பமேனுமில்லை. இவ்வுலகத்திற் பலவாகப்பார்ப்பவன் மர "ணத்திலிருந்து மரணத்தையடைகிறான்."

சுவேதாசுவதரோபநிஷத்-ச-உ-ல், ‡ "அந்த ஆத்துமா "தான் அக்நி. அவன்தான் சூரியன். அவன்தான் வாயு. அவ "ன்தான் சந்திரன். அவன்தான் ஜலம். அவன்தான் பிரஜாபதி. "அவனே பிரகாசசுவரூபி. அவனே நாசமற்றவன். அவனே "பிர்ம்மம்."

இதில் முக்கியமானதும் சிரேஷ்டமானதும் வஸ்துக்களைச் சொன்னதனுல் மற்றெல்லாவஸ்துக்களுக்குஞ் சொன்னதாக உ பலக்ஷணமாயெடுத்துக்கொள்ளவேண்டியது.

நாராயணோபநிஷத்தில், § "நாராயணன் நித்தியன். பிரு "ம்மா நாராயணன். சிவனும் நாராயணன். இந்திரனும் நாராய "ணன். காலமும் நாராயணன். திக்குகளும் நாராயணன். உ "பதிக்குகளும் நாராயணன். மேலும் நாராயணன். கீழும் நா "ராயணன். உள்ளும் வெளியும் நாராயணன். உண்டாயிருக்கி "றதும் உண்டாகப்போகிறதுமான இந்தப்பிரபஞ்சமுழுதும் "நாராயணனே. பிரிவற்றவனையும், தோஷமற்றவனையும், விகற்

---

* शरीर स्तेजोमयोऽमृतमयः पुरुषोऽयमेव सयोयमात्मेदममृतं ब्रह्मैवेदं सर्वम् ॥

† मनसैवानुद्रष्टव्यम् नेहनानास्ति किञ्चन । मृत्यो स्समृत्यु माप्नोति यइह नानेवपश्यति ॥ இந்த வாக்கியத்தைகடவல்லி -ச-கக-லுங்காண்க.

‡ तदेवाग्नि स्तदादित्य स्तद्वायु स्तदुचन्द्रमाः । तदेवशुक्र ममृतं तद्ब्रह्म तदाप स्सप्रजापतिः ॥

§ अथ नित्यो नारायणः । ब्रह्मा नारायणः । शिवश्च नारायणः शक्रश्च नारायणः । कालश्च नारायणः । दिशश्च नारायणः । विदिशश्च नारायणः । ऊर्ध्वश्च नारायणः । अधश्च नारायणः । अन्तर्बहिश्च नारायणः ।

"பமற்றவனும், பெயரற்றவனும், சுத்தனும், சுவப்பிரகாச "னுமிருக்கிறவன் நாராயணனொருவனே. இரண்டாவதொரு "வனுமில்லை."

அமிருதபிந்தூபநிஷத்தில், * "பூதங்களுக்கெல்லாம் ஆத் "துமாவாகிய ஒருவனே ஒவ்வொரு பூதங்களிலுமிருக்கிறான். "ஜலத்திற் சந்திரன்போல், ஒன்றாயும் பலவாயுங்காணப்படுகி "றான்."

நரஸிம்மோத்தரதாபிந்நியுபநிஷத்-ஏ-ல், † "இந்தஸகலப் "பிரபஞ்சமும் ஆத்துமசுவரூபமே. (பிரபஞ்சத்திற்கு) ஆத் "துமாவைத்தவிர வேறாக வாஸ்தவமான சுவரூபமில்லை.——இ "ந்தஸகலப்பிரபஞ்சமும் ஸச்சிதாநந்தமான பிர்ம்மமே. இந்த "ஸச்சிதாநந்த சுவரூபமே ஸகலப்பிரபஞ்சமும். இந்தஸகலப் "பிரபஞ்சமும் ஸத்துத்தான்."

ஷை-உபநிஷத்-அ-ல், ‡ "இந்த ஸகலப்பிரபஞ்சமும் சித் "சுவரூபமேயாகையாற் பரமேசுவரனொருவனே அந்தச் சித்தாயி "ருக்கிறான். இதுதானழிவற்றது. பயமற்றது. இதுவே பி "ர்ம்மம்."

மந்திரிகோபநிஷத்தில், § "ஞானக்கண்ணுள்ள பிராம்மண "ர்கள் பிரும்மாமுதல் ஸ்தாவரம்வரையிலுள்ளவைகளைப்பார்க் "கிறார்கள். எப்படியென்றால், பரிசுத்தமாயும் எங்கும் வியா "பித்ததாயும் ஒன்றாயுமிருக்கிற அந்த பிர்ம்மமாகவே பார்க்கி "றார்கள். ஸ்தாவர ஜங்கமங்களான ஸகலப்பிரபஞ்சங்களு

---

नारायणएवेदꣳसर्वं यद्भूतं यच्चभव्यम् निष्कळंको निरञ्जनो निर्विकल्पो निराख्यात श्शुद्धो देव एको नारायणः । नद्वितीयोस्ति कश्चित् ॥

* एकएवहि भूतात्मा भूते भूते व्यवस्थितः । एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत् ॥

† निरात्मक मात्मैवेदं सर्वं——ब्रह्मैवेदꣳसर्वं सच्चिदानन्दरूपं सच्चिदानन्दरूपमिदꣳ सर्वं सद्धीदꣳसर्वम् ॥

‡ चिन्मयमिदꣳसर्वं तस्मात्परमेश्वरएवैकमेतद्भवति । एतदमृत मभय मेतत् ब्रह्म ॥

§ ब्रह्माद्यं स्थावरान्तञ्च पश्यन्ति ज्ञानचक्षुषः । तमेकमेव पश्यन्ति

"ம் எந்தபிர்ம்மத்தில் நிலைபெற்றிருக்கின்றனவோ அதனி "டத்திலேயே லயிக்கின்றன. நதிகளானவை ஸமுத்திரத்தில் "லயிப்பதுபோல."

ஸர்வஸாரோபநிஷத்தில், * "(பிர்ம்மம் எப்படிப்பட்ட "து?) எவ்விதவுபாதியுமற்றது. நிர்விசேஷசின்மாத்திரம். ஸ "த்தானது. இரண்டாவதற்றது. ஆநந்தகநமானது. மாயை "யற்றதெதுவோ அதுதான் பிர்ம்மம்."

நிராலம்போபநிஷத்தில், † "பரமாத்துமாயார்? தேகா "திகளைக்காட்டிலும் மிகவும் சிரேஷ்டமாயிருக்கிறதனாலே பிர் "ம்மமே பரமாத்துமா. அவரே பிரும்மா, விஷ்ணு, உருத்தி "ரன், இந்திரன், யமன், சூரியன், சந்திரன், தேவதைகள், "அசுரர்கள், பிசாசுகள், மனிதர்கள், ஸ்திரீகள், பசுமுதலிய "ன. அவரே ஸ்தாவரம். அவரே பிராம்மணன் முதலியவர்க "ள். ஸகலமும் பிர்ம்மமே. இவ்வுலகத்தில் அற்பங்கூடப்பல "வென்பதில்லை.——தபஸாவதென்ன? பிர்ம்மம் ஸத்தியம், ஜ "கத்து மித்தையென்கிற அபரோக்ஷஞானமாகிற அக்நியினாற் "பிரும்மாதிகளுடைய ஐசுவரியாசை யுறுதிப்பட்டிருக்கிற ஸ "ங்கற்பமாகிற விதையை வறுக்கிறதுதான் தபஸ்."

தேஜோபிந்தூபநிஷத்-க-ல், ‡ "காலமென்கிற பெயரினா "ற் சொல்லப்படுகிறதும் அகண்டமாயும், ஆநந்தசுவரூபமாயுமி "ரண்டாவதற்றதாயுமிருக்கிறதெதுவோ அதனிடத்தில் பிரும்

---

परिशुद्धं विभुंद्विजाः ॥ यस्मिन् सर्वमिदं प्रोतं ब्रह्म स्थावरजङ्गमम् । तस्मिन्नेव लयं याति स्रवन्त्यः सागरे यथा ॥

* ( किं ब्रह्म ) सर्वोपाधिविमुक्तं निर्विशेषचिन्मात्रं सदद्वैतमानन्दममायं ब्रह्म ॥

† परमात्मेतिच । देहादेः परतरत्वात् ब्रह्मैव परमात्मा । स ब्रह्मा स विष्णु स्स रुद्र स्स इन्द्र स्सशमन स्स सूर्य स्स चन्द्र स्तेसुराः ते असुरा स्ते पिशाचास्ते मनुष्या स्ताः स्त्रियस्ते पश्वादयस्तत् स्थावरं ते ब्राह्मणादय स्सर्वं खल्विदं ब्रह्म नेहनानास्ति किञ्चन । तपइतिच । ब्रह्म सत्यं जगन्मिथ्येत्यपरोक्षज्ञानाग्निना ब्रह्माद्यैश्वर्याशासिद्धसङ्कल्पबीजसन्तापरूपं तपः ॥

‡ कल्पना सर्वभूतानां ब्रह्मादीनां निमेषतः । कालशब्देन निर्दिष्टं ह्य-

"மா முதலிய ஸகலபூதங்களும் நிமிஷத்திற் கற்பிக்கப்படுகின்ற "ன.——பார்வையை ஞாநசுவரூபமாய்ச்செய்துகொண்டு ஜக "த்தைப் பிர்ம்மசுவரூபமாய்ப் பார்க்கவேண்டியது.——சித்தம் "முதலிய ஸகலவஸ்துக்களிலேயும் பிர்ம்மத்தன்மையையே பா "வனைசெய்யவேண்டியது."

தேஜோபிந்துபநிஷத்-உ-ல், * "காணப்படுகிற ஸகலவஸ்துக் "களும் அகண்டைகரஸம் (பிரிவற்ற ஒன்றான பிர்ம்மம்). ஜகத் "தும் அகண்டைகரஸமே.——ஜீவனும் அகண்டைகரஸமே. "பிரஜாபதியும் அகண்டைகரஸந்தான். பிரும்மாவும் அகண்டை "கரஸந்தான். ஹரியும் அகண்டைகரஸந்தான். உருத்திரனு "ம் அகண்டைகரஸந்தான். நானும் அகண்டைகரஸந்தான்.

"சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவையெல்லா "ஞ் சிந்மாத்திர சுவரூபமே. திருவ்வியம் காலம் இவைகள் சிந் "மாத்திரசுவரூபமே. அறிவு, அறிகிறவன், அறியப்படும்வஸ்து "இவையெல்லாஞ் சிந்மாத்திரமேயல்லவா. ஸகலமுஞ் சிந்மா "த்திரசுவரூபமே.

"பார்வை, பார்க்கப்படுகிறவஸ்துவென்பதொன்றிருக்குமா "னால், அது சிந்மாத்திரசுவரூபமே. இருக்கிறதென்கிறவஸ்து "எப்போதுஞ்சித்சுவரூபமே. ஆச்சரியகரமான ஸகலவஸ்துக் "களும் சிந்மாத்திரமே. தேகமுஞ் சிந்மாத்திரமே. காரிய "மாகியஜகத்தும் காரணவஸ்துவுஞ் சிந்மாத்திரத்தைத்தவிர "வேறல்ல. நான் என்பதும், நீ, யென்பதும் சிந்மாத்திரந்தா "ன். ரூபாரூபமும் சிந்மாத்திரசுவரூபமே."

---

खण्डानन्द मद्वयम्——दृष्टिं ज्ञानमयीं कृत्वा पश्येद्ब्रह्म मयं जगत् । ——चित्तादिसर्वभावेषु ब्रह्मत्वे नैवभावनात् ॥

* अखण्डैकरसं दृश्यमखण्डैकरसं जगत् । —अखण्डैकरसोजीव अखण्डैकरसोह्यजः । अखण्डैकरसो ब्रह्मा अखण्डैकरसो हरिः । अखण्डैकरसो रुद्र अखण्डैकरसो स्म्यहम् । भूतं भव्यं भविष्यच्च सर्वं चिन्मात्रमेवहि । द्रव्यं कालश्च चिन्मात्रं ज्ञानं ज्ञेयं चिदेवहि । ज्ञाता चिन्मात्ररूपश्च सर्वं चिन्मयमेवहि । दृक् दृश्यं यदि चिन्मात्र मस्तिचेच्चिन्मयं सदा । सर्वाश्चर्यं च चिन्मात्रं देहश्चिन्मात्र मेवहि । लिङ्गञ्च कारणं चैव चिन्मात्रान्नहि विद्यते । अहं त्वं चैव चिन्मात्रं मूर्तामूर्तादिचिन्मयम् ॥

தேஜோபிந்தூபநிஷத்-ட-ல், * "இந்த ஸகலப்பிரபஞ்ச "மும் பிர்ம்மமாத்திரமே. பிர்ம்மத்திற்கந்நியமாய் யாதொன்று "மில்லை."

ஷெ-உபநிஷத்-டு ல், † "இந்தப்பிரபஞ்சமில்லவே இல்லை. "அது உண்டானதுமல்ல. அதற்கிருப்புமில்லை.——ஸகலமும் "ஆத்துமாவென்கிற நிச்சயமாகிய விதியினால் மூன்றுலகமு "மில்லை.—— இந்த ஜகத்து பிர்ம்மமாத்திரமே."

ஷெ-உபநிஷத்-கூ-ல், ‡ "ஸகலமும் சைதந்நியமாத்திரசு "வரூபமானதனால், தோஷமென்பதெப்போதுமில்லை. ஸகல "மும் ஸத்தானசுவரூபமானதனால், ஸச்சிதாநந்தமாத்திரமே. "—— ஸகலமும் பிர்ம்மமே. வேறொன்றுமில்லை.——ஆத்து "மாவுக்கந்நியமாய் ஜகத்தில்லை. ஆத்துமாவுக்கந்நியமாய் சு "கமில்லை. ஆத்துமாவுக்கந்நியமாய் அடையத்தக்கவிடமில்லை. "ஆத்துமாவுக்கந்நியமாய் ஒன்றுமில்லை. ஆத்துமாவுக்கந்நியமாய் "திருணமுமில்லை. ஆத்துமாவுக்கந்நியமாய் உமியுமில்லை. ஜகத் "தெல்லாம் ஆத்துமசுவரூபமேதான்."

ஆத்துமபோதோபநிஷத்தில், § "ஸகலபூதங்களுக்குள்ளே "யிருக்கிறவனையும் காரணபுருஷனையும் (தனக்கு) காரணம "ற்றவனையும் ஓங்காரவாச்சியனை பிர்ம்மமாயும் துக்கமோஹ "ங்களற்றவனையும் ஸர்வவியாபியாயுமிருக்கிற ஒன்றான நாரா "யணனைத் தியானிக்கிறவன் துக்கமடைகிறதில்லை. துவைதத்

---

* ब्रह्ममात्रमिदं सर्वं ब्रह्मणो न्यन्न किञ्चन ॥

† इदं प्रपञ्चं नास्त्येव नोत्पन्नंनोस्थितं क्वचित् ।———लोकत्रयविहीनत्वात् सर्वमात्मेति शासनात् ।— —ब्रह्ममात्रं जगदिदम् ॥

‡ सर्वं चैतन्यमात्रत्वात्सर्वदोष स्सदानहि । सर्वं सन्मात्ररूपत्वात्सच्चिदानन्दमात्रकम् ।——ब्रह्मैवसर्वं नान्योस्ति——आत्मनो न्यज्जगन्नास्ति आत्मनोन्यत् सुखं नच । आत्मनोन्यत् गतिर्नास्ति सर्वमात्ममयंजगत् । आत्मनोन्य न्नहिक्वापि आत्मनोन्यत्तृणंनहि । आत्मनोन्यत्तुषानास्ति सर्वमात्ममयं जगत् ॥

§ सर्वभूतस्थमेकं नारायणं कारणपुरुषमकारणं परं ब्रह्मोम् । शोकमोहाविनिर्मुक्तं विष्णुं ध्यायन्नसीदति । द्वैताद्वैतमभयं भवति । मृत्योस्स-

"திலிருந்து பயமற்றதாகிற அத்துவைதமாகிறான். எவன் இந்த "லோகத்திற் பலவாக(நான், நீ, அவன், இது, அது, என்பது "முதலிய பேதபுத்தியாய்) பார்க்கிறானோ அவன் மரணமடையத் "தக்க பலஜந்மங்களையடைகிறான்."

மஹாநாராயணோபநிஷத்-க-ல், * "பிர்ம்மமானது, ஆதிநடு "முடிவில்லாதது. இந்த ஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மமே. மு "டிவற்றதாயும் அளவற்றதாயும் அகண்டமாயும் பரிபூர்ணமாயு "மிருக்கிறது பிர்ம்மம். இரண்டாவதற்றதாயும் பரமாநந்தசுத்த "புத்தமுக்த ஸத்திய சுவரூபமாயும் எங்கும் வியாபித்ததாயும் "(ஜகத்திற்கு) அந்நியமல்லாததாயும் பிரிவற்றதாயுமிருக்கிறது "பிர்ம்மம்.——ஆத்துமா, அந்தராத்துமா, பரமாத்துமா, ஞா "நாத்துமா, துரீயாத்துமா முதலிய வாக்கியங்களினாலே சொ "ல்லத்தக்கதாயிருக்கிற அத்துவைத பரமாநந்தசுவரூபனும் "எங்கும் வியாபித்தவனும் அழுக்கற்றவனும் வாக்குக்கெ "ட்டாதவனும் சுத்தனும் சுவப்பிரகாசனுமிருக்கிற நாரா "யணனொருவனே. இரண்டாவதாக வேறொருவனுமில்லை."

ஷை-உபநிஷத்-ந-ல், † "இரண்டாவதற்ற பிர்ம்மம் ஒன்றே. "இவ்விடத்திற்பலவென்பது அற்பமேனுமில்லை. ஆகையினாற், "பிர்ம்மத்திற்கந்நியமாயிருக்கிற ஸகலமும் நசிக்கத்தக்கது. பர "ப்பிர்ம்மமொன்றுதான் ஸத்தியமாயுள்ளது. ஸத்தியஞாநாநந் "தம் பிர்ம்மம்."

ஷை-உபநிஷத்-ச-ல், ‡ "காரியகாரண (அவித்தை மாயை)

---

मृत्युमाप्नोति य इह नानेवपश्यति ॥

* आदिमध्यान्तशून्यं ब्रह्म। सर्वं खल्विदं ब्रह्म। मायातीतं गुणातीतं ब्रह्म। अनन्तमप्रमेयाखण्डपरिपूर्णं ब्रह्म। अद्वितीयपरमानन्दशुद्धबुद्धमुक्तसत्यस्वरूपव्यापकाभिन्नापरिच्छिन्नं ब्रह्म।—आत्मान्तरात्मा परमात्मा ज्ञानात्मा तुरीयात्मेत्यादि वाचकवाच्याद्वैतपरमानन्दोविभु र्नित्यो निष्कळ्ङ्को निर्विकल्पो निरञ्जनो निराख्यातश्शुद्धो देव एको नारायणो न द्वितीयोस्ति कश्चित् ॥

† एकमेवाद्वयं ब्रह्म नेहनानास्तिकिञ्चन। तस्मात् ब्रह्म व्यतिरिक्तं सर्वं बाधितमेव। सत्यमेव परं ब्रह्म सत्यं ज्ञानमनन्तं ब्रह्म ॥

‡ कार्यकारणोपाधिभेदाज्जीवेश्वरभेदोपि दृश्यते ॥

"உபாதியினுல் ஜீவேசுவரபேதம் காணப்படுகிறது." (வாஸ்தவத்திற் பேதமில்லையென்பது கருத்து).

மஹாநாராயணோபநிஷத்-அ-ல்,* "சுத்தமான தங்கத்திற்குக் "கடகம், மகுடம், தோள்வளைமுதலிய பேதங்களெப்படியோ, ஸ "முத்திரஜலத்திற்கு பெரிதுசிறிதாகிற அலைகளும்,நுரை,குமிழி, "ஆலங்கட்டி, உப்பு, கல்லுமுதலிய அநேகவஸ்துபேதங்களெப் "படியோ அப்படி அத்துவைதபரமாநந்தலக்ஷண பரப்பிர்ம்மமா "கிய எனக்கு ஸகலத்துவைதமும்(வேற்றுமையும்) உண்டாகக்கூ "டியதே. ஸகலமும் என்னுடையசுவரூபமே. என்னைவிட அந்நி "யமாய் அணுமாத்திரமில்லை."

அத்துவயதாரகோபநிஷத்தில், † "ஜீவேசுவரர்கள் மாயா "சுவரூபிகளென்றறிந்து (ஜகத்துமுதலிய) ஸகலவிசேஷத்தை "யும் இதல்ல இதல்லவென்று விலக்கிப்பார்க்கையில் எதுமி "ஞ்சுகிறதோ, அதுவே இரண்டாவதற்றபிர்ம்மம்."

பைங்களோபநிஷத்-க-ல், ‡ "ஓ! ஸௌம்மியா! இந்தப்பி "ரபஞ்சமானது முதலில் ஸத்தாகவேயிருந்தது. அந்தஸத்தான "பிர்ம்மமானது நித்தியமுக்தமாயும், விகாரமற்றதாயும்,ஸத்திய "ஞாநாநந்தமாயும், இரண்டாவதற்ற ஒன்றாயுமிருக்கிறது."

ஷை-உபநிஷத்-உ-ல், § "ஜீவசுவரூபமும் ஜகத்சுவரூபமும் "அறியப்பட்டால்,பிரத்தியகபேதபிர்ம்மமேமிஞ்சுகிறது."

---

* यथा शुद्धसुवर्णस्य कटकमकुटाङ्गदादिभेदः । यथा समुद्रसलिलस्य स्थूलसूक्ष्मतरङ्गफेनबुद्बुदकरकलवणपाषाणाद्यनन्तवस्तुभेदः । यथा भूमेः पर्वतवृक्षतृणगुल्मलताद्यनन्तवस्तुभेदः तथैवाद्वैतपरमानन्दलक्षणपरब्रह्मणो मम सर्वं द्वैतमुपपन्नं भवत्येव मत्स्वरूपमेव सर्वम् । मद्व्यतिरिक्तमणुमात्रं न विद्यते ॥

† जीवेश्वरौ मायिकाविति विज्ञाय सर्वविशेषं नेति नेतीति विहाय यदवशिष्यते तदद्वयं ब्रह्म ॥

‡ सदेव सौम्येदमग्रआसीत् । तन्नित्यमुक्तमविक्रियं सत्यज्ञानानन्दं परिपूर्णं सनातनमेकमेवाद्वितीयं ब्रह्म ॥

§ जीवभावजगद्भावबोधे प्रत्यगभिन्नं ब्रह्मैवावशिष्यते ॥

மஹோபநிஷத்-சு-ல், * "காணப்படுகிற இந்தஸகலஜகத்
"தும்சித்தாகவே அறியப்படுகிறது. அவையெல்லாம் சிதம்ச
"மேதவிரவேறல்லவென்றுபாவனைசெய்.—ஸத்தியம்,ஆத்துமா,
"பிர்ம்மம் இவைமுதலிய பெயர்களெல்லாம் எந்தமஹாத்துமா
"வினிடத்திற்சொல்லப்படுகிறதோஅவைகளெல்லாம் வியவஹா
"ரத்தின்பொருட்டு வித்துவான்களாற் கற்பிக்கப்பட்டவை.
"கடகமென்கிற சப்தத்தினுடைய அர்த்தமானது தங்கத்தைத்
"தவிர எப்படிவேறானதல்லவோ, தங்கமானது கடகத்தைத்
"தவிர எப்படி வேறானதல்லவோ அப்படி ஜகத்தென்கிற சப்
"தார்த்தமும் பிர்ம்மத்தைத் தவிரவேறல்ல."

ஷை-உபநிஷத்-சூ-ல், † "நான் அல்லாதவஸ்துவேஇல்லை.
"என்னுடைய சுவரூபமின்றி யாதொருவஸ்துவுமில்லை. ஸகல
"மும் ஸத்சித்ரூபமாய் வியாபித்திருக்கிறது. நான் எதை இச்
"சிக்கப்போகிறேன் (இச்சிக்கும்படியான வேறுவஸ்துவில்லை
"யென்பது கருத்து). இந்தஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மமே. ஓ!
"பாபமற்றவனே! "நான் வேறு, இந்தப்பிரபஞ்சம் வேறு" எ
"ன்கிற பிராந்தியைத் தள்ளிவிடு."

யோகசிகோபநிஷத்-சு-ல், ‡ "ஓம்! சைதந்நியமானது ஒ
"ரேரூபமானதனாற் பேதமானதுஒருபோதும் யுக்தமல்ல. கயி
"ற்றிற் பாம்பென்கிற தன்மைபோல் ஜீவத்தன்மையையறியவே
"ண்டியது. கயிறு என்கிற ஞானமில்லாததனால் ஒருக்ஷணத்தி
"ற் கயிறு பாம்பாகக் காணுகிறது. அதுபோல் ஒன்றான சித்

---

* सर्वं किञ्चिदिदं दृश्यं दृश्यते चिज्जगत्गतम्। चिन्निष्पन्दांशमात्रत्वं नान्यदस्तीति भावय ।—ऋतमात्मापरं ब्रह्म सत्यमित्यादिका बुधैः । कल्पिताव्यवहारार्थं यस्य संज्ञा महात्मनः । यथा कटकशब्दार्थः पृथग्भावेन काञ्चनात् । न हेमकटकात्तद्वज्जगच्छब्दार्थतापरे ॥

† नतदस्ति न यत्राहं नतदस्ति नतन्मयम् । किमन्यदभिवांछामि सर्वं सच्चिन्मयं ततम् । समस्तं खल्विदं ब्रह्म सर्वमात्मेद माततम् । अहमन्यमिदं चान्यदिति भ्रान्तिं त्यजानघ ।

‡ ॐ—चैतन्यस्यैकरूपत्वात् भेदो युक्तो नकर्हिचित् । जीवत्वंच तथाज्ञेयं रज्वां सर्पग्रहो यथा । रज्वज्ञानात् क्षणेनैव यद्वद्रज्जुर्हिसर्पि-

"தானது தானே பிரபஞ்சமாய் விளங்கிறது. பிரபஞ்சத்திற்
"கு பாதாநகாரணம் பிர்ம்மத்தைத்தவிர வேறில்லையாகையால்,
"இந்த ஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மமே, வேறல்ல. ஸகலமும்
"ஆத்துமாவென்கிற விதியினாலே (சுருதியினாலே) பிரவேசிக்க
"ப்படுகிறதென்பதும் பிரவேசிக்கிறதென்பதும் பொய்யே. பர
"தத்துவமானது இப்படியறியப்பட்டால் பேதத்திற்கிடமேது?
"பரமாத்துமாவாகிற பிர்ம்மத்திலிருந்தே ஸகலபூதங்களுமுண்
"டாகிறபடியினாலே இவைகளெல்லாம் பிர்ம்மமேயாகிறதென்று
"நினை. விளங்கிறதுபோலிருக்கிற ஸகலமானபெயர்களும் பலவி
"தரூபங்களும் ஸகலமானகருமங்களும் பிர்ம்மமென்றே பாவ
"னைசெய். தங்கத்தினாலுண்டானவஸ்துக்கள் தங்கமே என்ப
"தெப்படி நிச்சயமோ அப்படி, பிர்ம்மத்தினாலுண்டானது பிர்ம்
"மமேயாகிறது. ஜீவாத்தும பரமாத்துமாக்களுக்குள்ளே எவன
"ற்பமாவது பேதத்தை நினைக்கிறானோ அந்தமூடாத்துமாவுக்கே
"(ஜநநமரணஸம்ஸார) பயமுண்டென்றுசொல்லப்படுகிறது. எத
"னுடைய அக்ஞாநத்தினால், துவைதம் (வேற்றுமை) உண்டாகி
"றதோ, அப்போது ஒன்றையொன்று பார்க்கிறது. ஸகலமுமாத்
"துமாவாகப் பார்க்கிறபொழுது அவ்விஷயத்திலணுவளவுகூட
"வேற்றுமையில்லை. இந்தலோகமானது அநுபவிக்கப்பட்டிருந்
"தாலும் அதுவியவஹாரயோக்கியமாயிருந்தாலும் சுவப்நமா
"னது அடுத்தநிமிஷத்தில் நசிக்கிறதுபோல அஸத்ரூபமான
"தே. சுவப்நத்தில் ஜாக்கிரதாவஸ்தையில்லை. ஜாக்கிரத்திற்

---

णी । भातितद्वच्चातिस्साक्षाद्विश्वाकारेण केवलं । उपादानं प्रपञ्चस्य ब्रह्मणोन्यन्नविद्यते । तस्मात्सर्वप्रपञ्चोयं ब्रह्मैवास्ति नचेतरत् । व्याप्यव्यापकतामिथ्या सर्वमात्मेतिशासनात् । इतिज्ञाते परेतत्वे भेदस्यावसरः कुतः। ब्रह्मणस्सर्वभूतानि जायन्ते परमात्मनः । तस्मादेतानि ब्रह्मैव भवन्तीतिविचिन्तय ।: ब्रह्मैवसर्वनामानि रूपाणि विविधानिच । कर्मण्यपि समग्राणि भासन्तीवेति भावय । सुवर्णाज्जायमानस्य सुवर्णत्वं च शाश्वतम् । ब्रह्मणो जायमानस्य ब्रह्मत्वञ्चतथाभवेत् । स्वल्पमप्यंतरंकृत्वा जीवात्मपरमात्मनोः । यस्तिष्ठति स मूढात्मा भयं तस्यापि भाषितम् । यदज्ञानाद्भवेद्वैतमितरत्तत्रपश्यति । आत्मत्वेन तथा सर्वं नेतरत्तत्रचाण्वपि । अनुभूतोप्ययंलोके व्यवहारक्षमोपिसः । असद्रूपो यथा स्वप्नउत्तरक्षणबाधितः । स्वप्ने जा-

"சுவப்நாவஸ்தையில்லை. இவ்விரெண்டும் லயத்திலே (சுஷு-
"ப்தியவஸ்தையிலே) இல்லை. இலயமானது இவ்விரண்டவஸ்
"தைகளிலுமில்லை. இம்மூன்றவஸ்தைகளும் பொய்யாகிறது.
"இவைகள் முக்குணங்களாற் கற்பிக்கப்பட்டன. இதனுடைய
"அறிவினாலிந்தஆத்துமாவானவன், சித்தாயும் நித்தியனாயுங்குண
"ங்களுக்கப்புறப்பட்டவனாயுமிருக்கிறான். மண்ணினிடத்திற்குட
"மென்கிறபிராந்தியும், கிளிஞ்சிலில் வெள்ளியென்கிறஇருப்பும்
"எப்படியோ அப்படி பிர்ம்மத்தில் ஜீவத்தன்மை. இதையறிந்
"தால் (ஜீவத்தன்மை) நசித்துப்போகிறது. மண்ணிற்குடமென்
"கிறபெயரும், தங்கத்திற்குண்டலமென்கிற பெயரும், கிளிஞ்சி
"லில் வெள்ளியென்கிறபேச்சும் எப்படியோ அப்படிபிர்ம்மத்தி
"ல் ஜீவனென்கிற சப்தமுண்டாயிருக்கிறது. ஆகாசத்தில் நீலத்
"தன்மையும் பாலைநிலத்தில் ஜலத்தோற்றமும் கட்டையிற்புருஷ
"ப்பிராந்தியும்போற் சிதாத்துமாவிடத்திற் பிரபஞ்சம்தோற்று
"கிறது. வேதாளம், கந்தர்வநகரம், ஆகாசத்திலிரண்டுசெந்திரன்
"என்பவை எப்படியில்லையோ அப்படித்தான் ஸத்தியமான பிர்
"ம்மத்தினிடத்தில் ஜகத்தினிருப்பு. ஜலமே அலையென்றும்
"பொங்குதலென்றும் எப்படிவிளங்கிறதோ, மண்ணானது
"குடமென்கிற பெயரினால் எப்படிவிளங்கிறதோ, நூற்கள்
"துணியென்கிறபெயரினாலெப்படிவிளங்கிறதோ அப்படி ஜக
"த்தென்கிற பெயரினாற் சித்தேவிளங்கிறது. ஸகலமும் பிர்ம்ம
"மாத்திரமே. மலடிமைந்தன், கானல் ஜலம், ஆகாசவிருக்ஷமி

---

गरितं नास्ति जागरेस्वप्नतानहि । द्वयमेवलये नास्ति लयोपि ह्यनयो नच। त्रयमेव भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितः । अस्य दृष्टा गुणातीतो नित्योह्येष चिदात्मकः । यद्वन्मृदि घटभ्रान्तिश्शुक्तौहि रजतस्थितिः । तद्वद्ब्रह्मणि जीवत्वं वीक्ष्यमाणे विनश्यति । यथा मृदि घटो नाम कनके कुण्डलाभिधा । शुक्तौहि रजतख्याति र्जीवशब्दस्तथापरे। यथैव व्योम्नि नीलत्वं यथा नीरं मरुस्थले । पुरुषत्वं यथा स्थाणौ तद्वद्विश्वं चिदात्मनि । यथैव शून्यो वेताळो गन्धर्वाणां पुरं यथा । यथाकाशे द्विचन्द्रत्वं तद्वत्सत्ये जगत्स्थितिः । यथा तरङ्गकल्लोलै र्जलमेवं स्फुरत्यलम् । घटनाम्ना यथा पृथ्वी पटनाम्ना हितन्तवः । जगन्नाम्ना चिदाभाति सर्वं ब्रह्मैव केवलम् ।

"வைகள் எப்படியில்லையோ அப்படி ஜகத்தினிருப்புமில்லை. "குடத்தைப் பகுத்தறிகையிற் பிரயத்நமின்றித்தானாகவே "மண்ணாய்விளங்கிறதுபோல பிரபஞ்சத்தையாராய்ந்து பார்த் "தாற் பிரகாசமானபிர்ம்மமேவிளங்கிறது. கயிறானது ஞாநிக் "குமக்ஞாநிக்கும் (ஞாநிக்குக்கயிறாகவும் அக்ஞாநிக்குப்பாம்பா "கவும்)இரண்டுவிதமாய்த்தோற்றுவதுபோல,எப்போதுஞ்சுத்த "னாகவேயிருக்கிறஆத்துமாவானவன்எப்போதும் அசுத்தன்போ "ல் விளங்கிறான். குடமானது மண்சுவரூபமாகவே இருக்கிறதெ "ப்படியோ அப்படி தேகமும் சித்சுவரூபமாயிருக்கிறது. வித்வா "ன்களாலே ஆத்துமாநாத்துமவிசாரமானது வீணாகவே செய் "யப்படுகிறது (பிர்ம்மத்தைத்தவிர அநாத்துமா இல்லையென்ப "தினாற்றான்). மூடனாலே கயிறானது பாம்பாகவும் கிளிஞ்சிலா "னது வெள்ளியாகவும் நிச்சயிக்கப்படுகிறதுபோல ஆத்துமத் "தன்மையானது தேகமாக நிச்சயிக்கப்படுகிறது. மண்ணானது "குடமாகவும் பாலைநிலத்தோற்றமானது ஜலமாகவும் மரங்கள் "வீடாகவும் இரும்பானது கத்தியாகவும் எப்படி கிரகிக்கப்படு "கிறதோ அப்படிப்போல ஆத்துமாவிடத்தில் அக்ஞாநத்தி "னாற் தேகத்தன்மையையறிகிறான்."

அந்நபூர்ணோபநிஷத்-க-ல், * "பிரமையானது ஐந்துவித "மாய் விளங்கிறது. அது இவ்விடத்திற் சொல்லப்படுகிறது. "ஜீவேசுவரர்கள்வெவ்வேறுரூபமென்பதுமுதலாவதுப்பிரமை. "கர்த்திருத்துவகுணமானதுவாஸ்தவமாய்ஆத்துமாவிடத்திலிரு

---

यथा वन्ध्यासुतो नास्ति यथा नास्ति मरौ जलम् । यथानास्ति नभोवृक्षस्तथा नास्ति जगत्स्थितिः । गृह्यमाणे घटे यद्वन्मृत्तिकाभाति वैबलात् । वीक्षमाणे प्रपञ्चेतु ब्रह्मैवाभाति भासुरम् । सदैवात्मा विशुद्धोस्ति ह्यशुद्धोभाति वैसदा । यथैव द्विविधारज्जु र्ज्ञानिनोऽज्ञानिनोऽनिशम् । यथैवमृण्मयःकुम्भस्तद्वद्देहोपि चिन्मयः । आत्मानात्मविवेकोयं मुधैवक्रियते बुधैः । सर्पत्वेन यथा रज्जूरजतत्वेन शुक्तिका । विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता । घटत्वेन यथा पृथ्वी जलत्वेनमरीचिका । गृहत्वेन हि काष्ठानि खड्गत्वेनैवलोहता । तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतद्गति ॥

* भ्रमः पञ्च विधोभाति तदेवेह समुच्यते । जीवेश्वरौ भिन्नरूपा-

“க்கிறதென்பது, இரண்டாவதுப்பிரமை.(ஸ்தூலசூக்ஷ்மகாரண)
“மூன்று சரீரத்துடன் கூடியிருக்கிற ஜீவன் அதிலொட்டியிருக்
“கிறானென்பது, மூன்றாவதுப்பிரமை. ஜகத்காரணரூபனுக்கு
“விகாரத்தன்மை சொல்வது,நான்காவதுப்பிரமை. காரணத்தை
“க்காட்டிலும் ஜகத்து வேறென்றும் ஜகத்துஸத்தியமென்றும்
“நினைக்கும் தன்மை, ஐந்தாவதுப்பிரமை. ஐந்துப்பிரமைகளு
“மப்போது மனதில் நிவிருத்தியாயிற்று. (எப்போதென்றால்) பி
“ம்பப்பிரதிபிம்ப தரிசநத்தினாலே பேதப்பிரமை நிவிருத்தியாயி
“ற்று. ஸ்படிகத்திற் சிவப்பைப்பார்த்ததனால் (சிவப்புவர்ண
“முள்ள புஷ்பத்தைபடுத்திருக்கிற ஸ்படிகமானது சிவப்பாய்த்
“தோற்றுவதனால்) கர்த்திருத்துவம் வாஸ்தவமென்கிற பிரமை
“நிவர்த்தியாயிற்று. கடாகாச மடாகாச தரிசநத்தினால் ஜீவ
“னொட்டியிருக்கிறானென்கிற பிரமை நிவர்த்தியாயிற்று. கயிற்
“றிற்பாம்பென்று பார்த்ததனாலே காரணத்தைக்காட்டிலும் ஜ
“கத்து வேறு ,ஜகத்து ஸத்தியமானதென்றப்பிரமை நிவர்த்தி
“யாயிற்று. தங்கந்தான் கிண்ணமாயிருக்கிறதென்கிற பார்வை
“யினாலே விகாரத்தன்மையாகிற பிரமை நிவர்த்தியாயிற்று.
“அதுமுதல் என்னுடைய சித்தமானது தானாகவே பிர்ம்மாகா
“ரமாயாயிற்று.——ஸகலத்தையும் (இதல்ல, இதல்லவென்று)
“செவ்வையாய்த் தள்ளிப்பார்க்கையில் மிஞ்சினதெதுவோ அ
“ந்த சுவரூபமாயாகக்கடவாய். காணப்பட்டுக்கொண்டிருக்
“கிற இந்த ஸகலமும் ஜகத்திலிருக்கிறதாக வறியப்படுமானால்,
“அது சித்தினுடைய சஞ்சலமற்றதன்மையின் அம்சம் மாத்தி
“ரந்தான். சாசுவதமானது வேறொன்றுமில்லை.”

---

विति प्राथमिको भ्रमः। आत्मनिष्ठ कर्तृगुणं वास्तवं वा द्वितीयकः। शरी-रत्रय संयुक्ता जीवस्सङ्गी तृतीयकः। जगत्कारणरूपस्य विकारित्वं चतुर्थकः। कारणाद्भिन्नजगतस्सत्यत्वं पञ्चमोभ्रमः। पञ्चभ्रमानिवृत्तिश्च तदा स्फुरति चेतसि। बिंबप्रतिबिंबदर्शनेन भेदभ्रमो निवृत्तः। स्फटिकलोहितदर्शनेन पारमार्थिककर्तृत्वभ्रमोनिवृत्तः। घटमठाकाशदर्शनेन सङ्गीतिभ्रमो निवृत्तः। रज्जुसर्पदर्शनेन कारणाद्भिन्नजगत्सत्यत्वभ्रमो निवृत्तः। कनककरुचिकदर्शनेन विकारित्वभ्रमो निवृत्तः। तदाप्रभृति मच्चित्तं ब्रह्माकारमभूत् स्वयम्।——सर्वं संत्यज्य दूरेण यच्छिष्टं तन्मयोभव। सर्वं किञ्चिदिदं दृश्यं दृश्यते चेज्जगत्गतम्। चिन्निष्पन्दांशमात्रं तन्नान्यत्किञ्चन शाश्वतम्॥

அத்தியாத்துமோபநிஷத்தில், * "இந்த ஸகல ஜகத்து "ம், தானே (ஆத்துமாவே). தன்னைக்காட்டிலுமந்நியமாயொன் "றுமில்லை. தன்னிடத்திலாரோபிக்கப்பட்டிருக்கிறதும் விளங் "கிக்கொண்டிருக்கிறதுமாகிய ஸகலவஸ்துக்களையும் விலக்கிவிடு "வதனுற் பூர்ணமாயும் இரண்டாவதற்றதாயுமிருக்கிற பிர்ம்மம் "தானகவேயிருக்கிறது. ஒரேவஸ்துவினிடத்திற் பிரபஞ்சமெ "ன்கிற இந்த வேறுபாடு எண்ணக்கூடியதல்ல. விகாரமற்றதாயு "ம் விசேஷமற்றதாயுமிருக்கிறபிர்ம்மத்தினிடத்திற் பேதமேது? "பார்க்கிறவன், பார்வை, பார்க்கப்படும்வஸ்து முதலிய தோ "ற்றமல்லாததும், துன்பமற்றதும், மஹாப்பிரளயஸமுத்திரம் "போல மிகவும் பூர்ணமானதும், தேஜஸினுல் இருள் லயமடை "வதுபோல், பிராந்தி காரணமாயிருக்கிற அக்ஞாநமானது எந் "தப் பிரகாசத்தில் லயமடைகிறதோ அப்படிப்பட்டதுமாகிய "அத்துவய பிர்ம்மபரதத்துவமாயும் விசேஷமற்றதாயுமிருக் "கிற சிதாத்துமாவினிடத்திற் பேதமேது? ஒரே ஆத்துமா "வாகிய பரதத்துவத்தில் அந்த பேதமெப்படியிருக்கக்கூடும்?"

ஆத்துமோபநிஷத்தில், † "ஆத்துமாவென்ற பெயரையு "டைய சிவனனவர் பரிசுத்தமானவர். எப்போது மிரண்டா "வதற்ற ஒருவரே. எங்கும் வியாபித்தரூபத்தினலே பிர்ம்ம "மாத்திரமாய் விளங்கிக்கொண்டிருக்கிறர். ஜகத்ரூபமாய் வி "ளங்கிறதும் பிர்ம்மமே. வித்தை அவித்தை முதலிய பேதமா "கவும் குரு சிஷியன்முதலிய பேதமாகவும் பிர்ம்மமேவிளங்கி

---

* स्वयं विश्वमिदं सर्वं स्वस्मादन्यन्न किञ्चन । स्वात्म न्यारोपिताशेषभाववस्तु निरासतः । स्वयमेव परं ब्रह्म पूर्णमद्वयमक्रियम् । असंकल्पो विकल्पोयं विश्वमित्येकवस्तुनि । निर्विकारे निराकारे निर्विशेषेभिदा कुतः । द्रष्टृदर्शनदृश्यादि भावशून्ये निरामये । कल्पार्णवइवात्यन्तपरिपूर्णे चिदात्मनि । तेजसीवतमो यत्र विलीनं भ्रान्तिकारणम् । अद्वितीये परे तत्वे निर्विशेषे भिदाकुतः । एकात्मके परे तत्वे भेदकं तत्कथं वसेत् ॥

† आत्मसंज्ञश्शिवश्शुद्ध एकएवाद्वयस्सदा । ब्रह्मरूपतया ब्रह्म केवलं प्रतिभासते । जगद्रूपतया प्येतत् ब्रह्मैव प्रतिभासते । विद्याविद्यादिभेदेन भावाभावादिभेदतः । गुरुशिष्यादिभेदेन ब्रह्मैव प्रतिभासते । ब्रह्मैव

"றது. தத்துவதரிசநத்தினலே சுத்தபிர்ம்மமாத்திரமே விள "ங்கிறது. வித்தையுமில்லை, அவித்தையுமில்லை, ஜகத்துமில்லை, "மற்றென்றுமில்லை. ஸத்தியம்போல் ஜகத்தோற்றுதல் ஸம்ஸா "ரப்பிரவிருத்தியை யுண்டாக்கிறது. ஜகத்து அஸத்தியமாய்த் "தோற்றுதல் ஸம்ஸாரத்தினுடைய நிவர்த்தியைச் செய்கிறது."

பாசுபதபிர்ம்மோபநிஷத்தில், * "இந்த வித்தை அவி "த்தைகள் வியவஹார திருஷ்டியினலேயேயன்றி வேறில்லை. "தத்துவமாய்ப் பார்த்தால் இல்லவேயில்லை. கேவலம் தத்துவ "மாத்திரமாகத்தானிருக்கிறது.——தனக்கு ஸகலமும் சுவய "மாகவே எப்போது பிர்ம்மசுவரூபமாக விளங்கிறதோ, அப் "போது நிஜம்போல் விளங்கிக்கொண்டிருக்கிற துக்கம் முதலி "ய இந்தபேதம் விளங்கிறதில்லை.—— பிர்ம்மஞாநியானவன் "ஞாநத்தினல் ஸகலமும் பிர்ம்மசுவரூபமென்றே கிரஹிக்கிற "ன்.——இருக்கிறதென்றல், அப்படிப்பட்ட இருப்பே சுவ "ரூபம். இருக்கிறதென்கிற சுவரூபம் பிர்ம்மலக்ஷணமே. இ "ருக்கிறதென்கிற லக்ஷணந்தான் ஸத்து. அந்த ஸத்து பிர்ம்ம "மேதவிர வேறல்ல. ஸத்தைக்காட்டிலும் வேறென்றுமில்லை. "வாஸ்தவத்தில் மாயையென்பதுமில்லை. ஆத்மநிஷ்டர்களா "ன யோகிகளுக்குத் தன்னிடத்தில் மாயையானது கற்பிக்கப் "பட்டிருக்கிறது. ஸாக்ஷிரூபமாய் பிர்ம்மம் விளங்கிறது. பிர் "ம்மஞாநத்தினல் அது (மாயை) நசித்துப்போகிறது. பிர்ம்

---

केवलं शुद्धं विद्यते तत्वदर्शने । नच विद्या नचाविद्या न जगच्च नचापरं । सत्यत्वेन जगत्भानं संसारस्य प्रवर्तकम् । असत्यत्वेन भानन्तु संसारस्य निवर्तकम् ॥

* व्यावहारिकदृष्ट्येयं विद्या विद्या नचान्यथा । तत्वदृष्ट्यातु नास्त्येव तत्वमेवास्ति केवलम् । ——यदा ब्रह्मात्मकं सर्वं विभाति स्वतएवतु । तदा दुःखादिभेदोयमाभासोपि न भासते । ——ब्रह्मवित्ग्रसति ज्ञानात् सर्वं ब्रह्मात्मनैवतु । ——अस्तिचेदस्तितारूपं ब्रह्मैवास्तित्वलक्षणं । अस्तिता लक्षणासत्ता सत्ताब्रह्म नचापरा । नास्ति सत्तातिरेकेण नास्तिमायाच वस्तुतः । योगिनामात्मनिष्ठानां माया स्वात्मनि कल्पिता । साक्षिरूपतया भाति ब्रह्मज्ञानेन बाधिता । ब्रह्मविज्ञानसंपन्नः प्रतीतमखिलं

"மனோநமுடையவன் தோற்றப்பட்ட ஸகலஜகத்தையும் பார்த்
"துக்கொண்டிருந்தாலுந் தனக்கு வேறாய்ப் பார்க்கிறதில்லை."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், * "எது காணக்கூடாத
"தோ கிரஹிக்கக்கூடாததோ வம்சமற்றதோ உருவமில்லா
"ததோ கண்காதில்லாததோ குறிப்பிடக்கூடாததோ கைகா
"லில்லாததோ எப்போதுமுள்ளதோ எங்கும் நிறைந்திருக்
"கிறதோ மிகவும் சூக்ஷ்மமாயிருக்கிறதோ அழிவற்றதோ
"பூதங்களுக்கெல்லாங் காரணமானதோ அப்படிப்பட்ட ஆத்
"துமாவை, ஞாநிகள் தன்னிடத்திலேயே பார்க்கிறார்கள்.——
"கயிற்றிற் பாம்புபோற் பொய்யாயிருக்கிற இந்த ஜகத்தெல்லா
"ம் நிஜம்போல்விளங்கிறது."

தரிசனோபநிஷத்-அத்-க0-ல், † "ஆகையால், அத்துவை
"தமே உள்ளது. பிரபஞ்சமுமில்லை, பிறப்பிறப்புமில்லை."

பஞ்சபிர்ம்மோபநிஷத்தில், ‡ "ஓ! கௌதமா! ஒரேமண்
"கட்டியினாலுண்டான மண்பாத்திரம் முதலியன, மண்ணைக்
"காட்டிலும் வேறல்லவென்றெப்படியறியப்படுகிறதோ, ஒரே
"தங்கத்திலிருந்துண்டான ஆபரணங்களெல்லாம் தங்கசுவரூப
"மேயென்றெப்படியறியப்படுகிறதோ, ஒரே இரும்பிலிருந்து
"ண்டான நகம்வாங்கி முதலியவையெல்லாம் இரும்பைவிட வே
"றல்லவென்றெப்படியறியப்படுகிறதோ அப்படி காரணத்தைக்
"காட்டிலும் வேறல்லாத காரியமானது காரணமேயல்லவா?
"எப்போதும் காரணரூபமாயிருக்கிறதெதுவோ அதுதான் ஸத்

---

जगत् । पश्यन्नपि सदा नैव पश्यति स्वात्मनः पृथक् ॥

* यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रं रूपवर्जितम् । अचक्षुश्रोत्रमत्यर्थं तदपाणिपदंतथा । नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मंच तदव्ययं । तद्भूतयोनिं परिपश्यन्ति धीरा आत्मानमात्मनि । ——सत्यवद्भाति तत्सर्वं रज्जु सर्पवदास्थितम् ॥

† तस्मादद्वैतमेवास्ति न प्रपञ्चो नसंसृतिः ॥

‡ एकेनैवतु पिण्डेन मृत्तिकायाश्च गौतम । विज्ञातं मृण्मयं सर्वं मृदभिन्नंहि कार्यकम् । एकेन लोहमणिना सर्वं लोहमयंयथा । विज्ञातंस्याद्थैकेन नखानां कृन्तनेनच । सर्वं कार्ष्णाय संज्ञातं तदभिन्नं स्वभावतः ।

"தியமானது. வேற்றுமையாய்ச்சொல்வது பொய்யேயாகிற
"து. அக்காரணமொன்றேதான் காரியமாயுமிருக்கிறது. கா
"ரியத்தைக்காட்டிலும் காரணம்வேறல்ல, அவ்விரண்டுஞ்சே
"ர்ந்ததுமல்ல. எவ்விடத்திலும் பேதமென்பது பொய்யே. கா
"ரணத்தைவிட காரியத்திற்கு வேறு தருமம் நிரூபிக்கமுடியா
"து. ஆகையினாற், காரணமானது நித்தியமாயும் இரண்டாவத
"ற்ற ஒன்றாயுமிருக்கிறது. இவ்விஷயத்திற்குக்காரணமான பி
"ர்ம்மமானது அத்துவைத சுத்தசைதந்நியமே."

வராஹோபநிஷத்-உ-ல், * "இருக்கிறதென்கிறவஸ்து இ
"ருக்குமானால், அப்படியிருக்கிறதென்கிற லக்ஷணமுடையது
"பிர்ம்மமே. —— ஜகத்திருக்கிறதென்றால், அப்படியிருக்கிற
"தெல்லாம் ஸத்ரூபமான பிர்ம்மமே. ஜகத்து விளங்கிறதென்
"றால், அப்படிவிளங்கிறதும் பிர்ம்மந்தான். பாலைநிலத்தின்தோ
"ற்றமான ஜலம் முழுவதும் பாலைநிலமேயன்றி வேறல்லாதது
"போல, தன்சுவரூப விசாரத்தினாலே இம்மூன்றுலகமும் சித்
"சுவரூபமாத்திரமே. —— சிந்மாத்திரமாயும் எங்கும் வியா
"பித்ததாயும் நித்தியமாயும் பூர்ணமாயும் சுகசுவரூபமாயும் நா
"சமற்றதாயுமிருக்கிறதெதுவோ அதுதான் உண்மையானபிர்ம்
"மம் அதைத்தவிர வேறொன்றுமில்லையென்பது பிர்ம்மஞாநி
"களுடைய இருப்பு."

வராஹோபநிஷத்-ங-ல், † "எதெதுகாணப்படுகிறதோ
"எதெது கேட்கப்படுகிறதோ அவையெல்லாம் பிர்ம்மத்தைத்

---

कारणाभिन्नरूपेण कार्यं कारणमेवहि । तद्रूपेण सदा सत्यं भेदेनोक्तिर्मृषा-खलु । तच्चकारणमेकंहि नभिन्नं नोभयात्मिकम् । भेदस्सर्वत्र मिथ्यैव धर्मादेरनिरूपणात् । अतश्चकारणं नित्यमेकमेवा द्वयं खलु । अत्रकारणमद्वैतं शुद्धचैतन्यमेवहि ।

* अस्तिचेदस्तितारूपं ब्रह्मैवास्ति त्वलक्षणम् ।———अस्तीत्युक्ते जगत्सर्वं सद्रूपं ब्रह्म तद्भवेत् । भातीत्युक्ते जगत्सर्वं भानं ब्रह्मैव केवलम् । मरुभूमौ जलं सर्वं मरुभूमात्र मेवतत् । जगत्त्रयमिदं सर्वं चिन्मात्रं स्वविचारतः । ———चिन्मात्रं सर्वगं नित्यं संपूर्णं सुखमद्वयम् । साक्षाद्ब्रह्मैव नान्योस्तीत्येवं ब्रह्मविदां स्थितिः ।

† दृश्यते श्रूयतेयद्यद्ब्रह्मणो न्यन्नतद्भवेत् । नित्यशुद्धविमुक्तैकमख-

"தவிர வேறில்லை. நித்தியமாயும் சுத்தமாயும் பந்தமற்றதா "யும் ஒன்றாயும் அகண்டாநந்தமாயும் இரண்டாவதற்றதாயும் "ஸத்தியஞாநாநந்தமாயுமிருக்கிறதுதான் பிர்ம்மம்."

வாஸிஷ்டராமாயணம்-மூன்றாவதுற்பத்திப்பிரகரணம்-ஸர்கம்-க0-சு-ககூ-ல், * "பில்வத்திற்கும் பில்வமத்தியத்திற்கும் "(பில்வத்தழையில் அதன் நடுவுக்கும்) எப்படி யாதொருபேத "முமில்லையோ அப்படி பிர்ம்மத்திற்கும் ஜகத்திற்கும் அற்பமே "னும் பேதமில்லை."

ஷை-ச-ச0-ல், † "இந்த ஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்மமே. "அந்த பிர்ம்மத்தினுடைய பதமானது (ஸ்தாநம் அல்லது சுவ "ரூபம்) பிரபஞ்சத்திற்கு மேலானது. வாஸ்தவத்தில் ஜகத்தி "ல்லை. எல்லாம் பிர்ம்மமாத்திரமே. இவன் வேறு, இவன்வே "று என்றபிரிவானது சித்தமாவிடத்தில் அக்ஞாநத்தினாற் "பொய்யாய்க் கற்பிக்கப்பட்டவார்த்தையாயிருக்கிறது. இந்த "வார்த்தையில் வாஸ்தவமாயென்னப் பிரயோஜநமிருக்கிறது?"

ஷை-ச-சரு-ல், ‡ "ஓ! மஹாபுத்திமானே! ஆகாசத்திற் "கொப்பாயும் தோற்றத்தினால் விருத்தியடைந்ததாயுமிருக்கிற "ஸகல ஜகத்தையும், நீண்டகாலமிருக்கிற சுவப்நமாகப்பார். "இவ்வுலகத்தில் ஒருக்காலத்திலுமற்பமேனுமுண்டாகிறதுமில் "லை. மரிக்கிறதுமில்லை. ஓ! புத்திமானே! வாஸ்தவத்தில் "ஸகலமும் பொய்யாகவே இருக்கிறது. ஜகத்தில் உருவங்க "ளுடைய கூட்டமான ஸகலமும், ஆகாசத்திலிரண்டு சந்திர

---

ण्डानन्दमद्वयम् । सत्यज्ञानमनन्तं यत्परंब्रह्म ॥

* बिल्वस्य बिल्वमध्यस्य यथा भेदो नकश्चन । तथास्ति ब्रह्म जगतो नेमनागपि भिन्नता ॥

† ब्रह्म सर्वमिदं विश्वं विश्वातीतंच तत्पदम् । वस्तुतस्तु जगन्नास्ति सर्वं ब्रह्मैव केवलम् ॥ ३० ॥ अयमन्योयमन्योयं भागइत्यंबरात्मनि । मिथ्याज्ञानविकल्पोक्तिर्वाचिसत्यार्थतात्रका ॥ ३१ ॥

‡ आकाशसदृशं सर्वं कलनामात्रजृंभितम् । जगत्पश्य महाबुद्धे सुदीर्घ स्वप्नमुत्थितम् ॥ १३ ॥ न जायतेन म्रियते इह किञ्चित्कदाचन । परमार्थेन सुमते मिथ्या सर्वंतु विद्यते ॥ १४ ॥ द्विचन्द्रविभ्रमप्रख्या मनोरथ-

"னென்கிற பிரமைக்கொப்பானவைகளாயும் மனோராஜ்ஜியம்
"போல் வெளிப்பட்டவைகளாயும் மித்தியாஞானகட்டிகளா
"யுமிருக்கின்றன. ஓடத்திற்போகிறவனுக்கு (கரையிலுள்ள)
"மரங்கள் ஓடுகின்றனவென்கிற புத்தியானதெப்படிப் பொய்
"யோ அப்படி உருவங்களுடைய பரம்பரை (மென்மேலுமுண்
"டாவது) யானது பொய்யாகவே எப்போதுமுண்டாய்க்கொ
"ண்டேயிருக்கிறது. இந்தப்பிரபஞ்சத்தை மாயையினாற்கட்ட
"ப்பட்டிருக்கிற கூடாகவும் மனதினுடைய ஸங்கற்பத்தினா
"லுண்டாக்கப்பட்டதாகவும் ஸத்தல்லாததாகவும் அஸத்தல்
"லாததாகவும் இந்திரஜாலத்திற்கொப்பாயிருக்கிறதாகவுமறி.
"இந்த ஸகலஜகத்தும் பிர்ம்மமே. அதைக்காட்டிலும் வேற்று
"மைக்கிடமேது ?"

வாஸிஷ்டராமாயணம் ச-ரு-அ-ல், *"நான் எதைச்செய்வேன்.
"எங்கேபோவேன். எதையெடுப்பேன். எதைவிடுவேன். மஹா
"ப்பிரளய ஜலத்தினாற்போல பிரபஞ்சமானது ஆத்துமாவினால்
"நிறைந்திருக்கிறது. துக்கமுமாத்துமாதான். சுகமுமாத்துமா
"தான். ஆகாசமும் திக்குகளுமாத்துமாதான். (ஆத்துமா) மிக
"வும் பெரிதாகையால் ஸகலமும் ஆத்துமசுவரூபமாகவறியப்பட்
"டது. நான் ஆத்துமாவினாலே (ஆத்துமஞானத்தினாலே) கஷ்
"டத்திலிருந்து விடுபட்டவனாயிருக்கிறேன். ஆத்தியாத்துமிக
"ம் ஆதிபௌதிகங்களோடுகூடிய தேகத்திலேயும் கீழும் மேலு
"ம் திக்குகளிலேயும் ஆத்துமாதான். இவ்விடத்திலேயும் ஆத்
"துமாதான். அவ்விடத்திலேயும் ஆத்துமாதான். ஆத்துமசுவரூ
"பமல்லாததாயொன்றுமில்லை. எல்லாவிடத்திலும் ஆத்துமாவே

---

वदुत्थिताः । मिथ्याज्ञानघनास्सर्वे जगत्याकारराशयः ॥ १८ ॥ यथा नौयायिनो मिथ्या स्थाणुस्पन्दमतिस्तथा । असत्यैवोत्थितानित्य माकाराणांपरंपरा ॥ १९ ॥ इन्द्रजालमिदं विद्धि मायारचितपञ्जरम् । मनो मननिर्माणं नसन्नासदिव स्थितम् ॥२०॥ ब्रह्मैवेदं जगत्सर्वमन्यतायास्ततःकुतः ॥२१॥

* किं करोमि क्व गच्छामि किं गृण्हामि त्यजामि किं । आत्मनापूरितं विश्वं महाकल्पांबुनायथा ॥ ५ ॥ दुःखमात्मा सुखं चैव खमाशासु महत्तया । सर्वमात्ममयं ज्ञातं नष्टकष्टोहमात्मना ॥ ६ ॥ सबाह्याभ्यन्तरे देहे अधश्चोर्ध्वञ्चदिक्षुच । इतआत्मा ततश्चात्मा नास्त्यनात्ममयं क्वचित् ॥ ७ ॥

"யிருக்கிறது. ஸகலமும் (ஸகலவஸ்துக்களும்) ஆத்துமசுவரூ "பமாகவேயிருக்கிறது. இந்த ஸகலபிரபஞ்சமும் ஆத்துமா "வே. நான் ஆத்துமாவிடத்தில் இப்படியாத்துமாவாகவேயி "ருக்கிறேன்."

மஹாபாரதம்—பீஷ்மபருவம்—ஸ்ரீபகவத்கீதை-அத்-ச-சு-உச-ல், * "யக்ஞத்திலெந்தெந்த வஸ்துவினல் நெய்யெடுத்து "அக்கியில் ஹோமஞ்செய்யப்படுகிறதோ அந்தவஸ்துவும் பிர்ம் "மமே. ஆஹுதிசெய்யப்படுகிற அந்நம் நெய்முதலியவைகளும் "பிர்ம்மமே. பிர்ம்மமாகிற அக்கியில் யக்ஞகருத்தாவாகிற "பிர்ம்மத்தினற்செய்யப்படுகிற ஹோமமும் பிர்ம்மமே. அந்த "பிர்ம்மமாகிற யக்ஞகருமத்தில் நிலையுள்ளமனதையுடையவனல "டையப்படுவதும் பிர்ம்மமே."

ஷை-கீதை-அத்-கக-சு-சo-ல், † "ஓ! ஸகலத்திற்குமாத் "துமாவாயிருக்கிறவரே! அளவிடக்கூடாதவல்லமையுள்ளநீர் "ஸகலத்தையும் வியாபித்துக்கொண்டிருக்கிறீர். அதனல், ஸக "லசுவரூபமாயுமிருக்கிறீர்."

கர்க்கஸம்ஹிதை-விசுவஜித்கண்டம்-அத் ௩௩-சு-கள-ல், ‡ "ஒரேசந்திரனனவன் பல ஜலபாத்திரங்களிலெப்படிப் பல "வாகக் காணப்படுகிருனே, ஒரேஅக்கியானது பலகட்டைகளி "ல் வெவ்வேருயெப்படிக் காணப்படுகிறதோ அப்படி யக்ஞம்மு "தலிய ஸகலகருமங்களிலும் ஸகலப்பிராணிளிலும் பகவானன "பரமாத்துமா ஒருவரே உள்ளும் வெளியும் அநேகர்போற் கா "ணப்படுகிருர்."

பிருமபுராணம்-அத்-கு௭-ல், § "ஸகல உலகங்களும் நா "ராயணசுவரூபமே. ஸகலதேவதைகள், ஸத்தியம், பரமபதம்,

---

सर्वत्रैव स्थितोह्यात्मा सर्वमात्ममयं स्थितम् । सर्वमेवेदमात्मैव मात्मन्येवभ-वाम्यहम् ॥८॥

* ब्रह्मार्पणं ब्रह्महविर्ब्रह्माग्नौ ब्रह्मणाहुतम् । ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥

† अनन्तवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषिततोसिसर्वः ॥

‡ यथेन्दुरेकोजलपात्रबृन्दगो यथाग्निरेको विदितस्समिच्चये । तथा परात्मा भगवाननेकवत्सोन्तर्बहिस्स्यात्सुकृतेषु देहिषु ॥

§ नारायणपरालोका नारायणपरास्सुराः । नारायणपरं सत्यं नारा-

"பூமி, ஜலம், அக்நி, ஆகாசம், வாயு, மனது, அகங்காரம், புத்
"தி இவைகளும் நாராயணசுவரூபமே. சென்ற, நிகழ், வருங்
"காலமும், ஜீவனென்கிறதெதுவோ அந்தப்பெயரும் ஸ்தூல
"மும் சூக்ஷ்மமும் உத்தமமும் இவைமுதலியனவெல்லாம்நாரா
"யணசுவரூபமே."

பத்துமபுராணம்—சிருஷ்டிகண்டம்·அத்-கசு-சு·கடுசு-ல், * "ஓ! அச்சுதா! இவ்வுலகத்தில் உம்மைக்காட்டிலும் வேருக அற்பமேனும் நான் பார்க்கவில்லை. ஸ்தாவரஜங்கமமான இந்த ஸகலப்பிரபஞ்சத்தையும் உம்முடைய சுவரூபமாகவே பார்க்கிறேன்."

விஷ்ணுபுராணம்-அம்சம்-க-அத்-கக-ல், † "தேவதைகள் மனிதர்கள், விலங்குகள், பக்ஷிகள், மரங்கள், ஸர்ப்பங்கள் முதலியரூபங்களெல்லாம் முடிவற்றதாகிய விஷ்ணுசுவரூபந்தான். (அப்படியிருந்தாலும் விஷ்ணுவைக்காட்டிலும்) வேறுபோலிருக்கிறது. ஸ்தாவரஜங்கமங்களான இந்தஸகலஜகத்தும் ஞானமுள்ளவனுற், தன்னுத்துமாவாகப்பார்க்கத்தக்கது. ஏனெனில், இந்த்விஷ்ணுவானவர் ஸகலரூபியாயுமிருக்கிறதனுற்றுன்."

ஷ-புராணம்-ஷ-உ-அத்-கசு-ல், ‡ "வெயிங்குழலிற் பிரவேசித்த காற்றென்றுனுலும் வெயிங்குழலின்துவாரங்களினுல் அக்காற்றுக்கு ஷட்ஜாதிசுவரபேதமும் பெயருமுண்டாவது போலஅந்தஆத்துமசுவரூபம் பேதமற்றவொன்றுனுலும் அதற்

---

थणपरं पदम् ॥ २६ ॥ नारायणपरापृथ्वी नारायणपरं जलम् । नारायणपरोवह्निर्नारायणपरं नभः ॥ २७ ॥ नारायणपरोवायुर्नारायणपरं मनः । अहंकारश्च बुद्धिश्च उभे नारायणात्मिके ॥ २८ ॥ भूतं भव्यं भविष्यञ्च यत्किंचिज्जीवसंज्ञकम् । स्थूलं सूक्ष्मं परं चैव सर्वं नारायणात्मकम् ॥ २९ ॥

* नचात्र किञ्चित्पश्यामि व्यतिरिक्तं त्वयाच्युत । त्वन्मयंच प्रपश्यामि सर्वमेतच्चराचरम् ॥

† देवामनुष्याः पशवः पक्षिवृक्षसरीसृपाः । रूपमेतदनन्तस्य विष्णोर्भिन्नमिवस्थितम् ॥ ४७ ॥ एतद्विजानतासर्वं जगत्स्थावरजङ्गमम् । द्रष्टव्यमात्मवद्विष्णु र्यतोयं विश्वरूपधृक् ॥ ४८ ॥

‡ वेणुरन्ध्रविभेदेन भेदष्षड्जादि संज्ञितः । अभेदव्यापिनो वायो-

"கந்நியமான தேகேந்திரியாதிகருமபலத்தினலுண்டான தேக
"பேதத்தைக்கொண்டு தேவன் மனிதன் என்கிற வியவஹாரமு
"ண்டாயிருக்கிறது. அந்தக்கருமமாகிற ஆவரணம் நசித்தால்
"அந்த தேவாதிபேதமேயில்லை."

ஷை-விஷ்ணுபுராணம்-அம்.உ-அத்-கரு-ல்,*"சுத்தமான ஆகாச
"மொன்றே உபாதிவசத்தினலே, கறுப்பு வெளுப்பு முதலிய பல
"வர்ணங்களாய் வெவ்வேறாய்ப் பார்வையிற் தோற்றுகிறது. இந்
"த ப்பிரபஞ்சத்திலெதெதிருக்கிறதோ அவையெல்லாம் ஒருவ
"ஞன அந்த அச்சுதனே. அவனைக்காட்டிலுமந்நியமாக யாதொ
"ன்றுமில்லை."

ஷை-ஷை-ரு-எ.கரு-ல், † "பேதமற்ற ஒரேதங்கமானது
"கடகம், மகுடம், குண்டலம், முதலியவநேக ஆபரணபேதங்க
"ளாயெண்ணப்படுகிறதுபோல பேதமற்றஹரியொருவரே தேவ
"மனித மிருகம் முதலிய அநேகவிதமாய்க் கற்பிக்கப்படுகிறார்."

ஷை-ஷை-டு-க-சச-ல், ‡ "ஒரேஅக்நியானது, விகாரம
"ற்றதானலும் விகாரமாயும் பலவாயுமிருக்கிற (கட்டைமுதலிய)
"வஸ்துக்களினற் பலவாயெப்படிப்பிரகாசிக்கிறதோ அப்படிப்
"போல ஓ! ஈசுவரா! எங்கும்நிறைந்த ஒரேரூபமுடையநீர், பல
"விதமான ஸகலரூபங்களையுமநுஸரித்துவிளங்கிறீர்."

சிவபுராணம்-ஞானஸம்ஹிதை-அத்-எஅ-ல், § "ஸாக்ஷாத்
"சிவன் ஸகலஜந்துக்களிலேயும் வியாபித்தும் வியாபிக்கப்படு
"ம் வஸ்துவாயுமிருக்கிறார். சேதநாசேதநங்கள் சங்கரனே.

---

स्तथा तस्य महात्मनः ॥ ३२ ॥ एकत्वं रूपभेदश्च बाह्यकर्म प्रवृत्तिजः। देवादिभेदेऽपध्वस्ते नास्त्येवावरणेहिसः ॥ ३३ ॥

* सितनीलादिभेदेन तथैकं दृश्यते नभः । भ्रान्तदृष्टिभिरात्मापि तथैकस्सन् पृथक्पृथक् ॥ २२ ॥ एकस्समस्तं यदि हास्ति किञ्चित्तदच्युतोनास्ति परं ततोन्यत् ॥ २३ ॥

† कटकमकुटकर्णिकादिभेदैः कनकमभेदमपीष्यते यथैकम् । सुरपशुमनुजादिकल्पनाभिर्हरिरखिलाभिरुदीर्यते तथैकः ॥

‡ यथाग्निरेको बहुधासमिध्यते विकारभेदै रविकाररूपः । तथाभवान् सर्वगतैकरूपो रूपाण्यशेषाण्यनुपुष्यतीश ॥

§ सर्वं व्याप्य शिवस्साक्षाद्व्यापकस्सर्वजन्तुषु ॥ ९ ॥ चेतनाचेतनेसो-

"எவ்விடத்திலும் சங்கரந்தானிருக்கிறார். மங்களசுவரூபியாயும்
"மோக்ஷசுவரூபியாயுமிருக்கிற சிவனுக்கந்நியமாய் இவ்விடத்தி
"லற்பமேனுமில்லை. உருவங்களெல்லாம் பலவிதமாய்ப் பிரகாசிக்
"கின்றன. அந்தப்பிரகாசம் எப்போதுஞ்சங்கரனே. காரியத்தி
"ற்குங் காரணத்திற்கும் பேதமானது வாஸ்தவமாயில்லை. வி
"தையினுருந்துண்டான(மரஞ்செடிமுதலிய) வைகள், பலவிதமா
"ய்க்காணப்பட்டு முடிவில் விதையாகவேஆய்விடுகிறதென்பதில்
"ஸந்தேகமில்லை. அக்ஞானத்தினலேபலவிதமாய்க்காணப்படுகிற
"ஜகத்தானது, ஞானத்திலேவிதைபோற்பார்க்கத்தக்கது. ஸக
"லமுஞ்சிவன்தான். சிவந்தான்ஸகலமும். இவ்விஷயத்தில் யா
"தொரு வேற்றுமையுமில்லை. (ஆகையால்) பலவிதமாயெப்படி
"ப்பார்க்கக்கூடும்? மறுபடி ஏனென்றுய்ப்பார்க்கக்கூடாது? எப்
"படிச்சந்திரன் சூரியனென்கிறஒன்றான ஜியோதிசுவரூபமானது
"ஜலம்முதலியவைகளில் விசேஷமாயும் பலவிதமாயும் காணப்
"படுகிறதெப்படியோ அப்படி அந்தச்சிவனாகியபுருஷனும் பலவி
"தமாய்க் காணப்படுகிறார்."

பாகவதம்-ஸ்கந்தம்-௭-அத்-௧௫-௬-௬௪-ல், * "விகற்பமா
"கிறபேதமானது வாஸ்தவமல்லாததனாலே துணியும் நூலும்
"வேற்றுமையற்றிருக்கிறதுபோல, காரியமானப்பிரபஞ்சத்திற்
"கும் காரணமானபிர்ம்மத்திற்கும் ஐக்கியக்ஞானந்தான் பாவாத்
"துவைதமென்று சொல்லப்படுகிறது."

---

वैसर्वत्र शङ्करस्स्वयम् ॥ १० ॥ शिवश्शिवश्शिवश्चैव नान्यदस्तीहकिञ्चन । नानाभाति स्वरूपोहि भासते शङ्करस्सदा ॥ १३ ॥ कार्यकारणयो र्भेदोवस्तुतो न प्रवर्तते । यथाबीजात्प्ररोहश्च नानाविधःप्रकाशते ॥ १५ ॥ अन्तेचबीजमेवास्यान्नात्रकार्या विचारणा । ज्ञाने बीजं प्रदृश्येत ह्यज्ञाने विविधं जगत् ॥ १६ ॥ सर्वं शिवश्शिवस्सर्वं नात्रभेदोस्ति कश्चन । कथञ्चविविधं पश्येदेकत्वं न कथं पुनः ॥ १७ ॥ यथैकं चन्द्रसूर्याख्यं ज्योतिर्नानाविधंपुमान् । जलादौच विशेषेण दृश्यतेच तथैवसः ॥ १८ ॥

* कार्यकारणवस्त्वैक्यदर्शनं पटतन्तुवत् । अवस्तुत्वाद्विकल्पस्य भावाद्वैतं तदुच्यते ॥

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-௭௫-ல், * "ஓ! நன்ன "டக்கையுள்ளவர்களே! ஆகாசமானதொன்றாயிருந்தாலும் பா "த்திரங்கள்தோறும் வேறாய்க் காணப்படுகிறதுபோல, சிவனு "வர் பிரிவற்றவராகவும் பிரிவுள்ளவராகவுங் காணப்படுகிறார். "அதனால், ஸகலமும் சிவசுவரூபமே. வேறாயிருக்குந்தன்மை "வேறல்லாததாயிருக்குந்தன்மையாகிய வேற்றுமைகளும் சங்க "ரருடையதே. ஓ! நன்னடக்கையுள்ளவர்களே! ஜநங்களுக்கு "விசுவாஸமுண்டாகும்பொருட்டு (திருஷ்டாந்தஞ் சொல்லுகி "றேன்). ஒருவனாயிருக்கிற சூரியன் ஒரேஇடத்திலிருந்தாலும் "ஜலாதாரங்களிலநேக சூரியனாயெப்படிக் காணப்படுகிறதோ "ஆகாசம்முதலிய பஞ்சபூதசுவரூபங்கள் (ஒரேவிதமாயிருந்தா "லும்)சுவர்க்கத்திலும் பூமியிலுமிருக்கிறதேவமநுஷியாதிஜாதி "ரூபம்முதலிய பலபேதங்களாயெப்படிக் காணப்படுகின்றன "வோ அப்படி (இப்பிரபஞ்சத்தில்) எதெது காணப்படுகிறதோ "எதெது கேட்கப்படுகிறதோ அவைகளெல்லாஞ் சிவசுவரூப "மென்றறி. விசாரித்தறிவதனால், இவ்வுலகத்தில் ஜநங்களு "டைய பேதமானதுதோற்றமே."

வராஹபுராணம்-அத்-௪-௬-௪0-ல், ‡ "ஓ! அரசனே! பசுக்க "ள், புழுக்கூட்டங்கள் இவைகளுங்கூட விஷ்ணுசுவரூபந்தான். "அதனால், ஸகலசுவரூபமும் ஹரியேதானென்றபாவனையை திரு "டமாய்ச் செய்துகொண்டிருக்கவேண்டியது."

ஷை-புராணம்-அத்-௯-௬-௧௯-ல், $ "ஓ! நாசமற்றவனே! "சராசரமான இந்தஸகலப்பிரபஞ்சத்திலும்உன்னைக்காட்டிலும்

---

* निष्कलः सकलश्चेति सर्वं शिवमयं ततः ॥ २३ ॥ व्योमैकमपि दृष्टं हि शरावंप्रति सुव्रताः । पृथक्त्वञ्चापृथक्त्वञ्च शङ्करस्येतिचापरे ॥ २४ ॥ प्रत्ययार्थंहि जगता मेकस्थोपि दिवाकरः । एकोऽपिबहुधादृष्टो जलाधारेषु सुव्रताः ॥ २५ ॥ जन्तवो दिवि भूमौच सर्वे वैपाञ्चभौतिकाः । तथापिबहुला दृष्टा जातिव्यक्तिविभेदतः ॥ २६ ॥ दृश्यते श्रूयते यद्यत्तद्विद्धि शिवात्मकम् । भेदोजनानां लोकेस्मिन्प्रतिभासो विचारतः ॥ २७ ॥

‡ पशवःकीटसंघाश्च तेपि विष्णुमयानृप । भावनान्तु दृढां कुर्याद्यतस्सर्वमयोहरिः ॥

$ नान्यत्किञ्चित्प्रपश्यामि व्यतिरिक्तं त्वयाच्युत । त्वन्मयञ्च प्र-

"வேருக அற்பமாவது நான் பார்க்கவில்லை. உன்னுடையசுவரு "பமாகவே ஸகலப்பிரபஞ்சத்தையும் பார்க்கிறேன்."

வராஹபுராணம்-அத்-கூ-சு-உ-ல், * "முதலில் நாராயணனொரு "வனே இருந்தார். அந்தஹரிக்கந்நியமாக அற்பமேனுமில்லை."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-யக்ஞவைபவகண்டம்-அத்-கடு-ல், † "தங்கமானது கடகம்முதலிய ஆபரணபேதமாயெப்படி "விளங்கிறதோ அப்படி ஸகலத்தையும் பிரகாசிப்பிவிக்கிற சிவ "ன் ஸகலரூபியாய் விளங்கிருர். கிளிஞ்சிலானது வெள்ளிரூப "மாய் சுவபாவமாயெப்படிபாவிக்கப்படுகிறதோ அப்படிஸகல "ரூபத்யையும் பிரகாசிப்பிக்கிறசிவன் பிரபஞ்சரூபமாய் பிரகாசிக் "ருர்."

ஷை-ஸம்ஹிதை-பிரும்மகீதை-அத்-ச-ல், ‡ "எப்போதுபி "ர்ம்மமானது ஜகத்ஜீவன்முதலியரூபமாய் (எவனுக்கு) விளங்கி "றதோ, அப்போது துக்கம்முதலிய அநுபவம் விளங்கிறது. "ஆனலது மனத்தோற்றமாத்திரமே. எப்போது ஸகலப்பிரப "ஞ்சமும் பிர்ம்மசுவரூபமாகத்தானே விளங்கிறதோ அப்போது "இந்ததுக்கம்முதலிய அநுபவங்களிருந்தாலும் விளங்கிறதில் "லை. பரமாத்துமாவையறிந்தஞானியானவன் ஜகத்துஜீவன்முத "லிய ரூபமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாலும் அதை ஜகத்து "முதலியரூபமாய்ப்பார்க்கிறதில்லை.சித்ரூபமானபிர்ம்மவஸ்துவா "கவேபார்க்கிருன். வஸ்துரூபத்திஞலேயாவது அவஸ்துரூபத்

---

पश्यामि सर्वमेतच्चराचरम् ॥

* पूर्वं नारायणस्त्वेको नासीत्किञ्चिद्धरेःपरम् ॥

† कटकादि विभेदेन यथा हेमप्रकाशते । तथा सर्वतया भाति शिवस्सर्वावभासकः ॥ १३ ॥ शुक्तिका रजताकारा यथा भाति स्वभावतः । तथा सर्वतया भाति शिवस्सर्वावभासकः ॥ १४ ॥

‡ जगज्जीवादिरूपेण यदा ब्रह्म विभासते । तदा दुःखादिभोगोपि भाति चाभासरूपतः ॥ ९२ ॥ यदा ब्रह्मात्मना सर्वं विभाति स्वतएवतु । तदा दुःखादिभोगोय माभासोपि न भासते ॥ ९३ ॥ जगज्जीवादिरूपेण पश्यन्नपि परात्मवित । न तत्पश्यति चिद्रूपं ब्रह्मवस्त्वेव पश्यति ॥ ९४ ॥

"தினுலேயாவது பிர்ம்மத்திற்கந்நியமாய் ஒருவஸ்துவாவது அவ "ஸ்துவாவது எப்போதுமில்லை. இப்படியிருக்கையில், தத்துவ "த்தையறிந்தவன் சிவனைக்காட்டிலும் வேருகஎதை யெப்படிப் "பார்ப்பான்? ஸாக்ஷாத் பிர்ம்மசுவரூபமாகவாவது அல்லது ஜக "த்ஜீவன்முதலியரூபமாகவாவது எப்படியெப்படிப் பிரஸித்தமா "யிருக்கிறதோ அப்படியப்படி யெல்லாம் ஸாக்ஷாத்பிர்ம்மந்தான் "விளங்கிறது. அப்படியிருக்யையில், சிவஞாநியானவன் எதைக் "கிரஹிக்கிறது? எதைவிடுகிறது? சிலர் மோகத்தையடைந்து "ஸகலப்பிரபஞ்சமும்மாயையினுலேயேயிருக்கிறதென்கிறூர்கள். "சிவரூபத்திற்கு வேருக வாஸ்தவத்தில் மாயையென்பதில்லை."

ஸ்காந்தம்-காசிகண்டம்-பூர்வபாகம்-அத்-க0-ல், * "ஸகல "ப்பிரபஞ்சமும் இரண்டாவதற்றஒன்றூனபிர்ம்மமே. இதுதான் "ஸத்தியமானது. இவ்விடத்தில் (உலகத்தில்) ஸத்தியமாய்ப் "பலவென்பதற்பமேனுமில்லை. உருத்திரரொருவரே. இரண்டா "தவனுக ஒருவனுமில்லை. ஆகையினுல், ஒருவனுகிய பரமேசுவர "னை நமஸ்காரஞ்செய்கிறேன். ஓ! சம்போ! நீர்ஒருவர்தான் ஸ "கலத்திற்கும் கருத்தாவாக இருக்கிறீர். நீர் ரூபமற்றவராயி "ருக்கிறீர். ஸகலரூபங்களிலேயும் நீர் ஒரே ரூபியாகவேயிருக் "கிறீர். (எப்படிப்போலெனில்)சூரியன் ஒவ்வொருஜலபாத்திர "த்திலும் பலவாகத்தோற்றினுலும் சூரியனெருவனே எப்படி "யோ அப்படிப்போல், ஈசனுகிய உம்மைத்தவிர வேறொருவரை

---

ब्रह्मणोन्यत्सदानास्ति वस्तुतोऽवस्तुतोपिच । तथासति शिवादन्यत्कथं पश्यति तत्ववित् ॥ ५९ ॥ ब्रह्मरूपेणवासाक्षाज्जगज्जीवात्मनाथवा । यथायथाप्रथासाक्षात् ब्रह्म भाति तथातथा ॥ ६१ ॥ ब्रह्मैवाविद्यते साक्षाद्वस्तुतोऽवस्तुतोपिच । तथासति शिवज्ञानी किंगृण्हाति जहातिकिम् ॥ ६२ ॥ मायया विद्यते सर्वमितिकेचनमोहिताः । शिवरूपातिरेकेण नास्ति मायाच वस्तुतः ॥ ६३ ॥

* एकं ब्रह्मैवाद्वितीयं समस्तं सत्यंसत्यं नेहनानास्ति किञ्चित् । एको रुद्रो नद्वितीयोऽवतस्थे तस्मादेकं त्वां प्रपद्ये महेशम् ॥ १२६ ॥एकःकर्ता त्वंहि सर्वस्य शंभोनानारूपेष्वेकरूपोस्य रूपः । यद्वत्प्रत्यग्स्वर्कएकोप्यनेकस्तस्मान्नान्यं त्वां विनेशं प्रपद्ये ॥ १२७ ॥ रज्जौसर्पश्शुक्तिकायांचरू-

"யும் நான்வணங்கிறதில்லை. யாரையறிந்தாலிப்பிரபஞ்சமான "து கயிற்றிற்பாம்பு கிளிஞ்சிலில்வெள்ளி கானல்ஜலம்போல் "பொய்யாய்விடுகிறதோ அப்படிப்பட்ட மஹேசனாகிய உம்மை "நமஸ்கரிக்கிறேன்."

வாயுபுராணம்-உத்தரபாகம்-அத்-சு உ-ல், * "ஜீவன் ஈசுவர "ன் பிர்ம்மம் இவர்களுடைய பேதமானது, பிர்ம்மசூத்திரநிச் "சயத்தில் (வேதவியாஸரால்)விலக்கப்பட்டிருக்கிறது. சுருதி "யுக்திவிசாரத்தினாலேபிர்ம்மசுவரூபம்நிரூபிக்கப்பட்டுமிருக்கிற "து. பரபிர்ம்மமானது நாசமற்றதாகவும் சிரேஷ்டமான ஆத் "துமாவாகவும் உத்தமமான பதமாகவுமிருக்கிறது. கயிற்றினி "டத்திற் பாம்பென்கிற பிரமைபோற் பிர்ம்மத்தினிடத்திற் பிர "பஞ்சமானதுப் பிரமையினாற்பிரகாசிக்கிறது. பிரபஞ்சத்திற் பி "ர்ம்மமிருந்தாலும், கயிறுவிகாரமடையாததுபோல் பிர்ம்மமு "ம் விகாரமடைகிறதில்லை. விசாரிக்கப்படுமானால், நுரை, அலை, "குமிழி, இவையெல்லாம் எப்படிஜலமேதானோஅப்படியே பிர்ம "மும்விசாரிக்கப்படுமானால், பிரபஞ்சத்தைக்காட்டிலும் வேறல் "ல. ஸகலமும் பிர்ம்மமே. பலவென்கிறதன்மையில்லையென்று "வேதங்கள்சொல்லுகின்றன."

அத்தியாத்துமராமாயணம்-உயுத்தகாண்டம்-அத்-கச-சு-உஎ-ல், ‡ "ஓ! இரகுகுலசிரேஷ்டா! எதெதுகாணப்படுகிற "தோ எதெதுகேட்கப்படுகிறதோ எதெதுநினைக்கப்படுகிறதோ "அப்படிப்பட்டவிந்தஸகலப்பிரபஞ்சமும் நீரே. உம்மைத்தவிர "வேறாகயாதொன்றுமில்லை."

---

प्यं नैरःपूरस्तन्मृगाख्ये मरीचौ । यद्वत्तद्वद्विष्वगेष प्रपञ्चोयस्मिन् ज्ञाते तं-महेशं प्रपद्ये ॥ १२८ ।

* जीवेश्वरब्रह्मभेदोनिरस्तस्सूत्रनिर्णये । निरूपितं परं ब्रह्मश्रुति-युक्तिविचारतः ॥ २२ ॥ अक्षरंपरमं ब्रह्म परमात्मापरं पदम् ॥ २३ ॥अध्य-स्तंसर्पवद्यत्र विश्वमेतत् प्रकाशते। विश्वस्मिन्नपि चान्वेति निर्विकारश्च रज्जु-वत् ॥३०॥ सम्यग्विचारितं यद्वत्फेनोर्मिबुत्बुदोदकम्। तथाविचारितं ब्रह्म वि-श्वस्मान्नपृथग्भवेत् ॥३१॥ सर्वं ब्रह्मैव नानात्वं नास्तीति निगमाजगुः॥३२॥

‡ दृश्यते श्रूयते यद्यत् स्मर्यतेवा रघूत्तम । त्वमेव सर्वमखिलं त्व-द्विनान्यन्नकिञ्चन ॥

ஓ! ஜயவிரதா! பிர்ம்மமானது ஆகாசம்போல் அகண்டாகார சுவரூபமென்பதையும் பலவிதமாய்த் தோற்றுகிற இப்பிரபஞ்ச பேதங்களெல்லாம் பிர்ம்மத்திற்கு அந்நியமாயில்லை யென்பதையும் நிர்விகாரமான பிர்ம்மத்தினிடத்தில் ஜீவேசுவரஜகத்து முதலியபேதங்கள் அக்ஞானகற்பிதமென்பதையும் இப்பிரமாணங்கள் ஸ்தாபிக்கின்றன. மேலாகக்குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள் சாஸ்திரங்களில் ஒவ்வொருப்பிரகரணத்திலிருந்து சில வாக்கியங்கள்மட்டுமெடுக்கப்பட்டன. பின்னும் இவ்விஷயத்தையாதரிக்கும்படியான அநேக வாக்கியங்களிருக்கின்றன. அவ்வளவையுமெடுத்துரைப்பதானுலிதுபெரியபுராணமாகமுடியுமாகையால், சுருக்கிச்சொல்லப்பட்டது. பாரமார்த்திகதசையின் மற்றொருவிஷயத்தைக்குறித்துச்சொல்லுகிறேன்கேள்.''

எட்டாவதுபிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## ஒன்பதாவது பிரகரணம்.

1. ஸுசர்ம்மா:—ஒ! குழந்தாய்! அத்துவைதஸித்தாந்தத்திற் பாரமார்த்திகதசையையநுஸரித்து பிர்ம்மசுவரூபமிப்படிப் பட்டதென்று சொல்லப்பட்டது. பிர்ம்மசுவரூபத்தைச்சொல்லுகிறப் பிரமாணங்களே ஜீவேசுவரஜகத் பிர்ம்மமேயென்றும் பிர்ம்மத்திற்கந்நியமாய் யாதொருவஸ்துவுமில்லையென்றும் ஜீவேசுவரஜகத்துமுதலிய பேதம் அக்ஞானகற்பிதமென்றுந் தெளிவாய்ச்சொல்லுகின்றன. அவைகளையன்றி ஜீவசுவரூபம் பிர்ம்மமேயென்றும் ஜீவனானவனக்ஞானத்தினாற், தான் பிர்ம்மமென்கிறதைமறந்து ஜீவனென்கிறப் பிரமையையடைந்திருக்கிறானென்றும் ஜீவனானவன் தான்பிர்ம்மம், ஸகலஜகத்தும் தன்னுடைய சுவரூபமென்கிற நிச்சயஞானத்தினால் ஜீவத்தன்மை நசித்து அகண்டாகாரபிர்ம்மத்தில் லயித்துப்போகிறானென்றுங் கண்டோக்தமாய்ச்சொல்லுகிறப் பிரமாணங்களிற் சிலதையுனக்குச் சொல்லுகிறேன் கேள்.

ஈசாவாஸ்யோபநிஷத்-சு-ல், * "எவன் ஸகல பூதங்களை "யுந் தன்னாத்துமாவாகவே பார்க்கிறானோ ஸகலபூதங்களிலேயு "ந் தன்னைப்பார்க்கிறானோ அந்தக்காரணத்தினால், நிந்திக்கிறதில் "லை" (ஸகலப் பிரபஞ்சமுந் தானும் பிர்ம்மமேயென்று பார்க்கிற ஞானிக்குத் தன்னைத்தவிர வேறுவஸ்துவில்லையாகையால், நிந்திக்கிறதற்குக் காரணமில்லையென்பது தாத்பரியம்).

---

* यस्तुसर्वाणि भूतानि आत्मन्येवानुपश्यति । सर्वभूतेषुचात्मानं ततो न विजुगुप्सते ॥ இந்த வாக்கியத்தை தரிசநோபநிஷத்-க0,சூதஸம்ஹிதை-பிர்ம்மகீதை-அத்.அ-சு,கள.இவைகளிலுங்காண்க.

ஈசாவாஸ்யோபநிஷத்-எ-ல், * "ஆத்துமஞானிக்கு ஸகலபூதங்
"களுந் தன்னாத்துமாவாகவே எக்காலத்திலாய்விட்டதோ (தன
"க்கந்நியமாய் யாதொரு வஸ்துவுமில்லையென்றெப்போதறிகிற
"னோ) அக்காலத்தில் (ஸகலமும்) ஒன்றாகவேபார்க்கிற அவனு
"க்கு மோஹமேது? துக்கமேது?"

கடவல்லியுபநிஷத் ரு-க-ல், † "பிறப்பற்றவனாயும் சுத்
"தமான மனதையுடையவனாயுமிருக்கிற ஆத்துமா (ஜீவன்) வுக்
"கு பதினொரு வாயிற்களையுடைய (கண்-உ-காது-உ-மூக்கு-உ-
"வாய்-க-குதம்-க-சிச்நம்-க-நாபி-க-சிரஸ்-க-இப்படிப்பதினொரு
"த்துவாரங்கள்) நகரமானது (தேகமானது) இருக்கிறதென்றறி
"ந்து துக்கிக்கிறதில்லை. (பந்தத்திலிருந்து) விடுபட்டவனாய்
"மோக்ஷமடைகிறான். (தேகம் ஆத்துமா இவைகளுக்குள்ள
"ஸம்பந்தமானது பலவாயிற்களையுடைய கோட்டைக்கும் அரச
"னுக்குமுள்ள ஸம்பந்தம்போற் சொல்லப்பட்டது). இவன்தா
"னந்தபிர்ம்மம்."

முண்டகோபநிஷத் ௩-உ-ல், ‡ "(ஜீவன்) முக்தியடையுங்
"காலத்திற் பிராணன்முதலிய பதினைந்துகலைகள் அததனுடை
"ய உற்பத்திஸ்தாநத்தையடைகின்றன. ஸகலவிந்திரியாபிமா
"னி தேவதைகளுமவரவருக்குக் காரணமான தேவதைகளைய
"டைகிறார்கள். கருமங்கள் (கருமபலன்கள்), ஞானமே சுவரூ
"பமாயுடைய ஆத்துமா இவையெல்லாஞ்சிரேஷ்டமும் நாசமற்
"றவுமான பிர்ம்மத்திற் கலந்துபோகின்றன. (எப்படிக் கலந்
"துபோகிறதென்பது திருஷ்டாந்தத்தினாற் காண்பிக்கப்படுகி
"றது). பெரிகிக்கொண்டிருக்கிற நதிகள், பெயர் ரூபமிவைக
"ளைவிட்டு ஸமுத்திரத்தைச் சேர்ந்தெப்படியதில் லயித்துப்போ
"கின்றனவோ அப்படி பிர்ம்மஞானியானவன் நாமரூபங்களிலி

* यस्मिन्सर्वाणि भूतानि आत्मैवाभूद्विजानतः । तत्रकोमोहः कश्शोकएकत्वमनुपश्यतः ॥

† पुरमेकादशद्वारमजस्यावक्रचेतसः । अनुष्ठायनशोचति विमुक्तश्च विमुच्यते । एतद्वैतत ॥

‡ गताः कलाः पञ्चदशप्रतिष्ठादेवाश्च सर्वे प्रतिदेवतासु । कर्माणिविज्ञानमयश्चआत्मा परेऽव्यये सर्वएकीभवन्ति ॥७॥ यदा नद्यस्स्यन्दमानास्समुद्रे ऽस्तंगच्छन्ति नामरूपे विहाय । तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं

"ருந்து விடுபட்டு உத்தமமான ஜியோதிசுவரூபமாயிருக்கிற புரு
"ஷனை (பிர்ம்மத்தை) யடைகிருன். எவனிப்படி பிர்ம்மத்தை
"யடைகிருனே அவன் சிரேஷ்டமான பிர்ம்மமேயாகிருன்."

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை-ஆகமப்பிரகரணம்-கசு-ல், * "அநாதிமாயையினுற் சூழப்பட்டிருக்கிற ஜீவ
"னெப்போது ஞாநமடைகிருனே அப்போதுப் பிறப்புமுதலிய
"விகாரமற்றவனும் சுவப்நமற்றவனுயுந் துக்கமற்றவனுயுமிருக்
"கிற தன்னை இரண்டாவதற்றவனுக (தானே பிர்ம்மமாக) வறி
"கிருன்."

ஷை-காரிகை-வைதத்தியப்பிரகரணம்-கூஉ-ல், † "ஆத்து
"மாவுக்கு இறப்புமில்லை பிறப்புமில்லை. (ஆத்துமா) பந்தமு
"டையவனுமல்ல. (யோகம் முதலிய) ஸாதநஞ்செய்கிறவனுமல்
"ல. மோக்ஷவிச்சையுடையவனுமல்ல. முக்தனுமல்ல. இதுதான்
"வாஸ்தவமானது." (பிறப்பிறப்புப் பந்தமோக்ஷாதிகள் வாஸ்தவத்திலாத்துமாவுக்கெப்போதுமில்லை. அவைகளக்ஞாநகற்பிதமென்பது கருத்து).

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை-அத்துவைதப்பிரகரணத்தில், ‡ "குடம் முதலியவை நசித்தாலவைகளிலுள்ள
"ஆகாசமெப்படி மஹாகாசத்தில் லயமடைகிறதோ அப்படி ஜீ
"வனவன் பரமாத்துமாவில் லயமடைகிருன். (ஆத்துமா
"வொன்றே யானுலொருதேகத்திலிருக்கிற ஆத்துமாவுக்குண்
"டாகும் சுகதுக்கங்கள் மற்றதேகங்களிலிருக்கிற ஆத்துமாவுக்

---

पुरुषमुपैति दिव्यम् ॥ ८ ॥ सयोहवै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति ॥ ९ ॥ இந்த வாக்கியங்களை, சூதஸம்ஹிதை-பிர்ம்மகீதை.அத்.அ.சு.கூ0.கூக.கூஉ.லும் காண்க.

* अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते । अजमनिद्रमस्वप्नमद्वैतं बुध्यते तदा ॥

† ननिरोधोनचोत्पत्तिर्नबद्धो नचसाधकः । नमुमुक्षुर्नवैमुक्त इत्येषा परमार्थता ॥ இந்த வாக்கியத்தை ஆத்துமபோதோபநிஷத்திலும். வாஸிஷ்டம்.ச.ஸர்.ருடு.சு.ருடு.முதல்.ச0.வரையிலும் காண்க.

‡ घटादिषु प्रलीनेषु घटाकाशादयो यथा । आकाशे संप्रलीयन्ते तद्वज्जीव इहात्मनि ॥ ४ ॥ यथैकस्मिन्घटाकाशे रजोधूमादिभिर्युते । न सर्वे

"குமுண்டாகவேண்டுமேயென்றால், அப்படியுண்டாகாதென்ப
"தை திருஷ்டாந்தத்தினுற் சொல்லுகிறார்). ஒரு கடாகாசத்தி
"ற் தூசி, புகை முதலியனச் சூழ்ந்திருக்கையில் மற்ற கடாகாச
"ங்களில் (அந்தத் தூசிமுதலியன) ஸம்பந்தப்படாததுபோல
"வே சுகம்முதலியவிஷயங்களில் ஜீவர்கள் (என்றறியத்தக்கது).
"ரூபம் காரியம் பெயர் (இவைகள்) அவ்வவ்விடத்தில் வேறுபட்
"டிருக்கின்றன. ஆகாசத்திலோ வேற்றுமையில்லை. இப்படித்
"தான் ஜீவர்கள் விஷயத்திலும் நிச்சயம். கடாகாசமானதெப்
"படி மஹாகாசத்தினுடைய விகாரமுமவயவமுமல்லவோ அப்
"படி ஜீவன் பரமாத்துமாவினுடைய விகாரமுமல்ல அவயவமு
"மல்ல. ஜீவனும் பரமாத்துமாவும் பேதமற்றதென்கிற வேற்று
"மையின்மை ஸ்துதிக்கத்தக்கது. பலவென்கிற வேற்றுமை
"யானது நிந்திக்கப்படுகிறது. அது ஸரியானதே."

ஷை கௌடபாதகாரிகை-அலாதசாந்திப்பிரகரணம்-எக-ல், * "யாதொருஜீவனும் பிறக்கிறதுமில்லை. அவனுக்கிருப்புக்காண "ப்படவுமில்லை. எவ்விடத்திலும் (யாதொன்றும்) அற்பமேனு "முண்டாகிறதென்பதேயில்லை. இது உத்தமமான ஸத்தியம்."

தைத்திரீயோபநிஷத்-உ-எ-ல், † "எப்போதொருவன், கா "ணப்படாததாயுஞ் சரீரமில்லாததாயும் விகாரமில்லாததாயும் "யாதொருஆதாரமற்றதாயுமிருக்கிற பிர்ம்மத்தினிடத்தில், நிலை "யான மனதையுடையவனுகிறானே அப்போதவன் (பிறப்பிறப் "பாகிறஸம்ஸார) பயமற்றவனுகிறான். இந்த பிர்ம்மத்தினிட

---

संप्रयुज्यन्ते तद्वज्जीवास्सुखादिभिः ॥ ५ ॥ रूपकार्यसमाख्याश्च भिद्यन्ते तत्र तत्रवै । आकाशस्य न भेदोऽस्तितद्वज्जीवेषु निर्णयः ॥ ६ ॥ नाकाशस्य घटाकाशो विकारावयवौ यथा । नैवात्मनस्सदाजीवो विकारावयवौ तथा ॥७॥ जीवात्मनो रनन्यत्वमभेदेन प्रशस्यते । नानात्वं निन्द्यतेयच्च तदेवंहिसमञ्जसम् ॥ १३ ॥

* नकश्चिज्जायते जीवस्संभवोऽस्य न विद्यते । एतत्तदुत्तमं सत्यं यत्र किञ्चिन्नजायते ॥

† यदा ह्येवैषएतस्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयनेऽभयं प्रतिष्ठां वि-

"த்தில் யாதொருவன் (பிர்ம்மம் வேறு ஜீவன் வேறு ஜகத்து "வேறென்ற) வேற்றுமையையெண்ணுகிறானோ அப்போதவனு "க்கு (சுகதுக்கம் பிறப்பிறப்பு முதலிய) பயமுண்டாகிறது."

தைத்திரீயோபநிஷத்-நாராயணீயம்-கூ-க-கடு-ல், * "இந்த "ஜலமானது அதற்கதிஷ்டானசைதந்நியமான ஜியோதிசுவரூப "மாய் விளங்கிறது. அது (அந்த சைதந்நியம்) நானுயிருக்கி "றேன். அந்த ஜியோதிசுவரூபமாய் விளங்கிற பிர்ம்மம் நானு "யிருக்கிறேன். எவன் நானுயிருக்கிறேனே அவன் பிர்ம்மம். "அவன் நானுயிருக்கிறேன். "நான்" என்கிறவனுயிருக்கிறேன். "பிர்ம்மம் நானுயிருக்கிறேன். நானேதான் நான். (என்னைக் "காட்டிலும் வேறொன்றுமில்லையென்பது கருத்து)."

சாந்தோக்கியோபநிஷத்-ச-கக-க-ல், † "சூரியனுக்குள் "ளெந்தப்புருஷன் காணப்படுகிறானோ அவன் (பிர்ம்மம்) நானு "யிருக்கிறேன். நானவனுகவேயிருக்கிறேன்."

ஷை-உபநிஷத்-கூ-அ-எ-ல், ‡ "ஓ! சுவேதகேதோ! இந்த "ஸகலப்பிரபஞ்சமுமாத்துமசுவரூபமே. அதுதான் ஸத்தியம். "இந்த ஆத்துமா நீயாயிருக்கிறாய்."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ரு-ச-க0-ல், $ "இந்த பிர் "ம்மத்தை தேவதைகளிலும் இரிஷிகளிலும் மனிதர்களிலுமெ "வனெவனறிந்தானோ அவன் அந்த பிர்ம்மமாகவேயாய்விட்டா "ன். பிர்ம்மத்தையறிந்த வாமதேவரிஷியானவர் "நான் மநு "வானேன். நான் சூரியனுனேன்" என்றார். இக்காலத்திலு "மிப்படி "நான் பிர்ம்மமாயிருக்கிறேன்" என்றெவனறிகிறானோ

---

न्दते । अथसोऽभयं गतोभवति । यदाह्येवैषएतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथतस्य भयं भवति ॥

* आर्द्रं ज्वलति ज्योतिरहमस्मि । ज्योतिर्ज्वलति ब्रह्माहमस्मि । सोहमस्मि ब्रह्माहमस्मि । अहमस्मि ब्रह्माहमस्मि । अहमेवाहम् ॥

† यएषआदित्ये पुरुषोदृश्यते सोहमस्मि सएवाहमस्मि ॥

‡ ऐतदात्म्यमिदꣳसर्वं तत्सत्यं सआत्मा तत्त्वमसिश्वेतकेतोइति ॥

$ तद्योयोदेवानां प्रत्यबुध्यत सएवतदभवत्तथा ऋषीणांतथा मनुष्याणां तद्धैतत् पश्यनृषिर्वामदेवः प्रतिपेदेऽहंमनुरभवं सूर्यश्चेति । तदिदमप्येतर्हियएवं वेदाहं ब्रह्मास्मीति सइदꣳसर्वं भवति। तस्यहनदेवाश्च नाभूत्याईशत-

"அவனிந்த ஸகலமுமாயாகிருன். அவனுக்கு விரோதஞ்செய்
"ய தேவர்களுஞ்சக்தர்களல்ல. ஏனெனில், அவர்களுக்கவனுத்
"துமாவாயிருக்கிறதனுற்ருன். எவன் தன்னைக்காட்டிலுமந்நி
"யமாகத் தேவதைகளையும் "அவன் வேறு நான் வேறு" என்று
"பார்க்கிருனே அவன் பசுவைப்போலறியாதவனே."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ஈ-ரு-கஎ-ல், * "பிறகு
"புத்திரனைப்பார்த்து, நீ பிர்ம்மம், நீ யக்ஞம், நீ உலகமென்று
"சொல்லுகிருர். புத்திரன் "நான் பிர்ம்மம், நான் யக்ஞம், நா
"னுலகம்"என்று பதிற்சொன்னுன். உனக்கிப்போதெது சொ
"ல்லப்படவில்லையோ அதெல்லாமொன்ருன பிர்ம்மமே."

ஷ-உபநிஷத்-சு-ச-உரு-ல், † "இந்த ஆத்துமா மஹா
"னும் பிறப்பற்றவனும் ஜரையற்றவனும் மரணமற்றவனும்
"நாசமற்றவனும் பயமற்றவனுமிருக்கிருன். அவன் பிர்ம்ம
"மே. அந்த பிர்ம்மந்தான் பயமற்றது, பயமற்றது. இப்படி
"யெவனறிகிருனோஅவன் பிர்ம்மமாகிருன்."

பிர்ம்மோபநிஷத்தில், ‡ "வாக்கானது, எதற்கு இலக்ஷ
"ணஞ்சொல்லமாட்டாமல் மனதோடு திரும்பிவிடுகிறதோ அது
"தான் ஜீவனுடைய ஆநந்தசுவரூபம். இப்படியறிந்த வித்து
"வான் பந்தத்திலிருந்து விடுபடுகிருன். எங்கும் பரவியிருக்கி
"ற ஆத்துமாவைப் பாலில் நெய்போல் மறைந்திருக்கிறதாகவ
"றியவேண்டியது."

---

आत्माह्येषां सभवत्यथयोन्यांदेवता मुपास्तेऽन्योसावन्योहमस्मीति नसवेदयथापशुः ॥

* अथपुत्रमाहत्वं ब्रह्मत्वं यज्ञस्त्वं लोकइति । सपुत्रः प्रत्याहाहं ब्रह्माहंयज्ञोऽहंलोकइति । यद्वैकिञ्चानूक्तं तस्य सर्वस्य ब्रह्मेत्येकता ॥ இந்த வாக்கியத்தை-கடோபநிஷத்திலுங்காண்க.

† सवाएषमहानजआत्माऽजरोऽमरोऽमृतोऽभयोब्रह्म भयंवैब्रह्माभयं हि वैब्रह्म भवति यएवं वेद ॥

‡ यतोवाचोनिवर्तते अप्राप्यमनसासह । आनन्दमेतज्जीवस्य यत्ज्ञात्वा मुच्यते बुधः । सर्वव्यापिनमात्मानं क्षीरेसर्पिरिवार्पितम् ॥

கைவல்லியோபநிஷத்தில், * "ஸகலசுவரூபியாயுமிப்பிரப "ஞ்சத்திற்கு முக்கியவிருப்பிடமாயும் சூக்ஷ்மத்திலுஞ்சூக்ஷ்ம "மாயும் நித்தியமாயுமிருக்கிற பரபிர்ம்மமெதுவோ அதுவே நீ. "நீயே அது. ஜாக்கிரத்சுவப்நசுஷுப்தி முதலியவைகளிலெங் "தப் பிரபஞ்சம் விளங்கிக்கொண்டிருக்கிறதோ அது பிர்ம்மமே. "அது "நானே" என்றறிந்தால் ஸகலபந்தத்திலிருந்தும் விடுப "டுகிறான். மூன்று ஸ்தாநங்களிலேயும் (ஸ்தூலசூக்ஷ்மகாரண "தேகங்களிலேயும்) புஜிக்கத்தக்கது புஜிக்கிறவன் போக்கிய "மென்பதெதுண்டோ அதைக்காட்டிலுமந்நியமாயும் ஸாக்ஷியா "யுஞ் சிந்மாத்திரமாயுமிருக்கிற ஸதாசிவன் "நான்." என்னிடத் "திலிருந்தே ஸகலமுமுண்டாகிறது. என்னிடத்திலேயே ஸக "லமும் லயமடைகிறது. அப்படிப்பட்ட இரண்டாவதற்ற பிர் "ம்மம் நானே. அணுவைக்காட்டிலுமணுவாயுமிருக்கிறேன். "அப்படியே மஹானுயுமிருக்கிறேன். விசித்திரமான இந்தப் "பிரபஞ்சம் "நானே." பழமையானவனும் நான்தான். ஈசுவர "னும் நானே. நான் ஜியோதிசுவரூபனுயும் மங்களசுவரூபனு "யுமிருக்கிறேன்."

பரமஹம்ஸோபநிஷத்தில், † "பரமாத்துமா, (ஜீவ) ஆத்து "மா இவ்விரண்டுமொன்றென்கிற ஞாநத்தினுலவர்களுக்குட்பே "தத்தை விலக்குவதெதுவோ அது,ஸந்தியென்று சொல்லப்படு "கிறது.——பூர்ணாநந்தமாயு மொன்ருயும்ஞாநசுவரூபமாயுமிரு "க்கிறவந்த பிர்ம்மமே "நானுகவிருக்கிறேன்" என்று கிருதகிரு "த்தியனுகிருன்." (செய்யவேண்டியதைச் செய்துகொண்டவ னுகிருன்).

---

* यत्परं ब्रह्मसर्वात्मा विश्वस्यायतनं महत् । सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं तत्वमेव त्वमेवतत् । जाग्रत्स्वप्नसुषुप्त्यादिप्रपञ्चं यत्प्रकाशते । तद्ब्रह्माहमिति ज्ञात्वा सर्वबन्धैः प्रमुच्यते। त्रिषुधाम सुयद्भोज्यं भोक्ताभोगश्च यद्भवेत् । तेभ्यो विलक्षणस्साक्षी चिन्मात्रोहं सदाशिवः। मय्येवसकलंजातं मयि सर्वंप्रतिष्ठितम् । मयिसर्वं लयं याति तद्ब्रह्माद्वयमस्म्यहम् । अणोरणीयानहमेवतद्वन्महानहं विश्वमिदं विचित्रम् । पुरातनोहं पुरुषोहमीशो हिरण्मयोहं ।शिवरूपमस्मि ॥

† परमात्मात्मनोरेकत्वज्ञानेन तयोर्भेदएव विभग्नस्सासन्ध्या । पूर्णानन्दैकबोधस्तद्ब्रह्मैवाहमस्मीति कृतकृत्योभवति ॥

அமிருதபிந்தூபநிஷத்தில், * "அந்த பிர்ம்மமானது, பிரி
"வற்றது, விகற்பமற்றது, அழுக்கற்றது, அப்படிப்பட்ட பிர்
"ம்மமே "நான்" என்றறிந்தாற் பிர்ம்மமேயாகிறான் நிச்சயம்.—
"குடங்கொண்டுபோகப்படுகையிலதிலிருக்கிற வாகாசங்கொண்
"டுபோகப்படுகிறதில்லை. குடம்மாத்திரந்தான் கொண்டுபோகப்
"படுகிறது. அதுபோல ஜீவனனவனுகாசத்திற்கொப்பாகவிரு
"க்கிறான்.——பிரிவற்றதாயுமசைவற்றதாயுஞ் சாந்தமாயுமிருக்
"கிற பிர்ம்மம் "நானே" என்று நினைக்கவேண்டியது."

அதர்வசிரோபநிஷத்தில், † "எனக்கந்நியமாயற்பமேனுமி
"ல்லையென்றெவ்வொரு வஸ்துவினுள்ளுக்குள்ளுமவன் பிரவே
"சித்தான். திக்குகளுக்குள்ளும் பிரவேசித்தான். அப்படிப்
"பட்ட"நான்" நித்திய (சேதந)னுயு மநித்திய (ஜடம்) னுயுமிருக்
"கிறேன். பிர்ம்மமாயுமிருக்கிறேன்."

மைத்திராயண்ணியுபநிஷத்-உ-டு-ல், ‡ "ஆத்துமா சூக்ஷ்
"மமாயிருக்கிறான். (கருமேந்திரியங்களால்) கிரஹிக்கப்படாத
"வன். (ஞாநேந்திரியங்களுக்கு) புலப்படாதவன். புருஷனெ
"ன்கிற பெயரையுடையவன். தூங்குகிறவன் புத்திபூர்வமாய்
"விழித்துக்கொள்ளாததுபோலஸ்ங்கற்பமில்லாமலேஇத்தேகத்
"திலோரம்சத்தினுலிருக்கிறவன். இப்படியிருக்கிறஅம்சமானது,
"பிரதிபுருஷன், க்ஷேத்திரக்ஞன். ஸங்கற்பம், நிச்சயம், அபிமாந
"மிவைகளையடையாளமாயுடையவன். பிரஜாபதி, விசுவன் என்

---

* तदेवं निष्कळं ब्रह्म निर्विकल्पं निरञ्जनं । तद्ब्रह्माहमिति ज्ञात्वा ब्रह्म संपद्यते ध्रुवम् । ——घटसंवृतमाकाशं नीयमाने घटेयथा । घटो नीयेतनाकाशस्तद्वज्जीवोनभोपमः । ——निष्कळं निश्चलं शान्तं तद्ब्रह्माहमितिस्मृतम् ॥

† नान्यःकश्चिन्मत्तोव्यतिरिक्तइति सोऽन्तरादन्तरं प्राविशद्दिशश्चान्तरं प्राविशत् । सोहं नित्यानित्योऽहं ब्रह्माहम् ॥

‡ सवाएषसूक्ष्मोऽग्राह्योऽदृश्यः पुरुषसंज्ञोऽबुद्धिपूर्वमिहैवावर्तते अंशेनेति सुप्तस्यैव बुद्धिपूर्वं विबोधाएवमिति अथयोहवैखलुवावैतस्य सोअंशोयं यश्चेतामात्रः प्रतिपुरुषः क्षेत्रज्ञस्संकल्पाध्यवसायाभिमानलिङ्गः प्रजापतिर्वि-

"ற பெயர்களையுடையவன். இப்படிப்பட்ட சேதநனாலேயிந்தச் "சரீரமானது நிலைபெற்றிருக்கிறது. இதைப் பிரேரேபிக்கிற "வனுமவனே."

கௌஷீதகிபிராம்மணோபநிஷத்-க-ச-ல், * "பிர்ம்மவித்தா "னவன் பிர்ம்மமேயாகிறான்."

ஷை-ச-கசு-ல், † "எவனிவனையுபாஸிக்கிறானோ அவனிந்த "ஸகலத்திற்குமாத்துமாவாகிறான்."

மைத்திரேயோபநிஷத்-க-ச-ல், ‡ "நித்தியனும் சுத்தனு "ம் ஞானமுடையமுக்தசுவபாவனும் ஸத்தியனும் சூக்ஷ்ம "னுமெங்கும் நிறைந்தவனுமிரண்டாவதற்றவனு மாநந்தஸ "முத்திரனும் பிரத்தியகாத்துமாவாயுஞ்சிரேஷ்டனுமிருக்கிற "பரமாத்துமாயாரோ அவன்தான் "நான்" இதிற்சந்தேகமில்லை."

ஷை-உபநிஷத்-உ-க-ல், $ "தேகமானது தேவாலயமென்று "சொல்லப்படுகிறது. அதிலிருக்கிற ஜீவன் சிவனே. அஞ்ஞாந "மாகிற நிர்மால்லியத்தைத்தள்ளி அவன் "நான்" என்கிற பாவ "னையினாலே பூஜிக்கவேண்டியது. அபேதமாய்ப் பார்ப்பதுதா "ன் ஞானம்".

ஷை உபநிஷத்-உ-ங-ல், ¶ "அத்துவைதபாவனைதான் பி "க்ஷையெடுத்துண்ணல். துவைதபாவனை புஜிக்கத்தக்கதல்ல. "(என்றால், ஸகலமும் பிர்ம்மசுவரூபம் இரண்டாவதாகவொன் "றுமில்லையென்கிறபாவனைசெய்யத்தக்கதென்பது கருத்து).— "இரண்டுஸந்திகளிலும் ஜீவாத்துமா பரமாத்துமாக்களுடைய "ஐக்யம் = ஒன்றுதல் எதுவோ அது ஸந்நியாஸமென்றுசொல்லப் "படுகிறது."

---

श्वाख्यश्चेतने नेदं शरीरंचेतनवत्प्रतिष्ठापितं प्रचोदयितावैषोप्यस्येति ॥

* ब्रह्म विद्वान् ब्रह्मैवाभिप्रैति ॥

† सयोहैतमेवोपास्त एतेषां सर्वेषामात्मा भवति ॥

‡ नित्यशुद्धो बुद्धमुक्तस्वभावस्सत्यः सूक्ष्मस्संविभुश्चाद्वितीयः । आनन्दाब्धिर्यत्परस्सोहमस्मि । प्रत्यग्धातुर्नात्र संशीतिरस्ति ॥

$ देहो देवालयः प्रोक्त स्सजीवः केवलश्शिवः । त्यजेदज्ञाननिर्माल्यं सोहंभावेन पूजयेत् । अभेददर्शनं ज्ञानम् ॥

¶ अद्वैतभावनाभैक्षमभक्ष्यं द्वैतभावनम् । ———संन्धौ जीवात्मनो रैक्यं सन्यासः परिकीर्तितः ॥

மைத்திரேயோபநிஷத்-ரு-ல், * (இந்தஅத்தியாயம்முழுதும் "ஸகலப்பிரபஞ்சவஸ்துக்களும்"நான்"என்று சொல்லப்பட்டிரு "க்கிறது. அவைகளில் முதலிலுள்ள சிலவாக்கியங்களுங் கடை "சியிலுள்ள சிலவாக்கியங்களும்மட்டுமிவ்விடத்திற்குறிப்பிடப் "படுகிறது) "நானுமிருக்கிறேன். அந்நியனுமிருக்கிறேன். "பிர்ம்மமாயுமிருக்கிறேன். சிருஷ்டிக்குக்காரணனுமிருக்கிறே "ன்.——இப்படியெவனுக்கு சுவாநுபவமுண்டாயிருக்கிறதோ "அவன்தான் "நான்" சந்தேகமில்லை. இதையொருதடவையா "வதெவன் கேட்கிறானோ அவன்பிர்ம்மமேயாகிறான்."

சுபாலோபநிஷத்-கூ-ல், † "வெளியிந்திரியங்களையும் உள் "ளிந்திரியங்களையும் மனதையுமடக்கினவனும் பொருமையுள் "ளவனும் ஸமபுத்தியுள்ளவனுமிருந்துகொண்டு மனதிலாத் "துமாவையே பார்க்கிறான். அப்படிப்பட்டவன் ஸகலத்திற்கு "மாத்துமாவாகிறான்."

ஸர்வஸாரோபநிஷத்தில், ‡ "பிரத்தியகாத்துமா யார்? ஸ "த்தியஞாநாநந்தமயமானது, எவ்விதசரீரோபாதியுமற்றது, க "டகமகுடாதியுபாதியில்லாதத்தங்கக்கட்டிபோலுள்ளது, ஞா "நக்கட்டி, சித்சுவபாவம், ஆத்துமசைதந்நியம், பிர்ம்மம் இப் "படியாயெதுவிளங்கிறதோ அது அவித்தியோபாதிக்குட்பட்ட "தும் துவம்பதத்தினாற் சொல்லப்படுவதுமாகியப் பிரத்தியகா "த்துமா" (ஜீவன்).

ஷெ உபநிஷத்தில், $ "நான்ஸ்திரமாயும் நித்தியமாயுமெப் "போதுமாநந்தமாயுஞ்சுத்தமாயும் ஞாநசுவரூபமாயுமழுக்கற்ற

---

* अहमस्मि परश्चास्मि ब्रह्मास्मि प्रभवो स्म्यहम् । ——एवं स्वानुभवो यस्य सोहमस्मि न संशयः । यः शृणोति सकृद्वापि ब्रह्मैव भवति स्वयम् ॥

† शान्तो दान्तो परतस्तितिक्षु स्समाहितो भूत्वाऽत्मन्येवात्मानं पश्यति । सर्वस्यात्मा भवति ॥

‡ सत्यंज्ञानमनन्तमानन्दं सर्वशरीरोपाधिविनिर्मुक्तं कटकमकुटाद्युपाधिरहितसुवर्णघनवद्विज्ञानघनचिन्मात्र स्वभावमात्मचैतन्यं ब्रह्म यदवभासते तदविद्योपाधिकं त्वं पदार्थस्सप्रत्यगात्मा !!

$ स्थाणुर्नित्यस्सदानन्दश्शुद्धोज्ञानमयोऽमलः । आत्माहं सर्वभूतानां

"வனுயுமிருக்கிறவன். நான்ஸகலபூதங்களுக்குமாத்துமா. எங்
"கும் வியாபித்திருக்கிறவன். சாக்ஷியாயிருக்கிறவன். இதிற்
"சந்தேகமில்லை. ஸகலவேதாந்தங்களினுலேயு மறியத்தகுந்த
"பிர்ம்மம் நானே."

நிராலம்போபநிஷத்தில், * "சுகம் யாது? ஸச்சிதாநந்த
"சுவரூபத்தையநுபவத்தினுலறிந்து ஆநந்தசுவரூபமாயிருத்த
"லே சுகம். சிஷியன் யார்? பிர்ம்மஞாநத்தினுற் பிரபஞ்சாகார
"ஞாநமற்று மிஞ்சியிருக்கிறப்பிர்ம்மமே சிஷியன். வித்துவான்
"யார்? ஸகலத்திலுமாத்துமாவாயிருக்கிற தன்னுடைய ஞாநசு
"வரூபத்தையறிந்தவன் வித்துவான். தபஸாவதென்ன? பிர்ம்ம
"ம் ஸத்தியம் ஜகத்து மித்தை(பொய்)யென்கிற அபரோக்ஷஞா
"நமாகிறஅக்நியினுலே பிரும்மாதிகளுடைய ஐசுவரியாசையுறு
"திப்பட்டிருக்கிற ஸங்கற்பமாகிறவிதையை வறுக்கிறதுதான் த
"பஸ்."

சுகரஹஸியோபநிஷத்தில், † "ஸகலபூதங்களிலுமிருக்கிற
"ஜீவத்தன்மையானது எவ்விடத்திலுமகண்டாநந்தசுவரூபமே.
"சித்தம் அகங்காரமிவைகளை யேவிக்கொண்டிருக்கிற ஜீவனெ
"ன்று சொல்லப்படுகிறவனைத் துவம்பதமாக பஜிக்கிறேன். ம
"னதினுடைய வியாபாரம் (விஷயங்களிற்செல்லுதல்) இருக்கி
"றவரையில், ஜீவன்பிர்ம்மமென்கிற வாக்கியார்த்தமாகிய தத்
"துவம் பதத்தினுடைய ஐக்கியத்தைச்செய்கிறவனுய், (தத்துவ
"ம் பதத்தினுடைய)லயவிஷயத்தில் அஸிபதத்தை எப்போதுந்
"தியாநிக்கவேண்டியது.——இவ்விடத்திற் (இத்தேகத்தில்)தா
"னுகவே பூர்ணனுயிருக்கிறபரமாத்துமா, பிர்ம்மமென்கிறபெய

---

विभुस्साक्षी न संशयः । ब्रह्मैवाहं सर्ववेदान्तवेद्यं ॥

* सुखमितिच । सच्चिदानन्दानुभवस्वरूपं ज्ञात्वानन्दरूपावस्थितिरेव सुखं । शिष्य इति च । विद्याध्वस्तप्रपञ्चावगाहितज्ञानावशिष्टं ब्रह्मैवशिष्यः । विद्वानिति च । सर्वांतरस्थस्वसंविद्रूपविद्विद्वान् । तपइति च । ब्रह्म सत्यं जगन्मिथ्येत्यपरोक्षज्ञानाग्निना ब्रह्माद्यैश्वर्याशासिद्धसंकल्पबीजसन्तापरूपं तपः ॥

† जीव त्वं सर्वभूतानां सर्वत्राखण्डविग्रहम् । चित्ताहंकारयन्तारं जीवाख्यं त्वं पदं भजे । जीवो ब्रह्मेति वाक्यार्थं यावदस्तिमनस्थितिः । ऐक्यं तत्वं लये कुर्वन् ध्यायेदसि पदं सदा । ——स्वतःपूर्णः परात्मात्र ब्रह्म-

"ரினால் வர்ணிக்கப்படுகிறான். "அஸ்மி = இருக்கிறேன்" என்
"கிற வாக்கியமானது ஐக்கியத்தை யுறுதிப்படுத்துகிறது. அத
"னாலே நான் பிர்ம்மமாயிருக்கிறேன்."

தேஜோபிந்தூபநிஷத்-ங-ல், * "நானெப்போதுமாநந்தசு
"வரூபமாயும் நாசமற்றதாயுமிருக்கிற அந்த பிர்ம்மமே. நான்,
"நீ, அதுவென்று சொல்லப்படுகிறதும் பிர்ம்மமே. உன்னைக்
"காட்டிலும் வேறாக அற்பமேனுமில்லை.—— இரண்டாவதற்ற
"ஒன்றாயும் ஸத்தாயுமிருக்கிற பிர்மமமே "நான்" ஸந்தேகமில்லை.
"——எப்போதுந்தன்னுடைய ஆத்துமமாத்திரமாகவே பார்க்
"கவேண்டியது. எப்போதுந்தன்னாத்துமமந்திரத்தையே யப்
"பியாஸஞ்செய்யவேண்டியது. (ஏனெனில்) "நான்" பிர்ம்மமா
"யிருக்கிறேனென்கிற மந்திரமானது தேகாதிகளினாலுண்டாகி
"ற பாபத்தை நாசஞ்செய்கிறது. "நான்" பிர்ம்மமாயிருக்கிறே
"னென்கிறவிந்த மந்திரமானதுப் பிறவித்துன்பத்தைப் போக்க
"டிக்கிறது. "நான்" பிர்ம்மமாயிருக்கிறேனென்கிறவிந்த மந்தி
"ரமானது மரணதுக்கத்தைப் போக்கடிக்கிறது. "நான்" பிர்ம்
"மமாயிருக்கிறேனென்கிறவிந்த மந்திரமானது சித்தப்பந்தத்
"தை நாசஞ்செய்கிறது. "நான்" பிர்ம்மமாயிருக்கிறேனென்
"கிறவிந்த மந்திரமானது ஞாநாநந்தத்தைக் கொடுக்கிறது."

ஷ-உபநிஷத்—ச-ல், † "நான் சிதாத்துமா, நான் பரமா
"த்துமா, நான் குணமற்றவன், நான் சிரேஷ்டத்திற்கெல்லாஞ்
"சிரேஷ்டமானவனென்றெவன் ஆத்துமமாத்திரமாகவேயிருக்கி
"றானோ அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுகிறான். நான்

---

शब्देन वर्णितः । अस्मीत्यैक्यपरामर्शस्तेनब्रह्म भवाम्यहम् ॥

* तदेवाहं सदानन्दं ब्रह्मैवाहं सनातनम् । त्वमित्येतत्तदित्येतत् त्वत्तोन्यो नास्तिकिञ्चन । —— एकमेवाद्वितीयं सद्ब्रह्मैवाहं नसंशयः। —— स्वात्ममात्रं सदापश्येत् स्वात्ममात्रं सदाभ्यसेत् । अहं ब्रह्मास्मि मंत्रोयं दृश्यपापं विनाशयेत् । अहं ब्रह्मास्मि मंत्रोयं जन्मपापं विनाशयेत् । अहंब्रह्मास्मि मंत्रोयं मृत्युपाशं विनाशयेत् । अहं ब्रह्मास्मि मंत्रोयं चित्तबन्धं विनाशयेत् अहं ब्रह्मास्मि मंत्रोयं ज्ञानानन्दं प्रयच्छति ॥

† चिदात्माहं परात्माहं निर्गुणोहं परात्परः । आत्ममात्रेण यस्तिष्ठेत्सजीवन्मुक्तउच्यते । देहत्रयातिरिक्तोहं शुद्धचैतन्यमस्म्यहम् । ब्रह्माहमि

"(ஸ்தூலசூக்ஷ்மகாரணங்களாகிற)மூன்று தேகங்களுக்கும் வே
"றுபட்டவன். நான் சுத்தசைதந்நியமாயிருக்கிறேன். "நான்"
"பிர்ம்மமேயென்றெவனுடைய அந்தக்கரணத்திலிருக்கிறதோ
"அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுகிறான்.——ஜீவாத்
"துமபரமாத்துமா (வெவ்வேறு)என்கிற ஸகல எண்ணத்தையும்
"விட்டுவிடவேண்டியது."

தேஜோபிந்தூபநிஷத்-டு-ல்,* "நாமரூபம்முதலியவைகளும் அ
"நுபவம் அநுபவிக்கும் வஸ்து என்பவைகளுமில்லை.——ஸகல
"மும் பிர்ம்மமாத்திரமானதால், அநாத்துமாவில்லையென்று நிச்
"சயித்துக்கொள்.——ஸகல தோற்றங்களும் நீயேதான். நீ
"பிர்ம்மமாயிருக்கிறாய் ஸந்தேகமில்லை."

ஷை-உபநிஷத்-சு-ல், † "ஸகலமும் பிர்ம்மமே வேறொன்
"றுமில்லையாகையாலந்த பிர்ம்மம் "நானே" அந்த பிர்ம்மம்
"நானே."

தியாநபிந்தூபநிஷத்தில், ‡ "நிலையான புத்தியுள்ளவனும்
"மாயாகாரியங்களற்றவிவேகியாயுமிருக்கிற பிர்ம்மவித்தானவன்
"பிர்ம்மத்திலேயே இருக்கிறான்" (என்றால், பிர்ம்மத்தைத்தவிர
வேறொன்றையறிகிறதில்லையென்பது கருத்து).

பிர்ம்மவித்தியோபநிஷத்தில், § "ஜலத்துடன் சேர்க்கப்ப
"ட்ட ஜலமெப்படியோ அப்படி ஞாநத்தினால் ஸாயுஜ்யம் (பிர்ம்
"மத்துடன் கலந்துபோதல்) சொல்லப்பட்டிருக்கிறது.——நா
"ன், ஸச்சிதாநந்தபூர்ணாத்துமாவாயும் ஸகல பிரமைக்குமிருப்
"பிடமாயுமிருக்கிறேன். நான், ஸச்சிதாநந்தமாத்திரனாயும்,

---

ति यस्यान्तस्सजीवन्मुक्त उच्यते ।——जीवात्मपरमात्मेति चिन्तासर्वस्ववर्जितः ॥

* नामरूपादिकं नास्ति भोग्यं वा भोगभुक्चवा ।——केवलं ब्रह्ममात्रत्वान्नास्त्यनात्मेति निश्चिनु ।——त्वमेवसर्वभावोऽसि त्वं ब्रह्मासि न संशयः ॥

† ब्रह्मैव सर्वं नान्योस्ति तदहं तदहं तथा ॥

‡ स्थिरबुद्धिरसंमूढो ब्रह्मविद्ब्रह्मणिस्थितः ॥

§ ज्ञानात्सायुज्यमेवोक्तं तोयेतोयं यथातथा ।——सच्चिदानन्दपूर्णात्मा सर्वप्रेमास्पदो स्म्यहम् । सच्चिदानन्दमात्रोहं स्वप्रकाशोऽस्मि चिद्घनः -

"சுவப்பிரகாசனும், சித்கநனுமிருக்கிறேன். நான் ஸத்துவ் "சுவரூபனுஞ், சிந்மாத்திரனும், நித்தியனும், ஸகலத்திற் "குமாத்துமாவாயுமிருக்கிறேன். ஸகலத்திற்குமதிஷ்டாநமான "சிந்மாத்திரமாயும் ஆத்துமாவினுடையப் பந்தத்தைப் போக்க "டிக்கிறவனுமிருக்கிறேன். ஸகலத்தையும் (பிரளயகாலத்தில்) "விழுங்கிறவனுமிருக்கிறேன். நான் ஸகலத்தையும் பார்க்கிற "வனும் ஸகலத்தையுமநுபவிக்கிறவனுமிருக்கிறேன். யார் "பிர்ம்மவித்துக்களோ யார் ஸித்தர்களோ அவர்களெல்லோரு "மிப்படிச் சொல்லுகிறார்கள். எவனிப்படி வாஸ்தவமாயறிகி "றானோ அவன்தான் புருஷனென்று சொல்லப்படுகிறான்."

ஆத்துமோபநிஷத்தில், * "நான், மாயையற்றவன். நான், "உவமையற்றவன். நான், ஞாநசுவரூபமானவஸ்துமாத்திரமா "யிருக்கிறவன். நான், அகங்காரமற்றவன். நான் ஜகத்து, ஈசு "சுவரன், ஜீவனென்கிற பேதமில்லாதவன். நான், பிர்ம்மத்தை "விட வேறல்லாத உத்தமன்.——ஞாநத்தையே முக்கியரஸமா "யுடையவன். மோக்ஷமாகிற ஆநந்தஸமுத்திரமாத்திரமாயிரு "க்கிறேன். சூக்ஷ்மமாயிருக்கிறேன். விகாரமற்றவனுயிருக்கி "றேன். மாறுதலற்றவனுயிருக்கிறேன். குணக்கூட்டங்களற்ற "ஆத்துமசுவரூபமாகமாத்திரமிருக்கிறேன்.——நான் ஞாநாநந் "தசுவரூபியானவன். விவேகமான புத்தியினாலே இரண்டாவத "ற்ற ஆத்துமாவையறிகிறேன். ஆனாற்பந்தமோக்ஷாதி வியவ "ஹாரங்காணப்படுகிறது. பிரபஞ்சமானதெனக்கு நிவிருத்தி "யானாலுமெப்போதும் ஸத்தியம்போல் விளங்கிறது. பழுதை

---

सत्वस्वरूपचिन्मात्रस्सिद्धस्सर्वात्मकोह्यहम् । सर्वाधिष्ठानचिन्मात्र स्स्वात्मबन्ध-हरोस्म्यहम् । सर्वग्राहोस्म्यहं सर्वद्रष्टासर्वानुभूरहम् । येच ब्रह्मविदस्सिद्धा-स्सर्वएत्वं वदन्ति हि । एवं यो वेदतत्वेन सवै पुरुष उच्यते ॥

* प्रगलितनिजमायोहं निस्तुलदृशि रूपवस्तु मात्रोहम् । अस्तमि-ताहंतोहं प्रगलितजगदीशजीवभेदोहम् । प्रत्यगभिन्नपरोहं । ——अवबो-धैकरसोहं मोक्षानन्दैकसिन्धुरेवाहम् । सूक्ष्मोहमक्षरोहं विगलितगुणजालके-वलात्माहम् । ——बोधानन्दैकमूर्तिरेवाहम् । विवेकबुद्धियुक्त्याहं जाना-म्यात्मान मद्वयम् । तथापि बन्धमोक्षादिव्यवहारः प्रतीयते । निवृत्तोपि प्र-पञ्चो मे सत्यवद्भाति सर्वदा । सर्पादौ रज्जुसत्तेव ब्रह्मसत्तेव केवलम् । प्रपञ्चा-

"யிற் பாம்புமுதலியனதோற்றுவதற்குப் பழுதையே யெப்படி "யாதாரமோ அப்படிஜகத்ரூபத்திற்கு பிர்ம்மஸத்தேகாரண "மாயிருக்கிறது. ஆகையால், ஜகத்தில்லை. கரும்புரஸமானதெ "ப்படிச் சக்கரையைவியாபித்து நிறைந்திருக்கிறதோ அப்படிப் "போல அத்துவய பிர்ம்மரூபத்தினாலே மூன்றுலகத்திலும் நிறை "ந்திருக்கிறேன். குமிழிமுதலியவிகாரங்களும் அலைகளும் ஸமு "த்திரத்திலெப்படியோ அப்படி பிரும்மாமுதற் சிறுபூச்சிவரை "யிலுள்ளப் பிராணிகளென்னிடத்திற் கற்பிக்கப்பட்டிருக்கின் "றன.——எனக்குப்பந்தமுமில்லை, யெனக்குமோக்ஷமுமில்லை."

நாரதபரிவிராஜகோபநிஷத்-று-ல்,* "பிராம்மணன், பசு, கு "திரை, மிருகம் முதலியவைகளில் வேற்றுமையின்றி ஸமமாய் "ப்பார்க்கிறவனாய்ப் பரமாத்துமாவாயுமீசுவரனாயுமிருக்கிற விஷ் "ணுவை மனதினாற்றியானித்துக்கொண்டவனாய், பிர்ம்மானந்த "த்தைச்சிந்தித்துக்கொண்டவனாய் "நானே" பிர்ம்மமென்றுநி "னைத்தவனாய்,——பிரபஞ்சத்தைப்பாராதவனாய் சுவரூபானுஸ "ந்தானத்திலேயேப் பிரமரகீடந்நியாயம்போல் முக்தியடைகி "றான்."

ஷை-சூ-ல், † "தனக்கந்நியமாயிருக்கிற ஸகலமுங்கற்பித "மென்றும் நசிக்கத்தக்கதென்றுமறிந்து விரக்தி(ஒழிவு)அடை "ந்தபுருஷனானவனெப்போதும் "நான்பிர்ம்மமாயிருக்கிறேன்" "என்று உச்சரித்துக்கொண்டிருக்கவேண்டியது.——நான்பிர்ம் "மமல்லவென்று வியவஹரிக்கக்கூடாது. பின்னையோவென்றால், "நான்பிர்ம்மமாயிருக்கிறேன்" என்றெப்போதும்வியவஹரித்து "க்கொண்டிருக்கவேண்டியது."

---

धाररूपेण वर्ततेऽतोजगन्नहि। यथेक्षुरससंव्याप्ता शर्करावर्तते तथा। अद्वयब्रह्मरूपेण व्याप्तोहं वैजगत्रयम्। ब्रह्मादिकीटपर्यंताः प्राणिनो मयि कल्पिताः। बुद्बुदादिविकारान्तास्तरङ्गास्सागरे यथा।——न मे बन्धो न मे मुक्तिः॥

* निर्वैरेण समं पश्यन् द्विजगोऽश्वमृगादिषु। भावयन्मनसा विष्णुं परमात्मानमीश्वरम्। चिन्तयन् परमानन्दं ब्रह्मैवाहमिति स्मरन्।—— प्रपञ्चावाङ्मुखस्स्वरूपानुसन्धानेन भ्रमरकीटन्यायेन मुक्तो भवति॥

† अस्मद्व्यतिरिक्तं सर्वं कृतकं नश्वरमिति मत्वा विरक्तः पुरुषस्सर्वदा ब्रह्माहमस्मीति व्याहरेत्। ——नाहं ब्रह्मेति व्याहरेत् किन्तु ब्रह्माहमस्मीत्यजस्रम्॥

திருசிகிபிராம்மணோபநிஷத்தில், * "சிந்மாத்திரமாகிய "பிர்ம்மமே "நான்" என்று சிந்திப்பதுத்தியாநமென்று சொல் "லப்படுகிறது.——"(நான்)" சிரேஷ்டமானபிர்ம்மமென்றும் "பிர்ம்மமே "(நான்)" என்றுமிருக்கிறநிலைமை யெதுவோ அது "ஸகலவிருத்திகளுமற்றதாகிய ஸமாதியென்றுதெரிந்துகொள். "யோகியானவன் பிர்ம்மமாகிறான். அவன்மறுபடிபிறக்கிறதி "ல்லை."

யோகசூடாமணியுபநிஷத்தில், † "ஜீவனானவன் இந்திரிய "ங்களினாற் கட்டப்படுகிறான். (நான்ஜீவனல்ல, பிர்ம்மமேநான் "என்றறிந்தஞாநியான)ஆத்துமாவோவென்றாற், கட்டப்படுகி "றதில்லை. "என்னுடையது" என்பதனாலேஜீவனாகிறான். "எ "ன்னுடையதல்ல" என்பதனாலேபிர்ம்மமாகிறான்."

மண்டலப்பிராம்மணோபநிஷத்-க-ச-ல், ‡ "சொல்லப்பட்டி "ருக்கிறஸகலவேற்றுமையுமாத்துமாவே. அதன்லக்ஷியத்தை "ச்சுத்தமானப்புத்தியினாலெவன் பார்க்கிறானோ அவனேபிர்ம்ம "நிஷ்டனாயிருக்கிறான். இருபத்தைந்தாதவனான ஜீவனானவன் "தன்னாற்கற்பிக்கப்பட்ட இருபத்திநான்கு தத்துவங்களைவிலக் "கி இருபத்தாறுவதாகிய பரமாத்துமா"நானே" என்கிற நிச்சய "த்தினாலே ஜீவன் முக்தனாகிறான்."

ஷை உபநிஷத்-உ-ல், $ "எப்போதும் பிரகாசித்துக்கொ "ண்டிருக்கிற ஸதாநந்தாநுபவத்திலேயே முழுகியிருக்கிற பிர் "ம்மவித்தானவன்பிர்ம்மமேயாகிறான்.——பேதவாஸனையைத்த

---

* सोहं चिन्मात्रमेवेतिचिन्तनं ध्यानमुच्यते । ——अहमेव परं ब्रह्म ब्रह्माहमिति संस्थितिः । समाधिस्सतु विज्ञेयस्सर्ववृत्तिविवर्जितः । ब्रह्म संपद्यते योगी नभूयस्संसृतिं व्रजेत् ॥

† इन्द्रियै र्बध्यते जीव अत्मावै न च बध्यते । ममत्वेनभवेज्जीवो निर्ममत्वेनकेवलः ॥

‡ उक्तविकल्पं सर्वमात्मैव । तल्लक्ष्यं शुद्धात्मदृष्टोपायःपश्यति । स एव ब्रह्मनिष्ठो भवति । जीवः पञ्चविंशकः । स्वकल्पितचतुर्विंशतितत्वं परित्यज्य षड्विंशःपरमात्माऽहमस्मीति निश्चयाज्जीवन्मुक्तो भवति ॥

$ सकृद्विभातसदानन्दानुभवैकगोचरोब्रह्मवित्तदेव भवति । ——

"ஸ்ளிச்சுத்தமான அத்துவைதபிர்ம்மம் "நான்" என்றிருக்கவே "ண்டியது.—பிரபஞ்சவாஸனையற்றவனாய், ஸகலத்தையுமாத் "துமாவாய்ப் பார்க்கிறவனாய், அகங்காரத்தைத்தள்ளினவனாய், "நானே" பிர்ம்மமென்று சிந்தித்துக்கொண்டு இந்தப்பிரபஞ்ச "மெல்லாமாத்துமாவென்றுபாவிக்கிறவன் கிருதகிருத்தியனாகி "றான் (மோக்ஷமடைகிறான்).—ஸகலமானபரிபூர்ணஞானத் "தினாலேயும் உந்மநீயவஸ்தை (மனது சலநமற்றிருத்தலல்லது "மனோநாசம்)யினாலேயும் பிர்ம்மத்திலைக்கியமுண்டாகிறது."

ஷௌபநிஷத் ௬-௧-ல், * "அந்தமனோநாசத்திற்குப்பிறகு "நித்தியசுத்தபரமாத்துமா "நானே" என்று தத்துவமஸிவாக்கி "யோபதேசத்தினாலேயும் "நீயே நான் நானே நீ" என்று தார "கோபதேசமார்க்கத்தினாலேயு மகண்டாநந்தபூர்ணனாகிறான். "அவன்செய்யவேண்டியதைச்செய்தவனாகிறான்."

ஸ்கந்தோபநிஷத்தில், † "அவனே பரபிர்ம்மம். அந்தபிர்ம் "மமே நான் ஸந்தேகமில்லை. ஜீவனே சிவன். சிவனே ஜீவன். "அந்தஜீவன் சிவன்தான். உமியினாற்சூழப்பட்டிருக்கிறபொழுது "நெல்லாயிருக்கிறது. உமியற்றதானால் அது அரிசியாயிருக்கிறது. "அப்படித்தான்ஜீவனுங்கட்டுப்பட்டிருக்கிறான். கருமநாசமானா "லெப்போதுஞ் சிவனாயிருக்கிறான். கருமபாசத்தினாற் கட்டுப் "பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிருக்கிறான். பாசத்திலிருந்து "விடுபட்டபொழுது சிவனாயிருக்கிறான்."

---

शुद्धाद्वैतब्रह्माहमस्मीति भिदागन्धं निरस्य ——विगतप्रपञ्चगन्धः सर्वजगदात्मत्वेन पश्यंस्त्यक्ताहङ्कारो ब्रह्माहमस्मीति चिन्तयन्निदं सर्वं यदयमत्मेति भावयन् कृतकृत्यो भवति । ——सर्वपरिपूर्णज्ञानेनोन्मन्यवस्थावशेन ब्रह्मैक्यं भवति ॥

* तदनु नित्यशुद्धपरमात्माहमेवे तितत्वमसीत्युपदेशेन त्वमेवाहमहमेवत्वमिति तारकयोगमार्गेणाखण्डानन्दपूर्णः कृतकृत्यो भवति ॥

† सएव हि परं ब्रह्म तद्ब्रह्माहं नसंशयः । जीवश्शिवश्शिवोजीवस्सजीवः केवलश्शिवः । तुषेण बद्धोव्रीहिस्स्यात्तुषाभावेतु तण्डुलः । एवं बद्धस्तथाजीवः कर्मनाशे सदाशिवः । पाशबद्धस्तथाजीवः पाशमुक्तस्सदाशिवः ॥

மஹாநாராயணோபநிஷத்-ஙட-ல், * "செம்பருத்திப்பூவினு "டைய ஸமீபத்திலிருக்கிற சுத்தமானஸ்படிகமானது இரக்தவர் "ணமாயெப்படிக்காணப்படுகிறதோ, அதில்லாதபோது சுத்தஸ் "படிகமாயெப்படிவிளங்கிறதோ அப்படி, மாயோபாதியினுற் "குணத்தோடுகூடியதாய்க்கொண்டு வெவ்வேறுய்க்காணுதல் மு "தலியன விளங்கிறது. உபாதி நசித்தாற் குணம், அவயவம் முத "லியன வில்லாமையாய் விளங்கிறது."

ஷை உபநிஷத்-கூ-ல், † "நீ பிர்ம்மமாயிருக்கிறுய். நான் "பிர்ம்மமாயிருக்கிறேன். நம்மிருவர்களுக்குட்பேதமில்லை. நீயே "நான் நானே நீ."

ஷை உபநிஷத்-அ-ல், ‡ "சுத்தஞாநசுவரூபமாயுமாநந்தசு "வரூபமாயுமழிவற்றசுவரூபமாயும் நிரதிசயாநந்ததேஜோராசி "யாகாரமாயுமானவனுய்க் கொண்டு மஹாவாக்கியார்த்தத்தைஸ் "மரித்துக்கொண்டவனுய் "நான்பிர்ம்மமாயிருக்கிறேன், நானு "யுமிருக்கிறேன், பிர்ம்மமாயுமிருக்கிறேன், யார் நானுகவிருக்கி "றேனே அப்படிப்பட்டநான் பிர்ம்மமாயிருக்கிறேன், நானே "நான்" என்று என்னை ஹோமஞ்செய்கிறேன். "நான்"பிர்ம்ம "மாயிருக்கிறேனென்கிறபாவனையினுலே பரமதேஜஸாகிறநதிப் "பிரவாஹமானது பரமதேஜஸாகிறஸமுத்திரத்திலெப் படிப்பிர "வேசிக்கிறதோ, பரமதேஜஸாகிறஸமுத்திரத்தினலைகள் பரம "தேஜஸாகிறஸமுத்திரத்திலெப்படிப்பிரவேசிக்கின்றனவோ அ

---

* यथा जपाकुसुमसान्निध्या द्रक्तस्पटिकप्रतीतिः । तदभावे शुद्धस्पटिकप्रतीतिः । ब्रह्मणोऽपि मायोपाधिवशात् सगुणपरिच्छिन्नादिप्रतीतिः । उपाधिविलया न्निर्गुणनिरवयवादिप्रतीतिः ।

† त्वं ब्रह्मासि अहं ब्रह्मास्मि आवयो रन्तरं न विद्यते त्वमेवाहमहमेवत्वम् ॥

‡ शुद्धबोधानन्दमयामृतनिरतिशयानन्दतेजोराश्याकारो भूत्वा महावाक्यार्थ मनुस्मरन् ब्रह्माहमस्मि । अहमस्मि । ब्रह्माहमस्मि । योऽहमस्मि ब्रह्माहमस्मि । अहमेवाहं मां जुहोमि स्वाहा । अहं ब्रह्मेति भावनया यथा परम तेजोमहानदी प्रवाह परमतेजःपारेवारे प्रविशति । यथा परमतेजः पारावार तरङ्गाः परमतेजः पारावारे प्रविशंति । तथैव सच्चिदानन्दात्मोपासक-

"ப்படியே ஸச்சிதாநந்தாத்துமாவை யுபாஸிக்கிறவன் ஸகலபரி "பூர்ணுத்துவைதபரமாநந்தலக்ஷணபரபிர்ம்மமாகிற நாராயண "ஞகியவென்னிடத்தில் "நான்ஸச்சிதாநந்தாத்துமா, பிறப்பற் "றவன், பூர்ணுயிருக்கிறேன்" என்று ப்பிரவேசிக்கிருன்.— "ஆகையினுலே, நிரதிசயாத்துவைத பரமாநந்தலக்ஷண பரபிர் "ம்மமாகிருன்."

இராமரஹஸியோபநிஷத்-ரு-ல், * "இராமமந்திரங்களுடை "யஆவர்த்தி (பின்னும்பின்னும்நிணைத்தல்) யைச்செய்கிறவன் இ "ராமசந்திரனுகிருன்.——"நான் இராமனுயிருக்கிறேன்" என் "றெப்போதும் யார்வாஸ்தவமாகவேசொல்லிக்கொண்டிருக்கிரு "ர்களோ அவர்கள் ஸம்ஸாரிகளல்லவென்பது நிச்சயம். அவர் "கள், இராமனே ஸந்தேகமில்லை."

இராமோத்தரதாபிநீயுபநிஷத்-ரு-ல், † "சித்சுவரூபமாகி "ய இராமசந்திரனென்பவர் யாரோ அவர் ஸத்தாகிற பரபிர்ம்ம "மே. அவரே "நான்" ஓம், அந்தஇராமசந்திரனவர் பரம் "ஜியோதிரஸம். ஓம். அவர் "நானே" என்றிப்படி மனதினு "லே ஆத்துமாவைக்கிரஹித்து பிர்ம்மத்துடன் சேர்க்கவேண்டி "யது. எவர்களுண்மையாய் "நான் எப்போதும் இராமனுயிரு "க்கிறேன்" என்று எவர்கள் சொல்லுகிருர்களோ அவர்கள் "ஸம்ஸாரிகளல்லவென்பது நிச்சயம். இராமனேஸந்தேகமில்லை. "(இந்தஉபநிஷத்துக்களில் இராமனென்கிறபெயரினுற் பிர்ம்ம "மேதான் சொல்லப்படுகிறது).

---

स्सर्वपरिपूर्णाद्वैतपरमानन्दलक्षणपरब्रह्मणि नारायणे मयि सच्चिदानन्दात्मको ऽहमजोहं परिपूर्णोह मस्मीति प्रविवेश । ——तस्मान्निरतिशयाद्वैत परमानन्दलक्षण परंब्रह्म भवति ॥

* राममंत्राणां कृतपुरश्चरणः रामचन्द्रो भवति । ——सदा रामोह मस्मीति तत्वतः प्रवदन्तिये । न ते संसारिणो नूनं रामएव न संशयः॥

† तत्सद्यत्परंब्रह्म रामचन्द्र श्चिदात्मकः । सोऽहमोन्तद्रामभद्रपरं ज्योतीरसो हमोमित्यात्मान मादाय मनसा ब्रह्मणैकी कुर्यात् । सदा रामोह मस्मीति तत्वतः प्रवदन्तिये । न ते संसारिणो नूनं रामएव न संशयः ॥

சாண்டில்லியோபநிஷத்-க-கஉ-ல், * "ஸமாதி யாது? திரு "புடி(பார்க்கிறவன், பார்வை, பார்க்கப்படும் வஸ்துவென்ற மூன் "றுவேற்றுமை) யற்றதாயும் பரமாநந்தசுவரூபமாயும் சுத்தசை "தந்நியசுவரூபமாயுமிருக்கிற ஜீவாத்துமபரமாத்துமாக்களுடை "ய ஐக்கியாவஸ்தைதான் ஸமாதி."

பைங்களோபநிஷத்-ச-ல், † "ஹிருதயத்தை நிர்மலமாய்ச் "செய்துகொண்டு அநாமயத்தைச் (தோஷமற்றபிர்ம்மத்தை) சி "ந்தித்து "நான்சிரேஷ்டமாயும் ஸகலமுமாயுமிருக்கிறேன்" எ "ன்றுபார்ப்பதே சிரேஷ்டமானசுகம். ஜலத்துடன்ஜலமும் பாலு "டன்பாலும் நெய்யுடன்நெய்யுஞ் சேர்க்கப்பட்டதுபோல (அ "வைகள் வேற்றுமையற்றுப்போவதுபோல) ஜீவாத்துமபரமா "த்துமாபேதமற்றதாகிறது.——ஆத்துமாவானவன் ஆகாசத் "தைப்போற்காணப்படாதஆகாரமுடையவன். (ஆனதால்)அந்த "ஆத்துமா, வாயுவைப்போற்காணப்படுகிறதில்லை. அவன் வெளி "யிலுமுள்ளேயுமிருந்தாலு மசைவற்றவாத்துமாவாயிருக்கிறான். "ஞானமாகிற வெளிச்சத்தினுலுள்ளேயிருக்கிற ஆத்துமாபார் "க்கிறான். ஞானியானவனெந்தெந்தவிடத்திலெவ்விதமாய் ம "ரணமடைந்தாலும் (குடம்முதலிய) எல்லாவஸ்துக்களிலுமிரு "க்கிற ஆகாசம்போல் (குடம்முதலியவஸ்துக்களெல்லாம் நசித் "தாலதிலுள்ள ஆகாசம் மஹாகாசத்தில் லயமடைவதுபோல்) "அவ்வவ்விடத்தில் லயமடைகிறான். வாஸ்தவமாய்க் கடாகாச "ம்போலாத்துமா லயமடைகிறதாகவறியத்தக்கது.—— எப்

---

* अथ समाधिः । जीवात्मपरमात्मैक्यावस्थात्रिपुटिरहिता परमानंदस्वरूपाशुद्धचैतन्यात्मिका भवति ॥

† हृदयं निर्मलं कृत्वा चिन्तयित्वाप्यनामयम् । अहमेव परं सर्वमिति पश्येत्परं सुखम् । यथा जले जलं क्षिप्तं क्षीरं क्षीरे घृतं घृते । अविशेषो भवेत्तद्वज्जीवात्मपरमात्मनोः । ——आकाशवत्सूक्ष्मशरीरआत्मा न दृश्यते वायुवदन्तरात्मा । स बाह्याभ्यन्तरनिश्चलात्मा ज्ञानोल्कया पश्यति चान्तरात्मा । यत्र यत्र मृतो ज्ञानी येन वा केन मृत्युना । यथा सर्वगतं व्योम तत्र तत्र लयं गतः । घटाकाशमिवात्मानं विलयं वेत्ति तत्वतः । ——

"போதும் "நானே" பிர்ம்மமென்றிருக்கிற இருப்பானது மஹா
"த்துமாக்களுக்கு மோக்ஷஹேதுவாயிருக்கிறது.—— தான்பிர்
"ம்மமென்றறியாதவனுக்கு மோக்ஷமுண்டாகிறதில்லை."

மஹோபநிஷத்-ச-ல், * "எண்ணத்தினுலாவது உறுதியான
"நிச்சயத்தினுலாவது தான்பிர்ம்மமென்றே ரண்ணுதவனுடைய
"மனது பந்தத்தையடைகிறது. எண்ணத்தினுலாவது உறுதியா
"ன நிச்சயத்தினுலாவது, தான் பிர்ம்மமென்றிருக்கிறவனுடை
"யமனது பந்தத்திலிருந்து விடுபடுகிறது."

ஷெ உபநிஷத்-சு ல், † "இந்தஸகலப்பிரபஞ்சமும் பிர்ம்ம
"மே. ஓ! பாபமற்றவனே! "நான்" வேறு இந்தப்பிரபஞ்சம்
"வேறு யென்றப்பிராந்தியைத்தள்ளிவிடு."

யோகசிகோபநிஷத்-க-ல், ‡ "பிரிவற்றதாயுமழுக்கற்றதாயு
"ஞ்சாந்தமாயும், ஸகலத்திற்கும் மேற்பட்டதாயும், துன்பமற்
"றதாயுமிருக்கிற அந்தப்பிர்ம்மமே ஜீவரூபத்தினுலே புண்ணிய
"பாபபலன்களினுற் சூழப்பட்டதாகவிருக்கிறது.——தேகமிரு
"க்கையிலெயே பிர்ம்மத்தன்மையை யெப்போதடைகிருனே அ
"ப்போது ஜலத்துடன்சேர்க்கப்பட்ட உப்புப்போல் வேற்றுமை
"யற்றவனுய் முக்தனென்றுசொல்லப்படுகிருன்.——ஓ! பிராம்
"மணுேத்தமா! க்ஷேத்திரக்ஞன் (ஜீவன்) பரமாத்துமா இவ்விரு
"வருக்குமெப்போதைக்கியமுண்டாகிறதோ அந்தவைக்கியமெ
"ப்போதுறுதிப்படுகிறதோ அப்போது சித்தம் லயமடைகிறது.

---

अहं ब्रह्मेति नियतं मोक्षहेतु र्महात्मनाम् । ——नाहं ब्रह्मेति जानाति तस्य मुक्ति र्न जायते ॥

* नाहं ब्रह्मेति संकल्पात्सुदृढाद्बध्यते मनः । सर्वं ब्रह्मेति सङ्कल्पात्सुदृढान्मुच्यते मनः ॥

† समस्तं खल्विदं ब्रह्म सर्वमात्मेद माततम् । अह मन्यदिदं चान्यदिति भ्रान्तिं त्यजानघ ॥

‡ निष्कळं निर्मलं शान्तं सर्वातीतं निरामयम् । तदेव जीवरूपेण पुण्यपापफलैर्वृतम् । ——देहे ब्रह्मत्व मायाते जलानां सैन्धवं यथा । अनन्यतां सदा याति तदा मुक्त स्स उच्यते । ——क्षेत्रज्ञपरमात्मा च तयो रैक्यं यदा भवेत् । तदैक्ये साधिते ब्रह्मन् चित्तं याति विलीनताम् ।

"..யயோகமுறுதிப்படுமானல் (பிராணன்முதலிய) வாயுவானது "அசைவற்றதாகிறது. தன்னுடைய ஆத்துமாநந்தபரமபதமா "கிற சுகமானது (சித்த) லயத்தினலடையப்படுகிறது."

யோகசிகோபநிஷத்-௪-ல், * "சைதந்நியம் ஒரேரூபமான "தாற் பேதமானதொருபோதும் யுக்தமல்ல. கயிற்றிற்பாம்பெ "ன்கிறதன்மைபோல் ஜீவத்தன்மையை யறியவேண்டியது.—— "ஜீவாத்துமபரமாத்துமாக்களுக்குள் அற்பமேனும் பேதத்தை "யெவன் நினைக்கிறனே அந்தமூடாத்துமாவுக்கே பயமுண்டெ "ன்று சொல்லப்படுகிறது.——மண்ணிற்குடமென்கிற பிராந் "தியுங் கிளிஞ்சிலில் வெள்ளியென்கிற நினைப்புமெப்படியோ அ "ப்படி பிர்ம்மத்தில்ஜீவத்தன்மை. அதையறிந்தால் (ஜீவத்தன் "மை) நசித்துப்போகிறது. மண்ணிற்குடமென்கிறபெயரும் த "ங்கத்திற் குண்டலமென்கிறபெயரும் கிளிஞ்சிலில் வெள்ளியெ "ன்கிறப்பிரஸித்தியுமெப்படியோவப்படி பிர்ம்மத்தில் ஜீவனென் "கிற சப்தமுண்டாயிருக்கிறது."

ஸந்நியாஸோபநிஷத்-உ-ல், † "நான், மநநம் ஆநந்தமிவை "களைவிட்டவனுய்ச் சித்சுவரூபமாத்திரமாயிருக்கிறேன். அறிய "வேண்டியதென்பதாகிய மலத்தைத்தள்ளி மனதைமுழுதும்நா "சஞ்செய்து ஆசையாகிறபாசத்தைவெட்டி சிரேஷ்டமான சிந் "மாத்திரமாகவே நானிருக்கிறேன்."

---

पवनः स्थैर्यमायाते लययोगो दये सति । लयात्संप्राप्यते सौख्यं स्वात्मानन्दं परं पदम् ॥

* चैतन्यस्यैकरूपत्वाद्भेदो युक्तो न कर्हिचित् । जीवत्वं च तथा ज्ञेयं रज्वां सर्पग्रहो यथा । ——स्वल्प मप्यन्तरं कृत्वा जीवात्मपरमात्मनोः । य स्तिष्ठति स मूढात्मा भयं तस्यापि भाषितम् । ——यद्वन्मृदि घटभ्रान्ति श्शुक्तौ हि रजतस्थितिः । तद्वद्ब्रह्मणि जीवत्वं वीक्षमाणे विनश्यति । यथा मृदि घटो नाम कनके कुण्डलाभिधा । शुक्तौ हि रजतख्याति र्जीवशब्द स्तथा परे ॥

† निरस्तमननानन्द स्संविन्मात्रपरो स्म्यहम् । मलंसंवेद्य मुत्सृज्य मनो निर्मूलयन् परम् । आशापाशमलं छित्वा संविन्मात्रपरो स्म्यहम् ॥

பரமஹம்ஸபரிவிராஜகோபநிஷத்தில், * "நான் பிர்ம்மமா "யிருக்கிறேன்" என்று தத்துவமஸி வாக்கியார்த்தசுவரூபத்தை "த்தியாநஞ்செய்துகொண்டவனாய் —— தேகம்மெலிந்தவனாய் "நான்பிர்ம்மமாயிருக்கிறேன்" என்று பாவனை செய்யவேண்டி "யது.——ஸச்சிதாநந்தமாயும் ஸம்பூர்ணாநந்தமாயும் ஒன்றாயும் "ஞாநமே சுவரூபமாயுமிருக்கிற பிர்ம்மமே நானென்றெப்போ "தும் பிர்ம்மப் பிரணவத்தையநுஸந்தாநஞ்செய்கிறதனாலே யெ "வன் கிருதகிருத்தியனாகிறானோ அவன் பரமஹம்ஸர்களுக்குள் "சிரேஷ்டனாகவிருக்கிறான்."

அந்நபூர்ணோபநிஷத்-சு-ல், † "முனியானவன் "நான்" ஒன் "றான பிர்ம்மமாயிருக்கிறேன் என்பதனாற் கிருதகிருத்தியனாகி "றான்."

ஷை-உபநிஷத்-ரு-ல், ‡ "சிந்மாத்திரமாயுமழிவற்றதா "யுஞ் சாந்தமாயு மொன்றாயுமிருக்கிற பிர்ம்மமமே "நான்" "வேறல்ல. —— ஸகலமும் பிர்ம்மமேயென்று பாவனை "செய்கிற புருஷன் பிர்ம்மமே.——ஒன்றானதாயு மாதியந்த "மற்றதாயுஞ் சிந்மாத்திரமாயுஞ் சுத்தமாயும் வியாபித்த "தாயு மாகாசத்தைவிட மிகவும் சூக்ஷ்மமாயுமிருக்கிற அந்த "பிர்ம்மம் "நானாயிருக்கிறேன்" ஸம்சயமில்லை. திக்குக் "காலம் முதலியவைகளாற் பகுக்கப்படாததாயுஞ் சுத்தமாயும் "எப்போதும் பிரகாசசுவரூபமாயு மெங்கும் நிறைந்ததாயும் "ஸகலார்த்தசுவரூபமாயு மொரே அர்த்தமாயுஞ் சிந்மாத்திரமா

---

* ब्रह्माह मस्मीति तत्वमस्यादिवाक्यार्थस्वरूपानुसंधानं कुर्वन् । ——कृशी भूत्वा ब्रह्माह मस्मीति भावयन् । ——सच्चिदानन्दाद्वय-चिद्घन रसपूर्णानन्दैकबोधोब्रह्मैवाहमस्मीत्यनवरतं ब्रह्म प्रणवानुसंधानेन यः कृतकृत्यो भवति स परमहंस परिव्राट् ॥

† एकं ब्रह्माह मस्मीति कृतकृत्यो भवेन्मुनिः ॥

‡ चिन्मात्र मक्षयं शान्त मेकं ब्रह्मास्मि नेतरत् । ——ब्रह्मैव स-र्वमित्येव भाविते ब्रह्म वै पुमान् । ——एकमाद्यन्तरहितं चिन्मात्रममलं त-तम् । खादप्यतितरं सूक्ष्मं तद्ब्रह्मास्मि न संशयः । दिक्कालाद्यनवच्छिन्नं स्व-च्छं नित्योदितं ततम् । सर्वार्थमयमेकार्थं चिन्मात्र ममलं भव । ——न ब-

"யு மழுக்கற்றவனுயு மாகக்கடவாய்.——"நான் பத்தனுமல்ல
"முக்தனுமல்ல." துன்பமற்றதாகிய பிர்ம்மமாயிருக்கிறேன்.
"(நான்) இரண்டாவதென்கிற பாவனையற்றவன். ஸச்சிதாநந்த
"லக்ஷணனுயிருக்கிறேனென்று பிரயத்திநத்தினுற்பாவனைசெய்,
"ஜீவன்முக்தனுவாய்.——ஆகாசமானதெப்படிக் கடாகாசமெ
"ன்றும் மஹாகாசமென்றுஞ் சொல்லப்படுகிறதோ அப்படியாத்
"துமாவானதுப் பிராந்தர்களால் ஜீவேசுவரர்களாக இரண்டுவி
"தமாய்ச் சொல்லப்படுகிறது. யோகியினுடைய மனதிலெப்போ
"தெவ்விடத்திலுமிடைவிடாததாக சைதந்நியம் விளங்கிறதோ
"அப்போதவன், அதாகவேயாகிறுன். ஸகலபூதங்களையுந்தானு
"கவுந் தன்னை ஸகலபூதங்களாகவுமெப்போது பார்க்கிறுனே
"அப்போது பிர்ம்மமாகிறுன். ஸமாதியிலிருக்கிறவனெப்போ
"து பூதங்களைப் பலவாகப் பார்க்கிறதில்லையோ அப்போதவன்
"பிர்ம்மத்தோடொன்றுகவேயாய்விடுகிறுன்.——"நான்" பாப
"மற்றவன், ஜரையற்றவன், ஆசையற்றவன், பிரிவற்றவன், வா
"ஸனையற்றவன், சிதாகாசமாயிருக்கிறவன் என்றறிந்து துக்கப்
"படுகிறதில்லை. அகங்காரமில்லாதவன், சுத்தன், ஞாநி, பிறப்
"பற்றவன், சாந்தன், பொருமையுடையவன், ஸமமாய்விளங்கிற
"வன் என்றறிந்து துக்கப்படுகிறதில்லை. திருணங்களின் நுனி
"களிலேயு மாகாசத்திலேயும் சூரியனிலேயும் மனிதர்களிலே
"யும் நாகங்களிலேயும் தேவதைகளிலேயும் எவனிருக்கிறுனே

द्धो स्मि न मुक्तोस्मि ब्रह्मैवास्मि निरामयम् । द्वैतभावविमुक्तोस्मि सच्चिदानन्दलक्षणः । एवं भावय यत्नेन जीवन्मुक्तो भविष्यसि । ——यथा काशो घटाकाशो महाकाश इतीरितः । तथा भ्रान्तै र्द्विधाप्रोक्तो ह्यात्माजीवे श्वरात्मना । यदा मनसि चैतन्यं भाति सर्वत्रगं सदा । योगिनो व्यवधानेन तदा संपद्यते स्वयम् । यदा सर्वाणि भूतानि स्वात्मन्येवहि पश्यति । सर्वभूतेषु चात्मानं ब्रह्म संपद्यते तदा । यदा सर्वाणि भूतानि समाधिस्थो न पश्यति । एकीभूतः परेणासौ तदा भवति केवलः । ——अलेपकोह मजरो नीराग श्शान्तवासनः । निरंशोस्मि चिदाकाश मिति मत्वा न शोचति । अहं मत्या विरहित श्शुद्धो बुद्धोऽजरोऽमरः । शान्त स्सम स्समाभास इति मत्वा न शोचति । तृणाग्रेष्वंबरे भानौ नरनागामरेषु च । य स्तिष्ठति तदेवाह मिति मत्वा न

"அவனே "நான்" என்றறிந்து துக்கப்படுகிறதில்லை. ஸகல "வஸ்துக்களிலிருந்தும் பாவனையை (எண்ணத்தையல்லது நினை "வை) விட்டு வெளிப்பட்டுமிஞ்சுகிறதெதுவோ அந்தவொன்று "ன பிர்ம்மம் "நானாயிருக்கிறேன்" என்று பாவனை செய்."

அக்ஷியுபநிஷத்தில், * "அத்துவைதத்தில் நிலையையடைந்த "பொழுது, துவைதம் நசித்துப்போகிறது. துரீயாவஸ்தை (ஸத் "துவாபத்தி) என்கிற நான்காவது பூமியையடைந்தவர்களிவ்வு "லகத்தை சுவப்நமாகப் பார்க்கிறார்கள்.——அவித்தையாகிற "இருளைக்கடந்ததாயும் ஸகலவிதத்தோற்றமுமற்றதாயு மாநந்த "மாயு மழுக்கற்றதாயுஞ் சுத்தமாயும் மனது வாக்குக்களுக் "கெட்டாததாயும் பிரக்ஞாநகநமாயு மாநந்தமாயுமிருக்கிற பிர் "ம்மம்"நானாயிருக்கிறேன்"என்று பாவனைசெய்யவேண்டியது."

அத்தியாத்துமோபநிஷத்தில், † "ஓ! முனியே! கடாகா "சத்தை மஹாகாசத்திற்போல ஆத்துமாவைப் பரமாத்துமா "வில்லயஞ்செய்து அகண்டஞாநத்தினலெப்போதுந்தூஷ்ணீம் "(இந்திரியமனோவியாபாரமற்றிருத்தல்) நிலைமையையடைந் "திரு.——ஓ! பாபமற்றவனே! கண்ணாடிக்குட் காணப்படும் "பட்டணம்போலிந்த ஜகத்தினுடைய தோற்றமானதெவ்விடத் "திலோ (எந்த பிர்ம்மத்தினிடத்திலோ) அந்த பிர்ம்மம் "நா "னே" என்றறிந்து மோக்ஷமடையக்கடவாய்.——பிரும்மாமு "தல் சிறுபூச்சிவரையிலுள்ள உபாதிகள் (பலவிதரூபங்கள்)

---

शोचति । भावनां सर्वभावेभ्य स्समुत्सृज्य समुत्थितः । अवशिष्टं परं ब्रह्म केवलो स्मीति भावय ॥ இந்த வாக்கியங்களிலநேகம் தரிசநோபநிஷத். கo-லும்காண்க.

* अद्वैते स्थैर्यमायाते द्वैतेच प्रशमं गते । पश्यन्ति स्वप्नवल्लोकं चतुर्थीं भूमिकां गताः । ——अविद्यातिमिरातीतं सर्वाभासविवर्जितम् । आनन्द ममलं शुद्धं मनोवाचा मगोचरम् । प्रज्ञानघन मानन्दं ब्रह्मास्मीति विभावयेत् ॥

† घटाकाशं महाकाश इवात्मानं परात्मनि । विलाप्याखण्डभावेन तूष्णीं भव सदा मुने । ——यत्रैषजगदाभासो दर्पणान्तः पुरं यथा । तद्ब्रह्माह मिति ज्ञात्वा कृतकृत्यो भवानघ । ——ब्रह्मादि स्तंबपर्यंतं मृषा मा-

"பொய்யே. அதற்குப்பிறகு ஒரே சுவரூபமாயிருக்கிற பூர்ண "மான தன்னுடைய ஆத்துமாவைப் பார்க்கவேண்டியது. (அப் "படிப் பார்த்தால்) தானேபிரும்மா, தானேவிஷ்ணு, தானே இந் "திரன், தானே சிவன், இந்த ஸகலஜகத்தும் தானே, தன்னைக் "காட்டிலும் வேருயொன்றுமில்லை.——"நானே பிர்ம்மம்" என் "கிற விக்ஞானத்தினுலே நூறுகோடி கற்பங்களிற் சம்பாதிக்கப் "பட்டிருக்கிற ஸஞ்சிதகருமங்கள் நசித்துப்போகின்றன. (எப் "படிப்போலெனில்)சுவப்நகருமமானது விழித்தவுடன் நசித்து "ப்போகிறதுபோல."

ஆத்துமோபநிஷத்தில், * "(இது)பார்க்கத்தகுந்த வஸ்து, "பார்க்கத்தகாதவஸ்துவென்கிறஅறிவைவிட்டு ஆத்துமமாத்திர "மாயெவனிருக்கிருனே உத்தமமானவிந்த பிர்ம்மவித்தானவன் "ஸாக்ஷாத் சிவனே. ஜீவித்துக்கொண்டிருந்தாலும் எப்போது "மவன் முக்தனே. அந்த பிர்ம்மவித்தானவன் கிருதார்த்தனே. "உபாதிநாசத்தினுற் பிர்ம்மமாகவேயிருக்கிறுன். (ஜீவன்முக் "தனுக) இருந்துகொண்டு இரண்டாவதற்ற பிர்ம்மத்தையடை "கிறுன். கூத்தாடுகிறவன் வேஷம்போட்டுக்கொண்டிருந்தா "லும்வேஷம்போடாமலிருந்தாலுமவனெப்படி(முன்போலவே) "புருஷனே அப்படி சிரேஷ்டனை பிர்ம்மவித்தானவனெப்போ "தும் பிர்ம்மத்தைக்காட்டிலும் வேறல்ல. கடாகாசமானது கட "முடைந்ததனுலே சுவயமாகாசமாகவேயிருக்கிறதுபோல உபா "திநாசத்தினுலே பிர்ம்மவித்தானவன் சுவயம்பிர்ம்மமாகவேயி

---

त्राउपाधयः । ततः पूर्णं स्वमात्मानं पश्ये देकात्मनास्थितम् । स्वयं ब्रह्मा- स्वयं विष्णुः स्वय मिन्द्रः स्वयं शिवः । स्वयं विश्व मिदं सर्वं स्वस्मादन्य- न्न किञ्चन । ——अहं ब्रह्मेति विज्ञानात् कल्पकोटिशतार्जितम् । सञ्चितं विलयं याति प्रबोधात् स्वप्नकर्मवत् ॥

* लक्ष्यालक्ष्यगतिं त्यक्त्वा य स्तिष्ठेत् केवलात्मना । शिव एव स्व- यं साक्षा दयं ब्रह्म विदुत्तमः । जीवन्नेव सदा मुक्तः कृतार्थो ब्रह्मवित्तमः । उपाधिनाशा द्ब्रह्मैव सन्ब्रह्माप्येति निर्द्वयम् । शैलूषो वेषसद्भावा भावयोश्च यथा पुमान् । तथैव ब्रह्मविच्छ्रेष्ठ स्सदा ब्रह्मैव नापरः । घटे नष्टे यथा व्यो म व्योमैव भवति स्वयम् । तथैवोपाधिविलये ब्रह्मैव ब्रह्मवित्स्वयम् । क्षी-

"ருக்கிறான். பாலிற்பாலையு மெண்ணெயிலெண்ணெயையும் ஜலத்
"தில் ஜலத்தையுங் கலந்தாலெப்படி வேற்றுமையற்றுப்போ
"கிறதோ அப்படியாத்துமவித்தான முனியானவன் ஆத்துமாவிற்
"கலந்துபோகிறான்.——வஸ்துவிருக்கிறதென்கிற நம்பிக்கை
"யெதுவோ இல்லையென்கிற நம்பிக்கையெதுவோ இவ்விரண்
"டும் புத்தியின் குணமேயன்றி (ஆத்துமாவாகிற) வஸ்துவுக்கில்
"லை. ஆகையால், அவைகளும் பந்தமோக்ஷங்களும் மாயையி
"னாற் கற்பிக்கப்பட்டவை, ஆத்துமாவுக்கில்லை. பிரிவற்றதாயுங்
"கிரியையற்றதாயுஞ் சாந்தமாயும் நிர்தோஷமாயும் பற்றற்றதா
"யு மிரண்டாவதற்றதாயு மாகாசத்தைப்போலுமிருக்கிற ஆத்து
"மாவிடத்திற் கற்பனையேது? (ஆத்துமாவுக்கு) நாசமுமில்லை,
"உற்பத்தியுமில்லை. (ஆத்துமா) பத்தனுமல்ல, ஸாதநஞ்செய்
"கிறவனுமல்ல, முமுக்ஷுவுமல்ல, முக்தனுமல்ல. இதுதான்
"வாஸ்தவமானது."

பாசுபதபிர்ம்மோபநிஷத்தில், * "பரமாத்துமஞானியான
"வன் ஜகத்தை ஜீவன் முதலியரூபமாய்ப் பார்த்தாலுமதைச்
"சித்ரூபமான பிர்ம்மவஸ்துவென்று பார்க்கிறானேயன்றி வேறு
"விதமாய்ப் பார்க்கிறதில்லை.——பிர்ம்மஞானியானவன் தோற்ற
"ப்பட்ட ஸகலஜகத்தையும் பார்த்துக்கொண்டிருந்தாலுந் தன்
"னைக்காட்டிலு மந்நியமாகப் பார்க்கிறதில்லை."

---

रं क्षीरे यथा क्षिप्तं तैलं तैले जलं जले । संयुक्तमेकतां याति तथात्मन्या-
त्मविन्मुनिः । ——अस्तीति प्रत्ययो यश्च यश्च नास्तीति वस्तुनि । बुद्धेरेव
गुणावेतौ न तु नित्यस्य वस्तुनः । अत स्तौ मायया क्लृप्तौ बन्धमोक्षौ न
चात्मनि । निष्कळे निष्क्रिये शान्ते निरवद्ये निरञ्जने । अद्वितीये परे त-
त्वे व्योमवत्कल्पना कुतः । न निरोधो न चोत्पत्ति र्न बद्धो न च साधकः ।
न मुमुक्षु-र्न वै मुक्त इत्येषा परमार्थता । இந்த உபநிஷத் அர்த்தமுள்ள
வாக்கியங்களை, அமிருதபிந்தூபநிஷத்திலும், ஸ்காந்தம் ஸூதஸம்ஹிதை
பிர்ம்மகீதைஅத் -கஉ -லுங்காண்க.

* जगज्जीवादिरूपेण पश्यन्नपि परात्मवित् । न तत्पश्यति चिद्रूपं
ब्रह्म वस्त्वेव पश्यति । ——ब्रह्मविज्ञानसंपन्नः प्रतीत मखिलं जगत् ।
पश्यन्नपि सदा नैव पश्यति स्वात्मनः पृथक् ।

திருபுராதாபிந்நியுபநிஷத்-டு-ல், * "அந்த பிர்ம்மமானது "பிரிவற்றது, விகற்பமற்றது. அப்படிப்பட்ட பிர்ம்மம் "நா "னே" என்றறிந்து கிரமமாயந்த பிர்ம்மமேயாகிறான்.——ஞா "நநேத்திரத்தையடைந்து பிரிவற்றதாயு மசைவற்றதாயுஞ் சாந் "தமாயுமிருக்கிற மஹத்தானபரமபதமாகிறபிர்ம்மம் "நானே" "என்று ஸ்மரிக்கவேண்டியது."

கடோபநிஷத்தில், † "பிரத்தியகாத்துமாவாயும் அக்ஞாந "மாகிற மாயாசக்திக்கு ஸாக்ஷியாயுமிருக்கிறவனையறிந்தும் "நா "ன்பிர்ம்மமாயிருக்கிறேன்" என்றறிந்தும் தானே பிர்ம்மமாகி "றான்.—— இந்தபிர்ம்மத்தினிடத்தில், இந்தமஹாயதியானவன் "பேதமற்றதும் சிரேஷ்டமானதும் இரண்டாவதற்றதுமாகிய "தன்மையையடைகிறான். அதுவேபயமற்றது, மிகவும் கல்யா "ணமானது, சிரேஷ்டமானஅமிருதமானது, ஸத்தானசுவரூபம், "(தேசகாலவஸ்துக்களாகிற)மூன்றுகளினாற் பிரித்தறியக்கூடா "த சிரேஷ்டமானபரபிர்ம்மம். எப்போதெந்தமனிதனிதிலற்ப "மேனும் பேதத்தை (ஜீவன் ஈசுவரன் ஜகத்துயென்கிறவேற்று "மையை) யறிகிறானே, அப்போதவனுக்கு (ஜநநமரணாதி) பய "முண்டாகிறது. இதில் ஸந்தேகமில்லை."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், ‡ "ஆகாசத்திற் கடாகாசம் "மடாகாசமெனபேதமானதெப்படி கற்பிக்கப்பட்டிருக்கின்றன "வோ, அப்படிபிர்ம்மத்தினிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப் "பட்டிருக்கிறார்கள். வாஸ்தவத்திற் சிவனானவர் ஸாக்ஷாத்சித்

---

* तदेव निष्कळं ब्रह्म निर्विकल्पं निरञ्जनम् । तद्ब्रह्माह मिति ज्ञात्वा ब्रह्म संपद्यते क्रमात् । ——ज्ञाननेत्रं समाधाय सुमहत्परमं पदम् । निष्कळं निश्चलं शान्तं ब्रह्माह मिति संस्मरेत् ॥

† प्रत्यगात्मान मज्ञान मायाशक्तेश्च साक्षिणम् । ज्ञात्वा ब्रह्माहमस्मीति ब्रह्मैव भवति स्वयम् । निर्भेदं परमाद्वैतं विन्दते च महायतिः । तदेवाभय मत्यन्तं कल्याणं परमामृतम् । सद्रूपं परमं ब्रह्म त्रिपरिच्छेदवर्जितम् । यदा ह्येवैष एतस्मिन्नल्प मप्यन्तरं नरः । विजानाति तदा तस्य भयं स्या न्नात्र संशयः ॥

‡ घटाकाशमठाकाशौ यथाकाशप्रभेदतः । कल्पितौ परमौ जीवशिवरूपेण कल्पितौ । तत्वतश्च शिव स्साक्षा च्चिज्जीव श्च स्वत स्सदा । ——

"தேதான். ஜீவனுமெப்போதும் சுவயம் சித்துத்தான். இப்படிப்
"பட்டசுவரூபஞாநம் எந்தசிரேஷ்டமான யோகிக்கிருக்கிறதோ
"ஸம்பூர்ணசுவரூபனுயிருக்கிற அப்படிப்பட்டவனுக்கெவ்விடத்
"திலும்போகவேண்டுமென்பதில்லை.ஒன்ருயும்பூர்ணமாயுமிருக்கி
"றஆகாசமானதெவ்விடத்திற்கும்போகாததுபோற்ருன். தன்னு
"த்துமசுவரூபத்தைச் செவ்வையாயறிந்த ஞாநியானவனெப்
"போதும் (சுவர்க்கம் கைலாஸம் வைகுண்டம்முதலிய) எவ்விட
"த்திற்கும்போகிறதில்லை (என்ருல், எவ்விடத்தில்மரணமடை
"கிருனே அவ்விடத்திலேயே கடாகாசம் மஹாகாசத்திற்போல்
"அகண்டாகாரபிர்ம்மத்தில் லயித்துப்போகிருனென்பதுகருத்
"து).எந்தமுனியானவனந்தபிர்ம்மத்தையறிகிருனேஅவன் தன
"க்குள்ளேயே யிருக்கிறவும் ஸச்சிதாநந்தமாத்திரமுமான பிர்ம்
"மமாகவேயிருக்கிருன்."

தரிசநோபநிஷத்-அத்-சு-ல், * "ஓ! முனியே! பேதத்தை
"யுண்டுபண்ணுகிற அஞ்ஞாநமானது, ஞாநத்தினுடைய பலத்தி
"னுல் நஷ்டமாய்ப்போனுல், தனக்கும் பிர்ம்மத்திற்குமில்லாத
"பேதத்தையெவன்தான் உண்டுபண்ணிக்கொள்ளுவான்."

ஷை உபநிஷத்-அத்-கo-ல், † "ஆகாசமானது, கடாகாச
"மென்றும் மடாகாசமென்றுமெப்படிச் சொல்லப்படுகிறதோ,
"அப்படிஆத்துமா ஜீவனென்றும் ஈசுவரனென்றும் அஞ்ஞாநிக
"ளாற் சொல்லப்படுகிறது. "நான்தேகமுமல்ல பிராணனுமல்ல
"இந்திரியங்களுமல்ல மனதுமல்ல. "நானெப்போதும் ஸாக்ஷி
"ரூபனுயிருக்கிறேன். அதனுற் சிவனுயிருக்கிறேன்" என்கிற

---

एवं रूपपरिज्ञानं यस्यास्ति परयेगिनः । कुत्रचिद्गमनं नास्ति तस्य संपूर्ण रूपिणः । आकाश मेकं संपूर्णं कुत्रचिन्नैव गच्छति । स यो हवै तत्परमं ब्रह्म यो वेद वै मुनिः । ब्रह्मैव भवति स्वस्थ स्सच्चिदानन्दमात्रकः ॥ இந்த வாக்கியங்களை அந்நபூர்ணேபநிஷத்.டு-லும்காண்க.

* विभेदजनके ज्ञाने नष्टे ज्ञानबलान्मुने । आत्मनो ब्रह्मणो भेद मसन्तं कः करिष्यति । இந்த வாக்கியத்தை, விஷ்ணுபுராணம்-சு.எ-கூசு-லும் காண்க.

† यथाकाशो घटाकाशो मठाकाश इतीरितः । तथा भ्रान्तै र्द्विधाप्रोक्तो ह्यात्माजीवेश्वरात्मना । नाहं देहो न च प्राणो नेन्द्रियाणि मनो न हि । सदा साक्षिस्वरूपत्वा च्छिव एवा स्मि केवलः । इति धीर्या मुनि श्रे-

"புத்தியெதுண்டோ, ஓ! முனிசிரேஷ்டா! அதுஸமாதியென்று
"சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட "நான்" பிர்ம்மமேயன்றி
"ஸம்ஸாரியல்ல. என்னைக்காட்டிலும் வேறொன்றுமில்லை. ஸமு
"த்திரத்திலுண்டாகிற அலை நுரை முதலியன மறுபடி ஸமுத்
"திரத்திலேயே யெப்படி லயமடைகின்றனவோ அப்படிஜகத்
"தானதென்னிடத்திலேயே லயமடைகிறது."

தாரஸாரோபநிஷத்தில், * "பரமபுருஷனும் பழமையான
"வனும் புருஷோத்தமனும் நித்தியனும் சுத்தனும் ஞானசு
"வரூபனும் மோக்ஷசுவரூபனும் ஸத்தியசுவரூபனும் ஆநந்
"தசுவரூபனும் முடிவற்றவனு மிரண்டாவதற்றவனும் பரிபூ
"ர்ணனுமிருக்கிற பிர்ம்மமேநான்."

பஞ்சபிரும்மோபநிஷத்தில், † "எதனாலிந்தஸகலப்பிரபஞ்
"சமும் பிரகாசிக்கிறதோ, எதனிடத்திலிந்த ஸகலப்பிரபஞ்ச
"மும் லயமடைகிறதோ, அந்தபிர்ம்மமானது, சிரேஷ்டமாயும்,
"சாந்தமாயுமிருக்கிறது. பரமபதமாகிய அந்தபிர்ம்மம் "நானாக
"விருக்கிறேன்."

வராஹோபநிஷத்-உ-ல், ‡ "தன்னுடைய பூர்ணாத்துமா
"வைத்தவிர ஜகத்ஜீவன் ஈசுவரன்முதலியவர்களில்லை. அவர்க
"ளுக்குநான் விலக்ஷணனாயிருக்கிறேன். தன்னை பிர்ம்மசுவரூப
"மாய்ப்பார்க்கிறவன், பிர்ம்மமேயாகிறான்.——ஸகலமானஜீவர்
"களுடைய சுவரூபமோ, எப்போதும் சின்மாத்திரந்தான். கண்
"ணுக்குக்காணப்படுகிற குடம்போற் தேகாதிக்கூட்டங்களில்ல

---

ष सा समाधि रिहोच्यते । सोहं ब्रह्म न संसारी न मत्तो न्यः कदाचन। यथा फेनतरङ्गादि समुद्रादुत्थितं पुनः । समुद्रे लीयते तद्व ज्जगन्मय्यनुलीयते ।

* परमपुरुषः पुराणपुरुषोत्तमो नित्यशुद्धबुद्धमुक्तसत्यपरमानन्दाद्वयपरिपूर्णब्रह्मैवाहम् ॥

† येन प्रकाशते विश्वं यत्रैव प्रविलीयते । तद्ब्रह्म परमं शान्तं तद्ब्रह्मास्मि परं पदम् ॥

‡ स्वपूर्णात्मातिरेकेण जगज्जीवेश्वरादयः । न सन्ति नास्ति मायाचतेभ्यश्चाहं विलक्षणः। ब्रह्मरूपतया पश्यन् ब्रह्मैव भवति स्वयम्॥ —— स्वस्वरूपन्तु चिन्मात्रं सर्वदा सर्वदेहिनां । नैवदेहादिसंघातो घटवद्दृशि गो-

"வேயில்லை. ஆத்துமாவைவிட வேறாகத் தோற்றுகிறசராசரப்பி
"ரபஞ்சங்களையுன்னுடைய ஆத்துமாவாகவேயறிந்து அது "நா
"னாயிருக்கிறேன்" என்றுபாவனைசெய். (அப்படிபாவனைசெய்கி
"றவன்) தன்னுடைய சுவரூபத்தைத் தானேயநுபவிக்கிறான். (ஏ
"னென்றால்) தன்னைக்காட்டிலுமநுபவிக்கத்தக்கவஸ்து வேறில்
"லையானதனாற்றான். இருக்கிறதென்கிறவஸ்துவிருக்குமானால்,
"அப்படியிருக்கிற லக்ஷணமுடையதுபிர்ம்மமே. பிர்ம்மஞானத்
"தைவிசேஷமாயுடையவன் பிரசித்தமாயிருக்கிற விந்தஸகலஜ
"கத்தையு மெப்போதும் பார்த்துக்கொண்டிருந்தாலுமதைத்
"தன்னாத்துமாவைவிட அந்நியமாய்ப்பார்க்கிறதில்லை ——பிர்ம்
"மமிருக்கிறதென்றறிந்தாலது பரோக்ஷஞானமாகிறது. "நானே
"பிர்ம்மம்" என்றறிந்தாலது ஸாக்ஷாத்காரமென்றுசொல்லப்படு
"கிறது. யோகியானவன், தன்னுடையஆத்துமாவைத்தவிரவே
"றொன்றில்லையென்றெப்போதறிகிறானோ அதுமுதல் ஜீவன்முக்
"தனாகிறான். "நானேபிர்ம்மம்" என்றெப்போதுமிருக்கிறது
"மஹாத்துமாக்களுக்கு மோக்ஷஹேதுவாகிறது.—— தனக்குள்
"ளே பிர்ம்மபாவத்தைச்சேர்க்காமற் (ஜீவபிர்ம்மைக்கியஞ்செய்
"யாமல்) போனால், ஜீவத்தன்மைபோகிறதில்லை. உண்மையான
"அத்துவைதமறியப்பட்டால் விஷயவாஸனை நசிக்கிறது.——
"மஹாகாசத்திற் கடாகாசமடாகாசம்போற் சிதாகாசமாயிருக்
"கிற என்னிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்
"கள்."

---

चरः । स्वात्मनोन्यतया भातं चराचरमिदं जगत् । स्वात्ममात्रतया बुध्वा तदस्मीति विभावय । स्वस्वरूपं स्वयं भुङ्क्ते नास्ति भोज्यं पृथक् स्वतः । अस्ति चेदस्तितारूपं ब्रह्मैवास्ति त्वलक्षणम् । ब्रह्मविज्ञानसंपन्नः प्रतीतमखिलं जगत् । पश्यन्नपि सदा नैव पश्यति स्वात्मनः पृथक् । —— अस्ति ब्रह्मेति चेद्वेद परोक्षज्ञानमेव तत् । अहं ब्रह्मेति चेद्वेद साक्षात्कारस्स उच्यते । यस्मिन्काले स्वमात्मानं योगी जानाति केवलम् । तस्मात् कालात्समारभ्य जीवन्मुक्तो भवत्यसौ । अहं ब्रह्मेति नियतं मोक्षहेतुर्महात्मनाम् । ——ब्रह्मत्वेऽयोजिते स्वस्मिन् जीवभावो न गच्छति । अद्वैते बोधिते तत्वे वासना विनिवर्तते । ——घटाकाशमठाकाशौ महाकाशे प्रतिष्ठितौ । एवं मयि चिदाकाशे जीवेशौ परिकल्पितौ ॥

வராஹோபநிஷத்-ந-ல், * "ஸத்தியமாயும் ஞாநமாயும் அ
"நந்தமாயுமிருக்கிற பிர்ம்மமெதுவோ அது"நானுயிருக்கிறேன்."

ஷை. உபநிஷத்-ச-ல், † "சிவனேகுரு, சிவனேதேவன், சிவ
"னேவேதம், சிவனேபிரபு, சிவனே "நான்."ஸகலமுஞ்சிவனே.
"சிவனைக்காட்டிலும் வேறொன்றுமில்லை."

ஸரஸ்வதிரஹஸ்யோபநிஷத்தில், ‡ "என்னிடத்தில் ஜீவத்
"தன்மையும் ஈசுவரத்தன்மையும் கற்பிதம், வாஸ்தவத்திலில்லை.
"இப்படியெவனறிகிறனோ அவன்முக்தனென்பதில் ஸந்தேகமி
"ல்லை."

முக்திகோபநிஷத்-உ-ல், $ "ஓ! மாருதே! உள்ளேயி
"ருக்கிறஜ்யோதியை (ஆத்துமாவை)ப் பிரயத்நத்தினுற் தே
"டவேண்டியது. ஓ! கபிசார்த்துலா! ஞாநாஞ்ஞாநங்களைவி
"ட்டு, எவன்தானே பிர்மமென்றிருக்கிறனோ அவன் பிர்ம்மத்
"தையறிந்தவனல்ல (அனுலோ) பிர்ம்மமே. நான்குவேதங்க
"ளையும் அநேகசாஸ்திரங்களையும் அத்தியயநஞ்செய்திருந்தா
"லும்,பிர்ம்மதத்துவத்தையறியாதவன் கறிச்சுவையையறியாத
"அகப்பைக் கொப்பாவான்."

மநுஸ்மிருதி-அத்-கஉ-சு-கஉ-ல், § "இவ்விதமாய் ஸகல
"பூதங்களிலேயுமிருக்கிற ஆத்துமாவைத் தானக எவன்பார்க்கி
"றனோ அவன்ஸகலத்திலும் வேற்றுமையற்ற தன்மையையடை
"ந்து சிரேஷ்டமான ஸ்தாநமாகிய பிர்ம்மத்தை யடைகிறன்."

---

* सत्यज्ञानमनन्तं यत्परं ब्रह्माह मेव तत् ॥

† शिवो गुरु श्शिवो देव श्शिवो वेद श्शिवः प्रभुः । शिवोस्म्यहं शिव स्सर्वं शिवादन्यन्न किञ्चन ॥

‡ मयि जीवत्व मीशत्वं कल्पितं वस्तुतो न हि । इति यस्तु विजानाति स मुक्तो नात्र संशयः ॥

$ अन्वेष्टव्यं प्रयत्नेन मारुते ज्योति रान्तरम् । दर्शना दर्शने हित्वा स्वयं केवलरूपतः । य आस्ते कपिशार्दूल ब्रह्म न ब्रह्मवित् स्वयम् । अधीत्य चतुरो वेदान् सर्वशास्त्राण्यनेकशः । ब्रह्म तत्वं न जानाति दर्वी पाकरसं यथा ॥ இது கல்கத்தா பாடம்.

§ एवं य स्सर्वभूतेषु पश्यत्यात्मान मात्मना । स सर्वसमता मेत्य ब्रह्माभ्येति परं पदम् ॥

வாஸிஷ்டராமாயணம்-ரு-கசு-ல், * "பிர்ம்மமொன்றே. "ஜீவனென்பதில்லை. ஜீவக்கூட்டங்களுடைய உற்பத்தியேது? "உன்னுடையவாக்கியமானது,முயற்கொம்பு மேற்கிளம்பிப்போ "கிறதென்பதுபோலிருக்கிறதல்லவா. ஓ! இராகவா.! ஜீவனுமி "ல்லை. ஜீவர்களுடையகும்பலுமில்லை. ஒன்றானபர்வதம்போல் "யாதொரு ஜீவபிண்டமுமில்லை. ஸகலகலைகளோடு (பலவிதத் "தோற்றத்தோடு) கூடினதாகிய ஜீவனென்கிற சப்தத்தினுடைய "அர்த்தங்கள் தோற்றங்களே. உலகத்தில் (பிர்ம்மத்தைத்தவிர) "யாதொன்றுமிருக்கவில்லையென்று அசைவற்ற நிச்சயமுனக்கிரு "க்கட்டும். உலகத்திலெங்கும் வியாபித்திருக்கிறதாயும் சுத்த "சிந்மாத்திரமாயும் பரிசுத்தமானதாயுமுள்ள பிர்ம்மந்தானிரு "க்கிறது."

வாஸிஷ்டராமாயணம்-ரு-சுடு-ல்,†"சிதாத்துமாவாகிற பிர் "ம்மத்திற்கும் ஜீவனுக்குமிரண்டாகவிருத்தலெப்படியில்லையோ "அப்படியே ஜீவனுக்கும் சித்துக்கும் பேதமில்லை. எப்படி ஜீவ "னுக்கும் சித்துக்கும் பேதமில்லையோ அப்படியேதேகத்திற்கும் "கருமத்திற்கும் பேதமில்லை. கருமமே தேகமல்லவா. தேகமே "சித்தமல்லவா. இவ்விடத்தில் அந்த சித்தமே "நான்" என்று "ஜீவனாகிறான். அந்த ஜீவனே சித்சுவரூபமான ஈசுவரன். "அவனே ஆத்துமா. ஸகலமும் சிவனே என்கிற ஒரே பதத்தி "னாற் சொல்லப்பட்டது."

---

* एक एव न जीवोस्ति राशीनां संभवः कुतः । शशशृङ्गं समुड्डीय्य प्रयातीवहिते वचः ॥१८॥ न जीवोस्ति न जीवानां राशय स्सन्ति राघव । नचैकः पर्वतप्रख्यो जीवपिण्डोस्ति कश्चन ॥ १९ ॥ जीवशब्दार्थकलना स्समस्तकलनान्विताः । नेहकाश्च न संतीति निश्चयो स्तुतवाचलः ॥२० शुद्धचिन्मात्र ममलं ब्रह्मास्तीहहि सर्वगम् ॥ २१ ॥

† द्वैतं यथा नास्ति चिदात्मजीवयो स्तथैव भेदोस्ति न जीवचित्तयोः। यथैव भेदोस्ति न जीवचित्तयो स्तथैव भेदोस्ति न देहकर्मणोः॥ १२ ॥ कर्मैव देहो, ननु देह एव चित्तं तदेवाह मितीव जीवः । स जीवएवेश्वरचित्त आत्मा सर्वं शिवस्त्वेकपदोक्त मे तत् ॥ १३ ॥

வாஷிஷ்டம்-ரு-க00-ல், * "பந்தமென்கிற மூர்க்கா்களுடைய "(அக்ஞாநிகளுடைய) இந்தக் கற்பனையானது (சுவப்நம்போல்) "பொய்யான மனத்தோற்றமாயிருக்கிறது. அவர்களுடைய மற்ற "மோக்ஷகற்பனையும் பொய்யாகவேயுண்டாயிருக்கிறது. இப்ப "டிப் பந்தமோக்ஷங்களுண்டென்று பார்க்கிற புத்தியில்லாதவ "னுக்கு முன்சொல்லியப் பந்தமோக்ஷங்கள் அக்ஞாநத்தினாலே "யேயுண்டாயிருக்கிறது வாஸ்தவமல்ல கற்பனை. ஓ! மஹாபுத் "திமானே! நல்ல ஞாநியினுடைய புத்தியைக்குறித்தோவென் "றால், வாஸ்தவத்திற் பந்தமுமில்லை, மோக்ஷமுமில்லை. ஓ! நல்ல "றிவுடையவனே! தத்துவத்தையறிந்தவனுடைய புத்தியை "க்குறித்தோவென்றால், (பந்தமோக்ஷங்கள்) கயிற்றிற் பாம்பு "போற்காணப்படுகிறது. நல்ல ஞாநிக்குப் பந்தமோக்ஷமுதலிய "யாதொரு மோஹமுமில்லை. ஓ! இராகவா! பந்தமோக்ஷாதி "மோஹம் அக்ஞாநிக்கே இருக்கிறது."

ஷை-ச கக-ல், † "ஈசுவரனுக்குப் பந்தமுமில்லை மோக்ஷ "முமில்லை. ஆத்துமாவாகிற ஜீவனுக்கும் பந்தமுமில்லை மோ "க்ஷமுமில்லை. உலகத்திற் பந்தமென்கிற ஞாநமும் மோக்ஷ "மென்கிற ஞாநமும் எதிலிருந்துண்டாயினவோ அறியேன். "பந்தமுமில்லை மோக்ஷமுமில்லை. (அக்ஞாநியானவன்) பந்தமோ "க்ஷசுவரூபமுடையவன்போற்பார்க்கிறான். (அதெப்படிப்போலி "ருக்கிறதென்றால்) நாசமற்றவஸ்துவானது நாசமடையத்தக்கவ "ஸ்துவினால் விழுங்கப்பட்டதுபோலிருக்கிறது. ஜகத்து மா "யாசுவரூபம். இது ஆச்சரியம்."

---

* मिथ्याकल्पनिकीवेयं मूर्खाणां बन्धकल्पना । मिथ्यैवाभ्युदिता तेषा मितरामोक्ष कल्पना ॥ ३९ ॥ एव मज्ञानकादेव बन्धमोक्षदृशोऽस्मृतेः । वस्तुतस्तु न बन्धोस्ति न मोक्षोस्ति महामते ॥ ४० ॥ कल्पनाया अवस्तुत्वंसंप्रबुद्धमतिंप्रति । रज्वहेरिव हेप्राज्ञ तत्वबुद्धमतिंप्रति ॥ ४१ ॥ बन्धमोक्षादिसंमोहो न प्राज्ञस्यास्ति कश्चन । संमोहबन्धमोक्षादि ह्यज्ञस्यैवास्तिराघव ॥ ४२ ॥

† न मोक्षो मोक्ष ईशस्य न बन्धो बन्ध आत्मनः । बन्धमोक्षदृशौलोके न जाने प्रोत्थिते कुतः ॥ ६२ ॥ नास्ति बन्धो न मोक्षोस्ति तन्मयस्त्विव लक्ष्यते । ग्रस्तं नित्यमनित्येनम ायामयमहो जगत् ॥ ६३ ॥

வாஸிஷ்டராமாயணம்-ரு-கஅ-ல்,* "தேகத்தையுடைய ஆத்து "மாவுக்கு(ஜீவனுக்கு) வாஸ்தவத்திற் பந்தமுமில்லை மோக்ஷமு "மில்லை. ஸம்ஸாரமாய்ப் பிரவிருத்தித்திருக்கிற இவள் (சக்தி) "இந்திரஜால ஐசுவரியம்போற் பொய்யே. தீவரமானவெய்யிலிற் "தோற்றுகிற விஸ்தாரமான கானல்ஜலமெப்படியோ (அப்படி) "இந்த ஜகத்தானது மோகத்தினற் தோற்றுகிறது. (அது) "பிராந்திமாத்திரமே. எங்கும் வியாபித்ததாயும் பந்தமற்றதா "யும் ஒரேரூபமாயுமிருக்கிற ஆத்துமாவுக்குப் பந்தமெப்படியு "ண்டாகும்? பந்தமில்லாதபொழுது மோக்ஷம் யாருக்கு விதி "க்கிறது? இந்த ஸம்ஸாரப்பிராந்தியானது, ஆத்துமதத்துவஞா "நமில்லாததனுலுண்டாய்ப் பரவியிருக்கிறது. கயிற்றிற் பாம் "பென்கிற புத்திபோற் (கயிற்றிற்பாம்பென்கிற புத்தியானது "ஆலோசித்தறிகையிற் பாம்பென்பது நாசத்தை யடைவதுபோ "ற்)தத்துவஞானத்தினல் (ஸம்ஸாரப்பிராந்தி) நாசத்தையடை "கிறது."

ஷை-ரு-சங-ல், † "எள்ளும் எண்ணெயும்(பேதமல்லாதது) "போல் ஆத்துமாவும் நாராயணனும் பேதமுள்ளவர்களல்ல. "வெள்ளைத்துணியில் வெளுமையும் துணியுமெப்படியோ "அப்படிப்போலவும் வாஸனையுள்ள புஷ்பத்திற் புஷ்பமும் வா "ஸனையுமெப்படியோ அப்படிப்போலவும் விஷ்ணு யாரோ அவ "ரே ஆத்துமா. யார் ஆத்துமாவோ இவரே ஜநார்த்தநன். வி "டபியென்கிற சப்தமும் பாதபமென்கிற சப்தமுமெப்படி மரத் "தின்பெயரைக்குறிக்கும் பரியாய பதங்களோ அப்படி விஷ்ணு

---

* न बन्धोस्ति न मोक्षोस्ति देहिनः परमार्थतः । मिथ्ये यमि न्द्रजालश्री स्संसारपरिवर्तिनी ॥ २७ ॥ भ्रान्तिमात्र मिदं मोहा ज्जगद्राघव दृश्यते । जनितप्रत्ययं स्फारं जलंती व्रातपे यथा ॥ २८ ॥ अबद्धस्यैकरूपस्य सर्वगस्यात्मनः कथम् । बन्ध स्स्यात्तदभावेतु मोक्षः कस्य विधीयते ॥ ॥ २९ ॥अतत्वज्ञानजातेयं संसारभ्रान्तिरातता । तत्वज्ञानात्क्षयं यति रज्वामिव भुजङ्गधीः ॥ ३० ॥

† आत्मा नारायणश्चैव न भिन्न स्तिलतैलवत् । तथैव शौक्ल्यपटवत् कुसुमामोदव त्तथा ॥ ९ ॥ यो हि विष्णु स्स एवात्मा योह्यात्माऽसौ

"வென்கிற சப்தமும் ஆத்துமாவென்கிற சப்தமும் ஒரேவஸ்து
"வைக்குறிக்கிற பரியாயபதங்களே."

வாஸிஷ்டம்-சு-பூர்வபாகம்-ஸர்க்கம்-கO-சு-அ-ல்,*"ஆத்துமா
"வானவன், மனதிற்குள்ளாக வாஸனைகளாகிற சூக்ஷ்மமான
"நூற்களினுற் பட்டுப்பூச்சிபோற் சுற்றப்பட்டவனுயிருந்துகொ
"ண்டு தன்னை அக்ஞானத்தினுலேயறிகிறதில்லை."

ஷை-சு-பூர்வபாகம்-ஸர்க்கம்-கக-ல், † "தங்கமானது
"தங்கத்தன்மையாகவே பாவனை செய்யப்படாவிட்டால் மண்
"ணுகவே பாவிக்கப்படுகிறதுபோல, பிர்ம்மமானது பிர்ம்மத்
"தன்மையாய்ப்பாவிக்கப்படாவிட்டால்மிகவுமக்ஞானமேயுண்டா
"கிறது. பிர்ம்மமானது தானே ஸகலத்திற்கும் பிரபுவாயும் ம
"ஹாத்துமாவாயுமிருக்கிறதென்றே பிர்ம்மஞானிகளறிகிருர்கள்.
"நன்ருய்ப்பகுத்தறியாமையே அக்ஞானம். (அதுதான்) அக்ஞா
"நமென்றுசொல்லப்படுகிறது. தங்கமானது தங்கத்தன்மையாக
"ப்பார்க்கப்பட்டால் க்ஷணத்திலெப்படித்தங்கமாகவேயாய்விடு
"கிறதோ அப்படிபிர்ம்மமானது பிர்ம்மத்தன்மையாயறியப்பட்
"டால் க்ஷணத்திற் பிர்ம்மமேயாகிறது."

ஷை ஷை-பூர்வபாகம்-ஸர்க்கம்-கஉச-சு-க-ல், ‡"பிராம்மணு
"னவன் தன்னுடைய ஸத்துவமாகிய பிராம்மணதருமத்தைக்
"கொஞ்சங்கொஞ்சமாய்விட்டு துராசையினுற் சூத்திரத்தன்மை
"யையங்கீகரிக்கிறதெப்படியோ அப்படி ஈசுவரன் ஜீவத்தன்மை
"யை யங்கீகரிக்கிருர்."

---

जनार्दनः । विष्ण्वात्मशब्दौ पर्यायौ यथा विटपिपादपौ ॥ ६॥

* कोशकारवदात्मानं वासना तनु तन्तुभिः । वेष्टयश्चैव चेतोऽन्तर्बालत्वान्नावबुध्यते ॥

† अभावितं ब्रह्मतया ब्रह्माज्ञानमलं भवेत् । अभावितं हेमतया यथा हेमचमृद्भवेत् ॥ ४६ ॥ स्वयं प्रभु र्महात्मैव ब्रह्म ब्रह्मविदो विदुः । अपरिज्ञातमज्ञान मज्ञान मिति कथ्यते ॥ ४७ ॥ ज्ञातं ब्रह्मतया ब्रह्म ब्रह्मैव भवति क्षणात् । ज्ञातं हेमतया हेम हेमैव भवति क्षणात् ॥ ४८ ॥

‡ यथा सत्वमुपेक्ष्य स्वं शनै र्विप्रो दुरीहया । अङ्गीकरोति शूद्रत्वं तथा जीवत्व मीश्वरः ॥

மஹாபாரதம்-உத்யோகபர்வம்-அத் சஙு-ல், * "(ஸநத்ஸு "ஜாதர் சொல்வது) ஓ! திருதராஷ்டரா! நானே உங்களுடையதா "யாராயிருக்கிறேனென்று எண்ணப்பட்டிருக்கிறது. நானே உங் "களுடைய தகப்பனுயுமிருக்கிறேன். புத்திரனுயுமிருக்கிறேன். "எந்தவஸ்துவிருக்கிறதோ எந்தவஸ்துவில்லையோ அந்தஸகல "த்திற்கும் நானேஆத்துமாவாகவிருக்கிறேன். ஸகலத்திற்கும் "நானே விருத்தனன பிதாமஹனுயும் பிதாவாயும் புத்திரனுயுமி "ருக்கிறேன். நீங்களென்னுடைய ஆத்துமாவாகவே யிருக்கிறீ "ர்கள். நீங்களும் எனக்கொன்றுமல்ல, நானுமுங்களுக்கொன் "றுமல்ல." (இதன் கருத்தென்னவெனில், பிதா புத்திரன் பிதாமஹன் நீ நானென்கிற வேற்றுமையில்லை. எல்லாம் ஒரே வஸ்துத்தான். கயிற்றிற்பாம்பென்கிற பிரமைபோல் நீ நான் அவன் என்கிற இந்த வேற்றுமை அக்ஞாநகற்பிதமென்பதே).

மஹாபாரதம்-பீஷ்மபருவம் பகவத்கீதை-அத்-உ-சு-கஎ-ல், † "(காணப்படுகிற) இதெல்லாம் எந்த வஸ்துவினுல் வியாபிக்க "ப்பட்டிருக்கிறதோ அதை (ஜீவாத்துமாவை) நாசமற்றதாக "வேயறி."

ஷை-உ-உச-ல், ‡ "(ஜீவத்தன்மையையடைந்திருக்கிற) "இந்த ஆத்துமா, வெட்டப்படத்தக்கவனுமல்ல, எரிக்கப்படத் "தக்கவனுமல்ல, நனைக்கப்படத்தக்கவனுமல்ல, உலர்த்தப்ப "டத்தக்கவனுமல்ல, அழிவற்றவனுயு மெங்குநிறைந்தவனுயும் "ஸ்திரசுவபாவமுடையவனுயு மசைவற்றவனுயு மநாதியாயுமிரு "க்கிறவன்."

ஷை-சு-உகூ-ல், $ "ஸகல வஸ்துக்களிலேயும் ஸமமாய்பிர் "ம்மத்தைப்பார்க்கிறத் தியாநயோகத்திலேயே மனதையுடைய

---

* अह मेव स्मृतो माता पितापुत्रो स्म्यहं पुनः । आत्माहमपि सर्वस्य यच्च नास्ति यदस्ति च ॥२९॥ पितामहोस्मि स्थविरः पितापुत्रश्च भारत । ममैव यूय मात्मस्थान मेयूयं नवोवयम् ॥३०॥

† अविनाशितु तद्विद्धि येन सर्वमिदं ततम्॥

‡ अच्छेद्योयमदाह्योय मक्लेद्योऽशोष्यएव च। नित्य स्सर्वगत स्स्थाणुरचलोयं सनातनः ॥

$ सर्वभूतस्थ मात्मानं सर्वभूतानि चात्मनि । ईक्षते योगयुक्तात्मा

"யோகியானவன் தன்னை ஸகலவஸ்துக்களிலுமிருக்கிறதாகவுந்த
"ன்னிடத்தில் ஸகலவஸ்துக்களுமிருக்கிறதாகவும் பார்க்கிறான்."

ஷை கீதை-கங-ங-ல், * "ஓ! அர்ஜுனா! ஸகல தேகங்களி
"லேயுமென்னையே க்ஷேத்திரக்ஞனாக (ஜீவனாக) அறி."

ஷை-கரு-எ-ல், † "என்னுடைய அம்சமாகவு மநாதியாக
"வுமிருக்கிற ஜீவனானவன், மாயையிலடங்கியிருக்கிறவும் மன
"தையாறுவதாகவுடையவுமான விந்திரியங்களை ஸம்ஸாரத்திற்
"போகார்த்தமாயிழுக்கிறான்."

பிரும்மபுராணம்-அத்-சஅ-ல், ‡ 'ஸகல சாஸ்திரங்களிலே
"யும் படிக்கப்படுகிறதாயும் வேதாந்தங்களினாலே நிச்சயிக்கப்ப
"டுகிறதாயும் யோகிகளுடையத் தியானத்திற்கு விஷயமாயுமிரு
"க்கிறதாகச் சொல்லப்படுகிற வாசுதேவன் "நானே" பிரும்மா
"வும் "நானே" விஷ்ணுவும் "நானே" சிவனும் "நானே." தே
"வராஜாவாகிய'இந்திரனும் "நானே" யமனும் 'நானே" ஸம்யம
"னும் "நானே."

ஷை புராணம்-கஉசு-கசு-ல், $ "இந்தஜீவனானவன் தன்னை
"ஸகலபூதங்களிலும் தன்னிடத்தில் ஸகலபூதங்களையுமெப்போ
"து பார்க்கிறானோ அப்போது பிர்ம்மமாகிறான்."

விஷ்ணுபுராணம்-உ-கசு-உங-ல்,¶"இந்தப்பிரபஞ்சத்திலெ
"தெதிருக்கிறதோ அவையெல்லாம் அந்தஒருவனான அச்சுத
"னே. அவனைக்காட்டிலுமந்நியமாக யாதொன்றுமில்லை. அவன்

---

सर्वत्र समदर्शनः ॥

* क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ॥

† ममैवांशो जीवलोके जीवभूत स्सनातनः । मनष्षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥

‡ पठ्यते सर्वशास्त्रेषु वेदान्तेषु निगद्यते । यमाहुर्ध्यानगम्येति वासुदेवेतियोगिनः ॥ ३ ॥ अहमेव स्वयं ब्रह्मा अहं विष्णु श्शिवोह्यहम् । इन्द्रोहं देवराजश्च यम स्संयमनोयमः ॥ ४ ॥

$ सर्वभूतेषु चात्मानं सर्वभूतानि चात्मनि । यदा पश्यति भूतात्मा ब्रह्म संपद्यते तदा ॥

¶ एक स्समस्तं यदिहास्ति किञ्चित्तदच्युतो नास्ति परं ततोऽन्यत् ।

"நானே" நீயும்அவனே, அவனும் அவனே. இந்தஸகலப்பிரப "ஞ்சமும் ஆத்துமசுவரூபமே. பேதமாகிற மோகத்தை விட்டு "விடு."

சிவபுராணம்-ஞானஸம்ஹிதை-அத்-எஅ-ல், * "ஜீவனான "னவன் சிவனுடைய சொந்தஅம்சமாயும் அவித்தையினால் மோ "கிக்கப்பட்டவனாயும் சுவதந்திரமற்றவனாயுமிருந்துகொண்டு நா "ன் அது என்றறிகிறான். அவித்தையிலிருந்து விடுபட்டாற் சிவ "னாகிறான். அவன் எவ்விடத்திலும் வியாபித்தவனாயிருந்தா "லும் (அகங்கார) ஸ்பர்சத்தினால் (ஸம்பந்தத்தினால்) கட்டுப்படு "கிறான். அதிலிருந்து விடுபட்டவன் சுத்தமான சங்கரனே. (எ "ப்படியெனில்) ஒரே தங்கமானது தாம்பரத்தோடுசேர்ந்தபொ "ழுது அதன்விலையற்பமாகிறது. ஜீவனான நானும் அப்படித்தா "ன். அதேதங்கமானது வெங்காரம் முதலியவைகளாற் சோதி "க்கப்பட்டாலப்பொழுது பழயவிலையுள்ளதாகவாகிறது. அப்ப "டிப்போல் ஜீவனுடைய நிலைமை."

பாகவதம்-ஸ்கந்தம்-கக-அத்-கக-ல், † "பந்தமோக்ஷ "மென்கிற வார்த்தையானது என்னுடையமாயாகுணத்தினாலே "யேயன்றி வாஸ்தவத்திலில்லை. ஸத்துவரஜஸ்தமோகுணங்களு "க்கு மாயைகாரணமாயிருக்கிறதனாலே மோக்ஷமாவது பந்தமா "வது எனக்கில்லை. சுவப்நமானதெப்படி புத்தியில் விளங்கிற "தோ அப்படி துக்கம் மோகம் சுகம் துன்பம் பிறப்பு இவைக "ளெல்லாம் மாயையினாலேதான்விளங்கிறது. பிறப்பிறப்பாகிற

---

सोहं सच त्वं सच सर्वमेतदात्मस्वरूपं त्यज भेद मोहम् ॥

* स्वस्यै वांशश्च जीवोवै अविद्यामोहितोऽवशः । अहमन्यं च जानाति तया मुक्तो भवेच्छिवः ॥९॥ सर्वत्र व्यापक स्सोवै स्पर्शत्वेनानिबध्यते । तथैव व्यापको देवो नबध्नाति पुनः क्वचित् ॥ १९ ॥ अहंकारतयाजीव स्तन्मुक्त श्शङ्करः स्वयम् । यथैकं च सुवर्णंहि ताम्रेणमिळितं यदा॥२०॥ अल्पमूल्यं प्रजायेत तथा जीवो ह्यहं पुनः । तदेव च सुवर्णं हि क्षारादिशोधितं यदा ॥ २१ ॥ पूर्ववन्मूल्यतां याति तथा जीवस्य संमतम्॥ २२॥

† बद्धोमुक्त इति व्याख्या गुणतो मेनवस्तुतः । गुणस्य मायामूलत्वान्नमे मोक्षो न बन्धनं ॥ १ ॥शोकमोहौ सुखंदुःखं देहापत्तिश्च मायया ।

"ஸம்ஸாரமானது வாஸ்தவமல்ல. வித்தை அவித்தை இவைகள்
"என்னுடையரூபம். ஓ! உத்தமா! தேகத்தையுடையவர்களுக்கு
"ப்பந்தமோக்ஷங்களைக்கொடுக்கத்தக்கதாகிய அந்தவித்தை அ
"வித்தைகள் என்னுடைய மாயையினலாதியிலுண்டாயின. ஓ!
"புத்திமானே! என்னுடைய அம்சமேயாகிய இந்தஜீவனுக்கே
"அவித்தையினலநாதியானபந்தமும் அப்படியே வித்தையினல்
"மோக்ஷமுமாகிறது."

பாகவதம் ஸ்கந்தம்-கஉ-அத்-ரு-ல், * "சுவப்நத்திற் தன்
"னுடைய தலைவெட்டுப்பட்டதாகத் தானேபார்க்கிறதுபோல
"(ஜாக்கிரதாவஸ்தையிலும்) தேகத்தினுடையமரணம்முதலியன
"என்றறியத்தக்கது. (சுவப்நத்திற் தன்தலைவெட்டப்பட்டதாக)
"எதனைப்பார்க்கிருனே அதனலாத்துமா பிறப்பற்றவன் மரண
"மற்றவனென்றுகிறது. குடமுடைந்தால் அதிலுள்ள ஆகாசமா
"னதெப்படிமுன்போலவே மஹாகாசமாகவேயாய்விடுகிறதோ
"இப்படி(ஸ்தூலசூக்ஷ்மகாரண)தேகமானது நாசமடைந்தால் ஜீ
"வனவன் தன்பழயநிலைமையாகிற பிர்ம்மமாகவேயாகிருன்.
"சிரேஷ்டமாயும் பிரகாசமாயுமிருக்கிறபிர்ம்மம் "நான்" சிரேஷ்
"டமான ஸ்தாநமாகிறபிர்ம்மம் "நான்" என்று இவ்விதமாய் ஆ
"த்துமாவையறிந்து கொண்டவனுப்பிரிவற்ற ஆத்துமாவில்
"ஆத்துமாவைச் சேர்ப்பி."

பிருஹந்நாரதியபுராணம்-அத்-ௌ-சு-கக-ல், ‡ "ஆகாசமான
"து (கடாகாசமடாகாசமென்கிறபெயரினல்) வெவ்வேருய் விள
"ங்கிறதுபோல அவித்தியோபாதிபேதத்தினலே (ஆத்துமாவே)
"இந்த ஸகலஜகத்தாக விளங்கிறது."

---

स्वप्नो यथात्मनः ख्याति स्संसृति नंतुवास्तवी ॥ २ ॥ विद्याऽविद्ये मम तनू वि-
द्ध्युद्धवशरीरिणाम् । बन्धमोक्षकरी आद्ये मायया मे विनिर्मिते ॥ ३ ॥ एक-
स्यैव ममांशस्य जीवस्यैव महामते । बन्धोस्याविद्ययानादि र्विद्यया च त-
थेतरः ॥ ४ ॥

* स्वप्ने यथा शिरश्छेदं पञ्चत्वाद्यात्मनः स्वयम् । यस्मात्पश्यति दे-
हस्य तत आत्माह्यजोऽमरः ॥ ४ ॥ घटे भिन्ने यथाकाश आकाशस्याद्यथा
पुरा । एवं देहे मृते जीवो ब्रह्म संपद्यते पुनः ॥ ५ ॥ अहं ब्रह्म परं धाम
ब्रह्माहं परमं पदम् । एवं समीक्षन्नात्मान मात्मन्याधाय निष्कळे ॥ ११ ॥

‡ उपाधिभि र्यथाकाशो भिन्नत्वे न प्रतीय्यते । आविद्योपाधिभेदेन
तथेद मखिलं जगत् ॥

ஆக்நேயபுராணம்-அத்-௩எசு-ல், * "நான்பிர்ம்மமாயிருக்
"கிறேன்." ஸகலத்திலிருந்தும் விடுபட்டபரம்ஜியோதிசுவரூப
"மான பிர்ம்மமே "நான்". "நானே" பிர்ம்மமென்கிற உத்தமமா
"னஞாநமானது பந்தத்தை நாசஞ்செய்யத்தக்கஸமாதியாயிரு
"க்கிறது அந்தபிர்ம்மமானது ஆநந்தமாயும் ஸத்தியமாயும் ஞா
"நசுவரூபமாயும் முடிவற்றதாயுமிருக்கிறது. குருவினால், "இந்
"த உன்னுடைய ஆத்துமா" பரப்பிர்ம்மமென்றும் அந்தப்பிர்ம்
"மம் "நீயாயிருக்கிறுயென்றும்" போதிக்கப்பட்டு ஜீவனுகிய
"நான்" பிர்ம்மமாயிருக்கிறேனென்றறிகிறுன். வெளியில் சூரி
"யனிலிருக்கிற அந்த இந்த புருஷனெவனே அகண்டமானஅவ
"னே"நான்". ஓம்".

ஷெ புராணம்-அத்-௩எஎ-சு-உஉ-ல், † "நித்தியமாயும் சுத்
"தமாயும் ஞாநசுவரூபமாயும் பந்தமற்றதாயும் ஸத்தியமாயும் ஆ
"நந்தமாயுமிரண்டாவதற்றதாயுமிருக்கிறபிர்ம்மம் "நானுகவிருக்
"கிறேன்." விசேஷஞாநத்தோடுகூடிய பிர்ம்மம்"நான்." "நான்
"முக்தன்."

இந்தஅத்தியாயம்முழுதும் "अहं ब्रह्म परं ज्योतिः = நான் பர
ம்ஜியோதிசுவரூபமானபிர்ம்மம்" என்றும் மற்றவஸ்துக்களல்ல
வென்றும்-உஉ-வாக்கியங்களாற்சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆக்நேயபுராணம்-அத்-௩அக-ல், ‡ "குடமுடைந்துபோவ
"தனுல் அதிலுள்ள ஆகாசம் மஹாகாசத்துடன் எப்படிவேற்று
"மையற்றுப்போகிறதோ இப்படி ஜீவன்முக்தனுனவன் ஸத்தா
"னபிர்ம்மமே. பிர்ம்மமானதனுற் பிர்ம்மமாகவேயாகிறுன். ஜீவ

---

* ब्रह्माह मस्म्यहं ब्रह्म परं ज्योति र्विमुक्तॐ ॥२१॥ अहं ब्रह्म परं ज्ञानं समाधि र्बन्धघातकः । चिरमानन्दकं ब्रह्म सत्यं ज्ञानमनन्तकम् ॥२२॥ अयमात्मा परं ब्रह्म तद्ब्रह्मत्वमसीति च । गुरुणा बोधितो-जीव अहं ब्रह्मास्मि बाह्यतः ॥२३॥ सोऽसावादित्यपुरुष स्सोऽसावहमखण्डॐ ॥२४॥

† नित्यशुद्धबुद्धमुक्तं सत्यमानन्द मद्वयम् । ब्रह्माह मस्म्यहं ब्रह्म सविज्ञानं विमुक्तॐ ॥

‡ घटध्वंसा द्यथाकाश मभिन्नं नभसा भवेत् । मुक्तोजीवो ब्रह्मणैवं

"ஞானவன் தன்னைபிர்ம்மமென்று ஞானத்தினலெண்ணுகிறான்
"வேறொன்றினலல்ல."

கருடபுராணம்-பூர்வபாகம் அத்-சச-ல், * "நித்தியமாயும்
"சுத்தமாயும் ஞானசுவரூபமாயும் ஸத்தியமாயும் ஆநந்தமாயுமிர
"ண்டாவதற்றதாயும் துரீயமாயும் அழிவற்றதாயுமிருக்கிற பிர்
"ம்மம் "நானாகஇருக்கிறேன்" என்பது பரமபதம். "நான்
"பிர்ம்மமாகவேஇருக்கிறேன்" என்கிறஇருப்பானது ஸமாதியெ
"ன்று சொல்லப்படுகிறது."

ஷை-அத்-உகஅ-ல், † "அக்நியோடுசேர்க்கப்பட்ட அக்நி
"யானதெப்படிவேற்றுமையற்றதாகிறதோ அப்படிஜீவாத்துமா,
"பரமாத்துமாவிற்சேர்ந்துபோகிறது. "நான்பரம்ஜியோதிசுவ
"ரூபமான பிர்ம்மமாயிருக்கிறேன்" ஜரையாவது மரணமாவது
"டையவனல்ல. "நான்பரம்ஜியோதிசுவரூபனான பரப்பிர்ம்மமா
"யிருக்கிறேன்" சூக்ஷ்மதேகமுடையவனல்ல. "நான்பரம்ஜியோ
"திசுவரூபனானபரப்பிர்ம்மமாயிருக்கிறேன்" அக்ஞானமுடையவ
"னல்ல. "நான் பரம்ஜியோதிசுவரூபமானபிர்ம்மமாயிருக்கிறே
"ன்."முக்காலங்களிலேயும் இந்த"நான்" சிரேஷ்டமானஸ்தாந
"மாயிருக்கிறேன். தேகம்இந்திரியங்கள் மனது புத்தி பிராணன்
"அகங்காரம் இவைகளில்லாதவனும் நித்தியனும் சுத்தனும்
"ஞானசுவரூபனுமிருக்கிற "நான்" ஆநந்தசுவரூபியாய், இரண்
"டாவதற்றவனுமிருக்கிறேன். "நான்" பரம்ஜியோதிசுவரூபனு
"யும் ஞானத்தையே சுவரூபமாயுடையவனும் ஸகலத்திலிருந்
"தும் விடுபட்டவனுமிருக்கிற பிர்ம்மம். ஓம்."

---

सद्ब्रह्म ब्रह्मवै भवेत् ॥ २९ ॥ आत्मानं मन्यते ब्रह्म जीवो ज्ञानेन नान्यथा ॥

* नित्यशुद्धं बुद्धमृद्धं सत्यमानन्द मद्वयम् ॥ ४ ॥ तुरीय मक्षरं ब्रह्म अह मस्मि परं पदम् । अहं ब्रह्मेत्यवस्थानं समाधिरभिगीय्यते ॥ ९ ॥

† यथाग्नि रग्नौ संक्षिप्तस्तथात्मापरमात्मनि ॥ २३ ॥ अहं ब्रह्म परं ज्योति स्स्थूलदेहविवर्जितम् । अहं ब्रह्म परंज्योति र्जरामरणवर्जितम् ॥२९॥ अहं ब्रह्म परं ज्योति स्सूक्ष्मदेहविवर्जितम् ॥ २७ ॥अहं ब्रह्म परं ज्योति र-ज्ञानपरिवर्जितम् ॥ ३० ॥ अहं ब्रह्म परं ज्योतिस्त्रिष्वयं परमं पदम् । देहेन्द्रियमनोबुद्धिप्राणाहंकारवर्जितम् ॥ ३१ ॥ नित्यशुद्धबुद्धमुक्तमहमानन्द-मद्वयम् । अहं ब्रह्म परं ज्योति र्ज्ञानरूप विमुक्तओम् ॥ ३२ ॥

கருடபுராணம்-அத் ௨௨௯ சு-௨அ-ல்,* "நானே பிர்ம்மமென்
"கிறஇருப்பானது ஸமாதியென்று சொல்லப்படுகிறது. "நான்
"பிர்ம்மமாயிருக்கிறேன்" என்கிற வாக்கியத்தினுலுண்டாகிற
"ஞானத்தினலே மனிதர்களுக்கு மோக்ஷமுண்டாகிறது."

ஸ்காந்தம்-ஸநத்குமாரஸம்ஹிதை-மலையாசலகண்டம்-அத்-
௩-சு-௭-ல், † "அந்தப்பிர்ம்மமே உலகத்தைசிருஷ்டித்து ஜகத்தி
"ல் ஜீவாத்துமாவாகவாயிற்று."

ஷை-ஷை-சு-௫௯-ல், ‡ "ஓ! பிராம்மணு! "நான்" சிவன்.
"நீயும் சிவன். நம்மிருவர்களுக்குள் பேதமில்லை."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-முக்திகண்டம்-அத்-௩-சு-௧0-ல்,
§ "ஆத்துமாவினுடைய (ஜீவனுடைய) வாஸ்தவஞானத்தினல்,
"தத்துவமானது பிர்ம்மமாத்திரமே."

ஷை-ஷை-யக்ஞவைபவகண்டம்-அத் ௧௭-சு-௨-ல், $ "ஜீவ
"னும் பிர்ம்மமுமொன்றே என்றறியாதஅக்ஞானத்தினுற் (பல
"வென்கிற) துவைதஞானமுண்டாயிற்று. ஓ! பிராம்மணுேத்
"தமர்களே! இரண்டாகத்தோற்றும் வஸ்துவிலே (அவைகள்
"வாஸ்தவமென்றுண்டாகிறஞானமானது) பூர்வவாஸனையினுற்
"ருன்."

ஷை-ஷை-ஷை-அத்-௩௧-சு-௩-ல்,¶ "ஸகலமும் பிர்ம்மமென்
"கிற நல்லறிவெதுவோ அது, வேதாந்தவாக்கியத்தினுலுண்டா
"னதே."

ஷை-சூதஸம்ஹிதை பிர்ம்மகீதை-அத் ச-ல், ‖ "சிரேஷ்ட
"மான அத்துவைதவிக்ஞானியானவன் (பிரும்மாவாகிய) என்ன

---

* अहं ब्रह्मेत्यवस्थानं समाधिरभिधीयते । अहं ब्रह्मास्मि वाक्याच्च ज्ञानान्मोक्षो भवेन्नृणाम् ॥

† तद्ब्रह्मैव जगत्सृष्ट्वा प्राप्यजीवात्मना जगत् ॥

‡ अहं शिवश्शिवस्त्वं च न भेदश्चावयो र्द्विज ॥

§ आत्मन स्तत्वविज्ञाना त्तत्वं ब्रह्मैव केवलम् ॥

$ प्रत्यक् ब्रह्मैक्यताज्ञानात् द्वैतवस्तु समुद्गतम् । द्वैतवस्तुनि विप्रेन्द्राः पूर्ववासनया तथा ॥

¶ सर्वं ब्रह्मेति विज्ञानं यत्तद्वेदान्तवाक्यजम् ॥

‖ परमाद्वैतविज्ञानी मयाराध्य स्सदैव तु । नारायणेन रुद्रेण तथा

"லேயும் நாராயணனுலேயும் உருத்திரனுலேயும் தேவதைகளினு "லேயும் எப்போதும் விசேஷமாய்ப் பூஜிக்கத்தக்கவன். ஓ! "தேவர்களே! சிரேஷ்டமான அத்துவைதவிக்ஞானியானவன் எ "ங்கெந்தவிடத்திலிருந்தாலும் அந்தவிடத்திலேயே முக்தியான "து அவனையடுத்தேயிருக்கிறது. இந்தவிஷயத்திற் சந்தேகமி "ல்லை. சிரேஷ்டமான அத்துவைதநிஷ்டையிலிருக்கிற பரமயோ "கிக்குச்சுசுரூஷை செய்கிறவனெவனே அவனுடையபாதங்கள் "என்னுடையதலைமேலிருக்கிறது. பரமாத்துவைதவிக்ஞாநநிஷ் "டையிலிருக்கிற பரமயோகிக்கு ஸமமாயிருக்கிறவர்களாக தே "வதைகளையாவது ஹரியையாவது பரமேசுவரனையாவது நான் "பார்க்கவில்லை."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-பிர்ம்மகீதை-அத்-எ-ல், * "எ "ல்லாவிதத்திலும்ஸாம்யம் (ஸமமாயிருக்கும்தன்மை) எதுவோ "அதுதான்பரமாத்துவைதலக்ஷணம். இவ்விஷயத்தில் முமு "க்ஷுக்கள், அற்பமேனும் ஸந்தேகிக்கக்கூடாது. (ஆக்ஷேபம்) "சிவன் ஜீவன் இவர்களுடைய ரூபமானதெப்போதும் சின்மாத் "திரமேயல்லவா. அப்படியிருக்க வேற்றுமையற்ற சின்மாத்தி "ரத்தில் ஸாம்மியமெப்படிக்கூடும்? உபாதியோடுகூடியிருக்கிற "ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஸாம்மியமுண்டாகக்கூடுமேயென் "றால், அதுவும்கூடாது. (இதன்தாத்பரியமென்னவெனில், இர ண்டுவஸ்துக்களில் ஒன்றைப்போலிருக்கிற மற்றொருவஸ்து அதற்குஸமமாயிருக்கிறதென்று சொல்லக்கூடும். எப்படியெ னில், இந்தசரகு பித்தளையானது தங்கத்திற்குச்சமானமாயிரு

---

देवै र्विशेषतः ॥ १४२ ॥ परमाद्वैत विज्ञानी यत्र कुत्र स्थितस्सुराः । तत्र सन्निहिता मुक्ति र्नात्र कार्या विचारणा ॥ १४३ ॥ परमाद्वैत विज्ञाननिष्ठस्य परयोगिनः । शुश्रूषा क्रियते येन तत्पादौ मम मस्तके ॥ १४४ ॥ परमाद्वैतविज्ञाननिष्ठस्य परयोगिनः । समं देवान्नपश्यामि न हरिं न महेश्वरम् ॥ १४५ ॥

* सर्वाकारतया साम्यं परमाद्वैतलक्षणम् । उपैति नात्र संदेहः कर्तव्यं च मुमुक्षुभिः ॥ ६४ ॥ चिन्मात्रं हि सदा रूप मुभयो श्शिवजीवयोः । तथासति कथं साम्यं चिन्मात्रे देहवर्जिते ॥ ६५ ॥ उपाधियुक्तरूपेतु तयो स्साम्यं भवेद्यदि । तथापि नैवसाम्यंस्याज्जीवस्य परमात्मनः ॥ ६६ ॥ म-

க்கிறதென்று சொல்லலாம். ஒரேவண்ணம் அல்லது மாத்து ள்ள இரண்டுதங்கக்கட்டிகளில் ஒன்று மற்றொன்றுக்குச்சம மாயிருக்கிறதென்று சொல்லக்கூடுமோ. அப்படிப்போல ஜீவ னும் பிர்ம்மமும் வெவ்வேறுவஸ்துவல்ல. இரண்டும், ஒரேமா த்துள்ள தங்கக்கட்டிபோற்சின்மாத்திரமே. ஆகையால், ஸா ம்மியம்சொல்லக்கூடாது. அவித்தியோபாதியுடைய ஜீவனும் மாயோபாதியுடைய ஈசுவரனும் வெவ்வேறானதால் ஸாம்மியம் சொல்லலாமேயென்றால், அதுவுங்கூடாது. ஏனெனில், கிஞ்சி த்க்ஞனஜீவனும் ஸர்வக்ஞன ஈசுவரனும் பசுவும் பக்ஷியும் போல் விஜாதீயமானதாலப்படிப்பட்ட இரண்டுவஸ்துக்களுக்கு ஸாம்யம்சொல்லக்கூடாது. ஆகையால், ஜீவனும் பிர்ம்மமும் ஒரேசின்மாத்திரமானதால் ஸாம்மியஞ் சொல்லக்கூடாதென்ப தை திருஷ்டாந்தத்தினற் பிந்தியசுலோகங்களிற்சொல்லப்படு "கிறது.) மஹாகாசத்தோடு கடாகாசத்திற்கு ஸாம்மியமெப்படி "எப்போதுமில்லையோ அப்படிச்சிவனோடுஜீவனுக்கு ஸாம்மியஞ் "சொல்லக்கூடியதல்ல. ஞானத்தினலவித்தைநசித்தாற் தன்சுவ "பாவமான ஸாம்மியத்தன்மையையடைகிறன். வேறுவிதமாய் "ஸாம்மியமல்ல. ஜீவன் பிர்ம்மம் இவர்களுக்கு ஸாம்மியமென்ப "து ஸாக்ஷாத்ஐக்கியமேதவிரவேறில்லை. ஸகலப்பிரபஞ்சத்தை "யும் தன்னிடத்திலேதானகவே எப்போதுபார்க்கிறனே அப் "போது (ஸம்ஸார) பயமற்றவனகிறன். முக்தனயில்லாதவனுக் "குத்தான்முக்தி. ஏனெனில்,பந்தமுடையவனுக்கல்லவோவிடுத "லையென்பது? ஆத்துமாஎப்போதும் முக்தனகையால் அவனுக் "குப்பந்தமென்பதும் முக்தியென்பதும் உபசாரமாய்ச்சொல்ல "ப்படுகிறதேயன்றிவேறல்ல."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-பிர்ம்மகீதை-அத் அ ல், * "யாரி "ந்தமூன்றுலகத்திலேயும் (அல்லது, ஸ்தூலசூக்ஷ்மகாரணங்க "ளாகிற மூன்றுசரீரத்திலேயும்) ஜீவரூபம்போலிருந்துகொ

---

हाकाशसमत्वं तु घटाकाशस्य सर्वदा । यथा नास्ति तथा साम्यं न जीवस्य शिवेन तु ॥ ६७ ॥ विद्यया तद्विनाशेन स्वसाम्यं याति नान्यथा । अतः साम्यं तयो स्साक्षा दैक्यमेव नचेतरत् ॥ ७३ ॥ स्वात्मन्येव स्वयं सर्वं यदा पश्यति निर्भयः । तदा मुक्तो न मुक्तश्च बद्धस्य हि विमुक्तता ॥ ७६ ॥

* जीवरूप इव स्थित्वा यः क्रीडति पुरत्रये । स न [illegible] सदा शं-

"ண்டு விளையாடுகிருனே அவன் ஜீவனல்ல. அவனெப்போதும் "சம்புவே. இதுஸத்தியமானது ஸந்தேகமில்லை. ஜீவனென்பதே "யில்லை. ஸாக்ஷாத்பிர்ம்மமேதான் ஜீவனைப்போல்விளங்கிறது. "அக்ஞானத்தினல் ஜீவரூபமாய்க்காணுகிறதேயன்றி வாஸ்தவ "மல்ல."

ஷை ஸம்ஹிதை-பிரும்மகிதை-அத் கஉ-ல்,*"வேதாந்தங்களுடை "யமஹாவாக்கியார்த்தத்தைக் கேட்பதனுலும் அதையே மநநம் "செய்வதனுலும் அப்படியேபிரகாசசுவரூபியானபரமாத்துமாவி "னுடையத்தியாநத்தினுலும், ஜீவபிர்ம்மைக்கியஞாநமடைந்து "உத்தமமானசிவபதத்தையடைகிருன்.ஜகத்து ஸத்தியமென்கிற "தோற்றமானது(பிறப்பிறப்பாகிற) ஸம்ஸாரத்திற்குக்காரணமா "யிருக்கிறது ஜகத்து ஸத்தியமல்லவென்கிற தோற்றமானது "ஸம்ஸாரத்தை நிவிருத்திக்கிறதற்குக்காரணமாயிருக்கிறது."

ஷை-சூதஸம்ஹிதை-சூதகிதை. அத்-உ-ல், † "கடா "காசமும் மஹாகாசமும் வெவ்வேறென்பதெப்படிக்கற்பித "மோ அப்படி ஜீவாத்தும பரமாத்துமாக்களுக்கு பேதமும் கற் "பிதந்தான். ஓ! முநிசிரேஷ்டர்களே! எப்படிஜீவனநேகமெ "ன்று கற்பிக்கப்படுகிறதோ அப்படியே பரமானப்பிர்ம்மமும் "பலவாகக் கற்பிக்கப்படுகிறது. வாஸ்தவமாயப்படியில்லை. ஜீவ "ர்களிலெப்படிப்பல உயர்வுதாழ்வு கற்பிக்கப்படுகிறதோ அப் "படி பரமானப்பிர்ம்மத்தினிடத்திலும் பலவிதமாய் உயர்வு "தாழ்வு கற்பிக்கப்படுகிறது."

---

भु स्सत्यमेव नसंशयः ॥ ३९ ॥ न जीवो जीववद्भाति साक्षाद्ब्रह्मैव केवलम् । अज्ञानाज्जीवरूपेण भासते न स्वभावतः ॥ ३८ ॥

* वेदान्तानां महावाक्यश्रवणेन तथैवच ॥ ९ ॥ मननेन तथादेव ध्यानेन परमात्मनः । प्रत्यक्ब्रह्मैक्यताज्ञानं लब्ध्वा याति शिवं पदम् ॥६ ॥ सत्यत्वेन जगद्भानं संसारस्य प्रवर्तकम् । असत्यत्वेन भानन्तु संसारस्य निवर्तकम् ॥ १६ ॥

† घटाकाशमहाकाशविभागः कल्पितो यथा । तथैव कल्पितो भेदो जीवात्मपरमात्मनोः ॥ १० ॥ यथा जीवबहुत्वं तु कल्पितं मुनिपुङ्गवाः । तथा परबहुत्वं च कल्पितं न स्वभावतः ॥ ११ ॥ यथोच्चावचभावस्तु जीवभेदेतु कल्पितः । तथोच्चावच भावस्तु परभेदे च कल्पितः ॥

பிரும்மாண்டமென்கிற வாயுபுராணம்-அத்-௬௨-ல், *
'இந்தமஹாகாசந்தானே கடத்திலடங்கினதாய்க்கொண்டு வே
"ற்றுமையைப்பெருகிறது. அப்படிப்போல, ஜீவனென்கிறபெ
"யருடையதெதுவோ அது (பிர்ம்மம்) காரியோபாதியாகியதே
"கத்திலடங்கினதாய்க்கொண்டு வேற்றுமையைப்பெருகிறது.
"இப்படியிருக்கிறதனுல் ஸச்சிதாநந்தமாகியப் பிர்ம்மைக்கியமெ
"துவோ அதுதான் மோக்ஷம்."

வித்தியாரண்யசுவாமிகளாற்செய்யப்பட்டிருக்கிற பஞ்சத
"சப்பிரகரணம். பஞ்சகோசவிவேகத்தில், ‡ " பிர்ம்மத்தினு
"டையச் சாயாப்பிரவேசத்தினுலே சக்தியானது (பிரகிருதி
"யானது)சேதநம்போல்விளங்கிறது. அந்தச்சக்தியாகிற உபாதி
"ஸம்பந்தத்தினுலே பிர்ம்மமே ஈசுவரத்தன்மையையடைந்தது.
" (பஞ்ச) கோசங்களாகிற உபாதிகளையாராய்ந்தறியுங்கால், பிர்
"ம்மமே ஜீவத்தன்மையையடைந்ததாகவிருக்கிறது. (அதெப்ப
"டிப்போலெனில்) ஒரேமனிதனுனவன் புத்திரனைக்குறித்து
"பிதாவென்றும் பௌத்திரனைக்குறித்துப் பிதாமஹனென்றும்
"சொல்லப்படுவதுபோற்றான்."

2. ஓ!ஜயவிரதா! ஜீவேசுவரர்கள் பிர்ம்மமேயென்றுமேற்க
ண்டபிரமாணங்கள் சொல்லுகின்றன. இவ்விஷயத்திற்குப்பின்
னுமநேகப்பிரமாணங்களுண்டு. உனக்குச் சுருக்கமாய்ச் சிலப்பிர
மாணங்களைமட்டும் குறிப்பிட்டுச் சொன்னேன். பின்னுமெதை
க்கேட்க வுனக்கு விருப்பமிருக்கிறதோ அதை நீ கேட்கலாம்.

ஒன்பதாவதுபிரகரணம்
முற்றிற்று.

---

* घटावच्छिन्न एवायं महाकाशो विभिद्यते । कार्योपाधिपरिच्छिन्नं तद्वद्यज्जीवसंज्ञिकम् ॥४०॥ मोक्षोब्रह्मैक्य मित्येवं सच्चिदानन्दमेव यत् ॥ ९७

‡ चिच्छायावेशत श्शक्तिश्चेतनेव विभाति सा । तच्छक्त्युपाधिसंयोगाद्ब्रह्मैवेश्वरतां व्रजेत् ॥ ४० ॥ कोशोपाधिविवक्षायां याति ब्रह्मैव जीवताम् । पिता, पितामहश्चैकः पुत्रपौत्रौ यथा प्रति ॥ ४१ ॥

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பத்தாவது பிரகரணம்.

ஜயவிரதன்—ஓ! ஞானமூர்த்தியே! அத்துவைதசித்தாந்தத்தின் பாரமார்த்திகதசையிற் பரபிர்ம்மசுவரூபமும் பிர்ம்மத்திற் கந்நியமாய் ஜகத்தில்லையென்பதும் ஜீவேசுவரஜகத்து பிர்ம்மமே யென்பதும் நன்றாய் விளக்கிக்காட்டினீர்கள். இந்தப்பாரமார்த்திகதசாவிஷயமாய் மற்றொன்றும் விளக்கிக்காட்டவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்——அதாவது—பிர்ம்மத்தினிடத்தில் ஜீவேசுவரஜகத்தாகிற இந்தபேதம் மனக்கற்பனையென்றும் பிர்ம்மசக்தியாகிற அக்ஞானமே மனதாகப் பரிணமித்து ஜகத்து முதலியவைகளைத் தோற்றுவிக்கிறதென்றும் முந்தி சூக்ஷ்மமாய்ச்சொன்னீர்கள். பிர்ம்மசக்தியென்பதுயாது? பிர்ம்மத்திற்கும் சக்திக்குமுள்ளசம்பந்தம் யாது? அந்தச்சக்தி ஜீவேசுவரஜகத்தாயெப்படித்தோற்றுவிக்கிறது? மனதென்பதுயாது? அதன் சுவரூபமும் செய்கையுமெப்படிப்பட்டது? இவைகளைப்பற்றித் தெரிந்துக்கொள்ளவிச்சிக்கிறேன். தாங்கள் கிருபைகூர்ந்து அவைகளை நன்றாய்ப் பிரமாணங்களுடனெனக்கு விளக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

2. ஸுசர்ம்மா! ஓ! சுத்தாத்துமாவானஜயவிருதா! நன்றாய் கேட்டாய். இந்த விஷயங்களையறிந்து கொள்ளுவதவசியந்தான். அவைகளைப்பற்றியப் பிரமாணங்களுடன் சொல்லுகிறேன். வேறுபற்றில்லாதமனதுடன் ஜாக்கிரதையாய்க்கேள். ஏனெனில், ஒரேநிலையில் நிருததப்பட்ட மனதுடையவனும் சூக்ஷ்மபுத்தியுடையவனுமிருக்கிறவனெவனோ அவந்தான் இவ்விஷயங்களை நன்றாயறிவான். சூக்ஷ்மபுத்தியில்லாதவும் மனநிலையில்லாதவுமானபுருஷனுக்கு இவ்விஷயத்திலறிவுண்டாகாது.

3. ஓ! குழந்தாய்! பிர்ம்மத்தினிடத்திலநேக சக்திகளுண்டு. அவை பிர்ம்மத்தைவிட வேறானவையல்ல. அக்நியிலுஷ்ணம்போலும் சூரியனிற் பிரகாசம்போலும் புஷ்பத்தில் வாஸனைபோலும் பிர்ம்மத்தைவிட்டுப் பிரியாதவைகளாயிருக்கின்றன. ஆனாற், செய்கையினாலல்லது காரியத்தினாற் சக்தி, பலவாகச் சொல்லப்படுகிறதேயன்றி சக்தியொன்றேதான். அந்தச்சக்தி

பலவிதமான செய்கைகளைச்செய்கிறது. அஞ்ஞாநசக்தியானது, சங்கற்பம் வாஸநை கருமம் இந்தசுவரூபங்களான மனதாகத்திரிபடைந்து ஆத்துமாவைப் பிரமிக்கச்செய்கிறது. ஆத்துமாவுக்குப் பந்தமோக்ஷங்களுக்கு இம்மனதே காரணமாயிருக்கிறது. இந்தமனது நசித்தால் மோக்ஷம் சித்திக்கிறது. மனது, விஷயங்களிற் பற்றுள்ளதாயும் நிலையையடையாததாயுமிருந்தாற் பிறப்பிறப்பு சுகதுக்கம்முதலிய பந்தத்தை யுண்டாக்கிறது. மனதானது விஷயங்களிற் பற்றுமல் காற்றில்லாதவிடத்திலுள்ள தீபம்போலசைவற்றிருக்கிற ஸ்திதியெதுவோ அது மனோநாசமென்று சொல்லப்படுகிறது.—இப்படிப்பட்ட மனோவிருத்தியானது ஆத்துமசுவரூபஞாநத்தில் லயித்துப்போனலதுதான் மோக்ஷம். இப்படி மனதை நாசஞ்செய்த பரமார்த்தயோகியானவன் இத்தேகம் போகிறவரையில் ஜீவன்முக்தனயிருந்து தேகம்போனவுடன் மோக்ஷமடைகிறன். ஆகையால், மனோநாசம் நித்தியசுகமான மோக்ஷத்திற்கு இன்றியமையாஸாதநமென்று அறியத்தக்கது. மனோநாசத்தினற் சுகமுண்டாகிறதென்பது சுஷுப்தியிலொவ்வொருநாளும் நம்மநுபவத்தினலறிகிறோம். எப்படியெனில், தூங்கியெழுந்திருந்தவுடன் "நான்சுகமாய்த் தூங்கினேன்" என்று அநுபவங்கண்டிருக்கிறோம். அந்தச்சுகம் எதனற்தோன்றியது? மனோநாசத்தினற்றன். சுவற்பகாலம் சுஷுப்தியிலிருக்கிறவனுக்குத் தோன்றிய சுகமற்பமானது. ஏனென்றால், சுஷுப்தி நீங்கினவுடன் அந்தசுஷுப்திசுகம் நசித்துப்போகிறது. விழித்தவுடன் மனது தோன்றி அதன்வியாபாரத்தைச் செய்யத்துவக்குவதனற் சுகங்காணவில்லை. மோக்ஷத்திலோ, மனது மறுபடியுண்டாகிறதில்லையாகையால், அது அழிவற்ற நித்தியசுகமென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், முமுக்ஷுவானவன் மனதை நாசஞ்செய்யமுயலவேண்டியதவசியம்.

4. ஸுஷுப்தியில் மனது அடங்கிப்போயிருக்கையிற் பிரபஞ்சம்முதலியவேற்றுமை தோற்றவில்லை. ஏனென்றால், மனதில்லாமையினலேதான். நிலையாய் மனதையடக்கிவிட்டவனுக்குப் பிரபஞ்சத்தோற்றுதலேது? ஆகையால், மனத்தோற்றமேப் பிரபஞ்சமென்பது நிச்சயம்.

5. ஆனால், ஞானசுவரூபியான ஆத்துமா சுகி துக்கியென்று பாவனைசெய்யக்கூடுமோவென்றால், ஆத்துமசக்தியானது ஆத்துமாவைத் தன்சுவசுவரூபத்தை யறியவொட்டாமல் மறைத்துத் தான் சுகிதுக்கியென்பது முதலியப்பிராந்தி அல்லது மோகத்தையடையும்படிசெய்கிறது. இவ்விஷயங்களை நிரூபிக்கத்தக்கப்பிரமாணங்களைச்சொல்லுகிறேன். முந்திச்சொல்லியதுபோலவே பிரமாணங்களுடையக் கிரமவரிசையையநுஸரித்துச் சொல்லப்போகிறபடியால், அந்தந்தவிஷயத்திற்குத்தகுந்ததான வாக்கியங்கள் துடர்ந்துவராமல் வித்தியாஸப்பட்டுவரும். அவைகளிலெதெது எந்தவிஷயத்திற்கு ஸம்பந்தப்படுகிறதோ அந்தவிஷயத்திற்குபயோகித்துக்கொள்ளவேண்டும்.

கடவல்லியுபநிஷத்-௩-ல், * "விக்ஞாநம் (நல்லறிவு) இல்லாதவனும் மனதையடக்காதவனும் ஆசாரமில்லாதவனுமிருக்கிறவனெவனோ அவன் பிர்ம்மபதத்தை யடையமாட்டான். ஸம்ஸாரத்தையடைகிறான். எவன் விக்ஞாநவானும் மனதையடக்கினவனு மெப்போதுமாசாரசீலனுமிருக்கிறானோ அவன் எதனால், மறுபடி பிறப்பையடைகிறதில்லையோ அப்படிப்பட்ட பிர்ம்மத்தையடைகிறான்."

இதில் விக்ஞாநமென்றுசொன்னது ஆத்துமஞாநம். ஆத்துமஞாநத்திற்கு மனதையடக்குவது நேரானஸாதநம். மனதையடக்குவதற்குப் பரிசுத்தமான ஆசாரம் ஸாதநம். ஆகையால், மனதையடக்கினவன் ஆத்துமஞாநமடைந்து தேகம்போனபிறகு மோக்ஷமடைகிறானென்று இந்தசுருதிசொல்லுகிறது.

ஷை வல்லி-௬-ல், † "இந்தமனிதனுடைய மனதிலுள்ள ஸகல ஆசைகளுமெப்போதொழிகின்றனவோ பிறகு மனிதன் மோக்ஷமடைந்தவனாகிறான். இவ்விடத்திலேயே பிர்ம்மமாகிறான். ஸகலஹிருதயக்கிரந்திகளுமிந்த ஜந்மத்திலேயே

---

* यस्त्वविज्ञानवान् भवत्यमनस्कस्सदाऽशुचिः । न स तत्पदमाप्नोति संसारंचाधिगच्छति ॥ ७ ॥ यस्तु विज्ञानवान् भवति समनस्कस्सदा शुचिः । सतु तत् पदमाप्नोति यस्मात् भूयो न जायते ॥ ८ ॥

† यदा सर्वे प्रमुच्यन्ते कामायेऽस्य हृदि श्रिताः । अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्मसमश्नुते ॥ १४ ॥ यदा सर्वेप्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।

"யெப்போதவிழ்க்கப்படுகின்றனவோ அதற்குப்பிறகு மனிதன் "மோக்ஷமடைந்தவனுகவாகிருன் (ஜீவன் முக்தனுகிருனென்ப "து கருத்து). இவ்வளவுதான் வேதாந்தங்களுடைய உபதேசம்."

(ஹிருதயக்கிரந்திகளென்ருல், மனதிலுள்ள பலவிதவாஸநாரூபங்களடங்கிய முடிகளென்பது கருத்து).

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை-வைதத்தியப் பிரகரணம்-கஉ-ல், * "தேவனுகிய ஆத்துமாவானவன் தன்னி "டத்திற் (சக்தியாகிற) தன்மாயையினுற் தன்னைக் (ஜீவேசுவரஜ "கத்தாக) கற்பித்துக்கொள்ளுகிருன். அவனே பேதங்களையறி "கிருனென்று வேதாந்தத்தின் நிச்சயம்."

ஷை-ககூ ல், † "தேவனுகிய தானே எதனுல் மோகத்தை "யடைந்தானே அப்படிப்பட்ட தேவனுடைய இந்தச்சக்தியே "மாயையென்று சொல்லப்படுகிருள்."

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை-அத்துவைதப் பிரகரணத்தில், ‡ "ஆத்துமாவினுடைய மாயையினுல் வெளிப்ப "ட்டதாயிருக்கிற (பிரபஞ்சமாகிய) ஸகலகூட்டங்களும் சுவப்ந "ம்போலிருக்கின்றன. ஸகலமானவிஷயங்களுடைய ஸாம்மியங் "களிலாவது மேன்மையிலாவது யுக்திசொல்வதற்கிடமில்லை. "இதானது (வேற்றுமையானது) மாயையினுற் பிரிக்கப்படுகிற "தேயன்றி ஒருபோதும் வேறுவிதமாயுண்டானதல்ல. வாஸ்த "வத்திற் பிரிக்கப்பட்டதாயிருக்குமானுல், மரணமற்றவஸ்துவா "னது மரணமுடையதாய்விடும். ஸத்தானபிர்ம்மத்திற்குப் "பிறப்பிறப்பானது மாயையினுற் கற்பிக்கப்படுகிறது. வாஸ்த

---

अथ मर्त्योऽमृतो भवत्येतावदनुशासनम् ॥ १५ ॥ இதன் முதல்வாக்கியத்தை சாட்டியாயன்னிபுபநிஷத்திலும் காண்க.

* कल्पयत्यात्मनात्मानमात्मादेव स्वमायया । सएव बुध्यते भेदानिति वेदान्तनिश्चयः ॥

† मायैषा तस्य देवस्य यया सम्मोहितस्स्वयं ॥

‡ संघातास्स्वप्नवत्सर्वे आत्ममाया विसर्जिताः । आधिक्येसर्वसाम्येवा नोपपत्तिर्हि विद्यते ॥ १० ॥ मायया भिद्यते ह्येतन्नान्यथाजं कथञ्चन । तत्वतो भिद्यमानो हि मर्त्यताममृतं व्रजेत् ॥ १९ ॥ सतो हि मायया जन्म

"வத்திலில்லை. வாஸ்தவத்திற் பிறந்தவனுக்குப் பிறப்புமுண்டா
"ய்க் கொண்டேயிருக்கிறது. அஸத்தானது மாயையினாற் பிற
"க்கிறதென்று சொல்லக்கூடியதல்ல. மலடிமைந்தன்வாஸ்தவமா
"யாவது மாயையினாலாவது பிறந்தானென்று சொல்லக்கூடாத
"ல்லவா. சுவப்நத்தில் மனதானது மாயையினால் (வஸ்துவாயும்
"வஸ்துவையறிகிறதாயும்) இரண்டுவிதமாய் விளங்கிறதெப்படி
"யோ அப்படி ஜாக்கிரத்திலுமிரண்டுவிதமாய் மாயையினாற் விள
"ங்கிக்கொண்டிருக்கிறது. மனதானது சுவப்நத்தில் இரண்டா
"வதற்றதைப் பலவாகப் பிரகாசிப்பிக்கிறதென்பதிலெப்படிஸந்
"தேகமில்லையோ அப்படி ஜாக்கிரத்திலும் இரண்டாவதற்றதை
"ப்பலவாகப் பிரகாசிப்பிக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. சரா
"சரப்பிரபஞ்சங்களாய்த் தோற்றுகிற இந்தத்துவைதமானது
"மனத்தோற்றமே. மனதுநாசமானாற்றுவைதம்விளங்கிறதில்லை.
"சுஷுப்தியிலெந்தமனதானது லயித்துப்போகிறதோ அப்படி
"ப்போல, யோகியினாலடக்கப்பட்டபொழுது லயமடைகிறதில்
"லை. அதுவே (அப்படிப்பட்டநிலைமையே) எங்கும் நிறைந்த
"தும் பயமற்றதுமான பிர்ம்மம். அதுதான் ஞானப்பிராப்தி. (சு
"ஷுப்தியில்) எப்போது சித்தமானது லயமடைகிறதில்லையோ
"மறுபடிவிஷயங்களிற் செல்லுகிறதுமில்லையோ அசைவற்றதா
"யும் (ஒன்றையும்) பிரகாசிப்பிக்காததாயுமிருக்கிறதோ, அப்
"போதந்தப்பிர்ம்ம ஸாக்ஷாத்காரமுண்டாகிறது."

---

युज्यते नतु तत्वतः । तत्वतो जायते यस्य जातं तस्य हि जायते ॥ २७ ॥ असतो मायया जन्म तत्वतो नैव युज्यते । वंध्यापुत्रो न तत्वेन मायया वापि जायते ॥ २८ ॥ यथा स्वप्नेद्वयाभासं स्पन्दते मायया मनः । तथा जाग्रद्वयाभासं स्पन्दते मायया मनः ॥ २९ ॥ अद्वयंच द्वयाभासं मनस्स्वप्ने नसंशयः । अद्वयंच द्वयाभासं तथा जाग्रन्नसंशयः ॥ ३० ॥ मनोदृश्यमिदं द्वैतं यत् किञ्चित् स चराचरम् । मनसोह्यमनीभावो द्वैतं नैवोपलभ्यते ॥ ३१ ॥ लीयते हि सुषुप्तेतन्निगृहीतं नलीयते । तदेव निर्भयं ब्रह्म ज्ञानालोकं समन्ततः ॥ ३५ ॥ यदा न लीयते चित्तं नच विक्षिप्यते पुनः । अनिङ्गनमनाभासं निष्पन्नं ब्रह्मतत्तथा ॥ ४६ ॥

மாண்டூக்கியோபநிஷத்-கௌடபாதகாரிகை - அலாதசா
சாந்திப்பிரகரணம்- எஉ-ல், * "கிரஹிக்கிறது கிரஹிக்காதது "என்கிற இவ்விரண்டும் சித்தத்தினுடைய சலநமே, சித்தமா "னதெப்போது விஷயங்களை கிரஹிக்கிறதில்லையோ அதனாற் "பற்றற்றதென்று சொல்லப்படுகிறது."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ங-௫-ங-ல், † "ஆசை, சங் "கற்பம், ஸம்சயம், சிரத்தை, சிரத்தையின்மை, தைரியம், அதை "ரியம், இலஜ்ஜை, விவேகம், பயம் இவையெல்லாம் மனதேதா "ன்."(ஆத்துமாவுக்கில்லை).

கைவல்யோபநிஷத்தில், ‡ "சுவப்நத்தில் ஜீவனான "வன் தன்னுடைய மாயையினாற் கற்பிக்கப்பட்ட ஸகலமான "லோகத்திலும் சுகதுக்கங்களையநுபவிக்கிறான். சுஷுப்திகா "லத்தில்(மனதுமுதலிய) ஸகலமும்லயமடைந்திருக்கையில் அக் "ஞாநத்தினாற் சூழப்பட்டவனாய் சுகசுவரூபத்தையடைகிறான்".

சுவேதாசுவதரோபநிஷத்-சூ-அ ல், $ "இந்தபிர்ம்மத்தினு "டைய பராசக்தியானது அநேகவிதமென்று சுருதிசொல்லுகிற "து. ஞாநம், பலம், கிரியை இவைகள் அதனுடைய சுவபாவமெ "ன்றுஞ்சொல்லுகிறது."

கர்ப்போபநிஷத்தில், § "இவ்விதமாகிய சரீரத்தில் மற "வாயிருக்கிறவனும் மரணமற்றவனும் ஸாக்ஷியாயும் புருஷனா "யுமிருக்கிற அந்தஆத்துமாவானவன் (அவித்தையினால்) மறைக் "கப்பட்டவனாய்க்கொண்டு ஜீவிக்கிறான். அவித்தையினாலெ அபி "மாநமுடையப் பிராணியாக ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறான்.

---

* चित्तस्पन्दितमेवेदं ग्राह्यग्राहकवत् द्वयम् । चित्तं निर्विषयं नित्यमसंगं तेन कीर्तितं ॥

† कामस्सङ्कल्पो विचिकित् साश्रद्धाऽश्रद्धा धृति रधृति र्ह्री र्धी र्भीरित्येतत् सर्वं मनएव ॥

‡ स्वप्नेतु जीवस्सुखदुःखभोक्ता स्वमायया कल्पितविश्वलोके । सुषुप्तिकाले सकले विलीने तमोऽभिभूतस्सुखरूपमेति ॥

$ परास्यशक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रियाच ॥

§ तादृग्विधे देहेऽन्तर्याम्यात्मामृतस्साक्षी पुरुषः सह्यावृतो जीवत्य-

"அவனுடைய மறைவானது அக்ஞாநம். அதுதான்விதை. அத
"னுடையமுளையந்தக்கரணம். அதனுடைய விருக்ஷம் சரீரம்."

அமிருதபிந்தூபநிஷத்தில், * "மனதானது சுத்தம் அசுத்
"தமென இரண்டுவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. காமஸங்
"கற்பம் (ஆசையினுலுண்டாகிறவிருப்பம்) உடையதசுத்தம்.
"ஆசையற்றிருக்கிறது சுத்தம். மனிதர்களுக்குப் பந்தமோக்ஷத்
"திற்குக்காரணம் மனமேதான். விஷயங்களிற் பற்றுதலுள்ளம
"னது பந்தத்தின்பொருட்டாகிறது. விஷயப்பற்றுதலற்றமனது
"மோக்ஷமே. எந்தக்காரணத்தினல் விஷயப்பற்றுதலற்றமனதி
"ற்கு மோக்ஷஞ்சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தக்காரணத்தி
"னலே முமுக்ஷுவினலெப்போதும் மனதுவிஷயமற்றதாகச்
"செய்யப்படவேண்டியது. விஷயப்பற்றைத்தள்ளினதும் ஹிரு
"தயத்திற் தடுக்கப்பட்டதுமான மனதானதெப்போதாத்துமசு
"வபாவத்தையடைந்ததாகிறதோ அப்போதது சிரேஷ்டமான
"ஸ்தானம். (மோக்ஷம்)."

நரஸிம்மோத்தரதாபிந்யுபநிஷத்-கண்டம்-கூ-ல், † "ஸாதா
"ரணமானஒரே ஆலம்விதையானதெப்படித் தன்னைக்காட்டிலும்
"வேறல்லாதஆலமரங்களையும் அதில் விதைகளையுமுண்டாக்கி
"அவ்வவ்விடத்திற்பூர்ணமாயிருக்கிறதோ இப்படிப்போல இந்த
"மாயையானவள் தனக்கந்நியமல்லாதவனேகங்களாகிற க்ஷேத்

---

भिमान्यविद्ययाचेतते प्राणी । तस्यावरकमज्ञानं बीजं तदंकुरमन्तःकरणं तद्वृक्षश्शरीरं ॥

* मनो हि द्विविधं प्रोक्तं शुद्धंचाशुद्धमेव च । अशुद्धं कामसंकल्पं शुद्धं कामविवर्जितं । मनएव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः । बन्धाय विषयासक्तं मुक्त्यै निर्विषयं स्मृतं । यतो निर्विषयस्यास्य मनसो मुक्तिरिष्यते । अतो निर्विषयं नित्यं मनः कार्यं मुमुक्षुणा । निरस्तविषयासंगं सन्निरुद्धं मनोहृदि । यदा यात्यात्मनोभावं तदा तत् परमं पदं ॥ இந்த வாக்கியங்களைத் திருபுராதாபிநீ, சாட்டியாயநீ, இந்த உபநிஷத்துக்களிலும் காண்க.

† यथा वटबीजसामान्यमेकमनेकान् स्वाव्यतिरिक्तान् वटान् स्वबीजानुत्पाद्य तत्र तत्र च पूर्णं सन्तिष्ठत्येवमेवैषा माया स्वाव्यतिरिक्तानि प-

"திரங்களைத் (தேகங்களை) தோற்றுவித்துத்தானே மாயையாக "வும் அவித்தையாகவுமாய்(பிர்ம்மத்தை)ஜீவர்களாயும் ஈசுவரனா "யும் விளங்கும்படிச்செய்கிறாள். அப்படிப்பட்ட இந்தமாயை "யானவள் விசித்திரமானவளாயும் உறுதியானவளாயும் அநேக "த்திற்குக் காரணமானவளாயும் தானேஸத்துவரஜஸ்தமோகு "ணரூபமானவளாயும் காரியங்களாகிற ஸகலஉற்பத்தியிலுங்கூட 'வெல்லாவிடத்திலும் முக்குணசுவரூபமுள்ளவளாயும் பிரும்மா "விஷ்ணு சிவன் இந்த மூர்த்திகளுடைய சுவரூபிணியாயும் "சைதந்நியத்தினால் (பிர்ம்மஸந்நிதிமாத்திரத்தினால்) விளங்கிற "வளாயுமிருக்கிறாள். ஆகையினால், மூன்றுவிதமாயிருத்தல் ஸக 'லத்திற்கும் காரணமாயிருத்தலாத்துமாவுக்கேதான்."

மைத்திரேயோபநிஷத்-க-சு-ல், *" மனதினாலே ஆத்துமா "வடையப்படுகிறது. ஆத்துமாவையடைகிறதனாலே (ஸம்ஸாரத் "திலிருந்து) நிவிருத்தியடைகிறான். விறகில்லாத அக்நியானது "தன்னுற்பத்திகாரணத்தில்லயமடைவதுபோல் விருத்திக்ஷயத் "தினாற் சித்தமானது தன்னுடைய உற்பத்திகாரணத்தில்லய "மடைகிறது. தன்னுடைய உற்பத்திகாரணத்தில் உபசாந்தி "(அடங்கிவிடுதல்) யையும் ஸத்தியத்தையுமடைந்ததாகவும் "விஷயத்திலறிவில்லாததாகவுமான மனதிற்குக் கருமவசத்தி "னால் ஸம்பவிக்கப்பட்டவைகள் பொய்யானவைகளே. சித்தந் "தான்ஸம்ஸாரம். அதை (சித்தத்தை) முயற்சியினாற் சுத்தஞ் "செய்யவேண்டும். எந்தவிதமானசித்தமுடையவனாயிருக்கிறா "னோ அந்தவிதமான ரூபமாயாகிறான். இதுபழமையான ரஹ

---

रिपूर्णानि क्षेत्राणि दर्शयित्वा जीवेशावाभासेन करोति मायाचाविद्याच स्वयमेव भवति । सैषा चित्रा सुदृढा बह्वंकुरा स्वयंगुणाभिन्नांकुरेष्वपि गुणभिन्ना सर्वत्र ब्रह्मविष्णुशिवरूपिणी चैतन्यदीप्ता तस्मादात्मनएव त्रैविध्यं सर्वत्र योनित्वं ॥

* मनसा प्राप्यते ह्यात्मा ह्यात्मापत्या निवर्तते । यथा निरिंधनो वन्हिः स्वयोनावुपशाम्यति । तथा वृत्तिक्षयाच्चित्तं स्वयोनावुपशाम्यति । स्वयोनावुपशान्तस्य मनस स्सत्यगामिनः । इन्द्रियार्थविमूढस्यानृताः कर्मवशानुगाः । चित्तमेव हि संसार स्तत्प्रयत्नेन शोधयेत् । यच्चित्तस्तन्मयोभवति

"ஸ்யம். சித்தந்தெளிந்தாற் சுபாசுபகருமங்களை நசிக்கச்செய்
"கிறான். மனத்தெளிவுள்ளவன் தன்னாத்துமசுவரூபமாகவே
"(ஜீவன்முக்தனாகவே) இருந்துகொண்டு நாசமற்ற (மோக்ஷ)
"சுகத்தையடைகிறான்."

சுபாலோபநிஷத்-உ-ல், * "அவ்வியக்தமக்ஷரத்தில்லயம
"டைகிறது. அக்ஷரம் தமஸில் (மூலப்பிரகிருதியில் அல்லது
"அக்ஞானத்தில்) லயமடைகிறது. தமஸானது பரமாத்துமாவா
"ன தேவனிடத்திலொன்றாய்க் கலந்துபோகிறது."

ஸர்வஸாரோபநிஷத்தில், † "மாயையானது யாது? அநாத்
"துமாவுக்கு (ஜடப்பிரபஞ்சத்திற்கு) மூலமானதெதுவோ அது
"தான் மாயை. அவள் ஆகாசத்தில் மேகம் முதலியவைபோற்
"பிர்ம்மத்தினிடத்திற் காணப்படுகிறாள். அந்தமாயையானவள
"நாதி. (ஆனால்) முடிவையுடையவள். பிரமாணப்பிரமாணங்க
"ளுக்குப் பொதுவானவள். இருக்கிறவளுமல்ல இல்லாதவளு
"மல்ல. இரண்டுஞ் சேர்ந்தவளுமல்ல. வாக்குக்கெட்டாதவள்.
"(பிர்ம்மமாகிய) அதிஷ்டானத்திலேயேயில்லாதவள். வித்துவா
"ன்களால் வர்ணிக்கப்படுகிற ஏற்றக்குறைதலான பேதவ்வியவ
"ஹாரங்களையுடையவள். எவள் வாஸ்தவத்திலில்லையோ அவள்
"தான் மாயை. அவள் சுவரூபமக்ஞானம். அவளேதான் மூல
"ப்பிரகிருதி, குணஸாம்மியா (ஸத்துவரஜஸ்தமோகுணங்கள்
"விகாரமடையாமல் ஸமமாயிருக்கும் நிலைமை), அவித்தைஇவை
"முதலிய அநேகாகாரமுடையவள். ஜகதாகாரமாய்ப் பரிணமி
"த்திருக்கிறவள்."

---

गुह्यमेतत्सनातनं । चित्तस्य हि प्रसादेन हन्ति कर्म शुभाशुभं । प्रसन्नात्मात्मनि स्थित्वा सुखमव्ययमश्नुते ॥ இந்த வாக்கியங்களை சாட்டியாயநீயுபநிஷத்திலும் காண்க.

* अव्यक्तमक्षरे विलीयते । अक्षरं तमसि विलीयते । तमः परेदेव एकीभवति ॥

† (का माया ? ) अनात्ममूलं माया साच ब्रह्मण्याकाशे मेघादिरिव दृश्यते । मायानाम अनादिरन्तवती । प्रमाणाप्रमाणसाधारणा न सती नासती न सदसत्यनिर्वाच्याधिष्ठानएवाविद्यमानान्तर्वाणी विकल्पनिरूप्यमाणोच्चावचव्यवहारभेदवती या नविद्यते वस्तुतस्सामाया तत्स्वरूपमज्ञानं । तदेव मूलप्रकृतिः । गुणसाम्यमविद्येत्याद्यनेकाकारजगदाकारेण परिणता ॥

நிராலம்போபநிஷத்தில், * "பிரகிருதி யாது? பிர்ம்மஸந்நிதிமாத்திரத்தினுலே பலவிசித்திரமான ஜகந்நிர்மாணஸாமர்த்தியமுடைய புத்திசுவரூபமான பிர்ம்மசக்தியே பிரகிருதி."

"அக்ஞாநம் யாது? இரண்டாவதற்றதாயும் எங்குமிடைவிடாமற் றுடர்ச்சியாயுள்ளதாயும் ஸகலசுவரூபமாயுமிருக்கிற பிர்ம்மத்திற் றேவமிருகமனுஷியஸ்தாவரஸ்திரீபுருஷ வர்ணுசிரம பந்தமோக்ஷாபாதியாகவிருக்கிற பல தேகபேதங்களினுலே கயிற்றிற்பாம்பென்கிறப் பிரமைபோற் கற்பிதமாயிருக்கிற ஞாநமே அக்ஞாநம்."

"பந்தம் யாது? அநாதி அக்ஞாநவாஸனையினுலே "நான் பிறந்தேன்" என்பது முதலியஸங்கற்பம் பந்தம்."

தேஜோபிந்துபநிஷத்-டு-ல், † "இந்தப்பிரபஞ்சமானது இல்லவேயில்லை. உண்டாயிருக்கவுமில்லை. அற்பமேனுமிருப்பையுடையதுமல்ல. சித்தந்தான் பிரபஞ்சமென்றுசொல்லுகிறுர்கள். எப்போதுமது இல்லவேயில்லை.—இந்தப்பிரபஞ்சமும் ஜகத்திற் பார்க்கப்படுகிறதாயும் பார்க்கிறதாயுமெதெதிருக்கிறதோ அப்படிப்பட்ட ஸகலமும் முயற்கொம்புக்கொப்பானவை.—இந்தஸகலஜகத்தும் மனதே. மனதெப்போதும் சத்துரு. ஸம்ஸாரம் மனதுதான். மூன்றுலகமும் மனதே. மஹத்தான துக்கமும் மனதே. ஜரைமுதலானதும் மனதே. காலமும் மனதே. அப்படியே பாபமும் மனதே. ஸங்கற்ப

---

* प्रकृतिरिति च । ब्रह्मणस्सकाशान्नानाविचित्रजगन्निर्माणसामर्थ्यैकबुद्धिरूपब्रह्मशक्तिरेव प्रकृतिः ॥

अज्ञानमिति च । रज्जौ सर्पभ्रान्तिरिवाद्वितीये सर्वानुस्यूते सर्वमये ब्रह्मणि देवतिर्यङ्नरस्थावरस्त्रीपुरुषवर्णाश्रमबन्धमोक्षोपाधिनानात्मभेदकल्पितं ज्ञानमज्ञानं ।

बन्धइति च । अनाद्यविद्यावासनया जातोहमित्यादि सङ्कल्पो बंधः ॥

† इदं प्रपञ्चं नास्त्येव नोत्पन्नं नोस्थितं क्वचित् । चित्तं प्रपञ्चमित्याहु र्नास्ति नास्त्येव सर्वदा ।—इदं प्रपञ्चं यत्किञ्चिद्यद्यज्जगति विद्यते । दृश्यरूपं च दृग्रूपं सर्वं शशविषाणवत् ।—मनएव जगत्सर्वं मनएव सदा रिपुः । मनएव हि संसारो मनएव जगत्त्रयं । मनएव महद्दुःखं मनएव जरादिकं । मनएव हि कालं च मनएव मलं तथा । मनएव हि सङ्कल्पो मनएव हि

“மும் மனதே. ஜீவனும் மனதே.——ஜாக்ரத்சுவப்நசுஷுப்திமு
“தலியன, மனசுவரூபமென்று சொல்லப்பட்டிருக்கிறது. திக்கு
“காலங்களும் வஸுக்களும் உருத்திரர்களு மாதித்தியர்களும்
“மனசுவரூபமே. காணப்படுகிற ஜடமும் உண்டாயிருக்கிற விரு
“மைகளுமக்ஞாநமும் மனதென்றே சொல்லப்படுகின்றன. எ
“தெதுண்டோ அதெல்லாம் மனக்கற்பிதமே. வாஸ்தவமாயில்
“லையென்று நிச்சயித்துக்கொள்.”

நாதபிந்தூபநிஷத்தில், * “ பொய்யானதோற்றத்திற்குற்
“பத்தியேது? உற்பத்தியில்லாதபோது இருப்பேது? மண்பாத்
“திரத்திற்கு உபாதாநகாரணம் மண்ணெப்படியோ அப்படிப் பிர
“பஞ்சத்திற்கு அக்ஞாநமே உபாதாநகாரணமென்று வேதாந்த
“ங்களினாலறியப்படுகிறது. அக்ஞாநம் நசித்தாற் பிரபஞ்சமெ
“ங்கே? பிரமையினாற் கயிற்றைவிட்டுப் பாம்பையெப்படி கிரஹி
“க்கிறானோ அப்படி மூடபுத்தியுள்ளவன் வாஸ்தவத்தையறியா
“மல் ஜகத்தை (ஸத்தியம்போல்) பார்க்கிறான். கயிற்றின் துண்
“டென்கிற ஞாநமுண்டானாற்பாம்பென்கிற ஞாநம்போய்விடுகிற
“துபோல ஆதாரமானவஸ்துவினுடைய ஞாநமுண்டானாற் பிரப
“ஞ்சமில்லாமற் போகிறது.”

தியாநபிந்தூபநிஷத்தில், † “எந்தமனதானது, மூன்றுல
“கத்தினுடைய சிருஷ்டி ஸ்திதி லயகாரியங்களைச் செய்கிறதோ
“அந்தமனதானது லயித்துப்போனா லதுதான் விஷ்ணுவினு
“டைய பரமபதம்.” (வியாபகபிர்ம்மத்தினுடைய ஸ்தாநமாகிய
மோக்ஷம்).

---

जीवकः ।——जाग्रत्स्वप्नसुषुप्त्यादिमनोमयमितीरितं । दिक्कालावसवो रुद्रा आदित्याश्च मनोमयाः । दृश्यं जडं द्वंद्वजातमज्ञानं मानसं स्मृतं । सङ्कल्पमेव यत्किञ्चित्तत्वं नास्तीति निश्चिनु ॥

* अध्यस्तस्य कुतो जन्म जन्माभावे कुतःस्थितिः । उपादानं प्रपञ्चस्य मृद्भाण्डस्यैव पश्यति । अज्ञानंचेति वेदान्तै स्तस्मिन्नष्टे क्व विश्वता । यथा रज्जुं परित्यज्य सर्पं गृण्हाति वै भ्रमात् । तद्वत्सत्यमविज्ञाय जगत्पश्यति मूढधीः । रज्जुखण्डे परिज्ञाते सर्परूपं न तिष्ठति । अधिष्ठाने तथा ज्ञाते प्रपञ्चे शून्यतां गते ॥

† यन्मनस्त्रिजगत्सृष्टि स्थितिव्यसनकर्मकृत् । तन्मनो विलयं याति तद्विष्णोः परमं पदं ॥

நாரதபரிவிராஜகோபநிஷத்-கூ-ல், * "(தேகாதிப்பிரபஞ்ச "ங்களுடைய) உற்பத்திக்கிக் காரணம் காலமா? (அக்நிக்குஷ்ண "ம்போல்) சுவபாவமா? கருமமா? காரணமே இல்லையா ? (பஞ்ச "மஹா) பூதங்களா? (ஜீவாத்தும பரமாத்துமாவாகிற) புருஷனா? "அல்லது (காலம் முதலான) இவர்களுடைய சேர்க்கையா?

ஆத்துமா (ஸகலத்திற்கும் போக்தாவாக) விருக்கிறபடியி "னாலே (அவன்காரணம்) அல்ல. சுகதுக்கத்திற்கு ஹேதுவிரு "க்கிறதனாலே ஜீவாத்துமா எஜமானனல்ல. அவர்கள் (இந்த "ஜகத்திற்குக் காரணமெதென்று தேடிக்கொண்டிருந்த மஹரி "ஷிகள்) தியாநயோகத்தையநுஸரித்தவர்களாய்க் காலம் ஆத் "துமா முதலானவர்களுடன் கூடியிருக்கிற ஸகலகாரணங்களை "யுமெந்த ஒருவனேவுகிறனோ அந்த தேவனுடைய சுவகுணங் "களினால் மறைந்திருக்கிற ஆத்துமசக்தியைக் காரணமாக வறி "ந்தார்கள்." (என்றால், ஜகத்திற்கு பிர்ம்மசக்தியேகாரணமெ "ன்று நிச்சயித்தார்களென்பது கருத்து.)

ஸீதோபநிஷத்தில், † "இந்தப் பிரகிருதியானவள், வேத "சுவரூபிணீ. ஸகலதேவசுவரூபிணீ. ஸகலலோகசுவரூபிணீ. "ஸகலகீர்த்திசுவரூபிணீ. ஸகலசுவரூபிணீ. ஸகல தருமசுவரூ "பிணீ. ஸகல காரியகாரணங்களுக்காதார சுவரூபிணீ. தேவே "சனுடைய மஹாலக்ஷ்மீ. (ஆத்துமாவுக்கு) வேறாயும் வேறல்லா "ததாயுமிருக்கிற ரூபமுடையவள். சேதநாசேதநசுவரூபியான "வள். பிரும்மாமுதல் ஸ்தாவரம் வரையிலுள்ள சுவரூபமாயிரு "க்கிறவள். அவைகளுடைய குணகருமவிபாகரூபமான பேத "த்தினாலே சரீரரூபத்தையுடையவள். தேவரிஷி மனிதகந்தர்

---

* कालः स्वभावो नियतिर्यदृच्छाभूतानि योनिः पुरुषइति चिन्त्यं । संयोगएषां नत्वात्मभावादात्माह्यनीशस्सुखदुःखहेतोः । ते ध्यानयोगानुगता अपश्यन् देवात्मशक्तिं स्वगुणैर्निगूढां । यः कारणानि निखिलानि तानि कालात्मयुक्तान्यधितिष्ठत्येकः ॥ இந்த வாக்கியங்களை சுவேதாசுவதரோபநிஷத்-க-உ-லும் காண்க.

† सा सर्ववेदमयी सर्वदेवमयी सर्वलोकमयी सर्वकीर्तिमयी सर्वमयी सर्वधर्ममयी सर्वाधारकार्यकारणमयी महालक्ष्मीर्देवेशस्य कर्मविभागभेदाच्छरीररूपा । देवर्षिमनुष्यगन्धर्वरूपा । असुरराक्षसभूतप्रेतपिशाचभूतादिभूतशरी-

"வரூபிணீ. அசுர ராக்ஷஸ பூதப்பிரேத பிசாசபூதாபூதசரீரரூ "பிணீ. பஞ்சபூதங்கள் இந்திரியம் மனது பிராணன் இந்த "ரூபமாயிருக்கிறவளென்றறியப்படுகிருள்."

நிர்வாணோபநிஷத்தில், * "உண்டாயிருக்கிற ஜகத்தானது "நித்தியமானதல்ல. சுவப்நத்திற்கண்ட ஜகத்திற்கும் ஆகாசத் "திற் தோற்றுகிற (கந்தர்வநகரம் முதலிய) ரூபம் முதலியவை "களுக்குமொப்பானது."

மண்டலப் பிராம்மணோபநிஷத்-உ-ந-ல், † "மனோநாசமா "னது சுஷுப்தியிலும் ஸமாதியிலும் பேதமில்லாவிட்டாலும் "அவ்விரண்டுக்கும் மிகுந்த பேதமிருக்கிறது. (சுஷுப்திபி "லோ மனது) அக்ஞாநத்தில் லயமடைகிறதனுல் (அந்த லயம்) "மோக்ஷத்திற்கு ஹேதுவாகவாகிறதில்லை. ஸமாதியிலோ ஆத் "துமாகாரமாய்ச் செய்யப்பட்டிருக்கிற அகண்டாகாரவிருத்தி "யினுலே தமஸாகிற அக்ஞாநவிகாரம் நசித்துப்போயிருக்கிற "வனுக்கு ஆத்துமஸாக்ஷி சைதந்நியத்திற் பிரபஞ்சம் லயமடை "கிறது. (ஏன் மனதைச் சொல்லாமற் பிரபஞ்சலயஞ்சொல்லப் "பட்டதென்றுல்)பிரபஞ்சம் மனக்கற்பிதமானதனுலேதான்."

மண்டலப்பிராம்மணோபநிஷத்-உ-ச-ல், ‡ "ஸங்கற்பம் முத "லியனவோடுகூடியிருக்கிற மனது பந்தஹேதுவாயிருக்கிறது. "ஸங்கற்பாதிகளைவிட்டிருக்கிற மனது மோக்ஷத்தின்பொருட் "டாகிறது."

ஷை-ந-க-ல், $ "சிரேஷ்டமான சாந்தியையடைந்த மனதா "னது, சலநமற்றதாய்ப் பரமாத்துமாவினிடத்தில் லயமடைந்த

---

रूपा । भूतेन्द्रियमनःप्राणरूपेति च विज्ञायते ॥

* अनित्यं जगद्यज्जनितंस्वप्नजगदभ्रगजादितुल्यं ॥

† सुषुप्तिसमाध्योर्मनोलयाऽविशेषेऽपि महदस्त्युभयोर्भेदः । तमसि लीनत्वान्मुक्तिहेतुत्वाभावाच्च । समाधौ मृदिततमो विकारस्य तदाकाराकारिताऽखण्डाकारवृत्त्याऽत्मकसाक्षिचैतन्येप्रपञ्चलयस्सम्पद्यते । प्रपञ्चस्य मनः कल्पितत्वात् ॥

‡ सङ्कल्पादिकं मनोबन्धहेतुः । तद्विमुक्तं मनोमोक्षाय भवति ॥

$ परमशान्तिं स्वीकृत्य मनःप्रचारशून्यं परमात्मनि लीनंभवति ।

"தாகவாகிறது. பாற்கறந்தபிறகு மாட்டின் முலைப்பாற்போல் "(பால் நஷ்டமாய்விட்டதுபோல்) எல்லா இந்திரியக்கூட்டம் "நஷ்டமானால் மனோநாசமுண்டாகிறது. இதுவே மனமில் "லாமை."

மண்டலபிராம்மணோபநிஷத்.-டு-ல்,*"விஷயத்துடன்கூடின ம "னது பந்தத்தின்பொருட்டும் விஷயமற்றமனது முக்தியின்பொ "ருட்டுமாகிறது. ஆகையால், ஸகல ஜகத்தும் சித்தத்தின் விஷ "யமே (சித்தத்தினுடைய தோற்றமே). அதே சித்தமானது "ஒன்றையும் பற்றாமையே மனோநாசமடைந்த நிலைமையாயிரு "க்கிறது. அதுவே லயத்திற்கு யோக்கியமாய்ப் பரிபக்குவம "டைந்ததாகவாகிறது. எந்த மனதானது, மூன்றுலகத்தினு "டைய சிருஷ்டிஸ்திதிநாசகாரியங்களைச் செய்கிறதோ அந்தமன "தானது லயித்துப்போவது விஷ்ணுவினுடைய பரமபதம். "அந்த மனோநாசத்தினாலே சுத்தாத்துவைத ஸித்தியுண்டாகி "றது. எதனாலென்றால், பேதமில்லாததனாலேதான். இதுதா "ன் பரமதத்துவம்."

மஹாநாராயணோபநிஷத்-ந-ல், † "அவித்தியாப்பிரபஞ்ச "மான ஸகலமும் சுருங்கறதும் விரிகிறதுமாயிருக்கிற மஹாமா "யையின்விளையாட்டே. வாஸ்தவத்தில் யாதொன்றுமில்லை.— "ஸகலமான காரியோபாதிகளோடுங்கூடினவளாயும் ஸத்து அ "ஸத்துக்களுக்கு விலக்ஷணமானவளாயும் வாக்குக்கெட்டாத "வளாயும் இன்னதென்று சொல்லக்கூடாத லக்ஷணமுடையவ "ளாயும் காணப்படுகிறவும் காணப்படாதவும் சுவரூபமுள்ளவ

---

पयस्त्रवानन्तरं धेनुस्तनक्षीरमिव सर्वेन्द्रियवर्गे परिनष्टे मनोनाशं भवति । तदेवामनस्कं ॥

* स विषयं मनोबन्धाय निर्विषयं मुक्तये भवति । अतस्सर्वं जगच्चित्तगोचरं । तदेव चित्तं निराश्रयं । मनोन्मन्यवस्थापरिपक्वलययोग्यं भवति ।—यन्मनस्त्रिजगत्सृष्टिस्थितिव्यसनकर्मकृत् । तन्मनो विलयं याति तद्विष्णोः परमं पदं । तल्लयाच्छुद्धाद्वैतसिद्धिः भेदाभावात् एतदेव परमतत्वं ॥

† सङ्कोचविकासात्मकमहामायाविलासएव सर्वोप्यविद्याप्रपञ्चः । परमार्थतो न कश्चिदस्ति ।—सर्वकार्योपाधिसमन्विता सदसद्विलक्षणाऽनिर्वाच्यालक्षणशून्या आविर्भावतिरोभावात्मिकाऽनाद्यखिलकारणकारणानन्तमहामाया

"ளாயும் அநாதியாயும் ஸகலத்திற்குங்காரணமாயும் முடிவற்
"றகாரணமாயும் விசேஷணவிசேஷியமாயுமிருக்கிற மஹாமா
"யையானவள் அதிசூக்ஷ்மமாயும் மூலகாரணமாயுமிருக்கிற அவ்
"வியக்தத்தை (மூலப்பிரகிருதியாகிற சக்தியை) யடைகிறாள்.
"அவ்வியக்தமானது பிர்ம்மத்திற் பிரவேசிக்கிறது."

பைங்களோபநிஷத்-உ-ல், * "இரண்டாவதற்ற ஒன்றான
"தே பிர்ம்மமென்று சொல்லப்படுகிறது. அதனிடத்திற், பா
"லைநிலத்தில் ஜலத்தோற்றம், கிளிஞ்சிலில்வெள்ளி, கட்டையிற்
"புருஷன், ஸ்படிகத்தில் வர்ணமிவை முதலியவைபோற் சிவப்பு
"வெளுப்புக் கருப்பு இப்படிப்பட்ட குணசுவரூபமானதும் கு
"ணஸாம்மியசுவரூபமானதும் வாக்குக்கெட்டாததுமாகிய மூல
"ப்பிரகிருதியிருந்தது."

மஹோபநிஷத்-அ-உ-ல், † "ஓ! சுகா! எந்த விசேஷ
"ஞானத்தினாலே புருஷனானவனுடனே ஜீவன்முக்தத் தன்மை
"யையடைவனோ அப்படிப்பட்ட ஞானத்தினுடைய விவரமான
"து அதிசூக்ஷ்மபுத்தியினுடைய ஸத்தேதான். காணப்படுகிற
"பிரபஞ்சமில்லையென்கிற ஞானத்தினால் மனத்தோற்றமாகிற பி
"ரபஞ்சத்தினுடைய நாசமானதுண்டாகுமேயானால், அதனாலு
"ண்டாகிறது மோக்ஷசுகந்தான். (மனதிலுள்ள) வாஸனைமு
"முவதையுந்தள்ளிவிடுவதெதுவோ அது உத்தமமான மோக்ஷ
"மென்றும் அதுவே பரிசுத்தமானமார்க்கமென்றும் ஸத்துக்க
"ளாற் சொல்லப்படுகிறது. சுத்தமான வாஸனையினாலே யார் ம
"றுபடி ஜநநமாகிற அநர்த்தத்தையடைகிறதில்லையோ அவர்கள

विशेषेण विशेषितापरमसूक्ष्ममूलकारणमव्यक्तं विशति । अव्यक्तं विशेत् ब्रह्मणि ॥

* एकमेवाद्वयं ब्रह्म तस्मिन्मरुमरीचिका । स्थाणुस्फटिकादौ जलरौप्यपुरुषरेखादिवत् । लोहितशुक्लकृष्णगुणमयी गुणसाम्याऽनिर्वाच्या मूलप्रकृतिरासीत् ॥

† श्रीशुकज्ज्ञानविस्तारं बुद्धिसारान्तरान्तरं । यद्विज्ञानात्पुमान् सद्योजीवन्मुक्तत्वमाप्नुयात् । दृश्यं नास्तीति बोधेन मनसो दृश्यमार्जनं । संपन्नं चेत्तदुत्पन्ना परानिर्वाणनिर्वृतिः । अशेषेणपरित्यागो वासनायायं उत्तमः । मोक्षइत्युच्यते सद्भिस्सएव विमलक्रमः । ये शुद्धवासनाभूयो न जन्मानर्थ-

"ரியவேண்டியதை யறிந்தவர்களாயும், மஹாபுத்திசாலிகளாயு
"ம், ஜீவன்முக்தர்களாயுஞ் சொல்லப்படுகிறார்கள். பிரபஞ்சத்
"திலுள்ள வஸ்துக்களுடைய உறுதியான பாவனை (நினைப்பு)
"பந்தமென்று சொல்லப்படுகிறது. ஓ! பிராம்மணோத்தமா!
"வாஸனையினுடைய அடக்குதலெதுவோ அதுமோக்ஷமென்று
"சொல்லப்படுகிறது."

மஹோபநிஷத்-அத்-ரு-ல், * "விஷயானுபவங்களுக்குச்
"சித்தந்தான் காரணமாயிருக்கிறது. அந்தச்சித்தத்திலேதான்
"மூன்றுலகமும் விளங்குகின்றன. அந்தச்சித்தம் நசித்தால் ஜக
"த்து நசிக்கிறது (ஆகையால்) அப்படிப்பட்டசித்தத்தைப் பிர
"யத்நத்தினுற் சுத்தஞ் செய்யத்தக்கது."

ஷை உபநிஷத்-சு-க-ல், † "பரமாத்துமசுவரூபமாயிருக்
"கிற சக்தியானவள் ஒருத்தியாகவே, ஜகத்தை சிருஷ்டிக்கிற
"தென்கிற விளையாட்டினுலே ஒன்றாயும் பலவாயுமிருக்கிற ஜகத்
"துக்களாக விருத்தியடைகிறாள்."

யோகசிகோபநிஷத்-க-ல், ‡ "தன்னுடையவாத்துமாநந்த
"பரமபதமாகிய (மோக்ஷ) சுகமானது, (சித்த) லயத்தினுலடை
"யப்படுகிறது."

ஷை உபநிஷத்-உ-ல், $ "இந்த ஸகலப்பிரபஞ்சமும் எவ
"ளாலே வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அவள்தான் மஹாமாயை.
"அவள்தான் மஹாலக்ஷ்மீ, மஹாதேவீ, ஸரசுவதீ, ஸகலத்திற்
"குமாதாரமானசக்தியவள்தான். அவ்வியக்தமுமவளே."

---

भागिनः । ज्ञातज्ञेयास्त उच्यन्ते जीवन्मुक्ता महाधियः । पदार्थभावनादार्ढ्यं बंधइत्यभिधीयते । वासनातानवोब्रह्मन् मोक्षइत्यभिधीयते ॥

* चित्तं कारणमर्थानां तस्मिन्नस्ति जगत्त्रयं । तस्मिन्क्षीणे जगत्क्षीणं तच्चिकित्स्यं प्रयत्नतः ॥

† द्वैताद्वैतसमुद्भूतै जगन्निर्माणलीलया । परमात्ममयी शक्तिरद्वैतैव विजृम्भते ॥

‡ लयात्सम्प्राप्यते सौख्यं स्वात्मानन्दं परं पदं ।

$ महामाया महालक्ष्मी महादेवी सरस्वती । आधारशक्तिरव्यक्ता यया विश्वं प्रवर्तते ।

யோகசிகோபநிஷத்-சு-ல்,*"சித்தஞ்சலித்துக்கொண்டிருக்கை "யில் ஸம்ஸாரமென்றும், சித்தஞ்சலிக்காமலிருக்கையில் மோ "க்ஷமென்றுஞ்சொல்லப்படுகிறது. ஆகையால், சிரேஷ்டமான "ஞானத்தினுற் சித்தத்தைப் பரமாத்துமாவினிடத்தில் நிலையாய் "நிறுத்தவேண்டியது. சித்தமானது விஷயாநுபவத்திற்குக் கார "ணமாயிருக்கிறது. சித்தம் நசித்தால் ஜகத்தும் (ஜகத்தோற்ற "மும்) நசிக்கிறது. (ஆகையால்) பிரயத்தநத்தினுற் சித்தத்தைப் "பரிசுத்தஞ்செய்யவேண்டியது."

அந்நபூர்ணோபநிஷத்-சு-ல், † "இந்தச்சரீரத்திற், சித்தத் "தினுடைய விஷயவியாபாரமானது துக்கத்தின் பொருட்டும் "சித்தநாசமானது (சித்தம் விஷயத்திற் பற்றுததானது) சுகத் "தின் பொருட்டுமாகிறது. சித்தத்தினுடைய விஷய வியாபாரங் "களை நசிக்கச்செய்து சித்தநாசத்தை யடையவேண்டியது."

பாசுபத பிரும்மோப நிஷத்தில், ‡ "என்னுடைய மாயா சு "வரூபமானது மூன்று சக்தியுள்ளது. ஆகாசத்தைப் போலறி "யக்கூடாதது. அது என்னைவிட வேறுனதல்ல, ஸத்தான பி "ர்ம்மத்திற் கந்நியமாக மாயை யென்பது வாஸ்தவத்திலில்லை. "ஆத்துமநிஷ்டையிலிருக்கிற யோகிகளுக்குத் தன்னுத்துமாவி "னிடத்தில் மாயையானது கற்பிக்கப்பட்டு ஸாக்ஷிரூபமாய் வி "ளங்கிறது. பிர்ம்மஞானத்தினுல் நசித்துப்போகிறது."

தேவீஉபநிஷத்தில், || "இந்த தேவியானவள் ஆத்துமாவி "னுடைய சக்தியாயிருக்கிருள். இவள் பிரபஞ்சத்தை மோஹி "ப்பிக்கிருள்."

---

* चित्ते चलति संसारो निश्चलं मोक्षउच्यते । तस्माच्चित्तं स्थिरीकुर्यात् प्रज्ञया परयापरे । चित्तं कारणमर्थानां तस्मिन्सति जगत्त्रयम् । तस्मिन्क्षीणे जगत्क्षीणं तच्चिकित्स्यं प्रयत्नतः ॥

† चित्तसत्तेहदुःखाय चित्तनाशस्सुखायच । चित्तसत्तां क्षयं नीत्वा चित्तनाशमुपानयेत् ॥

‡ गगनो मम त्रिशक्ति माया स्वरूपः । नान्योमदस्ति—नास्ति सत्तातिरेकेण नास्ति माया च वस्तुतः । योगिना मात्मनिष्ठानां माया स्वात्मनि कल्पिता । साक्षिरूपतया भाति ब्रह्मज्ञानेन बाधिता ॥

|| एषाऽऽत्म शक्तिरेषा विश्वमोहिनी ॥

தரிசநோபநிஷத்-க0-ல், * "ஒன்றாகவேயிருந்துகொண்டி
"ருக்கிற ஆத்துமா, மாயையாகிற பிரமையினாலே பேதிக்கப்படு
"கிறது. சுவரூபத்தினாலெ பேதமில்லை. ஆகையால், அத்துவை
"தமேஉள்ளது. பிரபஞ்சமுமில்லை உற்பத்தியுமில்லை.——ஆகை
"யினாலெ மனதைக்காட்டிலும் வேறாக ஜகத்துமில்லை மாயையு
"மில்லை."

வராஹோபநிஷத்-உ-ல், † "ஜகத்து முழுதும் மனத்தோ
"ற்றமாத்தரத்தினாலேயே யுண்டாயிருக்கிறது. எண்ணம்மாத்
"தரத்தினாலேயே ஜகத்துத் தோற்றுகிறது. இந்த எண்ணம்
"மாத்தரமாயிருக்கிற ஜகத்தைத் தள்ளி நிர்விகற்பஸமாதியை
"யாசிரயித்து என்னுடைய ஸ்தாநத்தை மனதினாற் பாவனை
"செய்."

ஷை-ஙு-ல், ‡ "இந்த ஸம்ஸாரத்திற்குச் சித்தந்தான் கார
"ணமாயிருக்கிறது. அதைப் பிரயத்நத்தினாற் சோதனைசெய்
"யவேண்டியது."

ஸரஸ்வதீரஹஸ்யோபநிஷத்தில், $ "மாயைக்கு விக்ஷேபம்
"ஆவரணமென இரண்டு சக்திகளுண்டு. விக்ஷேபசக்தியானது
"சூக்ஷ்மம் முதல் பிர்ம்மாண்டம்வரையிலுள்ள ஜகத்சிருஷ்டியை
"ச்செய்கிறது. உள்ளுக்குள்ளாக, பார்க்கிறது பார்க்கப்படுகி
"றது இந்த பேதங்களையும் வெளியிற் பிர்ம்மத்திற்கும் பிரபஞ்
"சத்திற்கும் பேதமுண்டாகும்படியாயும் ஆவரணசக்திதான் ம
"றைக்கிறது. இதுதான் ஸம்ஸாரத்திற்குக் காரணம்."

---

* एकस्सन् भिद्यते भ्रान्त्या मायया न स्वरूपतः । तस्मादद्वैत मेवास्ति न प्रपंचो न संसृतिः।— तस्मान्मनः पृथङ्नास्ति जगन्माया च नास्ति हि॥

† सङ्कल्पमात्र कलनेन जगत्समग्रं सङ्कल्पमात्र कलने हि जगद्विलासः । सङ्कल्पमात्र मिदमुत्सृज निर्विकल्पमाश्रित्य मामकपदं हृदि भावयस्व ॥

‡ चित्तमूलं हि संसार स्तत्प्रयत्नेन शोधयेत् ॥

$ शक्तिद्वयं हि मायाया विक्षेपा प्रतिरूपकं । विक्षेप शक्तिर्लिङ्गादि ब्रह्माण्डान्तं जगत्सृजेत् । अन्तर्दृक् दृश्ययोर्भेदं बहिश्च ब्रह्मसर्गयोः । आवृणोत्य पराशक्तिस्सा संसारस्य कारणम् ॥

முக்திகோபநிஷத்-உ-ல், * "கர்த்திருத்துவபோக்திருத்
"துவ (நான் செய்கிறேன், நான் அநுபவிக்கிறேனென்கிற அபி
"மானம்), சுகதுக்கம் முதலிய இலக்ஷணமுள்ளச் சித்தத்தினு
"டைய தருமமானது துக்கசுவரூபமாயிருக்கிறபடியினாலே மனி
"தனுக்குப் பந்தமாகிறது. அதனுடைய அடக்குதற்தான் ஜீ
"வன் முக்தி.——ஆகையினாலே, வாஸனையுடன் கூடின மனது
"பந்தமுள்ளதென்று ஞானிகளறிகிறார்கள். வாஸனையிலிருந்து
"விடுபட்டமனதானது முக்தமென்று சொல்லப்படுகிறது.——
"ஆயிரம் முளைகள் கிளைகள் துளிர்கள் காய்கனிகளிவைகளையு
"டைய இந்த ஸம்ஸார விருக்ஷத்திற் கிந்தமனதே மூலமாய் (ஆ
"ணி வேராய்) இருக்கிறது. அதை ஸங்கற்பமென்றே எண்
"ணுகிறேன்.——ஞானிக்கு மனது நாசமடைகிறது. அக்ஞானிக்
"கு மனதே விலங்காயிருக்கிறதல்லவா."

மஹாபாரதம்-பீஷ்மபருவம்-ஸ்ரீ பகவத்கீதை-அ-எ-ல், †
"என்னுடையப் பிரகிருதியே பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம்,
"மனது, புத்தி, அகங்காரம் இப்படி யெட்டு விதமாய்ப் பிரிந்திரு
"க்கிறது. ஓ! அர்ஜுனா! மேற்குறித்த எட்டு விதமானப் பிரகி
"ருதி நிகிருஷ்டமானது. இதைப்பார்க்கிலும் அந்நியமானது
"ம் எந்தப் பிரகிருதியினாலே இந்தப் பிரபஞ்சமானது தரிக்கப்
"பட்டிருக்கிறதோ அப்படிப்பட்டதும் பிராணன்களை தரிக்கிற
"தற்கு ஹேதுவானதும் என்னுடைய அம்சசுவரூபமானதுமான
"அந்தப் பிரகிருதியை சிரேஷ்டமென்றறி."

---

* पुरुषस्य कर्तृत्व भोक्तृत्व सुखदुःखादिलक्षणश्चित्त धर्मःक्लेशरूपत्वात् बंधो भवति। तन्निरोधनं जीवन्मुक्तिः ।—तस्माद्वासनया युक्तं मनोबद्धं विदुर्बुधाः । सम्यग्वासनयात्यक्तं मुक्तमित्यभिधीयते।—सहस्रांकुरशाखात्मा फलपल्लवशालिनः । अस्य संसारवृक्षस्य मनोमूलमिदं स्थितं । संकल्पएव तन्मन्ये ।— ज्ञमनो नाशमभ्येति मनोऽज्ञस्य हि शृङ्खला ॥

† भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेवच । अहङ्कारइतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ ४ ॥ अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धिमेऽपराम् । जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५ ॥

வாஸிஷ்டராமாயணம்-ந-ஸர்க்கம்-கூக-ல், * "ஸங்கற்பத்தி "னாலேயே விருத்தியடைந்திருக்கிற ரூபத்தையுடைய மனதை "ஜடாஜடமாகவறி. (அது) பிர்ம்மசுவரூபமானதனாலே ஜடமல்ல. "உருவமாய்க்காணப்படுகிறதனாலே ஜடமாயுமிருக்கிறது. (மன "திற்கு) காணப்படுகிறதும் அநுபவிக்கப்படுகிறதுமான வஸ்து "க்களாய்ப்பார்க்கையிலந்தவஸ்துக்களாகவும், ஸத்தியமான பிர் "ம்மமாய்ப்பார்க்கையில் (மனதினாற்பார்க்கப்படுகிறதும் அநுப "விக்கப்படுகிறதுமான வஸ்துக்கள் பிர்ம்மத்தைத்தவிர) வே "றல்லாததாகவுமாகிறது. தங்கத்திற்கடகத்தன்மையெப்படி "யோ அப்படிப் பிர்ம்மத்தில் ஜகத்தினிருப்பு. பிர்ம்மமே ஸகல "சுவரூபமாயிருக்கிறதனாலே ஜடமெல்லாம் சித்சுவரூபந்தான். "பிரும்மா முதற் கல்வரையிலுள்ள சுவரூபமானது ஜடமுமல்ல "சேதநமுமல்ல."

வாஸிஷ்டம்-ச-ஸர்-கக-ல், † "ஒரேரூபமான ஜலம்போல் "எங்கும் நிறைந்தசுவரூபமாகவேயிருக்கிறவளாயும், அழுக்கற் "றவளாயுமிருக்கிறவளெவளோ (அந்தச்சக்தியானவள்),எங்கும் "வியாபித்திருக்கிறதாயும், பிரகாசசுவரூபமாயும், பரிசுத்தமா "யுந் துன்பமற்றதாயும், பிரிவற்றரூபமாயும், ஸகலசக்தியுடைய "தாயும், ஆதிமுடிவற்றதாயும் இரண்டாவதற்ற ஒரேசுவரூப "மாத்தரமாயுமிருக்கிற பிர்ம்மத்தினிடத்திலே, வேறல்லாவிட் "டாலும் வேறாய்ச்செய்யப்பட்ட (வஸ்து)போல் விளங்குகிறாள். "தன்னுடைய நிர்மலசுவரூபத்திலிருப்பையுடையவைகளாயிருக் "கிற சக்திகள், வியக்கத்தக்கவையாயும் சலித்துக்கொண்டிருக் "கிறவிசித்திரமான ஆகாரமுடையவைகளாயுமிருக்கின்றன.சக்தி

* जडाजडं मनो विद्धि सङ्कल्पात्मबृहद्वपुः । अजडं ब्रह्मरूपत्वाज्जडं दृश्यात्मतावशात् ॥ ३१ ॥ दृश्यानुभवसत्यात्म न सद्भावे विलासितत् । कटकत्वं यथा हेम्नि तथा ब्रह्मणि संस्थितं ॥ ३२ ॥ सर्वत्वाद्ब्रह्मणस्सर्वं जडं चिन्मयमेवच । अस्मदादि शिलान्तात्मा न जडं न च चेतनम् ॥३३॥

† एकरूपाम्बुसामान्यमया एव निरामयाः । तथैवास्मिन्प्रविततेसिते शुद्धे निरामये ॥ ४१ ॥ ब्रह्ममात्रैकवपुषि ब्रह्मणि स्फाररूपिणि । सर्वशक्तावनाद्यन्ते पृथग्वद पृथक्कृताः ॥ ४२ ॥ संस्थितास्शक्तयश्चित्रा विचित्राकारचञ्चलाः । नानाशक्तिर्हि नानात्वमेति स्वे वपुषि स्थितिम् ॥ ४३ ॥

"பலவாகையாற் பலவிதமாகவாகிறது, ஜலத்தில், அலைக்கூட்டம்
"போற் பிர்ம்மத்தினிடத்தில் விருத்தியடைந்திருக்கிறது. (இ
"தெல்லாம்) பிர்ம்மமே. ஸ்திரீ புருஷன் அலிரூபமாயிருக்கிற
"தும் பிர்ம்மமே. ஜகத்தென்கிற பெயர் கற்பனையைத்தவிர வே
"றில்லை. (அது) முன்னிருந்ததுமல்ல, இப்போதிருக்கிறதுமல்
"ல, இனியிருக்கப்போகிறதுமல்ல. பிர்ம்மத்திற்கும் ஜகத்திற்
"கும் பேதமானதற்பமேனுமில்லை. இந்த பிர்ம்மமானது ஸம்பூர்
"ணமாய் நிறைந்திருக்கிறது. ஜகத்தும் பிர்ம்மமாத்திரமே. பிர
"யத்தநத்துடன் இப்படி பாவனைசெய். (இதற்கு) வேறான எல்
"லாவற்றையுந்தள்ளிவிடு."

வாஸிஷ்டராமாயணம்-ச-ஸர்க்கம்-ருகூ-ல், * "ஓ! இராஜ
"புத்திரா! பிர்ம்மதத்துவமே இந்தப்பிரபஞ்சமெல்லாஞ் சூழ்ந்
"துகொண்டிருக்கிறது. எதனாற் பிர்ம்மம் ஸகலசக்தியுள்ளதோ
"அதனாலே ஸகல சக்திகளும் பிர்ம்மத்தினிடத்திலிருக்கிறதாக
"(காரியங்களால்) ஊகிக்கப்படுகின்றன. (சக்திகளெவையெ
"னில்) ஸத்தின்தன்மை அஸத்தின்தன்மை இரண்டின்தன்மை
"ஒன்றின்தன்மை பலவின்தன்மை ஆதியின்தன்மை முடிவின்
"தன்மை என்பனவெல்லாம் பிர்ம்மமேவேறல்ல. எப்படி ஸமு
"த்திரத்தினுடைய ஜலத்தினிருப்பானது (சந்திரோதயகாரணத்
"தினாற் றானாகவே விருத்தியடைந்து) ஸந்தோஷமாய்ச் சத்தஞ்
"செய்துகொண்டிருக்கிற அலைகளாற் பலவிதரூபத்தைக்காண்பி
"வித்துக்கொண்டு விஸ்தாரத்தையடைகிறதோ அப்படியே சித்
"தத்தையுபாதியாயுடைய சித்கநனைவன் சித்சுவரூபத்தினாலே,
"கருமசுவரூபங்களாயும் வாஸநாசுவரூபங்களாயும் ஸங்கற்பசுவ

---

बृह्मितं ब्रह्मणि ब्रह्म पयसीवोर्मिमण्डलम् । स्त्रीपुमान् व्यङ्गरूपेण ब्रह्मैव परिवर्तते ॥ ४४ ॥ कल्पनान्या जगन्नाम्नि नासीदस्ति भविष्यति । ब्रह्मणो जगतो भेदो मनागपि न विद्यते ॥ ४५ ॥ सम्पूर्णं खल्विदं ब्रह्म जगद्ब्रह्मैव केवलं । इति भावय यत्नेन ह्यन्यत्सर्वं परित्यज ॥ ४६ ॥

* राजपुत्र ब्रह्मतत्वमेवेदमावर्तते । यस्मात् सर्वशक्तितः तस्मात् सर्वाश्शक्तयोब्रह्मणि दृश्यन्ते ॥ २ ॥ सत्वमसत्वं द्वित्वमेकत्व मनेकत्वमाद्यत्व मन्तत्वमिति ॥ ३ ॥ तच्चनान्यद्यथाजलराशेर्जलाशयउल्लासप्रफुल्लासेन नानाकारतां दर्शयन् प्रकटतां गच्छति ॥ ४ ॥ यथाचित् घनश्चित्तं चित्वाच्च

"ரூபங்களாயுமிருக்கிற ஸகலசக்திகளையும் பார்க்கிறான். தோற்
"றுவிக்கிறான். ஆதரிக்கிறான். வெளிப்படுத்துகிறான். நசிக்கவுஞ்
"செய்கிறான். பாலில் நெய்போலவும், மண்ணிற்குடம்போலவும்
"நூற்களிற் துணிபோலவும், ஆலம்விதையிலாலமரம்போலவும்,
"ஆத்துமாவிலேயேயிருக்கிற சக்திகள் வெளிப்பட்டனவாக வி
"யவகரிக்கப்படுகின்றன. (ஜலத்தில்) அலைபோற் செய்யப்பட்ட
"தாயிருக்கிறது. இப்படிச்செய்கிற விஷயத்திலொருவனுங்
"கருத்தாவல்ல. போக்தாவுமல்ல. நாசத்தையடைகிறதொன்று
"மில்லை. ஒன்றாகவேயிருக்கிற ஆத்துமதத்துவமானது, ஸாக்ஷி
"யாயும் துன்பமற்றதாயுமெப்போதுங்கலக்கமற்றதாயும் உயர்
"வு தாழ்வில்லாத ஸமத்தன்மையோடு தன்சுவரூபத்திலிருக்கும்
"போது இவ்விதமாய் ஜகத்துண்டாகிறது. தீபவெளிச்சமிருக்
"கையில் வஸ்துதோற்றுவதுபோலும் சூரியபிரகாசமிருக்கை
"யிற் பகற்தோற்றுவதுபோலும் புஷ்பமிருக்கையில் வாஸனைய
"றியப்படுவதுபோலும் (ஆத்துமஸந்நிதியினாலே) தானாகவே
"ஜகத்து விளங்கிறது. இந்த ஜகத்துக்காணப்பட்டுக்கொண்டிருந்
"தாலும் (மன) தோற்றமேதான்."

வாஸிஷ்டராமாயணம்-ச-ஸர்க்கம்-சக-ல், * " பேச்சுமாத்
"தரத்தினாற் பேதமாய்ச்செய்ததாகிய இந்தப்பிரபஞ்சமானது,
"உபதேசிக்கிறவர்களுக்காக கற்பிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்
"திரார்த்த ஞானமுண்டாகும்பொருட்டும் உபதேசம்பெறுகிறவ

---

सर्वाश्शक्तीः कर्ममयी वासनामयी मनोमयी श्चिनोति दर्शयति बिभर्ति जनयति क्षिपयति चेति ॥ ९ ॥ किं तर्हि क्षीरइवघृतं घटइवमृदि पटइव तन्तुषु वटइव धानायामात्मन्येव स्थिता श्शक्तयः प्रकटतामागताव्यवह्रीयंते । विरचितमेव तरङ्गवत् ॥ ४० ॥ नात्र कश्चित् कर्ता न भोक्ता न विनाशमेति ॥ ४१ ॥ केवलमात्मतत्वे साक्षिणि निरामये समतयात्मनि नित्यमसंक्षुब्धे तिष्ठति सत्येवं सम्पद्यते ॥ ४२ ॥ सति दीपइवालोकः सत्यर्कइव वासरः । सति पुष्पइवामोदः स्वतस्सम्पद्यते जगत् ॥ ४३ ॥ आभासमात्रमेवेदं परिदृश्यत एवच ॥ ४४ ॥

* भेदकृद्वाक्प्रपञ्चोयमुपदेश्येषु कल्पितः । उपदेश्योपदेशार्थं शास्त्रा-

“னுக்கு உபதேசிக்கிறதன்பொருட்டும் சப்தத்திற்கு விஷயமா
“ன இந்த வாய்ப்பேச்சாகிறப் பிரபஞ்சமானது உபதேசங்களி
“லெ கற்பிக்கப்படுகிறது. எப்போதும் ஞானிகளிடத்திலேயும்
“கற்பனையென்றறிந்தவர்களிடத்திலேயும் பேதபுத்தியில்லை.
“வாஸ்தவமான ஞானந்தானிருக்கிறது. தோற்றமாத்திரமாயிரு
“கிற அக்ஞானம் மோகம் முதலியன அற்பமேனுமாத்துவாவினி
“டத்திலில்லை. ஆசையற்றதாயும் ஸர்வசிரேஷ்டமாயுமிருக்கிற
“பிர்ம்மமே இந்த ஜகத்தாகவிருக்கிறது. இந்த மாயையான
“வள் விவேகத்தை மறைக்கிறாள். விரிவாயுலகங்களையுண்டாக்
“கிறாள். இவள் சுவரூபமிப்படிப்பட்டதென்று அறியப்படுகிற
“தில்லை. ஆச்சரியமாயிருக்கிறவிந்த ஜகத்தைப்பார். இந்த
“மாயையானவள் நன்றாயாலோசித்துப்பார்க்காவிடிற் பிரகாசித்
“துக்கொண்டிருக்கிறாள். நன்றாயாலோசித்துப்பார்த்தால் நசித்
“துப்போகிறாள். இந்தமாயையானவள் நன்றாயறியப்படாமலி
“க்கிற ரூபமுடையவளாகவே விருத்தியடைகிறாள். ஸம்ஸார
“பந்தத்தைக் கொடுக்கிறவளாயும் விசித்திரமானவளாயுமிருக்
“கிற இந்த மாயையானவள் ஆச்சரியகரமாயிருக்கிறாளல்லவா.
“வாஸ்தவமல்லாதவள்போலும் மிகவும் வாஸ்தவமானவள்போ
“லும் (இருக்கிறாள்). அவளாலே அக்ஞானமானது நன்றாயுண்
“டாயிருக்கிறது. எந்தக்காரணத்தினாலே ஸம்ஸாரரூபமானவிந்த
“மாயையானவள் பேதமற்றிருக்கிற அந்த பிர்ம்மத்தினிடத்தில்
“மிகவும் பேதத்தையுண்டாக்கிறவளாயிருக்கிறாளோ அந்தக்
“காரணத்தினாலிந்த ஆத்துமா புருஷோத்தமனென்று சொல்ல
“ப்படுகிறான். மனதினுடைய மநநத்தினாலே (நினைப்பினாலே)

र्थप्रतिपत्तये ॥ ८ ॥ शब्दार्थवाक्प्रपञ्चोयमुपदेशेषुकल्पितः । सदाज्ञेषु न तत्ज्ञेषु विद्यते पारमार्थिकः । ९ ॥ कलनामलमोहादि किञ्चिन्नात्मनि विद्यते । नीरागं ब्रह्म परमं तदेवेदं जगत्स्थितम् ॥१० ॥ विवेकमाच्छादयति जगन्ति जनयत्यलं । न च विज्ञायते कैषा पश्याश्चर्यमिदं जगत् ॥ १६ ॥अप्रेक्षमाणा स्फुरति प्रेक्षिता तु विनश्यति । मायेयमपरिज्ञाय मानरूपैव वल्गति ॥ १७ ॥ अहो नु खलु चित्रेयं मायासंसारबन्धनी । असत्येवाति सत्येव स्वज्ञानं विहितं तया ॥ १८ ॥ अत्यभिन्नपदेतस्मिन् तन्वाना भेदमाततम् । संसारमाया येनासौ तेनासौ पुरुषोत्तमः ॥ १९ ॥ यदिदं दृश्यतां

"யேப்பிரபஞ்சமானது தோற்றிக்கொண்டிருக்கிறது. மனோமா
"த்தரமாய்த் தடித்திருக்கிறதனாலே இப்பிரபஞ்சமானது அசத்
"தாகவேயிருக்கிறது. அந்தப் பிர்ம்மம் ஸத்தானதென்றவ
"னுடைய அந்தக்கரணத்தில் நிச்சயமிருக்கிறதோ அவன் மோ
"க்ஷத்தையடையத்தக்கவனாயிருக்கிறான்."

வாஸிஷ்டராமயணம்-௪-ஸர்-௫௯-ல், * "ஸகலவஸ்துக்களுக்
"குள்ளுமிருக்கிறதாயும் ஸகலத்திற்கும் மேலானதாயுமிருக்கிற
"ஆத்துமாவினுடைய ஸந்நிதிமாத்ரத்தினாலே இந்தப்பிரகிரு
"தியானவள் விருத்தியடைகிறாள். தீபம் எதிரிலிருக்கிறமாத்
"தரத்தினாலே இச்சையில்லாமலே (வஸ்து) எப்படிப்பிரகாசிக்
"கிறதோ, வெட்பாலைபுஷ்பங்கள் மேகத்தினுடைய ஸந்நிதிமாத்
"தரத்தினாலே தானாகவே யெப்படிவிருத்தியடைகின்றனவோ
"அப்படியாத்துமஸந்நிதிமாத்ரத்தினாலே (பிரகிருதி) மூன்
"றுலகங்களாய்த் தானாகவே விருத்தியடைகிறாள். யாதொரு
"விருப்பமுமில்லாமலே சூரியனாகாசத்திலிருக்கையில் (சூரியனு
"டையஸந்நிதிமாத்ரத்தினாலுலக) வியவஹாரகாரியமெப்படி
"யுண்டாகிறதோ அப்படித்தேவனான ஆத்துமாவிருக்கும்போது
"(ஆத்துமஸந்நிதிமாத்ரத்தினால்) செய்கைநடக்கிறது."

வாஸிஷ்டராமாயணம்-௪-ஸர்-௫௭-௬ ௧௧-ல், † "வாஸனை
"யினாலுண்டாகும் பந்தமே பந்தம். வாஸநாநாசந்தான் மோக்ஷ
"ம், நீ வாஸனையைத்தள்ளி மோக்ஷவிச்சையையுங்கூட விலக்கி
"விடு."

---

यातं मानसं मननं महत्। असन्मात्रमिदं यस्मान्मनोमात्रविजृम्भितम् ॥ २२
सत्तद्ब्रह्मेति यस्यान्त र्निश्चयस्सोपि मोक्षभाक् ॥ २३ ॥

* सर्वभावान्तरस्थस्य सर्वातीतस्य चात्मनः ॥ २६ ॥ इयं सन्निधिमात्रेण नियतिः परिजृम्भते । दीपसन्निधिमात्रेण निरिच्छैव प्रकाशते ॥ २७ अभ्रसन्निधिमात्रेण कुटजानि यथा स्वयम् । आत्मसन्निधिमात्रेण त्रिजगन्ति तथा स्वयम् ॥ २८ ॥ सर्वेच्छारहिते भानौ यथा व्योमनि तिष्ठति । जायते व्यवहारश्च सति देवे तथा क्रिया ॥ २९ ॥

† बन्धो हि वासनाबन्धो मोक्षःस्याद्वासनाक्षयः । वासनास्त्वं परित्यज्य मोक्षार्थि त्वमपित्यज ॥

வாஸிஷ்டம் ௫-ஸர்-௫-ல்,*"எதானதாதியிலுமில்லேயோ முடிவி
"லுமில்லேயோ அப்படிப்பட்டதற்கு ஸத்தியமாயிருத்தலெப்படி
"க்கூடும்? எது ஆதியிலும் முடிவிலும் நித்தியமாயிருக்கிறதோ
"அதுதான் ஸத்தியமாயுள்ளதென்று பிரஸித்தமாயிருக்கிறது
"வேறில்லை. ஆதியும் முடிவுமுள்ள அஸத்தானவஸ்துவினிடத்தி
"லெவனுடையமனதானது பற்றியிருக்கிறதோ அப்படிப்பட்ட
"மூடபசுவாகிற ஜந்துவுக்கு விவேகமானதெதனுலுண்டாகப்
"போகிறது. இவ்வுலகத்தில் மனதே பிறப்பையடைகிறது.
"மனதே விருத்தியையடைகிறது. ஆத்துமஞானத்தினலே மன
"தேயல்லவா (பந்தத்திலிருந்து) விடுபடுகிறது."

ஷை-ஷை-ஸர்-கச-ல், † "மனதானது ஸங்கற்பத்தினல் விருத்
"தியடைகிறது. அந்தஸங்கற்பத்தைச் சீக்கிரமாய் நன்றுய்த்த
"ள்ளிவிடு. காணப்படுகிற இந்தப்பிரபஞ்சத்திற் பற்றுள்ளவனு
"வாயாகில் அதனுற்சித்தத்தோடுகூடினவனுய்ப் பந்தமடைந்தவ
"னுகிறுய். காணப்படுகிறவிந்தப்பிரபஞ்சத்தைத் தள்ளிவிடுவை
"யேயாகில் அதனுற் சித்தமில்லாதவனுய் மோக்ஷமடையத்தக்
"கவனுகிறுய்."

ஷை-ஷை-ஸர்-௫0-சு-கச-ல், ‡ "கடத்திற்குள்ளாகக் கடாகாச
"மெப்படியிருக்கிறதோ அப்படிச்சித்தத்திற்குள்ளாகவே ஸம்
"ஸாரமிருக்கிறது. கடநாசத்தினுற் கடாகாசமெப்படியோ அப்
"படிச்சித்தநாசத்தினல் ஸம்ஸாரம் நசிக்கிறது." (கடநாசத்தி
னுலே கடாகாசமென்கிறபெயர் நசிக்கிறதுபோல சித்தநாசத்தி
னுல் ஸம்ஸாரம் நசிக்கிறதென்பது கருத்து).

---

* आदावन्ते च यन्नास्ति कीदृशी तस्य सत्यता । आदावन्ते च यन्नित्यं तत्सत्यं नाम नेतरत् ॥ ९ ॥ आद्यन्तासन्मये यस्य वस्तुन्यासज्जते मनः । तस्य मुग्धपशोर्जन्तो र्विवेकः केन जन्यते ॥ १० ॥ जायते मनएवेह मनएव विवर्धते । सम्यग्दर्शन दृष्ट्या तु मनएव हि मुच्यते ॥ ११ ॥

† सङ्कल्पाद्वर्धते चित्तं तदेवाशु परित्यज ॥ ४९ ॥ दृश्यमाश्रयसीदञ्चे त्तत्सचित्तोसि बन्धवान् । दृश्यं सन्त्यज सीदञ्चे त्तदाचित्तोसि मोक्षवान् ॥ ४६ ॥

‡ चित्तान्तरेव संसारः कुम्भान्तः कुम्भखं यथा । चित्तनाशे न संसारः कुम्भनाशे न कुम्भखं ॥

வாஸிஷ்டம்-சு-பூர்வபாகம்-ஸர்-உகூ-ல்,*"தன்னுடையஸங்கற்
"பவிலாஸத்தினுற் தேகமாகிற வீட்டிற்கொடூரமான ஆகாரமுள்
"ளதாயிருக்கிற மதித்தமனதாகிற வேதாளமானது, விளையாட்
"டோடு அலைந்துகொண்டிருக்கிறது. எதனுல், ஸமாதியில் நிலை
"யாயிருக்கிற மஹாத்துமாக்கள்கூட பயப்படுகிறூர்களோ அப்
"படிப்பட்ட சித்தமாகிற யக்ஷவினுலெ கற்பிக்கப்பட்டதாயிரு
"க்கிற சூந்நியமான (வாஸ்தவத்திலில்லாத) தேகமாகிறவீட்டை
"யடைந்து ஆத்துமாவானவன் தன்னுடைய சரீரமாகிறவீட்டி
"லிருந்து சித்தமாகிற வேதாளத்தைத் துரத்திவிட்டு ஸம்ஸார
"சூந்நியமாயிருக்கிற (சரீரமாகிற) பட்டணத்திலிருந்துகொண்டு
"ஒருபோதும் (ஸம்ஸார) பயத்தையடைகிறதில்லை. சித்தமாகி
"ற பிசாசுனுலெ கவரப்பட்டதாயிருக்கிற சரீரமாகிற விந்தவீட்
"டிலெவர்களாசைகொண்டவர்களாயிருக்கிறூர்களோ அப்படிப்
"பட்டவர்கள் தேகமே ஆத்துமாவென்று இப்பவுமுறுதியாயிரு
"க்கிறூர்கள். எதனுலெ அப்படியிருக்கிறூர்களோ இது ஆச்சரி
"யம். சித்தமாகிற பிசாசுனுற் கவரப்பட்டதாயிருக்கிற தேகமா
"கிற வீட்டிலெவர்கள் மரணமடைகிறூர்களோ அவர்களுடைய
"புத்தி பிசாசுபுத்தியே. ஓ! இராகவா! பிசாசுக்கந்நியமான புத்
"தியல்ல." (என்றுல், அப்படிப்பட்டவனுடைய புத்தி பிசாசு
புத்தியென்பது கருத்து).

வாஸிஷ்டராமாயணம்-சு-பூர்வபாகம்-ஸர்-நக-சு-ச-ல், †
"சித்சுவரூபமானவிந்த ஆத்துமாவுக்கு ஸம்ஸாராநுபவத்திற்கு
"க்காரணம் சித்தமேயல்லவா."

---

* स्वसङ्कल्पविलासेन देहगेहे दुराकृतिः । उन्मत्तचित्तवेताळः परिवल्गति लीलया ॥ ४१ ॥ शून्यं देहगृहं प्राप्य चित्तयक्षेण तत्कृतं । भीता येन महान्तोपि समाधिनियताःस्थिताः ॥ ४२ ॥ चित्तवेताळमुद्वास्य स्वशरीरकमन्दिरात् । संसारशून्यनगरे न बिभेति कदाचन ॥ ४३ ॥ चित्तभूताभिभूतेस्मिन्येशरीरगृहे रताः । चित्रमद्यापि ते कस्मात् घटिता आत्मवत्स्थिताः ॥ ४४ ॥ ग्रस्ते चित्तपिशाचेन देहसद्मनि ये मृताः । पिशाचस्येव याबुद्धिर्नापिशाचस्य राघव ॥ ४५ ॥

† चित्तं हि कारणं त्वस्याः संसारानुभवे चितः ॥

வாஸிஷ்டம்-௬-ஸர்க்கம்-௩௭-ல்,* "ஈசுவரர் சொல்வது.—ஓ! "ஸௌம்யா! அளவிடக்கூடாதவராயுஞ் சாந்தராயும் மங்கள "சுவரூபியாயுஞ் சின்மாத்திரரூபியாயும் ஸகலரூபியாயுமிருக்கிற ப "ரமாத்துமாவுக்கு உருவமில்லாமலிருந்தாலும், இச்சாசக்தி, ஆ "காசசக்தி, காலசக்தி, பந்தசக்தி, மஹாசக்தி, ஞானசக்தி, கிரி "யாசக்தி, கர்த்திருத்துவசக்தி, அகர்த்திருத்துவசக்தி இப்படி "ப்பட்டவநேக சக்திகளுண்டு. ஓ! நன்னடக்கையுள்ளவனே! "சிவசுவரூபமான பரமாத்துமாவினுடைய இவை முதலிய சக்தி "களுக்கு முடிவில்லை. இந்தச்சக்தியானவள், மங்களசுவரூபமா "யும் முடிவற்றசுவரூபமாயுஞ் சின்மாத்திரசுவரூபமாயுமிருக்கிற "ஆத்துமாவினுடையவள்தான். இவள்தான் சக்தியென்றுசொ "ல்லப்படுகிறாள். ஆகையால், அற்பமேனும் அவரைவிட வேறு "என்ன?" (வேறல்லவென்பது கருத்து).

௬-ஸர்-௪௨-௬-௧௬-ல், † "சித்சக்தியானது சித்திினிட "த்திலே சுவப்நத்திற் பட்டணமுண்டாவதுமழிவதும்போல ஸ "கல ஜகத்தையும் ஸங்கற்ப ரூபத்தினாலே விசித்திரமாய்ச் செய் "கிறது."

வாஸிஷ்டராமாயணம்-௬-பூர்வபாகம் ஸர்க்கம் அஎ-ல், ‡ "இந்த தேகத்தில் அகங்காரம் முதலிய ரூபங்களோடு கூடிய "வாஸனையென்பதில்லவேயில்லை. பாலைநிலத்திற்தோற்றும் ஜல "ம்போல் அஞ்ஞானத்தினாலே பொய்யாகவேயுண்டாயிருக்கிறது. "ஸகலமும் பிர்ம்மமென்று பாவனைசெய்வதனாலே வனுக்கு

---

* ईश्वरउवाच । अप्रमेयस्यशान्तस्य शिवस्य परमात्मनः । सौम्य-चिन्मात्ररूपस्य सर्वस्यानाकृतेरपि ॥ १४ ॥ इच्छासत्ता व्योमसत्ता कालसत्ता तथैवच । तथा नियतिसत्ताच महासत्ताच सुव्रत ॥ १५ ॥ ज्ञानशक्तिः क्रियाशक्तिः कर्तृताऽकर्तृताऽपिच । इत्यादिकानां शक्तीना मन्तो नास्तिशिवात्मनः ॥ १६ ॥ शिवस्यानन्तरूपस्य एषा चिन्मात्रतात्मनः । एषा हि शक्तिरित्युक्ता तस्माद्भिन्नामनागपि ॥ १८ ॥

† सर्वं सङ्कल्परूपेण चिच्चमत्कुरुते चिति । स्वप्नपत्तननिर्माणपातोत्पातनवज्जगत् ॥

‡ वासना चेहनास्त्येव साहंकारादि रूपिणी । असत्येवोदितामौर्ख्यान्मरुभूमा विवांबुधिः ॥ २४ ॥ यस्य मौर्ख्यं क्षयं यातं सर्वं ब्रह्मेति भाव-

“அக்ஞாநம் நாசமடைந்திருக்கிறதோ அவனுக்கு, ப்பாலைநில
“த்தோற்றமேயன்றி ஜலமல்லவென்றறிந்த ஞாநிக்குப்போல்,
“வாஸநையானதுண்டாகிறதில்லை. வாஸநைமுழுமையும் நன்
“றாய்த்தள்ளிவிடுவதனால் ஜரை மரணமிவைகளற்றதாயும் மறு
“படி ஜநநமற்றதாயுமிருக்கிற ஜீவத்தன்மையின் முடிவான பத
“மானது (மோக்ஷமானது) உண்டாகிறது. வாஸநையுடன் கூடி
“யிருக்கிறதுதான் மனதென்றும் வாஸநையற்ற மனதுதான்
“ஞாநமென்றுமறியத்தக்கது.”

வாஸிஷ்டம்-௬-ஸர்க்கம்-௯௩-ல்,* “ஓ! ஸாதுவே! ஜீவன்பிரா
“ணன்முதலியபெயர்களையுடையதாயெங்கும் நிறைந்திருக்கிறஉ
“ருவமாயும் ஜடமல்லாததாயுஞ்சேதநமல்லாததாயுமிருக்கிறஸக
“லமும் பிரமையுள்ள சித்தமேயென்றெண்ணப்பட்டிருக்கிறது.
“ஓ! இராஜனே! பிரமையே சித்தமென்றறி. மனதுதான் மனி
“தனென்றுமறி. சித்தத்தை இந்திரஜாலவித்தைக்கொப்பான
“ஜகத்தென்றறி. ஸகலமும் சித்தமென்றே எண்ணப்பட்டிருக்
“கிறது. ஓ! அரசனே! இராஜ்யம்முதலியதற்கும் தேகம்முத
“லியதற்கும் ஆசிரமம்முதலியதற்கும் ஸகலத்திற்கும் மனதே
“விதையாயிருக்கிறது. மரத்தின் விதையில் மரமடங்கியிருக்கி
“றதுபோல ஸகலத்திற்கும்விதையாயிருக்கிறதெதுவோ அது
“(சித்தம்) நன்றாய் நிவர்த்திக்கப்படுமேயானால், ஸகலமும் நன்
“றாய் நிவர்த்திக்கப்பட்டதாகிறது. ஓ! இராஜனே! அந்தச்
“சித்தத்தைத்தள்ளிவிடுவதனாலே ஸகலத்தையுந் தள்ளிவிட்ட
“தாகவாகிறது. அப்படித் தள்ளிவிடாவிட்டால் ஸகலத்தை
“யுந்தள்ளிவிட்டதாகிறதில்லை. சித்தத்தோடு கூடியிருக்கிற

---

नात् । नोदेतिवासनातस्य प्रज्ञस्येवांबुधिर्मरौ ॥ २५ ॥ वासनामात्र संत्या-
गा ज्जरामरण वर्जितम् । पदं भवति जीवोन्तर्भूयो जन्मविवर्जितम् ॥२६॥
स वासनं मनोज्ञेयं ज्ञानं निर्वासनं मनः ॥ २७ ॥

* साधो सर्वगताकारं जीवः प्राणादि नामकं । न जडं ना जडं
भ्रान्तं चित्तं सर्वमितिस्मृतम् ॥ ३२ ॥ चित्तमेव भ्रमं विद्धि विद्धिचेतो नरं
नृप । चित्तं विद्धि जगज्जालं चित्तं सर्वमितिस्मृतम् ॥ ३३ ॥ राज्यादे रथ-
देहादे राश्रमादे महीपते । सर्वस्यैव मनोबीजं तरुबीजं तरोरिव ॥ ३४ ॥
सर्वस्य बीजे संत्यक्ते सर्वं त्यक्तं भवत्यलम् । संभवा संभवाद्भूप सर्वत्यागो

"வனுக்குப் பலவித தருமம் முதலியனவும் அதருமங்களும்
"இராஜ்யம்முதலியனவும் வநம்முதலியனவும் மிகவும் துக்கசுவ
"ரூபமே. சித்தநாசமுண்டானவனுக்கு (ராஜ்யம் வநம் முதலிய
"ன) மிகவும் சுகரூபமானதே. விதையானதெப்படி விருக்ஷசுவ
"ரூபமாயாகிறதோ அப்படி இந்தச்சித்தமே தேகம் முதலிய
"உருவக்கூட்டங்களாகிற ஸகல ஜகத்ரூபமாய்த்தோற்றிக்கொ
"ண்டிருக்கிறது. மரமானது காற்றினாலும் மலையானது பூகம்
"பத்தினாலும், துருத்தியானது கருமானாலுமெப்படி யசைப்பிக்
"கப்படுகிறதோ அப்படியிந்தத்தேகமானது சித்தத்தினாலசை
"ப்பிக்கப்படுகிறது."

வாஸிஷ்டராமாயணம்-சு-பூர்வபாகம்-ஸர்க்கம்-க00-ல், *
"அக்ஞாநமாகிறப் பிராந்தியே உள்ளேயிருக்கிற சித்தமென்று
"சொல்லப்படுகிறது. அக்ஞாநமாகிற சித்தமஸத்தானாலும் ஸத்
"துப்போலிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. பகுத்தறியா
"மை அக்ஞாநம். பகுத்தறிவது ஞாநமாகிறது. அக்ஞாநத்திற்
"கிருப்புண்டென்கிற ஞாநமானது ஆராய்ந்தறிகிற ஞாநத்தினா
"லே நசித்துப்போகிறது. (எப்படிப்போலெனில்) ஓ! ஸாதுவே!
"பாலைநிலத்திற்றோற்றும் சூரியகிரணங்களிடத்தில் ஜலமென்கி
"ற ஞாநம் வீணானபிரமையே. இந்தப்பிரமையானது ஜலமல்ல
"வென்றுத்துப்பார்த்தறிவதாகிய ஞாநத்தினால் நசித்துப்போவ
"து போற்றான். ஹிருதயத்திலெழுந்த அக்ஞாநமானது, இது
"சித்தமென்று மிகவுமுறுதியாயிருக்கிறதோ அது சித்தமல்ல

---

भवेदिति ॥ ३९ ॥ सर्वधर्माद्य धर्मावा राज्यादि विपिनादि वा । स चित्तस्य परं दुःखं निश्चित्तस्य परं सुखम् ॥ ३६ ॥ इदं विवर्तते सर्वं चित्तमेव जगत्तया । देहाद्याकार जालेन बीजं वृक्षतया यथा ॥ ३७ ॥ पादपः पवनेनेव भूकम्पेनेव पर्वतः । भस्त्रा भस्त्रा भरेणायं देहश्चित्तेन चाल्यते ॥३८॥

* अज्ञान भ्रान्तिरेवान्त श्चित्तमित्येव कथ्यते ॥१७॥ अज्ञानमुच्यते चित्तमसत्स दिवसं स्थितम् । असंवेदनमज्ञानं ज्ञानं संवेदनं भवेत् ॥ १८ ॥ अज्ञानसत्व संवित्ते ज्ञानात् संवेदनात् क्षयः । जलज्ञानं मुधाभ्रान्ति स्साधो मरुमरीचिषु ॥ १९ ॥ नैतज्जलमिति ज्ञानात् संविक्षेः प्रविलीयते । इदं चित्तमिति प्रौढं यदज्ञानमलं हृदि ॥ २० ॥ नास्ति चित्तमिति

"வென்கிற ஞானத்தினல் மூலத்துடன் நசித்துப்போகிறது கயி
"ற்றிற் பாம்பின் தன்மை அக்ஞானப்பிரமையினலுண்டாய் இது
"ஸர்ப்பமல்லவென்று ஹிருதயத்திலுறுதியாயுண்டாகிற ஞானத்
"தினலெப்படி நசிக்கிறதோ அப்படி ஆத்துமாவினிடத்திலக்
"ஞானப்பிரமையினலுண்டாயிருக்கிற மநசுவரூபமும் நசித்துப்
"போகிறது."
வாஸிஷ்டம்-சு-ஷ-ஸர்க்கம்-ககக-ல், * "பிருஹஸ்பதி பகவான்
"சொல்வது—ஓ! மைந்தா! ஸகலப்பிரபஞ்சமும் சித்தமென்றே
"சொல்லுகிருர்கள். அதைத் (சித்தவியாபாரத்தை) தள்ளிவிட்
"டால் ஆத்துமசுவரூபம் பிரகாசமாகும். ஞானிகளாயிருக்கிற ஜந
"ங்கள் சித்தத்தைத்தள்ளிவிடுவதுதான் ஸகலத்தையுந்தள்ளிவி
"டுவதென்றறிகிருர்கள். (இப்படிச்சொன்ன பிருஹஸ்பதிபகவா
"னை அவர் குமாரரான கசனவர்) ஏகாந்தமாயிருக்கையிற் கே
"ட்டதாவது—ஓ! பகவானே! சித்தமென்பதெது சொல்லும்.
"சித்தத்தினுடைய சுவரூபத்தையுஞ்சொல்லும். நானெதனலந்
"தச்சித்தத்தைத் தள்ளிவிடுவேனே அதையுஞ்சொல்லும். (இப்
"படிக்கேட்ட புத்திரனைப்பார்த்து) பிருஹஸ்பதி சொல்லுகிருர்
"—சித்தசுவரூபத்தையறிந்த ஞானிகளாகிறஜநங்கள் சித்தத்
"தை நிஜமாய் அஹங்காரமென்றறிகிருர்கள். ஜந்துக்களுடைய
"ஹிருதயத்தில் யாதொரு இந்த அகம்பாவம் (நான் என்கிற எ
"ண்ணம்) இருக்கிறதோ அதுதான் சித்தமென்றுசொல்லப்படு
"கிறது. அக்ஞானத்தினலேயே (ஜகத்தாக) விளங்கிக்கொண்
"டிருக்கிற வஸ்துவானது ஞானத்தினல் நசித்துப்போகிறது. ஓ!

---

ज्ञानात्तत्समूलं विनश्यति । यथा रज्वां भुजङ्गत्व मज्ञानभ्रम संभवं ॥२१॥ न सर्पोयमिति ज्ञाना द्धृदिरूढात् प्रणश्यति । तथात्मनि मनोभूत मज्ञान भ्रमसंभवम् ॥ २२ ॥

* बृहस्पतिरुवाच ॥ चित्तं सर्वमिति प्राहुस्त त्त्यक्त्वापुत्र राजसे । चित्तत्यागं विदुस्सर्व त्यागं सर्वविदोजनाः ॥ २१ ॥ अपृच्छच्चैनमेकान्ते ।किं चित्तं भगवन् वद । स्वरूपं ब्रूहि चित्तस्य येन तत् संत्यजाम्यहम् ॥२७॥ बृहस्पतिरुवाच ॥ चित्तं निजमहङ्कारं विदुश्चित्त विदोजनाः । अंतर्योय महंभावो ज्ञान्तो स्तच्चित्त मुच्यते ॥ २८ ॥ अज्ञानमात्र संसिद्धं वस्तुज्ञानेन नश्यति ॥ ३२ ॥ वस्तुतो नास्त्यहंकारः पुत्रमिथ्या भ्रमो यथा । असन

"புத்திரா! வாஸ்தவத்தி லில்லாததாயும் பிரமையினுலிருக்கிற
"தாக வெண்ணப்படுகிறதாயுமிருக்கிற வேதாளமென்பது குழந்
"தைக்கெப்படி பிரமையினுலோ அப்படித்தான் அகங்காரமும்
"பொய்யானபிரமையேயன்றி வாஸ்தவத்திலில்லை. கயிற்றிற்
"பாம்பின் தன்மையெப்படியோ பாலைநிலத்தோற்றத்தில் ஜலமெ
"ன்கிற புத்தியெப்படியோ அப்படிப்பொய்யான அகங்காரமும்
"பொய்யானதோற்றமாகவே விளங்கிறது. சந்திரன் இரண்
"டென்பது வாஸ்தவமாயில்லை. மோஹத்தினுலெ (இரண்டுசந்
"திரனுக) பார்க்கிறதெப்படியோ அப்படி அகங்காரமும் விளங்
"கிறது. அகங்காரமானது ஸத்தியமானதுமல்ல அஸத்தியமா
"னதுமல்ல."

வாஸிஷ்டராமாயணம்-சூ-பூர்வபாகம்-ஸர்க்கம்-ககச-ல், *
"சிருஷடித்துவக்கத்திற் பிர்ம்மத்தினிடத்திலிருந்து ஸகலவஸ்
"துக்களுக்கும் முந்தி மனது கற்பனையாயுண்டாயிற்று. மநந
"(ஸங்கற்ப) சுவரூபமாயும் அநுபவயோக்கியமாயுமிருக்கிறவந்த
"மனதானது பிர்ம்மத்தினிடத்திலேயே இருப்பையடைந்தது.
"(அதனிருப்பெப்படிப்போலெனில்)புஷ்பத்தில் வாஸனைபோல
"வும் ஸமுத்திரத்திலலைகள்போலவும் சூரியனிற்கிரணக்கூட்டம்
"போலவும் ஓ! இராகவா! பிர்ம்மத்தில் மனதினிருப்பு. காண
"ப்படாமையான ஆத்துமதத்துவத்தினுடைய மறதியினுலேயே
"(மனது, பிரபஞ்சாகாரமாய்) இருப்பையடைந்திருக்கிறது.
"கயிற்றிற்பாம்பென்பது பிரமையினுலுண்டாவதுபோல், ஓ!
"இராமா! ஜகத்தானது (பிரமையினுல்) உண்டாயிருக்கிறது.

---

सन्निवसंपन्नो बालवेताळवत् स्थितः ॥ ३३ ॥ यथा रज्वां भुजङ्गत्वं मरावंबु मतिर्यथा । मिथ्यावभास स्स्फुरति तथा मिथ्याप्यहंकृतिः ॥ ३४ ॥ असदेव यथा द्वित्वं मोहादिन्दा विलोक्यते । तथा स्फुरत्यहङ्कारो न सत्योवाप्य सन्नच ॥ ३९ ॥

* परस्मात् ब्रह्मणः पूर्वं मनः प्रथममुत्थितम् । मननात्मकमाभोगि तत्स्थमेव स्थितिं गतम् ॥ १ ॥ पुष्पकोश इवामोदो महोर्मिरिव सागरे । रश्मिजाल मिवादित्ये मनोब्रह्मणि राघव ॥ २ ॥ तस्या दृश्यात्म तत्वस्य विस्मृत्येव गतं स्थितिम् । नान्यस्मा दागतं राम जगद्रज्जु भुजङ्गवत् ॥३॥

"வேறொன்றினாலல்ல. ஓ! இராகவா! சூரியனுடைய இந்தக் "கிரணக்கூட்டத்தை சூரியனைவிட வேறாகவெவன்பார்க்கிறானோ "அவனுக்கு வேறுபோல் விளங்கிறது. தங்கத்தினாற்செய்யப் "பட்டிருக்கிற கேயூரத்தைத் தங்கத்தைவிட வேறாகவெவன் "பார்க்கிறானோ அவனுக்கது கேயூரமேயன்றி தங்கமல்ல. கிர "ணங்களை சூரியனைக்காட்டிலும் வேறல்லவென்றெவன்பார்க்கி "றானோ அவனுக்கந்தக்கிரணங்கள் சூரியனே. அப்படிப்பட்ட "ஞானமானது விகற்பமல்லாததென்று சொல்லப்படுகிறது. பிர் "ம்மந்தானாகவே பிரகாசரூபமானதனாலே ஸங்கற்பமென்கிற "பெயரையுடைய தன்சக்தியை, வாயுவானவன் சலிக்கும் சக்தி "யைச்சலிப்பிப்பதுபோல எப்போது சலிப்பிக்கிறதோ அப் "போது ஸங்கற்பசுவரூபமாய் வேறுபோல்விளங்கிற மனதுண் "டாகிறது. ஸகலசுவரூபியான ஆத்துமா, தானே தன்சுவரூ "பத்தைப்பார்த்துக்கொண்டு ஸங்கற்பசுவரூபமான அந்தமன "தை எவ்விதமாய்ச்சங்கற்பிக்கிறானோ அவ்விதமாய் இந்த ஸகல "ஜகத்தும் ஸங்கற்பித்தவிதங்களாகவே க்ஷணத்திலுண்டாகின் "றன. இந்த மனதே பிரும்மாமுதல் சிறுபூச்சிவரையிலுள்ள "(ஜங்கம) தன்மையையும் அப்படியே பருவதத்தன்மையையும் "(பிராணாதி) வாயுக்களுடைய தன்மையையும், மனது, ஜீவன், "அகங்காரம், புத்தி, சித்தம் முதலிய பெயர்களையும் இருமை "ஒருமையையும் ஸங்கற்பத்தினாலேயேயடைந்து ஜகத்தினிருப்

---

आदित्यव्यतिरेकेण यो भावयति राघव । रश्मिजालमिदं ह्येतत्तस्यान्य दिवभास्वतः ॥ ४ ॥ कनकव्यतिकेण केयूरं येन भावितं । केयूरमेव तत्तस्य न तस्य कनकं हि तत् ॥ ५ ॥ आदित्य व्यतिरेकेण रश्मयो येन भाविताः। आदित्यएव ते तस्य निर्विकल्पस्स उच्यते ॥६ ॥ स्वयमेवात्म नैवात्मा शक्तिं संकल्पनामिकाम् । यदा करोति स्फुरता स्पंदशक्ति मिवानिलः १५ ॥ तथा पृथगिवाभासं सङ्कल्पकलनामयम् । मनोभवति विश्वात्मा भावयन् स्वाकृतिं स्वयम् ॥ १६ ॥ तत् संकल्पात्मकं चेतो यथेदमखिलं जगत् । संकल्पयति संकल्पै स्तथैव भवति क्षणात् ॥ १७ ॥ कीटत्व मञ्जजत्वं च मेरुत्वं मरुतां तथा । मनोजीवमहङ्कार बुद्धि चित्तादि नामकम् ॥ १८ ॥ संकलपतो द्वितैकत्व मेत्यचेतो जगत् स्थितिम् । तनोति

"பைச்செய்கிறது. பிறகு அதைப்பின்பற்றியே தானே பலவா
"கவாகிறது. ஜகத்தின் அநுபவம் ஸங்கற்பசுவரூபமாகவே
"விளங்கிறது. (இது) ஸத்தியமுமல்ல, அஸத்தியமுமல்ல. பல
"வித சுவப்நம்போலுண்டாயிருக்கிறது. பலவிதமாய்த் துடங்
"கப்படுகிறதாகியப் பிராணியினுடையமஞேராஜ்யமானதெப்படி
"விளங்கிறதோ அப்படிப் பிர்ம்மஸம்பந்தமான மஞேராஜ்யமும்
"விளங்கிறது."

வாஸிஷ்டராமாயணம்-சு-உத்தரபாகம்-ஸர்-கசுகூ ல், *
"அந்தர்முகமான (வெளிவிஷயங்களிற் செல்லாமல் உள்ளுக்கு
"ள்ளாகவே ஆத்துமாவைப்பார்க்கிற) புத்தியையுடைய எவனு
"க்குச் சுகமானது சுகத்தின்பொருட்டாவது துக்கந்துக்கத்
"தின்பொருட்டாவதாகிறதில்லையொ அப்படிப்பட்டவன் எப்
"போதும் முக்தனென்றுசொல்லப்படுகிருன். சிதாகாசத்தி
"லெ அசைவற்றதாகிய இருப்பையுடைய மனதெவனுக்கிருக்கி
"றதொ மரணமடைந்ததான போகஸாதநங்களிற் (மரணமடை
"ந்த ஸ்திரீமுதலிய போகவஸ்துக்களில் விருப்பமுண்டாகாத
"து) போல பிரக்ஞை (நல்லறிவு) உண்டாகிறதில்லையொ அப்
"படிப்பட்டவன் முக்தனென்று சொல்லப்படுகிருன். எவனு
"டைய மனதானது ஞாநசுவரூபியான ஆத்துமாவிடத்திலிளைப்
"பாருகிறதொ, எவனுடைய மனதானது அசைவற்றிருக்கிற
"தொ, எவனுடைய மனதானது இந்த ஆத்துமாவினிடத்திலே
"யே ரதியை (அதிகமான ஆசையை அல்லது விசுவாஸத்தை)
"யுடைத்தாயிருக்கிறதொ அப்படிப்பட்டவன் முக்தனென்று

---

तस्यां तदनु नानातां गच्छति स्वयम् ॥ १९ ॥ संकल्पमयमेवेदं जगदा भोगि दृश्यते । न सत्यं नच मिथ्यैव स्वप्नजाल मिवोत्थिम् ॥ २० ॥ जंतोर्यथा मनोराज्यं विविधारं भभासुरम् । ब्राह्मं तथेदं विततं मनोराज्यं विराजते ॥ २१ ॥

* न सुखाय सुखं यस्य दुःखं दुःखाय यस्य नो । अन्तर्मुखमते र्नित्यं समुक्त इति कथ्यते ॥ १ ॥ यस्य न स्फुरति प्रज्ञा चिद्व्योमन्य चलस्थितेः । प्रमृतेष्विव भोगेषु समुक्त इति कथ्यते ॥ २ ॥ चिन्मात्रात्मनि विश्रान्तं यस्य चित्तमचञ्चलम् । तत्रैव रतिमायान्तं समुक्त इति कथ्यते ॥

"சொல்லப்படுகிருன். பரமாத்துமாவினிடத்திலிளைப்பாருகிற "தும் பார்க்கப்படுகிற வஸ்துக்களில் மறுபடி விருப்பமில்லாம "லிருக்கிறதுமான மனதெவனுக்கிருக்கிறதோ அவன்ஜீவன்முக் "தனென்று சொல்லப்படுகிருன்."

பிரும்மபுராணம்-அத்-கூச-ல், * "வாஸ்தவமாயும் உலகத் "தை மோகிக்கச்செய்கிறதாயுமிருக்கிற உம்முடைய மாயையான "வள் வியவஹரிக்கப்படுகிற நாமங்களுக்குக்காரணமாயிருக்கிரு "ள். அந்த மாயையினுல் மனிதன் தேகாதிகளாகிய அநாத்து "மாவிலாத்துமபுத்தியையடைந்தவனுய்க் கீழேவிழுகிருன். (ஸம் "ஸாரத்தையடைகிருன்). பிரும்மாமுதல் ஸகலமானதேவர்க "ளும் ஸகலமான மனிதர்களும் அப்படியெ சிரேஷ்டர்களும் வி "ஷ்ணுவின் மாயையாகிற பெருஞ்சுழலில் மோகசுவபாவத்தால "ழிந்தியிருக்கிருர்கள்."

சிவபுராணம்-ஞாநஸம்ஹிதை-அத்-எஅ-சு-ள-ல், † "அக் "ஞாநம் அதனுலுண்டானவேற்றுமை இவ்விரண்டும் புத்திக் "கேயன்றி வேருென்றுக்கல்ல. காணப்படுகிற ஸகலவஸ்துக்க "ளிலும் பேதத்தைப் புத்திதான் பார்க்கிறது."

ஷெபுராணம்-வாயுஸம்ஹிதை-அத்-கச-ல், ‡ "எந்த தேவி "யை பிர்மமவித்துக்கள் விசேஷகுணத்தோடு கூடினவளாயும் "பரமாத்துமாவாகிய பவனென்றுசொல்லுகிற பிர்ம்மத்தினுடை "ய சிரேஷ்டமான சக்தியாயுஞ்சொல்லுகிருர்களோ அவள் பர்த் "தாவின் தேகத்தினுடைய பாகத்திலிருந்துண்டானவள்போற்

---

२ ॥ परमात्मनि विश्रान्तं यस्य व्यावृत्यनोमनः । रमतेस्मिन् पुनर्दृश्ये स जीवन्मुक्त उच्यते ॥ ४ ॥

* माया ते नाम बीजाय परमार्थाति मोहिनी । अनात्मन्यात्म विज्ञानं ययारूढो नरश्च्युतः ॥ ११ ॥ ब्रह्माद्या स्सकलादेवा मनुष्याः परमास्तथा । विष्णुमाया महावर्ते मोहधर्मे समावृताः ॥ १४ ॥

† अज्ञानञ्च मतेर्भेदो नास्त्यन्यस्य द्वयं पुनः । दर्शनेषु च सर्वेषु मतिभेदः प्रदृश्यते ॥

‡ यामाहु ब्रह्मविद्वांसो देवीं दिव्यगुणान्विताम् । परस्य परमां शक्तिं भवस्य परमात्मनः ॥७॥ सा भर्तुर्वपुषो भागा ज्जातेव समदृश्यत ॥९॥

"காணப்படுகிருள். யாதொரு அந்த சக்தியானவள் இந்தஜகத்
"துமுழுமையும் தன்மஹிமையினல் வியாபித்துக்கொண்டிருக்கி
"ருளோ இந்த ஸகலஜகத்தையும் மாயையினலெவள்மோஹிக்க
"ச்செய்கிருளோ அப்படிப்பட்ட அவள் ஈசுவரனிடத்திலிருந்து
"ண்டானவள்போற் காணுகிருள். வாஸ்தவமாயுண்டானவளல்ல.
"எவளுடைய சிரேஷ்டமான தோற்றமானது தேவதைகளுக்கு
"க்கூடத்தெரியாமலிருக்கிறதோ அப்படிப்பட்டவள் பர்த்தாவி
"னுடைய தேகத்திலிருந்து பிரிபட்டிருக்கிறவள்போல்விசுவேசு
"வரியாகவும் அமரேசுவரியாகவும் விளங்கிருள்"

பாகவதம்-ஸ்கந்தம் கக-அத்-கக-ல், * "பந்தமோக்ஷமென்
"கிற வார்த்தையானது என்னுடைய மாயாகுணத்தினலேயே
"யன்றி வாஸ்தவத்திலில்லை. (ஸத்துவரஜஸ்தமோ) குணங்களு
"க்குக்காரணம் மாயையானதனலே மோக்ஷமாவது பந்தமாவ
"தெனக்கில்லை. சுவப்நமானதெப்படி புத்தியில்விளங்கிறதோ
"அப்படி துக்கம், மோஹம், சுகந்துன்பம் பிறப்பு இவைகளெல்
"லாம் மாயையினலேதான் விளங்கிறது. பிறப்பிறப்பாகிற ஸம்
"ஸாரமானது வாஸ்தவமல்ல."

பாகவதம்-ஷ-கஉ-அத்-சு-சு-உ௫-ல், † "ஓ! இராஜனே!
"பிரத்தியகாத்துமாவினிடத்திலிந்தப் பலவிதமாய்த்தோற்றும்
"தன்மை மாயாமாத்திரமே."

பிருஹந்நாரதீயபுராணம்-அத்-௩-ல், ‡ "அந்த விஷ்ணுவி
"னுடைய பராசக்தி ஜகத்தினுடைய ரூபாதிகளுக்காதாரமான

---

यासा जगदिदं कृत्स्नं महिम्ना व्याप्य तिष्ठति ॥ १० ॥ सर्वं जगदिदं यैषा संमोहयति मायया । ईश्वरात् सैवजाता भूदजाता परमार्थतः ॥ ११ ॥ नयस्याः परमोभाव स्सुराणामपि गोचरः । विश्वामरेश्वराचैव विभक्ता भर्तुरं गतः ॥ १२ ॥

* बद्धोमुक्त इति व्याख्या गुणतोमेन वस्तुतः । गुणस्य माया मूलत्वान्न मे मोक्षो न बंधनम् ॥ १ ॥ शोकमोहौ सुखं दुःखं देहापत्तिश्च मायया । स्वप्नो यथात्मनः ख्यातिःसंसृतिर्नतु वास्तवी ॥ २ ॥

† मायामात्रमिदं राजन्नानात्वं प्रत्यगात्मनि ॥

‡ तस्य शक्तिः पराविष्णो र्जगत्कार्यपरिश्रया । भावाभावस्वरूपासा

"வள். தோற்றப்படுகிறதும் தோற்றப்படாததுமான வஸ்துசுவ
"ரூபமானவள். அவள்தான் வித்தையென்றுமவித்தையென்றுஞ்
"சொல்லப்படுகிறாள். ஸகலப்பிரபஞ்சமும் மஹாவிஷ்ணுவைக்
"காட்டிலுமந்நியம்போலெப்போது விளங்கிறதோ அப்போதவி
"த்தையானவள் நிலைபெற்றவளாகிறாள். அப்போது துக்கத்
"தைக்கொடுக்கிறவளாகவுமாகிறாள். ஓ! சிரேஷ்டர்களே! அறி
"கிறவன் அறியப்படுகிறவஸ்து முதலிய உபாதி யெப்போதுநசி
"க்கிறதோ அப்போது ஸகலமுமொன்றென்கிற புத்தியுண்டாகி
"றது. அதுதான் வித்தை (ஞானம்) என்றுசொல்லப்படுகிறது.
"இந்த வித்தையைவிட வேறாயும் ஸம்ஸாரத்தைக்கொடுக்கிறதா
"யுமிருக்கிற மஹாவிஷ்ணுவினுடைய மாயையானது பேதமற்ற
"புத்தியினாற்பார்க்கப்படுமேயானால், ஸம்ஸாரத்தை நாசஞ்செய்
"கிறதாயிருக்கிறது. சராசரங்களடங்கிய இந்தஸகலப்பிரபஞ்ச
"மும் விஷ்ணுவினுடைய சக்தியிலிருந்துண்டானதாயிருக்கிறது.
"எதானது அசைவற்றதாயிருக்கிறதோ எது அசைவுள்ளதாயி
"ருக்கிறதோ அந்த இந்தஸகலப்பிரபஞ்சமும் அந்தவிஷ்ணுவுக்
"கந்நியமாயில்லை. ஆகாசமானது (குடம் மடம்) உபாதிகளினா
"லெப்படி வேறுபோல் விளங்கிறதோ அப்படி இந்தஸகலஜகத்
"தும் அவித்தியோபாதியினாற் பேதமாகவிளங்கிறது. ஓ! முனி
"யே! ஹரியானவர், எப்படி ஸகலஜகத்தையும் வியாபித்துக்
"கொண்டிருக்கிறாரோ அப்படி அவருடைய சக்தியும் வியாபித்
"துக்கொண்டிருக்கிறது. (எப்படிப்போலெனில்)உஷ்ணசக்தியா
"னது தனக்கிருப்பிடமான அக்நியிலெப்படிவியாபித்துக்கொ

---

विद्याऽविद्येति गीय्यते ॥ ६ ॥ यदा विश्वं महाविष्णो र्भिन्नत्वे न प्रतीय्यते । तदा ह्यविद्या संसिद्धा तदा दुःखस्य साधनी ॥ ७ ॥ ज्ञातृज्ञेया द्युपाधिस्तु यदा नश्यति सत्तमाः । सर्वैकभावनाबुद्धि स्सा विद्ये त्यभिधीयते ॥ ८ ॥ एवं माया महाविणो र्भिन्ना संसारदायिनी । अभेदबुध्या द्रष्टा चेत् संसार-क्षयकारिणी ॥ ९ ॥ विष्णुशक्तिसमुद्भूत मेतत्सर्वं चराचरम् । यस्याभिन्न-मिदं सर्वं यच्चेदं यच्च नेंगते ॥ १० ॥ उपाधिभि र्यथाकाशो भिन्नत्वे न प्रतीय्यते ।' अविद्योपाधिभेदेन तथेदमखिलं जगत् ॥ ११ ॥ यथा हरिर्ज-गद्व्यापी तस्य शक्तिस्तथा मुने । दाहशक्तिर्यथाङ्गारे स्वाश्रयं व्याप्य तिष्ठ-

"ண்டிருக்கிறதோ வப்படித்தான். அந்தச்சக்தியை சிலர் உமை-
"யென்றும் சிலர் இலக்ஷ்மீயென்றும் சிலர் (ஸரஸ்வதீயாகிய) பா
"ரதி யென்றும் சிலர் கிரிஜையென்றும் அம்பிகையென்றும் துர்
"க்கையென்றும் பத்திரகாளியென்றும் சண்டியென்றும் மாஹே
"சுவரியென்றும் கௌமாரீயென்றும் வைஷ்ணவீயென்றும் வா
"ராஹீயென்றும் சிலர் இந்திரீயென்றும் பிராம்மீயென்றும் வித்
"தையென்றும் அவித்தையென்றும் மாயையென்றுஞ் சிலர் பிர
"கிருதியென்றும் சிலமஹரிஷிகள் பரா, என்றுஞ்சொல்லுகிறார்
"கள். அவள்தான் ஜகத்சிருஷ்டிமுதலிய காரியங்களைச்செய்கி
"றவளாயும் காணப்படுகிறதும் காணப்படாததுமான ரூபத்தோ
"டு ஜகத்தைவியாபித்துக்கொண்டிருக்கிறவளாயுமிருக்கிற விஷ்
"ணுவினுடையபராசக்தி. அவள் பிரகிருதியென்றும் புருஷ
"னென்றும் காலமென்றும் மூன்று விதமாயிருக்கிறாள். சிருஷ்டி
"ஸ்திதிநாசங்களுக்கு அவளொருவளே காரணமாயிருக்கிறாள்."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-உஅ,ல்,*
"சிரேஷ்டமானதாயும் முக்கியமானதாயும் குணமற்றதாயும் பிர
"கிருதிக்கப்புறப்பட்டதாயுமிருக்கிற புருஷனெவனோ அவனிட
"த்திலேயே ஸகலவஸ்துக்களுக்கும் காரணசுவரூபமாயிருக்கிற
"ப்பிரகிருதியானவள் லயத்தையடைகிறாள். அக்கினியிலுஷ்ணம்
"போலும் சூரியனிற்பிரகாசம்போலும் பாலில் வெண்மைபோ
"லும் நீரில் குளுமைபோலும் ஆகாசத்திற் சப்தம்போலும் பூமி

ति ॥ १२ ॥ उमेति केचिदाहुस्तां शक्तिं लक्ष्मीति चापरे । भारतीत्यपरे चैनां गिरिजे त्यम्बिकेतिच ॥ १३ ॥ दुर्गेति भद्रकालीति चण्डीमाहेश्वरीति च । कौमारी वैष्णवीचेति वाराह्यै न्द्रीति चापरे ॥ १४ ॥ ब्राह्मीति विद्याऽविद्येति मायेति च तथा परे । प्रकृतिश्च पराचेति वदन्ति परमर्षयः १५ ॥ सेयं शक्तिः परा विष्णो जगत्सर्गादिकारिणी । व्यक्ताव्यक्तस्वरूपेण जगद्व्याप्य व्यवस्थिता ॥ १६ ॥प्रकृतिश्च पुमांश्चैव कालश्चेति त्रिधा स्थिता । सृष्टिस्थितिविनाशानामेकाकारणताङ्गता ॥ १७ ॥

* परं प्रधानं पुरुषं निर्गुणं प्रकृतेः परं । तत्रैव लीना प्रकृति स्सर्वबीजस्वरूपिणी ॥ २२ ॥ यथाग्नौ दाहिकाशक्तिः प्रभा सूर्ये यथा मुने । यथा दुग्धे च धावल्यं जले शैत्यं यथैवच ॥ २३ ॥ यथा शब्दश्च गगने

"யிற்கந்தம்போலும் அந்தப்பிரகிருதியானவள் அப்படியெ பிர்
"ம்மத்திலிருக்கிறாள். ஓ! முனியே! பிர்ம்மமானதெப்படியெப்
"போதும் நிர்க்குணமொ அப்படிப்பிரகிருதியும் நிர்க்குணமெ.
"சிருஷ்டிகாலத்திலந்த பிர்ம்மமானது அம்சத்தினற் புருஷனெ
"ன்று சொல்லப்படுகிறது. ஓ! குழந்தாய்! அந்தப்புருஷனே
"ஸகுணனய் (ரூபமுடையவனய்) ஸாதாரணமானவிஷயங்களை
"யநுபவிக்கிறவனகச் சொல்லப்படுகிறன். முக்குணமான அந்
"தப்பராசக்தியானவள் அந்தப்புருஷனிடத்திலெயெ ச்சாயாசுவ
"ரூபமாயிருக்கிறளென்று சொல்லப்படுகிறள். ஓ! முநியே!
"குயவன் மண்ணினற் குடஞ்செய்வதற்கெப்படிச் சக்தனயிருக்
"கிறனெவப்படி பிர்ம்மமானது அந்தப்பிரகிருதியினற் சிரு
"ஷ்டிசெய்கிறதற்குச் சக்தியுள்ளதாயிருக்கிறதென்று சிலர்
"சொல்லுகிறர்கள். பின்னுஞ்சிலர் தட்டானனவன் குண்டல
"ஞ்செய்வதற்குத் தங்கத்தினலெப்படி ச்சக்தியுள்ளவனயிரு
"க்கிறனெ அப்படி பிர்ம்மமானது மாயையுடன்சேர்ந்து சி
"ருஷ்டியைச்செய்வதற்குச் சக்தியுள்ளதாகவாகிறதென்று சொ
"ல்லுகிறர்கள். பின்னுஞ்சிலர் குயவன் மண்ணையுண்டாக்கின
"வனல்ல, மண்ணனதெப்போதுமுள்ளதெ. (அப்படிப்போல)
"அந்தப்பிர்ம்மமுமெப்போதுமுள்ளதெ. பிரகிருதியுமெப்போ
"துமுள்ளதேயென்றெண்ணுகிறர்கள். இவ்விரண்டுக்கும் முக்
"கியத்தன்மை ஸமானமானதென்றுஞ் சொல்லுகிறர்கள். பின்
"னுஞ்சிலர் குயவனும் தட்டானும் (முறையெ) மண்தங்கமிவை
"களை யில்லாமையாய்ச்செய்வதற்குச் சக்தியுள்ளவர்களல்ல. ஆ

---

यथा गन्धः क्षितौ सदा । यथा हि निर्गुणं ब्रह्म निर्गुणा प्रकृतिस्तथा ॥ २४ ॥ सृष्टन्मुखेन तद्ब्रह्म चांशेन पुरुषस्मृतः । सएव सगुणो वत्स प्राकृतो विषयी स्मृतः ॥ २५ ॥ साच तत्रैव त्रिगुणा परा च्छाया मयीस्मृता ॥ २६ ॥ यथा मृदा कुलालश्च घटं कर्तुं क्षम स्सदा । तथा प्रकृत्या तद्ब्रह्म सृष्टिं स्रष्टुं क्षमो मुने ॥ २७ ॥ स्वर्णेन कुण्डलं कर्तुं स्वर्णकारः क्षमो यथा । तथा ब्रह्मतया सार्धं सृष्टिं कर्तुमिहेश्वरः ॥ २८ ॥ कुलालसृष्टा न च मृन्नित्या एव सनातनी । न स्वर्णकारस्रष्टं तत्सुवर्णं नित्यमेव च ॥ २९ ॥ नित्यं तत्परमं ब्रह्म नित्याच प्रकृतिस्स्मृता । द्वयोस्समं च प्राधान्यमिति केचिद्व-

"னல், மண் தங்கமிவைகள் அவர்களுக்குக் (வேலைக்குபயோக
"மாக) கொண்டுவரயோக்கியமாயிருக்கிறது. ஆகையினலெ, பி
"ர்ம்மமானது பிரகிருதிக்குமேலானதென்று சொல்லுகிறுர்கள்.
"ஓ! நாரதா! பின்னுஞ்சிலர் (பிர்ம்மம் பிரகிருதி) இவ்விரண்டுக்
"கும் நித்தியத்தன்மை (அழிவற்றதன்மை) நிச்சயமென்றுசொ
"ல்லுகிறுர்கள். பின்னுஞ்சிலர் அந்தப்பிர்ம்மந்தானே பிரகிரு
"தியாயும் புருஷனுயுமிருக்கிறதென்று சொல்லுகிறுர்கள். பின்
"னுஞ்சிலர் பிரகிருதியானது பிர்ம்மத்தைவிடமேலானதென்று
"சொல்லுகிறுர்கள். (இப்படிப்பலர்செய்யுமாக்ஷேபணையைச்சொ
"ல்லிச் சித்தாந்தத்தைச் சொல்லுகிறுர்). ஓ! பிராம்மணேத்த
"மா! அந்த பிர்ம்மமானது அடையத்தகுந்த சிரேஷ்டமானஸ்
"தானமென்றுங் காரணத்திற்கெல்லாங் காரணமென்றும் அந்த
"பிர்ம்மலக்ஷணமானது சுருதியிற்சுவர்ப்பஞ்சொல்லப்பட்டிருக்
"கிறது. பிர்ம்மமாயும் ஸகலத்திற்குமாத்துமாவாயுமொன்றிலு
"மொட்டாததாயும் ஸாக்ஷிசுவரூபமாயுமெங்கும்வியாபித்ததாயு
"ம் எல்லாவற்றிற்குமாதியாயுமுள்ளதென்று பிர்ம்மலக்ஷணம்
"சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது. எதனலெ பிர்ம்மமானது
"சக்தியுடையதோ அதனலெ அந்தபிர்ம்மசக்தியானது ஸகலத்
"திற்கும் பீஜ (காரண) சுவரூபியானப்பிரகிருதியாயிருக்கிறுள்.
"இதுதான் பிரகிருதிலக்ஷணம்."

மார்க்கண்டேயபுராணம்-அத்-அச-ல், * "இந்த ஜகத்தான
"தெந்த ஆத்துமசக்தியாகிற தேவியினல் வியாபிக்கப்பட்டிருக்

---

दन्ति हि ॥ ३० ॥ मृदं स्वर्णं समाहर्तुं कुलालस्वर्णकारकौ । न समर्थौ च मृत्स्वर्णं तयोराहरणे क्षमम् ॥ ३१ ॥ तस्मात्तद्ब्रह्म प्रकृतेः परमेवच नारद । इति केचिद्वदन्त्येव द्वयोश्च नित्यता ध्रुवं ॥ ३२ ॥ केचिद्वदन्ति तद्ब्रह्म स्वयञ्च प्रकृतिः पुमान् । ब्रह्मातिरिक्ता प्रकृति र्वदन्तीतिच केचन ॥ ३३ ॥ तद्ब्रह्म परमं धाम सर्व कारणकारणम् । तद्ब्रह्म लक्षणं ब्रह्मन्निदं किञ्चिच्छ्रुतौ श्रुतम् ॥ ३४ ॥ ब्रह्मचात्माच सर्वेषां निर्लिप्तं साक्षिरूपिणं । सर्वव्यापिच सर्वादि लक्षणं च श्रुतौ श्रुतम् ॥ ३५ ॥ तद्ब्रह्म शक्तिः प्रकृति स्सर्वजीवस्वरूपिणी । यतस्तच्छक्तिमद्ब्रह्म चेदं प्रकृतिलक्षणम् ॥ ३६ ॥

* देव्याय यात तमिदं जगदात्मशक्त्या ॥ २ ॥ हेतुस्समस्तजगतां

"கிறதோ அப்படிப்பட்ட நீ ஸகலஜகத்திற்குங்காரணமாயிருக்கி
"ருய். முக்குணமுடையவளாயிருந்தாலும் அக்ஞாநிகளாலறிய
"ப்படுகிறதில்லை. ஹரிஹராதிகளாலுங்கூட உன் முடிவறியக்கூ
"டியதல்ல. ஸகலத்திற்குமாதாரமானவளாயும் அவ்வியாகிருதமெ
"ன்கிற பெயருள்ளவளாயும் ஆதியிலுள்ளவளாயும் உத்கிருஷ்ட
"மான பிரகிருதியாயும் உன்னுடைய அம்சபூதமானவிந்த ஸகல
"ஜகத்தாயும் நீயேயிருக்கிறுய்."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-எ0 ல், * "ஓ! முநீசுவ
"ரர்களே! பிரகாசசுவரூபியான பரமாத்துமா, பரதத்துவத்தில்
"(இரண்டாவதற்ற ஒன்ருய்) இருக்கையில் அந்த ஈசுவரனிடத்தி
"லிருந்துஸகலத்திற்குங்காரணமான அவ்வியாகிருதமுண்டாயிற்
"று. எதையப்போது பிரதாநமென்றும் பிரகிருதியென்றும்
"தத்துவத்தை யறிந்தவர்கள் சொன்னுர்களோ, அது வாஸ
"னை, வர்ணம், இரஸமிவைகளற்றதாயும் சப்தஸ்பர்சமற்றதாயும்
"ஜரையற்றதாயு மாசையற்றதாயுமழிவற்றதாயுமெப்போதுமுள்
"ளதாயும் தன்னுடைய (தனக்காசிரயமான) ஆத்துமாவினிடத்தி
"லிருக்கிறதாயும் ஜகத்திற்குக்காரணமாயும்நாசமற்றபிர்ம்மமான
"மஹாபூதமாயு மீசுவராக்ஞையினுலேவப்பட்டதாய்க்கொண்டு
"ஸகலபூதசுவரூபமாயும் ஆதிமுடிவற்றதாயும் பிறப்பற்றதாயும்
"சூக்ஷ்மமாயும் முக்குணமுடையதாயுமுற்பத்திநாசமில்லாததாயு
"ம் கண்ணுலாவது மனதினுலாவதறியத்தகாததாயுமிருக்கிற அ
"ந்த அவ்வியக்தமானது பிர்ம்மத்திற்குமுன்பாக (சூரியன்முன்
"பாக மேகம்போல்) வியாபித்துக்கொண்டிருக்கிறது."

---

त्रिगुणापि दोषै र्नज्ञायसे हरिहरादिभिरप्यपारा । सर्वाश्रयाखिलमिदं जगदंशभूतमव्याकृताहि परमा प्रकृतिस्त्वमाद्या ॥ ६ ॥

* परत्वे संस्थितो देवः परमात्मा मुनीश्वराः ॥ २ ॥ अव्यक्तं चेश्वरात्तस्मादभवत्कारणं परं । प्रधानं प्रकृतिंचेति यदाहुस्तत्वचिन्तकाः ॥३॥ गन्धवर्णरसैर्हीनं शब्दस्पर्शविवर्जितम् । अजरं ध्रुवमक्षय्यं नित्यं स्वात्मन्यवस्थितम् ॥ ४ ॥ जगद्योनिं महाभूतं परं ब्रह्म सनातनम् । विग्रहस्सर्वभूतानामीश्वराज्ञा प्रचोदितम् ॥ ५ ॥ अनाद्यन्तमजंसूक्ष्मं निर्गुणं प्रभवाप्ययं । अप्रकाशमविज्ञेयं ब्रह्माग्रे समवर्तत ॥ ६ ॥ இந்த வாக்கியங்களைப்போ

வராஹபுராணம்-அத்-கசஉ-சு-உசு-ல், * "நிலையற்றசித்த "முடைய மூடர்கள் துக்கங்களையேயடைகிறார்கள். உலகத்திற் "கு (உலகந்தோற்றுவதற்கு) சித்தங் காரணமாயிருக்கிறது. சித் "தநாசமேயல்லவா மோக்ஷத்திற்குக்காரணமாயிருக்கிறது?"

கூர்மபுராணம்-அத்-கஉ-ல், † "மாயையானவள் ஸகலத்தி "லுமிருக்கிறவள். சூக்ஷ்மமானவள். அவித்தையென்கிறபெய "ரையுடையவள். எப்போதுமுள்ளவள். முடிவற்றரூபமுடைய "வள். முடிவில்லாதவள். பிரகாசசுவரூபிணீ. புருஷனை மோகிப் "பிக்கிறவள். அநேகவுருவமாயிருக்கிறவள். முக்காலத்திலுமி "ருக்கிறவள். பிர்ம்மத்திலிருந்துவெளிப்படுகிறவள். ஹரிசுவரூ "பிணீ (என்றால், விஷ்ணுமாயை). பிர்ம்ம விஷ்ணு சிவ ரூபியா "யும் பிரும்மா ஈசுவரன் விஷ்ணு இவர்களையுண்டாக்கினவளாயு "மிருக்கிறவள். பிர்ம்மமென்கிற பெயரையுடையவள், இவள் "பிர்ம்மத்தையே (அக்நியையுஷ்ணம்போல்) ஆசிரயித்திருக்கிற "வள்."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை. முக்திகண்டம்-அத்-ரு-ல், ‡ "உல "கத்திற் குடமுண்டாயிற்றென்ற அறிவுண்டானவுடனே குடமி "ல்லையென்கிற அறிவெப்படிநசிக்கிறதோ அப்படி ஆத்துமஞான "மாத்திரத்தினாலே ஆத்துமாவினுடைய அக்ஞானம் நசித்துப் "போகிறது. கயிற்றில் (பாம்பென்கிற) அக்ஞானம் நாசமானாற் "கயிற்றிற்தோற்றுகிற பாம்பு நாசமடைகிறது. அப்படியே ஆத் "துமாவினுடைய அக்ஞானம் நசித்தால் ஸம்ஸாரம்நசிக்கிறது.

---

லொற்ற வாக்கியக்களை வாயுபுராணம் பூர்வபாகம். அத்-ச-சு-கஎ. முதல், உக-வரை-காண்க.

* प्राप्नुवन्ति च दुःखानि भ्रमचित्ता नराधमाः । चित्तनाशो हि लोकस्य चित्तं मोक्षस्य कारणम् ॥

† सर्वसाधारणी सूक्ष्मा ह्यविद्या पारमार्थिकी । अनन्तरूपानन्तस्था देवी पुरुषमोहिनी । अनेकाकारसंस्थाना कालत्रयविवर्जिता । ब्रह्मजन्मा हरेर्मूर्तिर्ब्रह्मविष्णुशिवात्मिका । ब्रह्मेश विष्णुजननी ब्रह्माख्या ब्रह्मसंश्रया ॥

‡ घटाज्ञानं घटाज्ञनाद्यथा लोके विनश्यति ॥ ७ ॥ तथात्मिज्ञानमात्रेण नश्यत्यज्ञानमात्मनः । रज्ज्वज्ञानविनाशेन रज्जुसर्पो विनश्यति ॥ ८ ॥

"ஆகையினாலே காரணமான அக்ஞாந நாசத்தினால் ஸம்ஸாரநாச
"மாகிறது. ஆத்துமதத்துவமறியப்பட்டாலப்படியறியப்பட்ட
"தத்துவமானது பிரம்மமாத்திரமே."

ஷ சூதஸம்ஹிதை-பிரும்மகீதை-அத்-எ-சு-ருக-ல், * "சித்
"ஜீவர்களுக்குட் பேதமானது மாயையினாற்கற்பிக்கப்பட்டு வா
"ஸ்தவம்போல் விளங்கிறது. (எப்படிப்போலெனில்) ஆகாச
"மானது கடாகாச மஹாகாசமென்கிற பேதங்கள்போற்றான்."

வாயுபுராணம்-உத்தரபாகம்-அத்-சஉ-சு-௩கூ-ல், † "கயிற்
"றிற்பாம்பு பாலைநிலத்தில் ஜலத்தோற்றம் ஆகாசத்தில் நீலத்
"தோற்றமிவைகளெப்படிக் கற்பனையோ அப்படியெதையறியா
"ததனாலே (பிர்ம்மத்தையறியாத அக்ஞாநத்தினாலே) அஸத்தா
"கிற இந்தப்பிரபஞ்சம் கற்பிக்கப்பட்டு விளங்கிறது."

அத்தியாத்துமராமாயணம்-கிஷ்கிந்தாகாண்டம்-அத் ௩-ல்,
‡ "ஓ! சுபே! ஸம்ஸாரமானது மனதேயென்பதிற் சந்தேகமி
"ல்லை. பந்தமும் மனதேதான். ஆத்துமாவானவன் மனது, தா
"னென்றபிமானித்து மனதினுடையப் பந்தத்தையடைந்தவனாக
"வாகிறான். எப்படியெனில், சுத்தஸ்படிகமானது செம்பருத்தி
"ப்பூ முதலியவைகளின் ஸமீபத்திலிருக்கையில் அந்தந்தவர்ண
"முடையதாக விளங்கிறது. அப்படியிருந்தாலும் வாஸ்தவத்தி
"லந்தவர்ணம்முதலியன ஸ்படிகத்திலில்லாததுபோற்றான்."

---

तथात्माज्ञाननाशेन संसारस्सविनश्यति । तस्मादज्ञानमूलस्य संसारस्य क्षयो भवेत् ॥ ९ ॥ आत्मनस्तत्वविज्ञानात्तत्वं ब्रह्मैव केवलम् ॥ १० ॥

* प्रकाशते स्वयं भेदः कल्पितो मायया तयोः । यथाकाशो घटाकाशमहाकाशप्रभेदतः ॥

† रज्जाव हिर्मरौ वारि नीलिमा गगने यथा । असद्विश्वमिदं भाति यस्मिन्नज्ञानकल्पितम् ॥

‡ मनएव हि संसारो बन्धश्चैव मनश्शुभे । आत्मा मनस्समानत्वमेत्य तद्गतबन्धभाक् ॥ २१ ॥ यथा विशुद्धस्फटिको अलक्तादिसमीपतः । तत्तद्वर्णयुतो भाति वस्तुतो नास्तिरञ्जनम् ॥ २२ ॥

6. ஓ! ஜயவிரதா! இந்தப்பிரமாணவாக்கியங்கள் பிர்ம்ம சக்தியாகிறப் பிரகிருதியானது அவ்வியக்தம் மாயை அக்ஞாநம் என்பது முதலியவநேக பெயர்களால் விளங்கிறதென்று சொல்லுகின்றன. மேலும் அக்ஞாநமேஸங்கற்பம் வாஸனை கருமம் இப்படிப்பட்டசுவரூபமான மனதாகப்பரிணமித்திருக்கிறது. ஆத்துமாவை, அவன்சுவரூபத்தை யறியவொட்டாமல் அம்மனதே மறைத்து தான் ஜீவனென்றுப் பிரமிக்கும்படிசெய்கிறது. அந்தப்பிரமையினாலாத்துமா ஸம்ஸாரத்தையடைகிறானென்பதும் ஆத்துமாவுக்கு ஸம்ஸாரமாவது பந்தமோக்ஷங்களாவது வாஸ்தவமாயில்லாவிட்டாலும், சுவப்நத்திற் சலநமற்றிருக்கிற ஆத்துமா அநேகவித சுகதுக்காதிகளை யநுபவிக்கிறதுபோல், நீண்டசுவப்நமாகிய ஜாக்கிரதவஸ்தையிலும் ஸம்ஸார சுகதுக்காதிகள் பிரமையினலாத்துமாவுக்குண்டாயிருக்கிறதென்பதும் தெளிவாய்ச்சொல்லுகின்றன. இப்படிப்பட்டவாக்கியங்களின்னுமநேகங்களுண்டு, விரிந்துபோகுமென்றெண்ணிச் சுருக்கமாய்ச்சொன்னேன். இனியெதைக்கேட்கவிரும்புகிறாயோ அதைக்கேள்.

7. ஜயவிரதன்:—மேற்குறித்த வாக்கியங்களில் ஜகத்தானது மனத்தோற்றமென்று சிலவாக்கியங்களும் சித்தத்தோற்றமென்று சிலவாக்கியங்களும் வாஸனையினாற்தோற்றுகிறதென்று சில வாக்கியங்களுஞ்சொல்லுகின்றன.

ஒரே காரியத்திற்குப் பலகாரணங்களெப்படியிருக்கக் கூடும்?

8 ஸுசர்ம்மா:—மனது, சித்தம், புத்தி, அகங்காரமென்ற இந்நான்கும் பொதுவாய் அந்தக்கரண சதுஷ்டயமென்று சொல்லப்படுகிறது. அதாவது—அந்தக்கரண விருத்தி (தொழில்) யினால்வெவ்வேறு பெயர்களாற் சொல்லப்படுகிறது. அந்தக்கரணமானது பலவிஷயங்களிற் பற்றும்பொழுது மனதென்றும், நிச்சயத்தையடையும்போது புத்தியென்றும், சென்றதையும் வருவதையும் நினைக்கும்போது சித்தமென்றும், அகம்பாவத்தையடையும்போது அகங்காரமென்றுஞ் சொல்லப்படுகிறது.", இப்படி சுருதியுஞ்சொல்லுகிறது.

பைங்களோபநிஷத்-உ-ல், * "அந்தக்கரணத்திற்கு, மன "து, புத்தி, சித்தம், அகங்காரங்களேவிருத்திகள். அவைகளி "ன் விஷயங்கள்முறையெ சங்கற்பம் நிச்சயம் நினைப்பு அபிமா "நாநுஸந்தாநம் என்பனவெ."

சாரீரகோபநிஷத்தில், † "அந்தக்கரணசதுஷ்டயமென்ப "ன—மனது புத்தி அகங்காரம் சித்தமென நான்குவிதம். அவை "களின் காரியங்களாவன—முறையெ சங்கற்பம் (எண்ணம்), "விகற்பம் (சந்தேகம்—இவ்விரண்டும் மனதின்காரியம்). நிச்ச "யம் (புத்தியின்காரியம்) அபிமானம் (அகங்காரத்தின்காரியம்). "அவதாரணம் (சித்தத்தின்காரியம்)."

இப்படி மனதுமுதலிய பேதமாய்ச்சொல்லப்பட்டவைகள் அந்தக்கரணத்தின் தொழில்களே. அவைகளெல்லாம் ஒன்று தான். மேலாகக்குறித்துச்சொன்னவிடங்களில் மனது புத்தி சித்தம் அகங்காரமென்ற பெயர்கள்வந்த விடங்களிலெல்லாம் அந்தக்கரணத்தைச்சொன்னதாகவே கிரஹிக்கவேண்டியது.

வாஸனையென்றால், ஒவ்வொருபிராணியும் முன்ஜந்மங்களிற் செய்த பாபபுண்ணிய கருமபலன்களிலநுபவித்துத்தீர்ந்த பலன்கள் போக அநுபவிக்கப்படாமல் மிச்சமிருக்கிறதாகிய சஞ்சிதகருமபலனானது இந்தஜந்மத்திற் சூக்ஷ்மமாய் பிராணியினுடைய மனதிலடங்கியிருந்துகொண்டு அதன்பலனை இந்தஜந்மத்திற்கொடுக்கிறது. இந்த சஞ்சிதகருமத்தின் மிச்சமானது மனதிற்சூக்ஷ்மமாயடங்கியிருக்கிறதெதுவோ அதற்கு வாஸனையென்றுபெயர். இந்தவாஸனைதான் பிறப்பிறப்பு சுகதுக்காநுபவங்களுக்குக் காரணமாயிருக்கிறது.

பின்னுமுனக்கெதைக்கேட்க விருப்பமிருக்கிறதோ அதைக்கேட்கலாம்.

பத்தாவதுபிரகரணம் முற்றிற்று.

---

* अन्तःकरणमनोबुद्धिचित्ताहङ्कारास्तद्वृत्तयः । सङ्कल्पनिश्चयस्मरणाभिमानानुसन्धानास्तद्विषयाः ॥

† मनोबुद्धिरहङ्कारश्चित्तमित्यन्तःकरणचतुष्टयम् । तेषां क्रमेण संकल्पविकल्पाध्यवसायाभिमानावधारणास्वरूपाश्चैते विषयाः ॥

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பதினோராவதுப்பிரகரணம்.

1. ஜயவிரதன்:—ஓ! மஹாநுபாவா! அத்துவைதசித்தாந்தத்திற் பாரமார்த்திகதசையின் சுவரூபத்தையும் அதற்காதாரமானப் பிரமாணங்களையும் நன்றாயறிந்துகொண்டேன். மேற்படி சித்தாந்தத்தின் வியாவஹாரிகதசையிப்படிப்பட்டதென்று முன்னமையேசுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருந்தாலும் அதைப்பின்னுந்தெளிவாய் விரித்துரைக்கவும், அதற்காதாரமானப் பிரமாணங்களை யெனக்குச்சொல்லவும் பிரார்த்திக்கிறேன்,

2. ஸுசர்ம்மா:—ஓ! ஸுகுணமுடையவனே! வியாவஹாரிகதசையிலுங்கூட பிர்ம்மலக்ஷணம் ஜகத்தின்லக்ஷணம் ஜீவேசுவர ஜகத்துக்களுடைய அபேதம் முதலிய விஷயங்கள் பாரமார்த்திகதசைக்குப்போலவேதான். ஆனால், வியாவஹாரிகதசாவிஷயமான சிலபேதங்களுண்டு. அவைகளைப் பிரமாணமூலமாயுனக்குச் சொல்லுகிறேன்கேள்.

3. பிர்ம்மமானது உலகத்தை சிருஷ்டிப்போமென்றெண்ணியது. ஜலத்திற் குமிழியுண்டாவதுபோற் பிர்ம்மத்தினிடத்தில் மூலப்பிரகிருதி வெளிப்பட்டது. அந்தப் பிரகிருதியானது அநேகப் பெயர்களாலழைக்கப்படுகிறது. அந்தப்பிரகிருதியாகிற அக்ஞானசக்தியானது, சூரியனாலுண்டான மேகமானது சூரியனை மறைக்கிறதுபோற்பிர்ம்மத்தை மறைத்தது. அந்தப் பிரகிருதியாகிற மாயையிற் பிரதிபலித்த பிர்ம்மசைதந்நியம் மாயாசபளபிர்ம்மமென்று மீசுவரனென்றுஞ் சொல்லப்படுகிறது. அந்த பிர்ம்மசைதந்நியப் பிரதிபலிதமாகிய ஈசுவரனிவ்வுலகத்தையெல்லாம் சிருஷ்டிக்கிறது இரக்ஷிக்கிறது அழிக்கிறது முதலிய செய்கைகளையுடையவராயிருக்கிறார். பிரதிபலிதமான ஈசுவரனுக்கு சிருஷ்டியாதிகாரியங்களிற் சாமர்த்தியமுண்டோவென்றா லுண்டு. எப்படியெனில், பிர்ம்மசைதந்நியத்தினுடைய ஸந்நிதிமாத்தரத்தினால் மாயாசக்தியோடுகூடிய ஈசுவரன் ஸகல

காரியங்களையுஞ்செய்ய சக்தியுள்ளவராயிருக்கிறார். மகாவிசித்திரமாகிய மாயாசக்தியை சுவாதீநமாயுடையவர் ஈசுவரன் அவருடைய ஏவுதற்படி சக்தியானது உலகசிருஷ்டியாதி காரியங்களைச்செய்கிறது. அந்த ஈசுவரன் மாயையினாலுண்டாயிருக்கிற ஸகலவஸ்துக்களிலும் பிரதிபலித்திருக்கிறார். இந்த ஸ்தூல ஜகத்தானதுப் பிரளயகாலத்தில் நசித்து சூக்ஷ்மமாய் அதாவது-ஆலம்விதையிலாலமரமடங்கியிருப்பதுபோல அந்த ஈசுவரனிடத்திலடங்கியிருக்கிறது. அந்த ஈசுவரனுக்குச் சிருஷ்டிசெய்ய வெண்ணமுண்டானபோது உலகங்களைச்சிருஷ்டிக்கிறார். பிரளயகாலத்திற் சூக்ஷ்மப்பிரபஞ்சமானது, மெழுகுண்டையிற் தங்கச்சன்னங்களடங்கியிருக்கிறதுபோல மாயையிலடங்கியிருக்கிறதாகச்சொல்வதுமுண்டு.

அந்த ஈசுவராக்ஞையினால் மாயையானது ஸத்துவரஜஸ்தமோகுணங்களாகவும் சூக்ஷ்மமான பஞ்சபூதங்களாகவும் பரிணமித்து அநேகபூதசுவரூபங்களையடைந்தது. ஈசுவரன் அந்தந்த பூதங்களிலுட்புகுந்து அந்தந்தப்பிராணிகளுக்கும் பலவித வஸ்துக்களுக்குமாத்துமாவாகவும் நியாமகராகவுமானார். முதலில் அந்த ஈசுவரன் தன்னிடத்திலிருந்து,அதாவது-தன்னுடையப் பிரதிபலிதத்தோடுகூடிய ஜகதாகாரமான ஹிரண்ணியகர்பனென்றும் விராடென்றும் நாராயணனென்றுஞ்சொல்லப்படுகிற ஆதிபுருஷனைச்சிருஷ்டித்தார். "तस्माद्विराडजायत। विराजोअधिपुरुषः। = அதனிடத்திலிருந்து விராடுண்டாயிற்று. அந்த விராடே ஆதிபுருஷன்" என்று சுருதிசொல்லுகிறது. அந்தவிராட்புருஷனிடத்திலிருந்து பிரும்மாவும் பிரும்மாவின்தேகத்திலிருந்து உருத்திரனுமுண்டானார்கள். அந்த பிரும்மாவினால் ஸகலஉலகங்களும் பிராணிகளும் சிருஷ்டிக்கப்பட்டார்கள். எப்படியெனில், சுத்தசத்துவமாயையின் இரஜோகுணசக்தியை சுவீகரித்து மாயையினுடைய அம்சமான சூக்ஷ்ம பஞ்சபூதங்களைப்பஞ்சீகரணஞ்செய்து அந்தப்பூதங்களைஸ்தூலமாக்கினார். அந்தஸ்தூலபூதங்களைக்கொண்டு உலகங்களை சிருஷ்டித்தார். விஷ்ணுவாகப் பிரதிபலித்த அந்த ஈசுவரனே உலகத்தை இரக்ஷிக்கிறார். உருத்திரராகப்பிரதிபலித்த அந்த ஈசுவரனே உலகத்தையழிக்கிறார். இந்தப் பிரும்ம விஷ்ணு உருத்திரர்கள் ஸத்துவரஜஸ்தமோகுணங்கள் மூல

மாய் சிருஷ்டியாதி காரியங்களைச்செய்கிறார்கள். அந்த ஈசுவரனே மலினஸத்துவமாயையாகிற அவித்தையினாற் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறப் பிராணிகளுடைய அந்தக்கரணத்திற் பிரதிபலித்தவனாய்க்கொண்டு ஜீவர்களென்று சொல்லப்படுகிறான். அந்த ஜீவன், தானீசுவரனுடையப் பிரதிபலிதம், ஈசுவரனைத்தவிரத் தான்வேறல்லவென்கிற ஞானத்தினாற் தனக்குள்ள அவித்தியோபாதியையும் ஈசுவரனுக்குள்ள மாயோபாதியையும் விலக்கிப்பார்த்தால் அவன் பிர்ம்மமாகவேயாகிறான். இவைகள்தான் வியவஹாரதசையின் முக்கியமானவிஷயங்கள். இந்தத் தசையிலுங்கூடஜீவேசுவரஜகத்துக்களெல்லாம் பிர்ம்மமேயென்பதிற் சந்தேகமில்லை.

4. இந்த வியவஹாரதசை ஸம்பந்தமானப்பிரமாணங்களிற் சிலதைச் சொல்லுகிறேன் கேள்.

தைத்திரீயோபநிஷத்-௨-௬-ல், * "அவன் (ஈசுவரன்), நானே அநேகமாகவாகிறேன் அநேகங்களையுண்டுபண்ணுகிறேன் என்று இச்சித்தான்."

ஷை ௨-௭-ல், † "சிருஷ்டிக்குமுந்தி இந்தப் பிரபஞ்சமானது நாமரூப வேறுபாடில்லாத அவ்வியாகிருதமாக (காணப்படாததாக) இருந்தது. பிறகு வியாகிருதமாகவாயிற்று. அப்போது (ஈசுவரன்) தன்னை ஸகலத்திற்குமாத்துமாவாகச்செய்துகொண்டான்."

சாந்தோக்கியோபநிஷத்-௬-௨-௩-ல், ‡ "(ஈசுவரனாகிய ஆத்துமா) அநேகமாகவாகிறேனென்றும், உண்டுசெய்கிறேனென்றும் அதைப் (மாயையை) பார்த்தார்."

ஷை-உபநிஷத்-௬-௩-௨-ல் $ "(அந்த ஈசுவரந்தானே) ஜீவரூபமாய்ப் பிரவேசித்துப் பெயர் ரூபமிவைகளைப் பிரகாசப்படுத்துகிறேனென்று எண்ணினார்."

---

* सोऽकामयत बहुस्यां प्रजायेयेति ॥

† असद्वा इदमग्रआसीत् । ततोवैसदजायत । तदात्मानगँस्वयमकुरुत ॥

‡ तदैक्षतबहुस्यां प्रजायेयेति ॥

$ अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणीति ॥

பிருஹதாரண்ணியகோபநிஷத்-௪ க-௨0-ல், * "சிலந்திப் "பூச்சியானது (வாயிலிருந்துண்டாக்கிய)நூலினாலெப்படி ஸஞ்ச "ரிக்கிறதோ அக்நியிலிருந்து அற்பமான பொறிகளெப்படிகிள "ம்புகின்றனவோ அப்படியந்த இந்த ஆத்துமாவினிடத்திலிருந் "து ஸகலப்பிராணன்களும் ஸகலலோகங்களும் ஸகல தேவதை "களும் ஸகலபூதங்களுமுண்டாகிறார்கள்."

நிராலம்போபநிஷத்தில், † "ஈசுவரன் யார்? அவனுடைய "லக்ஷணம் யாது? பிர்ம்மமே தன்னுடைய சக்தியாகிறப் பிரகிரு "தியினாலே (ஈசுவரனென்கிற) பெயரைவஹித்துலகங்களைச் சிரு "ஷ்டித்து (அவைகளில்) அந்தர்யாமியாய்ப் பிரவேசித்துப் பிரு "ம்மா முதலானவர்களுடைய புத்தீந்திரியங்களுக்கு நியாமகனா "யிருக்கிறதனாலே ஈசுவரனாகிறான்."

ஷை-உபநிஷத்தில், ‡ "ஜீவன்யார்? ஈசுவரனே பிரும்மா "விஷ்ணு உருத்திர னிந்திரன்முதலிய நாம ரூபமூலமாய் "நான் "ஸ்தூலதேகமாயிருக்கிறேன்" என்று ஆரோபிதம் (கற்பனை) "செய்துகொள்ளுவதனாலே ஜீவனாகிறான். அந்த ஈசுவரனொருவ "னேயானாலுந் தேகோத்பத்திக்குக் காரணமான கருமபந்தத்தி "னாற் பலஜீவர்களாகக் காணப்படுகிறான்."

சுகரஹஸ்யோபநிஷத்தில், § "இந்த ஜீவனானவன் காரிய "மான அவித்தையை யுபாதியாயுடையவன். ஈசுவரன் காரண "மான மாயையை யுபாதியாயுடையவன். காரிய காரணங்களைத் "தள்ளிவிட்டாற் பூர்ண ஞானசுவரூபியான ஆத்துமாவே மிஞ்சு "கிறது."

---

* यथोर्णनाभिस्तंतुनोच्चरेद्यथाग्नेः क्षुद्राविस्फुलिङ्गाव्युच्चरन्त्येवमेवास्मादात्मनस्सर्वे प्राणास्सर्वे लोकास्सर्वे देवास्सर्वाणि भूतानि व्युच्चरन्ति ॥

† ईश्वरइतिच । किं तल्लक्षणं । ब्रह्मैव स्वशक्तिप्रकृत्याभिधेयमाश्रित्य लोकान् सृष्ट्वा प्रविश्यान्तर्यामित्वेन ब्रह्मादीनां बुद्धीन्द्रियनियन्तृत्वादीश्वरः ॥

‡ जीवइति च । ईश्वरएव ब्रह्मविष्णवीशानेन्द्रादीनां नामरूपद्वारास्थूलोहमित्यध्यासवशाज्जीवः । सोयमेकोपि देहारम्भकभेदवशाद्बहुजीवः ॥

§ कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः । कार्यकारणतां हित्वा पूर्णबोधोऽवशिष्यते ॥

மஹாநாராயணோபநிஷத்-ச-ல், * "காரியகாரணோபாதி
'பேதத்தினாலெ ஜீவேசுவர பேதமுங்காணப்படுகிறது. காரண
"(மாயையை) உபாதியாயுடையவன் ஈசுவரன். காரிய (அவித்
"தையை) உபாதியாயுடையவனிந்த ஜீவன். ஈசுவரனுடைய
"மஹாமாயையானது அவருடைய ஆக்ஞைக்குட்பட்டதாயிருக்
"கிறது. அவருடைய எண்ணப்படிநடக்கப்பட்டது.——காலத்
"தையநுஸரித்து அவித்தியாகாரியங்களான அந்தக்கரணங்களு
"ண்டாகின்றன. அவ்வந்தக்கரணங்களிற் பிர்ம்மசைதந்நியம்
"பிரதிபிம்பித்ததாகவாகிறது. அந்தப் பிரதிபிம்பங்களே ஜீவ
"ர்களென்று சொல்லப்படுகிறார்கள். அந்தக்கரணோபாதிகர்க
"ளெல்லோரும் ஜீவர்களென்று இப்படியுஞ் சொல்லுகிறார்கள்.
"பின்னுஞ்சிலர் புத்திப் பிரதிபிம்பித சைதந்நியமே ஜீவர்களெ
"ன்று நினைக்கிறார்கள். இவர்களுக்கு (ஜீவேசுவரர்களுக்கு)
"வேறறுமையானது உபாதியினாலெயெயன்றி வாஸ்தவத்திலி
"ல்லை."

சாண்டில்லியோபநிஷத்-ந-ல், † "இந்தத் தேவனாகிய பக
"வான் (ஈசுவரன்) ஸகலைசுவரியமுடையவன். எங்கும் நிறைந்த
"வன். ஸகல பூதங்களுடைய ஹிருதயத்தில் நிலையாயிருக்கிறவ
"ன். மாயையாகிற சக்தியுடையவன். மாயாசுவரூபியாயுமிருக்கி
"றவன். அவனே பிரும்மா, அவனே விஷ்ணு, அவனே உருத்
"திரன், அவனே இந்திரன், ஸகலதேவதைகளுமவனே. ஸகல
பூதங்களாயுமவனேயிருக்கிறான்."

---

* कार्यकारणोपाधिभेदाज्जीवेश्वरभेदोपि दृश्यते। कारणोपाधिरीश्वरः। कार्योपाधिरयं जीवः। ईश्वरस्य महामाया तदाज्ञावशवर्तिनी तत्सङ्कल्पानुसारिणी—अविद्याकार्याण्यन्तःकरणान्यतीत्य कालाननुतानि जायन्ते। ब्रह्मचैतन्यं तेषु प्रतिबिम्बितं भवति। प्रतिबिम्बाएव जीवाइति कथ्यन्ते। अन्तःकरणोपाधिकास्सर्वे जीवाइत्येवं वदन्ति। बुद्धिप्रतिबिम्बितचैतन्यं जीवाइत्यपरे मन्यन्ते। एतेषामुपाधिनानात्वमेव भेदोनविद्यते ॥

† असौ देवो भगवान् सर्वैश्वर्यसम्पन्नस्सर्वव्यापी सर्वभूतानां हृदये सन्निविष्टो मायावी मायाकृतिः। सब्रह्म सविष्णु स्सरुद्र स्सइन्द्र स्ससर्वे देवा स्सर्वाणि भूतानि ॥

பைங்களோபநிஷத்-க-ல், * "பிர்ம்மத்தினிடத்திற், கான
"லில் ஜலம் கிளிஞ்சிலில் வெள்ளி கட்டையிற் புருஷன் ஸ்படிக
"த்தில் வர்ணம் முதலியவைபோற் சிவப்பு வெளுப்புக் கறுப்பு
"இந்தக் குணமயமானதும் ஏற்றக்குறைதலன்றி யொவ்வொன்
"றும் ஸமமாயிருக்கிற குணசுவரூபமானதும் வாக்குக்கெட்டாத
"துமாகிய மூலப்பிரகிருதியிருந்தது. அதனிடத்திற் பிரதிபிம்
"பித்ததெதுவோவது ஸாக்ஷிசைதந்நியமாயிருக்கிறது. அந்தப்
"பிரகிருதி விகாரமடைந்து ஸத்துவத்தை முக்கியமாயுள்ள அவ்
"வியக்தமென்கிற பெயரையுடைய ஆவரணசக்தியாயிற்று. அதி
"ற் பிரதிபலித்ததெதுவோ அது ஈசுவரசைதந்நியமாயிருக்கிற
"து. அந்தஈசுவரன் மாயையை சுவாதீநமாயுடையவனும் ஸர்வ
"க்ஞனும் சிருஷ்டிஸ்திதிலயங்களுக்கு ஆதிகர்த்தாவாயும் ஜக
"த்திற்கு முளையாயுமிருக்கிறான்.——ஈசுவரனுக்கு சுவாதீநமாயி
"ருக்கிற ஆவரணசக்தியிலிருந்து இரஜோகுணப்பிரதாநமான
"மஹத்தென்கிற பெயரையுடைய விக்ஷேபசக்தி தோற்றியது.
"அதிற்பிரதிபலித்ததெதுவோ அது ஹிரண்ணியகர்பசைதந்நிய
"மாயிருக்கிறது. மஹத்தத்துவாபிமாநியான அவன் வெளிப்ப
"டையானவும் வெளிப்படையாகாதவுந்தேகமுடையவனாகிறான்.
"ஹிரண்ணியகர்பனிடத்திலிருக்கிற விக்ஷேபசக்தியிலிருந்து த
"மஸைப் பிரதாநமாயுடைய அகங்காரமென்கிற ஸ்தூலசக்தியு
"ண்டாயிற்று. அதிற் பிரதிபலித்ததெதுவோ அது விராட்சை
"தந்நியமாயிருக்கிறது அவனதற்கபிமாநியாகி வெளிப்படை
"யான சரீரமுடையவனாய் ஸகல ஸ்தூலத்தையும் இரக்ஷிக்கிறப்

---

* तस्मिन्मरुशुक्तिकास्थाणुस्फटिकादौ जलरौप्यपुरुषरेखादिव ल्लोहित-शुक्लकृष्णगुणमयी गुणसाम्याऽनिर्वाच्या मूलप्रकृतिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तत्साक्षिचैतन्यमासीत् । सा पुनर्विकृतिं प्राप्य सत्वोद्रिक्ताऽव्यक्ताख्याऽऽवरणशक्तिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तदीश्वरचैतन्यमासीत् । सः स्वाधीनमायः सर्वज्ञः सृष्टिस्थितिलयानामादिकर्ता जगदंकुररूपो भवति । ——ईश्वराधिष्ठितावरणशक्तितो रजोद्रिक्ता महदाख्या विक्षेपशक्तिरासीत् । तत्प्रतिबिम्बितं यत्तद्धिरण्यगर्भचैतन्यमासीत् । महत्तत्वाभिमानी स्पष्टास्पष्टवपुर्भवति । हिरण्यगर्भाधिष्ठितविक्षेपशक्तितस्तमोद्रिक्ताऽहङ्काराभिमानी स्पष्टवपुस्सर्व-

"பிரதாநபுருஷனாகிய விஷ்ணுவாகிறான்.——பஞ்சீகிருத* பூத
"ங்களினாலே அநந்தகோடிபிரும்மாண்டங்களையும் அந்தந்த
"அண்டங்களுக்கு யோக்கியமான பதினான்குலங்களையும் அந்த
"உலகங்களுக்கு யோக்கியமானவும் இந்திரியங்களுக் கிருப்பிட
"மானவும் ஸ்தூலசரீரங்களையுஞ் சிருஷ்டித்தார்.——சிருஷ்டி
"க்கப்பட்ட அவைகளையெல்லாமண்டத்திலமைத்தார், அந்த ஈ
"சுவரனுடைய ஆக்ஞையினாலே அவைகள் ஸமஷ்டியண்டத்தை
"வியாபித்தன.——அண்டத்திலமைத்த அவைகள் அந்த ஈசு
"வரனையன்றி யசையவாவது ஒன்றைசெய்யவாவது சக்தியற்ற
"வைகளாயிருந்தன. அவைகளுக்குச் சேதநத்தை (சலிக்குந்
"தன்மை அல்லது அறிவை) உண்டுசெய்யவிரும்பினார். பிரும்
"மாண்டத்தையும் ஸகல வியஷ்டிமஸ்தகங்களின் (ஒவ்வொருப்
"பிராணிகளின் தலையுச்சியிலுள்ள) பிர்ம்மரந் திரங்களையும் பிள
"ந்துஉள்ளேப்பிரவேசித்தார். அவைகள் ஜடமாயிருந்தாலுஞ்
"சேதநத்தைப் போற் தந்தங்காரியங்களைச் செய்தன. ஸர்வ
"க்ஞனாகிய ஈசுவரன் மாயாலேசத்துடன் வியஷ்டிதேகத்தைப்
"பிரவேசித்து அந்த மாயையினாலே மோகிக்கப்பட்டவனாய் ஜீவ
"த்தன்மையையடைந்தான்."

---

स्थूलपालको विष्णुः प्रधानपुरुषो भवति । —पञ्चीकृतभूतैरनन्तकोटिब्रह्मांडानि तत्तदण्डोचितचतुर्दशभुवनानि तत्तद्भुवनोचितगोळकस्थूलशरीराण्यसृजत् । —तानि सृष्टान्यण्डे प्राचिक्षिपत् । तदाज्ञया समष्ट्यण्डं व्याप्य तान्यतिष्ठन् । —अण्डस्थानि तानि तेन विना स्पन्दितुं चेष्टितुं वा न शेकुः । तानि चेतनीकर्तुं सोऽकामयत । ब्रह्माण्डं ब्रह्मरन्ध्राणि समस्तव्यष्टिमस्तकानि विदार्य तदेवानुप्राविशत् । तदा जडान्यपि तानि चेतनवत्स्वस्वकर्माणि चक्रिरे । सर्वज्ञेशो मायालेशसमन्वितो व्यष्टिदेहं प्रविश्य तया मोहितो जीवत्वमगमत् ॥

* பஞ்சீகிருதமென்றால், ஒன்றோடொன்று சேராமற் தனித்தனியாகவிருந்த ஆகாசம் வாயு அக்னி அப்பு பிருதிவியாகிய பூதங்கள் சூக்ஷமமாயிருந்தவைகளை ஸ்தூலமாக்கும்பொருட்டு ஈசுவரனானவர் ஒவ்வொரு பூதங்களையு மிரண்டாகப்பகுத்து அதிலொருபாகத்தை நான்காகப்பிரித்தார். ஆகாசத்தின் ஒரு அரைப்பாகத்தை நான்காகப்பிரித்ததிலிருந்து அதாவது-ஆகாசத்தின் எட்டிலொருபாகத்தைவாயுவினுடைய ஒருபாதி

பைங்களோபநிஷத்-உ-ல், * "அவ்வியக்தலேசமாகிற அக்
"ஞானத்தினலே மறைக்கப்பட்ட பாரமார்த்திகஜீவனுக்குத்தத்
"துவமஸிமுதலிய வாக்கியங்கள் பிர்ம்மத்துடன் ஐக்கியத்தை
"ச்சொல்லுகின்றன. வியாவஹாரிகனுக்கும் பிராதிபாஸிகனு
"க்கும் ஐக்கியஞ்சொல்லவில்லை. அந்தக்கரணப் பிரதிபிம்பசை
"தந்நியமெதுவோ அது (ஜாக்கிரத்ஸ்வப்ந ஸுஷுப்தியாகிற)
"மூன்றவஸ்தைகளையடைகிறது."

மஹோபநிஷத்-அத்-ச-ல், † "ஈக்ஷணம் (பார்வை) முதல்
"பிரவேசம் (தேகத்திற்குட்புகுந்தது) வரையில் சேதநா சேதந
"சுவரூபமான ஜீவேசுவராதி ரூபங்களாகிற சிருஷ்டிகள் ஈசுவர
"னற் கற்பிக்கப்பட்டன. ஜாக்கிரம்முதல் மோக்ஷம்வரையிலு
"ள்ள ஸம்ஸாரமானது ஜீவனற்கற்பிக்கப்பட்டது."

அத்தியாத்துமோபநிஷத்தில், ‡ "சிரேஷ்டமான ஈசுவரனு
"க்கும் ஜீவனுக்கும் உபாதியாகிற முறையே மாயை அவித்தை
"இவைகளை விலக்கிப்பார்த்தாலகண்ட ஸச்சிதாநந்த பிர்ம்மம்
"இலக்ஷியார்த்தமாகிறது."

---

* अव्यक्तलेशाज्ञानाच्छादितपारमार्थिकजीवस्य तत्वमस्यादिवाक्यानि ब्रह्मणैकतां जगुः । नेतरयो र्व्यावहारिकप्रातिभासिकयोरन्तःकरणप्रतिबिम्बितचैतन्यं यत्तदेवावस्थात्रयभाक्भवति ॥

† जीवेश्वरादिरूपेण चेतनाचेतनात्मकं । ईक्षणादिप्रवेशान्ता सृष्टिरीशेन कल्पिता । जाग्रदादि विमोक्षान्तस्संसारो जीवकल्पितः ॥ இந்த வாக்கியங்களை வராஹோபநிஷத் உ-லும்காண்க.

‡ मायाविद्ये विहायैव ह्युपाधी परजीवयोः । अखण्डं सच्चिदानन्दं परं ब्रह्म विलक्ष्यते ॥

யுடனும் மற்றொரு எட்டிலொருபாகத்தை அக்கினியினுடைய ஒருபாதியுடனும் மற்றொரு எட்டிலொருபாகத்தை ஜலத்தினுடைய ஒருபாதியுடனும் மற்ற எட்டிலொருபாகத்தை பூமியினுடைய ஒருபாதியுடனுஞ்சேர்த்தார். இப்படியெ மற்றபூதங்களுடைய ஒருபாதியை நான்காகப்பகுத்து மேற்கண்டபடியெ ஒவ்வொரு பூதங்களுக்குமெட்டில் ஒருபாகமாய்ச் சேர்த்தார். இப்படிச் செய்ததனலொவ்வொருபூதத்திற்கும் தன் சுவாம்சம்பாதியும் மற்ற நான்குபூதங்களுடைய அம்சம் பாதியுமாயாயிற்று. இப்படி பாகிக்கப்பட்டபிறகுதான் ஆகாசம் முதலிய பூதங்கள் ஸ்தூலசிருஷ்டிக்குபயோகமாயிற்று. இதுதான் பஞ்சீகரணமென்று சொல்லப்படுகிறது.

உருத்திரஹிருதயோபநிஷத்தில், * "இந்தச் சரீரத்தில் ஜீ
"வேசுவரர்களென்கிற பெயருள்ள இரண்டுபக்ஷிகள் சேர்ந்திரு
"க்கின்றன. அவர்களிலொருவனான ஜீவன் கருமபலத்தைபுஜிக்
"கிறான். மற்றொருவனான பரமேசுவரன் புஜிக்கிறதில்லை. இந்த
"மஹேசுவரன் போகத்தை யநுபவியாமலே ஸாக்ஷிமாத்திரமா
"யிருக்கிறான். அவர்களுக்குட்பேதமானது மாயையினாற் கற்
"பிக்கப்பட்டதாய் விளங்கிறது. ஆகாசத்திற் கடாகாசம் மடா
"காசமென எப்படி பேதங்கற்பிக்கப்பட்டிருக்கிறதோ அப்படி
"பிர்ம்மத்தினிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்
"கள்."

இந்த வாக்கியங்கள் அந்நபூர்ணோபநிஷத்-அத்-௪-லும் ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-பிர்ம்மகீதை-அத்-௭-௬-௪௯-௫0-௫௧-லுமிருக்கின்றன. இதேஅர்த்தத்தைக் கொடுக்கத்தக்க வாக்கியங்கள் முண்டகோபநிஷத்திலுமிருக்கின்றன. அதாவது:—

முண்டகோபநிஷத்-௩-௧-ல், † "இரண்டழகானபக்ஷிகள்
"(போலிருக்கிற) ஜீவேசுவரர்கள் சேர்ந்தும் தோழர்களாயுமொ
"ருமரத்தில் (தேகத்தில்) இருக்கிறார்கள். அவர்களிலொருவ
"ன் கருமபலத்தைச் செவ்வையாய்ப் புஜிக்கிறான். மற்றொருவ
"ன் புஜிக்காமற் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஒரேவிருக்ஷத்தி
"ற் புருஷனாயிருக்கிற ஜீவன் ஸம்ஸாரத்தில் முழுகினவனாய் சுவ
"தந்தரமற்றவனாய்மோகத்தையடைந்தவனாய் துக்கப்படுகிறான்.
"எப்போது யோகம்முதலியவைகளினாலந்த அந்நியனாகிய ஈச
"னைப்பார்க்கிறானோ அவனுடைய மஹிமையிப்படிப்பட்டதென்
"று அறிகிறானோ அப்போது துக்கமற்றவனாகிறான்."

---

* द्वासुपर्णौ शरीरेस्मिन् जीवेशाख्यौ सह स्थितौ । तयोर्जीवः फलं भुङ्क्ते कर्मणो न महेश्वरः । केवलं साक्षिरूपेण विना भोगं महेश्वरः । प्रकाशितस्स्वयं भेदः कल्पितो मायया तयोः । घटाकाशमठाकाशौ यथाकाशप्रभेदतः । कल्पितौ परमौ जीवशिवरूपेण कल्पितौ ॥

† द्वासुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्व जाते । तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्योऽभिचाकशीति ॥ १ ॥ समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः । जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः ॥ २ ॥ இந்த இரண்டுவாக்கியங்களை சுவேதாசுவதரோபநிஷத்-அத்-௪-௬-௭-லும் காண்க.

இந்த முண்டகோபநிஷத்திலுள்ள இரண்டுவாக்கியங்களுக்கும் ஸ்ரீமத் சங்கராசாரியர்செய்திருக்கிற பாஷியார்த்தமானது மேற்குறித்த உருத்திரஹிருதயோபநிஷத்துவாக்கியங்களை யநுஸரித்ததாகவிருக்கிறது.

யாக்ஞவல்க்யோபநிஷத்தில், * "பகவானான ஈசுவரன் த "ன்னுடைய கலையினால் (பிரதிபிம்பத்தினால்) ஜிவனைப் பிரவே "சிக்கிறாரென்றறியவேண்டியது."

ஸரஸ்வதிரஹஸ்யோபநிஷத்தில், † "அதிலிருந்து (பிர்ம்ம "த்திலிருந்து) ஸத்துவாதிகுணஸாம்மியமானப் பிரகிருதிதத்து "வமுண்டாயிற்று. கண்ணாடியிற் பிரதிபிம்பம்போற் சித்தினு "டையப் பிரதிபிம்பமாகிற நிழலானது ஸத்தியம்போல்விளங்கி "றது. அந்தச் சித்தினுடையப் பிரதிபிம்பத்தினாலந்த மாயை "யானது மறுபடி (ஸத்துவரஜஸ்தமஸ் என்ற) மூன்றாய்விளங் "கிறது. எனக்குப் பிரகிருதி ஸம்பந்தத்தினாற் புருஷத்தன்மை "சொல்லப்படுகிறது. பிறப்பற்ற அவன் சுத்தஸத்துவப்பிரதா "நமான மாயையிற் பிரதிபலிக்கிறான். ஸத்துவப்பிரதாநமானப் "பிரகிருதியானது மாயையென்றுசொல்லப்படுகிறது. அந்தமா "யையானது ஸர்வக்ஞனான ஈசுவரனுக்கு சுவாதீநமுடையதாயு "முபாதியாயுமிருக்கிறது. மாயையை சுவாதீநமாய்வைத்துக் "கொண்டிருத்தல், ஒன்றாயிருத்தல், ஸகலத்தையுமறியுந்தன்மை "இவைகளெல்லாமந்த ஈசுவரனுடையது. ஸாத்துவிகமாயிருக் "கிறதனாலேயும் ஸகலமாயிருக்கிறதனாலேயும் ஜகத்திற்கு ஸா "க்ஷியாயிருக்கிறதனாலேயுமந்த ஈசுவரன் ஜகத்தை சிருஷ்டிக்க "அல்லது சிருஷ்டிசெய்யாமலிருக்க அல்லது வேறாகச்செய்யச் "சக்தியுள்ளவனாயிருக்கிறான். எவனீசுவரனென்று சொல்லப்

---

* ईश्वरो जीवकलया प्रविष्टो भगवानिति ।

† प्रकृतित्वं ततस्सृष्टं सत्वादिगुणसाम्यतः । सत्येवाभाति चिच्छाया दर्पणे प्रतिबिम्बवत् । तेन चित्प्रतिबिम्बेन त्रिविधाभाति सा पुनः । प्रकृत्यवच्छिन्नतया पुरुषत्वं पुनश्च मे । शुद्धसत्वप्रधानायां मायायां बिम्बितोह्यजः । सत्वप्रधानाप्रकृतिर्मायेति प्रतिपाद्यते । सा माया स्ववशोपाधिसर्वज्ञस्येश्वरस्य हि । वश्यमायात्वमेकत्वं सर्वज्ञत्वं च तस्य तु । सात्विकत्वात्समष्टित्वात् साक्षित्वाज्जगतामपि । जगत्कर्तुमकर्तुं वा चान्यथा कर्तुमीश-

"படுகிறுனே அவன் ஸர்வக்ஞத்துவம் முதலிய குணங்களோடு
"கூடியவன். மாயைக்கு விக்ஷேபம் ஆவரணமென இரண்டு சக்
"திகளுண்டு. விக்ஷேபசக்தியானது, சூக்ஷ்மம்முதற் பிரும்மா
"ண்டம்வரையிலுள்ள ஜகத்தை சிருஷ்டிசெய்கிறது. தேகத்தி
"ற்குள்ளாக அறிவு அறியப்படுகிறவஸ்து இவைகளுடையபேத
"மும் வெளியிற் பிர்ம்மத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் பேதமுண்
"டாகும்படி மறைக்கிறதெதுவோ அதுதான் ஆவரணசக்தி. இந்
"த ஆவரணசக்தியே ஸம்ஸாரத்திற்குக் காரணமாயிருக்கிறது."

கர்க்கஸம்ஹிதை-விசுவஜித்கண்டம்-அத்-கச-சு-கரு ல், * "கண்ணுடியிற் தோற்றுகிறப் பிரதிபிம்பமானது இந்தப்புருஷ
"னுடைய தேகத்தைக்காட்டிலும் வேறல்ல. அப்படித்தான்
"மாயாகாரியமான அந்தக்கரணத்தில் ஜீவனுமென்றறியத்தக்
"கது. அந்த ஜீவனனவன் ஞானத்தினுலே, சிரேஷ்டத்திற்கெல்
"லாஞ் சிரேஷ்டமான பிர்ம்மமே."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-உஅ-ல், † "ஜலம்நிறைந்த குடத்திற் சூரிய சந்திரப்பிரதிபிம்பம்போல் ஜீவ
"னுனவன் அந்த ஈசுவரனுடையப்பிரதிபிம்பம். அவன்தான் (ஜீ
"வன்தான்) கருமங்களையநுபவிக்கிறுன். குடமுடைந்தாற் சந்
"திர சூரியப் பிரதிபிம்பங்கள் சந்திர சூரியர்களையடைவதுபோ
"ல, உண்டாயிருக்கிற இந்த (ஸ்தூலசூக்ஷ்மகாரணமாகிய மூன்
"று) தேகமழிந்தால் ஜீவன் பிர்ம்மத்தில் லயமடைகிறுன்."

ஷை-புராணம்-கணபதிகண்டம்-அத்-எ-சு-ககச-ல், ‡" ஓ!
"கிருஷ்ண! பிரகிருதியும் நீரே, புருஷனும்நீரே. வேறெதனு

ते । यस्तु ईश्वरइत्युक्तस्सर्वज्ञत्वादिभिर्गुणैः । शक्तिद्वयं च मायाया विक्षेपावृतिरूपकम् । विक्षेपशक्तिर्लिङ्गादि ब्रह्माण्डान्तं जगत्सृजेत् । अन्तर्दृग्दृश्ययोर्भेदं बहिश्च ब्रह्मसर्गयोः आवृणोत्यपराशक्तिस्सा संसारस्य कारणम् ॥

* अस्य बिम्बो यथाऽऽदर्शे पश्यते न परं वपुः । प्रधानार्थे तथा जीवो ज्ञानेनासौ परात्परम् ॥

† जीवस्तत्प्रतिबिम्बश्च स च भोगी च कर्मणां । यथार्कचन्द्रयोर्बिंबो जलपूर्णघटेषु च ॥ १९ ॥ बिम्बो घटेषु भग्नेषु प्रलीनश्चन्द्रसूर्ययोः । तथा स्त्रष्टौ च भग्नायां जीवो ब्रह्मणि लीयते ॥

‡ प्रकृतिस्त्वं पुमांस्त्वंच वेदान्येन क्वचिद्भवेत् । जीवस्त्वं साक्षिणो

"னும்மையறியக்கூடும் ? ஸாக்ஷியான உம்முடைய ஆத்துமப்பிர "திபிம்பமாயும் போகத்தையநுபவிக்கிறவனாயுமிருக்கிற ஜீவனு "ம் நீர்தான்."

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-சூதகீதை-அத்-உ-ல், * "அவித் "தையை யுபாதியாயுடையவன் ஜீவன். மாயோபாதிகசைதந் "யம் பரமாத்துமாவே வேறல்ல. பிரும்மா விஷ்ணு மஹேசுவர "ர்கள் மாயாகாரியமான குணங்களினால் மறைக்கப்பட்டவர்க "ளாயிருக்கிறார்கள்."

அத்தியாத்துமராமாயணம்-ஆரண்ணியகாண்டம்-அத்-கூ-சு-கூஉ-ல், † "புத்தி அதிற் தோற்றுகிற ஆத்துமப்பிரதிபிம்பம் "இவ்விரண்டினுடைய சேர்க்கைதான் ஜீவனென்று சொல்லப் "படுகிறது."

ஓ! ஜயவிரதா! அத்துவைதசித்தாந்தத்தில் வியவஹாரதசையைப்பற்றியப் பிரமாணங்களிற் சிலதையுனக்குச்சொன்னேன். இந்த வியவஹாரதசையைப்பற்றியப்பிரமாணங்களிலநேகபாகந்துவைதிகளுடைய சித்தாந்தத்தை யாதரிக்கிறதாக அவர்களெண்ணுகிறார்கள். அத்துவைதிகள் வியவஹாரதசையைப் பற்றிய மார்க்கங்கிரமமுக்திமார்க்கமென்றும் பாரமார்த்திகதசையைப்பற்றியமார்க்கம் ஸத்தியோமுக்திமார்க்கமென்றுஞ் சொல்லுவார்கள். ஸத்தியோமுக்தியடைவதற்குக் கிரமமுக்திமார்க்கம் முக்கியஸாதநமென்று சிலரபிப்பிராயப்படுகிறார்கள்.

பின்னும் எதைக்கேட்கவிருப்பமிருக்கிறதோ அதை நீ கேட்கலாம்.

பதினோராவது பிரகரணம்
முற்றிற்று.

---

भोगी स्वात्मनः प्रतिबिम्बकः ॥

* अविद्योपाधिको जीवो न मायोपाधिकः खलु । मायोपाधिकचैतन्यं परमात्मा हि नापरम् ॥ ९१ ॥ मायाकार्यगुणच्छन्ना ब्रह्मविष्णुमहेश्वराः ॥

† बुद्ध्यात्मभावयोरैक्यं जीवइत्यभिधीयते ॥

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பனிரெண்டாவதுபிரகரணம்.

ஜபவிரதன்:—ஓ! ஞாநாநந்தசுவரூபியே! அத்துவைதசித்தாந்தத்தை அவைகளுக்காதாரமானப் பிரமாணங்களுடன் தங்களிடத்திலிருந்து கேட்டு நான்மிகவுமாநந்தத்தையடைந்தேன். விஷயங்களை நன்றாய் மனதில்தரித்துக்கொண்டேன். ஆரியமதத்திற்குட்பிரிவான விசிஷ்டாத்துவைதம் துவைதம் இம்மதங்களுடைய சுவரூபத்தையறிந்துகொள்ள விச்சிக்கிறேன்.

2. ஸுசர்ம்மா:—ஓ! நற்குணமுள்ளவனே! விசிஷ்டாத்துவைதம் துவைதம் இம்மதங்களுடைய சுவரூபத்தை யொன்றின்பின்னொன்றாகப் பிரமாணங்களுடன்சொல்லுகிறேன் கவநமாய்க்கேள்.

### விசிஷ்டாத்துவைதம்.

3. விசிஷ்டமென்றால், பிரிவன்றிக்கூடியிருக்கிறதென்றர்த்தம். அத்துவைதமென்றால், இரண்டல்ல. அதாவது—ஒன்றேஎன்றர்த்தம். எதோடெது கூடியிருக்கிறதென்றால், இப்போது காணப்பட்டுக்கொண்டிருக்கிற ஸ்தூலமான ஜடசேதநங்களுடன் பரமாத்துமா கூடியிருக்கிறார். இப்படியெ ஸ்தூலமாயிருந்த இந்த ஜடசேதநவஸ்துக்கள் பிரளயகாலத்திற் சூக்ஷ்மமாயிருக்கிற ஜடசேதநவஸ்துக்களுடன் பரமாத்துமா கூடியிருக்கிறார். அதாவது—அந்தஜடசேதநவஸ்துக்களுக்குப் பரமாத்துமா ஆத்துமாவாகவிருக்கிறாரென்பதுகருத்து. ஜடசேதநப்பிரபஞ்சங்கள் ஸ்தூலமாயிருக்கும்போது அவைகளுடன் சேர்ந்திருக்கிற பரமாத்துமாயாரோ அவர்தான், சூக்ஷ்மசிதசித்துவஸ்துக்களுடன் கூடியிருக்கிறவராகையால், அவரிரண்டுசுவரூபமில்லாத ஒரேசுவரூபமுடையவர். இதனாற் பரமாத்துமா ஸ்தூலசூக்ஷ்மசிதசித்வஸ்துக்களுடன் கூடியிருக்கிறவரும் இரண்டாவதற்றவருமாகையால், விசிஷ்டம் அத்துவைதம் என்றுசொல்லப்பட்டது. ஸ்தூலசூக்ஷ்மசிதசித்வஸ்துக்களுடன் பரமாத்துமா, எப்படிக் கூடியிருக்கிறாரென்றால், சரீரியும் சரீரமும்போற்றான்.

4. பரமாத்துமா, சிதசித்வஸ்துக்களுக்குச் சரீரி. சித
சித்வஸ்துக்கள் பரமாத்துமாவுக்குச் சரீரம். அக்கியுமுஷ்ணமும்
போலவும் சூரியனுமதனொளியும்போலவும் பரமாத்துமாவும் சி
தசித்வஸ்துக்களும் பிரிவற்ற சுவபாவமுள்ளவைகளானாலும் அ
க்கினியைவிட அதனுஷ்ணமும் சூரியனைவிட அதனொளியும் எப்ப
டிவேறானதோ அப்படிப் பரமாத்துமாவைவிட சிதசித்வஸ்துக்
கள் வேறானவைகளே. சரீரி சரீரபாவம் இந்தசித்தாந்தத்திற்
கு முக்கியமானவிஷயம். சிதசித்வஸ்துக்களுடைய ஸ்தூலம்
நசிக்குமேயன்றி சூக்ஷ்மமொருபோதும் நசிக்கிறதில்லை. அது
அழிவற்றதாயெப்போதுமுள்ளது. சித்து அசித்துக்கள் பரமா
த்துமாவினுடைய ஏவுதலுக்குப்பாத்திரமானவை. அதனாற் பர
மாத்துமா சேஷியாயிருக்கிறார். அதாவது—சித்துஅசித்துக்கள்
பரமாத்துமாவுக்கு அநுபவயோக்கியமாயிருக்கிறது. அவைக
ளுக்கு சுவதந்திரமில்லை. ஸர்வசுவதந்தரன் பரமாத்துமா. அ
ந்தப்பரமாத்துமா ரூபமற்றவரே. அவருக்கிச்சையுண்டானால்
நாராயணன் வாசுதேவன் முதலிய வியூகரூபங்களை யடைவார்.
அந்த அவதாரரூபங்கள் மனிதனுக்குப்போல ஸத்துவரஜஸ்த
மோகுணங்களோடு கூடியிருக்கிறதல்ல. ஆனால், அப்பிராகிர
த திவ்வியமங்களவிக்கிரஹமாகிய ரூபமே. அந்தப் பரமாத்து
மாவினுடைய வியாபகசுவரூபமானது ரூபமில்லாததே. அந்த
வியூஹரூபங்கள் கரசரணாதி அவயவங்களோடு கூடியவைகளே.
அந்தப்பரமாத்துமாவை நாராயணன் விஷ்ணு ஹரி கேசவன்மு
தலிய அநேகப்பெயர்களாலழைக்கிறார்கள் இந்தவிஷ்ணுவான
வர்தான், பரமாத்துமா. அவருக்குச் சமமாயாவது மேலாயாவ
தொருவருமில்லை. சங்கரர் மஹாதேவர் உருத்திரர் பரமேசுவ
ரர்முதலிய பெயர்களாலழைக்கப்படுகிற சிவன், அந்தவிஷ்ணுவி
னுடைய முக்கியபக்தரும் முக்கியசிஷ்யருமாயிருக்கிறார்.

5, ஜீவாத்துமசுவரூபமெப்படிப்பட்டதெனில்—ஜீவாத்
துமாக்களநேகர்கள், ஆனாலவர்களுடையசுவரூபமெல்லாமொ
ன்றுபோற்றான். அந்தசுவரூபம் அணுக்கள்போல் மிகவுஞ்சிறி
யதாயிருக்கிறது. ஜீவாத்துமாக்கள் பரமாத்துமாவைப் போல
வே ஞானாநந்தசுவரூபமாயும் ஸர்வவ்வியாபகமாயுமிருக்கின்றன.
இப்படியிருக்கிறது கைவல்லியதசையிற்றான். இந்த ஜீவாத்
துமாக்கள் அநாதி அவித்தையினாற் தங்களுடைய சுவபாவகுண

மாகிய ஞானங்குறைந்து பூர்வகருமானுஸாரமாயுலகத்திற் பிறப்பையடைந்து ஸம்ஸாரிகளாகிறார்கள். இந்த ஜீவாத்துமாக்களில் நித்தியர், முக்தர், பத்தர் என மூன்று பிரிவுண்டு. நித்தியரென்றால், எப்போதும் பிர்ம்மாநந்தத்தை யநுபவிக்கிறவர்களாயும் பரமாத்துமாவைப்போல் ரூபமும் சரீரமுமுடையவர்களாயும் துக்கம்முதலியப் பிரகிருதிஸம்பந்தமற்றவர்களாயும் அந்தப்பரமாத்துமாவாகியநாராயணனைப்போல அப்பிராகிருதசரீரமுடையவர்களாயும்நாராயணனுடைய வைகுண்டலோகத்தில்வாஸஞ்செய்கிறவர்களாயும் அந்தப்பரமாத்துமாவினுடைய தரிசநத்தினாலும் ஸேவையினாலும் அவருக்குத்திருப்தியாகும்படிஊழியஞ்செய்வதனாலும் எப்போதுமாநந்தத்தையநுபவிக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில், அநந்தர் (ஆதிசேஷன்)விஷ்வக்ஸேநர், கருடர் முதலியவர்களே. இவர்கள் பரமாத்துமாவினுடைய இச்சையினாலுலகத்திலவதாரஞ்செய்வார்கள்.

முக்தரென்றால், இவ்வுலகத்தில் ஜீவஜந்துக்களாகப் பிறப்பையடைந்து ஸம்ஸாரதுக்கங்களையநுபவித்துக்கொண்டு அந்த ஸம்ஸாரத்திலிருந்துகொண்டே பகவானிடத்திற் பக்திசெய்து அவருக்குகந்தபடி உபாஸனைமுதலிய கைங்கரியங்கள் செய்து (தன்னுடை யஸகலவஸ்துக்களையுமீசுவரார்பணஞ்செய்வதாகிய) பிரபத்திமுதலிய ஸாதநங்களினாற் தன்னுடையஸம்ஸாரபந்தத்தை நிவிருத்தித்துக்கொண்டு சுவசுவரூபஞானமடைந்து இந்த தேகம்போனவுடன் தன்னுடையபழயசுவரூபமான ஞானாநந்த சுவரூபத்தை யடைகிறான். இதுகைவல்லியமென்று சொல்லப்படுகிறது. இந்தக்கைவல்லியதசையையடைந்தஜீவனானவன் பகவத்கைங்கரியம் பகவதுபாஸனைபக்திமுதலியன செய்து வந்து பகவதநுக்கிரஹத்தினால் வைகுண்டலோகத்தில் (அவனவனுடைய உபாஸநாபலத்திற்குத்தக்கபடி)ஸாலோக ஸாமீப ஸாரூப அல்லது ஸாயுஜ்ஜிய முக்திகளிலொன்றை யடைந்து துக்கமற்றவர்களாயிருக்கிறார்கள்.

பத்தரென்றால், இவ்வுலகத்தில் ஜநித்து ஸம்ஸாரபந்தத்திற்கட்டுண்டவர்களாய்த் தங்கள் பந்தத்தை நிவிருத்திக்க முயற்சிசெய்யாதவர்களாய்ப் பிறப்பிறப்பு சுகதுக்கங்களாகிற் ஸம்ஸாரத்திலேயே சுழண்டுகொண்டிருக்கிறவர்கள்.

ஆத்துமாவுக்கு முக்தி யெப்படியெனில், ஆத்துமாக்கள் பகவானுடைய சரீரத்திற்குச் சமமான சரீரமடைந்து வைகுண்டலோகத்திற் பகவத்ஸந்நிதிமுதலியவைகளினுலுண்டாகும் பரமாநந்தமே. இதுதான் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. பரமாத்துமா சித்து அசித்துக்களுடைய அநுபவத்தினுலெப்படி அவைகளுக்குச் சேஷியோ அப்படி தேகேந்திரியாதி அநுபவத்தினுற் தேகேந்திரியாதிகளுக்கு நியாமகனுன ஜீவன் அவைகளுக்குச் சேஷியாயிருக்கிறுன்.

6. பிரகிருதி எப்படிப்பட்டதெனில், பரமாத்துமாவைவிட்டுப் பிரிவற்றதாகவிருந்துகொண்டு பரமாத்துமாவினுடைய இச்சையினுலல்லது நியமநத்தினுலிந்த ஜகதாகாரமாய்ப் பரிணமித்து இந்த தேகாதி ஆகாரங்களாகவுமாகிறது. ஜீவாத்துமாக்களுடைய தேகங்கள் பிரகிருதிசுவரூபமே. பிரகிருதியை சிருஷ்டிமுதலிய காரியங்களிலேவுகிறவராயிருக்கிறதனுலே ஜகத்திற்குப் பரமாத்துமா நிமித்தகாரணமாயிருக்கிறுர். குயவனுக்குக்குடம் முதலியன செய்ய மண் உபாதாநகாரணமாயிருக்கிறது போற் பரமாத்துமாவுக்குச் சிருஷ்டிமுதலிய காரியங்கள்செய்யப்பிரகிருதி உபாதாநகாரணமாயிருக்கிறது. அந்தப் பிரகிருதிக்கு அவ்வியக்தம் மாயை முதலிய அநேகப் பெயர்களுண்டு.

இவைகள்தான் விசிஷ்டாத்துவைதமதசித்தாந்தத்தின் முக்கியவிஷயங்கள்.

7. இந்த மதசித்தாந்தமானது, ஸ்ரீமத் ராமாநுஜாசாரியராகிய மதாசாரியரால் வெளியிடப்பட்டதென்று சிலரெண்ணுகிறுர்கள். ஆனுல், அப்படிச்சொல்லவிடமில்லை. ஏனெனில், இந்த இராமாநுஜாசாரியருடைய காலத்திற்கு வெகுகாலத்திற்குமுந்தியே விசிஷ்டாத்துவைதமதசித்தாந்த மிவ்வுலகத்திலநுஷ்டாநத்திலிருந்ததென்று காணப்படுகிறது. எதனுலெனில், ஸ்ரீமத் சங்கராசாரியர் அவருடைய பாஷியங்களிலிந்த மதசித்தாந்தத்தைச் சிலவிடங்களிற் குறிப்பிட்டிருக்கிறுரானதனுற்றுன். இராமாநுஜாசாரியர் இவ்வுலகத்திலவதாரஞ்செய்திருந்தகாலமானது சங்கராசாரியருடைய அவதாரகாலத்திற்கு ௬00-வருஷங்களுக்குப் பிந்தியதாயிருக்கவேண்டும். ஆகையால், இராமாநுஜாசாரியர் விசிஷ்டாத்துவைதமதத்தைக் கற்பித்தவரல்ல. ஆனுல், அம்மதத்தை இராமாநுஜாசாரியர் இவ்வுலகத்திற் பரவச்செய்தார்.

8. இராமாநுஜாசாரியர் இவ்வுலகத்திலவதாரஞ்செய்தது கலியுகம்பிறந்து-௪௧௧௮-வது வருஷமாகிற பிங்களவருஷம் சித்திரைமாஸத்திலென்று தெரியவருகிறது. அவர் முக்தர்களிலொருவரான அநந்தருடைய அவதாரமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால், அவர் ஈசுவராம்சத்தினாலவதாரஞ்செய்தவரென்று பிரமாணமிருக்கிறது. எங்கேயென்றால்—

பவிஷ்யபுராணம்-௩-அத்-௧௪-ல், * "இப்படிச்சொல்லக்கே
"ட்டு ஸாக்ஷாத் பவனென்கிற ஈசுவரரானவர் உத்தமமான தன்
"னம்சத்தைத் தன்முகத்திலிருந்துண்டாக்கி யப்போது பூமியிற்
"கோதாவரிக்கரையிலிருந்த ஆசாரியசர்மாவென்பவர் வீட்டில
"வருக்குப் புத்திரனாகவானார். பவனாகிற ஈசுவராம்சமான அவர்
"இராமசர்மாவுக்கு அநுஜன் (தம்பி) ஆகையால், இராமாநுஜ
"ரென்ற பெயராலழைக்கப்படுகிறார்."

இந்தவாக்கியங்களினால் இராமாநுஜாசாரியர் ஈசுவராம்சமென்று தெளிவாயிருக்கிறது.

9. இராமாநுஜாசாரியர் அவருடையபதினெட்டாவதுவயதில் ஸந்நியாஸாசிரமம்பெற்றுக் கடைசியாக மஹாபூர்ணாசாரியரைகுருவாகவடைந்து வித்துவானாகவாய்ப்பிறகு ஆரியதேசமெங்கும்சஞ்சரித்து விசிஷ்டாத்துவைதமதத்தைப்பரவச்செய்தார். இந்த ஸித்தாந்தத்தையநுஸரித்து பிர்ம்மசூத்திரத்திற்கும் ஸ்ரீ பகவத்கீதைக்கும் பாஷியஞ்செய்ததுமல்லாமல் வேதாந்ததீபம் முதலிய சிலக்கிரந்தங்களையும் வெளியிட்டார். அவருடைய காலம்முதல் இந்த மதஸித்தாந்தம் இத்தேசத்திலநேக குடும்பத்தாராலநுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

10 இம்மதத்திற்காதாரமான சுருதிமுதலியப் பிரமாணங்கள் அநேகமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானசிலவற்றைக்குறித்துக் காட்டுகிறேன்.

கடவல்லியுபநிஷத்-௩-௧-ல், † "தன்னாற்செய்யப்பட்டகரு
"மபலனையநுபவிக்கிறவர்களாயும் புண்ணியத்தினாலடையப்பட்

---

* इति श्रुत्वा भवस्साक्षात्स्वमुखात् स्वांशमुत्तमम् । समुत्पाद्य तदा भूमौ गोदावर्या बभूवह ॥ ९० ॥ आचार्यशर्मणो गेहे पुत्रोजातो भवांशकः । रामानुजस्स वै नाम्नाऽनुजोऽभूद्रामशर्मणः ॥ ९१ ॥

† ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमेपरार्ध्ये ।

"டிருக்கிற உலகத்தில் (தேகத்தில்) இருக்கிறவர்களாயும் ஹிரு
"தயகுஹையிற் பிரவேசித்திருக்கிறவர்களாயும் பரமாகாசத்திலி
"ருக்கிறவர்களாயுமிருக்கிறஜீவன் பரமாத்துமா இவர்களை வெய்
"யிலும் நிழலும்போல் வேதவித்துக்கள் சொல்லுகிறார்கள்."
(வெய்யிலும் நிழலுமென்றால், பரமாத்துமா வெய்யிற்போற் பிர
காசசுவரூபியாயும் ஜீவாத்துமா நிழற்போல் அவித்தையினால் ம
றைக்கப்பட்டவனாயுமிருக்கிறானென்பதுகருத்து).

முண்டகோபநிஷத்-௩-க-ல், * "இரண்டழகானபக்ஷிகள்
"போலிருக்கிற ஜீவேசுவரர்களோர்மரத்தைப்போலிருக்கிற தே
"கத்தையடைந்து சேர்ந்தும் தோழ்மையுடனுமிருக்கிறார்கள். அ
"வர்களிலொருவன் கருமபலத்தைச் செவ்வையாய்ப்புஜிக்கிறான்.
"மற்றொருவன் கருமபலஸம்பந்தமில்லாதவனாய்ப் பிரகாசிக்கி
"றான். ஒருமரமென்கிற தேகத்தில் ஜீவனானவன் போக்கியசுவ
"ரூபமானப் பிரகிருதியினாலே மோகத்தையடைந்தவனாயும் (அ
"தில்) முழுகினவனாயுந்துக்கித்துக்கொண்டிருக்கிறான். ஸேவி
"க்கத் (வணங்க) தக்கவனாயுமீசுவரனாயுமிருக்கிறமற்றொருவனை
"யும் அவனுடைய மஹிமையையுமெப்போது பார்க்கிறானோவப்
"போதுதுக்கமற்றவனாகிறான். எப்போதுஞானியானவன் சுவர்ண
"வர்ணமாய்ப் பிரகாசிக்கிறவனாயும் ஸகலத்திற்குங்கருத்தாவாயு
"ம் நியாமகனாயும் புருஷனாயுங்காரணமாயுமிருக்கிற பிர்ம்மத்தை
"ப்பார்க்கிறானோ அப்போதந்தவித்துவானானவன் புண்ணியபாப
"ங்களைத்தள்ளிவிட்டுக் கசடற்றவனாய் சிரேஷ்டமானஸமத்துவ
"த்தை (நாராயணனுக்குச்சமமானரூபம் முதலியவைகளை) அ
"டைகிறான்."

சுவேதாசுவதரோபநிஷத்-க-ல், † "ஜீவேசுவரர்களாகிய

---

छायातपौ ब्रह्मविदोवदन्ति ॥

* द्वासु पर्णासयुजा सखाया समानं वृक्षं परिषस्व जाते । तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्योऽभिचाकशीति ॥ १ ॥ समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशयाशोचति मुह्यमानः । जुष्टं यदा पश्यत्यन्य मीशमस्य महिमानमिति वीतशोकः ॥ २ ॥ यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम् । तदा विद्वान् पुण्यपापे विधूय निरंजनः परमं साम्यमुपैति ॥ ३ ॥

† ज्ञाज्ञौ द्वावजा वीशनीशा वजाह्येका भोक्तृभोगार्थ युक्ता ।

"இருவரும் பிறப்பற்றவர்கள். ஒருவன் ஈசனும் மற்றொருவன் "அநீசனுமிருக்கிறான். அநுபவிக்கிறவஸ்துவாயும் அநுபவத் "தோடுகூடியதாயும் பிறப்பற்றதாயுமிருக்கிற (பிரகிருதியாகிய) "ஒருத்தி. ஆத்துமாவோ முடிவற்றவனும் ஜகத்ரூபியாயும் "அகருத்தாவாயுமிருக்கிறான். இந்த(ஜீவன் ஈசுவரன் பிரகிருதி) "மூன்றையுமெப்போதடைகிறானோ (அறிகிறானோ) இதுதான் "பிர்ம்மம். (என்றால், பரமாத்துமா இப்படிமூன்றாக அதாவது "—பரமாத்துமாசரீரியாயும் ஜீவாத்துமாக்களும் பிரகிருதியும் "சரீரமாயும்பிரிவற்றவர்களாயுமிருக்கிறார்களென்றறிகிறதுதான் "பிர்ம்மத்தையறிகிறதென்பது தாத்பரியம்). பிரதானமென்கிற "ப்பிரகிருதியானது நித்தியமே. ஆனால், அதன்விகாரமல்லது "பரிணாமம் நாசமடையத்தக்கது. அக்ஷரமென்கிற ஆத்துமா "நாசமற்றது. ஒரேதேவனான பாபத்தைப்போக்குகிற விஷ்ணு "வானவர், பிரகிருதி ஆத்துமா இவர்களைப் பிரேரேபிக்கிறார்."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-ரு-எ-ஙு-ல், * "யாரிந்தப்பூமி "யிலிருந்துகொண்டு பூமிக்குள்ளந்தர்யாமியாயுமிருக்கிறாரோ அ "வரைப் பூமியறிகிறதில்லை. யாருக்கு பூமியானது சரீரமோ "எவன் பூமிக்குள்ளிருந்துகொண்டு பூமியை நியமநஞ்செய்கிறா "னோ அந்த இந்த ஆத்துமாதானுன்னுடைய அந்தர்யாமி. அவ "னழிவற்றவன்."

இப்படிப் பூமிக்குச்சொல்லியிருக்கிறதுபோலவே ஜலம், அக்நி, அந்தரிக்ஷம், வாயு, திவி, ஆதித்தியன், ஜியோதிஸ், சந்திரன், நக்ஷத்திரம், ஆகாசம், தமஸ், தேஜஸ், ஸகலபூதங்கள், பிராணன், வாக்கு, கண், காது, மனது, துவக்கு, விக்ஞாநம், இரேதஸ், இவைகளுக்கெல்லாம் பரமாத்துமா அந்தர்யாமியாயும் சரீரியாயுமிருக்கிறாரென்பது இதுமுதல்-உஉ-வது வாக்கியம்வரையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

---

अनन्तश्चात्मा विश्वरूपोह्य कर्तात्रयं यदा विन्दते ब्रह्म मेतत् ॥ ९॥ क्षरं प्रधानममृताक्षरं हरः क्षरात्मना वीशते देवएकः ॥ १०॥

* यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरोयं पृथिवीनवेद यस्य पृथिवीशरीरं यः पृथिवीमन्तरोयमयत्येपत आत्मान्तर्याम्यमृतः ॥

இந்தவாக்கியங்களும் பின்னும் பலவாக்கியங்களும் இந்த மதவித்தாந்தத்திற்காதாரமாயிருக்கின்றன. மேலும் அத்து வைதிகள் வியவஹாரதசைக் காதாரமாய்ச் சொல்லும் வாக்கியங்களிலநேகமும் சுருதிஸ்மிருதி இதிஹாஸபுராணங்களில் விஷ்ணுவை கரசரணாதி அவயவங்கள் ஆயுதங்கள் கருடன் முதலிய வாஹநம் இவைகளையுடையவராயும் இலக்ஷ்மீயுடன் சேர்ந்திருக்கிறவராயும் வைகுண்டத்தில்வவிக்கிறவராயும் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்கிறவராயும் பக்தர்களுக்குத் தருமார்த்த காமமோக்ஷங்களாகிற புருஷார்த்தங்களைக் கொடுக்கிறவராயும் உபாஸகர்களான ஜீவர்களுக்கு யஜமானனாயும் ஜீவர்கள் அவருடைய தாஸர்களாயும் எவ்வவ்விடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளும் இந்தமதவித்தாந்தத்தையாதரிக்கிறப் பிரமாணங்களென்று சொல்லுகிறூர்கள். மேலும் பரமாத்துமா, ஜீவர்கள், ஜடப்பிரகிருதி இவைகள் பிரத்தியக்ஷத்தில் வெவ்வேறாய்க் காணப்படுகிறதும் இந்தசித்தாந்தத்திற்குப் பிரமாணமே.

11. இனித் துவைதமதவித்தாந்தத்தையுஞ் சொல்லுகிறேன் கேள்.

## துவைதமதசித்தாந்தம்.

"துவைதம்" என்றால், இருமையென்றர்த்தம். அதாவது—பரமாத்துமா ஜீவாத்துமா இரண்டு. பரமாத்துமா, ஜகதாகாரமாயிருக்கிறப் பிரகிருதி இரண்டு. இப்படி பரமாத்துமாவுக்கந்யமாய் ஜீவனும் பிரகிருதியும் வெவ்வேறுயிருக்கிறூர்கள். அவர்களெப்போதுமுள்ளவர்களே. ஜீவாத்துமா, பிரகிருதி இவர்கள் பரமாத்துமாவைவிட வேறுயிருக்குந்தன்மை இயற்பானதெ. அவர்கள் பரமாத்துமாவினுடைய ஏவற்காரர்கள். அரசன் ஜநங்களையாளுவதுபோல பரமாத்துமா, ஜீவர்களையும் பிரகிருதியையும் ஆளுகிறூர். பரமாத்துமாவினுடையவிச்சையினற் பிரகிருதியானது பிரபஞ்சாகாரமாய்ப் பரிணமிக்கிறது. ஜீவர்களைப் பரமாத்துமா, அவரவர்களுடைய கருமாநுஸாரமாயுலகத்திற் சிருஷ்டிக்கிறூர். அவர்கள் பரமாத்துமாவினுடைய விச்சையினற் பிரகிருதிஸம்பந்தமான தேகாதிகளையடைகிறூர்கள். அந்த நாராயணனே பரமான தைவம். அவருக்குச் சமானமாயாவது மேலாயாவது யாதொருவருமில்லை. ஆகையாலவர் அத்

துவிதீயர் (இரண்டாவதற்றவர்) என்று சொல்லப்படுகிறார். பரமாத்துமாவுக்கு உருவமில்லையென்றால், ஸத்துவரஜஸ்தமோகுணங்களோடுகூடியிருக்கிறதும் மனிதர்களைப்போலொத்ததுமாகிய ஹேயமான ரூபமில்லையேயன்றி அப்பிராகிருத திவ்வியமங்கள சுவரூபமாய்க் கரசரணாதி அவயவங்களோடும் ஆயுதம் வாஹநம் முதலியவைகளோடுங்கூடிய திவ்வியரூபமுண்டு. ஜடப்பிரகிருதிக்கதிஷ்டாநமாயிருக்கிறது சித்பிரகிருதி. அந்தச் சித்பிரகிருதியானவள் மஹாலக்ஷ்மியென்று சொல்லப்படுகிறாள். அவளெப்போதும் நாராயணனைவிட்டுப் பிரியாமலவர் வக்ஷஸ்தலத்திலிருக்கிறாள். ஆனாலவள் கணவனுக்கு மனைவியடங்கியிருக்கிறதுபோல விஷ்ணுவுக்கடங்கியிருக்கிறவள். அந்தஇலக்ஷ்மியைப்போலவே சார்ங்கம் சங்கம் சக்கிரம் இவைமுதலியஆயுதங்கள் நாராயணனுடைய கையிற் பிரிவற்றதா யெப்போதுமிருக்கிறவைகள். அந்தப்பரமாத்துமாவானவர் இலக்ஷ்மீ, சார்ங்கமுதலிய ஆயுதங்கள், பீதாம்பரம் முதலியன இவைகளுடன் கூடி கரசரணாதியவயவங்களுள்ளவராய் ஸகலப் பிரபஞ்சத்திலுமிடைவிடாமலகண்டாகாரமாய் வியாபித்திருக்கிறார்.

12. ஜீவாததுமாக்களோ, பரமாத்துமாவைக்காட்டிலும் வேறானவர்கள். ஆனாலவர்கள் பிரகிருதிசுவரூபிகளல்ல. ஜீவாத்துமாக்களெல்லொரும் ஒரேசுவரூபமுடையவர்களல்ல. அவர்களநேகவகுப்புக்களாய்ப் பிரிபட்டிருக்கிறார்கள். எப்படியெனில், ஸத்துவத்தில் ஸத்துவகுணமுடையவர்கள் சிலர். ஸத்துவத்தில், இரஜோகுணமுடையவர்கள் சிலர். ஸத்துவத்தில், தமோகுணமுடையவர்கள் சிலர். இப்படியே இரஜோகுணத்தில், ஸத்துவகுணமுள்ளவர்கள் சிலர். இரஜஸில், இரஜோகுணமுள்ளவர்கள் சிலர். இரஜஸில் தமோகுணமுள்ளவர்கள் சிலர். அப்படியே தமஸில், ஸத்துவகுணமுள்ளவர்கள் சிலர். தமஸில் இரஜோகுணமுள்ளவர்கள் சிலர். தமஸில்தமோகுணமுள்ளவர்கள்சிலர். இவ்விதமாய்ப் பிரிக்கப்பட்ட ஒன்பதுபாகங்களிலொன்றொன்றிலும் பின்னுமிப்படியே பிரிக்கப்படுகிறது. இப்படிப்பிரிக்கிறதனாலநேகவகுப்புக்களான ஜீவாத்துமாக்கள் கணக்கற்ற பிரிவுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஜீவாத்துமாக்களில் முக்தியடைய யோக்கியமானவர்கள், நித்தியஸம்ஸாரிகள், நித்தியநரகிகள் என மூன்றுவகுப்புக்களாயிருக்கி

ஞர்கள். முக்தியோக்கியர்களெல்லாம் ஸத்துவகுணத்தைப் பிரதானமாயுடையவர்கள். அவர்கள் அநாதி கருமவாஸனையினுற் பகவானுடைய ஆக்ஞைப்படிப் பிரகிருதிஸம்பந்தத்தையடைந்து உலகத்திலநேக ஜந்மங்களை யடைகிருர்கள். அப்படிப்பட்டவர்கள் யாரெனில், தேவதைகள் பிதுருக்கள் இரிஷிகள் இராஜர்கள் சிலமனுஷியோத்தமர்களிவர்களே. நித்தியஸம்ஸாரிகளான ஜீவர்கள் இரஜோகுணப் பிரதானமுடையவர்கள். இவர்கள் மோக்ஷமடைய யோக்கியர்களல்ல. ஆனுல், நித்தியநரகத்தை யடைகிறதுமில்லை. இப்படிப்பட்டவர்கள் பூமியிற்செய்தபாபபுண்ணியகருமங்களின்பலத்திற்குத்தக்கபடி நரகம் சுவர்கம்முதலிய லோகங்களையடைந்து அந்தந்தஉலகாநுபவங்களையநுபவித்துப் பிறகு இவ்வுலகத்தில் ஜநநமடைகிறதும் பிறகுமரணமடைகிறதும் கருமபலத்திற்குத்தக்கபடி சுவர்க்கநரகாதிகளையடைந்து பிறகு ஜநித்துக்கொண்டே ஸம்ஸாரத்திற் சுற்றிக்கொண்டிருக்கிருர்கள். நித்தியநரகயோக்கியர்களான தாமஸகுணப் பிரதாநமுடையஜீவர்கள் யாரெனில், பகவானிடத்திற்துவேஷமும்சிஷ்டர்களிடத்திலசூயையும்வேதசாஸ்திரங்களிலவநம்பிக்கையுமுடையவர்களாயிருக்கிறவர்களே. அவர்களெப்போதும்பாபகருமங்களையே செய்கிறவர்களாயிருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்கள் பகவத்தூஷணைமுதலிய பாபகாரியங்களினுலிழிவானஜந்மங்களையடைந்து கடைசியாக நித்தியநரகத்தையடைகிருர்கள். இவர்களுக்கும்மோக்ஷமென்பதேயில்லை.

இந்த ஜீவாத்துமாக்களில், மனிதர்கள் ஸ்திரீ புருஷர்கள் பசு பக்ஷி புழு பூச்சிவரையிலுள்ள ஸகலஜந்துக்களுக்குள் முக்தியோக்கியர்களான ஜீவர்கள்யாரோ அவர்கள் மோக்ஷமடையும்பொது தாந்தாம் எந்தெந்தசுவரூபமுடையவர்களோ அந்தந்தசுவரூபத்துடன் மோக்ஷமடைகிருர்கள். உதாரணம்—மனிதஜீவனுயிருந்தால் மனிதசுவரூபத்துடனும் புருஷனுனுல், புருஷசுவரூபத்துடனும் ஸ்திரீயானுல், ஸ்திரீசுவரூபத்துடனும் யானையானுல், யானைசுவரூபத்துடனும் பின்னுமிப்படியே ஸிம்மம், புலி, குதிரை, கழுதை, நாய் முதலிய மிருகங்கள் புழுபூச்சிமுதலிய ஜந்துக்கள் அததன்சுவரூபத்துடனும் மோக்ஷமடைகின்றன. மோக்ஷத்திலந்தந்த ஜீவர்களுடைய சுவரூபம் அவரவர்களுடைய உபாஸநாபலமிவைகளுக்குத்தக்கபடி மோக்ஷாநந்தாநு

பவத்திற் தாரதம்மியம் (உயர்வு தாழ்வு) உண்டு. மோக்ஷமடையத்தகுந்த ஆத்துமாக்கள் மோக்ஷமடையவேண்டுமானல், ஐந்துவித பேதஞாநம் வேண்டியதவசியம்.—பேதங்களாவன—க-ஜீவேசுவரபேதம்-அதாவது—ஜீவனுமீசுவரனும் வெவ்வேறென்றறிதல். உ-ஜீவபரஸ்பரபேதம்-அதாவது-ஒருஜீவனைப்போல் மற்றொருஜீவனில்லை ஒவ்வொருஜீவனும் வெவ்வேறானசுவரூபமுடையவனென்றறிதல். ங-ஜீவஜடபேதம்—அதாவது—இது ஜங்கமம் இதுஸ்தாவரமென்றறிதல். ச-ஜடபரஸ்பரபேதம்—அதாவது—இது கல் இது மண் இது தங்கம் இதுஇரத்திநம் இது கட்டையென்கிற ஒவ்வொருவஸ்துக்களுக்குமுள்ளபேதமறிதல். ரு-ஜடேசுவரபேதம்-அதாவது-ஜடமாகியப் பிரகிருதி வேறு பரமாத்துமா வேறு என்றறிதல். மோக்ஷமடைய யோக்கியர்களான ஜீவர்கள் மேற்கண்ட ஐந்துவிதபேதமாகிற ஞாநத்தினுடைய ஸாதநத்தினுல் நாராயணனை இலக்ஷ்மியுடனும் ஆயுதம் முதலிய பரிவாரங்களுடனும் உபாஸித்தாற்றான் மோக்ஷமடையக்கூடும்.

13. பிரகிருதி சுவரூபமெப்படிப்பட்டதெனில், பிரகிருதி, ஜடசுவரூபமானது. பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாக்களுக்குமந்நியமானது. பரமாத்துமாவினுடைய ஆக்ஞையினுலிந்தப் பிரகிருதியே தேகம்முதலியஜகத்ரூபங்களாய்ப் பரிணமிக்கிறது. இந்த ஜடப்பிரகிருதிக்குச் சித்பிரகிருதியான இலக்ஷ்மி அதிஷ்டாநமாயிருக்கிறுள். அவள் பரமாத்துமாவுக்கடங்கினவளாயும் பிரும்மா உருத்திரர் முதலிய தேவதைகளுக்குமேலானவளாயுமிருக்கிறுள். அந்த இலக்ஷ்மியை யுபாஸித்து மோக்ஷமடையவுங்கூடும். இவைகள்தான் துவைதஸித்தாந்தத்தின் முக்கியமான அம்சங்கள். மற்றவிஷயங்களில் விசிஷ்டாத்துவைதசித்தாந்தத்தைத் தழுவியதாயிருக்கும்.

14. இந்தச் சித்தாந்தமானது ஸ்ரீமத் மத்துவாசாரியராற் கற்பிக்கப்பட்டதென்று சிலரெண்ணுகிறுர்கள். அது ஸரியல்ல. அவருடைய காலத்திற்கு முந்தியே துவைதமத சித்தாந்திகள் இதரமதஸ்தர்களுடன் வாதஞ்செய்ததாக வெகுகாலத்திற்கு முந்தியுண்டாயிருக்கிற கௌடப்பிர்ம்மாநந்தீயம்முதலியக் கிரந்தங்களினுற் காணவருகிறது. ஆகையால், ஸ்ரீமத் மத்துவாசாரியர் முன்னிருந்தத்துவைத ஸித்தாந்தத்தை யுலகத்திற் பரவச்

செய்தாரென்று காணப்படுகிறது. மத்துவாசாரியர் மற்ற மதாசாரியர்களைப்போல ஈசுவராம்சமே. இவர் கலியுகம் பிறந்து-௪௨௨௦-வது வருஷமாகிய விளம்பி௵ ஆஷாடபகுளத்தில் உலகத்திலவதாரஞ்செய்ததாகவும் இராமாவதாரகாலத்தில் ஹநுமாரென்றும் அஞ்சநாகுமாரராகிய ஆஞ்சநேயரென்றுஞ் சொல்லப்பட்டவரும் ஸ்ரீராமருக்கு தாஸராயிருந்தவரும் கிருஷ்ணாவதாரகாலத்திற் பீமஸேநனாக அவதாரஞ்செய்தவரும் யாரோ, அந்த ஹநுமாரே கலியுகத்தில் மத்துவாசாரியராக அவதாரஞ்செய்தாரென்று இம்மதஸ்தர்கள் நம்புகிறார்கள். இதற்காதாரமின்னதென்று தெரியவில்லை. ஹநுமாருடைய அம்சமே மத்துவாசாரியரானால் ஹநுமார் உருத்திராம்சமானதனால் மத்துவாசாரியரும் உருத்திராம்சமென்பதிற் சந்தேகமில்லை. இந்தவிஷயம் பிரமாணங்களாலாதரிக்கப் பட்டதாயிருக்கிறது. அதிற்சிலதைச்சொல்லுகிறேன் கேள்.

தாரஸாரோபநிஷத்தில், * "ஜாம்பவானென்கிற பெயரினாற் "சொல்லப்படுகிறவர் அகாராக்ஷரத்திலிருந்துண்டான பிரும்மா "வாயிருக்கிறார் (ஜாம்பவான் பிரும்மாவினுடைய அம்சமென்ப "து கருத்து). உகாராக்ஷரத்திலிருந்துண்டான (விஷ்ணுவாகிய) "உபேந்திரன் வாநரராஜனானார் (வாலீ, உபேந்திராம்சமென் "பது கருத்து). மகாராக்ஷரத்திலிருந்துண்டான சிவனானவர் ஹ "நுமாரென்று சொல்லப்படுகிறார்." (ஹநுமார் உருத்திராம்சமென்பது கருத்து).

இராமாயணம்-பூர்வகண்டம்-உத்தரகாண்டம்-சர்கம்-௧௬-ல், † "சங்கரருடைய மற்றொரு சரீரமாகிய பகவானான நந் "திகேசுவரர் கோபமடைந்து எதிரில் நிற்கிற பத்துத்தலைகளை "யுடைய ராக்ஷதனைப்பார்த்தப் பொழுது சொன்னதாவது—ஓ! "இராவணா! எதனாலென்னைக் குரங்குருபியென்றவமதித்து இடி- "போற்சப்தத்துடன் பரிஹாஸஞ்செய்தயோ அதனாலென்வீரிய

* अकाराद्भवत् ब्रह्मा जांबवानिति संज्ञकः । उकाराक्षरसंभूत उपेन्द्रो हरिनायकः । मकाराक्षरसंभूतः शिवस्तु हनुमान् स्मृतः ॥

† तं क्रुद्धो भगवान्नन्दी शङ्करस्यापरा तनुः । अब्रवीत्तत्र तद्रक्षो दशानन मुपस्थितम् ॥ १६ ॥ यस्माद्वानररूपं मामवज्ञाय दशानन । अ-

"த்திலிருந்துண்டானவர்களாயும் என்னைப்போலொற்ற வல்ல
"மை பொருந்தியவர்களாயுமுள்ள, வாநரர்களுன்குலத்தினு
"டைய நாசத்தின்பொருட்டுண்டாகப் போகிறார்கள்."

பவிஷ்யபுராணம்-ந-அத்-கந-ல், * "கௌதமருடைய சரீ
"ரத்திலிருந்துண்டானவளும் அஞ்சநீ யென்கிற பெயரினாற் பிர
"ஸித்தியடைந்தவளும் கீசகேஸரியென்கிறவனுக்குப் போகத்
"தைக் கொடுக்கிறவளும் (மனைவியும்) ஆயிருக்கிற தேவியானவ
"ள் எந்தமலையிலிருக்கிறாளோ அந்த மாநஸோத்தரபருவதத்திற்
"சிவனே தன்னுடைய வலதுபக்கமான அறைபாகத்திலிருந்து
"ண்டானார். அப்போது கேஸரியினுடைய முகத்திற் பயங்கர
"மான உருத்திரதேஜஸானதடைந்தது. சுபமான முகமுடைய
"அந்த அஞ்சநாதேவியை (கீசகேஸரியாகிய) கபிசிரேஷ்டனான
"வன் மாரனுக்கு வசமானவனாயநுபவித்தான். இக்காலத்தில்
"வாயுவானவன் (அந்தக்கேஸரியாகிற) வாநர சிரேஷ்டனுடைய
"சரீரத்திற் பிரவேசித்தான், பிரியமுள்ளவளாயும் இலக்ஷண
"முள்ளவளாயுமிருக்கிறவந்த அஞ்சநாதேவியை (வாயுவினு
"டைய) வலிமையினாலநுபவித்தான். புணர்ச்சியிலிருக்கிற ஸ்தி
"ரீபுருஷர்களுக்கு இதிலேயே பனிரெண்டுவருஷகாலஞ் சென்
"றது. பிறகவள் கருப்பத்தையடைந்து ஒருவருஷமதைத்தரி
"த்தாள். உருத்திரரான அவர் வாநரமுகத்தோடுஞ் சிவந்தவர்
"ணத்தோடும் புத்திரனாகப் பிறந்தார். குரூபமாயிருந்ததனாற்

---

शनीपात संकाश मपहासं प्रमुक्तवान् ॥ १६ ॥ तस्मान्मद्वीर्यसंपन्ना मद्रूप समतेजसः । उत्पत्स्यंति वधार्थं हि कुलस्य तव वानराः ॥ १७ ॥

* शिवोपि च स्वपूर्वार्धा ज्जातो वै मानसोत्तरे ॥ ३४ ॥ गिरौ यत्र स्थितादेवी गौतमस्य तनूद्भवा । अञ्जनीनाम विख्याता कीशके सरिभोगिनी ॥ ३५ ॥ रौद्रं तेजस्तदाघोरं मुखे केसरिणो ययौ । स्मरातुरः कपीन्द्रस्तु बुभुजेतांशु भाननाम् ॥ ३६ ॥ एतस्मिन्नन्तरे वायुः कपीन्द्रस्य तनौगतः । वांछितामञ्जनीं सुभ्रूं रमयामास वैबलात् ॥ ३७ ॥ द्वादशाब्द मतो जातं दंपत्योर्मैथुनस्थयोः । तदनुभ्रूण मासाद्य वर्षमात्रं हि सा दधत् ॥३८॥ पत्रोजातस्स रागात्मा स रुद्रो वानराननः । कुरूपाच्च ततोमात्रा क्षेपितो

"பிறகு தாயினாலே பருவதத்தினடியிற் போடப்பட்டான். உயர
"க்கிளம்பினவனான சூரியனைப்பார்த்துப் பலவானாயிருக்கிற(அக்
"குழந்தையாகிய) உருத்திரனான பகவான் வல்லமையினாலவ்
"விடம் (சூரியனிடம்) சென்று (சூரியனை) பிடிக்கப்போனான்.
"அவ்விடத்திற் தேவனான இந்திரன் வந்தான். இந்திரனால்
"( அக்குழந்தை ) வஜ்ராயுதத்தினாலடிக்கப்பட்டிருந்துங்கூட
"அப்போது சூரியனை விடவில்லை. சூரியனானவன் பயத்தினால்
"நடுங்கினவனானான். அப்போதுபெரிதான அவயவங்களையுடைய
"இராவணனானவன், சூரியனை இரக்ஷியென்றுசொல்லப்பட்டான்.
"உலகத்தைக்கதற அடிக்கிறவனாகிய அந்த இராவணனானவன்
"அப்போதந்த தீநமான வார்த்தையைக்கேட்டு அந்த வாநரனு
"டைய வாலைப்பிடித்துக்கொண்டு முஷ்டியுத்தஞ் செய்தான்.
"அப்போது கேஸரியினுடைய புத்திரனானவன் கோபத்தோடு
"கூடினவனாய் சூரியனை விட்டு விட்டு ஒருவருஷகாலம் மிகவும்
"பயங்கரமான மல்லயுத்தத்தைச்செய்தான். அந்த யுத்தத்தில்,
"இராவணனானவன் சோர்வடைந்தவனாய் பயத்தினால் நடுங்கின
"வனாய் நாலுதிக்கினுமோடினான், அப்படியிருந்தும் வாநரரூபி
"யான உருத்திரனாலே அடிக்கப்பட்டான். இந்த ஸமயத்திற்
"(இராவணன் தகப்பனாகிய) பகவானான விசிரவஸென்கிற ரிஷி
"யானவர் வந்து வேதமந்திரங்கள் மூலமான ஸ்தோத்திரங்க
"ளால் இன்பமான வாக்குடன் வாநர உருத்திரனான தேவனை
"ஸந்தோஷப்படுத்தினார். அப்போது உருத்திரனானவர் ஸந்தோ
"ஷமடைந்தவராய் இராவணனைவிட்டுப் பலவானான அந்தவாநர

भूत् गिरेरधः ॥ ३९ ॥ बलादागत्य बलवान् दृष्ट्वा सूर्यमुपस्थितम् । विलिख्य भगवान् रुद्रो देवस्तत्र समागतः ॥ ४० ॥ वज्रसन्ताडितोवापि न तत्याज तदारविम् । भयभीतस्तदाप्रांशु स्सूर्यं त्राहीति जल्पितः ॥ ४१ ॥ श्रुत्वा तदार्तवचनं रावणोलोकरावणः । पुच्छे गृहीत्वा तं कीशं मुष्टियुद्धमचीकरत् ॥ ४२ ॥ तदा तु केसरिसुतो रविंत्यक्त्वा रुषान्वितः । वर्षमात्रं महाघोरं मल्लयुद्धं चकारह ॥४३ ॥ श्रमितो रावणस्तत्र भयभीतः समन्ततः । पलायनपरोभूतः कीशरुद्रेण ताडितः ॥ ४४ ॥ एतस्मिन्नन्तरे प्राप्तो विश्रवा भगवानृषिः । स्तोत्रैर्वेद मयैर्देवं तुष्टाव परयागिरा ॥ ४५ ॥ प्रस-

"னவன் பம்பாநதிக்கரையில், நடப்பட்டிருக்கிற கட்டை
"போற் தபஸிலிருந்தான். அதனாலவருக்கு ஸ்தாணுவென்கிற
"பெயருண்டாயிற்று. உலகத்தைக் கதறவடிக்கிறவனும் முக்
"கியமான தேவதைகளையடிக்கிறவனுமிருக்கிற இராவணனை
"முஷ்டிகளினாலெவனடித்தானோ இவன் ஹநுமானென்று
"பிரஸித்தனாயிருக்கிறான். இப்படிப்பட்ட வாநரனுடைய தப
"ஸினாலே பிரத்தியக்ஷமான பகவானான பிரும்மாவானவர் வணக்
"கத்துடன் சொன்னதாவது- தபசுக்கிருப்பிடமான ஓ! உருத்
"திரா! நான் சொல்லுவதைக்கேள். வைவசுவத மனுவந்திரத்
"தில் இருபத்தெட்டாவதுத் திரேதாயுகத்தின் முற்பாகத்திற்
"சாக்ஷாத் (ஹரியானவர்) இராமராக அவதாரஞ்செய்யப்போகி
"றார். அவருடைய பக்தனாகவாய் கிருத கிருத்தியனாகப்போகி
"றாய்." (என்றுசொன்னார்).

வாயுபுத்திரனென்கிற ஹநுமானானவர் கேஸரீபுத்திரனென்றே இராமாயணம் பூர்வகண்டம் உயுத்தகாண்டம் சர்க்கம்-உஅ-சு--க0லுங்காணப்படுகிறது.

இந்த வாக்கியங்களினால், ஹநுமார் உருத்திராம்சமென்பதிற் சந்தேகமில்லையாகையால், ஹநுமாருடைய அம்சமான மத்துவாசாரியரும் உருத்திராம்சமென்பதிற் சந்தேகமில்லை. ஹநுமார் வாயுபுத்திரனென்று உலகத்திற் பிரஸித்தமாய்ச் சொல்லுவதற்குங்காரணம் மேற்கண்ட வாக்கியங்களினாலேயே தெளிவாயிருக்கிறது.

மத்துவாசாரியர் சூரியனுடைய அம்சமென்று மேற்படி பவிஷ்ய புராணமே சொல்லுகிறது.

---

न्नस्तु तदा रुद्रो रावणं लोकरावणम् । त्यक्त्वा पम्पा सरस्तीरे निवासं कृतवान् बली ॥ ४६ ॥ स्थाणुभूतस्थितस्तत्र स्थाणुर्नाम ततोऽभवत् । हन्यमानं सुरान् मुख्यान् रावणं लोकरावणं ॥ ४७ ॥ हन्यते मुष्टिभिर्योऽसौ हनुमानिति विश्रुतः । तपसा तस्य कीशस्य प्रसन्नो भगवान्विधिः ४८ ॥ नम्रधीर्वचनं प्राह श्रृणुरुद्र तपोनिधे । वैवस्वतेऽन्तरे प्राप्ते चाष्टाविंशत्तमेयुगे ॥ ४९ ॥ त्रेतायाः पूर्वचरणे रामस्साक्षात् भविष्यति । तस्य भक्तिं च संप्राप्य कृतकृत्यो भविष्यसि ॥ ५० ॥

பவிஷ்யபுராணம். ௯-அ-ல், * "மிகவும் சிருங்காரமான "பிருந்தாவநத்திற் பயங்கரமான கலியுகத்திலேயுண்டாகப்போ "கிறேன். அப்படியுண்டாகப்போகிற பிராம்மணன், மாதவனென் "கிறப் பிராமணனுக்குப் புத்திரனாகவாகிறான். அவன் சூரிய சுவ "ரூபனாகவும் மகாபாக்கியசாலியாகவும் வேதமார்க்கத்திற் சிரத் "தையுடையவனாகவும் மதுவென்கிற பெயரை யுடையவனாகவும் "(இருந்துகொண்டு) தேவகாரியத்தைச் செய்யப்போகிறான். "தேவகாரியத்தில் முயற்சியாயிருக்கிற சூரியபகவானானவர் இவ் "விதமாய்ச்சொல்லித் தன்னுடைய அங்கத்திலிருந்து தேஜஸையு "ண்டுசெய்துபிருந்தாவநத்திற்கநுப்பினார். (அந்ததேஜஸானது) "மத்துவாசாரியரென்கிற பெயருடையவராய்ப் பூமியிற் பிரவேசித் "தியடைந்தார். (விஷ்ணுபக்தியில்) விமுக்தாளான ஜனங்களை, "இன்பமான வார்த்தைகளினாலவர்களெல்லோரையும் சுவாதீந "ஞ்செய்து, போகமோக்ஷங்களைக் கொடுக்கிறதாகிய விஷ்ணு "பக்தியையவர்களுக்களித்தார்."

இவ்வாக்கியத்தினால் மத்துவாசாரியர் சூரியாம்சமென்று சொல்லியிருக்கிறதே அது முன்வாக்கியங்களுக்கு விரோதமல் லவோவென்றால், இந்தப் பவிஷ்யபுராணத்தினிந்தப் பாகங்க ளெல்லாம் சூரியனை பிரும்ம விஷ்ணு உருத்திர சுவரூபியாகவுஞ் சொல்லியிருக்கிறபடியால் சூரியனுடைய அம்சமுங்கூட உருத் திராம்சமென்றே சொன்னதாகவாகிறது. அதனால் விரோத மில்லை.

15. "அதிகமான ருத்திரஅம்சம் ஹநுமசீலன்" என்று தமிழ்கிரந்தத்திலும் சொல்லியிருக்கிறது. இவைகளினாலெ ல்லாம் மத்துவாசாரியர் ஈசுவராம்சமென்றே ஏற்படுகிறது.

---

* बृन्धावने महारम्ये जनिष्यामि कलौ भये ॥ ९ ॥ सद्विजस्सूर्य रूपश्च देवकार्यं करिष्यति । माधवस्य द्विजस्यैव तनयस्स भविष्यति ॥ १० ॥ मधुर्नाम महाभागो वेदमार्ग परायणः । इत्युक्त्वा भगवान् सूर्यो देवकार्यार्थ मुद्यतः ॥ ११ ॥ स्वांगात्तु तेजउत्पाद्य बृन्दावनमचोदयत् । वि- मुखान्मधुरालापै र्वशीकृत्य समंततः ॥ १२ ॥ तेभ्यश्च वैष्णवीं भक्तिं प्रद- दौ भुक्तिमुक्तिदाम् । मद्ध्वाचार्यइति ख्यातः प्रसिद्धोभून्महीतले ॥ १३ ॥

16. இந்த மத்துவாசாரியர் உபநிஷத்துக்கள் பிர்ம்ம சூத்திரம் பகவத்கீதை இவைகளுக்குத் துவைதஸித்தாந்தத்தையநுஸரித்து பாஷியஞ்செய்திருக்கிறார். ஆனாலிவருடைய பாஷியமானது மிகவுஞ்சுவற்பமானது. இந்தச் சித்தாந்தத்திற்கு சுருதி ஸ்மிருதி இதிஹாஸபுராணங்களோடு ஸர்வதரிசன ஸங்கிரஹமென்கிற பாஞ்சராத்திரம் மூலராமாயணம் தர்க்க சாஸ்திர ஸம்பந்தமானப் பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் முதலியவைகளும் பிரமாணமாய்க்கொள்ளப்படுகிறது.

17. மேற்குறித்துக்காட்டிய விசிஷ்டாத்துவைதம் துவைதம் இவ்விரண்டு மதங்களிலும் விஷ்ணுவுக்கு ஸர்வோத்தமத்துவஞ் சொல்லுகிறபடியால் அதையாதரிக்கிறப் பிரமாணங்களிற் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேள்.

கடவல்லியுபநிஷத்-ங-கூ-ல், * "அவன் (ஞானி) ஸம்ஸா "ரமாகிற ஸமுத்திரத்தின் கரையையடைகிறான் (பந்தத்திலி "ருந்து விடுபடுகிறான்). அதுதான் உத்தமமான விஷ்ணுவினுடைய பரமபதம் (மோக்ஷம்)."

தைத்திரீயோபநிஷத்-க-கஉ-ல், † "எங்கும் நிறைந்திருக் "கிற விஷ்ணுவானவர் நமக்கு சுகத்தைக் கொடுக்கட்டும்."

ஷை-உபநிஷத்-நாராயணீயம். சு-சு-ல், ‡ "நாராயணனாகிய "வாசுதேவனையறிகிறோம், தியானிக்கிறோம். அந்தத் தியானத் "தில் விஷ்ணு எங்களைப் பிரேரேபிக்கட்டும்."

ஷை-உபநிஷத்- நாராயணீயம். சு-கங-ல், § "நாராயணன் "பரபிர்ம்மம். நாராயணன் பரதத்துவம். தியானிக்கத்தக்கவனும் "தியானமும் நாராயணனே. சிரேஷ்டமும் நாராயணனே. "காணப்படுகிறதும் கேட்கப்படுகிறதும் அற்பமும் பெரிதுமெ "தெதுண்டோ அவையெல்லாமடங்கிய ஜகத்தும் நாராயணனே.

---

* सोऽध्वनः परमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥

† शन्नोविष्णुरुरुक्रमः ॥

‡ नारायणाय विद्महे वासुदेवाय धीमहि। तन्नोविष्णुः प्रचोदयात्।

§ नारायणपरं ब्रह्मतत्वं नारायणःपरः । यच्च किंचिज्जगत्सर्वं दृ-

"உள்ளும் வெளியுமாய் ஸகலத்திலும் நிறைந்திருக்கிறதும் "நாராயணனே."

ஆருணிகோபநிஷத்தில், * "உத்தமமான அந்தவிஷ்ணு "விலுடைய பரமபதத்தை ஞானிகளெப்போதும் பார்க்கி "ருர்கள்."

சுபாலோபநிஷத் அத்-சு-ல், † "ஜியோதி சுவரூபனுன "நாராயணனொருவனே.—இந்தஸகலமும் நாராயணனே. இந்த "ஸகலப்பிரபஞ்சமும் நாராயணனுகிய புருஷனே."

வாசுதேவோபநிஷத்தில், ‡ "சுவப்பிரகாசமாயுஞ் சிதா "நந்தமாயு மிரண்டாவதற்றதாயு மிருக்கிற விஷ்ணு ஒருவரே "ஸ்தாவர ஜங்கமங்களாயிருக்கிருரென்று பக்தியினு லறிகி ருன்."

தாரஸாரோபநிஷத்தில், § "ஸ்ரீபரமாத்துமாவாகிய நாரா "யணன் யாரோ அவர்தான் பகவான்."

சாட்டியாயநியுபநிஷத்தில், $ "விஷ்ணு சுவரூபமானது "வியக்தம் (காணப்படுகிறது) அவ்வியக்தம் (காணப்படாதது) "என இருவகைப்படும். அவைகளிலொன்றையாவது உபாஸி "க்காமல் விட்டுவிடுவானுகில், அவன் கெட்டுப்போகிருன் ஸந் "தேகமில்லை.—விஷ்ணுவினிடத்தில் விளையாட்டும் விஷ்ணுவி

---

श्यते श्रूयतेपिवा । अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्यनारायणस्स्थितः ॥ இந்த வாக்கியங்கள்வைஷ்ணவர்களுடையபாடத்திற்குவித்தியாஸமாயிருக்கும்.

* तद्विष्णोः परमं पदग् सदा पश्यन्ति सूरयः ॥ இந்த வாக்கியம் பிரஹஜ்ஜாபாலம் முதலிய பலஉபநிஷத்துக்களிலுங்காணப்படுகிறது.

† दिव्योदेव एकएव नारायणः ।——सर्वं नारायणः पुरुषएवे- दग् सर्वम् ॥

‡ स्वप्रभं सच्चिदानन्दं भक्त्याजानाति चाव्ययम् । एकोविष्णुरने- केषु जङ्गमस्थावरेषु च ॥

§ योह वै श्रीपरमात्मा नारायणस्स भगवान् ॥

$ विष्णुलिंगं द्विधाप्रोक्तं व्यक्तमव्यक्तमेवच । तयोरेक मपित्यक्त्वा पतत्येव न संशयः ।—— विष्णुक्रीडा विष्णुरतयो विमुक्ता विष्णवात्म-

"னிடத்திலாசையோடுபாஸனையுமுடையவர்கள் பந்தத்திலிருந்
"து விடுபட்டவர்களாய் விஷ்ணுவைப்போலொற்ற ரூபமுடைய
"வர்களாய் விஷ்ணுவையே யடைகிறார்கள்."

மநுஸ்மிருதி-அ-க-ல், * "ஜலமானது நர (நாசமற்றது)
"என்கிற பரமாத்துமாவினால் சிருஷ்டிக்கப்பட்டதாகையால்,
"நாரமென்கிற பெயரையடைந்தது. அந்த நாரமென்கிற பெய
"ரையுடைய ஜலத்தில் வஸித்ததனாலந்தப் பரமாத்துமா நாராய
"ணனென்று சொல்லப்படுகிறார். அப்படிப்பட்ட எதானதுப்
"பிரபஞ்சத்திற்குக் காரணமாயும் (பிராகிருத) சரீரமற்றதாயும
"ழிவற்றதாயும் (வேதாந்தத்தினாலறியப்படுகிறபடியால்) ஸத்
"தென்றும் (கண்முதலிய இந்திரியங்களினாலறியப்படாததாயிரு
"க்கிறபடியால்) அஸத்தென்றுஞ் சொல்லப்படுகிறதோ அப்படி
"ப்பட்டவராலே (விஷ்ணுவினாலே) முதலில் சிருஷ்டிக்கப்பட்ட
"ஒருபுருஷனுக்குப் பிரும்மாவென்றுலகத்திற் பெயர் வழங்குகி
"றது."

18. மேற்குறித்தவாக்கியங்களில், ஸகலமும் விஷ்ணுசுவ ரூபம், விஷ்ணுவே ஸகலசுவரூபியாயிருக்கிறார் என்பனபோ லொற்றவாக்கியங்களின் தாத்பரியம் இந்த மதசித்தாந்தப்படிக்கு என்னவெனில், விஷ்ணுவானவர் ஸகலவஸ்துக்களுக்குமாத் துமாவாகவுஞ் சரீரியாகவும் அந்தர்யாமியாகவுமிருக்கிறதனாலே ஸகலவஸ்துக்களையும் அவராகவும் அவர்ஸகலவஸ்துக்களாகவுஞ் சொல்லப்பட்டனவென்பதுதான்.

19. விஷ்ணுவே பரமாத்துமாவென்றும் அவருக்குச் சிரேஷ்டமாய் வேறொருவருமில்லையென்றும் நாராயணோபநிஷத் திருபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத், நரஸிம்மதாபிநீ இராமதாபிநீ முதலிய உபநிஷத்துக்கள், அப்படியே மஹாபாரதம் முதலிய இதிஹாஸங்கள் புராணங்கள் இவைகளெல்லாஞ் சொல்

---

काः विष्णुमेवापियन्ति ॥

* आपो नाराइति प्रोक्ता आपो वै नरसूनवः । तायदस्यायनं पूर्वं तेन नारायणःस्मृतः ॥ १० ॥ यत्तत्कारणमव्यक्तं नित्यं सदसदात्मकम् । तद्विसृष्टस्सपुरुषो लोके ब्रह्मेति कीर्त्यते ॥ ११ ॥ இந்த அர்த்தமுள்ள வாக்கியங்களை மஹாபாரதம் ஹரிவம்சம் விஷ்ணுபருவத்திலும் சூதஸம்ஹிதையிலுங் காண்க.

லுகின்றன. அவைகளிற்சில, சம்புவானவர் விஷ்ணுபக்தரென்றும் சிவன் விஷ்ணுவையுபாஸித்தாரென்றுஞ் சொல்லுகின்றன. அவைகளிற்சில குறிப்பிட்டுச்சொல்லுகிறேன்.

பத்துமபுராணம்-ஆதிகண்டம்-அத்-ரு0-ல், * "ஆகையால், "உற்பத்திநாசமற்றவராயும் ஸகலத்திற்குமாத்துமசுவரூபராயு "மழிவற்றவராயும் பாபத்தைப்போக்கடிக்கிறவராயுமிருக்கிற வி "ஷ்ணு ஒருவரையே அறியுங்கள். அவரையே பூஜியுங்கள். ஹ "ரியையும் (சிவன்முதலிய) இதரதேவதைகளையும் ஸமமாய் யார் "பார்க்கிறார்களோ அவர்கள் கொடிதுங்களான நரகங்களை யடை "கிறார்கள். அவர்களை ஹரியானவர் பக்தர்களாகக்கிரஹிக்கிற "தில்லை. நாராயணனைக்காட்டிலும் வேறொருவர் பாபக்கூட்ட "ங்களுக்கு ப்புதருக்குக் காட்டுத்தீபோலாகிறதில்லை."

பத்துமபுராணம் பாதாளகண்டம்-அத்-அஅ சு சஅ ல், † "திருப்தியானது அந்நத்தைவிட வேறொன்றிலில்லை. தக "ப்பனைவிட வேறொருகுருவுமில்லை. பிராம்மணனைவிட ஸத்பா "த்திரமுமில்லை. கேசவனைவிட வேறுதெய்வமுமில்லை."

ஷை-அத்-கூங-சு-உ.சு-ல், ‡ "அந்தந்தப்புராணம் ஆகமம் "இவைகள் சராசரமானப் பிரபஞ்சத்திற்கு மோகத்தையுண்டா "க்கும்பொருட்டாகின்றன. அந்தந்தப்புராணங்களிற் சொல்ல "ப்பட்ட தேவதையையே அந்தந்தப் பிரும்மகற்பத்திற் சிரேஷ்ட "டமாகச்சொல்லியிருக்கட்டும். நிச்சயமேதுவெனில், ஸகலமா "ன ஆகமவிஷயங்களிலே விவேகிகளினாலே வேற்றுமையின்றி

---

* तस्मादनादिनिधनं विष्णुमात्मानमव्ययम् । हरिं चैकं प्रपश्यद्धं पूजयद्धं तथैव हि ॥ २० ॥ ये समानं प्रपश्यन्ति हरिं वै देवतान्तरम् । ते यान्ति नरकान्घोरा न्नतांस्तु गणयेद्धरिः ॥ २१ ॥ नारायणात्परो नास्ति पापराशिदवानलः ॥ २२ ॥

† न तृप्तिरशनादन्या न गुरुर्जनकात्परः । न पात्रमन्यद्विप्रेभ्यो न देवः केशवात्परः ॥

‡ स्युर्मोहाय चराचरस्य जगतस्ते ते पुराणागमा स्तां तामेव हि देवतां परमिकां जल्पन्तु कल्पे विधौ । सिद्धान्तः पुनरेकएव भगवान् विष्णु-

"ப்பார்க்கப்படுமானாற் பகவானான விஷ்ணுஒருவரே சிரேஷ்ட
"ரென்றறியப்படும்."

பத்ம புராணம்-உத்தரகண்டம்-அத்-௨-ல், * "உருத்திரர்
"சொல்வது—ஓ! தேவனாகிய ஜநார்த்தனா! நீர் தயவுடன் கொ
"டுக்க விரும்புவீரானாலிரண்டு வரங்களையெனக்குக்கொடும்.
"அவைகளை நான் ஆபரணம்போற் பெற்றுக்கொள்ளுகிறேன்.
"உம்முடையபக்தி எனக்கெப்போதுமிருக்கட்டும். நான்பக்
"தர்களுக்குள் இராஜாவாயிருக்கிறேன். ஸகலஜநங்களும் "இ
"ந்தருத்திரன் விஷ்ணுபக்தன்" என்றெப்போதுஞ் சொல்லட்டு
"ம். ஓ! தேவேசா! உம்முடையப் பிரஸாதத்தினால் நான் முக்
"தியைக் கொடுக்கத்தக்கவனாகவாகிறேன். எந்த ஜநங்களென்னை
"ப் பஜிக்கிறார்களோ அவர்களுக்கு முக்தியைக் கொடுக்கிறவ
"னாகவாகிறேனென்பதிற் சந்தேகமில்லை. நான் விஷ்ணுபக்த
"னென்றிவ்வுலகத்திற் பிரஸித்தனாயிருக்கிறேன். எவனுக்கு
"நான் வரங்கொடுக்கிறேனோ அவனுக்கு முக்தியுண்டாகிறது."

ஷை புராணம்-உத்தரகண்டம்-அத்-௨௱௩-ல், † "ஸ்ரீபகவா
"ன் (விஷ்ணு) சொல்வது—ஓ! தேவதைகளுக்குள்சிரேஷ்ட
"னே! அசுரர்களை மோஹிப்பிக்கும்பொருட்டு ஓ! தோள்வலி
"யுள்ள உருத்திரா! பாஷண்டிகளநுஷ்டிக்கத்தக்க தருமத்தை
"யுண்டுசெய்யும். ஓ! மஹாபுத்திமானே! அந்தப்பாஷண்டி
"களைக்குறித்துத் தாமதங்களான புராணங்களைச்சொல்லும்.
"மோஹிப்பிக்கத்தக்க சாஸ்திரங்களையுண்டுசெய்யும்."

---

स्समस्तागमव्यापारेषु विवेकिनां व्यतिकरं नीतेषु निश्चीयते ॥

* रुद्रउवाच । अलं गृह्णामि वो देव सुप्रसन्नो जनार्दन । द्वौ वरौ मम दीयेतां यदि दातुं त्वमिच्छसि ॥ १४ ॥ तव भक्तिस्सदैवास्तु भक्तराजो भवाम्यहम् । सर्वे लोका ब्रुवन्त्येव मयं भक्तस्सदैव हि ॥ १५ ॥ तव प्रसादाद्देवेश मुक्तिदाता भवाम्यहम् । ये लोका मां भजिष्यन्ति तेषां दाता न संशयः ॥ १६ ॥ विष्णुभक्त इति ख्यातो लोकेचैव भवाम्यहम् । यस्याहं वरदाता तु तस्य मुक्तिर्भविष्यति ॥ १७ ॥

† श्रीभगवानुवाच । त्वं हि रुद्र महाबाहो मोहनार्थंसुरद्विषाम् ॥ पाषण्डाचरणं धर्मं कुरुष्व सुरसत्तम ॥ २४ ॥ तामसानि पुराणानि कथयस्व च तान्प्रति । मोहनानि च शास्त्राणि कुरुष्व च महामते ॥ २५ ॥

7. பாகவதம்-ஸ்கந்தம்-ச-அத்-உச-ல், * "(உருத்திரர்சொ "ல்வது) சூக்ஷ்மமானப் பிரகிருதியைக்காட்டிலும் முக்குணங்க "ளைகாட்டிலும் ஜீவனென்றுசொல்லப்படுகிற புருஷனைக்காட்டி "லும் சிரேஷ்டனுயும் ஷட்குணபரிபூர்ணனுயுமிருக்கிற வாசு "தேவனை யாதொருவன்சரணமடைகிறனே அவனெனக்குப் "பிரியனுயிருக்கிறன். நூறுஜந்மங்களிற் தன்னுடைய தருமத் "திலேயே நிலையாயிருந்தபுருஷன் பிரும்மாவையடைந்து பிறகு "சிரேஷ்டனுகிய உருத்திரனுன என்னையடைகிறன். தேவதை "களும் நானும் அவரவரதிகாரகாலம் முடிந்தபிறகு இலிங்கதே "கமழிந்தவுடன் விஷ்ணுபதத்தையடைவதுபோல் விஷ்ணுவினு "டைய பக்தனனவன் தேகமழிந்தபிறகுப் பிரபஞ்சத்திற்குமே "ற்பட்டதாகிய விஷ்ணுபதத்தையடைகிறன்."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-சு-ல், † "(விஷ்ணுசொல்வது) ஓ! சிவனே! இதுமுதல் ஞானத்தினுலே "யும் தேஜஸினுலேயும் ஸாமர்த்தியத்தினுலேயும் கீர்த்தியினு "லேயும் எனக்குச்சமானமானவனுகக்கடவாய். நீ, என்னுடை "யப் பிராணனைவிட அதிகமானவன். உன்னைவிட சிரேஷ்டமான "பக்தனெனக்கில்லை. உன்னைவிடப் பிரியமுள்ளவனுக வே "றெவனுமெனக்கில்லை, நீ என்னுத்துமாவைவிட சிரேஷ்டமா "னவன். எந்தப்பாபிகளுன்னை நிந்திக்கிறர்களோ ஞானமில்லா "தவும் புத்தியில்லாதவுமவர்கள் சந்திரசூரியர்களுள்ளவரையிற் "காலசூத்திரமென்கிற நரகத்தில் வேகவைக்கப்படுகிறர்கள்."

மார்க்கண்டேயபுராணம்-அத்-ச-ல், ‡ "ஸகலதேவதைக

---

* यः परं रहस स्साक्षा त्त्रिगुणा ज्जीवसंज्ञितात् । भगवन्तं वासुदेवं प्रपन्ना स्स प्रियो हि मे ॥ २८ ॥ स्वधर्मनिष्ठश्शतजन्मभिः पुमान् विरञ्चतामेति ततः परं हि माम् । अव्याकृतं भागवतो थ वैष्णवं पदं यथाहं विबुधाः कलात्यये ॥ २९ ॥

† अद्य प्रभृति ज्ञानेन तेजसा वयसा शिव ॥ २९ ॥ पराक्रमेण यशसा महसा मत्समो भव । प्राणानामधिकस्त्वं च न भक्तस्त्वत्परो मम ३० ॥ त्वत्परो नास्ति मे प्रेयान् त्वं मदीयात्मनः परः । ये त्वां निन्दन्ति पापिष्ठा ज्ञानहीना विचेतनाः ॥ ३१ ॥ पच्यन्ते कालसूत्रेण यावच्चन्द्र दिवाकरौ ॥३२॥

‡ नमस्कृत्य सुरेशाय विष्णवे प्रभविष्णवे । पुरुषायाप्रमेयाय शा-

"ளுக்குமீசனும் மகாவல்லமைபொருந்திய புருஷனும் அளவி
"டக்கூடாதவனு மெப்போதுமுள்ளவனு மழிவற்றவனுமி
"ருக்கிற விஷ்ணுவை நமஸ்காரஞ்செய்யவேண்டியது. எதைக்
"காட்டிலும் பெரிதில்லையோ எதைக்காட்டிலுஞ் சிறியதில்லை
"யோ ஜகத்திற்காதியாயும் பிறப்பற்றதாயுமிருக்கிற எவனாலிந்த
"ஸகலப்பிரபஞ்சமும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்ப
"ட்ட சுவப்பிரகாசனுமெங்கும் நிறைந்தவனும் பிரபுவாயுமிரு
"க்கிறவர் பகவானான நாராயணனே."

அக்நிபுராணம்-அத்-ரு-சு-உஉ-ல், * "ஹரியானவர் சிவனை
"ப்பார்த்துச் சொல்லுகிறார். ஓ! உருத்திரா! என்னுடைய மா
"யையானது உன்னால் ஜயிக்கப்பட்டதல்லவா. என்னுடையமா
"யையை ஜயிக்கிறதற்கு இவ்வுலகத்திலுன்னைத்தவிர வேறுபுரு
"ஷன் சக்தனல்ல."

ஒஷபுராணம்-அத்-ரு-அ0-ல், † "(ஒவ்வொருவனும்) தனக்
"கு விதிக்கப்பட்டிருக்கிற கருமத்தினாலே அந்தவிஷ்ணுவைப்பூ
"ஜித்துப் பலனையடைகிறான். எல்லா அவஸ்தைகளிலேயும் க
"ருமத்தினாலும் மனதினாலும் வாக்குனாலும் எப்போதும் பிரும்
"மாமுதல் சிறுபூச்சிவரையிலுள்ள ஜகத்தை விஷ்ணுரூபமென்
"றெவனறிகிறானோ அவன் பலனையடைகிறான். இப்படிப்பட்ட
"அவன் பகவானுடைய பக்தனாகையால், நிச்சயமாயவன் பக
"வானைச்சேர்ந்தவனே."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத் கூ-சு-ரு0-ல், ‡ "இப்ப
"டிப்பட்ட தத்துவமானது விஷ்ணுவினுடைய உத்தமமான

---

श्वतायाव्ययाय च ॥ ३६ ॥ यस्मादणुतरं नास्ति यस्मान्नास्ति बृहत्तरम् । येन विश्वमिदं व्याप्तमजेन जगदादिना ॥ ३८ ॥ स देवो भगवान् सर्वं व्याप्य नारायणो विभुः ॥ ४४ ॥

* शिवमाह हरिरुद्रजिता माया त्वया हि मे । न जेतुमेनां शक्तो मे त्वदृतेऽन्यः पुमान् भुवि ॥

† स्वकर्मणा तमभ्यर्च्य विष्णुं सिद्धिं च विन्दति । कर्मणा मनसा वाचा सर्वावस्थासु सर्वदा ॥ ९७ ॥ ब्रह्मादिस्तम्बपर्यन्तं जगद्विष्णुञ्च वेत्ति यः । सिद्धिमाप्नोति भगवद्भक्तो भागवतो ध्रुवम् ॥ ९८ ॥

‡ एतावत्तत्त्वमित्युक्तं प्राधान्यं वैष्णवं पदम् । ब्रह्मणा तद्गुणं शक्यं

"ஸ்தாநமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தவிஷ்ணுவினுடை "யகுணமானது, பிரும்மாவைத்தவிர வேறொருவராலறியவொத் "தியமல்ல".

இலிங்கபுராணம் உத்தரபாகம்-அத்-கஎ-ல், * "எல்லாப்பக்கங் "களிலும் ஜலத்தினால் நிறைந்ததாயும் அதிபயங்கரமாயும் இரு "ளினாலெங்குஞ்சூழப்பட்டதாயுமிருக்கையில், நிர்மலராயும் யா "தொரு துன்பமுமற்றவராயும் யோகசுவரூபராயுமிருக்கிற நா "ராயணனந்தஜலத்திற் சயநஞ்செய்துகொண்டிருந்தார். அநேக "தலைகள் அநேகக்கண்கள் அநேகபாதங்களுடையவராயும் பி "ரபஞ்சசுவரூபராயும் ஸர்வக்ஞராயும் ஸகலதேவதைகளுடைய "உற்பத்திநாசத்திற்குக் காரணராயுமிருக்கிற அந்தநாராயணன் "தானகவே இரஜோகுணத்தினற் பிரும்மாவாகவும் தமோகுண "த்தினற் சங்கரராகவும் ஸத்துவகுணத்தினலெங்கும் நிறைந்த "விஷ்ணுவாகவும் ஸகலத்திற்குமாதாரமாயிருக்கிறதனலே ம "ஹேசுவரனகவும் காலரூபியாகவும் காலத்திற்குமுக்கியமான "இருப்பிடமாகவும் வெளுப்புக் கறுப்பு வர்ணமுள்ளவரானலுங் "குணமற்றவராகவுமிருக்கிற மகாவல்லமைபொருந்திய நாராய "ணனவர் ஸத்சுவரூபமாயும் அஸத்சுவரூபமாயும் ஸகலசுவரூ "பமாயுமிருக்கிறார்." (ஸத்து அஸத்துமுதலிய ஸகலரூபங்களி "லும் அவைகளுக்காத்துமாவாக நாராயணனிருக்கிறதனலே ஸ "கலவஸ்துக்களும் நாராயணசுவரூபமென்று இதிற்சொன்னதா "க இம்மதஸ்தர்களுடைய அபிப்பிராயம்)."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-உச-ல், † "ஸகலதேவ "தைகளும் விஷ்ணுசுவரூபிகள். ஸகல(சிவ)கணங்களும் விஷ்ணு

---

वेत्तुमन्यै ेशक्यते ॥

* एकार्णवे महाघोरे तमोभूते समन्ततः । सुष्वापाम्भसि योगात्मा निर्मलो निरुपप्लवः ॥ १० ॥ सहस्रशीर्षा विश्वात्मा सहस्राक्ष स्सहस्रपात् । सहस्रबाहु स्सर्वज्ञ स्सर्वदेवभवोद्भवः ॥ ११ ॥ हिरण्यगर्भो रजसा तमसा शङ्करस्स्वयम् । सत्वेन सर्वगो विष्णु स्सर्वात्मत्वे महेश्वरः ॥ १२ ॥ कालात्मा कालनाभस्तु शुक्लः कृष्णस्तु निर्गुणः । नारायणो महाबाहु स्सर्वात्मा सदसन्मयः ॥ १३ ॥

† सर्वे विष्णुमया देवा स्सर्वे विष्णुमया गणाः ॥ १४२ ॥ न हि

"சுவரூபிகள். விஷ்ணுவுக்குச்சமானமாயடையத்தகுந்ததாய்வே
"றுயாதொன்றுமில்லை. வேதங்களிவ்விதமாய்க் கோஷித்துக்கொ
"ண்டிருக்கின்றன. இதில்யாதொரு ஸந்தேகமுமில்லை."

இலிங்கபுராணம்-பூர்-அத்-௯௬-ல்,* "ஓ! விஷ்ணுவே! நீர், ஆதி
"யாகவுமநாதியாகவும் பிரகிருதியாகவும் ஜநார்த்தநனுகவும்புரு
"ஷனுகவும் ஜகத்திற்கு நாதனுகவும் ஜகத்திற்கெல்லாமீசுவரனு
"கவுமிருக்கிறீர். ஓ! ஜநார்த்தநா! பிரும்மாவாகவும் புருஷனுக
"வும் பிரபஞ்சசுவரூபியாகவும் பிதாமஹராகவும் அநாதிதத்து
"வமாகவும் பரம்ஜியோதிசுவரூபமாகவுமிருக்கிறவர் நீரே. ஓ!
"பிரபுவே! பரமாத்துமாவாயும் அடையத்தகுந்த சிரேஷ்டமா
"னஸ்தாநமாயும் இலக்ஷ்மீபதியாயும் பூபதியாயுமிருக்கிறவர் நீ
"ரே. தமோகுணத்தினுற் சூழப்பட்ட உருத்திரரானவர் உம்மு
"டையக் குரோதத்திலிருந்துண்டானுர். இரஜோகுணத்தினுற்
"சூழப்பட்ட பிதாமஹரானப் பிரும்மாவானவர் ஜகத்தைச் சிரு
"ஷ்டிக்கிறவராகவானுர். ஓ! காலசுவரூபியே! ஓ! ஹரியே!
"ஓ! நாராயணு! ஓ! ஜகத்ரூபியே! ஸத்துவகுணத்தினுற் சூழ
"ப்பட்ட விஷ்ணுவாகிய நீரே (பக்தர்களுடைய) அநுக்கிரஹத்தி
"ன்பொருட்டுப் புருஷோத்தமனுக வாயிருக்கிறீர்."

ஷெ புராணம்-உத்தரபாகம்-அத்-௭-ல், † "ஸகலசாஸ்திர
"ங்களையுமாலோசித்தும் அடிக்கடி (அர்த்தத்தை) விசாரித்தும்
"பார்க்கிறதனுலெப்போதுந் தியானிக்கத்தக்கவஸ்து நாராயண

---

विष्णुसमा काचित् गतिरन्या विधीयते । इत्येवं सततं वेदा गायन्ति नात्र संशयः ॥ १४३ ॥

* त्वमादि स्त्वमनादिश्च प्रकृति स्त्वं जनार्दन ॥ ४ ॥ पुरुष स्त्वं जगन्नाथो विष्णु र्विश्वेश्वरो भवान् । योयं ब्रह्मासि पुरुषो विश्वमूर्तिः पितामहः ॥ ५ ॥ तत्वमाद्यं भवानेव परं ज्योतिर्जनार्दन । परमात्मा परं धाम श्रीपते भूपते प्रभो ॥ ६ ॥ त्वत्क्रोधात्सम्भवो रुद्र स्तमसा च समावृतः । त्वत्प्रसादाज्जगद्धाता रजसा च पितामहः ॥ ७ ॥ त्वत्प्रसादात्स्वयं विष्णु स्सत्वेन पुरुषोत्तमः । कालमूर्ते हरे विष्णो नारायण जगन्मय ॥ ८ ॥

† आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः ॥ ११ ॥ इदमेकं सुनिष्पन्नं ध्येयो नारायणस्सदा । किं तस्य बहुभिर्मन्त्रैः किं तस्य बहुभिर्व्र-

"ணொருவனே என்கிறமுடிவுக்குவருகிறான். அப்படித்தியாகிக்
"கிறவனுக்கு, அநேகமந்திரங்களினாலாவது அநேகவிரதங்களினா
"லாவதென்னப் பிரயோஜநம்? நமோநாராயணாவென்கிற மந்தி
"ரமானதுஸகலப்பிரயோஜநத்தையுந்தரத்தக்கதாயிருக்கிறது."

வராஹபுராணம்-அத்-எ0-சு-௩சு-ல், * "(விஷ்ணுசொல்வது)
"பெரிதானகைகளையுடைய ஓ! உருத்திரா! நீ மோஹசாஸ்திரங்
"களைச்செய். ஓ! மஹேசுவரா! சீக்கிரமாக அற்பப்பிரயாஸையை
"க்காண்பிவித்து (அசுரர்களை) மோஹமடையும்படிசெய்யும்."

கூர்மபுராணம்-அத்-உஉ-ல், † "யாரால், பூதங்களுடைய
"உற்பத்தியுண்டாகிறதோ யாரிடத்தில் ஸகலஜகத்துங்கோர்க்க
"ப்பட்டிருக்கிறதோ அந்தவிஷ்ணுவானவர் ஸகலபூதங்களுக்கு
"மாத்துமாவாயிருக்கிறார். அவரையாசிரயித்து முக்தியடைகி
"றான். யாரைசிரேஷ்டத்திற்கெல்லாஞ் சிரேஷ்டமாகிய அக்ஷ
"ரத்தைக்காட்டிலும் மேலானதாயும் ஹிருதயகுஹையிலிருக்கிற
"தாயும் ஆநந்தத்தைக்கொடுக்கிறதாயுமுத்தமமான ஹிருதயா
"காசமாயுஞ் சொல்லுகிறார்களோ அவர் நாராயணனென்றுசொ
"ல்லப்படுகிறார்."

ஸ்காந்தபுராணம்-ஸஹ்யாத்திரிகண்டம்-மாங்கிஷமாஹாத்
துமியம்-அத்-க-ல், ‡ "ஜங்கமஸ்தாவரங்களுக்கும் ஸித்தர்களு
"க்கும் யோகிகளுக்கும் தேவதைகளுக்குமாகாசத்திற் சஞ்சரிக்
"கிறவர்களுக்கும் ஜலத்திலுந் தரையிலு மாகாசத்திலுமிருக்கிற
"வர்களுக்கும் ஆத்துமாவாயும் பரமாத்துமாவாயுமெப்போது
"முள்ளவர் பகவானான இந்தவிஷ்ணுவே."

---

तैः ॥ १२ ॥ नमो नारायणायेति मन्त्रस्सर्वार्थसाधकः ॥ १३ ॥

* त्वं च रुद्र महाबाहो मोहशास्त्राणि कारय । अल्पायासं दर्शयित्वा मोहयाशु महेश्वर ॥

† यतः प्रवृत्तिर्भूतानां यस्मिन्सर्वं यतो जगत् । सविष्णुस्सर्वभूतात्मा तमाश्रित्य विमुच्यते । यमक्षरात्परतरात्परं प्राहुर्गुहाशयम् । आनन्दं परमं व्योम स वै नारायणस्स्मृतः ॥

‡ जङ्गमस्थावराणाञ्च सिद्धानामपि योगिनाम् । दिवौकसां खेचराणां जलस्थलनभौकसाम् ॥ १५ ॥ आत्मासौ भगवान् विष्णुः परमात्मा सनातनः ॥ १६ ॥

ஸ்காந்தபுராணம்-காசிகண்டம்-பூர்வபாகம்-அத்-உ௪-ல், * "பத்துமநாபனும் பாஞ்சஜந்நியமென்கிற சங்கத்தையுடையவ "னுமிருக்கிற தேவகீகுமாரனை ஓ! வாசுதேவா! உமக்குநம "ஸ்காரம். ஓ! நாராயணா! சராசரமான இந்த ஜகத்திலுமக்க "ந்நியமாய் யாதொன்றுமில்லை."

இந்த அத்தியாயத்தின் ௯-வது சுலோகம்முதல் ௪௩-வது வரையிலுள்ள சுலோகங்களினால் விஷ்ணுவானவர் பரமாத்து மாவென்று ஸ்துதிக்கப்படுகிறார். அவைகளில் முதற்சுலோகமு ங் கடைசிசுலோகமும் மாத்திரம் இவ்விடத்திலெடுத்துச்சொல் லப்பட்டது.

ஸ்காந்தம்-சூதஸம்ஹிதை-சிவமஹாத்மியகண்டம்-அத்-௯-ல், † "பிரும்மரிஷிகள்சொல்வது—ஓ! ஜநார்த்தநா! தேவதை "களுக்கெல்லாமாதியானதேவனே! எப்போதுமுள்ளவனே! "உமக்குநமஸ்காரம். புருஷனும் பூர்ணனுமிருக்கிற பரமாத் "துமாவாகிய உமக்குநமஸ்காரம். ஜரை மரணம் ரோகம்முதலி "யவைகளில்லாத பரிசுத்தராயும் பிரும்மாவுக்கும் ஜகத்திற்கும் "பதியாயுமிருக்கிற உமக்குநமஸ்காரம். ஸகலபூதங்களுடைய ஆ "த்துமசுவரூபியாயும் பூதங்களுக்கெஜமானனுமிருக்கிற உமக் "குநமஸ்காரம். சங்கம் சக்கிரம் கதை பத்தும மிவைகளைக் கை "யிற்தரித்திருக்கிற விஷ்ணுவாகியஉமக்குநமஸ்காரம். ஹிரண் "யகர்ப்பனும்ஸ்ரீ பதியாயும் பூபதியாயுமிருக்கிற உமக்குநமஸ் "காரம். சுவயம்புவாயும் சூத்திராத்துமாமுதலிய சுவரூபமாயுமி "ருக்கிற உமக்கு நமஸ்காரம்."

---

* नमस्ते पद्मनाभाय पाञ्चजन्यधराय च । वासुदेव नमस्तुभ्यं देवकीनन्दनाय च ॥ ९ ॥ त्वत्तो नान्यज्जगत्यस्मिन्नारायणचराचरे ॥ ४३ ॥

† ब्रह्मर्षयः । नमस्ते देवदेवानामादिभूतसनातन । पुरुषाय पुराणाय नमस्ते परमात्मने ॥ १२ ॥ जरामरणरोगादिरहिताया मलात्मने । ब्रह्मणः पतये तुभ्यं जगतः पतये नमः ॥ १३ ॥ लोकालोकस्वरूपाय लोकानां पतये नमः । शङ्खचक्रगदापद्मपाणये विष्णवे नमः ॥ १४ ॥ नमो हिरण्यगर्भाय श्रीपते भूपते नमः । नम स्स्वयंभुवे तुभ्यं सूत्रात्मादिस्वरूपिणे १५ ॥

பிருமபுராணம்-அத்-நிஎ•ல், * "உலகங்கள்நாராயணசுவ "ரூபம். தேவதைகள் நாராயணசுவரூபம். ஸத்தியம்,உத்தமயா "னஸ்தாநம் இவைகளும் நாராயணசுவரூபம். பூமி ஜலம் அக்நி "ஆகாசம் வாயு மனது அகங்காரம் புத்திஇவைகளெல்லாம் நா "ராயணசுவரூபம். சென்ற நிகழ் வருங்காலங்களும் ஜீவனென் "கிறபெயரெதுண்டோ அதுவும்ஸ்தூலமும் சூக்ஷமமும் அதற்கு "மேற்பட்டதும் இந்தஸகலமும் நாராயணசுவரூபமே"

20. இவ்விதமாய் ஸகலபுராணங்களும் நாராயணனே ஸகலத்திற்குங்காரணமான பரமாத்துமாவாய்ச் சொல்லுகிறதுமல்லாமற் சங்கரர் நாராயணனுக்கு முக்கியமான பக்தரென்றுஞ் சொல்லுகின்றன. இவ்விதமாகவே சங்கரரையும் ஸர்வகாரணமான பரமாத்துமாவாய் சுருதிஸ்மிருதி இதிஹாஸபுராணங்களே சொல்லுகின்றன.

21. ஜயவிரதன்:—ஓ! சாந்தமூர்த்தியே! விசிஷ்டாத்துவைதத்துவைதமதசித்தாந்தங்களையும் அவைகளுக்காதாரமான ப்பிரமாணங்களையும் நன்றாய்க்கேட்டறிந்தேன். இந்தவிஷயமாயெனக்கொருஸந்தேகமுண்டாயிருக்கிறது. அதாவது—தித்திப்புமுதற் கசப்புவரையிலுள்ள அநேகவஸ்துக்களைச்சேகரித்துவைத்திருக்கிறகடையிலிருந்து எவனெவனுக்கெந்தெந்த உருசியுள்ள வஸ்துவில் விருப்பமோ அவனவன் அந்தந்தவஸ்துக்களைப்பெறுவதுபோல சாஸ்திரங்கள் பலவகையான மார்க்கங்களை முமுக்ஷுவுக்குச்சொல்லுகின்றன. அப்படியிருந்தாலும் இந்தவிசிஷ்டாத்துவைதமத ஸித்தாந்தத்தையுந் துவைதமதஸித்தாந்தத்தையும் உலகத்திற்பரவச்செய்த இராமாநுஜாசாரியர், மத்துவாசாரியர் இவர்கள் ஈசுவராவதாரமாயிருந்தும் முந்தியமதாசாரியரான சங்கராசாரியர்வெளியிட்ட அத்துவைதசித்தாந்த

---

* नारायणपरालोका नारायणपरा स्सुराः । नारायणपरं सत्यं नारायणपरं पदम् ॥ २६ ॥ नारायणपरा पृथ्वी नारायणपरं जलम् । नारायणपरोवह्नि र्नारायणपरं नभः ॥ २७ ॥ नारायणपरो वायु र्नारायणपरं मनः । अहङ्कारश्च बुद्धिश्च उभे नारायणात्मके ॥ २८ ॥ भूतं भव्यं भविष्यं च यत्किञ्चिज्जीवसंज्ञिकम् । स्थूलं सूक्ष्मं परं चैव सर्वं नारायणात्मकम् ॥

மானது அநேகப்பிரமாணங்களாலாதரிக்கப்பட்டும் அந்த ஆசாரியரீசுவராம்சமாயிருந்தும் அவர் பிரசித்தஞ்செய்த ஸித்தாந்தத்திற்கு நேர்விரோதமான இந்த இரண்டுமதஸித்தாந்தங்களையும் ஏன் ப்ரஸித்தஞ்செய்தார்கள் ? அத்துவைதஸித்தாந்தம் பிசகானதென்று பிந்தியமதாசாரியர்களுடைய அபிப்பிராயமா? அப்படியானுலீசுவராம்சமான ஒருவர் ஈசுவராம்சமான மற்றெருவருடைய சித்தாந்தத்தை நிந்திப்பதானுலதுதன்னையேதான் நிந்தித்துக்கொண்டதாகவாகுமல்லவா ? இப்படி பேதப்பட்டதற்குக்காரணத்தைக்கிருபைசெய்து எனக்குச்சொல்லவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

22. ஸுசர்ம்மா:—ஓ ! ஜயவிரதா ! நீ கேட்டகேழ்வை விசேஷமான கேழ்வைதான். அதற்குத்தரஞ்சொல்வதும் சுலபமானதுதான். ஆனுல், தங்களாசாரியபுருஷருடைய அபிப்பிராயமும் அவருடையமதஸித்தாந்தமுந்தவிர மற்ற ஆசாரியபுருஷர்களுடையகருத்தாவது அவர்களுடைய ஸித்தாந்தமாவது ஸரியானதல்லவென்றுமூடத்தனத்தினுல் மதாவேசங்கொண்டு வாதஞ்செய்கிறவர்கள் இந்த என்னபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளார்கள். சாஸ்திரஞானமும் ஸமபுத்தியுமுள்ள பண்டிதர்கள் இந்த அபிப்பிராயத்தையாக்ஷேபிக்கமாட்டார்கள். ஆகையாலிந்தவிஷயத்திற் பேதமுண்டாவதற்குக்காரணஞ்சொல்லுகிறேன்கேள்.

23. ஒருமஹாவித்துவானிடத்தில்மூன்றுபெயர்கள்சென்று அவரைவணங்கி யெல்லோரும், எங்களுக்குப் பிர்ம்மதத்துவஞானமுண்டாகும்படிவேதாந்தத்தையுபதேசிக்கவேண்டுமென்று கேட்டார்கள். அந்தக்குருவானவர் இம்மூவரும் வேதாந்தத்தைக்கேட்டறிந்துகொள்ளுஞ் சக்தியுடையவர்களாவென்று பரிசோதித்தறியும்பொருட்டு அவர்களைப்பார்த்துங்களுக்கேதேனும் சாஸ்திரஞானமுண்டாவென்றுர். அவர்களிலொருவன் நான் வேதாத்தியயநம்பூர்ணமாய்ச்செய்து தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்களையும் கற்றிருக்கிறேன் என்றுன். மற்றொருவன், நான் வேதாத்தியயநம் பூர்ணமாய்ச்செய்து தர்க்கமும்படித்திருக்கிறேனென்றுன். மற்றொருவன், வேதாத்தியயநமநேகபாகஞ்செய்திருக்கிறேன் இன்னும்பூர்ணமாகவில்லையென்றுன். இவர்களுடைய வாக்கியங்களைக்கேட்ட குருவானவர் சாஸ்திரஞானமுள்ளவனுன முதலாதவனுக்கு வேதாந்தோபதேசஞ் செய்

தால் அந்த அர்த்தத்தை கிரஹிக்கிறயோக்கியதை இவனுக்கு இருக்கிறதென்று நிச்சயித்து அவனுக்கு வேதாந்தோபதேசஞ் செய்தார். இரண்டாதவனுக்குச் சாஸ்திஞானம்பூர்ணமாயில்லாத தனுல் நீ வியாகரணம்முதலியசாஸ்திரங்களைக் கற்கவேண்டியது, பிறகு வேதாந்தோபதேசஞ் செய்கிறேனென்று முதலிலிவனுக்கு வியாகரணசாஸ்திரத்தைபோதித்தார். மூன்றுதவன்அத்தியயநத்தையே பூர்ணஞ்செய்யாததனுற் பாக்கியுள்ள வேதாத்தியயநத்தைச்செய்துமுடித்து பிறகு சாஸ்திரார்த்தங்களையும் அதற்குப்பிறகு வேதாந்தார்த்தங்களையும் போதிப்பதாகச்சொல்லி அவனுக்குப்பாக்கியிருக்கிற வேதாத்தியயநத்தைக்கற்பித்தார். இந்தக்குருவினிடத்தில் ஏதேனும் பக்ஷபாதமாவது வேறுயாதொரு தோஷமாவது சொல்லக்கூடுமோ? இப்படிப்போற்றுன் மதாசாரியர்கள் அவரவர்முன்பாகவிருந்த சிஷியர்களுடைய புத்தி சக்தி குணம் முதலியவைகளையாராய்ந்தறிந்துகொண்டு அவர்களுக்கு எதையுபதேசித்தாலவர்களறிந்துகொள்ளுவார்களோ அதையுபதேசித்தார்களேயன்றி மற்றமுதாசாரியர்கள் சொன்னது பிசகானதாத்பரியமென்பதனுலல்ல.

24. ஸ்ரீமத் சங்கராசாரியர் இவ்வுலகத்திலவதாரஞ்செய்திருந்தகாலத்திலவரிடத்திலுபதேசம்பெற்ற சிஷியர்கள் அத்துவைதஞானத்தையறியும்படியான சக்தியுள்ளவர்களாயிருந்ததனுலவர்களுக்கு அவர் அத்துவைதஞானத்தைப் போதித்தார். அவருக்கு ௬00—வருஷகாலத்திற்குப் பிந்தியவதாரஞ்செய்த ஸ்ரீமத் இராமாநுஜாசாரியர்காலத்திற் கலியுகத்தின்மஹிமையினுல் வெகுஜநங்களுக்குச்சாஸ்திரஞானங்குறைந்துவந்ததனுல்இராமாநுஜாசாரியர்காலத்திலவர்முன்பாகவிருந்தசிஷியர்களுக்கு,“நீதா“ன் பிர்ம்மம். இந்தஸகலஜகத்தும் நீதான். உன்னுடையஅக்“ஞாநத்தினுலிந்த ஜகத்துத்தோற்றுகிறது. வாஸ்தவத்தில் ஜீ“வேசுவரஜகத்தென்கிறபேதமில்லை.” என்றுபதேசிப்பாராறுல், அந்தசூக்ஷ்மார்த்தத்தைக் கிரஹிக்கச் சக்தியில்லாத அந்த சிஷியர்கள் “துக்கஸமுத்திரத்தில் முழுகியிருக்கிற நாம் பிர்ம்மமெப்படியாவோம்? அற்பமாகிய நம்மிடத்திலிந்த ஸகலஜகத்துமெப்படியிருக்கக்கூடும்? பிரத்தியக்ஷத்திற் காணப்பட்டுக்கொண்டு பலவிதவேற்றுமையாயிருக்கிற இந்த ஜகத்தானதெப்படிஅக்ஞாநகற்பிதமாகும்?” என்றுகலங்குவார்கள். ஆகை

யால், இராமாநுஜாசாரியர், அக்காலத்திய சிஷியர்களுக்கு மனதிற்படும்படி "நீ வேறு, பிர்ம்மம் வேறுதான். காணப்படுகிறப் பிரபஞ்சம் உன்னைவிடவேறுதான். ஆனால், ஜீவாத்துமாவாகிய நீயும் பிரபஞ்சமாகிய பிரகிருதியும் அந்தப்பரமாத்துமாவினுடைய சரீரம். ஆனால், நீங்கள் பரமாத்துமாவைவிட்டுப்பிரிந்திருக்கும் சுவபாவமுள்ளவர்களல்ல. நீ அந்தப் பரமாத்துமாவையுபாஸித்து சுவசுவரூபத்தையடையவேண்டியது." என்று போதித்து அதற்காதாரமான சுருதிவாக்கியங்களுடன் இந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாயிருக்கிற சுருதிமுதலிய சாஸ்திரங்களுக்குயுக்தியினால் வேறு அபிப்பிராயங்களைக்கற்பித்தும் அத்துவைதமாகாமலும் துவைதமாகாமலுமிருக்கிறதும் பூர்விகர்களிற் சிலரநுஷ்டித்துவந்ததுமாகிய விசிஷ்டாத்துவைதமதத்தைப் போதித்தார். தன்னுடைய அபிப்பிராயத்தை ஜநங்கள் நம்பியநுஷ்டிக்கவேண்டியதன்பொருட்டுச் சாஸ்திரங்களிலுள்ள அத்துவைதவாக்கியங்களுக்கு அபிப்பிராயத்தினாலும் பதார்த்தங்களினாலுந்தான் போதித்த ஸித்தாந்தத்தை யாதரிக்கும்படி பாஷியம்முதலியக்கிரந்தங்களையும் செய்தார். அத்துவைதஸித்தாந்தம் இராமாநுஜாசாரியருக்குத் தெரியாதென்றாவது தெரிந்தும் அதுபிசகென்று நீக்கிவிட்டாரென்றாவது சொல்ல ஆதாரமில்லை.

25. இராமாநுஜாசாரியர் செய்திருக்கிற சூத்திரபாஷியத்திற் சாஸ்திரங்களிலுள்ள அத்துவைதவாக்கியங்களிலநேகவாக்கியங்களைக் குறிப்பிட்டு அவைகளுக்குத்தாத்பரியார்த்தங்கற்பித்ததுமல்லாமற் பிரத்தியக்ஷத்திற்குச்சாஸ்திரமொத்திருக்கவேண்டுமாதலால், பிரத்தியக்ஷத்திற்கு விரோதமாய் அந்த அத்துவைதவாக்கியங்களுக்கர்த்தஞ்செய்யக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்.

26. இராமாநுஜர்காலத்திற்கு நூறுவருஷங்களுக்குப்பிந்தியவதாரஞ்செய்தஸ்ரீமத்மத்துவாசாரியர் அவர்முன்பாகவிருந்த சிஷ்யர்களுடையபுத்தி சக்தி குணம் முதலியவைகளையாராய்ந்து பார்த்து "இவர்களுக்கு அத்துவைதஸித்தாந்தத்தையாவது விசிஷ்டாத்துவைதசித்தாந்தத்தையாவது போதிப்போமானால் இவர்களுடையபுத்தியிலவைகளிலொன்றும்நிலைபெறாது" என்று நிச்சயித்து உலகத்திற்கெல்லாம் ஒருசக்கிரவர்த்தியிருந்துகொ

ண்டு மற்றவர்களையாளுவதுபோற் பரமாத்துமா ஒருவரேயிருந்து கொண்டு ஜகத்தையாளுகிறார். அவர்ரூபமுடையவர். இவ்வுலகத்திலுயர்வு தாழ்வான அநேகஜநங்களிருக்கிறதுபோல் ஜீவர்களிருக்கிறார்கள். அந்தப் பரமாத்துமாவை ஜீவர்களுபாஸனை செய்து மிகவுமுத்தமமானவைகுண்டபதவியை யடைகிறார்களென்று போதித்தார். இதுஸாமாந்யஜநங்களுக்குப்புத்தியிற்சீக்கிரமாகப்பதியுமென்று நிச்சயித்தார். அதற்குத்தகுந்தபடி பாஷியம்முதலியக்கிரந்கங்களையுஞ்செய்தார்.

27. மதாசாரியர்களுடைய அபிப்பிராயம் வேறுபட்டதற்குக்காரணமிவ்விதமாயிருக்கவேண்டுமேயன்றி தனக்கு முந்தியவருடைய அபிப்பிராயமெல்லாம் பிசகென்றுயெண்ணித்தானொரு புதுமதசித்தாந்தத்தை க்கற்பித்தாரென்று சொல்வது முற்றிலும் அஸம்பாவிதமாயிருக்கும். ஒருவருக்குப்பிந்திவருகிற ஆசாரியர் முந்தியவருடைய அபிப்பிராயம் பிசகென்று சொல்லித் தன்சித்தாந்தமே ஸரியானதென்பாராகில், இவருக்குப் பிந்தியவரிவர் சொன்னதுஸரியல்லவென்று, தான் ஒருஸித்தாந்தத்தைக்கற்பிக்ககூடும். இப்படியே முடிவில்லாமலொருவருக்கு ப்பின்னொருவர் ஆக்ஷேபிக்கக்கூடும். ஆகையாலதிகாரிகளை யநுஸரித்துச் சாஸ்திரங்கள் பலமார்க்கங்களைச் சொல்லியிருக்கிறதுபோல சிஷியர்களையநுஸரித்து ஆசாரியர்களுமுபதேசித்தார்களென்று சொல்வது நியாயமாயிருக்கும். ஆசாரியபுருஷர்கள் உலகத்தில் ஜநங்களுக்கு நற்கதியடையும் மார்க்கத்தையுபதேசிக்க வந்தார்களேயன்றி ஜநங்களுக்குள் மதவிஷயமான சண்டையை யுண்டுபண்ணவந்தவர்களல்ல.

இனி உனக்கெதைக் கேட்கவிருப்பமிருக்கிறதோ அதைக் கேட்கலாம்.

பனிரண்டாவது பிரகரணம்
முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பதின்மூன்றாவதுபிரகரணம்.

1. ஜயவிரதன்—ஓ! சாந்தமூர்த்தியே! அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் துவைதம் இம்மதசுவரூபங்களைக் கேட்டறிந்துகொண்டவெனக்குச்சைவஸித்தாந்தத்தைக் கேட்டறிய ஆவலாயிருக்கிறது. முந்திய மதஸித்தாந்தங்களைச் சொல்லியவிதமாகவே சைவமதசித்தாந்தத்தையுஞ் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

2. ஸுசர்ம்மா—சைவமென்றால், சிவஸம்பந்தமானதென்றர்த்தம். அதாவது—ஸர்வசிரேஷ்டமான பரமாத்துமா சிவனைத்தவிர வேறில்லை யென்பதே. இந்தச் சித்தாந்தத்தை யநுஷ்டிக்கிறவர்களுக்குள் சிவாத்துவைதிகளென்று ஒரு வகுப்பும் சைவமென்கிறத்துவைதிகளென்றொரு வகுப்புமுண்டு. சிவாத்துவைதிகள், அத்துவைதிகள் பிர்ம்மமென்றெந்தவஸ்துவைச் சொல்லுகிறார்களோ அந்தவஸ்துவைச் சிவனென்று சிவாத்துவைதிகள் சொல்லுகிறார்கள். மற்றவிஷயத்தில் அத்துவைதத்திற்கும் சிவாத்துவைதத்திற்கும் முக்கியமான விஷயங்களில் விசேஷபேதமில்லை. சைவத்துவைதமானது விசிஷ்டாத்துவைதமதத்துடன் அநேகவிஷயங்களிலொற்றிருக்கிறது. சிலவிஷயங்களிற் பேதப்படுகிறது. சைவத்துவைதமெப்படிப்பட்டதெனில்—

3. அந்தப்பரமாத்துமாவாகிற சிவனானவர் எங்கும் வியாபித்தவர். நித்தியர். பந்தமற்றவர். ஸர்வக்ஞர். ஸகலத்திற்கும் கர்த்தா. எப்போதுமாநந்தமுடையவர். ஸர்வசுவதந்திரர். இப்படிப்பட்ட அந்தப்பரமாத்துமாவுக்கு ஐந்துவிதமான தொழிலுண்டு. அவையாவன—சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதாநம், அநுக்கிரகமென்பவைகளே. திரோதாநமாவது—ஜீவாத்துமாக்களை யநாதிகருமவாஸனையினாற் பிரகிருதிஸம்பந்தமான தேகத்தையும் சுகதுக்கம் முதலிய அநுபவங்களையுமடையச்செ

ய்வது. அநுக்கிரகமாவது—மாயாகாரியத்தினாலுண்டாயிருக்கிற தேகத்தையடைந்திருக்கிறஜீவாத்துமாக்களைமாயையிலிருந்துவிடுவித்து சுவசுவரூபத்தையடையச்செய்வது.ஜீவர்களும்மாயையும் பரமாத்துமாவுக்கந்நியமானவர்களே. உலகசிருஷ்டிக்குமாயையை ஏவுகிறதனாலே சிவனானவர் உலகத்திற்கு நிமித்தகாரணரென்று சொல்லப்படுகிறார். அந்தச் சிவத்திற்கு ரூபம் அரூபம் ரூபாரூபம் என மூன்றுவகையான உருவமுண்டு. அந்தச்சிவன் அரூபமாயிருக்கும்போது சிவனென்றும் ரூபாரூபமாயிருக்கும்போது ஸதாசிவனென்றும் ரூபத்தோடிருக்கும்போது பரமேசுவரனென்றுஞ் சொல்லப்படுகிறார். இப்படிப்பட்ட ரூபங்களானவை யோகிகளாற் தியாநிக்கத்தக்க அப்ராகிருத திவ்விய சுவரூபங்கள். அந்தச் சிவன் செய்யும் ஐந்துவிதத்தொழில்களும் சுத்தமாயையைக்கொண்டு செய்யப்படுகின்றன. அசுத்தமாயையைக் கொண்டு அவ்வைந்து காரியங்களையும் அநந்தேசுவரரென்கிற பெயரையடைந்த தேவன்மூலமாய் அவருக்கதிஷ்டாதாவாய் இருந்துசெய்கிறார். அந்த அநந்தேசுவரர் மூலமாய் ஸ்ரீகண்டருத்திரரென்கிற தேவனுக்கு அதிஷ்டாநமாயிருந்து பிரகிருதிகாரியங்களைச் செய்கிறதுமுண்டு. ஸ்ரீகண்டருத்திரர் மூலமாய் பிரும்மாவுக்கதிஷ்டாநமாயிருந்து சிருஷ்டிகாரியங்களையும் விஷ்ணுவுக்கதிஷ்டாநமாயிருந்து ஸ்திதிகாரியங்களையும் காலருத்திரருக்கு அதிஷ்டாநமாயிருந்து ஸம்ஹாரகாரியங்களையுஞ்செய்கிறார். இந்த ஸ்ரீகண்டர் தான் சைவாகமத்திற்காசாரியர். பிரும்மாவிஷ்ணுமுதலிய தேவதைகளுக்கும் இரிஷிமுதலியவர்களுக்கும் நிக்கிரஹாநுக்கிரஹங்களைச்செய்யத்தக்கவரும் சைவதீக்ஷை பெற்றவர்களாலுபாஸிக்கத்தக்க மூர்த்தியுமிவர்தான். பிரும்மா விஷ்ணுஉருத்திரன் மஹேசுவரன் ஸதாசிவன் இவ்வைவருக்கும் முறையே ஸரஸ்வதீ இலக்ஷ்மீ உமை மஹேசுவரீ மனோன்மனீ இவர்கள் பாரியைகளென்றும் சக்திகளென்றுஞ் சொல்லப்படுகிறார்கள். ஸதாசிவரூபமெதுவெனில், ஜீவர்களாலுபாஸிக்கத்தக்கதாய் பீடமும் இலிங்கமுமாகிய சக்தியும் சிவமுமே. சக்தி பீடம், சிவம் இலிங்கம். மஹேசுவரரூபமெதுவெனில், சந்திரசேகரர் உமாமஹேசுவரர் விருஷபாரூடர் அர்த்தநாரீசுவரர் நீலகண்டர் தக்ஷிணாமூர்த்தி திருநேத்திரர் முதலிய பலபெயர்களாற் சொல்லத்தக்கவர்.

4. பசுக்களென்றுசொல்லப்படுகிற ஜீவாத்துமாக்கள் விக்ஞானகலர், பிரளயகலர், ஸகலர் என மூன்றுவகைப்படுவார்கள். அவர்கள் எப்போதுமுள்ளவர்கள். வியாபகர்கள். ஞானமுடையவர்கள். மாயையாகிற பாசத்தையுடையவர்கள். எந்தவஸ்துவிற் சேருகிறார்களோ அந்தவஸ்துசுவரூபமாய்க்காணப்படுகிறவர்கள். தேகந்தோறும் ஜீவர்கள் வெவ்வேறாயிருக்கிறவர்கள். புண்ணியபாபகருமங்களைச்செய்து அவைகளின்பலனையநுபவிக்கப்பட்டவர்கள். அற்பஞானமும் அற்பச் செய்கையுமுடையவர்கள். பதியாகிறசிவனுக்குத்தாஸர்கள். பூர்வகருமவாஸனையினாலதற்குத்தக்கச் சரீரங்களை யடைகிறவர்கள். ஜீவர்கள் சைவமதத்தைப் பின்பற்றி சிவாகமத்திற் சொல்லியவிதிப்படி சரியைக் கிரியை யோகம் இவைகளினால் ஞானத்தையடைகிறவர்கள். சிவன் ஸர்வோத்தமனென்கிற வாஸ்தவஞானத்தினால் முக்தியடைவார்கள். அந்நியமதங்களிற் சொல்லிய உபாஸனாமார்க்கமாய் அந்நியதேவதைகளையுபாஸிக்கிறவர்களுக்கு அவர்களுபாஸிக்குந் தேவதைகள்மூலமாயந்தச் சிவனே தன்சக்தியினாலே பலனைக்கொடுக்கிறார். சரியையாவது—சிவாலயத்திலும் சிவபக்தர்களிடத்திலும் ஊழியஞ்செய்வது. கிரியையாவது—சிவலிங்கத்திலுள்ள பகவானை மனோவாக்காயங்களினாற் பூஜிப்பது. யோகமாவது—இந்திரியநிக்கிரஹஞ்செய்து சிவனைத்தியானித்து, தானுந் தியானமுந்தோற்றாமற் தியானிக்கப்படுஞ் சிவமொன்றே தோற்றும் நிலைமைதான். ஞானமாவது—சிவனாகிய பதிசுவரூபமும் ஜீவர்களாகிய பசுசுவரூபமும் பாசமாகிற மாயா சுவரூபமும் ஸரியாயறிவதுதான். சரியையினாற் சிவலோகத்தில் வாஸஞ்செய்கிறதாகிய ஸாலோக்கியமுக்தியையும், கிரியையினாற் சிவலோகத்திற் சிவஸமீபத்திலிருக்கிறதாகிய ஸாமீப்யமுக்தியையும் யோகத்தினாற் சிவலோகத்திற் சிவனுக்குச் சமானமானரூபமுடையஸாரூப்பியமுக்தியையும், ஞானத்தினாற் சிவனுடைய தேகத்திற்கலந்துபோவதாகிய ஸாயுஜ்யமுக்தியையுமடைகிறார்கள். இந்த ஸாயுஜ்யமுக்திதான் முடிவானமோக்ஷம். ஜீவர்களெல்லாம் சுவரூபத்திற் பேதமற்றவர்கள்.

5. பாசமென்பது—ஆத்துமாக்களைப் பந்திக்கிறதாகியமாயையே. அந்தப்பாசத்தை மலமென்றுஞ் சொல்லுகிறார்கள். அகம்பாவம், கருமம், மாயை, மாயேயம், திரோதாயி யென பாசமைந்

துவகைப்படும். அகம்பாவமென்றால்; தாம்பிரத்திற் களிம்பு போல் ஜீவாத்துமாக்களோடெப்போதுங் கலந்து நிற்கிறது தான். அகம்பாவமொன்றானாலுமாத்துமாக்கள்தோறும்வெவ்வேறாயிருந்துகொண்டு ஆத்துமாக்களுடைய ஞானத்தையுங் கிரியையையும் மறைத்துவிடுகிறது. அந்த அகம்பாவம் நிவிருத்தியாகிற காலம்வரையிலிப்படியிருந்துகொண்டிருக்கிறது. அகம்பாவம் ஜடமானாலுமநேகசக்தியுடையது. கருமமாவது—ஆத்துமாக்கள்,மனோவாக்காயங்களினாற்செய்கிற புண்ணியபாபகருமங்களே. அந்தக்கருமங்கள் ஸஞ்சிதமென்றும் பிராரப்தமென்றுமிரண்டு வகைப்படும். மாயையாவது—சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயையென மூவ்வகையாயிருக்கும். அவைகளிற் சுத்தமாயையாவது—எப்போதுமுள்ளதாயுமெங்கும் வியாபித்ததாயுமுருவமற்றதாயும் ஜடமாயும் வாக்சுவரூபமாய்த்தோற்றுவதற்கும் வஸ்துசுவரூபமாய்த்தோற்றுவதற்குங் காரணமாயும் மோகமில்லாததாயுமிருக்கிறதுதான். அசுத்தமாயையாவது—சுத்தமாயையைப்போலொற்ற சுவரூபமுடையதாய்ப் பிரளயகாலத்திலாத்துமாக்கள்டையுமிடமாய் ஆத்துமாக்களுக்குச் சரீரபோகாதிகளையுண்டுபண்ணுவதற்குக்காரணமாய் மோகத்தையுண்டுபண்ணத்தக்கதாயிருக்கிறதுதான். பிரகிருதிமாயையாவது—அசுத்தமாயையிலிருந்துண்டானதாயுமழியத்தக்கதாயுமிருக்கிறதுதான். மாயேயமாவது—மாயாகாரியங்களாகிற தேகாதிப் பிரபஞ்சங்கள்தான். திரோதாயியாவது—அகம்பாவம் கருமம் மாயை இம்மூன்றையுமதது களின் தொழிலைநடத்திவிக்குஞ் சிவசக்திதான். இவைகள்தான் இம்மதத்தின் முக்கியவிஷயங்கள். இதுமலமென்று முபசாரமாய்ச் சொல்லப்படுகிறது.

6. இந்த சித்தாந்தத்தை ஸ்ரீமத் நீலகண்டாசரியரவர்களாலேற்படுத்தப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அவருமீசுவராம்சமாகவேயிருக்கவேண்டும். ஆனாலவரீசுவராம்சமென்பதற்காதாரமானப் பிரமாணங்களொன்றுங் கிடைக்கவில்லை. அவரிவ்வுலகத்திலவதாரஞ்செய்தகாலமின்னதென்றாவது அவர் சரித்திரமின்னதென்றாவது அறிந்துகொள்ளக் கிரந்தங்களொன்றுங்கிடைக்கவில்லை. அவர் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகளிருந்த காலத்திற்குமுந்தியேயிருந்தாரென்று காணப்படுகிறது. எதனாலெனில்—சங்கராசாரியர் நீலகண்டாசாரியரோடு சைவஸித்தாந்தவிஷயமாய் வாதஞ்செய்ததாகவும் அந்தவாதமிப்படிப்

பட்டதென்றும் மாதவீயமென்கிற சங்கரவிஜயம்-அத்-௧௫-ல், ௬௬-முதல்-௬௯ வரையிலுள்ள சுலோகங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. மேலுமந்தவாதமானது எவ்விதமாய் முடிவாயிற்றென்பதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறபாகத்தைக் குறிப்பிடுகிறேன்.

"इति युक्तिशतोपबृंहितार्थैर्वचनैः श्रुत्यवरोधसौविदल्लैः । यतिराट्स्वमतं प्रसाध्य शैवं परकृद्दर्शनदारुणै रजैषीत् ॥ ७० ॥ विजितो यतिभूभृता स शैवः सह गर्वेण विसृज्य च स्वभाष्यम् । शरणं प्रतिपेदिवान्महर्षिं हरदत्तप्रमुखैः सहात्मशिष्यैः ॥ ७१ ॥ यमिनामृषभेण नीलकण्ठं जितमाकर्ण्य मनीषिधुर्यवर्यम् । सहसोदयनादयः कवीन्द्राः परमाद्वैतमुपश्च कम्पिरे स्म ॥ ७२ ॥ = இவ்விதமாயநேகயுக்திகளோடு "நிறைந்ததாயிருக்கிற அர்த்தத்தோடுகூடியதாயும்சுருதியையநு "ஸரித்ததாயும் சுருதியினற்காக்கப்பட்டதாயுமிருக்கிற வாக்கி "யங்களினலே சங்கராசாரியரானயதியானவர் தன்னுடையமதத் "தைஸாதித்துச் சைவமதத்தைப்பரபக்ஷத்திற் சொல்லப்பட்ட "கடினமானசாஸ்திரவாக்கியங்களாலேயேஜயித்தார். அந்த யதி "சிரேஷ்டராகிய சங்கராசாரியராலே ஜயிக்கப்பட்ட சைவராகிய "நீலகண்டாசாரியர் தன்பாஷியத்தைத்தள்ளிவிட்டும் தன்கருவ "த்தைவிட்டும் தன்னுடைய சிஷியர்களாகிய ஹரதத்தர் முதலி "யவர்களோடு சங்கராசாரியராகிய மஹரிஷியை சரணமடைந் "தார். முனிகளுக்குள்ளே சிரேஷ்டராகிய சங்கராசாரியராலே, "விவேகமுள்ளவர்களுக்குள் மிகச்சிறந்தவரான நீலகண்டாசாரி "யர் சீக்கிரத்தில் ஜயிக்கப்பட்டதாகக் கேழ்விப்பட்ட உதயநா "சாரியர் முதலிய கவிசிரேஷ்டர்கள் பரமாத்துவைதத்தைக் "கிரஹித்தவர்களாய் நடுங்கினர்கள்."

இந்தவாக்கியங்களினல் நீலகண்டாசாரியர் சங்கராசாரியருடைய அவதாரகாலத்திற்கு முந்தியகாலத்திலேயேயிருந்தாரென்று வெளியாகிறது. நீலகண்டாசாரியர்செய்ததாகச் சொல்லும் பாஷியமின்னதைப்பற்றியபாஷியமென்றறியக்கூடவில்லை. உபநிஷத்துக்களுக்காவது பிர்ம்மசூத்திரத்திற்காவது வேறெதற்காவது நீலகண்டாசாரியர் பாஷியஞ்செய்திருக்கிறதாக யாதொருபாஷியமுமிக்காலத்திற் பிரஸித்தமாயிருக்கவில்லை. பிர்ம்மசூத்திரத்திற்கு ஸ்ரீமத் ஸ்ரீகண்டரென்பவர் சைவசித்தாந்தத்தையநுஸரித்து பாஷியஞ்செய்திருக்கிறர்.

7. இந்தச்சைவர்கள் காம்மியகம்முதல் வாதுளம்வரையுள்ள உஅ வகையாயிருக்கிற ஆகமசாஸ்திரங்களை விசேஷமாயநுஷ்டித்துவருகிருர்கள். விஷ்ணுவினுற்செய்யப்பட்ட பாஞ்சராத்திரமென்கிற ஆகமசாஸ்திரத்தை வைஷ்ணவர்களநுஷ்டித்துவருகிறதுபோலவே பரமேசுவரராற் செய்யப்பட்ட காம்மியகம்முதலிய ஆகமசாஸ்திரங்களை யிந்தச்சைவர்களநுஷ்டிக்கிருர்கள்.

8. இந்த சித்தாந்தத்திற்குப் பிரமாணங்களையுஞ்சொல்லுகிறேன்கேள்.

தைத்திரீயோபநிஷத்-நாராயணீயம்-கூ-க-டு-ல், * "ஆயிரங்கண்களையுடையவராயும் புருஷனுயுமிருக்கிற மஹாதேவருடைய (சுவரூபத்தை) அறிகிருேம். தியானஞ்செய்கிருேம். "அந்தத் தியானத்திற் புருஷனுகிய உருத்திரன் யெங்களைப்பிரேரேபிக்கட்டும்."

ஷை-நாராயணீயம்-அநுவாகம்-உச-ல், † "இந்தஸகலமும் "உருத்திரசுவரூபமே. அந்த உருத்திரனையும்பொருட்டு நமஸ்"காரமாகக்கடவது. புருஷனுயுமழிவற்ற ஜியோதிசுவரூபனுயு"மிருக்கிற இந்த உருத்திரனின்பொருட்டு நமஸ்காரம். ஸகல"பூதரூபமும் விசித்திரமானப் பிரபஞ்சசுவரூபமும் பலவிதமாயு"ண்டாயிருக்கிறது முண்டாகப்போகிறதுமெதெதுண்டோ அ"வையெல்லாம் உருத்திரனே. அந்த உருத்திரனையும்பொருட்டு "நமஸ்காரமாகக்கடவது."

ஷை ஷை-சஈ-ல், ‡ "தத்புருஷனென்கிற மஹாதேவரை "யறிகிருேம். தியானிக்கிருேம். அந்தத்தியானத்திலெங்களை "யந்தஉருத்திரர் பிரேரேபிக்கட்டும்."

---

* पुरुषस्य विद्मसहस्राक्षस्य महादेवस्य धीमहि । तन्नोरुद्रः प्रचोदयात् ॥

† सर्वो वै रुद्रस्तस्मै रुद्राय नमोअस्तु । पुरुषो वै रुद्रस्सन्महो नमोनमः । विश्वं भूतं भुवनं चित्रं बहुधा जातं जायमानञ्च यत् । सर्वोह्येष रुद्रस्तस्मै रुद्राय नमोअस्तु ॥

‡ सत् पुरुषाय विद्महे महादेवाय धीमहि । तन्नोरुद्रः प्रचोदयात् ॥

ஷை நாராயணீயம்-சூ-உக-ல், * "ஸகலவித்தைகளுக்குமீ
"ஜமானனும் ஸகலபூதங்களுக்கு மீசுவரனும் வேதத்திற்கதி
"பதியாயுஞ்சிருஷ்டிகருத்தாவுக்கதிபதியான பிரும்மாவாயுமி
"ருக்கிறவும் எப்போதும் மங்களசுவரூபியானவுஞ் சிவனனவ
"ரெங்களுக்கு மங்களத்தைக்கொடுக்கிறவராகவாகட்டும்."

கைவல்லியோபநிஷத்தில், † "ஹிருதயபுண்டரீகத்தை
"இரஜோகுணமற்றதாயுஞ் சுத்தமானதாயும்பாவித்து அதன்மத்
"தியிற் பரிசுத்தராயுந் துக்கமற்றவராயுஞ் சிந்திக்கக்கூடாதவ
"ராயுமிந்திரியங்களாலறியக்கூடாதவராயும் முடிவற்றரூபங்களை
"யுடையவராயும் மங்களசுவரூபியாயும் மிகவுஞ்சாந்தராயும்
"மோக்ஷசுவரூபியாயும் மாயைக்கு உற்பத்திகாரணராயும் ஆதி
"நடு முடிவில்லாதவராயு மொருவராயுமெங்கும் வியாபித்தவரா
"யும் ஞானாநந்தசுவரூபராயும் ரூபமற்றவராயும் ஆச்சரியகரரா
"யும் பிரபுவாயும் முக்கண்ணுடையவராயும் நீலகண்டராயுஞ்
"சாந்தராயுமுமையுடன் கூடினவராயுமிருக்கிற பரமேசுவரரைத்
"தியானஞ்செய்து முனியானவன், ஸகலத்திற்கும் ஸாக்ஷியாயும்
"அக்ஞானத்திற்குப் புறம்பானதாயும் பூதங்களுக்கெல்லாமாதி
"காரணமாயுமிருக்கிற பரமாத்துமாவையடைகிறான்."

சுவேதாசுவதரோபநிஷத்-அத் ௩-ல்,‡ "இவ்வுலகத்தை இர
"ண்டாவதற்ற உருத்திரரான ஒருவரே தன்னுடையசக்திகள்
"மூலமாய் நடத்துகிறார். கைலாஸகிரியிலிருந்துகொண்டிருக்
"கிற ஓ! உருத்திரா! மங்களகரமாயும் பிரியகரமாயுமிருக்கிற
"உம்முடையரூபமானது பாபத்தைப்போக்கடிக்கிறதாயும் சுகத்

---

* ईशानस्सर्वविद्याना मीश्वरस्सर्वभूतानां ब्रह्माधिपतिर्ब्रह्मणोऽधिपति ब्रह्माशिवोमे अस्तु सदाशिवोम् ॥

† हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्यमध्ये विशदं विशोकम् । अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् । तदादिमध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतं । उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तं । ध्यात्वामुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसःपरस्तात् ॥

‡ एको हि रुद्रो न द्वितीयाय तस्थुर्य इमां ल्लोकानीशत ईशनीभिः॥ २॥ याते रुद्रशिवातनूरघोराऽपापकाशिनी । तया न स्तनुवाशं तमयागि-

„தைக்கொடுக்கிறதாயுமிருக்கிறது. அந்த ரூபத்தினாலெங்களைக் "கிருபையுடன்பாரும்."

அதர்வசிரோபநிஷத்தில், * "எவன் உருத்திரனானபக "வானோ அவன்தான்பிரும்மா. அவன்தான் விஷ்ணு அவன்தா "ன் மஹேசுவரன்.—எதனால் உருத்திரனொருவனேயென்றுசொ "ல்லப்படுகிறது? இந்தஸகல உலகத்திற்குமீசனாயிருந்துகொ "ண்டு ஸகலத்தையுமேவுகிறதனாலேயும் ஸகலத்தையுஞ் சிருஷ் "டிக்கிறதனாலேயும் (உருத்திரனைத்தவிர) இரண்டாவதாக ஒன் "றுமில்லாததனாலேயும் உருத்திரனொருவனேயென்று சொல்ல "ப்படுகிறது.—எதனாலே மஹேசுவரனென்று சொல்லப்படுகி "றார்? ஸகலஉலகங்களையுஞ் செவ்வையாய்ப்பக்ஷித்தவர் (அழி "த்தவர்) யாரோ அவரேஎப்போதும் ஸகலஉலகத்தையுஞ்சிரு "ஷ்டிக்கிறார். பிரேரேபிக்கிறார். இரக்ஷிக்கிறார். பிறகுநாசஞ் "செய்கிறார். அதனாலவர் மஹேசுவரரென்றுசொல்லப்படுகிறார். "—எதனால் மஹாதேவனென்றுசொல்லப்படுகிறார்? தோற்றங் "களாகிற ஸகலமான விகற்பங்களைவிலக்கி ஆத்துமஞானமாகிற "மஹாயோகைசுவரியத்திலிருக்கிறவனுக்கு விளங்குகிறவரானத "னால் மஹாதேவனென்று சொல்லப்படுகிறார்."

பிருஹஜ்ஜாபாலோபநிஷத்-அ.க்-எ-சு-உ-ல், † 'சிவஸாயுஜ் "ஜியத்தையடைந்தவன் மறுபடிப் பிறக்கிறதில்லை."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், ‡ 'உருத்திரரானவர் ஸக "லதேவதாசுவரூபமாயிருக்கிறார். ஸகலதேவதைகளும் சிவசு

---

रिशन्ताभिचाकशीहि ॥ ९ ॥

* योहवैरुद्रस्स भगवान्यश्च ब्रह्मा—यश्च विष्णुः यश्च महेश्वरः। —अथ कस्मादुच्यते एकोरुद्रः। एकएव रुद्रो न द्वितीयाय तस्थुः। य इमां ल्लोकानीशतईशिनीयुः। जननीयुः—अथ कस्मादुच्यते महेश्वरः। यस्सर्वान् लोकान् संभक्षस्संभक्षयति। अजस्रं सृजति विसृजति वासयति तस्मादुच्यते महेश्वरः। अथ कस्मादुच्यते महादेवो यस्सर्वान् भावान् परित्यज्यात्मज्ञानयोगैश्वर्ये महति महीयते तस्मादुच्यते महादेवः॥

† शिवसायुज्य मवाप्नोति न स पुनरावर्तते ॥

‡ सर्वदेवात्मकोरुद्र स्सर्वेदेवाश्शिवात्मकाः। रुद्रस्य दक्षिणे पार्श्वे

"வரூபமாயிருக்கிறார்கள். உருத்திரருடைய வலதுபக்கத்தில் "சூரியன் பிரும்மா (கார்ஹபத்திய ஆஹவநீயதக்ஷிண என்ற) "மூன்றக்நிகளும், இடதுபக்கத்திலுமாதேவி, விஷ்ணு, சந்திரன் "இம்மூவர்களுமிருக்கிறார்கள். உமையாரோ அவள்தான் விஷ் "ணு. யார்விஷ்ணுவோ அவர்தான் சந்திரன்.—உருத்திரனிட "த்திலிருந்து பீஜம்வெளிப்படுகிறது. அந்தபீஜத்தைஸ்தாபிக் "குமிடந்தான் ஜநார்த்தநன். உருத்திரன்யாரோ அவர்தான்பிரு "ம்மா. யார்பிரும்மாவோ அவர்தான் அக்நி. எங்கும்வியாபித் "திருக்கிற பிரகிருதியும், அக்நி, வாயு இந்தசுவரூபமான ஜகத் "தும் உருத்திரரூபந்தான். புல்லிங்கம் (ஆண்பால்) எல்லாமீசு "வரன். ஸ்திரீலிங்கம் (பெண்பால்) எல்லாம் பகவதியாகிய "உமை. இந்த ஸ்தாவரஜங்கமங்களாகிற ஸகலமும் உமை, உரு "த்திரன் இவர்களுடைய சுவரூபங்களாகவேயிருக்கின்றன. விய "க்தம் (காணப்படுகிற) ஸகலமுமுமையினுடைய சுவரூபம். அவ் "வியக்தம் (காணப்படாத) ஸகலமும் மஹேசுவரன். உமை சங் "ரன் இவர்களுடைய சேர்க்கையென்பதெதுவோ அதுதான் "விஷ்ணுவென்று சொல்லப்படுகிறது."

பஞ்சப்பிரும்மோபநிஷத்தில், * "சிருஷ்டிஸ்திதிலயங்களு "க்குக் காரணராயும் ஸகலசக்திகளையுடையவராயும் (ஜாக்கிரத் "சுவப்ந சுஷுப்தியாகிற) மூன்றவஸ்தைகளுக்கும் மேற்பட்ட "தாகிய துரீயராயும் ஸத்தியமான சித்சுகசுவரூபராயும் பிரும்மா "விஷ்ணு முதலியவர்களால் ஸேவிக்கத்தக்கவராயும் ஸகலத்தை "யுஞ் சிருஷ்டித்தவராயுஞ் சிரேஷ்டராயும் ஸகலத்தையுமேவுகிற

---

रविर्ब्रह्मा त्रयोऽग्नयः । वामपार्श्वे उमादेवी विष्णुस्सोमोऽपि ते त्रयः । या उमासास्वयं विष्णुर्यो विष्णुस्सहि चन्द्रमाः ।— रुद्रात् प्रवर्तते बीजं बीजयोनिर्जनार्दनः । यो रुद्रस्स स्स्वयं ब्रह्मा योब्रह्मा स हुताशनः । ब्रह्मविष्णुमयोरुद्र अग्नीषोमात्मकं जगत् । पुलिंगंसर्वमीशानः स्त्रीलिङ्गं भगवत्युमा । उमा रुद्रात्मिका सर्वाः प्रजास्स्थावरजंगमाः । व्यक्तं सर्वमुमारूप मव्यक्तंतु महेश्वरः । उमाशङ्करयोर्योगस्स योगोविष्णुरुच्यते ॥

* सृष्टिस्थिति लयादीनां कारणं सर्वशक्तिधृक् । अवस्थात्रितयातीतं तुरीयं सत्यचित्सुखं । ब्रह्मविष्ण्वादिभिस्सेव्यं सर्वेषां जनकं परं । ई-

"வராயும் புத்திக்கு ஸாக்ஷியாயு மீசாநராயுமிருக்கிற பரமேசுவர
"னை சிரேஷ்டராகவறியவேண்டியது."

ஜாபால்லியுபநிஷத்தில், * "அகங்காரத்தினாற் சூழப்பட்ட
"வர் பசுபதியாயிருக்கிறார். ஸம்ஸாரத்தையுடையவன் ஜீவன்.
"அவனே பசு. ஸர்வக்ஞனுயுமைந்துதொழிலோடு கூடினவனு
"யுமிருக்கிறவன் பசுபதி.—ஜீவர்கள் பசுக்களென்றுசொல்லப்
"படுகிறார்கள். அவர்களுக்குப்பதி (எஜமானன்) யாயிருக்கிற
"தனாலே பசுபதியென்று சொல்லப்படுகிறார்."

வராஹோபநிஷத்-ல், † "சிவனேகுரு. சிவனேதேவன்.
"சிவனேபிரபு. சிவனே "நான்." சிவனே ஸகலமும். சிவனை
"க்காட்டிலும் வேறொன்றுமில்லை."

மஹாபாரதம்-அநுசாஸநிகபருவம்-அத்-கடு-ல், ‡ "ஸ்ரீ
"வாசுதேவராகிய கிருஷ்ணபகவான்சொல்வது—ஓ! தருமபுத்
"திரா! சங்கரராகியதேவனும் உமையாகியதேவியும், எனக்கு
"இவ்விதமாய் வரங்களைக்கொடுத்தந்தக்ஷணத்திலேயே கணங்
"களோடுகூட மறைந்துவிட்டார். ஓ! இராஜசிரேஷ்டனாகிய யுதி
"ஷ்டிரா! மிகவுமாச்சரியமான விந்தச்சங்கதிமுழுவதையும், மிக
"வும் பிர்ம்மதேஜஸ்உள்ளப் பிராம்மணராகிய உபமந்நியுமஹ
"ரிஷிக்கென்னால் முன்னமையே சொல்லப்பட்டது. அந்த உப
"மந்நியுவானவர், தேவர்களுக்கெல்லாந் தேவனாகிய சங்கரர்
"பொருட்டு நமஸ்காரஞ்செய்து, ஓ! நன்னடக்கையுள்ளவனே!

---

शानं परमं विद्यात् प्रेरकं बुद्धिसाक्षिणम् ॥

* पशुपतिरहङ्काराविष्टः । संसारी जीवः । स एव पशुः । सर्वज्ञः पञ्चकृत्यसंपन्नस्सर्वेश्वर ईशः पशुपतिः । जीवाः पशवउक्ताः तत्पतित्वात् पशुपतिः ॥

† शिवो गुरुश्शिवोदेव श्शिवोवेद श्शिवःप्रभुः । शिवोऽस्म्यहं शिवस्सर्वं शिवादन्यन्न किंचन ॥

‡ वासुदेवउवाच । एवं दत्वा वरं देवो ममदेवीच भारत । अन्तर्हितः क्षणे तस्मिन् स गणोभीम पूर्वज ॥ ९ ॥ एतदत्यद्भुतं पूर्वं ब्राह्मणायाति तेजसे । उपमन्यवे मया कृत्स्नं व्याख्यातं पार्थिवोत्तम । नमस्कृत्वातु सप्राह देवदेवाय सुव्रत ॥ १० ॥ उपमन्युरुवाच । नास्तिशर्व समो-

"உபமந்நியுசொன்னதாவது—"சங்கரருக்குச் சமமாய்த்தேவனு "மில்லை. சங்கரருக்குச் சமமாயடையத்தகுந்த கதியுமில்லை. "வரங்கொடுக்கிறவிஷயத்திற் சங்கரருக்குச்சமானமானவருமில் "லை. உயுத்தத்திலுஞ் சங்கரருக்குச் சமமானவருமில்லை" என்று "சொன்னார்."

பத்துமபுராணம்-பாதாளகண்டம்-அத்-க00-சு-ருச-ல், * (ஸ்ரீராமர்சொல்வது)—"என்னுலேஸ்தாபிக்கப்பட்ட இராமே "சுவரமென்கிற சிவலிங்கத்தைப்பார்த்து ஆச்சரியம்" (அடைந்தார்கள்)—இந்த அர்த்தத்தைக் கூர்மபுராணம்-பூர்வபாகம்-அத்-உக-லும் சொல்லியிருக்கிறது.

பத்ம புராணம்-உத்தரகண்டம்-அத்-உச0-ல், † "மூன்றுல "கத்திற்கும் நாதராயும் மஹாவல்லமையுள்ளவராயும், பிநாக "மென்கிற வில்லைத்தரித்தவராயும் ஸாக்ஷாத்யமனை நாசஞ்செய் "தவராயும் பிரளயகாலாக்நிசுவரூபராயுமிருக்கிற உமக்குநமஸ் "காரம். சிவாகமமாகிற ஸமுத்திரத்தில் வாசஞ்செய்கிறவரா "யும் ஞாநமாகிற இரத்திநத்தைக்கொடுக்கிறவராயும் ஸகலப்பி "ராணிகளுடைய ஹிருதயத்திலிருக்கிறவராயும் ஜகத்திற்கெல் "லாம் ஸாக்ஷியாயும் அக்ஞாநமாகிற விருளினாற்சூழப்பட்டவனு "க்குக் காணப்படாத மூர்த்தியாயும் மாயையைக்கடந்தவராயும் "ஆதாரமற்றவராயுந் திருப்தியுள்ளவராயுங் கபாலத்தைக் கைய் "யிலேந்திநவராயுமிருக்கிற, ஓ! எங்கும் வியாபித்தவரே! உம "க்கு நமஸ்காரம்."

சிவபுராணம்-கைலாஸஸம்ஹிதை-அத்-ரு-ல், ‡ "இரஜோ "குணத்தினாற் சிருஷ்டிகாரியத்தைச்செய்கிற நான்முகனைவர்

---

देवो नास्तिशर्वे समागतिः। नास्तिशर्वे समोदाने नास्तिशर्वे समोरणे ॥११॥

* मत्स्थापितं शिवं लिङ्गं दृष्ट्वा रामेश्वरं त्वहो ॥

† नमस्त्रैलोक्यनाथाय महाबल पिनाकिने । साक्षात् कालविनाशाय कालनिर्दाहिनेनमः ॥ ७८ ॥ शिवागमार्णवान्तस्थ ज्ञानरत्नप्रदायिने । हृदिस्थिताय सर्वेषां साक्षिणे जगतां विभो ॥ ७९ ॥ अज्ञानतिमिरान्धस्य तमसोऽतीतमूर्तये । अनाश्रिताय तुष्टाय कपालाय नमोस्तुते ॥ ८० ॥

‡ अकारस्तु महद्बीजं रजस्स्रष्टा चतुर्मुखः ॥ १९ ॥ उकारः प्रकृ-

"மஹாபீஜமாகிற அகாரசுவரூபியாயிருக்கிறார். பிரகிருதியாயும் "உற்பத்திக்குக்காரணராயும் உலகரக்ஷகராயுமிருக்கிற ஸத்துவ "குணமுள்ள ஹரியானவர் உகாரசுவரூபியாயிருக்கிறார், புருஷ "ராயுங் காரணராயும் ஸம்ஹாரஞ்செய்கிறவராயுமிருக்கிற தமோ "குணமுள்ள சங்கரரானவர், மகாரசுவரூபியாயிருக்கிறார். காண "ப்படாமலிருக்கிற மஹேசுவரராகிய தேவன் பிந்துசுவரூபி "யென்று சொல்லப்படுகிறார். பிரபுவாயும் ஸகலருக்குமநுக்கிர "கஞ்செய்கிறவராயுமிருக்கிற ஸதாசிவன், நாதசுவரூபியென்று "சொல்லப்படுகிறார். ஸர்வக்ஞராயும் ஸகலத்திற்குங்கருத்தா "வாயும் அழுக்கற்றவராயும் இரண்டாவதற்றவராயும் சிரேஷ்டத் "திற்கெல்லாஞ் சிரேஷ்டராயுமிருக்கிற சிவனானவர், நாதத்திற் "கு மேற்பட்ட மூர்த்தி (தலையுச்சி) யிற் சிந்திக்கத்தக்கவராயி "ருக்கிறார்."

பாகவதம்-ஸ்கந்தம்-அ-அத்-எ-ல், * "ஓ! தேவதேவா! "ஓ! மஹாதேவா! ஓ! பூதங்களுக்காத்துமாவாயிருக்கிறவரே! "ஓ! பூதங்களையுண்டாக்கினவரே! சரணமடைந்தவர்களான "வெங்களை மூன்றுலகத்தையுமெரிக்கிறவிந்த விஷத்திலிருந்து "இரக்ஷியும். ஸகலஜகத்துக்களுடையப் பந்தமோக்ஷங்களுக்குநீ "ரொருவரே நாயகராயிருக்கிறீர். சரணமடைந்தவர்களுடைய "துக்கத்தை நாசஞ்செய்கிறவராயுங் குருவாயுமிருக்கிறவிப்படி "ப்பட்டவும்மைப் பூஜிக்கிறவர்கள் மோக்ஷமடைகிறார்கள்."

அநுபாகவதமென்கிற கல்கிபுராணம்-அம்சம்-க-அத்-ங-ல், † "பில்வோதகேசுவரரென்கிற தேவனாகிய சங்கரரையடைந்து

---

तिर्योनि स्सत्वं पालयिताहरिः । मकारः पुरुषो बीजी तमस्संहारको हरः॥ १६ ॥ बिन्दुर्महेश्वरोदेवः स्थिरोभाव उदाहृतः । नादस्सदाशिवः प्रोक्त-स्सर्वानुग्रहकः प्रभुः ॥ १७ ॥ नादमूर्द्धनि संचिन्त्यः परात्परतरश्शिवः । सर्वज्ञ स्सर्वकर्ताच सर्वेशो निर्मलोऽद्वयः ॥ १८ ॥

* देवदेवमहादेव भूतात्मन् भूतभावन । त्राहिनश्शरणापन्नां स्त्रैलोक्य दहनाद्विषात् ॥ २१ ॥ त्वमेकस्सर्वजगता मीश्वरो बन्धमोक्षयोः । तं त्वामर्चन्ति कुशलाः प्रपन्नार्ति हरं गुरुम् ॥ २२ ॥

† बिल्वोदकेश्वरं देवं गत्वा तुष्टाव शङ्करम् ॥ १२ ॥ पूजयित्वा

"ஸ்தோத்திரஞ்செய்தார். மஹேசுவரராயுஞ் சாந்தராயுமிருக்"கிற சிவனைவிதிப்படிப் பூஜித்து நமஸ்காரஞ்செய்து, சீக்கிரம் "ஸந்தோஷமடைகிறவரான அவரைத்தியானித்து (விஷ்ணுவான "கல்கியானவர் தன்னுடைய) மனதிலுள்ளதைச்சொன்னார்."

"கல்கிசொன்னதாவது—கௌரீநாதராயும் ஜகத்திற்குநாத"ராயும் சரணமடையத்தக்கவராயும் பூதங்களுக்கிருப்பிடமான"வராயும் வாசுகியாகிற ஸர்பராஜனைக் கழுத்தில் தரித்திருக்கிற"வராயும் ஐந்துமுகங்களையுடையவராயும் ஆதிதேவராயும் பழமை"யானவராயும் அதிகமான ஆநந்தப்பெருக்கில் நிலையுடையவரா"யுமிருக்கிற முக்கண்ணனை நமஸ்கரிக்கிறேன். பூதங்களுக்கெ"ல்லாமாதியானவராயும் காலகருமசுவபாவங்களினாலே பஞ்ச"பூதங்களைக்கொண்டு சிருஷ்டிக்க விச்சையுடையவராயும் "பூததன்மாத்திர சுவரூபியாயும் (இருந்துகொண்டு) இப்பிர"பஞ்சத்தைக்கிரஹித்தும் ஜீவத்தன்மையையடைந்தும் பிர்ம்மா"நந்தத்தில் இரமித்துக்கொண்டுமிருக்கிற ஈசுவரன்யாரோ அவரு"க்கு வந்தநஞ்செய்கிறேன். ஸ்திதிகாலத்தில் ஸகலஉலகத்தை"யும் ஜயிக்கிறசுவபாவமுள்ள விஷ்ணுவாயுந் தேவதாசுவரூபமாயு"மிருந்துகொண்டுலகங்களையும் ஸத்துக்களையுந் தருமநிலையையும் "இரக்ஷிக்கிறீர். அம்சரூபிகளான பிரும்மாதிகளிடத்திலபிமாந"முடையவராயும் சப்தமாகிறவேதம் முதலிய அங்கங்களினாலே "குணசுவரூபியாயுமிருக்கிறவர் யாரோ அப்படிப்பட்ட பரமேசுவ"ரனை நமஸ்காரஞ்செய்கிறேன். யாருடைய ஆக்ஞையினாலே "உலகத்திற், காற்றுவீசுகிறதோ அக்நி பிரகாசிக்கிறதோ சூரி

---

यथान्यायं शिवं शान्तं महेश्वरम् । प्रणिपत्याशु तोषंतं ध्यात्वा प्राह हृदिस्थितम् ॥ १३ ॥ कल्किरुवाच । गौरीनाथं विश्वनाथं शरण्यं भूतावासं वासुकीकण्ठभूषम् । त्र्यक्षं पञ्चास्यादिदेवं पुराणं वन्दे सान्द्रानन्दसन्दोहदक्षं ॥ १४ ॥ यो भूतादिः पञ्चभूतैस्सिसृक्षुस्तन्मात्रात्मा कालकर्मस्वभावैः । प्रहृत्येदं प्राप्यजीवत्व मीशो ब्रह्मानन्दो रमते तन्नमामि ॥ १७ ॥ स्थितौ विष्णुस्सर्वजिष्णु स्सुरात्मा लोकान् साधून् धर्मसेतून् बिभर्षि । ब्रह्माद्यंशेयोऽभिमानी गुणात्मा शब्दाद्यङ्गैस्तं परेशं नमामि ॥ १८ ॥ यस्याज्ञया वायवोवान्ति लोके ज्वलन्त्यग्नि स्सवितायाति तप्यन् । शीतांशुः खेतारकै-

"யன் வெப்பத்தையுண்டாக்கிக்கொண்டு போகிருனே சந்திர
"ஞனவன் நக்ஷததிரங்களோடும் கிரஹங்களோடுமாகாசத்திற்
"விளங்கிக்கொண்டிருக்கிருனே அப்படிப்பட்ட பரமேசுவரனைச்
"சரணமடைகிறேன். யாருடைய மூச்சுக்காற்றினுற், பூமியான
"வள் ஸகலத்தையுந்தாங்குகிறவளாயிருக்கிருளோஎந்ததேவன்
"ஜலத்தை வருஷிக்கிருனே காலமானது (மாதம் வருஷம்முத
"லிய) அளவைச்செய்கிறதாயிருக்கிறதோ மேருபருவதமானது
"(பூமிக்கு) நடுவிலிருந்துகொண்டு பூமிகளைத்தாங்கிக்கொண்டி
"ருக்கிறதோ அப்படிப்பட்டப் பிரபஞ்சசுவரூபியான ஈசுவரனை
"நமஸ்காரஞ்செய்கிறேன்."

பிருஹந்நாரதியபுராணம்-அத்-ரு-ல், * "(ஓ! சம்போ!)
"நாசமற்றவராயுங்குணமற்றவராயும் பரிசுத்தராயுமெங்கும்வியா
"பித்தவராயும் நித்தியராயுங் காலாக்நி உருத்திரரென்கிற பெய
"ரையுடையவராயும் பிரும்மாதிகளைவிட சிரேஷ்டராயும் யாரிரு
"க்கிருரோசிரேஷ்டத்திற்கெல்லாஞ் சிரேஷ்டமானவரும்யோகி
"களாற் தியானிக்கத்தக்கவருமாகிய அப்படிப்பட்ட நீர் தான்பர
"மாத்துமா. சிரேஷ்டமான ஆநந்தமுடையவர். ஸகலவித
"உபாதியுமற்றவர். ஞாநமொன்றினுலேயே யறியத்தகுந்தவர்.
"ஸச்சிதாநந்தசுவரூபி. உத்தமமானவர்."

பிரும்மவைவர்த்தபுராணம்-பிரும்மகண்டம்-அத்-சு-ல், $
"சிவலிங்கார்ச்சனையெவ்விடத்திற்செய்யப்படுகிறதோ அவ்விடம்
"புண்ணியஸ்தலமல்லாவிட்டாலுமது புண்ணியஸ்தலமே. அவ்
"விடத்தில் மரணமடைகிறவன் பாபியாயிருந்தாலும் (பாபம்நசி
"த்து) சிவலோகத்தையடைகிருன். மஹாதேவா! மஹாதேவா!
"மஹாதேவா! என்றுசொல்லுகிறவனுடைய பின்துடர்ந்து,

स्सग्रहैश्च प्रवर्तते तं परेशं प्रपद्ये ॥ १९ ॥ यस्याश्वासात् सर्वधात्रीधरित्री देवोवर्षत्यंबुकालः प्रमाता । मेरुर्मध्ये भुवनानांच भर्तातमीशानं विश्वरूपं नमामि ॥ २० ॥

* अक्षरोनिर्गुणश्शुद्धः परिपूर्णस्सनातनः । यः परःकालरुद्राख्यो योगिध्ये यः परात्परः ॥२०॥ परमात्मा परानन्द स्सर्वोपाधि विवर्जितः । ज्ञानैकवेद्यः परमस्सच्चिदानन्द विग्रहः ॥ २१ ॥

$ शिवलिंगार्चनं स्थानमतीर्थंतीर्थमेव तत् । भवेत्तत्र मृतः पापी शिवलोकं स गच्छति ॥ ४७ ॥ महादेव महादेव महादेवेति वादिनः ।

"நாமத்தைக்கேட்கிறதிலாசையுடையவனாய் மஹாபயத்துடன்
"செல்லுகிறேன். எந்தமனிதனானவன் சிவனென்கிற சப்தத்
"தைச் சொல்லிக்கொண்டே தேகத்தைவிடுகிறானோ அவன்கோ
"டிஜந்மங்களிற் சம்பாதித்த பாபத்திலிருந்து விடுபட்டு முக்தி
"யடைகிறான். சிவம் என்பது கல்யாணவசநம். கல்யாண
"மென்பது முக்திவாசகம். எதனாலந்தக்கல்யாணமுண்டா
"கிறதோ அதனாலவர் சிவனென்றுசொல்லப்படுகிறார்."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-கள-ல், * (தங்களெதி
ரிற்காணப்படுகிற பெரிதாகிய இலிங்கசுவரூபமெதென்பதை
யறியும்பொருட்டு) "விஷ்ணுவானவர் கறுமையான வராஹரூபத்
"தைத் தரித்துக்கொண்டு கீழே(அந்தலிங்கத்தினடிபாகத்திலே)
"சென்றார். இப்படி வேகமாயாயிரம்வருஷகாலமடிபாகத்திற்
"சென்று மந்தவராஹமூர்த்தியானவிஷ்ணுவானவர் அந்த இலிங்
"கத்தினுடையமூலத்தை அற்பமேனுங்காணவில்லை. ஓ! சத்துரு
"க்களைத்தபிப்பிக்கிறவனே! (பிருமாவாகிய) நானுமவ்வளவு
"காலஞ்சீக்கிரமாக ஸகலப்பிரயத்நத்தினாலேயுமந்தஇலிங்கத்
"தினுடைய முடியையறியவெண்ணங்கொண்டு (ஹம்ஸரூபந்தரி
"த்து) மேல்நோக்கிச்சென்றேன். அந்தஇலிங்கத்தினுடையமுடி
"யைக்காணமாட்டாதவனாய் அகங்காரத்தினால் மிகவுங்களைப்
"படைந்து கீழேவந்துவிட்டேன். அப்படியே பகவானானவிஷ்
"ணுவும் பயமடைந்த கண்களையுடையவராய்க் களைப்படைந்து
"வந்தார். ஸகலதேவசுவரூபியான பெருத்ததேகமுடைய அந்த

---

पश्चाद्यामि महात्रस्तोनाम श्रवणलोभतः । ४८ ॥ शिवेति शब्दमुच्चार्य प्राणांस्त्यजति यो नरः । कोटिजन्मार्जितात् पापान्मुक्तो मुक्तिं प्रयाति सः ॥ ४९ ॥ शिवं कल्याणवचनं कल्याणं मुक्तिवाचकम् । यतस्तत् प्रभवेत्तेन स शिवः परिकीर्तितः ॥ ५० ॥

* वाराहमसितं रूपमास्थाय गतवानधः । एवं वर्षसहस्रन्तु त्वरन् विष्णुरधोगतः ॥ ४३ ॥ नापश्यदल्पमप्यस्य मूलं लिङ्गस्य सूकरः । तावत्कालं गतोह्यूर्द्ध्वं महमप्यरिसूदन ॥ ४४ ॥ सत्वरं सर्वयत्नेन तस्यान्तं ज्ञातुमिच्छया । श्रान्तोह्य दृष्ट्वा तस्यान्त महङ्कारादधोगतः ॥ ४५ ॥ तथैव भगवान् विष्णु श्श्रान्तस्संत्रस्त लोचनः । सर्वदेव भवस्तूर्ण मुत्थितस्स म-

"விஷ்ணுவானவர் சீக்கிரமெழுந்து என்னுடன்கூடச்சேர்ந்து "மஹாத்துமாவான அந்த விஷ்ணுவானவர் வந்தநஞ்செய்து சிவ "னுடையமாயையினுல் மோகமடைந்தவராய்ப் பயமடைந்தமன "தையுடையவராயிருந்தார். அந்த இலிங்கசுவரூபியான பரமே "சுவரனை முன்னுலேயும் பின்னுலேயும் பக்கங்களிலேயும் என் "னுடன்கூடினவராய் நமஸ்காரஞ்செய்து, இதென்னவென்று "யோசனைசெய்தார். அப்போதவ்விடத்திற் சப்தத்தை இலக்ஷண "மாயுடைய ஒருநாதம் (ஒலி) உண்டாயிற்று. (அதாவது) "ஓ! "தேவசிரேஷ்டர்களே! மூன்றுமாத்திரையளவானகாலத்தோடு "கூடியப் பிரஸித்தமான ஓம் ஓம் என்கிற சப்தந்தானிது." (ஓங் காரசுவரூபியான பரமாத்துமா இதென்பது கருத்து).

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-கஅ-ல், * "விஷ்ணுசொ "ல்வது—ஓரக்ஷரமாகிய ஓங்காரசுவரூபியாயும் உருத்திரனும் "அகாரசுவரூபியாயும் ஸகலத்திற்குமாத்துமசுவரூபியாயும் உகா "ரசுவரூபியாயுமாதிதேவனும் ஞானசுவரூபியாயுமிருக்கிற உம் "பொருட்டு நமஸ்காரம். மூன்றுவதாகிய மகாரசுவரூபியாயுஞ் "சிவனும் பரமாத்துமாவாயுமிருக்கிற உம்பொருட்டு நமஸ்கா "ரம். மோக்ஷமாயும் மோக்ஷசுவரூபியாயும் மோக்ஷத்தைக் "கொடுக்கிறவராயுமிருக்கிற உம்பொருட்டு நமஸ்காரம் நமஸ்கா "ரம். பரமாத்துமாவாயும் வேதசுவரூபியாயும் ஸகலருக்கும் "எஜமானனும் விஷ்ணுவாயுமிருக்கிற உம்பொருட்டு நமஸ்கா "ரம். சர்வனென்றுசொல்லப்படுகிறவராயும் நாராயணனுயுமிரு

---

ह्वपुः ॥ ४६ ॥ समागतो मयासार्द्धं प्रणिपत्य महामनाः । मायया मोहितश्शंभो स्तस्थौ संविग्नमानसः ॥ ४७ ॥ पृष्ठतः पार्श्वतश्चैव चाग्रतः परमेश्वरम् । प्रणिपत्य मयासार्द्धं सस्मारकिमिदं त्विति ॥४८॥ तथासमभवत्तत्रनादो वै शब्दलक्षणः । ओमोमिति सुरश्श्रेष्ठा स्सुव्यक्तः प्लुतलक्षणः ॥४९॥

* विष्णुरुवाच । एकाक्षराय रुद्राय अकारायात्म रूपिणे । उकारायादि देवाय विद्यादेहायवै नमः ॥ १ ॥ तृतीयाय मकाराय शिवाय परमात्मने । मोक्षाय मोक्षरूपाय मोक्षकर्त्रे नमोनमः ॥ २ ॥ आत्मने ऋषये तुभ्यं स्वामिने विष्णवे नमः ॥ २३ ॥ शर्वाय च नमस्तुभ्यं नमोनाराय-

"க்கிற உம்பொருட்டு நமஸ்காரம். ஹிரண்ணியகர்பனுயுமாதி "தேவனுயுமிருக்கிற உம்பொருட்டுநமஸ்காரம்."

இலிங்கபுரா-பூர்--அத்-எக-ல், * "பகவானுன விஷ்ணுசொல் "வது–மஹேசுவரனுயும் பிரகாசசுவரூபனுயுமிருக்கிற பரமாத்து "மாவின்பொருட்டு நமஸ்காரம். நாராயணனுயும் பிரளயத்திற் "சகலத்தையும் ஸம்ஹாரஞ்செய்கிற சர்வராயும் பிரும்மாவாயும் "பிர்ம்மசுவரூபியாயும் சாசுவதராயும் முடிவற்றவராயுங் காணப் "படாதவராயுமிருக்கிற உம்பொருட்டு நமஸ்காரம். இவ்வித "மாய் மஹாதேவரை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பக "வானுன விஷ்ணுவானவர் ஜலத்திலிருந்துகொண்டு கோடி "தடவை உருத்திரஜபஞ்செய்தார்."

ஷெ-ஷெ-அத்-கூஉ-சு-கசகூ-ல், ‡ "விஷ்ணுவினுலெந்த "லிங்கமானது பிரதிஷ்டை செய்யப்பட்டதோ சிரேஷ்டமான "அந்த' லிங்கந்தான் இராமேசுவரமென்று பெயருடையது."

வராஹபுராணம்-அத்-உகு-ல், $ "ஸகலவித்தைகளுக்கு "மெஜமானனுயுமாதியாயும் சாசுவதனுயும் பசுக்களுடைய மத் "தியிற்பதியாயுமிருக்கிறேன். அதனுலுலகத்தி ற் பசுபதியென் "கிற பெயரினுற் சொல்லப்படுகிறேன். யாரென்னை பஜிக்கிறுர் "களோ அவர்களுடைய தீக்ஷையானது பாசுபத தீக்ஷையாகி "றது."

---

णाय च । नमोहिरण्यगर्भाय आदिदेवाय ते नमः ॥ २९ ॥

* भगवानुवाच । महेश्वराय देवाय नमस्ते परमात्मने ॥ ९६ ॥ नारायणाय शर्वाय ब्रह्मणे ब्रह्मरूपिणे । शाश्वताय ह्यनन्ताय अव्यक्तायच ते नमः ॥ ९७ ॥ एवं स्तुत्वा महादेवं दण्डवत् प्रणिपत्यच । जजापरुद्रं भगवान् कोटिवारं जलेस्थितः ॥ ९८ ॥

‡ रामेश्वरञ्च परमं विष्णुना यत्प्रतिष्ठितम् ।

$ अहं च सर्वविद्यानां पतिराद्यस्सनातनः । अहं वै पतिभावेन पशुमध्ये व्यवस्थितः ॥ ७९ ॥ अतः पशुपतिर्नाम मम लोके भविष्यति । येमां भजन्ति तेषां स्याद्दीक्षा पाशुपतीभवेत् ॥ ८० ॥

கூர்மபுராணம்-உத்தரபாகம்-அத்-௪௬-ல், * "பரமே
"சுவரனை எவ்விதமான பேதத்தை யநுஸரித்துபாஸிக்கிறார்
"களோ அந்தந்த ரூபமாயிருந்து அந்த சிவனேபலனைக் கொடுக்
"கிறார்."

ஸ்காந்தபுராணம்-காசிகண்டம்-முதல்பாகம்-அத்-௧௦-ல்,
†. "உருத்திரர் ஒருவரேதான். இரண்டாவ தொன்றுமில்லை.
"ஆகையாலொன்றான மஹேசுவரனாகிய உம்மைச்சரணமடைகி
"றேன். ஓ! சம்போ! ஸகலத்திற்குங் கருத்தாவாக நீரொருவ
"ரேயிருக்கிறீர். சூரியனொருவனானாலும் (ஜலாதாரங்களிலுள்ள)
"ஜலந்தோறுமனேகமாயெப்படி விளங்குகிறானோ அப்படியிந்த
"சம்புவினுடைய ரூபமானதொன்றானாலும் அநேகரூபங்களாய்
"விளங்குகிறது. ஆகையால், ஈசுவரனாகிய உம்மைவிட்டு அந்நிய
"மான ஒருவரையும் நான் சரணமடைகிறதில்லை.

ஷை-ஷை- அத்-௨௩-ல், ‡ "பார்வதியினாற் செய்யப்
"பட்ட அலங்காரத்தையுடையவராயும் நல்லகாந்தியோடு கூடிய
"இலக்ஷ்மீயுடன் சேர்ந்தவராயுமிருக்கிற விஷ்ணுவுக்குப் பிரும்
"மாண்டமண்டபத்தில் மஹேசுவரர், தானே அபிஷேகஞ்செய்து
"தன்னுடையதாயும் மற்றவர்களாலடையக்கூடாததாயுமிருக்கிற
"ஐசுவரியமெதுண்டோ அந்த ஸகலமான ஐசுவரியமும் மஹே
"சுவரராலே கொடுக்கப்பட்டது. பிறகு தேவேசனான ஈசுவர
"னானவர் பிரமத கணங்களுடன் சார்ங்கியாகிய விஷ்ணுவை
"ஸ்தோத்திரஞ்செய்தார். உலக கருத்தாவாகிய பிரும்மாவைப்

---

* यंयं भेदं समाश्रित्य यजन्ति परमेश्वरम् । तत्तद्रूपं समास्थाय प्रदद्याते फलं शिवः ॥

† एकोरुद्रो न द्वितीयोऽवतस्थे तस्मादेकं त्वां प्रपद्ये महेशम् ॥ १२६ ॥ एकः कर्तात्वं हि सर्वस्य शंभो नानारूपेष्वेकरूपोस्य रूपः । तद्वत् प्रत्यप्स्वर्क एकोप्यनेक स्तस्मान्नान्यं त्वां विनेशं प्रपद्ये ॥ १२७ ॥

‡ मृडानीकृतशृङ्गारं सुश्रिया सुश्रियायुतम् ॥ १९१ ॥ अभिषिच्यमहेशेन स्वयं ब्रह्माण्डमण्टपे । दत्तं समस्तमैश्वर्यं यन्निजं नान्यगामिच ॥ १९२ ॥ ततस्तुष्टाव देवेशः प्रमथैस्सह शार्ङ्गिणम् । ब्रह्माणं लोककर्तार

"பார்த்து இந்த வசநத்தைச் சொன்னார். (அதாவது) "இந்தவி
"ஷ்ணுவானவர் என்னால் வணங்கத்தக்கவர் இந்தஹரியை நீயும்
"நமஸ்காரஞ்செய்" என்றிவ்விதமாய்ச் சொல்லிப் பிறகு உருத்
"திரர் தானே கருடத்துவஜனாகிய விஷ்ணுவை நமஸ்காரஞ்
"செய்தார்."

அத்தியாத்தும ராமாயணம்- யுத்தகாண்டம்- ஸர்க்கம்-
கச- சு- சு-ல், * "இவ்விடத்திற் சம்புவானவர் இராமேசுவரரெ
"ன்கிற தேவனாகிய இலிங்கமாகவென்னாற் பிரதிஷ்டைசெய்யப்
"பட்டார். இதானது, சிரேஷ்டமானதாயும் பரிசுத்தமானதாயும்
"பார்த்தமாத்திரத்திற் பாபத்தைப் போக்கடிக்கத் தக்கதாயுமி
"ருக்கிறது."

9. ஓ! ஜயவிரதா! சைவசித்தாந்தத்தையாதரிக்கிறப் பிர
மாணங்களிற் சில உனக்குக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டன.
பின்னும் பிருஹஜ்ஜாபாலம் பஸ்மஜாபாலம் உருத்திராக்ஷஜாபா
லம் ஜாபாலம் சரபம் முதலிய உபநிஷத்துக்களுமிந்த ஸித்தாந்
தத்தை யாதரிக்கின்றன. இனியுனக்கெதையறிந்துகொள்ள
விச்சையிருக்கிறதோ அதைக்கேட்கலாம்.

10. ஜயவிரதன்,—ஓ! மஹாத்துமாவே! அத்துவைத விசி
ஷ்டாத்துவைதத் துவைத சைவமதங்களுடைய சுவரூபங்களை
யும் அவைகளை யாதரிக்கிறப் பிரமாணங்கங்களையுங்கேட்டுத்தங்
கள் வாக்காகிற அமிருதத்தைப் பாநஞ்செய்த எனக்கு இன்
னுந் தெகட்டவில்லை. இவ்விஷயங்களிலெனக்குச் சிலசந்தேக
ங்களுண்டாயிருக்கின்றன. அந்த ஸந்தேகங்களை நிவிருத்திக்க
த்தங்களைத்தவிர வேறொருவருந் தகுந்தவரல்லவென்று நினைக்
கிறேன். ஆகையாற், தாங்களென்னிடத்திற் பரமகிருபைவைத்
தென்னைத் தெளிவுறச்செய்யப் பிரார்த்திக்கிறேன்.—அவையா
வன.—அத்துவைத ஸித்தாந்தமானது பிர்ம்மமொன்றே உள்
ளது, ஜீவேசுவர ஜகத்து முதலிய வேற்றுமைகளக்ஞாநகற்
பிதம், பிர்ம்மமே ஸகல வஸ்துக்களாயும் விளங்குகிறதென்று

---

सुवाच च वचस्त्विदम् ॥१९३॥ मम वन्द्यस्त्वयं विष्णुः प्रणमत्व ममुं हरिम् । इत्युक्त्वाथ स्वयं रुद्रो न नाम गरुडध्वजम् ॥१९४॥

* एतत्पवित्रं परमं दर्शनात् पातकापहम् । अत्र रामेश्वरो देवो मया शंभुः प्रतिष्ठितः ॥

போதிக்கிறது. இந்தக்கொள்கையை சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களாகிய சாஸ்திரங்களெல்லாமாதரிக்கின்றன. அவ்வித மாயந்தச்சாஸ்திரங்களே ஸகலத்திற்குங் கருத்தாவான விஷ்ணுவே பரமாத்துமாவென்று சிலவிடங்களிலும் அப்படியே சிவன் பரமாத்துமாவென்று சிலவிடங்களிலுஞ் சொல்லுகின்றன. இது ஒன்றுக்கொன்று விரோதமாய்க்காணுகிறது. இப்படிச் சாஸ்திரங்களே விரோதாபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறதனாலந்த மதஸ்தர்களுக்குள்ளொருவரையொருவர் நிந்திக்கக்காரணமுண்டாயிருக்கிறதாக வெண்ணுகிறேன். மேற்படி சாஸ்திரங்கள் இன்னான்கு மதஸ்தர்களுக்கும் பொதுவானப் பிரமாணமல்லவா? இம்மதத்தார் தங்களுக்கு விரோதமாயிருக்கிற பிரமாண வாக்கியங்களுக் கெவ்விதமாய் ஸமாதானஞ் சொல்லுகிறார்கள்? இந்த விரோதத்தையெப்படிஸமரஸப்படுத்திக்கொள்ளக்கூடும்?

11-ஸுசர்ம்மா—ஓ! ஸத்புத்திரா! இப்படிப்பட்டசந்தேகமுனக்குண்டானது ஆச்சரியமல்ல. நல்லவித்துவான்கள்கூட இவ்விஷயத்திற் சந்தேகமடைகிறார்கள். அபிமானம் பிடிவாதம் அசூயை முதலிய துர்குணங்களில்லாத ஸமபுத்தியுடைய விவேகிகள் சாஸ்திரங்களுடையவாஸ்தவமான அர்த்தத்தையாராய்ந்தறிவார்களானாலவர்களுக்குவிரோதங்காணப்படமாட்டாது. அதிகாரிகளையுத்தேசித்துச் சாஸ்திரங்கள் பலமார்க்கங்களைச்சொல்லுகின்றன.

12. ஜகத்காரணமான பரமாத்துமா ஒருவரேயென்பதில் இம்மதத்தார்களில் யாருமாக்ஷேபிக்கிறதில்லை. விஷ்ணு ஸர்வோத்தமரென்று சொல்லுகிற விசிஷ்டாத்துவைதிகள் துவைதிகளிவர்களை வைஷ்ணவர்களென்றும் சிவன் ஸர்வோத்தமரென்று சொல்லுகிறவர்களை சைவர்களென்றும் வைத்துக்கொள்வோம். இவர்களிலொருவர் கொள்கைக்கு மற்றொருவர் கொள்கை விரோதப்படுகையிலதற்கவர்கள் சொல்லுஞ் சமாதானத்தை முதலிற்சொல்லிப்பிறகு அத்துவைதிகளுடைய ஸமாதானத்தைச் சொல்லுகிறேன்.

13. வைஷ்ணவர்கள்.—சிவன் ஸர்வோத்தமரென்று சொல்லியிருக்கிறப் பிரமாணங்களிற் சில, தாமஸங்களென்றும்

அந்தச் சிவனைத் தாமஸ சுவபாவமுள்ள ஜநங்கள் பூஜிக்கிறார்க ளென்றும் அப்படிப் பூஜிக்கிறவர்களற்பமானதுஞ் சீக்கிரத்தில் நசிக்கத்தக்கதுமாகிய அற்பமானப் பிரயோஜநத்தை யடைந்து மறுபடியும் ஸம்ஸாரத்தை யடைகிறார்களென்றும் இந்தத் தாமஸோபாஸகர்களுக்கு மோக்ஷமுண்டாகிறதில்லை யென்றுஞ் சிலர் சொல்லுவார்கள். சிலர் சிவனானவர் சிரேஷ்டமான விஷ்ணு பக்தராகையாலவரை யுபாஸிப்பவர்களுக்குச் சிவனிடத்திலந்த ர்யாமியாயிருக்கிற விஷ்ணுவே பலனைக்கொடுக்கிறவரானாலுந் தன்னை நேரிலுபாஸித்த பக்தர்களுக்குப்போல் உத்தமமானதும் வைகுண்டத்தில் வஸிக்கத்தக்கதுமான மோக்ஷபலனைக் கொடாமலதற்குத் தாழ்ந்ததாகிய கைலாஸம் பிரும்மலோகம் சுவர்க்கம் முதலிய விடங்களில் வாஸஞ் செய்யும்படியான சுக பலனைக் கொடுப்பாரென்று சொல்லுவார்கள். ஏனெனில், சிவன் தாமஸகுணப் பிரதாநரென்று சாஸ்திரங்களே சொல்லுகின் றனவென்று வாதிப்பார்கள். ஆனால், தாமதகுணமுடைய சிவனை ஸர்வோத்தமமாகச் சாஸ்திரங்கள் சொல்லுவானேயெ ன்றால், தாமஸப்பிரியர்களானவுபாஸகர்களுக்கந்த தாமஸமூர் த்தியான சிவனிடததிற் பக்தியுண்டாவதற்காக அவரை ஸர் வோத்தமராகச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவென்று வைஷ் ணவர்கள் ஸமாதாநஞ் சொல்லுகிறார்கள்.

14. சைவர்களோவென்றால், விஷ்ணுவானவர் உலகரக்ஷ ணையின் பொருட்டுத் தேவதைகளுக்குள்சிரேஷ்டராக விஷ்ணுவை சிவன் ஏற்படுத்தினாரென்றும் இந்தவிஷ்ணுவுக்குமேலான வதிகாரிகளாகப் பரமேசுவரன் ஸதாசிவன் முதலிய சிலவதிகாரிகளிருக்கிறதாகவும் இந்தவதிகாரிகளெல்லாஞ் சிவனை யதிஷ் டாநமாயுடையவர்களென்றும் இவ்வளவு தாழ்ந்தபடியிலுள்ள விஷ்ணுவை ஸர்வோத்தமரான சிவனுக்குச் சரியாய்ச் சொல்லக் கூடாதென்றும் ஆனால், விஷ்ணுவை ஸர்வசிரேஷ்டராய்ச் சாஸ் திரங்கள் சொல்லுகின்றனவேயென்றால், சிவனுடைய வியாபக ரூபத்தை விஷ்ணுவென்கிற பெயரினாற் சாஸ்திரங்கள் சொல்லு கின்றனவாகையால், விஷ்ணு ஸர்வோத்தமரென்று சொல்லுகி றவிடங்களிலெல்லாஞ் சிவனைச் சொல்லுவதாகவே பாவிக்கவே ண்டியதென்றுஞ் சிலர் சொல்லுவார்கள். சிலர் விஷ்ணுவை சிரேஷ்டமாய்ச்சொல்லுகிற புராணங்கள் தாமஸங்களென்றுஞ்

சொல்லுவார்கள். இவைகள்தான் சைவ வைஷ்ணவர்களுடைய ஸமாதாநமென்று நானெண்ணுகிறேன்.

15. ஆனாலிந்த இருவகையாரும் மதப்பிடிவாதம்அசூயை இவைகளை முன்னிட்டுக்கொண்டு சாஸ்திரங்களைக்கூட நிஷேதஞ்செய்கிறார்கள். வைஷ்ணவர்கள் விஷ்ணு ஸர்வோத்தமரென்று சொல்லுகிற ஸாத்துவிக புராணங்களில் முக்கியமானது பத்துமபுராணமென்பார்கள். அந்தப் புராணத்திலேயே ஆதிகண்டம் கள-முதல்-ச0-வரையிலுள்ள அத்தியாயங்களிற் சிவனுடையவும் சிவஸ்தலங்களுடையவும் மாஹாத்மியம் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிலிருந்து சில வாக்கியங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் கேள்.

பத்தும புராணம்-ஆதிகண்டம்-அத்-ருகூ-ல், * "நாரதர் "சொல்வது—ஓ! யுதிஷ்டிரமஹாராஜனே! வாராணஸியிற் (காசி "யில், சிரேஷ்டத்திற்கெல்லாஞ் சிரேஷ்டமான மத்தியமேசுவ "ரனை (எவ்விடத்திலுபாஸிக்கிறார்களோ) அந்தஸ்தலத்தில் "மஹேசனும் மஹாதேவனுமிருக்கிற அந்தப்பகவானானவர் "தேவியோடுகூடவும் உருத்திரர்களாற் சூழப்பட்டு எப்போ "தும் விளையாடிக்கொண்டிருக்கிறார். அவ்விடத்தில் முற்கால "த்திற், தேவகி புத்திரனும் பிரபஞ்ச சுவரூபியாயும் இரிஷீகே "சனுமிருக்கிற கிருஷ்ணனானவரெப்போதும் பாசுபதவிரதமு "டையவர்களோடு கூடினவராய்த் தேகம் முழுதும் பஸ்மத்தை "ப்பூசிக்கொண்டவராய் ருத்திராத்தியயநத்தில் நிலையாயிருக்கி "றவராய் ஒரு வருஷம் வாஸஞ்செய்தார். அந்த ஹரியானவர் "பாசுபதவிரதத்தைச்செய்து சம்புவை யாராதனை செய்தார். "பிரும்மசாரி விரதத்தில் நிலையுள்ள வநேக சிஷியர்கள் அவ "ருக்கிருந்தார்கள். அவர்கள் அந்த கிருஷ்ணனிடத்திலிருந்து

* नारदउवाच। वाराणस्यां महाराज मध्यमेशं परात्परम् । तस्मिन् स्थाने महादेवो देव्यासह महेश्वरः ॥ १ ॥ रमते भगवान्नित्यं रुद्रैश्च परिवारितः । तत्र पूर्वं हृषीकेशो विश्वात्मा देवकीसुतः ॥ २ ॥ उवासवत्सरं कृष्ण स्सदा पाशुपतैर्युतः । भस्मोद्धूळित सर्वाङ्गो रुद्राध्ययन तत्परः । आराधयन् हरिश्शंभुं कृत्वा पाशुपतं व्रतम् ॥ ३ ॥ तस्य ते बहवश्शिष्या ब्रह्मचर्य परायणाः । लब्ध्वा तद्वदनात् ज्ञानं दृष्टवन्तो महेश्वरम् ॥ ४ ॥

"ஞானத்தையடைந்து மஹேசுவரனைப்பார்த்தார்கள். பிரகாச "சுவரூபியாயும் நீலலோஹிதராயுமிருக்கிற மஹாதேவனானவர் "அந்த கிருஷ்ணபகவானுக்குப் பிரத்தியக்ஷமானார். வரத்தை "கொடுக்கத்தக்கவரும் மஹாதேவனுமான பகவான் அந்தக் "கிருஷ்ணனுக் குத்தமமான வரத்தைக்கொடுத்தார்."

பத்தும புராணம்-ஆதிகண்டம்-அத்-௩௭-ல், * "அவ் "விடத்தில் (பிரும்ம தீர்த்தத்தில்) மிகவும் பழமையான இலி "ங்கத்தை ஸ்தாபிக்கிறதற்காக பிரும்மாவானவ ரெப்போது "வந்தாரோ அப்போது விஷ்ணுவானவ ரீசுவர ஸம்பந்த "மான அந்த இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். பிற "குப் பிரும்மாவானவர் ஸ்நாநஞ்செய்து வந்து அந்த ஹரி "யைப்பார்த்து என்னாற் கொண்டுவரப்பட்ட விந்த இலிங்க "த்தை யெந்தக்காரணத்தினால் நீர் ஸ்தாபநஞ் செய்தீரென்று "கேட்டார். விஷ்ணுவானவரந்தப்பிரும்மாவைப்பார்த்துன்னை "விட எனக்கு உருத்திரனிடத்திற் றிருடமான பக்தி யிருக்கி "றது. ஆகையினால், இலிங்கமானது என்னாற் பிரதிஷ்டை "செய்யப்பட்டது. அவ்விடத்தில் (பூதேசுவரரென்கிற) பெயரு "ண்டாகப்போகிறது."

16. இந்த வாக்கியங்கள் விஷ்ணுவாகிற கிருஷ்ணபகவானவர் பரமேசுவரரைப் பாசுபத விருதத்தினலாராதித்து வரம் பெற்றதாகவும் விஷ்ணுவானவர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, தான் சிரேஷ்டமான உருத்திர பக்தனென்று சொன்னதாகவுங் காட்டுகின்றன.

17. இவைமாத்திரமல்ல. ஷைபுராணம் பாதாளகண்டத்தில்-அத்-௧00 முதல் ௧௧௧- வரையிற் சிவமாஹாத்துமியமும் சிவ்பூஜாவிதியும் பஸ்ம (வீபூதி) மாஹாத்துமியமும் உருத்திரா

---

तस्य देवो म॰ादेवः प्रत्यक्षं नीललोहितः । ददौ कृष्णस्य भगवान् वरदो वरमुत्तमम् ॥ ९ ॥

* तत्र लिंगं पुराणीयं स्थातुं ब्रह्मायदाऽऽगतः । तदानीं स्थापयामास विष्णुस्तल्लिङ्गमैश्वरम् ॥ १० ॥ ततःस्नात्वा समागम्य ब्रह्मा प्रोवाच तं हरिम् । मयाऽऽनीतमिदं लिंगं कस्मात् स्थापितवानसि ॥ ११ ॥ तमाह विष्णुस्त्वत्तोऽपि रुद्रे भक्तिर्दृढा मम । तस्मात् प्रतिष्ठितं लिंगं नाम्नातत्र भविष्यति ॥ १२ ॥

க்ஷ மாஹாத்துமியமும் விஷ்ணுவினற் செய்யப்பட்ட சிவத்தியாநமும் சிவ விஷ்ணுக்களபேதமென்பதும் ஹநுமாருடைய சிவபூஜாக்கிரமமுமவர் செய்த சிவ பக்தி விசேஷமும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லா மிவ்விடத்தி லெடுத்துரைப்பதானல் மிக வளருமாகையாலவைகளிற் சில வாக்கியங்களை மட்டுமிவ்விடத்திற் குறிப்பிடுகிறேன்.

பத்தும புராணம்-பாதாள கண்டம்-அத்-கூக-ல், *
"இராமர் சொல்வது — மிக வல்லமை யுடையவராயும் நினை
"ப்பதனலேயே பாபத்தைப் போக்குகிறவராயும் ஸ்மரிப்பத
"னலேயே மோக்ஷத்தைத் தரத்தக்கவராயுஞ் சிவனும்
"மங்கள சுவரூபியாயுஞ் சிவ தத்துவார்த்தத்தை யறிந்த
"வராயு முமையோடு கூடினவராயும் சந்திரனை யாபரணமா
"யுடையவராயுஞ் சந்திரனை நேத்திரமாயுடையவராயும் பிரகா
"சமுடையவராயும் வேதசுவரூபராயு முருவமற்றவராயும் வேத
"ஸாரத்தை யறிந்தவராயும் வேதங்களுடையவும் வேதாங்கங்க
"ளுடையவும் ஞாநமுடையவராயும் அறியத்தகுந்தவருமறியத்த
"காதவருமாயும் யோகியாயும் பசுவின்பாற்போன்ற தேகமு
"டையவராயும் பசுவின்பாலபிஷேகத்திற் பிரீதியுடையவராயும்
"விருஷபவாஹநராயும் முக்கண்ணராயும் மூன்று வேதங்களை
"யும் நேத்திரமாயுடையவராயும் மாயையை யேவுகிறவராயு மிரு
"க்கிற தேவதேவனகிய சங்கரருடையப் பூஜையெங்கே (நானெ
"ங்கே?) அப்படிக்கேழ்விகேட்டுக்கொண்டிருக்கிறமத்தியில்
"இராமனை சிவஞாநமானதுப் பிரவேசித்தது (இராமர் சிவ
"ஞாநமடைந்தாரென்பது கருத்து). கட்டைபோலசைவற்றிரு
"ந்துகொண்டும் புருவத்தின் மத்தியிற் கண்களை நிறுத்தினவரா

---

* श्रीरामउवाच । क्वपूजा देवदेवस्य शङ्करस्या मितौजसः । स्मरणात् पापनाशस्य स्मरणान्मोक्षदस्य च ॥१०५॥ शिवस्य शिवरूपस्य शिवतत्वार्थ वेदिनः । सोमस्य सोमभूषस्य सोमनेत्रस्य राजिसु (तुः) ॥ १०६॥ वेदमूर्तेरमूर्तेश्च वेदसारस्य वेदिनः । वेदवेदाङ्ग विज्ञस्य वेद्यावेद्यस्य योगिनः ॥ १०७ ॥ गोक्षीर समतेजस्य गोक्षीर स्नानमोदिनः । गोपत्त्रिणस्त्रिणेत्रस्य त्रयीनेत्रस्य मायिनः ॥ १०८ ॥ प्रश्नमध्ये तथा रामं शिवज्ञानमथाऽऽविशत् । स्थाणुभूत इवासीनो नासाग्रन्यस्त लोचनः ॥१०९॥ आ-

"யிருந்துகொண்டு மாநந்தப்பெருக்காகிற கண்ணீர்பெருக்கி "னுலே நனைந்த கன்னங்களையுடையவராய்க்கொண்டும் பசுவின் "பாற்போன்ற பளபளப்புள்ள இன்பமானதேகத்தையுடைய "கிரீசனுகிய்த்தேவனை ஹிருதயகமலத்திற் தரித்தார். ஸ்ரீ இராம "ருடையதேகத்திற் (சம்புவினுடைய) பிரதிபிம்பமானது காண "ப்பட்டது. நான்குகைகளும் முக்கண்ணுமுடையப் பிரதிபிம் "பித்ததாயிருக்கிற சம்புவைப்பார்த்துச் சகலமான முனிகளும் "வாநரசிரேஷ்டர்களும் மிகவுமாச்சரியத்தையடைந்தார்கள். பிர "காசசுவரூபியாயும் மங்களசுவரூபியாயுமிருக்கிற இராமரை, "சம்புவினுடைய மார்பிலிருக்கிறவராகப் பார்த்து அரைஜாம "நேரம் பேசாமலிருந்தார்கள். பிறகு இராமரானவர் பார்த்து "த் தன்னுடையக் கெழ்வியைப்பின்பற்றி ஸகலத்தையுஞ்சொல் "லுமென்று கேட்டார்."

18. விஷ்ணுவை ஸர்வோத்தமமான பரமாத்துமாவாகச் சொல்லுகிறவிந்தப்புராணமே இப்படிச் சிவனை ஸர்வோத்தமமா கச்சொல்வதுடன் விஷ்ணுசுவரூபியான ஸ்ரீ இராமரே சிவனைத் துதித்துந் தியாநித்துமிருக்கிறுரென்று சொல்லுகிற புராணத்தி னிந்தப்பாகத்தைத் தாமதமென்று வைஷ்ணவர்கள் தள்ளிவிடக் கூடுமோ? இப்படிப்போலவே ஸ்காந்தத்திற் காசிகண்டம் ஸஹி யாத்திரிகண்டம் சூதஸம்ஹிதை இவைகளிற் சிவன் விஷ்ணுவை வணங்கி வரம்பெற்றதாகவும் விஷ்ணுவைத் துதித்ததாகவும் விஷ்ணுவை நமஸ்கரித்ததாகவுமநேக வாக்கியங்கள் வந்திருக் கின்றன. இந்தவாக்கியங்களிலநேக வாக்கியங்கள் வைஷ்ணவ ஸித்தாந்தத்தைச் சொன்னவிடத்திற் குறித்துக்காட்டியிருக்கி றேன். இவைகளையெல்லாந் தாமதமென்று சைவத்துவைதி கள் தள்ளிவிடக்கூடுமோ? இதுமாத்திரமல்ல, ஷ-பத்தும

नन्दनिष्यन्दविलोचनाश्रु प्रवाहसंस्पृष्ट कपोलदेशः । दधारदेवं गिरिशं हृदंबुजे गोक्षीरसुस्निग्ध सुचारुगात्रम् ॥ ११० ॥ प्रतिबिंबमथोगात्रे रामस्य समदृश्यत । दृष्ट्वैव बिंबितं शंभुं चतुर्बाहुं त्रिलोचनम् ॥ १११ ॥ विस्मयं परमं यातास्सर्वे मुनिहरीश्वराः । शंभोर्वक्षस्थितं रामं दृष्ट्वादीप्ताकृतिं शुभम्॥ ११२ ॥ तूष्णीं बभूवुर्या मार्द्धमथ रामउदैक्षत । स्वप्रश्नमनुसंधाय प्राहसर्वं वदेतिच ॥ ११३ ॥

புராணம், ஸ்காந்தபுராணம் இவைகளிலும்மற்றப்புராணங்களிலு மிதிஹாஸங்களிலுஞ் சிவ விஷ்ணுக்களை யபேதமாயுமொரேசுவ ரூபமாயுமவர்களுக்குட் பேதத்தையெண்ணுகிறவன் அல்லது சொல்லுகிறவன் மஹாபாபியென்றும் நரகத்தையடைகிறானெ ன்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளிலெதைவிலக்கி விடுகிறது? எதை கிரஹிக்கிறது? அபிமானத்தைவிட்டுச் சம புத்தியினால் யோஜிக்கும் புத்திமான்கள், எந்தெந்த மூர்த்தி யைக்குறித்து யாருக்குபதேசித்தார்களோ அந்தந்தவுபதேச மூர்த்தியை ஸர்வசிரேஷ்டமானபரமாத்துமாவாகச் சொல்லப் பட்டிருக்கின்றனவென்கிற முடிவைத்தவிர வேறுவிதமான அபி ப்பிராயங்கொள்ளமாட்டார்கள். உயர்வு தாழ்வாகவெண்ணித் தூஷிக்கவும்மாட்டார்கள்.

பிரும்மவிஷ்ணு உருத்திரர்களாகிய மும்மூர்த்திகளுமபே தமான ஒரேமூர்த்தியென்றுமவர்களிற்பேதத்தை யெண்ணுகிற வன் பிறப்பாகிற ஸம்ஸாரத்தையடைகிறானென்றுஞ் சொல்லு கிற சாஸ்திரவாக்கியங்களிற் சிலதைச்சொல்லுகிறேன்.

பதின்மூன்றாவது பிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பதினான்காவது பிரகரணம்.

1. ஸுசர்ம்மா:—எந்தச்சாஸ்திரங்கள் சிவனை ஸர்வோத்தமராகவும் விஷ்ணுவை ஸர்வோத்தமராகவுஞ் சொல்லுகின்றனவோ அவைகளே சிவன் விஷ்ணு பிரும்மா இவர்கள் வேற்றுமையற்ற ஒரேசுவரூபமென்றும் அவர்களுக்குட் பேதத்தையெவனெண்ணுகிறானோ அவன்பாபியாயும் நரகமடையத்தக்கவனாயுமிருக்கிறானென்றுஞ்சொல்லுகின்றனவாகச்சொன்னேனல்லவா; அவைகளிற் சில உனக்குச்சொல்லுகிறேன்கேள்.

ஸ்கந்தோபநிஷத்தில், * "விஷ்ணுரூபமாயிருக்கிற சிவன் 'பொருட்டும் சிவரூபமாயிருக்கிற விஷ்ணுவின்பொருட்டும் (நம "ஸ்காரம்). சிவனுடைய ஹிருதயமே விஷ்ணு. விஷ்ணுவினு "டைய ஹிருதயமே சிவன். எப்படியிவ்விருவர்களுக்குட் பேத "த்தை நான்காணவில்லையோ அதனாலெனக்கு ஆயுஸ்காலத் "திற் சுபமுண்டாகட்டும். சிவ கேசவர்களுக்குட் பேதங்கிடை "யாது."

திருபுராதாபிந்யுபநிஷத்-ச-ல், † "ஓம், நமசிவாய என்கிற "யஜுர்வேத மந்திரோபாஸகன் உருத்திரத்துவத்தை யடைகி "றான். மங்களசுவரூபத்தையடைகிறான். அதுதான் விஷ்ணு "வினுடைய பரமபதம்."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், ‡ "கோவிந்தனை யார் வந் "தனஞ்செய்கிறார்களோ அவர்கள் சங்கரனை வந்தனஞ்செய்தவர்

---

* शिवाय विष्णुरूपाय शिवरूपाय विष्णवे । शिवस्य हृदयं विष्णुर्विष्णोश्च हृदयं शिवः ॥ यथान्तरं न पश्यामि तथा मे स्वस्तिरायुषि । यथान्तरं न भेदास्स्यु शिवकेशवयोस्तथा ॥

† ओंनमश्शिवायेति याजुषमन्त्रोपासको रुद्रत्वं प्राप्नोति । कल्याणं प्राप्नोति तद्विष्णोः परमं पदम् ॥

‡ येनमस्यन्ति गोविन्दं तेनमस्यन्ति शङ्करम् । येऽर्चयन्ति हरिं

"களாகிறார்கள். யார் ஹரியை பக்தியோடு பூஜிக்கிறார்களோ
"அவர்கள் விருஷபத்துவஜனைப் (சிவனை) பூஜித்தவர்களாகிறார்
"கள். யார்விருஷபத்துவஜனைத்துவேஷிக்கிறார்களோ அவர்கள்
"ஜநார்த்தநனைத்துவேஷித்தவர்களாகிறார்கள். யார் உருத்திரனை
"யறியவில்லையோ அவர்கள் கேசவனையுமறியவில்லை.—உலகப்
"பிரயோஜநத்தின்பொருட்டு ஒரேசுவரூபமான உருத்திரரான
"வர் காரியசுவரூபமான விஷ்ணுவாகவுங் கிரியாசுவரூபமான
"பிரும்மாவாகவுங் காரணமான மஹேசுவரனாகவும் மூன்றுவித
"மாயிருக்கிறார்."

மஹாபாரதம்-சாந்திபருவம்-அத்-௩௪௧-௬-௨௭-ல், * "ஸத்
"துவமாகிய ஒரேவஸ்துவே உருத்திரன் நாராயணனென்ன விரண்
"டாகச் செய்யப்பட்டிருக்கிறது."

ஷை-பாரதம்-ஹரிவம்சம்-விஷ்ணுபருவம்-அத்-௧௩௧-ல், †
(தபஸ்செய்துகொண்டிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணபகவானெதிரிற்
பிரஸந்நரான ஸ்ரீசங்கரர்கிருஷ்ணனைப்பார்த்துச் சொல்லுகிறார்.
ஓ! கிருஷ்ணா!) "நீரெப்போது இரஜோகுணத்தோடுகூடினவராக
"வாகிறீரோவப்போது பூதங்களைச்சிருஷ்டிக்கிறீர். நீரெப்போ
"து ஸத்துவகுணத்தோடு கூடினவராகிறீரோவப்போது மூன்று
"லகங்களையுமிரக்ஷிக்கிறீர். நீரெப்போது தமோகுணத்தோடு
"கூடினவராகிறீரோவப்போதுலகத்தையழிக்கிறீர். நீரேமூன்று
"குணங்களோடு கூடினவராய்க்கொண்டும் சிருஷ்டிஸ்திதி ஸம்
"ஹாரகாரியத்தில் மூன்றுவிதமான சுவரூபத்தையெடுத்துக்
"கொண்டும் நிச்சயமுள்ள சித்தமுடையவராயிருக்கிறீர். ஓ!

---

भक्त्या तेऽर्चयन्ति वृषध्वजम् ॥ येद्विषन्ति विरूपाक्षं ते द्विषन्ति जनार्दनम् । ये रुद्रं नाभिजानन्ति तेन जानन्ति केशवम् ॥ — कार्यं विष्णुः क्रिया ब्रह्मा कारणन्तु महेश्वरः । प्रयोजनार्थं रुद्रेण मूर्तिरेका त्रिधास्थिता ॥

* रुद्रो नारायणश्चैव सत्वमेकं द्विधाकृतम् ॥

† यदा त्वं रजसायुक्त स्तदाभूतानि सृष्टवान । यदाच सत्वयुक्तोसि तदापाता जगत्त्रयम् ॥ यदा त्वं तमसाकृष्ट स्तदा संहरते जगत् । त्रिभिरेव गुणैर्युक्त स्सृष्टिरक्षा विनाशने ॥ वर्तसे त्रिविधा भूतिमादाय नि-

"பிரபுவே ! நீர் சிருஷ்டிகாலத்திற் பிரும்மாவாகவும் ஸ்திதிகால
"த்தில் விஷ்ணுவாகவும் ஸம்ஹாரகாலத்தில் உருத்திரனென்கிற
"பெயருடையவராகவுமிருக்கிறீர். ஓ ! பிரபுவே ! மூன்றுஸ்தா
"நமும் நீராகவேயிருக்கிறீர்."

பிரும்மபுராணம்-அத்-௫௬-ல், * "மார்க்கண்டேயர்சொல்
"லுகிறார். புண்ணியத்தைக்கொடுக்கத்தக்கதாயும் பரிசுத்த
"மானதாயுமிருக்கிற சிரேஷ்டமானவிந்தப் புருஷோத்தம (விஷ்
"ணு) க்ஷேத்திரத்தில், ஓ ! தேவா ! உத்தமமாயும் மஹிமை
"பொருந்தியதாயுமிருக்கிற சிவாலயப்பிரதிஷ்டைசெய்கிறேன்.
"உம்முடையஸ்தானமாகிய வந்தவிடத்திற் சங்கரனைக் கிரமப்படி
"ப்பிரதிஷ்டைசெய்கிறேன். அதனாலிவ்வுலகத்தில் ஹரிசங்க
"ரர்களை யொரேமூர்த்தியென்றறிவார்கள்.

"ஜநார்த்தநனை அவர் அந்தமஹாமுனியைப்பார்த்துப் பதிற்
"சொன்னார். ஓ ! பிராம்மணோத்தமா ! சிவனைப் பிரதிஷ்டை
"செய்வதனாலென்னைப் பிரதிஷ்டைசெய்ததாகவாகிறது. எங்க
"ளிருவர்களுக்குள்ளற்பமேனும் வேற்றுமையில்லை. ஒரேவஸ்
"துவானதிரண்டாகச் சொல்லப்படுகிறது. யார் உருத்திரனோ
"அவர்தான்விஷ்ணு. யார் விஷ்ணுவோ அவர்தான் மஹேசுவ
"ரன். எங்களிருவர்க்குள், ஆகாசம் வாயு இவைகள்போல் வேற்
"றுமையென்பது கிடையாது. கருடத்துவஜனாகிய விஷ்ணு
"யாரோ அவர் விருஷபத்துவஜனாகிய உருத்திரராயிருக்கிறார்.

---

यतात्मवान् । ब्रह्मा त्वं सृष्टिकालेतु स्थितौ विष्णुरसिप्रभो । संहारे रुद्र-
नामासि त्रिधामात्वमसि प्रभो ॥

* मार्कण्डेयउवाच । अस्मिन् क्षेत्रे वरे पुण्ये निर्मले पुरुषोत्तमे ।
शिवस्यायतनं देवकरोमि परमं महत् ॥ ८२ ॥ प्रतिष्ठेयं यथा तत्र तव-
स्थाने च शङ्करम् । ततोज्ञास्यन्ति लोकेऽस्मिन्नेकमूर्ती हरीश्वरौ ॥ ८३ ॥
प्रत्युवाच जगन्नाथः पुनस्तं स महामुनिम् । भगवानुवाच । शिवे संस्थापि-
ते विप्र मम संस्थापनं भवेत् । नावयोरन्तरं किञ्चिदेक भावौ द्विधा कृतौ ॥
८६ ॥ यो रुद्रस्स स्स्वयं विष्णुर्योविष्णुस्स महेश्वरः । उभयोरन्तरं नास्ति
पवनाकाश योरिव ॥ ८७ ॥ बालाहिनाभिजानन्ति यदेतत् गरुडध्वजः ।

"திருபுரத்தை யெரித்தவர்யாரோ அவர் திருவிக்கிரமன். அக்
"ஞாநிகளிப்படியறிகிறதில்லை."

பிரும்மபுராணம்-அத்-எக-சு-எ-ல், * "ஹிரண்யகர்பரும்
"ஹரியும் சங்கரரும் வாசுதேவனும் அழிவற்றவனும் சிருஷ்டி
"ஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்கிறவனுமாயிருக்கிற வுமக்கு நம
"ஸ்காரம்."

ஷ்ஷ புராணம்-அத்-அரு-சு-ரு0-ல், † "ஸகலசுவரூபியே!
"ஸகலத்திற்குமாத்துமாவாயுமுள்ளவரே! நாசமடையத்தக்கது
"நாசமடையத்தகாதது இவைகளுக்கெல்லாமீசுவரனுமிருக்கி
"றவரே! நீர் பிரும்மாவிஷ்ணுசிவன்முதலிய கற்பனைகளாகிற
"பெயர்களினாலே சொல்லப்படுகிறீர். நீரெனக்குப் பிரஸந்ந
"ராயாகும்."

பத்துமபுராணம்-ஆதிகண்டம்-அத்-ரு0-சு-ககூ-ல், ‡ "யார்
"காணக்கூடாதவரும் பிரகாசசுவரூபியுமான விந்த விஷ்ணுவை
"யும் மஹேசுவரரையுமொரேரூபியாய்ப் பார்க்கிறார்களோ அவர்
"களுக்கு மறுபிறப்பில்லை."

ஷ்ஷ புராணம்-பூமிகண்டம்-அத்-கூ-ல், $ "இந்தத்தருமசுவ
"ரூபியான ஜநார்த்தநன் தானிந்தப்பிரும்மா. அவர்தானிந்த
"உருத்திரன். நாசமற்றவிஷ்ணுவுமவர்தான். இவர்தான் பிரபஞ்
"சத்தைச் சிருஷ்டிக்கிறார். இவர்தான் பிரஜைகளை இரக்ஷிக்கி
"றார். தருமசுவரூபியான இவர்தான் ஸம்ஹாரஞ்செய்கிறார்."

---

वृषद्ध्वजस्स एवेति त्रिपुरघ्न स्त्रिविक्रमः ॥ ८८ ॥

* नमोहिरण्यगर्भाय हरये शङ्कराय च । वासुदेवाय साराय सर्गस्थित्यन्तकारिणे ॥

† प्रसीदसर्व सर्वात्मन् क्षराक्षर महेश्वर । ब्रह्मविष्णु शिवाद्याभिः कल्पनाभि रुदीरितः ॥

‡ योहिमां विष्णुमव्यक्तं देवं वापि महेश्वरम् । एकीभावेन पश्यन्ति न तेषां पुनरुद्भवः ॥

$ अयं ब्रह्माह्ययं रुद्रो ह्ययं विष्णुस्सनातनः ॥ ९ ॥ अयं सृजति विश्वानि अयं पालयते प्रजाः । संहरत्येष धर्मात्मा धर्मरूपो जनार्दनः॰ ६ ॥

பத்துமபுராணம்-பூமிகண்டம்-அத்-அசூ-ல், * "விஷ்ணு "சொல்வது—ஓ! சோபநே! இம்மூன்றுதேவதைகளுக்குள்ளே "பேதமானது கிடையாது." ஓ! சுமுகி! எவனாலேபிரும்மா "வாவது சங்கரராவதுசெவ்வையாய்ப் பூஜிக்கப்படுகிறார்களோ "அவனாலே நானெப்போதும் பூஜிக்கப்பட்டவனாயிருக்கிறேன். "இவ்விஷயத்திற்சந்தேகமில்லை. இந்தப்பிரும்மா சங்கரர் இவர் "களென்னைக் காட்டிலுமெப்போதும் வேறல்லாதவர்களே. "மூன்றுரூபமாயும் நானேயிருக்கிறேன்."

ஷைபுராணம்-பாதாளகண்டம்-அத்-சசூ ல், † "(விஷ்ணு "வை நோக்கிச் சிவன் சொல்வது) ஸாக்ஷாத்புருஷனாகிய நீர் "ஒருவரே, பிரகிருதிக்கப்புறப்பட்டவரென்றுஞ் சொல்லப்படு "கிறீர். உம்முடைய அம்சமாகிற கலையினாலே நீர் இவ்வுலகத் "தைச் சிருஷ்டிக்கிறீர். இரக்ஷிக்கிறீர். அழிக்கிறீர். உருவமற் "றவராகிய நீர் இந்தஸகலஜகத்திற்குங் காரணராயும் சிரேஷ்ட "ராயுமிருக்கிறீர். மாயையுடன்கூடி மூன்றுவிதமான ரூபத்தை "க்கிரஹிக்கிறீர். (அவையாவன) சிருஷ்டியில் நீர் பிரும்மா "வினுடைய ரூபத்தைக் கிரஹிக்கிறீர். இரக்ஷணையில் நீர் "தானே பிரகாசிக்கிறீர். ஜகத்தினுடையப் பிரளயத்தில் "ஸாக்ஷாத் நீரே சர்வனென்கிற நாமகவாகிறீர். மஹேசுவ "ருடைய இந்தவார்த்தையைக் கேட்டு இரகுகுலசிரேஷ்ட "ரான இராமர்கிருபையினால் மலர்ந்தகண்களுடன் கெம்பீரமாய் "வார்த்தைசொல்லுகிறார். ஓ! சிவனே! என்னுடைய ஹிருதயத் "தில் நீரிருக்கிறீர். உம்முடையஹிருதயத்தில்நானுமிருக்கிறேன்.

* श्रीभगवानुवाच । त्रयाणामपि देवाना मन्तरं नास्ति शोभने । ब्रह्मा समर्चितो येन शङ्करोवा वरानने । तेनाहमर्चितो नित्यं नात्रकार्या विचारणा ॥ ३९ ॥ एतौ ममाभिन्नतरौ नित्यं वापि त्रिरूपवा न् ॥ ४० ॥

† एकस्त्वं पुरुषस्साक्षात् प्रकृतेः परईर्यसे । यस्त्वांश कलयाविश्वं सृजत्यवति हंतिच ॥ ६ ॥ अरूपस्त्वा मशेषस्य जगतः कारणं परम् । एक एव त्रिधारूपं गृण्हासि कुहकान्वितः ॥ ७ ॥ सृष्टौ विधातृरूपस्त्वं पालने स्वप्रभामयः । प्रलये जगतस्साक्षादहं शर्वाख्यतां गतः ॥ ८ ॥ इति वाक्यं समाकर्ण्य महेशस्य रघूत्तमः । उवाचधीरया वाण्या कृपयाऽपूर्णलोचनः ॥ १८ ॥ ममास्ति हृदये शर्वो भवतो हृदयेत्वहम् । आवयोरन्तरं

"நம்மிருவருக்குட் பேதமில்லை. துர்ப்புத்தியுள்ள மூடர்கள் "நம்மைப் பேதமாய்ப் பார்க்கிறார்கள். ஒரே ரூபமாயுள்ள நம் "மிருவருக்குள்ளேயார்பேதத்தைக்கற்பிக்கிறார்களோ அப்படிப் "பட்ட மனிதர்கள் ஆயிரங்கற்பகாலங் கும்பீபாகமென்கிற நர "கத்திலே வேகவைக்கப்படுகிறார்கள். யாரெப்போதுமும்மு "டைய பக்தர்களோ, தருமத்தோடுகூடிய அவர்களென்னுடைய "பக்தர்கள்தான். என்னுடைய பக்தர்களும் மிகவும் பக்தியினு "லுமக்கு வணக்கமுள்ளவர்களாயிருப்பார்கள்."

12 பத்துமபுராணம்-பாதாளகண்டம்-அத்-௯௩-ல், * "யார் "விஷ்ணுவோ அவர் சுவயம்பிரும்மா. யார் பிரும்மாவோ அவர் "சுவயஞ்சங்கரர். யக்ஞத்திலெப்போதுந் தேவதைகளுக்குள் "ளாக (பிரும்மாவிஷ்ணுசங்கரர்களாகிய) மூன்றுதேவதைகள் "பூஜிக்கத்தக்கவர்கள். ஓ! பிராம்மணோத்தமா! இம்மூவர்க "ளுக்குள்ளெவன் வேற்றுமையைச் செய்கிறானோ அவன் பாப "த்தைச் செய்கிறவனும் பாபசுவரூபியாயுமிருக்கிறான். அவன் "துர்க்கதியையே யடைகிறான்."

13 ஷை-புராணம்-சிருஷ்டிகண்டம்-அத்-௨-௬-௧௧௪-ல், † "(அந்தவிஷ்ணுவானவர் யோகநித்திரையிலிருந்து) விழித்த "பிறகு ரூபத்தைத் தரித்தவராய்ப் பின்னுஞ் சிருஷ்டிசெய்கி "றார். பிரும்மாவிஷ்ணுசிவரூபியாயிருந்து முறையே சிருஷ்டியை "யுமிரக்ஷணையையும் நாசத்தையுஞ் செய்கிறார்."

---

नास्ति मूढाःपश्यन्ति दुर्द्धियः ॥ २० ॥ ये भेदं विदधत्यद्धा आवयोरेकरूपयोः । कुंभीपाकेषु पच्यंते नराः कल्पसहस्रकम् ॥ २१ ॥ ये त्वद्भक्तास्सदाऽऽसंस्ते मद्भक्ता धर्मसंयुताः । मद्भक्ताअपि भूयस्या भक्त्या तवनतिंकराः ॥ २२ ॥

* योविष्णुस्स स्स्वयं ब्रह्मा योब्रह्मा सस्स्वयं हरः । देवास्त्रयोपि यज्ञेस्मिन्निज्यादेवेषु नित्यशः ॥ ३६ ॥ योभेदं कुरुते तेषां त्रयाणां द्विजसत्तम । सपापकारी पापात्मा ह्यनिष्टांगतिमाप्नुयात् ॥ ३७ ॥

† प्रबुद्धश्च पुनस्सृष्टिं प्रकरोतिच रूपधृक् । सृष्टिस्थित्यंतकरणात् ब्रह्मविष्णु शिवात्मकः ॥ இந்த வாக்கியத்தை விஷ்ணுபுராணம்-௧-௨-௬௧-லுங்காண்க.

பத்துமபுராணம்-சிருஷ்டிகண்டம்-அத்-ரு-சு-உஅ-ல், * ("ஓ!
"பகவானே!) நீர் ஸகலபூதங்களுடைய உற்பத்திக்குக் காரண
"மாயிருக்கிறீர். நீர் ஸகல பூதங்களுடைய இரக்ஷணையையும் நா
"சத்தையுஞ் செய்கிறவராயிருக்கிறீர், உத்தமமான நீர் சிருஷ்டி
"காலத்திற் பிரும்மவிஷ்ணுருத்திரசுவரூபங்களைத் தரிக்கிறீர்."

ஷை-புராணம்-உத்தரகண்டம்-அத்.கசு-சு-ருக-ல், † "ஹரி
"சொல்வது—நான் சிவனாயிருக்கிறேன். சிவன் நானாகவிருக்
"றார். நாங்கள் வெவ்வேறாகவுமிருக்கிறோம்."

ஷை-கண்டம்-அத்-ககரு-சு-கச-ல், ‡ "(பகவானான கிருஷ்
"ணன்சொல்வது) யாவனொருவன் எனக்கும் உருத்திரனுக்கும்
"பேதத்தைக் கற்பிக்கிறானோ, அவனுடைய ஸகலபுண்ணியகரு
"மங்களும் பலனற்றனவாகவாகின்றனவென்பதில் ஸந்தேக
"மில்லை."

விஷ்ணுபுராணம்-க-உ-உ-ல், § "பிரும்மாவாயும் ஹரியாயும்
"சங்கரராயும் வாசுதேவராயும் ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்
"றுகிறவராயும் சிருஷ்டிஸ்திதிலயங்களுக்குக் காரணராயுமிருக்
"கிற உமக்கு நமஸ்காரம்."

ஷை-புராணம்-க-ககூ-கூகூ-ல், $ "ஸகலப்பிரபஞ்சத்தையும்
"பிரும்மாவாகவிருந்து சிருஷ்டிக்கிறீர். சிருஷ்டித்ததை விஷ்ணு
"வாகவிருந்து இரக்ஷிக்கிறீர். கற்பத்தின் முடிவில் உருத்திர
"ரூபியாயிருந்து (உலகத்தை) அழிக்கிறீர். அப்படிப்பட்ட திரு
"மூர்த்திசுவரூபியான உமக்கு நமஸ்காரம்."

---

* त्वं कर्ता सर्वभूतानां त्वं पातात्वं विनाशकृत् । सर्गादौ यःपरो ब्रह्मविष्णुरुद्रात्म रूपधृक् ॥

† हरिरुवाच । अहं शिवश्शिवश्चाहं पृथक्त्वेन व्यवस्थितौ ॥

‡ (श्रीकृष्णउवाच ।) ममरुद्रस्य यः कश्चिदन्तरं परिकल्पयेत् । तस्य पुण्यक्रियास्सर्वा निष्फलास्युर्न संशयः ॥

§ नमोहिरण्यगर्भाय हरये शंकरायच । वासुदेवाय ताराय सर्गस्थित्यन्तकारिणे ॥

$ ब्रह्मत्वे सृजते विश्वं स्थितौ पालयते पुनः । रुद्ररूपाय कल्पान्ते नमस्तुभ्यं त्रिमूर्तये ॥

சிவபுராணம்-ஞானஸம்ஹிதை-அத்-சு-சு-சக-ல், * "ஓ!
"விஷ்ணுவே! நானெப்போதும் பிரிவற்றவனே. (ஆனால்), சிரு
"ஷ்டிஸ்திதிலயகாரியங்களாகிற குணங்களினாலே ஓ! ஹரியே!
"பிரும்மா விஷ்ணு ஹரனென்கிற பெயரையடைந்து இந்த நான்,
"மூன்றுவித பேதமாயிருக்கிறேன்."

ஷை-புராணம்-ஞானஸம்ஹிதை-அத் ௫-ல், † (சங்கரர் விஷ்ணுவைப்பார்த்துச் சொல்வது) "ஓ! புருஷோத்தமா! நீ "ரென்னால் தியானிக்கத்தக்கவராகவேயிருக்கிறீர். நானுமும்மால் "தியானிக்கத்தக்கவனாகவே யிருக்கிறேன். நம்மிருவர்க்குட்பேத "மென்பது அணுமாத்திரமுமில்லை. வஸ்துவின்தன்மையநேக "மென்றுப் பிரவிருத்தியுள்ளவனுக்குங்கூட விசாரித்தறிவத "னாலே அப்படியேதான் (பேதமில்லையென்றறிவான்). எந்த "மனிதன் யென்பக்தனாகவிருந்து மும்மை நிந்திக்கிறானோ அப் "படிப்பட்டவனுடைய ஸகலபுண்ணியங்களையும் மிச்சமின்றி "சாம்பலாக்கி அந்தத்தோஷத்தினாலவனை நரகத்திற்தள்ளிவிடுகி "றேன்."

பிருஹந்நாரதீயபுராணம்-அத்-ந-ல், ‡ "ஓ! முனியே! அழி "வற்றவனும் முடிவற்றவனுமெங்கும் நிறைந்தவனுஞ் சுத் "தனுமிருக்கிற நாராயணனாலே ஸ்தாவரஜங்கமங்களாயிருக்கி "ற விந்தஸகலஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. ஆதிசிரு "ஷ்டியிற் சுவப்பிரகாசமாயும் ஜகத்ரூபமாயுமிருக்கிற விஷ்ணு "வானவர் முக்குணங்களுடைய பேதத்தைக்கைக்கொண்டுமூன்

---

* त्रिधाभिन्नोह्यहं विष्णो ब्रह्मविष्णु हराख्यया । सर्गरक्षालय गुणैर्निष्कळोयं सदाहरे ॥ இந்த வாக்கியத்தைக் கூர்மபுராணம்-பூர்வபாகம் அத்-உகூ-லுங்காண்க.

† ममध्येयं भवांश्चैव तवध्येय महं पुनः । आवयोरन्तरं नैव ह्यणुमात्रं विचारतः ॥ १७ ॥ वस्तुत्वे चाप्यनेकत्वं चरतोपि तथैवच । मद्भक्तोयो नरोभूत्वा तव निन्दां करिष्यति ॥ १८ ॥ तस्याहं सकलं पुण्यं भस्मीकृत्या विशेषतः । नरके पातयिष्यामि तद्दोषात् पुरुषोत्तम ॥ १९ ॥

‡ नारायणोऽक्षरोऽनन्तस्सर्वव्यापी निरञ्जनः । तेनेदमखिलं व्याप्तं जगत्स्थावरजङ्गमम् ॥ १ ॥ आदिसर्गे महाविष्णु स्स्वप्रकाशो जगन्मयः । गुणभेदमधिष्ठाय मूर्तित्रयमवाप्तवान् ॥ २ ॥ सृष्ट्यर्थं मसृजद्देवो दक्षिणांगात्

"மூர்த்திபாகவானர். அந்த தேவனானவர் ஜகத்சிருஷ்டியின் "பொருட்டுத் தன்னுடைய வலப்புரமங்கத்திலிருந்துப் பிரஜாப "தியையும் நடுஅங்கத்திலிருந்து ஈசானனையும் ஜகத்ஸம்ஹாரகர் "த்தாவாயுமிருக்கிற உருத்திரனென்கிற பெயருள்ளவரையுமுண் "டாக்கினர். ஜகத்தினுடைய இரக்ஷணையின்பொருட்டுத் தன் "னுடைய இடது புரமங்கத்திலிருந்து அழிவற்ற விஷ்ணுவை "யுண்டாக்கினர். இவ்விதமாய் மஹாவிஷ்ணுவானவர் சிருஷ்டி "த்துவக்கத்தில் மூன்றுவிதத் தன்மையை யடைந்தார். பிறப் "பற்றவரான அப்படிப்பட்ட ஆதிதேவனைச் சிலர் உருத்திரராக "வுஞ் சிலர் விஷ்ணுவாகவுஞ் சிலர் பிரும்மாவாகவுஞ் சிலர் பிர் "ம்மமாகவுஞ் சொல்லுகிறார்கள்."

பிருஹந்நாரதீயபுராணம்-அத்-௩-ல், * "ஹரி சங்கரர் பிரு "ம்மா இவர்களுக்குட்பேதத்தையெந்தமனிதனெண்ணுகிறானோ "அவன் சந்திர நக்ஷத்திரங்களுள்ளவரையில் நரகத்தையநுப "விக்கிறான். சங்கரனையும் ஹரியையும் பிரும்மாவையுமொரே "ரூபமாயெவனறிகிறானோ அவன் பிர்ம்மாநந்தத்தையடைகி "றான். இதுதான் சாஸ்திரங்களுடைய நிச்சயம்."

பவிஷியபுராணம்-௩-௪-அத்-௨௦-௯-ம்-ல், † "ஒரேமூர்த்தி "யினிடத்திலிருந்து பிரும்மா விஷ்ணு மஹேசுவரனென மூன் "றாக உண்டானார்கள்."

மார்க்கண்டேயபுராணம்-அத்-௪௯-ல், ‡ "ஜகத்திற்குக் "காரணமாயிருக்கிறவந்தப் பரமாத்துமா குணமற்றவரானாலும்

---

प्रजापतिं । मध्ये रुद्राख्य मीशानं जगदन्तकरं मुने ॥ ३ ॥ पालनायास्य जगतो वामाङ्गाद्विष्णुमव्ययम् । आदिसर्गे महाविष्णुरेवं त्रित्वमवाप्तवान्॥ ४ तमादि देवमजरं केचिद्रुद्रं वदन्ति वै । केचिच्च विष्णुमपरे धातारं ब्रह्म चापरे ॥ ५॥

* " हरिशङ्करयो र्मध्ये ब्रह्मणश्चापि यो नरः । भेदकृन्नरकं भुङ्क्ते यावदाचन्द्रतारकम् ॥ ४५ ॥ हरं हरिं विधातारं यः पश्येदेकरूपिणम् । स याति परमानन्दं शास्त्राणामेष निर्णयः ॥ ४६ ॥

† " एकमूर्ते स्त्रिधा जाता ब्रह्मा विष्णु र्महेश्वरः ॥

‡ उत्पन्नस्सजगद्यो निरगुणोपि रजोगुणम् । भुञ्जन्प्रवर्तते सर्गे ब्र-

"இரஜோகுணத்தைசுவீகரித்துப் பிரும்மாவென்கிற தன்மை
"யையடைந்து சிருஷ்டிகாரியத்திற் பிரவேசிக்கிறார். அப்படியே
"பிரும்மாவாகவிருந்துப் பிரஜைகளைச் சிருஷ்டித்துப் பிறகு ஸத்
"துவகுணப்பிரதாநராய்விஷ்ணுவென்கிற தன்மையையடைந்து
"ஜகத்தைத்தருமமாய் பரிபாலநஞ்செய்கிறார். அதற்குப்பிறகு
"தமோகுணப்பிரதாநராய்உருத்திரரென்கிற பெயரையடைந்து
"இந்த ஸகலஜகத்தையுமழித்தும் மூன்றுலகத்தையும் சுவப்நம்
"போற்செய்கிறார் (சுவப்நஜகத்துப்போற் பொய்யாகிறதென்
"பது கருத்து). குணமற்றவராஹனும் (சிருஷ்டிஸ்திதிஸம்ஹார
"காரியத்தின்பொருட்டு) முக்குணங்களோடு கூடியிருக்கிறார்."

—பிரும்மவைவர்த்தபுராணம்-ஸ்ரீகிருஷ்ணஜந்மகண்டம்-அத்
௭௩-௬-௫௩-ல், * "வைகுண்டத்தில் நான், நான்குகைகளோடு
"கூடிய விஷ்ணுவாயிருக்கிறேன். சிவலோகத்தில் நான் சிவ
"னாயிருக்கிறேன். பிரும்மலோகத்தில் நான் பிரும்மாவாயிரு
"க்கிறேன். பிரகாசத்தைக்கொடுக்கத்தக்க வஸ்துக்களுக்குள்
"சூரியனாயிருக்கிறேன்."

ஷை. புராணம்-ஷை-கண்டம்-அத்-௭௫-ல், † "(ஸ்ரீ பகவானு
"கிய கிருஷ்ணன்சொல்வது) சிவலிங்கத்தையுண்டாக்கி ஒருதட
"வை பூஜித்தாலும் நூறுகற்பகாலம் சுவர்க்கலோகத்தில் வசிக்
"கிறான். அப்படிப்பட்டவன் ஆயிரம் இலிங்கஞ்செய்து பூஜை
"செய்வதனாலே இஷ்டமானபலத்தையுமடைகிறான். எவன் இல
"க்ஷலிங்கஞ்செய்து பூஜைசெய்கிறானோ அவன் நிச்சயமாய் சிவ
"த்தன்மையையடைகிறான். எந்தப்பிராம்மணனவன் சிவலி

---

ह्मत्वं समुपाश्रितः ॥ १३ ॥ ब्रह्मत्वे स प्रजास्सृष्ट्वा तत स्सत्वातिरेकवान् ।
विष्णुत्वमेत्य धर्मेण कुरुते परिपालनम् ॥ १४ ॥ ततस्तमोगुणो द्रिक्तो
रुद्रत्वे चाखिलं जगत् । उपसंहृत्य वै शेते त्रैलोक्यं त्रिगुणोऽगुणः ॥ १५ ॥

* चतुर्भुजोहं वैकुण्ठे शिवलोके शिवस्स्वयम् । ब्रह्मलोके च ब्रह्माहं
सूर्यस्तेजस्विनामहम् ॥

† (श्रीभगवानुवाच) कृत्वा लिङ्गं सकृत्पूज्य वसेत्कल्पशतं दिवि ॥८२॥
सहस्रपूजनात्सोऽपि लभते वांछितं फलम् । लक्षं च पूजयेद्यस्तु शिवत्वं ल-
भते ध्रुवम् ॥ ८३ ॥ जीवन्मुक्तो भवेद्विप्रो लिङ्गमभ्यर्चयेत्तु यः । शिव-

"ங்கத்திற் பூஜைசெய்கிறானோ அவன்ஜீவன் முக்தனாகிறான். சிவ "பூஜைசெய்யாத பிராம்மணன் நரகத்தையடைகிறான். எந்த "மனிதர்கள் என்னாற் பூஜிக்கப்பட்டவரும் மிகவும் பிரியமுள்ள "வருமான சிவனை நிந்திக்கிறார்களோ அவர்கள் நூறு பிரும்மா "வினுடையகாலம் எவ்வளவோ அவ்வளவுவரையில் நரகத்தில் "வேகவைக்கப்படுகிறார்கள்."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்·௩௧-௬-௯-ல், * "ஒரே "மூர்த்தியானது தமோகுணத்தினாலே காலாக்நி உருத்திரராக "வும் இரஜோகுணத்தினாலே பிரும்மாவாகவும் பிரகாசமான "ஸத்துவகுணத்தினாலே விஷ்ணுவாகவுமிருக்கிறது. இவருக்கு "(இவ்விதமாய் மூன்று) ரூபங்கள் சொல்லப்படுகின்றன."

ஷை-ஷை-அத்·௯௫-௬-௩௭-ல், † "சிவனாகவும் உருத்திர "னாகவும் சங்கரனாகவும் மங்களசுவரூபனாகவும் மோக்ஷத்தைக் "கொடுக்கத்தக்கவனாகவும் பிரபஞ்சசுவரூபனாகவும் விஷ்ணு "வாகவும் பிரும்மாவாகவுமிருக்கிற உமக்கு நமஸ்காரம் நமஸ் "காரம்."

இலிங்கபுராணம்·உத்தரபாகம்-அத்-௬-ல், ‡ "நாராயணா, "ஹிருஷீகேசா, புண்டரீகாக்ஷா, மாதவா, அச்சுதா, அநந்தா, "கோவிந்தா, வாசுதேவா, ஜநார்த்தநா என்றும் உருத்திரா, "உருத்திரா, உருத்திரா, சிவா என்றும், சிவதரா என்றும் சங் "கராஎன்றும் மஹாதேவா, மஹாதேவா, மஹாதேவாஎன்றும் "இப்படிப்போலொற்ற நாமங்களை யெவன்சொல்லி நமஸ்காரஞ்

---

पूजाविहीनश्च ब्राह्मणो नरकं व्रजेत् ॥ ८४ ॥ मत्पूजितं प्रियतमं शिवं निन्दन्ति ये नराः । पच्यन्ते निरये तावद्यावद्ब्रह्मणश्शतम् ॥ ८५ ॥

* तमोह्यग्नी रजो ब्रह्मा सत्वं विष्णुः प्रकाशकम् । मूर्तिरेका स्थिता चा स्य मूर्तयः परिकीर्तिताः ॥

† नम श्शिवाय रुद्राय शङ्कराय शिवाय ते । मयस्कराय विश्वाय विष्णवे ब्रह्मणे नमः ॥

‡ नारायण हृषीकेश पुण्डरीकाक्षमाधव । अच्युतानन्त गोविन्द वासुदेव जनार्दन ॥ १९ ॥ रुद्र रुद्रेति रुद्रेति शिवाय च नमो नमः । नमश्शिवतरायेति शङ्करायेति सर्वदा ॥ २० ॥ महादेव महादेव महादेवेति

"செய்துகொண்டிருக்கிறானோ (அப்படிப்பட்டவனுடைய வாச
"ஸ்தலத்தில், ஓ! துஸ்ஸஹா! நீ பிரவேசியாதே)."

இம்மாதிரியாகவே சிவ விஷ்ணுநாமங்களைச்சொல்லிக்கொண்டிருக்கிற மனிதர்களுடைய வாசஸ்தலங்களில் மூதேவியும் அவள்கணவனான துஸ்ஸஹனும் பிரவேசிக்கக்கூடாதென்றும் இப்படிச் சிவவிஷ்ணுக்களுடைய நாமோச்சாரணமில்லாதவும் துராசாரந்துர்நடத்தை முதலியவும் எந்தமனிதர்களிடத்திலிருக்கின்றனவோ அப்படிப்பட்டவர்களுடைய வாசஸ்தலத்தில், ஓ! துஸ்ஸஹா! உன்பாரியையான மூதேவியுடன் நீ பிரவேசிக்கலாமென்று பகவானுக்ஞைசெய்ததாகவிந்தவத்தியாயம் முழுதிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

வராஹபுராணம்-அத்-ரு-ச-ருரு-ல், * "யார் பிரும்மாவாயி
"ருந்து சிருஷ்டிசெய்கிறாரோ, சக்கிரபாணி (விஷ்ணு) யாயிருந்
"து பரிபாலநஞ்செய்கிறாரோ, யார் பிரளயகாலத்திற் காலாக்நி
"சுவரூபமாயிருந்து ஸம்ஹாரஞ்செய்கிறாரோ அப்படிப்பட்ட
"யக்ஞமூர்த்தியை யெப்போதும் நமஸ்கரிக்கிறேன்."

ஷை-புராணம்.அத்-எ0-ல், † "உருத்திரர்சொல்வது—யார்
"விஷ்ணுவோ அவரேபிரும்மா. யார் பிரும்மாவோ அவரே
"மஹேசுவரரென்று மூன்றுவேதங்களினாலேயும் யக்ஞவிதிகளி
"னாலேயும்வித்துவான்களினாலேயும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.
"எந்தப்பிராம்மணனானவனெங்கள் மூவருக்குட்பேதத்தையெ
"ண்ணுகிறானோ அவன் பாபத்தைச்செய்கிறவனாயுந் துர்புத்தி
"யுள்ளவனாயுமிருக்கிறான். இப்படிப்பட்டவன் துர்க்கதியை
"யடைகிறான்."

வராஹபுராணம்-அத் எ௩-ச-௩அ-ல், ‡ "விஷ்ணு சொல்

कीर्तयेत् ॥ ६१ ॥

* चतुर्मुखो यस्सृजते समग्रं रथाङ्गपाणिः परिपालनाय । क्षयाय कालानलसन्निभो यस्तं यज्ञमूर्तिं प्रणतोस्मि नित्यम् ॥

† रुद्रउवाच । यो विष्णुस्स स्वयं ब्रह्मा यो ब्रह्मा सौ महेश्वरः ॥ २६ ॥ वेदत्रये च यज्ञेस्मिन् पण्डितेष्वेष निश्चयः । यो भेदं कुरुतेऽस्माकं त्रयाणां द्विजसत्तमः । स पापकारी दुष्टात्मा दुर्गतिं समवाप्नुयात् ॥ २७ ॥

‡ विष्णुरुवाच । वरं वरय भद्रोऽस्तु देव देव उमापते । न भेद

"வது—ஓ! தேவதேவனுகிய உமாபதே! உமக்கு மங்களமுண்
"டாகட்டும்; ஓ! தேவா! வேண்டியவரத்தைக்கேளும் நம்மிருவ
"ருக்குட் பேதமில்லை. நாமிருவருமொன்றேதான்."

வராகபுராணம் அத் கூ0-ல்,* "பிரும்மாவானவரிவ்விதமாய்
"த்தானே சொல்லிச் சிவனைப்பார்த்தார். பரமேசுவரனுகிய
"நாராயணனை நினைத்தார். உடனே நாராயணனுன தேவன்
"அவ்விருவர்களுக்கும் நடுவிலிருந்தார். பிறகந்தப்பிரும்மா
"விஷ்ணு மஹேசுவரர்கள் ஒன்ருயானுர்கள். பிறகு அவர்க
"ளுடைய மூன்று விதமான தோற்றமானது ஒன்ருகவாய்வி
"ட்டது."

ஸ்காந்தபுராணம் காசிகண்டம் பூர்வபாகம்-அத்-உ-சு ௬ச-ல், † "இரஜோகுண சுவரூபியான பிரும்மாவாயும் ஸத்துவ
"குண சுவரூபியான விஷ்ணுவாயும் தமோகுண சுவரூபியான
"உருத்திரனுயுமிருந்து சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரியங்களைச்
"செய்கிற உமக்கு நமஸ்காரம்."

ஷை-புராணம்-காசிகண்டம்-பூர்வபாகம் அத்-அ-சு-கூகூ-ல், ‡ "யமன் சொல்வது—ஓ! படர்களே! எப்போதுமெவர்கள்
"கோவிந்தா, மாதவா, முகுந்தா, ஹரே, முராரே, சம்போ.
"சிவா, ஈசா, சசிசேகரா, சூலபாணே, தாமோதரா, அச்சுதா,
"ஜநார்த்தநா, வாசுதேவா, என்கிற இப்படிப்பட்ட நாமங்களைச்
"சொல்லுகிருர்களோ அவர்களை விட்டுவிடுங்கள்."

---

श्चावयो र्देव एका वा वा मुभावपि ॥

* एवमुक्त्वा स्वयं ब्रह्मा वीक्षाञ्चक्रे पिनाकिनम् । नारायणं च मनसा संस्मार परमेश्वरम् ॥ १६ ॥ ततो नारायणो देवो द्वाभ्यां मध्ये व्यवस्थितः । तत स्त्वेकीगतास्ते तु ब्रह्मविष्णुमहेश्वराः ॥ १७ ॥

† विष्णवे सत्वरूपाय रजोरूपाय वेधसे । तमसे रुद्ररूपाय स्थितिसर्गान्तकारिणे ॥

‡ यमउवाच । गोविन्द माधव मुकुन्द हरे मुरारे शम्भो शिवेश शशिशेखर शूलपाणे । दामोदराच्युत जनार्दन वासुदेव त्याज्या भटाय इति सन्ततमामनन्ति ॥

இந்த சுலோகத்தினர்த்தமுள்ளதாகவே இது முதல் இந்த அத்தியாயம்·௧௮-வது சுலோகம் வரையிற் சிவ விஷ்ணு நாமங்களிலநேக நாமங்களைச்சொல்லி யிப்படிப்பட்ட நாமோச்சாரணஞ் செய்கிறவர்களுடைய ஸமீபத்திற்கு நீங்கள் போகக் கூடாதென்று யமதூதர்களுக்கெமன் உத்தரவு செய்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுற் சிவவிஷ்ணுக்களுடைய நாமோச்சாரணத்திற்குப் பலனொன்றே யென்று நிச்சயிக்கப் பட்டதாயாகிறது.

ஸ்காந்தபுராணம்-காசிகண்டம்-பூர்வார்த்தம்-அத்-௨௩-சு-௪௧-ல், * "சிவனெப்படியோ அப்படியே விஷ்ணுவும். விஷ் "ணுவெப்படியோ அப்படியே சிவனும். சிவவிஷ்ணு இவர்க "ளுக்குள்ளற்பமேனும் பேதமில்லை."

ஸ்காந்தபுராணம்-ஸஹ்யாத்திரிகண்டம்-உத்தரார்த்தம்-அத்-௯·சு-௩௫-ல், † "மிகவும் பிரியமுடையவளாகிய பருவதராஜ 'குமாரியான பார்வதியினுடையவும் ஸமுத்திரராஜனுடைய கந் 'நிகையான இலக்ஷ்மீயினுடையவும் வசமான மனதையுடைய "வராயும் சூரியன் சந்திரன் அக்நி இவர்களை நேத்திரங்களாயு "டையவராயும் சங்கரராயும் ஸ்ரீமன்நாராயணராயும் பரிசுத்தரா "யுமிருக்கிற சிவன் பொருட்டு நமஸ்காரம்."

இந்த சுலோகத்தைப்போலவே இந்த அத்தியாயத்தில் எட்டு சுலோகங்கள் சிவவிஷ்ணுக்களையபேதமாய்ச் சொல்லு கின்றன.

ஷை-புராணம்-ஷை-கண்டம்·மாங்கீஷமாஹாத்துமியம்-அத்-௪-ல், ‡ "மஹாதேவர் சொல்வது—எனக்கும் விஷ்ணுவுக்குமெ "வர்கள் பேதத்தை நினைக்கிறார்களோ அவர்கள் மனிதர்களிற் "கடையோராயிருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள், பஞ்சபூ

---

* यथा शिव स्तथा विष्णु र्यथा विष्णु स्तथा शिवः । अन्तरं शिवविष्णवोश्च मनागपि न विद्यते ॥

† धारानुरागधरणी धरराजकन्या वारा करेन्द्रतनया वशमानसाय । सूर्येन्दुवह्निनयनाय च शङ्करश्रीनारायणाय विमलाय नमश्शिवाय ॥

‡ मम विष्णवो श्चान्तरं ये प्रपश्यन्ति नराधमाः । पतन्ति नरके घोरे यावदाचन्द्रसम्प्लवम् ॥ ४१ ॥ मद्भक्तिनिरता ये तु वैष्णवास्ते प्रकीर्तिताः ।

"தங்களுள்ளவரையிற் கோரமான நரகத்தில் விழுகிறார்கள். யா
"ரென்னிடத்தில் நிலையான பக்தியுள்ளவர்களோ அப்படிப்
"பட்டவர்கள் விஷ்ணு பக்தர்களென்று சொல்லப்படுகிறார்கள்.
"யார் விஷ்ணுவினிடத்தில் நிலையான பக்தியுள்ளவர்களோ அப்
"படிப்பட்டவர்கள் சிவபக்தர்களென்பதிற் சந்தேகமில்லை.
"நான் விஷ்ணு பக்தர்களுக்கெல்லாங் குருவாயும் ஸம்ஸாரமாகிற
"ஸமுத்திரத்திலிருந்து கரையேற்றுகிறவனுயுமிருக்கிறேன்."

ஷ-சூதஸம்ஹிதை-பிரும்மகீதை அத்-உ-சு-சச-ல்,* "பிரு
"ம்மாவையும் கேசவனையும் உருத்திரனையுமொன்றென்றறியாத
"பாஷண்டர்கள் மோகத்தையடைந்தவர்களாய்ப் பேதபுத்தியி
"னுற் பார்க்கிறார்கள்."

வாமநபுராணம்-அத்-கூஎ ல், ‡ "உருத்திரர்சொல்வது—
"பக்தியோடுகூடியவர்களான நீங்கள்கருத்துடன்ஹரனைப் (என்
"னை) பூஜித்தீர்கள். அகங்காரத்தினுல் மூடத்தன்மையை
"யடைந்த நீங்கள் விஷ்ணுஸம்பந்தமான ஸ்தாநத்தை நிந்தித்
"தீர்கள். அப்படிப்பட்ட மூடஞாநத்தினுல் உங்களுக்கு நாங்
"கள் பேதமற்றவர்களென்கிற ஞாநமில்லாமற்போயிற்று. நா
"னே பகவானுனவிஷ்ணு. அந்தவிஷ்ணுவேதான் நாசமற்ற
"நான். எங்களிருவருக்குட் பேதமென்பதில்லை. ஒரேமூர்த்தி
"இரண்டு விதமாயிருக்கிறது. ஆகையால், ஓ! கணங்களே!
"பக்தியோடுகூடிய மனிதசிரேஷ்டர்களெப்படி யென்னைச் செவ்
"வையாயறிகிறார்களோ அப்படி ஹரியையுஞ் செவ்வையாயறிகி

---

विष्णुभक्तिरताश्चैव ते शैवास्तु न संशयः ॥ ४२ ॥ वैष्णवानां गुरुरहं मोचिता भवसागरात् ॥ ४३ ॥

* ब्रह्माणं केशवं रुद्रं भेदभावे न मोहिताः । पश्यन्त्ये कं न जानन्ति पाषण्डोपहता जनाः ॥

‡ रुद्रउवाच । भवद्भिर्भक्तिसंयुक्तै हरो भावेन पूजितः । अहङ्कारविमूढैश्च निन्दद्भिर्वैष्णवं पदम् ॥ २६ ॥ ते न ज्ञानेन भवतां सादृश्यं हि निवारितम् । यो हंसभगवान् विष्णुर्यश्चासौ सोहमव्ययः ॥ २७ ॥ नावाभ्यां वै विशेषोस्ति एका मूर्ति र्द्विधा स्थिता । तदमीभि र्नरव्याघ्रै भक्तिभावयुतैर्गुणाः ॥ २८ ॥ यथा हं वै परिज्ञातो न भवद्भि स्तथा हरिः ।

"றார்கள். நீங்களப்படியறிகிறதில்லை. ஏனெனில், மூடபுத்தி
"யுள்ள உங்களாலே ஹரிநிந்திக்கப்பட்டதனாற்றான். அதனா
"லுங்களுக்கு ஞானமானது நஷ்டமாய்ப்போய்விட்டது. அதனா
"லேதான் நீங்களென்னுடன் விஷ்ணுவையாலிங்கநஞ்செய்து
"கொள்ளவில்லை. இப்படிச்சொன்ன மஹேசுவரரைப்பார்த்து
"க்கணங்கள் சொல்லுகிறார்கள்.—ஞானத்தினாலே பரிசுத்தரா
"யும் சுத்தஸ்படிகம்போற் பிரகாசிக்கிறவராயுஞ் சாந்தராயும்
"வெளுமையுள்ளவராயுங் களங்கமற்றவராயுமிருக்கிறநீரும்;மை
"போற் கறுமைநிறமாயிருக்கிற ஹரியுமொன்றாயிருத்தலெப்
"படிக்கூடும்? இவ்விதமாய்க்கேட்டக் கணங்களுடைய வாக்கி
"யார்த்தத்தை ஜீமூதகேதநரான பகவான் கேட்டுச்சிரித்துக்
"கொண்டு கணங்களைப்பார்த்து மேககர்ஜனைபோற் கம்பீரமான
"வார்த்தையைச்சொன்னார்.—உங்களுக்குக் கீர்த்திவிருத்தியா
"கும்படியான வாக்கியத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.
"நீங்களோ விசேஷஞானத்திற்கெப்போதும் யோக்கியர்களல்
"லாதவர்களல்ல. எதுவென்னுடைய மனதிலெப்போதுமிவ்
"விதமாய் பிரீதியோடுகூடியிருக்கிறதோ இதனாலும் உங்களு
"டைய அபவாதத்திற்குப் பயந்தும் இரஹஸியமானது வெளி
"யிடப்படுகிறது. நீங்கள் எவ்விடத்தில் (என்னிடத்தில் அல்
"லது விஷ்ணுவினிடத்தில்) ஆசிரயித்திருந்தாலும் (எங்களை)
"ஓரேரூபமாயுமோரேதேகமாயும் பாவிக்கவேண்டியது.
"பிரயத்நத்தினாலே சந்தணம் பால் முதலிய சிரேஷ்ட வஸ்து

---

यथा विनिन्दितो ह्यस्मात् भवद्भि र्मूढबुद्धिभिः ॥ २९ ॥ तेन ज्ञानं हि वो नष्टं नातस्त्वालिंगितो मया । इत्येव मुक्ते वचने गणाः प्रोचुर्महेश्वरम् ३०॥ कथं भवान् सहैक्यं हि संस्थितो ज्ञाननिर्मलः । शुद्धस्फटिकसङ्काश श्शान्तश्शुक्लो निरञ्जनः ॥ ३१ ॥ सचाप्यञ्जनसङ्काशः कथं तेनेह युज्यते । तेषां वचनमर्थाढ्यं श्रुत्वा जीमूतकेतनः ॥ ३२ ॥ विहस्य मेघगम्भीरं गणानेव मुवाच ह । श्रूयतां सर्वमाख्यास्ये स्वयशोवर्धनं वचः ॥ ३३ ॥ नत्वयोग्याश्च यूयं हि महाज्ञानस्य कर्हिचित् । अपवादभयाद्गुह्यं भवतां हि प्रकाश्यते ॥ ३४ ॥ प्रीत्यैवमपि वै तेन यन्मे चेतसि नित्यशः । एकरूपमेकदेहं कुरुध्वं यत्र चाश्रिताः ॥ ३९ ॥ पयसा हविषाद्यैश्च स्नापयेत्तत्प्रयत्नतः ।

"க்களாலபிஷேகஞ்செய்வது அந்நம் முதலியவைகளை நிவேத
"நஞ்செய்வது இவைகளினாலதைப்போல (ஏகரூபமாய் பாவனை
"செய்வதைப்போல) எனக்குப் பிரீதியுண்டாகிறதில்லை. யெத்
"தநத்தினாற் கத்தியை யெடுத்துக்கொண்டு யென் தேகத்தை
"வெட்டுங்கள் அப்படி வெட்டிப்பார்த்தாலுங்கூட அழிவற்ற
"விஷ்ணுவானவர் என்னுடைய தேகத்திற் காணப்படுவார்.
"யாரை நீங்கள் நிந்தித்தீர்களோ அவர் (அந்த விஷ்ணு) ஜகத்
"திற்கு நாதனாயுஞ் செந்தாமரைக் கண்ணனாயுமென் சுவரூபமா
"யுமிருக்கிறார். எப்போது மெங்கும் வியாபித்தவராயுங்
"கணங்களுக்கெல்லாமீசுவரனாயும் ஸகல சுவரூபியாயுமிருக்கிற
"பகவானவரே. அவருக்குச் சமானமாக ஸ்தாவர ஜங்கமங்கள
"டங்கிய விந்த ஜகத்திலொருவருமில்லை. அந்தப்பகவானானவர்
"வெண்ணிறமுள்ள மூர்த்தியாயும் மஞ்சள் நிறமுள்ள மூர்த்தி
"யாயுஞ் சிவப்பு நிறமுள்ள மூர்த்தியாயும் ஜகத்திற்கெல்லாமெஜ
"மானனாயுமிருக்கிறார். ஆகையினாலே, இவ்வுலகத்திலவரைவிட
"வேறொன்று சிரேஷ்டமாயும்ஸத்தியமாயுமில்லை. ஸாத்துவிக
"குணத்தையும் இராஜஸ குணத்தையுந் தாமஸ குணத்தையுமப்
"படியே மிசிர (குணக்கலப்பு) குணத்தையு மந்தபகவான் தான்
"சுவீகரிக்கிறார். ஸகலராலும் பூஜிக்கத்தக்க ஸதாசிவனு
"மவரே. (இவ்விதமாய்ச்சொல்லி) அந்த ஈசுவரரானவர் சுத்த
"மாயும் மங்கள சுவரூபமாயும், சக்கிர ரேகையுள்ள அநேக
"கால்களையு மநேககைகளையுமுடைய ஈசுவரஸம்பந்தமான ரூப
"த்தைக்காண்பிவித்தார். கையிற் தண்டாயுதத்தையுடைய

चन्दणादिभिरेवाग्न्यै र्न मे प्रीतिः प्रजायते ॥ ३६ ॥ यत्नात् क्रकचमादाय छिन्दध्वं मम विग्रहम् । तथापि दृश्यते विष्णु र्मम देहे सनातनः ॥ ३७ ॥ यन्निन्दध्वं जगन्नाथं पुष्कराक्षञ्च मन्मयम् । सदैव भगवान् सर्वं स्सर्वव्यापी गणेश्वरः ॥ ४० ॥ न तस्य सदृशो लोके विद्यते स चराचरे । श्वेतमूर्ति स्स भगवान् पीतो रक्तो जगत्पतिः ॥ ४१ ॥ तस्मात्परतरं लोके नान्यत् सत्यं हि विद्यते । सात्विकं राजसं चैव तामसं मिश्रकं तथा ॥ ४२ ॥ स-एव धत्ते भगवान् सर्वपूज्य स्सदाशिवः ॥ ४३ ॥ दर्शयामास तद्रूपं स च शैवं निरञ्जनम् । सहस्रचक्रचरणं सहस्रभुजमैश्वरम् ॥ ४५ ॥ दण्डपाणिं

“வராகவும் ஜநங்களால் ஸாதாரணமாய்ப் பார்க்கத்தகாதவராக
“வும் எங்கும் நிறைந்தவராகவுமானார். அந்தரூபத்திற் றண்ட
“னைக்கு யோக்கியமாயிருக்கிற அநேக திவ்வியாயுதங்கள் காண
“ப்பட்டன. பிறகு அந்தக்கணங்கள், ஒருமுகமுடையவராய்ச்
“சங்கரரைப் பார்த்தார்கள். பிறகு உருத்திரஸம்பந்தமானவும்
“விஷ்ணுஸம்பந்தமானவு மநேகவடையாளங்களையுடையவராக
“வானார். பிறகு ஒருபாதி விஷ்ணுரூபமாகவும் மற்றொருபாதி
“சங்கரரூபமாகவுங் கருடத்துவஜத்தோடு விருஷபத்திலிருக்கிற
“வராகவும் விருஷபத்துவஜத்தோடு கருடன்பேரிலிருக்கிறவரா
“கவுமானார். சங்கரர் அரைக்ஷணத்தில் விஷ்ணுவாகவும் க்ஷண
“த்திற் சங்கரரே பிரும்மாவாகவுமானார். இந்த ஆச்சரியத்தை
“சிவகணங்கள் பார்த்து பிரும்மா விஷ்ணு இந்திரன் சூரியன்
“இவர்களையும் தேவதேவனையுஞ் சாசுவதனையுமிருக்கிற சிவனை
“யுமெப்போது பேதமற்றவர்களாகவறிந்தார்களோ அப்போத
“ந்த சிவகணங்கள் பாபமற்றவர்களானார்கள்.”

கூர்மபுராணம்-பூர்வபாகம்-அத் உ-ல், * “(விஷ்ணுவாகிய)
“நானும்மஹாதேவனும்வாஸ்தவமாய்ப்பேதமுள்ளவர்களல்ல.”

ஷை.புராணம்-பூர்வபாகம்-அத்-ச-ல், † “பகவானாகிய இந்த
“நான்முகரானவர் ஜகத்சிருஷ்டியிற் பிரவிருத்தித்திருக்கிறார்.
“பிரபஞ்ச சுவரூபியாயும் எங்கும் முகமுடையவராயும் ஜகத்தி
“ற்கீசனையுமிருக்கிற விஷ்ணுவானவர்தானே ஸத்துவகுணத்தை

---

सुदुर्दृश्यं लोकैर्व्याप्तं समन्ततः । दण्डसंस्थानि दृश्यन्ते देवप्रहरणानि च॥४६
ततस्त्वेकमुखं भूयो ददृशु श्शङ्करं गणाः । रौद्रैश्च वैष्णवै श्चैव धृतं चिह्नै
स्सहस्रशः ॥ ४७ ॥ अर्धेन वैष्णववपु रर्धेन हरविग्रहः । खगध्वजं वृषा-
रूढं खगारूढं वृषध्वजम् ॥ ४८ ॥ क्षणार्धाच्छङ्करो विष्णुः क्षणाच्छर्वः
पितामहः । ततस्तदद्भुततमं दृष्ट्वा शैवादयो गणाः ॥ ५२ ॥ अथा जानन्त
चैक्येन ब्रह्मविष्णवीन्द्रभास्करम् । यदा त्वभेदेनाजानन् देवदेवं सनातनम्॥
तदा निर्धूतपापास्ते समजायन्त पार्षदाः ॥ ५४ ॥

* अहं चैव महादेवो न भिन्नः परमार्थतः ॥

† चतुर्मुखस्तु भगवान् जगत्स्रष्टौ प्रवर्तते । स्रष्टं च पाति सकलं
विश्वात्मा विश्वतो मुखः । सत्वं गुणमुपाश्रित्य विष्णुर्विश्वेश्वरस्स्वयम् । अ-

"யாசிரயித்து சிருஷ்டிக்கப்பட்ட ஸகலத்தையுமிரக்ஷிக்கிறார். "ஸகலத்திற்குமாத்துமாவாயும் பரமேசுவரனாயுமிருக்கிற பரமா "த்துமாவாகிய தேவனானவர் தானே தமோகுணத்தை யாசிர "யித்துப் பிரளயகாலத்தில் உருத்திரனாக ஜகத்தை நாசஞ் "செய்கிறார்."

கூர்மபுராணம்-பூர்வபாகம்-அத்-க0-ல், * "ஓ! ஜகத்சுவரூ "பியே! உம்மால் ஸகலமுஞ் சிருஷ்டிக்கப்பட்டது. உம்மால் "ஸகலமும் நிலைபெற்றிருக்கிறது. பிரதாநம் முதலிய ஸகலப் "பிரபஞ்சமும் உம்மாலேயே நாசஞ்செய்யப்படுகிறது. ஓ! பிரா "ம்மணோத்தமா! பிரும்மா விஷ்ணு சிவன் இவர்கள் முறையே "சிருஷ்டிஸ்திதி நாசங்களுக்குக் காரணமாயிருக்கிறார்கள். சங் "கரரொருவரேயானாலுமிவர் தன்னுடையவிச்சையினாற்தன்னைப் "பிரித்துக்கொண்டிருக்கிறார்."

கூர்மபுராணம்-பூர்வபாகம்-அத்-கரு ல், † "மஹாயோகியா "யும் உலகரக்ஷகராயு மழிவற்றவராயுமிருக்கிற விஷ்ணு யாரோ "அந்ததேவனே பகவானான உருத்திரனாயும் மஹாதேவனாயுமிரு "க்கிறார். இதில் ஸந்தேகமில்லை. யார் ஜகத்திற்குக் காரணமான "விஷ்ணுவை ஈசுவரரைக்காட்டிலும் மோஹத்தினால் வேறா "யெண்ணுகிறார்களோ அப்படிப்பட்ட மனிதர்கள் வேதத்தில் "நிச்சயபுத்தியில்லாதவர்களானதனால் நரகத்தையடைகிறார்கள். "வேதமார்க்கத்தையநுஸரிக்கிறவர்கள் உருத்திரனையுந் தேவ "னான நாராயணனையுமொன்றாகவே பாவனை செய்கிறார்கள். அவ் "விதமாய்ப் பாவனைசெய்கிறவர்கள் மோக்ஷத்திற்கு யோக்கியர்

---

न्तकाले स्वयं देव स्सर्वात्मा परमेश्वरः । तमोगुणं समाश्रित्य रुद्रः संहरते जगत् ॥

* त्वयैव स्रष्टमखिलं त्वय्येव सकलं स्थितम् । त्वया संह्रियते विश्वं प्रधानाद्यं जगन्मय । ब्रह्मविष्णुशिवाब्रह्मन् सर्गस्थित्यन्तहेतवः । विभज्यात्मानमेकोपि स्वेच्छया शङ्करः स्थितः ॥

† यस्तु चैष महायोगी रक्षको विष्णुरव्ययः । स देवो भगवान् रुद्रो महादेवो न संशयः । मन्यन्ते ये जगद्योनिं विभिन्नं विष्णुमीश्वरञ्च मोहादवेदनिष्ठत्वात्ते यांति नरकं नराः । वेदानुवर्तिनो रुद्रं देवं नारायणं तथा ।

"களாயிருக்கிறார்கள். யார் விஷ்ணுவோ அவர்தான் உருத்தி"ரன். யார் உருத்திரனோ அவர்தான் ஜநார்த்தநன். இப்படியறி"ந்து அந்தத் தேவனை பஜிக்கவேண்டியது. இப்படி பஜிக்கிற"வன் உத்தமமான கதியையடைகிறான்."

கூர்மபுராணம்-உத்தரபாகம்-அத்.௫.ல்,* "யோகிகளுடைய "ஹிருதயத்திலிருக்கிறவராயும் யோகமாயையினாற் சூழப்பட்"டவராயும் ஜகத்காரணராயும் துன்பமற்றவராயுமிருக்கிற நாரா"யணனை க்ஷணத்தில் ஈசுவரரோடு ஐக்கியத்தையடைந்தவராக "பிர்ம்மஞாநிகள் பார்த்தார்கள். ஈசுவரஸம்பந்தமான அந்தருத்"திரரூபத்தை நாராயணசுவரூபமாகப் பார்த்து அவ்விடத்திலி"ருந்த பிர்ம்மஞாநிகள் தங்களுடைய ஆத்துமாவை கிருதார்த்"தமானதாக எண்ணினார்கள்.—நீரே விஷ்ணு. நீரே பிரும்மா. "நீரே பகவானுமீசுவரனுமிருக்கிற உருத்திரர் (என்று ஸ்"தோத்திரஞ் செய்தார்கள்)."

கூர்மபுராணம்-உத்தரபாகம்-அத்-௧௧ ல், ‡ "காணக்"கூடாதவரான இந்தவிஷ்ணுவையும் மஹேசுவரனுந் தேவனு"மான என்னையுமொன்றென்கிற பாவனையினாலெவர்கள் பார்க்"கிறார்களோ அவர்களுக்கு மறுபிறப்பில்லை. நாராயணனை நிந்"தியாதவனாயென்னையாசிரயித்தவன் மூடனாயிருந்தாலும் வித்"துவானாயிருந்தாலும் பிராம்மணனாயிருந்தாலும் நாய்மாம்ஸத்"தைப் புஜிக்கிறவனாயிருந்தாலும் நானவனை ஸகலபந்தங்களி"லிருந்தும் விடுவிக்கிறேன்."

---

एकीभावेन पश्यन्ति मुक्तिभाजो भवन्ति ते । यो विष्णुस्सस्वयं रुद्रो यो रुद्र स्स जनार्दनः । इति मत्वा भजेद्देवं स याति परमां गतिम् ॥

* योगिनां हृदि तिष्ठन्तं योगमायासमावृतम् । क्षणेन जगतो योनिं नारायणमनामयम् । ईश्वरेणैक्यमापन्नमपश्यन् ब्रह्मवादिनः । दृष्ट्वा तमैश्वरं रूपं रुद्रं नारायणात्मकम् । कृतार्थं मेनिरे सन्त स्स्वात्मानं ब्रह्मवादिनः ।—त्वमेव विष्णुश्चतुराननस्त्वं त्वमेव रुद्रो भगवानपीशः ॥

‡ येत्वेनं विष्णुमव्यक्तं मां च देवं महेश्वरम् । एकीभावेन पश्यन्ति न तेषां पुनरुद्भवः । मूर्खं वा पण्डितं वापि ब्राह्मणं वा मदाश्रयम् । मोचयामि श्वपाकं वा नारायणमनिन्दकम् ॥

மத்ஸியபுராணம்-அத்-ரு-சு-கசு-ல், * "ஒரேமூர்த்தியா "னது, பிரும்மா விஷ்ணு மஹேசுவரர்களாகிற மூன்றுபிரிவாயி "ருக்கிறது."

ஷை-புராணம்-அத்-சூகூ-சு-ருஉ-ல், † "சிவனுடையஹிருத "யத்திலே விஷ்ணு, விஷ்ணுவினுடைய ஹிருதயத்திலே சிவன். "எப்படி நானவ்விருவர்களுக்குட் பேதத்தைப் பார்க்கவில் "லேயோ அதனுலெனக்கு மங்களமும் ஆயுஸுும் (உண்டாகி "றது)."

ஷை புராணம்-அத்-உசகூ-ல், ‡ "தேவதாநவர்கள் சொல் "லுகிறார்கள்.— மூன்றுலோகத்திற்கெஜமானனுயிருக்கிறவரே! "ஒளியினுலே சூரியனை ஜயித்தவரே! உமக்குநமஸ்காரம். ஓ! "விஷ்ணுவே! உமக்கு நமஸ்காரம். ஜயிக்குந்தன்மையுடைய "வரே! உமக்கு நமஸ்காரம். கைடபனென்கிற அசுரனை ஸம்ஹா "ரஞ்செய்தவரே உமக்கு நமஸ்காரம். சிருஷ்டிகாரியத்திற்குக் "கருத்தாவானவுமக்கு நமஸ்காரம். ஜகத்தைப்பரிபாலநஞ்செ "ய்கிறவுமக்கு நமஸ்காரம். உருத்திரரூபியாயுஞ் சர்வனென்கிற "சிவரூபியாயுமிருந்து ஸம்ஹாரகாரியத்தைச் செய்கிறவுமக்கு "நமஸ்காரம்."

கருடபுராணம்-பூர்வபாகம்-அத்·ச-சு-கக-ல், § "ஹரியான "வர் தானே, பிரும்மாவாகவிருந்து ஜகத்தைச் சிருஷ்டிக்கிறார். "விஷ்ணுவாகவிருந்து ஜகத்தை இரக்ஷிக்கிறார். உருத்திரரூபி "யாயிருந்துப் பிரளயகாலத்தில் ஜகத்தையழிக்கிறார்."

---

* एका मूर्तिस्त्रयोभागा ब्रह्मविष्णुमहेश्वराः ॥

† शिवस्य हृदये विष्णु र्विष्णोश्च हृदये शिवः । यथान्तरं न पश्यामि तथा मे स्वस्ति चायुषः ॥ இந்த வாக்கியத்தைப் பத்துமபுராணம்-ஸிருஷ்டிகண்டம்-அத்-உரு-சு-சூ௦-லும், காண்க.

‡ देवदानवा ऊचुः । नमो लोकत्रयाध्यक्ष तेजसा जितभास्कर । नमो विष्णो नमो जिष्णो नमस्ते कैटभार्दन ॥ ३७ ॥ नमस्सर्गक्रियाकर्त्रे जगत्पालयते नमः । रुद्ररूपाय शर्वाय नम स्संहारकारिणे ॥ ३८ ॥

§ ब्रह्मा भूत्वाऽसृजद्विष्णुर्जगत्पाति हरिस्स्वयम् । रुद्ररूपी च कल्पांते जगत्संहरते प्रभुः ॥

பிரும்மாண்டமென்கிற வாயுபுராணம்-உத்தரபாகம்-அத்-௫-ல், * "மேகமானதொன்றாயிருந்தாலும் ரூபத்தினாலேயும் "வர்ணத்தினாலேயும் பலவாகவிருக்கிறதெப்படியோ அப்படிக் "குணவசத்தினாலந்த ஈசுவரனும் ஒருவராயுமிருவராயும் மூவரா "யுமாகிறார். அம்மூவர்களே பிரும்மா உருத்திரர் புருஷனென் "கிற விஷ்ணு இவர்களாயிருக்கிறார்கள். தேகநாசத்தினாலொருவ "ரேதான். ஒன்றானவந்த சுவயம்புவுக்கிவ்விதமாய் மூன்றுசரீர "ங்கள் சொல்லப்படுகின்றன."

காளிகாபுராணம்-அத்-௯-ல், † "(விஷ்ணுசொல்வது) ஓ! "சங்கரா! சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரகாரியங்களை யெப்போது நாம் "செய்கிறதில்லையோ அப்போது (பிரும்மா விஷ்ணு ருத்திரர்க "ளாகிய) நம்மூவருக்கும் மாயையினாலுண்டாயிருக்கிற சரீரபே "தமில்லை. நாமெல்லோருமொரேரூபமானவர்கள்தான். சிரு "ஷ்டிமுதலிய காரியபேதத்தினால் வேறாய்ச் சொல்லப்படுகி "றோம். சிருஷ்டிமுதலிய காரியமெப்போதில்லையோ அப்போது "ரூபபேதமானதுப் பிரயோஜநமில்லை. ஒருவனே மூன்றுவித "மான பேதரூபமாய் நாமிருக்கிறோம்."

ஷை-புராணம்-அத்-௧௧-௬-௫௧-ல், ‡ "பகவானான விஷ்ணு "சொல்வது—ஓ! ஈசுவரா! பிரும்மா உம்மைவிடவேறல்ல. "அப்படியே சம்புவாகிய நீர் பிரும்மாவைவிடவேறல்ல. உங்க

* यदा गुणवशात्तस्य स्वयं भोरनुरञ्जनम् । एकत्वे च पृथक्त्वे च प्रोक्तमेतन्निदर्शनम् ॥ ९६ ॥ एको भूत्वा यथा मेघः पृथक्त्वे नावतिष्ठते। रूपतो वर्णतश्चैव तथा गुणवशात्तु सः ॥ ९७ ॥ भवत्येको द्विधा चैव त्रिधा मूर्तिविनाशनात् । एको ब्रह्मान्तकृच्चैव पुरुषश्चेति ते त्रयः ॥ ९८ ॥ एकस्यैतास्स्मृतास्तिस्रस्तनवस्तुस्वयंभुवः ॥ ९९ ॥

† सृष्टिस्थित्यन्तकर्माणि न कार्याणि यदा हर । शरीरभेदमस्माकं मायायाश्च न युज्यते ॥ ३२ ॥ एकस्वरूपा हि वयं भिन्नाः कार्यस्य भेदतः । कार्यभेदो-न सिद्धश्चे द्रूपभेदोऽप्रयोजनः ॥ ३३ ॥ एकएव त्रिधा भूत्वा वयं भिन्नस्वरूपिणः ॥ ३४ ॥

‡ श्रीभगवानुवाच । न ब्रह्मा भवतो भिन्नो नशम्भुर्ब्रह्मणस्तथा ।

"ளிருவரைவிட விஷ்ணுவாகிய நான் வேறல்ல. நாமெப்போ
"தும் பேதமற்ற இருப்பையுடையவர்களே."

அத்தியாத்துமராமாயணம் அயோத்தியாகாண்டம்-அத்-க-ல், * "(நாரதர் சொல்வது) ஓ! இராகவா! நீர் விஷ்ணு ஜாநகி
"இலக்ஷ்மீ. நீர் சிவன் ஜாநகி பார்வதீ. நீர் பிரும்மா ஜாநகி ஸர
"ஸ்வதீ. நீர் சூரியன் ஜாநகிபிரபை. நீர் சந்திரன் சுபமான இல
"க்ஷணமுள்ள ஸீதை ரோஹிணீ. ஜாநகி உருத்திராணீ நீர் உல
"கத்தை நாசஞ்செய்கிற ருத்திரனென்று சொல்லப்படுகிறீர்."

ஓ! ஜயவிரதா! மேலாகக் குறித்துக்காட்டிய வாக்கியங்களில், சிவனைக்குறித்த ஸ்தோத்தரங்களிலெல்லாம் அவரையே பிரும்மவிஷ்ணுருத்திரர்களாகவும், விஷ்ணுவைக்குறித்த ஸ்தோத்தரங்களிலெல்லாம் அவரையே பிரும்ம விஷ்ணு ருத்திரர்களாகவும் சொன்னதுமாத்திரமல்ல, விஷ்ணுவானவர் தானுஞ்சிவனும் ஓரேசுவரூபமென்றும் அப்படியே சிவனானவர் தானும் விஷ்ணுவும் ஒரேசுவரூபமென்றும், தங்களுக்குள் பேதமில்லையென்றுஞ்சொல்லியிருக்கிறதாகக்காணுகிறது. சிவனே ஜகத்காரணவஸ்துவென்றும் விஷ்ணுவே ஜகத்காரணவஸ்துவென்றுஞ் சொல்லியிருக்கிற சாஸ்திரங்களே இப்படி சொல்லும்பொழுது சிவனைசிரேஷ்டமாய்ச் சொல்வதனுலாவது விஷ்ணுவைசிரேஷ்டமாய்ச்சொல்வதனுலாவது யாதொருவிரோதமுமுண்டாகக் காரணமில்லை. அவ்விருவருமொரே சுவரூபமாகையால், யாரைசிரேஷ்டமாகச்சொன்னுலும் யாரை கநிஷ்டமாகச்சொன்னுலும் விசேஷமொன்றுமில்லை. ஆனுற்சாஸ்திரங்கள் சிலவிடத்திற் சிவனை விஷ்ணுபக்தராகவும் சிலவிடத்திற் விஷ்ணுவை சிவபக்தராகவுஞ் சொல்லுகின்றனவேயென்றுல், இதிலுந்தோஷமில்லை அந்தத் திருமூர்த்திகள் உலகரக்ஷணையின்பொருட்டுப் பிரவிருத்தித்தவர்களாகையாலும் உலகத்தில் விஷ்ணுவினிடத்திற் பக்திசெய்கிற ஜநங்களநேகரும் சிவபக்திசெய்யும் ஜநங்களநேகரும்

---

नचायं युवयोर्भिन्नोऽभिन्नत्वं सर्वदातनम् ॥

* त्वं विष्णुर्जानकीलक्ष्मीश्शिवस्त्वं जानकी शिवा । ब्रह्मा त्वं जानकी वाणी सूर्यस्त्वं जानकी प्रभा ॥ १३ ॥ भवान् शशाङ्कस्सीतातु रोहिणी शुभलक्षणा । रुद्राणी जानकीप्रोक्ता रुद्र स्त्वं लोकनाशकृत् ॥ १७ ॥

பிரும்மாவினிடத்திற் பக்திசெய்யும் ஜநங்களநேகருமிருக்கிறபடியாலவரவர்களுபாஸிக்கிற மூர்த்தியினிடத்தில் விசேஷபக்தியுண்டாகும்பொருட்டு ஒருமூர்த்தியை மற்றொருமூர்த்தியுபாஸித்ததாகவும் ஸ்தோத்திரஞ்செய்ததாகவும் வரம்பெற்றதாகவுஞ் சொல்லுகின்றன. ஏனென்றால், ஸர்வசிரேஷ்டமானவரென்றுசொல்லப்படுகிற விஷ்ணுவே சிவனையுபாஸித்தாரென்றால், சிவபக்தர்களுக்குச் சிவனிடத்திலும் அப்படியே ஸர்வசிரேஷ்டமானவரென்றுசொல்லப்படுகிற சிவனே விஷ்ணுவையுபாசித்தாரென்றால், விஷ்ணுபக்தர்களுக்கு விஷ்ணுவினிடத்திலும் அதிகபக்தியும் சிரத்தையும் விசுவாஸமுமுண்டாயவர்கள் பக்தி செய்யட்டுமென்றுலகத்திற்குக் காண்பிவித்ததேயன்றி மூர்த்திகளிலுயர்வு தாழ்வென்பதனாலல்ல. மூடர்கள் உயர்வுதாழ்வாகவெண்ணி அம்மூர்த்திகளிலாரையாவது நிந்திக்கக்கூடாதென்பதற்காகவே அம்மும்மூர்த்திகளுமொரே வஸ்துவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஒருவன் தானுபாசிக்கிற மூர்த்தியெதுவோ அதனிடத்திலதிகபக்தியையும் பிரேமையையும் பாராட்டவேண்டியது மிகவுமவசியமே. ஆனால், மற்றொரு மூர்த்தியை நிந்திப்பானாகிலவனுக்கு நற்கதியுண்டாகமாட்டாது. அது மாத்திரமல்ல, தூஷணையினாலதிகபாபமுண்டாய் முடிவில்நரகத்தையடைவான். ஓரிடத்தில் மஹாத்துமாக்களான இரண்டு ஸந்நியாசிகள் வாஸஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் அவர்களைச் சந்தித்தபொழுது அவர்களிலொருவர் தன் தகப்பனாருடைய குருவென்றறிந்தான். அப்போதவன் அந்தக் குருவைமட்டும் வந்தநஞ்செய்து அவரைப்போலுள்ள மஹாத்துமாவாயுமவருடன் சேர்ந்திருக்கிறவராயுமுள்ள மற்றொருவரை வந்தநஞ்செய்யாமல் அலக்ஷியமாயிருப்பானாகில், அதனாற்றன்குருவான அந்த ஸந்நியாசியேஇவனை வெறுப்பார். அப்படியிருக்க மற்றொரு ஸந்நியாசியைத்தன் குருவைவிட இகழ்ச்சியாய்ப்பேசி அவமதிப்பானாகில், அப்படிப்பட்டவனை அந்தக் குருவானஸந்நியாசியே சபிப்பாரென்பதிற் சந்தேகமில்லை. இப்படித்தான் சிவபக்தர்கள் விஷ்ணுவையும் விஷ்ணுபக்தர்கள் சிவனையும் உயர்வுதாழ்வாய் நினைத்தாலும் நிந்தித்தாலும் அந்தந்த உபாஸநாமூர்த்தியே இவனை நரகத்தில் விழும்படி செய்வாரென்பதிற் சந்தேகமில்லை. இந்த அர்த்தமானது முன்னமையே பலவாக்கியங்களாற் சொல்லப்பட்டிருக்

கிறது. சிவசுவரூபத்தையும் விஷ்ணுசுவரூபத்தையும் நன்றாய் விசாரித்தறியாத மூடர்களே ஒரு மூர்த்தியை நிந்தித்து மற்றொருமூர்த்தியை சிலாகிப்பார்களேயன்றி விவேகிகளான புத்திக்கூர்மையுள்ளவர்களுக்கிப்படிப்பட்ட பக்ஷபாதமுண்டாகமாட்டாது. ஒருவன் கங்காஸ்நாநஞ் சிலகாலஞ்செய்து அவ்விடத்திலுள்ள அவிமுக்தேசுவரரை தரிசித்துவந்தாலவனுக்குண்டாயிருக்கிற துன்பம் நிவிருத்தியாகுமென்று ஒரு வித்துவானிடத்திலிருந்து கேட்டு கங்காஸ்நாநத்திற்காகப் புறப்பட்டான். மற்றொருவன் தனக்குண்டாயிருக்கிற துக்கநிவிருத்தியையடையும் பொருட்டு என்னபரிகாரஞ்செய்யலாமென்று ஒருபெரியவரை விசாரித்தபொழுது பாகீரதீ நதியிற் சிலகாலம் ஸ்நாநஞ்செய்து விசுவேசுவரரை தரிசித்துவந்தாற் துக்கநிவிருத்தியுண்டாகுமென்றுசொல்லக் கேட்டுபாகீரதீஸ்நாநத்திற்குப்புறப்பட்டான். இவ்விருவருமோரிடத்திற்சந்தித்தார்கள். தாங்களுத்தேசித்துப்போகுங்காரியத்தை யொருவரோடொருவர் பேசிக்கொண்டபொழுது கங்கையுமவிமுக்தேசுவரருந்தான் பாபத்தைப்போக்கடிக்கத்தக்கவர்களென்று நம்பியிருக்கிறவன் மற்றொருவனைப்பார்த்து நீ மூடன், பாகீரதீ விசுவேசுவரர் இவர்களுக்குப் பாபத்தைப் போக்கடிக்கும்படியான சக்தியில்லையென்றும் நீஅதையுத்தேசித்துப்போவதுப்பிரயோஜநமில்லையென்றும் அப்படியே மற்றொருவன் பாகீரதியும் விசுவேசுவரருந்தான் பாபத்தைப் போக்கடிக்கச் சக்தியுள்ளவர்களென்றும் கங்கையாவது அவிமுக்தேசுவரராவது அப்படிப்பட்ட சக்தியுள்ளவர்களல்லவென்றும் வாதஞ்செய்தார்கள். இவ்விருவருக்குங் கெங்கையென்பதும் பாகீரதியென்பதுமொரேநதியென்றும் அவிமுக்தேசுவரர் விசுவேசுவரர் என்ற பெயருள்ள மூர்த்திகளொன்றேயென்றும் அறியாமற் சண்டையிட்டதுபோல் வைஷ்ணவர்களும் சைவர்களுஞ் சண்டையிடுகிறார்கள். இந்தச் சண்டையக்ஞாநத்தினாலுண்டானதே.

3. சிருஷ்டிகாரியத்தின்பொருட்டு இரஜோகுணத்தை சுவீகரிக்கிறதனாற் பிரும்மாவென்றும் உலகரக்ஷணையின்பொருட்டு ஸத்துவகுணத்தை சுவீகரிக்கிறதனால் விஷ்ணுவென்றும் பிரளயகாலத்திலுலகத்தை யழிக்கும்பொருட்டு தமோகுணத்தை சுவீகரிக்கிறதனால் உருத்திரனென்றுஞ் சொல்லப்படுகிறதேயன்

றியந்தமூர்த்தி யந்தந்தகுணசுவரூபமல்லவென்பதையும் அந்த மூர்த்திகளிலொருவரை நிந்தித்தாலும் அம்மூவரையும் நிந்தித்த தாகுமென்பதையுஞ்சொல்லுகிற வாயுபுராணவாக்கியங்களை நீ கேட்பையானாலிந்தச் சந்தேகம் நிவிருத்தியாகும்.

பிரும்மாண்டபுராணமென்கிற வாயுபுராணம்-உத்தரபாகம் அத் டு ல், * "(ஸத்துவரஜஸ்தமஸ்களாகிற) அக்குணங்களுக் "குள்ளொன்றான இரஜோகுணமானது எல்லாப்பிரஜைகளையு "முண்டுசெய்கிறது. அதிலொன்றாகிய ஸத்துவகுணமானது "ஸமுத்திரத்திலிருந்துகொண்டு அநுக்கிரகஞ்செய்கிறது (திரு "ப்பாக்கடலிலிருந்துகொண்டுலகத்தை இரக்ஷிக்கிறதென்பது "கருத்து). பிரளயகாலத்திலே அதிலொன்றான தமோகுண "மானதுப் பிரஜைகளை விழுங்கிவிடுகிறது. (ஈசுவரனானவர்) "எப்போது விருத்தியடைந்திருக்கிற இரஜோகுணத்தோடு கூடு "கிறாரோவப்போது பிரும்மாவாகிறார். அந்தப்பிரும்மாவுக்குப் "புருஷனென்கிறபெயரையுடைய ஸத்துவகுணமானது அடங்கி "யிருக்கிறது. அந்த ஈசுவரன் விருத்தியடைந்திருக்கிற தமோ "குணத்தோடுகூடியிருக்கும்போது காலாத்துமாவாகிறார். அவ "ருக்குப் பிரும்மாவென்கிற பெயரையுடைய இரஜோகுணமடங் "கியிருக்கிறது. அந்தப்பிரபுவான ஈசுவரன் விருத்தியடைந்தி "ருக்கிற ஸத்துவகுணத்தோடெப்போது கூடுகிறாரோவப்போது "புருஷனாகிறார். அப்போதவருக்குக் காலனென்கிற பெயரை "யுடைய (தமோகுணமானது) மறுபடியுண்டாகிறதில்லை. ஸகல "மான அநுக்கிரகம் நிக்கிரகம் (நன்மை தீமைகளையளித்தல்) "இவைகளோடுகூடி மூன்றுலகத்திலேயுமிருக்கிற அவருக்கு

---

* एका तु कुरुते तासां राजसी सर्वतः प्रजाः । एका चैवार्णवस्थातु सानुगृह्णाति सात्विकी । एका सा क्षिपते काले तामसी ग्रसते प्रजाः ॥ ८९ ॥ रजसा तु समुद्रिक्तो ब्रह्मा सम्भवते यदा । पुरुषाख्या तदा तस्य सात्विकी विनिवर्तते ॥ ९० ॥ यदा भवति कालात्मा उद्रेकात्तमसस्तु सः । ब्रह्माख्या सा तदा त्वस्य राजसी विनिवर्तते ॥ ९१ ॥ सत्वोद्रेकात्तु पुरुषो यदा भवति सप्रभुः । कालाख्या सा तदा तस्य पुन र्नभवतीति वै ॥ ९२ ॥ क्रमात्तस्य निवर्तन्ते रूपं नाम च कर्म च । त्रैलोक्ये वर्तमानस्य सर्वानुग्रहनिग्र-

"க்கிரமமாய் உருவமும் பெயருங்கருமமும் நிவிருத்தியாகின்
"றன. ஸ்படிகம் பரிசுத்தமாயிருக்கிறதனாலே அந்தஸ்படிகமணி
"யானதெப்படிப்பட்ட வர்ணமுள்ளவஸ்துவைஸமீபத்திலுடைத்
"தாயிருக்கிறதோ அதைப்போலொற்ற வர்ணத்தையடைந்ததா
"ய்க்கொண்டு விசித்திரமான வர்ணங்களாய்த்தோற்றுகிறதெப்
"படியோவப்படியந்த சுவயம்புவான ஈசுவரனுக்குக் குணவசத்தி
"னாலே அதனுடையப்பிரகாசமுண்டாகிறது. ஒன்றுயிருக்குந்
"தன்மையிலேயும் வெவ்வேறுயிருக்குந்தன்மையிலேயுமிந்ததிரு
"ஷ்டாந்தஞ் சொல்லப்பட்டது. மேகமானதொன்றுனாலும்
"ரூபத்தினாலேயும் வர்ணத்தினாலேயும் பல்வாகவெப்படியிருக்
"கிறதோவப்படிக் குணவசத்தினாலந்த ஈசுவரனும் ஒருவராயு
"மிருவராயும் மூவராயுமாகிறார். அம்மூன்றுபெயர்கள்தான் பிரு
"ம்மா உருத்திரர் புருஷனென்கிற விஷ்ணுவாயிருக்கிறார்கள்.
"தேகநாசத்தினாலொருவரே. ஒருவராகிய இந்தசுவயம்புவுக்
"கிவ்விதமாய் மூன்று சரீரங்கள் சொல்லப்படுகின்றன. (அம்
"மூன்று சரீரங்களாவன). பிராம்மீ, பௌருஷீ, அந்தகாரி
"யென்பவைகளே. அந்த ஈசுவரனுக்கு அம்மூன்று சரீரங்களி
"லெது இராஜஸமோ அது பிரஜைகளையுண்டுசெய்யத்தக்கது.
"காலமென்கிற பெயரையுடைய தாமஸ சரீரமெதுவோ அது
"பிரஜைகளையழிக்கிறதாயிருக்கிறது. புருஷனென்கிறபெயரை
"யுடைய ஸாத்துவிகதேகமெதுவோ அது (பிரஜைகளை) இரக்ஷி
"க்கிறதாகச் சொல்லப்படுகிறது. இப்படி சுவயம்புவினுடைய

हैः ॥ ९३ ॥ मणिर्विभजते वर्णान् विचित्रान् स्फटिके यथा । वैमल्यादाश्रयवशात्तद्वर्णस्स्यात्तदञ्जनः ॥ ९५ ॥ यदा गुणवशात्तस्य स्वयं भोरनुरञ्जनम् । एकत्वे च पृथक्त्वे च प्रोक्तमेतन्निदर्शनम् ॥ ९६ ॥ एको भूत्वा यथामे घः पृथक्त्वे नावतिष्ठते । रूपतो वर्णतश्चैव तथा गुणवशात्तु सः ॥ ९७ ॥ भवत्येको द्विधा चैव त्रिधा मूर्तिविनाशनात् । एको ब्रह्मान्तकृच्चैव पुरुषश्चेति ते त्रयः ॥ ९८ ॥ एकस्यैतास्त्रिधा तिस्रस्तनवस्तुस्वयम्भुवः । ब्राह्मी च पौरुषी चैव अन्तकारी च ते त्रयः ॥ ९९ ॥ तत्र या राजसीतस्य तनुस्सावै प्रजाकरी । या तामसी तु कालाख्या प्रजाक्षयकरीतु सा । सात्विकी पौरुषी या तु सानुग्रहकरी स्मृता ॥ १०० ॥ इत्येताः कथितास्तिस्रस्तन-

“மூன்று சரீரங்கள் சொல்லப்பட்டன. அவைகளே பிராஜாபத்
“தியை, ரௌத்திரீ, வைஷ்ணவீ என்று சொல்லப்படுகின்றன.
“(அந்த சுவயம்புவுக்கு)ஒரேசரீரமென்றுவேதத்திலேயும் தரும
“சாஸ்திரத்திலேயும் புராணத்திலேயுஞ் சொல்லப்பட்டிருக்கி
“றதுமல்லாமல்ஸாங்கியயோகத்தில் நிலையுள்ளவர்களாயுமொன்
“றான தன்மை வேறான தன்மை இவைகளை யறிந்தவர்களாயும்
“உத்கிருஷ்டமாய் ஜநித்தவர்களுடைய மஹிமையையறிந்தவர்
“களாயும் தத்துவஞாநிகளாயுமிருக்கிற ரிஷிகளாலேயுஞ்சொல்
“லப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்திற் பிரஜைகள் அம்மூர்த்தி
“களிற் பேதத்தையுடையவர்களாய் யொன்றின் தன்மையிலே
“யும் வேறானதன்மையிலேயும் இது சிரேஷ்டம் இது கநிஷ்டம்
“(உயர்வு தாழ்வு) என்றுஞ்சொல்லுகிறார்கள். பேதமாய்ப்பார்
“க்கிறவர்களாயுமாசைமுதலியவைகளோடுகூடியபுத்தியினாற்கட்
“டப்பட்டவர்களாயுமக்ஞாநத்தோடு கூடினவர்களாயுமிருக்கிற
“வர்களிற் சிலர் பிரும்மாவைக் (ஜகத்திற்கு) காரணமாகவும்
“சிலர் பிரஜாபதியைக்காரணமாகவுஞ் சொல்லுகிறார்கள். சிலர்
“சிவனை சிரேஷ்டராகச் சொல்லுகிறார்கள். அப்படியே சிலர்
“விஷ்ணுவை சிரேஷ்டராகச் சொல்லுகிறார்கள். தத்துவத்
“தையுங் காலத்தையுந் தேசத்தையுங் கருமங்களையுமாராய்ந்து
“பார்த்து இம்மூர்த்திகளான தேவதைகள் இவ்வுலகத்திற் பல
“விஷயங்களிலேயுங் காரணமாகச் சொல்லப்படுகிறார்கள். எவன்
“அம்மூர்த்திகளுக்குள்ளொருவரை நிந்திக்கிறானோ அவனவர்க
“ளெல்லோரையும் நிந்தித்தவனாகவேயிருக்கிறான். ஒருவரை

---

वस्तुस्वयम्भुवः । प्राजापत्या च रौद्री च वैष्णवीचैव ताः स्मृताः ॥ १०५ ॥ एका तनुस्स्मृता वेदे धर्मशास्त्रे पुरातने । सांख्ययोगपरै र्वी रैः पृथक्त्वैकत्व-दर्शिभिः । अभिजातप्रभावज्ञै ऋषिभि स्तत्वदर्शिभिः ॥ १०६ ॥ एकत्वे च प्रथक्त्वे च तासु भिन्नाः प्रजास्त्विह । इदं परमिदं नेति ब्रुवतो भिन्नद-र्शनाः ॥ १०७ ॥ ब्रह्माणं कारणं केचित् केचित्प्राहुः प्रजापतिम् । केचि-च्छिवं परत्वेन प्राहुर्विष्णुं तथापरे । अविज्ञानेन संसक्ता स्सक्ता रत्यादि-चेतसा ॥ १०८ ॥ तत्वं कालं च देशं च कार्याण्यवेक्ष्य तत्वतः । कारणं च स्मृताह्येता नानार्थेष्विह देवताः ॥ १०९ ॥ एकं निन्दति यस्तेषां सर्वा-

"ஸ்துதித்தாலும் அவரெல்லோரையும் ஸ்துதித்தவனாகவேயிரு
"க்கிறான். (அம்மும்மூர்த்திகளை) ஒன்றானபுருஷனாகவே யெவ
"னறிகிறானோ அவனைப் பிர்ம்மவாதியென்று சொல்லுகிறார்கள்.
"விவேகியினாலே மூன்று தேவதைகளுக்குள்ளுந் துவேஷமில்
"லாதகாரியமெதுவோ அதுவே யெப்போதுஞ் செய்யத்தக்கது.
"ஸகல ஐசுவரியத்தோடுகூடிய அந்த ஈசுவரனையறிகிறதற்கு
"வித்துவானுங்கூட சக்தியுடையவனல்ல யார் ஒரே ஆத்து
"மாவோ அவர் மூன்றாகவாய்ப் பிரஜைகளை மோஹிப்பிக்கிறார்.
"இவர்களுடைய நடுவிலே ஜநங்கள் ஸஞ்சரித்துக்கொண்டிருக்
"கிறார்கள்."

இந்தவாக்கியங்களினாற் பிரும்ம விஷ்ணு ருத்திரர்கள் விஷயமாய்ப் பலர் பலவிதமாய்ச் சொல்வது அக்ஞாநத்தினா லென்பதிற் சந்தேகமில்லை.

4. ஓ! ஜயவிரதா! வைஷ்ணவர்கள் சைவர்கள் விஷய மான ஆக்ஷேபஸமாதாநங்களையுனக்குச் சொன்னேன். இனி அத்துவைதிகள் இவ்விஷயமாய் யென்ன ஸமாதாநஞ் சொல்லு கிறார்களென்பதையுஞ் சுருக்கிச்சொல்லுகிறேன்கேள்.

5. அத்துவைதமதசித்தாந்தத்திற் பாரமார்த்திகதசை, வியாவஹாரிகதசையென இருவகையாய் முன்னமையே சொல்ல ப்பட்டிருக்கிறதல்லவா. அதிற் பாரமார்த்திகதசையை யநுஷ் டிக்கிற அத்துவைதிகள்சொல்வதை முந்திச்சொல்லுகிறேன்.

6. பிர்ம்மத்தைத்தவிர இரண்டாவதாயாதொருவஸ்துவு மில்லையென்றும் ஜீவேசுவரஜகத்து, பிரும்ம விஷ்ணு ருத்திராதி மூர்த்திகள், இப்படிப்பட்ட பேதங்களெல்லாமக்ஞாநமாகிற மனத்தோற்றமேயன்றி வாஸ்தவத்திற் பேதமில்லையென்றும், பிர்ம்மத்திற்குரூபமாவது யாதொருவடையாளமாவது பெயராவ தில்லையாகையாற், சிவன் விஷ்ணு முதலிய பெயர்களினாலந்தப்

---

नेव स निन्दति । एकं प्रशंसमानस्तु सर्वानेव प्रशंसति । एकं यो वेत्ति पुरुषं तमाहुर्ब्रह्मवादिनम् ॥ ११० ॥ अद्वेषस्तु सदा कार्यो देवतासु विजानता । नशक्यमीश्वरंज्ञातुमैश्वर्येण व्यवस्थितम् ॥ १११ ॥ एकात्मा स त्रिधा भूत्वा संमोहयति यः प्रजाः । एतेषाञ्च त्रयाणां तु विचरंत्यन्तरं जनाः ॥ ११२ ॥

பிர்ம்மமேசொல்லப்படுகிறதென்றும் குறிப்பான பெயரில்லாத தனாலந்தப் பிர்ம்மத்தைப் பல காரணப்பெயர்களினாற் சாஸ்திரங் கள்சொல்லுகின்றனவென்றுமிவர்களுடைய நிச்சயம். அக்கார ணப்பெயர்களிற் சிலவற்றை யுனக்கு முன்னமையே சொல்லி யிருக்கிறேன். ஆனாலும் அத்துவைதிகள் சொல்லுகிறவிதத்தை யநுஸரித்து இவ்விடத்திலுஞ் சொல்லுகிறேன்.

7. பரமாத்துமாவானது, உலகத்திற் பார்க்கப்படுகிறதுங் கேட்கப்படுகிறதும் நினைக்கப்படுகிறதுமாகியவஸ்துக்களெவை யுண்டோ அவையெல்லாவற்றைக்காட்டிலும் பெரிதாகையாற் பிர்ம்மமென்கிறபெயரினாற் சொல்லப்படுகிறது. அக்காரணத்தி னாலும் இவ்வுலக சிருஷ்டிக்குக் காரணமானதனாலும்பிரும்மா வென்றுசொல்லப்படுகிறது.ஸகலபூதங்களுக்குமந்தப்பிர்ம்மமே ஆத்துமாவாகையாற் பரமாத்துமாவென்று சொல்லப்படுகிறது. மங்களசுவரூபியாகையாற் சிவனென்கிற பெயரினாற் சொல்லப் படுகிறது. எங்கும் நிறைந்த வியாபகசுவரூபமானதனால்விஷ்ணு வென்கிறபெயரினாற் சொல்லப்படுகிறது. பிராணிகளுக்குசுகத் தைக்கொடுக்கிறவராகையினாற்சங்கரரென்கிறபெயரினாலும்பாப க்கூட்டங்களை நாசஞ்செய்கிறதனால் ஹரியென்கிறபெயரினாலும் துக்கத்தைப்போக்கடிக்கிறவராகையினால் உருத்திரரென்கிறபெ யரினாலுஞ் சொல்லப்படுகிறது. இந்த உருத்திரசப்தார்த்தமா னது, ஸ்காந்தம் ஸநத்குமாரஸம்ஹிதை மலையாசலகண்டம்-அத் நூ-ல், இவ்விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது—
"रुशब्दे न तु संसारदुःखं द्रावयति प्रभुः। रुद्रइत्युच्यते वेदै रपि वेदान्तवेदिभिः॥६६॥
रुद्रएव शिवः प्रो क्तोरुद्रएव सदाशिवः ॥६७ = வேதாந்தங்களினாலேயும் வேதாந்தத்தையறிந்தவர்களினாலேயும் (रु) ரு, என்கிற சப்தத் தினாலே ஸம்ஸார துக்கத்தைப் போக்கடிக்கிறவராயும் பிரபுவாயு மிருக்கிறதனால் உருத்திரரென்று சொல்லப்படுகிறார். உருத் திரனே சிவனென்றுஞ் சொல்லப்படுகிறார். அந்தஉருத்திரரெ ப்போதும் மங்களசுவரூபியே." இவ்விதமாய் உருத்திரசுவரூ பலக்ஷணஞ் சொல்லப்பட்டிருக்கிறது. நாரஸாரோபநிஷத் தில் "நாராயண" என்கிற பதத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷ ரத்தினாலும் பரப்பிர்ம்மசுவரூபமே சொல்லப்படுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நாராயண சப்தார்த்தத்தைச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இவ்விதமாகவே ஸகலப்பெய

ர்களும் பிர்ம்மத்தினுடைய காரணப்பெயர்களேயன்றி அந்தந்த ப்பெயருள்ள மூர்த்திகள் வேறொன்றிருக்கிறதாகயாவது அவர் கள் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரகாரியங்களைச் செய்கிறதாகவாவது சொல்லுகிற சாஸ்திரவாக்கியங்களெல்லாம் அக்ஞானதசையி லிருக்கிற ஜநங்களுக்கு ஒருவிதமான ஈசுவரபக்தி யுண்டாகும் பொருட்டுப் பலவிதமாய்க் கற்பித்துச்சொல்லுகின்றனவென்று நிச்சயங்கொண்டிருக்கிறார்கள். இந்த நிச்சயத்தைச்சுருதியுமாத ரிக்கிறது.

தேஜோபிந்தூபநிஷத்-ரு-ல், க "உலகத்தை விஷ்ணுவான "வர் இரக்ஷிக்கிறாரென்பதும் சிருஷ்டிக்குப் பிரும்மா காரண "மென்பதும் ஸம்ஹாரஞ்செய்கிறவர் உருத்திரரென்பதும்இவை "முதலிய ஸகலமும் பொய்யென்று நிச்சயித்துக்கொள்.—உல "கங்களைச் சிவன் ஸம்ஹாரஞ்செய்கிறாரென்றும் மூவ்வுலகத்தை "யும் விஷ்ணு பரிபாலநஞ்செய்கிறாரென்றும் பிரும்மா உலகங் "களைச் சிருஷ்டிக்கிறாரென்றும் புராணங்களிலெதெது சொல்லப் "பட்டிருக்கிறதோ வேதங்களிலேயும் (இப்படிப்பட்ட) யாதொ "ரு நிச்சயமுண்டோ ஸகல உபநிஷத்துக்களுடைய கருத்தெது "வோ அவையெல்லாம் முயற்கொம்புக்கொப்பானவை" (முயற் கொம்பென்பது பெயர்மாத்திரமேயன்றி வாஸ்தவத்திலெப்படி யில்லையோ அப்படித் திருமூர்த்திகளாவது அவர்களுடைய சிரு ஷ்டியாதிகாரியங்களாவது வாஸ்தவமல்லவென்பது கருத்து);

8. இவ்விதமாய் ஸகலப்பெயர்களினாலுமந்தப் பிர்ம்மமே சொல்லப்படுகிறதாகையாற் சிவனை சிரேஷ்டமென்று சொன்னா லும் விஷ்ணுவை சிரேஷ்டமென்றுசொன்னாலும் மற்ற எந்தப் பெயருள்ள வஸ்துவை சிரேஷ்டமாகச் சொன்னாலுமந்த பிர்ம் மத்தையே சொல்லுகிறதென்கிற நிச்சயமுள்ள இவர்களுக்குப் பேதபுத்தியாவது உயர்வு தாழ்வென்கிற புத்தியாவதுண்டாகக் காரணமேயில்லை. மேலும் திருமூர்த்திகளுடைய சுவரூபமொ ன்றேயென்றும் அவர்களுக்குட்பேதமில்லையென்றுங் கண்டோ

१ रक्षको विष्णुरित्यादिब्रह्मास्रष्टेस्तु कारणम् । संहारे रुद्रइत्येवं सर्वं मिथ्येति निश्चिनु । —शिवोऽरक्षति लोकान् वै विष्णुः पाति जगत्त्रयम् । ब्रह्मा सृजति लोकान्वा एवमादि क्रियादिकम् । यद्यदस्ति पुराणेषु यद्यद्वेदेषु निश्चयम् । सर्वोपनिषदां भावं सर्वं शशविषाणवत् ॥

க்தமாய்ச் சொல்லியிருக்கிற இதற்கடுத்து முந்தித் திருமூர்த்தி சுவரூபங்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறப் பிரமாணங்களை யெல்லாங்கேட்ட ஒருவனும் அந்த மூர்த்திகளிடத்திற் பேதபுத் தியையெண்ணமாட்டானென்பது நிச்சயம். அப்படியிருக்க அத் துவைதிகளெப்படிப் பேதமாய்ப்பார்ப்பார்கள் ?

9. இதுமாத்திரமல்ல, அத்துவைதிகள் பிரும்மவிஷ்ணு உருத்திரர் முதலிய சிரேஷ்டமான தேவதைகள் பரப்பிர்ம்மசுவ ரூபமென்று சொல்லுகிற சுருதி முதலியப் பிரமாணங்களையும் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாய்ச் சொல்லுகிறார்கள். அவை களிற் சிலவாக்கியங்களைச் சொல்லுகிறேன் கேள்.

57 தைத்திரீயோபநிஷத்-நாராயணீயம்-சு-கங-ல், * "அவரே "(பரமாத்துமாவே அல்லது ஈசுவரனே) பிரும்மா. அவரே "சிவன். அவரே ஹரி. அவரே இந்திரன். அவரே நாசமற்றவர். அவரே சிரேஷ்டமானவர். அவரே சுவயம்பிரகாசமுள்ளவர்."

மேற்படி வாக்கியத்திலுள்ள "ஹரி" என்கிறபதம் விசிஷ் டாத்துவைத மதஸ்தர்களுடைய வேதபுஸ்தகத்திற் காணப்பட வில்லை. எந்தக்காரணத்தினலந்தப் பதமதிலில்லையோ அதனு ண்மையையறியக்கூடவில்லை. ஆனலம்மதஸ்தர்கள் சுருதியின் மூலத்தில் ஹரியென்கிற பதமேயில்லையென்றும் பிரும்மா உருத் திரர்முதலியவர்கள் ஹரியினுடையபக்தர்களாகையால் ஹரியை க்கூடச்சேர்ப்பதுஸரியல்லவென்றும் ஹரியைச்சேர்ப்பதனுல் ஹ ரிக்குமேலான ஒருவஸ்துவிருக்கிறதாக வர்த்தமாகுமாகையால் ஹரியென்கிற பதத்தையதிற் சேர்ப்பதுந்நியாயமல்லவென்றுஞ் சொல்லுவார்கள்.

அத்துவைதிகளோ இந்த சுருதியிலிந்தவிடத்தில் மாத்திர மல்ல, பின்னுமோரிடத்திலும் மற்றசுருதிகளிலும் அவரேபிரு ம்மா அவரே விஷ்ணு அவரே உருத்திரர் என்றுசொல்லப்ப ட்டிருக்கிறபடியாலும், கைவல்லியோபநிஷத்திற் சந்தேகத்திற் கிடமன்றி "அவரே விஷ்ணு" என்றுபிரித்துச் சொல்லியிருக்கி றதனுலும் ஹரியென்கிற பதமில்லாமலே மூலமிருக்கமாட்டா தென்று சொல்லுகிறார்கள்.

---

* स ब्रह्म स शिव स्स हरि स्सेन्द्र स्सोऽक्षरः परमस्स्वराट् ॥

60 ஷ-நாராயணீயம் கூ-கூஅ-ல், * "பிரபஞ்சங்களாகவிருக்
"கிறப் பூதங்களுக்குள்ளே ஹிருதயகுகையிலிருக்கிற நீரே
"யக்ஞபுருஷர். தேவதையைக்குறித்து அக்கியில் ஹோமஞ்
"செய்கிறதாகிய வஷட்காரமும் நீரே. உருத்திரரும்நீரே. விஷ்
"ணுவும் நீரே. பிரும்மாவும் நீரே. இந்திரனும் நீரே, சிருஷ்டி
"கருத்தாவும்நீரே."

61 கைவல்லியோபநிஷத்தில், † "(பரமேசுவரனை) த்தியானஞ்
"செய்து முனியானவன் ஸகலத்திற்குஞ்சாக்ஷியாயும் அக்ஞானத்
"திற்குப் புறம்பானதாயும் பூதங்களுக்கெல்லாமாதிகாரணமாயு
"மிருக்கிறதை (பிரும்மத்தை) யடைகிறான். அவரே பிரும்மா,
"அவரே சிவன், அவரே இந்திரன், அவரே நாசமற்றவர், அவ
"ரே உத்தமமானவர், அவரே தானாய் விளங்குகிறவர், அவரே
"விஷ்ணு, அவரே பிராணன், அவரே காலன், அவரே அக்கி,
"அவரே சந்திரன், உண்டாயிருக்கிறது முண்டாகப்போகிறது
"மாகிய ஸகலமுமவரே."

மைத்திராயண்ணியுபநிஷத்-அத்-ச-ல், ‡ "அக்கி, வாயு,
"சூரியன், பிராணனாகிற காலன், அந்நம், பிரும்மா, உருத்திரன்,
"விஷ்ணு இவர்களிலொருவரைச் சிலர்த்தியானஞ்செய்கிறார்கள்.
"சிலர் மற்றொருவரைத் தியானஞ்செய்கிறார்கள். இவர்களுக்
"குள் (அக்கிமுதல் விஷ்ணுவரையிலுள்ளவர்களுக்குள்) சிரேஷ்
"டர் யார்?

"சிரேஷ்டமாயும் நாசமற்றதாயும் சரீரமற்றதாயுமிருக்கிற
"ப்பிரும்மத்திற்கு (அக்கிமுதல் விஷ்ணுவரையிலுள்ள) இவர்கள்

---

* अन्तश्चरतिभूतेषु गुहायां विश्वमूर्तिषु । त्वं यज्ञ स्त्वं वषट्कार स्त्वमिन्द्र स्त्वꣳ रुद्र स्त्वं विष्णु स्त्वं ब्रह्म त्वं प्रजापतिः ॥

† ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात् । स ब्रह्म स शिव स्सेन्द्र स्सोऽक्षरः परमस्स्वराट् । सएव विष्णु स्सप्राण स्सकालोऽग्निश्च चन्द्रमाः । सएव सर्वं यद्भूतं यच्च भव्यं सनातनम् ॥

‡ अग्निर्वायुरादित्यः कालो यः प्राणोऽन्नं ब्रह्मा रुद्रो विष्णुरित्येकेऽन्यमभिध्यायन्त्येकेऽन्यं श्रेयः कतमः ॥ ९ ॥ ब्रह्मणो वा वै ता अग्र्या स्तनवः । परस्यामृतस्य शरीरस्य तस्यैव लोके प्रतिमोदतीह यो यस्यानुषक्त-

"முக்கியமான ரூபங்கள். உலகத்திலெந்தெந்த மனிதனுக்கெ
"ந்தெந்தத் தேவதைப் பிரியமோ அந்தந்தத் தேவதையினிடத்
"திற் சந்தோஷமடைகிறான். அந்தத் தேவதைகளெல்லாம்
"பிர்ம்மந்தான். அவர்கள் பிர்ம்மத்தினுடைய சிரேஷ்டமான
"ரூபங்கள். இவர்களைப் பிர்ம்மமென்றேத் தியானிக்கவேண்டி
"யது, ஆராதிக்கவேண்டியது."

மைத்திராயண்ணியுபநிஷத்-ரு-க-ல், * "(பிரும்மஸ்துதி)
"நீரே பிரும்மா. நீரே விஷ்ணு. நீரே உருத்திரன். நீரேப்பிர
"ஜாபதி. நீரே அக்நி. நீரே வருணன். நீரே வாயு."

நரஸிம்மதாபிந்நியுபநிஷத்-அத்-கஉல், † "அவரே (அந்த
"ஓங்காரசுவரூபமே) பிரும்மா. அவரே சிவன். அவரே ஹரி.
"அவரே இந்திரன். அவரே அக்நி. அவரே நாசமற்றவர். சிரே
"ஷ்டமான சுவப்பிரகாசருமவரே."

நிராலம்போபநிஷத்தில், ‡ "பிர்ம்மமே பரமாத்துமா. அந்
"தப்பரமாத்துமாவே, பிரும்மா விஷ்ணு உருத்திரன் இந்திரன்".

மண்டலப்பிராம்மணோபநிஷத்-ஙு-க-ல், § "அந்தப் பிர்ம்ம
"மானது ஸகலத்திற்குமீசுவரனுயுமளவிடக்கூடாததாயுமொன்
"றையாதாரமாயுடையதல்லாததாயும்மங்களசுவரூபமாயுஞ்சிதா
"காசமாயும் பிறப்பற்றதாயுமிரண்டாவதற்றதாயும் பிரும்மா
"விஷ்ணு உருத்திரர்களுக்கொன்றான ஆதாரமாயும் ஸகலத்திற்
"குங் காரணமாயுமிருக்கிறது."

ஸ்கந்தோபநிஷத்தில், ¶ "ஓ! நரஸிம்மா! ஓ தேவேசா!

---

इत्येवं ह्याह ब्रह्म खल्विदं वावसर्वं यावास्याऽग्न्यास्तनवस्ता अभिध्यायेदर्चयेत ॥ ६ ॥

* त्वं ब्रह्मा त्वंचैव विष्णुस्त्वं रुद्रस्त्वं प्रजापतिस्त्वमग्निर्वरुणो वायुः ॥

† स ब्रह्म स शिव स्सहरि स्सेन्द्र स्सोऽग्नि स्सोऽक्षरः परमस्स्वराट् ॥

‡ ब्रह्मैव परमात्मा । स ब्रह्मा स विष्णु स्स रुद्र स्स इन्द्रः ॥

§ सर्वेश मप्रमेय मजं शिवं सदाकाशं निरालम्बमद्वयं ब्रह्मविष्णुरुद्रादीना मेकलक्ष्यं सर्वकारणं परं ब्रह्म ॥

¶ विरिञ्चिनारायणशङ्करात्मकं नृसिंह्म देवेश तव प्रसादतः । अचि-

"உம்முடையப் பிரஸாதத்தினலே பிரும்மா நாராயண சங்கர
"சுவரூபியாயுஞ் சிந்திக்கக்கூடாததாயுங் காணக்கூடாததாயும்
"முடிவில்லாததாயுமழிவற்றதாயும் சுவப்பிரகாசமாயுமிருக்கிற
"வாஸ்தவமான பிர்ம்மசுவரூபத்தையறிகிறார்கள்."

6. சாண்டில்லியோபநிஷத்-நூ-ல், * "இந்தத் தேவனாகியபக
"வான் ஸகலைசுவரியமுடையவர். எங்கும் நிறைந்தவர். ஸகல
"பூதங்களுடைய ஹிருதயத்திலும் நிலையாயிருக்கிறவர். மாயை
"யாகிற சக்தியுடையவர். மாயையினால் ரூபமுடையவர். அவர்
"தான் பிரும்மா. அவர் தான் விஷ்ணு. அவர் தான் உருத்தி
"ரன். இந்திரன் முதலிய ஸகல தேவதைகளுமவரே. ஸகல
"பூதங்களு மவர்தான்."

7. அத்தியாத்துமோபநிஷத்தில், † "அந்தப் பரமாத்துமாவே
"பிரும்மா. அவரேவிஷ்ணு. அவரே இந்திரன். அவரே சிவன்.
"இந்த ஸகல ஜகத்துமவரே. அவரைக்காட்டிலுமந்நியமாய்
"யாதொன்றுமில்லை."

8. தாரஸாரோபநிஷத்தில், ‡ "ஓம்நமோநாராயணாய என்கிற
"தாரகமந்திரத்தைச் சித்சுவரூபமென்று பாவிக்கவேண்டியது.
'ஓமென்கிற அக்ஷரமாத்துமசுவரூபம். நம என்கிற இரண்டக்ஷ
"ரம் பிரகிருதி சுவரூபம். நாராயணாய என்கிற ஐந்தக்ஷரம்
"பரப்பிர்ம்மசுவரூபமென்று இவ்விதமாயெவனறிகிறானோ அவ
"ன் மரணமற்றவனாகிறான்."

---

न्त्यमव्यक्तमनन्तमव्ययं देवात्मकं ब्रह्म निजं विजानते ॥

* असौ देवो भगवान् सर्वैश्वर्यसम्पन्नस्सर्वव्यापी सर्वभूतानां हृदये सन्निविष्टो मायावी मायाकृतिः । स ब्रह्म स विष्णु स्स रुद्र स्स इन्द्र स्सर्वे देवा स्सर्वाणि भूतानि ॥

† स्वयं ब्रह्मा स्वयं विष्णु स्स्वयमिन्द्र स्स्वयं शिवः । स्वयं विश्वमिदं सर्वं स्वस्मादन्यन्नकिञ्चन ॥

‡ ॐ नमो नारायणायेति तारकं चिदात्मकमित्युपासितव्यम् । ओमित्येकाक्षरमात्मस्वरूपम् । नम इति द्व्यक्षरं प्रकृतिस्वरूपम् । नारायणायेति पञ्चाक्षरं परब्रह्मस्वरूपमिति यएवं वेद सोऽमृतो भवति ॥

வராஹோபநிஷத்-௨-ல், * "ஸாக்ஷாத் ஞானசுவரூபியான "அவனே சிவன். அவனே ஹரி. அவனே பிரும்மா."

கர்க்கஸம்ஹிதை-விசுவஜித்கண்டம்-அத்-௨௩-௬-௯-ல், † "(சிவன் சொல்வது) பிரும்மா விஷ்ணு சிவனென்கிற நாம் மூவ "ரும் அந்த பிர்ம்மத்தினுடைய கலைகளே" (அம்சமே).

பிரும்மபுராணம்-அத் - ௯௯-ல், ‡ "(ஓ! பகவானே!) நீர் "தான் விஷ்ணு. நீர்தான் ஹரி. நீர்தான் இந்திரன். நீரே உருத் "திரன். ஜயிக்கக்கூடாதவரும் நீரே. சம்புவும் நீரே. பிரும்மா "வும் நீர்தான். உம்மிடத்திலிருந்து இந்த ஸகலப் பிரபஞ்சமு "முண்டாயிற்று. அவையெல்லாமும்மிடத்திலேயே நிலைபெற் "றிருக்கிறது."

கூர்ம-புராணம்-அத்-௯௪-௬-௧௦-ல், § "சிருஷ்டிஸ்திதி ஸம் "ஹாரங்களுக்கு முறையே பிரும்மா விஷ்ணு சிவன் முதலான "உம்முடைய மூர்த்திகள்மூலமாய்க் கருத்தாவாகவும் அவர்க "ளுக்கெஜமானனாகவும் நியந்தாவாகவுமிருக்கிறீர்."

பத்துமபுராணம்-ஆதிகண்டம்-அத்-௪௮-ல், $ "தேவதை "களுக்கெல்லாம் பிரபுவாயும் நாசமற்றவராயுமிருக்கிற அவர் "(பரமாத்துமா) பிரும்மா விஷ்ணு இவர்களாயும் அப்படியே "ஈசானனாயுமிருக்கிறார். பிரும்மாவாகவிருந்து ஸ்தாவரஜங்கமங் "களான ஸகல பூதங்களையும் சிருஷ்டிக்கிறார். அந்த இந்த ஸக "லப் பிரபஞ்சங்களையும் பிராணிகளையுஞ் சிரேஷ்டமான விஷ்

---

* स एव साक्षाद्विज्ञानी स शिव स्स हरि विंधिः ॥

† त्रयो वयं तत्कला हि ब्रह्मविष्णुशिवादयः ॥

‡ त्वं विष्णु स्त्वंहरिश्चक्री ॥ १४२ ॥ त्वं रुद्र स्त्वं दुराधर्षः १४४ ॥ त्वं शम्भु स्त्वं स्वयम्भूश्च ॥ १४६ ॥ त्वत्तस्सर्वमिदं जातं त्वयि सर्वं प्रतिष्ठितम् ॥ १६८ ॥

§ सृष्टिस्थितिविनाशनाम् कर्ता कर्तृपतिर्भवान् । ब्रह्मविष्णुशिवाद्याभिरात्ममूर्तिभिरीश्वरः ॥ இந்தவாக்கியத்தை விஷ்ணுபுராணம்-௫-௩௦-௧௦-லுங்காண்க.

$ ब्रह्मा विष्णुस्तथेशानो देवताप्रभुरव्ययः ॥ २ ॥ ब्रह्मा सृजति भूतानि स्थावरं जङ्गमञ्च तत् । तान्येतानि परो लोके विष्णुः पालयति

"ணுவாயிருந்து பாலநஞ்செய்கிறார். பிரளயகாலத்தில் உருத்
"திரனாயிருந்து ஸகல ஜகத்தையுமழிக்கிறார்."

சிவபுராணம்-ஞானஸம்ஹிதை-அத்-௭௭-ல், * "சிவன் யார்?
"ஹரி யார்? பரிசுத்தமான உருத்திரர் யார்? பிரும்மா யார்?
"ஜகத்திற்குக் கருத்தாயாரென்று சொல்லப்படுகிறார்? இவர்
"களில் நிர்குணன் யார்? இந்தச் சந்தேகத்தை நிவிருத்திக்க
"நீரே தகுந்தவராயிருக்கிறீர். நிர்குணசுவரூபம் ஸகுணசுவரூ
"பமிவைகளெல்லாமும்மாற் சொல்லத்தக்கது."

"(உத்தரம்) எந்த நிர்குணமான பரமாத்துமாவினி
"டத்திலிருந்து இந்த ஸகலப்பிரபஞ்சமுமுண்டாயிற்றோ அதை
"யே சிவனென்கிற பெயரையுடையதாக வேதாந்தங்களையறிந்த
"வர்கள் சொல்லுகிறார்கள். அந்த நிர்குணப்பிர்ம்மத்தினிடத்தி
"லிருந்து புருஷனோடுகூடியப் பிரகிருதியுண்டானாள். அந்தப்
"பிரகிருதிபுருஷர்கள் பஞ்சக்குரோசியென்கிற பெயரினாற் பிரசி
"த்தியடைந்த சூலஸ்தமென்கிற ஸ்தலத்திற் தபஸ் செய்தார்கள்.
"ஓ! முனியே! (அப்பொழுது) ஸந்தோஷத்தினாற் பெருகியஜல
"த்தினாலெங்கும் வியாபிக்கப்பட்டது. அதில் ஹரியானவர்
"தானாகவே சயநித்துக்கொண்டிருந்தார். அவரை நாராயணனெ
"ன்று முனிகள் பிரசித்தமாய்ச் சொல்லுகிறார்கள். அப்படியே
"முந்தியயாதொருப் பிரகிருதியுண்டோ அவள் நாராயணீ யென்
"று பிரசித்தியடைந்திருக்கிறாள். அந்தநாராயணனுடைய நாபீ

---

प्रजाः ॥ ३ ॥ कल्पान्ते तत्समग्रं हि रुद्रस्संहरते जगत् ॥ ४ ॥

* शिवः कोवा हरिः कोवा रुद्रः कोवा समाहितः । ब्रह्मा कोवा भवेद्यो वै कर्ता च जगतस्स्मृतः ॥ १ ॥ एतेषु निर्गुणः कोवा संशयं छेत्तुमर्हसि । निर्गुणश्च गुणी चैव सर्वं च कथ्यतां त्वया ॥ २ ॥ यतस्सर्वं समुत्पन्नं निर्गुणात्परमात्मनः । तदेव शिवसंज्ञं हि वेदवेदान्तिनो विदुः ॥ ३ ॥ तस्मात्प्रकृतिरुत्पन्ना पुरुषेण समन्विता । ताभ्यां तपः कृतं तत्र शूलस्थे च स्थले मुने ॥ ४ ॥ पञ्च क्रोशीति विख्याते हर्षाच्च प्रसृतेम्बुना । व्याप्तं च सकलं ह्येतत्तत्र सुप्तो हरिस्स्वयम् ॥ ५ ॥ नारायणेति विख्यातं वदन्ति मुनयस्तथा । नारायणीति विख्याता प्रकृतिर्या पुरोगता ॥ ६ ॥ तन्नाभि-

"கமலத்திலிருந்துண்டானவர் யாரோ அவர் பிதாமகராகிறபிரும்
"மா. அவர் (பிரும்மா) எப்போதுமுள்ள அந்தவிஷ்ணுவை தப
"விஞலேயே பார்த்தார். வைகுண்டவாஸியாய்ச் சொல்லப்படு
"கிறவர் யாரோ அவர் மஹாப் பிரளயத்தில் லயத்தையடைகி
"ருர். ஓ! வித்துவான்களே! அந்தப்பிரும்மாவிஷ்ணு இவர்க
"ளுக்குள் வாதத்தைத்தீர்க்கும்பொருட்டெந்தரூபமானது அவ்
"விடத்திற் காண்பிவிக்கப்பட்டதோ அதுநிர்குணமாகிய சிவனி
"டத்திலிருந்துண்டான மஹாதேவனென்றுப் பிரசித்தியடைந்
"ததாயிருக்கிறது. அந்தமஹாதேவனலே நான் உருத்திரனுக
"த் தாடையிலிருந்துண்டாகப் போகிறேனென்று சொல்லப்பட்
"டிருக்கிறது. உலகானுக்கிரஹத்தின்பொருட்டு உருத்திரனென்
"கிற பெயரினுற் பிரசித்தியடைகிறேனென்றுஞ் சொல்லப்பட்டி
"ருக்கிறது. ரூபமில்லாதவராளுலும் ஸகலஜநங்களுந் தியாநஞ்
"செய்யும் பொருட்டு ரூபமுடையவராஞர். பக்தர்களிடத்தில
"ன்புள்ள நிர்குணமான அந்தப் பரமாத்துமாவே ஸாக்ஷாத்
"சிவன்."

பாகவதம்-ஸ்கந்தம்-அ-அத்-எ-ல், * "ஓ! எங்கும் நிறைந்
"தவரே! எந்த உம்முடைய குணசுவரூபமாகிற சக்தியினலே
இவ்வுலகத்தின் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறீரோ
"அதனலே பிரும்மா விஷ்ணு சிவனென்கிற பெயரைத்தரிக்கி
"றீர். ஞானசுவரூபியான நீர் சிரேஷ்டமான பிர்ம்மமாயுஞ் சிரே
"ஷ்டமான இரஹஸ்யமாயும் ஸத்து அஸத்துக்களுடைய தோற்

---

कमले यो वै जातस्सच पितामहः । तेनैव तपसा दृष्टस्स वै विष्णुस्सना-
तनः ॥ ७ ॥ वैकुण्ठवासी यः प्रोक्तो महालये विलीयते । उभयोर्वादना-
शार्थं यद्रूपं दर्शितं बुधाः ॥ ८ ॥ महादेवेति विख्यातं शिवाच्च निर्गुणा-
दिह । तेन चोक्तोह्यहं रुद्रो भविष्यामि कपोलतः ॥ ९ ॥ रुद्रो नाम स
विख्यातो लोकानुग्रहकारकः । ध्यानार्थं चैव सर्वेषामरूपो रूपवानभूत् १० ॥
सएव च शिवस्साक्षाद्भक्तवात्सल्यकारकः ॥ ११ ॥

* गुणमय्या स्वशक्त्यास्य सर्गस्थित्यप्ययान् विभो । धत्से यया
स्वदृक्भूमन् ब्रह्मविष्णुशिवाभिधाम् ॥ २३ ॥ त्वं ब्रह्म परमं गुह्यं सदसद्भा-

"றமாயும் விளங்குகிறீர். இவ்விதமாயிந்த ஜகத்திற்கெல்லாமாத்
"துமாவாகவுமீசுவரனுகவுமிருக்கிறீர்."

பவிஷியபுராணம்-க-அத்-கஉ௩-ல், † "எப்போதுமுள்ள ஓ!
"தேவதேவா! தேவதைகளுக்கெல்லாமாதிதேவனும் ஈசுவரர்க
"ளுக்கீசனும், பூதங்களுக்காதிகருத்தாவாயும், நீரிருக்கிறீர்.
"தேவதைகள் கந்தர்வர்கள் இரக்ஷஸர்கள் முனிகள் கிந்நரர்கள்
"ஸித்தர்கள் அப்படியே ஊர்வநங்கள் பக்ஷிகள் இவைகளுக்கும்
"ஸகலப்பிராணிகளுக்கும் உயிர்வாழ்வாயுமிருக்கிறீர். பிரும்மா
"வும்நீரே. மஹாதேவனும் நீரே. விஷ்ணுவும் நீரே. சிருஷ்
"டிகருத்தாவும் நீரே."

மார்க்கண்டேயபுராணம்-அத்-ச-சு-சச-ல், * "அப்படிப்ப
"ட்டதேவனும் பகவானுமெங்கும் நிறைந்தவனும் பிரபு
"வாயுமிருக்கிற அந்த நாராயணனே, ஓ! பிராம்மணோத்தமா!
"(பிரும்மா விஷ்ணு உருத்திரர்களாகிற) ஸகுணமாயும் அப்படி
"யே நிர்குணமாயும் நான்குவிதமாயிருக்கிறார்."

பிரும்மவைவர்த்தபுராணம் பிரும்மகண்டம் - அத்-கஅ-சு-
கக-ல், †, "ஸகலத்திற்குமாதாரமானவளாயுஞ் சிரேஷ்டத்தி
"ற்கெல்லாஞ் சிரேஷ்டமானவளாயும் பிரும்மா விஷ்ணு சிவன்
"முதலியவர்களைப் பெற்றவளாயும் (உண்டாக்கினவளாயும்)முக்
"குணசுவரூபமுள்ளவளாயுமிருக்கிற பிரகிருதியானவள் யாரால்
"சிருஷ்டிக்கப்பட்டாளோ" (அந்தப் பரமாத்துமாவுக்கு நமஸ்
காரம்).

---

वभावनम् । नाना शक्तिभि राभातस्त्वमात्मा जगदीश्वरः ॥ २४ ॥

† आदिदेवोसि देवाना मीश्वराणां त्वमीश्वरः । आदिकर्तासि भूतानां देव देव सनातन ॥ ११ ॥ जीवनं सर्वसत्वानां देवगन्धर्वरक्षसाम् । मुनिकिन्नरसिद्धानां तथैवोरगपक्षिणाम् ॥ १२ ॥ त्वं ब्रह्मा त्वं महादेव स्त्वं विष्णु स्त्वं प्रजापतिः ॥ १३ ॥

* स देवो भगवान् सर्वं व्याप्य नारायणो विभुः । चतुर्धा संस्थितो ब्रह्मन् स गुणो निर्गुणस्तथा ॥

† येन स्रष्टा च प्रकृति स्सर्वाधारापरात्परा । ब्रह्मविष्णुशिवादीनां प्रसूर्या त्रिगुणात्मिका ॥

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-௭௯-சு-௧௨-ல், * "(நாரா "யணனவர்) இரஜோகுணத்தினாற் பிரும்மாவாகவுந் தமோகு "ணத்தினாற் சங்கரராகவும் ஸத்துவகுணத்தினாலெங்கும் நிறை "ந்த விஷ்ணுவாகவுமிருக்கிறார். ஸகலத்திற்குமாத்துமாவாயி "ருக்கிறதனாலே மஹேசுவரனாகவுமிருக்கிறார்."

வராஹபுராணம்-அத்-௭௨-ல், † "அகஸ்தியர் சொல்வது— "(உருத்திரரான) தாங்களும் பிரும்மாவும் விஷ்ணுவும் மூன்று "வேதங்களாகச் சொல்லப்படுகிறீர்கள். (எப்படிப்போலெனில்) "அக்நியானது தீபசம்பந்தத்தினாற் தீபமென்று சொல்லப்படுகி "றதுபோல, ஸகல சாஸ்திரங்களிலேயு மெல்லாவிடங்களிலே "யும் நீரிருக்கிறதாகச் சொல்லப்படுகிறீர். தாங்களெந்தக்காலத் "தில் முக்கியமானவராயிருக்கிறீர். விஷ்ணுவெந்தக்காலத்தில் "முக்கியமானவராயிருக்கிறார். பிரும்மாவெந்தக்காலத்தில் முக் "கியமானவராயிருக்கிறார். முக்கண்ணுடைய ஓ! தேவா! இந்த "விஷயத்தையெனக்குச் சொல்லும்."

"உருத்திரர் சொல்வது—விஷ்ணுவே பரபிரும்மம். அந்த "பிர்ம்மத்தினிடத்திற் மூன்றுபேதமானது நினைக்கப்படுகிறது. "வேதசித்தாந்த மார்க்கங்களிலே (அக்ஞானத்தினால்) மோகம "டைந்தவர்கள் அதை (அபேதத்தை) யறிகிறதில்லை. விஷ்— "விச், என்கிற தாது (பகுதி) பிரவேசமென்றஅர்த்தமுடையது. "அதன்பேரில், ஸ்நு-ஸ்நு, என்கிறப் பிரத்தியயம் (விகுதி) சேர்ந் "திருக்கிறதனால் விஷ்ணுவென்றாகிறது. அந்தச் சப்தத்தினாற் "சொல்லப்படுகிறவர் பரமாத்துமா. அவர் ஸர்வகமாயும் ஸக "லதேவதைகளுக்குள்ளே விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படுகிறார்.

* हिरण्यगर्भो रजसा तमसा शङ्करस्स्वयम् । सत्वेन सर्वगो विष्णुस्सर्वात्मत्वे महेश्वरः ॥

† अगस्त्यउवाच । भवान् ब्रह्मा च विष्णुश्च त्रयमेतत्त्त्रयीस्मृता । दीपोग्निर्दीपसंयोगै स्सर्वशास्त्रेषु सर्वगः ॥ २ ॥ कस्मिन् प्रधानो भगवान् काले कस्मिन्नधोक्षजः । ब्रह्मा वा एतदाचक्ष्व मम देव त्रिलोचन ॥ ३ ॥ रुद्रउवाच । विष्णुरेव परं ब्रह्म त्रिभेदमिह पठ्यते । वेदसिद्धान्तमार्गेषु तन्नजानन्ति मोहिताः ॥ ४ ॥ विशप्रवेशने धातुस्तत्र स्नुप्रत्ययादनु । विष्णुर्य-

"நாராயணன் சிவன் விஷ்ணு சங்கரன் புருஷோத்தமன் யென்ற
"பெயர்களிலெந்தப் பெயரினாலுஞ் சாசுவதமான பரப்பிரம்ம
"மே சொல்லப்படுகிறது. ஓ! பிராம்மணோத்தமா! வேதத்திற்
"கருமகாண்டத்தை யநுஸரிக்கிறவர்களுக்குப் பிரும்மா விஷ்ணு
"மஹேசுவரரென்ற நாங்கள்மூவரும் மந்திரத்திற்காதியாகவிரு
"க்கிறோமென்பதிற் சந்தேகமில்லை. நான் விஷ்ணுவாயும் வேத
"ங்களாயும் வேதத்தில் விதித்த கருமங்களாயுமிருக்கிறேன்.
"அப்படியிருந்தாலும் இம்மூன்றும் (மூன்றுமூர்த்திகளும்) ஒன்
"றுதான் புத்திமான்கள் வெவ்வேறாய் நினைக்கிறதில்லை. ஓ!
"நன்னடக்கையுள்ளவனே! இப்படியிருக்க யெவன் பக்ஷபாதத்
"தினாலே வேறாக நினைக்கிறானோ அதனாற் பாபியான வந்தபுருஷ
"னவன் பயங்கரமான நரகத்தை யடைகிறான். ஓ! பிராம்
"மணோத்தமர்களே! நான் பிரும்மாவாயும் விஷ்ணுவாயும் இரு
"க்கு யஜுஸ் ஸாமவேதங்களாயுமிருக்கிறேன். இந்த விஷயத்
"தினனக்காவது மற்றெல்லோருக்குமாவது பேதமானதில்லை."
(ஒருவரும் பேதமாயெண்ணக்கூடாதென்பது கருத்து).

ஸ்காந்தபுராணம்-சூதஸம்ஹிதை சூதகீதை-அத்-ச-ல், *
"பிரும்மாவிஷ்ணுமஹேசுவரர்களாகிய மூன்று மூர்த்திகளுக்
"குக் காரணமான பிரம்மமே, பிரும்மாவிஷ்ணுஉருத்திரர்களு
"க்குச் சிருஷ்டிமுதலிய காரியத்திலுபகாரஞ் செய்கிறது. அப்
"படியிருந்தாலும் மூவரும் சிருஷ்டிமுதலிய காரியங்களுக்குக்க

---

स्सर्ववेदेषु परमात्मा सनातनः ॥ ९ ॥ नारायणश्शिवो विष्णुश्शङ्करः पुरुषो-
त्तमः । एतेषु नामभिर्ब्रह्म परं प्रोक्तं सनातनम् ॥ १२ ॥ कर्मवेदयुजां विप्र
ब्रह्मा विष्णुर्महेश्वरः । वयं त्रयोपि मंत्राद्या नात्रकार्या विचारणा ॥ १३ ॥
अहंविष्णुस्तथा वेदा ब्रह्मकर्माणि चाच्युत । एतत्त्रयं त्वेकमेव न ग्भापृथ-
वयेत्सुधीः ॥ १४ ॥ योन्यथा भावयेदेतत्पक्षपातेन सुव्रत । स याति
नरकं घोरं तेनैवं पापपूरुषः । अहं ब्रह्मा च विष्णुश्च ऋग्यजुस्सामएवच ।
तेनास्मिन् भेदमप्यस्ति सर्वेषां द्विजसत्तमाः ॥ १६ ॥

* तथापि परमं तत्वं त्रिमूर्तीनां तु कारणम् । ब्रह्मविष्णुमहेशानां
स्रष्टानुपकरोति च ॥ १९ ॥ उपचारतया तेपि स्रष्टारइति शब्दिताः ।

"ருத்ராக்களென்று உபசாரமாய்ச் சொல்லப்படுகிறார்கள். ஓ!
"ஆஸ்திகர்களே! அதிலுங்கூடவாஸ்தவத்திற் சிருஷ்டிகருத்தா
"இரண்டாவதற்ற பிரம்மமே"

காளிகாபுராணம்-அ [illegible] * [illegible]
"னுசொல்வது—ஓ! விருஷபத்துவஜ! [illegible]
"த்துவமும் ஞானமுமுமாற்சொல்லப்பட்டது. [illegible]
"பிநாகிகளாகியநாமெந்தபிரம்மத்தினுடைய அம்சரூபர்தான்."

10. ஓ! ஜயவிருதா!—இப்படிப்போலொத்த அநேகப்பிரமாணங்கள் பிரம்மாவிஷ்ணுசிவன்முதலியஉத்தமதேவதைகள் பிர்ம்மசுவரூபமென்று சிலவாக்கியங்களும் பிரம்மாதிகளுக்குக் காரணமான ஒருவஸ்துவிருக்கிறதாகச் சிலவாக்கியங்களும் சொல்லுகின்றனவாகையாலத்துவைதிகளெந்தமூர்த்தியானாலும் அந்தமூர்த்திப் பிர்ம்மசுவரூபமென்றே பாவனைசெய்கிறபடியாலவர்களுக்கு உயர்வுதாழ்வென்பதில்லை.

11. ஜயவிரதன்:—ஓ! மஹாஸாதுவே! அத்துவைதசித்தாந்தத்தில் ஜீவேசுவரஜகத்துக்களென்றவைகள் பிர்ம்மத்தைத்தவிர வேறல்லவென்றுசொல்லப்பட்டிருக்கிறது ஆனாலிப்போது குறித்துக்காட்டிய சுருதிமுதலியவாக்கியங்கள் பிரும்மவிஷ்ணுசிவன் என்றமூர்த்திகளும் இந்திரன்முதலிய உத்தமமான சிலதேவதைகளும் பிர்ம்மசுவரூபமென்று சொல்லுகின்றன. ஸகலமும் பிர்ம்மசுவரூபமாயிருக்கையிற் திருமூர்த்திமுதலிய இந்த தேவதைகள் பிர்ம்மசுவரூபமென்று சொல்லவேண்டியதென்ன? இதனால் மற்றவைகள் பிர்ம்மசுவரூபமல்லவென்றாகிறதே? சாஸ்திரங்களிலிப்படி யொன்றுக்கொன்று விரோதமாய்ச் சொல்லக்கூடுமா?

12. சுசர்மா:—ஓ! சூக்ஷ்மபுத்தியுள்ளவனே! உன்னுடையவிந்தவினாக்கள் சிலாகிக்கத்தக்கவைகளே. சாஸ்திரங்களொன்றுக்கொன்று விரோதமானவிஷயங்களை யற்பமேனுஞ் சொல்லுகின்

---

तत्रापि तत्वतस्स्रष्टा ब्रह्मैवाद्वयमास्तिकाः ॥ १६ ॥

* श्रीभगवानुवाच । इति तत्वं त्वया प्रोक्तं ज्ञानं च वृषभध्वज । तदंशभूता स्तु वयं ब्रह्मविष्णुपिनाकिनः ॥

றனவல்ல. நம்முடைய புத்திக்குறைவினுல் விரோதம்போற்தோ
ற்றும். சாஸ்திரார்த்தங்களை யாராய்ந்துபார்ப்பதனுலும் ஸம
புத்தியினுலும் விரோதம்போற் காணுமிடங்களிற் சாஸ்திரங்க
ளுடைய மற்றபாகங்களைக்கொண்டும் பெரியோர்களுடைய வா
க்கியங்களைக்கொண்டும்பரிஹாரஞ்செய்துகொள்ளவேண்டியது.
உதாரணமாக—"अवश्यमनुभोक्तव्यं कृतं कर्मशुभाशुभम् । नाभुक्तं क्षीयते कर्म
कल्पकोटिशतैरपि ॥—செய்யப்பட்டதாகிய சுபாசுபகருமமானது அவ
சியமநுபவிக்கவேண்டியதே. அநுபவிக்காமலே நூறுகோடி
கற்பங்களானுலுங் கருமம் நசிக்கிறதில்லை." என்று சாஸ்திரங்
களிலோரிடத்திலும்—"यथैधांसि समिद्धोऽग्नि र्भस्मसात् कुरुतेऽर्जुन । ज्ञानाग्नि
स्सर्वकर्माणि भस्मसात् कुरुते तथा ॥—ஓ! அர்ஜுனா! நன்ருய் ஜ்வலித்
துக்கொண்டிருக்கிற அக்நியானது விரகுகளை யெப்படியெரித்
துச் சாம்பலாக்குமோ அப்படிப்போலஞானமாகிற அக்நியானது
ஸகலகருமங்களையும் நசிக்கச்செய்கிறது." என்ருெருபக்கத்
திலும்—"अहिंसा परमोधर्मः ।—(பிராணிகளுக்கு) ஹிம்ஸைசெய்யா
மலிருப்பதே உத்தமமான தருமம்" என்று ஓரிடத்திலும்—"यज्ञे
पशुवधः कर्तव्यः ।—யாகத்திற் பசுஹிம்ஸைசெய்யலாம்" என்று மற்
ருேரிடத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்க
ளொன்றுக்கொன்று விரோதமாய்த் தோற்றினுலும் விரோத
மல்ல. எப்படியெனில், ஞானமடையாதவன் கருமபலன்களைக்க
ட்டாயமநுபவிக்கவேண்டியதே யென்பதனுல் முந்தியவாக்கியத்
திலுள்ளவிரோதத்தைப் பரிஹாரஞ்செய்துகொள்ளவேண்டும்.
யாகத்திற்தவிர மற்ற பசுஹிம்ஸைகூடாதென்று பிந்தியவாக்கி
யத்திலுள்ள விரோதத்தைப் பரிஹாரஞ்செய்துகொள்ளவேண்
டும். இப்படித்தான் சாஸ்திரங்களில் விரோதங்காணும்போது
அதற்குப் பரிஹாரஞ்செய்துகொள்ளவேண்டியது விவேகிகளு
டைய கடமையாயிருக்கிறது. இப்படிப்போற்ருன் இந்தத்திரு
மூர்த்திகளுடைய விஷயத்திலுமென்றறி. திருமூர்த்திகள் பிர
ம்மசுவரூபமென்று சொல்லியவாக்கியங்களின் கருத்தென்னவெ
னிற், சாஸ்திரங்களிற் சிலவிடத்திற் பிரும்மாவை ஜகத்கார
ணவஸ்துவாயும் சிலவிடத்திற் விஷ்ணுவை ஜகத்காரணவஸ்து
வாயும் சிலவிடத்திற் சிவனை ஜகத்காரணவஸ்துவாயும், இந்தி
ரன், அக்நி, சூரியன், வாயுமுதலிய திக்பாலகர்களைச் சிலவிட

த்தில் ஜகத்காரணவஸ்துவாயுஞ் சொல்லுகின்றன. அல்லாம லும் அந்த ஒவ்வொரு மூர்த்தியைவிட சிரேஷ்டமான வேறு வஸ்துவில்லையென்றுஞ்சொல்லுகின்றன. எனப்படிச் சொல்லு கின்றனவெனில், ஞானயோகத்தைச் செய்துகொண்டிருக்கிற யோகிகள் தவிர மற்றவதிகாரிகளுபாஸித்து அதன்மூலமாய் ஞா நமடையவேண்டுமாகையால், அந்தவதிகாரிகள் தாங்களுபாஸி க்கிற மூர்த்தியெதுவோ அது ஸர்வோத்தமமென்கிற புத்தியுண் டானாலன்றியில் உபாஸனையில் நிலையடையார்களென்று சாஸ் திரங்களிப்படிப்பட்ட பலமூர்த்திகளையும் அவர்களுடைய உபா ஸனையையும் விதிக்கின்றன. இப்படிப்பட்ட மூர்த்தியுபாஸகர் கள் அந்தந்த மூர்த்திகளுடைய உலகத்தில் ஸாலோகாதி முக் தியை யடையக்கூடுமானாலும் பிர்ம்ம ஞாநிகளடையத்தக்கஸாயு ஜ்ய முக்தியையடையமாட்டார்கள்.

13. அந்த மூர்த்தியுபாஸனைசெய்கிறவதிகாரிகளே தானு பாசிக்கிறமூர்த்தி பிர்ம்மசுவரூபம். அந்த மூர்த்திக்குக்காரண மான பிர்ம்மமேஇந்த மூர்த்திசுவரூபமாய்விளங்குகிறதென்கிற பாவனையோடு அந்தமூர்த்தியுபாஸனைசெய்வானாகில் அவன் சீக் கிரத்தில் ஞானமடைந்து நிர்குணப்பிர்ம்மோபாஸகனாகவாய்விடு வான். இப்படிப்பட்ட பலவுத்தேசங்களைக்கொண்டே பிரும்மா விஷ்ணு உருத்திரர் முதலிய இந்த மூர்த்திகள் பிர்ம்மசுவரூபமா க சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆகையாற், சாஸ்திரங்கள் பரஸ்பர விரோதமுள்ளதல்ல.

14. அத்துவைதசித்தாந்தத்தின் வியவஹாரதசையாகிற அஞ்ஞானதசையைப் பின்பற்றுகிறவதிகாரிகள் சொல்வதாவது— பிரும்மா விஷ்ணு உருத்திரர் முதலிய சுவரூபங்கள் ஈசுவரனை விடவேறல்ல. அந்த ஈசுவரனானவர் உலகசிருஷ்டிகாரியங்களைச் செய்ய உத்தேசிக்கும்போது இரஜோகுணத்தை சுவீகரித்து பிரும்மாவென்கிற தேகத்தையடைந்து சிருஷ்டிமுதலியகாரியங் களையும், ஸத்துவகுணத்தை சுவீகரித்து விஷ்ணுவென்கிற தே கத்தையடைந்து உலகரக்ஷணைமுதலிய காரியங்களையும், தமோ குணத்தை சுவீகரித்து உருத்திரரென்கிற தேகத்தையடைந்து ஸம்ஹாரம் முதலிய காரியங்களையுஞ் செய்வதுமல்லாமல், உல கத்திற்கு நன்மை செய்யவேண்டியதன்பொருட்டுப் பலவித அவ

தாரங்கள் செய்கிறதாகவும் அந்தப் பிரும்மவிஷ்ணு உருத்திரர்களாகிய மூர்த்திகளுடைய சுவரூபமோ சுத்தஸத்துவப் பிரகிருதியினாலுண்டானதாகையாலவர்களிடத்திற் பிர்ம்மசைதந்நியப் பிரகாசமதிகமாயிருக்கிறதாகவும் அவர்கள் மஹாஞாநிகளாயும் ஸர்வக்ஞர்களாயும் ஜீவன்முக்ததசையையடைந்தவர்களாயுமிருக்கிறார்களென்றும் அவர்கள் ஸர்வவல்லமையும் சக்தியுமுடையவர்களென்றும் இப்படிப்பட்ட மஹாபுருஷர்களானத் திருமூர்த்திகள் சிருஷ்டிகாலத்திலுண்டாய்ப் பிரளயகாலம்வரையிலிவ்வுலகத்தை இரக்ஷித்துக்கொண்டிருந்து மகாப்பிரளயத்திலித் தேகத்தை விட்டுவிட்டு விதேகமுக்தியையடைகிறார்களென்றும்இப்படியே ஒவ்வொரு அண்டத்திற்கும் பிரும்மாதி மூர்த்திகளுண்டென்றும் அந்தத்திருமூர்த்திகள் முக்தர்களாகையாலவர்கள்செய்கிறவெப்படிப்பட்டகாரியங்களினாலும் சுகதுக்காதி இருமைகள் அவர்களைத்துடரமாட்டாதென்றும் இந்த மூர்த்திகளையுபாஸித்தே அவர்களுடைய அநுக்கிரஹத்தினாற் பிர்ம்மஸாயுஜ்யமாகிற மோக்ஷத்தையடையவேண்டுமென்பது முதலியவைகளே.

15. இப்படிப்பட்ட அபிப்பிராயத்தையாதரிக்கிற பிரமாணங்களநேகமுண்டு. அவைகளிற் சிலவைச்சொல்லுகிறேன் கேள்.

மஹோபநிஷத்-நூல், * "மலைகள் க்ஷீணித்துப்போகின்றன. "நக்ஷத்திரங்கள் க்ஷீணித்துப்போகின்றன. ஸமுத்திரங்கள் வற் "றிப்போகின்றன. துருவனும் சாசுவதமாய் ஜீவித்திருக்கிறவ "னல்ல. சித்தர்களும் நசித்துப்போகிறார்கள் தாநவர்களுமழி "ந்துபோகிறார்கள். பிரும்மநிஷ்டையிலிருக்கிற பிரும்மாவும் "பிறப்பற்றவராகிய ஹரியும் உருவமற்றவர்களாகிறார்கள். பவ "னென்கிற ஈசுவரன் இல்லாமையையடைகிறார். இந்திரன் முத "லிய திக்பாலகர்களும் க்ஷீணித்துப்போகிறார்கள். பிரும்மாவும்

* शैला अपि विशीर्यन्ते शीर्यन्ते तारका अपि । शुष्यन्त्यपिसमुद्राश्च ध्रुवोप्यध्रुवजीवनः । सिद्धा अपि विनश्यन्ति जीर्यन्ते दानवादयः । परमेष्ठ्यपि निष्ठावान् हीयते हरिरप्यजः । भवोप्यभावमायाति शीर्यन्ते वै

"விஷ்ணுவும் உருத்திரரும் ஸகலபூதஜாதிகளும் பிரளயாக்கினியில் "ஜலங்கள் நசித்துப்போவதுபோல, நாசத்தையேயடைகிறார் "கள்"

பராசரஸ்மிருதியில், * "ஒவ்வொரு மஹாகற்பத்திலும் "பிரும்மா விஷ்ணு மஹேசுவரராகிய இவர்கள் உற்பத்திநாசமி "வைகளோடுகூடியிருக்கிறார்கள்."

வாஸிஷ்டராமாயணம் ௩-௪0-௩௫-ல், † "ஓ! இராமா! "மஹாப்பிரளயத்தில் ஹரிஹரர்முதலிய எல்லோரும் விதேக "முக்தியை யடைகிறார்கள்."

ஷை-௪-௪௭-௪-ல், ‡ "ஓ! இராகவா! இலக்ஷங்களான "அநேக பிரும்மாக்களும் நூறுகளான சங்கரர்களுமிந்திரர்க "ளும் ஆயிரங்களான நாராயணர்களும் சென்றுபோய்விட்டார் "கள்."

ஷை ௫-ஸர்-௭௫-ல், $ "பகவானன ஹரியானவர் (ஜீவன்) "முக்தராயிருந்தாலுந் தன்னுடையப் பிரதிக்ஞையினலிவ்வுலக த்தில் வெகுகாலம் ஜரை மரணம் உயுத்தம் முதலிய இருமையில் "விளையாட்டோடு சஞ்சரிக்கிறார் முக்கண்ணுடைய சம்புவான "வர் ஜீவன் முக்தராயிருந்தாலும், சௌந்தரியமாகிற ஒருவிரு "க்ஷத்திற்குப் பூங்கொத்துபோல், ஸ்திரீயானவள் காமுகனுற் "கிரஹிக்கப்படுவதெப்படியோவப்படி, கௌரியானவள் பாதி "தேகமாய்த் தரிக்கப்படுகிறாள்."

---

दिगीश्वराः । ब्रम्हा विष्णुश्च रुद्रश्च सर्वा वा भूतजातयः । नाशमेवानुधावन्ति सलिलानीव बाडवम् ॥

* कल्पे कल्पे क्षयोत्पत्त्या ब्रह्मविष्णुमहेश्वराः ॥

† महति प्रळये राम सर्वेहरिहरादयः । विदेहमुक्ततां यांति ॥

‡ बहूनि ब्रह्मलक्षाणि शङ्करेन्द्रशतानि च नारायणसहस्राणि समतीतानि राघव ॥

$ जरामरणयुद्धादिद्वन्द्वसङ्गरलीलया । चरन्तीह चिरं कालं मुक्तोपि भगवान् हरिः ॥ १७ ॥ मुक्तेनापि त्रिणेत्रेण सौन्दर्यतरुमञ्जरी । देहार्धे धार्यते गौरी कामुकेनेव कामिनी ॥१८॥

வஸிஷ்டராமாயணம்-சுூ-பூர்வபாகம்-ஸர்-கூல், * "ஸத்துவ "குணபாகத்தினுடைய இந்தத் தமோகுணத்தினுலே (என்றால் "ஸத்துவத்தில் ஸத்துவம், ஸத்துவத்தில் இரஜஸ், ஸத்துவத்திற் "தமஸ் என்கிற பிரிவுண்டாகையாலிவ்விடத்தில் ஸத்துவத்திற் "தமஸைச்சொன்னதாகத் தாத்பரியம்). நாகர்களும் வித்தியாத "ர்களும் (ஸத்துவத்தில்) இரஜோகுணத்தினுலே முனிகளும் "ஸித்தர்களும் (ஸத்துவத்தில்) ஸத்துவகுணத்தினுலே ஈசுவரர் "முதலிய தேவர்களுமுண்டானுர்கள். தேவஜாதிகளுக்கெல்லாங் "காரணமாயிருக்கிற ஹரிஹரர்கள் ஸத்துவகுணத்திலிருந்துண் "டானவர்கள். பிரகிருதிஸம்பந்தமான அவித்தையினுடைய சுத் "தஸத்துவகுணங்களினுலே ஹரிசங்கரர் முதலியவர்கள் சிரேஷ் "டமானவும் பரிசுத்தமானவும் ஸ்தாநத்தையடைந்தார்கள். ஓ! "இராமா! பிரகிருதி ஸம்பந்தமான ஸத்துவகுணபாகமெதுவோ "அதையெவனறிகிருனே அவன் மறுபடிப் பிறப்பையடைகிற "தில்லை. அதனுலே முக்தனென்றுசொல்லப்படுகிருன். ஓ! "மஹாபுத்திமானே! சுத்தஸத்துவகுணபாகமுடையவர்களான "விந்த உருத்திரர் முதலியவர்கள் அதனுலே இந்த ஜகத்தினு "டையஸ்திதி யெதுவரையிலிருக்கிறதோ அதுவரையிலித்தேக "த்துடன் முக்தர்களான புருஷர்களாகவேயிருக்கிருர்கள்."

ஷை-சுூ-ஸர்-உகூ-ல், † "ஓ! பிரபுவே! ஸகலபாபங்களை "யும் போக்கடிக்கிறதாயும் ஸகல மங்களங்களையும் பெருகச்செ "ய்கிறதாயுமிருக்கிற தேவதார்ச்சனை செய்கிறக் கிரமமானதெப் "படிப்பட்டதாயிருக்கிறது? ஈசுவரர்சொல்வது—ஓ! பிர்ம்ம

* सात्विकस्यास्य भागस्य नागविद्याधरास्तमः ! रजस्तु मुनयास्सिद्धा स्सत्वं देवाहरादयः ॥ १० ॥ सत्वजातौ देवयोनावविद्यःप्राकृतैर्गुणैः । निर्मलं पदमायाता सत्वं हरिहरादयः ॥ ११ ॥ सात्विकः प्राकृतो भागो रामस्तत्ज्ञोहि यो भवेत् । नसमुत्पद्यते भूयस्तेनासौ मुक्त उच्यते ॥ १२ ॥ तेन रुद्रादयोह्येते सत्वभागामहामते । तिष्ठन्ति मुक्ताः पुरुषा यावद्देहं जगत् स्थितौ ॥ १३ ॥

† सर्वपापक्षयकरं सर्वकल्याण वर्द्धनम् । देवार्चन विधानं तत् की-

"வித்துக்களுக்குட் சிரேஷ்டனே! ஒருதடவையாவது செய்த
"தாகிய யாதொரு தேவதார்சனையினால் (பந்தத்திலிருந்து) விடு
"படுகிறானோ ஒப்பற்றதாகிய அந்தத் தேவதார்சனையைச் சொ
"ல்லுகிறேன். ஓ! இடைவிடாமற் செய்ததேவதார்சனையினாற்
"பிரயோஜநத்தையடைந்த கைகளையுடையவனே! தேவன் யா
"ராயிருக்கிறாரென்றறிவையா? ஓ! பிராம்மணா! புண்டரீகாக்ஷ
"னாகிய விஷ்ணுவும் முக்கண்ணனாகிய ஈசுவரனுந் தேவனல்ல.
"தாமரை புஷ்பத்திலிருந்துண்டான பிரும்மாவுந் தேவனல்ல.
"தேவராஜாவான இந்திரனுந்தேவனல்ல. வாயு அக்நி சூரியன்
"சந்திரன் இவர்களில் யாருந்தேவனல்ல. ஓ! பிராம்மணோத்
"தமா! பிராம்மணனும் அரசனும் நானும் நீயுந் தேவனல்ல.
"உருவமுள்ளதாகிய தேகத்தையுடைத்தாயிருக்கிறவனுந் தேவ
"னல்ல. சித்தசுவரூபத்தைத் (ஜீவத்தன்மையை) தரித்திருக்கிற
"தும் (சித்தமேதானென்று மோஹித்திருக்கிற ஜீவனும்) தேவ
"னல்ல. ஒளி சுவரூபமுந் தேவனல்ல. புத்தியுந்தேவனல்ல. (ஆ
"னாலோ) ஒன்றினாற் செய்யப்பட்டதல்லாததாயு மாதி முடிவில்
"லாததாயுஞ் சித்பிரகாசமாயுமிருக்கிறதெதுவோ அதுதான் தே
"வனென்று சொல்லப்படுகிறது. உருவங்களினாலே வெவ்வேறா
"யுங் குறிப்பிடக்கூடியதாயுமிருக்கிற வஸ்துவினிடத்திலந்தத்
"தேவத்தன்மையெப்படிச்சொல்லக்கூடும்? ஒன்றினாற் செய்யப்
"பட்டதல்லாததாயுமாதிமுடிவில்லாததாயுமிருக்கிற சுவபிரகாச
"மானவஸ்துவைச் சித்தாகவும் சிவமாகவுமறிகிறார்கள். அதுவே

दृशं भवति प्रभो ॥ ११६ ॥ ईश्वर उवाच । शृणुब्रह्मविदां श्रेष्ठ देवार्चन मनुत्तमम् । वदामि मुच्यते येन कृतेन सकृदेवहि ॥ ११७ ॥ कच्चिद्वेत्सि महाबाहो देवः कः स्यादिति द्विज । न देवः पुण्डरीकाक्षो न च देवस्त्रिलोचनः ॥ ११८ ॥ न देवः कमलोद्भूतो न देवस्त्रिदशेश्वरः । न देवः पवनोनार्को नानलो न निशाकरः ॥ ११९ ॥ न ब्राह्मणो नावनिपो नाहं नत्वं द्विजोत्तम । न देवो देहरूपोहि न देवश्चित्तरूपधृक् ॥ १२० ॥ न देवः कमलारूपी नापिदेवो भवेन्मतिः । अकृत्रिममनाद्यन्तं देवनन्देव उच्यते ॥ १२१ ॥ आकारादि परिच्छिन्नेमितेवस्तुनि तत्कुतः । अकृत्रिममनाद्यन्तं देवनं चिच्छिवं विदुः ॥ १२२ ॥ तदेवदेवशब्देन कथ्यते तत्प्रपूजयेत् । त-

"தேவ சப்தத்தினற் சொல்லப்படுகிறது அப்படிப்பட்ட வஸ்து "வே ஸத் அஸத்தென்று சொல்லப்படுகிற ரூபமாயும் ஸகலமாயு "மிருக்கிறது. அதை நன்ருய்ப்பூஜிக்கவேண்டியது. சிவதத்துவ "த்தையறியாதவர்களுக்கு (விஷ்ணு சிவன்முதலியவர்களுடைய) "ரூபாதிகளிலர்சனை செய்யத்தக்கது. ஒரு யோஜனைதூரம் "நடக்கச் சக்தியில்லாதவனுக்கு ஒரு கூப்பாடுதூரம்நடக்கக் "கற்பிப்பது போற்ருன்."

சித்சுவரூபமான பிர்ம்மத்தையறிய ஞானமில்லாதவர்களுக் குபாஸனையின்பொருட்டுச் சிவ விஷ்ணுமுதலிய மூர்த்திகளைப் பூஜைசெய்ய சாஸ்திரங்கள் கற்பிக்கின்றனவென்பது தாத் பரியம்.

பத்துமபுராணம்-பாதாளகண்டம்-அத்-கூகூ-ல், * "அநேக "கோடிப் பிரும்மாண்டங்களானவை கணக்கற்ற முக்குணங்களி "னல் விருத்தியடையும்போது அதனுடைய கலைகளின் கோடி "கோடியம்சங்களான பிரும்மா விஷ்ணு மஹேசுவரர்கள் சிருஷ் "டிஸ்திதி முதலிய கிரியைகளோடு கூடினவர்களாய் அவருடைய "(பரமாத்துமாவினுடைய) மஹிமையையுடையவர்களாயிருக்கி "ருர்கள். அந்தப் பரமாத்தும சுவரூபத்தினுடைய கோடிகோ "டி யம்சர்களாயும் கலைகளாயும் மன்மதனைப்போல் ரூபமுடைய "வர்களாயுமந்த (அந்த) அண்டத்திலிருந்துகொண்டு ஜகத்தை "மோஹிப்பிக்கிருர்கள்."

பிரும்மவைவர்த்தபுராணம்-ஸ்ரீகிருஷ்ணஜந்மகண்டம்-அத் சுடு-சு-கூச-ல், † "பிரும்மவிஷ்ணு சிவன் முதலியவர்களும் மு

---

देवास्ति यतस्सर्वं सत्तासत्तात्मरूपधृक् ॥ १२३ ॥ अज्ञात शिवतत्वानामाकाराद्यर्चनं कृतम् । योजनाध्वन्यशक्तस्य क्रोशाद्वापरिकल्प्यते ॥ १२४ ॥

* अनन्तकोटिब्रह्माण्डे अनन्तत्रिगुणोच्छ्रये । तत्कला कोटिकोट्यंशा ब्रह्मविष्णुमहेश्वराः ॥ १११ ॥ सृष्टिस्थित्यादिना युक्ता स्तिष्ठन्ति तस्य वैभवाः । तद्रूपकोटिकोट्यंशाः कलाः कन्दर्पविग्रहाः ॥ ११२ ॥ जगन्मोहं प्रकुर्वन्ति तदण्डान्तर संस्तिताः ॥ ११३ ॥

† विश्वेविश्वे च प्रत्येकं ब्रह्मविष्णुशिवादयः । मुनयोमनवासिद्धा

"திகளும் மநுக்களும் சித்தர்களும் மனிதர் முதலிய சராசரங்க "ளும் ஒவ்வொரு அண்டம் அல்லது பிரபஞ்சத்திலும் வெவ்வே "றாயிருக்கிறார்கள்."

16. இப்படிப்பட்ட வாக்கியங்கள் சாஸ்திரங்களிலனேக மிருக்கின்றன. இந்தப் பிரும்மவிஷ்ணுருத்திராதிகள் பூர்வ கருமவிசேஷத்தால் சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரகாரியங்களைச் செய் கிறார்களென்று கருடபுராணஞ்சொல்லுகிறது.

கருடபுராணம்-பூர்வபாகம்-அத்-௧௧௩-௬-௧௫-ல்,* "எதனா "லே பிரும்மாவானவர் பிரும்மாண்டமாகிற பாத்திரத்திற்குள் "ளிருந்துகொண்டு குயவனைப்போல் (சிருஷ்டிகாரியத்தில்) எப் "படி நியமிக்கப்பட்டிருக்கிறாரோ, எதனாலே விஷ்ணுவானவர் "துக்கத்தைக்கொடுக்கத்தக்கதும் துன்பத்தைக்கொடுக்கத்தக் "கதுமாகிய தசாவதாரஞ்செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறா "ரோ, எதனாலே உருத்திரரானவர் கையிற் கபாலத்தையேந்திக் "கொண்டு பிக்ஷைவாங்கும்படி செய்யப்பட்டிருக்கிறாரோ, (எத "னாலே) சூரியனானவன் தினந்தோறுமாகாசத்திற் சுற்றும்படிச் "செய்யப்பட்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட கருமத்திற்கு நமஸ் "காரம்."

17. இவைகளினாற் பிரும்ம விஷ்ணு ருத்திரர்களென்று சொல்லப்பட்ட இந்த மூர்த்திகளே ஜகத்காரணமான பரவஸ்து வல்லவென்றும் ஆனால், உலகரக்ஷணைக்காகவும் பரவஸ்துவா கிய பிரம்மத்தை நேராயுபாசிக்கச்சக்தியற்றவர்களுக் கிப்படிப் பட்ட ரூபங்கள் கற்பிக்கப்பட்டனவென்றும் இந்த மூர்த்திகள் கருமவசத்தினாலுண்டாய்ப் பிறகு மோக்ஷமடைகிறார்களென்று ந்தெளிவாய்க்காண்கிறது. மேலுமிந்த மூர்த்திகள் ரூபத்தோடும் ஆயுதம்முதலியவைகளோடும் பத்திநிகளோடுங்கூடினவர்களாய் பிரும்மலோகம் வைகுண்டங் கைலாஸமிவைகளில் வாஸஞ்செய்

---

मानवाद्याश्चराचराः ॥

* ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे विष्णुर्येन दशावतारगहने क्षिप्तोमहासङ्कटे । रुद्रो येन कपालपाणिरमरो भिक्षाटनं कारितस्सूर्यो-भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ॥

கிறதாகச்சாஸ்திரங்கள் சொன்னாலும் அக்னர்களுடைய உபாஸ னைக்காக அப்படிச் சொல்லியதேயன்றி உருவத்தோடுகூடிய இவர்களைப் பரவஸ்துவென்று சொல்வது நியாயமல்லவென்று இந்த சித்தாந்தக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

18. ஜயவிரதன்:—ஓ! பகவானே! பிரும்மா விஷ்ணு உரு த்திரர்களென்று சொல்லப்படுகிற இந்த மூர்த்திகளுக்குப் பர பிர்ம்மத்திற்குச் சொல்லக்கூடிய காரணப்பெயர்களைச் சாஸ்திர ங்கள் சொல்லியிருக்கிறபடியா லிவர்களிலொவ்வொருவரும் பர பிர்ம்மமென்றே பலர் நினைக்க ஹேதுவாயிருக்கிறது. சாஸ்தி ரங்களிப்படிச் சொல்லவேண்டியதென்ன?

19. ஸுசர்ம்மா:—ஓ! மேதாவியே! இந்தப் பிரும்மா விஷ்ணு முதலிய மூர்த்திகளையாவது வேறெந்தத்தேவதைகளை யாவது அல்லது மற்றஜந்துக்களையாவது பிர்ம்மசுவரூபமேயெ ன்றுபாசிக்கிறவன் பிர்ம்மத்தை நேராயுபாஸிக்கிறவனாகவேயாகி றான். அப்படிக்கின்றி உபாஸிக்கிற வஸ்துயெதுவோ அதுவே பிர்ம்மமென்றுபாஸிக்கும் பக்ஷத்தில் மோக்ஷத்திற்குத்தாழ்ந்த தாகிய ஸாலோகாதி முக்திகளையடையலாம். அதெப்படிப் போலெனில், விஷ்ணு சிவன் இவர்களுடைய உருவமாக ஸாளி க்கிராமம் இலிங்கம் முதலிய உருவங்களைவைத்துப் பூஜிக்கிறவ ன் அந்த உருவங்களை சிவ விஷ்ணுக்களென்று எண்ணமுடைய வனாய்ப் பூஜிப்பானாகில்வனடையும் பலன் கல்லுகளுக்கொப்பா னதே. அப்படிக்கின்றி யந்தவிக்கிரஹங்களிற் சிவனல்லது விஷ் ணு, அந்தர்யாமியாய் நிறைந்திருக்கிறதாகவெண்ணிப் பூஜிப்பா னாகிலவன் சிவவிஷ்ணு லோகங்களையடைவான். இப்படித்தான் மற்ற உபாஸனைகளுமென்றறி.

20. பிர்ம்மத்திற்குச் சொல்லக்கூடியக் காரணப்பெயர்க ளைத் திருமூர்த்திகளுக்கும் வைத்தழைக்கிறதனால் விரோதமொ ன்றுமில்லை. இந்த மூர்த்திகளுக்கும் பிர்ம்மத்தைப்போலச் சக்தியுண்டென்றுபாஸகர்களுக்கு நம்பிக்கையுண்டாகும்பொரு ட்டுப் பெரியோர்களுடையவு முத்தமதேவதைகளுடையவும் பெயரைத் தங்கள் குழந்தைகளுக்கு வைத்தழைப்பது உலகத் திற் கண்டிருக்கிறோம் அப்படிப்போலவே இந்தத் திருமூர்த்

திகளுக்கும் பெயரிடப்பட்டனவென்று சொல்லக்கூடும். இவ்வி ஷயத்தைக்குறித்துப் புராணங்கள் சொல்லுகிறதாவது.

வாயுபுராணம் பூர்வபாகம்-அத் ௨௭-ல், *"கற்பத்தினுடைய "துவக்கத்திற் தனக்குச்சமானமான புத்திரனைக்குறித்துத் தியா "நஞ்செய்துகொண்டிருந்தபிறகு பிரும்மாவாகியப் பிரபுவினு "டைய அங்கத்திலிருந்து நீலலோஹிதனென குமாரன் தோன்றி "னான். தேஜஸினாற் தஹிக்கிறவன்போலிருந்துகொண்டு தெளி "வான சுவரத்தோடு பயங்கரமானரோதநஞ்செய்தான். உரோ "தநஞ் செய்கிற நீலலோஹிதனென குமாரனைப் பிரும்மாவான "வர் சீக்கிரமாய்ப் பார்த்து, ஓ! புத்திரா! ஏன் அழுகிறாயென்று "கேட்டார். ஓ! பிதாமஹரே! எனக்குமுதலாவதாய்ப் பெயரை "க்கொடுமென்று அந்தக் குமாரன் சொன்னான். ஓ! தேவா! "நீ உருத்திரனென்கிற பெயரை யுடையவனாயிருக்கிறாயென்று "பிரும்மாசொன்னார். இப்படிச்சொல்லப்பட்ட அந்தக் குமா "ரன் மறுபடி உரோதநஞ்செய்தான். அப்படியழுகிறவனை ஏன "ழுகிறாயென்று பிரும்மாமறுபடிகேட்டார். எனக்கிரண்டாவது "பெயரைக் கொடுமென்று பிரும்மாவைக்கேட்டான். (அதற்கு "ப்பிரும்மா) ஓ! தேவா! நீ பவனென்கிற பெயரையுடையவனா

---

* कल्पादौ चात्मनस्तुल्यं सुतं प्रध्यायतः प्रभोः । प्रादुरासीत्ततोऽङ्केऽस्य कुमारो नीललोहितः । तं दधे सुस्वरं घोरं निर्दहन्निव तेजसा ॥ ४ ॥ दृष्ट्वा रुदन्तं सहसा कुमारं नीललोहितम् । किं रोदिषि कुमारेति ब्रह्मा तं प्रत्यभाषत ॥ ५ ॥ सोऽब्रवीद्देहि मे नाम प्रथमं वै पितामह । रुद्रस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः ॥ ६ ॥ किं रोदिषीति तं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् । नाम देहि द्वितीयं मे इत्युवाच स्वयम्भुवम् ॥ ७ ॥ भवस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः । किं रोदिषीति तं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् ॥ ॥ ८ ॥ तृतीयं देहि मे नाम इत्युक्तः प्रत्युवाच तम् । शिवस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः ॥ ९ ॥ किं रोदिषीतितं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् । चतुर्थं देहि मे नाम इत्युवाच स्वयम्भुवम् ॥ १० ॥ पशूनां त्वं पतिर्देव इत्युक्तस्सोऽरुदत्पुनः । किं रोदिषीति तं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् ॥ ११ ॥

"பிருக்கிறுயென்று சொன்னர். அவன் மறுபடியும் உரோதநஞ்
"செய்தான். அப்படி உரோதநஞ் செய்யுஞ் சங்கரனை (நோக்கி)
"ஏனழுகிறுயென்று கேட்டார். எனக்கு மூன்றுவதுபெயரைக்
"கொடுமென்றான். ஓ! தேவா! சிவனென்கிற பெயருடையவ
"னென்று சொன்னர். மறுபடியழுதான். ஏனழுகிறுயென்றார்.
"எனக்கு நான்காவது பெயரைக் கொடுமென்றான். பசுபதி
"யென்று சொன்னர், மறுபடி உரோதநஞ் செய்தான். ஏன
"ழுகிறுயென்றார். ஐந்தாவது பெயரைக் கொடுமென்றான். ஈச
"னென்று சொன்னர். மறுபடியழுதான். ஏனழுகிறுயென்றார்.
"ஆருவதுபெயரைக் கொடுமென்றான். பீமனென்றுசொன்னர்.
"அப்படியே ஏழாவதுபெயரைக் கேட்டான். உக்கிரனென்று
"சொன்னர். அப்படியே எட்டாவதுபெயரைக் கேட்டான்.
"மஹாதேவனென்று சொன்னர். வாயை மூடிக்கொண்டான்.
"நீலலோஹிதனெனவந்தக் குமாரன் பிரும்மாவினுற் கொடுக்கப்
"பட்ட விப்படிப்பட்டப் பெயர்களையடைந்து இந்தப்பெயர்களு
"க்கு சுவரூபபூதங்களைக் கொடுமென்றான். பிறகு பிரும்மா
"வானவர் இந்தப் பெயர்களுக்கு உடற்களை சிருஷ்டித்தார்."

இந்தவாக்கியங்களினர்த்தத்தையே விஷ்ணுபுராணம்-க-அ ஆும், மார்க்கண்டேயபுராணம்-அத்-ருஉ-ஆும், கூர்மபுராணம் அத்-கo-ஆும், சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

---

पञ्चमं देहि मे नाम इत्युक्तः प्रत्युवाच तम् । ईशस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः ॥ १२ ॥ किं रोदिषीति तं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् । षष्ठं मे नाम देहीति इत्युवाचाथ तं प्रभुम् ॥ १३ ॥ भीमस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः । किं रोदिषीतितं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् ॥ १४ ॥ सप्तमं देहि मे नाम इत्युक्तः प्रत्युवाचतम् । उग्रस्त्वं देवनाम्नासि इत्युक्तस्सोऽरुदत्पुनः ॥१५॥ किं रोदिषीति तं ब्रह्मा रुदन्तं पुनरब्रवीत् । अष्टमं देहि मे नाम त्वं विभो पुनरब्रवीत् । महादेवस्तु नाम्नासि इत्युक्तो विरराम हा ॥ ॥ १६ ॥ लब्ध्वानामानिचैतानि ब्रह्मणोनीललोहितः । प्रोवाचनाम्ना मे तेषां भूतानि प्रदिशेतिहा ॥ १७ ॥ ततोऽभिसृष्टास्तनव एषां नाम्नास्वयम्भुवम् ॥ ॥ १८ ॥

இந்த வாக்கியங்களினாற் பிர்ம்மத்திற்குச் சொல்லக்கூடிய காரணப்பெயர்களை ஈசுவரருக்கிடப்பட்டதாகக் காணப்படுகிற படியால் பெயரினாற் சுவரூபத்திற்குச் சிரேஷ்டமுண்டாகமாட்டாதென்றறி. மேலுமிந்த அத்துவைதிகள் பிர்ம்மம் அரூபமானாலும் லோகாநுக்கிரகத்தின் பொருட்டு உபாஸகர்களுக்குத் தியாநகோசரமாகும்படியான ஈசுவராதிரூபங்களைக் கிரஹிக்கிறதாகவும் அந்தமூர்த்திகளிடத்திற் பிர்ம்மசைதந்நியம் விசேஷமாய்ப் பிரகாசிக்கிறதாகவுஞ் சொல்லுவார்கள்.

21. இவ்விதமாய் பிரும்ம விஷ்ணு உருத்திரர்களுடைய சுவரூபவிஷயத்தில் இன்னான்குமதஸ்தர்களுடையக் கொள்கையை, என் புத்திக்கெட்டினவரையிற் சொன்னேன். இந்த மூர்த்திகளில் யாரையுபாசித்தாலுமவர் ஸாக்ஷாத்-பிர்ம்மசுவரூபமென்கிற நிச்சயத்துடனுபாசிப்பார்களானாலப்படிப்பட்டமஹாத்துமாவுக்குப் பேதபுத்தியானது அற்பமேனுமுண்டாகமாட்டாது. எவனெவனெந்தெந்த மூர்த்தியினிடத்திற் பக்திவிசுவாஸம் வைத்திருக்கிறானோ அந்தமூர்த்தியை பிர்ம்மசுவரூபமாகஉபாசிக்க வேண்டுமேயன்றி அந்நியமான மூர்த்திகளை நிந்திக்கவாவது குறைவு சொல்லவாவது கூடாது. அப்படிச் செய்கிறவன் நரகத்தை யடைவானென்பதிற் சந்தேகமில்லை.

22. ஜயவிரதன்—ஓ! பகவானே! பிர்ம்மசுவரூபமானது எங்கும் நிறைந்திருக்கிறதாகவும் "सर्वं खल्विदं ब्रह्म = இந்த ஸகலப்பிரபஞ்சமும்பிர்ம்மம்" என்று சுருதியுஞ் சொல்லுகிறது. அப்படியெங்கும்நிறைந்த பிர்ம்மசைதந்நியமானது, பிரும்மவிஷ்ணு உருத்திரர்களாகிய மூர்த்திகளிடத்திலதிகமாய் விளங்கிறதாகச் சொல்லப்பட்டது. ஸகலவஸ்துக்களிடத்திலும் ஸமமாயிருக்கிற பிர்ம்மசைதந்நியமானது இந்த மூர்த்திகளிடத்தில் விசேஷமாய் பிரகாசிக்கிறதாக வெப்படிச்சொல்லக்கூடும்.?

23. ஸுசர்ம்மா—பிர்ம்மசைதந்நியமெவ்விடத்திலுமெந்த வஸ்துக்களிலும் ஸமமாயிருக்கிறதே யன்றியில் உயர்வு தாழ்வு அல்லது அதிகங்குறைவுயென்பதில்லை. ஆனால், வஸ்துக்களுடையத் தன்மையினாற் சிலவஸ்துக்களில் விசேஷமாய் பிர்ம்மசைதந்நியப் பிரகாசமுண்டாகும். எப்படிப்போலெனில்—சூரி

யன் ஸகலலோகத்தையும் பிரகாசிப்பிக்கிறான். இந்தசூரியனின்னவஸ்துவையதிகமாய்ப் பிரகாசிப்பிக்கவேண்டுமென்றாவது இன்னவஸ்துவை அற்பமாய்ப் பிரகாசிப்பிக்கவேண்டுமென்றாவது எண்ணுகிறதுமில்லை அப்படிப்பிரகாசிப்பிக்கிறதுமில்லை. ஆனால் சுத்தமான கண்ணாடியிற் சூரியப்பிரகாசம்படும்போது அந்தச் சூரியனே நமக்குச்சமீபத்திற் கண்ணாடிக்குள் வந்திருக்கிறது போற் காணப்படுகிறது. அழுக்கடைந்த கண்ணாடிமுதலியவைகளில் மலிநமாய்ச் சூரியபிம்பங் காணப்படுகிறது. சுவர் முதலியவைகளிற் சூரியப்பிரகாசங்காணப்படுகிறதில்லை. இதற்குச்சூரியன் காரணமா கண்ணாடிமுதலியவஸ்துக்கள் காரணமாஎன்று யோஜித்துப் பார்ப்போமாகில் அந்தந்தவஸ்துக்களுடையத் தன்மையே யதிகப்பிரகாசத்திற்கும் மலிநப் பிரகாசத்திற்கும் பிரகாசமின்மைக்குங் காரணமேயன்றி சூரியனெப்படிக் காரணமல்லவோ அப்படித் திருமூர்த்திகளிடத்திற் பிர்ம்மசைதந்நியமதிகமாய்ப் பிரகாசிப்பதற்கு பிர்ம்மங் காரணமல்ல. ஆனால், பிரும்மவிஷ்ணுஉருத்திரமூர்த்திகள் சுத்தஸத்துவப் பிரகிருதியினாலுண்டான சரீரத்தையுடையவர்களாகையால், சுத்தமான கண்ணாடியிற் சூரியபிம்பப்பிரகாசம்போலத் திருமூர்த்திகளிடத்திற் பிர்ம்மசைதந்நியப் பிரகாசமதிகமாய் விளங்கிறதாகச் சொன்னேன். இனி நீ யெதைக் கேட்கவிரும்புகிறாயோ அதைக்கேட்கலாம்.

பதிநான்காவதுப் பிரகரணம்
முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பதினைந்தாவதுபிரகரணம்.

1. விசுவம்பரபட்—ஓ! மயூரநாதா! மஹாபுண்ணியசாலியும் விசேஷபாக்கியசாலியுமாகிய ஜயவிரதனுக்கு மஹாத்துமாவாகிய சுசர்மாவென்கிற பரமார்த்தயோகியினா லுபதேசித்த விஷயங்களை யுனக்குக்கூடியவரையிற் சுருக்கமாய்ச் சொன்னேன். இந்த உபதேசத்தைக்கேட்ட நீ விசேஷமான புண்ணியஞ் செய்தவனென்றே நினைக்கிறேன். நீ கேட்டவிஷயங்களை நன்றாய் ஞாபகத்தில்வைத்துக்கொண்டாயா? அவ்விஷயங்களினானுனக்கு நல்லறிவுண்டாகும்படி யோஜித்துப் புத்தியினாலாராய்ந்து பார்.

2. மயூரநாதன்—ஓ! பரமகுருவே! தங்கள்வாக்காகிறஅமிருதவருஷங்களினால் நான் பூர்ணஞாநமடைந்துவிட்டேன். பிர்ம்மசுவரூபம் பிரகிருதிசுவரூபம் பிரபஞ்சசுவரூபம் ஜீவேசுவரசுவரூபந் திருமூர்த்திகளுடைய சுவரூபம் அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் துவைதம் சைவம் இம்மதங்களுடைய சுவரூபம் பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரத்தின் சுவரூபம் இவைகளும் அவைகளுக்கடுத்தபல விஷயங்களும் நன்றாயறிந்து கொண்டேன், எனக்குத் தங்களுடைய அநுக்கிரஹத்தினால் நல்ல ஞாநமுண்டாய்விட்டது. ஸுசர்ம்மாவாகிய அந்தமஹாயோகி, மஹாபுருஷனாகிய ஜயவிரதனுக்குப் பின்னுமெந்தவிஷயத்தைப் பற்றியாவதுபதேசித்திருந்தாலதையுமெனக்குக் கிருபைசெய்து சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

3. விசுவம்பரபட்:—ஓ! குழந்தாய்! நீ பூர்ணஞாநமடைந்துவிட்டதாகச்சொன்னதனாலேயே அற்பஸந்தோஷியென்றெண்ணுகிறேன், வாஸ்தவத்தில் ஞாநமடைந்த உத்தமபுருஷனெவனோஅவன், தான் ஞாநமடைந்தனாகவெண்ணவும்மாட்டான் சொல்லவும்மாட்டான். உபதேசித்த விஷயங்களைக்கேட்டறிந்தமாத்திரத்தில் ஞாநமுண்டாகமாட்டாது. கேட்டறிந்தவிஷயங்களைச் சிஷியனானவன் தானாகவே நன்றாயாலோசித்து மநநஞ்செய்து யெந்தவிஷயத்தில் மனதைநிருத்தவேண்டுமோ அந்தவிஷயத்தில் மனதைநிருத்திப்பழகுவதுதான் யோகமென்று சொல்லப்படும்.

பசியாயிருக்கிற ஒருபுருஷனுக்குப் பசியைத்தீர்க்கும்படியான ஆஹாரவஸ்துக்களுடையசுவரூபங்களையும்அவைகளின்ருசியையுஞ்சொல்லக்கேட்டமாத்திரத்திற்பசிநிவிருத்தியாகுமா? அந்தவாகாரத்தைப் புஜித்தாலன்றியிற் பசிதீராது. அப்படிப்போற்றான் நீகேட்டறிந்தவிஷயங்களை நன்றாயாலோசித்து இன்னவிஷயத்தினுன்மனதை நிருத்தவேண்டியதென்று நிச்சயித்துக்கொள்ளவேண்டும். அப்படிமனதை நிருத்துவதாகிய யோகத்தினால் ஞானமடையவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி சாஸ்திரங்களென்ன சொல்லுகின்றனவென்றால், சொல்லுகிறேன் கேள்.

கேனோபநிஷத்-கண்டம்-உ-ல், * "பிர்ம்மசுவரூபத்தைச் "செவ்வையாயறிந்தேனென்றெண்ணுவாயாகில் அது அற்பமே. "பிர்ம்மத்தினுடைய வெந்த சுவரூபத்தைத் தெரிந்துகொண் "டாயோ அதுவும் இந்தப்பிர்ம்மசுவரூபத்தை தேவதைகளிலே "(நாராயணசுவரூபம்சங்கரசுவரூபம் அல்லது இராமகிருஷ்ணாதி "அவதாரசுவரூபம் முதலியவைகளை) தெரிந்துகொண்டாயோ "அதுவுமற்பமானதென்பது நிச்சயம். அந்தபிர்ம்மசுவரூபமான "துன்னாலே(அறியப்படவில்லையாகையால்) விசாரித்தறிந்துகொ "ள்ளத்தக்கதே. (இப்படிச்சொன்னகுருவாக்கியத்தைக்கேட்ட "சிஷியன் நன்றாயாலோசித்துச் சொல்லுகிறான்). நானந்த பிர் "ம்மசுவரூபமறியப்பட்டதாக வெண்ணுகிறேன். (ஆனால்)நான "ந்தபிர்ம்மசுவரூபத்தைநன்றாய்த்தெரிந்து கொண்டேனென்றெ "ண்ணவில்லை. தெரிந்துகொண்டதாகவு மெண்ணுகிறேன். நம "க்குள்ளெவன் தெரியவில்லை யென்றுந் தெரிந்ததென்றுமறிகி "றானோ அவன் அந்தபிர்ம்மசுவரூபத்தைத் தெரிந்துகொள்ளு "வான். பிர்ம்மத்தை யறியேனென்றவனறிவான். அறிகிறே "னென்பவனறியான். பிர்ம்மந் தெரியுமென்பவர்களுக்குத்தெரி "யாது. தெரியாதென்பவர்களுக்குத்தெரியும்."

* यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि नूनम् । त्वं वेत्थ ब्रह्मणोरूपं यदस्य त्वं यदस्य देवेष्वथनुमीमांस्यमेव ते मन्ये विदितम् ॥ १ ॥ नाहं मन्ये सुवेदेति नोनवेदेति वेदच । यो नस्तद्वेदतद्वेद नोनवेदेति वेदच ॥ २ ॥ यस्या मतं तस्य मतं मतं यस्य नवेदसः । अविज्ञातं विजानतां विज्ञातमविज्ञानताम् ॥ ३ ॥

கேநோபநிஷத்-கண்டம்-க-ரு-ல், * "அதை(பிர்ம்மத்தை) "கண்ணாவது வாக்காவது மனதாவதெட்டுகிறதில்லை. அதை "நாமறியோம். அதைத் தெரிவிக்கும்வழியும் நமக்குத் தெரி "யாது. அது தெரிந்ததற்கு வேறாயுந்தெரியாததற்கு வேறாயு "மிருக்கிறதென்று முன்னோர்களுடைய வாக்குனாற் சொல்லக் "கேட்டிருக்கிறோம்."

கடவல்லியுபநிஷத் உ-ல், † "அவித்தையாகிற அக்ஞாநத் "தினாற் சூழப்பட்டிருக்கிறவர்கள் தாங்கள் புத்திமான்களென் "றும்பண்டிதர்களென்று மெண்ணங்கொண்டிருக்கிறார்கள். அப் "படிப்பட்டமூடர்கள் வியாதிமுதலிய துன்பமடைந்தவர்களாய் "ச்(ஸம்ஸாரத்தில்)சுழலுகிறார்கள். (எப்படிப்போலெனில்)குரு "டர்களுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோற்றான். மூடனாயு "மேமாந்தவனாயுந் திரவ்வியாசையினாலறிவில்லாதவனாயுமிருக் "கிறவனுக் காத்துமாவிளங்கிறதில்லை."

முண்டகோபநிஷத்-க-உ-கூ-ல், ‡ "அவித்தையாகிற அக் "ஞாநத்திலதிகமாயுழலுகிறவர்கள் தாங்கள்ஸகலத்தையுமறிந் "தவர்களென்கிற வபிமாநத்தாற் கருவமடைகிறார்கள். கரும "ங்களைச்செய்கிற அக்ஞாநிகளதனாலே கருவமடைந்தவர்களாய் "(ஆத்துமதத்துவத்தை)அறிகிறதில்லை. அப்படியறியாததனாற் "துக்கமடைந்தவர்களாயும் புண்ணியங்கள் நசித்தவர்களாயும் "(சுவர்க்காதிலோகத்திலிருந்தாலும்) கீழே விழுகிறார்கள்."

---

* न तत्र चक्षुर्गच्छति नवाग्गच्छति नो मनो न विद्मो न विजानीमो यथैतदनुशिष्यादन्यदेवतद्विदितादथो अविदितादधि । इति शुश्रुमपूर्वेषां येन स्तद्व्याचचक्षिरे ॥

† अविद्या या मन्तरे वर्तमानास्स्वयं धीराः पण्डितं मन्यमानाः । दन्द्रम्यमाणाः परियन्ति मूढा अन्धेनेव नीयमाना यथान्धाः ॥ ५ ॥ न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यं तं वित्तमोहेन मूढम् ॥ ६ ॥ இந்த வாக்கியத்தை முண்டகம்-க-உ-அ-லும், காண்க.

‡ अविद्यायां बहुधा वर्तमाना वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः । यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात्तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते ॥

4. இவ்விதமாய் பிர்ம்மநிஷ்டனான சிஷியனையே, “நீ யறிந்தது பிர்ம்மசுவரூபமல்ல. அறிந்தேனென்பவனறிந்தவனல்ல” என்றும், தானறிந்தவித்துவானென்றுகருவமடைகிறவனை மூடனென்றுஞ் சுருதியே சொல்லுகிறது. ஆகையால், நீ ஞானமடைந்தேனென்றெண்ணினாலது அற்பஞானமென்றும் வாஸ்தவத்தில் நீ ஆத்துமசுவரூபஞானத்தையடையவில்லையென்றே எண்ணுகிறேன். குருவினிடத்திலிருந்து பிர்ம்மதத்துவத்தைக் கேட்டறிவதனாலே மாத்திரம் பிர்ம்மஞானமுண்டாகாது. கேட்டறிவதுடன் தியானம் மனனம்முதலிய சித்திகளைப் பெறவேண்டும். பிர்ம்மஞானமடையுங் கிரமத்தைச்சுருதிசொல்லுகிறதெப்படியென்றால்:—

பிருஹதாரண்ணியகோபநிஷத்-௪-௪-இல், * “ஓ! மைத்திரேயீ! ஆத்துமாவானவன், கேட்டறியத்தக்கவன். நினைக்கத்தக்கவன். தியானிக்கத்தக்கவன். (இதனால்) பார்க்கத்தக்கவன். ஓ! மைத்திரேயீ! வேதார்த்தத்தைக்கேட்டறிவதனாலே ஆத்துமவிசாரணையுண்டாகிறது. அந்தவிசாரணையாகிற வாதத்தினாலே நிச்சயபுத்தியுண்டாகிறது. அந்தநிச்சயபுத்தியினாலே ஆத்துமதரிசனமுண்டாகிறது. ஆத்துமதரிசனத்தினாலே இந்த ஸகலஜகத்துமறியப்பட்டதாகிறது.”

5. ஓ! மயூரநாதா! ஆத்துமசுவரூபத்தையறிவதற்கு முந்திய ஸாதநம் சாஸ்திரார்த்தங்களைக்கேட்டறிகிறதாயும் அப்படியறிந்தபிறகு அறிந்தவஸ்துவை நினைக்கிறதாயும் பிறகு அதையேத் தியானிக்கிறதாயும் பிறகு சுவரூபதரிசனமடையவேண்டியதாயுமிருக்கிறது. நீயோ சாஸ்திரார்த்தங்களைக் கேட்டறிவதாகிய ஒரே ஸாதநத்தை யடைந்தவனா யிருக்கிறாய். நீ, எல்லாமறிந்ததாக வெப்படிச் சொல்லக்கூடும்?

6. மயூரநாதன்—ஓ! பகவானே! நானறிந்துவிட்டதாகச் சொன்னது அகங்காரத்தினாலாவது கருவத்தினாலாவதல்ல. நன்றாய் கவனிக்காத அற்ப புத்தியினாற் சொன்னேன். ஆகையாலென்னைமன்னித்துக்கிருபையுடன் மஹாத்துமாவான சுசர்ம்மா ஜய

* आत्मावा अरे द्रष्टव्यश्श्रोतव्योमन्तव्यो निदिध्यासितव्यो मैत्रेय्यात्मनो वा अरे दर्शनेन श्रवणेन मत्या विज्ञानेनेदगँ सर्वं विदितम् ॥

விரதன் இவர்களுக்குட் பின்னும் நடந்த ஸம்வாதத்தை யென க்குச் சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

7. விசுவம்பரபட்—ஓ! குழந்தாய்! பின்னுமவர்களுக்குள் நடந்தஸம்வாதத்தைச் சொல்லுகிறேன் கேள்.

8. ஜயவிரதன்—ஓ! தருமாத்துமாவே! தருமார்த்த காம மோக்ஷங்களெனப் புருஷார்த்தங்கள் நான்குவிதமென்று முன் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் தத்துவத்தை யறிய விரும்புகிறேன்.

9. ஸுசர்மா—ஓ! ஜயவிரதா! புருஷார்த்தமென்றாற், புரு ஷனடையத்தகுந்தப் பிரயோஜநம் அல்லது இலாபம் என்றர்த் தம். இவைகளுக்குள் மோக்ஷமே ஸகலத்திலும் மேலான புரு ஷார்த்தமாயிருக்கிறது. மற்றவைகள் மோக்ஷத்திற்குத் தாழ்ந் தப் பிரயோஜநங்களாயிருந்தாலு மவைகள் மோக்ஷத்திற்கு ஸா தநங்களாகலாம். எப்படியெனில்—

காமமென்பது—ஆசை, விருப்பம், அவல், ஸ்திரீ விஷய மான இச்சைமுதலியப் பலஅர்த்தங்களுளது. உலகவிஷயங்களை யநுபவிக்க, அல்லது ஸ்திரீயை யநுபவிக்க உண்டாகுங்காமமா னது இகழத்தக்கது. சுவர்க்காதிபரலோகஸாதநமான யக்ஞாதி கருமங்கள், தாநதருமங்கள் செய்யவேண்டுமென்கிற காமமா னது மத்தியமமானது. மோக்ஷமடையவேண்டுமென்கிறகாமமா னது, உத்தமமானது. இந்த மத்தியம உத்தமகாமங்கள் புரு ஷார்த்தமென்று சொல்லப்படும்.

அர்த்தமென்பது ஐசுவரியம், பொருள், பிரயோஜநம்மு தலிய அர்த்தங்களுளது. உலகவிஷயாநுபவத்திற்காக ஸம்பா திக்கப்படுமர்த்தமானது இழிவானது. சுவர்க்காதிப்பிரயோஜந மடைவதற்காக ஸம்பாதித்துச்சிலவிடுமர்த்தம் மத்தியமமானது, அப்படி ஸம்பாதிக்குமர்த்தத்தையே சுவர்க்காதி பலனையபேக்ஷி க்காமற் கருமபலன்களை யீசுவரார்பணஞ்செய்யும் விஷயமாய்ச் ச்சிலவிடுவதானது, சித்தசுத்திமூலமாய் ஞாநத்திற்கும் ஞாநத் தினல் மோக்ஷத்திற்கும் ஸாதநமாகிறபடியால், அது உத்தம புருஷார்த்தமாகவாகிறது.

தருமமென்பது ஆசாரம், நீதி, புண்ணியம் என்பதுமுத லியப் பலஅர்த்தங்களுளது. தன்தன் வர்ணத்தாருக்குவிதிக்க ப்பட்டிருக்கிற அல்லது தன்தன் ஆசிரமத்திற்கு யோக்கியமான

தருமங்களைவிட்டுப் பிறர்தருமத்தையநுஷ்டிப்பது இழிவானது. தன்னுடைய சுவதருமத்தை வழுவின்றி நடத்துவதனால், சுவர்க்காதிப் பிரயோஜநமடையப்படுமாகையாலிதுவும் மத்தியமமானது. தன்னுடைய ஸகலதருமமும் ஈசுவரப்பிரீதியாகவேண்டுமென்கிறவெண்ணத்துடன் செய்வதனால், ஞாநமடைந்து பிறகு மோக்ஷமடையப்படுமாகையாலிது, உத்தமமான புருஷார்த்தமாகிறது.

இப்படித்தருமார்த்தகாமங்கள் பரம்பரையாய் மோக்ஷஸாதநமாகிறபடியால், அவைகளையும் புருஷார்த்தமாகச் சொல்லப்பட்டன. இழிவான தருமார்த்தகாமங்கள் புருஷார்த்தங்களாகமாட்டா. அநர்த்தங்களாகும்.

மோக்ஷமோவென்றால், ஸர்வோத்தமமான புருஷார்த்தமாயிருக்கிறது. மோக்ஷமடைந்தவன் மறுபடி பிறக்கிறதாவது இறக்கிறதாவது சுகதுக்கங்களையநுபவிக்கிறதாவதில்லை. நித்தியாநந்தாநுபவத்திலேயே யிருக்கிறான்.

ஜயவிரதன்:—மோக்ஷசுவரூபமெப்படிப்பட்டது?

10. ஸுசர்மா:—மோக்ஷசுவரூபமிப்படிப்பட்டதென்கிற விஷயத்தில் மேற்குறித்த நான்குமதங்களுடைய சித்தாந்தம் பேதப்படுகிறது. விசிஷ்டாத்துவைதிகள், துவைதிகள் இவர்களுடைய சித்தாந்தப்படி வைகுண்டம் மோக்ஷஸ்தாநமென்பார்கள். சைவத்துவைத சித்தாந்திகள் கைலாசம், மோக்ஷஸ்தாநமென்பார்கள். அத்துவைதிகள் கடாகாசம் மஹாகாசத்திற்போல் ஆத்துமா அகண்டாகாரபிர்ம்மத்தில் லயமடைகிறது மோக்ஷமேயன்றி மோக்ஷத்திற்கோரிடமேயில்லையென்பார்கள்.

மோக்ஷமடைவதற்கு நேரானதும் சிரேஷ்டமானதுமான ஸாதநம் ஞாநமொன்றே என்கிறவிஷயத்தில் இம்மதஸ்தர்களுக்குட் பேதமில்லை. ஏனெனில், மோக்ஷத்திற்கு அடுத்து முந்திய ஸாதநம் ஞாநமொன்றே என்று சாஸ்திரங்கள்சொல்லுகின்றனவாகையினாற்றான்.

யோகதத்துவோபநிஷத்தில், * "அக்ஞாநத்தினால் ஸம்"ஸாரமுண்டாகிறது. ஸம்ஸாரநிவிருத்தியானது ஞாநத்தினாலே "யேயடையப்படுகிறது. அறியத்தகுந்தவஸ்துவை யறிகிறவிஷ

* अज्ञानादेव संसारो ज्ञानादेव विमुच्यते । ज्ञानस्वरूपमेवादौ ज्ञानं

"யத்தில் ஞாநமே ஸாதநமாகையால், முந்தி ஞாநசுவரூபமே யறி
"யத்தக்கது."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், * "ஸம்ஸாரத்தினுடைய
"நாசமானது ஞாநத்தினலேயேயுண்டாகிறது. கருமத்தின
"லல்ல."

தரிசநோபநிஷத்-கண்டம்-சு-ல், † "ஸம்ஸாரத்திலிருந்து
"விரக்தியடைந்தவனுக்கு மோக்ஷமடைவதற்குஸாதநம் ஞாந
"மே."

மநுஸ்மிருதி-கஉ-அ௫-ல், ‡ "ஸகலமான சுபஸாதநங்களு
"க்குள்ளே (வேதாந்தத்தினலடையப்படும்) ஆத்துமஞாநமே
"முதன்மையாயிருக்கிறது. (ஏனென்றால்) அது வெல்லாவித்தை
"களுக்கும் மேலானதல்லவா. அதனலேயே மோக்ஷமடையப்
"படுகிறது."

பிரும்மபுராணம்-அத்-உ௦-சு-சசு-ல், § "ஞாநமே பரப்பிர்ம்
"மசுவரூபம். அக்ஞாநமானது பந்தத்தின்பொருட்டாகிறது.
"இந்தஸகலப்பிரபஞ்சமுமொன்றன ஞாநசுவரூபந்தான். ஞாந
"த்தைக்காட்டிலும் வேருக ஒன்றுமில்லை."

ஆக்நேயபுராணம்-அத்-௩எ௮-ல், $ "யக்ஞங்களினற்தேவ
"தைகளுடைய ஸ்தாநத்தையும் தபசினல் விராட்ஸ்தாநத்தையு
"ம், கருமங்களைவிட்டதாகிற ஸந்நியாஸத்தினற் பிரும்மாவினு
"டைய ஸ்தாநத்தையும் வைராக்கியத்தினற் (ஸகலவிஷயங்களி
"லுமபிமாநத்தைவிட்டதனல்) பிரகிருதிலயமென்கிற அக்ஞாந

---

ज्ञेयैकसाधनम् ॥

* ज्ञानादेव हि संसारविनाशो नैव कर्मणा ॥

† विरक्तस्य तु संसारात् ज्ञानं कैवल्यसाधनम् ॥

‡ सर्वेषामपि चैतेषा मात्मज्ञानं परं स्मृतम् । तद्ध्यग्र्यं सर्वविद्यानां प्राप्यते ह्यमृतं ततः ॥

§ ज्ञानमेव परं ब्रह्म ज्ञानं बन्धाय चेष्य ते । ज्ञानमेकमिदं विश्वं न ज्ञानाद्विद्यते परम् ॥

$ यज्ञैश्च देवानाप्नोति वैराजं तपसा पदम् । ब्रह्मणः कर्मसन्यासा

"நாசத்தையுமடைகிறான். ஞானத்தினாலேயே கைவல்லியமாகிற "மோக்ஷத்தையடைகிறான். அடையுங்கதிகளானவை இப்படி "ஐந்து விதங்களாயிருக்கின்றன."

கருடபுராணம்-பூர்வபாகம்-அத்-உஉஅ-ல், * "இரண்டாவ "தற்றவஸ்த்தில் மனதைநிறுத்துவதாகிற யோகநிலையிலிருக்கி "றவர்கள் பெரிதானகருமத்திலிருந்து (பூர்வகருமபந்தத்திலிரு "ந்து) விடுபடுகிறார்கள். ஸஞ்சித, ப்பிராரப்த, ஆகாமி கரும "மானது ஞானத்தினால் நாசமடைகிறது- கருமத்தினால் ஜந்துக் "கள் கட்டப்படுகிறார்கள். ஞானத்தினால் ஸம்ஸாரபந்தத்திலிரு "ந்து விடுபடுகிறார்கள்."

இலிங்கபுராணம்-பூர்வபாகம்-அத்-அசு-ல், † "அஞ்ஞானமா "கிற மலத்தையுடைத்தாயிருக்கிறபுருஷன் அழுக்குள்ளவனாகச் "சொல்லப்படுகிறான். அவ்வழுக்கு நாசமானால் மோக்ஷமடை "கிறான். அநேககோடி ஜந்மங்களெடுத்தாலும் ஞானமொன்றி "னலன்றி மோக்ஷமடைகிறதுமில்லை பாபபுண்ணியங்கள் நசிக் "கிறதுமில்லை. ஆகையாற், பிர்ம்மவித்துக்கள் மோக்ஷத்தின் "பொருட்டு ஞானத்தையேயப்பியாஸஞ்செய்யவேண்டியது. ஞா "நாப்பியாஸத்தினாலேயே மனிதர்களுக்குச் சித்தமானது தெளி "வைபடைகிறது. காய்ந்தவிறகை அக்நியெரித்துவிடுவதுபோல் "ஞானமாகிறவக்நியுண்டானவுடனே ஸகலபாபத்தையுமெரித்து "விடுகிறது. ஸகலபாபத்தையும் நாசஞ்செய்கிறதற்கு ஞானத் "தைவிட மிகவுஞ்சிரேஷ்டமானதுயாதொன்றுமில்லை."

---

द्वैराग्यात् प्रकृतौ लयम् ॥ १ ॥ ज्ञानात्प्राप्नोति कैवल्यं पञ्चैता गतयः स्मृताः ॥ २ ॥

* अद्वैतयोगसम्पन्ना स्ते मुच्यन्तेऽतिबन्धनात । अतीतारब्धमागामि कर्म नश्यति बोधतः ॥ २ ॥ कर्मणा बध्यते जन्तु र्ज्ञानान्मुक्तो भवाद्भवेत् ॥ ११ ॥

† अज्ञानमलपूर्वत्वात्पुरुषो मलिनस्स्मृतः ॥ १०२ ॥ 'तत्क्षयाद्धि भवेन्मुक्तिर्नान्यथा जन्म कोटिभिः । ज्ञानमेकं विना नास्ति पुण्यपापपरिक्षयः ॥ १०३ ॥ ज्ञानमेवाभ्यसे त्तस्मान्मुक्त्यर्थं ब्रह्मवित्तमाः । ज्ञानाभ्यासाद्धि वै पुंसां बुद्धिर्भवति निर्मला ॥ १०४ ॥ ज्ञानाग्निर्दहते क्षिप्रं शुष्कें धनमिवानलः । ज्ञानात्परतरं नास्ति सर्वपापविनाशनम् ॥ ११७ ॥

ஸ்காந்தபுராணம்-காசிகண்டம்-பூர்வபாகம்-அத்-சக-சு-சஉ-ல், * "முக்தியானது ஆத்மஞானத்தினாலுண்டாகிறது. "ஆத்மஞானமானது யோகத்தினாலன்றி யுண்டாகிறதில்லை. அ"ந்தயோகமானது நீண்ட காலாப்யாஸத்தினாற்ஸித்திக்கிறது."

11. இப்படி ஞானத்தினாலேயே பந்தநிவிருத்தியாகிற மோக்ஷமானதடையப்படுகிறதென்று பின்னுமநேகப் பிரமாணங்களுண்டு. ஆகையால், ஞானத்தினாலேயே மோக்ஷமடையப்படுகிறதென்கிற விஷயத்திலொருவருமாக்ஷேபிக்கிறதில்லை. ஆனாலிந்த ஞானமெப்படிப்பட்டதென்கிற விஷயத்தில் மதங்களொன்றுக்கொன்று பேதப்படுகிறது.

12. த்வைதமதத்தில் ஐந்துவிதபேத ஞானம் மோக்ஷஸாதநமென்று சொல்லப்படுகிறது. ஜீவேச்வரபேதம் ஜீவபரஸ்பரபேதம் ஜீவஜடபேதம் ஜடபரஸ்பரபேதம் ஜடேச்வரபேதம் என்று இந்த பேதஸ்வரூபங்கள் இந்த மதஸித்தாந்தஞ்சொல்லியிருக்கிறவிடத்தில் விரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஞானமடைவதற்கு சாஸ்திரவிசாரம் மதாசாரியரிடத்திற்பக்தி, குருபதேசம், மதக்கிரந்தங்களில் விசுவாஸம் இவைகளுடன் இலக்ஷ்மீ கருடன் சங்கம் சக்கிரம் முதலிய ஆயுதம் இவைமுதலியவைகளுடன் கூடியிருக்கிற நாராயணனை அசஞ்சலமான பக்தியுடன் தியானஞ்செய்வது முதலியன ஞானஸாதநம். இந்த ஞானத்தினாலடையப்படுகிற மோக்ஷமெதுவெனில், விஷ்ணுவாஸஞ்செய்யுமிடமாகிய வைகுண்டலோகமே. உபாஸகனுடைய உபாஸநாமேன்மைக்குத்தக்கபடி வைகுண்டத்தில் வாஸஞ்செய்வது ஸாலோக்யமுக்தியாகிறது. அவ்விடத்தில் விஷ்ணுவினுடைய ஸமீபத்தில் வாஸஞ்செய்வது ஸாமீப்யமுக்தியாகிறது. அந்தலோகத்தில் விஷ்ணுவுக்கு ஸமானமான ரூபத்தையடைந்து விஷ்ணுவுடன்கூட ஸஞ்சரிப்பது ஸாரூப்யமுக்தியாகிறது. இதுவே ஸாயுஜ்யமுக்தியென்றுஞ்சொல்லப்படும். முக்தர்களுக்கு முக்தியிலுங்கூட ஆநந்தத்திற் தாரதம்யமுண்டு. மேலும் மோக்ஷமடையத்தக்க ஜீவாத்மாக்கள்மட்டுமே இந்த வைகுண்டலோ-

---

* आत्मज्ञानेन मुक्तिस्स्यात्तच्च योगादृतेन हि । स च योगश्चिरं कालमभ्यासादेव सिध्यति ॥

கத்தையடைவார்கள். மற்றஜீவாத்துமாக்களுக்கு மோக்ஷமே யில்லை. மேலும் பசுபக்ஷிமுதலிய ஜந்துக்கள் மோக்ஷமடையத் தக்கவைகளாயிருக்குமானல், அவைகள் தன்தன்சுவரூபத்துடன் வைகுண்டலோகத்தில் வாசஞ்செய்வதுதான் மோக்ஷம்.

13. விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தில் ஞானமென்பது—அகண்டாகாரமாயிருக்கிற விஷ்ணுவுக்கு ஜீவனும் பிரகிருதியுஞ் சரீரமென்றும் அந்தவிஷ்ணு சரீரியென்றும் ஜீவனும் பிரகிருதியும் பரமாத்துமாவுக் கநுபவயோக்கியமானதனலவர்கள் சேஷமென்றும் பரமாத்துமாசேஷியென்றும் அந்தப் பரமாத்துமா எங்கும் நிறைந்தவாநந்த சுவரூபியானாலும் பக்தர்களுடைய அநுக்கிரஹார்த்தமாய் நாராயணன் வாசுதேவன் முதலிய சுவரூபங்களைத் தரித்து உலகத்தினுடைய சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரியங்களைச் செய்கிறாரென்றும், ஜீவர்களெல்லோரும் பேதமற்ற ஒரேசுவரூபமென்றும் ஜீவனானவன் தன்சுவசுவரூபஞானத்தினற் பந்தநிவிருத்தியடைகிறனென்றும் ஜீவன் பரமாத்துமாவுக்குத் தான் தாஸனென்றும் பரமாத்துமாவினுடைய ஏவுதற்படி ஜீவன் காரியங்களைச் செய்கிறனென்றுமறிவதுதான் ஞானம். இப்படிப்பட்ட ஞானத்துடன் உத்தமமான புண்ணியகருமங்களைச்செய்துவருவதனல் அசஞ்சலமான பக்தியடையப்படுகிறது. இப்படிப்பட்ட பக்தியே ஞானமென்றுசொல்லப்படுகிறது. இந்த ஞானத்திற்குப்பரமாத்துமாவினிடத்திற் பக்தியும்பிரபத்தியும் முக்கியஸாதநங்கள். பிரபத்தியென்றல், இந்த பக்தனனவன் தன்னுடைய தநகநகவஸ்து வாஹந புத்திர மித்திர களத்திராதி ஸகலமும் நாராயணனுடையதென்று அவருக்கர்பணஞ் செய்துவிடுவதுதான். இது விரக்தியென்றுஞ் சொல்லப்படும். இவைகளினற் தன் சுவசுவரூபஞானத்தையடைகிறன். இது கைவல்லியமென்று சொல்லப்படுகிறது. இப்படிக் கைவல்லியமடைந்த ஜீவர்கள் நாராயணனை யசஞ்சலமான பக்தியுடன் தியானித்து அவனவனுடையத் தியானத்திற்குத்தக்கபடி துவைதமதத்திற் சொல்லியதுபோல வைகுண்டலோகத்தில் நான்குவிதமுக்தியையுமடைவார்கள். ஸாயுஜ்யமுக்தியென்பது நாராயணனுடைய சரீரத்திற்குட் சேர்ந்துவசிக்குந்தன்மையுடையது. அந்த முக்தனுடைய இச்சைப்படி சேர்ந்தும் வசிக்கலாம், வேறயும் வசிக்கலாம்.

14. சைவத்துவைதிகளுடைய சித்தாந்தத்திற் பரமாத்துமாவுக்குஞ் ஜீவாத்துமாக்களுக்கும் பாசத்திற்கும் பேதங்களையறிவதுதான். இந்த ஞானத்திற்கு ஸாதநம் சரியைக்கிரியை யோமிகவைகளே. மற்றுவிஷயங்களில் விசிஷ்டாத்துவைதமதத்தையொற்றதாகவேயிருக்கிறது. இந்த மதசித்தாந்தஞ் சொல்லியிருக்கிறவிடத்தில் விரிவாய்க்காணலாம்.

15. அத்துவைதசித்தாந்தத்தில் ஞானமென்பது—ஜீவனானவன், அக்ஞானத்தினுற் தன்னை பிர்ம்மமென்றறியாமல், "நான் சுகீ, துக்கீ, பிறக்கிறேன், இறக்கிறேன்" என்பதுமுதலிய பிரமையையடைகிறுன். வாஸ்தவத்தில் "நான் பிர்ம்மமே. ஸகல ஜகத்துமென்னைக்காட்டிலும் வேறல்ல" என்கிற நிலையான இருப்புத்தான்ஞானம். இந்த ஞானத்திற்கு யோகம் முந்தியஸாதநம். மற்றபக்தி, நிஷ்காம கருமமிவைகள் சித்தசுத்தி மூலமாய் யோகத்திற்கு ஸாதநம்.

16. ஓ! ஜயவிரதா! இப்படி இன்னுன்கு மதங்களுடைய சித்தாந்தத்தையநுஸரித்து மோக்ஷசுவரூபம் ஞானசுவரூபம் ஞானத்திற்குஸாதநமானவிஷயங்கள் இவைகளைச்சொன்னேன். பின்னுமுனக்கெதைத்தெரிந்துகொள்ளவேண்டுமோ அதைக்கேட்கலாம்.

17. ஜயவிரதன்:—ஓ! ஞானாநந்தமூர்த்தியே! இன்னுன்குமதங்களுக்குள்ளெந்தமத சித்தாந்தத்தைப்பின்பற்றி ஞானமடைந்து மோக்ஷமடையலாமென்று நான் யோஜித்துப்பார்த்ததில்— பரமாத்துமசுவரூபமானது ரூபமுடையதல்லவென்றேயெனக்கு நிச்சயஞானமுண்டாயிருக்கிறது. ஆகாசம்போலெங்கும் வியாபித்திருக்கிறதாகிய அந்த பிர்ம்மமானது, கண் காது முதலிய ஞானேந்திரியங்கள், கை கால் முதலிய கருமேந்திரியங்கள், மனது இவைகளோடுகூடிய ஒருதேகத்தோடுகூடியிருக்கிறதாக எண்ணுவது முற்றிலும் அஸம்பாவிதம். அந்த பிர்ம்மத்திற்கு யாதொரு ரூபமாவது குணமாவது கிரியையாவது விகாரமாவது சலநமாவது இந்திரியாதிகளாவதில்லையென்று அநேக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆனுல், இந்திரியங்களோடுமவயவங்களோடுங்கூடியதாக மூர்த்திசுவரூபங்களையும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவேயென்றுல், அக்ஞானதசையிலிருக்கிற அதிகாரிகள் ஸர்வவியாபகமான பிர்ம்மசுவரூபத்தையறிந்துகொள்ள இப்படிப்பட்ட மூர்த்திசுவரூபங்களைச் சாஸ்தி

ரங்கள் கற்பித்துச் சொல்லுகின்றன. ஏனெனில், அபூர்த்தமான ஒருவஸ்துவில் மனது நிலையையடையமாட்டாதென்பதனாற்றான். இப்படிப்பட்ட மூர்த்திகளிலொன்றையுபாஸித்தே பரமாத்துவைதஞானத்தையடையவேண்டும், வேறுவழியில்லை. ஆகையால், அத்துவைதசித்தாந்தத்திற் பாரமார்த்திகதசையிலேயே யென்னுடையமனதானது ஸந்தோஷத்தையடைந்ததாயிருக்கிறது. ஆகையால், அத்துவைத ஞானிகளுடைய நிலைமையையறிந்துகொள்ள விரும்புகிறேன்.

18. ஸுசர்மா:—ஓ! ஜயவிரதா! உன்னுடையமனதானது மிகவும் பரிசுத்தமாயிருக்கிறதாகவும் அதி சூக்ஷ்மமான புத்தியினால்மட்டுமறிந்துகொள்ளத்தக்கதான அத்துவைதஞானத்தை நீயடைய யோக்கியனாகவும் நானறிகிறேன். ஆகையாற், பரமார்த்தயோகியும் பிரம்மஞானியுமாகிய ஜீவன் முக்தனுடைய லக்ஷணத்தையுனக்குச்சொல்லுகிறேன். இந்தஜீவன் முக்ததசையையடைந்தவனெவனோ அவன்தான் பிரம்மஞானியென்று சொல்லப்படுகிறான். அவன் இந்தத்தேகம்போனவுடன் விதேகமுக்தியாகிற மோக்ஷத்தையடைகிறான். இப்படிப்பட்ட மஹாபுருஷனுண்டானகுலமெதுவோ அந்தக்குலமானது மஹாபுண்ணியகுலமென்றும் அக்குலத்தில்-உக- தலைமுறையிலுள்ள பிதுருக்கள் உத்தமகதியையடைகிறார்களென்றுமறி. ஜீவன் முக்தன் விதேகமுக்தன் இவர்களுடைய இலக்ஷணம் சாஸ்திரங்களிலநேகவிடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிற் சிலதையுனக்குச் சொல்லுகிறேன்கேள்.

மஹோபநிஷத்-உ-ல், * "எவர்கள் (எந்த யோகிகள்) சுத்த "வாஸனையுள்ளவர்களோ, அவர்கள் மறுபடி பிறவித்துன்பத் "தையடைகிறவர்களாகவாகிறதில்லை. அப்படிப்பட்டவர்களறிய "வேண்டியதை யறிந்தவர்களாகவும் மஹாபுத்திமான்களாகவும் "ஜீவன் முக்தர்களாகவுஞ் சொல்லப்படுகிறார்கள். வஸ்துக்களி "னுறுதியானபாவனை பந்தமென்றுசொல்லப்படுகிறது. ஓ! பிரா "ம்மணோத்தமா! வாஸனைநசிப்பதே மோக்ஷமென்றுசொல்லப்

---

* ये शुद्धवासनाभूयो न जन्मानर्थभागिनः । ज्ञातज्ञेयास्त उच्यन्ते जीवन्मुक्ता महाधियः । पदार्थभावनादार्ढ्यं बंध इत्यभिधीयते । वासनातानवोब्रह्मन्मोक्ष इत्यभिधीयते । तपः प्रभृतिना यस्मै हेतुनैव विना पुनः ।

“படுகிறது. நாள்முதலிய காரணமன்றியிலேயே இத்தேகத்தி
“ற்பின்னும் போகங்களெவனுக்குருசிக்கிறதில்லையோ அவன் ஜீ
“வன் முக்தனென்றுசொல்லப்படுகிறான். எவன், அந்தந்தக்கா
“லத்திலடையப்படுகிற ஸுகதுக்கங்களிலே விருப்பற்றவனாய்
“ஸந்தோஷத்தையாவது வியஸநத்தையாவதடைகிறதில்லையோ
“அவன்ஜீவன் முக்தனென்று சொல்லப்படுகிறான். ஸந்தோஷம்
“வியஸநம் பயங்கோபம் ஆசை சிக்கனமிவைகளுடைய பார்வை
“களினாலவனுடைய உள்ளங்கெடுக்கப்படுகிறதில்லையோ அவ
“ன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுகிறான். அகங்காரசுவ
“ரூபமாயிருக்கிற வாஸனையை விளையாட்டாய்த்தள்ளிவிட்டுந்
“தியானிக்கிற வஸ்துவைத்தள்ளிவிட்டுமிருக்கிறவனெவனோ அ
“வன்ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுகிறான். சுஷுப்தியை
“ப்போல எவனுடைய அந்தக்கரணமானது இஷ்டாநிஷ்டங்க
“ளையறியாமலே பிரவிருத்தித்துக்கொண்டிருக்கிறதோ அவன்
“ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுகிறான். ஆத்துமாவிலேயே
“விளையாட்டையுடையவனாயும் பரிபூர்ணனாய் (ஸகலமும் பிரம்ம
“மென்கிற ஞானமுள்ளவனாய்) இருக்கிறவனாயும் பரிசுத்தமான
“மனதுள்ளவனாயும் அடையப்பட்டிருக்கிற உத்தமமான விசிரா
“ந்தியை (ஸகல துக்கத்திலிருந்தும் விடுபட்டதாகிய சுகத்தை)
“யுடையவனாயுமிருக்கிற எவன் இவ்வுலகத்திலொன்றையும் விரு
“ம்பாமலும் யாதொன்றிலும் அபிமானமில்லாமலுமிருக்கிறானோ அ
“வன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுகிறான். எவனுடைய
“ஹிருதயாகாசத்திலறியப்படுகிற வஸ்துவினாலற்பமேனுமொட்
“டப்படுகிறதில்லையோ (ஹிருதயமானது காணப்படுகிறவஸ்துக்

---

भोगा इह नरोचन्ते स जीवन्मुक्त उच्यते । आपतत्सु यथा कालं सुख-
दुःखेष्व नारतः । न हृष्यति ग्लायति यस्सजीवन्मुक्त उच्यते । हर्षामर्ष
भयक्रोध काम कार्पण्य दृष्टिभिः । न परादृश्यते योऽन्तस्सजीवन्मुक्त उ-
च्यते । अहङ्कारमयीं त्यक्त्वा वासनां लीलयैवयः । तिष्ठति ध्येयसन्त्यागी
सजीवन्मुक्त उच्यते । ईप्सितानीप्सिते न स्तोयस्यान्तर्वृत्ति दृष्टिषु । सुषुप्ति
वद्यश्च रति सजीवन्मुक्त उच्यते । अध्यात्म रतिरासीनः पूर्णः पावनमान-
सः । प्राप्तानुत्तमविश्रान्ति र्नकिञ्चिदिह वांछति । यो जीवति गतस्नेहस्स
जीवन्मुक्त उच्यते । संवेद्येन हृदाकाशे मनागपि न लिप्यते । यस्यासाव ज-

"களிலபிமாநமற்றிருக்கிறதோ)எவனுக்கிந்தஜடமல்லாதஞாநமி
"ருக்கிறதோ(ஜடம்முதலியஸகலவஸ்துக்களும் சேதநமென்கிற
"ஞாநமிருக்கிறதோ), அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்
"படுகிறான். ஆசை, துவேஷம், சுகந்துக்கம், தருமம், அதரு
"மம், பலன், பலனின்மை என்பவைகளில் (ஏதேதுண்டாவதா
"யிருந்தாலும் அவைகளின்) பலனில்விருப்பமன்றி யெவன்செ
"ய்கிறானோ அவன் ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுகிறான். எவ
"ன்யாதொரு கருமத்தைச்செய்யும்பொழுது மௌநியாயும் அக
"ங்காரமற்றவனாயு மபிமாநமற்றவனாயும் பொறாமையற்றவனாயு
"ம் மனக்கலக்கமில்லாதவனாயுமிருக்கிறானோ அவன் ஜீவன் முக்
"தனென்று சொல்லப்படுகிறான். ஸகலத்திலுமபிமாநத்தைவி
"ட்டு ஸாக்ஷிபோலிருக்கிறவனாயும் விருப்பமன்றி காரியத்தைச்
"செய்கிறவனாயுமிருக்கிறவனெவனோ அவன் ஜீவன் முக்தனெ
"ன்று சொல்லப்படுகிறான். தருமமும் அதருமமும் மனதிலு
"ண்டாகுமெண்ணமும் ஆசையும் (மற்ற) ஸகலமும் எவனால் ம
"னப்பூர்வமாய் நன்றாய்த்தள்ளப்பட்டிருக்கின்றனவோ அவன்
"ஜீவன் முக்தனென்று சொல்லப்படுகிறான். காணப்படுகிற ஆட
"ம்பரமான வஸ்துக்களெவ்வளவுண்டோ அவ்வளவும் பார்க்க
"ப்பட்டதாயிருந்தாலும் அது (அந்தவஸ்துக்களிலுள்ள அபிமா
"நம்) எவனாலே நன்றாய்விடப்பட்டிருக்கிறதோ அவன்ஜீவன்
"முக்தனென்று சொல்லப்படுகிறான். க்ஷாரம், புளிப்பு, உப்பு,
"கசப்பு (திதிப்பு) இவைகளுடைய உருசியையும் நல்லஉணவு
"நல்லஉணவல்ல (இவைகளுடைய வேற்றுமையையறியாமலே)
"ஸமமாயுண்கிறவனெவனோ அவன்ஜீவன் முக்தனென்றுசொல்

---

डासंवित् सजीवन्मुक्त उच्यते । रागद्वेषौ सुखं दुःखं धर्माधर्मौ फलाफले । यःकरोत्य नपेक्ष्यैव सजीवन्मुक्त उच्यते । मौनवा न्निरहंभावो निर्मानोमुक्त-मत्सरः । यःकरोति गतोद्वेगस्स जीवन्मुक्त उच्यते । सर्वत्र विगतस्नेहो य-स्साक्षिव दवस्थितः । निरिच्छो वर्तते कार्ये सजीवन्मुक्त उच्यते । येन धर्ममधर्मञ्च मनोमननमीहितम् । सर्वमन्तः परित्यक्तं सजीवन्मुक्त उच्यते । यावती दृश्यकलना सकलेयं विलोक्यते । सा येन सुष्ठुसंत्यक्ता स्स जीव—ते । कट्वाम्ल लवणंतिक्त ममृष्टं मृष्टमेवच । सममेवच योभुङ्क्ते सजी––ते । ज-

"லப்படுகிறான். ஜரை, மரணம், ஆபத்து, தரித்திரம் இவைகளை
"யும் இராஜஸம்பத்தையும் (பேதமில்லாமலே) ஸந்தோஷமாயெ
"ண்ணிக்கொண்டெவனநுபவிக்கிறானோ அவன்ஜீவன்முக்தனெ
"ன்றுசொல்லப்படுகிறான். தருமம் அதருமம் சுகந்துக்கம் அப்
"படியே பிறப்பிறப்பு இவைகளிலே (விருப்பு வெறுப்பை)புத்தி
"பூர்வமாயெவன் விட்டிருக்கிறானோ அவன்ஜீவன் முக்தனென்று
"சொல்லப்படுகிறான். துக்கமுண்டான ஸமயத்தில் வியஸநப்ப
"டாமலும் ஸந்தோஷமுண்டானஸமயத்திலாநந்தப்படாமலுங்க
"லங்காதபுத்தியோடெவனிருக்கிறானோஅவன்ஜீவன்முக்தனென்
"று சொல்லப்படுகிறான். ஸகலவிருப்பங்கள் ஸகலமானஸந்தே
"கங்கள் ஸகலமானப்பிரயத்நங்கள் ஸகலமான நிச்சயங்கள்
"இவைகளையெல்லாம் புத்தி பூர்வகமாகநன்றாய்த்தள்ளிவிட்டிரு
"க்கிறவனெவனோ அவன் ஜீவன்முக்தனென்றுசொல்லப்படுகி
"றான். பிறப்பு இருப்பு இறப்பு இவைகளிலேயும் விருத்தி க்ஷீ
"ணம் இவைகளிலேயு மெவனுடையமனது, வேற்றுமையற்றி
"ருக்கிறதோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுகிறான்.
"அடையப்பட்டிருக்கிறபோகங்களிலொன்றையுந் துவேஷிக்கா
"மலும் அப்படியே யொன்றையும் விரும்பாமலுமனுபவிக்கிறவ
"னெவனோ அவன் ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுகிறான்.
"அடங்கிப்போயிருக்கிற ஸம்ஸாராடம்பரமுடையவனும் பிரி
"வுள்ளவன்போலிருந்தாலும் (தேகோபாதியினால் வேறுபோலி
"ருந்தாலும்) பிரிவற்றவனும் சித்தத்தோடுகூடியிருந்தாலுஞ்
"சித்தம் (சித்தத்தின் வியாபாரம்) அற்றவனுமிருக்கிறவனெவ
"னோ அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுகிறான். சப்த

रामरणमापच्च राज्यं दारिद्र्यमेवच। रम्यमित्येव योभुङ्क्ते सजी—ते। धर्माधर्मौ सुखं दुःखं तथा मरणजन्मनी। धिया येनसु संत्यक्तं सजी—ते। उद्वेगानन्दरहितसमया स्वच्छयाधिया। न शोचति न चोदेति सजी—ते। सर्वेच्छा सकला श्शङ्कास्सर्वेहा स्सर्वनिश्चयाः। धियायेन परित्यक्तास्स जी—ते। जन्मस्थिति विनाशेषु सोदयास्तमयेषु च। सममेव मनोयस्य स जी-—ते। न किञ्च नद्वेष्टि तथा न किञ्चिदपि काङ्क्षति। भुङ्केयः प्रकृतान् भोगान् सजी—ते। शान्तसंसारकलनः कलावानपि निष्कळः - यस्सचित्तोपि निश्चित्तः सजी—ते। यस्समस्तार्थ जालेषु व्यवहार्यपि नि-

"ஸ்பரிசம் முதலிய ஸகலவிஷயங்களிலே வியவஹாரஞ்செய்து "கொண்டிருந்தபோதிலும் பிறருடையபொருள்களிற்போல் வி "ருப்பமற்றிருக்கிறவனெவனோ அப்படிப்பட்ட பூர்ணாத்துமா "வானவன் ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுகிறான்.

விதேகமுக்தனுடைய இலக்ஷணஞ்சொல்லப்படுகிறது.

"ஜீவன்முக்த பதத்திலிருக்கிறவன் தன்தேகமானது கால "த்திற்கு சுவாதீநமாகிறபோது (மரணமடையும்போது) ஜீவன் "முக்த பதத்தைவிட்டு வாயுவானது அசைவற்றிருந்தாலெப்ப "டியோ அப்படித் தேகமில்லாத முக்தியையடைகிறான். இப் "படி விதேகமுக்தியையடைந்தவன்பிறக்கிறதுமில்லை. இறக்கிற "துமில்லை. சுவரூபத்திற் குறைவையடைகிறதுமில்லை."

இந்த ஜீவன்முக்தலக்ஷணம் வராஹோபநிஷத்-அத்-ச-லும் வாஸிஷ்டராமாயணமென்கிற ஞானவாஸிஷ்டம்-ரு-ஸர்க்கம் ககூ-கள லும் காணலாம். பகவத்கீதை இரண்டாவதத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திதப்பிரக்ஞனுடைய இலக்ஷணமும் ஜீவன்முக்தலக்ஷணந்தான்.

19. விதேகமுக்தி யின்னதென்று மேற்குறித்துக்காட்டிய மஹோபநிஷத்திற் சொல்லியிருக்கிறவிதமாகவே ஞா-வாஸிஷ்டம் ரு-ஸர்க்கம் கள-கூ-க-லுஞ்சொல்லப்பட்டிருக்கிறது.

20. சிலர் மேற்குறித்தவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் விதேகமுக்தியானது தேகம் போனபிறகல்ல, தேகத்தோடு ஜீவன்முக்திதசையிலிருக்கிற முக்தர்களிற் சிலர் புநர்ஜந்மத்தையடைவார்கள். அவர்கள் மற்றமனிதர்களைப்போல மற்றொருதேகத்தை ஸ்மரித்துக்(நினைத்து)கொண்டு இந்தத் தேகத்தை விடுவார்களாகையாலவர்கள் விதேகமுக்தர்களல்ல. ஜீவன்முக்தர்களில் யார் மற்றொருதேகத்தை ஸ்மரிக்காமலே இந்தத் தேகத்தைவிட்டு மோக்ஷமடையத்தக்கவர்களோ இவர்கள் பிராரப்தமிருக்கிறவரையிலிந்தத் தேகத்தோடிருந்தாலு மவர்கள் விதேகமுக்தர்களென்று சிலர் சொல்லுவார்கள். இப்படிச் சொல்வ

---

स्पृहः । परार्थेष्विव पूर्णात्मा सजी—ते ।—जीवन्मुक्त पदं त्यक्त्वा स्वदेहे कालसात् कृते । विशत्यदेहमुक्तत्वं पवनो स्पन्दतामिव । विदेहमुक्तो नोदेति नास्तमेति नशाम्यति ॥

திலுங்கூட விசேஷபேதமில்லை. இவைகள்தான் ஜீவன்முக்த விதேகமுக்தலக்ஷணங்களென்றறி.

21. ஜயவிரதன்:—ஓ! பகவானே! மரணகாலத்தில் ஜீவர்கள்போல் வேறொருதேகத்தை ஜீவன்முக்தர்கள் ஸ்மரிக்கிறதில்லையென்று சொன்னீர்களே. அதன் காரணத்தையுமதற்காதாரமானப் பிரமாணத்தையுமறியவிச்சிக்கிறேன்.

22. ஸுசர்மா:—ஓ! ஜயவிரதா! இவ்வுலகத்தில் மரணமடைகிற மனிதர்களவர்களுடைய மரணகாலத்திலெந்தரூபத்தையல்லது தேகத்தை நினைத்துக்கொண்டு பிராணனைவிடுகிறார்களோ அப்படி நினைத்த தேகமே அடுத்த ஜந்மத்தில் வருகிறதென்பது சாஸ்திரநிச்சயம். இப்படி தேகம் வருகிறதென்பதுப் பிரத்தியக்ஷமாயறிந்துகொள்ளக்கூடியதல்ல. ஆனாற் சாஸ்திரங்களவ்விதமாய்ச் சொல்லுகின்றன. அத்தோடுகூடப் புராணங்களிற் சொல்லியிருக்கிற சரித்திரங்களு மிதையாதரிக்கின்றன. பரதனென்கிற மஹாராஜா தபஸ்செய்துகொண்டு மகாஞாநியாயிருந்தவர் மரணகாலத்தில் மானை ஸ்மரித்தபடியால் மான் ஜந்மத்தையடைந்தாரென்று விஷ்ணுபுராணஞ் சொல்லுகிறது. அப்படியே தேவசர்மாவென்கிற பிராம்மணன் மஹாஞாநியாயிருந்தும் மரணகாலத்திற் கிளியை ஸ்மரித்ததனாற் குஞ்சலமென்கிற கிளிஜந்மத்தையடைந்ததாகப் பத்துமபுராணஞ்சொல்லுகிறது. இப்படியே மற்ற சாஸ்திரவாக்கியங்களுஞ் சொல்லுகின்றன.—

யோகசிகோபநிஷத்-அத்-௧-ல்,* "இத்தேகம்போனபிறகு "எந்தஜந்மத்தையடையப்போகிறானோ அதை மனிதர்களறிய "மாட்டார்கள். (ஆனால்) தேகம்போகிறஸமயத்திலே சித்தத் "திலெதனை பாவனை (நினைவு) செய்கிறானோ அததாகவே ஜீவ "ன், ஆகிறான். இதுதான் ஜந்மத்திற்குக் காரணம்."

மஹாபாரதம்-பீஷ்மபருவம்-பகவத்கீதை-அத்-அ-சு-ரு-ல், † "ஓ! குந்திபுத்திரா! எவன் அந்தியகாலத்திலெந்தெந்த ரூபத்

---

* देहावसानसमये चित्ते यद्यद्विभावयेत् । तत्तदेव भवेज्जीव इत्येवं जन्मकारणम् । देहान्ते किंभवेज्जन्म तन्नजानन्ति मानवाः ॥

† यं यं वापि स्मरन् भावं त्यजत्यन्ते कळेबरम् । तं तमेवैति कौ-

"தை ஸ்மரித்தவனாய்த் தேகத்தைவிடுகிறானோ அவனெப்போது "மந்தந்த ரூபத்தின் ஸ்மரணையோடுகூடினவனாயந்தந்த சுவரூப "த்தையேயடைகிறான்."

23. ஜயவிரதன்:—ஓ! பரமஸாதுவே! அத்துவைதசித்தாந்தத்திலெனக்குச் சில ஸந்தேகங்களிருக்கின்றன. அவைகளைக்கேட்கத் தாங்கள் அநுமதிகொடுத்தாலொன்றின்பின்னொன்றாகக் கேட்கிறேன்.—பரபிர்ம்மசுவரூபமோ தேஜோமயமாயும் சுவப்ரகாசமாயும் விகாரமற்றதாயும் ஞானமே சுவரூபமாயும் பிரகிருதிக்கப்புறப்பட்டதாயுஞ் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மஹாபரிசுத்தமானவப்படிப்பட்ட பிர்ம்மம் சுகந்துக்கம் பிறப்பிறப்புமுதலியவைகளோடுகூடிய ஸம்ஸாரியான ஜீவனாக ஏனாயிற்று? ஞானசுவரூபியான அந்த பிர்ம்மத்திற்கு,த்தான் ஜீவனென்கிற பிரமைதானெப்படியுண்டாகக்கூடும்?.

24. ஸுசர்மா:—ஓ! நற்குணமுள்ளவனே! அத்துவைதத்தின் பாரமார்த்திக தசையைக்குறித்து முன் உனக்குச்சொன்ன விடங்களிலிதற்குருத்தரமான வனேகவாக்கியங்களைச் சொல்லியிருக்கிறேன். பிர்ம்மமானது பிறப்பிறப்பு சுகதுக்கம் முதலியவைகளோடுகூடிய ஸம்ஸாரியான ஜீவனாகவெப்போதுமாகவில்லை. " न निरोधो नचोत्पत्तिर्न बद्धोनच साधकः । न मुमुक्षुर्नवैमुक्त इत्येषा परमार्थता ॥=ஆத்துமாவுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை. பந்தமுமில்லை. (பந்தமில்லாததனால்) முக்தியுமில்லை. மோக்ஷமுமில்லை. (அதற்கு) ஸாதனஞ்செய்கிறதென்பதுமில்லை. இதுதான் வாஸ்தவமானது."—இந்த சுருதியினாலேயே பிர்ம்மத்தில் ஜீவத்தன்மை கற்பிதமென்று ஏற்படுகிறது. ஆனால், ஜீவனாக ஏன் சொல்லப்படுகிறதென்றால்,கடத்திலுள்ள மஹாகாசத்திற்குக் கடத்தை யுபாதியாய்வைத்துக் கடாகாசமென்று சொல்வதுபோல பிர்ம்மவிஷயத்திற் தேகோபாதியினாற் ஜீவனென்றுசொல்லப்படுகிறது. வாஸ்தவத்தில் ஜீவனென்பதும் ஸம்ஸாரியென்பதும் அக்ஞானகற்பிதமேயன்றி வேறல்ல. ஆனாலநாதிகாலமாய் சுகந்துக்கம்முதலிய சுவரூபமாயிருக்கிற தேகேந்திரிய அந்தக்கரணங்களோடு சேர்ந்துதேகத்திலிருக்கிற ஆத்துமா அக்ஞானசக்தியினாலந்தக்கரணத்தினுடைய வியாபாரமாகிய சுகதுக்கம்

---

न्तेय सदा तद्भावभावितः ॥

முதலியன தன்னுடையதுபோற் பிரமையையடைந்தது. இப்படியே சுருதியுஞ்சொல்லுகிறது.

யோகசிகோபநிஷத்-அத்-க-ல், * "பிரிவற்றதாயு மழுக்கற் "றதாயும் சாந்தமாயும் ஸகலத்திற்கும் மேற்பட்டதாயுந்துன்ப "மற்றதாயுமிருக்கிற அந்த பிர்ம்மம், ஜீவரூபத்தோடு புண்ணிய "பாபபலன்களினாற் சூழப்பட்டதாயிருக்கிறது. நித்தியமாயுஞ் "சிரேஷ்டமான ஆத்துமஸ்தானமாயும் பிரகிருதிமுதலிய தத்து "வங்களுக்கு மேற்பட்டதாயுமிருக்கிற அந்த பிர்ம்மமானதெப் "படி ஜீவத்தன்மையையடைந்தது? ஓ! மஹாதேவனாகிய ஈசு "வரா! (என்னிடத்தில்) அநுக்கிரஹத்தினாற்சொல்லும். (ஈசு "வரன்சொல்வது) தோற்றப்படுகிற ஸகல ஸ்தானங்களுக்கும் "மேற்பட்டதாயும் ஞானசுவரூபமாயுங் கலக்கமற்றதாயுமிருக்கி "றது (பிர்ம்மம்). அதனிடத்தில் வாயுவைப்போற் சலந (அ "சைவு) சக்தியுண்டாயிற்று. அச்சமயத்திலகங்காரதத்துவம்வெ "ளிப்பட்டது, அந்தவகங்காரதத்துவத்திலிருந்து (இரக்தம் "மாம்ஸம் எலும்பு முதலிய) தாதுக்களாற்கட்டப்பட்டதாயும் "(ஸத்துவரஜஸ்தமஸ்களாகிற) முக்குணமாயுமிருக்கிற ஐந்துவி "தமான சுவரூபங்களினொருபிண்டமாயிற்று. அதைச்சுக "துக்கங்களோடுகூடிய ஜீவனுகபாவனைசெய். அதனாலே பரி "சுத்தமான பரமாத்துமாவிடத்தில் ஜீவனென்கிற பெயர்சொல் "லப்பட்டிருக்கிறது; காமம், கோபம், பயம், மோஹம், லோ "பம், மதம், அகங்காரம், பிறப்பு, மரணம், சிக்கனம், துக்கம், "சோம்பல், பசி, தாகம், ஆசை, இலஜ்ஜை, பயம், துன்பம், துக்கம், "ஸந்தோஷமிப்படிப்பட்ட தோஷங்களிலிருந்துவிடுபட்ட அந்த

---

* निष्कलं निर्मलं शान्तं सर्वातीतं निरामयम् । तदेव जीवरूपेण पुण्यपापफलैर्वृतम् ॥ परमात्मपदंनित्यं तत् कथं जीवतांगतम् । तत्वातीतं महादेव प्रसादात् कथयेश्वर ॥ सर्वभावपदातीतं ज्ञानरूपं निरञ्जनम् । वायुवत्स्फुरितं स्वस्मिन् तत्राहं कृतिरुत्थिता । पञ्चात्मकमभूत्पिण्डं धातुबद्धं गुणात्मकम् । सुखदुःखैस्समायुक्तं जीवभावनयाकुरु ॥ तेन जीवाभिधाप्रोक्ता विशुद्धेपरमात्मनि । कामक्रोधभयञ्चापि मोहलोभमदोरजः ॥ जन्ममृत्युश्च कार्पण्यं शोकस्तन्द्राक्षुधा तृषा । तृष्णालज्जाभयं दुःखं विषादोहर्षमेव च ॥

"ஜீவன் சிவனென்று சொல்லப்படுகிறுன்.—ஓ! பிருமமாவே! "விவேகியானவனெப்போதும் ஸம்ஸாரப்பிரமையில்லாத முக் "தனே.—ஆத்துமா எப்போதுமுள்ளதாயும் பரிபூர்ணசுவருப "மாயுமிருக்கிறது. அது பரிபூர்ணசுவருபமாயிருக்கிறதனுலே "அதுவே உருவமுடையதாயு முருவமற்றதாயுமிருக்கிறது, கலி "ரூபத்தினுலே (அக்ஞானத்தினுலே)யும் அதனுடைய சேஷ் "டையினுலேயும்(ஆத்துமா)ஸம்ஸாரப் பிரமையை யடைந்தது."

முக்கலோபநிஷத்-சு-ல், * "அந்த பிர்ம்மமானது மூன்று "தாபங்களுக்கப்புறப்பட்டது. ஆறுகோசங்களில்லாதது. ஆறு "ஊர் மிகளற்றது. ஐந்து கோசங்களுக்கப்புறப்பட்டது. "ஆறு பாவவிகாரங்களில்லாதது. இவை முதலிய ஸகலத்திற் "கும் வேறுபட்டதாயிருக்கிறது. தாபத்திரயமென்பது—ஆத் "தியாத்துமிகம் ஆதிபௌதிகம் ஆதிதெய்விகம்(இவைகளே).— "கருத்தா கருமம் கிரியை,அறிகிறவன் அறிவு அறியப்படும் வஸ் "து, அநுபவிக்கிறவன் அநுபவம் அநுபவிக்கப்படும் வஸ்து, "என இப்படி மும்மூன்று விதம்.—துவக்கு, மாம்ஸம், இரக்தம், "எலும்பு, நரம்பு, ஊன் இவைகள் ஆறுகோசங்கள்.—காமம் "குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியமென ஆறு "சத்துருக்கள்.—அந்நமயம், பிராணமயம்,மனோமயம், விக்ஞாந "மயம், ஆநந்தமயமென ஐந்து கோசங்கள்.—பிரியத்துவம்,ஜந "நம், வளருதல், திரிதல், குறைதல், நசித்தல் இவைகள் ஆறு "பாவங்கள். பசி, தாகம், வியஸநம், மோஹம், ஜரை, மரணம்,

---

एभिर्दोषैर्विनिमुक्त स्सजीवः शिव उच्यते।—विवेकीसर्वदामुक्त स्संसारभ्रमवर्जितः ॥ परिपूर्णस्वरूपं तत् सत्यं कमलसम्भव। सकलं निष्कलंचैव पूर्णत्वाञ्च तदेवहि ॥ कलिनास्फूर्तिरूपेण संसारभ्रमतांगतम् ॥

* तद्ब्रह्मतापत्रयातीतं षट्कोशविनिर्मुक्तं षडूर्मिवर्जितं पञ्चकोशातीतं षड्भावविकारशून्यमेवमादि सर्वविलक्षणं भवति। तापत्रयन्तु आध्यात्मिकाधिभौतिकाधिदैविकं। कर्तृकर्मक्रियाज्ञातृज्ञानज्ञेय भोक्तृभोगभोग्यमिति त्रिविधम्। त्वङ्मांसशोणितास्थिस्नायुमज्जाष्षट्कोशाः। कामक्रोधलोभमोहमदमात्सर्यमिति अरिषड्वर्गः। अन्नमय प्राणमय मनोमय विज्ञानमयानन्दमया इति पञ्चकोशाः। प्रियत्वजननवर्धनपरिणामक्षयनाशाष्षट्भावाः। अ-

"என ஆறு ஊர்மிகள். குலம், கோத்திரம், ஜாதி, வர்ணம், ஆ
"சிரமம், ரூபம் இவ்வாறும் பிரமைகள். இவைகளோடுகூடியி
"ருக்கிறதனாலே பரமபுருஷன் (பிர்ம்மம்)ஜீவனாகிறான். (ஜீவன்)
"வேறொருவனல்ல."

25. இவ்விதமாய் பரபிர்ம்மமே ஜீவத்தன்மையையடைந்ததாயப் பின்னுமநேகப் பிரமாணங்களிருக்கின்றன. ஜீவர்களையும் ஜகத்தையும் அந்த பிர்ம்மஞ் சிருஷ்டித்ததாகச் சில சுருதிகள் சொல்லுகின்றன. எப்படியெனில், அந்த பிர்ம்மமானது உலகத்தைச் சிருஷ்டிப்போமென்றெண்ணி ஸகலபூதங்களையுஞ் சிருஷ்டித்து அந்தப் பூதங்களுக்குள் தானநுப்பிரவேசித்ததென்றும் தானே ஸகலலோகமாகவாகிறேனென்று ஸங்கற்பித்ததென்றும்அந்தப் பரமாத்துமாவிச்சித்தமாத்திரத்திலுலகசிருஷ்டியாகிறதென்றும் அந்தப் பரமாத்துமா விளையாடும்பொருட்டு உலகசிருஷ்டிசெய்கிறாரென்றும் பின்னும் பலவிதமாய் ச்சிருஷ்டிக்கிரமத்தைச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவேயென்றால், அக்ஞானதசையையநுஸரிக்கிற வதிகாரிகளுடைய புத்திக்குப் போதமுண்டாகும்பொருட்டுக் கற்பித்துச் சொல்லியதேயன்றி வாஸ்தவமல்ல. பிர்மமத்தைத்தவிர இரண்டாவது வஸ்துவேயில்லையென்றும் பிர்ம்மம் ஆகாசம்போலெங்கும் நிறைந்திருக்கிறதென்றுஞ் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அப்படியிருக்க பிர்ம்மமானது ஜீவர்களையும் ஜகத்தையுஞ் சிருஷ்டித்ததென்றால் ஜீவாத்துமாக்களும் ஜகத்தும் பிர்ம்மத்திற்கந்நியமாயெப்போதுமிருக்கிறார்களென்று ஏற்படுகையால்,மேற்படி சுருதிகளுக்கு விரோதமாகிறது. "सर्वं ब्रह्ममयं जगत्=ஸகல ஜகத்தும் பிர்ம்ம சுவரூபமே" என்ற சுருதிப்படி ஜீவனானாலு மீசுவரனானாலும் ஜகத்தானாலும் பிர்ம்மமேதான். ஜீவனென்கிற பெயரும் ஜீவன் சுகதுக்கம் முதலியவைகளை யநுபவிக்கிறானென்பதும் அக்ஞானத்தினாலுண்டானப் பிரமையேயன்றி வாஸ்தவத்திலில்லை. பிர்ம்மத்திற்கு இப்படிப்பட்ட பிரமையுண்டாகக்கூடுமோவென்றால், கூடும். எங்கும் வியாபித்திருக்கிற அகண்டாகார பிர்ம்மத்திற்கு சுகதுக்காதிப் பிரமையென்பதில்லவேயில்லை. ஆனால்,

---

शनाया पिपासाशोकमोहजरामरणानीतिषडूर्मयः । कुलगोत्रजातिवर्णाश्रमरूपाणि पड्भ्रमाः । एतद्योगेनपरमपुरुषो जीवोभवतिनान्यः ।

அநாதிகாலமாய்த் தேகோபாதியையடைந்திருக்கிற பிர்ம்மத்தினுடைய அம்சத்திற்குத்தான் சுகதுக்காதிப் பிரமையுண்டாயிருக்கிறது. ஏனென்றால், பிர்ம்மமாகிய தன் சுவசுவரூபத்தை வெகுகாலமாய் மறந்து தான் ஜீவனென்றுப் பிரமையடைந்ததனாற்றான். எப்படிப்போலெனில், உத்தமகுலத்திற்பிறந்த ஒரு பிராம்மணன் வெகுகாலமாய் சூத்திரஸம்பந்தத்தையும், சூத்திராசாரத்தையுமநுஷ்டித்துவந்து அதனாற், தான் பிராம்மணனென்கிறதைமறந்து சூத்திரனென்றுப் பிரமையடைவதுபோற்றான். சண்டாளவேஷந்தரித்து நாடகமாடுகிற பிராம்மணன் வேஷத்தையுடைத்தாயிருக்குங்காலத்திற் தான் பிராம்மணனென்பதை மறந்து சண்டாளனென்று நடநஞ்செய்வதுபோலுஞ் சொல்லலாம்- ஆத்துமசக்தியாகிற அக்ஞானத்தினாற் தன் சுவசுவரூபம் மறைபட்டுப் பிரமையுமுண்டாச்சுது.

26. ஜயவிரதன்:—ஓ! பகவானே! ஆத்துமாவினிடத்திலிருந்தே உண்டான ஆத்துமசக்தியானது தனக்கிருப்பிடமான ஆத்துமாவை மறைக்கவும் பிரமையையுண்டாக்கவுங்கூடுமோ.?

27. ஸுசர்ம்மா:–ஓ! நிபுண! அப்படியுண்டாகக்கூடும். ஜலத்திலிருந்துண்டான பாசி, தானுண்டானவிடமாகிய ஜலத்தையே மறைக்கிறதுபோலும் சூரியனாலுண்டாகிற மேகம், சூரியனையே மறைக்கிறதுபோலும் அக்நியினாலுண்டான புகை, அக்நியையே மறைக்கிறதுபோலும் ஆத்துமாவிலிருந்துண்டான சக்தி, ஆத்துமாவையே மறைக்கிறது. அப்படி மறைத்தாலும் பாசி, மேகம், புகை இவைகளுடைய மறைவினால் ஜலம், சூரியன், அக்நி இவைகளுடைய சுவரூபத்திற்கு விகாரமில்லாததுபோல் ஆத்துமாவுக்கும் யாதொரு விகாரமுமில்லை. புருஷனுடையதேகத்திலிருந்துண்டான பித்தமானது தானுண்டானவிடமாகிற தேகத்தையே திக்குத் திசை வஸ்துக்கள் முதலியவொன்றையுந்தோற்றவொட்டாமற் பிரமையையுண்டாக்கி அத்தேகமே நிலைதப்பிவிழும்படி செய்கிறது அப்படிப்போலாத்துமசக்தி ஆத்துமாவைப் பிரமிக்கும்படி செய்யக்கூடும். பித்தநிவிருத்தியானது அதற்குத்தகுந்த ஔஷதங்களினாலுண்டாவதுபோல ஆத்துமப்பிரமைநிவிருத்தியுங் குருசாஸ்திரம் இவர்களாலடையப்படுகிற ஞானமாகிற ஔஷதத்தினால் நிவிருத்தியாகிறது.

28. ஜயவிரதன்:—ஓ! பரமகுருவே! ஆத்துமாவினுடைய

அக்ஞாநசக்தியானது ஸங்கற்பம், வாஸனை கருமமிந்த சுவரூப ங்களாயிருக்கிற மனதாகவாயிற்று. அநேகபேதங்களாயும் பல விதமாயும் உற்பத்தி, நாசம், சுகம், துக்கம் முதலியசுவரூபமா யிருக்கிற அம்மனதே இந்த ஜகத்தைக் கற்பிக்கிறதென்று அ நேகப் பிரமாணங்கள் சொல்லுகின்றன. இம்மனதோ ஒரு தேகத்திற்குள்ளடங்கினதாயும் தேகத்தைவிட மிகவுஞ்சிறிய தாயுங்காணக்கூடாத அதிசூக்ஷ்மமாயுமிருக்கிறது. சூக்ஷ்மமான இம்மனதானது மஹாபெரிதான விந்த ஜகத்தையெப்படித்தோ ற்றுவிக்கும்.

29. ஸுசர்ம்மா:—ஓ! ஜயவிரதா! சூக்ஷ்மமான வஸ்துவிற் பெரிதான வஸ்துக்கள் தோற்றுவது ஆச்சரியமல்ல. ஒரு சிறிய உழக்கில் ஜலத்தைவைத்து அதற்குட்பார்ப்போமானால் அநேக நக்ஷத்திரங்கள் சூரியன் சந்திரன் முதலியவைகளோடுகூடிய பெரிதான ஆகாசந்தோற்றுகிறது. அப்படியே அவ்வுழக்குக் குச் சமீபத்திலுள்ள கோபுரம் முதலிய கட்டடங்களுங்காணப் படுகின்றன. இதைவிட மிகவுமாச்சரியத்தையுண்டாக்கிற மன தோ ஸகலத்தையுந்தோற்றுவிக்கும். எப்படியெனில், ஒரு வீட்டின் சிறிதாகியஅறையிலொருபுருஷன் நித்திரைசெய்கிறான். அவன் சுவப்நத்தில் யானை, குதிரை, இரதம், மனிதர்களடங்கிய சதுரங்கப்பலத்துடன் ஓரரசன் யுத்தத்திற்குப் போகிறதாகக் காணுகிறான். அப்படியே பெரிதான மலைகளையும் நதிகளையும் ஸமுத்திரத்தையும் அநேகக் கப்பற்களையும் பெரிதானகட்டடங் களையுங்காணுகிறான். இவைகளிலொன்றாவது இவன் படுத்தி ருக்கிற அறைக்குள்ளடங்கியிருக்கத்தக்கதல்ல. அப்படியிருக்க இவ்வளவு பெரிதான அநேகவஸ்துக்களையிவனெப்படியறிந்தா னென்று பார்ப்போம். அவ்வளவு வஸ்துக்களையுமறிந்தனு இந்தப்புருஷனென்று சொல்லுவோமானாலவனோ அசைவற்றுப் படுத்தவிடத்திலேயே தேகத்தை மறந்திருக்கிறான். அவனெங் கும்போகவில்லை. கண்திறந்து பார்க்கவுமில்லை. அவன் ஒன் றையும் நினைக்கவுமில்லை. அப்படியிருந்துமிவ்வளவு பெரியவஸ் துக்களை யவனறிந்ததற்குச் சூக்ஷ்மமான இந்த மனதே காரண மென்பதிற் சந்தேகமில்லை. இந்த சுவப்நகாலத்திற் பார்க்கப் பட்டதாகிய இந்தப் பெரிதான வஸ்துக்களிலநேகம் விகாரப்ப ட்டும் வேற்றுமைப்பட்டு முண்டாயு மழிந்தும் பலவிதமாய்க்கா

ணப்படுகின்றன. அப்படிப்போல் நீண்டகாலசுவப்நமென்று சொல்லப்படுகிற இந்தஜாக்கிரதாவஸ்தையிற் பெரிதானவிந்தஜகத்து மனதிற் தோற்றுகிறது. சுவப்நங்காணுகிற புருஷனுக்கு சுவப்நத்திற்காணப்பட்டப் பலவிதமாய்த் தோற்றிய வஸ்துக்கள் வாஸ்தவத்திலெப்படியில்லையோ அப்படி ஆத்துமாவுக்கு ஜகத்து முதலிய தோற்றங்கள் வாஸ்தவத்திலில்லை. சுவப்நத்திற்கண்ட ஜகத்தானது சுவற்பநிமிஷத்திற்குள் நசித்துப்போகிறது. ஜாக்கிரதாவஸ்தையிற் தோற்றுகிற ஜகத்தானது சிலகாலத்திற்குப் பிறகு நசித்துப்போகிறது. சுவப்நத்திற்கும் ஜாக்கிரத்திற்குங் காலவித்தியாஸந்தவிர வேறுபேதமில்லை. இம்மனதை யசைவற்றதாயடக்கின புருஷனுக்குசுவப்நமுமில்லை ஜாக்கிரத்துமில்லை. ஏனெனில், அவனுக்கு மனதில்லை யாகையினற்றான். இந்த அநுபவம் நாம் உலகத்திற் திநந்தோருங்கண்டிருக்கிறோம். சுஷுப்தியிலும் மூர்ச்சையிலும் யோகஸமாதியிலும் மனதடங்கிவிடுகிறதனல் ஜகத்துத் தோற்றவில்லை. ஏனெனில், மனோவியாபாரமில்லாததனலக்காலங்களில் ஜகத்து முதலியயாதொன்றும் தோற்றாமையினற்றான். ஆகையால், ஆத்துமாவின் ஸந்நிதியில் மனது அதன் வியாபாரத்தைச் செய்துகொண்டிருக்குமானல் ஜகத்து முதலியன ஆத்துமாவுக்குப் பிரமையினற் தோற்றும். மனோவியாபாரமில்லாவிட்டாற் தோற்றாது. ஆகையால், மனதே ஜகத்தென்று சொல்லப்பட்டது.

சிலர் ஜாக்கிரத்சுவப்நம் முதலியவைகளில் ஜகத்தைப் பலவிதமாய் ஆத்துமா பார்க்கிறானேயன்றி மனதல்லவென்பார்கள். ஸகலவிதமான தோற்றமு மாத்துமாவினுடையதேயென்னும்பக்ஷத்தில் சுஷுப்தியிலும் மூர்ச்சையிலும் யோகஸமாதியிலும் ஆத்துமாவுக்கு ஜகத்துத் தோற்றவேண்டும். அப்படிக் காணவில்லை. மனிதன் ஒரு விஷயத்தில் மனதை நிறுத்தியிருக்கிறகாலத்தில் மற்றயாதொருவிஷயங்களையும் அவனறிகிறதில்லை. ஏனெனில், மனது மற்றவிஷயங்களிற் செல்லாமையினற்றானென்பது நிச்சயம். ஆகையாற், சகலத்தையுமறிகிறது மனதென்றேசொல்லவேண்டும். மனிதனுக்கு சுகம், துக்கம், பொறாமை, அசூயை, பகை, வியஸநம், ஸந்தோஷம் முதலியவைகளெல்லாம் மனதைச்சேர்ந்ததாயிருக்கின்றனவேயன்றி ஆத்துமாவுக்கற்பமேனும் ஸம்பந்தமில்லை. இயற்கையாகவே (சுவபாவ

மாகவே) ஆத்துமாவுக்குச் சுகதுக்கம் முதலியனவில்லை. ஆத்துமாவுக்கு சுகதுக்காதிகளியற்கையானலதற்கு நாசமெப்போதுமுண்டாகமாட்டாது. அப்படியானல் ஆத்துமா எப்போதும் சுகதுக்கியாகவேயிருக்கவேண்டும். ஏனென்றால், சுவபாவம் நசித்து சுவரூபம்மட்டும் நிலைத்திராது. எப்படிப்போலெனில், கற்கண்டுக்குத் திதிப்பு இயற்கை. இயற்கையான திதிப்பு நாசமடையவேண்டுமானற் கற்கண்டுக்கே நாசமுண்டாகும். அதுபோல சுகதுக்காதிகள் ஆத்துமாவுக்கு சுவபாவமானல் சுகதுக்காதிகள் நசிக்கும்போது ஆத்துமாவும் நசித்துப்போகவேண்டும். அப்படிச் சொல்வதானலது சாஸ்திரவிரோதம். ஆத்துமா அழிவற்றதென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மற்றொருவிதமாயும் பார்ப்போம். ஒரேவிதமான துக்கமானது இருவருக்கு நேரிட்டபொழுது அதிலொருவன் நேரிட்ட அந்தத்துக்கத்தைக்குறித்து மிகவும் கலக்கமடைந்து மங்கிப்போகிறான். மற்றொருவன் அந்தத்துக்கத்தைப் பாராட்டாமலலக்ஷியமாய்க் காரியங்களைச் செய்கிறான். ஆத்துமாவுக்கு சுகதுக்கமியற்கையானலொருவன் துக்கப்படவும் மற்றொருவன் துக்கப்படாமலிருக்கவுங்காரணமில்லை. இதனற் துக்கசுகத்திற்கு வாஸனையோடுகூடின மனதே காரணமென்றுசொல்லவேண்டுமேயன்றி ஆத்துமா துக்கியுமல்ல சுகியுமல்ல. ஆகையால், மனதே ஜகத்தாகத்தோற்றுகிறதேயன்றி மனதைவிட ஜகத்து வேறல்ல. இந்த மனதை நாசஞ்செய்வதுதான் மோக்ஷமென்று வற்புறுத்துகிற அநேக வாக்கியங்கள் முன்னமையேயுனக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. பின்னுமுனக்கு எதைக்கேட்க விருப்பமிருக்கிறதோ அதைக் கேட்கலாம்.

பதினைந்தாவதுப் பிரகரணம்

முற்றிற்று.

# ஆரியமதசித்தாந்தஸங்கிரகம்.

## பதினாறாவது பிரகரணம்.

1. ஐயவிரதன்:—ஓ! தயாமூர்த்தியே! மோக்ஷமடைவதற்கு ஞானமே முக்கியஸாதநமானாற் கருமத்தினாலென்னப் பிரயோஜநம்? மோக்ஷத்திற்கு ஞானம் ஸாதநமாயும் ஞானத்திற்கு யோகம் ஸாதநமாயும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. கருமமானது பலனோடுகூடியதாயும் பந்தத்திற்கு ஹேதுவாயுமிருக்கிறது. அப்படிப்பட்ட கருமத்தைச் செய்யவேண்டிய அவசியமென்ன?

2. ஸூசர்ம்மா:—மோக்ஷத்திற்கு ஞானமெப்படி ஸாதநமோ அப்படியே ஞானத்திற்கு யோகம் ஸாதநம். அப்படிப்பட்ட யோகமடைவதற்குக் கருமயோகம், பக்தியோகம், முதலிய சில ஸாதநங்களுண்டு. அவைகளைக் கிரமமாய்ச் சொல்லுகிறேன் கேள். ஸகல கருமசுவரூபமான மனதே ஜகத்தாய்த்தோற்றுகிறதென்று முன்னமையே சொல்லப்பட்டதல்லவா. கருமமில்லாவிட்டால் ஜகத்துமில்லையென்றறி. முவ்வுலகத்திலுமுள்ள ஸகலப் பிராணிகளும் கருமங்களைச் செய்யாமலிருக்கமுடியாது. "नहि कश्चित्क्षणमपि जातुतिष्ठत्यकर्मकृत्—ஒருவனும் ஒருக்காலும் க்ஷணங்கூடக்கருமஞ்செய்யாமலிருக்கமாட்டான்." என்றுபகவானர்ஜுனனுக்குச்சொன்னார். அப்படியேமற்றசாஸ்திரங்களுஞ்சொல்லுகின்றன. சுஷுப்திகாலம் மூர்ச்சாகாலம் ஸமாதியிலிருக்குங்காலம்இவைகளிற் தவிர மற்றயெல்லாக்காலங்களிலும் கருமஞ்செய்யாமலே ஒருவனுமிருக்கமுடியாது. மனது, வாக்கு, காயம் இவைகள் கருமசுவரூபமாகவேயிருக்கின்றன. தேகம் வாக்கு இவைகளினாற் கருமங்களைச் செய்கிறதில்லையென்று ஒருவனிருந்தாலும் மனதானது கருமங்களைச் செய்துகொண்டேதானிருக்கும். அந்த மனதை யோகநிலையிலிருக்கிறவன் தவிர மற்றவனால் நிருத்தமுடியாது. இப்படிக் கருமஞ்செய்வதுப் பிராணிகளுக்கு இயற்கையாயிருக்கிறபடியால், மனிதன் செய்கிற கருமமானது அதைச் செய்கிறவனுக்குப் பிரயோஜநமாகும்பொருட்

டிச் சாஸ்திரங்கள் ஸத்கருமம் துஷ்கருமமென்று பிரித்து ஸத்கருமஞ்செய்கிறவன் புருஷார்த்தத்தையடைகிறானென்றும் துஷ்கருமஞ்செய்கிறவன் பாபசுவரூபமான பந்தத்தையடைகிறானென்றுஞ் சொல்லுகின்றன. இக்கருமமானது எவ்விதமாய்ச் செய்தால் யோகத்திற்கும் ஞானத்திற்கும் ஸாதநமாகிறதோ அதைக்குறித்துச் சற்றுச் சொல்லுகிறேன் கேள்.

3. சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்ட ஸத்கருமங்கள் செய்வதிலுங்கூட செய்கிறவனுடைய வெண்ணத்தையநுஸரித்துப் பிரயோஜநமுண்டாகிறது. அப்பிரயோஜநம் இருவகைப்படும். அதாவது—" ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत ।—சுவர்க்கமடையவேண்டுமென்கிற இச்சையுள்ளவன் ஜோதிஷ்டோமமென்கிற யாகத்தைச்செய்யவேண்டியது." "पुत्रकामः पुत्रेष्ट्या यजेत ।—புத்திரனையடையவேண்டுமென்கிற இச்சையுடையவன் புத்திரகாமேஷ்டியாகத்தைச் செய்யவேண்டியது." என்ற இப்படிப்பட்ட பலன்களைச் சொல்லுகிற வேதவாக்கியங்களை யாதாரமாய்க்கொண்டு அப்படிப்பட்டப் பிரயோஜநத்தையிச்சித்துச் செய்கிற கருமமானது ஸகாமகருமமென்று சொல்லப்படும். தான்செய்கிற நித்திய நைமித்திககருமங்களை அவைகளுக்குள்ள பலனை விரும்பாமற் செய்துபலனை ஈசுவரார்பணஞ்செய்வது நிஷ்காமகருமமாகிறது. இதுதான் கருமயோகமென்று சொல்லப்படுகிறது. இதனாற் சித்தசுத்தியுண்டாகிறது. அதாவது—தான் மோக்ஷமடையவேண்டுமென்கிறவெண்ணமும், தபசு யோகம் முதலிய மோக்ஷஸாதநத்திற் பிரவிருத்தியுமுண்டாகிறது. ஆகையினால், ஸகல கருமத்தையு மீசுவரார்பணபுத்தியாகவேசெய்கிறது மோக்ஷஸாதநமாகும். இதையுத்தேசித்தே பகவான் அர்ஜுநனுக்குச் சொல்லியிருக்கிறார். எப்படியெனில்—

பகவத்கீதை-அத்-கூ ல்,* "ஓ! குந்திபுத்திரா! எதைச் "(எப்படிப்பட்ட கருமத்தை) செய்தாலும் எந்த தபஸ் (சாந்தி "ராயணம் முதலிய விரதம்) செய்தாலும் அதை (அதன்பலனை) "யெனக்கர்பணமாகச் செய். இவ்விதமாய்க் கருமங்களை என் "னிடத்திலொப்பிவிப்பாயானாற் சுபாசுப பலன்களுக்கு ஹேது "வான கருமபந்தத்திலிருந்து விடுபட்டு யென்னையடைவாய்."

---

* " यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् यत्तपस्यसि कौन्तेय-तत्कुरुष्वमदर्पणम् ॥ २७ ॥ शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।

ஆகையாற், கருமபலன் தன்னைத்துடராமற் செய்துகொள்வது மோக்ஷஸாதநமாகிறது.

4. ஸகாமகருமத்தைச் சாஸ்திரங்கள் விதிக்கவேண்டியதென்னவென்றலோ, அக்கருமபலன்களை யநுபவிக்க சுவர்க்கம் முதலிய லோகங்களையடைந்தபுருஷன் அந்தப்புண்ணியபலன் அநுபவிக்கப்பட்டு முடிந்தவுடன், "क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।= புண்ணியம் நசித்தால் மனுஷியலோகத்தையடைகிறார்கள்" என்ற சுருதிவாக்கியப்படி மறுபடியும் மனிதஜந்மம் முதலியதை யடையவேண்டியதாயிருக்கிறதனாற் சுவர்க்காதிலோகசுகம் அற்பசுகமென்றெண்ணிப் பிந்திய ஜந்மத்திலாவது உத்தமசுகமான மோக்ஷமடைய முயற்சி செய்யட்டுமென்பதற்காகத்தான். ஒரே கருமமானது செய்கிறபுருஷனுடைய எண்ணத்தினால் மோக்ஷஹேதுவாகவுமாகிறது, பந்தஹேதுவாகவுமாகிறது. ஆகையாற், கருமஞ்செய்யாமலே விட்டுவிடக்கூடாது.

5. இதற்கடுத்தஸாதநம் ஹடயோகமாயிருக்கிறது. ஹடயோகமென்றால், விஷயங்களிற் பிரவிருத்தித்திருக்கிறமனதைப் பலவந்தமாயிழுத்துத் தனக்கிஷ்டமான ஒருவஸ்துவில் நிறுத்துவது. இந்த ஹடயோகமெட்டுவகையான ஸாதநங்களோடுகூடியது. அந்த விவரத்தை சுருதிமுதலிய பிரமாணங்களிற் காணலாம்.

வராஹோபநிஷத்-அத்-டு-ல், * "இலயமந்திரஹடயோகங் "கள் எட்டு அங்கத்தோடுகூடியது. யமம், நியமம், ஆஸநம், பிரா "ணயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, த்தியாநம், ஸமாதியென "எட்டுவிதங்கள். (அவைகளில்) யமமென்பது பத்துவகைப்ப "டும். பிறருக்குத் துன்பஞ்செய்யாமை, ஸத்தியம், களவாமை, "பிரும்மசரியம், தயை, நேர்மை, பொருமை, தைரியம், மிதமா "புண்ணல், சுத்தம் (தேகச்சுத்தம் மனச்சுத்தம்) என்பவைக "ளே. நியமம் பத்துவிதம்—தபஸ், ஸந்தோஷம், ஆஸ்திக்கி "யம் (பகவானொருவருண்டென்கிற நம்பிக்கை அல்ல துவேதத்

---

* लयमन्त्रहठायोगा योगोह्यष्टाङ्ग संयुतः । यमश्च नियमश्चैव तथाचासनमेव च । प्राणायामस्तथा पश्चात् प्रत्याहारस्तथापरम् । धारणा च तथाध्यानं समाधिश्चाष्टमो भवेत् । अहिंसा सत्यमस्तेयं ब्रह्मचर्यं दयार्जवम् । क्षमाधृतिर्मिताहार श्शौचं चेति यमा दश । तपस्सन्तोषमास्तिक्यं दानमीश्व-

"தில் நம்பிக்கை), தாநம், ஈசுவரபூஜை, சித்தாந்தசிரவணம்(மத
"ஸித்தாந்தத்தைக் கேட்பது), இலஜ்ஜை, நற்புத்தி, ஜபம், விர
"தம் என்பவைகளே. சக்கிரம் முதலிய பதினோராஸநங்களி
"ருக்கின்றன —சக்கிரம், பத்துமாஸநம், கூர்ம்மம், மயூரம், குக்
"குடம், வீராஸநம், சுவஸ்திகம், பத்திரம், சிம்மாஸநம், முக்தா
"ஸநம், கோமுகம் என்று யோகமறிந்தவர்களாற் சொல்லப்ப
"ட்டிருக்கிறது."

6. இம்மூன்று விதங்களைத்தவிர மற்ற ஐந்துவிதங்களுடைய சுவரூபங்களும் ஷ-உபநிஷத்-ஷ-அத்தியாயத்திலும் இப்படியே தரிசநோபநிஷத்து முதலிய அநேக உபநிஷத்துக்களிலும் பதஞ்சலிமஹரிஷி செய்திருக்கிற யோகசூத்திரங்களிலும் ஹடயோகதீபிகை யென்னுங்கிரந்தத்திலும் விஸ்தாரமாய்ச்சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை இவ்விடத்திற் பூர்ணமாய் யெடுத்துச் சொல்லுவதானல் மிகவளரும். ஆகையால், மற்ற ஐந்துவிதங்களுடைய சுவரூபத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். பூரகம் கும்பகம் ரேசகம் என மூன்றுவிதமான அப்பியாஸஞ்செய்துப் பிராணவாயுக்களையடக்குவதுப் பிராணயாமமெனப்படும். அடக்கப்பட்டப் பிராணதிவாயுக்களையும் மனதையும் அதத‌ன்தொழிலில் போகவொட்டாமல் அடிக்கடி இழுத்து நிருத்துவதுப் பிரத்தியாஹாரமெனப்படும். அப்படி நிருத்தப்பட்டவாயுக்கள் மனது இவைகளையசையவொட்டாமற் தடுப்பது தாரணையெனப்படும். தன் குருவினலுபதேசிக்கப்பட்ட உத்தமமான வஸ்துவை யெப்போதும் நினைப்பதுத் தியாநமெனப்படும். தியாநிக்கப்பட்ட வஸ்துவைத்தவிர இதரவஸ்து தோன்ருதநிலைமை ஸமாதியெனப்படும். இப்படிப்பட்டயோகத்தைச் செய்வது மிக்ககஷ்டஸாத்தியமாகையாலும் இந்த ஹடயோகத்திற்கு அநேக இடையூறுண்டாவது சுவபாவமாகையாலும் இந்த யோகத்தை ஞாநிகள் சிலாகிக்கிறதில்லை. மோக்ஷமடையுமிச்சையில்லாதவும் அணிமாதிசித்திகளையடைய விருப்ப

रपूजनम् । सिद्धान्त श्रवणंचैव ह्रीर्मतिश्चजपोव्रतम् । एते हि नियमाः प्रोक्ता दशैव महामते । एकादशासनानिस्यु श्चक्राद्यामुनिसत्तम । चक्रं पद्मासनं कूर्मं मयूरं कुक्कुटं तथा । वीरासनं स्वस्तिकञ्च भद्रं सिंहासनं तथा । मुक्तासनं गोमुखं च कीर्तितंयोगवित्तमैः ॥

முள்ளவும்மனிதர்களாலிந்தஹடயோகமானது அப்பியாஸஞ்செய்யப்படுகிறது. ஆனால் அணிமாதிசித்திகளை விரும்பாமல் மோக்ஷத்தையேவிரும்பி இந்த ஹடயோகத்தைச் செய்கிறவன் சீக்கிரத்தில் ஸித்தியையடையாமல் சில ஜன்மங்களுக்குப் பிறகு ஞானமடைந்து மோக்ஷமடையக்கூடும்.

7. இந்த ஹடயோகியானவன் பிரும்மா விஷ்ணு உருத்திரர் முதலிய மூர்த்திகளைத் தியானஞ்செய்கிறவனாகில், பிரும்மலோகம் வைகுண்டம் கைலாஸம் முதலிய சிரேஷ்டமான லோகங்களிலெதையாவதடைந்து அவ்விடத்திலாத்தும சுவரூபஞானத்தைப்பெற்று அந்தந்த மூர்த்திகளுடன் மகாப்பிரளயத்தில்மோக்ஷமடைவான். இது கிரமமுக்திமார்க்கமென்று அத்துவைதிகள் சொல்லுவார்கள்.

8. இதற்கடுத்தஸாதநம் பக்தியோகமென்று சொல்லப்படும். பக்தியோகமானது பலபிரிவுள்ளதாய்ச் சொல்லப்படுகிறது. பக்தியோகமும் மனது வாக்குக்காயங்களினாற் செய்யப்படத்தக்கதே. பக்தியோகலக்ஷணத்தைப் பத்துமபுராணஞ்சொல்லுகிறது. எப்படியெனில்—

பத்துமபுராணம்-பாதாளகண்டம்-அத்-அடு-ல், * "பக்தி "யானது, மனதுவாக்குக்காயங்களினாலுண்டானதாயும் இலௌ "கிகம் வைதிகம், அப்படியே ஆத்தியாத்துமிகமெனப் பலவித "மாயாகிறது. தியானம் தாரணை, இந்த புத்தியோடு வேதங்க "ளுடைய ஸ்மரணத்தினால்விஷ்ணுவுக்குப் பிரீதியையுண்டுசெய் "கிறதெதுவோ இது மனச்சம்பந்தமான பக்தியென்று சொல் "லப்படுகிறது. இரவும்பகலுமிளப்பன்றி வேதமந்திரங்களையு "ச்சரிப்பதனாலும் ஆரண்ணியகமென்கிற வேதபாகத்தினுடைய "ஜபத்தினாலுமுண்டாகிற பக்தியானது வாக்குனாற் செய்யப்படு "கிற பக்தியென்று சொல்லப்படுகிறது. விரதம், உபவாஸம், "நியமம் இவைகளாலும், ஐந்து (ஞான) இந்திரியங்களையடக்

---

* विविधाभक्तिरुद्दिष्टा मनोवाक्कायसम्भवा । लौकिकीवैदिकीचापि भवेदाध्यात्मिकी तथा ॥ ४ ॥ ध्यानधारणयाबुध्या वेदानां स्मरणेन च । विष्णुप्रीतिकरीचैषा मानसी भक्तिरुच्यते ॥ ५ ॥ वेदमन्त्रसमुच्चारै रविश्रान्तं दिवानिशम् । जपैश्चाऽऽरण्यकैश्चैव वाचिकी भक्तिरिष्यते ॥ ६ ॥ व्रतोपवासनियमैः पञ्चेन्द्रियजयेन च । कायिकीभक्तिरुद्दिष्टा सर्वसिद्धिविधायि-

"குவதனாலும், ஸகலப்பிரயோஜநத்தையுங் கொடுக்கிறதாகிய "தேகத்தினாற் செய்யப்படுகிற பக்தியென்று சொல்லப்பட் "டிருக்கிறது. அர்க்கியம் பாத்தியம் முதலிய உபசாரங்களினா "லும், ஆடல், பாடல், வாத்தியகோஷங்கள் இவைகளாலும், "நைவேத்தியவஸ்துக்களாலுமுபசரிப்பது, இரவிலுங்கூடக்கண் "விழித்துப் பூஜைசெய்வது இவைகளாலுமுண்டாகிற பக்தியா "னது இலௌகிகமென்று சொல்லப்படுகிறது. இருக்கு, யஜு "ஸ், ஸாமவேதங்களுடைய மந்திரஜபங்களாலும் (வேத) ஸம் "ஹிதாத்தியயநம்முதலியவைகளாலும், ஹவிஸைஹோமஞ்செய் "கிறக் கிரியைகளினாலுஞ்செய்கிற பக்தியெதுவோ அது வைதி "கபக்தியாகிறது."

9. ஷை வாக்கியங்களில் ஆத்தியாத்துமிக பக்தியுஞ்சொல்லியிருக்கிறது. அதை இவ்விடத்தில் விவரிக்கவில்லை. ஏனெனில், அந்த பக்தியின் சுவரூபமானது இந்த அத்தியாயத்தில் மிகவும் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியாலதைச் சுருக்கி இவ்விடத்திற்சொல்லுகிறதே போதுமானதாயிருக்கிறது. ஸாங்கியர்களாலறியப்படுகிற பிர்ம்மதத்துவம் பிரகிருதிதத்துவம் ஜீவதத்துவம் முதலியவைகளுடைய சுவரூபவிசாரமும் யோகத்தினாற் சிவவிஷ்ணுக்களுடைய சுவரூபத்தியாநமும் ஆத்தியாத்துமிக பக்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது.

10. இந்தப் புராணவாக்கியங்களை யநுஸரித்தே யுலகத்திலநுஷ்டாநமுமிருக்கிறதெப்படியென்றால், பிரும்மா, விஷ்ணு, உருத்திரர் முதலிய மூர்த்திகளிலெந்த மூர்த்தியினிடத்திற் றனக்கு விசுவாஸமும்நம்பிக்கையும்மஹிமையுமுண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்டமூர்த்தியினுடைய சுவரூபலக்ஷணமிப்படிப்பட்டதென சாஸ்திரங்களினாலோ குருபதேசத்தினாலோவறிந்து அந்தசுவரூபத்தை மனதினாற் தியாநிக்கிறது, அந்த சுவரூபத்தை மனதினால் நினைத்துப் பிரீதியுடன் ஸ்தோத்திரஞ்செய்வது, அந்த ரூபத்தை நினைத்து ஆநந்தப்பரவசனாய் ஆநந்தபாஷ்பத்தோடு கூத்தாடுவது, சம்பாஷணைசெய்வது, முதலியசெய்கைகள் பக்தி

---

नी ॥ ७ ॥ पाद्यार्घ्याद्युपचारैश्च नृत्तवादित्रगीतकैः । बलिभिर्जागरार्चाभि र्लौकिकीभक्तिरीरिता ॥ ८ ॥ ऋग्यजुस्सामजप्यैश्च संहिताध्ययनादिभिः । हविर्होमक्रियाभिश्च याभक्तिस्सातुवैदिकी ॥ ९ ॥

யோகமென்று சொல்லப்படும். இந்த பக்தியோகத்திற் றேறி னபக்தன், தான் யாரிடத்திற் பக்திசெய்தானோ அந்த மூர்த்தி யினிடத்திலேயே நிலையாய் மனதை நிருத்துவானாகிலவன் ஞாந யோகாதிகாரியாவன்.

11. இதற்குமேற்பட்டஸாதநம், இராஜயோகம், அல்லது ஞாநயோகம், அல்லது ஸாங்கியயோகம் என்று சொல்லப்படும். இந்தஞாநயோகஸமாதியை யடைந்த மஹாத்துமாவெவனோ அவ ன்தான் ஜீவன் முக்தன். இப்படிப்பட்ட யோகமன்றி ஞாநமு ண்டாகிறதில்லை யாகையாலிதுஞாநயோகமென்று சொல்லப்பட் டது. யோகமன்றி ஞாநம் சித்திக்கமாட்டாது. ஏனென்றால், யோகத்தினாலேயே மனோநாசமுண்டாகவேண்டும். யோகமன்றி மனோநாசமுண்டாகாது. மனோநாசத்தினால் ஜீவன்முக்திதசை யாகிய ஞாநயோகமாகிறது. யோகத்திற்கோ, ஞாநமவசியமா யிருக்கிறது. ஆனாலிந்த ஞாநமோ ஜீவன் முக்தனாயிருந்துகொ ண்டுதன்னைபிர்ம்மமாகவும் தன்னைத்தவிர இரண்டாவதுவஸ்து வே யில்லாததாகவுமறிகிற ஞாநமல்ல. ஆனால், சாஸ்திரங்களி னாலும் குருபதேசத்தினாலும் பிர்ம்மசுவரூபத்தையும் தன்சுவரூ பத்தையும்விசாரித்தறிவதே. இந்தவிசாரத்தினால் ஜீவேசுவரஜக த்து, பிர்ம்மத்திற்கந்நியமாயில்லை யென்று அறிவது முதலியசா ஸ்திரஞாநந்தான். இந்தஞாநத்தினாற்றான் யோகமடையப்படுகி றது. இந்தஅபிப்பிராயத்தைக்கொண்டுதான் "ஞாநமின்றி யோ கமில்லை, யோகமின்றி ஞாநமில்லை" என்றுசுருதிசொல்லுகிறது.

யோகசிகோபநிஷத்-அத் க-ல், * "ஆகையினாற் (காமக்கு "ரோத லோப மோகம் முதலிய) தோஷங்களிலிருந்து விடுபடு "வதற்குபாயம் ஞாநமொன்றென்று சிலர் சொல்லுகிறார்கள். அந்தஞாநமொன்றுமாத்திரமே சித்தியின்பொருட்டாகிறதில்லை. "ஓ! பிரும்மாவே! இவ்வுலகத்தில் யோகமின்றி ஞாநமாத்திர "மே மோக்ஷத்தைக் கொடுக்கிறதாகவெப்படியாகும்? மோக்ஷ "ஸாதநமான ஞாநமின்றி யோகமானது மோக்ஷத்தைக் கொடு "க்குங்காரியத்திற் சக்தியுள்ளதாகவாகிறதில்லை. ஆகையால், "மோக்ஷமடையவிச்சையுள்ளவன்ஞாநத்தையும்யோகத்தையுமு

* तस्माद्दोषविनाशार्थ मुपायं कथयामिते । ज्ञानं केचिद्वदन्त्यत्र केवलं तन्नसिद्धये । योगहीनं कथंज्ञानं मोक्षदं भवतीहभो । योगोपिज्ञानहीनस्तु न क्षमोमोक्षकर्मणि । तस्मात् ज्ञानं च योगं च मुमुक्षुर्दृढमभ्यसेत् ।

"றுதியாயப்பியாஸஞ் செய்யவேண்டியது. அறியத்தக்கவஸ்துவெ
"துவோ அது (ஆத்துமா)ஞானமே சுவரூபமாயுடையது.(ஆனதா
"ல்) ஞானமொன்றே (மோக்ஷத்திற்கு) முக்கியஸாதநம். மோக்ஷ
"மடையவிருப்பமுள்ளவனால்,அக்ஞானமானதெப்படிப்பட்டதெ
"ன்று நன்றாய்விசாரித்தறியத்தக்கது. எவனாலேவாஸ்தவமான
"ஆத்துமசுவரூபமறியப்பட்டதோ (அதுவே) கைவல்லியமாகிய
"பரமபதம். காமம், கோபம், பயம்முதலிய தோஷங்களினாற்
"சூழப்பட்டவனாயிருக்கிற இந்தஜீவனானவனிப்படிப்பட்டஸகல
"தோஷங்களிலிருந்தும் நன்றாய் விடுபட்டவனாய் ஞானத்தினாலெ
"ப்படி மோக்ஷமடைகிறான்? (ஈசுவரர் சொல்வது) தன்னாத்தும
"சுவரூபமெதுவோ அதுபூர்ணமானஞானசுவரூபமே.எப்படிஞான
"சுவரூபமோ அப்படி யெங்கும் வியாபித்த சுவரூபமாயிருக்கி
"றது. (ஆத்தும)சுவரூபத்தைக் காட்டிலுங் காமக்குரோதம்
"முதலியதோஷங்களுக்கு வேறாகசுவரூபமில்லை."

இந்தசுருதி ஆத்துமசுவரூபம், ஞானம், யோகம், முதலிய வைகளைப் பற்றித் தெளிவாய்ச் சொல்லுகிறது. ஞானந்தான் மோக்ஷத்திற்கு நேரானஸாதநமாயிருக்கிறது.

12. ஜயவிரதன்—ஓ! ஞானமூர்த்தியே! இந்தஞானயோகத்தை யடைகிறதற்கு உபாயத்தைச்சொல்லவேண்டுமென்றுப்பி ரார்த்திக்கிறேன்.

13. ஸுசர்ம்மா—ஓ! ஸத்புத்திரா! ஞானயோகத்தையடைவதற்கு மநோநாசமே முக்கியகாரணமென்று முன்குறித்துக் காட்டியிருக்கிற அநேகவாக்கியங்கள் வற்புறுத்துகின்றன. மனதை விஷயங்களிலிருந்து திருப்பித் தனக்குப் பிரியமுள்ள ஒரு வஸ்துவினிடத்தில் நிருத்துவதுதான் உபாயமென்றுஞ்சொல்லி யிருக்கிறேன். அதை விவரித்திவ்விடத்திற் சொல்லுகிறேன். ஸ்ரீகிருஷ்ணபகவானை அர்ஜுநன் இந்தமனதை நிருத்து முபாயத்தைக்கேட்டபொழுது பகவான் அதற்குத்தரஞ் சொல்லியிருக்கிறார். எப்படியெனில்,

---

ज्ञानस्वरूपमेवादौ ज्ञेयंज्ञानैकसाधनम् । अज्ञानं कीदृशं चेति प्रविचार्यं मुमुक्षुणा । ज्ञातं येन निजं रूपं कैवल्यं परमंपदम् । असौदोषैर्विनिर्मुक्तः कामक्रोधभयादिभिः । सर्वद्दोषैर्वृतोजीवः कथं ज्ञानेन मुच्यते । स्वात्मरूपं यथाज्ञानं पूर्णतद्व्यापकं तथा । कामक्रोधादिदोषाणां स्वरूपान्नास्तिभिन्नता ॥

ஸ்ரீபகவத்கிதை-அத்-சூ-ல், * "அர்ஜுநன் சொல்வது—
"ஓ! மதுசூதநா! ஸமமாயறிவதாகிய (ஸகலமும் பிர்ம்மசுவரூப
"மாய்ப் பார்ப்பதாகிய) யாதொரு யோகமானது சொல்லப்பட்
"டதோ அந்தயோகத்தினுடைய ஸ்திரமான இருப்பை, மனது
"சஞ்சலமுள்ளதாகையால் நான்தெரிந்துகொள்ளவில்லை. ஓ!
"கிருஷ்ணு! மனதானது சுவபாவமாகவே சஞ்சலமுள்ளதாக
"வும் விஷயங்களிலுறுதியாய்ப்பற்றினதாகவுமிருக்கிறது. அந்த
"மனதினுடைய அடக்குதலை, க்காற்றைப்(பிடித்துக்கரகத்தில
"டைப்பது)போல மிகவும் அசாத்தியமாக நானெண்ணுகிறேன்.
"ஸ்ரீபகவான் சொல்வது—ஓ! அர்ஜுநா! மனது அடக்குவதற்
"கு மிகவும் பிரயாஸமானதென்பதிலுஞ் சஞ்சலமுள்ளதென்ப
"திலும் ஸந்தேகமில்லை. அப்படியிருந்தாலும் பழக்கத்தினு
"லேயும் விஷயங்களில் வைராக்கியமடைவதனுலேயும் மனது
"அடக்கப்படுகிறது. அடக்கப்படாத மனதையுடையவனுலே
"யோகமானது அடையக்கூடியதல்லவென்பது யென்னுடைய
"நிச்சய அடக்கப்பட்டமனதையுடையவனுய் முயற்சி செய்
"பவனுலே அப்பியாஸம் வைராக்கியமிந்த உபாயங்களினுலடக்
"கிறதற்கு ஸாத்தியமானது."

14. ஓ! ஜயவிரதா! ஞாநயோகத்தையடைய இச்சையுள்ளபுருஷனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோற்றெளிவாய்ப்போதிக்கிறதும் மனசுவரூபம் அதையடக்குமுபாயம் மனதையடக்குவதனுலடையப்படும்பிரயோஜநம்யோகாப்பியாஸஞ்செய்யுங்கிரமம் முதலிய ஸாதநங்களை விளக்கிறதும் ஸ்ரீஇராமமூர்த்தியினுல் ஹநுமாருக்குபதேசிக்கப்பட்டதுமாகிய முக்திகோபநிஷத்துவாக்கியங்களிற் சிலதையுனக்குச் சொல்லுகிறேன். இந்த உபநிஷத்துவாக்கியங்களை நன்றாய் கிரஹித்துஅதன்படி யோகத்

---

* अर्जुन उवाच । योयं योगस्त्वयाप्रोक्त स्साम्येन मधुसूदन । एतस्याहं नपश्यामि चञ्चलत्वात् स्थितिंस्थिराम् ॥ ३३ ॥ चञ्चलंहिं मनः कृष्ण प्रमाथिबलवद्दृढम् । तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ३४॥ श्रीभगवानुवाच । असंशयं महाबाहो मनोदुर्निग्रहंचलम् । अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥ ३५ ॥ असं यतात्मनायोगो दुष्प्राप इति मे मतिः । वश्यात्मना तु यतताशक्योऽवाप्तुमुपायतः ॥ ३६ ॥

தில் முயற்சிசெய்கிறவனெவனோ அவன் இந்த ஜந்மத்திலேயே முக்தியடைவானென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், நீ கவனமாய்க்கேட்டு அதிற்சொல்லியபடி யநுஷ்டிக்கக்கடவாய். அதாவது—

முக்திகோபநிஷத்-அத்-உ-ல், * "பின்பு ஹநுமாரானவர் "ஸ்ரீஇராமசந்திரரைநோக்கி இந்த ஜீவன்முக்தியாவதென்ன ? "விதேகமுக்தியாவதென்ன ? இவ்விஷயத்திற்குப் பிரமாண "மேது ? அந்தச் சித்தி (பிரயோஜநம்) எப்படிப்பட்டது. அந் "தச்சித்தியினாலென்னப் பிரயோஜநம் ? என்றுகேட்டார். அத "ற்கு ஸ்ரீஇராமர் சொல்லுகிறார்.

"(முதலாவது கேழ்விக்குத்தரம்)—கர்த்திருத்துவம் போ "க்த்திருத்துவம் (நான்செய்கிறேன்,நானநுபவிக்கிறேனென்கிற "அபிமாநம்) சுகந்துக்கம் முதலிய இலக்ஷணமுள்ள சித்தத்தி "னுடைய கருமமானது துக்கரூபமாயிருக்கிறதனாலே (அது) "மநுஷியனுக்குப்பந்தமாகிறது. அதனுடைய அடக்குதலே "ஜீவன்முக்தி.

"(இரண்டாவது கேழ்விக்குத்தரம்) உபாதிநிவிருத்தியான "கடாகாசம்போற் பிராரப்தம் (கருமம்) நசிக்கிறதனால் விதேக "முக்தி.

"(மூன்றாவது கேழ்விக்குத்தரம்) ஜீவன்முக்தி விதேகமு "க்தி இவைகளுக்கு நூற்றெட்டுபநிஷத்துக்களே பிரமாணம்.

"(நான்கு ஐந்து, கேழ்விகளுக்குத்தரம்) கர்த்திருத்துவாதி "துக்கநிவிருத்திமூலமாய் நித்தியாநந்தப்பிராப்தியேப் பிரயோஜ "நம். அதானது—புருஷப்பிரயத்நத்தினாலே ஸாதிக்கப்பட "வேண்டியது. புத்திரகாமேஷ்டியாகத்தினாற் புத்திரனையும் வி

---

* अथहैनं श्रीरामचन्द्रं मारुतिः पप्रच्छ । केयं जीवन्मुक्तिः केयं विदेहमुक्तिः । किंवा तत्र प्रमाणं कथं वा तत् सिद्धिः सिध्या वा किं प्रयोजनमिति । —— सहोवाच श्रीरामः । पुरुषस्य कर्तृत्वभोक्तृत्व सुखदुःखादिलक्षणश्चित्तधर्मः क्लेशरूपत्वात् बन्धो भवति । तन्निरोधनं जीवन्मुक्तिः । उपाधिविनिर्मुक्तघटाकाशवत् प्रारब्धक्षयाद्विदेहमुक्तिः । जीवन्मुक्तिविदेहमुक्त्योरष्टोत्तरशतोपनिषदः प्रमाणम् । कर्तृत्वादिदुःखनिवृत्तिद्वारानित्यानन्दप्राप्तिः प्रयोजनं भवति । तत्पुरुषप्रयत्नसाध्यो भवति । यथा पुत्रकामेष्टिना

"யாபாரம் முதலியவைகளினூற் திரவ்வியத்தையும் ஜியோதிஷ்
"டோமத்தினூற் சுவர்க்கத்தையுமடைவதெப்படியோ அப்படி
"ப்புருஷப் பிரயத்தநத்தினூற் சாத்தியமானதாகியவேதாந்தசிர
"வணுதிகளாலுண்டான ஸமாதியினுல் ஜீவன்முக்தி முதலியலா
"பமுண்டாகிறது. அந்த லாபமானது ஸகலமான வாஸனை
"நாசமாவதனுலுண்டாகவேண்டும். இந்த விஷயத்திற் சுலோ
"கங்களிருக்கின்றது. " புருஷப்பிரயத்நமானது சாஸ்திரத்
"தை மீரினது, சாஸ்திராநுஸாரமானதென இரண்டுவகைப்ப
"டும். சாஸ்திரத்தை மீரினது அநர்த்தத்தின்பொருட்டும் சா
"ஸ்திரத்தையநுஸரித்தது பரமார்த்தத் (மோக்ஷ) தின்பொருட்
"டுமாகிறது." இந்தஜந்துக்களுக்குலகவாஸனை சாஸ்திரவா
"ஸனை தேகவாஸனை இவைகளாலுண்மையான ஞாநமுண்டாகி
"றதில்லை. வாஸனையானது, சுபவாஸனை அசுபவாஸனையென
"விரண்டுவகைப்படும். நீ சுத்த(சுப) வாஸனையினுல் நடத்தப்
"பட்டாலதனுலே நீ கிரமக்கிரமமாய்ச் சீக்கிரத்திலென்னுடைய
"பதத்தையடைவாய். அப்படியில்லாமற் பழமையான (வெகு
"ஜந்மங்களிற் சம்பாதிக்கப்பட்டதாகிய) அசுபவாஸனையானது
"ஸங்கடத்திலுன்னைச்சேர்த்தால் ஓ! கபியே! பிரயத்நத்தினு
"லதுன்னுல் ஜயிக்கப்படவேண்டியது. சுபாசுபங்களாகிற மா
"ர்க்கங்களிலே பெருகுகிற விஷயவாஸனையாகிற நதியானது
"புருஷப்பிரயத்நத்தினூற்சுபமார்க்கத்திற்சேர்க்கப்படவேண்
"டியது. அசுபங்களிலிருக்கிறதைச் சுபங்களிற் திருப்பவேண்டி

---

पुत्रं वाणिज्यादिना वित्तं ज्योतिष्टोमेन स्वर्गं तथा पुरुषप्रयत्नसाध्य वेदान्त-श्रवणादिजनितसमाधिना जीवन्मुक्त्यादिलाभो भवति । सर्ववासनाक्षयात्तल्लाभः । अत्र श्लोकाः । उच्छास्त्रं शास्त्रितं चेति पौरुषं द्विविधंस्मृतम् । तत्रोच्छास्त्रमनर्थाय परमार्थाय शास्त्रितम् । लोकवासनयाजन्तो श्शास्त्रवासनयापि च । देहवासनयाज्ञानं यथा तन्नैवजायते । द्विविधोवासनांव्यूह श्शुभश्चैवाशुभश्चते । वासनौघेन शुद्धेन तत्रचेदनुनीयसे । तत्क्रमेणाशुतेनैव मामकं पदमाप्नुहि । अथचेदशुभोभाव स्त्वांयोजयति सङ्कटे । प्राक्तनस्तदसौयत्ना ज्जेतव्योभवताकपे । शुभाशुभाभ्यां मार्गाभ्यां वहन्ती वासनासरित् । पौरुषेण प्रयत्नेन योजनीया शुभेपथि । अशुभेषु समाविष्टं शुभेष्वेवावतार-

"யது. அசுபத்திலிருந்தசைப்பிக்கப்பட்டது சுபத்தையடைகி
"றது. அதிலிருந்து (சுபத்திலிருந்தசைப்பிக்கப்பட்டது) அசு
"பத்தையடைகிறது. புருஷப்பிரயத்நத்தினாற் சித்தமாகிற
"குழந்தையை லாலநை (சீராட்டல்) செய்யவேண்டியது. ஓ!
"சத்துருக்களைவதைக்கிறவனே! அப்பியாஸத்தினாலே இரண்டு
"(சுபாசுப) வாஸநையும் நன்றாயுனக்கெப்போதுபோய்விடுகிற
"தோ அப்போதப்பியாஸத்தினுடையப்பிரயோஜநத்தையறிவாய்
"(சுபாசுபவாஸநை போய்விட்டதோ இல்லையோவென்கிற) ஸந்
"தேகமுண்டானவிடத்திற் சுபவாஸநையையே நன்றாயாசரிக்க
"வேண்டும். ஓ! வாயுபுத்திரா! சுபவாஸநை விருத்தியாவதிற்
"தோஷமொன்றுமில்லை. ஓ! மஹாபுத்திமானே! சேர்க்கை
"யாய் வெகுகாலமப்பியாஸஞ்செய்யப்பட்ட வாஸநாநாசமும் வி
"க்ஞாநமும் (பகுத்தறிவு), மனோநாசமும் பலனைக்கொடுக்கின்
"றனவாக வெண்ணப்பட்டிருக்கின்றன. இம்மூன்றுமெதுவரை
"யிலடிக்கடிச் சமமாயப்பியாஸஞ்செய்யப்படவில்லையோ அதுவ
"ரையில் நூறுவருஷமானாலும் (உத்தம) பதப்பிராப்தியுண்டா
"கிறதில்லை. இவைகளொவ்வொன்றாய் வெகுகாலமப்பியாசஞ்
"செய்யப்பட்டாலுஞ் சிதறிப்போனமந்திரம்போற் பலசித்தியை
"க்கொடுக்கமாட்டா. வெகுகாலமப்பியாஸஞ் செய்யப்பட்டவி
"ந்த (வாஸநாக்ஷயம் விக்ஞாநம் மனோநாசம்) மூன்றுகளினாலே
"கெட்டியான ஹிருதயக்கிரந்திகள், தாமரைத்தண்டுகளையொடி
"த்தாலவைகளிலுள்ள நூற்களறுந்துபோவதுபோல ஸந்தேக
"மன்றியில் நசித்துப்போகின்றன. நூறுஜந்மங்களிலப்பியாஸஞ்

---

येत् । अशुभाच्चालितं याति शुभं तस्मादपीतरत् । पौरुषेण प्रयत्नेन लालयेच्चित्तबालकम् । द्रागभ्यासवशाद्याति यदा ते वासनाद्वयम् । तदाभ्यासस्य साफल्यं विद्धित्वमरिमर्दन । सन्दिग्धायामपिभृशं शुभामेव समाचरेत् । शुभायां वासनावृद्धौ न दोषायमरुत्सुत । वासनाक्षय विज्ञान मनोनाशामहामते । समकालं चिराभ्यस्ता भवन्ति फलदामताः । त्रयमेतत्समं यावन्नाभ्यस्तं च पुनःपुनः । तावन्नपदसंप्राप्ति र्भवत्यपि समाशतैः । एकैकशोनिषेव्यन्ते यद्येते चिरमप्यलम् । तन्नसिद्धिं प्रयच्छन्ति मन्त्रास्सङ्कीर्णिता इव । त्रिभिरेतैश्चिराभ्यस्तै र्हृदयग्रन्थयोदृढाः । निश्शङ्कमेव त्रुट्यन्ति बिसच्छेदाद्गुणा इव । जन्मान्तरशताभ्यस्ता मिथ्यासंसारवासना । सा चिराभ्यासयोगे-

"செய்யப்பட்ட பொய்யான ஸம்ஸாரவாஸனையானது வெகுகால
"யோகாப்பியாஸத்தினலேயன்றி யெவ்வளவும் நசிக்கிறதில்லை.
"ஆகையினலே ஓ! ஸௌம்மியா! விவேகமுள்ள புருஷப்பிரய
"த்தநத்தினற் போகேச்சையைத் தூரத்தள்ளி இம்மூன்றையே
"யாசிரயஞ்செய். ஆகையினலே, வாஸனையுடன் கூடினமனது
"பந்தமானதென்று ஞானிகளறிகிருர்கள். வாஸனையிலிருந்து
"விடுபட்டமனதானது முக்தம் (மோக்ஷம்) என்று சொல்லப்ப
"டுகிறது. ஓ! மஹாகபியே! வாஸனையற்ற மனதின் சுவபாவ
"த்தைச் சீக்கிரமாகவாசரி. நன்ருய் யோசனை செய்வதனலே
"யும் ஸத்தியத்தினலேயும் வாஸனையானது லயமடைகிறது. வா
"ஸனை லயமடைந்தாற் தீபத்தைப்போல் (எண்ணெயில்லாத தீ
"பம்போல்) மனதடங்கிப்போகிறது. வாஸனையைத்தள்ளி யெ
"ன்னுடைய சிந்மாத்திரசுவரூபத்தில், வியாகுலமில்லாத மன
"தையுடையவனயிருக்கிறவனெவனே அவன் ஸச்சிதாநந்தசுவ
"ரூபியான நானே. ஹிருதயத்திலாசையற்றிருக்கிறவன் ஸமா
"தியையுங் கருமத்தையுஞ் செய்தாலுஞ் செய்யாவிட்டாலும்,
"உத்தமமான சித்தமுடைய அப்படிப்பட்டவன் முக்தனே. எவ
"னுடைய மனதானது வாஸனையற்றதாகவாகிறதோ அவனுக்கு
"த்தியாநத்தினலாவது ஜபத்தினலாவது கருமத்தைவிட்டதன
"லாவது கருமத்தைச்செய்வதனலாவதுப் பிரயோஜநமில்லை.
'செவ்வையாய் வாஸனையைவிடுவதனலேயும் மௌநத்தினலேயு
"மன்றி உத்தமபதங்கிடைக்கமாட்டாது. (மனது) வாஸனைய

न विना न क्षीयते क्वचित् । तस्मात् सौम्यप्रयत्नेन पौरुषेण विवेकिना । भोगेच्छां दूरतस्त्यक्त्वा त्रयमेवसमाश्रय । तस्माद्वासनयायुक्तं मनोबन्धं विदुर्बुधाः । सम्यग्वासनयात्यक्तं मुक्तमित्यभिधीयते । मनोनिर्वासनीभाव माचराशुमहाकपे । सम्यगालोकनात्सत्या द्वासनाप्रविलीयते । वासनाविलयेचेत श्शममायाति दीपवत् । वासनां संपरित्यज्य मयि चिन्मात्र विग्रहे । यस्तिष्ठति गतव्यग्रः सोहं सच्चित्सुखात्मकः । समाधिमथकर्माणि माकरोतु करोतु वा । हृदयेनात्त सर्वेहो मुक्तएवोत्तमाशयः । नैष्कर्म्येण नतस्यार्थस्तस्यार्थोस्ति न कर्मभिः । न समाधानजाप्याभ्यां यस्य निर्वासनं मनः । संत्यक्तवासनान्मौना दृतेनास्त्युत्तमं पदम् । वासनाहीनमप्येत चक्षुरादीन्द्रि-

"ற்றிருந்தாலுங் கண்முதலிய இந்திரியம் தன்னுடையவிஷயத்தி
"லப்பியாஸகாரணத்தினாலேயே வெளியிற் பிரவிருத்திக்கிறது.
"பிரயத்தினமன்றியிலடையப்பட்டிருக்கிற வஸ்துக்களிலே கண்
"ணானது ஆசையன்றி யெப்படிப்பிரவேசிக்கிறதோ, அப்படிப்
"போற் தைரியமுள்ள புத்தியுடையவன் காரியங்களிலாசையன்
"றிப் பிரவேசிக்கிறான். ஓ! மாருதே! வஸ்து ஞானத்தினாலே
"வெளிப்படுத்தப்பட்டதாயும் அதை (வஸ்துவை) யநுஸரித்ததா
"யும் சித்தத்தினுடைய உற்பத்திக்குக் காரணமாயுமிருக்கிறதெ
"துவோ அது வாஸனையென்று முனிகளறிகிறார்கள். மிகவுஞ்
"சஞ்சலமான சித்தமானது திருடமாயப்பியாஸஞ்செய்யப்பட்ட
"வஸ்துக்களுடைய பாவனையினாலே பிறப்பு மூப்பு மரணம் இ
"வைகளுக்குக்காரணமாயிருக்கிறது. பீஜாங்குரந்யாயத்தைப்
"போலவாஸனையினுடைய அதீநத்தினாற் பிராணஸ்பந்தமு(பிரா
"ணவாயுக்களுடைய அசைவு) ம் அதனால் வாஸனையும் சித்த
"த்திற்கு விதையாயிருக்கிறது. சித்தமாகிற விருக்ஷத்திற்குப்
"பிராணஸ்பந்தம், வாஸனை யெனவிரண்டு விதைகள். இவ்விரண்
"டிலொன்று நசித்தாலிவ்விரண்டும் நசித்துப்போகிறது. (சித்த
"மானது விஷயங்களிற்) பற்றுதலன்றிப் பிரவிருத்திக்கிறதனா
"லேயும் பிரபஞ்சத்தோற்றமற்றுப் போவதனாலேயும் சரீரம்
"நசிக்கத்தக்கதென்றறிகிறதனாலேயும் வாஸனைப் பிரவிருத்திக்
"கிறதில்லை. வாஸனையைச்செவ்வையாய்த்தள்ளிவிடுவதனாலே
"சித்தமானது அசித்தமாகிறது (சித்தவியாபாரமடங்கிப்போகி

---

यं स्वतः । प्रवर्तन्ते बहिस्स्वार्थे वासनामात्र कारणम् । अयत्नोपनतेष्व क्षिः दृग्द्रव्येषु यथा पुनः । नीरागमेव पतति तद्वत्कार्येषु धीरधीः । भावसंवित् प्रकटिता मनुरूपाञ्च मारुते । चित्तस्योत्पत्त्यु परमं वासनां मुनयो विदुः । दृढाभ्यस्त पदार्थैकभावना रतिचंचलम् । चित्तं संजायते जन्म जरामरण-कारणम् । वासनावशतः प्राणस्पन्दस्तेन च वासना । क्रियते चित्तबीजस्य तेन बीजांकुरक्रमः । द्वे बीजे चित्तवृक्षस्य प्राणस्पन्द न वासने । एकस्मिंश्च तयोः क्षीणे क्षिप्रं द्वे अपि नश्यतः । असङ्गव्यवहारत्वात् भवभावन व-र्जनात् । शरीरनाशदर्शित्वाद्वासना नप्रवर्तते । वासनासंपरित्यागा च्चित्तं ग-च्छत्यचित्तताम् । अवासनत्वात्सततं यदा नमनुते मनः । अमनस्ता तदो-

"றது). வாஸனையற்றிருக்கிறதனாலே மனதானதெப்போது நி
"னைக்கிறதில்லையோ அப்போது மஹாஉபசமத்தைக் (அடங்கு
"தலை) கொடுக்கிற மனதில்லாமையுண்டாகிறது. எதுவரையில்
"விவேகமில்லாத மனதையுடையவனும் பரமாத்துமாவையறி
"யாதவனுமிருக்கிறுயோ அதுவரையிற் குருவினாலேயுஞ் சாஸ்
"திரப் பிரமாணங்களினாலேயும் நிச்சயிக்கப்பட்டிருக்கிற விதி
"யையநுஸரி. பிறகு எரிக்கப்பட்ட பாபமுடையவனும் வஸ்
"து தத்துவத்தையறிந்தவனும் பந்தமற்றவனுமிருக்கிற வுன்
"னாலே இந்தச் சுபமான வாஸநாகூட்டங்களுங்கூடத் தள்ளிவி
"டத்தக்கது. சித்தநாசமானது ஸரூபம் (உருவத்தோடுகூடிய
"து) அரூபம் (உருவமற்றது) என இருவகைப்படும். ஸரூப
"நாசமென்பது ஜீவன் முக்தனிடத்திலிருக்கிறது. அரூபநாச
"மென்பது விதேகமுக்தனிடத்திலிருக்கிறது. (இரஜோகுணந்
"தமோகுணமிரண்டும் நசித்துச் சுத்தமான ஸத்துவகுணம் மட்
"டும் மிஞ்சியிருக்கிறது ஜீவன் முக்திதசை. இதுதான் ஸரூப
"நாசம். விதேகமுக்தனுக்கு இலிங்கசரீரம் நாசமடையும்போ
"து மிஞ்சியிருந்த ஸத்துவகுணமும் நசித்துப்போகிறபடியால்
"இந்த விதேக கைவல்லியதசையே அரூபநாசம்). ஓ! வாயுபுத்
"திரா! அந்தச் சித்தத்தினுடைய நாசத்தை (சொல்லுகிறேன்)
"ஆதரவோடிப்போது கேள். மைத்திரீ (ஸ்நேகம் அல்லது அ
"பிமாநம்) முதலியகுணத்தோடுகூடிய சித்தமானதெப்போது
"சாந்தியையடைகிறதோ அப்போது சித்தநாசமென்று சொல்
"லப்படுகிறது. இதில் ஸந்தேகமில்லை. ஜீவன் முக்தனுடைய
"அந்த மனதானது மறுபடி ஜநநத்திற்கு ஹேதுவாகிறதில்லை.

---

देति परमोपशमप्रदा । अव्युत्पन्नमनायावत् भावानज्ञाततत्पदः । गुरुशास्त्र-प्रमाणैस्तु निर्णीतं तावदाचर । ततः पक्कषायेण नूनं विज्ञातवस्तुना । शुभोप्यसौ त्वयात्याज्यो वासनौघोनिराधिना । द्विविधश्चित्तनाशोस्ति सरूपोऽरूप एव च । जीवन्मुक्तौ सरूपस्स्यादरूपो देहमुक्तिगः । अस्यनाशमिदानींत्वं पावने श्रृणुसादरम् । चित्तनाशाभिधानं हि यदा ते भिद्यते पुनः । मैत्र्यादिभिर्गुणैर्युक्त श्शान्तिमेति नसंशयः । भूयोजन्मविनिर्मुक्तं जीवन्मुक्तस्य

“இந்த மனதினுடைய ஸரூபநாசமானது ஜீவன் முக்தனுக்கிருக்
“கிறது. மனதினுடைய அரூபநாசமானது விதேகமுக்தியை
“யடைந்ததாகவிருக்கிறது. ஆயிரம் முளைகள் கிளைகள் துளிர்
“கள் காய் கனிகள் இவைகளையுடைய இந்தஸம்ஸாரவிருக்ஷத்தி
“ற்கிந்த மனதே மூலமாயிருக்கிறது. அதைச்சங்கற்பமென்
“றே யெண்ணுகிறேன். சீக்கிரமாக ஸம்ஸார விருக்ஷம் வறண்
“டுபோகும்படியாய்ச் சங்கற்பத்தினுபசமத்தினால் மூலத்தைவற
“ளச்செய். தன்னுடைய மனதையடக்குவதினுபாயமொன்றே
“உள்ளது. மனதுண்டாகிறபோதே (மனது ஒன்றைப்பற்றத்
“துவக்கும்போதே) மனதை நாசஞ்செய்கிறதுதான் மஹாசிரே
“யஸ்ஸாகிறது. ஞானிக்கு மனது நாசமடைகிறது. அக்ஞானி
“க்கோ மனது விலங்காயிருக்கிறது. ஒரே தத்துவமென்கிற
“உறுதியான அப்பியாஸத்தினால் மனமெதுவரையில் ஜயிக்கப்ப
“டவில்லையோ அதுவரையில், இராக்காலத்திற் பேதாளம்போல்
“ஹிருதயத்திற் வாஸனை சுற்றிக்கொண்டிருக்கிறது. சித்தத்
“தினுடைய கொடுமை க்ஷீணித்தவனும் இந்திரியங்களாகிற
“சத்துருக்களை ஜயித்தவனுமிருக்கிறவனுடைய போகவாஸ
“னைகளானவைப் பனிகாலத்திய தாமரைப் புஷ்பம்போல க்ஷீணி
“த்துப்போகின்றன. கையைக்கையோடு பிசைந்தும் பல்
“லோடு பல்லைக்கடித்துத் தூள்செய்தும் அவயவங்களையவயவங்
“களாலே துன்பஞ்செய்தும் முதலில் மனதை ஜயிக்கவேண்டி

---

तन्मनः । सरूपोऽसौ मनोनाशो जीवन्मुक्तस्य विद्यते । अरूपस्तु
मनोनाशो वैदेही मुक्तिगोभवेत् । सहस्रांकुरशाखात्मा फलपल्लवशालिनः ।
अस्य संसारवृक्षस्य मनोमुलमिदं स्थितम् । संकल्प एव तन्मन्ये
सङ्कल्पोपशमे न तत् । शोषयाशुयथाशोषमेति संसारपादपः । उपाय-
एकएवास्ति मनसस्स्वस्य निग्रहे । मनसोऽभ्युदयेनाशो मनोनाशोमहो-
दयः । ज्ञमनोनाशमभ्येति मनोऽज्ञस्य हि शृङ्खला । तावन्निशीववेताळो
वल्गन्ती हृदिवासनाः । एकतत्त्वदृढाभ्यासा द्यावन्नविजितं मनः । प्रक्षीण-
चित्तदर्पस्य निगृहीतेन्द्रियद्विषः । पद्मिन्य इव हेमान्ते क्षीयन्ते भोगवा-
सनाः । हस्तं हस्तेन संपीड्य दन्तैर्दन्तान् विचुर्ण्य च । अङ्गान्यङ्गै
स्समाक्रम्य जयेदादौ स्वकं मनः । उपविश्योपविश्यैकं चिन्तकेन मुहुर्मुहुः ।

"யது. உட்கார்ந்துட்கார்ந்து அடிக்கடி யொன்றைச் சிந்திக்கி
"றவனாலே சிந்திக்கப்படாத யுக்தியன்றி மனதை ஜயிப்பது அ
"ஸாத்தியம். மதித்தயானையானது அங்குசமன்றி சுவாதீநமா
"காததுபோல் (ஆத்துமசுவரூபத்தையறிகிறதாகிய) அத்தியா
"த்துமவித்தையினுடையஞாநம், ஸத்துக்களுடையஸஹவாஸம்,
"வாஸநையைச்செவ்வையாய்விடுவது, சுவாஸத்தையடக்குவது
"இவைகள் சித்தத்தை ஜயிக்கும் விஷயத்திற் பலமான யுக்தியா
"யிருக்கின்றன. இந்த யுக்திகளிருக்கையிற் பலாத்காரமாய்
"மனதை யெவர்களடக்குகிறார்களோ அவர்கள் தீபத்தையெறி
"ந்துவிட்டு இருட்டுவீட்டிற் தேடுகிறார்கள் (இருட்டு வீட்டிற்
"தேடுகிறவர்களுக்கொப்பாவார்கள்). மனதினுடைய ஜயத்தை
"ப்பலவந்தமாய்ச் செய்கிறதற்கெந்த மூடர்களெத்தனிக்கிறார்
"களோ அவர்கள் தாமரைத்தண்டு நூற்களினால் மதயானை
"யைக் கட்டுகிறார்கள் (அப்படிக்கட்டுகிறவர்களுக்கொப்பா
"வார்களென்பது கருத்து). வளர்ச்சியான கொடிகளையுடைத்
"தாயிருக்கிற சித்தமாகிற விருக்ஷத்திற்கு இரண்டுவிதைகளிரு
"க்கின்றன. ஒன்றுப்பிராணனுடைய அசைவு, மற்றொன்று திரு
"டமானவாஸநை. எங்கும் நிறைந்த அந்த ஞாநமோவென்றால்,
"பிராணனுடைய அசைவினாலே அசைக்கப்படுகிறது. எந்தச்சி
"த்தத்தினுடைய ஒரே நிலையினாலே சொல்லப்பட்டிருக்கிற ஞாந
"முண்டாகிறதோ அதற்கு ஸாதநமானத்தியாநமுபதேசிக்கப்
"படுகிறது. ஸகலமான விகாரத்தையுமுற்பத்திக்கெதிரடியாக
"க்கிரமமாயொடுக்கி (எந்த வஸ்துக்களிலிருந்துண்டாயின

---

नशक्यते मनोजेतुं विनायुक्तिमनिन्दिताम् । अंकुशेन विनामत्तो यथा दुष्ट-
मतङ्गजः । अध्यात्मविद्याधिगमस्साधुसङ्गतिरेवच । वासनासंपरित्यागः प्रा-
णस्पन्दनिरोधनम् । एतास्तायुक्तयः पुष्टास्सन्तिचित्तजये किल । सतीषु
युक्तिष्वेतासु हठान्नियमयन्तिये । चेतसो दीपमुत्सृज्य विचिन्वन्ति तमोज-
नैः । विमूढाः कर्तुमुद्युक्ता ये हठाच्चेतसोजयम् । तेनिबध्नन्ति नागेन्द्रमुन्म-
त्तम्बिसतन्तुभिः । द्वबीजेचित्तवृक्षस्य वृत्तीव्रततिधारिणः । एकं प्राणपरिस्प-
न्दो द्वितीयं दृढभावना । सा हि सर्वगतासंवित् प्राणस्पन्देनचाल्यते । चि-
त्तैकाग्र्याद्यतोज्ञानमुक्तं समुपजायते । तत्साधनमथोध्यानं यथावदुपादिश्य-

“வோ அந்தக்காரணவஸ்துக்களிலடங்கி) மிஞ்சின தெதுவோ அ
“ந்தச்சிந்மாத்திரமாயிருக்கிற சிதாநந்தத்தைச் சிந்தி.——அகங்
“காரமற்று பிர்ம்மாகாரப் பிரவாஹமாயிருக்கிற மனோவிருத்தி
“யானது த்தியாநாப்பியாஸத்தினுடைய மேன்மையினால் ஸம்பிர
“க்ஞாத ஸமாதியாகிறது. அடங்கியிருக்கிற விருத்தியையுடைய
“சித்தமானது பரமாநந்தத்தைப் பிரகாசிப்பிக்கிறபோது அஸம்
“பிரக்ஞாத ஸமாதியென்றுபெயர். அதுயோகிகளுக்குப்பிரிய
“மானது. பிரகாசமில்லாமலும் மனதில்லாமலும் புத்தியில்லா
“மலுஞ் சித்சுவரூபமாத்திரமாய்மிஞ்சியிருக்கிற(நிலை)தெதுவோ
“அது அதத்வியாவிருத்தி ஸமாதியென்றுமுனிகளாற் பாவிக்கப்ப
“டுகிறது.——உறுதியானபாவனையினாலே முன்பின்விசாரணைய
“ன்றி வஸ்துக்களுடையக்கிரஹணமெதுவோ அதுதான் வாஸ
“னையென்று சொல்லப்படுகிறது. ஓ! கபிசிரேஷ்டா! இதரவாஸ
“னையன்றி அதிசீக்கிரமாய்த் தன்னாலேது பாவிக்கப்பட்டதோ
“சீக்கிரமா யதுவாகவேயாகிறான். வாஸனைக்கு சுவாதீநமா
“ன புருஷனானவன் அதற்குத்தகுந்த ரூபத்தையேயடைகி
“றான். எப்போதிந்தப் பிரபஞ்சத்தை ஸத்தாகவெண்ணுகி
“றானோ அப்போது மோகத்தையடைகிறான். வாஸனாவேக
“விசித்திரத்தினாலந்த சுவரூபத்தை விடுகிறதில்லை. துர்திருஷ்
“டியுள்ளவன் மதங்கொண்டதனாற் பிராந்தனாயிருக்கிறவனைப்
“போல் ஸகலத்தையும் பார்க்கிறான். வாஸனையானது, சுத்தம்

---

ते । विलाप्य विकृतिं कृत्स्नां सम्भवव्यत्ययक्रमात् । परिशिष्टं च चिन्मा-
त्रं चिदानन्दं विचिन्तय ।—ब्रह्माकारमनोवृत्ति प्रवाहोहंकृतिं विना । संप्र-
ज्ञातसमाधिस्स्यात् ध्यानाभ्यासप्रकर्षतः । प्रशान्तवृत्तिकंचित्तं परमानन्ददी-
पकम् । असंप्रज्ञातनामायं समाधिर्योगिनां प्रियम् । प्रभाशून्यं मनश्शून्यं
बुद्धिशून्यं चिदात्मकम् । अतद्व्यावृत्तिरूपोसौ समाधिर्मुनिभावितः ।—दृढभा-
वनयात्यक्त पूर्वापरविचारणम् । यदादानं पदार्थस्य वासनासाप्रकीर्तिता ।
भावितं तीव्रसंवेगादात्मनायत्तदेवसः । भवत्याशुकपिश्रेष्ठ विगतेतरवासनः ।
तादृग्रूपो हि पुरुषो वासनाविवशीकृतः । संपश्यति यदेवैतत् सद्वस्त्विति
विमुह्यति । वासनावेगवैचित्र्यात् स्वरूपं न जहाति तत् । भ्रान्तं पश्यति
दुर्दृष्टि स्सर्वं मदवशादिव । वासनाद्विविधाप्रोक्ता शुद्धाचमलिना तथा । म-

"மலிநமென இருவகையாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. மலிந "வாஸனையானது பிறப்புக்குக் காரணமாயுஞ் சுத்த வாஸனையா "னது பிறப்பை யொழிக்கிறதாயுமிருக்கிறது. மலிநவாஸனை "யானது அக்ஞாநக்கட்டி சுவரூபமுடையதென்றும் மஹா அகங் "காரத்தையுடையதென்றும் மறுபடி பிறப்பையுண்டாக்கத்தக்க "தென்றும் வித்துவான்களாற் சொல்லப்பட்டிருக்கிறது. புநர் "ஜந்ம முளையைத்தள்ளியிருக்குமிருப்பானது. வறுக்கப்பட்ட "விதைபோல் வெகு சாஸ்திரக்கதையாகியக் கந்தையைப்பின் "னும் பின்னும் மெல்லுவதனாலென்னப்பிரயோஜநம்? ஓ! மாரு "தே! (தேகத்திற்கு) உள்ளேயிருக்கிற ஜியோதிசுவரூபத்தை "ப்பிரயத்திநத்தினாற் தேடவேண்டியது. ஓ! கபிசார்த்துலா! "ஞாநாக்ஞாநங்களை விட்டெவன் தானே பிர்ம்மமென்றிருக்கி "றானோ அவன் பிர்ம்மத்தையறிந்தவனல்ல, அவன் பிர்ம்மமே. "நான்கு வேதங்களையுமநேகசாஸ்திரங்களையுமத்தியயநஞ்செய் "தும் பிர்ம்மதத்துவத்தையறியாதவன் கறிச்சுவையை யறியாத "அகப்பைக்கொப்பாவான். ஆகையினாலே, மோகமாகிற அசு "த்தவாஸனையிலிருந்து எந்தமனிதன் விரக்தியையடையமாட் "டானோ அவனுக்கு விரக்தியுண்டாகவேறென்னவுபதேசிக்க "க்கூடும்? தேகமானது மிகவுமசுத்தமானது. தேகத்தையுடை "யவனோ மிகவும் பரிசுத்தமுள்ளவன். இவ்விரண்டினுடைய "பேதத்தையறிந்து எதற்குச்சுத்தியைவிதிக்கலாம்? வாஸநாப "ந்தமே பந்தம். வாஸநாக்ஷயமே மோக்ஷம். வாஸனையைச் "செவ்வையாய்த் தள்ளி மோக்ஷம் வேண்டுமென்கிற இச்சையை

---

लिनाजन्महेतुस्या च्छुद्धाजन्मविनाशिनी । अज्ञानसुघनाकारा घनाहं कार-शालिनी । पुनर्जन्मकरीप्रोक्ता मलिनावासनाबुधैः । पुनर्जन्मान्तरन्त्यक्त्वा-स्थितस्सम्भ्रष्टबीजवत् । बहुशास्त्रकथाकंथा रोमंथेन वृथैव किं । अन्वेष्टव्यं प्रयत्नेन मारुतेज्योतिरान्तरम् । दर्शनादर्शने हित्वा स्वयं केवलरूपतः । यआस्ते कपिशार्दूल ब्रह्मसब्रह्मवित् स्वयं । अधीत्य चतुरोवेदान् सर्वशास्त्रा-ण्यनेकशः ब्रह्मतत्वं नजानाति दर्वी पाकरसं यथा । तन्मोहाशुचिगन्धेन न विरज्येतयः पुमान् । विरागकारणं त्वस्य किमन्यदुपदिश्यते । अत्यन्तम-लिनोदेहो देहीचात्यन्तनिर्मलः । उभयोरन्तरं ज्ञात्वा कस्यशौचं विधीयते । बन्धो हि वासनाबन्धो मोक्षस्याद्वासनाक्षयः । वासनास्त्वं परित्यज्य मोक्षा-

"யும் விட்டுவிடு. மனஸ்ஸம்பந்தமான வாஸனையாகிய விஷய
"வாஸனையை முந்தித்தள்ளிவிட்டு மைத்திரீ முதலானபெயர்க
"ளையுடையச்சுத்த வாஸனையைக்கிரஹித்துக்கொள். அந்தவா
"ஸனைகளோடு வியவஹரித்துக்கொண்டிருந்தாலுமவைகளையுந்
"தள்ளிவிட்டு உள்ளுக்குள்ளாகவே யடங்கிப்போனஆசையுடை
"யவனாய் ச்சின்மாத்திர வாஸனையுடையவனாகக்கடவாய். மனது
"புத்தி இவைகளுடன் கூடியிருக்கிற (இவைகளுடைய செய்கை
"களைத் தன்னுடையதுபோலபிமானிக்கிற) தையும்விட்டு ஓ!
"மாருதே! மிஞ்சியிருக்கிற நீ யென்னிடத்தில் ஸ்திரமான மன
"தையுடையவனாவாய்."

இந்த உபநிஷத்துவாக்கியங்களிலநேக வாக்கியங்களும் இந்த அர்த்தமுள்ள பின்னுமநேக வாக்கியங்களும் ஞானவாசிஷ்டம்-உ-ஸர்க்கம்-கூ-ல், காணலாம்.

15. ஜீவன் முக்தி விதேகமுக்தி இவைகள்மூலமாய் மோக்ஷமடைய விச்சையுள்ள புருஷனுக்கிந்த உபநிஷத்துவாக்கியங்கள் முக்கியமான உபதேசமாயிருக்கிறதனாலிந்த உபநிஷத்தைப் பூர்ணமாயுனக்குச்சொன்னேன். வாஸநா சுவரூபமாயிருக்கிற மனதினுடைய இலக்ஷணம், அந்த மனதையடக்கவேண்டியதற்குபாயம், ஜீவன் முக்தவிதேக முக்தலக்ஷணம், த்தியாநிக்கிற கிரமம், மனோநாசமே மோக்ஷஹேதுவென்பது முதலியவிஷயங்களைத் திருஷ்டாந்தங்களுடன் நன்றாய்ச் சொல்லுகின்றன.

16. ஜீவன் முக்தியையடைவதற்கு மற்றொருவிதமான ஸாதநத்தையுஞ் சுருதிசொல்லுகிறது. எப்படியெனில், ஜீவன் முக்தர்களாகிய பிர்ம்மஞாநிகளில், பிர்ம்மவித், பிர்ம்மவித்வரன், பிர்ம்மவித்வரீயான், பிர்ம்மவித்வரிஷ்டன் என நான்கு வகைப்படுவார்கள். இன்ன நிலைமையிற் பிர்ம்மவித்தென்றும் இன்ன நிலைமையிற் பிர்ம்மவித்வரனென்றும் இன்ன நிலைமையிற் பிர்ம்மவித்வரீயானென்றும் இன்ன நிலைமையிற் பிர்ம்மவி

---

थित्वमपित्यज । मानसीर्वासनाः पूर्वं त्यक्त्वा विषयवासनाः । मैत्र्यादि वासनानाम्नी गृहाणामलवासनाः । ताश्चाप्यन्तः परित्यज्य ताभिर्व्यवहरन्नपि । अन्तश्शान्तसमस्तेहो भवचिन्मात्रवासनः । तामप्यथपरित्यज्य मनोबुद्धिसमन्वितम् । शेषःस्थिरसमाधानो मयित्वं भवमारुते ॥

த்வரிஷ்டனென்றுமறிந்துகொள்ளும் பொருட்டு அவரவர்களுடைய நிலைமையிலொன்றுக்கொன்றுள்ள பேதத்தைக்காண்பிவிக்கிறதற்காக ஏழுபூமிகைகளென்கிற பெயரினாற் சுருதிகள் சொல்லுகின்றன. அவைகளை மஹோபநிஷத் அத்-டு-அந்நபூர்ணோபநிஷத் வராஹோபநிஷத்-அத் ச-ஞானவாசிஷ்டம்-ரு-ஸர்க்கம் ககஅ-ஷு-சு- பூர்வபாகம் - ஸர்க்கம்-கஉசு - இவைகளில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிற் சுருக்கமாயிருக்கிறதாகிய வராஹோபநிஷத்துவாக்கியங்களை இவ்விடத்திற் குறிப்பிடுகிறேன்.

வராஹோபநிஷத்-அத்-ச-ல், * "ஞானபூமியானது சுபேச் "சையாகிற முதலாவது பூமியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "விசாரணையானதிரண்டாவது. தநுமானஸி மூன்றாவது. ஸத் "த்வாபத்தி நான்காவது. அஸம்ஸக்தி ஐந்தாவது. பதார்த் "தபாவனையாறாவது. துரியகா ஏழாவது.—

(முதலாவது பூமிகையாவது) நான் மூடனாகவேயிருக்கட் "டுமா, சாஸ்திரங்களினாலேயும் ஸத்துக்களாகிய ஜநங்களினா "லேயும் பார்க்கிறேன் (சாஸ்திரங்கள் ஸத்துக்களுடைய ஸஹ "வாஸம் இவைகளை நற்கதியடையும்விஷயத்திற்காகவுடைய மு "யற்சிசெய்கிறேன்) என்றுவைராக்கியத்தை முன்னிட்டுண்டா "கிற இச்சையெதுவோ அது சுபேச்சையென்று ஞாநிகளாற் "சொல்லப்படுகிறது.

"(இரண்டாவது பூமிகையாவது)சாஸ்திரம் ஸத்துக்களான "ஜநங்கள் இவர்களுடைய சேர்க்கையும் வைராக்கியாப்பியாஸத் "தோடுகூடின ஸதாசாரப்பிரவிருத்தியும் விசாரணையென்றுசொ "ல்லப்படுகிறது.

---

* ज्ञानभूमिश्शुभेच्छास्यात प्रथमा समुदीरिता । विचारणा द्वितीया तृतीया तनुमानसी । सत्वापत्तिश्चतुर्थीस्यात्ततोऽसंसक्तिनामिका । पदार्थभावना षष्ठी सप्तमी तुर्यगास्मृता । स्थितः किं मूढएवास्मि प्रेक्ष्येहं शास्त्रसज्जनैः । वैराग्यपूर्वमिच्छेति शुभेच्छेत्युच्यते बुधैः । शास्त्रसज्जनसंपर्क वैराग्याभ्यास पूर्वकम् । सदाचार प्रवृत्तिर्या प्रोच्यते सा विचारणा । वि-

"(மூன்றாவது பூமிகையாவது) சுபேச்சை விசாரணை இ"வைகளினாலே இந்திரியவிஷயங் (சப்தஸ்பரிசாதி) களிலே எவ்"விடத்திலாசைகுறைகிறதோ அந்தப் பூமிகா தநுமாநஸியென்"று சொல்லப்படுகிறது (மனது விரிவற்றுச் சுருங்கியிருக்கும் "நிலைமைதான் தநுமாநஸீ). (இம்மூன்று பூமிகைகளுடைய அப்"பியாஸமுடையவன் முமுக்ஷுவென்று சொல்லப்படுகிறான்).

"(நான்காவது பூமிகையாவது) முந்தியமூன்று பூமிகைகளு"டைய அப்பியாஸத்தினாலே விஷயங்களில் வைராக்கியமடைந்"து அதனாலே சுத்தியையடைந்த சித்தமானது ஸத்தான ஆத்"துமாவிடத்திலிருக்கையில், ஸத்துவாபத்தியென்று சொல்லப்"படுகிறது. (இந்நான்காவது பூமிகையையடைந்தவன் தான் "பிர்ம்மவித்தாகிறான்).

"(ஐந்தாவது பூமிகையாவது) மேற்படி நான்கு பூமிகைக"ளுடைய அப்பியாஸத்தினாலே பலனில்விருப்பமின்றி யுறுதிப்"பட்டிருக்கிற ஸத்துவகுணத்தினுடையப் பிரகாசமெதுவோ "அது அஸம்ஸக்தியென்று பெயருடையதாய்ச் சொல்லப்படுகி"றது. (இந்த ஐந்தாவது பூமிகையையடைந்தவன் பிர்ம்மவித்"வரனாகிறான்).

"(ஆறாவது பூமிகையாவது) மேற்படி ஐந்து பூமிகைகளு"டைய அப்பியாஸத்தினாலே ஆத்துமாவினிடத்தில் மிகவும் ரமி"த்துக் (ஸந்தோஷமல்லது விளையாட்டு அல்லது பிரியம்) கொ"ண்டிருக்கிறவனாயும் உள்ளும் வெளியுமுள்ள வஸ்துக்களின் "தோற்றமற்றவனாயும் பிறராலேவப்பட்டால் மாத்திரங்காரியங்"களிற் பிரவிருத்தியுள்ளவனாயுமிருக்குமிருப்பெதுவோ அது "பதார்த்தபாவனையென்கிற ஆறாவது பூமிகையாகவிருக்கிறது.

---

चारणा शुभेच्छाभ्या मिन्द्रियार्थेषु रक्तता । यत्र सातनुतामेति प्रोच्यते तनुमानसी । भूमिका त्रितयाभ्यासा च्चित्तेऽर्थविरतेर्वशात् । सत्वात्मनि स्तिते शुद्धे सत्वापत्ति रुदाहृता । दशा चतुष्टयाभ्यासादसंसर्ग फलातुया । रूढसत्व चमत्कारा प्रोक्ता संसक्तनामिका । भूमिका पञ्चकाभ्यासात् स्वात्मारामतया भृशम् । अभ्यन्तराणां बाह्यानां पदार्थानाम भावनात् । परप्रयुक्तेन चिरं प्रयत्ने नावबोधनम् । पदार्थ भावनानाम षष्ठी भवति भूमिका । षड्भूमिका चिराभ्यासा द्भेदस्यानुपलम्भनात् । यत्स्वभावैक निष्ठत्वं

“(இந்த ஆறுவது பூமிகையையடைந்தவன் பிர்ம்மவித்வரீய
“ஞகிறுன்).

“(ஏழாவது பூமிகையாவது) மேற்படி ஆறுபூமிகைகளுடை
“ய வெகுகாலாப்பியாஸத்தினுலே (ஜீவேச்சுவரஜகத்தாகிற) பேத
“ங்களற்று ஆத்துமபாவனையிலேயே நிலைத்திருக்கிறதெதுவோ
“அது துரீயகாவென்கிற ஏழாவது பூமிகையாகவிருக்கிறது. (இ
“ந்த ஏழாவது பூமிகையையடைந்திருக்கிற மஹாபுருஷன் பிர்ம்
“மவித்வரிஷ்டனுகிறுன்).

“சுபேச்சை முதலுள்ள மூன்றுபூமிகைகளும் பேதாபேத
“த்துடன் கூடினவைகளென்று சொல்லப்படுகின்றன. (எதனு
“லென்றுல்)ஜாக்கிரதாவஸ்தையிலெந்தஜகத்தைப்பார்க்கிறுனே
“அந்த ஜகத்தை வாஸ்தவமானதாகப் புத்தியினுலறிகிறுன்.——
“அத்துவைதத்தில் நிலையானபுத்தியுடையவனுய்த் துவைதபாவ
“னையடங்கினுல் நான்காவது பூமிகை ஸம்பந்தத்தினுலிவ்வுலக
“த்தை சுவப்நம்போற பார்க்கிறுன். சிதரிப்போகிற சரத்கால
“மேகமானதெப்படி நாசமடையுமோ அப்படி (அவனுக்கு) ஜக
“த்து நசித்துப்போகிறது. ஓ! நிதாகா! (இப்படிப்பட்டவன்)
“ஸத்துவத் (குண) மாத்திரம் மிச்சமாயுடையவனுயிருக்கிறு
“னென்று திருடஞ்செய்துகொள். சுஷுப்திபதமென்கிறபெ
“யரையுடைய ஐந்தாவது பூமிகையையேறி ஸகல விசேஷாம்சங்
“களுமற்றவனுய் அத்துவைத மாத்திரனுகவேயிருக்கிறுன். எ
“ப்போதும் வெளிவியாபாரங்களிலிருந்தபோதிலும் எப்போ
“துமுள்நோக்கமுள்ளவனுனதனுலே இந்த (ஆறுவது) பூமிகை
“யிலே அப்பியாஸஞ்செய்கிறவன் சிரமமடைந்து தூங்குகிறவ
“ன்போற் காணப்படுகிறுன். பழமையானதும், (கூட) கூடசுப்தி

---

साज्ञेया तुर्यगागतिः । शुभेच्छादि त्रयं भूमि भेदाभेदयुतंस्मृतम् । यथा-
वद्वेदबुद्ध्येदं जगज्जाग्रति दृश्यते । अद्वैते स्थैर्यमायाते द्वैतेच प्रशमंगते ।
पश्यन्ति स्वप्नवल्लोकं तुर्यभूमिसु योगताः । विच्छिन्न शरदभ्रांश विलयं प्र-
विलीयते । सत्वावशेष एवास्ते हे निदाघ दृढीकुरु । पञ्चभूमिं समारुह्य
सुषुप्ति पदनामिकाम् । शान्ताशेष विशेषांश स्तिष्ठत्य द्वैतमात्रके । अन्त-
र्मुख तयानित्यं बहिर्वृत्ति परोपिसन् । परिश्रान्त तयानित्यं निद्रालुरिव
लक्ष्यते । कुर्वन्नभ्यास मेतस्यां भूम्यां सम्यग्विवासनः । सप्तमी गूढसुप्ता-

'யென்கிற பெயரையுடையதுமான ஏழாவது பூமிகையானதுக்
"(இப்படி) கிரமமாயடையப்படுகிறது. எவ்விடத்தில் ஸத்ரூப
"மாவது அஸத்ரூபமாவது (தோற்ற)இல்லையோ அஹங்காரமா
"வது அநஹங்காரமாவது இல்லையோ(அப்படிப்பட்ட ஏழாவது
"பூமிகையில்) கேவலம் க்ஷீணமானமனதையுடையவனும் பய
"மற்றவனுமாய் இரண்டாவதற்ற (அத்துவைத) ஸ்திதியிலே
"யே யிருக்கிறான்."

17. இந்த ஏழாவது பூமிகையையடைந்திருக்கிற ஜீவன் முக்தனாகிற பிர்ம்மவித்துவரிஷ்டனெவனோ அவன்தான் விதேக முக்தியையடையத்தகுந்தவன். இப்படிப்பட்ட முக்தியைய டையும்படியான பிர்ம்மஞானத்தையடைய யார்தகுந்தவனோ அவன் ஸாதநசதுஷ்டய ஸம்பன்னனாகவிருந்தாலன்றி பிர்ம்மஞானத்திற்கதிகாரியாகமாட்டான் என்று ஸ்ரீமத் சங்கராசாரியர் பிர்ம்ம சூத்திரத்தில் முதலாவது சூத்திரமாகிய—अथातो ब्रह्मजिज्ञासेति—என்ற வாக்கியத்திலுள்ள அத அத—சப்தத்திற்கு ஸாதந சதுஷ்டய ஸம்பத்தியையடைந்த பிறகு பிர்ம்மவிசாரஞ்செய்யத்தக்கதென்று பாஷியஞ்செய்திருக்கிறார். அந்த அபிப்பிராயம் மிகவும் ஸரியானதே.

1. ஸாதநசதுஷ்டயமென்றால்—நித்தியாநித்தியவஸ்து விவேகம்.—அதாவது—பிர்ம்மம் நித்தியமானது ஜகத்து அநித்தியமானதென்று சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்களினாலுங் குருபதேசத்தினாலுந்தனக்காகவேயுண்டாகிற ஞானமே.

2. இஹாமுத்திரார்த்த பலபோகவிராகம்.—அதாவது—இவ்வுலகத்திற் தநகநகவஸ்து வாஹநபுத்திர மித்திரகளத்திராதிகளோடுகூடியநுபவிக்கிற விஷயபோகங்களும் சுவர்க்காதிலோகங்களிலப்ஸரஸ்திரீ முதலிய விஷயபோகங்களும் நசிக்கத்தக்கதென்றும் அந்தப் போகங்களை வாந்திசெய்த அந்நம்போலவும் மலமூத்திரம்போலவுமெண்ணி அவைகளில் வைராக்கியமுண்டாவதே.

3. ஸமாதிஷட்கஸம்பத்தி.—அதாவது—சமம், தமம், உபரதி, திதிக்ஷா, ஸமாதாநம், சிரத்தை இவ்வாறுமே. சம

---

ख्या क्रमप्राप्ता पुरातनी । यत्रनासन्न सद्रूपो नाहं नाप्यनहंकृतिः । केवलं क्षीणमनन आस्तेऽद्वैतेऽतिनिर्भयः ॥

மென்றால்—சிரவணம் (வேதாந்தம் முதலியனக்கேட்டல்) முதலியவைகளுக்கு வேறானவிஷயங்களிலிருந்து மனதைத்திருப்பி, சாஸ்திரம் முதலிய சிரவணாதிகளுக்கு விஷயமான ஆத்துமாவினிடத்தில் நிருத்துவதே—தமமென்றால்-ஞானேந்திரிய கருமேந்திரியங்களை அவைகளுக்குறித்தான விஷயங்களிற் செல்லவொட்டாமற்தடுப்பதே—உபரதியென்றால்—ஸந்நியாஸம் அல்லது நிஷ்காம கருமானுஷ்டானம் அல்லது விஷயங்களிற் பற்றற்றிருத்தலே—திதிக்ஷாயென்றால்— பிராரப்தத்தினாலுண்டாகும் சுகந்துக்கம் சீதம் உஷ்ணம் முதலியவைகளைப்பொருத்துக்கொள்வதே—ஸமாதானமென்றால்—சிரவணாதிகளினாலேது அறிந்துகொள்ளப்பட்டதோ அந்தவஸ்துவில் மனதை நிலைப்படுத்துவதே—சிரத்தையென்றால்—குருவாக்கியத்திலும் வேதாந்தவாக்கியத்திலும் நம்பிக்கையல்லது விசுவாஸமே.

4. முமுக்ஷுத்துவம்—அதாவது—வீடெரியும்போது அதற்குள்ளகப்பட்டுக்கொண்ட மனிதனானவன் மனைவி மக்கள் முதலியவர்களைக் கவனியாமலே விட்டுத் தன்னுடைய தேகமெரிந்துபோகாமற் காப்பாற்றுவதிலேயேமுயற்சியுடையவனாய் வீட்டிற்குவெளியிலோடி தாபத்தை நிவிருத்திசெய்துகொள்ள விரும்புவதெப்படியோ அப்படிப்போல ஸம்ஸாரதாபத்திரயமாகிற எரிச்சலிலிருந்து விடுபடும்பொருட்டுப் பொறாமை முதலிய துர்க்குணங்களைவிட்டவனுடைய தீவ்வரமான (அதிகஆவல்) இச்சைதான் முமுக்ஷா.—

18. இப்படிப்பட்ட ஸாதநங்களையுடையவனெவனோ அவன்தான் ஞானத்தைச்சீக்கிரமாயடைவான். இந்தஸாதநசதுஷ்டயஸம்பத்தியையடையாதவன் பெத்தினை ஜந்மங்களெடுத்தாலும் மோக்ஷமடையமாட்டான். ஓ! ஜயவிரதா! நீ இந்தஸாதநங்களையடைய யோக்கியனென்று நானெண்ணுகிறேன்.

19. ஜயவிரதன்:—ஓ! பரமகுருவே! என்னுடையமனோ நிச்சயமுறுதிப்படும்பொருட்டு நான் கேட்கப்போகிற கேழ்விகளுக்குத்தரமளித்து என்னையாதரிக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

நான் ஸாவகாசங்கிடைத்தகாலங்களிலென்னுடனிவ்விடத்திலிருக்கிற பிராம்மணோத்தமர்களிடத்திலிதிஹாஸபுராணங்களிலிருந்துச் சிலபாகங்களைக்கேட்டறிந்தேன். அவைகளிற்சில

ஸ்ரீமந் நாராயணன்வஸிக்கிற வைகுண்டலோகம் மோக்ஷஸ்தல மென்றுசொல்லுகின்றன. சில பரமேசுவரராகிய சங்கரர்வஸிக்கிற கைலாஸம் மோக்ஷஸ்தலமென்று சொல்லுகின்றன. முன் தங்களிடத்திலிருந்து நான்கேட்டறிந்தவநேகவாக்கியங்கள் பிர்ம்மத்தோடு கலந்துபோவது மோக்ஷமென்று சொல்லுகின்றன. இப்படிப் பலவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் மோக்ஷத்தன்மை யிப்படிப்பட்டதென்பதை யறிந்துகொள்ள வெனக்காவலாயிருக்கிறது.

20. ஸுசர்ம்மா:—ஓ! சூக்ஷ்மபுத்தியுள்ளவனே! மோக்ஷமென்பது நான்குவகைப்பட்டவைகளாய்ச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அவைகளெவையெனில்—ஸாலோக்கியம், ஸாமீப்பியம், ஸாரூப்பியம், ஸாயுஜ்ஜியமென்பவைகளே. விஷ்ணுவினுடைய ஸ்தாநமாகிய வைகுண்டத்திலோ, சிவனுடைய ஸ்தாநமாகிய கைலாஸத்திலோ வாஸஞ்செய்வது ஸாலோகமுக்தியாகிறது. இதானது, புண்ணிய கருமங்களினாலும் பகவத் பக்தி முதலியவைகளினாலு மடையப்படுகிறது. முக்தர்களுக்கு சுகந் துக்கம் இலாபம் நஷ்டம் பசி தாகம் முதலிய யாதொரு துன்பமுமில்லை.

21. இப்படிப்பட்டவனைவிட மேலான கருமங்களையும் பக்தியையுஞ்செய்தவன் வைகுண்டமல்லது கைலாஸலோகத்திலந்த லோகாதிபதிகளான சிவன் அல்லது விஷ்ணு ஸமீபத்தில் வாஸஞ்செய்துகொண்டும் அந்த மூர்த்திகளைப்பார்த்து ஆநந்தமடைந்துகொண்டும் யாதொரு துக்கமுமில்லாமலிருப்பது ஸாமீப்பிய முக்தி.

22. மேற்குறித்த இருவகையான முக்தர்களைவிட அந்நியர்களாயும் அவர்களைவிட உத்தமமான கருமங்களை ஈசுவரார்பண புத்தியாய்ச்செய்து அந்தீசுவரனிடத்திற் பரமபக்தியுடன் தியாநம் தாரணை முதலிய யோகஸமாதியினால் மனதை நிருத்தினவர்களாயுமிருக்கிற யோகிகள் ஸாரூப்பிய முக்தியையடைகிறார்கள். அதாவது—உபாஸித்த மூர்த்தியை போலொற்ற மூர்த்தி சுவரூபமடைவது. அந்த உபாஸநாமூர்த்தி விஷ்ணுவானால் அந்த விஷ்ணுவைப்போலவே சங்கம் சக்கிரம் கதை பீதாம்பரம் முதலியவஸ்துக்களுடன்கூடிய திவ்வியதேஜோரூபத்தை யடைகிறதுதான். ஆனால் விஷ்ணுவைப்போல

இலக்ஷ்மீபதித்துவமும் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் முதலியகாரியங்களைச் செய்யும் சக்தியுமிந்த முக்தனுக்கில்லை. உபாஸநாமூர்த்தி சிவனானால், முக்கண் சந்தரபூஷணம் முதலியவைகளோடு கூடிய ஸ்படிகம்போன்றரூபத்தையடைகிறான். அர்த்த நாரீசுவரத்துவமாவது சிருஷ்டியாதி சக்திகளாவது இவனுக்கில்லை.

23. ஸாயுஜ்ஜியமுக்தி யென்பது.—ஸாரூப்பியமுக்தியையடைந்திருக்கிற முக்தன் அந்த நாராயணனுடைய அல்லது சிவனுடையசரீரத்திற்குட் பிரவேசித்துமிருக்கலாம் பிரவேசியாமலுமிருக்கலாம். அது அவனுடைய இச்சை நாராயணனுடையஅல்லது சிவனுடைய தேகத்திற் பிரவேசித்திருப்பதெதுவோ அதுதான் ஸாயுஜ்ஜியமுக்தியென்று சொல்லப்படும்.

24. இந்த முக்தர்களுக்கு மறுபடி பிறப்பில்லை. அவர்களுக்கிஷ்டமானால் பகவதாக்ஞையின்பேரிலு லகத்திலவதாரஞ்செய்வார்கள்.

25. இந்த நான்கு விதமான முக்திகளில் ஸாயுஜ்ஜியமுக்தியைத்தவிர மற்றமூன்றுமுக்தியையும் வியவஹாரதசையையநுஸரிக்கிற அத்துவைதிகளங்கீகரிக்கிறார்கள். ஆனாலும் மூன்றுமுக்திகளுங்கிரமமுக்திமார்க்கத்தைச் சேர்ந்ததென்றும் ஆனாலிந்தமுக்தர்களில் யார் பிரும்மலோகத்தை அல்லது விஷ்ணுலோகத்தை அல்லது சிவலோகத்தையடைந்தார்களோ அந்தலோகத்திலந்தலோகாதிபதிகளாற் பிர்ம்மோபதேசம் பெற்று அந்த லோகத்திலேயே துக்கம் முதலியவைகளன்றியில் வெகு காலம் வாஸஞ்செய்து அந்தலோகாதிபதி மோக்ஷமடையும்போது இந்த முக்தர்களும் அவர்களைப்போல பிர்ம்மத்துடன் கலந்துபோவார்களென்றுஞ்சொல்லுகிறார்கள். இதுதான் இவர்களுக்கு ஸாயுஜ்ஜியமுக்தி.

26. பாரமார்த்திகதசையைப் பின்பற்றுகிற அத்துவைதிகளுக்கு மேற்குறித்தவிதமான நான்குமுக்திகளில்முந்திய மூன்றுமுக்திகள் அக்ஞாநகற்பிதங்களென்பார்கள். ஸாயுஜ்ஜியமுக்தியோ பிர்ம்மத்துடன் கலந்துபோவதுதான். அது ஸத்தியோமுக்தியென்றுஞ் சொல்லப்படும். இந்த முக்தியையடைவதற்கு மற்றவர்கள் சொல்லுவதுபோல வைகுண்டம் கைலாஸம் முதலியவைகள் போலொற்ற ஸ்தாநங்களிவர்களுக்கில்லை. ஆனால், ஞாநயோகிகளான ஜீவன்முக்தர்களெந்தவிடத்திற் தேகத்

தை விடுகிறார்களோ அவ்விடத்திலேயே, மஹாகாசத்திற் கடாகாசம் சேர்ந்தாற்போலும் ஜலத்துடன் ஜலமும் பாலுடன் பாலும் நெய்யுடன் நெய்யுங்கலந்தாற்போலும் வேற்றுமையற்றுப்போகிறதுபோல அகண்டாகாரபிர்ம்மத்தில் லயித்துப்போகிறதுதான். அத்துவைதிகள் சொல்லுகிற கிரமமுக்தி ஸத்தியோமுக்தி இவைகளை விளக்குகிறப் பிரமாணங்களிற் சில உனக்குச் சொல்லுகிறேன்.

வராஹோபநிஷத்-அத்-ச-ல், * "சுகர் முக்தர். வாமதேவ "ரும் முக்தர். அவர்களைத்தவிர முக்தி யடைந்தவர்களில்லை. "(இவ்விருவருடைய மார்க்கத்தைத்தவிர முக்திக்கு வேறுமார் "க்கமில்லை யென்பது தாத்பரியம்). இவ்வுலகத்திற் சுகமார்க் "கத்தையெந் ததைரியசாலிகளநுஸரிக்கிறார்களோ அவர்கள் ஸ "த்தியோமுக்தர்களாகிறார்கள். இவ்வுலகத்தில் வாமதேவமா "ர்க்கத்தை யெப்போதுமநுஸரிக்கிறவர்கள் பின்னும் பின்னும் "பிறப்பையடைந்து ஸத்துவத்தோடுகூடிய யோகமார்க்கங்களி "னாலேயும் ஸாங்கிய (ஞாந) யோகங்களினாலேயும்கருமயோகங் "களினாலேயும்கிரமமுக்தர்களாகிறார்கள். சுகமார்க்கம் வாமதே "வமார்க்கமென இரண்டுமார்க்கங்கள் தேவனாலேற்படுத்தப்பட் "டன. சுகமார்க்கமானது பக்ஷிமார்க்கம் (குறித்தவிடத்திற்குப் "பக்ஷிகள் க்ஷணத்திற் பரந்துபோவதுபோல இந்தத்தேகத்தை "விட்ட அந்தக்ஷணத்திலேயே முக்தியடைவது) என்றும் வாம "தேவமார்க்கமானது எறும்புமார்க்கம் (குறித்தவிடத்திற்கெ "றும்பு போகவேண்டுமானாற் கிரமக்கிரமமாயூர்ந்துபோவது "போல இத்தேகம் போனவுடன் தன்னுடைய புண்ணியபலனு "க்குத்தக்கபடி இதைவிட உததமமான பிறப்பையடைந்து

---

* शुकोमुक्तो वामदेवोपि मुक्तस्ताभ्यां विना मुक्तिभाजो न सन्ति। शुकमार्गं येऽनुसरन्ति धीरास्सद्यो मुक्तास्ते भवन्तीह लोके । वामदेवं येऽनुसरन्ति नित्यं मृत्वा जनित्वा च पुनःपुनस्तत् । ते वैलोके क्रममुक्ता भवन्ति योगैस्सांख्यैः कर्मभिस्सत्वयुक्तैः । शुकश्च वामदेवश्च द्वेसृती देवनिर्मिते । शुको विहङ्गमः प्रोक्तो वामदेवः पिपीलिका । अत द्यावृत्तिरूपेण साक्षाद्विधिमुखेनवा । महावाक्य विचारेण सांख्ययोग समाधिना ।

"அதிலிருந்து பின்னுமுத்தமமானபிறவியையடைந்து இப்படி
"யே பல ஜந்மங்களடைந்து கடைசியாய்ப் பிரும்மலோகம் வை
"குண்டங்கைலாஸ மிவ்வுலகங்களிலெதிலாவது சென்று அந்த
"உலகாதிபதியுடன் முக்தியடைவது) என்றுஞ் சொல்லப்பட்டி
"ருக்கிறது. விதிவாக்கியங்களிலேயாவது நிஷேதவாக்கியங்
"களினுலேயாவது மஹாவாக்கியவிசாரத்தினுலேயாவது ஸாங்கி
"யயோகஸமாதியினுலேயாவது அஸம்பிரக்ஞாதஸமாதியினுலே
"யாவது தன்னுத்துமசுவரூபத்தையறிந்து பரிசுத்தமாயிருக்கிற
"வர்கள் சுகமார்க்கத்தினுலே பரமபதமாகிற மோக்ஷத்தைய
"டைகிறுர்கள். யமம் முதலியன ஆஸநம் முதலியன இவைகளா
"லுண்டாகிற ஆயாஸத்தோடுகூடிய ஹடயோகாப்பியாஸத்தில
"டிக்கடியநேக தடைகளாலுண்டான அணிமாதி (சித்தி) களுக்
"குட்பட்டவனுய் நல்லபலனையடையாமல் மறுபடி நற்குலத்திற்
"பிறந்து முந்திய (ஜந்மங்களின் கரும) வாஸனையினுலேயே ம
"றுபடி யோகாப்பியாஸஞ்செய்து அநேகஜந்மாப்பியாஸத்தினுல்
"வாமதேவ மார்க்கத்தினுலந்த விஷ்ணுவினுடைய பரமபதமாகி
"ற முக்தியையடைகிறுன். பிர்ம்மப்பிராப்தியைக் கொடுக்கத்
"தக்கவும் மங்களகரமானவு மிவ்விரண்டு மார்க்கங்களிருக்கின்
"றன. இவைகளிலொன்று ஸத்தியோமுக்தியையும் மற்றொ
"ன்றுக் கிரமமுக்தியையுந்தரத்தக்கது, சகலமு மொன்றென்ற
" அநுபவமுள்ளவனுக்கு இவ்விஷயத்தில் மோகமேது? சோ
"கமேது?"

27. இந்த உபநிஷத்துக் கிரமமுக்தி ஸத்தியோமுக்தியிப் படிப்பட்டனவென்று தெளிவாய்ச் சொன்னதுமல்லாமற் கிரம முக்திசுவரூபத்தை நன்றாய் விளக்கியுமிருக்கிறது. இந்த ஸத்

विदित्वा स्वात्मनोरूप मसंप्रज्ञा समाधितः । शुकमार्गेण विरजाः प्रयान्ति परमं पदम् । यमाद्यास न जायास हठाभ्यासात् पुनःपुनः । विघ्नबाहुल्य संजात अणिमादि वशादिह । अलब्ध्वापि फलं सम्यक्पुनर्भूत्वा महाकुले । पूर्ववासनयैवायं योगाभ्यासं पुनश्चरन् । अनेकजन्माभ्यासेन वामदेवेन वै- पथा । सोपि मुक्ति समाप्नोति तद्विष्णोः परमं पदम् । द्वाविमावथ पंथानौ ब्रह्मप्राप्ति करौ शिवौ । सद्योमुक्ति पदश्चैकः क्रममुक्ति प्रदःपरः । अत्र कोमोहःकः शोकएकत्व मंनुपश्यतः ॥

தியோமுக்தியையாதரிக்கிற பின்னுஞ்சில வாக்கியங்களையுஞ்சொல்லுகிறேன் கேள்.

பைங்களோபநிஷத்-அத்-ச-ல், * "ஞாநியானவனெந்தெந்த "விடத்திலெவ்விதமாய் மரணமடைந்தாலும் எங்கும் நிறைந்த "வாகாசம்போல் அந்தவிடத்திலேயே லயமடைகிறான். வாஸ் "தவமாய்க் கடாகாசத்தைப்போலாத்துமா லயமடைகிறதாகவ "றியத்தக்கது."

உருத்திரஹிருதயோபநிஷத்தில், † "வாஸ்தவத்திற் சிவ "னானவர் ஸாக்ஷாத் சித்சுவரூபமே. ஜீவனுமெப்போதும் ஸ்வ "யஞ்சித் ரூபந்தான். இப்படிப்பட்டரூபத்தினுடைய நல்ல ஞாந "மானது உத்தமமானவெந்தயோகிக்கிருக்கிறதோஎங்கும்நிறை "ந்த சுவரூபியான அவனுக்கு (மரணமுண்டானால்) எவ்விடத்தி "லும் போகவேண்டியதில்லை. (அதெப்படிப்போலெனில்) ஒன் "றாயும் பூர்ணமாயுமிருக்கிற ஆகாசமானது எவ்விடத்திற்கும் "போகாததுபோற்றான்."

மோக்ஷசுவரூபமிப்படிப்பட்டதென்று உனக்குச் சொன்னேன்—இனியுனக்கெதைக்கேட்கவிருப்பமிருக்கிறதோ அதைக்கேள்.

28. ஜயவிரதன்:—ஓ! ஸாதுவே! புராணங்களிலிருந்து நான் கேட்ட சில கதைகளை நினைக்கும்போது எனக்கு அதிக ஆச்சரியமுண்டாகிறது. அவைகள் அசம்பாவிதமென்றும் தோற்றுகிறது. அவைகளிற் சிலதைச் சொல்லுகிறேன். அதுவிஷயத்திலுண்டாயிருக்கிற என்னுடைய மனக்கொழுப்பத்தைத் தெளிவுறச்செய்யப் பிரார்த்திக்கிறேன்—அவையாவன—

மிருகங்களைக்கொன்று அவைகளின் மாம்சத்தைப் புஜிக்கிறவனும் பாபகாரியங்களைத்தவிர புண்ணியகாரியங்களையறியாதவனும் ஈசுவரனொருவனுண்டென்றுகூட அறிவில்லாதவனுமாகிய ஒரு வேடன் மிருகங்களைத்தேடிக்கொண்டு காட்டிற் சென்

---

* यत्रयत्र मृतो ज्ञानीयेन वाकेन मृत्युना। यथा सर्वगतं व्योमतत्र तत्र लयङ्गतः। घटाकाश मिवात्मानं विलयं वेत्ति तत्वतः॥

† तत्वतश्च शिवस्साक्षा च्चिज्जीवश्च स्वतस्सदा। एवं रूपपरिज्ञानं यस्यास्ति परयोगिनः। कुत्रचिद्गमनं नास्ति तस्य संपूर्णरूपिणः। आकाशमेकं संपूर्णं कुत्रचिन्नैव गच्छति॥

ருன். அன்று பகல்முழுதும் மிருகங்கள் கிடைக்கவில்லை. ஆஹாரங்கிடைக்கவுமில்லை. இராக்காலத்திலாவது மிருகங்கள் வருமென்றெண்ணி வலைபோட்டுக்கொண்டு தூக்கமன்றி காட்டிற் காற்றிருந்தான். மிருகங்கள் வலைக்குள் வருமாறுதனக்குத்தடையில்லாமற் தெரியும்பொருட்டு மறைவாயிருந்த பில்வத்தழைகளைப் பரித்து ஒருபக்கத்திலெறிந்தான். இரவுமுழுதும் காற்றிருந்தும் மிருகங்களகப்படவில்லை. துக்கத்துடன் வீட்டிற்குச் சென்றான். சிலகாலத்திற்குப் பிறகு அவன் மரணமடைந்தான். அவனை யமலோகங்கொண்டுபோக யமதூதர்கள் வந்தார்கள். அவனைக் கைலாஸத்திற்கழைத்துப்போக விமானத்துடன் சிவதூதர்கள் வந்தார்கள். அவர்களுக்குள் வாதம் நடந்ததில் இந்த வேடன் மஹாபாபியானாலும் சிவராத்திரிதினத்திற் பகல்முழுதும் இரவுமுழுதும் உபவாஸமிருந்ததனாலும் அவன் பரித்துஎறிந்த பில்வபத்திரமவ்விடத்திலிருந்த சிவலிங்கத்தின்பேரில் விழுந்ததனாலும் அவன் ஸகலபாபத்திலிருந்தும் விடுபட்டு கைலாசத்தையடைய யோக்கியனென்று விமானத்திலேற்றிக்கொண்டு கைலாசத்திற்குக் கொண்டுபோனார்கள் கைலாசத்திற் திவ்வியதேகத்தோடு சுகமநுபவித்தானென்று சொல்லியிருக்கிறது.

ஒரு எருமையானது காளிந்தீ நதீஜலத்தைக்குடித்ததனல் விஷ்ணுதூதர்கள் விமானத்துடன் வந்து அந்த எருமையை திவ்வியதேகமுடைய புருஷனுய்ச்செய்து வைகுண்டலோகத்திற்கழைத்துப்போய் அந்த உலக சுகத்தை யநுபவித்ததென்று சொல்லியிருக்கிறது.

பிரயாகையில் மாகமாஸத்தில் ஸ்நாநஞ்செய்த ஒரு தேவதாசி, தான் போகுங்காலத்திற் தன்னுடைய ஈரத்துணியை உதரும்பொழுது அதிலிருந்து விழுந்த அந்த ஜலத்திவலையானது ஒரு இராக்ஷதன்பேரில் விழுந்தமாத்திரத்தில் அவன் திவ்வியதேகத்தையடைந்து சுவர்க்கத்திற்குச்சென்றதாகச் சொல்லியிருக்கிறது.

ஸ்ரீஇராமநவமீ பூஜை நடந்துகொண்டிருந்த ஒரு அரைக்குள் நைவேத்தியத்திற்காக வைக்கப்பட்டிருந்த சில பழங்களை யுண்பதற்காக எலி வந்தது. அப்போது அவ்விடத்திலந்த எலியைப் பிடிக்கும்பொருட்டு ஒரு பூனைவந்தது. பூனையைக்கண்டு

எலி பயந்தோடும்போது அவ்விடத்தில் வைக்கப்பட்டிருந்ததும் பிரகாசம் மங்கிப்போயிருந்ததுமான ஒரு விளக்கின் திரியில் எலியின் வால்பட்டமாத்திரத்தில் விளக்கானது மிகவும் பிரகாசமாயெரிந்தது. சிலகாலத்திற்குப்பிறகு பூனையும் எலியும் இறந்துபோயின. அவ்விரண்டு ஜந்துக்களும் திவ்வியதேகத்தையடைந்து வைகுண்டலோகத்தில் வெகுகாலம் வாஸஞ்செய்து பிறகு பூலோகத்தில் அரசர்களாய்ப் பிறந்தன. ஏனெனில், விஷ்ணு நைவேத்தியத்தைப் புஜிக்கவொட்டாமற் எலியைப் பூனை தடுத்துவிட்டதென்கிற காரணத்தினாற் பூனையும் விஷ்ணுசந்நிதியில் வைத்திருந்த தீபத்தைப் பிரகாசஞ்செய்வித்த காரணத்தால் எலியும்உத்தமபதவியையடைந்தனவென்றுசொல்லியிருக்கிறது.

கோபீசந்தநத்தை ஊர்த்துவபுண்டரமாய் தாரணைசெய்தவன் வைகுண்டத்தையடைந்ததாகவும், விபூதியைத் திருபுண்டரமாய் தரித்தவன் கைலாஸத்தை யடைந்ததாகவும், விஷ்ணுவினுடைய சங்கசக்கிரத்தைப்போலொற்ற அடையாளத்தைத்தேகத்திற் சொய்துகொண்டவன் வைகுண்டத்தையடைந்ததாகவும் இப்படியே கணக்கற்ற இதிஹாஸங்கள் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

29. ஓ! பகவானே! கேட்டமாத்திரத்தில் அஸம்பாவிதமாய்க்காணுகிற இந்தக் கதைகளை யெப்படிநம்பக்கூடும்? இப்படிப்பட்ட அற்பமானகாரியங்களினாலேயே உத்தமபதங்கிடைக்குமானால், அநேக திரவியங்களைச் சிலவிட்டுங்கஷ்டஸாத்தியமானவநேககாரியங்களைச் செய்தும்பிரயோஜநமடையவேண்டியதாயிருக்கிற ஜியோதிஷ்டோமம், வாஜபேயம், அசுவமேதம்முதலிய யாகங்களைச்செய்து அடையும் சுவர்க்கபோகத்தைவிட மேற்சொல்லிய அற்பகாரியங்களினாலடையும் பிரயோஜநம் சிரேஷ்டமாயிருக்கையில் யக்ஞத்தை சாஸ்திரங்கள் விதிக்கவேண்டியதென்ன? அப்படியே தபஸ் யோகம் முதலியகாரியங்களும் வீணானவென்றே சொல்லவேண்டும். ஆகையாற் தாங்கள் கிருபைசெய்து இதனுண்மையை நானறிந்துகொள்ளும்படி சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

30. ஸுசர்மா—ஓ! புண்ணியாத்துமாவே! இவ்விஷயங்களில் நீ, கலக்கமடையவேண்டியதில்லை. உலகத்தில் உத்தம மத்தியமஅதம அதமாதம அதிகாரிகளிருக்கிறார்களென்று உன

க்கு முன்னமையே சொன்னேன். உலகத்திலெல்லோரும் யக்ஞங்களைச் செய்யவாவது தபஸ், யோகம் முதலியவைகளைச்செய்யவாவது சக்தியுடையவர்களாயிருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட சக்தியில்லாத ஜநங்களுக்கெவ்விதமாயாவது ஈசுவரபக்தியுண்டாகட்டுமென்கிற கருணையினாலே சாஸ்திரங்கள் இப்படிப்பட்ட அற்பகாரியங்களுக்குக்கூட உத்தமபலத்தை வர்ணிக்கின்றனவென்றறி. சாஸ்திரங்களிலெல்லாம் இருவகையான அர்த்தவாதமுண்டு. அவையாவன— பூதார்த்தவாதம் குணார்த்தவாதம் என்பவைகளே. அவைகளுக்குள் பூதார்த்தவாதமென்பது உள்ளதையுள்ளபடிச் சொல்லுகிற சாஸ்திரபாகமெதுவோ அதுதான். குணார்த்தவாதமென்பது ஒன்றை விசேஷமானதென்று நிரூபிக்கும்பொருட்டு வர்ணனையாகவும் விசேஷபலனுள்ளதாகவும் கதையாகவுஞ் சாஸ்திரங்களிற் சொல்லுகிறவைகளே. மேலாக நீகுறித்துக்காட்டிய கதைகளெல்லாம்குணார்த்தவாதமென்பதிற்சந்தேகமில்லை. சாஸ்திரங்களிலிப்படி வர்ணிக்கிறதுண்டென்பதை யொருதிருஷ்டாந்தத்தினால்விளக்குகிறேன்.

சாந்தோக்கியோபநிஷத்-ரு-க-ல், * (தேகத்தினிந்திரியங்கள் மனது பிராணனிவைகள் ஒன்றோடொன்று நான் சிரேஷ்டம் நான் சிரேஷ்டமென்று வாதஞ்செய்துகொண்டு சிருஷ்டிகருத்தாவான பிரும்மாவினிடத்திற் சென்று கேட்டதாகத்துடங்கி இவ்வாறு சொல்லியிருக்கிறது). "இந்திரியங்கள் பிரும்மாவிட "ஞ்சென்று ஓ! பகவானே! எங்களிற் சிரேஷ்டமெதுவென்று "கேட்க, பிரும்மாவானவர் உங்களிலெது தேகத்தைவிட்டு வெ "ளியிற்சென்றால், சரீரம் நிலைத்திராதோ அதுவே சிரேஷ்டமெ "ன்று சொன்னார். வாக்கானது தேகத்தைவிட்டு வெளியிற் "சென்று ஒருவருஷத்திற்குப் பிறகு திரும்பிவந்து யென்னை "யன்றி நீங்களெப்படி ஜீவித்திருந்தீர்களென்று மற்றவிந்திரிய "ங்களைக் கேட்டது. அதற்கவைகள் ஊமைகள் பேசாமலெப் "படி சுவாசம்விட்டுக்கொண்டும் கண்களாற் பார்த்துக்கொண்

* तेह प्राणाः प्रजापतिं पितरमेत्योचुः । भगवन् कोनः श्रेष्ठइति ॥ ६ ॥ तानुहोवाच । यस्मिन् वउत्क्रान्ते शरीरं पापिष्ठतरमिव दृश्येत सवः श्रेष्ठइति ॥ ७ ॥ साहावागुच्चक्राम । सा संवत्सरं प्रोष्यपर्येत्योवाच । कथमशकतर्तेमज्जीवितुमिति । यथा कलाअवदन्तः प्राणन्तः प्राणेन पश्यन्त श्च-

"டும் காதுகளாற்கேட்டுக்கொண்டும் மனதால் நினைத்துக்கொ
"ண்டுமிருக்கிறர்களோ அப்படியிருந்தோமென்றன. வாக்கு
"மறுபடி தேகத்திற் பிரவேசித்தது. பிறகு கண்கள் தேகத்
"தைவிட்டு வெளியிற்சென்று ஒருவருஷத்திற்குப் பிறகு திரும்
"பிவந்து என்னையன்றி நீங்களெப்படி ஜீவித்திருந்தீர்களென்று
"கேட்க, குருடர்கள்போலிருந்தோமென்று சொல்ல, கண்கள்
"தேகத்திற் பிரவேசித்தன. பிறகு காதுகள் வெளியிற்சென்று
"ஒருவருஷத்திற்குப் பிறகு திரும்பிவந்துகேட்க, செவுடர்கள்
"போலிருந்தோமென்று சொல்லியன. காது தேகத்திற் பிர
"வேசித்தது. பிறகு மனது தேகத்தைவிட்டு வெளியிற்சென்
"று ஒருவருஷத்திற்குப் பிறகு வந்துகேட்க நினைக்குந்திறமை
"யில்லாத குழந்தைகள்போலிருந்தோமென்றன. பிறகு மனது
"தேகத்திற் பிரவேசித்தது. கடைசியாக பிராணன் வெளிப்ப
"டயத்தனித்தது. அப்படியத்தனித்தமாத்திரத்தில், மஹாவீரி
"யமுள்ள குதிரையையடித்தாலது தன்கட்டுத்தறிகளையெல்லாம்
"பிடுங்கிக்கொண்டெப்படி புறப்படுமோ அப்படி மற்ற இந்தி
"ரியங்களெல்லாம் தேகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டன.
"பிறகு இந்திரியங்களெல்லாம் பிராணனிடஞ்சென்று ஓ! பக
"வானே! நீர் எங்களிலெல்லாஞ் சிரேஷ்டன். தயைசெய்து
"வெளியிற்செல்லாமல் உம்மிடத்திலேயேயிருக்கவேண்டுமென்
"று பிரார்த்தித்துக்கொண்டன."

---

क्षुषाश्शृण्वन्तश्श्रोत्रेण ध्यायन्तो मनसैवमिति प्रविवेशहवाक् ॥ ८ ॥ चक्षुर्होच्चक्राम । तत्संवत्सरं प्रोष्यपर्येत्योवाच । कथमशकततेर्मज्जीवितुमिति । यथाऽन्धा अपश्यन्तः प्राणन्तः प्राणेन वदन्तोवाचा शृण्वन्तः श्रोत्रेण ध्यायन्तो मनसैवमिति । प्रविवेशहचक्षुः ॥ ९ ॥ श्रोत्रग् होच्चक्राम तत्संवत्सरं पर्येत्योवाच कथमशकततें मज्जीवितुमिति । यथा बधिरा अशृण्वन्तः प्राणन्तः प्राणेन वदन्तोवाचा पश्यन्तश्चक्षुषा ध्यायन्तो मनसैवमिति प्रविवेशह श्रोत्रम् ॥ १० ॥ मनोहोच्चक्राम । तत्संवत्सरं प्रोष्यपर्येत्योवाच । कथमशकततेर्मज्जीवितुमिति । यथा बाला अमनसः प्राणन्तः प्राणेन वदन्तोवाचा पश्यन्तश्चक्षुषा शृण्वन्तः श्रोत्रेणैवमिति प्रविवेशहमनः ॥ ११ ॥ अथ ह प्राणउच्चिक्रमिष्यन् स यथा सुहयः पड्वीशशंकून् सग्विदेदेवमितरान् प्राणान् समखिदत्तग्हाभिसमेत्योचुर्भगवन्नेदित्वं नःश्रेष्ठोऽसिमोत्क्रमीरिति ॥ १२

இக்கதையை இந்த வத்தியாயத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிறது. இவ்விடத்திற் சுருக்கிச் சொன்னேன். இந்தக்கதையை வாஸ்தவமென்று ஒருவரும் நம்பமாட்டார்கள். இந்த வாக்கியங்களுக்கு ஸ்ரீமத்சங்கராசாரியரவர்கள்செய்திருக்கிற பாஷியத்திலும் ஸ்ரீமத் இரங்கராமாநுஜர் செய்திருக்கிற பாஷியத்திலும் தேகத்திலுள்ளப் பிராணன் மனது இந்திரியங்கள் இவைகளுக்குள் தேகம் நிலைத்திருப்பதற்குப் பிராணனே முக்கியமானதென்று விளக்கும்பொருட்டு இக்கதைசொல்லப்பட்டதேயன்றி வாஸ்தவமல்லவென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்போல் வேதத்திலும் மற்றசாஸ்திரங்களிலும்வர்ணனை அநேகமுண்டு. இப்படிப்போலவே மேலாக நீ குறித்துக்காட்டிய விஷயங்களும் வர்ணனையென்றறி.

31. சிவராத்திரிதினத்திலுபவாஸமிருந்து ஈசுவரபூஜைசெய்வதனாலுத்தமப் பிரயோஜநங்கிடைக்குமென்று புகழ்வதற்காக வேடன் கதைசொல்லப்பட்டது. பக்திவிசுவாஸத்துடன் உபவாஸமிருந்து பூஜைசெய்யாதவனுக்கே இப்படிப்பட்ட உத்தமபதங்கிடைக்குமானாற் பக்திவிசுவாஸத்துடன் உபவாஸமிருந்து பூஜை செய்கிறவனுக்கு உத்தமமான பதங்கிடைக்குமென்கிற ஆசையினாலீசுவரபூஜை செய்யட்டுமென்று நிரூபிக்கிறதற்காகவும் இந்தக்கதை சொல்லப்பட்டதென்றறி.

32. மனிதன் ஜீவித்திருக்கிறதற்கு ஜலமானது மிகவும் ஸாதநமாயிருக்கிறது. அந்த ஜலங்களுக்குள் சிரேஷ்டமான நதீஜலமானது மிகவுந்தேகத்தைச் சுத்தப்படுத்தத்தக்கது. கங்கை, யமுனை, கோதாவரீ, சரஸ்வதீ, நர்மதை, காவேரீ, சிந்து முதலிய நதிகளுடைய ஜலமானது மிகவுஞ்சிரேஷ்டமானது. ஏனென்றால், அவைகளிலெதிலாவது பிரதிதினம் ஸ்நாநஞ்செய்துவருவானாகில் அவனுக்கு வியாதிமுதலிய பீடை விசேஷமாயுண்டாகாது. தேகம் பரிசுத்தமாவதுமல்லாமல் மனதும் பரிசுத்தமாகும். "शरीरमाद्यं खलु धर्मसाधनम् = சரீரமேயல்லவா தருமத்திற்கு முந்தியஸாதநம்" என்ற சாஸ்திரவாக்கியத்தின்படி சரீரத்தைக்காப்பாற்றுவதற்கு சிரேஷ்டமான ஜலமானது மிகவும் அவசியமானது. பரிசுத்தமான ஜலம் இந்த நதிகளின் ஜலத்தைவிட வேறிடத்திலிருந்தாலும் அதுவும் சிரேஷ்டமானதே. ஆனால், இந்த நதிகளைப்பற்றிமட்டும் விசேஷமாய்ச் சொல்லவே

ண்டியதென்னவெனில், இந்த மஹாநதிகளெல்லாம் ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியினுடைய அம்சமாக வெளிப்பட்டனவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆகையால், மஹாலக்ஷ்மீயுபாஸனைசெய்கிறோமென்கிற எண்ணத்துடன் அந்நதிகளையுத்தேசித்து அநேகர் போவார்கள். அப்படிப்போய் ஸ்நாநஞ்செய்வதற்குமுந்தி ஸங்கற்பமூலமாய் சிவவிஷ்ணுமுதலிய தேவதைகளுடைய நாமத்தை யுச்சரிப்பார்கள். இவைமுதலியவைகளினால் ஈசுவரபக்தியுண்டாகும். இப்படிப்பட்ட பலவிதப் பிரயோஜநங்களையுத்தேசித்தே தீர்த்தங்களுடைய மாஹாத்மியத்தை சாஸ்திரங்கள் புகழுகின்றன.

எப்படிப்பட்ட பிராணியானாலு மீசுவரகைங்கரியத்தினாலுத்தமபதத்தையடையுமென்று சொல்வதனாலே மற்ற பிராணிகளைவிட ஸர்வசிரேஷ்டமான மனிதன் ஈசுவரகைங்கரியத்தை பக்தியோடு செய்வானாகில் மிகவுமுத்தமமான பதத்தையடைவானென்பதை வர்ணிக்கிறதற்காகப் பூனை எலி இவைகளுடைய கதை சொல்லப்பட்டது.

33. மனிதர்கள் ஸகலவேதோக்தமான கருமங்களையுஞ் செய்யும்போது நெத்தியிலும் தேகத்திலும் ஏதேனுந்தரித்துக்கொள்ளாமற் பாழ்நெத்தியுடன் செய்யக்கூடாதென்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றனவாகையால், அப்படி தரித்துக்கொள்ளும் வஸ்துவானது ஈசுவரனுடைய ஞாபகத்தையுண்டுபண்ணும்படியானதாயிருந்தால் அப்படி தரிக்கிறவனுக்கு ஈசுவரபக்தியுண்டாகுமென்பதையுத்தேசித்து விஷ்ணுபாதம்போலுள்ள ஊர்த்துவபுண்டரத்தை கேசவாதிநாமோச்சாரணத்தோடு தரிக்கும்படி சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதனால் விஷ்ணுபக்தியுண்டாகுமாகையால், ஊர்த்துவபுண்டரத்தை ஸர்வசிலாக்கியமாக வர்ணித்ததாகவறி. இப்படியே திருபுண்டரமானது சிவனுடைய சூலசுவரூபமாகையாலும், மூன்றுரேகைகள் முறையே பிரும்ம விஷ்ணு ருத்திரசுவரூபமென்று பாவனைசெய்யவேண்டியதாகையாலும் சிவநாமங்களுடன் திருபுண்டரத்தைத் தரிப்பவனுக்கு சிவபக்தியுண்டாகுமென்று உத்தேசித்துச் சொல்லப்பட்டதாகவறி. சங்கஞ்சக்கிரம் இவைகளைப்போல் உருவஞ்செய்து தேகத்திற் தரித்துக்கொள்வதில்விஷ்ணுநாமோச்சாரணத்துடன் தரித்துக்கொள்ளவேண்டியதாகையால், விஷ்ணுபக்தியுண்டாகும்.

சங்கஞ்சக்கிரம் தேகத்திலெப்போதுமிருந்தாலந்த பகவானுடைய ஞாபகமடிக்கடியுண்டாகுமாகையால், அந்த சங்கசக்கிரம் போற் தேகத்திலடையாளஞ் செய்துகொள்ளும்படி சொல்லுகின்றன.

இப்படிப் பின்னும் பலவிஷயங்கள் புராணங்களிற் சொல்லப்படுகின்றன. இவைகளெல்லாங் குணார்த்தவாதங்களென்றறி. வேதாதிகாரமில்லாத ஸ்திரீசூத்திரர்கள்போலொற்றஅதிகாரிகளையுத்தேசித்துப் புராணங்கள் பிரவிருத்தித்தபடியால் அவர்களுக்கு எவ்விதமாகவாவது பக்தியுண்டாய் நற்கதியையடைய முயற்சிசெய்யட்டுமென்று புராணங்கள் இப்படியெல்லாம் அற்பவிஷயங்களைக்கூடப் புகழ்ச்சியாய்ச் சொல்லுகின்றன. ஆகையாலிதில் அஸம்பாவிதமொன்றுமில்லை.

34. ஜயவிரதன்:—ஓ! பகவானே! எனக்கு ஸகலவிதஸந்தேகமும் நிவிருத்தியாய்விட்டது. ஆனால், ஒருவிஷயத்தில் மட்டும் சுவற்பம் மனக்கலக்கமிருக்கிறது. அதாவது—“ஸகல ஜகத்தும் பிர்ம்மசுவரூபம்” என்று சுருதி சொல்லுகிறதல்லவா. காணப்படுகிற ஜகத்திலநேகம் ஜடமாயுஞ் சேதநமாயும் பலவிதமாயுமிருக்கிறது. இந்த ஜகத்தாகவிருக்கிற பிர்ம்மமோ, ஸச்சிதாநந்தபரம்ஜியோதிசுவரூபமாயும் விகாரமற்றதாயு மொன்றாயுமிருக்கிறது. அப்படியிருக்கையில் இந்த ஜடசுவரூபமான ஜகத்து பிர்ம்மசுவரூபத்தைவிட அந்நியமாகவும் பலவிதவிகாரமுடையதாகவுங் காணப்படுகிறதே? இவ்விஷயத்திலெனக்குண்டாயிருக்கிற சந்தேகத்தை நிவர்த்தித்தென்னைத் தெளிவுறச்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

35. ஸுசர்மா:—ஓ! மஹாநுபாவா! நன்றாய்க்கேட்டாய், அதைக்குறித்துச் சொல்லுகிறேன் கேள்.

பிர்ம்மசக்தியானது—ஜடசக்தி, சேதநசக்தி, காடிந்நியசக்தி, சிச்சக்தி முதலிய பலவிதமாயிருக்கிறதென்று உனக்கு முன்னமையே விரித்துச் சொல்லியிருக்கிறேன். அச்சக்திகளிலொன்றான அக்ஞாநசக்திதானிப்படிப் பலவிதபேதமாய்க் காண்பிவிக்கிறது. ஜடசக்தியானது விகாரப்பட்டுப் பலவிதமாய்த் தோற்றுகிறது. அதை நிரூபித்துக்காட்டும்பொருட்டு ஒரு திருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன்.

இந்தப் பூமியானதொன்றாயும் மண்ணே சுவரூபமாயுமுள்ளதென்பதிற் சந்தேகமில்லை. இந்தப் பூமியிலொருபாகத்தில்

வைரஞ்சிகப்பு முதலிய இரத்தினங்களாயும், மற்றொருபாகத்தி ற் தங்கம், வெள்ளிமுதலிய உலோகங்களாயும், பின்னொருபாக த்திற் கரியாயும் பூமியைவிட வேறுபோற் காணுகின்றன. இந் த ஒவ்வொருவஸ்துக்களுக்குள்ளும் பலவிதபேதங்களுமிருக்கி ன்றன. மேலுமிந்தப் பூமியிலிருந்து அநேக மரங்கள் செடிக ள் கொடிகள் புற்பூண்டுகளுமுண்டாயிருக்கின்றன. அவைக ளொவ்வொன்றும் பூமியின் சுவரூபத்தைவிட பேதமாயிருக்கின் றன. அந்த ஒவ்வொரு மரஞ்செடி முதலியவைகளிலும் அநே கபேதங்களிருக்கின்றன. இவைமாத்திரமல்ல, ஒரு மரத்தில் மரத்தின் சுவரூபத்திற்கு வேறான சுவரூபமுடையதாயிலைகளும் இலைகளுக்கு வேறான சுவரூபமுடையதாய்ப் புஷ்பங்களும் புஷ் பத்திற்குவேறான சுவரூபமுடையவைகளாகக்காய்கனிகளுங்கா ணப்படுகின்றன. இப்படிப்போலவே ஸகல மரங்களிலுஞ் செடி கொடிமுதலியவைகளிலும் பேதமிருக்கின்றன. நீ உன்புத் தியினல் நன்றாயாராய்ந்து பார்ப்பாயானலிந்த இரத்திநங்கள் உ லோகங்கள் மரங்கள் முதலியனப் பூமியைக்காட்டிலுமற்பமே னும் வேறல்லவென்றறிவாய். மரங்களின் சுவரூபத்திற்கு இலை புஷ்பம் காய் கனிகள் வேறல்ல. அப்படியிருந்தும் அவைகள் வேறுபோற் காணுகின்றன. இவ்வளவு வேற்றுமையும் பூமி யைவிட வேறானவைகளென்றுப் பிரமையடைவதுபோல அஞ் ஞாநிகள் ஜகத்து, பிர்ம்மத்தைவிட வேறானதென்றுப் பிரமைய டைகிறார்கள். பூமிதத்துவத்தையறிந்த ஞாநி பூமியினிடத்தி லுள்ள சக்தியானது இப்படிப் பலவிதவஸ்துக்களாய்த்தோற்று விக்கிறதென்று நிச்சயஞாநமடைவான். முடிவிலிந்த இரத்திந ம் முதலியவைகளும் மரம் முதலியவைகளும் மண்சுவரூபத்தை யே யடைகின்றனவென்பது நிச்சயம். அப்படிப்போல் ஜகத் துப் பிர்ம்மசுவரூபத்தையடைகிறதென்பது நிச்சயம்.

36. ஜயவிரதன்:—ஓ! மஹாநுபாவா! தங்களிடத்திலிருந் து கேட்டு ஸகல விஷயங்களையுமறிந்துகொண்டேன். இனி நான் யென்னுடைய சொந்தமுயற்சியினல் ஜீவன்முக்திதசையை யடைந்து விதேகமுக்தியையடையவேண்டுமென்கிற விருப்பத் தைத்தவிர வேறு யாதொரு விருப்பமுமெனக்கில்லை. நான் கா ணுகிற ஜடசேதநமான ஸகல வஸ்துக்களும் பிர்ம்மாகாரமாக வே யெனக்குக் காணப்படுகிறது. நான் இனி சுகதுக்கம் பிற

ப்பிறப்பு முதலியவைகளோடுகூடிய ஸம்ஸாரத்தை மறுபடி யடையாமலும் இப்போதிருக்கிற வென்னுடைய பரிசுத்தமான ஞானத்திற்குக் குறைவுவராமலுமிருக்கும்படித் தாங்களநுக்கிரகஞ்செய்வதுமல்லாமல் இனி நான் என்னுடைய ஜீவிதகாலத்தையெவ்விதமாய்க் கழிக்கவேண்டுமோ அதையுமெனக்கு நியமிக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறேன்.

37. ஸுசர்மா:—ஓ! ஜயவிரதா! நீ ஆத்துமஞானத்தையடைந்திருக்கிறாயென்பதில் அற்பமேனுஞ்சந்தேகமில்லை நீ இச்சிக்கிறபடியே ஜீவன்முக்தியையும் பிறகு விதேகமுக்தியையுமடைவாயென்பதிலுஞ் சந்தேகமில்லை. நீ யெப்போதுமாத்துமசுவரூபத்திலேயே நிலையாய்வைக்கப்பட்ட மனதையுடையவனாகவும்சமதமம்முதலிய குணங்களையுடையவனாகவுமிருந்துகொண்டு எந்தக்கருமங்களைச் செய்தாலுமதனால் யாதொருபாதகத்தையுமடையமாட்டாய் “अवश्यमनुभोक्तव्यं कृतं कर्मशुभाशुभम् । = செய்யப்பட்டதாகிய சுபாசுபகருமபலனை யவசியமநுபவிக்கவேண்டியதே” என்கிறவாக்கியப்படி செய்கிற சுபாசுபகருமபலன்களையநுபவித்தேதீரவேண்டுமென்கிற விதியானது அஞ்ஞானிகளைப்பற்றியதேயன்றி ஞானிகள் விஷயத்தைப்பற்றியதல்ல. ஞானிகள் விஷயத்திலோ “यथैधांसि समिद्धोग्नि र्भस्मसात् कुरुतेर्जुन । ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात् कुरुते तथा ॥ = ஓ! அர்ஜுனா! நன்றாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்நியானது (அதையடுத்திருக்கிற) விறகுகளையெப்படியெரித்துச்சாம்பலாக்குமோ(விறகின் ரூபந்தெரியாமல் நசிக்கச்செய்யுமோ) அப்படிப்போல ஞானமாகிற அக்நியானது அதையடுத்திருக்கிற ஸகலகருமங்களையும் (அவைகளின் பலனுடன்)நசிக்கச்செய்து விடும்” என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறபடி பிர்ம்மஞானியைக் கருமமற்பமேனுந்துடரமாட்டாதாகையாலாத்துமசுவரூபஞானத்திலேயே நிலையாயிருக்கிற உன்னைக் கருமமற்பமேனுந்துடரமாட்டாது. நீ கருமத்தைச்செய்தாலுஞ்செய்யாவிட்டாலுமதனாலே உனக்கு யாதொரு பாதகமுமுண்டாகமாட்டாது. நீ உன்னுடைய தேசத்திற்குச் சென்று உன்னுடைய மந்திரித்துவமாகிற தொழிலைச்செய்துகொண்டும் உன்னை நம்பியிருக்கிற குடும்பம் முதலியவைகளை இரக்ஷித்துக்கொண்டும் ஆத்துமசுவரூபஞானத்திலேயே திருப்தியடைந்தவனாயிரு. நானுனக்குமுன்னமையே சொல்லியிருக்கிறபடி ஞா

னிக்குக் காடும் வீடும் ஸமமாகையாலும் ஜநகமஹாராஜன் பிரஹ்லாதன் முதலிய இராஜர்கள் இராஜ்ஜியபரிபாலநத்தைக் கிரமமாய்ச்செய்துகொண்டே ஞாநிகளாயிருந்து மோக்ஷமடைந்தார்களாகையாலும், நீயுமுன்னதிகாரத்திலிருந்துகொண்டே மோக்ஷமடைவாய்ச் சந்தேகமில்லை. நீ யுன்னுடைய ஸ்தலத்திற்குப் போகலாம்.

38. விசுவம்பரபட்:—இவ்விதமாய் ஞாநமே சுவரூபமாயுடைய மஹாத்துமாவாகிய சுசர்மாவினாலாக்ஞாபிக்கப்பட்டவும் உத்தமஞாநத்தையடைந்தவும் புண்ணியாத்துமாவான ஜயவிரதன் சுசர்மாவினுடைய பாதங்களில்ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து அஞ்சலிபந்தஞ்செய்துகொண்டு தங்களுடையஅநுக்கிரகத்தினால் நான் கிருதார்த்தனானேனென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய ஸ்தாநம் போய்ச் சேர்ந்தான். கேட்டாயோ மயூரநாதா, பூர்வபுண்ணியவிசேஷத்தினால் சுசர்ம்மாவைப் போலொற்ற குரு கிடைக்கவேண்டும். அப்படிப்பட்ட புண்ணியபலத்தினாலேயே அந்தக் குருவினிடத்திலுபதேசம் பெறவேண்டும். இது மஹா அரிதானது. இப்படிப்பட்டப் புண்ணியமான குருசிஷ்ய ஸம்வாதத்தைக் கேட்ட புண்ணியவான்கள் கிரமமாய் ஞாநமடைந்து ஜீவன்முக்தியை யடைவார்களென்பதிற் சந்தேகமில்லை.

39. மயூரநாதன்—ஓ! பகவானே! அந்த ஜயவிரதனென்கிற மஹாபுருஷன் தன்னுடைய ஸ்தாநத்தையடைந்து எவ்விதமாய் அவனுடைய காலத்தைக் கழித்துவந்தான்? பிறகு அவன் எப்படிப்பட்ட நிலைமையை யடைந்தான்? இவைகளையறிய விரும்புகிறேன்.

40. விசுவம்பரபட்—ஓ! மயூரநாதா! ஜயவிரதனானவன் தன்னுடைய தேசம் போய்ச் சேர்ந்து முதலில் தன்னுடைய தாயாரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து "ஓ! மாதாவே! உங்களுடைய அநுக்கிரஹத்தினாலேயுமாக்ஞையினாலேயும் நான் சுசர்ம்மாவாகிய மஹாயோகியினிடஞ் சென்று அவரை யழைத்துவருவதற்குப் பதிலாயவரிடத்திலுள்ள விசேஷபாக்கியமான பிர்ம்மஞாநத்தை யழைத்துவந்தேன். அவர் ஸகலத்தையும் வெறுத்த மஹாஞாநியாகையால், அவரெவ்விடத்திற்கும் போக விச்சிக்கமாட்டார். அவருடைய தரிசநம் யாருக்குக் கிடைக்கி

றமேதா அவர்களுக்கு மோக்ஷங் கையிற் கிடைத்ததென்று நிச்சயித்துக்கொள். அவருடைய தரிசநத்தினாலு முபதேசித்தினாலுமநுக்கிரஹத்தினாலும் நான் கிருதார்த்தனானேனென்பதிற் சந்தேகமில்லை. இவ்வளவுந் தங்களுடைய அநுக்கிரஹமே" என்று சொல்லி யிப்படியே பிதா முதலிய பெரியோர்களையும் வணங்கி அவர்களாலு மநுக்கிரஹம் பெற்றுக்கொண்டு தன்னரசனிடஞ்சென்று தான்போய்வந்ததும் தன்குருவினுடைய மஹிமை, தனக்கு வருபதேசித்தக் கிரமம் இவைமுதலியவைகளையுஞ் சொன்னான். அரசனுமதைக் கேட்டு மிகவும் ஸந்தோஷத்தையடைந்து, வஸிஷ்டரை குலகுருவாயடைந்த தசரதர்போல் ஜயவிரதனைக் குலகுருவாக அவ்வரசன் பாவித்துவந்தான்.

41. ஜயவிரதனே, தான் இராஜாங்கவிஷயமான ஸகலகாரியங்களையும் தன்னுடையஇஷ்டமித்திரபந்துஜநங்களுக்குஸகலவித நன்மைகளையுஞ் செய்துவந்தான். ஜயவிரதனை யொருவன் நிந்தித்தாலு மவமாநஞ் செய்தாலும் அடித்தாலும் பின்னுமெப்படிப்பட்ட துஷ்காரியங்களை யார் செய்தாலு மவ்விஷயத்தி லற்பமேனு மவனுடைய மனது கலங்காமலே ஸந்தோஷமாய் ஸகலவிதஅபிமாநங்களையும் விட்டு ஸகலத்தையும் பிர்ம்மசுவரூபமாய்ப் பார்த்துக்கொண்டு எப்போது மாநந்தப்பரவசனாகவேயிருந்துவந்தான். அப்படிப்பட்ட தசையிலிருந்தே வெகுகாலஞ் சென்றபிறகு அந்த தேகத்தை விட்டு விதேகமுக்தியையடைந்தான்.

42. மயூரநாதன்—ஓ! ஞாநமூர்த்தியே! தங்கள் வாக்கிலிருந்து, மஹாபுருஷர்களாகிய சுசர்ம்மா ஜயவிரதன் இவர்களுடைய ஸம்வாதமாகிய இதிஹாஸத்தைக்கேட்ட எனக்கு ஸகலவிஷயத்திலும் விரக்தியுண்டாயிருக்கிறது. நானும் ஜயவிரதனைப்போல் ஜீவன்முக்திதசையை யடையும்படி யநுக்கிரஹஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். எனக்கு வநத்தைப் போயடைவதைத் தவிர வேறிடம் ருசிக்கவில்லை. நானிப்போதே ஹிமவத்பர்வதத்தைச் சேர்ந்த வநப் பிரதேசத்திற் சஞ்சரித்துக்கொண்டு எப்போதும் ஆத்துமசுவரூபத் தியாநத்திலேயே நிலையுள்ளவனா யென்னுயுள்காலத்தைக் கழிக்கத் தாங்கள் பூர்ணகிருபை செய்தநுமதி கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்,

43. விசுவம்பரபட்—ஓ! மயூரநாதா! உன்னுடைய இஷ்டப்படியே நீ சமதமாதிகுணங்களோடு கூடினவனாய் காட்டிலஞ்சரித்துக் கொண்டெப்போதும் மனதை யுன்னிஷ்ட தேவதையினிடத்தில் நிருத்தி யதிலுன்மனது நிலையை யடைந்தபிறகு அந்தசுவரூபத்தையும் விட்டு ஸகலப் பிரபஞ்சத்தையும் பிர்ம்மசுவரூபமாய்ப் பார்த்துக்கொண்டிரு. அந்தநிலையிலேயே எப்போதுமிருக்கிறதுதான் ஜீவன் முக்தி லக்ஷணம். தேகங் காலத்திற்கிறையானபோது விதேகமுக்தியை யடைவாய்.

இப்படி யநுக்கிரஹமும் அநுமதியும் பெற்ற மயூரநாதனென்கிய மஹாத்துமாவானவன் ஹிமவத்பருவதச் சாரலைநோக்கிச் சென்றான்.

44. ஓ! ஆரியசிகாமணிகளே! இந்த இதிஹாஸமானது பொதுவாய் ஆரியமதஸித்தாந்தத்தை நன்றாய் விளக்குகிறது. இந்த இதிஹாஸமானது, அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் துவைதம் சைவம் இந்த மதசுவரூபங்களைக் கூடியவரையிற் போதிக்கிறதாயிருக்கிறது. மற்ற ஸித்தாந்தங்களைவிட அத்துவைதஸித்தாந்தத்தை விரித்துரைக்கிறதாயிருக்கிறது. அதப்படித்தானிருக்கவேண்டும். ஏனெனில், இந்த அத்துவைதஸித்தாந்தமானது ஸாதாரணமா யெல்லோருமறிந்துக்கொள்ளக் கூடியதல்ல. ஸாமாந்நியமாய்ச் சொல்லுவதனாற் புத்தியிலேறுவது கஷ்டஸாத்தியமாயிருக்கும். அதனாற்றான் விரிவாய்ச் சொல்லப்பட்டது.

45. ஓ! விவேகிகளே! இந்த இதிஹாஸத்தினால் நாமென்ன போதிக்கப்படுகிறோமென்றால், ஸகலஉலகத்திற்கும் கருத்தாவான பரமாத்மா ஒருவரேயன்றிப் பலபேர்களில்லை. எந்தெந்தப்பெயர்களினாற் சொல்லப்பட்டாலுமப்பெயர்களெல்லா மொன்றான பரமாத்துமாவையே சொல்லுகின்றன. நம்மவரில் யாரெந்தமதத்தைப் பின்பற்றுகிறார்களோ அந்த மதக்கொள்கையிலேயே நிச்சயத்தையடைந்து விடாமுயற்சியுடன் அம்மதசித்தாந்தத்தை யநுஸரித்தே மோக்ஷமடையவேண்டும். அப்படிமுயற்சிசெய்கிறவன் சீக்கிரத்தி லுண்மையான ஞானத்தையடைந்து பிறகு மோக்ஷத்தையுமடைவான். சிவபக்தர்கள் விஷ்ணுவையாவது விஷ்ணுபக்தர்கள் சிவனையாவது இவ்விருவர்களும் அத்துவைதிகளையாவது இவர்களிலாரும் அந்நியமதஸ்தர்

களையாவது நிந்திக்கக் கூடாது. அப்படி நிந்திப்பதனால் நரகம் முதலியதுக்கபயமுண்டாகுமே யன்றி சுகமற்பமேனு முண்டாகாது. பிரும்மக்ஷத்திரியவைசியசூத்திரர்களாகிய நான்குவருணத்தாருமவரவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தருமங்களையுமாசாரங்களையும் கருமங்களையும் விடாமலநுஷ்டிப்பதனாலது மோக்ஷத்திற்கு மிகுந்தஸாதநமாயிருக்கும், என்பது முதலியவநேக விஷயங்களேதான். ஆகையாலொவ்வொருவனும் தன்னுடைய தேகேந்திரியாந்தக்கரணம் முதலியன பழுதடைவதற்கு முந்தியே தன்னை நற்கதியிற் சேர்ப்பித்துக்கொள்ள அவசியம் முயற்சி செய்யவேண்டியது.

இந்த இதிஹாஸத்தின் கருத்தை அசூயை பொறாமை பரநிந்தை முதலிய துர்க்குணங்களை விட்டு நற்குணங்களைக் கைய்யாடிக் கவநஞ் செலுத்துகிற உத்தமபுருஷர்களுக்கு மோக்ஷத்துவாரந் திறந்து வைக்கப்பட்டிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை.

சுபமஸ்து ஓம் தத்ஸத்.

பதினாறுவது பிரகரணம்,

முற்றிற்று.

ஆரியமதசித்தாந்த ஸங்கிரகம் முற்றிற்று.

# ஆரியமதஸித்தாந்தஸங்கிரகம்.

இக்கிரந்தத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கும்
ஸமஸ்கிருதவாக்கியங்களுடைய
அகராதி அட்டவணை.

## अ


| | |
|---|---|
| अकारादभवद्ब्रह्मा | 379 |
| अकारस्तुमहद्बीजम् | 410 |
| अखण्डैकरसन्दश्यम् | 241 |
| अगस्त्य उवाच । भवान् ब्रह्माच | 465 |
| अग्निर्देवोद्विजातीनाम् | 196 |
| अग्निर्यथैकोभुवनं प्रविष्टः | 209 |
| अग्निर्वायुरादित्यः | 458 |
| अग्नेहिरण्यगर्भ | 182 |
| अच्छेद्योयमदाह्योयम् | 301 |
| अज्ञानभ्रान्तिरेवान्तः | 340 |
| अज्ञानमलपूर्वत्वात् | 488 |
| अज्ञानादेवसंसारः | 486 |
| अज्ञानमिति च । रज्जौसर्प-भ्रान्तिरिव | 321 |
| अज्ञानभ्रमतेर्भेदः | 345 |
| अणोरणीयान्महतोमहीयान् | 208 |
| अतिवादांस्तितिक्षेत | 32 |
| अथ नवमे मासे | 62 |
| अथ नित्यो नारायणः | 238 |
| अथ,पुत्रमाहत्वं ब्रह्म | 270 |
| अथ महावाक्यानि चत्वारि | 230 |


## अ


| | |
|---|---|
| अथ समाधिः । जीवात्मपरमात्म | 284 |
| अथ हैनं श्रीरामचन्द्रं मारुतिः | 515 |
| अथातोब्रह्मजिज्ञासेति | 529 |
| अदो यद्दारुः प्लवते | 183 |
| अद्यप्रभृतिज्ञानेन | 389 |
| अद्वैतभावनाभैक्षम् | 273 |
| अद्वैतयोगसंपन्नाः | 488 |
| अद्वैतेस्थैर्यमायाते | 289 |
| अध्यस्तस्यकुतोजन्म | 60-322 |
| अध्यात्मयोगाधिगमेन देवम् | 188 |
| अनात्ममूलं माया | 320 |
| अनादिमाययासुप्तः | 267 |
| अनित्यं जगद्यज्जनितम् | 61-324 |
| अनिर्वाच्यपदं वक्तुम् | 207 |
| अनिश्रिता यथा रज्जुः | 233 |
| अनुभूतोप्ययं लोकः | 62 |
| अन्यान्युपपुराणानि | 172 |
| अनेन जीवेनात्मनानुप्रविश्य | 353 |
| अन्वेष्टव्यं प्रयत्नेन | 296 |
| अनन्तकोटिब्रह्माण्डे | 474 |
| अनन्तवीर्यामितविक्रमस्त्वम् | 256 |

अपाणिपादोजवनः 212
अप्सुदेवोमनुष्याणाम् 196
अभावितं ब्रह्मब्रह्मतया 300
अयमात्माब्रह्म 230
अयं ब्रह्माह्ययं रुद्रः 429
अर्चायामेवतु हरेः 194
अर्जुन उवाच। योयंयोगस्त्वया 514
अर्थस्य साधने सिद्धः 50
अर्थस्योपार्जनेदुःखम् 49
अवश्यमनुभोक्तव्यम् 468–544
अविद्यायामन्तरे 32–483
अविद्यायां बहुधावर्तमानाः 483
अविद्योपाधिको जीवः 367
अविनाशितु तद्विद्धि 301
अविद्वांश्चैव विद्वांश्च 105
अव्यक्तलेशाज्ञानाच्छादित 363
अव्यक्तमक्षरे विलीयते 320
अशब्दमस्पर्शमरूपम् 19–209
अशरीरं शरीरेषु 19–208
अष्टादशपुराणानाम् 162
असद्वाइदमग्रआसीत् 149–358
असौदेवो भगवान् 360–460
अस्ति चेदस्तितारूपम् 253
अस्थिस्थूणं स्नायुबद्धम् 46
अस्थिस्थूणं स्नायुयुतम् 47
अस्मद्यतिरिक्तं सर्वं कृतकम् 279
अस्य बिम्बो यथा दर्शे 366
अहन्यहनिभूतानि 73
अहमस्मि परश्चास्मि 274
अहमेव सुखं नान्यत् 82
अहमेव स्मृतोमाता 301
अहं पुरा किरातेषु 78
अहं ब्रह्मास्मि 230
अहं ब्रह्मेत्यवस्थानम् 307
अहं च सर्वविद्यानाम् 416
अहञ्चैव महादेवः 443
अहं शिवश्शिवस्त्वं च 307
अहं सर्वेषु भूतेषु 194
अहिंसा परमोधर्मः 468
अक्षरो निर्गुणश्शुद्धः 413
अन्तःकरणमनोबुद्धिः 355
अन्तश्चरति भूतेषु 458


## आ


आकाशसदृशं सर्वम् 254
आचार्य एव संसारमोचक 125
आचार्यो ब्रह्मणोमूर्तिः 123
आत्मज्ञानेन मुक्तिस्यात् 489
आत्मनस्तत्व विज्ञानात् 307
आत्मनोवा अरे 236
आत्मसंज्ञश्शिवश्शुद्धः 213–250
आत्मानारायणश्चैव 299
आत्मावा अरे द्रष्टव्यः 484
आत्मावा इदमेक एव 234
आत्माह्याकाशवज्जीवैः 233

आदावन्तेच यन्नास्ति 336
आदित्यउवाच। एवमेतन्नसंदेहः 105
आदित्यस्य गतागतैः 73
आदिदेवोसि देवानाम् 464
आदिमध्यान्तशून्यं ब्रह्म 213-243
आपदः क्षणमायान्ति 66
आपोनारा इति प्रोक्ताः 386
आर्द्रं ज्वलति ज्योतिरहमस्मि 269
आलोड्य सर्वशास्त्राणि 392
आहारनिद्राभयमैथुनानि 14
आहारो मैथुनं निद्रा 13

इ

इति युक्तिशतोपबृंहितार्थैः 404
इति श्रुत्वा भवस्साक्षात् 372
इत्युक्त्वान्तर्दधेदेवः 174
इदं प्रपंचं नास्त्येव 61-242-321
इदं शरीरं श्रुविपांचभौतिकम् 47
इन्द्रियैर्बध्यतेजीवः 280
इमास्सोम्यनद्यः 235

ई

ईशानस्सर्वविद्यानाम् 406
ईशावास्यमिदँसर्वम् 208
ईश्वरइति च। किन्तल्लक्षणम् 359
ईश्वरउवाच। अप्रमेयस्य 338
ईश्वरोजीवकलया 365

उ

उक्तविकल्पं सर्वमात्मैव 280
उत्पन्नस्स जगद्योनिः 434
उद्धरेदात्मनात्मानम् 97
उपाधिभिर्यथाकाशः 304

ऋ

ऋग्यजुस्सामाथर्वाङ्गिरसः 130
ऋतं पिबन्तौसुकृतस्यलोके 372

ए

एकएव न जीवोस्ति 297
एकएवहि भूतात्मा 239
एकदा रामशर्मावै 166
एकमासीत् परं ब्रह्म 215
एकमूर्ते स्त्रिधाजाता 434
एकमेवाद्वयं ब्रह्म 243-326
एकरूपाम्बुसामान्यमया 331
एकस्त्वं पुरुषस्साक्षात् 214-430
एकस्सन् भिद्यते भ्रान्त्या 329
एकस्समस्तं यदिहास्ति 302
एकार्णवे महाघोरे 391
एकातुकुरुतेतासाम् 451
एकामूर्तिस्त्रयोभागाः 446
एकेनैवतु पिण्डेन 252
एकोदेवस्सर्वभूतेषु गूढः 211
एकोपिसन् महादेवः 204
एकोरुद्रो न द्वितीयाय 417
एकोवशीसर्वभूतान्तरात्मा 209
एकोहिरुद्रो न द्वितीयाय 406
एकं ब्रह्माहमस्मि 287

| | | | |
|---|---|---|---|
| एकं ब्रह्मैवाद्वितीयम् | 262 | कस्मिन्नु भगवो विज्ञाते | 236 |
| एकः प्रजायतेजन्तुः | 76 | कातेकान्ता कस्तेपुत्रः | 77 |
| एतत्पवित्रम् परमम् | 418 | कामस्सङ्कल्पो विचिकित्सा | 317 |
| एतत्सर्वमिदं विश्वम् | 206 | कार्यकारणवस्त्वैक्य | 259 |
| एतावत्तत्वमित्युक्तम् | 390 | कार्यकारणोपादिभेदात् | 243–360 |
| एतेते चन्द्रतुल्याः | 94 | कार्योपाधिरयंजीवः | 359 |
| एवमुक्त्वा स्वयं ब्रह्मा | 438 | कालस्वभावोनियतिः | 323 |
| एवं गुणानुसारेण | 196 | कावा कस्यप्रिया पुत्रः | 77 |
| एवं यस्सर्वभूतेषु | 296 | किङ्करोमि क्वगच्छामि | 255 |
| एषसर्वाणि भूतानि | 66 | किं ब्रह्म । सर्वोपाधिविमुक्तम् | 212 |
| एषात्मशक्तिरेषा | 328 | किं ब्रह्मेतिहोवाच । महदहङ्कार | 213 |
| एह्यश्मानमातिष्ठ | 183 | कृत्वालिङ्गं सकृत्पूज्य | 435 |
| **ऐ** | | कैवल्योपनिषत् परापर | 187 |
| ऐतदात्म्यमिदँसर्वम् | 269 | कोयमात्मेति वयमुपास्महे | 228 |
| **ओ** | | कोशकारवदात्मानम् | 300 |
| ओं नमश्शिवायेति | 426 | **ग** | |
| ओंनमोनारायणायेति | 460 | गगने मम त्रिशक्तिमाया | 328 |
| **क** | | गताः कलाः पञ्चदश | 266 |
| कटकमकुटकर्णिकादिभेदैः | 258 | गुणमय्यास्वशक्त्यास्य | 463 |
| कटकादिविभेदेन | 261 | गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः | 122–125 |
| कथं चिल्लभतेजन्म | 70 | गुरुरेव परोधर्मः | 123 |
| कर्मण्येवाधिकारस्ते | 203 | गुरुरेव परं ब्रह्म | 122 |
| कल्पनासर्वभूतानाम् | 240 | गुरुवाक्यसमुद्भूत | ,, |
| कल्पयत्यात्मनात्मानम् | 315 | **घ** | |
| कल्पादौचात्मनस्तुल्यम् | 477 | घटध्वंसाद्यथाकाशम् | 305 |
| कल्पेकल्पे क्षयोत्पत्त्या | 471 | घटाकाशमठाकाशौ | 292 |

घटाकाशमहाकाश 310
घटाकाशं महाकाशे 289
घटाज्ञानं घटज्ञानात् 352
घटादिषु प्रलीनेषु 267
घटावच्छिन्नएवायम् 311

## च

चतुर्भुजोहं वैकुण्ठे 435
चतुर्मुखस्तु भगवान् 443
चतुर्मुखोयस्सृजेत 437
चातुर्वर्ण्यं मयास्रष्टम् 100
चिच्छायावेशतश्शक्तिः 311
चिज्जडानान्तु योद्रष्टा 206
चित्तमूलं हि संसारः 329
चित्तस्पन्दित मेवेदम् 317
चित्तसत्तेह दुःखाय 328
चित्तान्तरेव संसारः 336
चित्तेचलति संसारः 328
चित्तङ्कारणमर्थानाम् 327
चित्तं हि कारणं त्वस्याः 337
चिद्गात्माहं परात्माहम् 276
चिन्मयमिदँसर्वम् 239
चिन्मात्रमक्षयं शान्तम् 287
चैतन्यस्यैकरूपत्वात् 245–286

## ज

जगज्जीवादिरूपेण 261–291
जडाजडं मनोविद्धि 331
जन्मनाब्राह्मणोज्ञेयः 107
जपस्तु द्विविधःप्रोक्तः 180
जरामरणयुद्धादि 471
जलबुद्बुदवत्सर्वम् 67
जातं मृतमिदं देहम् 46
जाबालिर्नाचिकेतश्च 139
जीवइतिच । ईश्वर एव 359
जीवत्वं सर्वभूतानाम् 275
जीवभाव जगद्भावबोधे 244
जीवरूपइवास्थित्वा 309
जीवस्तत्प्रतिबिंबश्च 366
जीवेश्वरब्रह्मभेदः 263
जीवेश्वरादिरूपेण 363
जीवेश्वरौ मायिकाविति 244
ज्योतिष्टोमेन स्वर्गकामोयजेत 507
जङ्गमस्थावराणांच 393
जन्तूनां नरजन्मदुर्लभम् 71

## ज्ञ

ज्ञाज्ञौद्वावजावीशानिशौ 373
ज्ञानभूमिश्शुभेच्छास्यात् 526
ज्ञानमेव परं ब्रह्म 487
ज्ञानात् सायुज्यमेवोक्तम् 277
ज्ञानादेवहि संसारविनाशः 487
ज्ञानिनः सर्वपापानि 118

## त

तज्ज्योतिरस्य पुरतः 212
तत्पुरुषाय विद्महे 405
तद्ब्रह्म तापत्रयातीतम् 500

तद्ब्रह्मैव जगत्सृष्ट्वा 307
तत्वतश्च शिवस्साक्षात् 535
तत्वमसि 230
तत्वमसि त्वं तदसि 231
तत्सद्यत् परंब्रह्म रामचन्द्रः 283
तथापि परमं तत्वम् 466
तदनुनित्यशुद्धपरमात्मा 281
तदाप्रभृतिवैविप्रश्रीधरो 154
तदा सद्गुरुमाश्रित्य 122
तदेवनिष्कळं ब्रह्म 272—292
तदेवाग्निस्तदादित्यः 238
तदेवाहं सदानन्दम् 276
तदेवं प्रथमं प्रोक्तम् 206
तदैक्षतबहुस्यांप्रजायेयेति 222—358
तद्यथेहकर्मचितोलोकः 135
तद्योयोदेवानाम् 269
तपेद्वर्षसहस्राणि 200
तमोह्यग्नी रजोब्रह्मा 436
तद्विष्णोः परमंपदम् 385
तत्रलिङ्गं पुराणीयम् 422
तत्रशैवानि शैवञ्च 155
तस्मादनादिनिधनम् 387
तस्माद्द्वैतमेवास्ति 252
तस्माद्विराडजाय 130—357
तस्माद्दोषविनाशार्थम् 512
तस्मिन्मरुःशुक्तिका 361
तास्मिन् यावत् संपातम् 58
तस्य शक्तिः पराविष्णोः 346
तं क्रुद्धो भगवान्नन्दी 379
तादृग्विधे देहे 317
तावत्सत्यं जगद्भाति 62
तां योगमिति मन्यन्ते 188
तीर्थे दाने तपो यज्ञे 195
तेह प्राणाः प्रजापतिम् 538
तोतादर्यां द्विजः कश्चित् 152
त्रयोवयं तत्कलाहि 461
त्रिधाभिन्नोह्यहं विष्णो 433
त्रैविद्यामां सोमपाः 136
त्वयैवस्त्रष्टमाखिलम् 444
त्वमादिस्त्व मनादिश्च 392
त्वं कर्ता सर्वभूतानाम् 432
त्वंच रुद्रमहाबाहो 393
त्वं ब्रह्मात्वं चैवविष्णुः 459
त्वं ब्रह्मासि अहं ब्रह्मास्मि 282
त्वं विष्णुर्जानकी लक्ष्मीः 448
त्वं विष्णुस्त्वं हरिश्चक्री 461

द

दिनयामिन्यौ सायंप्रातः 74
दिव्योदेवएकएव नारायणः 385
दुर्लभोविषयत्यागः 123
दुर्लभं प्राप्यमानुष्यम् 70
दृश्यते नवसुर्यावत् 201
दृश्यते श्रूयतेयद्यत् 253—263
देवतायतनानि कंपन्ते 183

देवदानवाऊचुः। नमोलोकत्रया 446
देवदेवमहादेव 411
देवामनुष्याः पशवः 257
देव्यायया ततामिदम् 350
देहावसानसमये 497
देहोदेवालयःप्रोक्तः 273
दैवमानुषयोः किंस्वित् 86
दैवं दिष्टं भागधेयम् 93
द्वासुपर्णासयुजा 364–373
द्वासुपर्णौशरीरेस्मिन् 364
द्वेपदेबन्धमोक्षाय 117
द्वैतं यथानास्तिचिदात्मजीवयोः 297
द्वैताद्वैतसमुद्भूतैः 327

ध

धर्मार्थकाममोक्षाणाम् 142
धारानुरागधरणीधर 439
ध्यात्वामुनिर्गच्छति 458

न

न कश्चिज्जायते जीवः 268
नचव्याधिसमश्शत्रुः 125
नचात्र किञ्चित्पश्यामि 257
न तत्र चक्षुर्गच्छति 483
न तत्र सूर्योभाति 209
न तदस्तिनयत्राहम् 245
न तृप्तिरन्नादन्या 387
न धनान्युपकुर्वन्ति 200
न निरोधे नचोत्पत्तिः 267–498
न बंधोस्ति न मोक्षोस्ति 299
नमश्शिवाय रुद्राय 436
नमस्कृत्य सुरेशाय 389
नमस्ते पद्मनाभाय 394
नमस्त्रैलोक्यनाथाय 410
नमोहिरण्यगर्भाय 429--432
नमोक्षो मोक्षईशस्य 298
नवारेपत्युःकामाय 81
न स्त्रीशूद्रोवेदमधीयीत 104
न सुखाय सुखं यस्य 344
नसन्दृशे तिष्ठति रूपमस्य 210
न हि कश्चित् क्षणमपि 506
न हि प्रमाणं जन्तूनाम् 74
नात्मभावेन नानेदम् 233
नान्यत्किंचित् प्रपश्यामि 260
नान्यः कश्चिन्मत्तोव्यतिरिक्तः 272
नायमात्मा प्रवचनेन 198
नारदउवाच। वाराणस्याम् 421
नारायणपरालोकाः 256--395
नारायणपरंब्रह्म 384
नारायणश्शिवोविष्णुः 206
नारायणहृषीकेश 436
नारायणायविद्महे 384
नारायणोक्षरोनन्तः 433
नामरूपादिकं नास्ति 277
नामवा ऋग्वेदो 148
नाहं ब्रह्मेतिसङ्कल्पात् 285

| | |
|---|---|
| नित्यशुद्धबुद्धमुक्तम् | 305 |
| नित्यशुद्धोबुद्धमुक्तस्वभावः | 278 |
| नित्यशुद्धं बुद्धमुद्धम् | 306 |
| निर्गुणोनिरुपाधिश्च | 214 |
| निर्वैरेण समं पश्यन् | 279 |
| निरस्तमननानन्दः | 286 |
| निरात्मकमात्मैवेदँसर्वम् | 239 |
| निवृत्तोपि प्रपञ्चोमे | 61 |
| निश्वासभूतामेविष्णोः | 131 |
| निष्कळस्सकळश्चेति | 260 |
| निष्कळं निर्मलं शान्तम् | 285-499 |
| नैनमात्माप्रवचनशतेन | 199 |
| **प** | |
| पठ्यते सर्वशास्त्रेषु | 302 |
| परत्वे संस्थितोदेवः | 351 |
| परमपुरुषःपुराण | 294 |
| परमशान्तिं स्वीकृत्य | 324 |
| परमात्मात्मनोरेकत्व | 271 |
| परमात्मेतिच। देहादेः | 205--240 |
| परमाद्वैतविज्ञानी | 307 |
| परस्मात् ब्रह्मणःपूर्वम् | 342 |
| परास्यशक्तिर्विविधैव | 317 |
| परं प्रधानं पुरुषम् | 348 |
| पशवःकीटसंघाश्च | 260 |
| पशुपतिरहङ्काराविष्टः | 409 |
| पञ्चात्मको जडोदेहः | 48 |
| पञ्चैव गुरवोब्रह्मन् | 125 |
| पापकर्मैकनिरतान् | 225 |
| पाषाणलोहमणिमृण्मय | 182 |
| पितृमातृमयोबाल्ये | 78 |
| पुत्रकामःपुत्रेष्ट्या यजेत | 507 |
| पुरमेकादशद्वारम् | 266 |
| पुरापरजनस्यार्थे | 77 |
| पुरुषएवेदं विश्वम् | 232 |
| पुरुषमात्रेणविमिमीते | 184 |
| पुरुषस्य कर्तृत्वभोक्तृत्व | 330 |
| पुरुषस्य विश्वसहस्राक्षस्य | 405 |
| पुङ्खानुपुङ्खविषयेक्षण | 117 |
| पूर्वं नारायणस्त्वेको | 261 |
| प्रकाशते स्वयंभेदः | 353 |
| प्रकृतिरितिच। ब्रह्मणस्सकाशात् | 321 |
| प्रकृतिस्त्वं ततस्स्रष्टम् | 365 |
| प्रकृतिस्त्वं पुमां स्त्वञ्च | 366 |
| प्रगळितनिजमायोहम् | 278 |
| प्रज्ञानंब्रह्म अहंब्रह्मास्मि | 230-231 |
| प्रज्ञानं ब्रह्मेतिवा | ,, |
| प्रतिष्ठासर्वभूतानाम् | 214 |
| प्रत्यक्ब्रह्मैक्यताज्ञानात् | 307 |
| प्रत्यगात्मानमज्ञान | 292 |
| प्रत्यक्षादिप्रमाणानाम् | 175 |
| प्रपंचोयदिविद्येत | 59–233 |
| प्रबुद्धश्च पुनस्सृष्टिम् | 431 |
| प्रशान्तजगदास्थोन्तः | 115 |
| प्रसीदसर्वसर्वात्मन् | 429 |

प्राग्जन्मनिकृतंकर्म 93
प्राप्नुवन्तिच दुःखानि 352
प्राप्यचाप्युत्तमं जन्म 72
पैत्राचारं परित्यज्य 35
प्लवाह्येते अदृढायज्ञरू 135--199

**ब**

बद्धो मुक्तइतिव्याख्या 303--346
बद्धोहि वासनाबद्धो 335
बहूनां जन्मनामन्ते 30
बहूनि ब्रह्मलक्षाणि 471
बिल्वस्य बिल्वमध्यस्य 254
बिल्वोदकेश्वरं देवम् 411
बुद्ध्यात्मभावयोरैक्यम् 367
बृन्दावने महारम्ये 383
बृहच्च तद्दिव्यमनन्तरूपम् 211
बृहस्पतिरुवाच। चित्तंसर्वमिति 341
ब्रह्मत्वे सृजते विश्वम् 432
ब्रह्ममात्रमिदं सर्वम् 242
ब्रह्मर्षयः। नमस्ते देव 394
ब्रह्मवा इदमग्रआसीत् 236
ब्रह्मविद्वान् ब्रह्मैवाभिप्रैति 273
ब्रह्मविष्ण्वर्करुद्राणाम् 158
ब्रह्मसर्वमिदं विश्वम् 254
ब्रह्माणं केशवं रुद्रम् 440
ब्रह्माद्यं स्थावरान्तञ्च 239
ब्रह्मार्पणं ब्रह्महविः 256
ब्रह्माभूत्वाऽसृजद्विष्णुः 446
ब्रह्मायेनकुलालवन्नियमितः 475
ब्रह्माविष्णुस्तथेशानः 461
ब्रह्माहमस्म्यहं ब्रह्म 305
ब्रह्माहमस्मीति 287
ब्रह्मैवपरमात्मा 459
ब्रह्मैव सर्वनामानि 19
ब्रह्मैव सर्वं नान्योस्ति 277
ब्रह्मैवेदममृतं पुरस्तात् 232
ब्राह्मणस्सर्ववर्णानाम् 106
ब्राह्मणोस्य मुखमासीत् 100
ब्राह्मं पुराणं प्रथमम् 151
बन्धइति च। अनाद्यविद्या 321

**भ**

भगवन्नस्थिचर्मस्नायु 44
भगवानुवाच। महेश्वरायदेवाय 416
भगवन्तावग्रेवदताम् 103
भयादस्याग्निस्तपति 96
भूतानां प्राणिनश्श्रेष्ठाः 70
भूमिरापोनलोवायुः 330
भ्रमः पंचविधोभाति 248
भेदकृद्वाक्प्रपञ्चोयम् 333

**म**

मत्स्यउवाच। पुराणमेकम् 150
मत्स्थापितं शिवं लिंगम् 410
मत्स्यं कौर्मम् 159
मनएवहि संसारः 353
मनसाप्राप्यते ह्यात्मा 319

मनसैवानुद्रष्टव्यम् 238
मनोहि द्विविधं प्रोक्तम् 318
मनुरुवाच। दैवेपुरुषकारे 91
मनोबुद्धिरहङ्कारः 355
ममध्येयं भवांश्चैव 162--433
ममरुद्रस्य यः कश्चित् 432
ममविष्णोश्चान्तरं ये 439
ममैवांशो जीवलोके 302
मयि जीवत्वमीशत्वम् 296
मयि सर्वाणि कर्माणि 117
महति प्रळयेराम 471
महामाया महालक्ष्मीः 327
महावाक्यप्रकरणम् 231
मातापित्रोर्मलोद्भूतम् 47
मातृदेवोभव 121
मायातेनामबीजाय 345
मायामात्रमिदं राजन् 346
मायाविद्ये विहायैव 363
मायैषा तस्य देवस्य 315
मार्कण्डेयउवाच। अस्मिन् क्षेत्रे 428
मिथ्याकल्पनिकीवेयम् 298
मिथ्यारोपित संसारः 67
मृडानीकृत शृङ्गारम् 417
मृल्लोहविस्फुलिङ्गाद्यैः 234

य

य एष आदित्ये पुरुषः 269
यज्ञे पशुवधः कर्तव्यः 468
यज्ञैश्च देवानाप्नोति 487
यत्करोषि यदश्नासि 507
यत्किञ्चित् कुरुते कर्म 118
यत्तदद्रेश्यमग्राह्यम् 210--252
यत्परंब्रह्म सर्वात्मा 271
यत्र नान्यत् पश्यति 235
यत्रयत्र मृतोज्ञानी 535
यत्रस्नेहो भयं तत्र 83
यत्र हि द्वैतमिव भवति 237
यतोवा इमानिभूतानि 211
यतोवाचो निवर्तन्ते 208--270
यतः प्रवृत्तिर्भूतानाम् 393
यतः सर्वं समुत्पन्नम् 206
यथाकाशो घटाकाशः 293
यथाग्निरग्नौ संक्षिप्तः 306
यथाग्निरेको बहुधा 258
यथा जपाकुसुमसान्निध्यात् 282
यथा जात्यन्धस्य 121
यथा वटबीजसामान्यम् 318
यथा शिवस्तथाविष्णुः 439
यथा शुद्धसुवर्णस्य 244
यथा सत्वमुपेक्ष्यस्वम् 300
यथा सोम्यैकेन 234
यथेन्दुरेकोजलपात्र 256
यथैधांसि समिद्धोग्निः 468--544
यथोर्णनाभिस्सृजते 210
यथोर्णनाभिस्तन्तुनोच्चरेत् 359

| | | | |
|---|---|---|---|
| यददृष्टं हि वेदेषु | 141 | ये शुद्धवासनाभूयः | 492 |
| यदा गुणवशात्तस्य | 447 | योगिनां हृदि तिष्ठन्तम् | 445 |
| यदात्वं रजसायुक्तः | 427 | योज्ञाननिष्ठोऽतिविरागमाश्रितः | 116 |
| यदा यदा हि धर्मस्य | 224 | यो विष्णुस्स स्स्वयंब्रह्मा | 431 |
| यदा सर्वे प्रमुच्यन्ते | 116--314 | योहवैरुद्रस्सभगवान् | 407 |
| यदा ह्येवैष एतस्मिन् | 268 | योहवै श्रीपरमात्मा | 385 |
| यदिदं दृश्यते सर्वम् | 60 | यो हिमां विष्णुमव्यक्तम् | 429 |
| यदि मन्यसे सुवेदेति | 482 | यंयंभेदसमाश्रित्य | 417 |
| यदेवेह तदमुत्र | 232 | यंयंवापि स्मरन् भावम् | 497 |
| यद्वैकिंच मनुरवदत् | 140 | यःपरं रहसस्साक्षात् | 389 |
| यन्मनस्त्रिजगत्सृष्टिस्थिति | 322 | यः पृथिव्यां तिष्ठन् | 374 |
| यमउवाच। गोविन्दमाधव | 438 | **र** | |
| यस्तुचैष महायोगी | 444 | रज्जावहिर्मरीवारि | 353 |
| यस्तु सर्वाणि भूतानि | 265 | रज्जौ सर्पःशुक्तिकायांच | 62 |
| यस्त्वविज्ञानवान् भवति | 314 | रमन्ते योगिनोऽनन्ते | 197 |
| यस्य सर्वे समारम्भाः | 118 | रक्षको विष्णुरित्यादि | 456 |
| यस्मात् परं ना परमस्ति | 211 | राजपुत्र ब्रह्मतत्वम् | 332 |
| यस्मिन् सर्वाणि भूतानि | 266 | राममन्त्राणां कृतपुरश्चरणः | 283 |
| यामाहुर्ब्रह्मविद्वांसः | 345 | रामेश्वरञ्च परमम् | 416 |
| यावन्तोश्मानोस्याम् | 183 | रुद्रउवाच। अलंगृह्णामि | 388 |
| युवैव धर्मशीलःस्यात् | 2 | रुद्रउवाच। भवद्भिर्भक्ति | 440 |
| येकेचास्मच्छ्रेयाँसः | 102 | रुद्रउवाच। योविष्णुस्सस्स्वयं | 437 |
| येतश्चे ब्राह्मणास्संमर्शिनः | 102 | रुद्रउवाच। शृणुदेवि प्रवक्ष्यामि | 164 |
| येत्वेनं विष्णुमव्यक्तम् | 445 | रुद्रोनारायणश्चैव | 427 |
| येन प्रकाशते विश्वम् | 294 | रुशब्देन तु संसारदुःखम् | 455 |
| येनपश्यन्ति गोविन्दम् | 426 | **ल** | |
| येनस्रष्टाच प्रकृतिः | 464 | लयमन्त्र हठायोगा | 508 |

लयात् संप्राप्यते सौख्यम् 327
लक्ष्यालक्ष्य गतिं त्यक्त्वा 290
लिङ्गं तु द्विविधं प्राहुः 194

व

वनेऽपि दोषाः प्रभवन्ति 116
वाराहमसितं रूपम् 414
वासनाचेहनास्त्येव 368
वासुदेवउवाच । एवं दत्वावरम् 409
विभेदजनके ज्ञाने 293
विरक्तस्यतु संसारात् 487
विरिञ्चिनारायणशङ्करात्मकम् 459
विरोधेत्वनपेक्ष्यस्स्यात् 141
विविधाभक्तिरुद्दिष्टा 510
विश्वे विश्वेच प्रत्येकम् 474
विषयेन्द्रिय संयोगात् 52
विष्णवे सत्वरूपाय 438
विष्णुरुवाच । एकाक्षराय 415
विष्णुरुवाच । वरं वरय भद्रोस्तु 437
विष्णुलिंगं द्विधाप्रोक्तम् 385
वेणुरन्ध्र विभेदेन 257
वेदशास्त्रपुराणानाम् 130
वेदार्थोपनिबन्धृत्वात् 140
वेदाङ्गानांच विद्वेषः 148
वेदान्तानां महावाक्य 310
वेदाः प्रमाणं प्रथमम् 141
वेदे शिवागमेवापि 176
वैश्वानरः प्रविशत्यतिथिः 102
वन्ध्याकुमारवचने 61
व्याधः । कुलोचितमिदं कर्म 108
व्यावहारिकदृष्ट्येयम् 251
व्यासस्साधुः कलिस्साधुः 110

श

शक्तिद्वयं हि मायायाः 329
शय्यासनेऽध्याचरिते 126
शरीरमाद्यं खलु धर्मसाधनम् 540
शरीरस्तेजोमयोऽमृतमयः 238
शान्तोदान्तो परतः 274
शिवलिङ्गार्चनं स्थानम् 413
शिवमाह हरीरुद्र 390
शिवस्य हृदये विष्णुः 446
शिवसायुज्यमाप्नोति 407
शिवाय विष्णुरूपाय 426
शिवो गुरुश्शिवोदेवः 296—409
शिवोपि च स्वपूर्वार्द्धात् 380
शिवः कोवा हरिःकोवा 462
शुकोमुक्तो वामदेवोपिमुक्तः 533
शुद्धबोधानन्दमयामृत 282
श्रीपर्वतं शिरस्थाने 191
श्रीभगवानुवाच । इतितत्त्वंत्वया 467
श्रीभगवानुवाच । त्रयाणामपि 430
श्रीभगवानुवाच । त्वं हि रुद्र 388
श्रीभगवानुवाच । न ब्रह्माभवत? 447
श्रीरामउवाच । कपूजादेवदेवस्य 423
श्रीशुकज्ञानविस्तारम् 326

श्रुतिस्मृतिविरोधेतु 140
श्रुतिस्मृत्युदितं धर्मम् 142
श्रूयतां धर्मशास्त्राणि 139
श्रेयान् स्वधर्मोविगुणः 34
शैलाअपि विशीर्यन्ते 470
शन्नोविष्णुरुरुक्रमः 384

स

सएव साक्षाद्विज्ञानी 461
सएव हि परंब्रह्म 281
सएवाधस्तात् 235
सक्ताः कर्मण्यविद्वांसः 202
सकृद्विभातसदानन्दानुभवैक 280
सद्घनोयं चिद्घनः 212
सत्यज्ञानमनन्तं यत् 296
सत्यमेव जयते 13
सत्यं ज्ञानमनन्तम् 274
सत्यं मृदु प्रियं वाक्यम् 33
सदेवसोम्येदम् 234
सदेवसौम्येदम् 244
सद्देवो भगवान् सर्वम् 464
सपर्यगाच्छुक्रमकायमव्रणं 19-208
सब्रह्म स शिवस्सहरिः 457–459
समस्तं खल्विदं ब्रह्म 285
सयथार्द्रैधाग्ने 130
स यथा सैन्धवखिल्ये 236
सयोहैतमेवोपास्त 273
सरस्वतीदृषद्वत्योः 8
सर्गश्च प्रतिसर्गश्च 154
सर्वदेवात्मकोरुद्रः 407
सर्वपापक्षयकरम् 472
सर्वभावान्तरस्थस्य 335
सर्वभूतस्थ मात्मानम् 301
सर्वभूतस्थमेकं नारा 205–242
सर्वभूतेषु चात्मानम् 302
सर्वसाधारणी सूक्ष्मा 352
सर्वाकारतया साम्यम् 308
सर्वेविष्णुमया देवाः 391
सर्वेश मप्रमेयमजम् 459
सर्वेषामपि चैतेषाम् 487
सर्वेषामाश्रमाणांच 35
सर्वोपाधिविनिर्मुक्तम् 240
सर्वोवै रुद्रस्तस्मै 405
सर्वं किञ्चिदिदं दृश्यम् 245
सर्वं खल्विदं ब्रह्म 234–479
सर्वं चैतन्यमात्रत्वात् 242
सर्वं ब्रह्ममयं जगत् 501
सर्वं ब्रह्मेति विज्ञानम् 307
सर्वं व्याप्यशिवस्साक्षात् 258
सर्वं सङ्कल्परूपेण 338
सवाएष महानजआत्मा 270
सवाएष सूक्ष्मोग्राह्यः 272
सविषयं मनोबन्धाय 325
सात्त्विकस्यास्य भागस्य 472
साधोसर्वगताकारम् 339

| | | | |
|---|---|---|---|
| सारभूतं पुराणेषु | 161 | स्थिरबुद्धिरसं मूढः | 277 |
| सा सर्ववेदमयी | 323 | स्युर्मोहाय चराचरस्य | 387 |
| साक्षी चेताकेवलोनिर्गुणश्च | 86 | स्वकर्मणा तमभ्यर्च्य | 390 |
| सितनीलादिभेदेन | 258 | स्वधर्माचरणं शक्त्या | 35 |
| सुखदुःखे समेकृत्वा | 117 | स्वपूर्णात्मातिरेकेण | 294 |
| सुखस्यानन्तरं दुःखम् | 57 | स्वप्रभं सच्चिदानन्दम् | 385 |
| सुखं-शिष्य-विद्वान्-तपइति च | 275 | स्वप्नमाये यथा दृष्टे | 60 |
| सुरूपां प्रतिमां विष्णोः | 182 | स्वप्नेतु जीवस्सुखदुःख | 317 |
| सुषुप्तिसमाध्योः | 324 | स्वप्ने यथा शिरश्छेदम् | 304 |
| सूत्रानुकारिमृदुवाक्य | 226 | स्वयंब्रह्मा स्वयंविष्णुः | 460 |
| सृष्टिस्थितिलयादीनाम् | 408 | स्वयं विश्वमिदं सर्वम् | 250 |
| सृष्टिस्थिति विनाशानाम् | 461 | स्वसङ्कल्पविलासेन | 337 |
| सृष्टिस्थित्यन्तकर्माणि | 447 | स्वस्यैवांशश्च जीवोवै | 303 |
| सोऽकामयतबहुस्याम् | 358 | स्वांशं देहात् समुत्पाद्य | 224 |
| सोध्वनः परमाप्नोति | 384 | स्वे स्वे कर्मण्याभिरतः | 34–108 |
| सोहं चिन्मात्रमेवेति | 280 | **ह** | |
| सङ्कल्पमात्र कलनेन | 329 | हरिरुवाच। अहं शिवश्शिवश्चाहं | 432 |
| सङ्कल्पाद्वर्धते चित्तम् | 336 | हरिशङ्करयोर्मध्ये | 434 |
| सङ्कल्पादिकं मनोबंधहेतुः | 324 | हिरण्यगर्भो रजसा | 465 |
| सङ्कोचविकासात्मक | 61–325 | हृत्पुण्डरीकं विरजम् | 406 |
| सञ्जाताः स्वप्नवत्सर्वे | 315 | हृदयं निर्मलं कृत्वा | 284 |
| संवत्सरस्य प्रतिमाम् | 182 | **क्ष** | |
| संसारेस्मिन् जगन्नाथ | 67 | क्षीणे पुण्ये मर्त्यलोकम् | 508 |
| स्थाणुर्नित्यस्सदानन्दः | 274 | क्षेत्रज्ञंचापि मां विद्धि | 302 |


——*——

# ஆரியமதசித்தாந்தஸங்கிரஹம்
## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 11 | மேலான் | மேலான |
| 3 | 25 | பினபற்றுமல் | பின்பற்றுமல் |
| 5 | 10 | அம்மததிற் | அம்மதத்திற் |
| ,, | 19 | தாமார்த்த | தருமார்த்த |
| 6 | 4 | यस्मिन्नैव | यस्मिन्नेव |
| 12 | 3 | பொராமை | பொறுமை |
| 13 | 33 | दुर्लभः | दुर्लभः |
| 23 | 10 | மத்பே | மதபே |
| 31 | 15 | உங்களுக்கெதது | உங்களுக்கெதெது |
| 38 | 14 | க்ஞானம் | க்ஞானம் |
| 46 | 24 | लयामेध्य | लयामेध्यं |
| 47 | 18 | அத்-ந-ந-சு-கக-ல் | அத்-ந-ந-சு-கக-ல் |
| ,, | 27 | अस्थिस्थूणम् | अस्थिस्थूणं |
| 50 | 8 | அடிப்ப | அப்படி |
| 59 | 5 | நரதனென்கிற | பரதனென்கிற |
| 61 | 23 | प्रमंचमि | प्रपंचमि |
| 64 | 30 | सर्वकाण | सर्वकारण |
| 65 | 12 | (கருமம்) | (கரும) |
| 67 | 1 | ஜநார்த்தனை | ஜகந்நாத |
| 86 | 8 | காரியங்சளை | காரியங்களை |
| 95 | 26 | सुखं दुःखमनु | सुखं दुःखं मनु |
| 97 | 30 | ரேருவனை | றெருவனை |
| 98 | 2 | மற்ரேரு | மற்றொரு |
| 99 | 12 | மற்ரேரு | மற்றொரு |
| 100 | 24 | இவைளுடைய | இவைகளுடைய |
| 101 | 2 | புருஷனை | புருஷனே |
| 102 | 15 | உபாசார | உபசார |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 109 | 13 | தெவவளவு | தெவ்வளவு |
| 111 | 29 | दिश्वफलम् | देश्व फलं |
| 115 | 29 | १ 'प्रशान्त | * प्रशान्त |
| 117 | 9 | பிவைளுக்கு | பிவைகளுக்கு |
| 122 | 32 | पुजनीयो | पूजनीयो |
| 123 | 7 | தெய் | தெய்வ |
| 127 | 27 | வேறேரு | வேறொரு |
| 139 | 31 | व्वासस्सन | व्यासस्सन |
| 142 | 28 | श्रयान् द्विजः | श्रयात् द्विजः |
| 144 | 14 | ஐச்சுவரிய | ஐசுவரிய |
| 145 | 8 | உத்திர | உத்தர |
| 152 | 30 | देवतीर्य | देवतिर्य |
| 155 | 28 | त्रीणिलक्षोणि | त्रीणिलक्षाणि |
| 156 | 32 | पराङ्मखं | पराङ्मुखं |
| 158 | 20 | சம்மந்த | சம்பந்த |
| 182 | 25 | रात्युपासते | रात्र्युपासते |
| 183 | 9 | ) இல்லாத | ) ஜலம் இல்லாத |
| 184 | 31 | கடசி | கடைசி |
| 199 | 33 | र्नाश्रमैर्न्या | र्नाश्रमैर्ना |
| 204 | 22 | स्त्रियासौ | स्त्रिधासौ |
| 210 | 32 | प्रीथव्या | पृथिव्या |
| 222 | 1 | तदीक्षत | तदैक्षत |
| 229 | 30 | दजनानि | दजानि |
| 240 | 29 | किञ्चन । तपइतिच | किञ्चन ।—तपइतिच |
| 259 | 25 | बजिमेवास्या | बीजमेवस्या |
| 272 | 14 | நிஷத்-உடு-ல், | நிஷத்-உ·டு-ல், |
| ,, | 18 | ஸ்ஙகற்ப | ஸங்கற்ப |
| 276 | 27 | सदापष्तेत | सदापश्येत् |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 277 | 32 | मासर्व | त्मासर्व |
| 278 | 14 | சுவரன் | வரன் |
| 281 | 23 | यदयम | यदयमा |
| 282 | 22 | द्रक्तस्पटिक शुद्धस्प | द्रक्तस्फटिक शुद्धस्फ |
| 285 | 30 | क्षेत्रज्ञपरमात्मा | क्षेत्रज्ञःपरमात्मा |
| 293 | 1 | சித்துத்தான். இப்படி | சித்துத்தான்.—இப்படி |
| 296 | 18 | அத்-கஉ-சு-கஉ-ல், | அத்-கஉ-சு-கஉரு-ல், |
| 299 | 28 | யதி | யாதி |
| 304 | 2 | உத்தமா | உத்தவா |
| ,, | 30 | आकाशस्या | आकाशःस्या |
| 312 | 21 | நிருததப்பட்ட | நிருத்தப்பட்ட |
| 317 | 1 | அலாதசா | அலாத |
| 320 | 4 | யடைசிறுன் | யடைகிறுன் |
| 321 | 1 | பிர்ம்மஸந்ந | பிர்ம்மஸந்நி |
| 323 | 2 | உற்பத்திக்கி | உற்பத்திக்கு |
| 324 | 1 | பூதாபூத | பூதாதிபூத |
| 325 | 11 | வாகிறது. எந்த | வாகிறது.——எந்த |
| 328 | 16 | வேறுனதல்ல. ஸத்தான | வேறுனதல்ல —ஸத்தான |
| 341 | 10 | யிருக்சிற | யிருக்கிற |
| 342 | 24 | संन्निव | सन्निव |
| 345 | 19 | பிர்மம | பிர்ம்ம |
| 350 | 13 | சுவர்ப்ப | சுவற்ப |
| ,, | 15 | ஸாக்ஷசுவரூப | ஸாக்ஷிசுவரூப |
| ,, | 19 | சுவரூபியான | சுவரூபிணியான |
| 351 | 27 | श्वरात्तस्साद् | श्वरात्तस्माद् |
| 352 | 6 | மிருக்திறவள் | மிருக்கிறவள் |
| ,, | 30 | घटाज्ञना | घटज्ञाना |
| 376 | 18 | ஜீவாததுமா | ஜீவாத்துமா |
| 380 | 30 | पत्रोजात | पुत्रोजात |
| 386 | 6 | நர | நார |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 387 | 11 | நாராயணனை | நாராயணனை |
| 392 | 29 | विष्णोतारायण | विष्णोनारायण |
| 394 | 11 | சிவமஹாத் | சிவமாஹாத் |
| 402 | 6 | தோறும் | தோரும் |
| 407 | 4 | பிரும்மா. அவன் | பிரும்மா.—— அவன் |
| 409 | 24 | तत्पातित्यात् | तत्पतित्वात् |
| 418 | 30 | दिष्णुः | विष्णुः |
| 422 | 32 | भक्तिर्द्दडा | भक्तिर्द्दढा |
| 429 | 23 | सर्ग | सर्ग |
| ,, | 30 | जनार्द्दनः | जनार्द्दनः |
| 431 | 27 | त्रयाणा | त्रयाणां |
| 438 | 25 | विष्नु | विष्णु |
| 439 | 31 | ममविष्णवो | ममविष्णो |
| 456 | 30 | १ रक्षको | * रक्षको |
| 457 | 6 | மல்ல, அத்துவைதிகள் | மல்ல,வியாவஹாரிகதசையையனுஸரிக்கிற அத்துவைதிகள் |
| 466 | 25 | नग्भापृथ | न पृथग्भा |
| 487 | 30 | ब्रह्यणः | ब्रह्मणः |
| 489 | 25 | செய்வஸாமீ | செய்வது ஸாமீ |
| 522 | 20 | த்தினுயை | த்தினுடைய |
| 533 | 15 | ப்பிறப்பை | இறப்புப் பிறப்பை |
| ,, | 20 | பரந்து | பறந்து |

பிழைதிருத்தம்
முற்றிற்று.